ஸ்ரீ:

ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

SRIRANGAM
SRIMAD ANDAVAN
SRI RANGARAMANUJA MAHADESIKAN



SASHTIABDAPOORTHI

SOUVENIR - 1-6-1995

With Reverential Greetings from


ARAVIND LABORATORIES

Manufactures of Eyetex
Kajal & Kumkum Products

EYETEX
REGD.


A Symbol of trust for five decades

H.O. 7, Chakrapani Street,
Madras - 600 033 INDIA.
Off : 044-4838108, 4838585
Fax : 91-44-4840468



ப்ரணவாகார விமானம் ஸ்ரீரங்கம்

॥ ஸ்ரீ: ॥



ஸ்ரீமதாண்டவன்
ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன்

ஷஷ்ட்யப்தபூர்த்தி
மஹோத்ஸவ
மலர்

யுவ - வைகாசி - திருவாதிரை

1 - 6 - 1995

பெரியாச்ரமம் - ஸ்ரீரங்கம்

Laser Typeset by:

Seva Graphics

2, Lakshmipuram II Street, Villivakkam, Madras - 600 049.
Phone: 626 8481.


Printed at:

Basi Printers

Reddy Street, Villivakkam, Madras - 600 049.



॥ ஸ்ரீ: ॥



ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

முகாம்: ஸ்ரீரங்கம்
தேதி: 23-5-95

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி
ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜ
மஹாதேசிகன்

மங்களாசாஸனம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம நம் சிஷ்யர்களுக்கும், அபிமானிகளுக்கும் அநேக மங்களாசாசனங்கள்.

ஆசார்யாள் திருநக்ஷத்ர வ்யாஜமாக ஆச்ரமத்தின் பெருமையை பல ப்ரகாரங்களால் நம் ஆச்ரமத்துச் சிஷ்யர்களும், அபிமானிகளும் சேர்ந்து நடத்த இருப்பது கேட்டு ஸந்தோஷிக்கிறோம். நமக்கு ஆசார்யரான ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்தாபித்த பல நிறுவனங்களை பேணிக்காப்பது நம் ஒவ்வொருவருடைய இன்றியமையாத கடமையாகும். அந்த க்ரமத்திலே அம் மஹானுல் ஸ்தாபித்த கலாசாலையை திறம்பட நடத்துவதற்கு ஸ்ரீரங்கமங்கள நிதியினுடையவும் ஸ்ரீரங்க மங்கள தேவதையினுடையவும் கடாக்ஷ விஹாரங்களால் ஸகல மங்கள பாஜனமாக அனைவரும் பத்தாறுமாற்றுத் தங்கமாய் ஸ்வரூப லாபம் பெற அரங்கனின் பாதுகைகளையும், ஆசார்ய திவ்ய பாதுகைகளையும் ப்ரார்த்திக்கிறோம்.





सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र
PRESIDENT
REPUBLIC OF INDIA

MESSAGE

I send my felicitations on the occasion of the Sashtiabdapoorthi of Acharya H.H. Srirangam Srimad Andavan Sri Ranga Ramanuja Mahra Desikan on 1st June, 1995 and wish him many more years of service to humanity.

S. D Sharma

(SHANKER DAYAL SHARMA)



RAJ BHAVAN
MADRAS-600 022

23.5.95

M E S S A G E

I am glad to know that the Sashtiabdapoorthi Celebrations of His Holiness Srirangam Srimad Andavan will be held on 1st June 1995 at Srirangam.

The Srirangam Srimad Ashram was founded by Sri Bhagwad Ramanuja centuries ago. Since then it has been playing a crucial role in the promotion of universal love, human fellowship and radiant service to the mankind under the able leadership of successive Acharyas. Since his ascension on 1st June 1989 as the head of the Ashram, H.H. Srimad Srimushnam Sri Rangaramanuja Mahadesikan has extensively travelled various parts of the country to spread his message of universal brotherhood. His Holiness in his poorvashrama was a great scholar in Tamil and Sanskrit. He has been leading a life of intense spiritual discipline, asceticism, sacrifice and service to fellow beings. The discourses of His Holiness inspire thousands of his devotees, inculcating in them the values of tolerance, discipline and devotion to duty.

On the happy occasion of the Sashtiabdapoorthi of His Holiness I pray to the God Almighty to give good health and long life to His Holiness so that the people may continue to benefit by the teachings of His Holiness. I extend my best wishes for the success of the celebrations.

(M. CHANNA REDDY)

G.K. MOOPANAR

41, Luz Avenue,
Madras - 600 004.
Phone: 4991901

Dated 15.5.95

அன்புடையீர்,

வணக்கம். ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகளின் சஷ்டியப்தபூர்த்தி அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் மேலும் பல ஆண்டுகள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வைஷ்ணவ சமுதாயத்திற்கு சீரிய சேவைகள் புரிய எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை வேண்டுகிறேன்.

அன்புள்ள
ஜி.கே.மூப்பனார்

உ.வே. ஸ்ரீ மாதவாசார்யர்
ஸ்ரீரங்கம்

एम गोपालकृष्णन
M GOPALAKRISHNAN
अध्यक्ष एवं प्रबंध निदेशक
CHAIRMAN & MANAGING DIRECTOR

इंडियन बैंक
Indian Bank

केन्द्रीय कार्यालय
31 राजाजी सालै
मद्रास - 600 001.
Central Office
31 Rajaji Salai
Madras - 600 001.

MESSAGE

I am extremely happy to know that the Sashtiabdapoorthi of H.H.Srirangam Srimad Andavan is being celebrated by Srirangam Srimad Andavan Asramam shortly. His Holiness has been guiding the meritworthy activities of the Asramam that has served to highlight the resplendent divinity and glory of Vaishnavism. I join the devotees of the Asramam and many others in offering our prayers for His continued blessings.

May 13, 1995

M GOPALAKRISHNAN

ஸ்ரீ:

ஸமர்ப்பணம்

ஸ்ரீமத் பரமவைதிகஸேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ ரங்க ராமானுஜ மஹா தேசிகனுடைய ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் சிஷ்யர்களாலும், அபிமானிகளாலும் விசேஷமாக வைகாசித் திருவாதிரை நன்னாளில்கொண்டாடப்படுகிறது.

ஸம்ப்ரதாய ராஜதானியான திருவரங்கத்தே கொள்ளிடத்தின் தீர்த்ததீரத்திலே பரமவைதிகராய் விளங்கும் ஆசார்ய ஸார்வ பௌமன் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்க ஸ்ரீயைப் பெருக்கி, ஆச்ரிதர்களுக்கு அபயமளித்து, கொள்ளமாளா இன்பவெள்ளம் என்னலாம்படி பல துறைகளில் அனுக்ரஹித்தருள்வது நாடும் நகரும் நன்கறிந்ததே.

ஆசாரியனுடைய அருளுக்கு நிகராக உலகில் எந்த சக்தியும் இல்லை என்பதனை வேதாந்திகளேயென்பதில்லாமல் விஞ்ஞானிகளும் இசையும் இக்காலத்தில் ஆசிரியன் புகழ் பரப்புவதைக் காட்டிலும் வேறு உய்யும் துறை யும் வகையும் இல்லை. ஸ்வாமி தேசிகன் அதிகார ஸங்கிரஹத்தில் நமக்கோர் அதிகாரத்தை வழங்கியுள்ளார் - அது தான் ஆசார்யன் புகழ் பரப்புவது.

ஸ்ரீமதாண்டவன் தமது ஆசார்ய ஸர்வபௌமரான ஸ்ரீ மத் திருக்குடந்தை ஆண்டவன் காட்டியருளின தொல்வழியில் ஸஞ்சரித்து அவர் தம் திருவுள்ளங்களைப் பேணி வளர்த்து வருவது ஒப்பற்றதோர் உதாரணமாகும்.

இத்தகைய ஸ்ரீ மதாண்டவனின் திருவருளை நாடும் நாட்டவர்க்கு ஸகலாபீஷ்டங்களும் சித்திக்க, இம்மஹோத்ஸவத்தில் ஒரு சிறு காணிக்கையாக ஸம்ப்ரதாயப் பெரியோர்களின் அனுபவங்களை ஓலையிலிட்டு அதனால் மணங்கமழும் மகிழ மலராக இதனை திவ்யதம்பதிகளின் ஆமோதமும், பூர்வாசார்யர்களின் ப்ரமோதமும், ஆச்ரிதர்களின் ஸம்மோதமும் மிளிர திவ்யதிருவடிகளில் ஸமர்பித்து தன்யனாகிறேன்.

தாஸன்.

ஆடூர். ஆஸூரி. மாதவாசார்யன்.

ஸ்ரீ மதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நம

தன்யவாதம்

(1) ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் கண்டருளும்படி அனுக்ரஹித்த ஆசார்ய பாதுகைகளுக்கும்,

(2) ஸ்ரீ மத் பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மதாண்டவன் ஸ்ரீ ரங்க ராமானுஜ மஹாதேசிகன் ஆமோதித்தருளினதற்கும்,

(4) இம் மலருக்கு பலவகையிலும் ஆதரம் தந்த தனிகர்களுக்கும்,

(5) இம் மஹோத்ஸவத்தை நன்கு நடத்தி கலாசாலையின் வளர்ச்சிக்காக பொருளுதவி செய்த சிஷ்யர்கள், அபிமானிகளுக்கும்,

(6) இம் மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த தமிழக, பாண்டி ஆளுநர்களுக்கும், காங்கிரஸ் பெருந்தலைவர் G.K.மூப்பனார், பாண்டிச்சேரி முதலமைச்சர் திரு.வைத்திலிங்கம், அவர்களுக்கும்

(7) ஆச்ரமத்திற்கு உறுதுணையாய் விளங்கும் இந்தியன் வங்கித்தலைவர் டாக்டர் M.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும்

(8) ஆச்ரம நிர்வாஹத்தில் பங்கு கொண்ட ஸ்தாபனங்களுக்கும், விசேஷமாக சென்னை ஸ்ரீ பாதுகா சாரிடீஸ் நிர்வாகத்திற்கும்

(9) ஸ்ரீ மத் திருக்குடந்தை ஆண்டவன், ப்ரக்ருதம் ஸ்ரீ மதாண்டவன் நியமனப்படி பாரத தேசத்தில் ஆங்காங்கு அமைந்துள்ள ஆச்ரம ஸந்நிதிகளையும் ஆச்ரமங்களையும் திறம்பட நிர்வஹித்து வரும் நிர்வாகிகளுக்கும்,

(10) விசேஷ உத்ஸவங்களில் ஸ்வயம் புருஷார்த்தமாக தொண்டு பூண்டு பரிமளிக்கச் செய்யும் ஆச்ரம சிஷ்யர்களுக்கும், அபிமானிகளுக்கும்,

(11) குறுகிய காலத்தில் இம்மலரை அச்சிட பொறுப்பேற்றுக் கொண்ட ஸ்ரீ தேசிக பக்த ரத்னம் மஹாவித்வான் ஸேவா ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமிக்கும் அவரது குமாரர்களுக்கும்,

(12) இம்மஹோத்ஸவத்திற்கு வாழைப்பந்தல் மற்றும் ஸகல ஏற்பாடுகளையும் செய்துதவிய திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் L.அடைக்கலராஜ் அவர்களுக்கும் ஆச்ரமத்தின் சார்பில் உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆடிட்டர். ஆஸ்மி. மாதவாசாரியார்

ஸ்ரீ கார்யம் .

ஸம்பாதகரின் குறிப்பு

मणिपादुकयोर्युगं मुरारेः मम नित्यं विदधातु मङ्गलानि ।
अधिकृत्य चराचरस्य रक्षां अनुकंपाक्षमयोरिवावतारः ॥

ஸ்ரீ ரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் எனும் நம் ஆச்ரம ஆசார்ய பரம்பரையில் எழுந்தருளியிருந்த ஆசார்யர்களின் பெருமை ''வக்தா ஸஹஸ்ர வதந: புருஷ: ஸ்வயம் சேத்'' என்கிறபடி அமைந்துள்ளது. ஸ்ரீ மத் திருக்குடந்தை தேசிகன் திருவடியில் ஆச்ரயித்த வழுத்தூராண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் நம் ஆச்ரம பரம்பரையை தொடங்கி வைத்த மஹான். அம்மஹான் மூலம் பல ஸம்ப்ரதாய பரம்பரை தோன்றி இன்றளவும் நடந்து வருகிறது. இம்மஹானுக்கு ''ஸ்ரீமத் ஆண்டவன்'' என்கிற பிருது ஸ்ரீ ரங்கநாதனால் அனுக்ரஹிக்கப்பட்டது. இம்மஹான் ஸ்ரீ ரங்கம் ஆண்டவன் என்றும் அழைக்கப்பட்டார். இம் மஹான் தமக்குப் பிறகு ஆச்ரம நிர்வாஹத்தை ராஜமன்னார் கோயிலுக்கு ஸமீபமாயுள்ள விளக்குடி கிராமத்தில் ஈயுண்ணி வம்சத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் அவதரித்தவரும், தம்மிடத்தில் ஸகல காலக்ஷேபம் செய்தவருமான மஹானுக்கு ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் என்று திருநாமமிட்டு அனுக்ரஹித்தபடி. அம்மஹான் விளக்குடி ஆண்டவன் என்றும் திருத்துறைபூண்டி ஆண்டவன் என்றும் ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்து ஆச்ரம நிர்வாஹாதிகளை நடத்தி வந்து பிறகு தம்மிடத்தில் ஸ்ரீமத் வழுத்தூராண்டவன் நியமனப்படி ஸகலார்த்த க்ரஹணம் செய்த ஸ்ரீமத் பெரியாண்டவனுக்கு துரீயாச்ரமம் அனுக்ரஹித்தபடி. ஸ்ரீமத் பெரியாண்டவனும் ஸ்ரீ ரங்கத்திலேயே வெகுகாலம் எழுந்தருளியிருந்து கொண்டு காலக்ஷேபம், சரணாகதிகளை செய்வித்துக் கொண்டு 58 சாதுர்மாஸ்யங்கள் எழுந்தருளியிருந்தபடி இம்மஹானிடம் திருப்புட்குழி ஸ்வாமி, வ்யாகரண வித்வான் ரங்காச்சார் ஸ்வாமி, மீமிசல் நரசிம்மாச்சார் ஸ்வாமி, சின்னாமு ரங்காச்சார் ஸ்வாமி, கோபால சமுத்ரம் நாராயணாச்சார் ஸ்வாமி, சாமளா சக்ரவர்த்திஸ்வாமி, புரிசை நடதூர் ஸ்ரீரங்காச்சார் ஸ்வாமி, சுண்டப்பாளையம் ராமபத்ராசாரியர் போன்ற மஹான்கள் ஆச்ரயித்தனர். இவர்களே அஷ்ட திக்கஜங்கள் என்று அழைக்கப்பட்டனர். இப்படிப்பட்ட ஸச்சிஷ்யர்களுக்கு க்ரந்த காலக்ஷேபம் சொல்லிக் கொண்டும், ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்து கொண்டும் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பெரியாண்டவன் தமக்கு வார்த்தக்யம் ஏற்படவே தமக்குப் பிறகு தம்மிடத்தில் ஸகலார்த்த க்ரஹணம் செய்த வேளியநல்லூர் ஷடமர்ஷண கோத்ரத்தில் அவதரித்த ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸராகவாச்சாரியர் ஸ்வாமிக்கு

துரீயாச்ரமம் அனுக்ரஹித்து ஆசார்யகம் செய்யும்படி நியமித்து கூடவே 6 மாத காலம் எழுந்தருளி இருந்தபடி. இந்த 6 மாத காலத்தில் இரண்டு ஆசார்யர்களும் சேர்ந்து இருந்தபடியாலே பெரியாண்டவன், சின்னாண்டவன் என்று வ்யவஹாரம் ஏற்பட்டது. ஸ்ரீமத் பெரியாண்டவன் தமக்குப் பிறகு சின்னாண்டவனுக்கு ஸந்யாஸம் அனுக்ரஹித்தபடி.

ஸ்ரீமத் சின்னாண்டவன் 11 வருடங்கள் ஆச்ரம நிர்வாஹத்தை நடத்தி பிறகு திருநாடலங்கரித்தபடி. 10 வருட காலம் நம் பரம்பரையில் ஆசார்யன் இல்லாமலிருந்து பிறகு சோசலை ஜோடிதார் முதலானவர்கள் ஸ்ரீமத் பெரியாண்டவன் திருவடியை ஆச்ரயித்தவரும், ஹயக்ரீவ உபாஸகரும், சதாவதானி வரத வேதாந்தாசாரியார் ஸ்வாமியை ஸேவித்து துரீயாச்ரமம் மேற்கொண்டு ஆச்ரமத்தை நிர்வஹிக்கும்படி ப்ரார்த்திக்க ஸ்வாமியும் தமது வயோதிக தசையிலும் தமது ஆச்ரமத்துக்கு ஏற்பட்ட தசையை உத்தேசித்து திருக்குடந்தை அழகியசிங்கரிடம் துரீயாச்ரமம் ஸ்வீகரித்து 5 வருட காலம் ஆசார்யகம் செய்து பிறகு ஸ்ரீமத் பெரியாண்டவன் திருவடியில் க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபங்களை செய்தவரும், ஸ்ரீமத் சின்னாண்டவனிடம் ஆத்ம ஸமர்ப்பணத்தை செய்தவருமான தேரழுந்தூர் ஸ்ரீ வரதாசாரியர் ஸ்வாமிக்கு ஸந்யாசம் அனுக்ரஹித்து ஆச்சார்யகம் செய்யும்படி நியமித்து பிறகு திருநாடலங்கரித்தபடி பிறகு ஸ்ரீமத் தேரெழுந்தூர்ராண்டவன் ஆச்ரம நிர்வாஹத்தை ஏற்று பல க்ஷேத்ரங்கள் ஸஞ்சாரம் செய்து சிஷ்யோஜ்ஜீவனம் செய்தபடி.

நமது ஸத்ஸம்ப்ரதாயமான ஸ்ரீமதாண்டவன் பரம்பரையிலே ஒரு மாணிக்கமென திகழ்ந்த ஸ்வாமியிவர். இம்மஹான் தஞ்சை ஜில்லாவில் தேரழுந்தூர் எனப்படும் திவ்யதேசத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் ஈயுண்ணி வம்சத்தில் ஸ்ரீநிநிவாஸாசாரியாருக்குத் திருக்குமாரராக அவதரித்தவர். கம்பீரமான திருமேனி. அன்பு ததும்பும் கணீரென்ற குரல். நவரஸங்களும் மிளிரும் திருவாக்கு. இப்படி ப்ரசித்தியுடன் நம் ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்து 24 சாதுர்மாஸ்யங்களைக் கண்டமேனி திருநாடலங்கரித்தபடி.

அடுத்து ஸ்ரீமத் ஆக்கூராண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன். இம்மஹான் ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவன் திருவடியை ஆச்ரயித்து உபயவேதாந்தத்தை

அதிகரித்தவர். ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவனுக்குப் பிறகு நம் ஸம்ப்ரதாயம் நலிந்து விடுமோ என்றிருந்த சமயத்தில் ஏற்கனவே ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவனால் துரீயாச்ரமம் ஸ்வீகரிக்கும்படி நியமிக்கப்பட்டிருந்தபடியால் தேரழுந்தூராண்டவன் சிஷ்யர்கள் எவரும் எதிர்பாராத ஸமயத்தில் திருநாடலங்கரிக்கவே ஸ்ரீமத் ஆக்கூராண்டவனும் (பூர்வாச்ரமம்) பெருமாளையும், ஆசார்யபாதுகைகளையும் ஸ்ரீரங்கம் எழுந்தருளப்பண்ணி திருவாராதனம் செய்துகொண்டு பிறகு தேரழுந்தூராண்டவனிடம் ஸந்யாசம் பெற்றிருந்த திருக்குடந்தை நாராயண ஸ்வாமியிடமிருந்து ஸந்யாஸம் பெற்றார். எங்களாண்டவன் என்று எல்லோராலும் போற்றப்பட்ட மஹான். தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்த்ரம் போன்ற இடங்களுக்கு ஸஞ்சாரம் செய்து நம் ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தவர்.

அடுத்து ஸ்ரீமத் தென்பிரையாண்டவன் ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன். தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடிக்கு ஸமீபத்தில் உள்ள தென்பிரையெனும் ஸ்ரீக்ராமத்தில் அவதரித்த மஹான். நான்கு சாஸ்த்ரங்களிலும் தெளிந்த ஜ்ஞானமுடையவர். பஞ்சகால பராயணர். பரம சாந்தர், ''தேவுமற்றறியேன்'' என்று மதுரகவியாழ்வார் அனுஷ்டித்தபடி பூர்வாசார்யர்களுடைய பாதுகையைத்தவிர வேறொன்றையும் அறியாத மஹான். ஜ்ஞானாஷ்டான வைராக்யசீலர். திருமேனியின் அசக்தம் காரணமாக யாத்ரைகள் மேற்கொள்ளாது ஸ்ரீரங்கம் நம் ஆச்ரமத்திலேயே எழுந்தருளியிருந்து அநேகம் சிஷ்யர்கள் உஜ்ஜீவிக்கும்படி செய்ய ஸம்ப்ரதாய ப்ரதீபத்தை நம் திருக்குடந்தை ஆண்டவனுக்கு தந்தருளிய மஹான்.

அடுத்து ஸ்ரீமத் தென்பிரையாண்டவனால் ஸந்யாசம் பெற்ற நம் திருக்குடந்தை ஆண்டவன் பெருமையைச் சொல்ல ஆதிசேஷனாலும் முடியாது என்றே சொல்லலாம்படி அமைந்துள்ளது. பகவத் ராமானுஜருக்குப்பிறகு ஆஸேது ஹிமாசலம் பாதயாத்ரை செய்த அத்விதீயரான மஹான். இந்தியாவின் எல்லா பகுதிகளுக்கும் ஸஞ்சாரம் செய்து பூர்வாசார்ய பாதுகைகளை எல்லா புண்ணிய நதிகளிலும் அபிஷேகம் செய்வித்து உகந்த மஹான் இவரே. இம்மஹானுடைய காலத்தில்தான் ஸ்ரீரங்கம், திருமலை, பெருமாள் கோயில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் நமது ஆச்ரமங்கள் (இம்மஹானால்)நிறுவப்பட்டன. லக்ஷக்கணக்கான சிஷ்யர்கள் இம்மஹானை ஆச்ரயித்தவர்கள். ஸ்ரீமத் தேரழுர்த்தூராண்டவனுடைய ஆவேசாவதரரம் என்று போற்றுமளவிற்கு எல்லோரையும் வசீகரிக்கும் பார்வை, திருவாய்மொழியின் ரஸத்தை எல்லோருக்கும் உபதேசிக்கும் போது நம்மாழ்வாரே உபதேசிப்பது போலவும் நம்மாண்டவனே உபதேசிப்பது போலவும் தோன்றும்.

மொத்தத்தில் இம்மஹானை ஸ்மரிக்கும்போது ஆழ்வார்களுடைய அம்சமாகவும், ஸ்ரீ ராமானுஜருடைய அம்சமாகவும் அனுபவிக்கத் தோன்றும். இம்மஹானுடைய காலம் நமது ஆச்ரமத்திற்கு ஓர் பொற்காலம். இம்மஹான் நமது ஸம்ப்ரதாயத்திற்குச் செய்திருக்கும் ஸம்ப்ரதாயப்பணிகள் உலகமே போற்றி உகக்கிறது. காலதத்வம் உள்ளவரையில் இம்மஹானுடைய பெருமையும் இருக்கும். இம்மஹானுடைய கடாக்ஷத்தாலேயே ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் துரீயாச்ரமம் ஸ்வீகரித்து நம் ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்து வருகிறபடி.

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனுக்குப் பிறகு நம் ஆச்ரம பரம்பரையில் மைசூராண்டவன் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் எழுந்தருளினார். ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனாலே ஸந்யாஸம் பெற்றவர். ஸ்ரீமத் தென்பிரையாண்டவனால் ப்ரேஷமந்திரம் உபதேசம் பெற்றவர். வ்யாகரணம் வேதாந்தத்தில் பூர்ண ப்ரஜ்ஞையுடையவர். ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் திருவடியில் பஞ்சஸம்ஸ்காரம், சரணாகதியை பெற்றவர். திருக்குடந்தை ஆண்டவனிடம் ஸ்ரீகார்யமாக பலகாலம் எழுந்தருளியிருந்து ஆச்ரம நிர்வாஹத்தை திறம்பட நடத்தியவர். ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனால் ''கவிரத்னம்'' என்று புகழப்பெற்றவர்.

ஸ்ரீமத் மைசூராண்டவனுக்குப் பிறகு நம் ஆச்ரம பரம்பரைக்கு ஆசார்யாள் எழுந்தருளாமல் இருந்து விடுவார்களோ என்று எல்லோரும் க்லேசத்துடன் இருந்த ஸமயத்தில் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் தமக்கு திருக்குடந்தை ஆண்டவன் நியமித்த நியமனத்தை ஏற்று துரீயாச்ரமத்திற்கு சிஷ்யர்கள் ப்ரார்த்தனையை ஏற்று அங்கீகரித்தபடி. திருக்குடந்தை ஆண்டவன் கடாக்ஷத்தால் துரீயாச்ரமம் மேற்கொண்டு நம் ஸம்ப்ரதாயத்திற்குச் செய்துவரும் மஹோன்னதமான கைங்கர்யங்கள் போற்றத்தக்கவை. ஸதாஸர்வகாலமும் பூர்வாசார்யர்களை ஸ்மரித்துக் கொண்டு அவர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளில் ஈடுபட்டு க்ரந்த நிரீக்ஷணத்திலேயே ஈடுபட்டு வருகிறபடி. பூர்வாசார்யர்கள் கட்டிக்காப்பாற்றிய நம் ஸம்ப்ரதாயத்தை தொடர்ந்து ரக்ஷித்து வருகிறபடி இவ் வைகாசி திருவாதிரையில் ஷஷ்ட்யப்தபூர்த்தி காணும் இந்த ஸமயத்தில் அம்மஹானுடைய பெருமைகளை அனுபவித்து ஸ்ரீமதாண்டவனை பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து நம் ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தருளவேண்டும் என்று பெரிய பெருமாளையும் பூர்வாசார்ய பாதுகைகளையும் ப்ரார்த்திப்போம்.


தேசிகள்



ஸ்ரீ:

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் கோமளவல்லித்தாயார் திருவடிகளே சரணம்

श्रीमते भगवते भाष्यकाराय महादेशिकाय नमः ॥

श्रीवत्स चिह्नमिश्रेभ्यो नमः ॥

श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச் செய்த

ஸ்ரீ ஸ்தவம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன்
(திருக்குடந்தை) ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்
அருளிய வ்யாக்யானம்

தனியன்

श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नमउक्तिमधीमहे।
यत्सूक्तयस्त्रयीकण्ठे यान्ति मङ्गळसूत्रताम्।।

स्वस्ति श्रीर्दिशतादशेषजगतां सर्गोपसर्गस्थितीः।
स्वर्गं दुर्गतिमापवर्गिकपदं सर्वं च कुर्वन् हरिः।
यस्या वीक्ष्य मुखं तदिङ्गितपराधीनो विधत्तेऽखिलं
क्रीडेयं खलु नान्यथास्य रसदा स्यादैकरस्यात्तया ॥१॥

ஸ்வஸ்தி ச்ரீர் திசதா தசேஷ ஜகதாம் ஸர்கோ பஸர்கஸ்திதீ:
ஸ்வர்கம் துர்கதி மாபவர்கிகபதம் ஸர்வம் ச குர்வந் ஹரிஃ ।
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தே அகிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத் தயா ॥

அவதாரிகை.

लक्ष्म्या सह ह्रुषीकेशो देव्या कारुण्य रूपया
रक्षकस् सर्वसित्तान्ते वेदान्तेपि च कीयते।

என்று ஸர்வேச்வரனை நாராயணன் ஸபத்நீகனைக் கொண்டே ஸர்வஜகத் ரக்ஷணம் செய்கிறான் என்பது ஸர்வஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் பரக்கப் பேசப்பட்டது. அறம் பொருள் இன்பம் எனப்படும் மூவகைப் புருஷார்த்தங்களும்

பெரிய பிராட்டியார் திருவருளாலேயே அடையப்படும் என்பதும் இமவந்தந் தொடங்கி இருங்கடலளவும் யாவரும் அறிந்ததே. மேலும் தாபத்ரயத்தால் வருந்துகிற ஸம்ஸாரிகளனைவரும் இக்கொடிய ஸம்ஸாரத்தைத் தொலைத்து இருவினைகளையும் சரித்து வீடுபெறுவதற்கு உபாயமும் திருமகளுடன் கூடின திருமாலே யாவன். ஆகவே பரமபுருஷனை நாராயணன் போல் திருமகளும் உபாயமென்று தான் நமது கொள்கை. இப்பவக் கடலைக் கடந்து அர்ச்சிராதி வழியே சென்று ஸ்ரீவைகுண்டலோகத்தை அடைந்தாலும் பிராட்டியுடன் கூடின பெருமானுக்கே நித்யகிங்கரனைகையால் ஸர்வேச்வரன் போல் பிராட்டியும் உபாயமென்றும் நமது கொள்கை. இவள் ப்ராப்யமான பரப்ரஹ்மத்தில் பிரிக்க முடியாத விசேஷணமாய் சொருகி நிற்பதால் உபாயத்வித்வமும் ப்ராப்யத்வித்வமும் ப்ரஸங்கியாது என்பதும் ரஹஸ்யக்ரந்தங்களில் விஸ்தாரமாகப் பேசப்பட்டது. 'வேறிமாறுத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும் நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து' என்கிற மயர்வறமதிநலமருளப் பெற்ற நம்மாழ்வார் பாசுரங்களிலும் இவ்வர்த்தம் ப்ரஸித்தம்.

அலமேஷா பரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோ பயாத் ।
அலமேஷா பரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீ கணம் ॥

ராக்ஷஸிகளைப் பெரியதோர் பயத்திலிருந்தும் இப்பிராட்டியே காக்கவல்லவ ளென்றும் ஸ்ரீராமபிரானிடமிருந்தே ராக்ஷஸிகளைக் காக்கவல்லவளென்று ஆதிகாவ்யத்தில் பேசப்பட்டபடியால் ஸம்ஸாரமென்னும் மஹாபயத்திலிருந்தும் இவளே நம்மைக் காப்பாளென்பதும் அறியத்தக்கது. 'வாசஃபரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந் நியதஃ ச்ரியம்' பரமபுருஷனை வேண்டுகிறவன் நியமத்துடன் லக்ஷ்மீதேவியைச் சரணமடையவேண்டும் என்றுசௌநக பகவான் விதித்தான். 'ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபலதாயிநீ' ஹே தேவி! நீ ஆத்மவித்யையாயும் மோக்ஷபலத்தைக் கொடுக்கிறவளாயுமிருக்கிறாய் என்று பராசரப்ரஹ்மர்ஷி பேசினார். 'ஸர்வகாமப்ரதாம் ரம்யாம் ஸம்ஸாரார்ணவதாரிணீம்' க்ஷிப்ரப்ரஸாதிநீம் தேவீம் சரண்யாம் அநுசிந்தயேத் என்று நான்முகக்கடவுளும் லக்ஷ்மியைப் பவக்கடலைக் கடத்துகிறவளாகவே அறுதியிட்டான். ப்ரஹ்ம புராணத்திலும் ஸக்ருத் விபாதா ஸர்வார்த்தி ஸமுத்ர பரிசோஷிணீ, பவபங்காபஹாரிணீ, பரநிர்வாணதாயிநீ என்று ஸம்ஸாரத்தைப் போக்கி மோக்ஷ ஸுகத்தை கொடுக்கின்றாளென்றே சொல்லப்பட்டது.

யாமாலம்ப்ய ஸுகேநேமம் துஸ்தரம் ஹி குணேததிம் ।
நிஸ்தரந்த்யசிரேணைவ வ்யக்த த்யாந பராயணஃ ॥

இவளை ஆச்ரயித்தே யோகிகள் கடப்பதற்கரிய பவக்கடலை எளிதாகவே தாண்டுகிறார்கள் என்று ச்ரியஃபதி தானே ஸாத்வத ஸம்ஹிதையில் ஓதினன். இவற்றையெல்லாம் கணிசித்தே ஆளவந்தாரும்

ச்ரேயோ நஹ்யரவிந்தலோசனமநः காந்தாப்ரஸாதாத் ருதே ।
ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு நிருணாம் ஸம்பாவ்யதே கர்ஹி சித் ॥

ஐச்வர்யத்திலோ கைவல்யத்திலோ அர்ச்சிராதி வழியே சென்று பரமபதத்தை அடைவதிலோ அனுபவிக்கப்படுகிற ஸுகமானது பெரிய பிராட்டியாரின் அனுக்ரஹமில்லாவிடில் அடையப்படமாட்டாது; என்றே அருளிச் செய்தார். இப்படி நான்குவித புருஷார்த்தங்களையும் அப்பிராட்டியே அனைத்துலகங்களுக்கும் அருள் புரிகிறாளென்கிற அவளது ஔதார்ய குணத்தை 'ஐச்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம் வா கஸ்மை சிதஞ்ஜலிபரம் வஹதே விதீர்ய அஸ்மைநகிஞ்சிதுசிதம் க்ருதமித்யதாம்பத்வம் லஜ்ஜஸே கதய கோயமுதாரபாவः' உன்பொருட்டு அஞ்ஜலி செய்கிற ஒருவனுக்கு ஐச்வர்யம் கைவல்யம் பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் இவைகளைக் கொடுத்தும், இவனுக்கு நாம் என்ன செய்தோமென்று நீ வெட்கப்படுகிறாய்; என்று பட்டர் விவரித்தருளினார். 'யதா ஸர்வகதோ விஷ்ணுஸ்ததைவேயம் த்விஜோத்தம என்றபடி இவள் தனது கொழுநனைப்போல் தானும் ஸ்வரூபத்தால் எங்கும் நிறைந்திருக்கிறாளென்பதும் ப்ரமாணஸித்தம். மேலும் அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா என்றும் யாந்யந்யாநி யதா ஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்யாஹுஸ்ஸ்வைரநுரூப ரூபவிபவைः காடோப கூடாநிதே என்றும் சொல்லுகிறபடி இவள் அகலகில்லேனிறையும் என்றபடி திருமாலைப் பிரியாமலே இருப்பாள். இவற்றையெல்லாம் ஆலோசித்தே உனக்கேற்கும் கோலமலர்ப்பாவையென்றும் ஸதா தவைவோசிதயா என்றும் பெரியோர்கள் பேசி நின்றார்கள். ஒரு நொடிப் பொழுதும் பிரியாது சேர்ந்திருந்தே ஸர்வேச்வரன் ஜகத்ரக்ஷணம் செய்கிறானென்பது ஸுவ்யக்தம். தேவ திர்யங்மநுஷ்யேஷு புந்நாமா பகவான் ஹரிः ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீः மைத்ரேய நாநயோர் வித்யதே பரம் ॥ இவ்விருவர்களைக் காட்டிலும் மேலானதோர் பொருளில்லை என்று ஸ்ரீ பராசர பகவான் நிர்ணயம் செய்தார். ஆகையால் முமுக்ஷுக்கள் அனைவரும் முற்படப் பெரியபிராட்டியாரை வணங்கி வழிபட வேண்டுமென்பது ஸ்வரூப ப்ராப்தம். மேலும்,

ஆகாரஸ்ய து விஜ்ஞாநம் ஆகாரஜ்ஞான பூர்வகம்।
தேநாகாரம் ச்ரியம் ஜ்ஞாத்வா ஜ்ஞாதவ்யோ பகவான் ஹரிः ॥

என்றபடி பெரிய பிராட்டியாரை அறிந்த பின்பே பெருமாளை அறிய முடியுமாதலால்; பிராட்டியின் ஸ்வரூப ரூப குண விபூத்யாதிகளை அறியவேண்டியது அவச்யம். மற்றும் லக்ஷ்மீ தேவியானவள், குற்றவாளிகளான நம்மேல் கொண்ட ச்ரியःபதியான புருஷோத்தமனது சீற்றத்தை மாற்றி அவனது காருண்யம் நமக்கு உஜ்ஜீவகமாம்படி பண்ணிக் கொடுக்கிற புருஷகாரமாய் இருப்பதாலும் முற்படப் பெரிய பிராட்டியாரை அறிந்துகொள்ள வேண்டியது ப்ராப்தமாகும். புருஷகாரமாவது ஸாபேக்ஷனை புருஷனுக்கு அபேக்ஷிதம் தலைக் கட்டிக் கொடுக்கவல்ல சேதனன் அபிகம்யனுகைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்தரம் என்று ஸ்ரீ தேசிகன் நியமித்தருளினார்.

இவள் நகச்சிந்நாபராத்யதி, நிர்தோஷः க இஹ ஜகதி, கः குப்யேத் வாநரோத்தம, மர்ஷயாமீஹ துர்பலா என்று சொல்லுகையே ஸ்வபாவமாகக் கொண்டிருப்பதாலும், இவளை முன்னிட்டுச் சென்றால் அவன் மறுக்க மாட்டாதொழிகையாலும்,

பிரஹ்லாதனுக்காக ஹிரண்யன் விஷயத்தில் சீற்றத்துடன் தோன்றின நரஸிம்ஹனைக் கண்டு பயங்கொண்ட ப்ரஹ்மாதிகள் இவளைச் சரணமாகப் பற்றி இவள் முன்னிலையாக அவனைக் கிட்டித் துதித்தார்களென்றும், இளையபெருமாள் ஸீதாப் பிராட்டியை முன்னிட்டு ஸ்ரீராமனை வேண்டிக்கொண்டார் என்றும் சொல்லுகிற அநுஷ்டானங்களாலும், உலகத்தில் அரசர்கள் அந்தப்புரபரிஜனங்களைப் பெருங்குற்றவாளிகளாயிருப்பினும் சிறியதோர் வ்யாஜத்தால் திருப்தியடைந்து க்ஷமிக்கக் காண்கிறோம் என்கிற லோகத்ருஷ்டியாலும், அகலகில்லேன் இறையு மென்பது முதலான ஆழ்வார்கள் பாசுரங்களாலும் இவள் புருஷகாரபூதை என்பது நாடு நகரமும் நன்கறிந்ததே. இப்புருஷகாரத்தையே அஸ்திகர்மார்ஹபலதே பத்யௌ க்ருத்யத்வயம் ச்ரியः நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே. கர்மானுகுணமாகப் பலத்தைக் கொடுக்கிற தனது பதியினிடம் பெரிய பிராட்டியாருக்கு இரண்டு கார்யங்களுண்டு. அவன் ஒருவனை நிக்ரஹிக்க நினைத்தால் அந்நிக்ரஹத்திலிருந்து அவனைத் தாண்டிவிப்பதும் அவன் அனுக்ரஹம் செய்யுங்கால் அதிகமாகச் செய்யவேணும் என்று சிபார்சு செய்வதுமென்று ஸங்க்ரஹித்தார்கள்.

ஆதலால் உபாயமாயும் உபேயமாயும புருஷகாரமாயும் இருக்கிற பிராட்டியை முமுக்ஷுக்களனைவரும் முற்பட அறிய வேண்டுமாதலால் பரம காருணிகரான கூரத்தாழ்வான் ஸ்ரீஸ்தவம் எனப்படும் இந்த ஸ்தோத்ரத்தை இயற்றிப் பிராட்டியின் ஸ்வரூப ரூப குண விபூதிகளை நம் போல்வார் உஜ்ஜீவிக்க வேண்டி விளக்கி காட்டினர்.

அவதாரிகை முற்றிற்று.

இந்த ஸ்தோத்ரம் இடையூறின்றித் தலைக் கட்டவேண்டி ஆசீர்வசன ரூபமான மங்களத்தைச் செய்தருளுகிறார் 'ஸ்வஸ்தி ஸ்ரீ' என்று.

ஸ்வஸ்தி ச்ரீः- ஸர்வேச்வரனை நாராயணன் ஸமஸ்த லோகங்களையும் உண்டு பண்ணுகிறான். அவற்றையே ஒரு கால விசேஷத்திலே ஸம்ஹாரம் செய்கிறான். ஸ்ருஷ்டி; ஸம்ஹாரங்களுக்கு நடுவே எல்லா உலகங்களுக்கும் போக்ய போகோபகரண போகஸ்தானங்களைக் கொடுத்துக் காப்பாற்றுகிறான். புண்ய கர்மங்களைச் செய்த புருஷர்களுக்கு ஸ்வர்க்கம் முதலான ஸுகத்தைக் கொடுக்கும் உயர்ந்த லோகங்களைக் கொடுக்கிறான். அங்ஙனமே பாபங்களைச் செய்தவர்களுக்கு நரகத்தைக் கொடுத்து துக்கத்தை விளைவிக்கிறான். தன்னிடம் பக்தி செய்தவர்களுக்கும் தன்னைச் சரணம் புகுந்தவர்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுத்து அவர்களை நித்யாநந்திகளாகச் செய்கிறான். இப்படி அவன் கார்யம் செய்யும்பொழுது தனது பத்னியான பெரிய பிராட்டியாருடைய அபிமதி வேண்டி அவளது திருமுகத்தைப் பார்கிறான். அவள் அவன் செய்ய விரும்பிய கார்யங்களைத் தானும் செய்ய வேணுமென்று கருதினால் அதற்குரிய சில ஜாடைகளைக் காட்டுகிறாள், அவைகளை தெரிந்து கொண்டு அப்பிராட்டியின் விருப்பப்படியே அவைகளைச் செய்கிறான். அவளுடைய அபிமதி இல்லாவிடில் அத்திருமால் அவைகளைச்செய்வதில்லையாம். இப்படி பகவான் ஸமஸ்தலோகங்களுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதிலும் ஸ்வர்க்க நரகங்களைக் கொடுப்பதிலும் மோக்ஷத்தை அளிப்பதிலும் அவளுடைய அனுமதி வேண்டி அவளுடைய திருமுகத்தைப் பார்த்து அவள் செய்யும் முக ஜாடைகளால் அவளது அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டு

அதற்கு ஈடாகக் கீழ்ச் சொன்ன காரியங்களைச் செய்கிறானே; அப்படிப் பெருமைவாய்ந்த பெரிய பிராட்டியார் அவளைத் துதிப்பதற்குப் பிரயத்னம் செய்த அடியேனுக்கு வாக்ஸம்ருத்தி, புத்தி, பக்தி முதலிய ஸகல க்ஷேமங்களையும் கொடுக்கக் கடவள் என்று வேண்டிக்கொள்கிறார். இப்படி பரமபுருஷன் பிராட்டியின் அபிமதப்படியே கார்யம் செய்வது எதற்காக வெனில், அவன் அவளோடு ஏகரஸனாய் இருப்பதினால் என்கிறார் நான்காமடியில். திருமால் திருமகளோடு ஏகரஸனாயிருப்பதாவது; இந்த ஜகத்ஸ்ருஷ்டி முதலான வ்யாபாரங்களாகிற விளையாட்டானது அப்பிராட்டியின் அபிப்ராயப்படி செய்தால் தனக்கு ப்ரீதியையும் அவளது அபிப்ராயமில்லாமல் செய்தால் அதுவே தனக்கு அப்ரீதியையும் விளைவிப்பதாயிருக்கிறபடியான ஸ்வபாவ விசேஷம்.

இப்படி இருவரும் ஸமமான ஆனந்தத்தையுடையவர்களாயிருப்பதால் அவளது விருப்படியே சகல கார்யங்களையும் அப்பரம புருஷன் செய்து இருவரும் சமமாக லீலாரஸத்தை அநுபவிக்கிறார்கள் என்றபடி.

ச்ரீஃ- ஸ்ரீயதே, ச்ரயதே, ச்ருணோதி ச்ராவயதி, ச்ரிணோதி, ஸ்ரீணோதி என்று ஆறுபடியாக பகவச்சாஸ்த்ரங்களிலே நிர்வசனம் செய்யப்பட்டிருக்கும்.

ஸ்ரீயதே-தங்களுடைய க்ஷேமத்தை விரும்பும் ப்ரஜைகளாலே ஆச்ரயிக்கப்படுகிறவள் என்பதாம். ஐச்வர்யம் கைவல்யம், அபவர்க்கம் என்கிற புருஷார்த்தங்களை அபேக்ஷிக்கிறவர்களான அதிகாரிகளனைவராலும் ஸேவிக்கப்படுகிறவள் எனப் பொருள்.

ச்ரயதேஃ- நம்மைக் காப்பாற்ற வேண்டி நம்பால் அவ்வீசன் கொண்ட சீற்றத்தை மாற்றி அவனது காருண்யம் நமக்கு உஜ்ஜீவகமாம்படி செய்வதற்காக அப்பரம புருஷனை ஆச்ரயித்திருக்கிறாள். தமது பதியிடம் 'நகஸ்சிந் நாபராத்யதி' 'கிமேதந் நிர்தோஷஃ க இஹ ஜகதி' என்கிறபடி சில உபதேசங்களாலும் தன்னழகாலும் அவனைத் திருத்தி அவனை நமக்கருள் புரியும்படி செய்வதாகிற புருஷகாரக்ருத்யம் இவ்யுத்பத்திகளாலே விளங்கும்.

ச்ருணோதி ச்ராவயதி: 1 மத்பதத்வந்த்வமேகம்யே ப்ரபத்யந்தே பராயணம்। உத்தரிஷ்யாம் யஹம் தேவி ஸம்ஸாராத் ஸ்வயமேவதாந்॥ 2 ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்மஃ। பரமப்ராப்யமான எனது திருவடிகளிரண்டையே எவர்கள் சரணமடைகிறார்களோ; அவர்களை நானே ஸம்ஸாரத்திலிருந்தும் தூக்கிவிடுகிறேன். தர்மங்களுள் சிறந்தது ஆந்ருசம்ஸ்யம் க்ரூர ஹ்ருதயனையில்லாமலிருப்பது, ஈரமான நெஞ்சுடனிருப்பது) என்பது முதலான அத்திருமால் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டிருந்து, பிறகு ஸ்வோஜ்ஜீவநார்த்திகளான ப்ரஜைகள் சரண்புகுமவசரத்திலே **ச்ருணுசாவஹிதஃ காந்த யத்தே வக்ஷ்யாம்யஹம் ஹிதம் ப்ராணைரபி த்வயா நித்யம் ஸம்ரக்ஷ்யஃ சரணாகதஃ।** என் அன்புள்ள நாதனே! நான் சொல்லும் ஹிதத்தைக் கேட்கவேண்டும். உன்னைச் சரணமடைந்தவனை உனது பிராணங்களைக்கொண்டாகிலும் காப்பாற்றவேணும் என்றும் சில வார்த்தைகளை அவனைக்கேட்கும்படி செய்கிறாளென்பதும் இவ்வ்யுத்பத்திகளால் கிடைக்கும் பொருள்களாகும். அல்லது ஸர்வேச்வரனிடமிருந்து லோகங்களுக்கு ஹிதம் என்ன? என்று கேட்டு அதை 'மித்ர மௌபயிகம் கர்த்தும்' என்று நமக்கு உபதேசிக்கிறாளென்பதும் பொருளாகும்.

ச்ரிணுதி ச்ரீணுதிः- வேறிமாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமென்றபடி ஆச்ரிதர்களுடைய பாபங்களைப் போக்குகிறுளென்பதும் 'பூவளரும் திருமகளாலருள் பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்' என்றபடி தனது ஔதார்யாதி குணங்களால் தன்னை யடைந்தவர்களுக்குப் பரமபதத்தைக் கொடுத்து அவர்களை உகப்பிக்கிறுளென்பதும் பொருளாகும். இவ்வகைப்பட்ட பெருமைகள் ஸ்ரீः என்ற விடத்தில் அனுஸந்திக்கத்தக்கவை.

ஹரிः- ஆச்ரிதர்களுடைய தோஷங்களை அபஹரிக்கிறவன், அல்லது, ப்ரஹ்மாணம் இந்த்ரம் ருத்ரம் ச யமம் வருணமேவ ச। நிக்ருஹ்ய ஹரதே யஸ்மாத் தஸ்மாத் ஹரிரிதீர்யதே என்றபடி ஸர்வஜகத்ஸம்ஹாரம் செய்பவன்.

हे श्रीर्देवि समस्तलोकजननीं त्वां स्तोतुमीहामहे
युक्तां भावय भारतीं प्रगुणय प्रेमप्रधानां धियम्।
भक्तिं बन्धय नन्दयाश्रितमिमं दासं जनं तावकं
लक्ष्यं लक्ष्मि कटाक्षवीचिविसृतेः ते स्याम चामी वयम् ॥ २ ॥

ஹே ச்ரீர் தேவி ஸமஸ்தலோகஜனனீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம்பாவய பாரதீம் ப்ரகுணய ப்ரேமப்ரதாநும் தியம்।
பக்திம் பந்தய நந்தயாச்ரிதமிமம் தாஸம் ஜனம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி கடாக்ஷவீசி விஸ்ருதேஸ் தே ஸ்யாம சாமீ வயம்

கீழே பெரிய பிராட்டியார் நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும் என்று பிரார்த்தித்தார். அதையே தெளியவுரைக்கிறார் இதில்.

ஹே ஸ்ரீः தேவி! ஆச்ரிதர்களை ஸந்தோஷிக்கும்படி செய்கிற லக்ஷ்மிதேவியே! நாங்கள் உன்னை ஸ்தோத்ரம் செய்யவேணுமென்று ப்ரயத்னம் செய்கிறோம். எங்களுக்கு உன்னை துதிசெய்வதற்குத் தகுதியான ஸரஸ்வதியை அருள் செய்யவேணும். உன்னைத் துதிப்பதற்கேற்ற ஸரஸ்வதீ என் நாவில் அமருவதற்குக் காரணமான உனது கல்யாண குணங்களைப்பற்றிய அன்புடன் கூடின புத்தியை எனக்குக் கொடுத்து வளரும்படி செய்யவேணும். மேலும் எனக்கு உன் பாலுள்ள பக்தியை வளரச்செய்து பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி என்கிற பரிபாகங்களையடையும்படி செய்து மங்களகரமாகச் செய்யவேணும். உன்னையே சரணமடைந்த அடியேனை உன்னுடைய நித்ய கைங்கர்யத்திலே அமரும்படி செய்து ஆநந்தத்தையடையும்படி செய்யவேணும். நித்யஸூரிகள் எப்படி உனது கைங்கர்யத்திலே ஈடுபட்டு பரமானந்த பரிதர்களாய் உன்னுடைய கடாக்ஷங்களாகிற அலைகளின் கிளர்த்திக்குப் பாத்திரங்களாயிருக்கிறார்களோ; அப்படியே அவர்களுடன் அடியேனும் உன்னுடைய கடாக்ஷத்திற்கு பாத்திரமாக வேண்டும் எனப் ப்ரார்த்தித்தார். ஆகவே உன்னைத் துதி செய்ய வேணும் என்று விரும்பிய எனக்கு அதற்கு வேண்டிய வாக்கையும் புத்தியையும் கொடுத்துத் துதி செய்யச் செய்து உனது பக்தியையும் கொடுத்து என்னை ஆனந்திக்கச் செய்து நித்ய ஸூரிகளுடன் பரமபதத்தில் உன்னுடைய

கடாக்ஷத்திற்கு நான் லக்ஷ்யமாகும்படி செய்ய வேண்டும் என்பது தான் கீழ் ச்லோகத்திலும் ஸ்வஸ்தி ஸ்ரீர் திசதாத் என்பதால் வேண்டப்பட்ட விஷயமாகும் என்று விவரித்தார் போலும். இதில்.

स्तोत्रं नाम किमामनन्ति कवयो यद्यन्यदीयान् गुणान्
अन्यत्रत्वसतोऽधिरोप्य फणितिःसा तर्हि वन्ध्या त्वयि ।
सम्यक्सत्यगुणाभिवर्णन मथो ब्रूयुःकथं तादृशी
वाग्वाचस्पतिनापि शक्यरचना त्वत्सद्गुणार्णोनिधौ ॥३॥

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ யத்யந்ய தீயாந் குணாந்
அந்யத்ரத்வஸதோ அதிரோப்ய பணிதிஸ் ஸா தர்ஹி வந்த்யா த்வயி।
ஸம்யக்ஸத்ய குணாபிவர்ணனமதோ ப்ரூயு:கதம் தாத்ருசீ
வாக் வாசஸ்பதிநாபி சக்யரசநா த்வத்ஸத்குணார்ணோநிதௌ॥

இப்படித் துதிசெய்வதற்கீடான வாக்கு முதலாகப் பரமபதத்திலே சென்று நித்யகிங்ரளுகுமளவுமுள்ள தன்னபிமதங்களையெல்லாம் வேண்டிக்கொண்ட பிறகு, உன்னைத் துதி செய்வதென்பதே ஒருவருக்கும் இயலாத கார்யமென்கிறார். இதில்.

ஸ்தோத்ரம் நாம: ஹே தேவியே! உன்னை ஸ்தோத்ரம் செய்வது என்பது ஒருவருக்கும் இயலாத செயலே. ஏனெனில் ஸ்தோத்ரம் என்பதற்குப் பொருள் என்னவென்று ஆலோசித்தால் அப்பொருள் உன்பால் மிகவும் அஸம்பாவிதமாயிருக்கறதென்கிறார்.

எப்படி என்னில், உலகில் ஸகலத்தையுமறிந்த கவிகள் ஸ்தோத்ரம் என்றால் என்னவென்று சொல்லுகிறார்கள்.(ஸ்தோத்ரம் என்பதற்கு லக்ஷணம் என்ன என்றபடி) உலகில் அனேக ப்ரபுக்களை அன்ன வஸ்திரத்திற்காக மாரியனைய கை, மால்வரையொக்கும் திண்டோள், தாமரைக்கண்ணன், மதியன்னமுகத்தான் எனப் பலவாறுகத் துதிக்கிறார்கள். உண்மையில் அவன் மேகம் போல் வர்ஷிக்கிற கையுள்ளவனுமல்ல. மலைபோன்ற தோளுடையவனுமல்ல. தாமரைக் கண்ணனும் அல்ல, சந்திரன் போன்ற முகத்தனுமல்ல. எல்லாம் பச்சைப்பசும் பொய்.ஆனால் இப்படிச் சொல்வதையே ஸ்தோத்திரம் என்கிறார்கள். ஆதலால் ஒருவனிடம் இல்லாத குணங்களை இருப்பதாக ஏறிட்டுச் சொல்வது தான் ஸ்தோத்ரம் எனப்படும். ஆகவே துதிச்செய்யப்படுகிறவனிடம் இல்லாதவைகளாயும் மற்றவர்களிடம் இருப்பவையுமான குணங்களை துதிக்கப்படுகிறவனிடம் ஏறிட்டுச் சொல்வதுதான் ஸ்தோத்ரம் என்று தீர்ந்தது. அப்படியாகில் அது பெரியபிராட்டியாரிடம் அஸம்பாவிதம். ஏனெனில் அப்பிராட்டியைத் துதிப்பது என்றால் அவளிடம் இல்லாதவைகளாயும் மற்றவர்களிடம் இருப்பவையுமான குணங்களை அவளிடம் ஏறிட்டுச்சொல்வது என்பதாயிற்று. இதுபிராட்டியிடம் எங்ஙனம் பொருந்தும். பிராட்டியிடம் இல்லாத குணங்களே உலகில் கிடையா. அப்படியிருக்க மற்றவரிடம் எங்ஙனமிருக்கப் போகின்றன. பிராட்டி கல்யாண குணங்கள் எல்லாவற்றிற்கும் கடல்

போன்றவளாயிற்றே. ஆதலால் ஸமஸ்தகல்யாணகுணகண பரிபூர்ணையான பிராட்டியிடம் இல்லாத குணங்களைப் பேசுவதென்கிற ஸ்தோத்ரம் அர்த்தமற்றதாகும்.

ஸ்தோத்ரம் என்பது இல்லாத குணங்களை இருப்பதாகப் பேசுவதல்ல. ஒருவனைத் துதிப்பது என்றால் அவனிடம் உள்ள குணங்களனைத்தையும் உள்ளபடியே பேசுவது தான் என்று எங்கள் கொள்கை. ஆதலால் 'ஸ்தோத்ரம் என்பதற்கு ஒருவனிடமுள்ள ஸகல குணங்களையும் உள்ளபடியே சொல்லுவது என்று பொருள்; என்று வேறுவகையாகக் கவிகள் சொல்லுவார்களாகில், அதுவும் பிராட்டியிடம் அஸம்பாவிதம் என்கிறார் பின்னடிகளால். பிராட்டியிடம் உள்ள குணங்கள் எண்ணற்றவை. ஒவ்வொரு குணத்தையும் உள்ளபடியே வர்ணிப்பது என்கிற ஸ்தோத்ரம் பிராட்டியிடம் பொருளற்றதாகவே பர்யவஸிக்கும். அவளது குணங்களை வர்ணிக்க பிருஹஸ்பதியும் சக்தியற்றவரே. ஆதலால் ஸ்தோத்ரம் என்பதற்கு இருவகையாகப் பொருள் வரைந்தாலும் பெரிய பிராட்டியாரிடம் ஸ்தோத்ர சப்தம் அந்வர்த்தமாகாது என்றார். லக்ஷ்மீதேவியாரின் குணங்களை ஒருவரும் பேசிமுடிக்க வல்லவரல்லர் என்பது இப்பத்யத்திற்குத் திரண்ட பொருள். ந தே வர்ணயிதும் சக்தா குணாந் ஜிஹ்வாபி வேதஸ: ப்ரஹ்மாத்யாஸ் ஸகலா தேவா: முநயஸ்ச தபோதநா: । த்வாம் ஸ்தோதுமபி நேசாநாஸ் த்வத்ப்ரஸாதலவம் விநா । ஹே தேவியே! உனது குணங்களை வர்ணிப்பதற்கு பிரமதேவனுடைய நாக்குகளும் சக்தியற்றவை. பிரமன் முதலிய ஸகல தேவர்களும் தவத்தைப் பொருளாகக் கொண்ட முனிவர்களும் உனது அநுக்ரஹம் இல்லாவிடில் உன்னைத் துதிப்பதற்கும் திறமையற்றவர்கள்; எனப்போருள் கொண்ட பிரமாணங்கள் இங்கு கவனிக்கத் தக்கவையாகும்.

ये वाचां मनसां च दुर्ग्रहतया ख्याता गुणास्तावकाः
तानेव प्रति सांबुजिह्ममुदिता है मामिका भारती ।
हास्यं तत्तु न मन्महे नहि चकोर्येकाखिलां चन्द्रिकां
नालं पातुमिति प्रगृह्य रसनामासीत सत्यां तृषि ॥४॥

யே வாசாம் மனஸாம் ச துர்க்ரஹதயா க்யாதா குணாஸ்தாவகா:
தாநேவப்ரதி ஸாம்பு ஜிஹ்வமுதிதா ஹைமாமிகா பாரதீ ।
ஹாஸ்யம் தத்து ந மந்மஹே நஹி சகோர்யேகா அகிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநா மாஸீத ஸத்யாம் த்ருஷி ॥

பிராட்டியின் குணங்கள் அளவற்றன. எண்ணற்றன. ஒருவராலும் பேசமுடியாது என்று கீழே பேசினார். இப்படிப் பேசிய நீர் துதிசெய்ய ப்ரவ்ருத்தித்தது எப்படி என்று சிலர் வினவ அதற்கு விடை கூறுகிறார்.

யேவாசாம்:- 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ' என்றபடி லக்ஷ்மியின் குணங்கள் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவைகளென்பது மிகப் பிரஸித்தமே. அந்த குணங்களையே பேசவேண்டுமென்று எனது வாக்கு ஜலம் ஊறுகிற நாக்குடன் ப்ரவ்ருத்தித்தது. இப்படி எனது வாக்கு ப்ரவ்ருத்தி செய்த விஷயம்



ரங்கபூரஸிகன் (திருவரங்கம்)

உலகத்தாரால் பரிஹஸிக்கப்படும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், ஒரு உதாஹரணம் காட்டுகிறேன் கேளுங்கள். சகோரபக்ஷி நிலவைத்தின்னும் என்பது பிரஸித்தம். ஒரு பெண் சகோரப்பக்ஷி நிலவைச் சாப்பிட ப்ரவர்த்திக்கிறது. அது தான் மட்டில் சந்திரனது நிலாவை முற்றிலும் சேஷமின்றி பருகிவிட வேண்டுமென்று நினைக்கிறது. அப்படியாகில் அது முழுநிலவையும் நாம் பருக முடியாதென்று நினைத்துத் தனக்கு விடாயிருந்தபோதிலும் தனது நாக்கை உள்ளே இழுத்துக்கொண்டு வெறுமனே இருக்கவேணும். அப்படி அப்பறவை இருப்பதில்லை. அது தனது தாஹத்தைப் போக்குகிறதற்கு வேண்டுமளவுமே நிலவை அருந்துகிறது. அதுபோல் அடியேனும் அப்பிராட்டியைத் துதிக்கவேணுமென்கிற ஆவலென்கிற தாஹத்தைப் பரிஹரிக்க வேண்டி அடியேனுக்கு முடிந்தவளவில் அவளது குணங்களைப் பருகுகிறேன். குணங்கள் அபரிச்சின்னங்களாஞல் எனக்கென்ன? நான் விரும்புவது தாஹசாந்தியை. அதற்கு வேண்டியளவு நான் அநுபவிக்கிறேன் என்றார்.

ஸாம்பு ஜிஹ்வம்:- ஒருவன் ஒரு பொருளில் தனக்குள்ள அதிக ஆவலைக் காண்பிக்குங்கால் 'எனது நாக்கில் ஜலம் ஊறுகிறது' என்று சொல்வான். அதன்படி லோகோக்தி ஸாம்பு ஜிஹ்வம் என்பது. லக்ஷ்மீ தேவியைத் துதிக்கவேணுமென்ற தனது பேராசையைக் காட்டுகிறது.

क्षोदीयानपि दुष्टबुद्धिरपि निस्नेहोप्यनीहोऽपि ते
कीर्तिं देवि लिहन्नहं न च बिभेम्यज्ञो न जिह्रेमि च ।
दुष्येत् सातु न तावता नहि शुना लीढापि भागीरथी
दुष्येच्चापि न लज्जते न च बिभेत्यार्तिस्तु शाम्येच्छुनः ॥५॥

க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி நிஸ்நேஹோப்ய நீஹோபி தே
கீர்த்திம் தேவி லிஹந்நஹம் நச பிபேம் யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச ।
துஷ்யேத் ஸாது ந தாவதா நஹி சுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேச்சவாபி ந லஜ்ஜதே ந ச பிபேத்யார்த்திஸ்து சாம்யேச்சுந: ॥

ஸர்வப்ரகாரத்தாலும் நீசனை தான் ஸர்வப்ரகாரத்தாலும் உயர்ந்தவளான பெரிய பிராட்டியாரைத் துதி செய்வது தகுதியல்லவே என்று நினைத்து வெட்கப்பட்டார். பயந்தார். மேலும் அழுக்குடம்பு எச்சில் வாயால் தூய்மையில்லாத நாம் அவளைத் துதிசெய்தால் அம்ருதத்தில் விஷத்தைக் கலப்பது போல் அப்பிராட்டிக்குத் தீங்கு விளைவித்ததாகுமே; என்று கலங்கினர். பிறகு ஒருவாறு தேறுதலடைந்து நாம் அப்பிராட்டியைத் துதிப்பது நமக்குத் தகுதியானதே. நாம் வெட்கமடைய வேண்டியதில்லை. பயப்படவேண்டியதுமில்லை. நாம்; துதிசெய்வதால் அவளுக்குக் குறைவொன்றும் வாராது; எனத்தீர்ந்தார். இப்படித்தான் கலங்கித் தெளிந்த தனது தசையைத் தெரிவிக்கிறார் இப்பத்யத்தில்.

க்ஷோதீயாலநபி:- ஹே தேவியே! நான் மிகுந்த அல்பனையும் கெட்டபுத்தியை யுடையவனையும் உன்னிடம் பக்தி இல்லாதவனையும் உனக்கு பணிவிடை

செய்யாதவனையும் இருந்தபோதிலும் உன்னடைய கல்யாண குணங்களைத் துதிசெய்து அநுபவிக்க வேணுமென்று ஆவல் கொண்ட மூடனை நான் பயமடையவுமில்லை. வெட்கப்படவுமில்லை. ஸர்வப்ரகாரத்தாலும் தாழ்மையுள்ள ஒரு நாய் ஸர்வ ப்ரகாரத்தாலும் பரமபவித்ரமான கங்காநதியிலே மூழ்கி ஜலத்தையும் பானம் செய்கிறது. அதனாலந்த நதி தோஷத்தையடையவுமில்லை. தீண்டாததாகுமாகிறதில்லை. அந்த நாயும் நான் இந்நதியைத் தொடுவது தகுதியாவென்று நினைத்து பயப்படுகிறதுமில்லை. வெட்கப்படுகிறதுமில்லை. ஆனால் நாய் ஒருபயனையடைவதுண்டு. அந்நாயின் தாபமெல்லாம் மூழ்கினவாறே தொலைந்துவிடுகிறது. அதுபோல் நீசனை நானும் கங்கைபோல் யாவரையும் சுத்தமாக்கவல்ல பிராட்டியின் குணங்களைப் பாடித்துதிக்கலாம். அப்பிராட்டிக்கும் ஒரு குறைவும் வாராது. நம்முடைய ஸம்ஸாரதாபமெல்லாம் தொலையும். ஆதலால் நமது தாபத்ரயத்தைத் தொலைத்துப் பரமானந்தமடைய வேண்டிப் பெரிய பிராட்டியாரைத் துதிப்பது நமக்கு ப்ராப்தமான கைங்கர்யமே என்று சொல்லி தான் ஸ்தோத்ரம் செய்யவேணுமென்று துணிந்ததைப் பேசினர்.

ஸகல கல்யாண குணங்களாலும் பரிபூர்ணரான கூரத்தாழ்வான் தன்னை இங்ஙனம் இகழ்வாகப் பேசிக்கொண்டது, உண்மையில் தாழந்தவர்களான நாம் உண்மையில் நம்மிடமுள்ள குற்றங்களை தாமரையாள் கேள்வனிடம் விண்ணப்பம் செய்துகொள்ள வேணுமென்பதை நமக்குக் காட்டிக்கொடுத்தபடியாகும்.

ऐश्वर्यं महदेववाल्पमथवा दृश्येत पुंसां हि यत्
तल्लक्ष्म्यास्समुदीक्षणात्तव यतस्सार्वत्रिकं वर्तते।
तेनैतेन न विस्मयेमहि जगन्नाथोऽपि नारायणः
धन्यं मन्यत ईक्षणात्तव यतस्स्वात्मानमात्मेश्वरः ॥६॥

ஐச்வர்யம் மஹதேவ வால்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணாத் தவ யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே ।
தேநைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோபி நாரயணோ
தந்யம் மந்யத ஈக்ஷணாத் தவ யதஸ் ஸ்வாத்மாநமாத்மேச்வர: ॥

இப்படி துதிசெய்வதற்கு வேண்டிய பிரஸ்தாவனையைச் சொல்லி முடித்து விட்டு இச்சுலோகம் முதலாக ஸ்தோத்ரம் செய்யத் தொடங்குகிறார்.

ஐச்வர்யம்:- இவ்வுலகத்திலோ அல்லது ஸ்வர்கம் முதலான வேறு லோகங்களிலோ ஒவ்வொரு சேதனர்களுக்கும் குறைவாகவோ மிகுதியாகவோ எவ்வகைப்பட்ட செல்வம் காணப்படுகிறதோ; அச்செல்வமெல்லாம் லக்ஷ்மீ தேவியின் கடைக்கண் பார்வையால் உண்டாகி நடமாடுகிறது என்பது ஒரு வியப்பைத் தரும் விஷயமல்ல. ஏனெனில் லோகநாதனையும் தனக்கு நாதனெருவனில்லாதபடி ஸ்வதந்த்ரனையும் தன்னைடொத்தார் மிக்கார் இல்லாத பரமபுருஷனுமான நாராயணனும் லக்ஷ்மீதேவியின் கடாக்ஷம் தன் மேல் விழுந்தால் தன்னைப் பெரும் பாக்யசாலியாக நினைத்துக் கொள்கிறான். இப்படி ஜகத்காரணமாயும் ஜகத்ரக்ஷண ஸம்ஹாராதி காரியங்களை தானிட்ட வழக்காய்

நடத்துகிறவனையும் நாராயண பரம்ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம் என்று சுருதிகளால் கொண்டாடப் பட்டவனுமான புருஷோத்தமனே ஆனந்தோ ப்ரஹ்ம ரஸோ வை . ஸ: என்று சுருதிகள் ஸிர:கம்பம் அனுபவிக்கிற தன்னையே அந்த தேவியின் கடைக்கண் பார்வையால் தன்யனென்று நினைப்பதற்கு காரணம் தனது செல்வமும் அப்பிராட்டியின் கடாக்ஷத்தாலே பொருந்தியிருக்கிறது என்று கருத்துக்கொண்டதன்றே. ஆதலால் பரதேவதையான பரமபுருஷனே திருமகளால் தன்னைப் பாக்யசாலியாகக் கருதினால் மற்ற பிரமன் முதலானவர்களுடைய அல்பமான ஐச்வர்யம் அவளதீனமென்பது ஒரு ஆச்சர்யப் படத் தகுந்த விஷயமா? என்றார். இத்தால் ப்ரம்மாதி தேவர்கள் அனைவருடைய செல்வமும் பிராட்டியின் கடாக்ஷத்தாலே விளைந்ததென்றும் புருஷோத்தமனுக்கும் அப்பிராட்டியின் சேர்த்தியாலேதான் பெருமை என்பதும் சொல்லப்பட்டது.

ஆத்மேச்வர:- ஆத்மநாம்+ஈச்வர:=ஸகல ஜீவாத்மாக்களையும் அடக்கி ஆள்கிற ஸ்வாமி. அத்மநோபி + ஈச்வர: = தனக்கு மேல் ஒரு ஈச்வரன் இல்லாதபடி ஸ்வதந்த்ரனை ஸ்வாமி.

ஆத்மநா + ஈச்வரன் ஸ்வபாவத்தாலேயே ஈச்வரன் ஒருஸாதனத்தைச் செய்து ஈச்வரனைய் வந்தவனல்ல. நித்யஸித்தனை ஈச்வரன் எனப் பலவகையாகப் பொருள் கொள்க.

தன்யம் மன்யதே:- திருமாலும் பெரிய பிராட்டியாருடைய சேர்த்தியால் தன்னை பாக்யசாலியாகக் கருதுகிறான் என்பது; அவளுடைய பிரிவிலே வருந்துவதாலும் சேர்த்தியிலே உகப்பதாலும் தெளியத் தெரியவரும். ஸ்ரீராமபிரான் மிதிலைச் செல்வியைப் பிரிந்து வருந்தியது சொல்வதற்களவன்று. 'வல்மீகஜன்மமுநிரேவ கடோர சேதா:' என்று சொல்லும்படி கேட்டார். மனம் இரு பிளவாய்ப் போகும்படி ஆயிற்று. மீண்டும் பிராட்டியுடன் புஷ்பக விமானத்தில் ஏறி எழுந்தருளும் கால் பிராட்டியை நோக்கி 'ஏஷ ஸேதுர் மயா பத்த: ஸாகரே ஸலிலார்ணவே தவ ஹேதோ: விசாலாக்ஷி நள ஸேதுஸ்ஸுதுஷ்கர:' ஸகரனால் வெட்டப்பட்ட கடலில் மனத்தாலும் நினைப்பதற்கரிதான செயலான இவ்வணை உன் பொருட்டு நளனைக்கொண்டு என்னால் கட்டபட்டது என்றார். தவ ஹேதோ: என்கிற பதங்களை ஆராய்ந்தால் பெருமாளுக்கு பிராட்டியின் சேர்த்தியிலே உள்ள உகப்புத் தோன்றும். மற்றும் நேதாநீம் த்வத்ருதே ஸீதே ஸ்வர்கோபி மம ரோசதே என்று இப்பொழுது உன்னைவிட்டுப் பிரிந்தால் கலங்காப் பெரு நகரான பரமபதமும் எனக்கு போக்யமல்ல வென்று மற்றுமோரிடத்தில் பிராட்டியிடம் பேசுகிறார். ஆதலால் திருமால் திருமகள் சேர்த்தியாலேதான் தன்னை தன்யனாக நினைக்கிறனென்று கொண்டுதான் ஆழ்வார்களும் அச்சேர்த்தியழகை அனுபவித்து, திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமால் என்றும் மையகண்ணுள் மலர் மேலுறைவாள் உறை மார்ப னென்றும் என் திருமகள் சேர்மார்பன் என்றும் உனக்கேற்கும் கோலமலர் பாவைக்கு அன்பா என்றும் பலபடியாகப் பாடி நின்றார்கள்.

தேவதான வயத்நேந ப்ரஸூதா அம்ருத மந்தனே இவளைப் பெற்றதற்குப்பட்டபாடு அம்ருதமதந காலத்தில் அறியப்பட்டதன்றே. யதர்த்தம் அம்போதிரபந்தி அமந்திச எவள் பொருட்டு கடல் அடைக்கப்பட்டதோ, கடையவும் பட்டதோ; என்றார் ஆளவந்தார்.

ஆதலால் பரமபுருஷன் பிராட்டியின் பார்வையால் தன்னையும் பெருமையுள்ளவனாய் நினைக்கிறானென்பது ஸூக்ஷ்மம்.

ऐश्वर्यं यदशेषपुंसि विदितं सौन्दर्यलावण्ययोः
रूपं यच्च हि मङ्गळं किमपि यल्लोके सदित्युच्यते ।
तत्सर्वं त्वदधीनमेव यदतश्श्रीरित्यभेदेन वा
यद्वा श्रीमदितीदृशेन वचसा देवि प्रथा मश्नुते ॥७॥

ஐச்வர்யம் யதசேஷபும்ஸி விதிதம் ஸௌந்தர்யலாவண்யயோ:
ரூபம் யச்ச ஹி மங்களம் கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே ।
தத் ஸர்வம் த்வததீனமேவ யதத: ச்ரீரித்யபேதேந வா
யத்வா ச்ரீமதி தீத்ருசேந வசஸா தேவி ப்ரதாமச்நுதே ॥

ஐச்வர்யம் யதசேஷபும்ஸி: ஸகலசேதனர்களிடத்திலும் யாதொரு செல்வமானது பிரஸித்தமாயிருக்கிறதோ அவ்வண்ணமே எவனுடைய ஸௌந்தர்யம் (அவயவங்களுடைய அழகு) லாவண்யம் (உடம்பின் ஸமுதாய சோபை) இவைகளுடைய ஸ்வரூபம் மிகவும் சிறந்ததென ப்ரஸித்தமாயிருக்கிறதோ; உலகில் எது மங்களகரமான வஸ்துவென்று சொல்லப்படுகிறதோ; மேலும் எந்தப்பொருளை மிகவும் நல்லதென்று சொல்லுகிறார்களோ; அவைகள் எல்லாம் ச்ரீ: என்றே ச்ரீமத் என்றே பிரஸித்தமாய் எல்லோராலும் வழங்கப்படுகிறது. அதற்குக் காரணம் அவைகளெல்லாம் உனக்கதீனமாயிருப்பதுதான். ஆனதுபற்றியே உனக்குப்பெயரான ச்ரீ: என்ற பதத்தைக் கொண்டே யாவரும் வ்யவஹரிக்கிறார்களென்றபடி. ஒருவன் மிகுந்த அழகுள்ளவனாயிருந்தால் அவனை ஸ்ரீமான் என்று சொல்லுகிறார்கள். மிகுந்த செல்வமுள்ளவனாயிருந்தால் ஸ்ரீமான் என்கிறார்கள். ஸ்ரீமான் ச்ரீயை உடையவன் எனப்பொருள். அப்பொழுது அவனது செல்வமும் அழகும் ச்ரீ: எனக்கருதப்படுகிறது. லக்ஷ்மிதேவியைச் சொல்லுகிற ச்ரீ: என்ற பதத்தாலேயே செல்வத்தையும் அழகையும் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் செல்வத்தையும் அழகையும் லக்ஷ்மி தேவியையும் ஒன்றாகக் கருதுவதே. அப்படிக் கருதுவதற்குக் காரணம் லக்ஷ்மிதேவி இட்ட வழக்கமாய் அவளதீனமாய் அவைகள் இருப்பதுதானென்றபடி.

இம் மாதிரி உலகிலுள்ள ஒரு நல்ல பொருளையோ மங்களமான வஸ்துவையோ இது ஸ்ரீமத்தான பொருள் ச்ரீயுடன் கூடியது என்று அப்பொருளிலுள்ள நன்மையையும் மாங்கல்யத்தையும் லக்ஷ்மியாகக் கொண்டு லக்ஷ்மியுடன் கூடியது என்று வ்யவஹரிக்கிறார்கள். உனது பெயரையிட்டுச் சொல்வது அவைகளுக்கு உன்னால் வந்த உயர்வைக் காண்பிக்கிறது. ஆதலால் செல்வமும் அழகும் மங்கள வஸ்துக்களும் உலகிலுள்ள நல்ல பொருள்களும் பிராட்டிக்கதீனங்களென்பது பேசப்பட்டது.

देवि त्वन्महिमावधि र्न हरिणा नापि त्वया ज्ञायते
यद्यप्येवमथापि नैव युवयोस्सर्वज्ञता हीयते ।

यत्रास्त्येव तदज्ञतामनुगुणां सर्वज्ञताया विदुः
व्योमांभोज इदन्तया खलु विदन् भ्रान्तोयमित्युच्यते ॥८॥

தேவி த்வந்மஹிமாவதிர்ந ஹரிணு நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவ மதாபி நைவயுவயோ ஸ்ஸர்வஜ்ஞதா ஹீயதே।
யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதா மநுகுணும் ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜ மிதம்தயா கலு விதந் ப்ராந்தோயமித்யுச்யதே॥

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த பிராட்டியாரின் ஐச்வர்யம் அப்பிராட்டியாலும் அவள் கேள்வனை நாராயணனாலும் அளக்க முடியாததாகுமென்கிறரிதில்.

தேவி:- ஹே லக்ஷ்மீதேவியே! லீலாவிபூதி நித்ய விபூதி என்கிற உனது பெருமையின் எல்லை நிலத்தை உன்னாலும் அறியமுடியாது. எல்லா உலகங்களையும் படைத்துக் காத்தழிக்கும் சக்தி வாய்ந்தவனும் ஸர்வஜ்ஞனும் உன்னைவிட்டுப் பிரியாமலிருப்பவனுமான புருஷோத்தமனே உனது பெருமையை இவ்வளவு தான் என்று அளவிட்டு அறிய முடியாதவனாயிருக்கிறார்; என்று ஆழ்வான் விண்ணப்பம் செய்யவே பெருமாளும் பிராட்டியும் ஆழ்வானைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டார்கள். எங்களிருவருக்கும் ஸர்வஜ்ஞர்கள் என்று பிரஸித்தி உண்டு. அதாவது எல்லாவற்றையும் அறிந்தவர்களென்பது. எங்களுக்கு தெரியாத விஷயமே கிடையாது என்பதும் அதில் அடங்கியதே. நீர் இப்பொழுது பிராட்டியின் பெருமையின் எல்லை உங்களுக்குத்தெரியாதென்று சொல்லிவிட்டீரே. அதனால் எங்களுக்கு ஸர்வஜ்ஞதை என்பது இழந்ததாய் விட்டதே; ஒரு விஷயம் தெரியாத போனாலும் எல்லாம் தெரிந்தவன் என்கிற பெயருக்கு குறைவுதானே. ஆகையால் எங்களுடைய ஸர்வஜ்ஞதைக்குக் குறைவு வர எப்படிப் பேசினீர் என்று. அதற்கு ஆழ்வான் விடை அளிக்கிறார் மேலடிகளால்.

பெரிய பிராட்டியாரின் பெருமையின் எல்லை நிலம் உங்களுக்கு தெரியாது என்று நான் சொன்னது சொன்னது தான். உண்மையிலும் உங்களுக்கு அது தெரியாததே. ஆனாலும் உங்களுடைய ஸர்வஜ்ஞதை என்பதற்கு குறைவொன்றும் வராது. உலகத்தில் ஒருவன் ஒருவிஷயத்தை அறிந்தவன் என்றால் அதற்குப்பொருள் என்ன? அவ்விஷயத்தை உள்ளபடியே அறிந்தானால் அதை அறிந்தவன் என்று சொல்கிறார்கள். அவ்விஷயத்தை அதுள்ளபடிக்கின்றி வேறுபாடாக அறிந்தானால் அதை அவன் அறிந்தவனல்ல. ஒரு உதாஹரணம் காட்டுவோம்.

ஒருவன் வ்ருக்ஷம் என்பது எனக்கு தெரியுமென்றால் அதனை நாம் வ்ருக்ஷம் எப்படி இருக்குமென்று கேட்டால் அவன் அடியிலே வேரும் மேலே கிளைகளும் இலைகளும் அடங்கியுள்ள ஒரு பொருள் என்று சொல்வானால் அவன் அறிந்தவன் என்று சொல்லப்படுகிறான். அப்படிக்கின்றி மேலே வேரும் அடியில் பூமியில் இலைகளும் உள்ளது வ்ருக்ஷம், நான் அப்படித்தான் பார்க்கிறேன் என்பானால் அவனை நாம் பித்தன் என்கிறோம். அதே மாதிரி ஒருவன் நான் முயலுக்கு கொம்பு இருப்பதை அறிந்திருக்கிறேன், மலடிக்குப் பிள்ளையைப் பார்த்திருக்கிறேன் என்றால் அவனை அறிந்தவனென்று சொல்லுவதில்லை. ஏன்? உலகில் இல்லாத பொருளை இருப்பதாக நினைத்தால் அது

அறிவல்ல. அது பிரமம். ஆனது பற்றி அவனைப்பித்தனென்று சொல்லுகிறோம். ஆதலால் ஒரு பொருளை அறிந்தவன் என்பதற்கு உலகில் உண்மையிலுள்ள பொருளொன்றை அதுள்ளபடியே அறிகிறவன் எனப்பொருள். இம்மாதிரி ஸர்வஜ்ஞன் (எல்லாவற்றையும் அறிந்தவன்) என்பதற்கு எல்லாப் பொருள்களையும் அவைகளின் தன்மைகளையும் உள்ளபடியே அறிந்தவன் எனப்பொருள். திவ்யதம்பதிகளான நீங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்களே. பிராட்டியின் பெருமைக்கு எல்லை நிலமிருந்தால் அதையும் அறிந்திருப்பீர்கள். இல்லாத வஸ்துவை உள்ளதாக அறிந்தால் அது பிரமமல்லவா. இல்லாத பொருளை உளதாக அறிவது ஸர்வஜ்ஞதைக்குள் அகப்படாது. ஒருவன் ஆகாசத்தில் ஒரு தாமரை முளைத்ததைப் பார்த்தேன். மிகுந்த மணமுள்ளதாயிருந்தது. இதழ்கள் அடர்ந்திருந்தது. பொன்னிறமாயிருந்தது என்று சொன்னானாகில் உடனே இவன் அஸம்பாவிதமான பொருளைப் பேசுவதால் இவன் பித்துப்பிடித்தவன் என்று சொல்லிவிடுவோம். அதன்படி ஆகாசத்தாமரைப் போல பிராட்டியின் பெருமையின் எல்லை நிலம் அஸம்பாவிதமான பொருள். அதை அறியாததால் குறைவு கிடையாது. இல்லாத பொருளை உளதென்றும் உள்ள பொருளை இலதென்றும் அறிவது அறிந்ததாகாது. ஆதலால், இல்லாத பொருளான பிராட்டியின் பெருமையின் எல்லையை நீங்கள் அறியாதது உங்களுடைய ஸர்வஜ்ஞதைக்குக் குறைவு உண்டு பண்ணுது. இல்லாத பொருளை இல்லையென்றறிவது ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமானதே என்று உதாஹரணத்துடன் விளக்கிக் காட்டினார். ஆகவே பிராட்டியின் பெருமை அளவற்றது என்பது இச்சுலோகத்தில் விளக்கப்பட்டது.

ஆளவந்தார் :-

यस्यास्ते महिमान मात्मन इव त्वत् वल्लभोपि प्रभुः
नालम् मातु मियत्तया निरवधिम् नित्यानुकूलम् स्वतः

வாரீர் பெரிய பிராட்டியாரே! உமது கொழுநனை ஸர்வசக்தனை பெருமானும் ஸ்வபாவத்தாலேயே எப்பொழுதும் அநுகூலமான எல்லையற்ற உனது பெருமையை இவ்வளவு என்று அளவிட்டு அறியமுடியாதவனாய் இருக்கிறான். அவனுக்கு தாம் தம் பெருமையறியா என்றபடி தன் பெருமை எப்படி அளவிட்டறிய முடியாதோ அவ்வண்ணமே உனது பெருமையையும் அளவிட்டு அறியமுடியாதென்று பேசியதை ஸ்மரிக்கத் தகும். இங்கு சொல்லப்பட்ட பிராட்டியின் பெருமையாவது அவளது கல்யாணகுணயோகமும் உபயவிபூதி சேஷித்வமும்.

लोके वनस्पति बृहस्पति तारतम्यं
यस्याः प्रसादपरिणाममुदाहरन्ति ।
सा भारती भगवती तु यदीयदासी
तां देवदेवमहिषीं श्रियमाश्रयामः ॥९॥

லோகே வஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம்
யஸ்யா: ப்ரஸாத பரிணாம முதாஹரந்தி ।
ஸா பாரதீ பகவதீ து யதீயதாஸீ
தாம் தேவதேவமஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ॥

லோகே:- உலகத்தில் ஒருவன் மிகுந்த அறிவுள்ளவனாயிருந்தால் அவனை பிருஹஸ்பதி என்று சொல்லி யாவரும் போற்றுகிறார்கள். ஒருவன் சிறிதும் அறிவில்லாதவனாயிருந்தால் அவனை மரம் என்று சொல்லிப் பழிக்கிறார்கள். கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும், அவையல்ல நல்ல மரங்கள்- சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான், குறிப்பறியமாட்டாதவன் நன்மரம் என்கிற மூதுரையையும் காண்க. ஆதலால் அறிவற்றவைகளுள் சிறந்தது மரம். அறிவுள்ளவர்களுள் சிறந்தவர் தேவகுருவான பிருஹஸ்பதி. இப்படி மரம் என்றும், பிருஹஸ்பதி என்றும் சொல்லிக் காரணம் அறிவின்மையும் அறிவுள்ளமையுமே. இந்த தாரதம்யம் எப்படி ஏற்பட்டதென்றால் கலைமகளின் கருணையின் தாரதம்யத்தாலே தான். ஆகவே ஸரஸ்வதீ தேவியின் அநுக்ரஹம் எவர் பால் பூர்ணமாய் இருக்கிறதோ அவர் புவியில் பிருஹஸ்பதி என்று போற்றப்பட்டுகிறார். எவர் பால் அவ்வநுக்ரஹம் இல்லையோ அவர் மரம் எனப்படுகிறார்.

இப்படி உலகத்தாரனைவரும் கொண்டாடுவதற்குக் காரணமான வித்யைகளுக்கு அதிஷ்டான தேவதையான ஸரஸ்வதீ தேவியும் லக்ஷ்மீ தேவிக்கு அடிமை செய்கிறவளாய் இருக்கிறாள். ஆதலால் ஸரஸ்வதியால் வணங்கப்பட்ட பெரிய பிராட்டியாரை நாம் வணங்குவோம் என்றபடி.

யதீயதாஸீ- ஆளவந்தார் சதுச்லோகியில்
ப்ரஹ்மேசாதி ஸுரவ்ராஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸ தாஸீகண:

என்று பிரமன் ருத்ரன் முதலிய தேவர்கள் தங்கள் தங்கள் மனைவிமார்களுடன் பிராட்டிக்கு அடிமை செய்கின்றவர்கள்; என்று அருளிச்செய்திருப்பது இங்கே அநுஸந்திக்கத்தகும். இங்கு ஸரஸ்வதீ தேவி என்று சொல்லியது உபலக்ஷணம். மற்றுமுள்ள தேவர்களின் மனைவிகளும் பிராட்டிக்கு அபேக்ஷிதங்களான பணிவிடைகளைச் செய்கிறார்கள் எனக்கொள்ளவேணும். அங்ஙனம் மற்றைய தேவமாதர்கள் செய்யும் பணிவிடைகளில் ஒன்றை ஒரு பெரியார்.

கலைமடந்தை வணங்கி யொருவடந் தொட்டாட்ட
கற்புடைய வள்ளியொருவடந்தொட்டாட்ட
மலைமடந்தை பரிவிலொருவடந்தொட்டாட்ட
வானவர் கோன் மடந்தை யொருவடந்தொட்டாட்ட
அலர்மடந்தை நிலமடந்தை யுலகம் வாழ
அருண்மடந்தை பொருண்மடந்தை யழகார் நெற்றிச்
சிலை மடந்தை திருமடந்தை யாடிரூசல்.

ரீரங்கநாயகியாராடிரூசல். என்று ஊசற்றிரு நாமப் பாசுரத்தில் அழகாக அருளிச்செய்தார். ஸ்ரீரங்க நாச்சியார் ஊஞ்சலாடும்பொழுது கலைமகள், வள்ளி, மலைமகள்,

இந்திராணீ என்கிற நால்வர்களும் நான்கு வடங்களையும் பிடித்துஞ்சலே ஆட்டிக்கொண்டு பிராட்டியை ஸேவித்து நிற்கிறார்கள் என்பது திரண்ட பொருள்.


மோக்ஷமளவான செல்வத்தை விரும்புபவர்கள் போல் வித்யைகளை விரும்புபவர்களும் ஸ்ரீலக்ஷ்மீதேவியையே உபாஸிக்கலாம் என்பதும் தெரிவிக்கப் பட்டதாகுமிதில்.

यस्याःकटाक्षमृदुवीक्षण दीक्षणेन
सद्यस्समुल्लसितपल्लवमुल्ललास ।
विश्वं विपर्ययसमुत्थविपर्ययं प्राक्
तां देवदेवमहिषीं श्रियमाश्रयामः ॥१०॥

யஸ்யா: கடாக்ஷம்ருது வீக்ஷண தீக்ஷணேந
ஸத்யஸ்ஸமுல்லஸிதபல்லவ முல்லலாஸ ।
விச்வம் விபர்ரயய ஸமுத்த விபார்யயம் ப்ராக்
தாம் தேவதேவ மஹிஷீம் ச்ரிய மாச்ரயாம: ॥

யஸ்யா:- முன்பு பிரளயகாலத்தில் எவளுடைய கடாக்ஷமில்லாமையினால் பிரபஞ்சங்களெல்லாம் இப்பொழுது தென்படுவது போலிராது நாமரூபவிபாகமின்றி அஸத்ப்ராயமாயிருந்தனவோ; பிறகு எவள் இவைகளை நாம் குளிரக்கடாக்ஷிக்க வேணுமென்று நினைத்தவளவிலேயே பிரபஞ்சங்களெல்லாம் அக்கணமே தளிர்த்துத் தழைத்தோங்கி நாமரூப விபாகத்துடன் விளங்கினவோ: அந்த தேவாதி தேவனுடைய மஹிஷியான மலர்மகளை வணங்கி வழிபடுகிறோம்.

இப்பத்யத்தில் பெரியபிராட்டியாரே ஸகல புருஷார்த்தங்களுக்கும் காரணமென்றும் அவளுடைய அநுக்ரஹலேசமே அளவற்ற வநிஷ்டங்களைப் போக்கி இஷ்டப்ராப்தியைச் செய்விக்குமென்றும் சொல்லப்படுகிறது. இங்கே ப்ராக் என்பதற்கு ப்ரளய காலத்திலேயென்று சிலர் பொருள் கூறுவார். துர்வாஸமுனிவரது சாபகாலத்தில் என்றும் பொருள் வரைவதுண்டு. இரண்டும் பொருந்தியவையே. பிரளயகாலத்தில் உலகங்க ளெல்லாம் பெயர் வடிவம் இவைகளொன்றுமின்றி அஸத் ப்ராயங்களாயிருந்தன. ஜீவன்களும் அசேதனம் போல் அறிவழிந்து கிடந்தன. அதற்குக் காரணம் பிராட்டியுடைய கடாக்ஷமில்லாமையே. அவளுடைய கடாக்ஷமில்லாமைக்கு காரணம் அவள் உபேக்ஷையாயிருந்ததேயல்லது கோபத்துடனிருந்ததாலல்ல. பிராட்டிக்குக் கோபமும் கிடையாது, கோபமும் வந்ததில்லை வரப்போவதுமில்லை. க: குப்யேத் வாநரோத்தம என்று திருவடியைப் பார்த்துக் கோபத்தையறியாதவளாயிருந்தே பேசினாள். ஆதலால் அவள் இவ்வுலகங்களின்பால் உதாஸீநையாயிருந்தது பற்றி உலகங்கள் நாசமடைந்திருந்தன. பிறகு இவைகள் வீணாய்க் கிடக்கின்றனவே! என்று இரக்கங்கொண்டு குளிரக் கடாக்ஷிக்க வேணுமென்று ஸங்கல்பித்தாள். உடனே அந்த க்ஷணத்திலேயே முன்னைவிடப் பதின் மடங்கு அதிகமாகத் தழைத்து ஒங்கிவளர்ந்தன. என்ன விந்தை நினைத்தவளவிலேயே பிரபஞ்சங்கள் பதின்மடங்கு விருத்தியடைந்து விளங்குகின்றனவே. ஆதலால் அவளது பார்வையில்லாதபோது பிரபஞ்சம் நாசத்தையடைந்தாலும் அவள்



திருமலையப்பன்

பார்க்கவேணுமென்று ஸங்கல்பித்தபோதே பிரபஞ்சம் உண்டானபடியாலும் அப்பிராட்டியே ஸகல லோகத்திற்கும் காரணமானவள் என்று சொல்லப்பட்டது.

துர்வாஸமுனிவரது சாபத்தால் தேவேந்திரன் ஐச்வர்யத்தையிழந்து வருந்துங்கால் தேவர்களும் மற்றுமுள்ளவுலகத்தாரும் ஒளி மழுங்கி வருந்தினர்கள். உலகங்கள் அஸத் பிராயங்களாயிருந்தன. அதற்குக் காரணம் பிராட்டியின் கடாக்ஷமில்லாமையே. பிறகு பாற்கடலை கடையுங்கால் பிராட்டி அவதரித்துக் கடாக்ஷித்தபடியினால் தான் உலகங்கள் முன் போல் ஸம்ருத்தியுடனிருந்தனவென்றும் சொல்வது பொருத்தமுளதே. தேவேந்தரனும்

த்வயா தேவி பரித்யக்தம் ஸகலம் புவநத்ரயம்
விநஷ்ட ப்ராய மபவத் த்வயேதாநீம் ஸமேதிதம் ॥

உன்னாலே விடப்பட்ட மூவுலகங்களும் நாசத்தையடைந்த ப்ராயங்களாயிருந்தன. உன்னால் இப்பொழுது விருத்தி செய்யப்பட்டது என்று பிராட்டியிடம் விண்ணப்பம் செய்து நின்றான். எனவே ஆளவந்தார் அருளிய சதுச்சுலோகியின்

ஈஷத் த்வத் கருணாநிரீக்ஷணஸதா ஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே
நஷ்டம் ப்ராக் ததலாபதஸ்தரிபுவநம் ஸம்ப்ரத்யனந்தோதயம் ॥

என்கிற சுலோகார்த்தத்தையே இங்கு கூரத்தாழ்வான் விவரித்தார்போலும். ஆகவே பெரிய பிராட்டியார் கடாக்ஷமே பிரபஞ்சங்களின் ஸத்தைக்குக் காரணமென்பதும் அவள் எப்பொழுதும் அநுக்ரஹம் செய்வதையே ஸ்வபாவமாகக் கொண்டவள் என்பதும் இச்சுலோகத்திற்குத் திரண்டபொருள்.

ஸாமர்க்யஜுர்மயீம் தேவீம் வேதகர்பாம் மநஸ்விநீம்
லோகேசேச விபூதீநாம் காரணம் யந்நிரீக்ஷணம்

என்கிற மங்கள ஸம்ஹிதாவசனத்தை இங்கே பிரமாணமாக அநுஸந்தித்துக்கொள்க. மேலும் ம்ருது வீக்ஷணதீக்ஷணேந என்றதால் அநுக்ரஹத்துடன் கடாக்ஷிக்கவேணுமென்று ஸங்கல்பித்தாள் என்று கொண்டு

பத்மே ஸ்திதா பத்மவர்ணா பத்மநாபப்ரியா சுபா
ஸதாநுக்ரஹ ஸம்பந்நா ஸா மே தேவீ ப்ரஸீதது ॥

என்று மங்கள ஸம்ஹிதையிலும் அநுக்ரஹ பராம் ருத்திம் அநகாம் ஹரிவல்லபாம் என்று அஷ்டோத்தரசதநாம ஸ்தோத்ரத்திலும் பேசப்பட்ட அநுக்ரஹசீலதை என்கிற குணத்தையும் இங்கு அநுபவிக்கப்ராப்தம்.

यस्याः कटाक्षवीक्षाक्षणलक्षं लक्षिता महेशा स्युः ।
श्रीरङ्गराजमहिषी सा मामपि वीक्षतां लक्ष्मीः ॥११।

யஸ்யா: கடாக்ஷவீக்ஷா க்ஷண லக்ஷம் லக்ஷிதா மஹேசா ஸ்யு :
ஸ்ரீரங்கராஜ மஹிஷீ ஸா மாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ: ॥

யஸ்யா:- உலகில் எவர்கள் பெரிய பிராட்டியாருடைய கடைக்கண் பார்வைக்கு ஒரு க்ஷணகாலம் பாத்திரர்களாயிருப்பார்களோ; அவர்கள் மிகுந்த ஐச்வர்யசாலிகளாய் ஆகிறார்கள். ஆதலால் அவ்வளவு பெருமைவாய்ந்த ஸ்ரீரங்கநாதனுடைய திவ்ய மஹிஷியான பெரிய பிராட்டியார் அடியேனையும் கடாக்ஷிக்கக் கடவள். அதனால் அடியேனும் க்ருதார்த்தனாகிறேனென்றபடி.

கடாக்ஷ வீக்ஷா க்ஷண லக்ஷம் லக்ஷிதா: உலகத்தில் பலர் ஐச்வர்யவான்களாய் விளங்குகிறார்கள். முதலில் மனிதர்களுள் அரசர்களாயிருப்பவர்களை மிகுந்த தனவான்களென்று கொண்டாடுகிறோம். அதற்கு மேல் தேவர்களுள் லோகபாலர்களெண்மர்களை மஹேசர்களெனச் சொல்லுகிறோம். மேலும், இந்திரனை த்ரிலோகாதிபதி என்று வரைகிறோம். அதற்குமேல் பிரமனை தேவர்களனைவருக்கும் நிர்வாஹகனென்றும் ஈரேழுலகங்களுக்கும் நாதனென்றும் மொழிகிறோம். இப்படி மிகுந்த பெருமை வாய்ந்தவர்களெல்லாரும் பெரிய பிராட்டியாரின் கடாக்ஷத்திற்குப் பாத்திரர்களாகியே அவ்வவ்வோ பதவிகளைப் பெற்று மேன்மையுடன் விளங்குகிறார்களென்றபடி.

பத்மயோநி ரிதம் ப்ராப்ய படந் ஸ்தோத்ரம் தத: க்ரமாத்
திவ்யஞ் சாக்ஷடகுணைச்வர்யம் தத் ப்ரஸாதாச்ச லப்தவாந்।

என்று பிரமதேவன் லக்ஷ்மீஸ்தோத்ரத்தை பக்தியுடன் அநுஸந்தித்துக்கொண்டு அந்த லக்ஷ்மீதேவியின் ப்ரஸாதத்தால் (அவளுடைய கடாக்ஷத்தைப் பெற்று) எண் மடங்கு அதிகமாக திவ்யைச்வர்யத்தைப் பெற்றான்; என்று பிரஹ்மபுராணத்தில் ஓதப்பட்டது.

ப்ரஹ்மாத்யாஸ்ச ஸுராஸ்ஸர்வே முநயஸ்ச தபோதநா:
ஏதந்தே த்வத்பதச்சாயா மாச்ரித்ய கமலேச்வரி

என்று காச்யபர் பிராட்டியை நோக்கி தண்டனிட்டு பிரமன் முதலிய தேவர்களும் முற்றும் தவத்தையே பொருளாக்கொண்ட முனிவர்களும் உனது பாத நிழலை ஆச்ரயித்து மிகுந்த பாக்யசாலிகளாய் விளங்குகிறார்கள் என்று துதிசெய்தார்.

மங்கள ஸம்ஹிதையில் எட்டு திக்பாலர்களும் பிராட்டியின் கடாக்ஷத்தாலேயே பெருமை பெற்று விளங்குகிறார்களென்பது பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. உலகில் நம்மெதிரே வெண்குடை பிடித்து சாமரங்களால் வீசப்பட்டு பலர் பல்லாண்டுபாட மாவேகிச்செல்கின்ற மன்னவர்களும் பூமேவும் செங்கமல நாபியான் திவ்ய மஹிஷியான பிராட்டியாரின் திவ்ய சரணாரவிந்தங்களைத் தொழுதே அப்பதவியேற்றார்களென்பதை ஸ்ரீதேசிகன் ச்ரேயஸ்காமா: கமலநிலயே என்கிற ச்லோகத்திலே விவரித்தருளினார்.

ஆர்த்தரக்ஷணம் செய்வதில் தீக்ஷிபெற்றதும் அம்ருதத்தை வர்ஷிப்பதும் தாமரை மலருக்கொப்பானதுமான கடாக்ஷங்களைக் கொண்டு உனது திருக்கண்கள் எந்தெந்த திசைகளில் விளையாடுகின்றனவோ; அத்திசைகளிலெல்லாம் ஐச்வர்யங்கள் கூட்டம் கூட்டமாக நான் முன்னே நான் முன்னே என்று ஓடுகின்றனவென்ற கருத்துள்ள ஆர்த்தத்ராணவ்ரதிபி: என்ற ச்லோகத்திலுல் இந்த ச்லோகத்தின் முன்னடியை விளக்கிக்காட்டினர். ஆகவே மனிதர் முதல் பிரமனளவாயுள்ள ஐச்வர்யங்களெல்லாம் பெரிய பிராட்டியாருடைய கடாக்ஷாதீனங்களென்பது பிரமாண பிரஸித்தமானவை முன்பாதியில் பேசப்பட்டது.

இது நிற்க மோக்ஷச்வர்யத்திற்கும் பிராட்டியின் பிரஸாதமே காரணமென்பது ஸம்ஸாரார்ணவ தாரிணீம் விமுக்தி பலதாயிநீம், என்று பரக்கப் பேசப்பட்டிருப்பது பிரஸித்தமே. ஆனதுபற்றி அடியேன் மோக்ஷஸம்பத்தையடையவேண்டி அடியேனையும் அவள் கடாக்ஷிப்பளாக வென்று வேண்டிக்கொண்டு ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டினார்.

சுபமஸ்து.

॥ श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नमः ॥

श्रीः

कल्याणानामविकलनिधिः काऽपि कारुण्यसीमा
नित्यामोदा निगमवचसां मौळिमन्दारमाला ।
संपद्दिव्या मधुविजयिनः संनिधत्तां सदा मे
सैषा देवी सकलभुवनप्रार्थनाकामधेनुः ॥

ஸ்ரீ :

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் (திருக்குடந்தை)

ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

அருளிய

ஸ்ரீ பாஷ்ய ஸாரம்

உலகில்எல்லா ஜீவன்களுக்கும் ஒரு பொருளை நிச்சயம் பண்ண வேண்டுவது ப்ரமாணங்களாலே. அந்த ப்ரமாணம், ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என மூன்று வகைப்படும்.அவைகளுள் எதைத் தெரிந்து கொள்ள வேண்டியது? எதை விட வேண்டியது? எது நமக்கு இஷ்டமான பலத்தைக் கொடுக்கும்? எது நமக்கு விருப்பமில்லாத பலனைக் கொடுக்கும்? அந்தப் பலன்களை அடைவதற்கு மார்க்கங்கள் என்ன? இவைகளை இந்த லோகத்தில் தெரிந்து கொள்ள வேண்டுமானால் ப்ரத்யக்ஷம், அநுமானம் இவைகளால் தெரிந்து கொள்ளலாம். அதிலும் நம் கண்ணுக்குப் புலப்படாத மேல் லோகத்திலுள்ள புருஷார்த்தங்களுக்கும் அவைகளை அடையவுள்ள மார்க்கங்களுக்கும் சப்தம் தான் ப்ரமாணம். மேலும் ஒருவராலும் சொல்லப்படாத, குற்றமுமில்லாத வேதங்கள் தான் முக்கியமான ப்ரமாணம். அவைகளுள் இந்த லோகத்தில் அனுபவிக்கக் கூடிய பசு, பிள்ளை, மழை, ஆகாரங்கள் முதலிய பலன்களுக்கும், மேலுலங்களிலுள்ள ஸ்வல்பமான- அழிக்கக்கூடிய, பலன்களுக்கும் அவைகளை அடைவதற்குண்டான உபாயத்தை அனுஷ்டிப்பதற்கும் வேதங்களுடைய பூர்வபாகம் நமக்கு அறிவை உண்டு பண்ணிக்கொடுக்கிறது. உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தையும், அதனுடைய உபாயத்தையம் வேதங்களுடைய மேல்பாகமான உபநிஷதங்கள் காட்டித் தருகின்றன. அந்த உபநிஷதங்களின் அர்த்தங்கள் நம்முடைய பூர்வாசார்யர்களால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இது நடுவே, அந்த உயர் மார்க்கத்திற்கு முன் போல் சிலர் விபரீதமான அர்த்தங்கள் பண்ணி, அவ்வழிகளிலேயே சிலர் நடக்கத் தொடங்கினர். அவர்களையும் உஜ்ஜீவிப்பிக்க வேண்டி நமது பூர்வாசார்யர்கள் காண்பித்தருளின அநாதியான நல்ல மார்க்கத்தை, அவ்வழிகளில் காணும் முட்களை எடுத்து சுத்தி செய்து, மோக்ஷத்தை விரும்புகிற ஜனங்களுக்கு நன்மார்க்கத்தை காட்டுவதற்கு, ஸம்ஸாரத்தில் மூன்று வித தாபங்களால் துக்கத்தை அடைந்திருக்கிற நம்முடைய பாக்ய விசேஷத்தால் பகவான் ஸ்ரீபாஷ்யகாரர் என்ற ப்ரஸித்தரான ஸ்ரீராமானுஜன் என்கிற பரமாசார்யர் அவதரித்தார். ஸ்ரீ பாஷ்யகாரருக்கு எம்பெருமானார் ராமாநுஜன், உடையவர், இளையாழ்வார், என்று பல திருநாமங்கள் உண்டு. அந்தப் பெருமை வாய்ந்த வியாஸ பகவானால் அருளிச் செய்யப்பட்ட ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு வ்யாக்யானம் செய்தருளினார். வேதத்தினுடைய பூர்வபாகத்திற்கு அர்த்தங்களை நிர்ணயம் பண்ணுவதற்கு ஜைமினிஸூத்ரங்கள் அமைந்திருந்த போதிலும், அவைகளுக்கு அர்த்தம் சொல்லுவதில் பலர் பலவிதமாக அபிப்ராயப்பட்டாலும் அவைகளுக்கு பாஷ்யம் செய்யவில்லை. ஏனென்றால் பூர்வபாகத்தில் சொல்லப்படுகின்ற கர்மங்களை அனுஷ்டிப்பதில் மாறுபாடு இல்லாமலிருப்பதால் கர்மங்களின் அனுஷ்டானங்களினாலேயே ஸ்வர்க்கம் முதலிய புருஷார்த்தங்களை அடைய முடியுமாதலால் அவைகளில் நோக்கில்லை.

உபநிஷத்பாகத்தில் சொல்லப்பட்ட புருஷார்த்தம் ஞானத்தாலேயே அடைய வேண்டி இருப்பதால் அர்த்தஜ்ஞானத்தில் மாறுபாடு இருந்தால் மோக்ஷமாகிற புருஷார்த்தம் கிடையாது. ஆத்மா ஸம்ஸ்ருதியை விட்டு விலக வழியில்லை. ஆதலால் அர்த்தஜ்ஞானத்தை சிக்ஷித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் உபநிஷத்பாகங்களின் அர்த்தத்தை தீர்மானம் செய்ய அவதரித்ததான ப்ரஹ்ம ஸூத்ரங்கள் ஸ்ரீ பாஷ்யகாரரால் வ்யாக்யானம் செய்யப்பட்டது.

545 ஸூத்ரங்கள் அடங்கிய இந்த சாஸ்த்ரத்திற்கு சாரீரக சாஸ்த்ரம் என்று பெயர். உலகங்களெல்லாம் பகவானுக்கு சரீரம். அவ்வுலகங்களுக்கு பகவான் ஆத்மா. இப்ப்ரபஞ்சத்தை சரீரமாகக் கொண்ட பரமாத்மாவைப் பற்றிச் சொல்லுகிற சாஸ்த்ரமாகையால் இது சாரீரக சாஸ்த்ரம் என்று சொல்லப்படுகிறது. இது நான்கு அத்யாயம் கொண்டது. ஒவ்வொரு அத்யாயம் நான்கு பாதங்களால் அமைக்கப் பெற்றதாகும். இந்த சாஸ்த்ரத்தில் 156 அதிகரணங்கள் (பிரிவுகள்) உள்ளன. இவைகளில் உபநிஷதர்த்தங்கள் விசாரிக்கப்படுகின்றன. 4 அத்யாயங்களாகப் பிரிந்திருப்பதற்குக் காரணங்களுண்டு.

முதல் அத்யாயத்தில் ஸர்வேச்வரனை ச்ரிய: பதியான நாராயணன் பரப்ரஹ்மம் ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் காரணமென்று சொல்லப்படுகிறது. காரணமாவது மூன்று வகையுண்டு. அவையாவன: உபாதான காரணம், நிமித்த காரணம், ஸஹகாரி காரணம் என்பனவாம்.

ஒரு மண் குடம் செய்ய வேண்டுமானால் மண் உபாதான காரணமெனப்படும். குயவன் நிமித்த காரணம், மற்றுமுள்ள சக்கரம் ஆயுதங்கள் ஸஹகாரி காரணம் எனப் பெயர் பெறும். இப்பிரபஞ்சத்திற்கு இம்மூவகைப்பட்ட காரணமும் பிரம்ஹமே. ஸூக்ஷ்மங்களான அறிவுள்ள வஸ்துக்கள், ஸூக்ஷ்மங்களான அறிவில்லாத வஸ்துக்கள் இவைகளுடன் கூடின ப்ரம்ஹம் உபாதான காரணம். இவைகளைப் படைப்பதற்கு உபயோகமான ஸங்கல்பஜ்ஞானத்தோடு கூடின ப்ரஹ்மம் நிமித்த காரணம். ஜ்ஞானம், சக்தி முதலிய குணங்களோடு கூடின ப்ரஹ்மம் ஸஹகாரி காரணம். இம்மூவகைப்பட்ட காரணங்களும் ச்ரிய: பதி நாராயணன் ஒருவனே என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. அங்ஙனம் உபநிஷதங்களில் சொல்லப்ப்டுகிற காரண வாக்யங்கள் பரமாத்மாவினிடத்தில் ஒன்று சேர்ந்து பொருந்தியிருக்கின்றன என்று சொல்லுவது முதல் அத்யாயம். இதற்கு ஸமன்வயாத்யாயம் என்று பெயர். இப்படிச் சொன்ன அர்த்தங்களுக்கு, சில ஸ்ம்ருதிகளாலே விரோதம் ஏற்படுகின்றது. அந்த ஸ்ம்ருதிகள் அறிவில்லாத ப்ரக்ருதி உலகத்திற்குக் காரணம் என்று சொல்லுகின்றன. இதர மதங்களாலேயும் விரோதம் ஏற்படுகிறது. உபநிஷதங்களிலேயே ஆகாசம், ஜீவன், முதலிய தத்துவங்களை நித்யங்களாகச் சொல்லுகின்றபடியால் அவைகளுக்கு பரமாத்மா காரணமில்லை என்று உள்ளுக்குள்ளேயே விரோதம் ஏற்படுகிறது. இந்த்ரியங்கள் நித்யங்களென சிலர் சொல்லுகிறார்கள். அப்போது இந்த்ரியங்களுக்கு பரமாத்மா காரணமில்லை என்றாகிறது. அப்படியானால் உலகில் எல்லா வஸ்துக்களுக்கும் பரமாத்மா காரணமென்கிற முதல் அத்யாயத்தில் சொல்லப்பட்டவற்றுக்கு விரோதம் ஏற்படுகிறது. ஆகவே இரண்டாவது அத்யாயத்தில், கீழ் சொன்ன விரோதங்களில்லை, பரமாத்மாவே எல்லாவற்றுக்கும் காரணம் என்று ஸ்ம்ருதிகளாலும், யுக்திகளாலும், உபநிஷத் வாக்யங்களினாலும் ஸ்தாபிக்கப்படுகிறது. இவ்விரண்டாவது அத்யாயத்திற்கு அவிரோத அத்யாயம் என்று பெயர்.

மூன்றும் அத்யாயத்தில் உபாயங்கள் சிந்திக்கப்படுகின்றன, அதிலும் பகவானிடத்தில் ஆசை பிறந்து அவனை அடைவதற்கு வேண்டிய உபாயத்தை அனுஷ்டிக்க வேண்டும். அதன் பொருட்டு ஸம்ஸாரத்தில் வைராக்யம் பிறக்க வேண்டும். பகவானை பரமாத்மாவை உயர்ந்தவனென்றும், அவனைவிட மேம்பட்டவன் ஒருவனுமில்லை என்றும், அவனே குற்றமற்றவனென்றும், குணங்களால் நிறைந்தவன் என்றும் , எல்லாப் பலன்களையும் கொடுப்பவன் என்றும், இப்படி அவன் பெருமையை உணர்ந்தால் தான் அவனிடம் ஆசை பிறக்க வழியுண்டு. ஆசையுண்டானால் எதை செய்து அவனை அடையலாமென்று ஆலோசிக்குமளவில் த்யானம் என்ற பக்தியினால் அடைய வேண்டும். அதற்கு பக்தி எவ்வளவு பிரிவு உடையது என்பது தெரிந்து கொள்ள வேண்டும். அந்த த்யானத்திற்கு அங்கங்கள் எவை என்றும் உணர வேண்டும், ஆகவே ஸம்ஸாரத்தில் வைராக்யம் உண்டாக உபாயத்தையும், எம்பெருமானுடைய பெருமையையும், முப்பத்திரண்டு விதமாய் அவனை த்யானம் செய்ய வேண்டுமென்கிற பக்தியின் பிரிவுகளையும் அந்த பக்திக்க அங்கமான வர்ணாச்ரம தர்மங்களையும் ஆக இந்நான்கு விஷயங்களையும் மூன்றும் அத்யாயம் சொல்லுகிறது. இதற்கு ''உபாயாத்யாயம்'' என்று பெயர்.

அதன் பின் பரமாத்மாவை உபாஸித்தால் வரும் பலனைச் சொல்லுகிறது நான்காமத்யாயம். அதில் ஆத்மா இந்த உடம்போடே கூடியிருக்கும் போது நம்முடைய சரீரத்தில், மரண ஸமயத்தில் நம்மிடமுள்ள புண்ய பாபகர்மங்களெல்லாம் நசிக்கின்றன. அதன் பின் இச்சரீரத்திலிருந்து இந்த ஜீவாத்மா எப்படி புறப்படுகின்றான்? என்கிற விஷயம் அறியவேண்டியது. பிறகு எந்த மார்க்கத்தின் ஊடுபோய் பரமபுருஷனையடைந்து எப்படி இருக்கிறான் என்பது தெரிந்து கொள்ள வேண்டும். ஜீவாத்மா இவ்வுடம்பின் சரமநிலையில் புண்ய பாப கர்மங்களை விடுகிறானென்றும், இச்சரீரத்திலிருந்து 10 இந்த்ரியங்கள் மனது, பிராணவாயு, பஞ்சபூதஸூக்ஷ்மங்கள் இவைகளோடு ஜீவன் நடு நாடியினால் வெளியே கிளம்புகிறானென்றும், ''அர்ச்சிராதி மார்க்கம்'' என்கிற வழியில் செல்லுகிறானென்றும் பரமபதமென்கிற - கலங்காப் பெருநகர் என்று சொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்டத்தில் பரமாத்மாவை அடைந்து உபயவிபூதியுக்த பரப்ரஹ்மத்தையடைந்து, அவனுக்கு ஸமானமான ஆனந்தத்தை அடைகிறான், என்றுமிந்நான்கு அர்த்தங்களையும் 4வது அத்யாயம் சொல்லுகிறது.

இப்படி நான்கு அத்யாயங்களும் நாலு நாலு பாதங்களாக அமைக்கப்பட்டு பதினாறு பாதங்களாக அமைந்துள்ளது சாரீரக பாஷ்யம். இதில் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு பகவத் குணம் சொல்லப்படுகின்றது. ஒவ்வொரு பாதத்திலும் உள்ள ஒவ்வொரு அதிகரணங்களிலும் பகவத் குணங்களே பேசப்படுகின்றன. ஆகவே இந்த சாரீரக சாஸ்திரத்தில் பகவத் குணங்களே சொல்லப்படுகின்றன. பகவத் விஷயம் போல் இப்பாஷ்யமும் குணானுபவ ப்ரதானமே. ஆக உபய வேதாந்தங்களிலும் பகவத் குணங்களே அனுபவிக்கப்படுகின்றன. இதிலுள்ள பதினாறு பாதங்களிலும் அனுபவிக்கப் படுகின்ற குணங்களை முறையே அனுபவிப்போம்.

முதல் பாதத்தில் ஸகல ப்ரபஞ்சங்களையும் உண்டு பண்ணுகிறவன் என்கிற குணம் அனுபவிக்கப்படுகிறது. அறிவுள்ள பொருள், அறிவில்லாத தத்வம் என்று பிரிக்கப்படுகிற எல்லா பொருள்களையும் உண்டு பண்ணி அவைகளில் அந்தந்த வஸ்துக்களில் நியமனம் பண்ணிக்கொண்டு (ஏவிக் கொண்டு) உள்ளே உறைகிறான். ஜீவாத்மாக்கள், தேவ ஜாதிகள், மனுஷ்ய ஜாதிகள், திர்யக் ஜாதிகள் ஸ்தாவரங்கள்,

அசேதனங்கள், மஹத், அஹங்காரம், பஞ்சபூதங்கள், இந்த்ரியங்கள் இவை முதலான பொருள்களைப் படைத்து அதற்குள் நுழைந்து அவைகளுக்கு ஒரு உருவத்தையும், பெயரையும் கொடுத்துக் கொண்டிருக்கிறான். இவன் அவைகளுக்குள் உறைந்திராவிடில் அப்பொருள்கள் இருக்கவும் முடியாது; அவற்றிற்கு பெயர்கள் கிடையாது. இப்படி அறிவுள்ள வஸ்து, அறிவு இல்லாதவை, இவைகளைப் படைக்கிறான் என்கிற கல்யாண குணம் முதல் பாதத்தில் சொல்லப்படுகிறது.

இரண்டாம் பாதத்தில் உலகத்தை எல்லாம் பகவான் உடம்பாகக் கொண்டவன். அவன் ஆத்மா, இவ்வுலகு அவனுக்கு உடம்பு என்கிற குணம் சொல்லப்படுகிறது. நுட்பமான பொருள்கள், பெரிதான பொருள்கள், இப்படி இருவகையாயுள்ள ஜீவன்கள், அசேதனம் இவைகள் அவனுக்கு உடம்பு. இவைகளுக்கு அவன் ஆத்மா. இந்த உடம்பிற்குள் அவனிருந்தாலும் அவைகளிலுள்ள தோஷங்கள் அவனிடத்தில் கிட்டாது. 'அநச்நந் அன்ய: அபிசாகசீதி' ஸம்போகப்ராப்தி: இதி சேந் ந' இது முதலான உபநிஷத் வாக்ய ஸூத்ரங்கள் இங்கு அநுஸந்திக்கப்பட வேண்டும். ஜீவன்களான நமக்குக் கர்மங்களால் சரீரம் வந்திருப்பதால் இந்தச் சரீர சம்பந்தத்தால் நமக்குப் பல ஸுக துக்கங்கள் உண்டாகின்றன. ப்ரபஞ்சமே பகவானுக்கு சரீரமென்றால் அவனுக்கு எவ்வளவு துக்கமிருக்கும் என்று நினைக்க வொண்ணுதபடி அவன் விலக்ஷணமான ஆத்மாவாக இருக்கிறான். ஆகையால் 'ஸூக்ஷ்மஸ்தூலசேதன அசேதன சரீரகத்வம்' என்கிற குணம் இரண்டாம் பாதத்தில்' சொல்லப்படுகிறது.

மூன்றும் பாதத்தில் ஸ்வநிஷ்டத்வம் என்கிற குணம் ஓதப்படுகிறது. அதாவது ஸம்ஸாரிகளான ஆத்மாக்கள்: ஸம்ஸாரத்திலிருந்து பக்தி அல்லது சரணாகதி என்கிற உபாயத்தைச் செய்து மோக்ஷத்தையடைந்த முக்தர்கள்: அநாதி காலமாகவே பகவானைப் போலவே ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள நித்யர்கள்: இம்மூவவகைப்பட்ட ஆத்மாக்களையும் அவன் தரித்துக்கொண்டு இருக்கிறான். சுவற்றில் சித்திரங்கள் எழுதப்பட்டு அவைகளை நாம் காண்கிறோம். இந்தச் சித்திரங்களுக்கு சுவர் எப்படி ஆதாரமோ அவ்வண்ணமே மூன்று வித ஜீவன்களுக்கும் பகவான் ஆதாரம். அவனுக்கு வேறொன்று ஆதாரமாகக் கிடையாது. ஆகையால் அவன் ஸ்வநிஷ்டன். ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்க்கி ஸூர்யா சந்த்ரமஸௌ விதருதௌ திஷ்டத: ஸ்வே மஹிம்நி ப்ரதிஷ்டித: அக்ஷரம் அம்பராந்தத்ருதே:- ஸா சப்ரசாஸநாத்' என்கிற உபநிஷத் வாக்ய ஸூத்ரங்கள் இங்கே நினைக்கப்படுகின்றன. ஆகையால் எல்லாப் பொருள்களுக்கும் இவன் ஆதாரம். இவன் அநந்யாதாரன் என்கிற ஸ்வநிஷ்டத்வம் என்கிறது மூன்றும் பாதத்தில் சொல்லப்படுகிறது.

நான்காம் பாதத்தில் 'நிரவதி மஹிமா' (எல்லையில்லாத மேன்மையுடையவன்) என்கிற தன்மை பேசப்படுகிறது. 'இந்த்ரியேப்ய: பராஹ்யர்த்தா:' என்பது முதலான கடோபநிஷத் வாக்யங்களாலே மேற்பார்வையில் தோன்றுகின்ற கபிலமத ஸித்தங்களான ப்ரக்ரியைகள் கீழ்ச்சொன்ன பரமாத்மாவே காரணமென்கிற பொருளுக்கு விரோதமாகத் தோன்றுகிறது. ஆகையால், ஜகத்காரணம் ப்ரக்ருதி அல்லது ஜீவன் என்ற ஸந்தேகம் ஏற்பட்டு பரமாத்மாவுக்குள்ள லக்ஷணம் ப்ரக்ருதிக்குச் சேருகிறது. ஆதலால் உயர்ந்த நியாயங்களாலே கோர்க்கப்பட்ட அந்தந்த கடோபநிஷத் வாக்யங்களை ஆராய்ந்து பார்த்தால், எல்லா வேதாந்தங்களாலும் சொல்லப்படுகிற எல்லையில்லாத பெருமை அவ்வாக்யங்களில் தோன்றுகிறது. இப்பாதத்தின் முதலில் அறிவில்லாத



ஸ்ரீ தேவாதிராஜன் (கச்சி)

ப்ரக்ருதியை ஜகத்காரணமென்றும் இறுதியில் ஜீவன் ஜகத்காரணமென்றும் என்கிற இரண்டு அர்த்தத்தைத் தகர்த்து பரமாத்மாவே ப்ரபஞ்சத்திற்குக் காரணம்: அதற்கு உள்ள பெருமைகளும் அவனிடம் தான் உள்ளன மற்றவைகளுக்குப் பெருமையில்லை. சேதன அசேதனங்களுக்கு ஸம்பவிக்கக்கூடாத பல பெருமைகளை உடையவன் பரமாத்மா என்கிற பொருள் 4ம் பாதத்தில் சொல்லப்படுகிறது.

ஐந்தாம் பாதத்தில் கீழ்ச்சொன்ன பரமாத்மா ஜகத் காரணம் என்கிற பொருளுக்கு ஸ்ம்ருதிகளாலும் யுக்திகளாலும் விரோதம் சொல்ல, அவ்விரோதத்தை பரிஹரித்து, ஒருவராலும் பாதிக்கப்படாதவன் 'நிர்பாதத்வம்' என்கிற குணம் பேசப்படுகிறது விசித்ரமான சக்தியுடையதாய், எடுத்த இடமெல்லாம் காரண கல்பனம் பண்ணி, குதர்க்க மாயைகளை உண்டு பண்ணி ஜல்ப' என்கிற மார்க்கத்தில் அப்யாஸ முடையவராகையாலே, கபிலன் முதலிய முனிவர்களுடைய ஸ்ம்ருதியை வைத்துக் கொண்டு அவைகளாலே வேதப் பொருளுக்கு விரோதம் சொல்லுகிறவர்களைக் கண்டித்து அந்த ஸ்ம்ருதிகளாலே அசைக்க முடியாத ஸ்ருஷ்டிக்கு உபயோகமான சக்தியுடையவன் என்கிற அர்த்தம் கூறப்படுகிறது. தர்க்கங்களாலேயும் வேதாந்தத்தைத் தள்ளப் பார்க்கிறார்கள் சிலர். அந்த ஸ்ம்ருதி ந்யாய விரோதங்களைப் பரிஹரித்து ப்ரஹ்மத்திற்கு ஜகத் காரணத்வத்தை ஸ்தாபிக்கிற படியால் ஐந்தாம் பாதமான ஸ்ம்ருதி பாதத்தில் நிர்பாதத்வம் என்கிற குணம் சொல்லப்படுகிறது.

ஆறுவது பாதத்தில் பரமாத்மா ஆச்ரிதர்களுக்கு ஆப்தனாக இருக்கிறான். அதாவது கபில மதம், பௌத்த மதம், ஜைன மதம், பாசுபத மதம்- இந்த வழிகளிலே நிஷ்டரானவர்கள் நசிக்கும்படியாக பகவானுடைய கருணையின் பரிவாஹமாக வந்த பாஞ்சராத்ர சாஸ்த்ர நிஷ்டர்களுக்கு ஆப்தர் என்கிற பொருள் கூறப்படுகிறது. மேற்கூறிய மதங்களில் சொல்லகிற வழிகள் வேதமார்க்கத்திற்கு விரோதமானவை: அவைகளெல்லாம் நல்வழியல்ல என்று யுக்திகளாலும், பொருத்தம் இல்லாதிருப்பதாலும் அவைகளைத் தள்ளி ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்திலே சொல்லப்படுகிற வழிகளாலே ஆராதிக்கத் தகுந்தவன் பரமாத்மா. வேதத்திற்கு விருத்தமாக ஒரு அர்த்தமும் சொல்லப்படவில்லை. வேதங்களின் ஸாரமான அர்த்தங்களை எடுத்து கருணையால் பகவான் தானே இந்த பாஞ்சராத்ர சாஸ்த்ரம் சொல்லியிருக்கிறான் என்றும், அச்சாஸ்த்ரத்தை வைதிகம் என்று அறுதியிட்டு அந்த பாஞ்சராத்ர நிஷ்டர்களுக்கு ஆப்தன் என்ற குணம் பேசப்பட்டது.

ஏழாம் பாதத்தில் ஆகாசம், ஆத்மா இவைகளுக்குக் காரணமாயிருப்பவன் பரம்பொருள் என்ற அர்த்தம் சொல்லப்படுகிறது. இந்த்ரியங்களாலே காணப்படுகிற ஸூக்ஷ்மங்களான ஆகாசம் முதலான பஞ்சபூதங்களிலும் அவைகளுடைய மிகநுட்ப உருவங்களான ஐந்து தன்மாத்ரைகளிலும் அதனினும் மிக நுட்பமான அணு அளவுள்ள ஜீவனிடத்திலும், ஸமமாக காரண பூதமாக இருக்கிறான் பரமாத்மா, அதாவது ப்ரக்ருதியிலிருந்து மஹத் தத்வம் உண்டாகிறது. மஹத்திலிருந்து அஹங்காரமும் ஸாத்விக அஹங்காரத்தினின்று இந்த்ரியங்களும், தாமஸ அஹங்காரத்தினின்று பஞ்ச பூத ஸூக்ஷ்மங்களும்: பஞ்சபூத ஸூக்ஷ்மங்களிலிருந்து பஞ்சமஹாபூதங்களும் உண்டாகுவதற்கு பரமாத்மாவே உபாதான காரணம். நிமித்த காரணமும் அவனே ஆகிறான். இவைகளைப் போலவே ஸூக்ஷ்மமான அணு பரிணாமமுள்ள ஜீவனுக்கும் காரணமாகிறான். ஆகவே ஆகாசம் நித்யமென்று சொல்லபடுகிறது, ஆத்மாவும் அவ்வண்ணமே நித்யம். அவைகளுக்குப் பகவான் எப்படி காரணம்? என்கிற கேள்வி

உதிக்கிறது. அதற்கு இந்த ஏழாவது பாதம் சமாதானம் சொல்லுகிறது. இங்கு முக்கியமாக அறிய வேண்டுவது ஒன்று உண்டு. அறிவில்லாத பொருள் உண்டாகின்றது என்றால் தன்னனுடைய ஸ்வரூபத்தில் பரிதான பரிணாமத்தை அடைகிறது என்பது பொருள். அதாவது தன்னுடைய வடிவத்திலேயே மாறுதல் அடைகிறது என்பது பொருள். ஜீவன் உண்டாகிறதென்றால் அதற்கு வடிவத்தில் மாறுதல் இல்லாமையால் அதனுடைய குணமான ஜ்ஞானத்தில் மாறுதல் அடைகிறது. அசேதனத்திற்கு உத்பத்தி என்றால் ''ஸ்வரூப அந்யதா பாவம்'' என்று பொருள். ஜீவனுக்கு உத்பத்தி என்றால் தனது ஸ்வபாவமான ஜ்ஞானத்தில் மாறுதல். ஆக ஜீவன் உண்டாகிறதென்றால் ஒரு தேகத்தை அடைந்து தனது ஜ்ஞானத்தில் மாறுதலடைகிறது. ஆகவே நித்யங்களாய் சொல்லபடுகிற ஆகாசம், ஜீவன்களுக்கும் காரணமாய் இருப்பவன் பரமாத்மா என்கிற ஏழாம் பாதத்தின் பொருள்.

எட்டாம் பாதத்தில் இந்த்ரியங்களுக்கும் பகவான் காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்த்ரியங்கள் ஏழு என்பர் சிலர். இந்த்ரியங்கள் ஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரளய காலத்திலேயே இருந்தன. அவைகள் ரிஷிகள் என்ற சப்தத்தாலே வழங்கப்பெற்றன. ரிஷிகள் என்பது இந்த்ரியங்கள் என வேதத்திலேயே சொல்லப் பட்டிருக்கின்றன. படைக்கும் காலத்திலேயே இந்த்ரியங்கள் இருந்தால் அது பகவானாக எப்படி இருக்க முடியும்? அங்கு பஹுவசனம் இருக்கிறதே எனக் கேட்கிறீர்கள். இந்த்ரியங்களை ''விபு'' என்றும் சொல்லுவர். அணுபரிமாணமில்லை. அணு பரிமாணமானால், தூரத்திலுள்ள உருவத்தைக் கண் எப்படிக் காட்டும்? சப்தத்தை காது எங்ஙனே கேட்கும்? உடம்பிலுள்ள த்வக் இந்த்ரியம் உடம்பில் எல்லாவிடத்திலும் ஸ்பர்ச சுகத்தை அடைகிறதே எப்படி? என்றெல்லாம் கேள்விகள் பிறக்கின்றன. அவைகளுக்குப் பதில் கூறும் பாதம் எட்டாவதாகிறது.

இந்த்ரியங்கள் பதினென்று அவைகள் அணுபரிமாணங்களை. ப்ரளயத்தில் ரிஷய: என்ற பஹுவசனத்தாலும் பராமாத்மாவே சொல்லப்படுகிறான் என்று ஸ்தாபித்து, ஸூக்ஷ்மமான இந்த்ரியங்களுக்கும் பரமாத்மாவே காரணமென்று அர்த்தம் சொல்லப்படுகிறது. அதாவது இந்த்ரியங்களுக்கும் காரணம் அவனே.

ஒன்பதாம் பாதத்தில் எப்பொழுதும் ஒரு தன்மை உடையதாயிருந்து ஸ்வர்க்கம் நரகம் இவற்றிற்கு போய்க் கொண்டிருக்கிற ஸகல ஜீவன்களையும் தழுவித் தழுவி வருகிற ஸம்ஸாரத்தை நடத்துவதற்கு வேண்டிய ஸங்கல்பத்தையுடையவன் என்னும் பொருள் 9ம் பாதத்தில் காண்கிறது. ப்ரளய கால ஸமுத்ரம் போல் பொங்கி வருகிற ஸம்ஸாரத்தில் ஜீவர்களுக்கு அவரவர்களுடைய பலவகைப்பட்ட கர்மங்களாலே அவரவர்கள் ஆசைப்படுகிற விஷயங்களில் எல்லோருக்கும் ஸமராயிருந்து அவரவர் ஆசைக்கனுகுணமாக ஸம்ஸாரத்தை நடத்திவருகிறான். இதனால் ஜீவர்களுக்கு விழிப்பு, ஸ்வப்னம், தூக்கம் முதலிய எல்லா ஸமயங்களிலும் நிர்வாஹகராயிருந்து ஸம்ஸாரத்தை நடத்திவைத்தல் என்கிற குணம் 9ம் பாதத்தில் சொல்லப்பட்டது.

பத்தாம் பாதத்தில் அசேதனம் (அறிவில்லாத பொருள்கள்) சேதனம் (அறிவுள்ள ஜீவாத்மா) இவர்களிடத்திலும் கலந்து அந்தர்யாமியாய் இருக்கும் போதும், அவற்றிலுள்ள தோஷம் தம்மிடத்தில் தட்டாமல் இருத்தல் என்கிற குணம் சொல்லப்பட்டது. தோஷமில்லாமை கல்யாண குணங்களால் நிறைந்தமை, தன்னிலும்

மேம்பட்ட பொருளில்லாமை, ஸகல பலன்களையும் கொடுக்கும் வள்ளலாயிருக்கும் தன்மை, இந்தக்குணங்கள் இப்பாதத்தில் பரக்கப் பேசப்படுகின்றன.

பதிஞென்ரும் பாதத்தில் பல விதங்களான உபாஸனங்களுக்கு இலக்காயிருப்பவன் என்கிற குணம் பேசப்படுகிறது. உபநிஷத்துக்களில் பரவித்யையென்றும், அபரவித்யையென்றும் இரண்டு வித்யைகள் சொல்லப்படுகின்றன. அவைகளுள் பரவித்யையென்பது பரமாத்மாவை அடைவதாகிற மோக்ஷத்திற்கு உபாயமாயிருக்கும் வித்யை. மற்ற பலன்களுக்கு உபாயமாயிருக்கும் வித்யை அபரவித்யையாம். மோக்ஷோபாயமான பரவித்யை 2 விதமாக பிரிக்கப்பட்டுள்ளது. அவைகளாவன: ஸத்வித்யை, தஹரவித்யை, சாண்டில்யவித்யை, பூம வித்யை, உபகோஸல வித்யை இவை முதலாவன. ஒரு மனிதன் தன்னை பலவித உடைகளுடன் புகைப்படமெடுத்துக் கொள்கிறான். அந்தப் படங்களைப் பார்த்து உகக்கிறான். அவைகள் பலவாயினும் மனிதன் ஒருவனே. அம்மாதிரி பரமாத்மாவை 32 விதங்களாக த்யானம் பண்ணலாம். 32 வித்யைகளுக்கும் தனித்தனியே பெயருண்டு. ஒவ்வொரு வித்யைக்கும் த்யானம் பண்ணப்படுகிற குணங்களும் வெவ்வேறானவை. இப்படிப்பட்ட வித்யைகள் எல்லாவற்றாலும் த்யானம் பண்ணப்படுகிறவன் நாராயணன் தான் என்று 'லிங்கபூயஸ்த்வ' அதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் எல்லா வித்யைகளிலும் சொல்லப்பட்ட எல்லா குணங்களுடனும் த்யானம் பண்ணப்படுகிறவன் அவன் ஒருவனே என்ற பொருள் கூறப்படுகிறது. பஹுஜனபதம் என்றால் எல்லாவிதமான பக்திக்கும் இலக்கானவன் என்பது பொருள்.

பன்னிரண்டாம் பாதம்: த்யானம் பண்ணுகிறவர்கள் தங்களுக்குரிய வர்ணாச்ரம தர்மங்களாலே ஸந்தோஷிப்பிக்கப்படுகிறவன் என்கிற குணம் சொல்லப்படுகிறது. அதாவது இந்த பக்தியாகிற உபாயத்திற்கு வர்ணாச்ரம தர்மங்கள் அங்கங்கள். வர்ணாச்ரம தர்மங்கள் ஸாத்விகத்யாகத்தோடு செய்யப்பட்டால் மனஸ்சுத்தி ஏற்பட்டு த்யானம் எளிதாக வரும். ஆச்ரமங்களுக்குரிய நித்ய நைமித்திக காம்யகர்மங்களை ஸாத்விகத்யாகத்துடன் அனுஷ்டித்தால் பகவான் திருவுளமுகந்து பக்தியோகத்தை தலைக்கட்டி வைக்கிறான். விதுரன், அதாவது பத்னியில்லாதவன் அநாச்ரமியாயிருந்தாலும் அவனுக்குள்ள ஜபம், உபவாஸம், தானம், தேவதாராதனம் இவைகள் வித்யைக்கு அங்கமாகும். ஸந்யாஸாச்ரமத்தில் உள்ளவர்க்கும் அக்னிகார்யமில்லாவிடினும், அவருக்குரிய தர்மங்களால் ப்ரஸன்னனான பகவான் பக்தியை ஈடேற்றி வைக்கிறான். ஆகவே தனக்குரிய வர்ணாச்ரம தர்மங்களால் ஸந்தோஷமடைகிறவன் பரமாத்மா என்கிற குணம் சொல்லப்படுகிறது.

பதிமூன்ரும் பாதம்: தன்னை உபாஸிக்கிற ஜீவர்களிடத்தில் சேர்ந்து கிடக்கிற புண்ணிய பாபமென்னும் எல்லா கர்மங்களையும் ஒழிக்கவல்ல உறுதியான ஸங்கல்பத்தையுடையவன். பக்தியோகம் செய்வதற்கு ஆரம்பிக்கும் பொழுதே அநாதியான நம்மிடமுள்ள கர்மங்களை நசிக்கும்படி ஸங்கல்பிக்கிறான். பின்பு கவனக்குறைவாலும், அறியாமையாலும் தேச காலங்களுடைய ஸ்வபாவத்தாலும் செய்கிற பாபங்களை நம்மிடம் ஒட்டாமல் செய்கிறான். ஆகவே ஸர்வபாபங்களையும் விடுவிக்கிறான் என்கிற குணம் சொல்லப்படுகிறது.

பதிஞென்காம் பாதத்தில் மோக்ஷத்திற்குத் தலைவாசலான ப்ரஹ்மநாடியில் ஜீவனை நுழையச் செய்கிறான் என்கிற குணம் பேசப்படுகிறது. இந்த மனிதனுடைய

உடம்பில் ஹ்ருதயத்திலிருந்து மேலும் கீழும் பக்கங்களிலும் புறப்பட்டு பல நாடிகள் செல்லுகின்றன. ஒவ்வொரு நாடிக்கும் கிளை நாடிகள் பல உள்ளன. முக்யமான நாடிகள் 101 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. அதில் ஹ்ருதயத்திலிருந்து மேலே நடுத்தலை வழியே செல்லும் நாடிக்கு ப்ரஹ்மநாடி என்று பெயர். இந்த ஜீவன் தளர்ந்து உடல் விட்டுப் புறப்படும் காலத்து மற்றை நாடிகள் வழியே போலல் இதர லோகங்களுக்கும் நரகாதிகளுக்கும் செல்லும்படி இருக்கும். பக்தி, ப்ரபத்தி இவைகள் அனுஷ்டிக்கிறவனுக்கு எந்த நாடியில் புகுவதென்பது தெரியாது. அதற்காக பரம காருணிகனை ஸர்வேச்வரன் அந்தர்யாமியாயிருந்து ஸூக்ஷ்ம சரீரத்துடன் கூடிய ஜீவனை ஸ்தூல சரீரத்தினின்றும் பிரித்து தன்னிடம் ச்ரமபரிஹாரம் பண்ணி வைத்து மற்ற நாடிகளின் வாசல் களையடைத்து 101வது நாடியான ப்ரம்ஹநாடியின் வாசலை ஒளியால் காட்டி நுழையச் செய்கிறான். அதில் நுழைந்து விட்டால் பின்பு ஒரே பகலேயாம். ஆதலால் ப்ரம்ஹ நாடியில் ஜீவனை நடைகொள்ளச் செய்கிறான் என்னும் குணம் சொல்லப்படுகிறது.

பதினைந்தாம் பாதத்தில் ப்ரஹ்மாண்டம், அதற்கு மேலுள்ள ஆவரணங்கள் இவைகளாகிற அசேதனங்களின் கூட்டத்தைக் காலால் உதைத்துத் தள்ளி ஸம்ஸாரத்தை தாண்டுவித்துப் பரமபதத்தை இட்டுவிக்குமவரான ஆதிவாஹிக தேவர்களுக்குத் தலைவனாய் இருப்பான் என்கிற குணம் சொல்லப்படுகிறது. அதாவது இந்த ஜீவனை அர்ச்சிராதி மார்க்கம் என்கிற வழியிலை அழைத்துக்கொண்டு போய் ப்ரக்ருதியைத் தாண்டுவித்து, விரஜா நதியை கடத்தி வைத்து, ஸ்ரீவைகுண்ட லோகத்தில் செல்ல வைத்துத், தன்னையனுபவிக்கச் செய்கிறான். அதன் பின் அங்கிருந்து மீட்சியில்லை. இந்த வழியில் நம்மை நடத்துவதற்காக வழி நடத்துகிறவர்களை பகவான் ஸங்கல்பித்திருக்கிறான். அவர்களாவன: அக்நி, பகல், ஒளிநாள், உத்தராயணம், வருஷம், காற்று, சூரியன், சந்திரன், வைத்யுதன், வருணன், இந்திரன், ப்ரஜாபதி எனப்படுமவர்கள். அவர்களைக் கொண்டும், அவர்களுக்குத் தலைவனைய்க் கொண்டு, தானும் ப்ரதானனையிருந்து வழி நடத்துகிறான் என்கிற குணம் சொல்லப்படுகிறது.

பதினாறும் பாதத்தில் ஸர்வேச்வரன் நிச்சயமாய்ப் பலன் கொடுப்பவன் என்று உணர்ந்து அவனை உபாஸநம் பண்ணுபவர்கள் தன்னை அடைந்து அனுபவிக்கிற விடத்தில் பரமபோக்யங்களாகையாலே என்றும் விடமுடியாத திருவடிகளை உடையவன் என்ற குணம் பேசப்பட்டது.

அதாவது பரமபதலோகத்தை அடைந்து உபய விபூதியுடன் கூடின ஸர்வாத்மாவான பகவானை, தன்னையும் விட்டுப் பிரியாதபடிச் சேர்த்து அனுபவித்து, ஆனந்தத்தில் பகவானோடு ஸமமாக இருந்து மீட்சி இல்லாதபடி பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறான். பகவானுக்குள்ள லக்ஷணங்களைத் தவிர மற்ற ஆனந்தத்தில் ஸமமாயிருக்கும் தன்மையையடைகிறான். இப்படிப்பட்ட மோக்ஷார்த்தத்தைத் தருகை என்கிற குணம் இந்தப்பாதத்தில் பேசப்படுகிறது.

இப்படி ஸ்ரீபாஷ்யத்திலுள்ள பதினாறு பாதங்களையும், அனுபவித்துப் பதினாறு குணங்களையும் நமக்கு அனுபவிக்கும்படி நமது ஆசார்ய வள்ளலான நிகமாந்த மஹாதேசிகன் வடமொழியிலும், தமிழிலும் தொகுத்துக் காட்டியுள்ளார். இங்ஙனம் சாரீரக சாஸ்த்ரம் என்கிற ப்ரஹ்ம மீமாம்ஸையாகிற சாஸ்த்ரத்திலுள்ள பதினாறு பாகங்கள் கொண்ட நான்கு அத்யாயங்களின் பொருள் ஒருவாறு ஸமுதாயமாகக் காட்டப்பட்டன

நமது விசிஷ்டாத்வைத மதத்தின் ஸாரமாவது ப்ரபஞ்சமும், ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிற பரமாத்மாவும் ஒன்று தான் என்ற வேதம் சொல்லுகிறது. அதன் பொருளாவது: காரணமாவது: உருவத்தாலும், பெயராலும் பிரித்துச் சொல்ல முடியாத ஸூக்ஷ்மமான அறிவுள்ள வஸ்து, அறிவில்லாதவை இவைகளே சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மம். கார்யமாவது: உருவத்தாலும் பெயராலும் சொல்லுகைக்கீடான ஸ்தூலமான அறிவுள்ள வஸ்து அறிவில்லாத வஸ்து அவைகளே சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மம்.

ஆக இரண்டுமொன்றே. அறிவில்லாத பொருள், அறிவுள்ள பொருள் இவைகளைப் பிரியாத, இவைகளுடன் கூடின பகவான் ஒன்றே. ஆகவே அத்வைதமென்பது விசிஷ்ட அத்வைதம். மூன்று தத்வங்களையும் சேர்த்துப் பார்த்தால் ஒன்றே.

ஆனால் ஈச்வரன் வேறு, ஜீவன் வேறு, அசேதன தத்வம் வேறு, ஈச்வர லக்ஷணம் வேறு, ஜீவலக்ஷணம் வேறு, அசேதன லக்ஷணம் வேறு. ஆகையால் த்வைதமென்பதும் ஸரியே. மூன்று தத்வங்களையும் பிரித்துப் பார்த்தால் வெவ்வேறு தான். ப்ரஹ்மம் என்கிற பரமாத்மா காரணம் என்கிற அவஸ்தையில் ஸூக்ஷ்மமான அறிவுள்ள பொருள், அறிவில்லாத பொருள்களுடன் கூடியிருக்கிறான். அவனே ப்ரபஞ்சத்தை உண்டு பண்ண நினைத்து ஸங்கல்பிக்கிறான். ''நான் அநேகப் பொருள்களாகப் போகிறேன்'' என்று ஸங்கல்பிக்கிறான். ஸ்தூலமான அறிவுள்ள பொருள், ஸ்தூலமான அறிவில்லாத பொருள்களுடன் கூடினவனாக ஆகிறான். இக்காரணம் கொண்டே ப்ரபஞ்சமும், பகவானும் ஒன்றென்று சொல்லப்படுகிறது. ஆனால் ஈச்வரன், ஸர்வசக்தன், ஸர்வஜ்ஞன், எங்கும் வியாபித்திருப்பவன் (விபு) உலகைப் படைத்துக் காத்து அழிப்பதும் செய்பவன். ஜீவன் அல்பசக்தி, அல்பஜ்ஞன், அணுபரிமாணமுள்ளவன், அசேதனம் அறிவில்லாதது, மாறுதலுக்குட்பட்டது. அநித்யம். ஆகவே வெவ்வேறு தன்மையுடை மூன்றும் வெவ்வேறு தத்வம் தான். ஆகையால் அத்வைத ச்ருதிக்கும், த்வைத ச்ருதிக்கும் முரண்பாடு இல்லாமல் பொருள் கூறுகிறோம்.

அசேதனம் மூன்று வகைப்படும். ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம். அதில் காலம் க்ஷணம், நாழிகை முஹூர்த்தம், பகல், இரவு, பக்ஷம், மாதம் முதலிய பிரிவுகளை உடையது. சுத்த ஸத்வம் பரமபத லோகம்: ரஜோகுணம், தமோகுணம் கலக்காத சுத்தஸத்வத்ரவ்யம் இது. பரமபத லோகமும், அங்குள்ள வாபீ கூட தடாக மண்டப கோபுராதி ரூபமாயும் நித்ய முக்தர்களுடைய சரீரமாயிருக்கும். காலம் அந்த பரமபதத்தில் ஆட்சி செலுத்தாது. ப்ரக்ருதியென்பது இருபத்திநான்கு வகையாயிருக்கும். மூலப்ரக்ருதி மஹான், அஹங்காரம் (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் மூன்று வகை): ஜ்ஞான-கர்மேந்த்ரியங்கள்-10 மனம், பஞ்சமஹா பூதங்கள், ஐந்து ஸூக்ஷ்மங்கள் ஆக 24. இவைகளாலாகப்பட்டது ப்ரஹ்மாண்டமும் அதிலுள்ள அறிவில்லாப் பொருள்களும்.

ஜீவன்கள் மூன்று விதமாக பிரிக்கப்படும். அவர்களாவன! ஸம்ஸாரி, மோக்ஷமடைந்தவன், நித்யர்கள். இதில் ஸம்ஸாரியானவன்:- அனாதி கர்மத்தால் இந்த ப்ரக்ருதியாகிற பாழிலே விழுந்து ஸுகதுக்கங்களை அனுபவிப்பவன். இந்த ஸம்ஸாரி ஜீவன் இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு மோக்ஷமடைய வேண்டி அதற்குச் செய்ய வேண்டுவதாவன.

முதலில் நல்ல ஆசார்யனையடைய வேண்டும். இந்த ஜீவன் ஸர்வேச்வரனை அடைவதற்குத் தகுதியுள்ளவன் தான் என்பதை உணர வேண்டும். நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஸாரமாவது: மூன்று மந்த்ரங்களும் அவைகளின் பொருள்களும்.

நாராயணனே பரம்பொருள், உலகனைத்தும் அவனுடைய உடம்பு என்று உணர வேண்டும். பின்பு பெருமாள்-1: ஜீவன்-2, பெருமாளை அடைவதற்குபாயம்3 தடையாயிருக்கிற கர்மம் 4, அவனை அடைவதனால் உண்டாகும் பயன்-5. ஆக இவ்வைந்து பொருள்களை அறிய வேண்டும். ஜீவன் உடம்பு, ஈச்வரன் இவர்களை லக்ஷணங்களுடன் பிரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீ மந்நாராயணனே பரம்பொருள் என்று அறிவது மட்டுமின்றி அவனைப் பெற ஆசையும் வேண்டும். ஆசை வந்த பின் அவனைப் பெற உபாயங்களானவை பக்தி, ப்ரபத்தி என்பதனை உணர்ந்து, அவ்விரண்டு உபாயங்களில் எதைச் செய்வதற்குத் தனக்கு தகுதி இருக்கிறதென்று உணரவேண்டும். பக்தியையாவது ப்ரபத்தியையாவது தனது அதிகாரத்திற்குத் தகுந்தபடி அனுஷ்டிக்க வேண்டும். அது அனுஷ்டித்துச் செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடித்தவனாக தன்னை நினைத்துக் கவலையின்றி இருக்க வேண்டும்.

பகவத் தாஸனாயும், உபாயத்தைச் செய்து முடித்தவனாயும், மோக்ஷத்தை விரும்புகிறவனாயுமிருக்கிற தன் நிஷ்டைக்கு அனுகுணமாக இருக்க வேண்டும். பின்பு பகவான் நித்யவாஸம் செய்து பாகவதர்கள் நிறைந்த ஊரிலிருந்து கொண்டு பகவத் ப்ரீதிக்காகவே நித்ய நைமித்திக கர்மாக்களை யதாசக்தி செய்து கொண்டு பகவத் பாகவதாபசாரங்கள் வராதபடி காலத்தைக் கடத்த வேண்டும்.

இப்படி இருந்தால் பகவான் நமக்கு ஸங்கல்பித்து வைத்த ஒரு காரணத்தால் இந்த சரீரத்திலிருந்து பிரித்து உயர்ந்த அர்ச்சிராதி என்கிற தேவையான உயர்ந்த மார்கத்தால் பரமபதத்தை அடைவித்து தன் தாளிணைக்கீழ் வாழ்ச்சியைத் தந்தருள்கிறான். பிறகு இந்த ஸம்ஸாரத்திற்குத் திரும்புகிறதில்லை. பிறகு கால தத்வமுள்ளளவும், ஒரே இன்ப வெள்ளமே, ஒரே பகலே ஒரே உணர்வே தான். இவ்வர்த்தங்களை எல்லாம் ஸதாசார்யர்களிடத்தில் பரக்க தெரிந்து கொள்ளவும். இங்கே மிகவும் சுருங்கக் காட்டப்பட்டது.

ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன்
திருக்குடந்தை ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்
அருளிய

பகவத்விஷயஸாரம்

ஸ்ரீ கும்பகோணே புஜகேந்த்ர சாயிநம்
ய ஆஜ்ஞாமரநாத நாயகம் ।
பர்யாப்தி ஹீநாம்ருத இத்யபிக்யயா
தமாச்ரயே ஸ்ரீசடகோபயோகிநம் ॥

ஸ்ரீநம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி என்கிற திவ்யப்ரபந்தத்தின் வ்யாக்யானங்களுக்கு பகவத் விஷயம் என்று பெயர். திருவாய்மொழிக்குப் பல வ்யாக்யாநங்களுண்டு. அவைகள் அனைத்துக்கும் பகவத் விஷயம் என்று பெயர். லௌகிகர்களுக்கு எளிதாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அவைகளின் ஸாரம் இங்கு எழுதப்படுகிறது. திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாட்டுக்கள் அடங்கியது. அதை பத்து பத்தாகப் பிரிப்பார்கள். முதல் பத்து இரண்டாம் பத்து என்று பிரிக்கப்படும். ஒவ்வொரு பத்திலும் பத்துப் பதிகங்கள் உள்ளன. ஒவ்வொரு பதிகத்திற்கும் திருவாய்மொழி எனப் பெயர். ஒவ்வொரு பதிகத்திலும் பதினெரு பாட்டுகள் உள்ளன. ஆக நூறு பதிகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பத்தையும் சதகம் என்று சொல்லுவார்கள். இப்படிப் பத்து சதகங்கள் கொண்டது திருவாய்மொ ழி என்கிற திவ்யப்ரபந்தம். ஒவ்வொறு பத்திலும் சொல்லப்பட்ட விஷயங்களை இங்கு எடுத்துக் கூறுவோம். ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அநுபவித்த படியே அநுபவிப்போம்.

இத்திருவாய்மொழியில் முதல் பத்தில் ச்ரிய: பதியான நாராயணன் தான் ஸேவிக்கத் தகுந்தவன். அவன் தான் உபாயமாயிருக்கிறவன். ஆதலால் அவனே நம்மால் ஸேவிக்கப்படுமவன் என்பது சொல்லப்படுகிறது. இரண்டாம் பத்தில் ஸ்ரீமந்நாராயணன் அதிபோக்யன், மிகுந்த ஆனந்த ரூபி, ஸுகமாயிருப்பவன் என்பது சொல்லப்படுகிறது. மூன்றும் பத்தில் அப்பெருமாளுக்கு ஒரு திருமேனியுண்டு. அத்திருமேனியை தியானம் செய்தால் பாபங்களெல்லாம் போம். மோக்ஷ புருஷார்த்தம் கிடைக்கும். மனஸ்ஸு தியானம் பண்ணுவதற்கு அழகாயுமிருக்கும். இதை சுபாச்ரயம் என்பார்கள். பாபத்தைப் போக்கும் மிகவும் அழகான திருமேனியை உடையவன் என்பது சொல்லப்படுகிறது. நான்காம்பத்தில் எல்லா புருஷார்த்தங்களைக் காட்டிலும் அவனை அடைவதே உயர்ந்தது. ஆதலால் அவனே ப்ராப்யன் என்று சொல்லப்டுகிறது. ஐந்தாம் பத்தில் புருஷார்த் தங்களையும் அதை அடைவதற்கு உபாயங்களை அவனே கொடுக்கிறான் என்று பேசப்படுகிறது. ஆறும் பத்தில் அவன் சரணாகதியாகிற உபாயத்தால் எளிதில் அடையக்கூடியவன். சரணாகதிக்கு ஸுலபன் என்பது பேசப்படுகிறது. ஏழாம் பத்தில் அவன் நம்முடைய அநிஷ்டங்களை எல்லாம் (விரோதிகளையெல்லாம்)

போக்கடிக்கிறவன் என்பது சொல்லப்பட்டது. எட்டாம் பத்தில் ஆச்ரிதர்களுடைய இஷ்டத்தை அநுவர்த்திக்கிறவன். (பக்தர்களின் இஷ்டப்படி நடப்பவன்) என்பது வர்ணிக்கப்பட்டது. ஒன்பதாம் பத்தில் ஸ்வபாவத்தாலே ஒரு காரணத்தாலன்றி ஸ்வபாவத்தாலே ஸுஹ்ருத் நிருபாதிக ஸுஹ்ருத் என்று சொல்லப்படுகிறது. பத்தாம் பத்தில் நல்ல மார்கமான மோக்ஷ மார்கத்தில் அவன் ஸஹாயமாயிருப்பவன். (அர்ச்சிராதி மார்கத்தில் துணையாயிருப்பது) என்று சொல்லப்படுகிறது. ஆகவே இந்தப் பிரபந்தத்தில் 10 பத்துக்களாலும் கீழ்சொன்ன பத்து குணங்கள் உள்ளவன் பரமாத்மா என்று உபதேசிக்கப்பட்டது. முதல் பத்தில் சதகத்தில் (நூறுபாட்டில்) ச்ரிய: பதியான பெருமாள் மோக்ஷோபாயம் என்று அருளிச் செய்தார். இரண்டாம் பத்தில் அவனே மேலான பலன் ப்ராப்யன் (அடைய வேண்டியவன்) என்று சொன்னார். மூன்றும் பத்தில் இப்படி உபாயமாயும் பலமாயுமிருக்கிற பகவானுக்கு சுபாச்ரயமான திருமேனி உண்டு என்கிறார். நான்காம் பத்தில் ஐச்வர்யங்கள் முதலானவை அழியக் கூடியவை, விஷம் கலந்த தேன் போன்றவை. எம்பெருமான் ஒருவன் தான் எல்லா போக்யவஸ்துக்களிலும் உயர்ந்த போக்யமான தத்துவம். அவனே ப்ராப்யம்(அடையவேண்டிய பொருள்) என்றருளிச் செய்தார். ஐந்து முதல் ஆறு பத்துக்களாலே அவ்வீச்வரனைத் தவிர வேறு நமக்கு ச்ரேயஸ்ஸுக்கு உபாயமில்லை என அநந்யோபாயத்வம் (வேறு உபாயமில்லாமை) என்பதைப் பேசியுள்ளார்.


இந்த திவ்யப்ரபந்தத்தில் ஸேவா யோக்யனை படியால் உபாயம், போக்யமானதால் (உபேயம் ப்ராப்யம்) உபாயமாயும் உபேயமாயும் இருப்பதற்கு வேண்டிய திருமேனியும் முதல் மூன்று பத்துக்களால் சொல்லப்படுகிறது. நாலாம் பத்து அவன் உபேயம் என்பதை மற்ற பொருள் முதலிய புருஷார்த்தங்களுடைய நிலையில்லாமையை சொல்லி ஸ்திரப்படுத்துகிறது. மேல் ஆறு பத்துக்களும் உபாயத்வத்தை ஸ்திரப்படுத்துகிறது.

இந்த திவ்யப்ரபந்தத்தில் ஆரம்பத்திலிருந்து இருபத்திரண்டு பாட்டுக்களாலே சாரீரக மீமாம்ஸா என்கிற பிரஹ்ம விசார ரூபமான வேதாந்த சாஸ்திரத்தில் நான்கு அத்யாயங்களில் சொல்லப்பட்ட அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கிறதென்று பெரியோர்கள் பணிப்பார்கள். வியாஸர் செய்த ஸூத்ரங்கள் நான்கு அத்யாயங்கள் கொண்டது. பதினெறு பாதங்கள் கொண்டது. அதற்கு ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபாஷ்யம் செய்தருளினார். அதில் முதல் அத்யாயத்தில் ப்ரஹ்மமே (ஸ்ரீமந் நாராயணனே) பிரபஞ்சத்திற்குக் காரணம் என்று சொல்லப் பட்டிருக்கிறது, அந்த அர்த்தத்தை முதல் திருவாய்மொழியில் 'உயர்வற உயர் நலம்' என்று தொடங்கி ஆறு பாட்டுக்களால் ஆழ்வார் சாதிக்கிறார். ஸ்ரீ பாஷ்யத்தில் இரண்டாவது அத்யாயத்தில் ப்ரம்ஹம் ஜகத்காரணம் என்பதை பிறமதங்களால் அழிக்க முடியாது (அபாத்யத்வம்) என்கிற அர்த்தத்தை சொல்லுகிறார். ஆக இரண்டு பதிகங்களிலும் உள்ள இருபத்திரண்டு பாட்டுக்களிலே உத்தரமீமாம்ஸை என்கிற சாரீரக சாஸ்த்ரத்தில் நாலு அத்யாயங்களில் சொன்ன நான்கு அர்த்தங்களையும் சுருங்க அருளிச் செய்துள்ளார்.

இரண்டாம் பத்து

இரண்டாம் பத்தில் (அதாவது இரண்டாவது நூறு பாட்டுகளில்) சொல்லப்பட்ட ஸாரம் பின்வருமாறு. அதிபோக்யன், அநுபவிக்க மிகவும் ஸுகமாயிருப்பவன். எந்த

ஆராவமுதன் (திருக்குடந்தை) ஆண்டவன் மங்களாசாசனம்



காரணத்தினால் இப்படிச் சொல்லுவது என்றால் அதற்கு பத்துக் காரணங்கள் சொல்லுகிறார். அவனைப் பிரிந்தால் ஒருகணம் கூட பொருத்திருக்க முடியாது. க்ஷணவிரஹமும் அஸாத்யம், அவன் மநுஷ்யஸஜாதியனாக அவதாரம் செய்தாலும் எல்லா தத்வங்களிலும் மேலானவனாகவே இருப்பான். உலகிலுள்ள எல்லா மதுரபதார்த்தங்களுடைய ரஸமும் அவனை அநுபவிப்பதில் இருக்கும். ஆச்ரிதர்களுடைய துக்கத்தைப் போக்குபவன். ஆச்ரிதர்களோடு சேர்ந்து அதனால் மிகுந்த திருப்தியோடு இருப்பவன், ஆச்ரிதர்களான பக்தர்கள் நம்மை விட்டு விடுவார்களோ என்று பயப்படுபவன். ஆச்ரிதர்களுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளையும் காப்பாற்றுகிறவன். மோக்ஷத்தைக் கொடுப்பவன், கைங்கர்யத்திற்கு உத்தேச்யன், அழகான திருமாலிருஞ்சோலை என்கிற தெற்குத் திருமலையில் நித்யவாஸம் பண்ணுகிறவன். இந்த காரணங்களால் ஸர்வேச்வரன் அதிபோக்யன்.

மூன்றும் பத்து

அவனுடைய ஸௌந்தர்யத்திற்கு உபமானமில்லாமையால் அத்யாச்சர்யமான ஸௌந்தர்யத்ததுடன் கூடினவன். தன் திருமேனியில் நின்றும் பிரபஞ்ச ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகிறவன். எல்லாரும் தன்னை ஸேவிக்கும்படியாகவும் நினைத்தபடி அநுபவிக்கும்படியாகவும் அர்ச்சாரூபியாய் திருமலையில் நிற்கிறவன். பஞ்சபூதங்களையும் அவைகளால் உண்டாகிற ஸகல பிரபஞ்சங்களையும் சரீரமாகக் கொண்டவன். தன்னுடைய திருமேனி காந்தியால் பித்தனைக்கி பாடுவது ஆடுவதாகப் பண்ணுபவன். ஆச்ரிதர் விருப்பப்படி தன்னை ஆக்கிக்கொண்டு மிகவும் ஸுலபனாக அர்ச்சாரூபத்துடன் எழுந்தருளியிருக்கறவன், தன்னுடைய திருமேனி அழகுக்குத் தோற்று அடிமை செய்யும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய தாஸர்கள் எனக்கு ஸ்வாமிகள் என்று சொல்லி, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய தாஸர்களுடைய தாஸர்களுக்கும் தாஸனாயிருக்கும்படிச் செய்யும்படி திருமேனி அழகுள்ளவன். எம்பெருமான் கல்யாணகுணங்களாலே மனஸ்ஸு முதலிய இந்திரியங்களை ஆகர்ஷித்து நித்யம் இடைவிடாமல் பார்க்கவேண்டிய திருமேனியையுடையவன். எம்பெருமானைத் தவிர மற்றவர்கள் ஸ்தோத்ரம் பண்ணுகைக்கு யோக்யர்களல்ல என்று சொல்லி ஸ்தோத்ரம் பண்ணுவதற்கு ஈடான திருமேனியையுடையவன். அவ்வெம்பெருமான் தன்னை ஆச்ரயித்தவர்களுடைய பாபங்களனைத்தையும் போக்கும் திருமேனியையுடையவன். ஆகவே உபாயமாயும் உபேயமாயுமிருக்கிறவன். பாபங்களைப்போக்கும் அழகான திருமேனியை உடையவன் என்பது மூன்றும் பத்தின் ஸாரம்.

இப்படி அனுபவித்த பின் இரண்டாம் பத்தில் சொன்ன போக்யத்வம் நினைவுக்கு வந்து நான்காம் பத்தில் பலரூபமான போக்யத்வத்தை ஸ்திரப்படுத்துகிறார்.

நான்காம் பத்து

ச்ரிய: பதியான நாராயணன் தான் அடைய வேண்டிய தத்துவம் என்பதை ஸ்தாபிக்கிறது நான்காம் பத்து. ஐச்வர்யம் முதலிய புருஷார்த்தங்கள் நிலையில்லாதவை களாதலால் பரமபுருஷன் தான் ஸ்திரமான ஐச்வர்யன். அவனை ஆச்ரயிக்க வேண்டும். உயர்ந்த பரிமளம் உயர்ந்த ஸுகஸ்பர்சம் உயர்ந்த ப்ரகாசம் இவைகளையுடைய திருத்துழாய்

திருவாழி திருச்சங்கு முதலிய திவ்யபூஷணன். ஆகையால் இயற்கையான பல போக்ய வஸ்துக்களையுடையவன். எம்பெருமான் பக்தர்களோடு ஒருநீராகக் கலந்து அவர்களுடைய ஆத்மா அவர்களைச் சேர்ந்த வஸ்துக்களையே தனக்கு மாலை சந்தனம் முதலிய போக்யங்களாக அபிமானிப்பதால் மிகுந்த ஸ்நேஹத்துடன் ஒருவருக்கு ஒருவர் அணைந்து கொண்டிருக்கும் ஸ்வபாவமுள்ளவன். எம்பெருமானைப் பிரிந்திருக்கும் காலத்தில் அப்பெருமானுடைய வஸ்துக்களும் அவனைப் போன்ற வஸ்துக்களும் ஆச்ரிதரை க்லேசப்படுத்தும் அப்படி போக்யனாயிருப்பான். எம்பெருமான் பக்தர்களுக்குத் தன்னை காட்டிக் கொடுத்து தன்னுடைய ஸ்தோத்ரம் மங்களாசாஸனம் முதலியவைகளில் அவர்களை பிரவ்ருத்திப்பித்து அவர்களைக்ருதார்த்தர்களாகச் செய்பவன். தன்னைப் பிரிந்த காலங்களில் ப்ரணயிகளுக்கு உண்டாகிற தேவதாந்தர ஸ்பர்சம் முதலிய வியாதிகளை எல்லாம் தானே நிதான மறிந்த வைத்யனாய் ஸித்த ஔஷதங்களாலே நிவ்ருத்திக்கிற வைத்யன். எம்பெருமான் பிரளயம் முதலிய ஆபத்துகளில் ஸகாவாக இருப்பது முதலிய பல குணங்களுள்ளவன். ''ந தேவலோகாக்ரமணம்'' நஹி மே ஜீவிதேநார்த்த: ''நதேஹம் ந ப்ராணாந்'' என்கிற பகவான் உபேக்ஷிக்கிற (பகவத்கைங்கர்யத்துக்கு உபயோகப்படாத) மணிமாமை, கைவளை உடம்பு உயிர்முதலிய ஆத்மா ஆத்மாவைச் சேர்ந்தவைகள் இவைகளால் ஒரு ப்ரயோஜனமில்லை என்கிறார். ஆச்ரிதர்களால் விடக் கூடிய தன்னால் உபேக்ஷிக்கப்பட்ட வஸ்துக்களை உடையவன் என்றபடி எம்பெருமான் பக்தர்களுக்கு உயர்ந்த புருஷார்த்த ரூபமாய் இருந்து நமக்கு இஷ்டமான பலமாயிருக்கிறான். ஸ்ருஷ்டிக்கு முன்பு பிரளயகாலத்திலும் இருப்பவனைகையால் அவன் தான் ஸர்வதேவதா ஸார்வபௌமன். ஆகவே பத்து குணங்களால் பலமாயிருக்கற எல்லாவற்றிலும் மேலான போக்யம் எம்பெருமான் என்பது ஸாரம்.

ஐந்தாம் பத்து

இப்படி இரண்டாம் பத்தில் சொல்லப்பட்ட உபேயத்வத்தை நான்காம் பத்தில் ஸ்தாபித்துவிட்டு, முதல் பத்தில் சொன்ன உபாயத்வத்தை மேல் ஆறுபத்துகளால் ஸ்தாபிக்கிறார். ஆறும் பத்தில் ச்ரேயஸ்ஸையும் அதற்கு உபாயங்களையும் அவனே கொடுக்கிறான் என்கிறார்.

ஸர்வ ப்ரகாரத்தாலும் தாழ்ந்தவனான எனக்குத் தன் திருவடிகளில் கைங்கர்யம் தான் புருஷார்த்தம் என்பதையும் என் நெஞ்சிலே படுத்தி என்பக்கல் வ்யாமோஹத்துடன் கலந்தான். என்னிடத்தில் ஒரு கைம்முதலில்லை. அவன் தானே எனக்கு ஒரு ப்ரவ்ருத்தியைக் கொடுத்து, அதையே வ்யாஜமாகக் கொண்டு அது காரணமாக விசேஷ க்ருபை பண்ணினான். ஆதலால் அவன் தயாபரதந்த்ரன். எம்பெருமானுடைய அளவற்ற கல்யாண குணங்களால் ஜீவிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த உலகில் வந்து அவனுடைய குணங்களைப் பாடி ஆடி வர்த்திப்பதைக் கண்டோம். ஆகவே எம்பெருமான் தன் அடியார்களைக் கொண்டு ஸகலபாபங்களையும் போக்குகிறான் மடலூரும்படி செய்கிற பிராட்டியின் வாக்யத்தால் அவன் ஆச்ரிதர்களுக்கு அளவில்லாத பக்தியை உண்டாக்குகிறான். பிரளயம் முதலான ஆபத்துகளில் காப்பாற்றுவது முதலிய குணங்களால் ஜகத்தை ரக்ஷிப்பதில் தீக்ஷிதன். திருக்குறுங்குடி நம்பியுடைய திவ்ய அவயவ, ஆயுத பூஷணங்களெல்லாம் என் நெஞ்சில் புகுந்து நிறைந்திருக்கிறது என்று சொல்லி பக்தர் மறக்கமுடியாமல் இருப்பதைக் காட்ட கோபிகள்

போலே அநுபவித்து அஹம்பாவநா கோசரஞ்யிருப்பான். தன்கையில் முதலில்லாமையை அறிவித்து ஆத்மஸமர்ப்பணம் பண்ணினவனுக்கல்லாது முகம் காட்டான் என்று சொல்லி தீனசரண்யன் எனப்படுகிறுன். எம்பெருமான் ஆராவமுதமாகையால் ஆச்ரிதர்களுக்கு தாஸ்யத்தில் ஆசையை உண்டாக்குகிறுன். ஆச்ரிதர்கள் ஸுலபமாகத் தன்னைக் கிட்டுவதற்காக திருவல்லவாழ் நகருள் நிற்கிறுன் என்று சொல்லி அத்யந்த ஸந்நிஹித தேசத்தில் இருப்பவன். ஆச்ரித ரக்ஷணத்தில் ஈடுபட்டவன். எம்பெருமான் ஸ்ரீராம க்ருஷ்ணாதி அவதாரங்களிலே செய்தருளிய சேஷ்டிதங்களை அநுபவித்து சிதிலமாகாமலிருக்கும்படிப் பண்ணியருள வேணும் என்று ப்ரார்த்திப்பதால் பகவதநுபவத்துக்கு விரோதியான மனஸ்ஸின் தளர்ச்சியைப் போக்கும் சக்தியைக் கொடுக்கிறவனுயிருக்கிறுன். ஆதலால் சிரேயஸ்ஸையும் அதற்கு உபாயங்களையும் கொடுக்கிறுன் என்று ஐந்தாம் பத்தின் ஸாரம்.

ஆறும் பத்து

ஸர்வேச்வரன் காரண விசேஷம் இன்னதென்று அறியமுடியாத ஸ்வரஸவாஹியான க்ருபையாலே விவேக நிர்வேத விரக்தி முதலியவைகளை உண்டாக்கி சேதனனைச் சரணாகதியிலே பூட்டும்படியை அருளிச்செய்தார்.ஆறும்பத்தில் நெடுங்காலம் இழந்த நம்மைத் திருவுள்ளம் பற்ற சக்தன் என்று ஆகிஞ்சன்யத்தை முன்னிட்டு பிராட்டி புருஷகாரமாக சரணாகதி பண்ணியருளுகிறுர். சரணாகதிக்கு ஸுலபன் என்பது ஆறும் பத்தின் ஸாரமான அர்த்தம். குருகு முதலான பக்ஷிகளைத் தூதுவிடுவதால் பகவான் ஆசார்யத்வாரா ப்ராப்யன் என்கிறுர். கேட்டார் எல்லாரும் நீராயுருகும்படி நெடும் போது கூப்பிட்டும் அவன் வராமையால் ப்ரணய கோபத்தால் பராங்முகமாயிருக்க நிச்சயிக்கிற பாகவதோத்தம விஷயத்தில் அவன் தானே வந்து மேல்விழுந்து இவன் அபிமானத்தை மாற்றி கலந்தருளும்படியான தன்னைச் சேர்ந்தவர்களிடத்தில் அவன்தானே வருகிறவன். ஒன்றுக்கொன்று விருத்தங்களான பதார்த்தங்களையும் தனக்கு ஐச்வர்யமாக உடையவன் த்வம் மே என்றுலும் அஹம்மே என்கிறவனையும் சரணாகதியிலே மூட்டிவைப்பன் என்று கொண்டு விருத்தமான வஸ்துக்களையும் சேர்த்து வைக்கும் அகடித கடநா சக்தியுள்ளவன். எல்லையில்லாத கருணையாலே தன்னிடத்தில் அன்புள்ளவர்கள் தன்னைவிட்டுப் பிரிந்தால் தரிக்கமாட்டாமல் பண்ணக்கூடிய சித்தாகர்ஷகமான (மனஸ்ஸை இழுக்கக்கூடிய) திவ்ய லீலைகளைச் செய்பவன். பாகவதர்கள் கிடைக்காவிடில் விபரீதர்களுடைய சேர்க்கையை ஏகாந்த வாஸத்தால் பரிஹரிக்க வேண்டும் என்பது போல் தன் ஸ்வபாவத்துக்கு எதிரான ஸ்வபாவமுள்ளவர்கள் யாராலுலும் அவரை அணுகலாகாது என்று தாய்மாரை விட்டுப்போந்த பெண் நிலைமையைப் பேசியதால் கர்மமடியாக வந்த பந்துக்களைச் சேரவொட்டான். அவனே ப்ராதா பர்த்தா ச பந்துஸ்ச பிதாச மம ராகவ:' என்று ஸர்வவித பந்துவாயிருப்பதால் சரீரமடியாக வந்த பந்துக்களை விட்டுப் பிரிப்பவன். தன் ஆச்ரிதர்களுடைய விரோதிகளைப் போக்கி அவன் நம்மை அங்கீகரிப்பான் என்று நினைத்து அவனை ஆச்ரயிக்க அவைகள் தானே போய்விடும் என்று சொல்லுவதால் ஆச்ரிதர்களுடைய அஹங்கார மமகாரம் சாதுர்யம் தைர்யம் முதலியவைகளை அவனே அபஹரித்துவிடுவன். எழுந்து நடக்க ஆரம்பித்தால் ஒரடி கூட பேர்த்து வைக்க முடியாத துக்கத்திலும் நெடுந்துரம் நடந்து வரும்படியான சக்தியையும் லோகாபவாதம், ஜனங்களுடைய அவமானம்

முதலியதிலிருந்து பயப்படுகையும் போம்படியான தைர்யம் முதலியவைகளை அப்பெருமானே கொடுப்பன். தன்னுடைய ஸொத்தான லீலாவிபூதி நித்யவிபூதி இரண்டையும் ஸ்வாபிமதரைத் தன்னோடு சேர்த்து வைத்த ஆசார்யகளிட்ட வழக்காம்படி செய்கிறவன். அவனை க்ஷணகாலம் கூட பிரிந்திருப்பது ஸ்வரூபம் தெரிந்தவனுக்குத் தகுதியில்லை என்பதால் பிரிந்திருக்கத் தகுதியில்லாதவன். திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸாங்கமாக பரந்யாஸம் பண்ணினபடியால் சரண்யனுக்கு வேண்டிய குணங்களில் குறைவில்லாதவன். ஆக பத்து குணங்களால் பகவான் ப்ரபதன ஸுலபன் என்பது ஸாரம்.

ஏழாம் பத்து

ஏழாம் பத்தில் பகவான் ஆச்ரிதர்களுடைய அநிஷ்டத்தைப் போக்குமவன் என்கிற குணம் சொல்லப்பட்டது.அடைய வேண்டியவனும், அடைவிக்கிறவனும், திவ்ய மங்களவிசிஷ்டனுமான ச்ரிய:பதியின் திருவடிகளில் அங்கபஞ்சக ஸம்பத்தமான சரணாகதி பண்ணியும் தம்முடைய அபேக்ஷிதம் கிடைக்காமையாலே துக்கப்பட்டு ஆற்றுமையின் மிகுதியாலே, பஞ்சேந்திரியங்களையிட்டு என்னை ஹிம்ஸித்து உன் திருவடிகளைச் சேராதபடி பண்ணுகிறாயே என்று ப்ரணயாச்ச அபிமானாச்ச பரிசிக்ஷ்ய ராகவம்' என்கிறபடி பெருமாளை எதிர் நோக்கி உபாலம்பம் செய்கிறார் (நிந்தை செய்கிறார்) நான் சரணாகதி செய்தும் பலம் கைக்குக் கிட்டாமையாலே துக்கிதராய் நீ என்னை உன் திருவடிகளில் சேராதபடி பண்ணுகிறாயே. அதனால் உனக்கு என்ன ப்ரயோஜனம், நீ சடன் (நேரில் ப்ரியன் போலிருந்து மறைவாகக் கெடுதல் செய்கிறவன்) என்று சொல்ல, அதைப் பொறுத்துக் கொண்டிருக்கிறான். பக்தர்கள் சடன் என்பதை ஸஹித்துக் கொள்ளுபவன். பெரிய பெருமாளைக் கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டியினுடைய திருத்தாயார் எம்பெருமானை நோக்கி இவள் விஷயத்தில் என் செய்யப் போகிறாய் நிந்திக்கும் பாசுரத்தாலே எம்பெருமானுக்குள்ள பயத்தையும் பயத்தை நிவ்ருத்தி பண்ணுகிறதையும் சொல்லுகையால் ஆச்ரிதர்களுடைய நிந்தையைப் போக்குபவன் எம்பெருமான் என்றபடி. பகவத் குணங்களைச் சொன்னதால் மோஹித்த பிராட்டி பாசுரத்தாலே திருப்பேரை நகருக்குப் போகாமல் நிற்க மாட்டேன் என் கையால் ஆச்ரிதரக்ஷகத்வப்ரசுசகன் என்றபடி. எம்பெருமானுடைய அவதாரங்களின் வீரச் செயல்களை நினைத்து அவன் செய்யும் ரக்ஷாப்ரகாரங்களை அநுபவித்தால் ரக்ஷாக்ரம ப்ராகாசகன் எம்பெருமான். 'அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றி' என்கிறபடி கோஸல நாட்டில் பிறந்த ஸ்தாவர ஜங்கமங்களுக்கு திவ்யகதியைக் கொடுத்தது முதலான கார்யங்களை நினைத்து அவன் ஸர்வ ஜந்துக்களிடத்திலும் ஸௌஹார்தமுள்ளவன் என்பதைக் காண்பிக்கிறான். 'உன்னை என்று கொல் சேர்வதுவே' கேட்டார் நீராய் உருகும்படி கூப்பிடுகையாலே எம்பெருமான் ஆச்ரிதஜனங்களுடைய அழுகையைப் போக்குமவன் தியானத்திலே ப்ரத்யக்ஷம் போல் தோன்றினாலும் உடம்பினால் அவனை அணைக்கப் பெறுமையாலே கரைந்து நோவும்படியான பிராட்டி பாசுரத்தால் எம்பெருமான் ஆச்ரிதர்கள் நினைக்கும் தோறும் மனதில் பிராகாசித்துக் கொண்டு இருப்பவன், ஸ்ம்ருதி விசத தநு:' என்கிறார். எம்பெருமான் தன்னுடைய ஆச்சர்யமான நாநாவிதமான விபூதிகளைக் காட்டிக் கொடுக்க விசித்ர விபூதிகன் என்று அநுபவித்தபடி ஆழ்வார் பெருமாளைப் பார்த்து நீ ஏன் இந்த விபூதியில் வைத்தாய் என்று கேட்க,

லோகோபகாரார்த்தமாக என் ஸ்வரூப ரூப குண விபூதிகளைப் பிராகாசிக்கிற திருவாய் மொழியைப் பாடுவிப்பதற்காக என்று சொல்ல ஸ்ரீவால்மீகி பகவான் முதலாழ்வார் முதலானோர் நிற்க என்னைக் கொண்டு பாடுவிப்பதே என்று ஆச்சர்யப்பட்டு ஸ்தோத்ர ப்ரவர்த்தகன் எம்பெருமான் என்கிறார். எம்பெருமானைக் கவிபாட வினைகளெல்லாம் கெடும் என்று எம்பெருமான் ஸ்தோத்ரு ஜந அகஹரன் துதி செய்கிறவர்களுடைய பாபங்களைப் போக்கடிப்பவன். ஆகவே ஆச்ரித அநிஷ்ட நிவர்த்தகன் என்பது ஏழாம் பத்தின் ஸாரம்.

எட்டாம் பத்து

காணவேணும் என்று ஆசைப்படுமவர்களால் காணப்படுமவன் இதர விஷயங்களில் பற்றற்றவர்களாலே தானே அடையப்படுமவன். பிரிந்திருக்கும் ஸமயத்திலும் தனக்கு ஆச்ரிதர் பரிய வேண்டும்படியான போக்யதையை உடையவன். ஆச்ரிதர்களுக்காக ஸமக்ரவிபவங்களையும் வைத்துக் கொண்டிருப்பவன். ரக்ஷிக்கும் விஷயத்தில் நம்முடைய அபேக்ஷாப்ரதீக்ஷன். தன்னுடைய ஸ்தானமான மோக்ஷத்தைக் கொடுப்பதில் ஸந்நத்தனாயிருப்பவன். ஆச்ரித விஷயத்தில்தானே ஈடுபட்டவன். தன்னைக் குறித்து ஜீவர்களுக்குண்டான தாஸ்யத்தைக் கொடுப்பவன், அதில் நிஷ்டையைக் கொடுப்பவன். அதனுடைய எல்லைநிலமான பாகவத சேஷத்வத்தைக் கொடுப்பவன். ஆகவே எம்பெருமான் பக்தர்களுடைய விருப்பப்படி நடப்பவன் என்று எட்டாம் பத்தின் ஸாரமான பொருள்.


ஒன்பதாம் பத்து

ஸர்வ ஜனங்களுக்கும் பந்துவான க்ருஷ்ணனுடைய திருவடிகளை ஆச்ரயித்தால் அல்லது வேறு ஸஹாயமும் புருஷார்த்தமும் இல்லையாதலால் ஸர்வருக்கும் அவனே ப்ரதான பந்துவாயிருக்கிறான். திருப்புளிங்குடி எம்பெருமான் நெடுநாளே தொடங்கிக்ருபை பண்ணுகிறான். எம்பெருமான் ஸௌசீல்ய குணத்திற்கு ஸமுத்ரம்போல் ஆதாரமானவன். அதிசீல குணாகரன் என்றபடி ஸர்வேச்வரனுக்கும் நமக்கும் ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தமொன்றுண்டு. அவன் ஸ்வாமீ நாம் அவனுடைய சொத்து, இந்த உறவினால் ரக்ஷிக்கிறான். எம்பெருமான் ஆச்ரிதர்களுக்கு மறக்க முடியாதபடி தன் குணங்களை ஸ்மரிக்கும்படி செய்கிறான். ஸ்வகுண கர்ம ஸ்மாரகன். ஒரு நாளும் மறக்க முடியாதவன். ஆசார்ய முகத்தாலே விச்வஸநீயன். ஆசார்யர்களால் அவன் ரக்ஷிதன் கைவிடமாட்டான் ''தாமுகப்பர் என்னும் சொல் தம்மிடையே பொய்யானால் சாதிப்பர் ஆரினியே'' என்கிற க்ரமத்தில் நம்பத்தகுந்தவனாக உபதேசிக்கப்படுகிறான். எல்லையில்லா தயை பொறுமை ஔதார்யம் முதலிய குணங்களையுடைய பெரிய பிராட்டியாரை தனக்கு பத்னியாகக் கொண்டவன். திருமேனி குணங்களாலும், மற்றுமுள்ள திவ்யாத்மஸ்வரூப குணங்களாலும் வருவதற்கு யோக்யமான ஸமயத்தை உடையவன். வருவதற்கு ஸமயம் தெரிந்தவன். ஸம்ஸாரிகளுடைய ஸம்ஸார நிவர்த்தனத்தில் (மோக்ஷம் கொடுப்பதில்) அவஸர ப்ரதீக்ஷனாயிருக்கிறான். மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான், ஆகவே ஸர்வேச்வரன் தான் நிருபாதிக பந்து என்பது தான் ஒன்பதாம் பத்தின் ஸாரமான அம்சம்.

பத்தாம் பத்து

ஸர்வேச்வரன் அர்ச்சிராதிமார்கத்தில் போகிற ஜீவனுக்குத் துணையாயிருக்கிறான். வழித்துணையாயிருப்பவன். தன்னை ஆச்ரயித்த ஜீவன்களுக்குப் போம்வழியில் வரும் க்லேசங்களை எல்லாம் போக்குகிறான். பகவான் ப்ரேமாதிசயத்தால், அஸ்தானே சங்கிக்கப்படுபவர், அவனிடத்தில் பயப்படுவதற்குக் காரணமில்லாமலிருக்க அன்பினால் அவனுக்கு என் வருமோ என்று சங்கிப்பதற்கு பாத்திரமாயிருப்பர். அவ்வீச்வரன் பக்தி பண்ணுகிறவர்களாலே ஸுலபமாக அடைப்படுகிறான். நாம ஸங்கீர்த்தனம், புஷ்பங்களால் அர்ச்சிப்பது, பாடுவது முதலிய பல ப்ரகாரங்களால் அவன் ஆச்ரயிக்கப்படுமவன் என்றபடி. ஆச்ரிதர்களுக்கு தன்னுடைய ஸ்தானமான வைகுண்டத்தைக் கொடுப்பதற்கு மிகவும் த்வரையுடையவனாயிருக்கிறான். ஸர்வேச்வரன் ஆச்ரிதர்களுடைய சரீரம் முதலியவைகளிலும் மிகவும் ஆதரத்தோடு இருக்கிறான். திருப்பேர் நகரில் வாஸம் பண்ணும் ஸர்வேச்வரன் ஸர்வஸ்வாமி ஆகையால் தன் இச்சையாலே தானே ஸந்துஷ்டனாகிறான். ஸர்வேச்வரன் ஆச்ரிதர்களை அர்ச்சிராதி மார்க்கத்தாலே தன்னுடைச்சோதியான ஸ்ரீ வைகுண்டலோகத்திற்கு அழைத்துச் செல்கிறான். மோகூஷத்தைக் கொடுப்பவன். முக்தர்களால் அநுபவிக்கப்படுகிறவன் என்று கடைசி பாசுரத்தைச் சொல்லிக்கொண்டே மோகூஷத்தை அடைந்தார். ஸர்வேச்வரன் லகூஷ்மீப்தி, எல்லையில்லாத கருணையுள்ளவன் ஸர்வஜ்ஞன், ஸர்வசக்தி, எல்லாருக்கும் ஸ்வாமீ, ஸர்வருடைய பரத்தையும் ஸ்வீகரிப்பவன். ஆதலால் நமக்கு கிடைக்காத புருஷார்த்தம் என்ன இருக்கிறது? நமக்கு ஸுலபமாகக் கிடைக்காதது எது? என்ன ஆபத்து வரும்? ஆகையால் அவனை ஆச்ரயித்த எனக்கு என்ன குறைவு இருக்கிறது? சாஸ்திரங்களிலும் தேஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா, அவனுக்கு அதிபதியான ஈச்வரன் அவனை ஸந்தோஷப்படுத்துகிற உபாயம் அவனுடைய அநுக்ரஹத்தால் மோகூஷத்தைக் அடைவது, அவனிடத்தில் அபசாரத்தால்வரும் பாபங்கள், பக்தர்களுடைய ப்ரபாவம், பக்தர்களுடைய அநுக்ரஹத்தால் மனஸ்ஸின் கல்மஷங்களுடைய நிவ்ருத்தி வேதத்தில் அறியவேண்டிய ஸாரம் இவைகள் எல்லாவற்றையும் நம்மாழ்வார் திராவிட வேதத்தில் ஒன்றுவிடாமல் அருளிச் செய்து இருக்கிறார்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

தர்மபூத ஜ்ஞானத்தில்

சில கேள்விகளும் பதிலும்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் என்.எஸ் ராமாநுஜ தாதாசாரியர் ஸ்வாமி)

ஜ்ஞானம் என்கிற வடமொழிச் சொல்லுக்கு அறிவு என்று பொருள். அவ்வறிவின் உண்மையை அறிவது மிகவும் அரிது. உலகில் தோன்றிய பல அறிஞர்கள் அறிவைப் பற்றிப் பலவாறு விமரிசனம் செய்துள்ளனர். அது தவிர ஆத்மா அறிவு மனஸ் இவை மூன்றும் வெவ்வேறு தத்வங்களா ஒன்றேயா என்பதிலும் ஏகரீதியாக எல்லோரும் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆத்மாவும் அறிவும் ஒன்றே. ஆத்மா ஜ்ஞானஸ்வரூபம். அதற்கு அறிவு என்கிற குணம் கிடையாது என்று பலர் கொள்கை. ஆத்மா ஜ்ஞானஸ்வரூபமன்று. ஆத்மாவின் குணம் ஜ்ஞானம் என்று பலர் கூறுகின்றனர். அந்த ஜ்ஞானமும் நித்யமன்று அநித்யம் என்கின்றனர். மனஸ் ஜ்ஞானத்திற்கு ஸாதனம் என்றும் அவர்கள் கொள்கை. ''கோபாலன் பலான விஷயத்தை மனத்தினால் அறிகிறான்'' என்று லோகத்தில் வ்யவஹாரம் உள்ளது. அதனால் கோபாலன் என்பவன் ஆத்மா என்றும் அவனில் வேறானது அறிவு என்றும் அதற்குக் காரணம் மனஸ் என்றும் ஏற்படுகிறது. கோபாலன் அறிந்தான் அறிகிறான் அறியப்போகிறான் என்றும் முக்காலங்களின் ஸம்பந்தம் அறிவிற்கு உள்ளதாக வ்யாவஹரிப்பதால் ஜ்ஞானம் அநித்யம் என்கின்றனர்.

விசிஷ்டாத்வைத மதத்தில் ஆத்மா நித்யம். அது ஜ்ஞானஸ்வரூபம். அதற்குக் குணமாக ஒரு ஜ்ஞானமுண்டு. அது தர்மபூத ஜ்ஞானமெனப்படும். அதற்கு உத்பத்தியும் கிடையாது அழிவும் கிடையாது. நித்யமானது. அந்த தர்மபூத ஜ்ஞானத்திற்கு ஸம்ஸார தசையில் புண்யபாப கர்மங்களுக்கு ஈடாக ஸங்கோசமும் விகாஸமும் உண்டு. அந்த ஸங்கோச விகாஸங்களைக் கருத்தில் கொண்டு ஜ்ஞானம் அழிந்தது என்றும் உண்டாகிறது என்றும் கூறுகின்றனர் என ஒப்புக் கொள்ளப்படுகிறது.

இம்மாதிரியான ஸ்ரீபாஷ்யகாரருடைய கொள்கை அவருடைய ஸ்ரீஸூக்திக்கே முரண்பட்டது என்றும் யுக்திக்கும் ப்ரமாணத்திற்கும் முரண்பட்டது என்றும் அறைகுறை ஜ்ஞானமுள்ள ஒருவர் விரோதவரூதினீ என்கிற க்ரந்தத்தில் கூறியுள்ளார். அவர் ஸ்ரீபாஷ்யகாரருடைய கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டாகவே இச்சிறிய கட்டுரை தோன்றுகிறது.


அவர் கூறுகின்றார். ராமானுஜ பாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதி கரணத்தில் ''ஆத்மாவிற்கு ஜ்ஞாத்ருத்வமாவது ஜ்ஞானமாகிற குணத்திற்கு இருப்பிடமாகுகை. அந்த ஜ்ஞானமானது நித்யமான ஆத்மாவிற்கு ஸ்வாபாவிக குணமாகையால் நித்யமானது'' என்று கூறிவிட்டு அதற்கு முரணுக ''அளவிடமுடியாத ஜ்ஞானமானது ஸங்கோசம் (சுருங்குதல்) விகாஸம் (விரிதல்) இவைகளை அடையும் தன்மையது'' என்று கூறுகின்றார். சுருங்குதல் விரிதல் இவைகளையுடைய பொருள் அநித்யம் என்று ஸ்ரீபாஷ்யகாரரே இரண்டாவது அத்யாயத்தில் ஜைனர்களை தூஷிக்கும் அதிகரணத்தில் கூறியுள்ளார். அப்படியானால் ஸங்கோச விகாஸங்களையுடைய தர்ம பூதஜ்ஞானம் எப்படி நித்யம் என்று கூறமுடியும் என்று.

இரண்டாவது அத்யாயத்தில் ஜைனர்களைப் பற்றி ஸ்ரீபாஷ்யகாரர் கூறியதாவது - ஜைனர்கள் சரீரத்தை காட்டிலும் ஆத்மா வேறுபட்டதாயினும் சரீரத்துக்கு எவ்வளவு அளவோ அதுவே அளவு என்கின்றனர் - யானையின் சரீரத்தின் உள்ளே இருக்கும் ஆத்மாவானது யானையின் அளவுடையது. அது கர்ம விசேஷத்தால் யானை உடல் அழிந்ததும் எறும்பின் உடலுடன் பிறக்கும் போது எறும்பின் அளவுடையது. இதனால் உடலுக்கேற்றவாறு சுருங்குதல் விரிதல் ஆகிய தன்மையை யுடையதாயினும் ஆத்மா நித்யமானதே. அதற்கு உற்பத்தியோ நாசமோ கிடையாது என்று ஜைனர்களின் கொள்கை.

இக்கொள்கையை மறுக்கும் பொழுது ஸ்ரீபாஷ்யகாரர் கூறுகிறார் - சரீரத்தின் அளவைக் கொண்டது ஜீவாத்மா எனில் எறும்பின் அளவான ஜீவாத்மா யானையின் சரீரத்தில் புகும் பொழுது யானையின் சரீரம் பூராவாக ஆத்மா இருக்க முடியாது. அப்படியே யானையின் அளவுடைய ஜீவன் எறும்பின் சரீரத்தில் புகும்பொழுது ஆத்மா பூராவாக எறும்பில் புகமுடியாமற் போகும். இந்த தோஷத்தை பரிஹரிப்பதற்காக ஆத்மா ஸங்கோசம் விகாஸம் இவைகளையுடையது. ஆகவே யானையின் உடலிலிருந்து எறும்பின் உடலில் புகும் பொழுது ஆத்மா எரும்பின் அளவிற்கு சுருங்குகிறது. எறும்பின் உடலிலிருந்து யானையின் உடலில் புகும் போது யானையின் அளவிற்கு விரிகின்றது என்று ஒப்புக் கொண்டால் சுருங்குதல் விரிதல் இவைகளை ஸ்வபாவமாகக் கொண்ட தாமரைப் பூ முதலியவை அநித்யமாகக் காண்கையால் ஆத்மாவும் அவற்றைப் போல் அநித்யமாக ஆகிவிடும். ஆகவே சரீரத்தின் அளவே ஆத்மாவின் அளவு என்கிற ஜைனர்களின் கொள்கை சரியன்று என.

இதே கேள்வி தர்மபூத ஜ்ஞானத்திலும் வருமல்லவா. அதற்கு என்ன பதில்? கூறுகின்றோம். கேண்மின். ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் ஸ்ரீபாஷ்யகாரர்.

''ज्ञानं चास्य नित्यस्य स्वाभाविकधर्मत्वेन नित्यम्''



வராஹநயினார் (ஸ்ரீமுஷ்ணம்)

(ஜ்ஞானமானது நித்யமான ஆத்மாவின் ஸ்வாபாவிக தர்மமாகையால் நித்யம்) என்று அருளிச் செய்தார். அந்த ஸ்ரீஸூக்தியின் கருத்தைப் புரிந்து கொண்டால் மேற்கூறிய கேள்விக்குப் பதில் கிடைத்துவிடும். நெருப்பிற்கு உஷ்ணஸ்பர்சம் ஸ்வாபாவிக தர்மம். ஆனால் அது அநித்யம். ஏனென்றால் உஷ்ணஸ்பர்சத்துக்கு ஆச்ரயமான நெருப்பு அநித்யமாகையால். அம்மாதிரி தர்மபூதஜ்ஞானத்துக்கு அநித்யத்வம் கூறமுடியாது. தர்மபூதஜ்ஞானத்துக்கு ஆச்ரயமான ஆத்மா நித்யமாகையால். ஆச்ரயம் நித்யமானாலும் அதின் குணம் ஔபாதிகமானால் அதாவது வேறொரு காரணத்தினால் தோன்றினால் அநித்யம் ஆகும். உதாரணமாக ஸ்படிகமணி ஸ்வச்சமானது. வெண்மை நிறமுடையது. அதன் அருகில் சிவப்பான புஷ்பத்தை வைத்தால் ஸ்படிகமணி சிவப்பாகத் தெரியும். ஆகவே ஸ்படிகமணியில் சிவப்பு நிறம் ஔபாதிகம். சிவப்பு புஷ்பத்தின் ஸம்பந்தத்தால் ஏற்பட்டுள்ளது. அந்த உபாதியை நீக்கிவிட்டால் சிவப்பு நிறம் போய்விடும். அம்மாதிரி ஜ்ஞானம் ஆத்மாவிற்கு ஔபாதிகமன்று. ஸ்வாபாவிகம். நெருப்பின் உஷ்ணத் தன்மைபோல். ஆகவே ஆச்ரயமான ஆத்மா நித்யமாய் அதற்கு ஸ்வாபாவிகதர்மமாக ஜ்ஞானமுள்ளதால் ஆத்மா இருக்கும் வரை அதில் ஜ்ஞானம் உண்டு. ஆத்மாவிற்கு உற்பத்தி நாசம் இராததால் அதன் ஸ்வபாவமான ஜ்ஞானத்திற்கும் உற்பத்தி நாசங்கள் கிடையாது. ஆகவே தர்மபூதஜ்ஞானம் ஸங்கோச விகாஸங்களை அடைந்தாலும் நித்யமே. ஜைனர்கள் ஆத்மாவையே ஸங்கோசவிகாஸங்களை அடைவதாகக் கூறுவதால் அந்த ஆத்மா வேறு ஒரு நித்ய வஸ்துவின் ஸ்வாபாவிக தர்மமாக அவர்கள் ஏற்றுக் கொள்ளாததால் அது ஸங்கோச விகாஸங்களை யுடையதாயின் அநித்யமாகிவிடும் என்று ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுள்ளம். இதில் முன்பின் முரண்பாடு ஒன்றும் கிடையாது.

ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்த யுக்தியும் வேதாவாக்யத்திலே கூறப்பட்டது தான். ப்ருஹதாரண்யக உபநிஷத்தில்

''न विज्ञातुर्विज्ञातेर्विपरिलोपो विद्यते, अविनाशित्वादात्मनः ''

(ஜ்தாவான ஆத்மாவின் தர்மபூதமான ஜ்ஞாத்திற்கு நாசம் கிடையாது. ஆத்மாவிற்கு நாசமில்லாததால்)

என்று ஓதப்படுகிறது. ஆச்ரயமான ஆத்மா அழியாததால் அதன் தர்மமான ஜ்ஞானத்திற்கு அழிவில்லை என்று வேதம் கூறுகிறபடியால் ஆத்ம தர்மபூதமான ஜ்ஞானத்திற்கு அழிவில்லாமைக்கு ஆத்மாவின் அழிவின்மை காரணம் என்று காட்டப்பட்டது. இதையே பாஷ்யகாரர் நித்யமான ஆத்மாவின் தர்மமாகையால் நித்யமென்கிறார்.

மேலே கூறிய ச்ருதிக்கு ஜ்ஞானஸ்வரூபனான ஆத்மாவிற்கு அழிவில்லை என்று பொருள் கூறுகின்றனர். அது சரியன்று. மேலே ' अविनाशित्वादात्मनः ' என்கிற ஹேதுவோடு பொருந்தாமையால். ''ஆத்மாவிற்கு நாசமிராததால் ஆத்மாவிற்கு நாசமில்லை'' என்று அறிவுள்ளவன் கூறுவனா? ஸாத்யமும் ஹேதுவும்

ஒன்றாகையால் அவ்வாறு கூறுவது தவறு என்று சாஸ்த்ரஜ்ஞர்கள் இசைந்தது. ஆகையால் 'विज्ञातुः ' ஆத்மாவினுடைய 'विज्ञातेः ' ஜ்ஞானத்திற்கு 'विपरिलोपः ' அழிவு 'न विद्यते ' இல்லை என்பதே மேலே காட்டிய வேதவாக்யத்துக்குப் பொருள்.

ஸூத்ரகாரமும் 'यावदात्मभावित्वाच्च' என்கிற ஸூத்ரத்தில் ஜ்ஞானம் ஆத்மாவினுடைய ஸ்வாபாவிக தர்மம் என்கிறார்.

ஆனால் ஆத்மாவும் நித்யம் அதனுடைய தர்மபூத ஜ்ஞானமும் நித்யமானால் அதற்கு ஸங்கோச விகாஸங்களை எதற்கு ஏற்கவேண்டும் என்று கேட்கிறார்கள். அதற்கு பதில் - ஒருவனுடைய அறிவு எப்பொழுதும் ஒரே மாதிரியாக இல்லை. சில சமயம் சில விஷயங்களை அறிகின்றது. சில சமயம் பல விஷயங்களை அறிகின்றது. அதை அநுஸரித்து ஸங்கோச விகாஸங்களை ஒப்புக் கொள்கிறோம். சில விஷயங்களை அறியும்போது ஸங்கோசம். பல விஷயங்களை அறியும் பொழுது விகாஸம். இப்படி ஒப்புக் கொள்வதைக் காட்டிலும் ஜ்ஞானத்திற்கு உற்பத்தி விநாசங்களையே ஒப்புக் கொள்ளலாமே எனில் - ச்ருதியில் ஜ்ஞானம் நித்யம் என்று கூறப்படுவதால் அவைகளை ஒப்புக் கொள்ளவில்லை. ச்ருதி மேலே காட்டியதே.

மேலும் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில்
'अविनाशी वा अरे अयमात्मा अनुच्छित्तिधर्मा '
(இந்த ஆத்மாவானது அழிவில்லாதது. அழிவில்லாததை தர்மமாகக் கொண்டது)

என்கிற வாக்யம் காணப்படுகிறது. இங்கு அநுச்சித்தி தர்மா என்கிற சொல்லுக்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம். உச்சித்தி:= அழிவு. ந உச்சித்தி : அநுச்சித்தி : அநுச்சித்தி : தர்ம: யஸ்ய ஸ: அநுச்சித்திதர்மா என்று விக்ரஹவாக்யம் கொண்டால் அழிவின்மையைத் தன்மையாகக் கொண்டது அதாவது அழிவில்லாதது என்று பொருள். அப்பொழுது புநருக்தி (சொன்னதைச் சொல்லுதல்) என்கிற குற்றம் ஏற்படும். அவிநாசீ என்கிற சொல்லால் அழிவின்மையைக் கூறிவிட்டபடியால் மறுபடி அதையே சொன்னால் புநருக்தியாகும் அல்லவா. மேலும் தர்மபதம் பயனற்றதாகும். ஆகவே ந உச்சித்தி: யஸ்ய தத் அநுச்சித்தி - அநுச்சித்தி தர்ம : யஸ்ய ஸ: அநுச்சித்தி தர்மா என்று விக்ரஹம் கூற வேண்டும். அப்பொழுது அழிவில்லாத பொருளைக் குணமாக உடையது ஆத்மா என்று பொருள். அதனால் ஆத்மாவின் குணமான ஜ்ஞானம் அழிவில்லாதது என்று ஏற்படும். ஆக மேலே எடுத்துக் காட்டிய ச்ருதியில் அயமாத்மா அவிநாசீ என்பதால் ஆத்மா அழிவில்லாதது என்றும் அநுச்சித்தி தர்மா என்றதால் அழிவில்லாத ஜ்ஞானத்தைக் குணமாகக் கொண்டது என்றும் பொருள் ஏற்படுவதால் தர்மபூதஞானம் நித்யம் என்று நிச்சயிக்கப்படுகிறது. இந்த ச்ருதியையும் மேற்கூறிய யுக்தியையும் அநுசரித்து ஸங்கோச விகாஸங்களைக் கொண்டாலும் தர்ம பூதஜ்ஞானம் நித்யம் என்கிறோம்.

ஜைனர்கள் மேற்கூறிய ச்ருதியையும் யுக்தியையும் கூறமுடியாமையால் ஸங்கோசவிகாஸங்களையுடைய ஆத்மா அநித்யமாகிவிடும். அவர்கள் ச்ருதியை ப்ரமாணமாகக் கொள்ளாமையால் அதை அநுசரித்து ஆத்மா நித்யம் என்று கூறவிரகில்லை. அவிநாசியான வஸ்துவுக்கு ஸ்வாபாவிக தர்மம் ஆத்மா என்கிற யுக்தியை ஏற்காததால் அதை அநுசரித்து நித்யம் என்று கூற விரகில்லை.

விசிஷ்டாத்வைதமதத்தில் தர்மபூத ஜ்ஞானம் நித்யம் என்கிற ச்ருதியையும் மேற்கூறிய யுக்தியையும் தழுவியதால் தர்மபூத ஜ்ஞானம் நித்யம் என்பதில் ஒரு விரோதமுமில்லை. மிக ஸூக்ஷ்மமான இவ்விஷயங்களை நன்கு ஊன்றிக் கவனிக்காமல் தூஷணங்களைத் தொடுப்பதில் என்ன பயன்? அவரவர்கள் கொள்கைகளை நிலைநாட்ட ஓரோர் வழியை ஏற்படுத்தி உள்ளனர். அவ்வழியில் செல்பவர்களால் ஒரு குறையும் காண இயலாது. வழிதப்பினால் எல்லா மதக் கொள்கைகளிலும் பல குற்றங்களைக் காணமுடியும். இதுவே உண்மையான தத்வம். இது நிற்க.

ப்ரக்ருதம் ஸ்ரீரங்கம் பெரிய ஆச்ரமத்தில் ஆண்டவனாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனுடைய ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்திற்கு அங்கமாக வெளியிடும் மலரில் அடியேனுடைய கட்டுரையான புஷ்பத்தையும் கோர்க்க வேண்டும் என்று ஸ்ரீகார்யம் ஸ்ரீஉபயவே. மஹாவித்வான் மாதவாசார்ஸ்வாமி நியமித்ததால் ஏதோ சாஸ்த்ரீய விஷயத்தை அடியேன் அறிந்து கொண்ட ரீதியில் எழுதினேன். ஸ்ரீமத் ஆண்டவன் பெருமையைப் பற்றியும் கூற வேண்டியது அவசியம் ஆகையால் அதைப்பற்றி சிறிது விண்ணப்பித்துக் கொள்கிறன்.

ப்ரக்ருதம் ஆண்டவன் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீமுஷ்ணத்தில் ''வம்சே ஜாத: ஸவிது ரநகேக'' என்கிறபடியே ஜ்ஞான அநுஷ்டானவைராக்ய ஸம்பன்னர்களான மஹான்களின் வம்சத்தில் அவதரித்தவர். சென்னை காகுமானிச் செட்டி பாடசாலையில் என்ட்ரன்ஸ் வரை வாசித்து ஸ்ரீபெரும்புதூர் ஸம்ஸ்க்ருத கலா சாலையில் ந்யாய சிரோமணிக்காகவும் தமிழ் வித்வான் பரீக்ஷைக்காகவும் வாசித்தார். அப்பொழுது அடியேன் வாசித்து முடித்துச் சென்னைக்குச் சென்று விட்டேன். அச்சமயம் அடியேன் தகப்பனார் ஸ்ரீக்ருஷ்ணதாதயார்ய மஹாதேசிகன் ந்யாயசாஸ்த்ர அத்யாபகராக எழுந்தருளியிருந்தார். இப்பொழுது மஹாவித்வான்களாகத் திகழும் பலர் அங்கு வாசிப்பதற்காக வந்திருந்தனர். வடகலை வைஷ்ணவர் ஒருவர் அத்யாபகராக எழுந்தருளி இருந்ததும் வடகலை வித்யார்த்திகள் பலர் அங்கு வாசிப்பதற்காகக் குழுமியிருந்ததும் அந்த ஊருக்கே அபூர்வமாக இருந்தது. அது பொற்காலம் என்றால் மிகையாகாது. ப்ரக்ருதம் ஆண்டவன் சிறுவயதில் சிறந்த புத்திசாலியாகவும் பரோபகார ஸ்வபாவம் உள்ளவராகவும் திகழ்ந்ததைப் பற்றி அடியேன் தகப்பனார் அடியேனிடம் கூறிப் பெருமைப்படுவார். அடியேன் அங்கு இராததால் புத்ரஸ்தானத்தில் இருந்துப் பல காரியங்களைச் செய்ததற்காகவும் இவரிடத்தில் விசேஷ வாத்ஸல்ய முடையவராய்த் திகழ்ந்தார். அந்த சமயம் குருக்கள் ஒருவர் தமிழ்வித்வான் வகுப்பிற்கு அத்யாபகராக இருந்தார். அவர்

வடமொழியிலும் தென் மொழியிலும் சிறந்தவித்வான். அவரும் பல ஸமயங்களில் கூறியது ஞாபகத்திற்கு வருகிறது. இந்த வராஹன் எல்லா வகுப்புகளிலும் பல கேள்விகளைக் கேட்டு என்னை திணற வைக்கிறான் எனக் கூறுவார். அதாவது நல்ல மேதாவி என்பதை மனமகிழ்ந்து அறிவிப்பதற்காகவே மேற்கூறியவாறு அவர் மொழிவார்.

இப்பொழுது ஆச்ரம ஸ்வீகாரமான பிறகு முன்பு ' अनूद्त ' மாக இருந்த சாஸ்த்ரபாண்டித்யம் ' उद्त ' மாவதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஸ்ரீமத் திருக்குடத்தை ஆண்டவனும் உபந்யாஸகர்களுள் சிறந்தவர் என்றே பலரும் நினைத்திருந்தனர். ஆனால் அவர் ஆச்ரமத்திற்கு எழுந்தருளிய பிறகு பாதுகா விஹாரஸபையை ஏற்படுத்தி அதன் மூலமாகத் தனக்கு ' अनूद्त ' மாக இருந்த ந்யாய மீமாம்ஸாதி சாஸ்த்ர பாண்டித்யத்தை ப்ரகாசப்படுத்தினது மட்டுமின்றி சாஸ்த்ரங்களைக் காப்பதற்காகப் பாடசாலையையும் ஆரம்பித்தார். அம்மஹாதேசிகனைப் போலவே இம்மஹாதேசிகனும் சாஸ்த்ர பாண்டித்யத்தையும் ப்ரகாசப்படுத்திக் கொண்டு எல்லோரும் உஜ்ஜீவிக்கும்படி ஸமாச்ரயண பரந்யாஸங்களை அநுஷ்டித்துக் கொண்டு ஆஸேது ஹிமாசலம் நம் ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டிக் கொண்டு பல்லாண்டு காலங்கள் எழுந்தருளி ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்திரத்தில் அவதரித்ததால் ஸ்ரீபாஷ்யகாரரைப் போல் 120 ஆண்டுகள் எழுந்தருளியிருந்து லோகோஜ்ஜீவனம் செய்து கொண்டு திகழும்படி ஸ்ரீ ரங்கநாதன் பேரருளாளன் திருவேங்கடமுடையான் திருநாரணன் முதலிய எல்லா திவ்யதேசத் தெம்பெருமான்களும் ஸங்கல்பித்தருள வேண்டும் என்று ப்ரார்த்தித்து க்ருதார்த்தனாகிறேன்.

सद्बुद्धिः साधुसेवी समुचित चरितः तत्वबोधाभिलाषी
शुश्रूषुः त्यक्तमानः प्रणिपतनपरः प्रश्नकाल प्रतीक्षः ।
शान्तो दान्तोऽनसूयुः शरणमुपगतः शास्त्रविश्वासशाली
शिष्यः प्राप्तः परीक्षां कृतविदभिमतं तत्वतः शिक्षणीयः ॥

நல்ல ஞானமுடையவன், நல்லவர்களை நாடுபவன், ஏற்ற நன்னடத்தையுடையவன். தத்வம் அறிய ஆவல் உள்ளவன், பணிவிடை செய்பவன், அஹங்காரமில்லாதவன், ஸேவிப்பதிலேயே ஊற்றமுடையவன், கேள்வி ஞான காலத்தை எதிர்பார்பவன். மன அமைதியுடையவன், புறபலன்களை அடக்கியவன், அஸூயையில்லாதவன், சரணடைபவன், சாஸ்திரங்களில் நம்பிக்கை உடையவன் ஸச்சிஷ்யன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம :

அர்த்த பஞ்சகம்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் நாவல்பாக்கம் வரதாசாரியர் ஸ்வாமி)

கன்றிக்கிரங்கிச் சுரக்கும் கறவைகள் போன்ற நம் ஆரணதேசிகர்கள் உபநிஷதமாகிய அமுதக்கடலைக் கடைந்து அதன் அமுதஸாரமாக அர்த்த பஞ்சகத்தை (ஐவகை அர்த்தங்களை) உலகம் உய்வு பெற வழங்கியுள்ளனர்.

அர்த்த பஞ்சகமாவது:

(1) பரமனின் ஸ்வரூபம் (2) ஜீவாத்மஸ்வரூபம், (3) பேரின்பமாகிய பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமாகிய மோக்ஷத்திற்கு ஸாதனம். (காரணம்) (4) மோக்ஷஸ்வரூபம், (5) மோக்ஷவிரோதி என்பன.

வைணவர்கள் உய்வுதரும் இவ்வர்தங்களை எப்போதும் மனத்தில் தரிக்க வேண்டும் என்று கருதிய நம்மறைமுடிதேசிகனார் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் இவற்றை பாங்குறப் பகர்ந்துள்ளார். அவையிங்கு சுருக்கமாக வரையப்படுகின்றன.

(1) பரமனின் ஸ்வரூபம் அறியும் வகை :

ப்ரஹ்மா, சிவன் முதலிய தேவர்களுக்கும் காரணபூதனாய் திருமகள் கேள்வநாயுள்ள நாராயணனே பரமன் என்று ஸர்வவேத ஸாரமான புருஷஸூக்தம் இயம்புவதால் அவனன்றி மற்றோர் தெய்வமில்லை என்று முதற்கண் அறிதல் வேண்டும்.

பின்பு அப்பரமனை (1) லக்ஷ்மீ ஸமேதனாய் (திருமகளோடு கூடியவனாய்) (2) அமலனாய் (3) அனந்த கல்யாணகுணக்கடலாய் (4) அப்ராக்ருத திவ்யமங்கள சரீரமுடையவனாய், (5) உபயவிபூதிநாயகனாய், (6) ஜகத்வ்யாபாரலீலனாய் ஆகிய ஆறுவகையுடையனாயறிதல் வேண்டும்.

(1) லக்ஷ்மீ ஸமேதனாயறிதலாவது-

எல்லாவகையாலும், எல்லாநிலையிலும் ஸஹதர்மசாரிணியாய் நின்ற பெரிய பிராட்டியாரோடு பிரிவில்லாதவனாக அறிதல் என்பதாம் என ரஹஸ்யத்ரயஸாரம் பகர்கின்றது.

அதன் விளக்கம் : பரமன் உலகைப் படைக்க எண்ணும் போது பிராட்டியார் தானும் அவ்வாறே எண்ணுபவராய் மோக்ஷ ரக்ஷணதீக்ஷிதனாக இருக்கும் போது தானும் மோக்ஷரக்ஷணதீக்ஷிதையாய், பரரூபத்தோடு அவதார ரூபத்தோடும் அமர்ந்து, அவதரித்து ஸாதுபரித்ராணம் தர்மஸம்ஸ்தாபனம் பண்ணுபவராய், பரமன் போலே ஈச்வர தத்வமாய், விச்வத்தையும் தனக்கு உடலாய்க் கொண்டு ஸஹதர்மசாரிணியான திருமகளுடன் கூடியவனாக அறிதலாகும் என்று ஸ்ரீஸாராஸ்வாதிநீ விளக்கம் தருகிறது.

இவற்றின் பயன் : தாய்மைக்குரிய வாத்ஸல்யாதிசயம் ஈச்வரனாந்தன்மை - இவை தோற்றநிற்கும் பிராட்டியாரோடு பிரில்லாதவளுக நமது நினைவு, அபராதங்களைத் தொடர்ந்து புரிந்து வரும் சேதநர் பக்கல் தண்டதரனான ஸர்வேச்வரன் நம்மால் அணுகமுடியாதவன் - என்ற எண்ணத்தை அகற்றி ஸர்வேச்வரியான படியால் வால்லப்யாதிசயத்தால் பரமனுக்கு ந கச்சித் நாபராத்யதி (குற்றமற்றவர் உலகில் யாருமில்லை) என்ற உணர்வை உண்டாக்கி குற்றவாளியை ஏற்பது தன் பெருமைக்கு ஏற்றது என்று எண்ணும் படி திருத்தி பரமனை அணுகும்படிச் செய்யும்.

(2) **அமலனாக அறிதலாவது** :

அஜ்ஞானம் முதலிய ஐவகை க்லேசங்கள், புண்யபாபங்களாகிய கர்மங்கள் அதனால் பிறவி, சுகதுக்கங்கள் ஆகிய விபாகங்கள் துர்வாசனை முதலிய ஆசயங்கள் இவையற்றவனாகப் பரமனை நினைத்தல் இளவம்மலங்கள் என்றும் ஹேயகுணங்கள் என்றும் வழங்கப்படும்.

இதன் பயன்: ப்ரஹ்மஸ்வருபத்தில் இந்த ஹேயம் கலசியிருந்தால், ப்ரஹ்மமும் அதன் குணங்களும் போக்யமாகாதொழியும். மோக்ஷமாகிய பேரின்ப நிலை கூடாதொழியும். ஆகையால் பரமனை அமலனாதிபிரானாக நினைத்தல் வேண்டும்.

(3) **அனந்த கல்யான குணக்கடலாயறிதலும், பயனும்**

பரமனின் அனந்த கல்யாண குணங்களையும் தனித்தனியாக அறிதல் என்பது அஸர்வஜ்ஞர்களான நமக்கு சக்யமன்று என எண்ணிய மகரிஷிகள் முக்யமாக நாம் அறிய வேண்டிய பரமனின் குணங்களை, தேஜஸ், பலம், ஐச்வர்ய, மஹாவபோதம், வீர்யம், சக்தி ஆகிய ஆறுகுணங்களில் அனந்த குணங்களும் அடங்கியுள்ளன. அவற்றை அனுஸந்தித்தாலே அனந்த குணங்களை அனுஸந்தித்தபடியென்றார்கள். பரமனுடைய வயிற்றில் ஒரு மூலையில் அனந்த கோடி ப்ரஹ்மாண்டங்களும் அடங்கியுள்ளன போல் அனந்த குணங்களும் இவ்வறு குணங்களில் அடங்கியுள்ளன என்பதாக இதிஹாஸ புராணங்கள் இயம்புகின்றன. மேலும் அனந்த குணங்களைக் கூறும் ப்ரமாணங்களுக்கும் ஸ்ரீமந் நாராயணனே உபாயம். அவனே உபேயம் என்பதை வரையறுப்தே நோக்கானபடியால் அவற்றிற்கு உறுப்பான குணங்களை அனுஸந்திப்பதே தற்போது போதுமானது என்கின்றன.

அவையாவன.

(1) மோக்ஷப்ரதானமாகிய உபாயத்திற்குறுப்பான குணங்கள் தயை, க்ஷமை (பொறுமை) ஔதார்யம், வாத்ஸல்யம் முதலியன.

(2) உபேயத்வத்திற்கு உறுப்பான குணங்கள் - சேஷித்வம் நிரதிசய ஆனந்தம், மாதுர்யம் (இனிமை) வண்மை, காம்பீர்யம் முதலியன.

(3) இவ்விருவகைக்குமுறுப்பான குணங்கள் - ஜ்ஞானம், பலம், ஐச்வர்யம் முதலியன.

(4) அப்ராக்ருத திவ்ய சரீரமுடையவனாயறிதலும் பயனும் -

ப்ரேமபந்நீவாஹமாகப் பரமனுக்குத் தொண்டு செய்தல் புருஷார்த்த காஷ்ட்டை **नतेरूपं न चाकारः ..... भकानां त्वं पृकाशसे** என்ற ஜிதந்தே ஸ்தோத்ரம் - பரமனின் திவ்யசரீரம் கைங்கர்ய (தொண்டுபுரிதல்) போதத்திற்காகவே உள்ளது என்கிறது.

பரமனுக்கு திவ்யசரீரம் இல்லையென்றால் கைங்கர்ய போகம் கூடாதொழியும். அதனை விலக்கவும், **नित्यसिद्ध - सन्निधिं व्रजेत्** என்ற வசனம் திவ்யரூபத்தை த்யானம் செய்பவனுக்கே பரமன் ஸுலபனாகிறான் என்று கூறுவதாலும் திவ்யரூப முடையவனாய் பரமனையறிதல் வேண்டும்.

(5) உபயவிபூதி நாயகனாயறிதல் :

போக்யனான பரமபுருஷனின் கைங்கர்யம் கொள்ளுகைக்கு போக்யம், போகோபகரணம், போகஸ்த்தானம், லீலோபகரணம் இவையும் வேண்டும் அன்றேல் போகயதாதிசயம் (பேரின்பத்தின் அளப்பரிய பெருமை) கூடாதொழியும். அவ்விருவகை விபூதிகளும் பரிமிதங்களாகில் கைங்கர்ய போகமும் பரிமித மாகிவிடும். அதனால் அபரிமித உபயவிபூதி நாயகனாக அறிந்து வர்த்திக்தல் வேண்டும்.

(6) **ஜகத்வ்யாபார லீலனாயறிதல் :**

உலகைப்படைத்தல், காத்தல், அழித்தல் - ஆகிய இன்புறும் விளையாட்டுடையான். திருமகளோடு கூடிய நாராயணனே என்று வேதம் இயம்புகிறது. ஆகையால் உபாயதசையிலும், உபேயதசையிலும் வாசியற திவ்ய தம்பதிகள் இருவருமே உத்தேச்யம். பிராட்டியை மட்டும் தெய்வமாக கொள்ளும் மதம் இராவணமதமாகும். பிராட்டியை விட்டு பெருமாளை மட்டும் தெய்வமாக ஏற்கும் மதம் சூர்ப்பணகை மதமாகும்.

भ्रातुः चरणौगाढं ..... सीतामुवाचातियशाः राघवं च महाव्रतम् என்று இயம்பும் இளைய பெருமாள் போல் மகாரஸ்து தயோ: தாஸ: என்றபடி திவ்ய தம்பதிகளே உபாயமாகக் கொண்டு தொண்டு செய்தலே இளைய பெருமானின் அவதாரமான பகவத் ராமானுஜ மதம் என்பதை ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ஸ்துதியில் அருளிய படியால் ஸத் ஸம்ப்ரதாய நிஷ்டர் இவ்வாறே அனுஸந்திக்கக் கடவர். ப்ரஹ்மமாகிய பரம் பொருளை எவ்வாறு அறிதல் வேண்டும் - என்பதை அறிந்தோம்.

ஜீவாத்மஸ்வரூபம் -

ஜீவாத்மா, பத்தர், முக்தர், நித்யர் - என மூவகையாவர். மோக்ஷம் வேண்டும் என்று நினைக்கும் பத்த சேதனரான நாம் இந்த மூவருக்கும் பொதுவான ரூபத்தையும் நமக்கு தற்போது உள்ள அஸாதாரண ரூபத்தையும் அறிதல் வேண்டும்.

மூவருக்கும் பொதுவான ரூபமாவது -

அணுவாயிருத்தல், ஜ்ஞானம், ஆனந்தம், அமலத்வம், சேஷத்வம் பாரதந்த்ர்யம் - முதலியன. இந்த ஸாதாரண ரூபத்தை சிந்திப்பது எதற்காக என்பதற்கு விடை தருகிறோம். நித்யாவிர்பூத ஸ்வரூபர்களான நித்யர்களின் கைங்கர்ய யோக்யனான அப்பரமனை அடையும் தகுதிதான் இழிநிலையிலுள்ள ஸம்ஸாரி சேதனர்க்குக் கூடுமோ என்று அஞ்சி அகலாமைக்காக என்று.

அவ்வகலாமைக்கு உறுப்பாவது எங்ஙனம் என்பதைப் பார்ப்போம். தன்னிடமுள்ள ஞானானந்தாமலத்வாதி அனுஸந்தானத்தால் ஸம்ஸாரி சேதனனும் ஸ்வரூபத்தில் நித்யர்களோடுவாசியற இயற்கையில் ஹேயஸம்பந்தமற்றவன். ஆகையால் நித்யர்கள் போலே பகவத் ப்ராப்திக்குத் தகைமை பெற்றவன் இரத்னத்திற்கு வந்தேறிய அழுக்குபோல் வினையினால் வந்தேறியது ஹேயஸம்பந்தம் என்ற மெய்யறிவைத்தந்து அஸ்த்தான கலக்கத்தை விலக்குகிறது. சேஷத்வம் பாரதந்த்ர்யம் - என்ற உணர்வு நாம் அவனது உடைமை அவனுக்குத் தாஸபூதன் - என்ற அறிவாகும் இது உடையவன் உடைமையை ரக்ஷிக்கப்ராப்தன் என்ற உணர்வைத் தருவதால் அகலாமைக்கு நேராக உறுப்பாகின்றன.

(1) **அணுத்வம் :**

தனது ஸ்வரூபத்தைத் தார்க்கிகர்கள் போல் விபுவாக எண்ணினால் விபுவான பரமன் போல் தானும் ஸ்வதந்த்ரன் என்ற மயக்கம் ஏற்படும். தன்னை அணுவாகப் பார்த்தல் என்பது முன்பு விபுத்வ உணர்வால் வந்த மயக்கத்தை நீக்கி பாரதந்த்ர்ய உணர்வை வளர்த்து சேஷவ்ருத்திக்கு உறுப்பாயிருக்கும்.

மலைவழி திருமாலையும் ஸ்ரீபாஞ்சாலியும்திருத்தேரில்

(2) **இப்போதைய ரூபம்**

ஸாம்ஸாரிகமான ஜ்ஞாத்ருத்வம் போக்த்ருத்வம் முதலிய தற்போதைய ரூபம் அநாதி கர்ம வாஸனையடியாலே வந்தது. ப்ரக்ருதி சம்பந்தமும் (சரீரசம்பந்தமும்) சிற்றின்பம் எனப்படும் ஜுகுப்ஸித ஸுகமும், வழிதப்பிய ராஜகுமாரனுக்கு சபா ஸம்பந்தமும், அவர்களுடையக்ராம்யசுகமும் போல் வந்தேறியது. ராஜகுமார போகம் போல் பரமபுருஷார்த்தமே இயல்பானது. இப்போதைய இந்த ரூபத்தையிவ்வாறு அறிந்தால் இதில் வைராக்யமும், பரமபுருஷார்த்தத்தைப் பெறுவதில் த்வரையும் (விரைவும்) பிறக்கும். அதற்காக இந்த நிலையை அறிதல் வேண்டும்.

(3) **ப்ராப்த்யுபாயமறிதல்** *:*

இப்படி பரமபுருஷார்த்தம் பெறுவதில் த்வராதிசயம் பெற்றவன் ப்ரபத்திக்கல்லது சரண்யன் மோக்ஷம் கொடானாகையால் ப்ரபத்தியே அவ்வுபாயமென்று சாஸ்த்ரம் விதிக்கிறது. அஃது ஸாத்யபக்தி, ஸாதனபக்தி என இருவகைப்படும்.

(4) **பயனறிதல் :-**

உபயவிபூதி நாயகனாக பரமனே புருஷார்த்த காஷ்ட்டை என்று முன் கூறியபடியறிவதால் அபரிமித கைங்கர்ய போகத்தில் த்ருஷ்ணை பிறக்கும்.

(5) **ப்ராப்தி விரோதியையறிதல்** *:*

பரமபுருஷார்த்தத்தைப் பெற பெருந்தடையாக இருப்பன அநாதிகர்ம ப்ரவாஹங்கள். இவை ப்ராப்தி விரோதியெனப்படும். அவித்யை எனப்படுமிவை பரமாத்மோபாஸகரையும் ஆத்மாவலோகன யோகமெனப்படும் ஆச்சர்யபூதமான ஆத்மஸ்வரூபானுபவத்தில் மக்னராக்கியும், அஷ்டை ச்வர்யமாகிய அணிமா முதலிய ஸித்தியில் மயக்கியும் அபிஷேகத்திற்கு நாளிட்ட ராஜகுமாரன், சேடிமார் பக்கலில் கண்ணோட்டம் செலுத்துமாப் போலே விஷய ப்ரவணராக்கியும், தீமையை விளைவிக்குமாற்றல் பெற்றவை என்பதை அறிதல் வேண்டும். பரமனை வசீகரிக்கக்கூடிய சரணாகதியொன்றே அவ்வல் வினையை விலக்கும் உபாயம் என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச் செய்தார். இவையே அர்த்த பஞ்சகங்களாம்.

இங்கு ஓர் ஆக்ஷேபம்: பரமன் நிரபேக்ஷோபாயன் அதாவது– ஸஹகாரியை வேண்டாதே பிறரை ரக்ஷிப்பதில் ஸமர்த்தன் – என்று சாஸ்த்ரம் இயம்புகிறது. பக்தி ப்ரபத்தியென்பதைத் துணை கொண்டு ரக்ஷிக்கப்புகுந்தால் நிரபேக்ஷோபாயன் – என்ற நிலை போம். பரமன் நிரபேக்ஷோபாயன் என்பதையிசைந்தால் ஸாத்யோபாயம் ஸாபாயமாகும். இந்த முரண்பாட்டை எங்ஙனம் தவிர்ப்பது என்று இதற்கு உத்தரமாக அவதரித்துள்ள ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தியின் கருத்தைச் சுருக்கி விடைதருகிறோம்: **உடன் மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்** பரமன் ஆகையால் ஸர்வவஸ்து ஸத்தை

(பொருளுண்மை)யும் பகவத்ஸங்கல்பாதீனமாகிறது. அதற்கேற்ப ப்ரபத்தி முதலிய உபாயத்தின் ஸத்தைதானும் பரமாத்மாதீனமாயிருக்கும் போது **स्वरक्षणेप्यशक्तस्य कोहेतुः पररक्षणे**- என்ற நியாயப்படி ப்ரபத்திதானும் ஸ்வயமாகப் பரரக்ஷண ஸமர்த்தமாகாது.

பரமன் ஸர்வநியந்தாவாகையாலே ஸாத்யோபாயத்தை அபேக்ஷிக்காமலே ரக்ஷணஸமர்த்தனாகி நிரபேக்ஷோ பாயனாகிறான். பரமபதத்தில் நித்யர்களை நித்யாவிர்ப்பூத ஸ்வரூபர்களாக வைத்து, அவர்களிடமிருந்து ஸாத்யோபாயத்தை அபேக்ஷிக்காமலே ரக்ஷணம் பண்ணுவதால் நீரபேக்ஷோபாயத்வம் பரமனுக்கு இசைந்தேயாக வேண்டும். ஆயினும் கர்மவச்யரை ரக்ஷிக்கும் போது ஓர் உபாயத்திலே மூட்டி ரக்ஷித்தல் என்பது பரமன் தானாகவே தனது ஸங்கற்பத்தாலே அமைத்துக் கொண்டவரையறை. தன்னிடம் வைஷம்யம், நைர்க்ருண்யம் ஆகிய தோஷங்கள் வாராமைக்காக. இருவகை ப்ரபத்திகும் ரக்ஷணஸாமர்த்யத்தை தான் அளித்து அதனை ஸஹகாரியாக்கி ரக்ஷிக்கிறான் என்பது உண்மைநிலை. ஆகையால் முறண்பாடில்லை.

பரமனை நமக்கெல்லாம் ஸ்வாமியாகப் பார்க்கும் போது அவன் நம்மை ரக்ஷிப்பதில் ஸ்வத: ப்ராப்தன் (இயல்பானதே) யன்றோ. நம்மைக்காப்பது (மோக்ஷமளித்தல்) அவனுக்கு தன்பேறாக இருப்பதால் நம்மையொருபோதும் கைவிடான் அச்யுதன் என்பதை உணர்கிறோம்.

முடிவுரை : ஆசார்யஸார்வபௌமன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் அருளிச் செய்துள்ள அர்த்தபஞ்சகத்தை ஸ்ரீஸாராஸ்வாதீநீ விவரித்ததையடியொற்றி வரைந்துள்ளபடி.

ஸ்ரீபெரியாண்டவன் பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் பரம்பரையில் அவதரித்த யதிவரர் ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவனின் அனுக்ரஹ பாத்ரரான ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன் ஷஷ்ட்யப்த பூர்த்தி திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தின் அங்கமாக வெளிவரும் மலரில் அர்த்த பஞ்சகம் என்ற தலைப்பில் வ்யாஸம் எழுதித்தரும்படி உபயவேதாந்த ப்ரவீண ஸ்ரீகார்யம் மாதவாசார் ஸ்வாமி அடியேனைப் பணித்துள்ளபடியால் இதனை வரைந்துள்ளேன். இதனால் முக்கரணங்களுக்கும் பரிசுத்தி பெற்றேன். இந்த க்ருதஜ்ஞதையை அறிவித்துக் கொண்டு ஸதாசார்யர்களின் திருவடிகளில் அனந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிக தர்சனம்

(ஸ்ரீமதுபயவே வித்வான் அன்னதூர் வரதாசாரியர் ஸ்வாமி)

वेदान् युगान्ते तमसा तिरस्कृतान् रसातलाद्योनु तुरङ्गविग्रहः
प्रत्याददे वै कवये ऽभियाचते तस्मै नमस्तेऽवितथेहिताय च ॥
जीवनं जगतां जीयात् किमप्यपगतस्पृहम् ।
स्वतन्त्रं सर्वतन्त्रेषु वेङ्कटेशाह्वयं महः ॥

ப்ரபஞ்சம் உண்டாவதற்குக் காரணம் என்ன? ஆத்மாக்கள் சுகமடைவதற்கு வழி. ஏதாகும் என்கிற விசாரத்தை செய்யும் கிரந்தங்களுக்கு தர்சனமெனப் பெயராம், வெளிப்படையாக சரீரத்தை மட்டும் நாம்கண்டாலும் அதை வாழவைக்கக்கூடிய ஆத்மா வேறு உண்டு என்று எல்லா தார்சனிகர்களும் (சார்வாகர்நீங்கலாக) இசைந்துள்ளார்கள், தார்க்கிகர்கள் ஸாங்கியர் முதலானவர்கள் அனுமானத்தை முக்கியமாக்கி அதன்மூலம் ஆத்ம விசாரம் செய்துள்ளார்கள். ஆனால் அனுமானம் என்பது முக்யமான வேதப்ரமாணத்தோடு முரண்படுவதினால் அதைத் தவிர்த்து வைதிக தர்சனத்தையே முன்னோர்கள் பின்பற்றினர்.

தர்சனம் எனும் சொல் ஆத்மா,அதற்கு வேண்டிய ஸ்வர்க்க மோக்ஷாதி பலன்கள், அதற்கு வழிகள் இவைகளை காண்பிக்கூடிய க்ரந்தங்களைக் குறிப்பதாம் என்றூர்கள் குமாரில பட்டர் கந்தளீகாரர்கள் முதலான சாஸ்த்திரகாரர்கள். தர்சனங்களில் மிகவும் முக்கியமானது 'மீமாம்ஸா' தர்சனம். வேதார்த்தங்களை விசாரிக்க கூடியதர்சனம் அத ஒன்று தான், அதிலும் உத்தர மீமாம்ஸா எனப்படும் ஸாரீரகம் மோக்ஷத்தில் ருசியுடையவர்களால் மிகவும் உயர்ந்ததாகக் கொள்ளப்பட்டதாகும்.

அதற்கு, த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்கிறபடி பல அர்த்தங்கள் புத்திமான்களின் மனதில் தோன்றிய பொழுது விசிஷ்டாத்வைதமென்ற முக்கியமான அர்த்தம் மறையும்படி நிலை ஏற்பட்டது. நம் சித்தாந்தத்தில் பெரியோர்கள் தர்சன ஸ்தாபகர்களான 'ஆழ்வார், எம்பெருமானார்' என்று அனுசந்திக்கிறார்கள். அதனால் ஆழ்வார், நாதமுனி, ஆளவந்தார் எம்பெருமானார் எனப்படுவர் தர்சன ஸ்தாபகர்கள் என்றதாகும். இதற்குக்காரணம் வேதாந்த சாஸ்த்திரத்தின் எல்லாப் பொருள்களையும் முதல் மூன்று திருவாய்மொழிகளில்

விவரித்த, வண்சடகோபனும் மற்ற மதங்களில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டி விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை (தர்சனத்தை) நிலை நாட்டடியவர்களாக, நாதமுனி , ஆளவந்தார், எம்பெருமானார் என்கிற மற்ற மூவரும் என்பதேயாம். ஆகிலும் நம் தர்சனத்தை, எம்பெருமானார்தர்சனமென்றே உலகில் வழங்குகின்றோம். இதற்கு காரணம் ஸ்ரீ வியாஸ பகவான் அருளிச் செய்த ப்ரம்ம சூத்ரங்களுக்கு மிகவும் அழகான பாஷ்யம் அருளிச் செய்து ஸ்வாமி எம்பெருமானார் தர்சனத்வத்தை விஷ்டாத்வைதத்திற்கு ஸ்தாபித்ததாகும்.

அம்மாதிரியே எம்பெருமானார் காட்டியருளிய பொருள்களை மிகவும் தெளிவாக, ஸ்ரீ தேசிகன் ப்ரௌடமான க்ரந்தங்களை (ஸர்வார்த்த ஸித்தி ஸததூஷணீ முதலிய) அதற்கு உபகாரகமாக ந்யாய சாஸ்திரம் பூர்வ (மீமாம்ஸா தர்சனம்) இவ்விரண்டு தர்சனங்கள் காண்பித்து தெளிவித்தும், நம்மி ராமானுசன் பாஷ்யாதிகளில் காண்பித்த வழியைக் கொண்டு சம்பூர்ணமான உரையிட்டு மடைப்பள்ளியாச்சான், நஞ்சீயருக்கு உபதேசித்த விசேஷார்த்தங்களையும், கத்யத்திலும் நித்யத்திலும் ஸ்ரீ பாஷ்யகாரர் காண்பித்தருளிய விஷயங்களை, சதுச்லோகி பாஷ்யம் நிக்ஷேபரபேக்ஷை, சங்கசக்ரதாரண, ஊர்த்தவபபுண்ட்ர, பகவதாராதன விஷயங்கள் இவற்றை இயற்றி நம் தர்சனத்திற்கு பூர்ணஸௌஷ்டவம் காண்பித்தருளியபடியால் இந்த தர்சனத்தை 'தேசிக தர்சனம்' என்று அழைக்க தடையேது என்று கொள்ளலாம்.

ஸ்வாமி தேசிகன், தனது உத்தமக்ரந்தங்களால் ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளத்திற்கும் ப்ராமண, ப்ரமேய நிஷ்கர்ஷத்தை பாஷ்யகாரருடைய ஸ்ரீ சூக்திகளாலேயே வெளிப்படுத்தியிராதிருந்தால் தத்வ, ஹிதங்களில் ஒரு சரியான நிர்ணயம் இராமல் பல முகமாய் போய் விட்டிருக்கக் கூடும். இப்படி ஸ்ரீ தேசிகன், ப்ரதிஷ்டாபித வேதாந்தராயும், ப்ரதிக்ஷிப்த பகிர்மதராயும் இருக்க எம்பெருமானும் 'வேதாந்தாசாரியன்' எனும் அன்வர்த்தமான பிருதை இவர்க்கருளினான். ஆகையால் இதை தேசிக தர்சனம் என அழைக்க ஸ்ரீ சரண்யனுக்கு உகப்பாம் அதனால் 'எம்பெருமானார் தர்சனம்' என்றழைப்பதை உபேக்ஷிக்கத்தகாது.

ஸ்ரீ தேசிகன் ந்யாய பரிசுத்தி எனும் ப்ரௌடமான க்ரந்தத்தில் ந்யாயதர்சன ப்ரவர்த்தகரான கௌதம மஹர்ஷியின் சூத்ரங்களில் விசாரித்து அதில் ஸ்வீகாரபக்ஷம், பஹிஷ்காரபக்ஷம் என்பதையும் விவரித்து, நம் சித்தாந்தங்களையும் ஏற்கும் வகையில் சில ஸூத்ர வாக்கியங்களையும் அனுக்ரஹித்து தர்சனத்தை நிலைநாட்டுகிறபடியாலும் 'தேசிக தர்சனம்' என்பது மறுக்கமுடியாததாகும். இவ்வாறே ஸேச்வரமீமாம்ஸா எனும் உத்தமமான க்ரந்தத்தில் ஜைமினி மஹர்ஷி அருளிய பூர்வமீமாம்ஸா ஸூத்ரங்களுக்கும் உண்மையான பொருளை உணர்த்தி தர்சனத்வத்தை நிலைநாட்டுகிறபடியால் 'தேசிக தர்சனம்' எனும் பெயரே எல்லா விதத்திலும் ஏற்றதாகும்.

தவறாகும். அம்மாதிரி ஜீவன் செய்யக்கூடிய வ்யாஜத்தாய், காப்பாற்றுவான் என்றால் கிருபைக்குத்தான் என்ன உபயோகம்? ஜீவன் செய்யும் ப்ரபத்தியை எதிர்பார்த்து எம்பெருமான் பலன் கொடுப்பதானால், இயற்கையான காருண்யம் ஸ்வாபாவிக காருண்யம் இல்லை என்றேயாகுமல்லவா?

இங்கு ஒரு சந்தேகம், இவ்வளவு நாட்கள் அவன் காப்பாற்றாமல் இருந்ததற்கு காரணம் என்ன என்று. அதற்குக் காரணம், கருணையுள்ளவனாகயிருப்பினும் (இயற்கையிலேயே) அவன் தடையில்லாத ஸ்வதந்த்ரரானபடியால் தனக்கு இஷ்டமான சமயத்தில் அவன் ரக்ஷிப்பான் என்பதாம். (பிறர் கூறும் சமாதானம்) இதற்கு சமாதானம் ஸ்வாமி தேசிகன் சம்மதமானது. பகவானுடைய இயற்கையான கருணையே மோக்ஷகாரணம்முக்கியமாக ப்ரபத்தி அல்லது பக்தியாகும் என்பதை மறுக்க முடியாது. ஏன் இவ்விதம் இசைய வேண்டும் என்னில்? இவ்வளவு நாட்களாக சம்சார பயன்களையே கொடுத்து வரும் பரமனுக்கு மேலும் கூட நாம் செய்துள்ள தர்மங்களுக்கு ஈடாக சுகதுக்கங்களையே (சம்சார பலன்களையே) கொடுக்கும்படி நிலை ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, நம் பாபங்களை (கர்மாக்களை) அழியச் செய்ய, ஸாத்யோபாய பக்திப் ப்ரபத்தி இவற்றை செய்ய வேவேண்டுமென்று சாஸ்திரம் இதை உறுதி சொல்கின்றது, சாஸ்திரம் என்பது பரமனுடைய அபிப்ராயமேயல்லவா. பகவானுடைய கருணையே அவன் கோபத்தைத் தீர்க்கலாமென்று நினைப்பது தவறு, சுதந்திரனான பகவானுடைய கருணையே போதுமென்றால் சிலரை மட்டும் காப்பாற்றுவது சிலரை கைவிடுவது என்பதற்குக் காரணம் என் என்னில், பதில்சொல்ல இயலாதபடியாகி பகவானுக்கு பக்ஷபாதம், தயை இன்மை என்ற தோஷங்கள் பரிகரிக்க முடியாது. ஆகையால் நாம் செய்யும் வியாஜத்தை அபேக்ஷித்துத் தான் பரமன் மோக்ஷமளிப்பான்.

இங்கு அவர்கள் கேள்வி-காருண்யம் என்ற குணம் பகவானுக்கு ஒழியுமல்லவா என்று சமாதானம் - அனேக காலங்கள் செய்யப்பட்டதாக கர்மாக்களின் பலன், வெகுகாலம் அனுபவிக்கும்படியானதும் என ஸாம்ஸாரிகமான பலன்களையெல்லாம் அல்ப காலத்தில் செய்யும்படியான ப்ரபத்தியாலே க்ஷமித்து மோக்ஷமளிக்கிறான் பகவான் என்பது கருணையின் மகிமையையே காட்டுமதனால் தோஷமில்லை. ஆகையால் பகவத் கருணை என்பது மோக்ஷத்திற்கு முக்கிய காரணமாயினும் அதற்கு உறுதுணையாக, நாம் செய்யும் வியாஜம் (பக்தி அல்லது ப்ரபத்தி அவசியம் தேவையாம்).

ஆழ்வார்கள் ப்ரபந்தங்களிலும் பகவானுடைய கருணையே மோக்ஷ காரணம் என்கிற இடங்களிலும் எம்பெருமானுடைய பரமக்ருபையே ஜீவன்களையும் சாத்யோபாயமான ப்ரபத்யாதிகளில் முயற்சிக்கும்படி செய்வித்து அதனால் பாபங்களை நீக்கி மோக்ஷத்திற்குக் காரணமாம் என்று பகவத் விஷயத்தில் பெரியோர்கள் பிள்ளான் நம்பிள்ளை முதலியோர்கள் காட்டிய நன்னெறி. இதனுடைய விவரம் ரஹஸ்யத்ரய சாரம் முதலிய ஸ்வாமி ஸ்ரீ கோசங்களில் காணலாம்.

ஸித்தாந்த ஸாரம்

पत्युस्सतां निगममौलिगुरोः पदाब्जे
नत्वा तदंघ्रिमकुटीयुगलानुबन्धान् ।
मान्यानपि श्रुतिधनान् प्रणिपत्य मूर्ध्ना
सिद्.ान्तसारमनवद्यमुदाहरामः ।।

ஆழ்வார், எம்பெருமானார் காட்டிய நன்நெறியில், மற்றவர்கள் சில இடையூறுகளை உண்டு பண்ணி அம்மார்கத்தை மாற்ற முற்பட ஸ்வாமி தேசிகன் அத்தடைகளை நீக்கி நம் தர்சனத்தை சகல ப்ரமாணங்களுக்கும் அனுகூலமாக தழைத்து ஓங்கும்படி செய்தருளினார். அதன் விவரத்தை சுருக்கமாக அனுஸந்திப்போமாக, .

भेदः स्वामिकृपाफलान्यगतिषु श्रीव्याप्त्युपायात्ययः
श्रीवात्सल्यदयानिरुक्तिवचसोः व्यासे च तत्कर्तरि ।
धर्मत्यागविरोधयोः स्वविहितेन्क्षासाङ्गहेतुत्वयोः
प्रायश्चित्तविधौ तदीयभजनेऽणुव्याप्तिकैवल्ययोः।।

என்று முன்னோர்கள் 18, முரண்பாடுகளை பிறர் (ஏகதேசிகள்) கூற அவைகளை பரிகரித்து ஸ்வாமி, தூப்புல் நிகமாந்தாசாரியன் எம்பெருமானார் காட்டியதொருவழியை துணிவார்களுக்கு நல்வழியாக நிலைநாட்டியருளினார், யதீந்திராம்சமான ஸ்வாமி தேசிகன் காண்பித்தருளிய 'தேசிகதர்சனம்' எம்பெருமானார் காட்டியருளிய தர்சனமேயாம்.

பகவத் க்ருபாயாம் பேத:

ஸ்ரீ பதியான பகவானுடைய கிருபை மோக்ஷத்திற்கு காரணம் என்பதில் யாருக்கும் ஐயமில்லை, ஆனால் அது நிர்ஹேதுகம் (வியாஜத்தை காரணமாகக் கொள்ளாதது என்கிறார்கள் சிலர் ஏகதேசிந: அவர்கள் கூறுவர், பகவான் இயற்கையிலேயே தடையில்லாத கருணையுள்ளவனானபடி என்பது எல்லோருக்கும் சம்மதமே. கருணை என்பது தன்னலத்தைக் கருதாமல் பிறருடைய கஷ்டங்களை நீக்க முற்படுகையாக, ஆகையால் பரமகிருபையுள்ள பகவான் கஷ்டத்தில் ஆழ்ந்து தவிக்கின்ற ஜீவன்களை ரக்ஷிக்கும் பொழுது ஜீவர்களிடமிருந்து ஒரு உபாயத்தை (பக்தி அல்லது ப்ரபத்தி) எதிர்பார்க்கின்றான் என்று சொல்வது

பகவான் ஸர்வஸ்வாமியல்லவா? ஸ்வாமி என்றால் சொத்துக்கு உரியவன் என்றல்லவோ தேறும். எப்படி தன் பணம் நிலம் முதலியவைகளை ஒரு வியாஜத்தையும் எதிர்ப்பார்க்காமல் காப்பாற்றுகிறார்கள் அதற்குரியவர்கள், அவ்வாறே பகவானும் நம் ரக்ஷணத்திலும் வியாஜாபேக்ஷையுள்ளவனல்ல என்றன்றோதேறும், என்று ஆக்ஷேபம் பிறர் செய்ய அதற்கு பரிகாரம் அசேதனமான பணம் நிலம் இவைகள் அபேக்ஷை உள்ளதல்ல சேதனமான ஜீவன் ரக்ஷணம் அவன் அபேக்ஷை மூலமாகவே ஆக வேணும். இல்லாவிடில் மோக்ஷம் புருஷார்த்தமாகாது. புருஷன் அர்த்திக்கக் (அபேக்ஷிக்க) கொடுத்தால் தான் புருஷார்த்தமாம். உலகினும் புத்திரனுக்கு தகப்பனான அவனும் பட்டாபிக்ஷேகம் செய்தாலும் அவன் செய்யக்கூடிய பித்ரனுவர்தனம் பித்ருபக்தி முக்கியமான காரணமாம்.

மேலும் ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தமாத்ரேண சொத்து சொத்துக்குரியவன் என்பதை மட்டும் காப்பாற்றுவது என்பதனால் பசு முதலியவை துஷ்டஸ்வ பாவமுள்ளவையாயிரப்பினும் அவற்றை உலகில் அதற்கு உரியவர் காப்பது மாதிரி துஷ்டர்களுக்கும் பகவான் மோக்ஷம் கொடுக்கும்படி நேரும். ஆகையால் பகவான் பக்தர்களாகவோ, அவனை சரணமடைந்தவர்களாகவோ இருப்பவர்களைத் தான் காப்பாற்றுவான் என்று கொள்ள வேணும்.

ஸ்வாமி க்ருபாபலே பேத:

மோக்ஷரூப முக்கிய பலத்திலும் மற்றவர்களுக்கும் நம் ஆசார்யர்களுக்கும் வித்யாசம் உள்ளது. பக்தர்களுக்கு (உபாஸகர்களுக்கு) பரிபூர்ண ப்ரம்மானுபவமாத்ரம் பலம், ப்ரபன்னர்களுக்கு கைங்கர்யபர்யந்தானுபவம், என்பதும் துலைந்த ஐஸ்வர்யம் கிடைத்த யஜமானனுக்கு லாபம் ஏற்படுவதுமாதிரி பகவானுக்கே பலம் பணத்திற்கு எவ்வாறு பயனில்லையோ அதுமாதிரி ஜீவனும் பலம் உடையவனாகான் (என்பது வித்யாசம்) மேலும் உபாஸகர்களுக்கு (பக்தியோகம் செய்கிறவர்களுக்கு) கைங்கர்யம் ஸ்வார்த்தம் (தனக்கு சேர்ந்தது) ப்ரபன்னர்களுக்கு பரார்த்தம் (பகவானுக்கே சேர்ந்தது) என்பதாம். நம் ஸ்வாமி தேசிகன் ஸித்தாந்தத்தில்

भक्त्या परमयावापि प्रपत्या वा महामते
प्राप्योऽहं नान्यथा प्राप्यः मम कैंकर्यलिप्सुभिः॥

முதலிய பிரமாணங்களால் பக்தி ப்ரபத்தி இவ்விரண்டாலும் கைங்கர்யமே பலமாக கூறியுள்ளபடியால் இரண்டுக்குமே கைங்கர்யமே பலமாம். பிரம்ம ஸூத்ரகாரரான ஸ்ரீவியாஸரும் தத்வபாவே ஸந்த்யவதுவபத்தே:, பாவே ஜாக்ரத்வாத் இவை முதலிய ஸூத்ரங்களால் ப்ரபத்தி - பக்தி எனும் 2 உபாயங்களுக்குமே கைங்கர்யரூப பலமே என்று சாதித்துள்ளார். இவைகளுக்கு பலத்தில் ஒரு பேதமும்

கிடையாது என்பது ஸித்தாந்திக்கப்பட்டது. மேலும் கைங்கர்யம் என்பது பகவானுக்கு ப்ரீதியை உண்டு பண்ணக்கூடிய சேஷத்வம் அதீனமானதன்மை, அதுசில சமயத்தில் சரீர அனுபவமும் ஆகலாம். சில சமயம் சரீர வியாபாரமே (செயல்) இல்லாத கேவல அனுபவமும் ஆகலாம், எம்பெருமானுடைய அபிப்ராயத்தைக் கண்டவனான (தெரிந்து கொண்டவனான) அதன்படி நடந்து கொள்ளக்கூடிய நிலையில் பகவதனுபவரூபமான கைங்கர்யம் செய்து முக்தனுக்கு போகம் வரலாம். ஆகையால் எல்லா முக்தர்களுக்குமே போகத்தில் வைஷம்யமில்லை.

பலம் பகவானுக்கேதான், ஜீவனான முக்தனுக்கு இல்லை என்பதும் சரியில்லை. பகவதனு பவத்தால் உண்டான ஆனந்த விசேஷம் முக்தாத்மாவுக்கும் பூர்ணமாக உண்டு. பகவானும் துயரமற்றவனாயும் பரிபூர்ணானந்த முள்ளவனாயுமள்ள முக்தனை அனுபவித்தே சந்தோஷமடை கின்றனல்லவா, ஆகவே புங்க்தே ஸ்வபோகமகிலம் பதிபோக சேஷம் என்ற முறையில் ஜீவனுக்கும் பலம் உண்டு

ஸோஸ்நுதே ஸர்வான் காமாந் ப்ரம்ஹணா ஸஹ, வித்வாந் பரமம்ஸாம்யமுபைதி என்கிறது. வேதவாக்கும் கூட, ஸாங்க ப்ரபத்தனாதிகாரத்தில் இதன் பர்யவஸானத்தைப் பார்க்கலாம்.

உபாய ஸ்வரூபத்தில் வித்யாசம்:

பிறர்கள் (ஏகதேசிகள்) மோக்ஷோபாயங்கள் (1)கர்மயோகம் (2) ஞானயோகம் (3) பக்தியோகம் (4) ப்ரபத்தி என நான்காகக் கூறினர். நம் ஸ்வாமி சித்தாந்தத்தில் கர்மயோகம் ஞானயோகம் இவை பக்தி யோகத்திற்கு அங்கங்களே தவிர நேராக மோக்ஷோபாயமாகா, என்று ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய மஹான்கள் சாதித்துள்ளபடியால் பக்திரதவா ப்ரபத்தி எனும் இரண்டுதான் மோக்ஷோபாயம். ஸ்வாமி ரஹஸ்யத்ரயசாரத்தில் உபாய விபாகாதிகாரத்தில் இதை ஸ்பஷ்டமாக சாதித்துள்ளார். ஏக தேசிகள் ஆசார்யாபிமானம் எனும் ஒரு உபாயத்தை ஐந்தாவது மோக்ஷோபாயமாகக் கூறுகிறார்கள். அது ப்ரபத்திரூபோபாயத்திலே சேர்கின்றபடியால் தனியான உபாயமாகாதொன்று நம்மாச்சார்யர்கள் திருவுள்ளம்.

आत्मात्मीयं च यत्किञ्चित् दुस्त्यजं दुर्भरं मम।
तत्सर्वं तव विन्यस्तं शुभयोः पादपद्मयोः॥

என்கிற பகவச்சாஸ்திர வசனமே இதற்கு ப்ரமாணம். இல்லாவிடில் நாமசங்கீர்த்தனம் புண்யக்ஷேத்ரவாஸம் இவைகளுக்கும் கூட மோக்ஷோபாயத்வம் கொள்ள நேரிடும்.



திருக்குருங்குடி நம்பி

ஸ்ரீ யினுடைய வ்யாப்தியிலும் உபாயத்வத்திலும்வித்தியாசங்கள்

மஹாலக்ஷ்மிக்கு, ஸ்வரூப விஷயத்திலும், மோக்ஷோபாயத்வ விஷயத்திலும் ஏகோபித்த அபிப்ப்ராயம் ஏகதேசிகளுக்குக் கிடையாது. அவர்கள் லக்ஷ்மியை அணுஸ்வரூபா என்றார்கள். ராமஸீ ப்ருஹதீ என்கிற வசனங்கள் பரமாத்மாவைத் தவிர மற்ற சேதனங்களுக்கு தர்மபூத ஞான வ்யாப்தி(பரவுதல்)யை முன்னிட்டே அதைச் சொல்லவேணும்.

अज्यायांसोऽपरे सर्वे ज्यायानेको मतः परः।

என்கிற வசனமும் ஜ்யாயநேக: பர: விரோதிக்கும்ஸர்வ: அஜ்யாயாம்ஸ: என்பதும் பாதிதமாம். காலம் முதலியவை வியாபகமாயிருந்தாலும் (பரவி) அசேதனமானபடியால் தோஷமில்லை.

விரிவான (எங்கும் பரவியுள்ள) வேறு ஒரு சேதனமிருப்பின் அதற்கு அந்தர்யாமித்வம் சொல்ல வரும். இது ப்ரமாண விருத்தமாம் அத்விதீயம் ப்ரஹ்ம (இரண்டாவது ப்ரம்ஹம் இல்லை, என்கிற வேத வாக்யம் விருத்தமாம் மஹாலக்ஷ்மியை ஈச்வர கோடியில் சேர்த்தால் அவளுக்கு நீங்கள் புருஷகாரத்வம் சொல்ல முடியாது. எம்பெருமான் மாதிரி அவளுக்கும் நரகப்ரதான ரூபாபுருஷார்த்த சங்கல்ப்பம் வருமானபடியால், தாய் என்கிற தன்மையால் வரும் வாத்ஸல்யம் கழிகிறபடியால் அபுருஷகாரத்வமே நேர்கின்றபடியால் புருஷகாரத்வம் கழியும்.

மோக்ஷோபாயத்வமும் மஹாலக்ஷ்மிக்கு சொல்ல இயலாது. பக்தி, ப்ரபத்தி, இரண்டும் ஸர்வபாபப்ராயஸ்சித்தம் என்பது பாஷ்யகார சித்தாந்தம். (அதாவது ஈஸ்வர நிக்ரஹநிவிருத்திஜனகம்) மஹாலக்ஷ்மிக்கு அக்ஞாதநிக்ரஹாம் என்கிற வசனப்படி நிக்ரஹ ப்ரஸக்தியே இல்லாதபடியால் வித்யாப்ரஸாதத்வரூபமான உபாயத் வமே இல்லை. மஹாலக்ஷ்மிக்கு உபாயத்வம் வசனங்கள் எல்லாம் புருஷகாரத்வமாத்ரத்திலே தாத்பர்யம் உள்ளவையானபடியால் விரோதமில்லை, ஆகையால் ஏகதேசிகள் மதத்தின்படி மஹாலக்ஷ்மி, விபுவமில்லை மோக்ஷோபாய மாகவும் ஆகமாட்டாள் என்பது தேறியது. இவ்விஷயத்தில் நம் ஆசார்யர்கள் மஹாலக்ஷ்மிக்கு விபுத்வம், மோக்ஷோபாயத்வம், இரண்டும் உண்டு என்பதாம், அதற்குக் காரணம்

(1) ஸ்ரீ பாஷ்யகாரர் தன் பாஷ்யாரம்ப ச்லோகத்தில் ப்ரஹ்மணிஸ்ரீநிவாஸேன ஸ்ரீயுடன் கூயவனுக்கு ப்ரம்மத்வத்தை சாதித்தருளி மேல்

बृहत्वं च स्वरूपेण गुणैश्च यत्रानवधिकातिशयं सोऽस्य मुख्योऽर्थः

என்று சாதித்திருப்பதேயாகும், இங்கு ஸ்ரீனிவாசனுக்கு ப்ரம்மத்வத்தை

சொல்லியிருப்பினும், விசேஷணமான ஸ்ரீக்கு அது எப்படி சேரும் என்ற வினா எழுகின்றது, முக்கிய (விசேஷம்)மாக எம்பெருமானுக்கு கூறுவது போல அதிலும் ப்ரமத்வம் சேரலாம், ப்ரமம் சப்தம் யோகரூபமானபடியாய் தோஷமில்லை, இதன் விவரணம் அதிகரண ஸாராவளீ வ்யாக்யாமை சிந்தாமணியில் இதை மிகவும் ஸ்பஷ்ட்டமாகக் காண்லாம்

राडसि ,बृहती श्रीरसि, देशात् कालात् स्वरूपाच्चपरिच्छेदो न मे स्मृतः।

என்று வசனங்களால் விபுத்வமும்

आनीदवातं स्वधया तदेकं एषाहि सृजते काले सैषा पाति जगत्त्रयम्

என்கிறவைகளால் காரணத்வமும் சித்திக்கும் மஹாலக்ஷ்மிக்கு

अन्तः स्थिताहं सर्वेषां भावानामिति निश्चयात्

என்கிற வசனத்தால் அந்தர்யாமித்வமும் மஹாலக்ஷ்மிக்கும் உண்டு.

இங்கு ஒரு கேள்வி. ஜகத்காரணம் அத்விதீயம் இரண்டாவது இல்லாதது என்று உபநிடதம் கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்று

अपृथग्भूतशक्तित्वात् ब्रह्माद्वैतं तदुच्यत

என்கிற வசனத்தின்படி பரிஹாரத்தையும் காண்போம் என சித்தாந்தம்,

त्वमासीः मातः कमितुःइदमित्थन्त्वविभवः
तदन्तर्भावात् त्वां न पृथगभिधत्ते श्रुतिरपि

என்று மஹனீயர்களும் அருளினார்கள்

एषा हि सृजते काले तत्तत्कारणसंस्थिता

என்கிற வசனங்கள் சித்அசித் இவைகளை சரீரமாகக் கொண்டுள்ளபடியால் பதிபோன்று லக்ஷ்மிக்கும் உபாதானத்வம் உண்டாம். ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸ்துதியில்,

पश्यन्तीषु श्रुतिषु परितः सूरिबृन्देन सार्धं
मध्येकृत्य त्रिगुणफलकं निर्मितस्थानभेदम्।
विश्वाधीशप्रणयिनि सदा विभ्रमद्यूतवृत्तौ
ब्रह्मेशा दधति युवयोरक्षशारप्रचारम् ।।

என்று மிகவும் விசதமாக மஹாலக்ஷ்மிக்கும் காரணத்வம் உண்டென சாதித்தருளினார். சாரீரகசாஸ்திரமான வேதாந்த ஸூத்ரங்களின் 4 அத்யாயங்களில் முறையே, (1)காரணத்வம் (2)அபாத்யத்வம்(3)உபாயத்வம் (4)உபேயதா என்கிற 4 அர்த்தங்கள் நிரூபிக்கப்படுகின்றன இவை நான்கும் லக்ஷ்மீயுடன் கூடிய பரப்ரம்மமான பகவானுக்கே கேவலம் பகவானுக்கு மாத்திரம் அல்ல என்று ஸ்ரீபரமாசார்யரான ஸ்ரீ ஆளவந்தாரும்

सशेषाशेषार्थःनिरवधिकनिर्बाधमहिमा
फलानां दाता यः फलमपि च शारीरकमितः ।
श्रियं तत्सध्रीचीं तदुपसदनत्रासशमनीं
अभिष्टौति स्तुत्यां अवितथमतिर्यामुनमुनिः।।

அருளினார், இங்கு முதல் அத்யாயத்தின் பொருளானகாரணத்வம் என்பதை ஸ்வசேஷாசேஷார்த்த: என்று அருளியதற்குக் காரணம், சரீராத்மபாவ மூலம் தான் காரணத்வம் ப்ரம்மத்திற்குக் கூடும் என்கிற வேதாந்த விழுப்பொருள்களை காண்பிக்கவாம ச்ரியம் தத்ஸத்ரீசீம் என்று அருளியதால் மஹலக்ஷ்மிக்கும் 4க்கும் இசைய வேணும் என்று ஸ்ரீ யாமுன முனிகளின் திருவுள்ளம் ஸ்பஷ்டம். ஆகவே ஸ்ரீபாஷ்யகாரரும் அம்மஹானை அடியொற்றி ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே என சாதித்தருளினார்.

மேலும், சரீரலக்ஷணமான, ஆதேயத்வ, விதேயத்வாதிகளைக் காண்பிக்காமல், ஸ்வசேஷாசேஷார்த்த: என்று சேஷத்வத்தை வெளிப்படையாகக் காண்பித்ததற்குக் காரணம் என்ன, என்று பார்த்தால், தத்வத்தைமாத்ரம் உணர்த்துவதைக் காட்டிலும் ந்யாஸவித்யைக்கு முக்கியமான தத்துவத்தை தெரியப்படுத்துவதே பரமமுக்கியமானபடியால், அதிகாரதசையிலும், உபாயதசையிலும், பல (மோக்ஷ) தசையிலும், சேஷத்வ ஞானமே தேவையானபடியால் அதை மட்டும் வெளிப்படுத்தியருளியது. எம்பெருமானும் சேஷத்வத்தை (ஜீவனுக்கு) அருளிச்செய்யும் காலையில் அஸ்யாமம ச சேஷம் ஹி விபூதிருபயாத்மிகா என்றும் பிராட்டி, பிரான், இரண்டு பேருக்கும் சார்ந்தது என்றருளிச் செய்து சேஷத்வத்துடன் இணைந்த சரீராத்ம பாவமும் மஹாலக்ஷ்மியுடன் உண்டு என்றும் சூசித்தான் மகாரஸ்து தயோர்தாஸ: முதலான ப்ரமாணங்களும் இதை காண்பிக்கின்றன, ஆக சேஷத்வம் அதன் மூலமாக சரீராத்மபாவம் , அதன் மூலமான காரணத்வம் பிராட்டிக்கும் மறுக்கமுடியாததாகும்.

கேள்வி: நிக்ரஹமே இல்லாதவளான பிராட்டிக்கு நரகாதிஸ்ருஷ்டிகள் எங்ஙனம் கூடும்? (ஸர்வகாரணத்வம் எப்படி)

பதில்: பலோபதாயகத்வ விதயா (செயலில்) நரகாரணத்வம் இல்லாவிடிலும் ஸ்வரூபயோக்யதயா (அதை ஸ்ருஷ்டிக்கும் தன்மை உண்டு) என்றறியலாம்.

கேள்வி: சரணாகதியினால், நிக்ரஹ (கோப) நிவ்ருத்தி ஏற்படுவது நம் சித்தாந்தம் இது தான் ப்ரஸாத: என்பதும் பிராட்டியினிடத்தில் அக்ஞாதநிக்ரஹாம் என்றபடி (கோபமில்லாதவள்) இருக்க ந்யாஸம் எதற்காக?

பதில்: பாபங்கள் மாதிரி, புண்யங்களும் மோக்ஷம் விரும்புபவர்களுக்கு அல்பமான சுகத்தை கொடுத்து தடையாகின்றபடியால் அவைகளை நீக்குவது தான் ப்ரஸாதம் ஆகும்.

கேள்வி: பிராட்டி மோக்ஷத்திற்கு உபாயமாவாள் என்பதற்கு ப்ரமாணம் என்ன? சம்ப்ரதாயம் உண்டா? (சிஷ்டாங்கீகாரம்)

பதில்:

ஸம்ஸராநலஸந்தப்த: மாமேகாம் ஶரணம் வ்ரஜேத்
அஹம் ஹிஶரணம் ப்ராப்தா நரேணாநந்ய சேதயா
ப்ராபயாம்யாத்மநாத்நாநம் நர்த்தூதாகில கல்மஷம்

என்கிற வசனங்கள், (ஆகும் ப்ரமாணங்கள்) இங்கு ஏகாம் என்றிருப்பினும் ப்ரகாசம் சூரியன், இவைகள் மாதிரி விட்டுப்பிரியாததும் கூறியதாகும்.

மாமேகம் ஶரணம் வ்ரஜ என்கிற பரமன் வசனத்திலும் இதே முறை. ஸம்ப்ரதாயம் கூட. ஸ்ரீ பாஷ்யகாரர் சரணாகதிகத்யத்தில். முதலில் பகாவந்நாரயணதிமதாநுரூப இத்யாதியால் புருஷகாரத்தை பிராட்டியிடத்தில் சாதித்திருந்தும், மஹாவிபூதே ஸ்ரீமந்நாயண ஸ்ரீவைகுண்டநாத என்று த்வய மந்த்ர உத்தர கண்டத்தில் அர்த்தத்தை ப்ராப்யத்வம்) சாதித்து கடைசீயில் அர்த்திகல்பகா ஸ்ரீமந்நாராயண அசரண்யசரண்ய என்று த்வயத்தின் பூர்வவாக்யத்தின் உள்ள ஸ்ரீமத் பதத்தை (உபாய விசேஷணத்தை காண்பிக்கக்கூடியது), தனியாக எடுத்து தவத்பாதாரவிந்யுகளமகம் ஶரணம்ப்ரபத்யே என்கிறவிடத்தில் யுஷ்மத் ஸப்தத்தால் த்வத் 2 பேர்களையும் சேர்த்துக் காண்பிக்கக்கூடியது. பிராட்டியுடன் கூடியவனுக்கே மோக்ஷோபாயத்வம் என நிலைநாட்டினார். இல்லாவிடில் இங்கு ஸ்ரீமத்பதத்தை அருளியது வீணும். இவ்வார்த்தங்களை ஸ்ரீ தேசிகன் அருளிய ஸ்ரீ மத் ரஹஸ்ய த்ரயஸாரத்தில் அர்த்தபஞ்சக, தத்வத்ரய, பரதேவதாபாரமார்த்ய, ஸித்தோபாய சோதன, மூலமந்த்ர, த்வய, சரம ஸ்லோகாதிகாரங்களில் தெளிவாகக் காணலாம்.

(6) வாத்ஸல்ய சப்தார்த்தத்தில் வேற்றுமை:

அபாரகாருண்யவாத்ஸல்யேத்யாதி ஸ்ரீ ஸ்துதியில், வாத்ஸல்ய, எனும் பதம் தோஷங்களையே குணமாகக் காண்பது என்று பிறர் (ஏகதேசிகள்) சொல்லுவர் (பசு

தன் கன்றினிடத்தில் உள்ள அழுக்கையும் ப்ரீதியாக கொள்ளுமோ) அம்மாதிரி. ச்ருதப்ரகாசிகையும்அவர்களுக்கு அனுகூலமானதுஎன்பர்.

நம்மாசிரியர், தோஷத்தைக் கண்டும், கோபம் வராதபடி தடுக்கும்படி ப்ரீதி அன்பு என்பர்.

(தோஷாதர்சனம்) எனும்பதத்திற்கும் இதே பொருள் ச்ருத ப்ரகாசிகாகாரரும் இவ்வர்த்தத்தையே வெளியிடுகிறார் ஆனபடியால் அந்த க்ரந்தத்திற்கும் விரோதமில்லை. இவ்வர்த்தமே சிறந்ததாம், மஹாசார்யரும் (தொட்டையாச்சாரியார்) அரங்கனைதுதிக்கையில்.

प्रायश्छादयितुं विनम्रजनतानानापराधाञ्चतां
वात्सल्यैकवशंवदेन कुहना निन्दां दधद्धर्ष्मणा ।

धाम्ना सह्यसुतान्तरालपुलिनं रङ्गेशयं काशयन्
लक्ष्मी भूमि निषेव्यमाणचरणं तत्वं परं मन्महे ।।

என்று சாதிக்கிறார். இதில் சரணாகதர்களிடத்தில் அனேக அபதாரங்கள் இருப்பினும் அவைகளை அறியாத மாதிரி இருக்க தூக்கமெனும் அபினயத்தை செய்கிறான் என்றபடியால், சிக்ஷையின் முயற்சியை விட்டு ப்ரீதி உள்ளவனாகின்றான் என்றே தேறுகிறது, பாபங்களே (தோஷங்கள்) பகவானுக்கு போக்யமானால் அனுக்ரஹம் அவர்களிடம் ஏற்படும் என்றாம்.

தயையில் வேற்றுமை (பேத:) சிலர் தயையென்றால் பிறர் துக்கத்தைக் கண்டு தான் துக்கப்படுவது என்கிறார்கள். இதை நம் ஆசார்யர்கள் இசைவதில்லை. ஏனெனில் மாதவன் தானாகவே அவரவர்களுடைய கர்மங்களுக்கு தகுந்தபடி ஹிதமான எண்ணத்தினால் அவர்களுக்கு துக்கத்தை உண்டுபண்ணிதானும் துக்கத்தை அடைகிறான் என்று சரியாகாது; தன் கஷ்டத்திற்கு தானே அறிவுள்ளவன் யாரும் முயற்சிக்க மாட்டான் என்பது உலகில் எல்லோரும் அறிந்ததேயாகும். அப்படி செய்பவன் அறிவற்றவனேயாவான். மேலும் துக்கத்தை அனுபவிக்கும் ஜீவர்களுக்கு அபராதம் (பாபம்) அழிகிறபடியால் அதுவே அவர்களுக்கு (ஜீவர்களுக்கு) நன்மையானபடியால் ஏன் துக்கப்படுவான்?'

हरिर्दुःखानि भक्तेभ्यः हितबुध्या प्रयच्छति ।
शस्त्रक्षाराग्निकर्माणि स्वपुत्राय पिता यथा ।।

என்றல்லவோ சாஸ்த்ரம் கூறுகிறது. ஸ்ரீபாஷ்யகாரர் தன்னலமன்றிக்கே பிறர்துக்கங்களை நீக்கும் அவா தயை ஆகும் எனறு சாதித்தபடியால் ஸ்வார்த்த நிரபேக்ஷா பரதுக்கப்ரஹாணேச்சா தயா அதற்கு முரணாகும். ஏகதேசிகள் மதம் மேலும் பிறர் துக்கத்தைக் கண்டு பகவான் துக்கப்படுவதே தயையெனில், அதை (பிறர்துக்கத்தை) நீக்க முயற்சிக்கும் பகவான் தன் துக்கத்தை நீக்க முயற்சிக்கிறான் என்றதாம் அப்பொழுது இதரர்க்கு ஹிதம் செய்கிறான் என்பது பகவானுக்குக் கூடாது.

கேள்வி: வ்யஸநேஷு மனுஷ்யாணும் ப்ருஶம்பவதிதுக்கித:என்பது உங்களுக்கு எப்படி கூடும்?

பதில்: அது அபிநயம் (நடிப்பது) என்றே கொள்ள வேணும்

ஈஶந்நபி மஹாயோகீ ஸர்வஸ்ய ஜகதஶ் ப்ரபு:
கர்மாண்யாரபதே கர்தும் கீநாச இவ துர்பல:

என்கிற வசனமே அதற்கு ப்ரமாணம். திருடர்களை சிக்ஷித்து அரசன் ஆனந்தம் அடைவது மாதிரி ஆத்மாப ஹாரியான ஜீவனை தண்டிப்பது பகவானுக்கு சந்தோஷமாக மேதவிற, துக்கம் ஏற்பட காரணமேயில்லை ஆக பிறர் கூற்று சரியில்லை.

ஸ்வாமி தேசிகன் சாதித்தருளிய:

नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरुपचितं यामुनेयप्रबन्धैः ।
त्रातं सम्यग्यतीन्द्रैः इदमखिलतमःकर्शनं दर्शनं नः ॥

என்கிற ஸ்ரீ ஸூக்தியின்படி ந: தர்சனம் என்கிற தேசிக தர்சனத்தில் ஒரு விதமான குறையும் கிடையாது. மற்றும் சம்பூர்யமான ப்ரமாண ப்ரமேய ஒற்றுமையும் உண்டு என அறியலாம். மற்றும் எட்டு பேதங்களையும் தெளிவாகக் கூறவேண்டியுள்ளது. விரிவிற்கு அஞ்சி நிற்கிறோம். முறையாகப் பின்பு விஞ்ஞாபிப்போம்.

वादिद्विपशिरोभङ्ग पञ्चाननपराक्रमः ।
श्रीमान् वेङ्कटनाथार्यः चिरं विजयतां भुवि ॥

•••••••••••

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

உபய வேதாந்தம்

ஸ்ரீ மதுபயவே. வித்வான். மேல்பாக்கம் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி.

இவ்வுலகில் மனிதர்கள் ஒவ்வொருவரும் பலவித இன்னல்களுக்குட்பட்டு உள்ளவர்கள் ஆகையால் நாம் ஸுகமாக இருக்க வேண்டுமென்று விரும்புவது இயல்பு. அதற்கு ஐச்வர்யம், புத்ரன், பசு, அன்னம் இவைகள் தேவைப்படுகின்றன. இவைகளைத் தன் முயற்சியினால் அடைய நினைக்கும் போது அதற்கான உபாயமான ஐச்வர்யம் முதலான பலன்களுக்கு ஸாதனம் என்ன என்று ஆராய்ந்தபோது ப்ரத்யக்ஷித்திலோ அநுமானத்தினாலோ அறிய முடியாத அவ்வித ஸாதநத்தை அறிவிப்பது வேதம். ஐச்வர்யத்தில் விருப்பமுள்ளவன் வாயுவை தேவதையாகக் கொண்ட யாகத்தை அநுஷ்டித்தால் அவனுக்கு ஐச்வர்யம் உண்டாகுமென்றும், वायव्यं श्वेतमालभेत भूतिकामः । என்பது முதலான வாக்யம் கூறுகிறது. चित्रया यजेत पशुकामः என்று பசுக்களை விரும்புகிறவன் 'சித்ரா' என்கிற யாகத்தைச் செய்யவேண்டுமென்றும், புத்ரனை விரும்புகிறவன் புத்ரகாமேஷ்டியைப் பண்ணவேண்டும், என்றும் மழையை இச்சிப்பவன் 'காரீர்' என்கிற யாகத்தைப் பண்ணவேணுமென்றும் வேதவாக்யங்களை கூறுகின்றன. प्रत्यक्षेधानुमित्या वायस्तूपायो न बुध्यते । एवं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता என்றபடி இப்படிப்பட்ட ஸாதநத்தை அறிவிப்பது தான் வேதம். இப்படி இந்த கர்மாக்களை அநுஷ்டித்து இந்த ஐஹிக பலன்களை அநுபவித்து ஸுகப்படுமவர்களையும் பார்க்கும் போது இந்த ஸுகங்கள் மிகவும் அல்பமாயும் அத்யந்தம் அஸ்திசாயுமிருப்பதை அறிகிறோம். இதை விட அதிகமான ஸ்திரமுள்ள ஸ்வர்காதி ஸுகமொன்று இருப்பதை ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेते என்பது போன்ற வேத வாக்யத்தாலேயறிந்து அதற்கு உபாயமான ஜ்யோதிஷ்டோம் முதலிய யாகங்களை அநுஷ்டித்து மறுஜன்மத்தில் ஸ்வர்க்காதி லோகத்தில் போய் அந்த ஸுகங்களை அநுபவிக்கிறார்கள். இப்படி இந்த லோகத்திலும் ஸ்வர்காதிலோகத்திலும் அனுபவிக்கும் பலனுக்கு ஸாதனங்களை விதிக்கும் வேதபாகத்திற்கு கர்மகாண்டமென்று பெயர். ஸ்வர்க்காதிலோகத்தில் போய் அந்த ஸுகங்களை அநுபவிப்பவர்களைப் பற்றி ஆராய்ந்தால் அதுவும் அவ்வளவு சிறந்ததாகக் கூறமுடியவில்லை. ஏனெனில்-இங்கு புண்யகர்மங்களைச் செய்து ஸ்வர்கத்தில் ஸுகமனுபவித்தாலும் அதுவும் புண்ணியமிருக்கும் வரை தானாகையால் क्षीणेपुण्ये मर्त्यलोकं विशन्ति என்று புண்ணியம் சிலவழிந்த பின்பு மறுபடியும் புண்ணத்தை

ஸம்பாதிக்க இப்பூலோகத்திற்கே திரும்பி வரவேண்டியிருக்கிறது. ஸ்வர்க்கத்தில் ஸுகமனுபவிக்கும் போதும் அதுகுறையக் குறைய சீக்கிரமே பூலோகத்தில் வந்து விழவேண்டியதாயிருக்குமே என்கிற பயத்தினால் அனுபவிக்கும் இன்பமும் இன்பமாக இருப்பதில்லை स्वर्वेऽपातभीतस्य क्षयिण्णोनीस्ति निर्वृतिः என்றும் சாஸ்திரம் கூறுகிறது. இப்படி பூலோகத்தில் யாக தான ஹோமாதிரூபமான புண்ணியங்களைச் செய்வதும் மறுபடியும் மறு ஜன்மத்தில் ஸ்வர்கத்தில் அதன் பலனை அனுபவித்து மறுபடியும் திரும்பி வருவதுமான पुनरपि जननं पुनरपि मरणम् என்கிற ரீதியைப் பற்றி ஆராய்ந்தவனுக்கு மறுபடி பிறப்பு இல்லாமல் நித்யமாய் எல்லையற்றதாயிருக்கும் ஆநந்தத்தை அநுபவித்துத் கொண்டே இருக்க வேண்டுமென்று இச்சை உலகாநுபவத்தையும் சாஸ்த்திரத்தையும் அறிந்தவர்களுக்கு உண்டாகக்கூடும்.

இப்படிப்பட்ட நிலையான இன்பம் ஒன்று உண்டா? அப்படியானால் அதை அடைவதெப்படி? அதற்காகச் செய்யவேண்டியதென்ன? அதற்குத் தடையாயிருப்பது எது? அதை நீக்குவது எப்படி? என்றிவ்வாராக ஆராயும் சாஸ்திர விச்வாஸ சாலிகளாய் புத்திமான்களாயுள்ளவர்களுக்கு இவ்விஷயங்களை எல்லாம் அறிவிக்கும் வேதபாகம்தான் 'உபநிஷத்து' அல்லது 'வேதாந்தம்' எனப்படுகிறது. ரிக், யஜுஸ், ஸாம, அதர்வா என்று நான்கு வகைப்பட்ட வேதங்களுக்கும் அதனுட்பிரிவான பல சாகைகளுக்கும் கடைசியிலிருக்கும் பாகம் 'வேதாந்தம்' எனப்படுகிறது.

முற்கூறிய நித்யமான ஆநந்தமாகிற உயர்ந்த புருஷார்த்தத்தை அடைவதற்கு காரணவஸ்துவை த்யாநம் செய்யவேண்டுமென்று வேதாந்தம் கூறுகிறது. உபநிஷத்துக்களிலுள்ள ஜகத்காரணத்தைச் சொல்லகூடிய வாக்யங்கள், 'ஸத்' (ப்ரமாணத்தைக் கொண்டு அறியக்கூடியது) என்னும், ப்ரஹ்மம்' பெரியது என்றும், 'ஆத்மா' என்றும், 'ஆகாசம் என்னும் ப்ராணன்' என்றும், 'ஜ்யோதிஸ்' என்றும் 'இந்திரன்' என்றும் 'சிவன்' என்றும், 'நாராயணன்' என்றும் பலவாறுக் கூறுகின்றன. இவைகளில் 'ஸத், ப்ரஹம, ஆத்மா என்கிற சப்தங்கள் ஸாமான்ய சப்தங்களாகையால் விசேஷித்துக் சொல்லப்பட்ட நாராயணனையே கூறுகின்றனவென்று ஸாமான்ய விசெஷ ந்யாயத்தைக் கொண்டும், பரமாத்மா ஸாதாரண தர்மமாயிருப்பதனால் ஆகாச ப்ராண ரூபாசேதந விசேஷ வாசக சப்தங்கள் அவயவவ்யுத் பத்தியினாலும், ஜ்யோதிச் சப்தம் ஜயோதிர்மயதிவ்யமங்கள விக்ரஹத்தைக் கொண்டு பரமாத்மாவை போதிக்கிறதென்றும் 'சிவ சப்தம்' மங்கள ரூபார்த்தத்தினால் ஸ்ரீமந் நாராயணனையே போதிக்கிறதென்றும், இந்த்ர சப்தம் ஜீவலிங்கங்களிருப்பதனால் இந்திரனை முன்னிட்டு இந்திரனை சரீரயாகக் கொண்ட பரமாத்மாவைக் கூறுவதென்றும் சேதநாசேதங்களை எல்லாம் பரமாத்மாவான ஸ்ரீமந் நாராயணனுக்கு சரீரமென்று ப்ரஹதாரண்யக, ஸுபாலோபநிஷத் முதலியவைகளில் நிச்சயித்திருப்பதினாலும்,

தைத்ரீயோபநிஷத்தில் ஜகத்காரண வாக்யங்களில் சொல்லியிருக்கும் சப்தங்களை அநுபவித்து அதெல்லாம் நாராயணனையே கூறுவதென்று தெளிவாகியிருப்பதாலும் நாராயண சப்தத்தை மற்றவிஷயத்தில் ப்ரயோகிக்க முடியாதபடி ரூடமானயின ஸம்ஜ்ஞா சப்தத்தையும் ணத்வமுள்ள சப்தம் அந்த ஒரு வ்யக்தியைத் தவிர மற்ற விஷயத்தில் ப்ரவர்த்தியாதபடியாலும் அதை வேறு விதமாக நயநம் பண்ண முடியாதென்றும் வ்யாஸாதி மஹர்ஷிகளும் ஸ்ரீ பாஷ்யகாராதி பூர்வாசாரியர்களும் நிர்ணயித்திருக்கிறார்கள். இப்படியே பரப்ரஹ்ம ஸ்வரூபம், நிர்குணமென்று கல்யாண குணங்களுள்ளது என்றும் கூறும் சில வாக்யங்கள் பரஸ்பர விருத்தம் போல் தோன்றினாலும். अपीतपाप्मा, विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः (கர்ம ஸம்பந்தம், கிழத்தனம், மரணம், சோகம், பசி, தாகமாகிற ஹேய குணமில்லாதவனென்றும், सत्यकामः நித்யமான போக்யவஸ்துக்களையும் போகோபதரண போக ஸ்தானங்களையும் உடையவனென்றும், सत्यसंकल्पः எங்கும் தடங்கலில்லாத ஸங்கல்பத்தை உடையவனென்றும் பிரித்துக் கூறுவதனால் ஹேயப்ரத்யநீக கல்யாணகுண விசிஷ்டம் அவன் ஸ்வரூபமென்றும் உத்ஸராகபாவதந்யாயாதிகளைக் கொண்டுக் நிஷ்கர்ஷித்திருக்கிறார்கள். பரப்ரஹ்மத்தை ''சரீரமில்லாதவன்'' என்றும் சரீரமுள்ளதென்றும் கூறும் வாக்யங்களும் ஷி நந்யாயங்களினால் ப்ராக்ருதமான கர்மாநுகுண சரீரமில்லாதவனென்றும் அப்ராக்ருத சுத்த ஸத்வமயமாய் இச்சையினாலேற்ப்பட்ட திவ்யமங்கள விக்ரஹமுள்ளவன் என்றதைக் கூறுகின்றனவாக நிர்ணயிக்கப்பட்டது.

ब्रह्मविदाप्नोति परम् ततस्तु तं पश्यति निष्कलं ध्यायमानः
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे

என்கிற வாக்யங்கள் கோக்ஷரூபமஹாநந்தத்திற்கு ப்ரஹ்மத்தின் ஜ்ஞானம் காரணமென்றும், த்யானம் காரணமென்றும், ஸாக்ஷாத்காரம் காரணமென்றும் பலவாறுகக் கூறுகின்றன.

ध्रवास्मृतिः, स्मृतिलम्भे सर्वग्रन्थीनां विप्रमोक्षः என்கிற வாக்யம் தைலதாரை போல் இடைவெளியின்றி வேறு விஷயமின்றி பரப்ரம்ஹம் இதன் முறையே விஷயமாகக் கொண்ட ஸம்ருதிஸந்ததி - ஸ்மரணத்தின் துடர்ச்சி மோக்ஷத்திற்குக் காரணமென்று சொல்லுகிறது. இது தான் த்யானம் அல்லது உபாஸநமெனப்படுகிறது. பக்தியும் இதுவேயாகும். பொதுவான ஜ்ஞானம் காரணமென்கிற வாக்யமும் ஸாமான்ய விசேஷ நந்யாயத்திலுல் இந்த உபாஸநத்தையே கூறுகிறது. ஸாக்ஷாத்க்காரத்தைக் காரணமாகக் கூறும் வாக்யம் ஸாக்ஷாத் காரம் போன்ற விசதமான ஸம்ருதிரூபமான உபாஸனத்தையே கூறுகிறதென்றும் ப்ரமாணங்களைக் கொண்டும் ஸ்ம்ருதி முதலிய

உபப்ரும்ஹணங்களைக் கொண்டும் மஹர்ஷிகளும் பூர்வாசார்யர்களும் நிர்தாரணம் செய்திருக்கிறார்கள். இப்படி நிர்ணயம் செய்தால் எல்லா ப்ரமாணங்களுக்கும் ஐக்கண்டயம் (ஒற்றுமை) ஏற்படுகிறதென்றும் ஒருவித விரோதமுமில்லை என்றும் ஸாதித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பக்திரூபாமான உபாஸநத்தில் அதிகாரமில்லாதவர்களுக்கு லகுவான ப்ரபத்தி என்கிற சரணாகதியை சாஸ்திரங்கள் விதிக்கின்றன. ஆக பக்தியிலாலோ ப்ரபத்தியிலாலோ மோஷத்தை அடைய விரும்பி தன்ன திகாரதத்திற்கு ஏற்ற உபாயத்தை அநுஷ்டித்து ப்ராரப்த தேஹம் கழிந்து பரப்ரம்ஹத்தை அடைந்து புண்யபாப கர்ம ரூபமான இரு விலங்குகளையும் நீக்கி பரப்ரஹ்மத்தை அடைந்து அவனுக்கு ஸமாநமான எட்டு குணங்களையும் அடைந்து அப்ராக்ருதமான சரீரத்தைப் பெற்று ஸ்ரீவைகுண்டம் என்கிற பரமபதத்தில் ஸ்ரீமந் நாராயணனை பரப்ரம்ஹத்தையும் அவனுடைய கல்யாண குணங்களையும் அநுபவித்து மிகவும் உயர்ந்ததாய் எல்லையற்றதாய் நித்யமான ஆநந்தத்தை அடைந்து, எப்போதும் ஸர்வஜ்ஞர்களான அநந்தகருடவிஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகளோடு பகவதநுப பரீவாஹமாய் தனக்கு ப்ராப்தமான கைங்கர்யத்தைச் செய்து கொண்டு மறுபடி இங்கு வந்து ஸம்ஸார க்லேசத்தை அநுபவிக்காமல் நித்யமான இன்பத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் முக்தர்கள் என்று இவ்வர்த்தம் உபநிஷத்துக்களான ஸம்ஸ்கிருத வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இனி த்ரவிட வேதாந்த்தைப் பற்றிக் கூறுகிறோம்.

ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்ய ப்ரபந்தங்கள் நான்கு வேதங்களின் ஸாரமென்றும், த்ரமிட வேதமென்றும் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி - 'த்ரமாடோபநிஷத்து'', அதாவது தமிழ் வேதாந்தம் என்றும் வழங்கப்படுகிறது. ப்ரபன்னஜன ஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வாருக்குத் தனி ஏற்றமுண்டு. இவருடைய திவ்யப்ரபந்தங்கள் நான்கும் நான்கு வேதங்களுடைய ஸாரமென்றும் கூறுவார்கள். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திருவாய்மொழியைப் பற்றி

आदौ शारीरकार्थक्रममिह विशदं विंशतिर्वक्ष्मि साग्रा
संक्षेपोऽसौ विभागं प्रथयति च ऋचां चारुपाठोपपन्नम् ।
सम्यग्गीतानेबद्धं सकलमनुगतं सामशाखासहस्रं संलक्ष्यं
साभिधेयैर्यजुरपि शतकौ र्भात्यथर्वा रसैश्च ।।

என்று திருவாய்மொழி ப்ரபந்தத்தில் முதல் இருபத்தோரு பாசுரங்கள் வேதாந்த ஸாரார்த்தத்தை விசதமாகக்கூறுகின்றன்ன. இந்த சுருக்கமானது

இருபத்தோரு சாகைகளாகப் படிக்கப்பட்ட ரிக்வேதத்தின் ரூபதத்தைப் ப்ரகாசப்படுத்துகிறது. நல்ல கானத்தோடு கூடியபூர்ணமான ஸாமவேத சாகைகளின் ஆயிரமானது ஆயிரம் பாட்டிலில் பின்பற்றப்படுகிறது. ஓரர்த்தத்தோடு கூடின நூறு சதகங்களினால் 101 சாகைகளாக ப்ரசித்திபெற்ற யஜுர்வேதம் காணப்படுகிறது. 9வது ரஸமான சாந்தி ரஸத்தை ப்ரதானமாகக் கொண்ட எட்டு ரஸங்களினால் नवधा आथर्वणो वदः என்று மஹாபாஷ்யத்தில் கூறப்பட்ட அதர்வவேதமும் ப்ரகாசிக்கிறது என்று நான்கு வேதரூபமாக நிரூபித்திருக்கிறார். மேலும்,

यत्तत् कृत्यं श्रूतीनां मुनिगणविहितैः सेतिहासैः पुराणै
स्तत्रासौ सत्त्वसीम्नः शठमथनमुनैः संहिता सार्वभौमी ॥

என்று. ஸ்ரீ வால்மீகி, வ்யாசர் முதலிய மஹரிஷிகளால் இயற்றப்பட்ட இதிஹாச புராணங்களால் வேதார்த்தங்களுக்கு விசதீகாரம் எப்படிப் பண்ணப்படுகிறதோ அப்படியே ஸத்வ குணநிதியான ஸ்ரீநம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தியும் வேதாந்த விசதீகாரத்தைப்பண்ணி மூர்த்தாபிஷிக்தையாய் விளங்குகிறதென்றும் அருளிச்செய்துள்ளார். ஸ்ரீநம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகள்

पराशर **प्रबन्धादपि वेदान्तरहस्यवैशद्यातिशयहेतु भूतैः**
सद्यः परमात्मनि चित्तरञ्जकतमैः सर्वोपजीव्यैरुपबृंहणैः

என்று ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷி இயற்றியதான ஸ்ரீவிஷ்ணு புராணத்தைக் காட்டிலும் வேதாந்த ரஹஸ்யார்த்தத்தை மிகவும் தெளிவாக்க வல்லவை என்றும், கேட்டவுடனேயே பரமாத்மாவினிடத்தில் மனதை ஈடுபடுத்த வல்லவை, என்றும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனால் கொண்டாடப்பட்டது.

வேதங்கள் அபௌருஷேயங்களாய் எப்படி ரிஷிகளினால் தபச்சக்தியைக் கொண்டு ஸாக்ஷாத்கரிக்கப்பட்டனவோ, அப்படியே,

सहस्रशाखां यो ऽ द्राक्षीत द्राविडीं ब्रह्मसंहिताम्
आम्नायानां प्रकृतिमनरां संहितां दृष्टवन्तम् द्रमिडोपनिषद्वृष्टः

என்றும் நம் பூர்வாசார்யர்கள் ஸ்ரீசடகோப முனிவரான ஸ்ரீநம்மாழ்வாரினால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட த்ரமிடோபநிஷத் என்று நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்திகளை அபௌருஷேயமான வேதமாகவே நம் பூர்வாசார்யர்கள் கொண்டாடுகின்றனர்.

வேதங்களிலிருந்து முற்கூறியபடி அநேக ந்யாய ஸஞ்சாரம் பண்ணி, தத்வ, ஹித புருஷார்த்தங்களை சிரமப்பட்டு நிர்ணயிக்க வேண்டியிருக்கின்றது. அப்படியில்லாமல் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றேமே என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்தபடி எல்லோருக்கும் எளிதில் நிஷ்கர்ஷம் திருவாய்மொழியிலுல் ஏற்படுகிறது.

ஜகத்காரண வஸ்துவான பரப்ரஹ்மம் ஸ்ரீமந் நாராயணனே என்று

'ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா
அன்று நான்முகன் தன்னோடு தேவகுல கோடு உயிர் படைத்தான்'
'நாடிநீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்'

என்றும்அருளிச் செய்தார். ஈச்வர தத்வம்

'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்டசதிர்'
'அகலகில்லேனிறையுமென்றலர் மேல் மங்கையுறை மார்பா'

'பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து வேரி மாறுத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமே' என்று. திவ்ய தம்பதிகளான ஸ்ரீ பிராட்டியும், ஸ்ரீமந் நாராயணனுமே என்றும். இவர்களுடைய திருவடிகளில் பக்தி, ப்ரபத்தி ரூபங்களே அதிகாராநுகுணமான உபாயமென்றும் அவ்விருவர்களுடைய கைங்கர்யமே புருஷார்த்தமென்றும் ஸாதித்தார். இப்படிப்பட்ட ஸ்ரீமந்நாராயணனுடைய ப்ராப்தி ரூபமண மோக்ஷாநந்தத்தை அடையும் ஜீவாத்மாவின் ஸ்வரூபமும்

प्रजापतिः प्रजाअसृजत तोयेन जीवान् व्यससर्जभूम्याम्

என்று ச்ருதிகளில் சொல்லப்பட்டது போல்,

'முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில்வண்ணனே
அந்நாற்நீதந்த ஆக்கையின் வழியுழல்வேன்'

என்று ஜீவாத்மாவின் நித்யத்வத்தையம் அநாதியான கர்மாநுகுணமாக சரீரஸம்பந்தத்தை அடைந்து ஸம்ஸராஸுக துக்காநுபவம் பண்ணும் படியையும் விளத்குகிறார்.

பக்தி ப்ரபத்தி ரூபமான உபாயத்தில்

'வண்புகழ் நாரணன் தின்கழல் சேரே'

'வீடுமின் முற்றவும் உம்முயிர் வீடுடையானிடை வீடு செய்மினே'

என்று ஆத்ம ஸமர்பணத்தை ப்ரதானமாக உபபாதித்தார். பகவத் ப்ராப்திக்கு ப்ரதிபந்தகமான அவித்யா கர்ம வாஸநா , ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தரூபமான ப்ரதிபந்தகவர்கத்தை

'ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்தனன் கொல் உண்ணிலாவிய ஐவரால் குமை தீற்றி வேதியா நிற்கும் ஐவரால் வினையேனை மோதுவித்து, ஐவர் திசை திசை வலித்தெற்றுகின்றனர்'

என்றும் விளக்குகிறார். பரமபுருஷார்தமும் பரம புருஷனுடைய கல்யாண குணானுபவ பரீவாஹமான ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களுள் என்பதை

'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
கூழுவிலா வடிமை செய்யவேண்டும் நாம்'

என்று நிஷ்கர்ஷத்து அருளிச் செய்தார்.

இப்படி இருவித வேதாந்தமும் உபயவேதாந்தம் என்று வழங்கப்படுகிறது. இவற்றை ப்ரதானமாக உடையவர்களாகையால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உபயவேதாந்தாசார்யர் என்கிற ப்ரஸித்தி. இதை சுருக்கமாக ஸ்ரீ உ.வே. என்று ஸ்ரீவைஷ்ணவர்களைக் குறிப்பிடும்போது குறிப்பிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி கலியுகத்திலும் விளங்கி வருவதை முன்பே கண்டு ஸ்ரீ நம்மாழ்வார் 'பொலிக பொலிக பொலிக' என்றும் 'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்றும் 'கலியும் கெடும் கண்டு கொள்மின்' என்றும் மங்களாசாசனம் செய்தார்.

இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவாசார்ய பரம்பரையில் ஸ்ரீமதாண்டவன் என்று ப்ரஸித்தி பெற்று சமதமாதி ப்ரதானராயும் விளங்கும் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் த்ருடகாத்ரராய் பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருந்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை மென்மேலும் சிறப்புறச் செய்யும்படி ஸ்ரீரங்கநாதன் அருள் புரியவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம :

விசிஷ்டாத்வைதம் அல்லது ஸவிஶேஷாத்வைதம்

ஸ்ரீமதுபயவே. வித்வான் கொத்திமங்கலம்

வரதாச்சார்யர் ஸ்வாமி

வேதாந்தம் !

'உலகு' என்பது என்ன? நான் யார்? இவ்வுலகுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? இது முதலான மிகமிக கடினமான ப்ரச்னைகளுக்கு பதிலையறிய முற்பட்ட நம்பூர்வீகர்களான மஹர்ரிஷிகள், தங்கள தபோ பலத்தினால், உலகமே என்றும் வியக்கும் வண்ணம் இதன் ரஹஸ்யங்களை எல்லாம் அறிந்தனர். இதை நமக்கு உணர்த்தும் நூல்களை 'உபநிஷத்துக்கள் என்பர். ப்ரச்சினைகள் எவ்வளவு கடினமோ, பதில்களும் அதைவிட கடினமாக இருப்பது இயற்கை. இதற்கு ஏதாவது ஒரு Key திறவுக்கோல் இருந்தாலன்றி இவற்றின் பொருளையறிவது என்பது எப்படி சாத்யம்? அந்தத் திறவுகோலை வேதாந்த சாஸ்த்ரம் எனப்படும் ப்ரம்மசூத்ரஸகள் ஆகும். ''किं स्विद्वनं क उ स वृक्ष आसीत्.....ब्रह्मवनं ब्रह्म स वृक्ष आसीत्'' என்பது போன்ற இடங்களில் மேற்கண்ட ப்ரச்னைகளையும், பதில்களையும் காணலாம். மனிதனால் நெருங்கமுடியாத காடுகள் போன்றிருப்பதால், அப்பொருளை ''वनम्-காடு'' என்று குறிப்பிட்டுள்ளதையும் காணலாம். அப்பொருளைப் பற்றி எந்த முடிவுக்கு வந்தனர்? என்றால்

'आश्चर्यवत्पश्यति कश्चिदेनं आश्चर्यवद्वदति तथैव चान्यः।
आश्चर्यवच्चैनमन्यः शृणोति श्रुत्वाप्येनं वेद नचैव कश्चित्॥

இது தான் அவர்கள் கண்ட மெய்ப்பொருள். சொல்கிறவனுக்கும் இதுதான் அவர்கள் கண்ட மெய்ப்பொருள். சொல்கிறவனுக்கும் ஆச்சரியம் கேழ்ப்பவனுக்கும் ஆச்சரியம்! என்னவறிந்தாய் என்றால், ''ஒன்றும் விளங்கவில்லை என்று பதில். என்ன பதில் இது? எனென்றால் இதை விளக்க முற்பட்டு

''यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः।

अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम्।''

என்கிறது உபநிடதம் ''எவன் நான் அறிந்துள்ளேன்'' என்கிறானோ அவன் அதையறியவே இல்லை. எவன் ''ஒன்றும் புரியவில்லை'' என்கிறானோ அவன் தான் அதையறிந்து னருகிறான். அவனே 'புரியவில்லை' என்கிறபோது அவன்தான் அதையறிந்தவன்' என்றால் மறுபடியும்

''नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च।

यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च॥' (தெரிந்ததென்றும் சொல்வற்கில்லை, தெரியவில்லையென்றும் சொல்வதற்க்கில்லை) என்கிறது உபநிடதம்.

புரியாத புதிர்!

இப்படி விசித்ரமாகச் சொல்லிக் கொண்டே போனால் முடிவு என்ன? கீதையின் கடைசியிலுள்ள ச்லோகங்களை பார்ப்போம்! பகவானின் விச்வரூபத்தை வியாஸரின் கருணையால் கண்ட ஸஞ்ஜயன் கூறுகிறான். -

''तच्च संस्मृत्य संस्मृत्य रूपमत्यद्भुतं हरेः।'' = ஆஹா! பகவானின் அத்யத்புதமான (வெறும் அத்புதமல்ல) அந்த உருவை நினைக்க நினைக்க; நினைக்க நினைக்க, என்னவாகியது? எப்படியிருந்தது!'' என்றால், 'अद्भुतम्' என்றால் போதாதென்று 'अत्यद्भुतम्'' என்றான். இதன் பிறகும் எப்படி 'எப்படி?' என்றால் 'विस्मयो मे महान्' பெரிய ஆச்சர்யம், சொல்லமுடியாத ஆச்சரியம். ''அப்படியானால் முயலின் கொம்பு போன்றதா? அதையும் சொல்ல முடியாதல்லவா!'' என்றால் 'हृष्यामि च पुनःपुनः' என் உடம்பை யார்! மயிர்கள் எங்ஙனம் கூசி எழுந்து நிற்கின்றன, பார்! ''முயலின் கொம்பு'' என்ற சொல்லைக் கேட்ட யாருக்காவது இப்படி மயிர்க் கூச்சல் ஏற்படுமா? யார்! அந்த அனுபவத்தைச் சொல்ல சொன்னால் கிடைக்க வில்லையே, என்ன செய்வது!!'' இதுதான் முடிவு. அதாவது அப்பொருளை உணரமுடியுமே தவிர, அறியமுடியாது.

அறிவும் உணர்வும்!

தர்சனங்களில் ஒருவருக்கொருவர் உபாதிட்டுக் கொள்வதற்கு அனேக காரணங்கள் உள்ளன. அவற்றில் 'அறிவு-உணர்வு' பதங்களின் பொருள்களில் வ்யத்யாஸம் அறிய இயலாமையும் ஒன்று. 'அறிவு' என்பது அறிபவன் அறியப்படும்

பொருள், அறிவு என்று மும்பொருளைக் கொண்டுள்ளது. 'உணர்வு' என்பது அத்தகையதல்ல. இஸ்தும் உணர்பவன், உணரப்படும் பொருள், உணர்வு' என்று மும்பொருள் உள்ளது போன்று தோன்றும். ஆனால் சப்த பேதம்தான் உள்ளதே தவிர, வாஸ்தவத்தில் பொருள் வெவ்வேறு அல்ல. உதாரணம் : மிகவும் இருகிகத்தால் கஷ்டப்படும்போது, தென்றல் வீசுகிறது. 'வீசுகிறது' என்பது எல்லோரும் அறிந்தது ஆனால் அந்த வீசுதலால் ஏற்படும் 'ஒருவிதச் சுகம்' என்பது உணரப்பட வேண்டியதே தவிர அறியப்படுதல்ல. இதையே வடமொழியில் **'स्वप्रकाशप्रत्यक्षम्'** இதனால்தான் 'ஸுகம் ஸ்வப்ரகாஸ' மென்றனர். அதாவது வெளிப்பொருள்களை அறியும்போது அறிவு, அறிபலன், அறியப்படுவது என்ற மூன்றும் வெவ்வேறாகவே உள்ளது தெளிவு. இதையே **'त्रिपुटी'** என்கின்றனர். தன் ஆத்மாவை தானே உணரும்போது 'ஆத்மா' என்பவன் அறிபவனாகவும் ஆகிறான். இவ்விரண்டும் ஒன்றாகிவிட்ட பிறகு 'அறிவு' என்கிற வேறு ஒரு பொருள் இருக்க முடியாது. இதுதான் **'स्वप्रकाशप्रत्यक्ष'** மாகும். இங்கும் **'त्रिपुटी '** இருப்பது போல் தான் தோன்றும். உண்மையில் ஒன்றே மூன்றின் கார்யத்தையும் செய்கிறபடியால் தான் அது **'स्वप्रकाशम्'** எனப்படுகிறது.

எதிரில் இருப்பவனும் தான் ஆத்மாவை உணர முடிவதால், நாமும் அதை அவனுக்கு உணர்த்த முடிகிறது. உணர்ந்த பிறகு அறியவும் முடியும். இத்தகைய அனுபவங்களை அதாவது ''சப்தங்கள் வேறு வேறாக இருந்தாலும் பொருள் ஒன்றே'' என்கிற நிலையை வெளிப்பொருள்களிலும் காணலாம். உதாரணம் 'பூதலே கட:' என்கிற அறிவு உண்டான போது 'பூதலம்' ஆதாரமாகவும் 'கடம்' ஆதேயமாகவும் தோன்றுவது எல்லோரும் ஏற்றுக் கொள்ளப்பட்டதே. இங்கு 'கடம்' 'ஆதேய' மானால், 'கட'த்தில் 'ஆதேயதா' என்கிற ஒரு 'தர்மம்' தோன்றுகிறது. இந்த 'ஆதேய' தை என்பது என்ன? என்கிற கேள்விக்கு, அது 'கடஸ்வரூப' ம் என்கின்றனர். 'ஆதேயதாதி' கள் 'அதிரிக்த பதார்த்த' ம் என்று கூறுபவர் சிலர் இருக்கலாம். ஆனால் இது ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், அப்படியாகில், 'ஆதேயதா' என்கிற 'தர்மம் கட'த்தில் உள்ளபோது 'கடம் ஆதேயதைக்கு அதிகரண' மாகவும், 'ஆதேயதா' ஆதேயமாகவும் தோன்றுகிறது. அப்படியானால் 'ஆதேய' தை மற்றொரு 'ஆதேய' தைக்கு 'அதிகரண' மாகிறபடியால் 'ஆதேய' தையில் 'அதிகரணதை' யையும் 'அதிரிக்த' மான மற்றொரு 'ஆதேய' தையையும் ஏற்கவேண்டி வரும். இப்படியே சொல்லிக் கொண்டே போனால் முடிவே இல்லாமல் போகும். எந்த விவகாரமும் நடக்கவே முடியாது போகும். ஆகையால் ஓரிடத்தில் எல்லோரும் ஒரு நிலையில் நிற்க வேண்டும். ஆக 'ஆதேயதாதி' கள் ஸ்வரூபமானாலும் சப்த பேதம் கூறுவது ஸஹஜம். இங்ஙனம் விவாதம் வந்தபோது, 'ஸப்த ப்ரயோக' த்தை மாறுது ''நம் அறிவு என்ன செய்கிறது?'' என்று மிகவும் கூர்ந்து உணரவேண்டும். இது எல்லோருக்கும் முடியாததொன்றாகையால் வாத-விவாதமும் முடிவில்லாமல் போகிறது. ஆக 'அறிவு' 'உணர்வு' களின் ஸ்வரூபம் ஸது சூக்ஷ்மமாக உள்ளபடியால் வாத விவாதமும் வளர்வது இயற்கை.



தேவநாதன் (அயிந்தை)

த்வைதம்-அத்வைதம்-விஶிஷ்டாத்வைதம் :

இங்ஙனமே தான் 'த்வைதம் - அத்வைதம் - விஶிஷ்டாத்வைதம்' என்கிற ஸித்தாந்தங்களின் நிலைமையும் வெகு சிக்கலாக உள்ள படியால் விவாதம் முடிவில்லாமல் போகிறது. 'த்வைதம்' அறியப்படுவது. 'அத்வைதம்' உணரப்படுவது. ஆனால் விஶிஷ்டாத்வைதம் எத்தகையது! இத்துணை பின் நிலை பூமிகை' யை வைத்துக் கொண்டு 'விஶிஷ்டாத்வைதத்தை' அறிய சிறிது முற்படுவோம்.

இவ்வுலகையறிய முற்பட்டபோது, இது என்றும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை யென்பது முதலில் கவனத்திற்கு வருகிறது. இரண்டாவதாக சைதன்யமென்கிற அறிவு இல்லாத ஜடப் பொருள்களும், அறிவுள்ள சேதனங்களென்கிற பொருள்களும் இதில் அடங்கியிருப்பதையும் அறியமுடிகிறது. மற்றும் ஆழ்ந்து நோக்கினால், இந்த சேதனா சேதனங்களுக்குப் பின் இவற்றை இயக்கும் மற்றொரு பொருள் இருப்பதையும் உணரமுடிகிறது. ஆக உலகமென்றால் சேதனங்களென்கிற சித்வர்க்கமும், அசேதனங்களென்கிற அசித்வர்க்கமும், இவற்றை இயக்கும் ஈச்வாதத்வமும் சேர்ந்துள்ளதை அறிகிறோம். இதை தான் தத்வத்ராயம் என்கின்றனர். ''भोक्ता भोग्यं प्रेरितारं च सर्वं प्रोक्तं त्रिविधम् (श्वे)'' என்கிற சுருதி இதைச் சொல்லுகிறது. இவ்விதம் சித்-அசித்-ஈச்வர தத்வங்களடங்கிய இவ்வுலகம் முதலில் எப்படியிருந்து? இவற்றின் முடிவு எத்தகையது? என்கிற கேள்விக்குப் பதிலாக '' सदेव सोम्येदमग्र आसीत् ब्रह्म वा इदमेकमेवाग्र आसीत्'' இத்யாதிகளில் 'அக்ரே' என்று உலகமுண்டாவதற்கு முந்திய காலத்தை = பிரளய காலத்தைச் சொல்லி அந்த காலத்தில் ப்ரம்மமென்கிற ஒரே பொருள் இருந்தது என்று சொல்வதுடன் நில்லாமல் 'एकमेवाद्वितीयम्' என்று இரண்டாவதான வேறு எதுவும் இருக்கவில்லை யென்றும் சொல்கிறது. ஸ்ருஷ்டிக்கு முன்னும், 'ஸ்தி' திக்குப்பின்பும் பிரளயமே உள்ளபடியால், நடுக்காலத்தில் அனேகத்வமும், முன்னும் பின்னும் ஏகத்வமும் சொன்னபடியாகிறது. ஆக வெவ்வேறு காலங்களைக் கொண்டு த்வைதத்தையும், அத்வைதத்தையும் ஒருவாறு உணரமுடியும். ஆனால்

'एकत्वे सति नानात्वं नानात्वे सति चैकता।
अचिन्त्यं ब्रह्मणो रूपं कस्तद्वेदितुमर्हति॥'

என்று 'ஏகத்வ' மும் 'அநேகத்வ' மும் ஒரே காலத்திலுள்ளதாகக் கூறுகிறபடியால் 'த்வைதம்' அல்லது 'அத்வைத' மாத்ரத்தில் விசாரம் முடிவதில்லை. தவிர, த்வைதமதத்தில் அத்வைதத்தைச் சொல்லும் வாக்யங்களுக்கு ஔபசாரிகமான அர்த்ததையும், அத்வைத மதத்தில் த்வைதத்தை சொல்லும் ''द्वा सुपर्णा सयुजा सखायौ ऋतं पिबन्तौ'' இத்யாதி சுருதிகளுக்கு ஔபசாரிகமான

அர்த்தத்தையும் கூறுகிறபடியால், இவர்களிருவரும் சுருதியின் ஒவ்வொரு பாகத்தை கைவிட்டபடியாகிறது. பேதம், அபேதம் இரண்டையும் ஸமமாக ஒப்பும் பேதாபேதவாதிகளான பாஸ்கரர் - யாதவப் ப்ரகாசர் என்கிற இருவர் மதத்திலும், சுருதிகளைக் கைவிட்ட குற்றம் வராவிடினும், பரஸ்பர விருத்தமானதை ஏற்பதால் உண்டாகும் குற்றம் தவிர்க்க முடியாததாகிறது. இங்ஙனம் பேதமும், அபேதமும், பேதாபேதமும் ஸரிவராது என்று தார்சனிகர் மூன்று பக்ஷங்களிலும் குறைவைச் சொல்கிறபடியால் ஸ்ரீராமானுஜர் எதை ஏற்றுள்ளார்? என்கிற கேள்விக்குப் பதில் கூறுவது கஷ்டமாகிறது.

ஸ்ரீராமானுஜரின் நான்காவதான பக்ஷம் -

இதற்காகவே 'பகவத்' ராமாநுஜர், 'த்வைதம், அத்வைதம், த்வைதாத்வைதம்' என்கிற மூன்றையும் தாண்டி நான்காவதான 'ஸரீர ஸரீரி பாவம்' என்கிற விசாரத்தை செய்ய வேண்டி வந்தது. ஆனால் ''ஸ்ரீராமானுஜர் பேதவாதியே'' என்று தான் பலர் நினைக்கின்றனர். அப்படியாயின் அபேதவாக்கியங்களை கைவிட வேண்டி வருவதில்லையா? என்றால், ''இல்லை, சேதனா சேதனங்களுக்கும் ப்ரம்மத்திற்கும் சரீர-சரீர பாவத்தைக் கொண்டு அவற்றையும் ஏற்கிறபடியால் த்வைதமதத்தில் வரும் தோஷம் இந்த மதத்தில் வராது'' என்று பதில் கூறுகின்றனர். வஸ்துவின் ஸ்வரூபத்தைக் கொண்டு ஏகத்வத்தைச் சொல்லாமல், கருத்தைக் கொண்டு ஏகத்வம் உள்ளதாகச் சொன்னால், இதுவும் ஒரு விதத்தில் 'ஔபசாரிக' மே ஆகிறபடியால், எல்லா சுருதிகளுக்கும் ஒரேவிதமான ப்ராமாண்யம் அங்கீகரித்தபடி ஆகாது - எனவும் பிறர் கூறுகின்றனர்.

இதற்கு சமாதானம் சொல்வதற்கு அனேகவித உபாயங்களைச் சொன்னாலும், பேதமே வஸ்துக்களில் இருக்கும் போது ஏகத்வம் ஔபசாரிகமாக ஆகுமே தவிர, ஒரு நாளும் முக்யமாகாது. 'சரீர சரீரி பாவ' த்தைச் சொன்னாலும், சரீரமும் சரீரியும் என்றும் வெவ்வேறே ஆகிறபடியால், வஸ்துக்ருதமான பேதமுள்ளபோது அபேதம் ஔபசாரிகம் தான் ஆக வேண்டியவரும்.

ஆனால் சரீர-சரீர 'பாவ' த்தில் உள்ள ஒரு சூக்ஷ்மம் கவனிக்கத் தக்கது. சரீர-சரீர 'பாவ' முள்ள இடத்தில் அனுபவங்கள் மூன்று விதமாக வரும். 1) 'அஹம் ஸ்தூல:' நான் பருமனாக உள்ளேன், முதலான அனுபவம் சரீரத்தை பிரதானமாகக் கொண்டு வருவது. 2) 'அஹம் ஸுகீ' நான் ஸுகமாக இருக்கிறேன் - முதலானவை ஆத்மாவை பிரதானமாகக் கொண்டு வருபவை. 3) 'அஹம் கச்சாமி' நான் செல்கிறேன் முதலானவை சரீரவிஶிஷ்டான ஆத்மாவை = சரீரம் - சரீரி இரண்டையும் சேர்த்து வரக்கூடியவை. இவை மூன்றும் உலக வ்யவஹாரத்துக்குச் சேர்ந்தவை. மூன்றிலும் ஆத்மாவும், சரீரமும் இரண்டும் விஷயமாகத் தோன்றும். எது பிரதானம்? எது அப்ரதானம்? என்பதில் தான் வ்யத்யாஸமே தவிர, மூன்றும் இவ்வுலக இயற்கைக்குச் சேர்ந்தவையே. இவை தவிர உலக வ்யவஹாரத்தைத்தாண்டி அலௌகிகமான ரீதியிலும் ஆத்மானுபவம் உண்டு.

கர்மயோகம், ஞானயோகம், (கேவல ஜீவனைப்பற்றியது), ஆத்மாவலோகனம் = கேவல ஜீவனைப்பற்றியது. , ஆத்மாவலோகனம் - கேவல ஜீவாத்ம ஸ்வரூபானுபவம், பரமாத்மானுபவம், என்கிற க்ரமத்தில் அனுபவம் வரும் போது, ஆத்மாவலோகனமென்கிற ஜீவாத்மாவின் அனுபவத்தில் 'अहम्' என்கிற அனுபவத்தில் சரீரம் தோன்றுது, கேவலம் ஜீவாத்மா மட்டும் தான் தோன்றும். பூரண ஞானியாக அவன் ஆகாததால் அந்த அனுபவத்தில் பரமாத்மாவும் விஷயமாக தோன்றுது. மேற்கண்ட விஷயங்களில் பண்டிதர்கள் அநேக விதமாக சர்ச்சையைக் கிளப்பலாம். ஆனால் தத்வ சாஸ்த்ரங்களையும் யோக சாஸத்ர ரஹஸ்யத்தையும் கொண்டு தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர வெறும் வாத ப்ரதிவாதங்களாலோ, தர்கத்தைக் கொண்டோ இதில் முடிவு எடுக்க முடியாது, எடுக்கவும் கூடாது. (இந்த ஜீவாத்மானுபலத்திலும் பரமாத்மானுபலத்திலும் உள்ள சூக்ஷ்மமான சில சிக்கல்கள் தான், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றா? வேறா? என்கிற வாதத்திற்கு இடம் கொடுத்துள்ளன. இந்த விஷயம் ப்ரக்ருதத்திற்கு சம்பந்தபடாததால், அதை இங்கு விவரிக்க தேவையில்லை). எந்த ஒரு விஷயத்திற்கும் அதற்கு சம்பந்தபட்ட விஞ்ஞானத்தை கொண்டு தான் முடிவெடுக்க வேண்டுமே தவிர, கேவலம் தர்க்கத்தைக் கொண்டு முடிவெடுக்கவே கூடாது. தர்க்கத்தைக் கொண்டு முடிவெடுக்க ஆரம்பித்ததால் தான் தற்சமயம் அத்யாத்ம சாஸ்த்ரமும் தர்க்க சாஸ்த்ரமாகவே ஆகியுள்ளது.

ப்ரக்ருதம், ஆத்மாவலோகனத்தில் கேவலம் ஜீவாத்மாதான் தோன்றுமே தவிர சரீராதிகள் எதுவும் தோன்றாது. ஏனெனில் சரீராதிகள் ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தில் சேருவதில்லை. ஜீவாத்ம ஸ்வரூபத்தின் கணக்கில் சரீராதிகள் வெளிப் பொருளே ஆகும். ணணணு இருந்தாலும், எல்லாம் எல்லா அனுபவங்களில் தோன்றாது. ஆக ஆத்மாவலோகனத்தில் சரீராதிகள் தோன்றாமல் ஜீவாத்மா மட்டும் தோன்றும். இங்ஙனமே, ஜீவாத்மாவும் பரமாத்மா வுக்கு சரீரமாகிறபடியால் கேவல பரமாத்மானுபவத்தில் ஜீவாத்மாவும் தோன்றாமல் பரமாத்மா மட்டும் தான் தோன்றும். ஜீவாத்மாவுக்கும் அவனுடைய சரீரத்திற்கும் ஸம்பந்தப்பட்ட அனுபவங்களில் வரும் விதங்களெல்லாம் ஜீவாத்மா பரமாத்மா விஷயத்திலும் ஸமானம். ஆகையால் கேவலம் ஜீவாத்மமர்த்தானுபவம், கேவல பரமாத்மமாத்ரானுபவம், விசிஷ்டானுபவம் என்று ஆத்மானுபவத்திலும் மூன்று விதம் உண்டு. கேவல ஜீவாத்மமாத்ரானுபவத்தில் பரமாத்மா விஷயமாகாமல் இருப்பது போல், கேவல பரமாத்மானுபவத்தில் ஜீவாத்மா விஷயமாவதில்லை. விஸி ஷ்டானுபவத்தில் மட்டுமே இரண்டும் விஷயமாவது போல் அவற்றின் சரீரசரீரயாவாதிகளும் விஷயமாகும். ப்ரம்மாண்டமான சூரியனுடைய வெளிச்சத்தில் சிறிய கை விளக்கின் ஒளியை காணமுடியும். இங்ஙனமே ஜீவாத்மாவும் பரமாத்மாவும் உள்ளபடியின் வெவ்வேறான அனுபவமும் விசிஷ்டானுபவமும் இயற்கையாகவே அமையும். சரீர சரீரி பாவத்திலுள்ள இந்த சூக்ஷ்மமான அம்சங்களைக் கணித்தே ஸ்ரீமத் ராமானுஜரும் பேதாபேத ச்ருதிகளை உதாஹரிக்கிறார். சரீரசரீரி பாவத்தையும், அந்தர்யாமித்வத்தையும் சொல்லும் ச்ருதிகள் இதில் அடங்கும்.

ஆனால் சரீரசரீரிபாவத்தை கொண்டு அபேதச்ருதிகளை நிர்வகிப்பது என்பது, ஸப்தத்தின் நிர்வாகத்திற்கு சம்பந்தப்பட்டதே தவிர , யதார்த்தங்களின் ஸ்வரூப நிஷ்கர்ஷத்திற்கு சம்பந்தபடாததாகையால், யதார்த்தங்களான சரீரமும், சரீரியும் அத்யந்தம் பின்னமே என்று ஏற்றுள்ளபடியால், இதைக்கொண்டு அபேதச்ருதிகளை நிர்வகிப்பது ஆரம்பத்தில் கூறியபடி ஔபசாரிகம் தான் ஆகும் எனனிகற விவதாம் இருக்கவே செய்யும் . ஆக த்வைதம், அத்வைதம் இரண்டும் போல் விசிஷ்டாத்வைதம் சுலபமாக அறிய முடியாததாகிறது.

ஸ்ரீராமானுஜர் பேதவாதியா?

'' இதில் ஸ்ந்தேஹமென்ன? ஸ்ரீராமானுஜர் பேதவாதி என்பது புதிது ஒன்றுமில்லையே!''என்றுதான் பலர் கூறுவர். ஆனால் வேதார்த்தஸங்க்ரஹத்தில் உள்ள **एवंच सत्यभेदो वा भेदो वा द्वयात्मकता वा वेदान्तवेद्यः कोऽयमर्थः समर्थितो भवति ?** என்கிற வாக்கியம் ஆழந்து யோசிக்கதக்கது. இந்த வாக்கியத்திலுள்ள 'கோயமர்த்தः' என்கிற இடம் மற்றும் கவனிக்கதக்கது. 'கிம் வாக்யம்' என்று கூறாமல் அர்த்தः என்கிற பதம் உள்ளது. ஆகையால் இந்த ப்ரச்னே வஸ்து ஸ்வரூபத்தை நிஷ்கர்ஷிக்க வந்ததே தவிர வாக்ய நிர்வாகத்திற்காக வந்ததல்ல என்பதும் மிக தெளிவு. இவ்வளவு தெளிவாக தானே கேட்டு கொண்ட பிறகு **कः संशयः भेद एव** , என்று கூறாமல் **सर्वस्यापि वेदवेद्यत्वात् सर्वं समर्थितम्** என்று ஏதோ தப்பித்துக் கொள்வது போல் ஏன் பதில் கூற வேண்டும். முந்திய விவரண வாக்கியம் இதை விட கஹனமாக உள்ளது.

இந்த கட்டத்தின் ஆரம்பத்தில் வ்யாக்யானத்தில்

स्वविरचितग्रन्थस्यापातप्रतीतार्थमात्रमेव केवलं न विवक्षितम्; अपित्वतिगंभीरत्वात् अर्थगौरवमस्तीत्यभिप्रायेणाह

என்று அவதாரிகை உள்ளது. அவ்வளவு கம்பீரமான அர்த்தத்தை வாக் பலத்தாலோ தர்க்க பலத்தாலோ சாதிக்க புறப்பட்டால் என்னவாகும்! இங்ஙனமே முக்தாத்மாக்களுக்கு தேஹம் உண்டா இல்லையா என்று விசாரிக்கும் போது இரண்டு பக்ஷமும் உண்டு என்று ஸித்தாந்தம் கூறிய போது அந்த சரீரம் எப்படி வந்தது என்பதற்கு பதில் உள்ளதே தவிர சரீரமில்லாத பக்ஷத்தில் அவன் நிலை என்ன என்பதற்கு சரியான பதில் என்ன என்பதையும் ஆழ்ந்து யோசிக்கவேண்டும்.

भेदव्यपदेशाच्चान्यः என்கிற ஸூத்திரத்திலுல் பிந்நः என்கிற பதத்தில் தோன்றும் பேதத்திற்கும் அந்यः என்கிற பதத்தில் பேதத்திற்கும் வித்யாசம் உள்ளது தெளிவு. இல்லாவிடில் புனருக்தியாகும்.

तदनन्यत्वं अनन्याधिपतिः योऽन्यां देवतामुपास्ते अन्योऽसावन्योऽहमस्मि इति न स वेद योऽन्यत्रात्मनः

இத்யாதிகளிலும் அந்ய பதமேயுள்ளது கவனிக்கதக்கது.

இதெல்லாவற்றைக் காட்டிலும் கடம் படம் முதலான எதார்த்தங்களுக்கும் மண், கடம் என்கிற பதார்தங்களுக்கும் இருக்கிற பேதத்தை கவனிக்க வேண்டும். கடமும் படமும் என்றும் தெற்கு வடக்கு போன்றது. என்றும் ஒன்றுகாதது. மண்ணும் கடமும் அப்படிப்பட்டதல்ல. **मृदयं घटः** என்ற அபேத ப்யவஹாரத்திற்கு இடம் கொடுப்பவை பூர்ணமான அபேதமும் வராது. அப்படியானல் பர்யாய பதம் போல் ஆகிவிடும். அப்போது **घटः कलशः** என்பது போல் ஆகிவிடும். இதனல் உபாதானோபதேயபாவம் உள்ள இடத்தில் தோன்றும் பேதத்திற்கும் அது இல்லாத (கட - பட) இடங்களில் தோன்றும் பேதத்திற்கும் வ்யத்யாசம் உள்ளது கவனிக்கதக்கது. ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவுக்கும் (**धर्मभूतज्ञान** மூலமாக) **उपादानोपादेयभाव** ம் நம் சித்தாந்த்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் கட, படங்களுக்குள்ள பேதம் போன்ற பேதம் ஜீவ பரமாத்மாக்களுக்கு கிடையாது. வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானத்தில் **अभेदानुभवाविरोधी** நம் சித்தாந்தம் என்று கூறப்பட்டிருப்பதற்கும் இது தான் தாத்பர்யம். (சில புத்தகங்களில் அச்சு பிழை உள்ளது. மூல மாத்ருகைகளை பார்த்து சோதனை செய்ய வேண்டும்). **मृदो घटो भवति मृदयं घटः** என்கிறபடி இருவித அனுபவங்களும் உலகில் உள்ளது.

ஆக, ஶரீரஶரீரி பாவமுள்ள இடங்களிலும், உபாதாமோபாதேய பாவமுள்ள இடங்களிலும் ஸமானதிகரண ப்ரயோகமும் அதற்கு மூலமான அனுபவமும் ஸமானம். ஆகையால் நாம் த்வைதிகளை போலோ தார்க்கிகர்களை போலோ பேதவாதிகளல்ல. அவர்களிருவரும் ஶரீரஶரீரி பாவத்தையும், உபோதானோ பாதேய பாவத்தையும் ஏற்கவில்லை. இவையெல்லாவற்றையும் கொண்டே நாம் ஆரம்பத்தில் கூறிய ப்ரச்னைகளுக்கு பதிலை யோசிக்க வேண்டும்.

விசிஷ்டாத்வைதமா ? ஸவிஸேஷாத்வைதமா ?

'விசிஷ்டாத்வைதம்' என்கிற மதத்தை விவரிக்கும் போது நாம் **''सूक्ष्मचिदचिद्विशिष्ट-स्थूलचिदचिद्विशिष्टयोः अद्वैतम्''** என்றும் **चिदचिद्विशिष्टे अद्वैतम्** என்றும் பொருள் கூறுகிறோம். இந்த விவரண காரண வாக்யங்களிலுள்ள அத்வைதம், ஏகம் இத்யாதி பதங்களை மட்டும் நிர்வகிக்க உதவுகிறது.

இதிலும் ஒரு ஸூக்ஷ்ம அம்சம் உள்ளதை நாம் கவனிக்க வேண்டும். ஸூக்ஷ்ம சிதசித் என்கிற இடத்தில் உள்ள ஸூக்ஷ்ம பதத்திற்கு பொருள் என்ன? **सूक्ष्मत्वं नामरूपविभागानर्हत्वम्** என்பது ப்ரசித்தம். அப்படியானல் சித் அசித் என்கிற பதத்தை

அங்கு எப்படி உபயோகிக்கலாம்? தேவதத்தாதி நாமங்களும் பஶு: மனுஷ்ய: இத்யாதி நாமங்களும் இல்லை என்கிற படி சிலர் விவரிக்கின்றனர். அப்படியாகில், நாமரூபவிபாக என்கிற இடத்தில் அர்த்தசங்கோசம் செய்யவேண்டிபரும். தவிர **तत् कदाचित् स्वस्मात् स्वशरीरतयापि पृथग्व्यपदेशानर्हसूक्ष्मदशापन्नचिदचिद्वस्तु शरीरम् तत् कारणावस्थं ब्रह्म** இத்யாதி ஶ்ரீபாஷ்ய வாக்யங்களுக்கு விருத்தமாகும். இந்த விஷயம் அர்த்தமாகவேண்டுமானால் **न्यग्रोधफलमाहर** இத்யாதி வாக்யங்களை கவனிக்க வேண்டும். இது குரு சிஷ்ய ஸம்வாத ரூபமானது. அந்த ப்ரகர்ணத்தின் ஸாரம் ஆலம்பழமொன்றை கொண்டு வா. இது குருவின் வசனம். சிஷ்யன், கொண்டு வந்தேன் ஸ்வாமி. குரு. அதை இரண்டாக பிள. பிளந்தேன். குரு. அதில் என்ன காண்கிறது. சிஷ்யன் - சிறு சிறு தான்யங்கள் (கடுகு போல்) உள்ளன. குரு - அதில் ஒன்றை எடுத்து பிளந்து பார். சிஷ்யன் - பிளந்துள்ளேன். குரு - அதில் என்ன உள்ளது என்று பார். சிஷ்யன் - அதில் ஒன்றுமே இல்லை குரு. குரு - அதில் ஒன்றுமே இல்லை என்கிறுயே அப்படியாகில், இவ்வளவு பெரிய ஆல மரம் அதிலிருந்து எப்படி வந்தது. வேறு விதையிலிருந்தோ, சிறு கல்லிலிருந்தோ ஆல மரம் வருமா? இவ்விதம் தான் இவ்வுலகத்திற்கு காரணமான பரப்ரஹ்மமும் அதி ஸூக்ஷ்மமானதே.

ஆலமரத்தின் விதை எல்லோரும் அறிந்ததே. ஆனாலும் அதிலேயே இவ்வள வு ஸூக்ஷ்மமிருக்கும் பக்ஷத்தில், பரப்ரம்ம விஷயத்தில் உள்ள ஸமஸ்யைகளைப் பற்றி என்ன சொல்ல! இதற்காகவே இந்த லேகனத்தின் ஆரம்பத்தில் இதில் உள்ள சிக்கல்களை ப் பரிந்து கொள்வதற்காக இதை புதிர் என்று குறிப்பிட்டது. ஆலம் விதையில் அடங்கியுள்ள ரஹஸ்யத்தையே நம்மால் புரிந்து கொள்வது ஸாத்யமில்லாத போது பரப்ரம்ம தத்வத்தை குறித்து என்ன சொல்ல முடியும். ஆலம், அரசு, மா, பலா, முதலான கோடிக்கணக்கான பொருள்களுக்கெல்லாம் விதை ஒன்றே என்று இருந்தால் எப்படி இருக்குமோ அப்படி உள்ளது பரப்ரம்மம். **संसारमहीरुहस्य बीजाय** என்கிற இடத்தில் தர்க்க சாஸ்த்ரப்படி (பீஜாய = நிமித்தகாரணாய) என்று வ்யாக்யாம் செய்தாலும் வேதாந்த சாஸ்த்ரப்படி உபாதான காரணமே. இது எப்படி ஸாத்யம் என்றால், இக்கட்டுரையின் ஆரம்பத்தை மறுபடி படிக்வும். ஸகலலோகவிலக்ஷணமாகவும், ஸகலபுத்யதீதமாகவுமுள்ள அத்யத்புத பொருளின் விஷயத்தை ஊகித்து கொஞ்சம் உணறுவதே கடினம். அறிவதென்பது ஸாத்யமில்லாதது. ஆகையால் விசிஷ்டாத்வைதமென்கிற தத்வம் பேதம் அபேதம் பேதாபேதம் இமமூன்றையும் மீறியது. அது எங்ஙனம் என்பதை விளக்கலாம்.

ஸவிஶேஷாத்வைதம்

விசிஷ்டம் என்கிற பதத்திற்கு சிதசித் விசிஷ்டம் என்று அர்த்தம் கொண்டால், காரண வாக்கியங்களுக்கு மட்டும் இந்த தத்வம் ஸம்பந்தப்பட்டதாகிறது. நமக்கு இது தவிர, ஸகுண நிர்குண வாக்கியங்களுக்கும் ஸாகார நிராகார வாக்கியங்களுக்கும்

பூரண ப்ராமாணயம் சொல்ல வேண்டியிருக்கறது. ஆகையால் விசிஷ்டபதம் ஸவிசேஷபதத்திற்கு சமம் என்று கொள்ளவேண்டும்.

घटविशिष्टं भूतलं सघटं भूतलं गुणविशिष्टं सगुणं இத்யாதிகளை போல் இதுவும். ஆக 'விசிஷ்டாத்வைதம்' என்றுல் सविशेषाद्वैतम् என்று கொள்ள வேணும்.

विशेषाश्च गुणविग्रहविभूतयः।एतद्विशिष्टं ब्रह्म एकमेवाद्वितीयम् गुणाश्च अपहतपाप्मत्वादयोऽनन्ता:।विग्रहाश्च शुभाश्रयाः हिरण्मयः पुरुषः एत्यादिश्रुतिवेद्याः अनन्ताः अनन्ताः।विभूतिश्च नित्यलीलाभेदेन द्विविधा।एतदन्तर्गत एव सर्वोऽपि चिदचिद्वर्गः। अजश्च विशिष्टाद्वैतसिद्धान्ताभिमताः सर्वेऽपि विषयाःएतत्पदविवक्षिताः விசேஷங்கள் என்றுல் குணம் விக்ரஹம், விபூதி என்று அர்த்தம். குணங்களாவன அபஹத பாப்மத்வாதிகள் அநந்தங்கள். விக்ரஹமாவது -ஸுபாச்ரய பூதமான ''ஹிரண்மய: புருஷ:'' இத்யாதி ச்ருதிவேத்யமான திவ்யமங்கள மூர்த்திகள் விபூதியாவது நித்யம், லீலா என்று இருவிதம். சேதனாசேதனங்களெல்லாம் இந்த பதார்த்தத்தில் அடங்கும். இதனுல் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் மூலபூதமான எல்லா விஷயங்களும் அந்த பதத்தில் அடங்கும்.

இப்படிச் சொல்வதனுல் நிர்விசேஷவாதிகள் சொல்லும் ப்ரஹ்மா நிர்குணம் நிர்தர்மகம நிராகாரம் என்ற கூற்றுக்கு ப்ரஹ்மா ஸகுணம், ஸதர்மகம், ஸாகாரம் என்று நிர்விசேஷவாதத்திற்கு நேர் இதிராக இதுஸவிசேஷாத்வைதம் ஆகிறது என்று ஸித்தாந்தத்தின் பூரணமான அர்த்தம் சொல்லப்பட்டதாகிறது. குணங்கள் பொய், உருவம் பொய் என்று சொல்லுகிற நிர்விசேஷவாதத்திற்கு நேர் மறுப்பாக இவையெல்டலாம் மெய்யே என்கிற நம் ஸித்தாந்தம் இந்த பதத்தின் அர்த்தத்தில் அடங்கும். தர்சன உலகில் வழக்கில் உள்ள நிர்விசேஷாத்வைத பதத்திற்கு நேரெதிரானது இந்த ஸவிசேஷாத்வைதம் என்று உலகம் புரிந்து கொள்வதற்கு மிகவும் சுலபமாகிறது.

உலகம் பொய் மெய் என்று இவ்வளவு எதிரான் வாதம் வந்ததற்கான காரணங்களையும் விமர்சிக்கவேண்டும். அப்போதுதான் உண்மை விள்ங்கும். ஆனல்ட அது ப்ரத்யேக விஷயம்.

இத்துடன் பின் சொல்லிய சாந்தோக்ய ப்ரகரண (6-12-1) ஆல விதையின் விளக்கத்தையும் சேர்த்தோமானுல் இந்த ஸவிசோஷாத்வைதம் யாரும் மறுக்கமுடியாத கொள்கையாகிறது. விதையில் மரமே அடங்கி ஒடுங்கி இருப்பதுபோல் எல்லாமே பரப்ரஹ்மத்தில் அடங்கி ஒடுங்கி இருக்கும்போது, இருந்தும் இல்லாததுபோல் ஆகிறது. ஒரு மஹாகவி, மஹாகலலக்காரன் தூங்கும் போது அவன் கவியா கலலக்கார? என்று கேட்டால் உலகு அவனை மஹாகவி


தூங்குகிறான் என்றுதான் சொல்லும். அவர் தூங்கும்போது கவிபாடுகிறாஅப்படியிருக்க அப்போது கவியேன்று சொல்லுவது பொருந்துமா? தூங்கும்போது அவர்கவியில்லை கவிபாடும்போது மட்டும்தான் கவி என்று யாராவது கூறினால் அவர் நகைக்குள்ளாகிறார் ஏன்? கவித்வம் அவர் இயற்கை குணம் பாடும்போது அந்த குணம் அல்லது தர்மம் அவளிப்புடகிறது. இல்லாதபோது உள்ளடங்கியிருக்கிறது. அப்படி அந்த குணம் இயற்கையாகயில்லாமல், வேறு காரணங்களால் (ஆவேசத்தாலோ வேறு காரணங்களாலோ தாத்காலிகமாக கவிபாடினால்) அவன்ஸ்வயம் கவியில்லை. ஆவேசம் வந்தபோது மட்டும் பாடுவார் என்று கூறுகின்றனர். அது இயற்கையாக இருந்தபொழுத அப்படி கூறுவது தபருகிறது.

இவ்விதமே பரப்ரஹ்மமும் என்றும் ஸ்ருஷ்டி ஸ்ருதி லயாதி காரணம் தான் அதனுயை குணங்களும் அவ்விதமே அந்தந்த ஸமயத்தில் அவை நமக்கு காண்கின்றன அதாவது ப்ரஹமம் என்றும் குணவிக்ரஹவிபூதிகளுடன் விசிஷ்டமாகவேதான் உள்ளது அது சில ஸமயம் நம் சிற்றிவிக்கு காண்கிறது. சில ஸமயம் அப்படியல்ல. ஆகையால் 'நித்யம் ஸவிசேஷமேவ ப்ரஹமா என்று நாம் கூறினால் இதை எந்த நிர்விசேஷவாதியாவது மறுக்கமுடியுமா?

வெறும் சப்தங்களை திருப்பித்ங திருப்பி கிளிப் பிளைகளைப் போல் கூறிக்கொண்டிருந்தால் சப்தங்கள்தான் வளருமே தவிர தத்வம் தூர விலகி கொண்டே இருக்கும். பிறவிக் குருடனின் குழந்தை பால் புகட்டும் போது பரை ஏறி இறந்துவிட்ட கதையும், அதை அவனுக்கு விளக்க முற்பட்டு த்ருஷ்டாந்தந்தங்களை வளர்த்துகொண்டேபோன கதையும் ப்ரஸித்தமானவை. நம்மில் பலர் பரமாத்ம தத்வ கேஷத்ரத்திற்கும் பிறவிக் குருடர் போன்றவரே இதனுடைய பலன் தான் இன்று ஏற்பட்டுள்ள ஸகல விதமான கலக்கங்களும், மத பேதங்களும், ஸம்ப்ரதாய பேதங்களும். இதனால் ஏற்பட்டுள்ள அநர்த்தங்களும் அநந்தம்.

மஹாபுருஷர்களும் தாங்கனள் அறிந்த உண்மையை அப்படியே வெளியிடமுடியாத தர்ம சங்கடங்கள் நிறைய உண்டு. நாம் அவர் கூறியதை அப்படியே எடுத்துக்கொள்ளாமல் அவர் கருணையை நோக்கி தவம் அருந்து அவர்கள் கருணையால்தான் அவர்கள் கருத்தினை அறியமுடியும்.

ஆக, விசிஷ்டாத்வைத தத்வம் தான் என்றும் யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால் அது எது ஆழ்ந்து சிநிதித்து நாம் முதலில் உணர்ந்து அறிந்து மற்றவர்க்கும் புகட்டும் பக்ஷத்தில் வேறு ஸித்தாந்தங்கள் தலையெடுக்காது. ஆனால் உலகு பலவிதம் நல்லது கெட்டது கலந்தால்தான் உலகம். ஆக அயலாருக்கு போதிப்பதைவிட நாம் முதலில் உணர்வோம் வேண்டியவர்களுக்கு ஆஸ்தையுடன் அறிய விரும்புபவர்க்கு உணர்த்துவோம்.



ஸ்வாமி தேசிகன் (அயிந்தை)

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

32 படிகள் ஏற வேண்டாமா?

(ஸ்ரீமதுபயவே. வித்வான் ஸேவா ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமி)

ஆசார்ய பரம்பரையை வணங்க வேண்டும். பிறகு தான் எப்படிகளிலும் ஏறமுடியும். குறிப்பிட்ட இடத்தை அடையலாம். ஏறுமுகம் தானே நமக்கு. இதை ஏன் செய்ய வேண்டும்! ஸ்வாமி தேசிகன் விளக்கியருள்வார்.

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம்புக்கு
யானடைவே அவர் குருக்கள் நிறை வணங்கிப்
பின்னருளால் பெரும் பூதூர் வந்தவள்ளல்
பெரிய நம்பி யாளவந்தார் மணக்கால் நம்பி,
நன்நெறியை அவர்க்குரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனிசடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்னிறவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே

என்று சொன்னால் போதுமே! ப்ரபந்தங்களை ஸேவித்தும் ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம் என்று சொல்ல வேண்டும். ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: என்ற தனியனைச் சொல்லிவிட்டால் எல்லா ஆசார்யர்களையும் சொன்ன மாதிரி ஆகிவிடும். ஸகலாசாரிய ஸ்வரூபம்தாவே தேசிகன்..... (குரு பக்தி புஷ்டியாக வேண்டுமளவு குருவை ப்ரகாசப்படுத்த வேண்டும்.)

(படி ஒன்று)

எதற்கும் அத்ருஷ்டம் வேண்டும். நமது ஆன்மாகடைத் தேற வேண்டும் என்று நினைப்பதே அத்ருஷ்டம் தானே! குணங்கள் நம்மை இழுக்க, கர்மங்கள் அதில் நம்மை அழுத்த எங்கெங்கோ சென்று எதை எதையோ கண்டு வேண்டாததையெல்லாம் கொண்டு திண்டாடாமல் இருக்க விதி வாய்க்க வேண்டாமா! விதியிருந்தால் தான் மதியில் தெளிவு ஏற்படுகிறது. நாராயணன் தான் பரதேவதை என்ற திடமான எண்ணம் படிப்பினால் மட்டும் வருவதில்லை. அதுவந்து விட்டதே முதற்படியில் ஏறிவிட்டோம்.

(படி இரண்டு)

எதை எதையோ ஸாரம் என்று நினைத்து சாரிசாரியாக ஜீவர்கள் எங்கோ சாய்ந்த வண்ணம் இருக்கின்றனர். எதை எதை எல்லாமோ படித்துவிட்டு கரைகண்டுவிட்டதாகப் பூரிப்பும் ஏமாற்றமும் அடைந்து வீணாகின்றனர். ஸாரம் ஸாரம் ஸாரதரம் என்றெல்லாம் உண்டு. ஸாரதமமானது கிடைத்து விட்டால்

மற்றவை எதற்கு! வாழ்க்கைக்கு ஒவ்வாத படிப்பு சுமைதானே! ஆன்மாகடைத்தேற ஸாரதமத்தை ஏற்க வேண்டும். குளத்தில் நமக்கு வேண்டுவது குட ஜலம்தானே!

(படி மூன்று)

நாம் யார், பகவான் யார்? நமக்கும் அவனுக்கும் என்ன உறவு? பகவானையே உண்டில்லை என்று செய்யும் பொழுது நம்மை சீர்குலைத்து விடுகின்றனர். தனக்கும் புரியாமல் பிறருக்கும் புரியாமல் ஏதேதோ சொல்வது வேதாந்தமாகி விட்டால் ஐயோ பாவம் வேதம் என்ன செய்யும்! உலகம் பொய்த்தோற்றம், நானே பரம்பொருள் என்ற எண்ணமும் வாதமும் கேட்க நன்றாக இருக்கும். நிலைதந்ததாரகனாயிருப்பவன் பகவான். அவன் துழாய்முடியான். இறைவன் அவனே. அவனுக்கு இவ்வையம் உடம்பு, அவன் ஆத்மாவையும் நடத்துகின்றவன் பரமாத்மா. அவனுக்கு அடியோம். இங்கும் அங்கும் விலையின்றி நாம் தாஸர்களே. இம்மெய் பொருள் புரிந்து விட்டது. படி மூன்றில் ஏறிவிட்டோம்.

(படி நான்கு)

சாத்திரங்கள் பல கற்று என் பயன்! சாத்திரங்களுக்கு அளவில்லை. முக்கியமாக எதை சொல்லுகின்றன என்பதை உணரவேண்டும். எவ்வளவோ என்று திகைக்க வேண்டாம், அறியவேண்டும், பொருள் ஐந்தே அடையப்படும் பரமாத்மாவின் உருவம், (2) அடைய முயற்சிக்கின்ற ஜீவனின் ஸ்வரூபம், (3) அடைவதற்கு உபாயம், (4) இதுவரை அடைய வொட்டாமல் செய்த தீவினைகள் (5) அடைந்து நாம் பெறும் பாக்யம் இதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட்டேன். நாலாம்படி ஏறியாயிற்று.

(படி ஐந்து)

உடலையே ஆன்மா என்று நினைப்பதும், நான் ஸ்வதந்திரன் என்று நினைப்பதும் நம்மை அழிக்கின்றது. முப்பொருளை அறியாவிட்டால் எப்பொருளும் பயன்படாது. இவ்வுலகினைப் புரிந்து கொள்ளாதவரையில் வேதாந்தம் எடுபடாது. நமக்கு இதை வேதாந்திகளே சொல்லிவைத்தனர். உலகமே முக்கூறில் உள்ளது. அறிவற்றவஸ்து, அறிவானவஸ்து இவையிரண்டினையும் ஆளும் வஸ்து என்பது. இந்த தத்வத்தைப் புரிந்துக்கொள்ள வேண்டும். சித் அசித் இறை என்பதை உணர்ந்த பின் இப்படியிலும் ஏறிவிட்டோம்.

(படி ஆறு)

எது தெய்வம்! மரக்கிளையில் உள்ள பறவைகள் போல் கணக்கில்லையே! எதை அடைவது? எதை வேண்டுவது? எதை த்விர்ப்பது என்பது பெரிய புதிராகிவிட்டது. மதங்கள் பலதோன்றிவிட்டன. கூட்டமும் கூடிவிடுகிறது. மதிமயக்கத்திற்குப் எத்தனையோ பேர் பலியாகிவிட்டனர். முன்னோர் சொன்னதைக் கேட்டால்தான் நல்லது என்று! வேதம் கூறுகிறது: ஸ்ரீமந்நாராயணன் தான் பரதேவதை என்று. போதமரும் திருமாதுடன் நின்ற புராணன் தான் ஆதி. மற்றை தெய்வம் நாடுதிறே! என்றார் நம்மாழ்வார். இத்துணிவு வந்துவிட்டால் ஆறு ஏறுவிட்டீர்கள் (இதுகடினமானபடி)

(படி ஏழு)

எத்தனையோ பிறப்பு! எத்தனையோ அவதிகள்.. கர்மங்கள் அநாதி, நம் சாமர்த்தியம் எல்லாம் அதனிடத்தில் ஒன்றும் செய்ய முடியாது. இப்படியே பிறப்பும் இறப்பும் தொடர்சங்கலிதான். விடிவே இல்லை. இப்பாழிலிருந்து விடுதலை அடையமுயற்சிக்க வேண்டாமா! மோக்ஷம் என்பதற்கு நம்மை ஆட்டிப் படைக்கும் கர்மங்களிலிருந்து விடுபடுவது என்று பொருள். அந்த நிலை வேண்டுமென்று ஆசை ஏற்பட்டுவிட்டதா! இப்படியிலும் ஏறிவிடலாம்.

(படி எட்டு)

மோக்ஷமா? இப்பொழுதே எதற்கு! என்று நினைப்பவன் ஒருவன். இந்த ஸம்ஸாரம் தொலைந்து இப்பொழுதே மோக்ஷம் அடைந்துவிடலாமே என்று துடிப்பவன் மற்றொருவன். பக்தியானால் விலம்பமாகவரும். ப்ரபத்தியானால் கோரினகாரத்தில் வரும். ஆக மூலவினையழிய முகுந்தனுடைய திருவடியை அடைதலாகிற ப்ரபத்தி முக்யம். பக்திக்கும் அது தலைகட்ட ப்ரபத்தி முக்யம். எட்டில் ஏறிவிட்டோம்

(படி ஒன்பது)

உபாயம் பண்ணாமல் பலன் திடைக்குமா! மோக்ஷத்திற்கு ஸாதனம் கர்மயோகம் க்ஞானயோகம் பக்தியோகம் என்பவை மூன்று. இவற்றில் சக்தியற்றவர்கள் செய்யவேண்டுவது ப்ரபத்தியொன்றுதான். எல்லோருக்கும் எளிது ப்ரபத்தி. மிகக்கடினமானது பக்தி. பக்தி-ப்ரபத்திகளைத் தவிர மோக்ஷோபாயம் வேறு இல்லை 'உறுதி' என்ன சந்தேகம்! ஒன்பதில் ஏறிவிட்டோம்.

(படி பத்து)

மோக்ஷம் மிகப் பெரியபலன், ப்ரபத்தி மிகச்சிறிய உபாயம். மோக்ஷத்தை அடைய இது எப்படி கூடும்! சந்தேகமேயில்லை. ஒன்று தெளிவு, ப்ராம்மணனுக்குத் தான் மோக்ஷம் என்றும், அவனுக்குத்தான் அதிகாரம் என்றும் சொல்வது தவறு. அந்தணர்-அந்தியர் யாவராயினும் இதற்கு யோக்யதையுண்டு. நொந்தவர்தான் அதிகாரி. அது யாராயிருந்தால் என்ன? நல்ல தெளிவு. பத்தும் பெற்றாகிவிட்டது.

(படி பதினொன்று)

ப்ரபத்திக்கு அங்கங்கள் உண்டு. எத்தனையோ ஸந்தேகங்களைப் போக்கவேண்டுமே. எம்பெருமானைவிட்டுப்பிறரிடம் சென்று யாசிக்க வேண்டும் என்ற நிலை கூடாதல்லவா! ஒருவனே உறவு, ஒருவனே துணை ஒருவனே எல்லாம் என்ற எண்ணம் வேண்டுமே. ஏற்பட்டு விட்டது என்றால் பிழைத்து விட்டோம் ஏறிவிட்டோம்.

(படி பன்னிரண்டு)

நம்மைக் காப்பவன் அவன் ஒருவன்தான். நமக்கும் அவனுக்கும் உள்ள உறவு அழிக்கவும் அழியாது. நித்ய ஸம்பந்தம் நமக்குண்டு. அவன் நம்மைக் காக்காமல்

விடுவானோ! இதை நீ மறவாதே! என்றல்லவா நம் பெரியவர் சொன்னது. அன்றியும் நமது பரத்தை அவனுடைய திருவடியில் கருணையுள்ளவனிடத்தில் நம் மீது மிகக் கருணையுள்ளவனிடத்தில் நம் மீது மிகக் கருணையுள்ளவர்கள் வைத்து விடுகின்றனர். 13க்குச் சொல்வோம்.

(படி பதிமூன்று)

அப்பாடா, நம்மால் கல்பகல்பமாகப் பாடுபட்டாலும் கழிக்க முடியாத விளைதளை யகற்றி பரத்தை பெருமாளுடையை திருவடிவாரத்தில் வைத்து விட்ட பிறகு எம்பெருமானும் என்னவரம் தர என்று வினவுகின்றானே! நமக்கு இனி என்ன கவலை! மாசுச: என்றவன் தானே அவன். இந்த அடைக்கலம் நமக்கு சுலபமாக கிடைத்தது. ஆசாரியன் கருணைதானே நம் கவலையின்மைக்கு காரணம். நிம்மதியாக அடுத்த படியில் ஏறுவோம்.

(படி பதினான்கு)

ப்ரபத்தி பண்ணியாகிவிட்டது. முன்னுக்கும் பின்னுக்கும் வாசி தெரிய வில்லையே! தெரியும். தீயசெயல்களில் புத்தி செல்லாது. தனது நிலைமை அறிந்து விடுவார்கள் நித்யம் நைமித்திகம் என்ற வரிசையான கர்மங்களையே செய்வர். ப்ரபத்தி ஸ்வரூபம் அறிந்து செய்து கொண்டவனுக்குப் பல விசேஷ நிலைகள் தானே ஏற்பட்டுவிடும். அவமானப்படுத்தினால் சீற்றம் கொள்வதில்லை தன்னை அவமதித்து தன் பாபத்தைப் பிறர்பெறும் பொழுது அவர்களைப் பார்த்து ஐயோ என்று இறக்கம் தன் குற்றத்தை குறிபிட்டவர்களிடம் நன்றி, பகவத் ஸங்கல்பம் இது என்று எண்ணுதல், தன்பாபம் கழிவதை எண்ணி மகிழ்தல் ஸ்வரூபம் உபாயம் புருஷார்த்தங்களில் தெளிவு. இது சாதாரணமாக சம்பாதிக்கக்கூடியதா! ஏறிவிட்டோம் பெரிய படியை.

(படி பதினைந்து)

ப்ரபத்தி ஆனபின்பு என்ன செய்ய வேண்டும். மோக்ஷமே கிடைத்துவிடப் போகிறது. எதற்காகவும் எதையும் செய்ய வேண்டாமே. மார்மேல் கைவைத்து உறங்குவாரைப் போன்றது தானே நமது நிலை. ஆம்! ஏமாந்துவிடக் கூடாது தேவர்களிடம் பட்ட கடனும் தீர்ந்துவிட்டது. நல்ல பாசுரங்களைப் பாடி, நித்யஸூரிகள் போல் பெருமகிழ்ச்சியோடு இங்கு பெருவாழ்வு வாழலாமே! ஸ்ரீவைகுண்டம் சென்றடைய வேண்டிய யோகம் இங்கே கிடைக்கப் பெறலாமே! என்ன மகிழ்ச்சி! யாகம் செய்வதில்லை. வேதம் ஓதுவதில்லை. ஸந்ததியும் இல்லை என்றால் 3 கடன்கள் கழியாவே! கடன் தீர்க்காமல் போகவிடுவரோ! அதுதான் ப்ரபத்தி செய்து கொண்டவனுடைய பெருமை. இதனால் 3 கடன்கள் தாமே தொலைத்துவிடுகின்றன. இங்கு இதைக்காட்டிலும் வேறு என்ன வேண்டும். இப்படி இது முக்கியமான படிதான்.

(படி பதினாறு)

இங்கு பகவானுடைய கல்யாண குணங்களைப்பாடி மகிழ்வோம். அவ்வாறு மகிழ்சியடையும் பாகவதர்களுடன் கூடிக் குலாவுவோம். அத்தகைய மகான்களுக்கு அடிமை செய்து வாழ்வோம். சாஸ்திரங்கள் காட்டிய வழி பிறழாது நடந்துக் கொள்வோம். நல்லபடியாக நாட்கள் கழிந்தால் வருவதொரு பேரானந்தம்!

(படி பதினேழு)

இது கடினமான படிதான். நமக்கு அஞ்ஞானத்துக்கு குறைவாயில்லை. சொந்தமான அஞ்ஞானம். பிறரால் திணிக்கப்பட்ட அஞ்ஞானம். எதை செய்வது எதை விடுவது! லோகம் விசாலம் - அமைப்புகள் ஆனந்தம், ஆசாரம் நடை உடைபாவனைகள் ஏராளம், அநாசாரம் வா மாசாரம். ஞானிகள் குறைவு, இந்த நிலையில் சந்தேகம் விபரீதக்ஞானம் வேறு. கடைத்தேற வழியில்லை பெரியோர் சொன்னார்கள். சாஸ்திரம் நமது நன்மைக்கே ஏற்பட்டது. அதற்கு வேண்டியவன் வேண்டாதவன் கிடையாது. அதில் சொல்லியிருப்பதைச் செய்வதும் தடுத்திருப்பதை விடுவதும் தான் நமக்கு நல்லவழி. காலம் மாறும். வழியை சொன்ன வேதம் மாறவில்லை. அது கொண்டு நமக்கு இறங்கும் அஞ்ஞானமென்னும் இருளை அகற்றிக் கொண்டு அவை கூறும் நியமங்களைப் பின்பற்றத்தான் வேண்டும். நல்ல முடிவு. சரியான படி புரிந்துவிட்டது. பதினேழையுமேறிவிட்டோம்.

(படி பதினெட்டு)

ப்ரபன்னனுக்கு பாவம் சேருமா! சேராதா! இது பெரிய கேள்விதான். ப்ரபத்தி செய்து கொண்டால் பாபங்கள் தொலைகின்றன. பிறகு பாபம் சம்பவித்தால் அவையும் பரிஹாரத்தினால் தொலைந்துவிடும். செய்ததை நினைத்து வருத்தம், மேற்படி அதை செய்யாமை. அப்படி செய்ததற்கு பிராயச்சித்தத்திற்கு முனைவது. ப்ராயச்சித்தம் செய்து கொள்வது என்கிற நாலு படிகளாலும் பாபங்கள் கழிந்துவிடும். மோக்ஷத்தையே அளிக்கும் ப்ரபத்தி அண்டவிடாதே என்று சொன்னால் கேட்காமல் போகுமா! சிறுசிக்ஷையால் தூய்மை பெறலாம். இப்படியில் நம்பிக்கை வேண்டும்.

(படி பத்தொன்பது)

முக்கியமானது நாம் வசிக்குமிடம் எத்தகையது என்று பார்க்க வேண்டும். அதைச் கொண்டுதான் நமது போக்கு அமையும். பகவத்க்ஷேத்ரம் முக்யம். அது கிடைக்காவிட்டால் பாகவதர்கள் வசிக்குமிடம் மிகவும் ச்ரேஷ்டம். ஸ்ரீரங்கம், கச்சி, வ்ருஷகிரி ஸவிதம் புண்யநதீ தீரம். இவ்வளவு சுலபமாகக் கிடைத்துவிடுமா! கிடைத்து விட்டதே ஏறிவிட்டோம்.

(படி இருபது)

எப்படிப் போகப் போகிறோமோ என்று பயப்படாதவரில்லை. இங்கு போனால் இப்படி, இப்படி போனால் இப்படி என்றெல்லாம் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. காலம் இடம் இவையெல்லாம் ப்ரபன்னனுக்கு அல்ல. நன்னிலம் நற்பகல் நன்னிமித்தம் எல்லாம் அவனுக்கு எல்லாமாகும். உணர்ந்து விட்டோம். ஏறிவிட்டோம்.

(படி இருபத்தொன்று)

ப்ரபன்னன் நரக வேதனையை அடையமாட்டான், இதை யமனே சொல்லியிருக்கிறான். இவன் பூத சரீரத்தை விட்டு கிளம்பி ஸூக்ஷ்ம சரீரம் அடைந்து பரமபதம் சென்றடைவான். வழியிலே எவ்வளவோ ராஜோபசாரங்கள்! அக்னி முதல் ப்ரஜாபதிவரை பன்னிருவர் வழிநடுவே உபசரிக்கின்றனரே எவ்வளவு மாலைகள் என்ன வரவேற்பு! நம் ஜன்மத்தில் கண்டதுண்டா! ஏறினோம்.

(படி இருபத்திரண்டு)

ஆனந்தம் ஆனந்தம் என்று சொல்லுகிறோம். இது நமக்கு வழக்கமாகி விட்டது. நாம் அனுபவித்தவை மிக மிக மட்டமானவை. ஆனால் மோக்ஷத்தை அடைந்து விட்டால் உண்மையான-நிலையான ஆனந்தம் எது என்பதை அறிய முடியும். இந்த பரிபூர்ணப்ரம்ஹானுபவம் யாருக்குமே கிடைக்காத அனுபவம். லக்ஷ்யம் பலித்து விட்டது. நம என்றும் ஜய என்றும் சொல்லி எப்பொழுதும் சேவித்து ஆசார்யர்கள் அருகில் நின்று அனுபவித்த வண்ணம் பெருவாழ்வு பெருகிறோம். இப்படியை உணரந்துவிட்டோம். அடைந்து விட்டோம்.

(இனியேற வேண்டிய படிகள் இல்லையே! எப்படி மேல் படிகள்! இதைப் பத்து படிகளால் அறியலாம் ஆதலால் அவற்றினை இங்கு அனுபவிப்போம்)

(படி இருபத்திமூன்று)

யார்தான் நமது மேன்மைக்கு சித்தமாயிருக்கிறார்கள்! எதை எதைத்தான் நம்மால் சாதிக்கமுடியும். வாளாரிருக்கலாமா! பயம் வேண்டாம். ஸ்ரீமந்நாராயணன் நமக்கு எல்லாவிதமான பந்து. இறக்கமுடையவன். தனது ஸங்கல்பத்தாலே அனைத்தினையும் தரிக்கும் தனித்திறமை பெற்றவன். பிராட்டி சொன்னால் நம்மை ஏற்க அவன் மறுப்பதில்லை எதையும் பாதிக்கவல்ல சக்தியில்லாமல் தன்னைத் தஞ்சம் என்று அடைந்தவர்களுக்குதானே ஸித்தோபாயம் ஆகின்றான். இவ்வளவு பொறுப்புடையவன். ஸித்தமாக அவன் இருக்க நமக்குப் பயம் ஏன்.

(படி இருபத்துநான்கு)

ஒன்றுமே பண்ணாமல் உயர்ந்த வஸ்துவை அடைய ஆசைப்படுவது சரியா! ரக்ஷி என்று வேண்டக்கூட சக்தியில்லை என்றால் அவனுக்கு விடிவுதான் உண்டோ! ஆனால் ஒன்று, இவன் என்னை அடையட்டும் என்று எவனைப் பார்த்து அவன் ஸங்கல்பிக்கிறானோ அவனால்தான் எம்பெருமானை அடைய முடியும். ஆனால் நாம் உபாயம் பண்ண வேணும் அவை பக்தி-ப்ரபத்தி என்று இருவகைப்படும்

ஏதாவது ஒன்றினை அனுஷ்டித்தால் ஏற்பான். நமக்கு ஏற்றது ப்ரபத்தி. அதைச் செய்யத்தான் வேண்டும். நல்லபடியாக இப்படியும் ஏறியாகி விட்டது.

(படி இருபத்தைந்து)

அடைந்து விட்டால் போதும். தன்னுடைய குணங்களைப் போன்ற குணங்களை அவர்களுக்கு கொடுக்க ஆவலுடையவன் தானே விசயன் தேரில் நின்று பல ஸம்சயங்களை அகற்றினான். ப்ரபன்னனுடைய பெருமையை வரம்புக்குட்பட்ட தென்று நவின்றனர் மறையோர். தான் தோன்றித் தனம் கூடாதல்லவா! எல்லாவற்றையும் விடு என்னை அடை. நான் பாவங்களிலிருந்து விடுவிக்கிறேன் நீ கவலைப்படாதே என்றுதானே கண்ணன் சொன்னது. இப்படியில் ஏறிவிட்டோம் கவலை இனி நமக்கில்லை.

(படி இருபத்தாறு)

எம்பெருமான் பெருமை சொல்லுக்கு அப்பாற்பட்டது. மறைகள் அவன் பெருமையை முறையிடுகின்றன. ப்ரபத்தியின் ப்ரபாவம் சாதாரணமானதல்ல. எந்த ஜாதிக்காரனானால் என்ன! சரணடைந்து விட்டால் பலத்தில் சந்தேகமில்லை. இத்தகைய எம்பெருமான் கிடைத்ததை நம் ஆசார்யர்கள் கூறியதை விட வேறு யார் சொல்லப்போகிறார்கள்! இந்த உண்மை தெரிந்து விட்டால் மேற்படி மேல்படிதான்.

(படி இருபத்தேழு)

நமது பாக்கியமே பாக்கியம். எங்கெங்கோ சென்று எதை எதையோ செய்து போலி ஸந்தோஷத்திற்கு பலியாகாமல் நம்மை பெரியோர்கள் காப்பாற்றிவிட்டனர். அகாரவாச்யனான ஸர்வரக்ஷகனுக்கே நாம் தாஸர்கள், நமக்கு அஹங்கார மமகாரங்கள் கழிந்துவிடுகின்றன. அந்த ஸ்ரீமானான நாராயணனுடைய திருவடிகளையே தஞ்சமாகப் பெற்று, நமது ரக்ஷண பரத்தை ஒப்படைத்து நித்ய ஸூரிகள் கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கின்றோம். இவையெல்லாம் திருமந்திரம் என்ற மஹாமந்திரத்தின் பொருள், இம்மந்திரத்தின் பெருமையை கூறும்பொழுது இதைக்காட்டிலும் உயர்ந்த மந்திரமே கிடையாது என்பர். மந்திரங்கள் பல உள்ளன. அதில் தயங்காமல் திருமந்திரத்தை நமது ஆசாரியர்கள் நமக்கு போதித்துள்ளனர்.

(படி இருபத்தெட்டு)

இரண்டுதான் நம்மை காப்பவை. அவை எம்பெருமான் திருவடிகளே. அவையே உபாயம். அவையே பலம். இதற்கு த்வயம் என்று பெயர். இதைக் காட்டிலும் நமது க்ஷேமத்துக்கு வேறு அமைந்ததில்லை. தேசிகன் இதைக் குறிப்பிடும் பொழுது த்வயவசனத்தைக் காட்டிலும் வேறு ஒன்று இல்லை என்றார். த்வயத்தை தாத்பர்யத்துடன் எப்பொழுதும் சொல்லி வரவேண்டும் என்று அரங்கன் ஆணை என்று அறிகிறோம். இத்தெளிவு கிடைத்தபிறகு அடுத்த படியில் போய்ச் சேருவோம்.

(படி இருபத்தொன்பது)

கண்ணன் சொன்னதைத் தெரிந்து கொண்டு விட்டால் கஷ்டம் ஏது! இப்படி ஒருவன் சொன்னதுண்டா! துயரத்தை துடைப்பவன் அவன்தான். துயரப்படாதே

என்று கடைசியில் சொன்னான். அதன் ஸாரத்தை இங்கு காண்கிறோம்.

ஸர்வதர்மங்களையும் விட்டுவிட்டு நிற்பவனே! என்னை ஒருவனையே சரணமடைவாயாக. உன்னிடம் எத்தனை பாபங்களாயினும் அவற்றைத் தொலைத்து விடுவேன் என்றான். இதை கலக்கமில்லாமல் அறிந்து கொண்டு விட்டால் மேலும் ஒரு படி உண்டோ!

(படி முப்பது)

நமக்கு என்ன தெரியும்! ஞான விளக்கினை ஏற்றி வைத்தவர் ஆசார்யர்கள். இவர்கள் ஏற்றிய விளக்கினால் இருளனைத்தும் மாளும். ஆசார்யன்பால் நன்றியில்லாமல் போனல் அவன் எதற்கும் உபயோகமில்லாதவன். நம்மை இறைவனடி சேர்ப்பதில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் அலாதியானது, அது நமது ஸௌபாக்யமே. இவ்வுபகாரத்தை எவ்வளவு சொன்னாலும் போதா!

(படி முப்பத்தொன்று)

ஆசார்யன் இருக்கட்டும். சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும்? ஆசார்யன் புகழ்பாடுவதன்றி வேறு எதுவும் தேவையில்லை. எவ்வளவுக் கெவ்வளவு பெருமை! இது நமக்கு ஸ்வரூபம். போற்றி யுகப்போம் புத்தியிற் கொள்வோம். பொங்கு புகழ்சாற்றி வளர்ப்போம்.

(படி முப்பத்திரண்டு)

இனி நமக்கு மோக்ஷனந்தம்தான். தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் என்ற மூன்று விஷயங்கள் புரிந்து கொண்டு விட்டோம். இம்முப்பத்திரெண்டாவது படியில் நின்றுவிட்டால் உண்மையான வைஷ்ணவனாவதில் சந்தேகமில்லை.

இப்பொழுது முப்பத்திரெண்டு படிகளாகச் சொன்னவை சாஸ்திரங்கள் கூறும் உண்மைகள், ஏறிவிட்டோம் இனி ஸ்ரீவைஷ்ண ஸிம்ஹாஸனத்திலமர்ந்து விட்டோம் இனி என்ன நமக்கு குறை! இனி என்ன நமக்குத்தேவை.

(இது ரஹஸ்யத்ரயஸாரப்படி)

அனைவரும் பேரின்பம் பெற ஏற முயற்சி செய்க, சுபம்.



ஸ்ரீ :



ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகன்

श्रीः

श्रीमते निगमान्त महादेशिकाय नमः

निगमान्तसूरेःवैदुष्यं वैराग्यं च

श्रीमदुभयवे विद्वान् श्रीनिवासदेशिकाचार्यः (हासन्)

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ।।

निषद्या विद्यानां निखिलकुमतिव्यालगरुडः
सभा सौभाग्यानां सरसकवितापद्मसविता ।
प्रमाणं भाष्यस्य प्रपदनकलाजन्मजलधिः
करोतु क्षेमं नः कविकथककण्ठीरवगुरुः।।

विदितचरमेव सर्वेषां विदुषां न्याय-वेदान्ततत्वज्ञः, निगमागमपार-दृश्वा, प्रपदनकलाकोविदः, कवितार्किकसिंम्हादिबिरुदाङ्कितः, तत्र भवान् निगमान्तसूरिःश्रीवेङ्कटेशघण्टांश इति । देवराजदृष्टिपातरुचिरे काञ्ची दिव्यदेशे 'तूप्पुल' नामके अग्रहारे श्रीमानवततार।पुत्रतल्लजेनानेन पितरौ तातारंबानन्तसौमयाजिनौ सत्सन्ततिमन्तावास्ताम्। तत्संचार भूमिश्च परमपूताऽभूत्।

जन्मवृत्तान्त एवास्य महिमानं वैदुष्यं च प्रकटयति ।स्वयं व्यक्तः श्रीनिवास एव स्वसिद्धान्तं स्थापयितुं मनसि संकल्पयामास ।शेषांशः यतिराजोऽपि शरणागतिशास्त्रं जनोपकाराय प्रकटयितुं पुनरवतारः कर्तव्य इति निश्चयांवकार च । भगवद्भागवतसंकल्पानुसारेण कस्यचन आचार्यशिखामणेःअवतारस्सूचितः।

तदनुसारं कदाचन तोतारंबानन्तसोमयाजिनौ वेङ्कटभूधरमागच्छताम्। तस्यामेव रात्रौ स्वप्ने भगवद्दत्तां घण्टां न्यगिलत् सा ।अलौकिकः कश्चन विद्यानिधिः तवोदरे जनिष्यतीति वाणीं च शुश्राव ।गच्छति काले सकलमहीपाललालितं कलभं करिणीव तोतारंबा पुत्ररत्नं सुषुवे । इत,थं च घण्टा पुत्रत्वेनावतीर्णः तयोः तदवताररहस्यवेदिनः मंगळमित्थं आशासते :-

वेङ्कटेशावतारोऽयं तद्घण्टांशोऽथवा भवेत् ।
यतीन्द्रांशोऽथवेत्यवं वितर्क्यायास्तु मङ्गळम् ।।इति ।

बुधजनैरित्थं उत्प्रेक्ष्यते इति सङ्कल्पसूर्योदये स्वयमेवाह -

वित्रासिनी विबुधवैरिवरूथिनीनां
पद्मासनेन परिचारविधौ प्रयुक्ता ।
उत्प्रेक्ष्यते बुधजनैरुपपत्तिभूम्ना
घण्टा हरेस्समजनिष्ट यदात्मनेति ।।

इति । पाञ्चजन्यप्रणादः,शार्ङ्गज्याघोषः, शत्रूणां दुःखदः,अनुकूलानां सुखदः। एवं घणटानादश्च ।श्रीनिवालये स्थिता घण्टा आचार्यरूपेणावतीर्णा, कुतार्किकास्तद्वादसरणिं श्रुत्वा परास्ताः ।

मातुलादाःयरामानुजगुरोस्सकाशादधिचकार सकलाः कला : तत्रभवान् निगमान्तसूरिः ।एकदा मातुलेन सह वरदार्यस्य कालक्षेपगोष्ठीं प्रविवेश वेङ्कटनाथः।श्रीभाष्यकालक्षेपः प्रचलति स्म।तदा वेङ्कटनाथः पञ्चवर्ष

देशीयः ।तस्य तेजःपुञ्जमाननं विलोक्य सर्वे विसिष्मियिरे ।कालक्षेपभागं च व्यस्मरन् सर्वे ।तदा बालकः वेङ्कटनाथःकालक्षेपभागं स्मारयामास। बालकस्य कुशाग्रबुद्धिं दृष्ट्वा श्रीमन्तो वरदार्याःइत्थं आशीर्वचनं ददुः। यथाः-

प्रतिष्ठापितवेदान्तःप्रतिक्षिप्तबहिर्मतः।
भूयास्त्रैविद्यमान्यस्त्वं भूरिकल्याणभाजनम्।।इति ।।

गुरोरियं आशीर्वाणी क्रमेण सत्यं बभूव ।वेङ्कटनाथाय पाठान् बोधयितुं रामानुजगुरोर्महान् सन्तोषः ।उपदेशकाले एव रहस्यार्थानि शास्त्राणि च स्थिरोपदेशं प्रपेदिरे ।यथा देशिकगद्यैः- मातुल रामानुजार्यसकाशलब्ध- सकल-वेद वेदाङ्ग-तर्क मीमांसा-शब्द- वेदान्त शास्त्रजात, विंशत्यब्दे विश्रुतनानाविधविद्य इति।एवं प्रतिवादिभयङ्कर स्वामी चास्यवैदुष्यं प्रतिः-

जटा वर्ण चर्चाद्यनेकप्रकार त्रयीलक्षणोच्चारणे व्यासकल्पः ।,
ज्योतिश्छन्दश्शब्द शास्त्रप्रवीणः काव्यश्रेणीनाटकालङ्कृतिज्ञः।
मीमांसायां ब्रह्म कर्मानुगायां स्रष्टा साक्षात् सर्वतन्त्रस्वतन्त्रः ।

इति सप्ततिरत्नमालायां प्राह।

बहुमुखमस्य वैदुष्यम् ।स्तोत्रं काव्यं नाटकं द्राविडप्रबन्धाः,वेदान्तप्रकरणग्रन्थाः,व्याख्यान भागश्चानेन निबद्धाः।विंशत्युत्तरशतग्रन्था रचिताः।उत्तमस्यैकस्यग्रन्थस्य निर्माणे पुरुषायुर्नालम् ।तत्रापि तर्केषु कर्कश धियो वयमेव नान्ये काव्येषु कोमलधियो वयमेव नान्ये इत्युक्त परस्पर विरुद्धगुणं चाचार्यग्रन्थेषु संपश्यामः।वेदान्तग्रन्थेषु काव्यसरणिः दृश्यते। काव्यग्रन्थेषु वेदान्तविषयश्च। रसानुगुणपदविन्यासः,छन्दोनिबन्धनं,समयानुसारतःलालित्यं-काठिन्यं च दरीदृश्यते।

तेषु यादवाभ्युदयं महाकाव्यमेकम्। तत्रभवान् अद्वैत वेदान्ताचार्यः श्रीमान् अप्पय्यदीक्षितमहाशयः काव्यस्यास्य व्याख्यानमरचयत्। सकुतूहल्यब्रवीच।

इत्थं विचिन्त्योंस्सर्वत्र भावास्सन्ति पदे पदे ।
कवितार्किकसिह्मस्य काव्येषु ललितेष्वपि ।।इति ।

द्वात्रिंशत् स्तोत्राणि अनेन रचितानि ।भलिरसपूर्णानि ।तत्र गोपालविंशतिः लालित्यस्य परमावधिं प्राप्ता ।श्लोकमेकं उदाहरामः ।

अधराहितचारुवंशनालाः मकुटालंबिमयूरपिंछमालाः।
हरिनीलशिलाविभगङ्गनीलाः प्रतिभास्सन्तु ममान्तिप्रयाणे ।।

तत्तद्रसप्रदर्शनावसरे युक्तपदगुंफनं च :-यथा नृसिंहावतारवर्णनप्रस्तावे सटापटलभीषणे सरभसाट्टहासोद्भटे स्फुरत्क्रुधि परिस्फुद्भुकुटिकेऽपि वक्त्रे कृते किञ्च काळिङ्गफणानटनसमये :-

लोलापतच्चरण लीलाहतिक्षरित हालाहले निजफणे
नृत्यन्तमप्रतिघघुष्यन्तमप्रतिघमत्तचारुवपुषम्।।इति ।।

स्तोत्रेषु श्रुतिवाक्यसंयोजनेन अधिका समुन्नतिश्च। यथा श्रीस्तुतौ-अस्येशाना त्वमसि जगतः संश्रयन्ती मुकुन्दं इत्यादि ।कविसार्वभौमस्यास्य वैदुष्यस्य अन्या रीतिः :-ललितेष्वपि काव्येषु उपनिषदर्थाः तात्विकविषयाश्च सचमत्कारं उपनिबद्धाः यथा यादवाभ्युदये

रथाधिरूढञ्च रथञ्च रक्षन् यथार्थतो दर्शयति स्म यन्ता।
त्रय्यन्तचिन्तानिरपेक्षमीशः तत्तादृशं तत्वविभागमाद्यम् ।।

पद्यमिदं अमुं विषयमुपदिशति। रथस्थितः अर्जुनःचित्,अर्जुनरथः अचित् ,सारथिस्थाने स्थितः कृष्णः ईश्वरः,चिदचितो र्नियामकश्च। ज्ञाताज्ञेयं प्रेरितारं च मत्वा ,इतयुपनिषद्वाक्यार्थं पद्यमिदं उपनिषद्ग्रन्थपठनं विनैव उपदिशति।उदाहरार्थं एकं उपदिष्टम्। एतादृशाः परश्शता उपलभ्यन्ते।

काळिदासः मेघसन्देशाख्यं काव्यमलिखत्।तत्र कल्पितकथा। विप्रलंभशृङ्गारः प्रधानो रसः। निगमान्तसूरिः हंससन्देशाख्यं काव्यमलिखत्।अत्र इतिहासप्रसिद्धविषया कथा।मेघसन्देशे अचेतनः मेघः सन्देशं हरति। अत्र सचेतनः हंसः सन्देयं हरति ।परमहंसपदाभिषिक्तो गुरुः शिक्षणीय शिष्यमन्विष्य भगवन्तं प्रापयतीति परमपुरुषार्थप्राप्तिरूपं फलं ध्वन्यतेऽत्र।मेघसन्देशे कविःस्वावासामुज्जयिनीं द्वादशश्लोकै र्वर्णयति। अत्र कविः स्वावासं सत्यव्रतक्षेत्रं (काञ्चीं)द्वादशश्लोकैर्वर्णयति। एकमुदाहरामः-

नानारत्नैरुपचितगुणां नित्यसङ्गीतनादां
भूमेर्दृक्ष्यस्युचितविभवं भूषणं तत्र काञ्चीम्।
यस्यां नित्यं निहितनयनो हस्तिशैलाधिवासी
द्वन्द्वातीतस्स खलु पुरुषो दृश्यते सत्यकामः ।।इति ।।

उपमालंकारनिबन्धने काळिदासःमहान् चतुरः।उपमा काळिदासस्य इति आभाणकी च वर्तते ।हंससन्देशे परमवेदान्तिनः मालोपमां पश्यन्तु :-

शुद्धामिन्दोश्श्वपचभवने कौमुदीं विष्फुरन्तीं
आनीतां वा विषतरुवने पारिजातस्य शाखाम्।

सूक्तिं रम्यां खलपरिसरे सत्कवेः कीर्त्यमानां
मन्ये दीनां निशिचरगृहे मैथिलस्यात्मजाताम् ॥

इति। इत्थंच एतादृशग्रन्थरचनेन कवीनां गोष्ठीषु मान्यः जातः। पादुकासहस्रं अन्यत् कृतिरत्नं आचार्यस्य।समग्रं काव्यसौन्दर्यमत्र विलसति।रमणीयार्थप्रतिपादिकां शब्द संयोजनां प्रतिपद्यं पश्यामः। किं बहुना। सा कविता कामिनी पादुकासहस्राख्ये काव्यरङ्गे भिन्न भिन्न वृत्तैः भूमिकान्तरमासेदुषी उपमोत्प्रेक्षा-रूपक -श्लेष-यमकाद्यलङ्कारभूषितसर्वा वयवा,प्रसाद-माधुर्य-सुकुमारतादिगुणमण्डिता,रमणीयपदगुंफै रुपचीयमान कायशोभा, शृंगार वीर हास्याद्भुतादिरसपानोन्मत्ता निगमान्तरादिष्ट पथेन यथेच्छं विहृत्य प्रनृत्य च तत्रैव विश्रान्तिं लेभे।अअअअअअअअअअतः पादुकासहस्रं काव्यगोष्ठीष्वपि प्रथमां कोटिमाटीकते।

निखिलदेवतासार्वभौमः वेदवेद्यः परः पुमान् त्रेतायां दशरथपुत्रत्वेन अवतीर्णः।तद्विभूतिगुणवर्णनपरा सा श्रुतिमाता सत्यलोधिपं स्वपतिं परित्यज्य मुनितल्लजं वाल्मीकिं वरयामास।तदाज्ञया रामायणात्मना

भूमिकान्तरं अग्रहीच।द्वापरे स एव परः पुमान् क्षीरार्णवं विहाय मधुरां आजगाम।अकृतका सा वाणी च विष्णुरूपिणं व्यासं वरयामास। तदाज्ञया भारतात्मना भूमिकान्तरं आललंबे।कलौ युगे तदेव गोपीजनस्य

वशंवदं परमं तत्वं वेङ्कटाद्रिसमं स्थानं न भूतं न भविष्यति। इति प्रसिद्धं वेङ्कटाद्रिनामानं क्रीडाशैलमाजगाम।परब्रह्मणि श्रीनिवासे भुवमलंकुर्वति तत् शब्दब्रह्म अरविन्दसंभवं विहाय,श्रीवेङ्कटेश घण्टात्मना अवतीर्णं निगमान्तसूरेर्वदनारविन्दमलञ्चकार।सुरभारती सा त्रेता-द्वापरयोरेकैकांभूमिकां परिगृह्य तृप्तिं न लेभे।काळिदासादि कवयोऽपि रामायण भारतावेव शरणं जग्मुः।कविताकामिन्याश्चर्वितचर्वणमेवासीत्। तस्यास्तृषषणा न पूर्णा। अत एव लब्धावसरा वैराग्यनिधिं

कल्याणगुणपरिपूर्णं वेदान्तगुरुमवलंब्य स्तोत्रात्मना, काव्यात्मना, नाटकात्मना,गद्यात्मना ,व्याख्यानरूपेण, प्रकरणग्रन्थात्मना, संस्कृत- प्राकृत-द्राविड भाषा भेदेन च भिन्न भिन्न भूमिकां परिगृह्य विजहार सरस्वती। किं बहुना।यथा यथा गरुरयमादिशति तथा तथा पादयोर्नूपुरमाबध्य ननर्त।

रहस्यत्रयसारं आचार्यस्यान्तिमं कृतिरत्नम् ।नवतितमे वयसि विरचितम्।विशिष्टाद्वैतसिद्धान्तस्वरूपः, शरणागतेस्समग्रा स्थितिश्चात्र सुनिपुणं सप्रमाणं उउपन्यस्तम् । अत एव सर्वज्ञत्वं रहस्यत्रयसारे इइत्याभाणिकी च प्रथिता ।अलमनया ।तत्रभवतःनिखिलविद्यासिन्धुमुष्टिन्धयस्य गुरुमणेर्वैदुष्यं क्षुद्रलेखिन्या परिमितपदैश्चित्रीकरणं उपहासास्पदम्।

वैराग्यं प्रति द्वित्राणि वचनानि ।भर्तृहरि नामा महाकविः सर्वं वस्तु भयान्वितं भुवि नृणां वैराग्यमेवाभयं इति जगाद ।श्रीमान्निगमान्तसूरिरवतीर्य भर्तृहरेस्तां वाणीं अर्थयुक्तां चकार ।यावज्जीवं उञ्छवृत्त्या दिनानि नीतानि ।द्रव्यार्जनविषयः श्रीमतां स्वप्नेऽपि नासीत् ।स्मर्यते च न्यासतिलके--

यावज्जीवं जगति नियतं देहयात्रा भवित्री।
त्यक्तास्सर्वे त्रिचतुरदिनग्लानभोगा नभोगाः।
धत्ते रङ्गी निजमपि पदं देशिकादेशकांक्षी
किं ते चिन्ते परमभिमतं खिद्यसे यत्पुनस्त्वम् ।।

इति अतस्तेषां देहयात्रानिर्वहणचिन्ता च नासीत् ।स्मर्यते च कश्चन सन्निवेशः। एकस्तिन् दिने भिक्षार्थं आचार्याः पात्रहस्ताःस्तोत्रं पठन्तःअग्रहारवीथ्यां प्रययुः ।कश्चन श्रीमान् आचार्यविषये भक्तिमांश्च तण्डुलेषु कनकं निक्षिप्य भिक्षां प्रादात् ।आचार्यैर्न ज्ञातमेतत् ।पात्रं पत्नीहस्ते निक्षिप्य शिष्याणां पाठप्रवचने रताः।भिक्षां शोधयन्त्या गृहिण्या तत्र कनकं दृष्टम् ।विस्मिता साध्वी सा भर्त्रे निवदियामास ।कनककीटा एते कुटीराद्बहिनिस्सार्यतामिति भर्त्रादिष्टा सा सपदि तथैव चकार ।यथा श्रीमान् गुरुमणिर्विरक्तः तथा गुरुगृहिणी च विरक्ता ।धन्या सा पत्न्यनुकूलासीत् ।ईदृशीं अनुकूलां भगवद्भागवतकैङ्कर्यसंपन्नां विषयविरक्तां सहधर्मचारिणीं प्राप्य तुरीयाश्रमस्वीकारचिन्तां दूरतः तत्याज गुरुः ।सर्वेषामाश्रमाणां गार्हस्थ्यं श्रेष्ठमुच्यते इत्यार्यवाणीमनुसृत्यश्रीमानाश्रमधर्मान् सर्वान् यथाकालमाचचार ।श्रूयते च देशिकगद्ये -अभिगमनोपादानेज्यास्वाध्याययोगपंचकालपरायण-इति ।किंच ख्यातिलाभपूजापराङ्मुखः भागवतेषु नैच्यानुसन्धानतत्परः आदेहपातं अनघां वृत्तिमाश्रित्य कालं निनाय ।मङ्गळाशासनप्रस्तावे श्रुणुमः -

यःख्यातिलाभपूजासु विमुखो वैष्णवे जने ।
क्रयणीयदशां प्राप्तस्तस्मै भव्याय मङ्गळम् ।।इति।।

प्रतिवादभयङ्करस्वामी च गुरूणां वैदुष्य वैराग्यादि गुणगणश्लघनावसरे पद्यमेकमुदाजहार। यथा -

वेदान्ताचार्यवर्यो विदितबहुगुणो वीतरागाग्रयायी
विद्वान् विद्यानिषद्या विरचितविविधानेकदिव्यप्रबन्धः।
विषणौ विष्ण्वाश्रितेषु प्रकटितविनय-प्रेमशेषत्ववृत्तिः
विख्यातःश्रेयसे यो विषजिदिह नो वेङ्कटाचार्यवर्यः ।।इति।।

परमपदसोपानाख्यं आचार्याणां कृतिरत्नमेकम्। तत्राचार्यै : परमपदमारोढुं नवसंख्याकानि सोपानानि प्रदर्शितानि ।तानि क्रमेणविवेक -निर्वेदविरक्ति-भीतयः प्रसादहेतूत्क्रमणार्चिरादयः ।प्रकृत्यधिक्रान्तपदाधिरोहणं परापितिरित्यत्र तु पर्वणां क्रमः ।।इति। अत्र नवसु सोपानेषु विरक्तिःतृतीयं सोपानं मुमुक्षोः विषय-वैराग्यमत्यावश्यकम्।आचार्यैः स्वानुष्ठानपुरस्सरं वैराग्यं शिष्टानां उपदिष्टम्।

किञ्च तारुण्ये वयसि यतीन्द्रग्रनथावजोकनेन कालो नीतः ।विना पारतन्त्र्यं वासरास्सुखं नीताः ।सतां वृत्तिरङ्गीकृता ।असतां असद्वादः निराकृतः। परत्र हेतोरिह जन्मना च इत्यार्यवाणीमनुसृत्य श्रीनिवास

चरणकैंकर्यहेतोः यावज्जीवं प्रयत्नः कृतः ।रामानुजमुनेरादेशात् रङ्गी निजमपि पदं ददात्येव ।एतादृशः महान् विश्वासः आचार्याणामवर्तत ।विषयविरक्तानामेव ईदृशः विश्वासः जायते । आचार्यैरेवोक्तम् ।यथा :-

निर्विष्टं यतिसार्वभौमवचसां आवृत्तिभि र्यौवनं
निर्धूतेतरपारतन्त्र्यरिरयाः नीतास्सुखं वासराः ।
अङ्गीकृत्य सतां प्रवृत्तिमसतां गर्वोऽपि निर्वापितः
शेषायुष्यपि शेषिदंपतिदयादीक्षामुदीक्षामहे ।।इति ।।

अन्यच्च तत्र भवान् विजयनगरभूपतीनामाश्रये स्थितः अद्वैत-तत्व-पारदृश्वा श्रीमान् विद्यारण्योप्यतत योयं न्यायवेदान्त तत्वदर्शी द्यिनिधिः निगमान्तगुरुः राजसभामलंकृत्य सुखेन जीवनं यापयतु ति ।तदनुसारंच

पत्रं प्रेषयामास । मूर्तिमद्भैराग्यमिव स्थितः गुरुरयं दुरीश्वरसेवायां कालं यापयितुं नानुमेने ।सर्वात्मना देवराजमाश्रितः कथं क्षुद्रफलदं क्षोणीकोण-शतांशशासकमाश्रयति ।पञ्च श्लोक्या श्रीमते विद्यारण्याय उत्तरं भेजे ।तदेव वैराग्यपञ्चकं इति नाम्ना प्रथितम् ।तत्रत्क्षं भावबन्धं पश्यन्तु ।

देवं सेवितुमेव निश्चिनुमहे योऽसौ दयालुः पुरा धानामुष्टिमुचे कुचेलमुनये दत्ते स्म वित्तेशताम्। तथापि पद्यद्वयं लिख्यते ।

सिलं किमनलं भवेदनलमौदरं बाधितुं
पयःप्रसृतिपूरकं किमु न धारकं सारसम् ।
अयत्नमलमल्लकं पथि पटचरं कचरं
भजन्ति विबुधा मुधा ह ह ह कुक्षितः कुक्षितः।।
नास्ति पित्रार्जितं किञ्चित् न मया किञ्चिदार्जितम्
अस्ति मे हस्तिशैलाग्रे वस्तु पैतामहं धनम् ।।इति ।।

आचार्याणां जीवनमेव त्यागमयम् ।विरक्तिपूर्णम्, वैदुष्यमण्डितम्, सर्वैरनुकरणीयम्।श्रीमतां कल्याणगुणगणान् स्मरन् विरमामि।।

दान्तिश्शान्तिश्शुचित्वं विषयविजयिता धीरता निस्पृहत्वं शेषत्वं श्रीश तद्दासजनविषयकं पारतन्त्र्यञ्च तत्र ।

अक्षोभ्यत्वं पटुत्वं मृदुसमवशिता निर्भरत्वानसूये यस्मिन्नाजानसिद्धं स खलु विजयते वेङ्कटाचार्यवर्यः ।।

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते वेङ्कटेशाय वेदान्तगुरवे नमः ।।

ஸ்ரீ :



வழுத்தாராண்டவன்

ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

நாச்சியார் திருமொழி

(ஸ்ரீமதுபயவே. வித்வான் புரிசை வரததேசிகாசார்யர் ஸ்வாமி)

தான் விரும்பியவண்ணம் கண்ணனுடன் கலந்து பரிமாற மன்மத நோன்பு நோற்பதாகத்தொடங்குகிறது நாச்சியார் திருமொழி.

''வானிடைவாழும் அவ்வானவர்க்கு மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவது ஓர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப,
ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழ கிர்வேன் கண்டாய் மன்மதனே.''

(நாச். திரு–1.5)

கண்ணனைக் காண மார்கழிமுழுதும் பாவை நோன்பு நோற்றாள். தை, மாசி, பங்குனி மன்மத நோன்பு நோற்கிறாள். 'தை ஒரு திங்களும் தரை விளக்கித் தண்மண்டல மிட்டு மாசிமுன்னாள்' *(நாச்–திரு.1.1)* 'வைகல் தெருவிடை எதிர் கொண்டு பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா' *(நாச்–திரு–1.6.)* என்பவற்றைக் காண்க. தமிழ் நாட்டில் கிராம மக்கள் இன்றும் மாசிப் பௌர்ணமியில் தொடங்கிச் சித்திரைப் பௌர்ணமிவரை அறுபது நாள்கள் விடாமல் பண்டிகை கொண்டாடுகின்றனர்.

மார்கழிப் பௌர்ணமியுடன் பாவை நோன்பு தொடர்புடையதுபோல் தை, மாசி, பங்குனிப் பௌர்ணமிகளுடன் மன்மத நோன்பு தொடர்புடையது போலும்.

இம்மூன்று மாதங்களிலும் மன்மத நோன்பு நோற்றது போல் வஸந்த காலத்தில் பூயில்களைக் கெஞ்சியும், கார்காலத்தில் கண்ணனின் திருக்கை திருப்பாதங்களை நினைவூட்டும் செங்காந்தண் மலர்களைக் கண்டு கண்ணீர் விட்டும், இவற்றால் கண்ணனைக் காண முடியாமல் தன் திருத்தகப்பனாரையே ஆசார்யனாக அத்யவஸித்து அவர் அபிமானமே தஞ்சம் என உறுதி பூண்டு, பின் கண்ணனுடன் தொடர்பு கொண்ட யாதானும் ஒரு பொருளைப் பெற விரும்பி அதுவும் கிடைக்காமல் அவன் இருந்து நடமாடிய இடங்கட்குப் போகத் துடித்ததாய். ஆண்டாளுடைய இந்தப் பரமபக்தி நிலையைக் கண்டு கண்ணன் ப்ருந்தாவன ஸஞ்சாரியாக ஸேவை ஸாதித்ததாக நாச்சியார் திருமொழி நிறைவு பெறகிறது.

மன்மத நோன்பின் தேவதை

ஆண்டாள் நோற்ற மன்மத நோன்பின் தேவதை யார் எனத் தெளிதல் நன்று. 1.மன்மத னே தெய்வம் 2. மன்மத அந்தர்யா மியான நாராயணனே தெய்வம், 3.மன்மத வடிவம் கொண்ட மதனகோபாலன் தெய்வம் என மூவகைக் கொள்கைகள் உள. இவற்றுள் உனக்குப் பணி செய்து இருக்கும் தவமுடையேன் இனிப்போய் ஒருவன் தனக்கு பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை அழீவு கண்டாய்' (பெரியாழ்வார் 5.3.3) எனக் கேட்டு வைத்தும், 'நாராயணனே நமக்கே பறை தருவான்' (பாவை 1) 'உனக்கே நாமாட் செய்வோம்' (பாவை 29) என்று பேசியும் உள்ள ஆண்டாள் இன்று மன்மதனை நோற்றாள் என்பது அவளையும், அவளை ஆழ்வார்வரிசையில் நிறுத்திய ஆசார்யர்களையும் மாசுபடுத்தியதாகும். சாஸ்த்ரவிரோதமில்லாமல் இந்நோன்பின் தேவதையைத் தெளிய வேண்டும்.

'பரவித்யாஸு ஜீவோக்தி: நிருக்த்யாதே: பராச்ரயா
தல்லிங்காநந்யதா ஸித்தெள தத்விஶிஷ்டாவலம்பிநீ।

என்கிறார் தேசிகர். பக்தி யோகப் பிரகரணங்களில் பிறதெய்ங்களின் பெயர்கள் காணப்படுமாயின் அவற்றின் பகுதிப்பொருளை ஆராய்ந்து அவை நாராணனது காரணப்பெயர் (யௌகிகார்த்தம்) எனக் கொள்ளலாம். அவ்வாறு காரணப் பொருள் கொள்ள இடையூறான அடைமொழிகள் இருக்குமாயின் அப்பெயர்கள் அத்தெய்வங்களின் அந்தர்யாமியான நாராயணனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இவ்விருவகைகளிலும் மன்மதன் எனும் சொல் நாராயணனைக் குறிக்கும். மன்மதன் என்றால் மனதைச் சஞ்சலப்படுத்துபவன் எனப்பொருள். கண்ணன் தன் வடிவழகாலும், லீலைகளாலும் எல்லோருடைய உள்ளங்களையும் கவர்கள்வனாதலால் மன்மதமன் மதனை கண்ணனை மன்மதன் எனும் சொல் குறிக்கலாம். அல்லது மன்மதன் எனும் சொல் மன்மதாந்தர்யாமியான நாராயணனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். இவ்வாறே சந்தியா வந்தனம், தர்ப்பணம், சிராத்தம் முதலியவற்றில் வரும் அக்கினி, சூரியன், வஸு முதலிய சொற்களும் அத்தெய்வங்களின் அந்தர்யாமியான நாராயணனைக் குறிப்பதாகக் கருதி வைணவர் யாவரும் வைதிக கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டும். ஆண்டாளும் மன்மதன் எனும் பெயரைச் சொல்லிக் கண்ணனுக்கே நோன்பு எடுத்தாள்.

தவிர, கண்ணனுக்கு மன்மதன்போல் கரும்பு வில்லும் புஷ்பபாணங்களும் ஏந்திய இரு திருக்கைகளுடன் மதன கோபாலன் எனும் வடிவம் உளதாகச் சாக்த தந்திரங்களும், பாஞ்சராத்ராக மங்களும் பகர்கின்றன.அந்த மதன கோபாலனது நோன்பே மன்மத நோன்பாக ஆண்டாள் அனுஷ்டித்ததாகக் கொள்ளலாம். பரமதபங்கம். பாஞ்சராத்ரசாஸ்த்ரவிரோத பங்காதிகாரத்தில் ஸ்வாமிவேதாந்த தேசிகன் ''நாச்சியார் க்ருஷ்ணனைப் பெருகைக்குப் பண்ணிய காமதேவார்ச்சனம் சிருங்கார ஸமாத்யநுகுணக்ருஷ்ணரூபாந்தரவிஷயம்' என அருளிச் செய்தார். இனி,

தந்த்ரங்களில் இவ்வடிவைப்பார்ப்போம். சாக்த தந்திரம் மந்திர தேவதா ப்ரகாசிகை பிரகரணத்தில்மதனகோபாலவடிவம் கீழ்க்கண்டவாறு சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

''க்ஷீராம்போ நிதி மத்யஸம்ஸ்தி தலஸத் த்வீபஸ்தகல்பத்ரும
உத்யாநோத்யன் மணி மண்டபாந்தருதி ஸ்ரீபீடபாதோஜகம்।
தோர்தண்டைரரி சங்கவேணு ச்ருணி ஸபாபேக்ஷ்ணசாபாசுகாந்பிப்ராணம்
கமலா மஹீவிலஸிதம் வந்தே அருணாங்கம் ஹரிம்.

(பாற்கடல் நடுவில் தீவல் கற்பக மரச் சோலையில் மணிமண்டபத்தில் கமலாஸனத்தில் எட்டுக் கைகளில் சங்கு, சக்கரம், புல்லாங்குழல், அங்குசம், பாசம், கரும்பு, வில், அம்புகளை வைத்திருப்பவரும் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் கூடியவரும் சிவப்பு நிறமும் உடையவிஷ்ணுவை நமஸ்கரிக்கிறேன்.) இங்கு பகவானுக்கு எட்டுக் கரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பகவானது பெயர் மதன கோபாலன் என்றும் கூறப்படவில்லை. ஆனால் ஸ்ரீதத்வநிதி எனும் பாஞ்சராத்ராகமத்தில் பகவானது திருநாமம் மதன கோபாலன் என்றும் அவர்பத்துத் திருக்கரங்களை உடையவர் என்றும் தெளிவாய் உளது.

ரக்தவர்ணோ தசபுஜ: ஸர்வாலங்காரபூஷித:
சங்கசக்ரகதாபத்ம பாஸாங்குச ஸ்ருமாசுகாந்''
இ க்ஷ்ரு கோதண்ட மந்யாப்யம் வாதயந் வேணு மாதராத்
ஷோடச சத பத்மஸ்த்த ஷட்கோண பரிஸம் ஸ்தித:
கோபாலோ மதனாக் யோயம் மந்தஸ்மித முகாம்புஜ:।

ஸ்வபரத்ரஸ்த கோபீபி ராத ராதீக்ஷிதோ வதாத்।(சிவப்புத் திருமேனியும் பத்துக் கைகளும் எல்லா அணிகளுமணிந்தவரும் சங்கு, சக்கரம், கதை, தாமரை, பாசம், அங்குசம், புஷ்பபாணம், கரும்பு, கோதண்டம் ஆகியவற்றைத் தரித்தவரும், ஆசரவுடன் இருகைகளால் புல்லாங்குழல் இசைப்பவரும், பதினாறு இதழ்த்தாமரை மலரின் நடுவில்அறுகோணத்தில் அமர்ந்திருப்பவரும், புன்னகை உடையவரும், பதினாறு இதழ்களிலுல் பதினாறு போபப் பெண்களால் சூழப்பெற்றவரும், மதன கோபாலன் எனும் திருநாமமுடையவருமாகிய பகவான் காப்பாற்றட்டும்)

இது தந்திரங்களிலும் மதன கோபாலன் கரும்புவில் புஷ்பபாணம் பெற்றவனாக வருணித்திருப்பது கவனத்திற்கு உரியது.

காமன் தம்பி சாமன்

'உன்னையும் உம்பியையும் தொழுதேன்' (நாச்.திரு.1-1) என்று ஆண்டாள் மன்மதனோடு அவன்தம்பியையும் தொழுகிறுள். காமன்தம்பி சாமன் என உரைகாரர் எழுதுகின்றனர். ஆக ஆண்டாள் மன்மத நோன்பால் காமனையும் சாமனையும் தொழுததாகத் தெரிகிறது.காமனுக்குச் சாமன் தன்ற தம்பியிருந்ததாக

புராணவாயிலாக அறியமுடியவில்லை. ஆயினும் சாமன் யார் என அறிந்து கொள்வது நமது கடமையாகும். கண்ணனுக்கும் உருக்குமணிக்கும் பிறந்த பிரத்யும்நனைக் காமன் அமிசமாகக் கொள்வர். பிரத்யும்னனைக்காமனாகக் கொண்டால் அவர் தம்பி ஸாம்பனைச் சாமன் என மருவி வழங்கியதாகக் கொள்ளலாம். இந்த ஸாம்பன் ஜாம்பவதியின் புத்திரன். கண்ணன் ஸ்யமந்தகமணியைத் தேடிச்சென்ற இடத்தில் ஜாம்பவான் மகள் ஜாம்பவதியை மணந்தான். அதனால் ஸாம்பன் ப்ரத்யும்னன் தம்பி ஆகிறான். அஃதாவது காமன் தம்பி ஆகிறான். ஆதலால் கண்ணனுக்குப் பிள்ளையாய் மன்மதனது கூறுகிய ப்ரத்யும்னனையும் அவன் தம்பி ஸாம்பனையும் (சாமனையும்) ஆண்டாள் மன்மத நோம்பில் வழிபட்டதாகவும் கொள்ளலாம். இவை யாவும் ஸ்ரீ. உ. வே. உத்தமூர் ஸ்வாமியின் நாச்சியார் திருமொழி அவதாரிகையிலும் ஸ்ரீ. உ. வே. நாராயணாசார்யர் ஸ்வாமி பரமதபங்க வியாக்யானத்திலும் காணக்கிடைக்கின்றன.

மன்மதனை வழிபடட்டும். அவன் தம்பி ஸாம்பனை (சாம்பனை) என் வழிபடவேண்டும் என ஐயம் எழும். எம்பெருமானை அடையும்போது அவன் அடியார்களுடன் பாவை நோன்பு நோற்ற பழக்கத்திலால் தம்பி சாமனோடு காமனைத்தொழுகிறாள்.

'ஸப்ராது:சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தன:।
ஸீதாமுவாசாதியஸா: ராகவம்சஹாபலம்॥(ராமா -அயோ-31.2)

(இலக்குமணன் தன் தனமயன் திருவடிகளை நன்றாகப் பிடித்துக் கொண்டு சீதையையும் அண்டியவர்களைக் காப்பாற்றம் பெரிய விரதத்தையுடைய இராமனையும் பார்த்துச் சொன்னான்) என்று சீதாப் பிராட்டியை முன்னிட்டுக் கொண்டு பெருமாளைப் பற்றிய இளைய பெருமாளைப் போலே தம்பி சாமனை முன்னிட்டுக் கொண்டு காமனைப் பற்றினாள்.

'நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய தேவ்யை சதஸ்யை ஜனகாத்மஜாயை (ராமா சுந் 1360) அனுமன்வாக்கியம். (இலக்குமணனுடன் கூடிய இராமனுக்கு நமஸ்காரம். ஜனகராஜன் திருமகளான அந்தப் பிராட்டிக்கும் நமஸ்காரம் என்று இளையபெருமாளைப் போலே தம்பி சாமனை முன்னிட்டுக் கொண்டு பெருமாளைப் பற்றிய அநுமனைப் போலே 'உன்னையும் உன் தம்பியான சாமனையும் அடைந்தேன்' என்கிறாள்.

நோன்பின் வடிவம்.

ஆண்டாள் கீழ்கண்ட முறையில் மன்மத நோம்பினை நோற்றாள். தரை விளக்கி மண்டலா காரமான கோலமிட்டாள். நுண் மணல் கொண்டு சிற்றில் இழைத்துத் தெருவினை அழகு செய்தாள். அதிகாலையில் நீராடினாள். சுவரில் மன்மதன் மந்திரத்தை

எழுதிஞள். மீன்கள், குதிரைகள், கவரிவீசும் பெண்கள், முதலியவற்றை உபசாரமாக ஸமர்ப்பித்தாள். முள் இல்லாச் சுள்ளிகளினுல் ஓமம் செய்தாள். ஊமத்தமலர் முருக்கமலர்களைக்கொண்டு முப்போதும் அருச்சித்தாள். நெல், கரும்பு, வெல்லக்கட்டி அரிசி முதலியவறிறை காம சாத்திரம் வல்லார்களைக் கொண்டு நிவேதித்தாள். மூன்று மாதங்கள் விடாமல் இவ்வாறு வழிபட்டாள். இனி இவற்றைச் சிறிது விரிவாகக் காண்போம்.

பகவத்ஸமாச்ரயணம் நன்று எளிது, காமஸமாச்ரயணம் தீது, அரிது எனும் கொள்கையினைக் கைவிட்டாள். மன்மதனுக்காக அவன் வருமிடங்களைச் சுத்தி செய்தாள். திருக்கண்ணமங்கை ஆண்டான் திருக்கண்ணமங்கைத் திருக்கோயிலையும், பெரியாழ்வார் வடபெருந்திருக்கோயிலையும் சுத்தி செய்தனர். ஆண்டாளோ மன்மதன் வருமிடங்களைச் சுத்தி செய்தாள். மன்மதன் கால் நோவு படுமோ என அஞ்சித் தெருவினை நுண்ணிய வெண் மணல் கொண்டு மறைந்தாள். சத்வ குணமே வடிவெடுத்த எம்பெருமானுக்குரிய வெள்ளை மணலைக் கொண்டு ரஜோ குணம் மிக்க காமன் வரும் வழியை அலங்கரித்தாள் எம்பெருமான் பிள்ளையாகையால். உனக்கே நாம் ஆட்செய்வோம் எனும் உறுதியை உதறிஞள். இவள் திருத்தகப்பனுர் வடபெருங்கோயிலுடையானுக்குத் திருந்துழாய் பறித்தரர். இவள் மன்மதனுக்கு ஊமத்தம்பூ பறித்தாள். 'செங்கண்மால் எங்கண்மால் என்ற நாள் எந்நாறும் நாளாகும்'(மூன்ரும் திருவந்.17) என்றபடி ஒருநாள் அன்பு செலுத்துவதும் மிகை என்று நினைக்கும் எம்பெருமானைப்பற்றியவள் ஒருமண்டலம் காம பூஜை செய்வதாக ஸங்கல்பித்துக் கொண்டாள். இவ்வுலகில் சுத்த வைஷ்ணவர் செய்தறியாத பூஜையினைச் செய்தாள். 'நாட்காலே நீராடி' (பாவை8) என்று அவனைக்குறித்து நோன்பு நோற்கும்போது கிழக்கு வெளுத்துவிட்டது என்று பதறினைப்போலே இவனைக்குறித்து நோன்பு நோற்கும் போதும் பதறிஞள்.

'அத்யந்த ஸுகஸம்வ்ருத்த: ஸுகுமார: ஸுகோசித:।
கதம்நு அபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே।(ராமா.ஆர.16.30)

(மிகவும் சுகத்திலே வளர்ந்தவனும் ஸுகுமாரனும் ஸுகத்திற்கே தகுந்தவனுமான பரதன் பின்னிரவுகளில் எப்படித்தான் ஸரயூநதியில் குடைந்து ஆடுகிருனோ) என்கிறபடியே ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீராமனைப்பிரிந்த பிரிவு நோய் ஆறுவதற்காக சரயூநதியில் குளித்தது போலக் கண்ணனைப்பிரிந்த பிரிவு நோய் ஆறுவதற்குக் குளித்தாள். மென்மைமிக்க மன்மதனை குறித்த நோன்பாதலால் முள்ளும் எறும்பும் இல்லாச் சுள்ளியைத் தேடி ஹோமம் செய்தாள். பெரியாழ்வார் அநுஷ்டித்த அக்னி ஹோத்ரம் முதலிய கர்மாக்களுக்கு ஸமித் முதலானவற்றை எடுத்து நீட்டிய திருக்கரங்கள் இன்று சுள்ளிகளை ஹோமம் செய்தன. பரம ஸாத்விகமான திருந்துழாய் பறிக்கும் குடியிலேபிறந்தவள் காமத்தினைத் தூண்டும் ஊமத்தம்பூ முருக்கம்பூ ஆகிய பூக்களைப் பறித்தாள். ரஜோகுணம் மிக்க மன்மதனுக்கு ரஜோகுணம் மிக்க

மலர்களைத் தேடினாள். சுறுமீனைக் கொடியாக உடையவனாகையாலே மகரக்கொடிகளை நெஞ்சாலே ஸமர்ப்பித்தாள். கருடக்கொடியிலேறு பழகியிருப்பது தவிர்ந்தது. பிரிந்தவர்களைச் சேர்க்க உதவ அலைந்து திரியும்படி குதிரைகளை நெஞ்சாலே ஸமர்ப்பித்தாள். கண்ணனுடைய தேரில் பூட்டிய குதிரைகளை நினைக்கவேண்டும்படி ஆயிற்று. சாமரம் வீசும் பெண்களையும் நெஞ்சினால் ஸமர்பித்தாள். பரமபதத்தில் எம்பெருமானுக்கு சாமரம் வீசும் விமலை முதலானோரை நினைத்திருக்கும் இவள் அதனைத் தவிர்ந்து இவனுக்குச்சாமரம் வீசும் பெண்களை நினைத்தாள். 'சாரங்காமன்னும் வில்லாண்டான் தன்னை? (திருப்பல்லாண்டு12) என்று திருப்பல்லாண்டு ஸேவிப்பதை விட்டுக் காமனது கரும்பு வில்லுக்குப் பல்லாண்டு பாடினாள். எம்பெருமானுக்குத் திருவாராதனம் செய்யும் போது வாகனம், கொடி, சாமரம் முதலிய உபகரணங்களைச் சமர்ப்பித்துப் போந்த பழக்கத்தால் இவனுக்கும் இவற்றை ஸமர்ப்பித்தாள். ஸாதவிகர்கள் பகவானுடைய குணங்களை அநுபவித்து ஒருவருக்கு ஒருவர் ஒருவர் சொல்லி நிலைபெறப் பிற ஸாத்விகர்களைக் கூட்டிக்கொண்டு பகவத் விஷயத்தில் இழிவது போல ரஜோ குணம் மிக்கவர்வகளாய் வாத்ஸ்யாயன மகரிஷியின் காமசாஸ்திரத்தைக் கசடறக் கற்றவர்களாய் இருக்கும் இளம்பெண்களை முன்னிட்டுக் கொண்டு காமனுக்குப் பண்டிகை நடக்கும் பங்குனி மாதத்தில் அவனுக்குரிய பண்டிகை நாளில் அவன் வரும் வழியில் அவ்விளம் பெண்களுடன் சென்று காமனை வரவேற்றாள். எம்பெருமானைத் தொழும்போது வேதம் வல்லார்களை முன்னிட்டுத் தொழுவது போல் அவனைக் குறித்து நோன்பு நோற்கும்போதும் காமசாத்திரம் வல்லார்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு வேண்டிக்கொண்டாள்.

'' தேச முன்னளந்தவன் த்ரிவிக்ரமன்
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்
சாயுடைவயிறுமென் தடமுலையும்
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே'' (நாச்.திரு.1.7)
'' பேசுவது ஒன்று உண்டு இங்கு எம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத்து ஆக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னுமிப்பேறு எனக்கு அருளு கண்டாய்''(நாச்.திரு. 1.8)

(2) சிற்றில் சிதைத்தல்

மாசுடை உடம்போடு தலை உலறி, வாய்ப்புறம் வெளுத்து, ஒருபோதும் உண்டு நோற்கும் நோன்பினை கண்ட கண்ணன் 'நாம் பிற்பட்டுவிட்டோமே நாம் காரியம் செய்யும் லக்ஷணம் அழகாயிருந்தது' என்று தான் இவர்களைக் காப்பாற்றப் பிற்பட்டதை நினைத்து கஜேந்திராழ்வானைக் காக்கப் பிற்பட்ட காலத்தில் போல் நெஞ்சுருகினான். ஆயினும் கஜேந்திரனுக்கு உதவிற்போலே வந்து இவர்கட்கு முன் நின்றான். இவர்கள் நோன்பிற்காகச் சிற்றில் இழைப்பதில் ஈடுபட்டுக் கண்ணன்

நிற்பதைக் கண்டாள் இவள். அவன் இவர்கள் இழைத்த சிற்றிலைச் சிதைக்கத் தொடங்கினான்.



''பெய்யும் மாமுகில் போல் வண்ணா! உன்தன் பேச்சும் செய்கையும் எங்களை மையலேற்றி மயக்க உன்முகம் மாயமந்திரம் தான் கொலோ!
'நொய்யர், பிள்ளைகள்' என்பதற்கு உன்னைநோவ நாங்கள் உரைக்ககிலோம்
செய்ய தாமரைக் கண்ணினாய் எங்கள் சிற்றில் வந்து சிதையேலே'' ***(நாச்.திரு.2.4)*** என்றனர்.

பெண்ணுடை உடுத்தநம்மாழ்வார் கண்ணனை நேரில் கண்டும் 'என்னுடையபந்தும் கழலும் தந்து போகு நம்பீ'(திருவாய்6.2.1)என்று ஊடினார்.நாயகி பவத்தில் திருமங்கை மன்னனும்

'சுவரார்கதவின் புறமே வந்து நின்றீர்.
இவரார் இதுஎன் இதுஎன்இது என்னை'' (பெரிய திரு–10.82)

எனக் கண்ணனைக் கண்டும் கதவடைத்தார். ஆனால் ஊடலழகியார் இனத்தவராயினும் கண்ணன் வடிவழகிலும் கண்ணழகிலும் ஈடுபட்டு ஆண்டாள் உன்னை நோவ உரைக்கிலோம் செய்யதாமரைக் கண்ணினாய் என்கிறாள். நாச்சியார் திருமொழி நூற்றுநாற்பத்து மூன்று பாடல்களில் ஊடல்பற்றிய ஒரு பாசுரமும் இல்லாமை நோக்கத்தக்கது. வடிவழகில் மயங்கிய மங்கையர் ஆடவரின் குற்றங்களையும் காணார். ஊடலும் கொள்ளார் எனும் மனோதத்துவத்தை இயல்பாகவே பெண்ணாய்ப் பிறந்தவர்களின் பேச்சில்தான் காணமுடியும். கண்ணன் நாச்சியாரை அணையக்காலடிவைக்கிறான். பெண்களுக்கே உரிய நாணத்தாலும் அச்சத்தாலும் ஆண்டாள் ஒதுங்கப்பார்க்கிறாள்.

''முற்றத்தூடு புகுந்து நின்முகம்காட்டிப் புன்முறுவல் செய்து சிற்றிலோடு எங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ கோவிந்தா, முற்ற மண்ணிடம் தாவி விண்ணுற நீண்டளந்து கொண்டாய் எம்மைப் பற்றிற மெய்ப்பிணைக்கிட்டால் இந்நப் பக்கம் நின்றவர் என் சொல்லார்'' *(நாச். திரு. 2.9)*
குறிப்பு –இவற்றை எல்லாம் சிற்றில் இழைத்துக் கொண்டிருக்கும் ஆண்டாளின் மானஸானுபவமாகக் கொள்க.

3. கூறை வேண்டல்

நோன்றபிற்குச் சிற்றஞ்சிறுகாலே பனி நீராடிய ஆண்டாளுக்கு முன்பு ஒருகால் இவ்வாறு பனி நீராடிய ஆயர்சிறுமியர்களின் துகிலை வாரக்குருந்த மாந்தில் ஏறிய கண்ணனது லீலை கண்முன் நின்றது. அச்சிறுமியருடன் ஒன்றுபட்டு ஆண்டாள் இன்புறுகிறாள். ஆண்டாள் தன்துகிலை வேண்டினார். இரண்டுகைகளையும் நீட்டி

வேண்டினார் தருவதாகக் கண்ணன் கூறினான். ஆண்டாள் தன் ஒருகையுடன் தன் தோழியின் ஒருகையினையும் இணைத்துத் துகில் வேண்டினள்.

''ஏழைமை ஆற்றவும் பட்டோம் இனி என்றும் பொய்கைக்கு வாரோம் தோழியும் நானும் தொழுதோம் துகிலைப் பணித்தருளாயே'' (நாச்.திரு.3.1) இதனை அடிஒற்றி தேசிகனும் காமீ கஸ்சித் கரகமலயோ: அஞ்சலிம் யாச மாந: என்று ஸாதிக்கிறார்.

கண்ணன் மேல் தீண்ட முற்படுவதாகவும் பெண்ணுக்கே உரிய நாணத்தினால் தான் அதற்கு உடன்படாததாகவும் கற்பனை செய்து ஆண்டாள் மகிழ்கிறாள். 'இது என் புகுந்தது இங்கு அந்தோ இப்பொய்கைக்கு எவ்வாறு வந்தாய் மதுவின் நுழாய் முடிமாலே! மாயனே! எங்களமுதே! விதியின்மையால் அது மாட்டோம் விததகப் பிள்ளாய் விரையேல் குதிகொண்டரவில் நடித்தாய்! குருந்திடைக் கூறை பணியாய்' (நாச்.திரு.3.2) இயல்பாகவே பெண்ணாய் பிறந்தவள் பாசுரத்திலே அன்றிப் பெண் உடை உடுத்தவர்களின் பாசுரங்களில் இச்சுவை அமையாது.

4. கூடலிழைத்தல்

கனவில் கண்ட புதையல் விழித்தவுடன் மறைவது போல் ஆண்டாளின் கற்பனையில் தோன்றிய கண்ணன் மறைந்தான். அவளுக்குத் தான் கவைத்த இன்பமெல்லாம் கானல் நீர் எனத் தெளிவுவந்தது உண்மையில் கண்ணனுடன் பரிமாற்றம் ஏற்படுமா என ஐயுற்றாள். கூடலிழைத்து உண்மை உணரலாம் எனத்துணிந்தாள். கூடலிழைத்தலாவது குறிபார்ப்பதில் ஒரு வகை. அஃதாவது தரையில் ஒரு வட்டத்தை எழுதி அதற்குள் எண்ணாமல் சுழிசுழியாகச் சுழிகளைச் சீறி இரண்டு இரண்டு சுழிகளாக எண்ணிப் பார்க்கும் போது இரட்டைப்படையாக வந்தால் நினைத்தகாரியம் கூடுமென்றும் ஒற்றைப் படையாக வந்தால் கூடாது என்றும் கொள்வது.

''மாடமாளிகை சூழ்மதுரைப்பதி
நாடி நம் தெருவின் நடுவே வந்திட்டு
ஓடை மாமத யானை உதைத்தவன்
கூடுமாகில் நீ கூடிடு கூடலே'' (நாச்.திரு.4–5)

ஸ்ரீவில்லிபுத்தூரையே ஆண்டாள் மதுரைப் பதியாக நினைக்கிறாள் போலும். (நாடி) கண்ணன் நேரே ஒருவரும் காணாமல் வந்து தன்வீட்டடில் புகுவது கவையில்லை. மதுரை மாநகரில் உள்ள ஒவ்வொரு தெருவிலும் 'ஆண்டாள் வீடு யாது? ஆண்டாள் வீடு யாது?' என்று கேட்டு ஊரெல்லாம் இவள் கண்ணனுக்கு இனியவள் என்று அவர் பரவும்படி தன்னைத்தேடி அதனால் உண்டான களைப்புத் திருமேனியிலே தோன்றும் படி வரவேண்டும் என்று ஆசைப்பட்டுக் கூடலிழைக்கிறாள். வடமதுரையில் மூலைமுடுக்கில் இருந்த மாலாகாரர் சூடிசைக்குக் கண்ணன் எழுந்தருளியது போல் தன் வீட்டிற்கும் வர விழைகிறாள்.



திருத்துறைப்பூண்டி ஆண்டவன் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன்

5. குயிலை வேண்டுதல்

தை மாசி பங்குனி மாதங்கள் கழிந்தன. மன்மத நோன்பும் முடிந்தது. கூடலும் இழைத்துப் பார்த்தாள். உள்ளப்புணர்ச்சி கண்ணனுடன் ஏற்பட வில்லை. வசந்த காலம் வந்தது. பூங்காவில் புதுமலர் பூத்தன. பொறிவண்டுகள் காமராம் இசைத்தன. பிரிவு நோவினால் ஆண்டாள் உடல் மெலிந்தாள். கைகளிலிருந்து சங்குவளைகள் சரிந்தன. என்பு உருகியது. கண்கள் இமை பொருந்தவில்லை. நுன்பக் கடல் புக்குவைகுந்தனென்பதோர் தோணி பெறாது உழன்றாள். செய்யவாயும் மையும் அழகிழந்தன. கொங்கைகள் ஆவியை ஆகுலம் செய்தன. தென்றலும் திங்களும் வாட்டறுத்து நலிந்தன. ஆனால் குயில் மட்டும் தன் பேடையுடன் புன்னை, குருக்கத்தி பொந்துகளினின்றும் பாடிக் கொண்டிருந்தது. சண்பக மரரையும் தளிரையும் கோதிக்கொண்டிருந்தது. ஆண்டாள் அதனைப்பார்த்து 'குயிலே! கண்ணன் தன் உருவைக் காட்டவில்லை. காதலனைப் பிரிந்ததுன்பத்தை நீயுமறிவாய். என் கோவைக்கிளியை உன்னுடன் தோழமை கொள்ளச் செய்வன். கண்ணன் வரக் கூவுவாயாகில் நீ செய்த உதவிக்கு ஒரு கைம்மாறு செய்வது இயலாதாகையால் என் தலையை உனக்கு உரியதாக்கி எல்லாக்காலமும் உன் காலிலே வணங்கி வாழ்வேன். நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ ஆற்றல் உடையோமல்லோம் எனச்சங்கேதம் செய்து கொண்டோம். அதனை நீயுமறிவாய். அந்தச்சங்கேதத்தை அவன் மீறிநடக்கும்போது அவனுக்கு நியாயத்தை உணர்த்த வேண்டியது உனக்குப் பொறுப்பாயிருக்க நீ பேசாமலிருக்கலாமா? ''உங்களைச் சேரவைப்பதால் எனக்கு என்ன பயன்?'' என நினைக்காதே. இதனால் உனக்குப் பெரும் பயன் விளையும். அவன் என்னை வந்து அடைந்தவுடன் நீண்டநாள் பிரிந்து என்னைப் படுத்தின பாட்டை எல்லாம் உன்முன்பே அவன் படும்படி செய்கிறேன். அந்த அரிய காட்சியைக் காண்பதே உனக்குப் பெரும் பயனன்றோ. அப்படி இவள் அவனை என்ன செய்து விடப் போகிறாள் எனில்? நெடுநாள் பிரிந்த அவன் இவளை அணைய ஆர்வத்தோடு வரும்போது இவள் அவனை அணைவதில் விருப்பத்தைக் காட்டாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டால் இவள்பட்ட பாட்டை எல்லாம் அவன் பட்டுத் தானே ஆகவேண்டும். இவள் முகத்தால் அன்றோ அவன் பட்டினி தீர்வது. 'வண்டார் பூமா மலர்மங்கை மணநோக்கமுண்டான் (பெரிய திரு. 8.10.1)

அவனைப் பிரிந்து மெலிந்து நான் இழந்த என்வளைகளை என் கையில் தங்கும்படியாவது நீ செய்ய வேண்டும். அவன்வந்தால் மெலிவு நீங்கும் உடல் பூரிக்கும். அல்லது அடியார்களுக்கு ஆபரணம் போல் காட்சி அளிக்கும் சங்கு சக்கரங்கள் ஏந்திய அவன் இங்கு வரக் கூவுதல் மூலம் அவன்கையில் ஆபரணங்களான சங்குசக்கரங்கள் என்கையில் அகப்படும்படியாவது–செப்படும்படியாவது–நீ செய்ய வேண்டும். நீ செய்யும் கூவுதலாகிய ஒரு காரியத்தால் நான் விரும்பும் இந்த இரண்டு காரியங்களும் நிறைவேறுமன்றோ. எனக்கு இன்பம்தரும் இச்சோலையில் இருந்து நீ வாழ வேண்டாவா? என் அழுகுரல் உன் காதில் பட்டுக் கொண்டிருந்தால் உனக்கு இங்கு வாழ்ச்சி கிடைக்குமா?

நெஞ்சில் ஈரமில்லாமல் என் அழுகுரலைக் கேட்டுக் கொண்டிருந்தாலும் பிரிவு துன்பத்தால் நான் அழிந்தால் உனக்கு இந்தச சோலையைப் பாதுகாத்து தருபவர் யார்? அதனை நினைத்தாவது இரண்டனில் ஒன்றை நீ செய்து தரல் வேண்டும்.

(குறிப்பு) ஆசாரியர்களைப் பக்ஷிகளாக உருவகப்படுத்திப் பேசுவது ஸம்ப்ரதாயமானபடியால் இங்கு ஆண்டாள் ஆசார்யரிடம் தன் மனக்குறைகளை வெளிப்படுத்துகிறாள். அடியவர்கட்கு பகவத்ஸாரூப்யம் (சங்குசக்காங்கள ஏந்திய வடிவம்) ஏற்படுமஎனும் தத்துவமும் தெரிகிறது.

6. கனாக் காண்டல்

கூடலிழைத்தும், குயிலை வேண்டியும் கண்ணன் உருக்காட்டவில்லை. நம்மாழ்வாருக்கு மயர்வற மதிநலமருளியும் உடன் 'முனியே நன் முகனே' எனும் நிலையினை அருளவில்லை. ஆண்டாளுக்குப் பேரானந்தத்தைத் தாங்கும் நிலை ஏற்பட வேண்டும் எனக் காலம் தாழ்த்தினான். ஆயினும் இவள் வருத்தத்தைக் கண்டு அவனால் வாளாயிருக்க முடியவில்லை. கனவில் அவளை மணந்தான். விசிஷ்டாத்வைதமதத்தில் கனவில் காணும் பொருள்களும் உண்மைகளே. அவரவர் வினைகட்கு ஏற்ப பகவான் கணநேரம் இருக்கும் பொருள்களைப் படைத்துக் கனவில் இன்ப துன்பங்களை நுகர்விக்கிறான். இதனை ஸந்த்யாதிகாணத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் உபநிடத வாக்கியங்களைப் பிரமாணமாகக் காட்டி நிலைநாட்டியிக்கிறார். ஆதலால் ஆண்டாள் கண்ணன் ஆயிரம் யானைகள் சூழ ஜானவாஸம் வந்ததாகக் கண்டதும், அவளுக்ககுப் பார்வதி கூறை உடுத்தியதும், கைத்தரம் பற்றியதும், தீவலம் செய்ததும், அம்மி மிதித்ததும், பொரி அட்டதும் இருவருமாக நகர்வலம் மஞ்சன மாடியதும் உண்மை அனுபவங்களே. அசோக வனத்தில் இராமனைப் பிரிந்து வருந்திய சீதைக்குக் கனவில் கூட ஸேவைஸாதிக்காத பகவான் ஆண்டாளுக்குக் கனவில் ஸேவை ஸாதித்தான்.

ஸ்வப் நேபி யத்யஹம்வீரம் ராகவம் ஸஹலக்ஷ்மணம்।
பச்யேயம் யதி ஜீவேயம் ஸ்வப்நோபி மம மத்ஸரீ॥ (ராமா.சுந். 34.2)

(கனவிலாவது லக்ஷ்மணனுடன் கூடிய வீரரான இராமனைப் பார்ப்பேனாகில் உயிர் வாழ்வேன். ஆனால் கனவும் என்னுடன் பொறாமை கொண்டது) என்று அவளே அருளிச் செய்தாளன்றோ.

7. சங்கைவிளித்தல்

(கரும்பூரம் நாறுமோ)

சீதாப் பிராட்டியினதைக் காட்டிலும் ஆண்டாளது பாக்கியம் பெருமை பெற்றது. அவள் முன்பேபழகாத குரங்கினத்தைச் சார்ந்த அனுமனைப் பார்த்து,

''கீத்ருசம் தஸ்ய ஸம்ஸ்த்தாநம் ரூபம் ராமஸ்ய கீத்ருசம்)
கதமூரூ கதம்பாஹூ லக்ஷ்மணஸ்யச சம்ஸமோ'' (ராமா.சுந்.35-4)

(அந்த இராமனது அமைப்பு எப்படிப்பட்டது. உருவம் எப்படிப்பட்டது? தொடைகள் எப்படி இருக்கும்? கைகள் எப்படி விளங்கும்? லக்ஷ்மணனுடைய இந்த அடையாளங்களையும் எனக்குச் சொல்வாயாக) என்று கேட்டாள். ஆண்டாளோ இத்திருமொழியில் எம்பெருமானை அடைவதற்குப் புருஷகாரமாய் அவனை அனுபவிப்பதற்கு வழிகாட்டும் தேசிகராய் இருக்கும் ஸ்ரீபாஞ்சசன்னிய ஆழ்வானைப் பார்த்து, 'கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ நாறுமோ? என்று கேட்கும் பெருமையைப் பெற்றாள். சென்ற திருமொழியில் கண்ணனுடன் மஞ்சனமாடக் கனாக்கண்டாள். இது சுனையாடலையும் குறிப்பாகக் கூறுகிறது. கலவியைச் சுனையாடல் என்பர்தமிழர். அக்கலவியில் அவன்வாய்ச் சுவையினையும் ஆண்டாள் சுவைத்திருக்கலாம். ஆனால் அவையாவும் கனவின் நுகர்ச்சியாதலால் மின்மினி பற்ந்தாற் போலே சிறிதளவினதாயிருக்கும். நெஞ்சில் நிலையாக இரா. ஆனாலும் பகவத் விஷயத்தைப் பற்றிய மிகவும் சுவையான கனவாகையால் நெஞ்சில் படாமலும் இரா. மேலும் கனவாகையால் அவ்வின்பத்தைத்த தொடக்கத்திலேயே இழந்தார். தான் நிலையாகப் பெற்றிருக்க வேண்டிய இன்பத்தை ஸ்ரீபாஞ்சசன்னிய ஆழ்வான் அடிக்கடிப் பெறுவதால் அவ்வாழ்வானைக் கேட்பதில் குறையில்லை.

விஷ்வக் ஸேனர்கருடன் முதலிய ஏனைய நித்திய சூரிகளும் இருக்க ஸ்ரீபாஞ்சசன்ய ஆழ்வானைக் கேட்பான் ஏனெனில் (1) சக்ரவர்த்தி இராணியுடன் தனியாகத் திரைக்குள்ளே இருக்கும் போதும் வயதான கூனர் குட்டையர் போல்பவருக்கு அங்கு இருக்க அனுமதி உண்டு. அவர்களைப் போலவே இவனும் எம்பெருமானைக் கைவிடாமல் இருக்கும் அந்தரங்கமானவன். (2) வாயமுதத்தைப் பருகும் தலைவியான தன்னைப் போல் வாயலேயே இருந்து வாய்ச்சுவையைப் பருகுவதில் வல்லவனாயிருப்பவன். (3) எப்பொழுதாவது கலவி பெறும் தன்னைப் போலன்றி எப்பொழுதும் எம்பெருமானது தொடர்பைப் பெற்றவன் (4) திருவாழி ஆழ்வானும் இவனைப் போல் கைவிடாத அந்தரங்கனாலும் 'கருதுமிடம் பொருதுகைந்நின்ற சக்ரத்தன்) (திருவாய் 10.6.8) என்கிற படியே போர்முண்டால் திருவாழி ஆழ்வான் திருக்கையைவிட்டுப் போய் செயல் புரிபவன். பாஞ்சசன்னியமோ போர்முடுக முடுகத் திருப்பவளவாயில் அணைவன். ஆதலால் ஏனையோரை விட்டுவிட்டுப் பாஞ்சசன்னியத்தைக் கேட்கிறாள்.

8 மேகவிடு தூது

வ்சந்த காலம் சென்றது. கார்காலம் வந்தது. கண்ணனும் கார்காலத்தில் திரும்பிவருவதாகச் சொல்லிப் பிரிந்தான். வரவில்லை. இத்திருமொழியால்

ஆண்டாள் திருவேங்கடத்து எம்பெருமானிடம் தன் காதலைத் தெரிவித்து மேகங்களைத் தூதுவிடுகிறாள். அவனைப் போல் கருநிறமுடைய மேகங்களைக் கண்டதும் அவனே வந்ததாக மயங்கினாள். மேகங்களைக் கண்டாளே அன்றி மேகவண்ணனைக் காணவில்லை. அம்மேகங்களைப் பார்த்து எம்பெருமானைப் பற்றிய செய்திகளைப் பதியாகவாழ்வீர்காள்! பாம்பணையான் வார்த்தை என்னே? கதி என்றும் தானாவான் கருதாது ஒரு பெண் கொடியை வதை செய்தான என்னும் சொல் வையகத்தார் மதியாரே'' (நாச்.திரு.8.9) என்றாள். அர்ச்சாவதாரத்தில் காரி தருவது தவிர வார்த்தை சொல்லுதல், தழுவுதல் முதலான பரிமாற்றங்கள் இல்லை. விபவாவதாரங்களிலேயே இவை உள்ளன எனும் தெளிவும் ஆண்டாளுக்கு இல்லை.

குறிப்பு : இங்குக் காமத்தைப் பத்தியாகவும், ஆசார்யர்களைத் தூதாகவும் கொள்க 'நேசிகாஸ் தத்ர தூதா;' என்கிறார் தேசிகரும் த்ரமிடோப நிஷத் தாத்பர்ய ரத்னாவளியில்.

9. போலி கண்டு மயங்குதல்

''கதேஹி ஹரிசார்தூல புந ராகம நாயது.ப் ப்ராணானாமபிஸந்தேஹோ மமஸ்யாந் நாத்ரஸம் சய:ப'' **(ராமா.சுந்.39.2)**

(வானரத் தலைவனான அனுமனே! நீ திரும்பிவருவதாகப் போனாலும் நான் உயிர்வாழ்வது ஸந்தேஹம். இதில் ஐயமில்லை) என்று சீதை அருளியது போல உயிர் நிலைக்குமா எனும் நிலை ஆண்டாளுக்கு ஏற்பட்டது. பிரிந்தவர்களின் இவ்வாறான நிலைகளை அறிவிக்க அனுமனாகிய தூதன் வாய்க்கப் பெற்ற சிறப்பு சீதாப் பிராட்டிக்கு கிட்டியது. ஆண்டாளுக்கு அவ்வாறு தூது சென்று அறிவிக்க ஒருவருமில்லாமல் தூது அனுப்பிய மேகங்களும் போகாமே அவள் முன்பே மழைபொழிந்தன. அக்காலத்தில் தோன்றக்கூடிய பொருள்களனைத்துமாகும்பின. அவையாவும் எம்பெருமானுடைய திருமேனியையும், திருக்கண் திருப்பாதம் முதலிய உறுப்புகளையும் நினைவூட்டி ஆண்டாளை நலியத் தொடங்கின.

'சிந்துரச் செம்பொடி போல் திருமாலிருஞ் சோலை எங்கும்
இந்திர கோபங்களே எழுந்துமு பரந்திட்டனவால்'' (நாச்.திரு.9.1)
''பைம்பொழில் வாழ்குயில் காள்! மயில்காள்! ஒண்கருவிளைகாள்!
வம்பக்களங்கனி காள்! வண்ணப்பூவை நறுமலர்கள்!
ஐம்பெரும் பாதகர்காள்! அணிமாலிருஞ்சோலைநின்ற
எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என் செயவதே!'' (நாச்.திரு.9.4)

''கோவை மணாட்டி நீ உன் கொழுங்கனி கொண்டு எம்மை
ஆவி தொலைவியேல் வாயழகர் தம்மை அஞ்சுதும்'' (நாச். திரு.10.3)
''முல்லைப் பிராட்டி நீ உன் முறுவல் கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல், ஆழிநங்காய் உன் அடைக்கலம்'' (நாச்.திரு.10.4)
''பாடுங்குயில்கள்! ஈதென்ன பாடல். நம் வேங்கட
நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்
ஆடும்கருளக் கொடி உடையார் வந்து அருள் செய்து
கூடுவராயிடில் கூவிநும் பாட்டுகள் கேட்டுமே. (நாச்.திரு.10.5)

10. ஆசார்யநிஷ்டை

இப்படி உலகப் பொருள்கள் அனைத்தும் திரண்டு ஆண்டாளைத் துன்புறுத்தின படியாலும், காமன் பறவைகள் காலில் விழுந்ததும் பயன்படாமல்போனபடியாலும் உயிர் தாங்க முடியாமல் உயிர் நிலைப் பெறப் பின்வரும்இரண்டுவழிகளை எண்ணலுற்றாள்.

'ஸக்ருதேவப்ரபந்நாய தவாஸ் மீதி ச யா சதே!
அபயம் ஸர்பூதேப்யோ த தாம் யேத த்வ்ரதம் மம!! (ராமா.யுத்.18.33)

(ஒரு முறை அடைக்கலமடைந்தவன் பொருட்டும் உனக்கு அடியேனாகிறேன் என்று வேண்டிக் கொள்பவன் பொருட்டும் எல்லாப் பிராணிகளிடத்தினின்றும் அபயமளிக்கிறேன். இது எனது விரதம்)

''மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந.
தோஷோயத் யபிதஸ்யஸ் யாத்ஸதாமேததகர்ஹிதம்!! (ராமா.யுத்.18.3)

(நண்பன் எனும் எண்ணத்துடன் நெருங்கின இந்த விபீஷணனை ஒரு காலும் கைவிடமாட்டேன். அவனிடம் குற்றமிருந்தாலும் இருக்கட்டும். இவனை அடைக்கலம் கொண்டால் நல்லோர் இகழமாட்டார்)

'த்யௌ: பதேத் ப்ருதிவீ சீர்யேத் ஹிமவாந் சகலீ பவேத்
சுஷ்யேத் தோய நிதி: க்ருஷ்ணே நமேமோகம் வசோபவேத்''
(பார-உத். 70-48)

(திரௌபதி! வானம்விழலாம். நிலம் நொறுங்கலாம். இமயமலை பொடிபடலாம். கடல் வற்றலாம். ஆனால் என் பேச்சுப் பழுதுபடாது). இவ்வாறெல்லாம் அவன் சொன்ன வார்த்தைகள் பழுதாகாதாகையால் அவற்றாலே நாம் வாழக்கூடும். (2) அல்லது பெரியாழ்வார் திருமகளாகப் பிறந்தமையாலே

வாழக்கூடும். அவன் வார்த்தைகளைக் கொண்டு வாழலாம் என்று பார்த்தால் சுதந்திரனான அவனை இவ்வார்த்தைகளைக் காட்டி கட்டுப்படுத்த முடியாது. மற்றவை எல்லாம் தப்பினாலும் பெரியாழ்வாரோடு உள்ள உறவு தப்பவே தப்பாது. அவனுடைய சுதந்திரதையும் மாற்றி அவனுடைய திருவடிகளில் சேர்த்தல்லது விடாது என உறுதி கொள்கிறாள்.

'நல்ல என் தோழி! நாகணை மிசைநம்பரர்
செல்வர் பெரியர் சிறு மானிடவர் நாம் செய்வது என்
வில்லி புதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே.(நாச்.திரு.10-10)
விபீஷணோ வா சுக் ரீவ யதிவா ராவண: ஸ்வயம்।
ஆநயைநம் ஹரிச் ரேஷ்ட தத்தமஸ்யா பயம் மயாா(ராமா.யுத்.18.34)

(வானரர்களுள் சிறந்த சுக்ரீவனே! இவனை அழைத்து வாரும். விபீஷணனையினும் இராவணனையினும் இவனுக்கு அபயமளிக்கப்பட்டது) என்று இராமனே விபீஷணனை நேராக அழைக்காமல் சுக்ரீவனைக் கொண்டு அழைத்து வரச்

சொன்னனன்றே.

உத்திரக்ருதய திருமொழிகள்.

இவ்வாறு ஆண்டாள் போற்றிற்காகத்தன் தகப்பனரை ஆசாரியனாக ஏற்றுமன அமைதி பெற்றபின் அவள் வாழ்ந்த முறைகளை விரித்துரைப்பன மேல் திருமொழிகள். இது ஒவ்வொரு ப்ரபன்னனும் தனது அறிவுக்கும் உணர்ச்சிக்கும் ஏற்ற வகையில் வாழ்நாளைக் கழிக்க உதவும். ஆண்டாள் நாயகி பாவத்திலேயே பிறந்து வளர்ந்ததால் அவ்வுணர்ச்சிகள் அவள் உள்ளத்தைவிட்டு அகன்றில. உடல் வாடியது. கைவளைகள் சரிந்தன. தாய்மார்களும் தோழிகளும் இவள் ஏன் இவ்வாறிருக்கின்றாள் என அறியத்தம்தம் வேலைகளை விட்டுவிட்டு இவள்முன் கூடினர். அவர்களிடம் ஆண்டாள் இவ்வாறு கூறினாள்.

''அங்கைத்தலத்திடை ஆழிகொண்டான் அவன் முகத்தன்றி விழியேனென்று
செங்கச்சுக்கொண்டு கண் ஆர்த்து சிறுமானிடவரைக் காணில் நாணும்
கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர் கோவிந்தனுக்குக் கல்லால் வாயில் போகா
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய் யமுனைக் கரைக்கு என்னை
உய்த்திடுமின்''(நாச்.திரு.12.4)

இவளை ஆற்றுவிக்கத்தோழிமார் 'கண்ணன் திருடன். மாடுமேய்ப்பவன் அவனை ஏன் காதலிக்கிறாய் என்றனர். அதற்கு ஆண்டாளின் மறுமாற்றத்தைக் கேளீர்.

''கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றுன், காடுவாழ் சாதியுமாகப் பெற்றுன்.
பற்றி உரலிடை யாப்புமுண்டான், பாவிகாள்! உங்களுக்கு ஏச்சுக்கொலொ.
கற்றன பேசிவசவுணுதே காலிகள் உய்ய மழை தடுத்த,
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற கோவர்த்தனத்து என்னே
உய்த்திடுமின்''(நாச்.திரு.12.8)

என்னே அழியாமல் காக்க வேண்டும் எனும் எண்ணம் உங்களுக்கு இருந்ததாகில் அவனுடையதிருமேனி ஸம்பந்தம் பெற்ற யாதானுமொரு பொருளைக் கொண்டுவந்து அதனைக் கொண்டு என்னைத்தொடச் செய்து என்னைப் பாதுகாக்கப் பாருங்கோள் என்கிறுள் இத்திருமொழியில்

'அழிலும் தொழிலும் உருக் காட்டான் அஞ்சேல் என்னுன் அவனெருவன்
தழுவிமுழுசிப்புகுந்து என்னைச் சுற்றிச் சுழன்று போகானுல்
தழையின் பொல்வாய் நிரைப்பின்னே நெடுமால் ஊதிவருகின்ற
குழலின் தொளைவாய் நீர்கொண்டு குளிரமுகத்துத்
தடவீரே''(நாச்.திரு.13.5)

பிரியேன். பிரியில் தரியேன் எனும் பரமபக்தி நிலையினை அடைந்த ஆண்டாளுக்குக் கண்ணன் பிருந்தாவனுந்த ஸஞ்சாரியாகக் காட்சி அளித்தான்.

''இட்டமான பசுக்களை இனிதுமறித்து நீருட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தாவனத்தே கண்டோமே''
(நாச்.திரு.14.1)

'காட்டை நாடித்தேனுகனும் களிறும் புள்ளும் உடன் மடிய
வேட்டை ஆடிவருவானை விருந்தாவனத்தே
கண்டோமே''(நாச்.திரு.14.9)

(குறிப்பு)மன்மத நோன்பு நோற்றுப்பயன் பெருமல் ஆசார்யனையே தஞ்சமாகப் பற்றிய ஆண்டாளின் வாழ்க்கை, தேவதாந்தரபஜனத்தில் ஈடுபடும் பிரபந்த வைஷ்ணவர்கட்குப் பாடமாக அமையலாம். இதனைத் தெளிவிக்கவே ஆண்டாள் மன்மத நோன்பு நோற்றனள் போலும். என்னே ஆண்டாளின் தீர்க்கதரிசனம்.

ஸ்ரீ:

அரங்கரும் ஆழ்வார்களும்

(உய்யக் கொண்டார் அருளியது)

(ஸ்ரீ.உ.வே. ரகுநாதாசாரியர் ஸ்வாமி, வானமாமலை)

அன்னவயல் புதுவை யாண்டாள்- அரங்கற்குப் பன்னு திருப்பாவை பல்பதியம்- இன்னிசையால் பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை-பூமாலை சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

ஸ்ரீ ஆண்டாள்:-

சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாளும் அனைவரும் காணும்படி- உதறி உடுத்த பட்டுச்சேலையும் சுற்றிய செங்கழுநீர்மாலையும், திரு நெற்றியிலே கஸ்தூரி திருநாமமும், காதளவும் ஓடிக் கயல்போல் மிளிரும் கடைக்கண் விழியும், கொடியேரிடையுமாய், சிலம்பார்க்கச் சீரார் வளையொலிப்ப, அன்ன மென்னடையும் கொண்டு அழகிய மணவாளன் திருமுன்பே சென்று உள்ளே புகுந்து, கண்களாரக்கண்டு, கேசவநம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் பேறுபெற்று, நாகத்தணையை மிதித்தேறி, தீமுகத்து நாகணை மேல் சேரும் திருவரங்கரைச் சேர்ந்து, எப்பொழுதும் திருவரங்கன் திருவடியை வருடலாம்படி மறைந்தருளினார்.

''திரவடிப் பூரத்திற் ஜெகத்துதித்தாள் வாழியே!''

பெரியாழ்வார் அருளிய ''ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போலே வளர்த்தேன் செங்கண்மால்தான் கொண்டு போனான் ''என்பது உண்மையாயிற்று. ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் பதினொன்றாம் திருமொழியில் தாமுகக்கும் பதிகத்தில் அரங்கரை எழிலுடைய அம்மனைமீர்! என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர்- கொப்பூழில் எழுகமலப் பூவழகர் எம்மானார் என்றருளிச் செய்கிறார் ஆண்டாள். (நாச்சியார் திருமொழி11-3)

தீமுகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர் (11-1)
செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் (11-3)
செய்ப்புரளவோடும் திருவரங்கச் செல்வனார் (11-6)
திண்ணார்மதிள் சூழ் திருவரங்கச் செல்வனார்(11-7)
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் (11-8)

என்று பெரிய பெருமாளை மங்களாசாசனம் செய்கிறார் ஆண்டாள்.

''செய்யதுலா வோணத்திற் ஜெகத்துதித்தான் வாழியே!''

பொய்கையாழ்வார்:-

முதல் திருவந்தாதியில் 6ம் பாசுரத்தில்

''ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர்வண்ணனை நான்
இன்று மறப்பனோ ஏழைகாள்-
அன்று கருவரங்கத்துள் கிடந்து கை தொழுதேன் கண்டேன்
திருவரங்கமேயான் திசை.'' என்றருளிச் செய்துள்ளார்.

''காவேரீ விரஜாதோயம் வைகுண்டம் ரங்கமந்திரம்।
ஸவாஸுதேவோ: ரங்கேச: ப்ரத்யக்ஷம் பரமம்பதம்॥
விமானம் ப்ரணவாகரம் வேதச்ருங்கம் மஹாத்புதம்।
ஸ்ரீ ரங்கசாயீ பகவாந் ப்ரணவார்த்த ப்ரகாசக:॥''

என்பதை நாம் அறிவோம்.

''ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே''

பூதத்தாழ்வார்:-

இரண்டாம் திருவந்தாதியில் ''மற்றும் நினைப்பரிய நீளரங்கத்துள்ளான்'' (பாசுரம்-28)

''பயின்றது அரங்கம்'' (பாசரம்-46)

''தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்''(பாசுரம்-70)

''திறம்பிற்று இனியறிந்தேன் தென்னரங்கத் தெந்தை (பாசுரம்-88)

பேயாழ்வாரும்:- மூன்றாம் திருவந்தாதியில்'' கொண்டங்குறைவார்க்குக் கோயில்போல்'' (பாசுரம்-61).

''தென்குடந்தை, தேனார் திருவரங்கம், தென்கோட்டி (பாசுரம்-62) என்று நம் பாம்பணையில் பள்ளி கொண்ட பரமனை அரங்கரை மங்களாசாசனம் செய்துள்ளார்கள் முதலாழ்வார்கள் முதல் மூன்று திருவந்தாதிகளில் என்று நாம் அறிவோமாக.

''சிறந்த ஐப்பசியில் சதயம் செனித்த வள்ளல் வாழியே!''.

நான்முகனால் (ஸத்யலோகத்தில்) திருவாராதானம் கண்டருளி வைவஸ்வதமனுவுக்குப்பின் இக்ஷ்வாகு குலமன்னனுக்கு ஸ்ரீமந்நாராயணன் தன்னை பூலோகத்திலே ஆராதிக்கும்படியான பாக்கியத்தைத்த தந்தருளினான். சக்கரவர்த்தி திருமகன் ப்ரணவாகார விமானத்தோடு கூடின பெரிய பெருமாளை விபீஷணாழ்வாருக்குத் தந்தருளி. ஸ்ரீரங்கம் திவ்ய தேசத்தையே பூலோக வைகுண்டமாக்கி நிலையாக இருந்தருளினார் ஸ்ரீரெங்கநாதர்.

பட்டர் (திருவாய் மொழிஈடு 9-2-9)

''சாய்ந்தருளின அழகு பெரியபெருமாள் பக்கலிலே காணலாம். நின்றருளின அழகு நம்பெருமாள் பக்கலிலே காணலாம். இருப்பிலுண்டான அழகு பெரிய பிராட்டியார் பக்கலில் காணலாம்'' என்று அழகாக அருளிச் செய்வர் பட்டர்.

பிள்ளைலோகாச்சார்யர் முமுக்ஷுப்படியில் த்வயப்ரகரணத்தில் 141,142 சூர்ணிகையில்

141 : இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம்

142 : திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆஸந பத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்'' ஆகும் என்றருளிச் செய்வர்.

திருமழிசை ஆழ்வார் :

''இன்பமிகு தையில் மகத்திங்குதித்தான் வாழியே!'' திருமழிசைப் பிரானும் (உறையிலிடாதவர்)

திருச்சந்த விருத்தத்தில் (பா–20) அரங்கனே! என்றும் ''உண்டை கொண்டு அரங்க வோட்டி உள்மகிழ்ந்த நாதனூர்'' (பா–49)

''பொன்னிசூழ் ரங்கமேய புண்டரீகனல்லையே?'' (பா–55)

திருமழிசை ஆழ்வார் இதுதான் நாம் பற்றத்தக்க விடமென்றறிந்து பற்றும்படி ஓரிடத்தை அருளிச் செய்ய வேணுமென்ன பெருமாளும் திருவரங்கத்தைக் காட்டினாராம். ''சேர்விடத்தை நாயினேன் தெரிந்திறைஞ்சுமாசொலே'' என்ற இவருக்கு இவரிருந்த பூமியிலே சக்ஷுர் விஷயமாய் (கண்ணுக்கிலக்காய்) அவதாரங்களிலுண்டான நீர்மைகளும் இழக்க வேண்டாதபடி குணபூர்த்தியோடே கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற ஸம்ருத்தியைக் காட்ட கண்டநுபவிக்கிறார் என்று பெரியவாச்சான் பிள்ளை 49–ம் பாசுரத்திற்கு அருளும் முன்னுரையால் அறிய முடிகிறது.

சுரும்பரங்கு தண்துழாய் துதைந்தலர்ந்த பாதமே
விரும்பி நின்றிறைஞ்சு வேற்கு இரங்கு அரங்கவாணனே!
கரும்பிருந்த கட்டியே! கடல்கிடந்த கண்ணனே!
இரும்பரங்க வெஞ்சரம் துறந்த வில்லிராமனே!

என்று மிக அழகாக அரங்கவாணனே (நின்)
பாதமே விரும்பி நின்றிறைஞ்சுவேற்கு இரங்கு
என்று பெரிய பெருமாளுடைய கருணையொன்றே
மோக்ஷத்திற்கு உபாயம் என்று அருளிச் செய்கிறார்.
நான் முகன் திருவந்தாதியில் பாசுரம் 3, 30,36,60
'பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்'
''அவன் என்னையாளி அரங்கத்து – அரங்கில்
அவன் என்னையெய்தாமல் காப்பான்'
என்று அருளியுள்ளார்.

'நாகத்தணையரங்கம்'
''கேட்பார்க்கு அரும்பொருளாய் நின்ற அரங்கனே
உன்னை விரும்புவதே விள்ளேன் மனம்'' என்று செய்கிறார் மங்களாசாசனம்.

ஸ்ரீநம்மாழ்வார்

''ஸ்ரீரங்கநாத மமநாத'' என்று எமபெருமானாரும்

''அரங்கமாளி என்னாளி'' என்று திருமங்கை ஆழ்வாரும்

''என்னரங்கத் தின்னமுதர்'' என்று சூடிக்கொடுத்த நாச்சியாரும்

''என்னுடைய திருவரங்கர்'' என்று பெரியாழ்வாரும்

அனுபவித்த பெருமாளிறே நம்பெருமாள்

மணவாள மாமுனிகள் உபதேச ரத்னமாலையில்

''நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை என்பர் அவரவர்தம் ஏற்றத்தால் – அன்புடையோர் சாத்து திருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே எத்ததனைச் சொல்லி நீயின்று.

ஸாமவேத ஸாரமாயும் சாந்தோக்ய ஸமமாயும் நம்பெருமாள் புகழை திருவாய்மொழியில் நம்மாழ்வார் பாடினார். அதற்கு நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானத்தை அருளிச் செய்தவர். அதற்கு நம்பிள்ளை முப்பதாயிரப்படி விபுல வ்யாக்யானத்தை அருளினார்.

திருவரங்கத்தமுதனார் ராமானுஜ நூற்றந்தாதியில் ''எய்தற்கரிய மறைகளை, ஆயிரம் இன்தமிழால் செய்தற்குலகில் வரும் சடகோபனைச் சிந்தையுள்ளே'' என்றபடி வேதம் தமிழ் செய்தார் நம்மாழ்வார். திருவாய்மொழியில் நம்மாழ்வார் 7–1–10.

''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே! நிகரிலமாரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே! புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'' என்று பிராட்டி புருஷாகாரமாக சரணமடைகிறார்.

நம்மாழ்வார் திருவிருத்தத்தில் 28 ஆம் பாசுரத்தில்

''வள்வாயலகால், புள்நந்துழாமே பொருநீர்த் திருவரங்கா! அருளாய்'' என்று மங்களாசாசனம் செய்கிறார். ''வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே!''

நம்மாழ்வார் திருவாய்மொழி 7–2 ஆம் பதிகத்தில் (கங்குலும் பகலும்) பராங்குசநாயகி பெரியபெருமாளிடத்து மோஹித்து இருக்க, ''இந்நாயகி விஷயமாக என்செய்ய நீர் எண்ணுகின்றீர்? என்று திருத்தாயார் கேட்கும் பாசுரங்களாக அருளிச் செய்கிறார்.

1. ''செங்கயல் பாய்நீர்த் திருவரங்கத்தாய்!'' (7–2–1)
2. ''என் செய்கேன்? எறிநீர்த் திருவரங்கத்தாய்!'' (7–2–2)
3. ''திட்கொடி மதில் சூழ் திருவரங்கத்தாய்! (7–2–3)
4. ''சிட்டனே! செழுநீர்த் திருவரங்கத்தாய்! (7–2–4)
5. ''சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும் திருவரங்கத்துள்ளாய்''! (7–2–5)
6. ''செய்யவாய் மணியே! என்னும் தண்புனல் சூழ் திருவரங்கத்துள்ளாய்! (7–2–6)
7. ''சேல் கொள்தண்புனல் சூழ் திருவரங்கத்தாய்! (7–2–8)
8. ''செழுந்தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்!'' (7–2–9)

9. ''தென் திருவரங்கம் கோயில் கொண்டானே! (7–2–9)

10. ''வண்திருவரங்கனே! என்றும் மிக அழகாக அற்புதமாக பெரிய பெருமாளை மங்களாசாசனம் செய்கிறார் நம்மாழ்வார்.

''முகில் வண்ணனடிமேல் சொன்ன சொல்மாலைஆயிரத்து இப்பத்தும் வல்லார்
முகில் வண்ண வானத்து இமையவர்சூழஇருப்பர் பேரின்ப வெள்ளத்தே. (7–2–11)
என்று (நம்மாழ்வார்) வண்குருகூர்ச் சடகோபன்கங்குலும் பகலும் என்ற பதிகத்தைத் தலைக்கட்டுகிறார்.

இதிலிருந்து திருவாய்மொழி ஆயிரமும் பெரிய பெருமாளுக்கே (அர்ப்பணிக்கிறார்) அருளிச் செய்கிறார் என்பது உறுதியாகிறது. மற்றைய பதிகங்களில் ''திருவேங்கடத்துக்கிவை பத்தும்'' குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும் ''செய்த ஆயிரத்துள்ளிவை தண்சிரீவரமங்கை மேயபத்துடன்''

''வண்திருமோகூர்க்க் ஈத்தபத்திவை''

''சடகோபன் சொல்லாயிரத்துள், மானாங்காரத்திவை பத்தும் திருமாலிருஞ்சோலை மலைக்கே''

என்றபடி பத்து, பாசுரங்களாக பெரிய பெருமாளிடமிருந்து எடுத்துப் பிரித்துத் தருகிறார் நம்மாழ்வார் மற்றைய திவ்யதேசத்து எம்பெருமானுக்கு என்பது மிக அழகாகவும் தெளிவாகவும் நமக்கு புரிகிறது என்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்வர்.

ஆழ்வார்கள் பெரிய பெருமாளை கண்ணனாகவும் நம்பெருமாளை ஸ்ரீராமனாகவும் சக்ரவர்த்தி திருமகனாகவும், அனுபவித்ததை வ்யாக்யானம் அருளிச்செய்வர் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யான சக்ரவர்த்தி.

''சித்திரையில் சித்திரைநாள் சிறக்க வந்தோன் வாழியே!''

மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாரையே எல்லாமுமாக ஆச்சார்யராகப் பற்றினார். கண்ணிநுன் சிறுத்தாம்பு பதிகத்தில்

''திரிதந்தாகிலும் தேவபிரானுடை
கரிய கோலத் திருவுருக் காண்பன் நான்
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கு ஆள்
உரியனாய், அடியேன் பெற்ற நன்மையே''

என்று அழகாக அருளிச் செய்துள்ளார்.

''மாசிதனில் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே!''

''மாசிதனில் புனர்பூசம் வந்துதித்தோன் வாழியே''

குலசேகர ஆழ்வார் தலைநகரிலே தினந்தோறும்

''குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா திநேதிநே!
தமஹம் சிரஸா வந்தே ராஜாநம் குலசேகரம்!!

ரங்கயாதழை முழங்கப்படுமாம். குலசேகர ஆழ்வார் நீண்ட நாளாக ஆசைப்பட்டபடி திருவரங்கம் பெரிய கோவிலுக்குச் சென்று பல வருஷங்கள் ஸ்ரீரங்கத்தில் தங்கியிருந்து, நம்பெருமாளை ஸேவித்து, அவ்வழகிய

மணவாளனையே தனக்கு உரிய மணவாளனாகக் கருதிய தம் திருமகளான சேரகுலவல்லி நாச்சயாரை நம்பெருமாளுக்கே திருமணம் செய்வித்தால் பெரியபெருமாளுக்கு மாமனாராகி விட்டார். குலசேகராழ்வார். மேலும் குலசேகரன் திருச்சுற்று (குலசேகரன் வீதி) என்று வழங்கும் மூன்றாவது ப்ராகாரத்தை அரங்கனுக்கு அரணாகக் கட்டினார்.

குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழியில் அரங்கநகரப்பனை மிகமிக அற்புதமாக அனுபவிக்கிறார். இருளிரியச் சுடர்மணிகள் பதிகத்தில் – முதல் திருமொழி:

(1) ''திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி''

(2) ''கடியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும் –மாயோனை''

(3)+(7) ''அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்''

(4) ''பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்''

(5) ''மதிளரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்''

(6) ''களிமலர் சேர்பொழிலரங்கத்து உரகமேறிக் கண்வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும்''

(10)+(8) ''திருவரங்கத்தரவணையல் பள்ளி கொள்ளும்''

(9) ''அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளி கொள்ளும் அணி–யரங்கன் திரு முற்றத்து'' அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவுகண்டு யானும். இசைந்து உடனே என்று கோலோ இருக்கும் நாளே?'' என்று குலசேகர ஆழ்வார் தன் ஆர்த்தியை பெரிய பெருமாளிடம் வெளியிட்டு தலைக்கட்டுகிறார்.

மேலும் குலசேகராழ்வார் இரண்டாம் திருமொழியில் அரங்கன் மெய்யடியாரது அடிமைத் திறத்தில் ஈடுபட்டு தலைக்கட்டுகிறார். ''அலலிமாமலர் மங்கைநாதன் அரங்கன் மெய்யடியார்கள் தம் எல்லையிலடிமைத் திறத்தினில் என்றும் மேவு மனத்தனாம்.

கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்

சொல்லினின் தமிழ்மாலை வல்லவர் தொண்டர் தொண்டர்களாவரே'' இதில் தாம் சேர, சோழ, பாண்டிய நாடு மூன்றுக்கும் சக்ரவர்த்தி என்று காட்டுகிறார்.

பெரியாழ்வார் திருமொழியில் (4–10) பத்தாம் திருமொழியில் துப்புடையாரை பதிகத்தில் ''அந்திம காலத்தில் கடாக்ஷிக்கும்படி அப்போதைக்கு இப்போதே ஸ்ரீபெரியபெருமாள் ஸ்ரீரெங்கநாதரின் திருவடிகளில் சரணம் புகுகிறார்.

''சொல்லரிய ஆனிதனில் சோதிவந்தான் வாழியே!''

''துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால் எய்ப்பு என்னை வந்து நலியும் போது அங்கு ஏதும் நானுன்னை நினைக்க மாட்டேன்

அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத் தரவணைப் பள்ளியானே!''

பெரியாழ்வார் ''ஒரு மகள் தன்னையுடையேன்'' என்று தாம் அருளிச் செய்த ரீதியில் ஆண்டாளை வளர்த்து அவள் திருப்பாவை நாச்சியார் திருமொழிகளை உலகுய்யப் பாடுவதற்கும் காரணமாயிருந்து, ஸ்ரீஆண்டாளை ஸ்ரீஅரங்கருக்கே திருமணம் செய்து வைத்தார் பெரியாழ்வார்.

''மார்கழியில் கேட்டைநாள் வந்துதித்தான் வாழியே!''

தொண்டரடிப் பொடியாழ்வார் : ஸ்ரீராமபிரானையல்லதறியாத சிறிய திருவடியைப் (அனுமனை) போலவும் இளையபெருமாளைப் போலவும் அரங்கனையல்லது அறியாதவராய் ''கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை (திருக்குறுந்தாண்டகம் – 19) என்று திவ்யதேசங்கள் தோறும் மண்டித்திரியும் மற்றை ஆழ்வார்களைப் போலல்லாமல், பெரிய பெருமாளிடமே பாதிவ்ரத்ய முடையவரானார் தொண்டரடிப் பொடியாழ்வார். (திருமாலை – 19) ''**குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம்நீட்டி வடதிசை பின்பு காட்டிய தென்திசை இலங்கை நோக்கி கடல் நிறக்கடவுளெந்தை அரவணைத்துயிலுமா கண்டு உடலேனக்கு உருகுமாலோ! என் செய்கேன்! உலகத்தீரே** என்று பெரிய பெருமாள் சயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் அழகினை மிக அழகாக இப்பாசுரத்தால் மங்களாசாசனம் செய்கிறார் தொண்டரடிப் பெரியாழ்வார். திருமாலை – 19). ''திருமாலை அறியாதார் திருமாலை அறியார்'' (ஸ்ரீரெங்கநாதனை) அறியமாட்டார்கள் என்ற வசனம் வழக்கத்திலுள்ளது. தொண்டரடிப் பொடியாழ்வார் பரமபதித்ததும் திருவரங்கத்திலேயாகும். திருமங்கையாழ்வார் இவர் நந்தவனமிருக்கும் இடத்தை விட்டு ஒதுக்கித் திருமதில் கட்டினார் என்றும், இவர்தாம் பூக்கொய்யும் ஆயுதத்திற்கு ''அருள் மாரி'' என்னும் திருமங்கை ஆழ்வார் திருநாமத்தை இட்டார் என்று ஐதிஹ்யங்கள் வழங்குகின்றன.

எல்லோரையும் தொண்டரடிப் பொடி ஆழ்வாரைப் போலே பெரியபெருமாள் ஸ்ரீரெங்கநாதர் தம்மிடம் ஈடுபடச் செய்ய வழிஎன்ன? என்று சிந்தித்துக் கொண்டு யோக நித்ரையில் (அறிதுயில்) ஆழ்ந்தார்.

அழகாக அறிதுயில் கொண்ட பெரிய பெருமாள் ''உத்திஷ்ட்ட புருஷ ஹரி லோஹித பிங்களாக்ஷி'' (தைத்திரீய நாராயணவல்லி) செந்தாமரை போல் சிவந்த கண்ணனே! புருஷனே! ஹரியே! பள்ளி எழுந்தருளாய்) என்று பரமபுருஷனுக்கு அஸாதாரணமான இரண்டு திருநாமங்களையும் புண்ட்ரீகாக்ஷத்வமாகிற லிங்கத்தையுமிட்டு அழைத்து, (ஸ்ரீரெங்நாதருக்கு அவனுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடி தேவபுருஷனைப் போலவும்

''கௌஸல்யா ஸுப்ரஜாராம'' (ரா–பா–23–2)

என்ற விஸ்வாமித்ர மஹரிஷியைப் போலவும் ''உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்'' (திருப்பாவை– 17) என்று ஸ்ரீஆண்டாளைப் போலவும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருப்பள்ளியெழுச்சியில் 1 முதல் 9 வரை

பாசுரந்தோறும் ''அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே'' என்று அருளிச் செய்கிறார். பெரிய பெருமாளை திருப்பள்ளியுணர்த்துகிறார்) பத்தாம் பாசுரத்தில் சூழ்புனலரங்கா?

''தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தொன்றிய தோள் தொண்டரடிப் பொடியென்றும்
அடியனை, அளிய னென்றருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய்! பள்ளியெழுந்தருளாயே''

என்று தம்முடைய பராப்யத்வரையாலே பாசுரந்தோறும் திருப்பள்ளியுணர்த்தி, ''அடியார்க்காட் படுத்தாய் என்று ப்ராப்யத்தின் எல்லையான பாகவத கைங்கர்யத்தைப் பிரார்த்தித்துத் தலைக்கட்டுகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

''உரோகிணிநாள் கார்த்திகையிலுதித்த வள்ளல் வாழியே!''

திருப்பாணாழ்வார் : திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதிபிரானுக்கு ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை, ஸ்ரீஅழகிய மணவாளப் பெருமாள் நாயனார், ஸ்ரீவேதாந்ததேசிகர் என்று மூன்று மஹாசார்யர்கள் வ்யாக்யானங்கள் அருளியுள்ளார்கள். வீணையைக் கையேலேந்தி ஸ்ரீபெரியபெருமாளை மனமுருகப்பாடி ஸ்ரீரெங்கநாதருடைய திருவடிகளிலே மறைந்தருளினார். திருப்பாணாழ்வார் அமலனாதிபிரான் பத்து பாசுரங்களிலும் ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தமும், அர்த்த பஞ்சகங்களும் அடங்கியுள்ளது. ப்ரமாண ஸாரமான ப்ரணவத்தில் அடங்கியுள்ள அகார, உகார, மகாரங்களிலே முதல் மூன்று பாசுரங்களைத் தொடங்குவதன் மூலம் இப்பிரபந்தம் ப்ரணவ ஸாரமாய் உள்ளது. ப்ரமேயஸாரம் எம்பெருமானுடைய திருக்கமல பாதப் பாதுகையே என்று ஐந்து, ஆறு, ஏழு நடுப்பாசுரங்களின் முதல் எழுத்துக்களாலே உணர்த்தினார் திருப்பாணாழ்வார் என்று பரமகாருணிகரகரான வ்யாக்யான சக்ரவர்த்தி பெரிய வாச்சான் பிள்ளை அருளிச் செய்தபடி.

''தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருப்பாணாழ்வாரும் கோயிலிலே ஊன்றியிருப்பர்கள்''

''நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள் மதிளரங்கத்தம்மான்–திருக் கமலபாதம் வந்து என் கண்ணிலுள்ளன வொக்கின்றதே.''

'கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் கடியார் பொழிலரங்கத்தம்மான்–அரை சிவந்த ஆடையின் மேல் சென்றதாம் என் சிந்தனையே.''

திருப்பாணாழ்வார் திருமணத்தூணுக்குள்ளே உகபோடு நிற்க, ஸ்ரீரங்கநாதரும் ''வேர்கூடுபவர்கள் மண்பற்றுக் கழற்றாதாற்போலே'' ஆழ்வாரை பெரியபெருமாளும் திவ்யமங்களத் திருமேனியோடு, அனைவரும் காணும்படி அணியரங்கள் திருவடிகளிலே ஆண்டாளைப் போல அந்தர் பவித்தருளினார். (மறைந்தருளினார்).

''கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன் – என்னுள்ளம் கவர்ந்தானை

அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் – மற்றொன்றினைக் காணாவே.

திருப்பாணாழ்வாரை அங்கீகரித்தருளிய படியாலேயே ஸ்ரீபெரிய பெருமாளுக்கு ஏற்றம் என்று பூர்வாசார்யர்கள் அருளிச் செய்வர்.

திருமங்கை ஆழ்வார் : ''ஏழைஏதலன்''

''கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகைவந்தோன் வாழியே!''

''ஜித பாஹ்ய ஜிநாதி மணி ப்ரதிமா: (ர–ஸ்த36)
அபி வைதிகயந்நிவ ரங்கபுரே
மணி மண்டப வப்ர கணாந் விததே
பரகாலகவி: ப்ரணமே மஹி தாந்ய''

என்று ஸ்ரீரங்க ராஜ ஸ்தவத்தில் பட்டர் அருளிச் செய்த படியே, பெரும்பொருளைக் கொண்டு ஸ்ரீரங்கத்தின் திருமதில் மண்டபம், கோபுரம் முதலான கைங்கர்யங்களைச் செய்தார்.

நம்மாழ்வார் அருளிச் செய்த நாலுப் பரந்தங்களும் நான்கு வேதங்களை ஒக்கும் என்றும் இத்திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஆறு ப்ரபந்தங்களும் அவ்வேதத்தின் ஆறு அங்கங்களையொக்கும் என்றும் மற்றைய எண்மருடைய நன்மாலைகள் அவ்வேதத்தின் உபாங்கங்களையொக்கும் என்றும் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்வர்.

திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளித் திருநெடுந்தாண்டகத்தை தேவகானத்தில் இசைத்துப்பாட, அதனால் திருவுள்ளமுகந்த பெரிய பெருமாள் ''உமக்கு வேண்டிய வரம் பெற்றுக்கொள்ளும்'' என்று நியமித்தருளினார். திருமங்கை ஆழ்வாரும் பெரியபெருமாளிடம் ''தேவரீர் மார்கழி மாதத்தில் கண்டருளுகிற அத்யயந உத்ஸவத்தில் நம்மாழ்வார் அருளிச் செய்த த்ராவிட வேதமான திருவாய் மொழியையும் திருச்செவி சாத்தி அருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க ஸ்ரீரெங்கநாதரும் அவ்வண்ணமே அருள்புரிந்தார். நம்பெருமாள் ஆணைப்படி பரகாலர் ''நம்மாழ்வாரை'' ஆழ்வார் திருநகரியிலிருந்து வருடந்தோரும் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளச் செய்து, அவர் முன்னிலையிலேயே உபய வேத பாராயணத்தையும் பந்துநாள் சிறப்பாக நடத்திவைத்தார்.

ஆசார்யர் காலத்தில் மற்றைய ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களுக்காக பகல்பத்து, பத்து நாள் உத்ஸவமும், இருபதுநாள் உத்ஸவம் முடிந்த பின்பு இயற்பா உத்ஸவமும் சேர்க்கப்பட்டு இருபத்தி ஒன்று நாள் உத்ஸவமாக வளர்ந்தது. பட்டர் காலத்தில் திருநெடுந்தாண்டக உத்ஸவம் பகல் பத்துக்கு முன்தின நாள் சேர்க்கப்பெற்று இப்போது உள்ளபடி நடந்து வருகிறது என்னும் விஷயம் 'பெரியவாச்சான் பிள்ளை அருளிய ''கலியனருள்பாடு'' முதலான க்ரந்தங்களிலிருந்து விளங்குகிறது. திருமங்கை ஆழ்வாரால் நாம் இப்பொழுது அத்யயன உத்ஸவத்தில் அந்வயிக்க ப்ராப்தமாகிறது.

ஸ்ரீ :



ஸ்ரீமத் பெரியாண்டவன்
ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

கூரத்தாழ்வான்

(ஸ்ரீமதுபயவே. வித்வான்
பையம்பாடி சேட்லூர் ஸ்ரீவத்ஸாங்காசாரியர் ஸ்வாமி)

ஸ்ரீ வைஷ்ணவ உலகில் ஆழ்வானைப் பற்றியறியாதார் இலர். ஆழ்வான் கூரத்தாழ்வான், கூரேசர், ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர், ஸ்ரீவத்ஸசிஹ்னத்ரஹ்னமிச்ர: முதலானபடி பலவிதமாய் நமது ஸம்ப்ராதய நூல்களில் இந்த மஹானைப் பற்றி அருளிச் செய்வார்கள். பெருமாள் கோவிலுக்கு அருகில் கூரம் என்ற அக்ரஹாரத்தில் ஹரிதகோத்ரத்தில் கூரத்தாழ்வார் என்ற மஹானுக்குக் குமாரராய் அவதரித்தார். தைமீ ஸ்வாதி திருநக்ஷத்ரம்.

நம் ஸம்ப்ராதயத்தில் ஸ்ரீபாஷ்யகாரருடன் இணைந்து இவர் ஆற்றிய அருந்தொண்டுகள் சொல்லிலடங்கா. ஏறத்தாழ 105 திருநக்ஷத்ரங்கள் வரை இந்த லீலாவிபூதியில் எழுந்தருளியிருந்த இந்த மஹான் நம் ஸம்ப்ராதயத்துக்கு பல அருமையான ஸத்க்ரந்தங்களை அருளிச் செய்துள்ளார். ஸ்ரீபராசர பட்டர், ஸ்ரீவேதவ்யாஸபட்டர் இருவரும் ஆழ்வானின் திருக்குமாரர்கள். இரட்டையர் ஸ்ரீபட்டரைப்பற்றியும் அவரது கிரந்தங்களைப் பற்றியும் எல்லோரும் அறிவர். இத்தகைய இவ்வாழ்வானின் பெருமையை முன்னோர்களின் நூல்களிலிருந்து சில குறிப்புக்களைக் கொண்டு அடியேன் இந்த வியாஸத்தில் தெரிவிக்கிறேன்.

காஞ்சியிலும் அதன் அருகிலும் எழுந்தருளியிருக்கும் யாவரும் ஸ்ரீதேவாதிராஜனைப் பாடாமலிருக்கமாட்டார்கள். சைவனை ஸ்ரீகிருஷ்ணலீலாகத கவியும் ஸ்ரீதேவர்பிரானின் திருமேனியழகில் ஈடுபட்டு ஸ்ரீக்ருஷ்ண கர்ணம்ருதம் என்று சுமார் 580 சுலோகங்களில் கவிபாடியுள்ளார் என்றால் பாருங்களேன்! மூககவியும் ஸ்ரீகாஞ்சி பேரருளாளனிடம் கொண்ட ஈடுபாட்டால் தமக்கு வாழ்வளித்த ஊமையனான தன்னைப் பேசவைத்த ''ஸர்வவாகீச்வரேச்வரன்'' யூன தேவாதிராஜனின் புன்சிரிப்பை மந்தஸ்மிதசதகம் என்று நூறு சுலோகங்களால் பாடியுள்ளான். மூகபஞ்சசதீ என்பதில் ஒன்றான மந்தஸ்மித சதகம் வேறு. அது தேவதாந்தர விஷயமானது. இது வேறு. இது எம் பெருமானைப் பற்றியது. இது இந்நாள் வரையிலும் அச்சில் வரவில்லை. இப்படிப்பட்ட ஸ்ரீதேவாதிராஜனைப் பற்றி நம் ஆழ்வான் 102 சுலோகங்களில் (1) ஸ்ரீவரதராஜஸ்தவம் என்று ஒரு துதிநூல் அருளியுள்ளார். மூகப் பஞ்சசதியைப் போல் பஞ்சஸ்தவங்கள் என்பது பெரியோர் பணிப்பும் கணிப்பும். ஸ்ரீரங்கநாச்சியாரைப்பற்றி. (2)ஸ்ரீஸ்தவம் 11 சுலோகங்களைக் கொண்டது. ஆளவந்தாருக்குப் பிறகு ஸித்தாந்தக் கருத்தையும் ஸம்ப்ரதாயச்

சீர்மைகளையும் துதிவருவில் விளக்கமாய் எடுத்துக்காட்டும் வள்ளல் ஆழ்வான் ஒருவரே. ஸ்தோத்ரம் என்பது உள்ளது உள்ளபடியான நிலையை விளக்குவதாம். குணநிஷ்டட குணபிதாநம் என்றனர் மீமாம்ஸகர். இல்லாததையும் பொல்லாததையும் ஒரு பெருமையாகக்கூறி தமது பாண்டித்யத்தை வெளியிடுவது துதியாகாது. அது பச்சைப் பசும் பொய்கள்'' என்று ஆழ்வார் அருளியது போல் பிதற்றலாகும்.

ஸர்வேச்வரேச்வர: க்ருஷ்ண: ப்ரோச்யதே யதி பண்டிதை:
ததாபி ஸ்வல்பமேவோக்தம் பூதார்த்தே கதமா ஸ்துதி:

(பண்டிதர்களால் கண்ணன் ஸர்வேச்வர்களுக்கும் தலைவன் என்று கூறப்பட்டாலும் அது மிகவும் குறைவாகக் கூறியதாகவே ஆகும். ஏனெனில் இது உண்மையே யன்றோ? இது வெறும் புகழ்ச்சியாய் கூறியதன்றே!) என்று ஸ்ரீவ்யாஸரின் வாக்யத்தை ஸ்தோத்ர பாஷ்யத்தில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் எடுத்துக் காட்டியதைக் காண்க. நஹி அஸதா குணேநஸ்துதிர் பவதி என்று இவரே ஸ்ரீநடாதூர் அம்மாளும் அருளிச் செய்தார். இதர தேவதைகளைப் பற்றிப் புகழும் போது இல்லாத பெருமைகளைக் கூறுகிறார்களே? இது பொருந்துமா? என்று கேள்வி எழும். இதற்கும் ஆசார்யர் ஸ்ரீபரமதபங்கத்தில்

தேவதாம் காஞ்சித் உத்திச்ய பக்த்யா யோ வக்தி கிஞ்சந
தஸ்ய தோஷம் ந யத்கிஞ்சித் மநஸாபி விசிந்தயேத்

(ஒரு தேவதையைக் குறித்து ஒருவன் தனது ஈடுபாட்டால் ஏதோ சொல்லுவானாகில் அதில் சிறிதும் குறையை மனதாலும் எண்ணக்கூடாது) என்ற ஆலங்காரிகரின் வசனத்தை எடுத்துக்காட்டி அதை உபேக்ஷிக்க வேண்டும் என்று அருளிச் செய்துள்ளதைக் காணவும். ஆகவே எம்பெருமானைப் பற்றியும் எம்பெருமானுர்தர்சனத்தைப் பற்றியும் உள்ளபடி அறியவேண்டுமானால் இப்போது ஆழ்வானின் துதிகளைவிட சிறந்த வழியில்லை.

3) ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம்: பரமபதநாதனை எம்பெருமானைப் பற்றியும் அவனது ஸ்வரூப-குண- விபூதி- பரிஜன- பரிச்சதங்களைப் பற்றியும் விரிவாய் விளக்கும் 101சுலோகங்களைக் கொண்டது இது. ஸ்ரீபாஷ்யஸாரம் இது என்பர். '' ஸ்ரீவைகுண்டஸ்தவம் தெரியாதவன் ஸ்ரீவைஷ்ணவனில்லை'' என்று ஒரு பழமொழியே நம்தர்சனத்தில் உண்டு. இதுவே பெருமைகளைப் பகரும். ஸ்ரீபாஷ்யாதிகளில் அருளிச்செய்த ஸித்தாந்தக் கருத்துக்கள் தெளிவாய் இதில் பலபடி விளக்கப்பட்டுள்ளன. ஸ்ரீஸ்வாமி தேசிகன் இதைப் பலவிடங்களில் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

4)அதிமாநுஷஸ்தவம்: எம்பெருமானின் மனுஷ்யாவதாரங்களிலும் அவன் அதிமாநுஷன்- அதாவது மனிதப் பிறவிகளால் செய்யமுடியாதவைகளைச் செய்துக் காட்டியபடியால் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் மேலானவன் என்பதை விளக்கும் 61 சுலோகங்கள் கொண்டதுதியாகுமிது. இதில் ஸ்ரீந்ருஸிம்ஹ-வாமன -

த்ரிவிக்ரம- கூர்மாத்தியவதாரங்களில் இவன் நடத்திக் காட்டிய அதிமானுஷ லீலைகளையும் விரிவாக ஸ்ரீராம- க்ருஷ்ணாவதாரங்களில் பல நிகழ்ச்சிகளை விளக்கிகாட்டியும், எம்பெருமான் அதிமானுஷர் என்பதை நிலைநாட்டினார். அவஜானந்தி மாம்மூடா: மானுஷீம் தனுமாச்ரிதம் பரம் பாவம் அஜானந்த: என்று எம்பெருமான் அர்ஜுனனைக் குறித்து சொல்லியது கொண்டு எம்பெருமானின் உள்ளக்கிடக்கையை அறிந்து, அங்கு தோன்றின அழற்சியை ஆற்றி அருளிய பாங்கு மிகவும் ரஸமானது.

5)ஸுந்தர பாஹுஸ்தவம்: 132 சுலோகங்களைக் கொண்டது இது. திருமாலிருஞ்சோலை மலையழகனைப் பற்றி விரிவானதுதி. ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் இதையும் ஒன்று சேர அநுஸந்தித்தால் இதன் பெருமை விளங்கும். '' வளர் இளம் பொழில் சூழ்மாலிருஞ் சோலை'' என்ற ஆழ்வார் ஸ்ரீஸுக்தியை வர்த்திஷ்ணு பால் திருஷண்ட என்பர். இப்படிப்பல. தசாவதார வர்ணனையும் அதிலுள்ள ஸுக்ஷ்மங்களையும் இதன் மூலம் நன்கு அறியலாம். கோயில்-திருமலை பெருமாள் கோயில் ஆகிய மூவிடங்களில் அழகரே ஸேவை ஸாதிப்பதாய் ஆழ்வானின் ஈடுபாடு. முதன்முதலில் நூறு ஸ்லோகங்களால் ஒரு திவ்யதேசத்தெம் பெருமானைப் பாடமுற்பட்ட மஹான் இவரே. காஞ்சி வரதராஜரும், திருமாலிருஞ்சோலை மலை அழகருமே அவ்விருவர். ஸ்ரீ வைகுண்டநாதனும் இப்படியே இவரையடியொற்றியே ஸ்ரீபட்டர் திருவரங்கநகர் அப்பனைப்பற்றி ஒன்றுக்கு இரண்டாக ஸ்ரீரங்கராஜஸ்தவம் இரண்டு சதகங்களை அருளினார். இத்தனை பேரும் திருவேங்கடமுடையானை விட்டு விட்டார்களே!என்று குறை தீர ஸ்ரீஸ்வாமி தேசிகன் தயாசதகம் அருளினார். கோயில்- திருமலை- பெருமாள் கோவில் என்ற மூன்று திவ்யதேசங்களுக்கு எவ்வகையிலும் குறைவற்றதே திருவஹீந்திரபுரமும் என்ற கருத்தில் தனக்கு ''பஹுமானபத'' மான அத்திவ்யதேசத்தெம் பெருமானைப்பற்றியும் அச்யுதசதகம் பாடி அதற்கும் இதற்கிடான நிலையைத் தோறறுவித்தார்.

இனி இவர் இயற்றிய மற்ற நூல்கள்

6)வடுகநம்பிகள் ப்ரார்த்தனைப் பேரில் அபிகமன ஸாரம் என்பதாய் ஒரு நூல் ஆழ்வான் இயற்றியருளியதாய் ஸ்ரீஸ்வாமிதேசிகன் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் அருளிச்செய்ததனின்றும் ஏற்படுகிறது. இந்த பெயரைக் கண்டால் இது பஞ்காலப்ரக்ரியைகளை அதிலும் குறிப்பாய் அபிகமநம் என்பது பற்றி விளக்கியுள்ளதாய், ஏற்படுகிறது. இது ஏறக்குறைய நித்யகர்மங்களை விளக்க வந்த நூல் என்று ஏற்படுகிறது.

சரமச்லோகாதிகாரத்தில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ''பட்டரும் ஆழ்வானும் தாம் தாங்கள் அருளிச் செய்த நித்யக்ரந்தங்களிலே

ச்ருதி ஸ்ம்ருத்யுதிதம் கர்ம யாவச்சக்தி பராத்மந:
ஆராதநத்வேநாபாத்ய ஸோர்த்வ புண்ட்ரஸ்ச தர்ப்பயேத்.

(வேதங்கள், தர்ம ஸூத்ரங்களில் சொன்னபடி நித்யகர்மங்களை-ஸந்த்யாவந்தனாதிகளை'' எம் பெருமானின் திருவாராதனமிது'' என்கிற எண்ணத்தோடு திருமண் அணிந்து தன் சக்திக்குத் தக்கபடி நடத்திக் கொண்டு தர்ப்பணாதிகளைச் செய்யவேண்டும்) இத்யாதிகளை அருளிச்செய்தார்கள்'' என்று அருளினர். இதனால் ஆழ்வான் நித்யக்ரந்தமும் ஒன்று அருளியுள்ளது ஏற்படுகிறது.

7) சரமசுலோக வ்யாக்யானம்: இந்த பெயரிலோ, அல்லது வேறு ஒரு கிரந்தத்தில் சரமச்லோகத்தை விளக்கியருளியோ ஒரு நூல் எழுதியுள்ளதாயும் ஏற்படுகிறது. சரமசுலோகாதி காரத்தில் குரூபாய த்யாக விதிதான் '' பரித்யஜ்ய'' என்பதற்குப் பொருள் என்கிற ஏகதேசிகளின் பக்ஷத்தை கண்டிக்கும் போது ஸ்ரீஸ்வாமிதேசிகன் ''ஆழ்வானுடைய சரமசுலோக வ்யாக்யானத்திலும் இவ்வளவே விவக்ஷிதம்; ஆகையால் ஒரு விரோதமும் இல்லை'' என்றருளினர். இதற்கு உரையிட்டருளிய பாரத்வாஜ- ஸ்ரீநிவாஸாசார்யர் என்ற மஹான் (ஏறத்தாழ இன்றைக்கு 500 வருஷங்கள் முன் எழுந்தருளியிருந்தவர்) தமது ஸாரப்ரகாசிகை என்கிற வடமொழி உரையில் ஆழ்வானது சரமசுலோக வ்யாக்யானத்தில் 1-1/4சுலோகம் எடுத்து விளக்கியுள்ளார். அது வருமாறு

உபாயாந்தர தௌஷ்கர்யாத் சோசந் த்வம் மதவாப்தயே
ஸாதாத்வேந நிர்ணீதாந் ஸர்வாந் ஸந்த்யஜ்ய தூரத: மாமேவ ஸரணம் யாஹி

என்பதே இது. இதனால் ஸ்ரீபட்டருடைய அஷ்டச்லோகியைப் போல் இந்த க்ரந்தம் சுலோகரூபமான சரமச்லோகவிவரணம் என்று ஏற்படுகிறது.

8) ''நநு ப்ரபந்ந'' ஸக்ருத் ஏவ நாத'' (சு.64) என்கிற ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் பாஷ்யத்தில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸக்ருதேவ இத்யஸ்ய ஸஹஸைவ ஸர்வாகஸாம் நிஷ்க்ருதிம் அக்ருத்வா இதி கைஸ்சித் வ்யாக்யாதம் என்று உள்ளது. அதாவது ''ஸக்ருத்'' என்ற வடமொழிச் சொல்லுக்கு ஒருமுறை என்பதே நிகண்டுக்களில் காணப்படும் பொருள். ஒரு முறையே சரணாகதி செய்யவேண்டும்-என்று ப்ரமாணமும் காட்டுகிறது. ''உமதடிகள் அடைகின்றேன் என்று ஒருக்கால் உரைத்தவனே'' என்ற பாசுரத்திலும் ஆசார்யர் இதை விளக்கியருளினர். ஆனால் ஒரு சிலர் ஸக்ருத் என்பதற்கு உடனே என்று பொருள் கொண்டனராம். அதோடு சரணாகதியை அநுஷ்டித்தவரின் பலவன் வினைகளுக்கும் ஒரு கழுவாயும் செய்யாமல்- என்றும் ஒருவர் விளக்கியுள்ளதாய் ஸ்தோத்ரபாஷ்யத்தால் அறியமுடிகிறது. இப்படி உரையிட்டவர் யார்? என்று பார்த்த போது, ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையின் இச்சுலோகத்திய உரையினின்றும் அவர் ஆழ்வான்- என அறிகிறோம். ஆகவே ஆளவந்தார் ஸ்தோத்திரத்திற்கும் வடமொழியில் ஒரு உரை ஆழ்வான் எழுதியிருப்பதாய் ஏற்படுகிறது.

9) புருஷ ஸூக்த பாஷ்யம்: ஸ்ரீ விஷ்ணு புராணவ்யாக்யனமான ஸ்ரீவிஷ்ணுசித்தீயத்தில் (1-12-56) எங்களாழ்வான் எடுத்து உதாஹரித்துள்ள ஒரு

வாக்யத்திலிருந்து புருஷஸூக்த வ்யாக்யானமும் ஆழ்வான் அருளியுள்ளார் என்று ஏற்படுகிறது.சங்கத்தின் நுனியால் த்ருவனே எம்பெருமான் தடவிக் கொடுத்ததும் த்ருவன் எம்பெருமானே ஸ்தோத்ரம் செய்கிறான்.அப்போது புருஷஸூக்தத்தில் வரும் ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் என்கிற அடி அப்படியே வருகிறது.அதை உரையிடும் போது ஸ்ரீ எங்களாழ்வான் அத்ர ஹி அங்க ப்ரத்யங்காதீநாம் அபாவாத் தத் கார்யபூதஜ்ஞான சக்த்யோரேவ ஆனந்த்யம் உச்யதே இந்த பரமாத்மஸ்வரூபத்தில் உடல்- உறுப்புக்கள்- இணையுறுப்புக்கள் முதலியன இல்லாதபடியால் எம்பெருமானின் நிறைந்த அறிவு- நிறைவான வலிமை இவ்விரண்டும் முடிவற்றவை - என்பதே இங்கு சொல்லப்படுகிறது.) என்றருளிச் செய்துவிட்டு யதாஹூ: ஸ்ரீவத்ஸாங்கமிச்ரா: ந ச அயம் சலலீவ சலலை: ஸர்வத: பரிதாபி: வைரூப்யாவஹைராசித இத்யுச்யதே. இந்து யதா அபர்யந்த சக்ஷூஷோ: பர்யந்தாவ யவாஸ்ச ஸர்வம் த்ரஷ்டும் கர்தும் ச நுவந்தி ததாஅயமபி என்ற ஆழ்வானின் புருஷஸூக்த பாஷ்யத்திலிருந்து ஒரு வாக்யத்தை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளதுகாண்க.முள்ளம் பன்றிக்கு உடல் முழுவதும் முள்ளாக உள்ளது போல் எம்பெருமானுக்கு விகாரமான நிலையில் பலவிடங்களில் கண்ணும் தலையும் காலும் உள்ளன என்று கூறவந்ததல்ல இந்த ஸஹஸ்ரசீர்ஷா என்ற வாக்யம் பின் என்ன? என்றால் ?கண் முன்னே உள்ளவற்றைக் காணவே திறன் பெற்றவர் நாம். எம்பெருமான் அப்படியல்ல எங்கும் உள்ளதை இருந்தவிடத்திலிருந்தே காணவும் அததை நடத்தவும் வல்லவர்- என்று கூற வந்தது- என்பது இந்த வாக்யத்தின் கருத்தாகும் என்ன சொல்லாழம் கருத்தாழமுள்ள விளக்கமிது பாருங்கள்.

10)**திருமழிசை மஹாவித்வான்** ஸ்ரீ.உ.வே.வீரராகவாசார்ய ஸ்வாமி (ஏறத்தாழ 200 வருஷங்கள் முன்பு எழுந்தருளியிருந்தவர்) எழுதிய ரத்ன ஸாரிணீ என்ற உரைநூலில் (ஸ்ரீ நடாதூர் அம்மாளின் தத்துவஸாரம் என்ற நூலுக்கு வடமொழியில் அமைந்த உரை இது) சரீரக ஸாரம் என்று ஒரு நூலை ஆழ்வான் இயற்றியருளியுள்ளதாய் குறிப்பிடுகிறார். இதுபற்றி மேல் விவரம் தெரியவில்லை. தஹராதிகரணத்தைப் பற்றி விசாரம் பண்ணினவிடத்தில் எடுத்திருக்கிறார்.

11)ஸ்ரீ ஸஹஸ்ரநாம பாஷ்யமான ஸ்ரீபகவத் குணதர்பணத்தில் ஸ்ரீபட்டபராசர பாதர்'' அவிஜ்ஞாதா'' என்ற திருநாமத்தை உரையிட்டருளிய போது ஸர்வக்ஞதாம் ஏவம் உபலபாமஹே த்வம்ஹி அக்ஞ ஏவ ஆச்ரித தோஷ ஜோஷிண: (எம்பெருமானே! தேவரீர் ஸர்வஞ்ஞர் என்று வேதங்கள் ஓதுகின்றன.ஆனால் அதை நாங்கள் கேலிக்குரியதாக்குகிறோம்.ஏன்? எனில் தேவரீர் ஆச்ரிதர்களின் குற்றங்களைக் கண்டும் தண்டிக்காமல் வாளா விருக்கின்றீர் அன்றே!) என்று ஒரு சுலோகத்தின் பாதியை எடுத்துக்காட்டியுள்ளார்.இது ஆழ்வானின் சுலோகம் என்பது அதோஹிதாத பாதா: (இதனாலேயே அன்றே அடியேன் திருத்தகப்பனார்) என்று எடுத்ததால் ஏற்படுகிறது.ஆனால் ஆழ்வானது தற்போதுள்ள துதிநூல்களில் எதிலும் இது காணக் கிடைக்கவில்லை. ஆகவே வேறு ஏதோ ஒரு நூலில் இது இருக்கவேண்டும்- எனத் தெரிகிறது.

12) சோபனப் பாட்டுக்கள்: நம் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமாளிகையில் விவாஹம் முதலான சோபன காலங்களில் எல்லோராலும், குறிப்பாகப் பெண்களால் பாடப்பட்டு வரும் '' லக்ஷ்மீ கல்யாணம் வைபோகமே' மடியிலெடுத்து பாலகனே, ஸ்ரீராம! ஜய ஜய! ஸீதா மனோஹர, லாலீ சுபலாலீ, ஊஞ்சல் என்றுதொடங்கும் பாட்டுக்கள் யாவும் ஆழ்வான் அருளிச் செய்தனவாகும். இவைகளைப் போல் பச்சைப் பூசும்போது வாநாய்ச்சியாரின் வாரணமாயிரம் பதிகத்தை அநுஸந்திக்கும் படியாய் ஏற்பாடு செய்ததாய்க் கூறுவர். (1968ம் வருடம் ''ஹிந்து'' ஆங்கில நாளேட்டில் புதுப்புத்தகங்களைப் பற்றி உரைகல் வரும் பகுதியில் ஒரு பாண்டிச்சேரி அன்பர்- (தேதி நினைவுக்கு வரவில்லை) தம்மிடம் ஒரு ஓலைச் சுவடி உள்ளதாயும், அது தமிழ்ப் பாட்டுக்கள் அமைந்ததாயும், அதை இயற்றியவர் கூரத்தாழ்வான் எனப்படும் ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர் என்றும், இதை அச்சிட உண்மையில் ஊக்கமுள்ளவருக்கு மட்டுமே அச்சுவடியைக் கொடுக்க விரும்புவதாயும் எழுதியிருந்தார். இதைப் படித்த அடியேன் சென்னை க்ரோம்பேட்டையில் அப்போது பெரும்புலமையுடனும் ,புரவலராயுமிருந்த சங்கரம்பாடி நடாதூர் தேரழுந்தூர் T.S. ஸுந்தராசார்யர் ஸ்வாமியிடம் (ஸ்ரீ பரமஹம்ஸத்யாதி ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி ஸ்ரீரங்கராமானுஜ மஹா தேசிகனின் திருவடி) இது பற்றித் தெரிவித்தேன். அதுபற்றி அவர் விசாரித்து ஆவன செய்வதாய் வாக்களித்தார். பிறகு என்ன ஆயிற்று என்று அறிய முடியவில்லை. இது ஒருக்கால் ஆழ்வான் அருளிய மேற்கூறிய தமிழ்ப் பாசுரங்களின் தொகுப்பாய் இருக்கக் கூடும். ஆவலுள்ளவர்கள் இதுபற்றி மேற்கொண்டு முயல இவ்விதம் இது பற்றி விரிவாய் எழுதினேன்.)

13) ஆழ்வான் தமிழில் பெரும் புலவர் என்பது தமிழ்வல்லார்களே ஒப்பியதாகும். ''நெஞ்சுக்கு இருள் கடி தீபம்'' என்று தொடங்கும் பெரிய திருமொழி தனியன் ஆழ்வான் அருளியதாய் ஆன்றோர் கூறுவர்.

14) ''லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம்'' என்ற பூர்வாசார்யர்களைப் பற்றிய தனியன் ச்லோகமும் ஆழ்வான் அருளியதே. வேறு சிலர் இந்த சுலோகம் ஆழ்வானின் திருத்தகப்பனாராகிய கூரத்தாழ்வார் அருளியது என்பர்.

15) ஸ்ரீ பாஷ்யகாரர் மற்றைய மதங்களை நிரஸனம் பண்ணின பாங்கை அழகாய் வெளியிடும் தாடீ பஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களைக் கொண்ட துதி ஆழ்வான் அருளியது என்பர் சிலர் பலர் இதை ஏற்பதில்லை.

16) **யமகரத்நாகரம்:** கண்ணனின் அவதார சரிதையை ஆர்யா விருத்தத்தில் பதினெறு ஆச்வாஸங்களில் ஏறத்தாழ 1100 சுலோகங்களால் விளக்கும் காவ்யம் இது. இதற்கு உரையும் அவரே அருளிச் செய்துள்ளார். இது ஆழ்வான் அருளிச் செய்ததாய் அச்சிட்டிருப்பினும் இது ஆழ்வான் வழியில் அவரது திருவம்சத்தில் அவதரித்த பின்புள்ளோரால் எழுதிய நூலாகும். ''நடமாடும் பதஞ்ஜலி'' என்று அந்நாட்களில்

அழைக்கப்பட்டவர் என்று புகழப்படும் ஆழ்வானின் இலக்கண மேதா விலாஸம் இந்நூலில் தெள்ளென விளங்கும். யமகம் என்பது மடக்கு எனப்படும் ஒருவகை சொல்லணியாகும். இந்த மடக்குக்காக சொற்களை வந்தனவற்றையே மீண்டும் மீண்டும் அமைத்ததால் கருத்து விளக்கத் தாமே உரையிட்டருளினார் நூலாசிரியர். ஆகவே இலக்கணங்களைக் காட்டி பதவிபாகம் செய்து பொருளுரைப்பது தலையாய பணியாகியது. ஆகவே தான் தாமே உரையிட்டது. இது தெலுங்கு எழுத்தில் அச்சாகியிருக்கிறது. தெலுங்கு மொழியில் சுருக்கமாய் கருத்துரையுமுண்டு. இதை அடியேன் பரிஷ்கரித்து முத்ரணம் செய்ய ஸித்தமாய் வைத்துள்ளேன். இதன் பூமிகையில் இந்நூல் ஆழ்வானது இல்லை- என்பதையும், ஆழ்வான் வழித்தோன்றல் ஒருவருடையது என்பதையும் தகுந்த காரணங்களைக்காட்டி 25 ஆண்டுகளுக்கு முன்பேயே எழுதிவைத்துள்ளேன். ஆழ்வான், ஸ்ரீ பட்டர் இவர்களைப் பற்றி இந்நூலாசிரியர் தொடக்கத்தில் மங்கல ச்லோகங்களை எழுதிவைத்துள்ளனர்.

(17) கூரேசவிஜயம்: இதுவும் ஆழ்வான் வழியில் அவரது திருவம்சத்தில் அவதரித்த வேறொரு ஸ்ரீ வத்ஸாங்க மிச்சரரால் எழுதப்பட்ட 20 சுலோங்கங்களைக் கொண்ட எம்பெருமானே பரதேவதை என்பதை விளக்கவந்த நூலாகும். இதில் ஒரு சுலோகத்தில் வித்யாரண்யரைப் பற்றி வருகிறது. வேதபாஷ்யகாரரான வித்யாரண்யர் 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். 11ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் ஆழ்வான். ஆகவே இதுவும் ஆழ்வானது அல்ல. அர்ச்சாவதாரத்தில் ஆழ்வார்களைப் போல் ஈடுபாடு மிக்கவரானபடியாலேயே இவரை ஆழ்வான் என்பர். குடும்பத்திலும் திருமேனியிலும் மனத்திலும் பலதொல்லைகளை எம்பெருமான் இவருக்குக் கொடுத்து

பரீக்ஷாம் ச ஜகந்நாத: கரோதி, யஸ்யாநுக்ரஹமிச்சாமி
தநம் தஸ்ய ஹராம்யஹம் பாந்தவைஸ்ச வியோகேந க்ருசம் பவதி
துக்கித: தேந துக்கேந ஸந்தப்தோ யதி மாம் ந பரித்யஜேத்
தம் ப்ரஹ்லாதம் கரிஷ்யாமி யத்ஸ ுரைரபி துர்லப:

என்று எம்பெருமான் அருளியபடி பரவிதமான சோதனைகளைச் செய்தருளின போதும் வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன் போல்- மாயத்தால் மீளாத்துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே'' என்ற குலசேகரப் பெருமாள் திருப்பாசுரத்தின் படி ஸம்ஸ்ருதி பந்தத்தில் ஆழங்கால் பட்டு போது போக்கியவர். ''கண்களைப் பெற துதி பாடும் கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள் உமக்குத் திருகண்களை அருளுவார்'' என்று தமது ஆசார்யரான ஸ்ரீ பகவத்ராமாநுஜர் நியமித்த போதிலும் ஊனக்கண்களைப் பெற விரும்பாமல் ஜ்ஞானக்கண் போதும் என்று கொண்டு ''நான் பெறப் போகும் பேரின்பம் (ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுக்குத் தொண்டு செய்து உய்வது) நாலூரானும் பெற வேண்டும்'' என்று பேரருளாளனிடம் வேண்டிய பெருந்தகை இவர்.

ஆழ்வானைப் பற்றிய பல ஐதிஹ்யங்கள் ஸம்ப்ரதாயநூல்களிலும், குருபரம்பரைகளிலும், ஈடுமுதலான பூர்வாசார்ய ஸ்ரீ கோசங்களிலும் உள்ளன. இவைகளைத் தொகுத்துப் பார்க்கும் போது ஆழ்வானுடைய ஆசார்ய பக்தியும், இவர் நம் ஸம்ப்ரதாயத்துக்கு ஆற்றிய அரும்பெரும் செயல்களும், இவருடைய புத்தி ஸூக்ஷ்மமும், ஸ்ரீபாஷ்யகாரரையொத்த- ஏன்? அதற்கும் ஒருபடி மேலானதாகவே கூறும்படியான மேதாவிலாஸமும், காருண்யமும், தமது தூய அநுஷ்டானங்களால் பலரைத் திருத்திப் பணிகொண்டதும், பலநூல்களை இயற்றி நம் ஸம்ப்ரதாயத்தைப் பலவகையால் வளர்த்த வள்ளன்மையும், அர்ச்சாவதாரங்களில் ஈடுபாடும், அருளிச் செயல்களில் இவரது பேரார்வமும், சிக்கலான பலவிடங்களில் இவர் அருளிச் செய்த விளக்கங்களும், பாசுரங்களில் சில அபூர்வமான நிர்வாஹங்களும், பற்றற்ற வைராக்ய நிலையும், மற்றும் பலவும் விளங்கும்.

ஆழ்வானைப்பற்றி ஈடுமுதலியனவற்றில் வந்துள்ள குறிப்புக்களைக் கீழ்க் கண்டபடி அநுபவிக்கலாம்:-

உடையவன் (1-1-1) எண் பெருக்கு அந்நலத்து (1-2-10) பாலேய் தமிழர் (1-5-11) கரும வன்பாசம் (2-10-4) சாதிமாணிக்கம் (3-4-4) அவதாரிகை, நீர்மையில் (3-5-7) ஓர்ப்பால் (4-6-1) அப்பனே (4-7-5) நண்ணாதார் (4-9) அவதாரிகை, தலையில் (5-3-7) ஆகிய இடங்களில் ''ஆழ்வான்'' என்ற திருநாமத்தை உச்சரித்துப் பலவகையாய் குறிப்புக்கள் உள்ளன.

நிறைந்த (5-5-7) பிறந்தவாறும் (5-10) அவதாரிகை, பொன்னுலகு (6-8-1), கங்குலும் பகலும் (7-2) அவதாரிகை, கற்பார் (7-5) அவதாரிகை, பலரடியார் (7-10-5) அடியேன் (8-8-2) கருமாணிக்கம் (8-9) அவதாரிகை, சிறுமாமனிசர் (8-10-3) கொண்டபெண்டிர் (9-1) அவதாரிகை முதலானவிடங்களிலும் ஆழ்வானைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு.

எங்ஙனேயோ (5-5-1) என்றவிடத்தில் கூரத்தாழ்வார் என உள்ளது. இவர் ஆழ்வானின் திருத்தகப்பனார் என்பர்.

பெரியாழ்வார் திருமொழி வியாக்யானத்தில் ஒருமகள் (3-8-4) மாயக்குழவி (4-1-4) ஒருவாரணம் (4-2-5) குருந்தமொன்று (4-4-7) என்பன போன்றவிடங்களிலும் ஆழ்வானைப்பற்றிய குறிப்புக்கள் உண்டு.

திருப்பாவை வ்யாக்யானம் ஆறாயிரப்படியிலும் யசோதை இளஞ்சிங்கம் (1) ஆழிமழை (4) தூமணிமாடத்து (9) உனக்கென்ன (15) திருவே (20) என்ற இடங்களில் ஆழ்வானைப்பற்றிய செய்திகளைக் காணலாம். நாணி (நாச்சியார் திருமொழி 12-2) என்ற விடத்துமிப்படி புலையறமாகி நின்ற (7) வானுளார் (41) தாம்புலையர் (43) என்ற திருமாலைப் பாசுரங்களிலும் உரைகளிலும் ஆழ்வானைப் பற்றிய ப்ரஸ்தாவம்

உண்டு. நன்மையால் (4) என்ற ஸ்ரீ மதுரகவிகளின் பாசுரத்தில் ஸ்ரீ நாயனார் ஆச்சான் பிள்ளையின் உரையிலும் ஆழ்வானைப்பற்றிய குறிப்பு உண்டு.

ஸ்ரீ கலியனின் பெரிய திருமொழியில், நந்தா விளக்கே (3-8-1), பெடை (6-9) ப்ரவேசம், பாரித்தெழுந்த (7-5-2), சில (8-1) ப்ரவேசம், முதலானவிடங்களில் ஆழ்வானைப்பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

திருவிருத்தத்தில் அருளார் திருச்சக்கரத்தால் (33) அடியேனுடையாவி (85) ஈனச்சொல் (99) அவதாரிகை முதலானவிடங்களிலும் இப்படியே கண்டு கொள்வது. இன்னமும் இப்படிப் பல இருக்க கூடும்.

இப்படி ஸர்வதோமுகமான பெருமைகளைப் பெற்றவர் ஆழ்வான். இவரது பஞ்சஸ்தவங்களுக்கும் தமிழில் விரிவாய் உரை எழுதி அச்சிட்டு வெளியிடும் பாக்யம் அடியேனுக்கு ஆசார்யானுக்ரஹத்தால் ஏற்ப்பட்டபடியால் இவ்விதம் ஆழ்வானைப் பற்றிச் சற்று விரிவாய் ஆராயவும் அவரது ஸ்ரீ ஸூக்திகளை அநுபவிக்கவும் ப்ரப்தமாயிற்று. அதனாலேயே போலும் மீண்டும் ஆழ்வானைப்பற்றி எழுத ஒரு ஸந்தர்ப்பம் ஏற்பட்டது.

ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீ மதாண்டவன் ஸ்ரீ ரங்க ராமாநுஜ மஹாதேசிகன் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்திற்கு அங்கமாக ஒரு மலர் வெளியிடும் போது அடியேனை ஆழ்வானைப்பற்றி எழுதும்படியாய் ஸ்ரீஉ.வே.வித்வான். ஆஸூரி. மாதாவாசார்யர் நியமித்தார். ஸ்ரீமத் ஆண்டவன் இந்த கராளமான கலியிலும் பூர்வாசார்யர்களால் க்ஷூண்ணமான பந்தாவை விட்டு இம்மியும் வழுவாமலும் 'ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே'' என்றபடி தான் முன் நின்று பூர்வஸம்ப்ரதாயத்தை அநுஷ்டித்துக் கொண்டு ஏகாந்த சீலராய் எழுந்தருளியிருப்பது ஒரு பெரிய அரிய நிகழ்ச்சியாகும். ஸ்ரீமதாண்டவனின் அனவரத க்ரந்த பரிசீலன வைகரீயும், சமதமாதி ஆத்ம குணபூர்த்தியும், நெறியும், ஸர்வஜன ஸம்மாந்யதையும், ஸஹ்ருதய ஸார்வபௌமதையும் எல்லாரும் அறிந்ததே. ஸ்ரீ மதாண்டவனுக்கும் அடியேனிடம் அபரிதமான கிருபை உண்டு. பூர்வாச்ரமத்தில் வித்யாப்யாஸ காலம் முதற்கொண்டே ஏற்பட்ட பின்னிப் பிணைந்த பிடிப்பு இது. நம் ஸம்ப்ரதாயம் ஸ்ரீமதாண்டவன் அநுக்ரஹத்தால் இதோபி அதிகம் தழைக்க வேண்டும். ஸ்ரீ மதாண்டவன் பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீரங்கநாத திவ்ய மணிபாதுகைகளிடம் ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீரங்கராமாநுஜயோகிவர்ய ஷஷ்ட்யப்தபூர்த்யாக்ய மஹோத்யவேத்ய
ஸ்ரீவத்ஸசிந்ஹாந் அதிக்ருத்ய ஸூரீந் ஸ்ரீவத்ஸசிந்ஹாக்ய ஸதீர் வ்யதாநீத்

— — — — —

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

திருவடிப் பெருமை

ஸ்ரீமதுபயவே. வித்வான் ஈச்சம்பாடி ரங்கநாதாசாரியர் ஸ்வாமி

அடிகள் என்ற சொல்லுக்கு ஸ்வாமி என்று பொருள். 'அடிகள் அடியே நினையும் அடியவர்கள் தம் அடியான்,' 'எங்கள் அடிகள் இமையோர் தலைவருடைய திருநாமம் 'நம் திருவுடையடிகள் போன்றவை இதனை விளக்கும்.' எம்பெருமானுடைய திருக்கமல பாதங்களையும் திருவடிகள் என்பர். பகவானுடைய சரணா விந்தங்கள் பற்றி ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்ததை அநுபவிப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

காவியத் தலைவனுடைய அவயவ சோபையிலே ஈடுபட்டுப் பாதாதிகேசமோ கேசாதி பாதமோ பாடுவது கவி மரபு. தமிழ்ச் சிற்றிலக்கியங்களாகிய 96 வகை பிரபந்தங்களுள் இவை இரண்டும் அடங்கும். அரங்கனது திருமேனியழகில் ஈடுபட்டு ஸ்வாமிதேசிகன். 'பகவத் த்யான ஸோபானம்' அருளினார். தேவநாயக பஞ்சாசத்தில் திருவபிஷேகம் (கிரீடம்) தொடங்கி திருவடித்துகள் அளவாக அடியவர்க்கு மெய்யன் வடிவழகு வருணிக்கப் படுகிறது. பரமபத ஸோபானம் என்ற ரஹஸ்யத்தின் ப்ராப்தி பர்வத்தில் பவளமும் மணியும் விரவிக் கோத்தாற்போல் மணிப்ரவாள உரைநடையில் ஒரு கேசாதி பாத வர்ணனம் காணப்படுகிறது. ப்ராக்ருத மொழியிலமைந்த அச்சுத சதகத்திலும் அவ்வாறு (34-43) அமைந்துள்ளது. மெய் விரத மான்மியத்தில் தி(இ)ருபதி எனத் தொடங்கும் பாடலும் இவ்வாறானதே. எம்பெருமானுடைய திவ்யாவயவ ஸௌந்தர்யத்தில் ஈடுபட்ட ஸ்வாமி தேசிகன் 'நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரோ' என்றும்

निरन्तरं निर्विशतस्त्वदीयं अस्पृष्टचिन्तापदमाभिरुप्यम् ।
संत्यं शफे वारणशैलनाथ वैकुण्ठ वासेऽपि नमेऽभिलाषः ॥

என்றும் அறுதியிட்டார்.

शिशोः मातुस्वनाविव அடியவர்களுக்கு அம்ருதாய மானங்களாய், உலகடைய நின்றவையான கழல்களில் மிகுதியும் ஈடுபாடு கொண்ட ஸ்வாமி தேசிகன் திருவடிப்பெருமை பேசுவதற்காகவே இரண்டு பாசுரங்களை அருளியுள்ளார். 'உறுசகடம்' எனத்தொடங்குவது அதிகார ஸங்கிரஹத்திலடங்கியது. பெரிய

பெருமாள் திருவடிபற்றியது. அயிந்தை நகர் அமர்ந்த அடியவர்க்கு மெய்யன் திருவடிபற்றிய பாசுரம் நவமணிமாலையில் முதற்பாசுரம். 'ஒருமதியன்பர்' எனத் தொடங்குவது. இவ்விருபாசுரங்களையும் இணைத்துச் சுவைக்கும் முயற்சி இது.

இருபாசுரங்களிலும் அவதார சரிதங்களைக் கொண்டு திருவடிப்பெருமை கூறுகிறார் திரிவிக்கிரம ராமக்ருஷ்ணாவதார சரிதங்கள் இவற்றிலே எடுத்தாளப்பட்டன. அவற்றை முதலில் பார்ப்போம்.

'உலகமடங்க வளர்ந்து அளந்தன' 'ஒரு சடையொன்றிய கங்கை தந்தன' என்ற வரிகளிரண்டும் திரிவிக்கிர அவதாரம் பற்றியவை. மாவலி வார்த்த நீர்கையில் வீழ்ந்தவாறே வாமனன் ஓங்கி வளர்ந்தான். அப்போது வளர்ந்த அவன் திருவடி உலகங்களையெல்லாம் தம்முள் அடங்கும்படி அளந்து கொண்டது. இதுமட்டுமோ செய்தது. கங்கையையும் தந்தது. கங்கை தான் எப்படிப்பட்டது எனில் கர்ம வச்யனை தான் ஸர்வேச் வரனில்லை என்பதைத் தன்னுடைய தாபஸ வேஷத்தாலே பறை சாற்றிக் கொண்டு நிற்கும் பார்வதி பதியைப் பரம சிவனுக ஆக்கியது. கறை கொண்ட கண்டத்தான் சென்னி மேல் ஏறி நின்ற அக்கங்கை எழுமையும் கூடி ஈண்டிய பாவமெல்லாம் இறைப் பொழுதினில் கழுவிடும் பெருமையுடையது.

कमण खण जणिअ सुरणइ पसमिय तेल्लोक पाअअं पअपउमं

(क्रमणक्षणजनित- सुरनदि प्रशमित त्रैलोक्य पातकं पदपद्मं ।)

என்ற அச்சுத சதக அடியும் இக்கருத்தைக் கூறும்.

'சிலைதனில் அன்றூர் அணங்குமிழ்ந்தன' 'மனு முறையில் வருவதோர் விமானத்து உறைந்தன' என்ற அடிகள் கல்லாய் இருந்த அகலிகையின் சாபந்தீர்த்த வரலாற்றையும் மனு முதலாக சூரிய குலத்தரசர்கள் ஆராதிக்கும்படி ஸ்ரீரங்க விமானத்தில் வாஸம் செய்ததையும் காட்டுவன. இவை இரண்டும் இராமாவதாரத்தில் நிகழ்ந்தவை. அகலிகை கல்லாக ஆனாள் என்று வால்மீகி கூறவில்லை. ஆனால் பாத்ம புராணம் அவ்வாறு கூறுகிறது. அதனை அடியொற்றி 'சிலைதனில் என்றூர் ஸ்வாமி தேசிகன். **पाषाणनिर्मिततपोधनधर्मदारं 'जहदुपलतनु' 'शिलादेः स्त्रीत्वं'** முதலான இடங்களிலும் இவ்வாறே அருளிச் செய்கிறார். நான் முகன் தான் ஆராதித்து வந்த அர்ச்சா மூர்த்தியை மனுகுலத்தவரான இக்ஷ்வாகுவுக்கு விமானத்தோடு தந்தான் என்பது வரலாறு. தனக்கும் ஆராத்யனாய் அதனால் 'பெரிய பெருமாள் என்ற பெயர் பெற்ற இக்ஷ்வாகு குலதனமான எம்பெருமானை (விபீஷணனுடைய தொண்டை மெச்சிய இராமபிரான்) இவனுக்குத் தந்தான் என்கிறது ஸ்ரீமத் ராமயணம். இவ்வகையால் மனுமுறையில் வருவதோர் விமானத்துறைவன' பெரிய பெருமாள் திருவடிகள்.

திருஷ்ணாவதார சரிதங்களில் சகடமுடைத்தது காளியன் பணவரங்கில் ஆடியதும், தூது சென்றது என்ற இவை மூன்றும் இருபாசுரங்களிலும் கூறப் பெற்றவை. 'உறு சகட மொடிய ஒரு கால் உற்றுணர்ந்தன' 'சகட முடைந்து கலங்க வென்றன' என்பவை சாடுதைத்ததைக் கூறுவன. 'உருளும் சகடம் உறக்கில் நிமிர்த்தீர்' என்றூர் கலியன். உறங்கிக் கொண்டிருந்தான் கண்ணன். ஆனால் திருவடிகளோ மிக்க கவனத்துடனிருந்தன. 'தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரர் உடல் வேறுப் பிளந்து வீய' என்றபடி சகடம் கலக்கழிந்து நொருங்கும்படி செய்தன திருவடிகள். காளியன் பணவரங்கில் ஆடியது 'அடலுரக படமடிய வாடிக் கடிந்தன' 'உரக படங்கள் அரங்கு கொண்டன' என்ற அடிகளில் குறிக்கப் பெறுகிறது. காளியன் என்ற பாம்பினை படங்களை ஆடும் அரங்கமாகக் கொண்ட திருவடிகள் வலிமை மிக்க அதன் தலைகள் நசுங்கும்படி ஆடி அதனை தண்டித்தன.

'இப்பெரு நிலத்தார் இன்னார் தூதனென நின்றான்' என்று கலியன் கொண்டாடவும் 'தருமன் விடத்தான் தூது போனார் வந்தார்' என்று ஸ்வாமி தேசிகன் விடுதூதும் படியும் தூது சென்ற எளிமையிலே ஈடுபட்டுப் பேசுகிறார் 'உறு நெறியோர் தருமன்விடு தூதுக்கு கந்தன' 'தருமனிரந்தது இசைந்து சென்றன.' தருமன் உறுநெறியோனாக-தரும நெறி தவறாதவனாக-இருந்ததால் எம்பெருமான் தூது செல்ல உடன்பட்டான். அடியார்களுக்காக தூது போதல் தேரோட்டல் போன்ற செயல்களையும் செய்யும் எம்பெருமானின் ஸௌலப்யத்தை (எளிமையை) - இவ்வாறு போற்றுகிறார். மற்றவர்க்கு இவை இழிதொழிலாயினும் எம்பெருமானுக்குப் பெருமையே சேர்ப்பன என்கிறார் ஸ்வாமி தேசிகன். 'செஞ்சொலன்பர் சிந்தை கொண்டு தீதிலாத தூதனாய். தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வ நாயக' என்பது மும்மணிக் கோவை ஸ்ரீ ஸூக்தி.

இனி அனுபவிக்கப் போகும் க்ருஷ்ண சரிதங்கள் அதிகார ஸங்கிரஹப் பாசுரத்தில் மட்டுமே கூறியவை. பால், தயிர், வெண்ணெய் போன்றவற்றை ஆச்ரிதர் கைபட்டது என்பதற்காகவே களவாடி உண்டான் கண்ணன். உயரத்தில் உறிமேலிருந்தவற்றை எட்டி எடுக்க உரலைப் பயன் படுத்தினான். அப்போது திருவடிகள் உரலிலேயே பொருந்தி நின்றன. இதனை 'உறிதடவுமளவில் உரலூடுற்று நின்றன' என்கிறார். பெரியாழ்வாரும் 'பொத்த உரலைக் கவிழ்ந்து அதன் மேலேறி, தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணையும், மெத்த திருவயிறு ஆற விழுங்கிய அத்தன்' என்றார்.

வெண்ணெய் தொடுவுண்ட கண்ணனை கண்ணிக் குறுங்கயிற்றினால் கட்டினாள் அசோதை. உரலோடு ஆப்புண்ட கண்ணன் இணைந்து நின்ற மருத மரங்களுக்கு இடையே தவழ்ந்து சென்றான். இடையே சிக்கிய உரலைக் கண்ணன் ஈர்க்க மரங்கள் முறிந்து வீழ்ந்தன. கந்தர்வர்களிருவர் சாபம் தீர்ந்தது அதனைக்

கூறுகிறார் 'உடன் மருத மொடிய ஒரு போதில் தவழ்ந்தன यमकार्जुन दृष्टबालकेलिं என்பது கோபாலவிம் சதியில் அநுபவம்.

கோகுலத்தில் துர்நிமித்தங்களைக் கண்ட கோபாலர் கண்ணனுடன் விருந்தாவனம் சென்றடைந்தனர். பகாசுரன், அகாசுரன், தேனுகன், பிலம்பன், கேசி போன்ற மற நெறியினரை (கோபத்தின் வழி சென்றவர்களை) முடித்தான் கண்ணன் இதனை 'மறநெறியர் முறிய பிருதானத்து வந்தன' என்கிறார்.

பாண்டவர்க்காகப் பாரதம் கைசெய்து வென்றதைக் கூறுகிறார். 'அறமுடைய விசயனமர் தேரில் திகழ்ந்தன.' 'அறமுடைய' என்ற விசேஷணம் அர்ஜுனன் தரும நெறி பிறழாதவன் என்ற கருத்திலே மட்டும் வந்ததல்ல. 'कृष्णं धर्मं सनातनं' என்றபடி ஸநாதன தர்மமான கண்ணனை ஸகாவாகவும் சாரதியாகவும் சரண்யனாகவும் கொண்டிருந்தான் அர்ஜுனன் என்பது கருத்து.

பஞ்சவரைப் பலவகையும் கண்ணன் காத்தான் என்பதற்குச் சான்றாய் ஒன்றைக் கூறுகிறார் 'விழுகரியொர் குமரனெனமேவிச்சிறந்தன. 'பாரதப்போரின் முடிவில் அபாண்டவாஸ்த்ரத்தை ஏவினான் அசுவத்தாமன். உத்தரையின் கர்பத்திலிருந்த சிசு கருகி, கரிக் கட்டையாய்ப் பிறந்தது. தன்னுடைய திருவடிஸ்பர்சத்தால் அதற்கு உயிரூட்டினான் கண்ணன். அக்குழவியே பரீக்ஷித் குருபாண்டவர்களின் ஸந்தான பீஜம். 'भस्मन्युपाहित नरेन्द्रकुमारकावं என்பது தேவநாயக பஞ்சாசத்திலுள்ள ஸ்ரீ ஸூக்தி.

அவதார ஸம்பந்தமில்லாத செயல்களை இனிக் காண்போம். நலமந்தமில்லாதோர் நாடு பரமபதம். புறச்சமயிகள் அதனை அறியமாட்டார். எம்பெருமானாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களும் नाथोपक्षेप्रवृत्त மான ஆசார்ய பரம்பரையில் வந்தவருமே அதனை அறிவர். ஸ்வாமி தேசிகன் அப்பரமபதத்திற்குப் படியமைத்துத் தந்தவர். மற்ற அறுவகைச் சமயத்தினரும் அறிய முடியாத பரமபதத்தில் அமர்ந்தவை திருவடிகள். இதனை 'அறுசமயமறிவரிய தானத்து அமர்ந்தன' என்கிறார்.

தாமரையில் தோன்றியதால் மலர் மகள் என பெரிய பிராட்டியாரைக் கூறுவர். அவளும் கூசிப் பிடிக்கும் மெல்லடிகள் எம் பெருமானுடையவை. பிராட்டியின் மலர்க்கையால் வருடினாலும் கன்றிச் சிவந்து விடுவன அவ்வடிகள். இதனை 'மலர் மகள் கை வருட மலர்ப் போதில் சிவந்தன' 'திருமகள் செய்ய கரங்கள் ஒன்றின' என்ற அடிகள் காட்டுகின்றன. பெரிய பிராட்டியாரோடு மண்மகளும் திருவடி வருடுவர் என்கிறார். लक्ष्मीभूम्योः करसरसिजैः लालितं ' संवाहितं त्रिदशनाथरमामहीभ्यां என்ற இடங்களில்.

எம்பெருமானது திருவடிகள் அநவரதம் துளஸீதளவாஸனா வாஸிதங்களாயுள்ளன. திருத்துழாயைச் சூடியிருப்பது அவனது ஸர்வேச்வரத்வத்திற்கு அறிகுறி. 'தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடைய அம்மான்' என்பது நம்மாழ்வார் திருவாக்கு. 'வெறியுடையதுளவமலர் வீறுக்கணிந்தன' (தம் பெருமை தோற்றும்படி பரிமளமுள்ள துளஸியை திருவடிகள் அணிந்துள்ளன) 'திகழ் துளவுந்து மணங்கமழ்ந்தன' (விளங்கும் துளசியின் பரவும் மணமுடையவை திருவடிகள்) என்ற அடிகள் இதனைக் கூறுவன.

தருமங்களிலே சிறந்ததென்கிறார் திருவடிகளை. தர்மம் என்பது श्रेयः साधनं (நன்மையை அடைவதற்கு சாதனம்). ஸம்சார கடலைக் கடக்க சாதனமாகவும், கடந்த்வர் அடைய வேண்டியதாயும், அடைந்தவர்க்கு போக்ய தமமாயும் இருப்பனவன்றோ திருவடிகள். ஆகையால் 'தர்மம் உயர்ந்தது இதென்ன நின்றன' என்றார்.

நோய் தீர்ப்பது மருந்து. பிறவியென்னும் பெரு நோய்க்கு ஒரே மருந்து தான் உண்டு. அதாகிறது எம்பெருமான். அம்மருந்தைத் தருபவனும் அவ்வெம்பெருமானே. भेषजं भिषक् மருந்து, வைத்தியர்) என்றார் வியாசர். 'மருந்தும் பொருளும் அமுதமும் தானே' 'மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா' என்றார்கள் ஆழ்வார்கள். இக்கருத்தினையுட் கொண்டு 'தமர்களருந்து மருந்திதென்பன' (அடியார்கள் விரும்பியுண்ணும் மருந்து போன்றவை திருவடிகள்) என்கிறார்.

திருவடிகளின் மேன்மையிலே ஈடுபட்டுப் பேசுவதைக் காணீர்- 'அருமறையந்தமமர்ந்த பண்பின' 'அயன் முடி தன்னிலமர்ந்து யர்ந்தன! அறிவதற்கு அரிதான வேதங்களின் தலையாய பகுதி உபநிடதங்கள். அவற்றிலே விளங்கும் பெருமை வாய்ந்தவை திருவடிகள். உலகங்களையெல்லாம் படைக்கும் வல்லமையுடையவன் நான்முகன். அண்டத்தின் அதிபதி. युगकोटि सहस्राणि विष्णुमाराध्य (பல ஆயிரம் கோடியுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து) என்கிறபடியே எம்பெருமான் திருவடிகளில் வணங்கின அந்த நான்முகன் முடியினில் அமர்ந்து தம் மேன்மையைக் காட்டுவன திருவடிகள். सुइ सीमन्त पसूणं, वेलातीत लुतिपरिमकं, वेधसां मौलिसेव्यं என்ற தேசிகர் ஸ்ரீ ஸுக்திகள் இங்கு அநுஸந்தேயங்கள்.

திருவடியின் ஆபரணச் சேர்த்தியை பேசுகிறது 'செழுமணி கொண்ட சிலம்பிலங்கின' என்ற அடி. திருவடிகளில் எம்பெருமான் அணிந்துள்ள சிலம்பு செழுமணி கொண்டது. சிறந்த ரத்தினங்களைப் பரலாகக் கொண்டது. 'செழுமணி' என்பது ஜீவாத்மாக்களைக் குறிக்கும் என்பர் ஆன்றோர்.

आत्मापहार रसिकेन मयैवदत्तं अन्यैरधार्यमधुना विबुधैकनाथ ।
स्वीकृत्य धारयितुमईसि मां त्वदीयं चोरोपनीतनिजनूपुरवत् स्वपादे ॥

என்ற தேவநாயக பஞ்சாசத் ஸ்லோக்தி இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

பயிர் காக்கக் களையெடுப்பது போன்று நல்லோரை வாழ்விக்கத் தீயோரைத் தொலைத்தலும் அவசியமாகிறது. புலி கிடக்கும் புதரிலே சென்று அதனைத் தட்டியெழுப்பி, அதனோடு போரிட்டு வெல்லும் வீரனைப் போன்று எம்பெருமானும் சத்ருவுள்ள இடம் தேடிச் சென்று அவர்களை அழித்தொழிப்பான். இராமனை अभियाता प्रहर्त्ता என்றார் வால்மீகி. 'சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்' என்றாள் ஆண்டாள். இதனை 'விறலசுரர் படையடைய வீயத்துரந்தன' என்கிறார். வீரமுள்ள அசுரர் படைகள் முழுமையாக அழிந்து போம்படி துரத்தியவை திருவடிகள்.

முனிவர்கள் திருவடிகளிடத்து மாறாத மால் கொண்டவர். அம்முனிவர்கள் எப்படிபட்டவர் எனில் மறுபிறவயறுப்பவர். தாங்கள் மறுபடி பிறக்காமலிருக்க வழி தேடுபவர் அல்ல அவர்கள். ப்ரபத்தி நெறியை உலகுக்கு உபதேசித்து உய்யச் செய்பவர்கள். நம் போல்வார் மறுபடி பிறக்க வேண்டாதபடி வினையறுப்பவர்கள்.

'தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் தலை வைத்தோம் சடகோபனருளினாலே என்ற தேசிக ஸ்ரீ ஸ்லோக்திப்படி நம்மாழ்வாரே மறுபிறவியறு முனிவர் என குறிக்கப் பெற்றார் என்பர். அவரைத் தானே 'குலபதி'என்னும் ப்ரபந்நஜநஸந்தான கூடஸ்தர்' என்றும் கொண்டாடுகிறோம். மறுபிறவியறு முனிவர் மாலுக்கு இசைந்தன திருவடிகள்.

இக்கருத்தினை நவமணிமாலையின் முதலடியிலும் காணலாம். 'ஒருமதியன்பர் உளங்கவர்ந்தன' என்பது அவ்வடி. திருவடிகளால் உளம் கவரப்பெற்றவர் யார்எனில் ஒருமதியன்பர்-அன்பு-பக்தி- அதனையுடையவர். அவர்கள் ஒருமதியினர். 'என்மதிக்கு விண்ணெல்லாம் உண்டோ விலை' என்று தாங்களே கொண்டாடும்படி சிறந்த மதியினர். அல்லது 'தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' என்றபடி श्रियः पति ஒருவனிடமே மாறாத அன்புடையவர். அல்லது 'ஒத்தாரும் மிக்காரும் இல்லாத திருமால் ஒருவனையே உபாயமாகவும் ப்ராயமாகவும் பற்றினவர்கள். அவர்கள் कमलामान्तकारुण्यैकान्ति களான ஆழ்வார்களும் ஆசார்யர்களும். அவர்களுடைய உள்கனிந்து எழுந்ததோர் அன்புக்கு இலக்கானவை திருவடிகள்.


மறைப்பொருளாகக் கூறியதைத் தெள்ளத்தெளிய அறிவிக்கிறார். 'அணிகுருநகர் முனிவர் நாவுக்கமைந்தன! பூமண்டலத்திற்கு ஆபரணமாகத் திகழ்வது திருக்குருகூர். அவ்வூருக்கு அதிபராய்த் திகழ்பவர் ஸ்வாமி நம்மாழ்வார். அவர் நாவிலே நித்ய ஸாந்நித்யம் பண்ணுபவை திருவடிகள். 'பரனடிமேல் குருகூர்ச்சடகோபன் சொல் நிரைநிரை ஆயிரம்' என்றும் 'திருவடிமேலுரைத்த தமிழ் மாலை ஆயிரம்' என்றும் அவரே கூறுவதால் இதனையறியலாம்.

திருவடிகளுக்கு பெருமை மிகவுண்டு என்பதில் ஐயமில்லை. ஆயினும் நமக்கு எளிதில் கிடைத்தாலன்றோ நாம் பயன் பெறமுடியும் எளில் கூறுகிறார் 'அருள்தர எண்ணி அயிந்தை வந்தன! பிற்பாடரான நம் போல் வார்க்கு அருள் புரிவதற்காகவே திருவயிந்தையிலே வந்து நிலை நின்றன திருவடிகள்.

இத்தகைய திருவடிகளை அடைந்து உய்வு பெறாமலிருக்கலாமா? 'விடலரியவை' (விடமுடியாதவை) அன்றா அவை. அவற்றின் போக்யதையை ஒருமுறை அநுபவித்துவிட்டால் விடப்போமோ? அடிகளிரண்டையும் ஆறாகத் தந்த அவன்தான் எப்படிப்பட்டவன். 'பெரியபெருமாள்' பெருமாளான இராமனாலும் ஆராதிக்கப்பட்டவன். 'அடியவர் மெய்யர்' விரும்பித்தொழுவார்க்கெல்லாம் மெய்யருயிருப்பவர் தாஸ ஸத்யர்.

இவ்வளவு பெருமை வாய்ந்த திருவடிகளைப் பெற்று மகிழும் பாக்யம் நமக்கே உண்டு. இழந்து போகாதீர். பெற முயன்மின். இன்றே இப்பொழுதே ஸதாசார்யனையடைந்து உய்வுபாயம் தேறி திருவடிகளிலே பரஸமர்ப்பணம் பண்ணி வாழ்வாங்கு வாழ்வீர். நானும் சொன்னேன், நமரும் உரைமின்.

ஸ்ரீ :



ஸ்ரீமத் சின்னண்டவன்

ஸ்ரீபாதுகா ஸேவக ராமானுஜ மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீவைஷ்ணவன்

(ஸ்ரீமதுபயவே வித்வான்
V.N.கோபால தேசிகன், ஒப்பிலியப்பன் ஸந்நிதி)

இந்த உலகத்தில் எண்ணற்ற ஜீவ ராசிகள் வாழ்கின்றன. மரங்கள், செடி கொடிகள் இப்படிப் பல வகையான ஜீவ ராசிகள் உள்ளன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் ஜீவராசிகள் பிறக்கின்றன, இறக்கின்றன. நாம் பலபல ஜன்மங்களை எடுத்துவிட்டு இப்போது இந்த மனித ஜன்மத்தை அடைந்திருக்கிறோம். இங்கு நாம் மனிதர்களாகப் பிறப்பதற்கே புண்ணியம் செய்திருக்கிறோம். மனிதனுக்குத்தான் பகுத்தறிவு உள்ளது. எது நல்லது எது கெட்டது நாம் எதைச் செய்யவேண்டும் எதைச்செய்யக்கூடாது என்று அறியும் தன்மையை பகவான் நமக்குக் கொடுத்திருக்கிறான். இந்த அறிவை நாம் நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் செய்த பாக்கியம்

மனிதர்களிலும் வைஷ்ணவர்களாக இருப்பதற்கு நாம் மிகவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். உலகில் பலபல மதங்கள் இருக்கின்றன. ஹிந்து மதம் என்று சொல்லப்படுவதிலும் பல பிரிவுகள் இருக்கின்றன. பலபல தேவதைகளைக் கடவுளாகப்பலர் வழி படுகின்றனர்.

வைஷ்ணவர்களாகிய நமக்கு மஹா லக்ஷ்மியுடன் கூடிய நாராயணனே தெய்வம். அவனே எல்லா தேவர்களுக்கும் மேலானவன். வேதங்கள் நாராயணனே பரமாத்மா, பரம் பொருள், பரஞ்சோதி என்று கோஷிக்கின்றன. அவனைத் தவிர ப்ரஹ்மா, சிவன், இந்திரன் முதலான எல்லா தேவர்களும் நம்மைப் போல ஜீவராசிகள்தாம். ஜீவாத்மாக்களான மற்ற தேவர்களை நாம் தெய்வமாக, பகவானாகக்கொண்டாடக் கூடாது. பரப்ரஹ்மமாகிய நாரயணனுக்குச் சமமாக ப்ரஹ்மா, சிவன் போன்ற மற்ற தேவர்களை நினைப்பது மஹாபாபம் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதனால் வைஷ்ணவர்களான நாம் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனையே ஸேவிக்க வேண்டும்.

நமக்கு வேதமே மூலப்ரமாணம். வேதம் ஒருவராலும் செய்யப்படாதது. எம்பெருமான் நாராயணனுடைய வெருமையைப் போற்றிப் பேசுகிறது வேதம்.

வேததங்களின் அர்த்தங்களை எல்லாரும் அறிந்து பயன் பெற வேண்டும் என்று ஆழ்வார்கள் செந்தமிழில் நாலாயிர திவ்யப்ரபந்தம் அருளிச் செய்தனர். திவ்யப்ரபந்தம் த்ரமிட வேதம் (தமிழ் வேதம்) என்று கொண்டாடப்படுகிறது.

ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் பதின்மர் (10 பேர்). அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், ஆண்டாளையும் மதுரகவிகளையும் சேர்த்துக் கொண்டு ஆழ்வார்கள் பன்னிருவர் (12 பேர்) என்றும் சொல்வர்.

என்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களிலேயே எப்போதும் ஆழ்ந்து இருந்ததால், இவர்களுக்கு ஆழ்வார்கள் என்று வெயர் ஏற்பட்டது. ஆழ்வார்களுக்குள் நம்மாழ்வார் மிக முக்கியமாக இருப்பவர். தம்முடைய ப்பரபந்தத்தின் மூலமாக ப்ரபத்தியின் மூலமாக ப்ரபத்தியின் பெருமையை விளக்கிக் கூறினர். தாமும் ப்ரபத்தியை அனுஷ்டித்தார். அதனல் ப்ரபத்தி அல்லது பரந்யாஸம் செய்து கொள்பவர்களுக்கு நம்மாழ்வார்தான் தலைவர், மூலபுருஷர். அதனல் நம்மாழ்வார் ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தர் என்று அழைக்கப்படுகிறார். இவர் அருளிக் செய்த திருவாய் மொழியின் வ்யாக்யானம் பகவத் விஷயம் என்று அழைக்கப் படுகிறது. முக்கியமாகக் காலக்ஷேபம் பண்ண வேண்டிய க்ரந்தம் இது.

குருபரம்பரை

நம்கெல்லாம் முதல் ஆசார்யன் (ஆதி குரு) நாராயணன் தான். அடுத்தபடியாகப் பெரிய பிராட்டி என்று சொல்லப்படும் மஹாலக்ஷ்மி. அதற்குப் பின் விஷ்வக்ஸேனர் (ஸேனை முதலியார்) அடுத்த ஆசார்யன். ஸ்ரீவைகுண்டத்தில் எம்பெருமானுடைய ஸேனைக்குத் தலைவராயிருப்பதால் முதலியார் என்று அழைக்ப்படுகிறார். (முதலியார் என்பது மரியாதையைக் குறிக்கும் சொல். இப்போது வழங்கப்படுகின்ற ஜாதியைக் குறிக்கும் சொல் அல்ல).

அடுத்த ஆசார்யன் நம்மாழ்வார் ஆவார். விஷ்வக்ஸேனர் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து எழுந்தருளி நம்மாழ்வாரருக்கு உபதேசம் செய்தார். இவர் நம்மாழ்வாருக்கு நெடுங்காலத்துக்குப் பிறகு தோன்றினர். ஆகிலும் யோகத்தால் நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு உபதேசித்து அருளினர்.

நாதமுனிகளுடைய சிஷ்யர் உய்யக் கொண்டார். அவருடைய சிஷயர் மணக்கால் நம்பி, அவருடைய சிஷயர் ஆளவந்தார். இவர் நாதமுனிகளின் திருப்பேரன்.

ஆளவந்தாருடைய சிஷயர் பெரிய நம்பி. அவருடைய சிஷயர் ஸ்ரீபரஷயகாரர் என்று சொல்லப்படும் ராமாநுஜர். நம் வைஷ்ணவஸிந்தாந்தத்திற்கு மிக முக்கியமான ஆசார்யர் ஸ்ரீபாஷயகாரர் ஆவார். அவருடைய பெருமையினாலேயே நம் ஸித்தாந்தம் ராமாநுஜ ஸித்தாந்தம் என்று அழைக்கப்படுகிறது. அவருடைய மேன்மையைக் காட்டும் வகையில், அவரும் பகவத் ராமாநுஜர் என்று அழைக்கப்படுகிறார்.

உண்மையான ஸித்தாந்தம்

நம் வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்தான் உண்மையான வேதாந்த ஸித்தாந்தம், இதை முன் யுகத்தில் ப்ரசாரம் செய்தவர்கள் பராசரர், வ்யாஸர், போதாயனர், முதலியவர்கள். பராசரர் அருளிச் செய்த விஷ்ணு புராணம் நம் வைஷ்ணவ, விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை திடமாக ஸ்தாபிக்கின்றது. பராசரருடைய குமாரர் வ்யாஸர். வ்யாஸருடைய வேதாந்த ஸூத்ரத்துக்கு மிக விரிவாக உரை எழுதினவர் போதாயனர். அவருக்குப் பிறகு ப்ரஹ்ம நந்தி என்னும் டங்கர், த்ரமிடர், குஹதேவர் போன்றவர்களும் ப்ரஹ்ம ஸூத்ரததுக்கு விரிவாக உரை எழுதி நம் ஸித்தாந்த்தை ஸ்தாபித்தார்கள். ஆஹல் துரதிருஷ்டவசமாக அவர்களுடைய நூல்கள் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை.

ஸ்ரீபாஷ்யகாரர்

இந்த கலியுகத்தில் நம் ஸம்ப்ரதாயத்தை திடமாக நிலை நிறுத்தியவர் ஸ்ரீபாஷ்யகாரர் எனப்படும் ராமாநுஜர். இவருக்கு யதிராஜர், எம்பெருமானார், உடையவர் என்று பல திருநாமங்களும் உண்டு. ஸ்ரீபாஷ்யகாரர் இந்த பூலோகத்தில் 120 வருஷங்கள் எழுந்தருளி இருந்தார். அவருடைய காலம் கி.பி. 1017 1137.

ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த க்ரந்தங்கள் 9. நவரத்தினம் போன்றவை இவை.

அவையாவன -

1) **ஸ்ரீ பாஷ்யம்** - வ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு உரை
2) **கீதா பாஷ்யம்** - பகவத் கீதைக்கு உரை
3) **வேதார்த்த ஸங்க்ரஹம்**
   வேதத்தில், உபநிஷத்துகளில், முக்கியமான பகுதிகளின் அர்த்தங்கள்.
4) **வேதாந்த தீபம்** - வ்யாஸரின் ப்ரஹ்மஸூத்ரத்துக்குச் சுருக்கமான உரை
5) **வேதாந்தஸாரம்** - ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு இன்னும் ஒரு சுருக்கமான உரை
6) **சரணாகதிகத்யம்**
7) **ஸ்ரீரங்ககத்யம்**
8) **ஸ்ரீ வைகுண்டகத்யம்**
9) **நித்யம்** (ஸ்ரீ வைஷ்ணவன் தினந்தோறும் அனுஷ்டிக்க வேண்டியது பற்றிச் சொல்கிறது).

வ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு ராமானுஜர் அருளிச் செய்த பாஷ்யம் (உரை), பெருமதிப்புடன் ஸ்ரீ பாஷ்யம் என்றே கூறப்படுகிறது. அதை அருளிச்செய்ததால், ராமானுஜரும் ஸ்ரீ பாஷ்யகாரர் என்றே அழைக்கப்படுகிறார்.

நம் ஆசார்யர்களுக்குள் நடுநாயகமாக விளங்குபவர் ஸ்ரீ பாஷ்யகாரர். ஆசார்யர்களாகிற ரத்னங்களால் விளங்கும் ஒரு ரத்னமாலை நமது குருபரம்பரை. அந்த ரத்னமாலையில் நடுநாயகமணியாக விளங்குகிறார் ஸ்ரீ பாஷ்யகாரர்.

மற்ற மதங்கள் கூறும் தவறான அர்த்தங்களைக் கண்டித்தும் நம் ஸித்தாந்தத்தின் உண்மைப் பொருளை விளக்கியும், நம் ஸித்தாந்தத்துக்கு ஒரு வேலியாக விளங்கினார்.

இந்த குரு பரம்பரையை விளக்கும் ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்தி:

என் உயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கு
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத்திருமகள் என்று இவரை முன்னிட்டு
எம்பெருமாள் திருவடிகள் அடைகின்றேனே.

இந்த பாசுரத்தை தினமும் சொல்லி, குருபரம்பரையை தியானம் செய்ய வேண்டும். ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பிறகு, திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஆசார்யர் ஆவார். இவர் திருவாய்மொழிக்குத் திரு ஆறாயிரப்படி என்ற சிறந்த வ்யாக்யானத்தை அருளிச் செய்துள்ளார். இதுவே பகவத் விஷயம் எனப்படும் காலக்ஷேப க்ரந்தம் ஆகும்.

பிள்ளானுக்குப் பிறகு கிடாம்பி ஆச்சான், எங்களாழ்வான், நடாதூர் அம்மாள், அப்புள்ளார் ஆகியவர்கள் ஆச்சார்யர்கள்.

ஸ்ரீ தேசிகன்

அப்புள்ளாரின் சிஷ்யர் ஸ்ரீ தேசிகன். இவருடைய இயற்பெயர் வேங்கடநாதன். திரு வேங்கடத்து எம்பெருமானுடைய கண்டையின் (மணியின்) அவதாரம் ஸ்ரீ தேசிகன். இவருக்கு ஸ்ரீரங்கநாதன் வேதாந்தாசாரியார் என்ற திருநாமத்தையும் ஸ்ரீரங்கநாச்சியார் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்ற திருநாமத்தையும் அளித்தார்கள்.

எம்பெருமானுடைய பெருமையைப் போல, தேசிகனுடைய பெருமையும் அளவிடமுடியாது. நம் ஸித்தாந்தத்தைப் பல வகையாலும் திடமாக ரக்ஷித்தவர் ஸ்வாமி. இவருடைய ஸ்ரீ ஸூக்திகள் எண்ணற்றவை. வேதாந்த நூல்கள், ரஹஸ்யக்ரந்தங்கள்,

வ்யாக்யான க்ரந்தங்கள், ஸ்தோத்ரங்கள், காவ்யங்கள், தமிழ்ப்ரபந்தங்கள் - என்று இப்படி ஸம்ஸ்க்ருதத்திலும், தமிழிலும், ப்ராக்ருதத்திலும் கூட பலபல க்ரந்தங்களை அருளிச்செய்து நம் ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தினார்.

தேசிகன் என்றால் பொதுவாக ஆசார்யன் என்று பொருள். ஆனால் தேசிகன் என்றாலே நம் ஸ்வாமியைத்தான் குறிக்கும். ஸ்ரீ தேசிகன் 101 வருஷங்கள் இந்த உலகத்தில் எழுந்தருளி இருந்தார். கி.பி. 1268-1369.

ஸ்ரீ தேசிகனுடைய முக்கிய சிஷ்யர்கள் அவருடைய திருக்குமாரரான நயினாராசார்யர், ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயர். ஸ்ரீதேசிகனுக்குப் பிறகு, ஆசார்ய பரம்பரை பலவகையாகப் பிரிகின்றது. அவரவர்களுடைய குருபரம்பரையைத் தன் ஆசார்யனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

தத்வத்ரயம்

தத்வங்கள் முக்கியமாக மூன்று பிரிவாகச் சொல்லப்படுகின்றன. அவை-சேதனன், அசேதனன், ஈச்வரன்.

சேதனன்- இதை ஆத்மா, ஜீவாத்மா, சித் என்றும் சொல்வதுண்டு. இந்த ஜீவாத்மா ஒவ்வொரு சரீரத்திலும் ஹ்ருதயத்தில் இருக்கின்றது. ஆனால் சரீரத்திலிருந்து வேறுபட்டது. ஜீவாத்மா அணுவைப் போல் மிகமிகச் சிறியது. மனிதன், மிருகம், பக்ஷி, மரம் இப்படி ஒவ்வொரு சரீரத்துக்குள்ளும் ஒவ்வொரு ஜீவாத்மா இருக்கின்றது. அதனால் ஜீவாத்மாக்களின் எண்ணிக்கை அளவிட முடியாதது. மனிதன், மிருகம், யானை, கொசு - இப்படி எந்த சரீரமாக இருந்தாலும், உள்ளே இருக்கும் ஜீவாத்மா ஒரே மாதிரி அணுபரிமாணம் உள்ளதாகவே இருக்கும் சரீரங்கள் மனிதன் ம்ருகம் இப்படி பலவகையாக இருந்தாலும் உள்ளே இருக்கும் ஜீவாத்மாக்களுக்குள் வித்யாசம் கிடையாது. அவை எல்லா விதத்திலும் ஒரே மாதிரியாகவே இருக்கும்.

ஜீவாத்மா அழிவற்றது. ஒரு சரீரம் அழியும்போது, அதன் உள்ளே இருக்கும் ஜீவாத்மா அழிவதில்லை. அது ப்ரபத்தி பண்ணி இருந்தால் மோக்ஷத்தை அடைகின்றது. புண்ணியம் பண்ணி இருந்தால், அதனுடைய நல்ல பலனை அனுபவிப்பதற்காக ஸ்வர்கத்தை அடைகின்றது. புண்ணியம் கழிந்தபின், மறுபடியும் உலகத்தில் பிறக்கிறது. அதாவது வேறு சரீரத்தை அடைகின்றது. ஸ்வர்க்கம் என்பது வேறு, மோக்ஷம் என்பது வேறு. ஸ்வர்க்கம் என்பது தேவலோகம். புண்ணியம் செய்தவர்கள் மரணத்துக்குப் பின் தேவலோகத்தில் இஷ்டமான போகங்களை அனுபவிப்பார்கள். புண்ணியம் தீர்ந்தபின் பூலோகத்திற்குத் திரும்பி வந்து விடுவார்கள். அவர்களுடைய கர்மாவுக்குத் தகுந்தாற்போல், மனிதன், மிருகம், பக்ஷி, மரம் - இப்படி ஒரு சரீரத்தை அடைவார்கள்.

மோக்ஷம் என்பது ஸ்ரீவைகுண்டம். இந்த உலகத்தில் இருக்கும் போதே,நல்ல ஞானம்பிறந்து,ஒரு ஆசார்யனை அடைந்துப்ரபத்தி(பரந்யாஸம்)செய்து கொண்டவர்கள் இந்த தேஹத்தின் முடிவில் மோக்ஷத்தை அடைவார்கள்.அங்கே ஸ்ரீவைகுண்டத்தில் பெரிய பிராட்டியுடன் கூடிய நாராயணனை அனுபவித்துக் கொண்டும் அவர்களுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டும் இருப்பார்கள்.

இந்த சேதனன் அல்லது ஜீவாத்மா இயற்கையாகவே ஆனந்த ஸ்வரூபத்தையும் அளவற்ற ஞானத்தையும் உடையது. என்பெருமானுக்கு அடிமையாயிருப்பது. ஆனால் இந்த ஸம்ஸாரத்தில் இருக்கும் போது செய்யும் தீவினைகளால் -பாபங்களால்-ஜீவாத்மாவின் இயற்கையான ஆனந்தமும் எல்லையற்ற ஞானமும் தடைபடுகின்றன.அதாவது அவை குறைவாக இருக்கின்றன.ஆனால்,மோக்ஷம் அடைந்தபின்,தன் இயற்கையான ஸ்வபாவமாகிய பரிபூர்ண ஆனந்தத்தையும்,பரிபூர்ண ஞானத்தையும் ஜீவாத்மா அடைகிறது.

இந்த ஜீவாத்மாக்களை மூன்று வகையாகக் பிரிக்கலாம்.1)பத்தர்-இவர்கள் இந்த ஸம்ஸார ஸாகரத்தில் உழல்பவர்கள்.துக்கத்தையும்,மகிழ்ச்சியையும் மாறி மாறி அனுபவிப்பார்கள்.கர்மாவுக்குக் கட்டுப்பட்டவர்கள்.2)முக்தர்- இந்த உலகத்தில் ஓர் ஆசார்யனை அடைந்து ஆசார்ய கடாக்ஷத்தினால் ப்ரபத்தி செய்து கொண்டு, இந்த சரீரத்தின் முடிவில் மோக்ஷத்தை அடைந்து ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பவர்கள்.3)நித்யர்-கர்ம ஸம்பந்தமே இல்லாமல் எப்போதும் ஸ்ரீவைகுண்டத்திலேயே பகவானுக்குக் கைங்கர்யம் செய்து வருபவர்கள். ஆதிசேஷன், கருடன்,விஷ்வக்ஸேனர் போன்றவர்கள். இவர்கள் நித்யஸூரிகள் என்றும் சொல்லப்படுவார்கள்.

அசேதனம்

அசேதனம் என்பது அறிவில்லாதது. அதனால் அது ஒருபலனையும்அனுபவிக்க முடியாது.அது மற்றவர்கள் அனுபவிப்பதற்காக இருக்கின்றது.அதனை அனுபவிப்பவன் சேதனன் என்னும் ஜீவாத்மாதான்.அசேதனம் ப்ரக்ருதி,காலம், சுத்தஸத்வம் என்று மூன்று வகைப்படும்.

ப்ரக்ருதி-இது மூலப்ரக்ருதி த்ரிகுணம்,அவ்யக்தம்ப்ரதானம் என்றெல்லாம் சொல்லப்படும்.இது ஸத்வம்,ரஜஸ்,தமஸ் என்ற மூன்று குணங்களை உடையது. இந்த ப்ரக்ருதி எப்போதும் மாறுபாட்டை அடைந்து கொண்டிருக்கும்,மேலே சொன்ன மூன்றுகுணங்களும் ஸமமான அளவில் உள்ள போது மஹாப்ரளயம் ஏற்படும்.இந்த குணங்கள் அளவில் மாறுபடும் போது ப்ரக்ருதியிலிருந்து மஹான் (மஹத்)என்ற தத்வம் உண்டாகிறது. அதிலிருந்து அஹங்காரம் என்ற தத்வம் உண்டாகிறது. இந்த அஹங்காரமும் ஸாத்விகம்,ராஜஸம்,தாமஸம் என்று மூன்று வகைப்படும்.ஸாத்விக அஹங்காரத்திலிருந்து பின் வருபவை உண்டாகின்றன.மனம், ஐந்து ஞானேந்திரியங்கள்

(கண், காது, மூக்கு, நாக்கு உடல் ஆகியவை), ஐந்து கர்மேந்திரியங்கள் (வாக்கு, கை,கால், மலம் கழிக்கும் கருவி, மூத்திரம் கழிக்கும் கருவி ஆகியவை).

தாமஸ அஹங்காரத்திலிருந்து, தன்மாத்ரங்கள் என்று சொல்லப்படுபவை மூலமாக, பஞ்ச பூதங்கள் உண்டாகின்றன. பஞ்ச பூதங்கள் என்பவை ஆகாசம், காற்று,நெருப்பு (தேஜஸ்),ஜலம், பூமி ஆகியவை. உலகத்தில் உள்ள எல்லாப்பொருள்களும் இந்தப் பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் உண்டானவை.

காலம் - இது எங்கும் பரந்து நிற்பது. இது கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும். ஆனால் இதற்கு ஸத்வம், ரஜஸ்,தமஸ், ஆகிய குணங்கள் கிடையாது. இது வருஷம், நாள்,நாழிகை, நிமிஷம், வினாடி என்று பிரிக்கப்படுவது நாம் அறிந்ததே.

ஸுத்த ஸத்வம் - இது ஸத்வ குணத்தை மட்டும் உடையது. ரஜஸ், தமஸ் ஆகிய குணங்கள் இதற்கு கிடையாது. ஸ்ரீவைகுண்டம் முழுவதும் சுத்தஸத்வம். இந்த பூலோகத்திலும் திருக்கோயில்களில் உள்ள எம்பொருமானுடைய அர்ச்சை திருமேனி சுத்தஸத்வம் ஆகும்.

ஈச்வரன்

ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரன் என்று வேதங்கள் கோஷிக்கின்றன. இவன் ஸ்வருபத்தாலும், ஞானத்தாலும், எப்போதும், எங்கும்,எல்லாவற்றிலும் வ்யாபித்து இருகிக்கிறான். ஆனந்தஸ்வருபமாய் இருப்பவன். எல்லாவற்றையும் படைப்பவன். இவனே ரக்ஷிப்பவன், அழிப்பவன் இவனே.

இவன் ஆணைக்கு கட்டுப்பட்டுத்தான் ப்ரஹ்மா படைப்புத் தொழிலைச் செய்கின்றான். இவன் ஆணைக்குக் கட்டுப்பட்டுத்தான் சிவன் ஸம்ஹாரத்தொழிலைச் செய்கிறான். நாராயணன் எல்லாவற்றுக்கும் எப்போதும் ஆதாரமாய் இருப்பவன். மற்ற தேவர்களைத் தொழுகின்றவர்களுக்கும் நாராயணன் தான், அந்த தேவர்கள் மூலமாகவே, பலனைத் தருகின்றான்.

எந்த நிலையிலும் பெரிய பிராட்டியும் (மஹாலக்ஷ்மி) இவனுடன் கூடவே, இவன் திருமார்பில் இருக்கிறாள். அவளும் எம்பெருமானைப் போலவே எல்லையற்றவள். பெருமாளையும் பிராட்டியையும் தவிர மற்ற எல்லாரும் ஜீவகோடியைச் சேர்ந்தவர்கள் தாம்.

ஈச்வரனுடைய திருமேனியும் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று ஐந்து வகைப்படும். 1) பரம் - ஸ்ரீவைகுண்டத்தில் நித்யமாக எழுந்தருளி இருக்கும் நிலை. 2) வ்யூஹம் - வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அனிருத்தன் என்று சொல்லப்படும் நான்கு மூர்த்திகள். (இதன் விரிவு இங்கு தேவை இல்லை). 3) விபவம் -

பகவான் எடுக்கும் ராமன், க்ருஷ்ணன் போன்ற அவதாரங்கள். முக்கியமாக பத்து அவதாரங்கள் உண்டு. அவை தசாவதாரம் என்று சொல்லப்படும். அவை மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹன், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், க்ருஷ்ணன், கல்கி ஆகியவை. அவற்றைத் தவிர ஹயக்ரீவன், பத்மநாபன், ஹம்ஸம் போன்ற பலபல அவதாரங்களும் உண்டு. 4) அந்தர்யாமி - எல்லாருடைய ஹ்ருதயத்திலும் பகவான் ஸூக்ஷ்மமாய் இருக்கின்ற நிலை. 5) அர்ச்சை - திவ்யதேசங்களிலும் மற்றும் உள்ள இடங்களிலும் திருமேனியுடன் எழுந்தருளி இருக்கும் நிலை.

சரீர ஆத்ம பாவம்

நம் ஸித்தாந்தத்தின் மிக முக்கியமான கொள்கை சரீர ஆத்மபாவம் என்பது. அதாவது மேலே சொன்ன சேதனன், அசேதனம் என்ற இரண்டு தத்வங்களுக்கும் - அதாவது, எல்லா பொருள்களுக்கும்-எம்பெருமான் ஆத்மாவாய் இருக்கின்றான். எல்லாப் பொருள்களும் எம்பெருமானுக்குச் சரீரமே ஆகும். இந்தக் கொள்கை, பல பல உதாரணங்களைக் காட்டி, வேதங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே நம் ஸித்தாந்தத்தின் உயிர்நாடி எனலாம். இதைச் சற்று விவரிப்போம்.

எதை சரீரம் என்றும், எதை ஆத்மா என்றும் கொள்கிறோம்? 1) சரீரத்துக்கு ஆத்மா தான் ஆதாரம். ஆத்மா தான் சரீரத்தை தரிக்கிறது (தாங்குகிறது). ஆத்மா சரீரத்தில் இருக்கும் வரை தான் மனிதன் உயிருடன் இருக்கிறான். 2) ஆத்மா தான் சரீரத்தை ஏவுகிறது. ஜீவாத்மாவின் கட்டளைப் படிதான் சரீரம் இயங்குகிறது. சரீரம் ஆத்மாவால் ஏவப்படுகிறது. 3)ஆத்மாவுக்காகத்தான் அதன் பலனுக்காகத்தான், சரீரம் இயங்குகிறது. சரீரம் அசேதனம் ஆகையால் அதற்கென்று தனியாகப் பலன் கிடையாது. அதனால் ஆத்மாவுக்கு சரீரம் சேஷமாக (அடிமை, உடைமை) இருக்கிறது. இந்த மூன்றும் சரீரத்துக்கும் ஆத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தம்.

மேலே சொன்னபடி, அதே காரணங்களால், எம்பெருமான் சேதனன், அசேதனன் எல்லாவற்றுக்கும் ஆத்மாவாக இருக்கிறான். அவை எல்லாம் அவனுக்குச் சரீரமாக இருக்கின்றன.

அதனால் சேதன, அசேதனங்களுடன் கூடிய ஈச்வரன் ஒருவன் தான் இருக்கிறான். அவை அவனுக்குச் சரீரம். அவன் அவற்றுக்கு ஆத்மா. அதனால் தான் நம் மதம் விசிஷ்டாத்வைதம் என்று பெயர் பெற்றது.

ஹிதம்

மோக்ஷத்தை அடைவதற்காக நாம் செய்ய வேண்டிய உபாயம் ஹிதம் என்று சொல்லப்படும். இப்படி உபாயமாக இருப்பது பக்தியோகமும் ப்ரபத்தியும். ஆனால்

பக்தியோகம் அனுஷ்டிப்பதற்கு மிகவும் கடினம். அதற்கு பல நியமங்கள் உண்டு. அதனால் எல்லோரும் அனுஷ்டிக்கச் சுலபமானது ப்ரபத்திதான்.

ப்ரபத்தியானது பரந்யாஸம், பரஸமர்பணம், சரணாகதி, அத்ருஷ்டம் என்றும் சொல்லப்படுகிறது. ஓர் ஆசார்யனை அடைந்து நல்ல விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு மனப்பக்குவம் அடைந்து, ஆசார்யன் மூலமாக ப்ரபத்தி செய்து கொள்ள வேண்டும். பிறகு மனப்பக்குவம் அடைந்து, ஆசார்யன் மூலமாக ப்ரபத்தி செய்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு, மோக்ஷத்துக்காக நாம் செய்ய வேண்டிய கார்யம் ஒன்றும் இல்லை.

பஞ்ச ஸம்ஸ்காரம்

மேலே சொன்னபடி நல்ல வழியில் செல்ல விரும்புபவன் முதலில் ஓர் ஆசார்யனை அடையவேண்டும். ஆசார்யன் ஸம்ப்ரதாய விஷயங்களை சொல்லிக்கொடுப்பான். பிறகு ஸமாச்ரயணம் என்று சொல்லப்படும் பஞ்சஸம்காரத்தைச் செய்து கொள்ள வேண்டும். அப்போது ஆசார்யன் சங்க சக்ரங்களைச் சிஷ்யனுடைய தோள்களில் பொறிப்பான். இது வைஷ்ணவன் என்பதன் அடையாளம் ஆகும்.

ஒவ்வொரு வைஷ்ணவனும் பஞ்ச ஸமஸ்காரம் அவசியம் செய்து கொள்ள வேண்டும். பஞ்சஸம்ஸ்காரம் என்பது ஐந்து ஸமஸ்காரங்களை - அதாவது, செய்யவேண்டியவற்றை குறிக்கும். அவை:1)ஆசார்யன் பொறித்த சங்க சக்ரங்களைத் தோள்களில் தரித்தல் 2) பன்னிரண்டு திருமண்களை நெற்றியிலும் உடலிலும் தரித்தல் 3)ஆசார்யனால் சூட்டப்பட்ட பெயரை தரித்தல்; இது தாஸ்யநாமம் என்று சொல்லப்படுகிறது 4)ஆசாரியனிடமிருந்து மந்த்ரங்கள் உபதேசம் பெறுதல்.5) எம்பெருமானுக்கு திருவாராதனம் செய்வதற்கு உபதேசம் பெறுதல்.

பஞ்சஸம்காரத்தின் போது, மேலே குறிக்கப்பட்ட நான்காவதான மந்த்ரோபதேசத்தின் போது ஆசார்யன் முக்கியமான மூன்று மந்த்ரங்களை உபதேசிப்பார். அவை:1)திருமந்திரம் அல்லது அஷ்டாக்ஷரம் இதை மிக்க நியமத்துடன் ஜபம் செய்ய வேண்டும். 2) த்வயம் இது இரண்டு வ்யாக்யங்களால் ஆன மந்த்ரம் 3)சரமச்லோகம் - இது கண்ணன் அர்ஜுனனுக்குத் தேர்த்தட்டில் உபதேசித்த பகவத்கீதையில் உள்ளது. ப்ரபத்தியைச் செய்யும் படி விதிக்கின்ற மந்திரம் இது.

மந்த்ரங்களின் பொருள்.

இதில், முதலாவதான அஷ்டாக்ஷரத்தின் சுருக்கமான பொருள் பின்வருமாறு- ஸ்ரீமந் நாராயணன் எல்லையற்ற திருக் கல்யாண குணங்களை உடையவன். பெரிய பிராட்டியுடன் எப்பொழுதும் கூடி இருப்பவன். எல்லாவற்றையும் ரக்ஷிப்பவன். ஸகல வஸ்துக்களுக்கும் ஆதாரமாய் இருப்பவன். சேதன, அசேதனங்களுக்கு ஆத்மாவாய் இருப்பவன். சேதனர்களுக்கு அவனே உபாயமும் பலனும் ஆவான். ஜீவாத்மா அணுவாக

இருப்பவன். ஞானத்தை உடையவன். ஞானஸ்வரூபி. இவன் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் இயற்கையிலேயே அடிமையாக இருப்பவன். இப்படிப்பட்ட ஜீவாத்மாவாகிற அடியேன் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் எப்போதும் கைங்கர்யம் செய்து வருவேன்.

த்வயமநித்ரத்தின் சுருக்கமான பொருள் பின்வருமாறு- எப்போதும் பெரிய பிராட்டியின் (மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்திருக்கும் நாராயணன் திருவடிகளின் நான் ப்ரபத்தி செய்கின்றேன். இந்த ஜீவாத்மா என்னுடையது அல்ல. ஸ்ரீமந் நாராயணனுடைய சொத்து. இதைகாக்கும் பொறுப்பு அவனுடையது. எப்போதும் ஸ்ரீமந் நாராயணனுக்கே கைங்கர்யம் செய்து வருவேன். இப்படிக் கைங்கர்யம் செய்யத் தடையாக இருக்கும் தீய எண்ணங்களும், கர்மங்களும் அழியப் பெறுவேன்.

சரமச்லோகத்தின் சுருக்கமான பொருள்: கிருஷ்ணன் சொல்கிறான்: ப்ரப்பத்தியைத் தவிர மற்ற உபாயங்கள் உன்னால் அனுஷ்டிக்க முடியாதவை என்று அவற்றைக் கைவிட்டு விட்டாய். என்னே ஒருவனையே உபாயமாகக் கொள். என்னிடம் ப்ரபத்தி பண்ணு. நான் மகிழ்ந்து உனக்கு அருள் புரிவேன். உன் பாபகர்மங்களை எல்லாம், நீ முயற்சி செய்தாலும் உன்னால் அழிக்க முடியாது. அப்படிப்பட்ட உன் தீயகர்மாக்களை எல்லாம் நான் அழிப்பேன். உன் பாபங்களிலிருந்து உன்னை விடுவிப்பேன். எப்போதும் என்னை அனுபவித்து, எனக்கு கைங்கர்யம் செய்யும்படியான பாக்யத்தை உனக்கு கொடுப்பேன். நீ ஒன்றுக்கும் வருந்த வேண்டாம்.

இந்த மந்த்ரங்களின் விரிவான அர்த்தங்களை ஆசார்யனிடம் காலக்ஷேபம் செய்து, தெரிந்து கொள்ள வேண்டும். இந்த மூன்று மந்த்ரங்களையும், ஸமாச்ரயணத்தின் போது ஆசார்யன் உபதேசித்த பிறகு, தினந்தோறும் முடிந்தவரை ஜபம் செய்ய வேண்டும்.

க்ரந்த சதுஷ்டயம்

பஞ்ச ஸம்ஸ்காரத்துக்குப்பிறகு, ஆசார்யன் ஸந்நிதியில் சிஷ்யன் காலக்ஷேபம் செய்ய வேண்டிய க்ரந்தங்கள் முக்கியமாக நான்கு ஆகும். அவை: 1) ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமாக ராமானுஜர் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யம் 2) பகவத் கீதைக்கு வ்யாக்யானமாக ராமானுஜர் அருளிச்செய்த கீதா பாஷ்யம் 3) தேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யத்ரயஸாரம் 4) திருவாய்மொழிக்கு வ்யாக்யானமாக ராமானுஜரின் சிஷ்யரான திருக்குருகைப் பிரான் பிள்ளான் அருளிச்செய்த பகவத் விஷயம்.

இவற்றில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யத்ரயஸாரம் மேலே சொன்ன மூன்று மந்த்ரங்களின் அர்த்தங்களை விரிவாகக் கூறுகின்றது. மேலும் ஒவ்வொரு வைஷ்ணவனும் நம் ஸம்ப்ரதாயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய எல்லா விஷயங்களையும் விளக்கி கூறுகின்றது. அதனால், மேலே குறிப்பிட்ட நான்கு க்ரதங்களையும் காலக்ஷேபம் செய்ய அவகாசமோ, சக்தியோ, தகுதியோ இல்லாமற் போனாலும் ஸ்ரீரஹஸ்யத்ரய

ஸாரத்தையாவது அவசியம் காலக்ஷேபம் பண்ண வேண்டும். இந்த க்ரந்தத்தில் இல்லாதது, நாம் தெரிந்து கொள்ள வேண்டியது வேறு ஒன்றும் இல்லை.

ஆசார்ய மஹிமை

இப்படித்தன்னை நல்வழியில் செலுத்தும் ஆசார்யனை தெய்வத்துக்குச் சமமாக-தெய்வத்துக்கும் மேலாகவே-மதித்து நடக்க வேண்டும். ஆசார்யனுக்கு ஏதாவது பணம் ஸமர்பித்து விட்டதால், தான் ஆசார்யனுக்குப் பிரதி உபகாரம் செய்து விட்டதாகவோ, தன் கடமை முடிந்து விட்டதாகவோ நினைக்கக் கூடாது. தான் நல்வாழ்வு வாழ்வதே ஆசார்யன் அனுக்ரஹத்தால்தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். எம்பெருமானே ஆசார்யனுடைய உருவத்தில் வந்து நமக்கு உபதேசம் செய்ததாக மகிழ்ந்து, ஆசார்யனை மதிக்கவும் பூஜிக்கவும் வேண்டும். பகவானிடத்தில் பக்தி வைத்திருப்பது போலவே, ஆசார்யனிடமும் பக்தி வைக்கவேண்டும்.

ஆசார்யனுடைய பெருமைகளை எப்போதும் நினைத்துக்கொண்டும் புகழ்ந்து பேசிக்கொண்டும் இருக்க வேண்டும். தன் ஆசார்யன் செய்த உபகாரத்துக்கு ப்ரதி உபகாரம் ஒன்றுமே இல்லை என்று தெரிந்து கொள்ளவேண்டும். ஆசார்யன் பிறந்த நாளை (திருநக்ஷத்ரம்) விஷேமாகக் கொண்டாட வேண்டும்.

இப்படி பஞ்ச ஸம்ஸ்காரத்துக்குப் பிறகு ஆசார்யனிடம் மேலே குறிப்பிட்ட க்ரந்தங்களைக் காலக்ஷேபம் செய்ய வேண்டும். நல்ல ஞானமும் தெளிவும் பிறக்கும். ப்ரபத்தியும் பண்ணிக்கொள்ள வேண்டும்.

நாம் செய்யும் ப்ரபத்தியே நமக்கு நேராக மோக்ஷத்தைக் கொடுப்பதில்லை. அந்த ப்ரபத்தியினால் ப்ரீதி அடைந்த பகவான் தான் நமக்கு மோக்ஷத்தைக் கொடுக்கிறான். ஆக, நமக்கு மோக்ஷம் கிடைக்க காரணம், நாம் ப்ரபத்தியினால் ப்ரீதி அடையும் பகவான் தான். அதனால் எம்பெருமான் ஸித்தோபாயம் (ஸித்த உபாயம்) என்று சொல்லப்படுகிறான். ப்ரபத்தி ஸாத்யோபாயம் (ஸாத்யஉபாயம்) என்று சொல்லப்படுகிறது.

நாம ஸங்கீர்த்தனம்

பக்தியோகமோ, ப்ரபத்தியோ செய்பவனுக்குத்தான் மோக்ஷம் உண்டு என்று சாஸ்த்திரங்கள் தெளிவாகக் கூறுகின்றன. ஆனால் சாஸ்த்ரங்களிலேயே சில இடங்களில், எம்பெருமான் திருநாமத்தைச் சொன்னாலே மோக்ஷம் கிடைக்கும் என்கிறது. கங்கையிலோ, வேறு புண்ய நதிகளிலோ நீராடினாலே மோக்ஷம் கிடைக்கும் என்கிறது. பகவந்நாம ஸங்கீர்த்தனம் - பஜனை - செய்துவந்தாலே மோக்ஷம் கிடைக்கும் என்கிறது. ஸ்ரீரங்கம் போன்ற திவ்ய தேசங்களில் வாஸம் செய்தாலே மோக்ஷம் உண்டு என்கிறது.

இதன் பொருள் என்னவென்றால்-பகவந்நாம ஸங்கீர்த்தனம், புண்ய நதிகளில் நீராடுதல்,புண்ய க்ஷேத்ரவாஸம் முதலியவை ஒருவனுக்கு மனத்தெளிவையும் பரிசுத்ததையும் உண்டாக்கும். நல்ல எண்ணங்களை உண்டாக்கும். தீய எண்ணங்களை அழித்துவிடும். பிறகு படிப்படியாக நல்லறிவு பிறந்து, ஓர் ஆசார்யனை அடைவான். காலக்ஷேபம் செய்து, ப்ரபத்தியும் செய்து கொள்வான். அதனால் கடைசியில் மோக்ஷம் அடைவான்.

ஆக, நாமஸங்கீர்த்தனம், க்ஷேத்ரவாஸம் முதலியவை நேராக மோக்ஷம் கொடுக்காது. ஒருவனுக்கு ப்ரபத்தி செய்து கொள்ளும்படியான நல்லறிவைக் கொடுக்கும். பிறகு அவன் ப்ரபத்தி பண்ணி, இந்த சரீரத்தின் முடிவில் மோக்ஷத்தை அடைவான்.

விலக்க வேண்டியவை

ஒவ்வொரு வைஷ்ணவனும் முக்கியமாக விலக்க வேண்டியவை இரண்டு 1)பாகவத அபசாரம்.எம்பெருமானுடைய அடியார்கள் பாகவதர்கள்.அவர்களிடம் அபசாரப்படக்கூடாது. 2) தேவதாந்தர ஸம்பந்தம்-எம்பெருமானைத் தவிர மற்ற தேவதைகளை ஸேவிக்கக் கூடாது. மற்ற தேவதைகளின் கோயில்களுக்குப் போகக்கூடாது.

பாகவதர்கள் பெருமை

எம்பெருமானுடைய அடியவர்கள் பாகவதர்கள் என்று அழைக்கப்படுவார்கள். பகவானைச் சேர்ந்தவர்கள் பாகவதர்கள்.தனக்குக் கைங்கர்யம் செய்வதைவிடத்தன் அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்வதையே பகவான் மிக விரும்புகிறான். அதனால் பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்வது மிக முக்கியம். அதுவே பகவானுக்கு மிகவும் உகப்பாக இருக்கும். தவிர பாகவதர்களுக்கு மரியாதை செய்வதும், பணிவிடை செய்வதும் அவர்களுக்கு ஆத்மாவாக இருக்கும் எம்பெருமானுக்கும் கைங்கர்யம் செய்வதாக ஆகும்.

கைங்கர்யம் (பணிவிடை) செய்வது பகவத் கைங்கர்யம், பாகவத கைங்கர்யம், ஆசார்ய கைங்கர்யம் என்று மூன்று வகைப்படும். இந்த மூன்றிலும் ஆசார்ய கைங்கர்யமே ப்ரதானம். மூன்று கைங்கர்யங்களையும் செய்ய முடியாதபோது, ஆசார்ய கைங்கர்யத்தைத்தான் முதலில் செய்ய வேண்டும்; அதற்குபின் பாகவதர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும்.இவை எல்லாம் முடிந்தபின், எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்ய வேண்டும். இது தான் முறை.

அதனால், முன்பே சொன்னபடி, பாகவதர்களிடம் துளியும் அபசாரப்படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் எந்த வர்ணத்தில், எந்த நிலையில் இருந்தாலும், எம்பெருமான் அடியார்கள் என்று அவர்களிடத்தில் பெருமதிப்பு வைக்க வேண்டும். அவர்களுடைய குலத்தை எண்ணி, அவர்களை அவமதிக்கவோ, இகழவோ கூடாது.

அப்படிச்செய்வது மிகக் கொடிய பாபம். அப்படிப்பட்ட பாகவதர்களிடம் சாஸ்த்ரத்தில் கூறியபடி, பெருமதிப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

பாகவதர்கள் – மூன்று வகை

பாகவதர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1) வேறு தேவதைகளை ஸேவிக்காதவர்கள், வேறு தேவதைகளின் கோயில்களுக்குப் போகாதவர்கள்; ஆனால், தாங்கள் இந்த உலகத்தில் ஆசைப்படும் பலன்களுக்காக எம்பெருமானிடம் வேண்டிக்கொள்வார்கள்; இவர்கள் ஏகாந்திகள். 2) எம்பெருமானிடத்தில் மோக்ஷத்தைதவிர வேறு ஒன்றையும் வேண்டாதவர்கள் பரமைகாந்திகள். 3) அவர்களிலும், ப்ரபத்திபண்ணி, பிறகு மோக்ஷத்தைக்கூட வலிந்து வேண்டாமல், கைங்கர்யத்தைச்செய்து வருபவர்கள் பதினாறு மாற்றுத்தங்கத்தைப் போன்ற பரமைகாந்திகள்.

பாகவதர்களில் சிலர் குடும்பம் நடத்துவதற்காகத் தகாத வழியில் பொருளைத் தேடக் கூடும். ஸம்ஸார ஸாகரத்தில் அகப்பட்டு, காமம், கோபம் முதலிய கெட்ட குணங்கள் உடையவர்களாகவும் இருக்கக்கூடும். இருந்த போதிலும் அதற்காக அவர்களைத்தாழ்வாக நினைக்கக்கூடாது. அவர்களிடம் அபசாரப்படக்கூடாது; அவர்களும் பாகவதர்கள் என்று பெருமதிப்புடன் இருக்க வேண்டும். பகவானிடம் வைத்திருக்கும் அன்பினால், அவர்களும் காலக்ரமத்தில் நல்வழிக்குத் திரும்பி விடுவார்கள்.

ப்ரபன்னன் நடைமுறை

ஆக, பஞ்சஸம்ஸ்காரம், காலக்ஷேபம் இவற்றைச் செய்து, நல்லறிவு பிறந்து, ப்ரபத்தியும் செய்து கொண்டாயிற்று. அதற்குப்பின் ஒருவன் எப்படி இருக்கவேண்டும்?

தன் குலம், நிலைக்கு ஏற்றபடி, சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் கர்மாக்களை தினந்தோறும் தவறாமல் செய்து வரவேண்டும். ப்ரபத்தி செய்து கொண்டபிறகு, தினசரி கர்மாக்களைச் செய்ய வேண்டாம் என்று எண்ணுவது மிகத்தவறு. ப்ரபத்திக்குப்பலனாக மோக்ஷம் நிச்சயம் கிடைக்கும். ஆனால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மாக்கள் எம்பெருமானுடைய கட்டளை. அவற்றைச் செய்யாவிடில், எம்பெருமான் கட்டளையை மீறுவதாகும்; அதற்குரிய பகவானின் தண்டனை கிடைத்தே தீரும்; அதனால் கர்மாக்களை விடாமல் செய்துவரவேண்டும்.

ஒரு நல்ல இடத்தில் வஸிக்க வேண்டும். எம்பெருமான் அர்ச்சாரூபியாக எழுந்தருளி இருக்கும் திவ்ய தேசங்கள், பாகவதர்கள் வஸிக்கும் இடங்கள் முதலியன விசேஷம். உண்மையையே பேசவேண்டும். ஆனால் பிறர் மனம் புண்படும்படி பேசக்கூடாது. பிறர் தன்னை வைதாலோ, அவமதித்தாலோ, அதற்காக வருத்தபடக்கூடாது. அவர்கள்மேல் கோபப்படக்கூடாது. நல்லதோ, கெட்டதோ எது நடந்தாலும், பகவத் ஸங்கல்பம் என்று தெளிவுடன் இருக்க வேண்டும். ஸர்வேச்வரானான ஸ்ரீ மந்நாராயணன் தான் தெய்வம்;

மற்ற தேவதைகள் நம்மைப் போன்ற ஜீவராசிகள்தான் என்று தெளிந்து இருக்க வேண்டும். சாஸ்த்ரத்தால் விலக்கப்படாத உலக இன்பங்களை நியாயமான வழியில் அனுபவித்தல் தவறு இல்லை. ஆனால் உலக ஸுகங்களை அப்படி அனுபவிப்பதில் வெறி கூடாது. இன்பமும், செல்வமும் வந்தால் மிக்க மகிழ்ச்சி அடையாமல், எம்பெருமான் கருணையால் வந்தது என்று எம்பெருமானை நினைக்க வேண்டும். துக்கம் வந்தால் கலங்காமல், தைர்யத்துடன் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

தான் காலக்ஷேபம் செய்து நல்ல ஞானத்தை உடையவன் என்றோ, பணம் படைத்தவன் என்றோ கர்வம் கொள்ளக்கூடாது. அதேபோல் ஏழை என்பதற்காக பாகவதர்களையும் மற்றவர்களையும் தாழ்வாக நினைக்க கூடாது. அவர்களை அவமதிக்க கூடாது.

ஸகல ப்ராணிகளிடத்தும் தயையும், இரக்கமும், கருணையும் வேண்டும். ப்ராணிகளை ஹிம்ஸிக்ககூடாது. எல்லாப் பிராணிகளிடத்திலும், எல்லாவற்றிலும், எம்பெருமான் உள்ளே ஆத்மாவாக இருக்கிறான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வேதம், திவ்யப்ரபந்தம், ராமாயணம், பாகவதம் போன்றவற்றைத் தன்தகுதிக்கு ஏற்றபடி பாராயணம் செய்து அல்லது வாசித்து வரவேண்டும்.

ஸாத்விகமான ஆஹாரத்தையே உண்டு வரவேண்டும். சாஸ்த்ரத்தில் விலக்கப்பட்ட பொருளை உண்ணக்கூடாது. ஏகாதசி அன்று முடிந்தால் பட்டினி இருக்கலாம். முடியாவிட்டால் பலஹாரம், பழங்கள் முதலியன சாப்பிடலாம். ஆனால் ஏகாதசி அன்று அரிசி சோறு உண்ணக்கூடாது. உண்ணத்தகாத பொருள்கள் பற்றி ஸ்ரீதேசிகன் தமிழ்ப்ரபந்தமான ஆஹாரநியமத்தில் கூறுகின்றனர். அதன்படி நடக்கவேண்டும். ஸாத்விகமான ஆஹாரத்தை சாப்பிட்டு வந்தால் மனம் கெட்ட வழியில் போகாது.

அநியாயமாகப் பிறரை ஏமாற்றியும், வஞ்சனை செய்தும், பொருள் சம்பாதிக்கக் கூடாது. முடிந்தவரை ஆசார்யனுக்கும், பாகவதர்களுக்கும், பகவானுக்கும் கைங்கர்யம் செய்து வர வேண்டும். சாஸ்த்ர விரோதமான காரியங்களைச் செய்வதில் அருவருப்பும் பயமும் வேண்டும். த்வய மந்த்ரத்தை எப்போதும் மனதில் நினைத்துக் கொண்டு இருக்கவேண்டும்.

திவ்யதேசங்களில் திருக்கோயில்களைச் சுத்தம் செய்தல், பெருமாளுக்குச் சந்தனம், புஷ்பமாலை ஸமர்ப்பித்தல், திருவிளக்கு ஏற்றுதல் முதலிய கைங்கர்யங்களைச் செய்யலாம்.

ஸ்ரீ வைஷ்ணவர்களைக் கண்டால், புஷ்பம், சந்தனம், நிலாபோன்ற பிரியமான வஸ்துக்களைக் கண்டாற்போல, மகிழ்ந்து பழக வேண்டும். நாஸ்திகர்கள், நாராயணனை வெறுப்பார்கள், நாராயணனை மற்ற தேவதைகளோடு சமமாக நினைப்பவர்கள்- இவர்களைக் கண்டால் பாம்பு, நெருப்பு இவற்றைக் கண்டாற்போல பயந்து விலகிச் செல்ல வேண்டும். பகவானிடம் பக்தியோ, வெறுப்போ இல்லாமல் நடுநிலையில்

இருப்பவர்களைக் கண்டால், மரம், கல் துரும்பு இவற்றைப்போல எண்ணிப்புறக்கணிக்க வேண்டும்.

மேலே சொல்லப்பட்டவை எல்லாம் ஒவ்வொரு வைஷ்ணவனுமே அறிந்து நடக்க வேண்டியவை.

ப்ரபத்தியின் பெருமை

ஒருதரம் பிரபத்தியைச் செய்தவனுக்கு, அதே பலனுக்காக மறுபடியும் ப்ரபத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை; செய்யவும் கூடாது. ப்ரபத்தி செய்து கொண்டபிறகு ஒருவன் அறியாமல் செய்த பாபம் அவனிடம் ஒட்டாது. சந்தர்ப்பச்சூழ்நிலையால், தெரிந்தே பாபங்கள் செய்யும்படி நேரிட்டால், அதற்கு ப்ராயச்சித்தமாக ப்ரபத்தி செய்து கொள்ள வேண்டும்.

இப்படி தெரிந்தே செய்த பாபங்களுக்கு ப்ராயசித்தம் செய்து கொள்ளாவிட்டால் பகவான் அவற்றுக்காக இந்த உலகத்திலேயே தண்டனை கொடுத்து விடுகிறான். பாபம் செய்தவனுக்குக் கண் குருடாதல் கால் நொண்டியாதல், வியாதிகளால் கஷ்டப்படுதல்- இப்படி தண்டனை கொடுத்து விடுகிறான். எப்படியும் ப்ரபத்தி செய்து கொண்டவனுக்கு இந்த ஜன்மத்தின் முடிவில் மோக்ஷம் உண்டு என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ப்ரபத்தி செய்து கொண்டவனுக்கு உத்தராயணம், சுக்லபக்ஷம் பகல்-இந்த சமயத்தில்தான் மரணம் அடைய வேண்டும் என்ற நியதி இல்லை. அவன் எப்போது மரணம் அடைந்தாலும் மோக்ஷம் நிச்சயம்.

அர்ச்சிராதி மார்க்கம்

ஜீவாத்மா, மரணத்தின் போது, சரீரத்தில் இருந்து எப்படி வெளியேறுகிறது? முன் கூறின 5 ஞானேந்திரியங்களையும், 5 கர்மேந்திரியங்களையும் பகவான் மனத்தோடு சேர்க்கிறான். மனம் ப்ராணவாயுடன் சேர்கிறது. பிறகு ப்ராணன் ஜீவாத்மாவோடு சேர்கிறது இவை எல்லாவற்றோடும் சேர்ந்த ஜீவன், சரீரத்தில் உள்ள பஞ்ச பூதங்களின் ஸூக்ஷ்ம அம்சங்களோடு சேர்கிறது.

சரீரத்தில் 101 நாடிகள் உள்ளன. ப்ரபத்தி செய்த ஜீவாத்மா மோக்ஷத்தை அடைவதற்காக, ப்ரஹ்மநாடி என்று சொல்லப்படும் 101-ஆவது நாடிவழியாக மேலே செல்கிறது.

அந்த ஜீவாத்மாவை அக்னி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், வருஷம், வாயு இவற்றின் தேவதைகள், ஸூர்யன், சந்திரன், மின்னல் தேவதை, வருணன், இந்திரன், ப்ரஹ்மா ஆகியோர் வரவேற்று, வழி அனுப்புவார்கள். இது அர்ச்சிராதி மார்க்கம் எனப்படும்.

புருஷார்த்தம்

ப்ரபத்தி பண்ணின ஜீவாத்மா இப்படி அர்ச்சிராதி மார்கமாக விரஜை என்னும் அம்ருதமயமான நதியை அடைவான். அங்கு தன் ஸூக்ஷ்ம சரீரத்தை விட்டு விட்டு விரஜையைத் தாண்டுகிறான். பிறகு புதிதான திவ்யமான சரீரத்தை அடைகிறான். அங்கு உள்ள ஐரம்மதீயம் என்னும் தடாகத்தைக் கடக்கிறான். ஸோமஸவனம் என்னும் அரசமரத்தை அடைகிறான்.

அங்கு திவ்ய அப்ஸரஸ்கள் வாசனை திரவியம், மை, மாலை முதலிய வஸ்துக்களுடன் இவனை வரவேற்பார்கள். பிறகு அங்குள்ள நித்ய ஸூரிகள் முதலானோர் இவனை வரவேற்கின்றனர். எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் திவ்யமணி மண்டபத்தில் ஜீவாத்மா புகுகிறான். அங்கு ஆதிசேஷன் மீது ஸ்ரீதேவி, பூமிதேவி, நீளாதேவி ஆகியநாச்சிமாருடன் எழுந்தருளி இருக்கிறான் நாராயணன். அவனைக் கண்டு ஸேவித்து மகிழ்கிறான் ஜீவாத்மா. எல்லாக் காலங்களிலும் எல்லாவித கைங்கர்யங்களையும் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் செய்து கொண்டு, மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி நிற்பான் ஜீவாத்மா. இதுவே மிக உயர்ந்த புருஷார்த்தம்.

மேலே சொன்னவற்றையெல்லாம் வேதம் விரிவாகச் சொல்கின்றது.

முடிவுரை

நம் ஸம்ப்ரதாய விஷயங்களும், ஒரு வைஷ்ணவன் நடந்து கொள்ள வேண்டிய முறையும், மேலே மிகமிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இதைப்படித்து, மேலும் நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாக வேண்டும். பாக்யவசத்தால் நாம் வைஷ்ணவ குலத்தில் பிறந்திருக்கின்றோம்.

மனத்தைக் கண்டபடி அலையவிடக்கூடாது. நம் நிலைக்குத் தகுந்தபடி, சாஸ்த்ரத்தில் கூறியுள்ளபடி நடக்க முயற்சி செய்ய வேண்டும். பஞ்சஸம்ஸ்காரம் (ஸமாச்ரயணம்) ஆசார்யனிடம் செய்து கொள்ள வேண்டும். காலக்ஷேபம் செய்ய வேண்டும். ப்ரபத்தி பண்ணிக் கொள்ள வேண்டும். த்வயமந்த்ரத்தை எப்போதும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். எம்பெருமான் திருவடிகளையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

சுபம்

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஸ்சித் யததி ஸித்தயே
யததாமபி ஸித்தாநாம் கஸ்சிந் மாம் வேத்தி தத்வத:

ஸ்ரீ :





ஸ்ரீமத் காடந்தேத்தி ஆண்டவன்
ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமத்ராமாயணஸாரம்

(ஸ்ரீமதுபயவே வித்வான்
பெருக்காரணை சக்ரவர்த்தியாச்சாரியர் ஸ்வாமி)

ப்ரக்ருதம் ஸ்ரீ ஆண்டவன் ஸ்வாமி சிறந்தவைராக்யநிதியாக எழுந்தருளியிருக்கிறார். குடும்பத்தில் பூர்வாச்ரமத்தில் பல தொல்லைகள் இருந்த போதிலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் ஆச்ரமத்தை நிர்வகிக்க வேண்டும் என்ற ஒரே கருத்துடன் திருவாதிரையில் அவதரித்த யதிராஜனைப் போல் வேத வேதாந்தார்த்தங்களை உலகுக்கு உபதேசிக்கவேண்டும் எனத் திருவுள்ளம் கொண்டு அதே நக்ஷத்ரத்தில் அவதரித்த இந்த ஸ்வாமியும் ஆச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு விளங்குகின்றார்.

ஸ்ரீரங்கத்தில் சிரகாலவாஸம் செய்த ராமானுஜனின் திருநாமத்தையும் பெற்று விளங்குகிறார். ஸ்ரீஸ்வாமி தேசிகனுடைய தர்சனத்தை ஸ்தாபித்துக்கொண்டு எழுந்தருளியுள்ளபடியால் தேசிகன் எனத்திருநாமத்தையும் அடைந்து திகழ்கிறார். சென்னை பெங்களூர் மற்றும் பல நகரங்களுக்கும் க்ராமங்களுக்கும் பாதயாத்திரையாகவே தனது திருமேனி ச்ரமத்தையும் பாராமல் ஸஞ்சாரம் செய்து ஆங்காங்கு சிஷ்யர்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் பாந்யாஸம் முதலியவைகளை செய்து வைத்து அவர்களை உஜ்ஜீவிக்கச் செய்துள்ளார். திருமேனிக்கு ச்ரமம் ஏற்படாத வகையில் இக்காலத்தில் சில சௌகர்யங்களைச் செய்து கொள்ள வசதியிருந்த போதிலும் அதையும், லோகஜனங்களை அநுஸரித்து இப்படித்தான் இருக்கவேண்டும் என்று சிஷ்யர்கள் சொல்வதையும் உபேக்ஷித்து சாஸ்த்ரார்ததத்திலேயே ஏகமனஸ்காராய் ப்ராசீனமான மானஸன்மார்கத்தை அநுசரித்து நடப்பதும் மிகவும் வியக்கத்தக்கது.

பங்குனி மாதம் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்வாமி திருநக்ஷத்ர தினத்தில் அந்தஸ்வாமி போலவே இந்த ஆண்டவனும் வித்வத்பக்ஷபாதத்துடன் ஸபையை நன்கு நடத்தி ஸன்னிஹிதர் அஸந்நிஹிதர் அந்நியர் என்றும் வேண்டியவர் வேண்டாதவர் என்றும் வேறுபாடு பாராமல் அவிசேஷேண எல்லா வித்வான்களுக்கும் விசேஷ முறையில் ஸம்பாவனை செய்து ஸந்துஷ்டராவதும் போற்றதக்கது.

ப்ரக்ருதம் அநுஸராம்: இப்பொழுது காணப்படும் ஸ்ரீமத் ராமாயணம் வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டது. இதுதான் ஆதிகாவ்யம். இது ஏழுகாண்டத்துடன் 24000 ச்லோகங்கள் கூடியது. ததா ஸர்கஸதாந் பஞ்ச ஷட் காண்டாநி ததோத்தரம் என்பதை

அநுஸரித்து ஸர்கங்களின் எண்ணிக்கையை அறியவேண்டும். பஞ்ச சதாநி 500 மறுபடியும் பஞ்ச ஷட் என்பதை பெருக்கிக்கொள்ளவேண்டும். மொத்தம் 530, ஸ்ரீகோசத்தில் ஸர்கத்தைக் கணக்கிட்டுப் போடுகிறவர்கள் 535 என்று குறித்துள்ளனர். மறுபடியும் ஷட் பஞ்ச என்பதை சேர்த்து கணக்கிடவேண்டும். உத்தரகாண்ட ஸர்கத்தையும் சேர்த்தால் 635 ஸர்கங்கள் ஆகின்றன.

''சரிதம் ரகுநாதஸ்ய ஶதகோடிப்ரவிஸ்தரம்
ஏகைகமக்ஷரம் ப்ரோகதம் மஹாபாதக நாஶநம்

என்று ப்ரஹ்மாவால் நூறுகோடி விஸ்தாரமுள்ள ராமாயணம் இயற்றப்பட்டதாம். ப்ரஹ்மா தன் குமாரரான நாரத முனிவருக்கு பூர்ணமாக உபதேசம் செய்யாமல் இருப்பது நான்காயிரம் க்ரந்தங்கள் அடங்கியதாக சுருக்கி உபதேசம் செய்தார். அது தான் நமக்கு இப்பொழுது கிடைத்துள்ளது. ப்ரஹ்மாவின் ராமாயணத்தில் உள்ள பல விஷயங்கள் இதில் இல்லை. உதாரணமாக இராவணன் ப்ரஹ்ம தேவரைக் குறித்து தவம் புரிகிறான் ப்ரஹ்மா ப்ரஸன்னராகி. இந்த அரக்கனுக்கு விரும்பிய வரத்தைக் கொடுத்து விடுவாரே என்று நாராயணன் கலங்கிறான். ஏனெனில் முன்பு ஹிரண்யகசிபு தவம் புரிந்து அபிமதவரத்தை ப்ரஹ்மதேவரிடமிருந்து பெற்றான். அவனை ஸம்ஹரிக்க பலவிதமான சிரமங்களை ஏற்கவேண்டியதான நிலை ஏற்பட்டுவிட்டது. அதுபோல் ராவணன் விஷயத்திலும் ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணினார் போலும். ஆகையால் ராவணனுக்கு வரம் கொடுப்பதற்கு முன்பே ப்ரஹ்ம தேவருடைய மடியில் குழந்தையாக இருந்து, இப்போது தவம் செய்பவன் பத்துத்தலையுள்ள இராவணன். நம்மை ஏமாற்றுவதற்காக ஒருதலையுடன் வந்து தவம் புரிகிறான். நீர் ஏமாற வேண்டாம் என்று அவரை எச்சரிக்கும் வகையில் கால் விரல்களை எண்ணிக்காட்டினார். இதை ஆழ்வார்கள் தங்களுடைய பாசுரங்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

'கொண்டு குடங்கால் மேல் வைத்த குழவியாய்
தண்டவரக்கன் தலைதாளால், பண்டெண்ணி

என்றார் திருமழிசையாழ்வார், பொய்கையாழ்வாரும்-

''ஆமே அமரராக்கிய அது நிற்க
நாமே அறிகிற்போம் நன்நெஞ்சே-பூமேய-
மாதவத்தோன் தாள் பணிந்தவாளரக்கன் நீண்முடியை
பாதமத்தால் எண்ணினான் பண்பு. என்றார்.

இவ்விஷயம் வால்மீகி ராமாயணத்தில் இல்லை. வால்மீகிக்கு இது விஷயம் தெரியாததாலால் இதை அவர் குறிப்பிடவில்லை. நாரதரும் இவ்விஷயத்தை உபதேசிக்கவில்லை. நாரதர் தானும் இதை அறியார். தனக்குத் தெரிந்தாலன்றே பிறர்க்கு உபதேசிக்க முடியும். சட்டியில் இருந்தால் தானே ஆப்பையில் வரும். இப்படி அனைவிஷயத்திலும் கண்டுகொள்ளலாம்.

இந்த ராமாயணம், ஸகலபுராணங்கள் மஹாபாரதம் இவற்றைக்காட்டிலும் மேம்பட்டது. புராணங்களில் விஷ்ணு புராணம் உயர்ந்தது என்பதில் யாருக்கும் விப்ரதிபத்தியில்லை. புராணரத்னம் என்றே அதைச்சொல்வர். சீடரான மைத்ரேயர் குருவான பராசரரைப் பார்த்து மஹாவிஷ்ணுவின் பெருமையைச் சொல்லு என்று விஷ்ணுவைப் பற்றியே கேட்காமல் ஸாமாந்யமாக உயர்ந்தவன் யார் உலகத்துக்குக் காரணம் யார் என்று ஸாமாந்யமாகவே ப்ரச்நத்தை வினவினார். பராசரரோ விஷ்ணு தான் காரணம் அவன் தான் மஹான் என்று பதில் அளித்தார். ஆக இதற்கு ஏற்றம் ஏற்பட்டது. விஷ்ணுவைப் பற்றிச் சொல் என்று கேட்டு அவரைப் பெருமைப்படுத்திப் பேசிஞல் அப்படிச் சொல்லும் புராணத்துக்கு அதிக பெருமை இராது, ஏற்படவும் வாய்ப்பு இல்லை. லிங்கபுராணம் முதலியபுராணங்களில் லிங்கமஹிமையைச்சொல்லு, ஸ்கந்தனின் மஹிமையைச் சொல் என்று கேள்வியும் அதற்கு தக்கவாறு பதிலும் உள்ளபடியால் அவைகளுக்கு ஏற்றமில்லை. கேட்பவர்களின் அபிப்ராயப்படியே பதில் கூறவேண்டியது அவசியமானபடியால் அவர்களுடைய மஹிமையே சொல்ல ப்ராப்தமாயிற்று.

மூலப்பொருள் யாது என்று கேட்க பராசரர் சிவனேயோ கந்தனேயோ மூலப்பொருள் என்று கூறாமல் விஷ்ணுவே மூலப்பொருள் என்பது வெளிப்படையாகிறது. ஸாமாந்யத்தில் கேள்வி விசேஷத்தில் பதில் விஷ்ணு புராணத்தில். மற்ற புராணத்தில் விசேஷப்ரச்னம். விசேஷத்தில் பதில். ஸ்கந்தருடைய மஹிமையைச்சொல் என்று கேட்கப்படும் போது கேட்பவர் த்ருப்தியுறும் வகையில் ஸ்கந்தரைத்தானே ஏற்றிச்சொல்லவேண்டும். இந்நிலையில் ஸ்கந்தர் உண்மையிலேயே உயர்ந்தவரா, அவரைவிட உயர்ந்தவர் இருக்கிறாரா? இல்லையா? என்பது தெரியவராது. ஆனால் உயர்ந்த மூலப்பொருள் உண்மையிலேயே எது? என்று கேட்க்கப்படும் போது அளிக்கப்படும் பதில் உண்மையிலேயே உயர்ந்த மூலப்பொருளைப் பற்றியதாகத்தானே இருக்க வேண்டும். ஆக விஷ்ணு புராணம் மற்ற எல்லா புராணங்களைக் காட்டிலும் உயர்ந்ததே என்பது ஸுவ்யக்தம்.

இப்படியே ராமாயணத்திலும் என்று ராமனின் பெருமையைச் சொல் என்று விசேஷ முறையில் வால்மீகி கேட்கவில்லை. உயர்ந்த சிலகுணங்களை எடுத்துக்காட்டி இத்த கையநற்குணங்கள் பெற்ற உத்தம புருஷர் யார் என்று ஸாமாந்யமாகக்கேட்டார். நாரதரும் விசேஷமுறையில் ராமன் தான்(தசரதசக்வர்த்தியின் திருக்குமாரர் தான்)என்று பதில் அளித்தார். இவ்வாறு நாரதர் ஸங்க்ஷேபமாகச்சொன்னதை மனதில் வைத்துக்

கொண்டு வால்மீகி24000 க்ரந்தம் கொண்டதாக ராமாயணத்தைச் சொல்லிமுடித்தார். இக்காவ்யத்தில் பல இடங்களில், விச்வாமித்திரர், ஸுமித்ரை, சூர்ப்பணகை தாரை மண்டோதரி அகம்பனன் ராவணன் ப்ரஹமா சிவன் முதலியவர்களின் வாயிலாக ஸ்ரீமான் நாராயணன் தான் பரதத்வம் அவன்தான் ராமனுகப் பிறந்தான் என்பது நிலைநாட்டப்பட்டது.

ஸ்ரீ விஷ்ணோ: ப்ரதமே காண்டே ஜகஜ்ஜனன ஹேதுதா
த்விதீயே ஸ்திதிஹேதுத்வம் த்ருதீயே மோக்ஷதாயிதா
சதுர்த்தே குணஸம்பத்தி: பஞ்சமே ஸர்வஹந்த்ருதா
ஷஷ்டே வேதாந்த வேத்யத்வம் ஸப்தமே ஸ்ரஷ்ட்ருஹேதுதா
ஏவம் விஷ்ணோ: பரம் தத்வம் ஆத்மாத்மேதி ஸுநிஸ்சிதம்

என்று ஒவ்வொரு காண்டத்திலும் ஏற்பட்ட அர்த்தம் மூலமாக விஷ்ணு தான் பரதெய்வம் என்பது காட்டப்பட்டது. தோஷமற்றவனும் குணங்கள் நிறையப் பெற்றவனும் எவனோ அவன் தான் பரப்ரஹ்மம். ஹேயப்ரத்யனீகன் கல்யாணைகதானன். இவை இரண்டையும் உபயலிங்கம் என்று சொல்வது வழக்கம். ராமாயணத்தில் ராமன் தான் இப்படிப்பட்டவன் என்பது பல இடங்களில் காட்டப்பட்டுள்ளது. கம்பரும், இராமனை ''எண்அரும் குணத்தின் அவன்'' என்று குறிப்பிடுகின்றார்'' இப்படிப்பட்ட ராமனுலே பரிபாலனம் செய்யப்பட்ட அயோத்தியில் ஏற்படும் வாழ்க்கை, சுவர்கம் மோக்ஷம் முதலிய லோகங்களிலும் கிட்டா புண்ணியம் செய்து ஸ்வர்கம் மோக்ஷம் முதலிய லோகங்களில் வாழ்பவர்கள் கூட ராமராஜ்யமான அயோத்தியில் வந்து வாழ வேண்டும் என்று ஆசைப்படு கின்றனராம் என்று கம்பன் கூறுகிறார்-

எவ்வுலகத்தோர் யாவரும், தவம் செய்து ஏறுவான் ஆதரிக்கின்ற
அவ்வுலகத்தோர் இழிவதற்கு அருத்தி புரிகின்றது-அயோத்தி மாநகரம்

என்று மேலும் ராமாயண கதை பாகவதத்திலும் பாரதத்திலும் ஸ்காந்தம் பாத்மம் முதலிய புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. பிறருடைய பெறுமையைக் கூற வந்த புரணங்களிலும் ராமாயணத்தின் மஹிமையையும், அதைப் படித்தால் உண்டாகும் பயன் முதலியவையும் பரக்கப்பேசப்பட்டிருப்பது என்றால் இதனுடைய பெருமை ஏற்றம் வாக்குக்கும் எட்டாதது என்று ஏற்படவில்லையா. இதெல்லாம் நினைத்து தான் ராமானுசர் தனது ஆசார்யனிடத்தில் பலதடவை ராமயணத்தைக் கேட்டார்.

''படிகொண்ட கீர்த்தி இராமாயணமென்னும் பக்திவெள்ளம்
குடிகொண்ட கோயிலில் ராமானுசன். என்றார் அமுதனார்.

வேதவேத்யனை பரமாத்மா ராமனுகப்பிறந்ததும் வேதமும் ராமாயணமாகப் பிறந்ததாம். வேதம் பர தத்வத்தை வெளியிடுகிறது. ராமாயணமும் அவ்வாறே. பாரத: பஞ்சமோவேத: என்று இதிஹாஸங்களில் ஒன்றான பாரதத்தை ஐந்தாவது வேதமாகக் கூறுவது மரபு. ஸ்ரீ ராமாயணத்தையோ என்றால் நான்கு வேதங்களாகவே கூறுகின்றனர்.

புண்யம் வேதைஸ்ச ஸம்மிதம் என்று நான்கு வேதங்களுக்கும் இது ஸமானமானது. நான்கு வேதங்களுக்கு உள்ள பெருமை இந்த ராமாயணம் ஒன்றுக்கே உள்ளதாம். இது மாத்திரமல்ல, நான்கு வேதங்கள், ஐந்தாவது வேதமான பாரதம் இவ்வைந்தையும் சேர்த்துதான் ராமாயணத்துக்கு ஒப்பிடலாம். இவ்வைந்துக்கும் உள்ள பெருமை இது ஒன்றுக்கே உண்டு. ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் அதர்வணவேதம் என்று வேதங்கள் நான்கு. இந்த வேதம் தான் ராமாயணமாயிற்று என்பதற்கு 'ராமாயணம்' என்ற பெயரே சான்றாகும். ருக்வேதம் என்பதில் ரு என்றுள்ளது. அதைத்தான் மாற்றி ''ரா'' என்றார். ஸாம வேதம் என்ற சொல்லில் உள்ள 'ம' என்பது தான் 'மா' என ஆயிற்று. யஜுர்வேதத்தில் உள்ள 'ய' என்பதைச் சேர்த்தார். அப்படியே அதர்வணவேதத்தில் உள்ள ண என்ற எழுத்தை சேர்த்தார் எனவே ''ராமாயணம்'' எனப்பெயரிட்டார்.

இவ்வாறு மேன்மை பொருந்திய ராமாயணத்தில் ஸாரமானது சரணாகதிதான். ஒவ்வொரு காண்டத்தில் இந்த சரணாகதி கூறப்பட்டுள்ளது. அஞ்சலி: பரமா முத்ரா என்று சொல்லப்படும் முத்திரையோடு இது கூடியதால் ''ஸமுத்திரம் என்றும் இதைச் சொல்வது'' ஸமுத்ரமிவ கம்பீரம் ஸர்வ ச்ருதி மநோஹரம் என்றார் வால்மீகி. சரணாகதி ஒவ்வொரு காண்டத்திலும் சொல்லப்பட்டுள்ளது என்பது மாத்திரமல்ல. ஒவ்வொரு ஸர்கத்திலும் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதத்திலும் சொல்லப்பட்டுள்ளது என்று சொல்லலாம். ரசித்துப்பார்த்தவர்களுக்கு இதன் பெருமை நன்கு விளங்கும். ஆக இதை சரணாகதிஸாரம் தீர்க்கசரணாகதி என்று பெரியோர் பணிப்பர்.

முதலில் தேவசரணாகதி. இதில் பகவானிடத்தில் சரணாகதி செய்வதற்கு தேசகால நியமம் தேவையில்லை என காட்டப்பட்டது. பிறகு த்ரிசங்குவின் சரணாகதி. இது இங்கு முக்கியமானது. லக்ஷ்மணன் ஆதிசேஷனின் அவதாரம். எல்லாம் பகவானுக்கு சேஷமாக இருந்த போதிலும் ஆதிசேஷனுக்கே சேஷன் என்ற திருநாமம் அமைந்ததற்குக் காரணம் யாது என்று நோக்க வேண்டும். ஸகல ஸமயங்களிலும் ஸகல தேசங்களிலும் ஸர்வ அவஸ்தைகளிலும் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதையே ப்ரதானமாகக் கொண்டவன் ஆனபடியால் அத்திருநாமம் உண்டாயிற்று. சேஷன் என்றால் அடிமைப்பட்டவன். தனது அடிமைத் தன்மையை நன்கு உணர்ந்தவன். சேஷத்வாத்யவ ஸாயமுள்ளவன் எவனே அவன் தான் பகவானுக்கு அடிமை செய்யமுடியும். பகவானைப்பற்றினவன் அடிமை செய்ய முன்பு அவன்

திருவடிகளில் சரணாகதி செய்திருக்க வேண்டும். அந்த சரணாகதியைத் தான் செய்தது மட்டுமின்றி பிறர்க்கு உபதேசிக்க ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதரித்தான். சரணாகதியை சாஸ்த்ரங்கள் கூறும் வகையில் ஒரு விதமான குறையுமின்றி இங்கு இவன் கூறியுள்ளான்.

காட்டுக்கு ராமனுடன் சீதையும் செல்கிறாள். லக்ஷ்மணனும் செல்கிறான். இரண்டுபேருக்கும் காடு செல்லுதல் ஸமானமாக இருந்தபோதிலும் சீதையைக் காட்டிலும் லக்ஷ்மணனுக்கு விசேஷமுண்டு. ஸீதாபிராட்டி சரணாகதி சாஸ்த்ரார்த்தத்தை காட்டவில்லையே. ராமன் காட்டுக்குச் செல்கிறேன் என்று சொன்னதும் அவனுடைய திருவடிகளைப் பிடித்துக் கொண்டு என்னையும் அழைத்துப் போக வேண்டும் என ப்ரார்த்திக்கவில்லை. ப்ராதாவான ராமனை வைதன்றே காட்டுக்குச் செல்லுமாறு பிடிவாதம் செய்தாள். கணவனிடத்தில் வாஸல்யம் பெற்றவளானபடியால் அவ்வாறு ஸ்த்ரீஸ்வபாவத்தை ஓட்டி நடந்து கொண்டாள். சேஷனின் அவதாரமான லக்ஷ்மணன் தனது சேஷத்வத்தை மனதில் உறுதி கொண்டு ராமனின் திருவடிகளைப்பற்றி ப்ரார்த்தித்தான். ஆக இவனுக்கு ஏற்றமுண்டு.

ராமாநுஜதர்சனம் என்று நம் ஸித்தாந்தத்துக்குப் பெயர். இம்மதத்தை நாதமுனிகள் முதலிலேயே காட்டியுள்ளார். ஆளவந்தாராலும் வளர்ச்சியும் பெற்றது இம்மதம். அப்படியிருக்க நாதமுனிதர்சனம் அல்லது யாமுன தர்சனம் என்று பெயர் பெறவில்லை. ராமாநுஜதர்சனம் என்றே அன்று முதல் இதுவரை விளங்கிவருகிறது. ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதரித்தான். இவனல்லவே சரணாகதி சாஸ்த்ரத்தை வெளிப்படுத்தியது. ஆக இவனது அவதாரமான ராமாநுஜன் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர் ஆனபடியால் ராமாநுஜதர்சனம் எனப்பெயர் விளங்கிற்று.

கைகேயியின் அரண்மனையிலேயே ராமன் காட்டுக்குப் போவது நிச்சயமாகி விட்டது. ஒருக்ஷணமும் ராமனின் பிரிவைத்தாங்க முடியாத லக்ஷ்மணன் அப்பொழுதே 'ராமன் காட்டுக்குச் சென்றால் நான் எப்படித் தனியாக இருப்பது என்று கலங்கி அவன் திருவடிகளைப்பற்றி சரணாகதி செய்திருக்கவேண்டும். அதில்லாமல் ஸீதையையும் அழைத்துச்செல்வது ஊர்ஜிதமான பிறகு சரணாகதி செய்கிறான். இதற்குக் காரணம் சரணாகதி சாஸ்த்ரத்தை அவன் நன்கு அறிந்திருந்தது. லக்ஷ்மியின் சேர்க்கை இல்லாத ஸமயம் சரணாகதி செய்வது சாஸ்த்திரவிருத்தம். கேவலன் பகவான் மாத்ரம் உபாயமாக மாட்டான். லக்ஷ்மியுடன் கூடிய பகவானையே சரணமடைய வேண்டும். சரணாகதி மந்த்ரம் என்று சொல்லக்கூடிய த்வயமந்திரத்தில் ஸ்ரீமந்நாராயணசரணௌ என்று தானே அமைந்துள்ளது. வேதாந்ததேசிகனும் ''உத்தேச்யத்வம் ஜனனி பஜதோ: ஆவந்நார்த்தி ப்ரசமநவிதௌ கமலா நிரபாய தர்மபத்நீ என்றெல்லாம் இவ்வர்த்தத்தைப் பரக்கப் பேசியுள்ளார். 'அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறை மார்பா என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்துள்ளார். பகவானிடத்தில் சரணாகதி செய்யும்போது பிராட்டியின் சேர்க்கை அவச்யம் வேண்டும் என்று

ப்ரமாணங்கள் கூறுகின்றன அதையொட்டிதான் லக்ஷ்மணனும் பிராட்டி சேர்ந்த பிறகு சரணாகதி செய்தான். ஸ்ரீ மந் நாராயண சரணௌ என்ற மந்திரத்தில் ஸ்ரீ சப்தமும் மதுப்பிம் சொல்லப்பட்டுள்ளது. அந்த த்வயம் என்னும் மந்திரரத்னத்தின் பொருளை விளக்க வந்தது. அகலகில்லேன் என்கிற பாசுரம் அங்கு ஸ்ரீ என்கிற சொல்லின் பொருளை ஆராய்ந்தால் அவள் புருஷகாரமாகும் தன்மை ஏற்படுகிறது. மதுப் அவள் உபாயமாகும் தன்மையை அறிவிக்கிறது. புருஷகாரமாக இருப்பவர் புருஷகார மானத்தாக அவரது நித்யயோகம் வேண்டும். என்பதில்லை. தனிமையான நிலையிலும் புருஷகாரம் ப்ரார்த்திக்கப்படலாம். பிறகு புருஷகாரமாக இருப்பவர் ஏகாந்தத்தில் பலம் கொடுப்பவரிடம் சிபார்சும் செய்யலாம் ஆக நித்திய யோகம் சொன்னது அவளும் உபாயம் ஆகிறார் என்பதற்காக என்றே சொல்லவேண்டும். பாட்டிலும் அலர்மேல்மங்கை என்பதால் புருஷகாரத்வம் அகலகில்லேன் இறையும் என்பதால் நித்யயோகமும் அதன் பலனாக உபாயத்வமும் சொல்லப்படுகிறது.

மேலும் ஸ்ரீ சப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் கூறப்படுகிறபடியால் அதில் பாபங்களைப் போக்கடிப்பது க்ஷேமங்களை கொடுப்பதும் என்பதும் பொருளானபடியால் மோக்ஷப்ரதத்வம் வ்யக்தமாகிறது. இதனால் உபாயத்வம் ஸ்பஷ்டம். அலேயா மம ச சேஷம் ஹி விபூதிரூபயாத்மிகா என்று ப்ரமாணத்தில் உபயவிபூதியும் எம்பெருமானுக்கும் லக்ஷ்மிக்கும் சொத்து (செல்வம்) என்று சொல்லுகிறபடியால் அதற்கு யஜமானர்களிடத்தில் அதை அடைய விரும்புகிறவர்கள் ப்ரார்த்திக்க வேண்டுமாகையால் இருவரிடத்திலுமே அபேக்ஷிக்க வேண்டுவது அவசியம். ஆக அவன் போல் இவளும் உபாயம். இதை அநுசரித்துதான் லக்ஷ்மணன் இருவருடைய சேர்த்தியிலும் சரணாகதி செய்ய வேண்டுமென்றெண்ணி பிராட்டி சேர்ந்த பிறகு சரணாகதி செய்தான்.

சித்ரகூடத்தில் இராமன் எழுந்தருளியிருந்தபோது இராமனை அழைத்துவர வேண்டுமென்ற எண்ணத்துடன் பரதன் சித்ரகூடம் வரும்போது அதைக் கண்ட இலக்ஷ்மணன் சீறி விழுந்து இராமனிடம் இலக்ஷ்மணன் கூறுகிறான். தசரதனுடைய ஏவலால் அயோத்தியை ஆள்வதாக இருக்கும் பரதன் இப்போது என் ஏவலால் நரகத்தை ஆள்வான் என்று

ஒருமகன் காதலின் உவகை நோய் செய்த
பெருமகன் ஏவலின் பரதன் தான் பெரும்
இரு நிலம் ஆள்கைவிட்டு இன்று என் ஏவலால்
அருநரகு ஆள்வது காண்டி ஆழியாய். என்றான்.

இதைக்கேட்ட இராமன் இலக்ஷ்மணனைப் பார்த்து நீ காரணமின்றி பரதன் மேல் வேறு விதமாக நினைக்கிறாய். உயர்ந்ததும் பெரியதுமான தனுஸை எடுத்து போருக்கு

தானே நேரில் வரும் பரதனோடு நாம் போர் புரிந்து வென்றுவிட முடியுமா? நமது கத்தி வில் கேடயம் இவை பரதனிடம் என்ன செய்யமுடியும்? இங்கு ராமாயண ச்லோகம்

மஹேஷ்வாஸே மஹாப்ராக்ஞே பரதே ஸ்வயம் ஆகதே
கிமத்ர தநுஷா கார்யம் அஸிநா வா ஸசர்மணா

என்பது பெரிய வில்லாளி மஹாப்ராக்ஞன் என்று பரதனை இராமன் சுட்டிக் காட்டுகிறான். இதன் கருத்தை ஆராய்வோம்.

பரதன் மஹாவிச்வாஸத்தோடு வந்துள்ளான். விபீஷணோ மஹாப்ராக்ஞ: என்ற இடம் போல் இங்கும் பொருள் கொள்ளவேண்டும். மஹாவிச்வாஸம் ப்ரபத்திக்கு முக்கியமான அங்கம். மஹோஷ்வாஸே என்னும் பதம்? உயர்ந்த வில்லை அதாவது தனுஸ்ஸை உடையவன் என்பதைக்குறிக்கிறது. தனுஸ் என்பது ப்ரணவம்.

ப்ரணவோ தநு: சரோஹ்யாத்மா
ப்ரம்ஹ தல்லக்ஷ்யமுச்யதே
அப்ரமத்தேந வேத்தவ்யம்
சரவத் தந்மயோ ஹி ஸ:

என்பதைக் கவனிக்கவும். அகர உகார மகாரம் என முன்று எழுத்துடன் கூடிய ப்ரணவம் தனுஸ். ஆத்மா பாணமாகிறது. அடிக்கப்படும் குறி பரப்ரஹ்மம். நாம் மிக அவதானத்தோடு ஆத்மாவாகிற பாணத்தாலே ப்ரணவமாகிற தனுஸ்ஸைக் கொண்டு ப்ரஹ்மமாகிய லக்ஷியத்தில் அடிக்க வேண்டும். அப்போது பலன் நிச்சயம் என்றது வேதம். இதை இங்கு நோக்க வேண்டும்.

துர்யோதனாதிகளும் பஞ்சபாண்டவர்களும் த்ரோணாசார்யரிடம் வில்வித்தைக் கற்றனர். அந்த சமயம் சிறந்த வில்லாளி யார் என்று ஐயமுண்டாயிற்று. பரீட்சை செய்தார் த்ரோணாசார்யர். ஒரு மரத்தைக் காட்டி அதில் உள்ள பழத்தைக் காட்டினார். குறிவைத்து இதை அடிப்பவன் உயர்ந்தவன் என்றார் எல்லோருமே வில்லை எடுத்துக் குறிபார்த்தனர். குறி(லக்ஷ்யம்) நன்கு தெரிகிறதா என்று கேட்க ஒவ்வோருவரும் இதே இந்த இலை பக்கத்தில் உள்ளது. நன்கு தெரிகிறது என்றனர். இதைக்கேட்டதும் உங்களால் லக்ஷ்யத்தை அடிக்க முடியாது என்றார் த்ரோணர். அர்ஜுனனைக் கேட்டபோது லக்ஷ்யமான பழம் தான் தெரிகிறது. பக்கத்தில் எதுவும் புலப்பட வில்லை என்றான். இவன்தான் லக்ஷ்யவேதி என்றனர். இம்மாதிரி உள்ளவன்தான் சரணாகதி செய்யமுடியும் ஆக மஹாநம்பிக்கையுடன் சரணாகதி செய்ய வந்துள்ளவன் பரதன் என்றார் இராமன். இப்படி சரணாகதி தர்மத்தை அங்கங்கு பதங்களிலே அடைத்து பேசுகிறார் வால்மீகி.



ஸ்ரீ பூமிதேவி ஸமேத ஸ்ரீ ஒப்பிலியப்பன்

இனி பரதன் சரணாகதியைப் பார்ப்போம். பாதௌ ஜக்ராஹ ராமஸ்ய. இராமனின் திருவடியைப் பற்றினான் பரதன் என்கிறது ராமாயணம். சோகம் உள்ளவர்களே சரணாகதியை அநுஷ்டிக்க அதிகாரிகள். பரதனும் தனது சோகத்தை பலமுறைகளில் ராமனிடம் காட்டியுள்ளான். இவ்வாறு ஆர்த்தனாக பரதன் சரணாகதிச்செய்தும் ராமன் ஏன் உடனே திரும்பி வந்து முடிசூட்டிக் கொள்ளவில்லை. பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்னரே முடிசூட்டிக்கொள்கிறான் என்பது இங்கு ஸமாதானமாகாது. இப்பொழுது வனம் செல்வதை விட்டுவிட்டு முடிசூட வேண்டும் என்றல்லவோ பரதன் ப்ரார்த்தித்தான். இதைக் கணிசித்தே பரதன் ராமனை நாடி சித்ரகூடம் வரும்போது அபிஷேக ஸாமக்ரியையும் கொண்டுவந்தான். ராமன் இசைந்தால் சித்ரகூடத்திலேயே பட்டாபிஷேகத்தை நடத்தி விடுவது என்றும் அவன் எண்ணினான். இவ்வாறு மிகுந்த எதிர்பார்ப்புடன் ஆர்த்தியுடனும் வந்த பரதனுக்கு ஏன் ராமன் பலனைக் கொடுக்கவில்லை? தாய் தந்தையருடைய வார்த்தைகளைக் காப்பாற்றவேண்டும் என்கிற எண்ணத்தால் ராமன் முடிசூட இசையவில்லை என்றால் அதைக்காட்டிலும் சரணாகதி தர்மம் உயர்ந்த தர்மமானபடியால் சரணாகதனான பரதனுக்கன்றோ முதலில் பலம் தரவேண்டும்.

முன்பு ராவணனின் வதத்தை விரும்பி தேவர்கள் சரணாகதி செய்துள்ளனர். பகவான் அதற்கு பலன் தருவதாகவும் இசைந்துள்ளதான். இப்பொழுது பரதன் செய்யும் சரணாகதிக்குப் பலனைக் கொடுத்தால் தேவர்களது சரணாகதி பயனற்றுப்போய்விடும். அதனால் பரதனுடைய சரணாகதியின் பலன் விளம்பிக்கிறது, "மரவடியைத்தம்பிக்கு வாண் பணயம் வைத்துப் போய் வானோர் வாழ என்றூர் பெரியாழ்வார் என்று சிலர் கூறும் சமாதானமும் அழகன்று. ராஜ்யத்தில் முடிசூடிக் கொண்டு வேட்டையாடுவதற்காக அரசர்கள் கானகம் செல்வதுபோல் ஸீதையுடன் ராமன் செல்லலாம். ராவணன் ஸீதையையும் அபஹரிக்கலாம். பின் ராமன் ராவணனைக் கொல்லலாம். ஆக பரதன் சரணாகதிக்கு விளம்பித்து பலன் தர வேண்டிய அவச்யமில்லை. இக்கருத்தை பாதுகாஸஹஸ்ரத்தில் ஸ்வாமி தேசிகனே அருளிச்செய்துள்ளார்.

பௌலஸ்த்ய வீர வதநஸ்தபகாவஸாநாத்
புஷ்பாணி தண்டகவநேஷ்பசேதுமிச்சோ:
ரக்ஷாதுரம் த்ருதவதீ மணிபாதுகே த்வம்
ராமஸ்ய மைதிலஸுதாஸஹிதே ப்ரசாரே. என்று

சிலர் இங்கு வேறுவிதமாகவும் பதில் உறைப்பர். ராமன் பதினான்கு வருட காலம் காட்டில் தாபஸனாக இருந்து வஸிக்கப்போகிறான் என்று முன்பு ஸங்கல்பித்துக் கொண்டான். இந்த தனது எண்ணத்தை எப்படி பொய்யாக்குவான். எவரும் தனது

விருப்பத்தை அப்படியே செய்துமுடிக்க முயல்வது இயற்கைதானே. ஆகவே பரதனின் விருப்பத்தை உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை என்று. இதுவும் உசிதமன்று. பரதன் ஒரு பாகவதனன். பகவானுடைய ஸ்வபாவம் எப்படிப்பட்டது என்முல் தனது ஸங்கல்பத்தையும் தவறச்செய்தாவது பாகவத ஸங்கல்ப்பத்தை நிறைவேறச்செய்வது. இதை பீஷ்மஸ்துதியில் பார்க்கலாம். கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி என்றன்றே க்ருஷ்ணன் வாக்கு.

இதற்கு ஸமாதானம்-சோகமுள்ளவனே சரணகதிக்கு அதிகாரி முன்பு சோகம் இருத்தல் வேண்டும். பின்பு சோகம் அற்று இருக்கவேண்டும் என்பது ஸித்தாந்தம். சோகம் சிறிது குறைவாக இருந்தால் பயனும் தாமதித்து விடும். ஆர்த்தப்ரபன்னன் த்ருப்தப்ரபன்னன் விஷயங்ளில் இதைக்கண்டுள்ளோம். த்ருப்தப்ரபன்னனுக்கு சோகம் சிறிது குறைவான படியாலன்றே உடனடியாக மோக்ஷம் கிடைக்கவில்லை. தாமதமாக சரீராவஸானத்தில் மோக்ஷம் விளம்பிக்கிறது. ஸம்ஸார வாழ்க்கை மஹாக்நியால் பீடிக்கப்பட்ட ஆர்த்தானுக்கு சோகம் அதிகமானபடியால் உடனடியாக மோக்ஷம் என்று இசைந்துள்ளோம். இங்கு பரதனுக்கோ சிறிது சோகம் குறைந்துவிட்டது. அதனால் நம்பிக்கையும் குறைந்தது. ராமனை அழைத்துவந்து முடிசூட்டிக் கொள்ளவைக்க வேண்டும். அவனிடம் சரணமடைந்தால் நிச்சயம் ஏற்று வருவான் என்ற எண்ணத்துடன் அயோத்தியிலிருந்து கிளம்பினேன். அப்போழுதே அவனிடம் மற்றொரு எண்ணமும் ஏற்பட்டுவிட்டது. ஒருக்கால் ராமன் திரும்பி வர இசையாவிடில் தானும் காட்டில் அவனைப்போல் லக்ஷ்மணனைப்போலவும் தபஸ்வியாக பதினென்கு ஆண்டுகள் வஸித்து விடுவது என்று.

யதிசார்யம் ந சக்ஷ்யாமி விநிவர்த்தயிதும் வநாத்
வநேதத்ரைவ வத்ஸ்யாமி யதார்யோ லக்ஷ்மணஸ்ததா. என்று

இதன் மூலம் ராமனிடத்தில் தான் மேற்கொள்ளும் சரணகதிக்குப் பலன் கிட்டாமலும் போகலாம் என்கிற எண்ணம் பரதனுக்கு இருந்ததை அறியலாம்.

முன்பு அபிஷேககாலத்தில் தேவர்கள் கூனியிடம் ப்ரவேசித்து கைகேயியின் மூலம் தடங்கல் உண்டு பண்ணியது போல் இப்போது அதே தேவர்கள் பரதனிடத்தில் ஆர்தியையும் விச்வாஸத்தையும் குறைத்து விட்டார்கள்.

மேலும் பாகவதர்களிடத்தில் அபசாரப்பட்டுவிட்டாலும் உடனடியாகப்பலன் தரசக்தி அற்றது சரணகதி. முன்பு வஸிஷ்டர் முதலியவர்கள் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்படி பரதனை நிர்பந்தித்தபோது ஸபையிலேயே குலகுருவான வஸிஷ்டரை நிந்தித்துத்தான் பரதன் ஆக பாகவதாபசாரம் ஏற்ப்பட்டு அதனால் பலனும் விளம்பித்தது.

இங்கு மற்றும் சிலர்- பரதனின் சரணாகதி உடனடியாகவே பலித்துவிட்டது. ஆயிரம் ரூபாயை விரும்பி ஒரு உதாரனிடம் சரணாகதி செய்தால் அவன் மகிழ்ச்சியுடன் லக்ஷம் ரூபாய் கொடுத்தால் சரணாகதி பலிக்கவில்லை என்று சொல்லுவாருண்டோ? ராமனை அழைத்து வரச் சென்றவனுக்கு ராமனைக் காட்டிலும் அதிகப்ரபாவ முடையதான பாதுகை கிடைத்தால் சரணாகதி பலித்துவிட்டது என்றே கொள்ளலாம். இதை பாதுகாஸஹஸ்ரத்தில்

பாதாவநி ப்ரபவதோ ஜகதாம் த்ரயாணும்
ராமாதவி த்வம் அதிகா நியதம் ப்ரபாவாத்
நோசேத் கதந்து பரதஸ்ய தமேவ லிப்ஸோம்
ப்ரத்யாயனம் ப்ரதிபணம் பவதீ பவித்ரீ.

என்று இவ்வாறு சரணாகதி சாஸ்த்ரத்தையே ப்ரதானமாக உரைக்க வந்தது ராமாயணமானபடியால் ஸ்ரீ ராமாயணத்தில் ஸாரமானது இதுதான். வேதத்தில் ஸாரமானது சரணாகதி தஸ்மாத் வத்யம் ப்ரபந்நம் ந ப்ரதீப்ரயச்சந்தி என்று சரணாகதியைத் தான் முக்யமாக வேதம் கூறுகிறது. तस्मात् न्यासमेषामतिरिक्तं आहुः என்றும் ஆக வேதமே ராமயணமாக வந்தபடியால் இதிலும் சரணாகதியே ப்ரதானமாகச் சொல்லப்பட்டது. எனது ராமாயணஸுதா புஸ்தகத்தில் விஸ்தாரம் கண்டு கொள்வது.

கம்பனும் கபோதோபாக்யானத்தில் கண்டுகொள்வது. வேதஸாரம் சரணாகதி என்றான்.

''பேடையைப் பிடித்துத்தன்னை பிடிக்கவந்து அடைந்தபோதே
வேடனுக்கு உதவிசெய்வான் விறகிடைவெந்திமூட்டி
பாடறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்தபைம்புன்
வீடுபெற்று உயர்ந்த வாற்றை வேதத்தின் விழுமிதன்றே''.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீவைஷ்ணவம்

ஸ்ரீ உபயவே. வித்வான் வீராபுரம் சடகோபா சாரியர் ஸ்வாமி

ஸ்ரீமந் நாராயணனென விஷ்ணுவின் ஸம்பந்தம் உடையதாய் வேதப்ரதிபாத்யமாய் மிகப்பழமையான மதமாகிய ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் கோட்பாடுகளில் இன்றியமையாத சில கருத்துக்கள் இக்கட்டுரையில் எழுதப்படுகின்றன.

வைதிக மதமும் அவைதிக மதமும்

மதம் என்பதற்கு அபிப்ராயக் கோட்பாடு என்பது பொருள் வேதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட மதம் என்பது பொருளாம் வைதிக மதம் என்பதற்கு மனம் போன போக்கில் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் கற்பிக்கப்பட்ட மதம் என்பது பொருள் அவைதிக மதம் என்பதற்கு. இவற்றை முறையே ஆஸ்திக மதம் நாஸ்திக மதம் என்றும் சொல்வர். அத்வைதம் த்வைதம் விசிஷ்டாத்வைதம் எனத் தற்பொழுது மிகவும் ப்ரஸித்தமாக உள்ள மூன்று மதங்களும் வைதிக மதங்களே. ஆனால் இக்காலத்தே இவை இப்பெயரால் வழங்கப்படாது இந்து மதம் என வழங்கப்படுகிறது. இப்பெயர் முஸ்லிம்களின் ஆட்சிக்காலத்தே தோன்றியிருக்க வேண்டும். சார்வாகம் பௌத்தம் போன்ற மதங்கள் வேதத்தை ஏற்காதீவையானமயின் அவை அவைதிக மதங்களாம்.

வேதம் மிகப்பெரியது.

தற்போது நான்கு வேதங்களிலும் நமக்குக் காணக் கிடைக்கும் பகுதிதான் வேதம் என்பதில்லை. அது மிகவும் விரிவானது. யுகத்திற்கு ஏற்ப மனிதனின் சக்தி புத்தி முதலியவை ஏற்றமடைகின்றன. யுகத்துக்கு ஏற்ப வேதத்தை விரித்தும் தொகுத்தும் ப்ரசாரம் செய்பவரே வ்யாஸர் எனப்படுகின்றார். வ்யாஸர் என்பது ஒருவர் பெயரன்று. பதவியின் பெயரே. நமக்குக் காணக் கிடைக்காத வேதப் பகுதிகளிலுள்ள கருத்துக்களை உள்ளடக்கியே மநு, கௌதமர், பரத்வாஜர், போன்ற மஹரிஷிகள் ஸ்ம்ருதிகளை தோற்றுவித்துள்ளனர். ஆகவே தான் ஸ்ம்ருதிகளைத் தனது ஆணையாக ச்ருதி: ஸ்ம்ருதி: மமைவ ஆஜ்ஞா என கீதையில் சொல்லிப் போந்தார்.

ப்ரமாண ப்ரமாத்ரு ப்ரமேயங்கள்

ப்ரமாணங்கள் ப்ரத்யக்ஷம் அநுமாநம் சப்தம் என்ற மூன்றும் ப்ரமாணங்களாம். கண்ணால் காண்பது அனைத்தும் உண்மையானவையே என்பது நம் மதம். அவை யாவும் பொய்யே, வெயிற் காலத்தில் தோன்றும் கானல் நீர் போல் பொய் என்பர் சங்கரர். கனவில் காண்பதும் மெய்யே. அக்காலத்தே அவனுக்கு மட்டும் உரியதானவைகளை பகவான் படைக்கிறான் என்கிறது உபநிடதம். ஆகவே காண்பவை யாவும் உண்மையே.

அநுமாநம்: ஊஹமே அநுமாநமாம். கண்ணுக்குப் புலப்படாததை ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு ஊஹிப்பது அநுமாநம். புலப்படாத நெருப்பை புகையைக் கண்டு அங்கு நெருப்புளது என ஊஹிப்பது அநுமாநம். இதுவும் ப்ரமாணமே.

சப்தம்:- வேதம் முக்கியமான சப்தப்ரமாணம். அதை அடிப்படையாகக் கொண்ட ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண, ஸூத்ரங்களும் ப்ரமாணங்களே. வேதம் ''காண்டம்'' ''சாகை'' என இருபிரிவுகளைக்கொண்டது. காண்டங்கள் ஏழு. இவற்றுள் மக்கள் செல்வம், ஸ்வர்கம் போன்ற இம்மைப் பயன்களைத் தரவல்ல இஷ்டிகள் கூறப்பட்டுள்ளன. புத்ரகாமேஷ்டி ப்ரஸித்தமானதே. இவை யாவும் கர்ம-செயல்-ஆதலால் இவ்வேழு காண்டங்களும் கர்ம காண்டம் என வழங்கப்படும். சாகை என்பதில் உபநிஷதங்கள் போன்றவை அடங்கியுள. உபநிஷத்துகள் பகவானான நாராயணனின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபவம் முதலியவைகளை விளக்குகின்றன. எனவே இவை ப்ரஹ்ம காண்டம் எனப்படுகின்றன.

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களின் அருளிச்செயல்களான நாலாயிரமும் ப்ரமாணங்களே. இவற்றை த்ராவிடவேதம் என்பர். பகவத்பக்தியில் ஆழ்ந்து கிடந்தவர்களான ஆழ்வார் என வழங்கப்பட்டனர் ஆழ்வார்கள் பதின்மரென்றும், பன்னிருவர் என்றும் பதின் மூவரென்றும் வழங்கப்படும். ஸ்ரீஆண்டாள் பெண்ணானதாலும் பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்டவளாஅகையாலும் அவளைப் பெரியாழ்வாருள் அடக்கியும் 'தேவுமற்றியேன்' என்று நம்மாழ்வாரன்றித் தெய்வம் வேறில்லை என்ற மதுரகவிகளை நம்மாழ்வாருள் அடக்கியும் வந்த பேச்சு பதின்மர் என்பது. இக்கருத்தை பொய்கை முனி பூதத்தார் என்ற பாசுரத்தில் வேதாந்தவாசியர் காட்டியுள்ளார். பகவானிந்த தசாவதாரம் போல் அபிநவ-புதிய-தசாவதாரம் என்பவரிவர்களை பொய்கை முனி என்ற பாசுரத்தில் உள்ள ஆழ்வார்களின் பெயர் வரிசை ஆழ்வார்களின் அவதார க்ரமத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. ஆண்டாளையும் மதுரகவிகளையும் தனியாகக் கொண்ட வழக்கு பன்னிருவர் என்பது. ராமாநுஜ நூற்றந்தாதியை நாலாயிரத்தோடு சேர்த்து அனுஸந்திக்கும் படி ஸ்ரீபாஷ்யகாரர் நியமநமாகையால் அதனை இயற்றிய அமுதனாரையும் சேர்த்துப் பதின் மூவர் என்ற வழக்கு. இதனை வையகமெண் பொய்கை பூதம் பேயாழ்வார் என்ற பாசுரத்தில் விளக்கிப் போந்தார் தூப்புல் பிள்ளை. ஆழ்வார்கள் அனைவரும் அநந்த கருடாதிகள் போல் நித்ய ஸூரிகள் என்பது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம். நம் போன்ற மனிதர்களே

அவர்களும் என்பது மணவாள மாமுனிகள் கருத்து. ஸ்ரீவைகுண்டத்திலும் ''பல்லாண்டு'' பாடுவோம் என்பதை பல்லாண்டே ''பல்லாண்டும் பாடுவோம்'' என்றும் பரமபத ஸோபாந பாசுரத்தால் விளக்கியுள்ளார் வேதாந்த குரு. இக்கருத்தை கூறியவர் இவரன்றி வேறு எவரும் இலர். ஆக ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதங்களாகிய இருவேதங்களும், ஸ்ம்ருதிகளும் வ்யாஸ ஆபஸ்தம்ப கௌதம பரத்வாஜர் போன்ற மஹர்ஷிகள் செய்த ஸூத்ரங்களும், இதிஹாஸ புராணங்களும், ஸ்ரீபாஷ்ய, பகவத் விஷய, ரஹஸ்யத்ரயஸாராதிகளும், நமது ப்ரமாணங்கள். திவ்ய ப்ரபந்தத்தையும் வேதமாகக் கொண்டதால் தான் ''உபய வேதாந்தாசார்யர்'' என்ற விருதை நாம் ஏற்றுள்ளோம். இவ்விருது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மட்டுமே உரியது.

இடையே இன்றியமையாததோர் செய்தி

'ப்ரபந்தஸாரம்'' என்ற திவ்யப்ரபந்தத்தில் இரண்டாம் பாட்டு முதல் பதினான்காம் பாட்டு வரையுள்ள பாடல்களில் ஒவ்வொரு ஆழ்வார் செய்தருளிய ப்ரபந்தங்கள் அவற்றின் எண்ணிக்கைகள், அவதரித்த நாள் ஊர் திங்களைக் கூறி அந்தந்த ஆழ்வார்களை அழைத்து தேவரீருடைய ப்ரபந்தத்தை ''அடியேனுக்கு அருள்செய் நீயே'' என்று பதின்மூன்று பாசுரங்களில் வேண்டி முடித்தார். பதினான்காவது பாசுரம் ராமானுஜ நூற்றந்தாதியைப் பற்றியது. அதை இயற்றியர் அமுதனார். கீழ் பன்னிரண்டு பாடல்களில் ஆழ்வார்களை வேண்டியது போல் அமுதனாரின் அவதரித்த நாள் ஊர் திங்களையும் ப்ரபந்தத்தையும் சொல்லி அவரிடமன்றோ அடியேனுக்கருள்செய் என்று ப்ரார்த்திக்க வேண்டும். அப்படிச் செய்யாது நூற்றந்தாதியில் விளக்கப் பட்டிருப்பவரான யதிராஜரின் நாள் ஊர் திங்களைக் கூறி ''எனக்கருள் செய் பேணி நீயே'' என அவரிடம் வேண்டியுள்ளார். ஏன் இந்த பாகுபாடு என்ற ஸந்தேஹம் முன்பொருகால் எழ அதற்கு அப்போது பண்டிதராஜ ஸ்ரீ உ.வே. டி.டி. ஸ்வாமி ஸாதித்த விடையை எழுதுகிறேன்.

''பொய்கை, பூதம், பேயாழ்வார்'' என்றாரம்பித்து ''ஐயன் அருள் கலியன்'' என்றும் பன்னிரண்டு ஆழ்வார்களைக் கூறிய பின் அமுதனாரைக் கூறினால் இவரையும் ஆழ்வார் கோஷ்டியில் சேர்த்தது போலாம். இது ஸம்ப்ரதாயத்தில் எவரும் இசையாததாகையால் இவர் பெயரை இங்குக் கூறமுடியவில்லை. அருளிச் செயல்களை மிகவும் ஆதரித்து எங்கும் ப்ரசாரம் செய்த பெருமையினாலும் ஸ்ரீரங்கநாதனுடைய விசேஷ கடாக்ஷத்திற்கு இலக்கானமையாலும் எம்பெருமானால் ஆழ்வார்களுடைய ஸ்தானத்தைப் பெற்று விளங்கினார். மதுரகவிகள் போல் அமுதனார் ஆழ்வார் என்ற பதம் பெறவில்லை. ஆகையால் ஆழவார் வரிசையில் இவரைச் சேர்ப்பது உசிதமன்று. ஆகவே இப்பாட்டில் இவரைச் சேர்க்கவில்லை. ஆனால் ப்ரபந்தத்தை இயற்றியவராகையால் அமுதனார் பெயரைச் சொல்ல வேண்டியதும் அவச்யம் ஆகிறது. ஆகையால் தேசமெலாம் என்ற பாசுரத்தில் ஆழ்வார் ஸ்தானத்தில் ராமானுசரை வைத்து விசேஷணங்களை எல்லாம் கூறி கர்த்தாவாக மட்டும் அமுதனாரைக் கூறினார். இக்காரணத்தாலேயே ஒவ்வொருவர் செய்த பாடல்களின் மொத்த எண்ணிக்கையைக் கூறும் போது முத்திதரும் எதிராசர் பொன்னடிக்கே மொழிந்த அமுதர் பாடல் நூறுமெட்டும் என்று எதிராசரை முதலில் குறித்துப் பின்

அமுதனாரைக் கூறினார். ''பூதம் ஸரஸ்ச'' என்ற ச்லோகத்தில் அமுதனாரைக் கூறாது ''யதீந்த்ரமிச்ராந்'' எனக்கூறியதும் இக்கருத்தைக் கொண்டே நுண்மாண் நுழைபுலனுடையார்க்கு இவை நன்கு விளங்கத் தக்கவையே'' என்பவை டி.டி. ஸ்வாமி ஸாதித்தவை. ஈண்டைக்கு இது வேண்டாததாயினும் முக்கியமான கருத்தாக இருப்பதால் எழுதினேன்.

உபய மீமாம்ஸை

கர்மகாண்டத்தில் தோன்றும் ஸந்தேஹங்களைப் போக்க ஜைமிநி என்ற மஹர்ஷி பதினாறு அத்யாயங்கள் கொண்ட சாஸ்த்ரத்தை இயற்றியுள்ளார். அதற்குப் பூர்வமீமாம்ஸை என்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமிநியால் இயற்றப்பட்டவை. மேல் நான்கு அத்யாயங்கள் காசக்ருத்ஸ்ந மஹர்ஷியால் இயற்றப்பட்டவை எனவும் சொல்வர் சிலர். ''கர்ம தேவதாப்ரஹ்ம-கோசரா ஸாத்ரிதோத்பபௌ ஸூத்ரகாரத: ஜைமிநேமுநே: காசக்ருத்ஸ்நத: பாதராயணத் இத்யத: க்ரமாத்'' என்ற ச்லோகம் இக்கருத்தை வலியுறுத்தும். 'வ்ருத்தி க்ரந்தே து ஜைமிந்யுப ரசிததயா ஷோடச அத்யாயீ உபாத்தா'' என்ற ஸ்வாமி தேசிக ஸ்ரீஸூக்தியால் போதாயனரின் வ்ருத்தி க்ரந்தத்தில் பதினாறு அத்யாயங்களும் ஜைமிநியால் சொல்லப்பட்டவை என ஸாதித்திருப்பதாகத் தெரிகிறது. இதைப் பற்றிய வாதம் தற்போது நமக்கு வேண்டாம். இந்த ஸூத்ரங்களுக்கு சபர ஸ்வாமி என்பவர் பாஷ்யம் இயற்றியுள்ளார். குமாரிலபட்டர் என்பவர் வார்த்திகம் எழுதியுள்ளார்.

ப்ரஹ்மகாண்டம் என்னும் உபநிஷத்பாகத்தில் தோன்றும் ஸந்தேஹங்களைப் போக்குவதற்காக வ்யாஸ மஹர்ஷி நான்கு அத்யாயங்கள் கொண்ட சாஸ்த்ரத்தை இயற்றினார். இதற்கு ''சாரீரக மீமாம்ஸா'' என்று பெயர். உத்தர மீமாம்ஸா என்றும் சொல்வர். ப்ரஹ்மஸூத்ரம் என்பதுவும் இதுவே. ஒவ்வொரு அத்யாயத்திலும் நான்கு பாதங்களாகப் பதினாறு பாதங்களுள. பாதங்களின் உட்பிரிவுக்கு ''அதிகரணம்'' என்று பெயர். நூற்றைம்பத்தாறு அதிகரணங்களும் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களும் உள. இந்த ஸூத்ரங்களுக்கே அத்வைத மதத்தைப் பின் பற்றி சங்கரரும் த்வைத மதத்தைப் பின்பற்றி ஆநந்ததீர்த்தர் என்ற மத்வஸ்வாமியும் பாஷ்யமியற்றியுள்ளனர். விசிஷ்டாத் வைத மதத்தைப் பின்பற்றி பகவத் ராமாநுஜாசார்யர் பாஷ்யம் அருளியுள்ளார். சங்கர பாஷ்யம் மத்வ பாஷ்யம் என ஏனவை வழங்கப்பட்டபோதும் ஸ்ரீபாஷ்யம் என்றே நமது பாஷ்யம் வழங்கப்படுகிறது. இப்பாஷ்யத்தின் மேன்மையைக் கண்ட ஸரஸ்வதியால் இப்பெயர் இடப்பட்டது. ''கீத்'' ''மேக்ஸ் முல்லர்'' போன்ற ஆங்கிலேயர்கள் இதன் மேன்மையைப் பலவாறு புகழந்திருப்தோடு ஏனைய இரண்டிலுமுள்ள குறைகளையும் கூறியுள்ளனர்.

இதற்கு நடாதூரம்மாள் என்ற வாத்ஸ்ய வரதாசார்ய ஸ்வாமியிடம் கால க்ஷேபம் செய்தவரான ஸ்ரீஸூதர்சநஸூரி என்ற மஹான் ச்ருதப்ரகாசிகா என்ற வ்யாக்யானம் செய்துள்ளார். காலக்ஷேபம் செய்யும் போது ஆசார்யர் ஸாதித்த வாக்கியங்களை அப்படியே அமைத்துள்ளேன் என்கிறார் அதில் அந்த ஸ்வாமி. மிக்ப்ரஸித்தமானதும்

சிறந்ததுமான வ்யாக்யானமிது. இதன் மேன்மையைக் கருதியே முஸ்லிம் கலாப காலத்தில் மிகவும் ச்ரமப்பட்டு இதைக் காத்துப் பின் ப்ரசாரமும் செய்தார் தூப்புல் பிள்ளை. .ச்ருத ப்ரதீபிகா என்ற மற்றுமொரு வ்யாக்யானமும் இவரே செய்துள்ளார் இதற்கு. ''தத்வடீகா'' என்ற வ்யாக்யா னம் ஸ்வாமி தேசிகன் செய்ததாம். இப்படிப் பல வ்யாக்யானங்களுண்டு இதற்கு.

த்ராவிடவேதமாகிய நாலாயிரத்தில் நம்மாழ்வாரால் ஸாதிக்கப்பட்ட திருவாய் மொழி என்ற மூன்றாவதாயிரம் வேதாந்தார்த்தை வெளியிடுவது. திருக்குருகைப் பிரான் பிள்ளான் என்பவர் ஸ்ரீபாஷ்யகாரரின் நியமனத்தால் இதற்கு ஒரு உரைஸாதித்துள்ளார். இதனைத் திருவாறாயிரப்படி என்பர். இதற்கு உரையாக ஸாக்ஷாத் ஸ்வாமி என்பவர் இருபத்துநாலாயிரப்படியும் சப்தார்த்தமும் அருளியுள்ளார். முதன் முதலில் தோன்றியது பிள்ளானின் உரையே. பின்பு ஈடு முப்பத்தாறாயிரப்படி என்பது நம்பிள்ளைகளால் அருளப்பட்ட உரை. இவை யாவும் ப்ரமாணங்களே. இது வரை ப்ரமாணம் என்பதைப் பற்றி சிறிது விளக்கப்பட்டது.

ப்ரமாதா

இக்கலியுக ஆரம்பத்தில் நம்மாழ்வார் ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதப்ரவர்த்தகரானார். ஆகவே அவரை உடலாகவும் மற்றைய ஆழ்வார்களை அவருக்குக் கண் காது கை போன்ற உறுப்புகளாகவும் சொல்வது ஸம்ப்ரதாயம். ஆகவே ஆழ்வார்களும் ஸ்ரீமந்நாதமுநிகள் ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர், பிள்ளான், நடாதூரம்மாள், ஸ்வாமி தேசிகன் போன்ற மஹாசார்யர்கள் ப்ரமாதாக்களில் முதன்மையானவர்கள். தேசிகருக்குப் பின் பல கிளைகளாகப் பிரிந்து ஸம்ப்ரதாய ப்ரவர்த்தநம் பண்ணிவரும் பல ஆசார்யர்களும் ப்ரமாதாக்களேயாவர்.

ப்ரமேயம்

ப்ரமேயம் தத்வம், ஹிதம், புருஷார்த்தம் என மூன்று வகைகளாம். தத்வம் மூன்று வகையாம். சேதநம், அசேதநம், ஈச்வரன் என்பவை அவை .

சேதநன்

அறிவுள்ள ஜீவாத்மா சேதநன் எனப்படுவான். இவனுடைய ஸ்வரூபம் ஜ்ஞாநமயமாகவே இருக்கும். இவனுக்கு ஸ்வரூபத்தினின்றும் வேறான ஜ்ஞாநம் ஒன்று குணமாய் இருக்கும். இதற்கு தர்மபூதஜ்ஞாநம் என்று பெயர். ஜீவன் அணுவாகவும் ஆநந்தஸ்வரூபனாகவும் நிற்பவன். சரீரத்தைக் காட்டிலும் வேறானவன், அழிவற்றவன், ஈச்வரனுக்கு அடியவனாகவே இருப்பவன். ஜீவாத்மாக்கள் எண்ணில் அடங்காதவர்கள். பத்தர், முக்தர், நித்யர் என மூவகைப் படுவரவர். ஸம்ஸாரத்தில் உழல்பவர் பத்தர். ஸதாசார்யன் அநுக்ரஹம் பெற்று பக்தி ப்ரபத்திகளுள் ஒன்றைச் செய்து பின்பு மோக்ஷம் பெற்றவர் முக்தர் . எப்போதும் ஸம்ஸார ஸம்பந்தமே இன்றி

என்றென்றும் பகவானுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருப்பவர் நித்யர். அநந்த கருட, விஷ்வக்ஸேநாதியர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்.

அசேதனம்

அறிவில்லாத வஸ்து அசேதநமாம், அசேதநத்தால் கிடைக்கும் பயனை அநுபவிப்பவன் சேதநனே. இது த்ரிகுணம், காலம், சுத்தஸத்வம் என மூவகைப்படும்.

த்ரிகுணம்

த்ரிகுணமே மூலப்ரக்ருதி எனப்படும். இது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களை உடையது. ஆகவே த்ரிகுணம் எனப்படுகிறது. இது எப்போதும் மாறுபாட்டை அடைந்து கொண்டே இருக்கும். இதிலுள்ள மூன்று குணங்களும் ஸமமாக இருக்கும்போது மஹாப்ரளயம் உண்டாகும். குணங்கள் ஏற்றத்தாழ்வை அடையும் போது ப்ரக்ருதி பலவகைத் தத்வங்களாய் மாறுகிறது. விரிவுக்கு அஞ்சி இதோடு நிற்கிறேன்.

காலம்

காலம் என்பது எங்கும் பரந்திருக்கும் ஒரே த்ரவ்யம். இதில் ஸத்வம் முதலிய குணங்கள் இல்லை. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் முதலிய பேச்சுகளுக்கும் நிமிடம், நாள், வாரம் முதலிய பேச்சுக்கும் இதுவே காரணம்.

சுத்தஸத்வம்

சுத்தஸத்வம் என்பது ரஜோகுண தமோகுணங்களற்று ஸத்வகுணத்துக்கு மட்டும் இருப்பிடமான த்ரவ்யம். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள அனைவருடைய உடலும், மண்டபம், கோபுரம் முதலிய வஸ்துக்களும் இந்த சுத்த ஸத்வத்தால் ஆகியவைகளே.

ஈச்வரன்

ஸ்ரீமானான நாராயணனே ஸர்வேச்வரன். இவன் எப்பொழுதும் மாறுபடாதவன் ஜ்ஞாநவடிவானவன் இங்குத்தான் உள்ளான் எனதேசத்தாலும், இப்போது தான் உள்ளான் என காலத்தாலும் இன்ன வஸ்துவாகத்தான் உள்ளான் என வஸ்துவாலும் அளிவிடற்கரியன். எல்லாவிடத்திலும் எல்லாக் காலங்களிலும் அனைத்து வஸ்துக்களிலும் வடிவமாகவும் நிற்பவன். ஆநந்தவடிவனவன். தோஷம் எதுவும் இவனிடம் தட்டாது. அனைத்தையும் படைத்துக் காத்து அழிப்பவன். எல்லோரிலும் உயர்ந்தவன். இவனுக்கு ஸமமானவரே கிடையாது. ஸகல வேதங்களும் இவனையே போற்றுகின்றன. அனைத்துக் கர்மாக்களாலும் ஆராதிக்கப்படுபவன் இவனே. அவற்றின் பலன்களைத் தருபவனுமிவனே. ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமானவன். பிராட்டி இவனைவிட்டு நொடியும் பிரியாள்.

திருமேனி

நாராயணனின் திருமேனி பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை, என ஐந்து வகைகளாக இருக்கும். ஸ்ரீவைகுண்டத்திலுள்ள பரவாசுதேவனின் ரூபம் பரரூபமாம். வ்யூஹம் வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என நால்வகையாம். விபவமென்பது, மத்ஸ்யம் முதலான தசாவதாரங்களும், ஹயக்ரீவாவதாரம் முதலானவைகளுமாம். எல்லோர் ஹ்ருதயகமலத்திலும் நுண்ணிய ரூபத்துடன் எழுந்தருளியிருப்பது அந்தர்யாமியாம். ஸ்ரீரங்காதி திவ்ய தேசங்களிலும் க்ராமங்களிலுள்ள கோயில்களிலும், மஹான்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளியுள்ள திருமேனி அர்ச்சா திருமேனியாம். பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்பக் கொள்ளும் திருமேனிகளும் இதைச் சேர்ந்தனவே.

பிராட்டி

லக்ஷ்மியாகிய பெரியபிராட்டியும் ஈச்வரதத்வத்தில் சேர்ந்தவளே. எம்பெருமானைப் போல் இவளும் எங்கும் நிறைந்திருப்பவளே. ஸர்வேச்வரனைப் போல் நமக்கு உபாயமாகவும் பலனாகவும் நிற்கிறாள். உலகிலுள்ள தாய் தந்தையர்கள் தத்தம் மக்களுக்கு செய்யும் நன்மைகளைத் தத்தமக்கு உரியளவாக சிற்சிலவற்றை வகுத்துக் கொண்டு அவரவர் கடமைகளைச் செய்வது போல் உலகத்துக்கே தாய் தந்தைகளாகிய இவ்விருவரும் தத்தமக்குரியதாக சிலவற்றை வகுத்துக் கொண்டுள்ளனர். இது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம். மணவாள மாமுனிகளின் கருத்து இவளும் ஜீவகோடியைச் சேர்ந்தவள் என்பதே.

ஹிதம்

மோக்ஷம் பெறுவதற்காக அநுஷ்டிக்கப்படும் பக்தியும் ப்ரபத்தியும் ஹிதம் எனப்படும்.

பக்தியோகம்

இது பலவகை மோக்ஷமடையும்வரை இதை அநுஷ்டித்துக்கொண்டே இருக்க வேண்டும். பயனைப் பெறுவதற்கு நீண்ட நாள்கள் ஆகலாம். இப்பிறவியிலேயே பயன் கிட்டும் எனச் சொல்ல முடியாது. இதை அநுஷ்டிக்கும் முறையும் மிகக் கடினமானது. இக்காலத்தில் இதை மேற்கொள்பவர் எவருமில்லை. ஸ்ரீமந்நாத முநிகளோடு முடிந்துவிட்டது.

ப்ரபத்தி

பக்தியோகத்தைச் செய்ய முடியாதவர் மோக்ஷோபாயமாக மேற்கொள்வது ப்ரபத்தி யோகமாம். இதுவே பரந்யாஸம், சரணாகதி, பரஸமர்பணம். உபாயாநுஷ்டாநம் என்ற பெயர்களால் வழங்கப்படுகிறது. இப்ப்ரபத்தி ஸ்வநிஷ்டை, உக்திநிஷ்டை

ஆசார்யநிஷ்டை, பாகவதநிஷ்டை என நால்வகைப்படும். இவற்றுள் ஸ்வநிஷ்டையை அநுஷ்டிப்பவர் உளரா என்பது ஸந்தேஹமே. உக்திநிஷ்டையும் ஆசார்ய நிஷ்டையும் ஸ்ரீமதஹோபில மடத்தில் ஸ்ரீமதழகியசிங்கர்களால் அநுஷ்டிக்கப்படுகின்றன. ஸ்ரீமன் முநித்ரய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமங்களிலும் ஸ்ரீமத் பரகாலமடத்திலும் எழுந்தருளியுள்ள யதிவரர்களாலும் தனித்த மஹான்களின் திருமாளிகைகளிலும் ஆசார்யநிஷ்டை அநுஷ்டிக்கப்படுகிறது. பாகவத நிஷ்டையும் சிறுபான்மையாக அநுஷ்டிக்கப்படுகிறது. இந்நால்வகையுள் ஒன்றை அநுஷ்டிக்காவிடில் மோக்ஷம் பெறமுடியாதென்பது நமது பூர்வாசார்யர்களின் திடமான கொள்கை. ஒரு பயனைக் குறித்து இப்ப்ரபத்தியை ஒரு முறை அநுஷ்டித்தால் போதும். விரும்பிய பலனைப் பெறலாம். இச்சரீரம் உள்ளவரைத் தாம் செய்த வினைப்பயன்களை அநுபவித்து சரீரமுடிவில் மோக்ஷத்தைப் பெற விரும்பி இப்ப்ரபத்தியை அநுஷ்டித்தால் அப்படியே பெறலாம். இதற்கு த்ருப்த ப்ரபத்தி எனப்பெயர். இச்சரீரம் உள்ள வரையிலும் ஸம்ஸார துன்பத்தைத் தாளமுடியாமல் இப்போதே மோக்ஷம் பெற வேண்டும் என விரும்பி இப்ப்ரபத்தியை அநுஷ்டித்தால் அப்படியே பெறுவதில் ஐயமில்லை. இதற்கு ஆர்த்த ப்ரபத்தி எனப்பெயர். நினைத்த போது ஸகல பலன்களையும் அளிக்கும் சக்தி இப்ப்ரபத்தி ஒன்றுக்கே உண்டு. ஜாதிநியமம் இதற்கில்லை. எல்லா ஜாதியினரும் இதனை மேற்கொள்ளலாம். எல்லா ப்ராணிகளுக்கும் இது மோக்ஷோபாயமாம்.

புருஷார்த்தம்

நலம் அந்தமில்லதோர் நாட்டிலே ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே பரம புருஷார்த்தம். தர்மம். அர்த்தம், காமம், மோக்ஷம் எனப் புருஷார்த்தத்தை நால்வகைகளாகப் பிரிப்பர். முதல் மூன்றும் இவ்வுலகவாழ்க்கைக்குத் தேவையானவை. மோக்ஷம் என்பது மறுமைப் பயனாம். மோக்ஷமடைந்தவன் திரும்பவும் பிறவான். மோக்ஷாநந்தம் ஈடு இணையற்ற ஆனந்தம். ஆகவே தான் பரமபுருஷார்த்தம் எனப்பட்டது.

ஐந்து அங்கங்கள்

ஆநு கூல்யஸங்கல்பம், ப்ராதி கூல்யவர்ஜனம், மஹாவிச்வாஸம், ஆகிஞ்சந்யம், கோப்த்ருத்வ வரணம், என ஐந்து உறுப்புகளைக் கொண்டது ப்ரபத்தி. ஆநுகூல்ய ஸங்கல்பமாவது பகவான் வேத சாஸ்த்ரங்கள் மூலம் விதித்துள்ள கர்மாக்களைக் கட்டாயம் விடாமல் செய்வேன் என்ற உறுதியை மேற்கொள்ளல். அவன் விதித்த கட்டளைகளுக்கு உட்பட்டு நடந்தால்தானே அவன் நம்மைத் தன்னைச் சார்ந்தவனாக எண்ணுவன். ஆகவே அவன் கட்டளைகளை ஒரு போதும் கடக்கக்கூடாது. ப்ராதி கூல்யஸ்ய வர்ஜநமாவது, இடையில் துணி அணியாமல் ஸ்நாநம் செய்யாதே, வெங்காயத்தை தின்னாதே என வேதம் விதித்துள்ளது. அக்கட்டளையை மதித்து அதனை மேற்கொண்டு அதற்கு ப்ரதிகூலமான – எதிரான – செயல்களைச் செய்யேன் என திடமான எண்ணங்கொண்டு அப்படியே நடத்தல். நமக்கு ஸம்ஸாரத்திலிருந்து

உய்வு ப்ரபத்தியின் மூலம் தான்கிடைக்கும். ப்ரபத்தியை அநுஷ்டித்த நம்மை பகவான் காப்பாற்றியே தீருவான் என்ற திடமான நம்பிக்கை மஹாவிச்வாஸ ஆகிஞ்சின்யம் கைம்முதலின்மை மோக்ஷத்தைத் தருவனவான பிறவழிகளைக் கடைபிடிப்பதில் எனக்குத் தகுதியே கிடையாது ப்ரபத்தியொன்றுதான் என்னைக் கடைத்தேற்றும் என உணர்தல். கோப்த்ருத்வ வரணமாவது வேறு ஒரு உபாயமுமின்றி பகவானையே ரக்ஷகனாக வரிப்பது. அனைத்து உபாயங்களுக்குப் பதிலாக அவனை நீயே இவற்றின் நிலைகளில் நின்று என்னைக் காக்க வேண்டும் என வேண்டுதல். இவ்வைந்தும் ப்ரபத்தியின் உறுப்புகளாம். இப்ப்ரபத்திக்கு ஸாத்யோபாயம் என்ற பெயரும் உண்டு. ஸாத்யமான–நம்மால் செய்யத்தக்கதான உபாயம்–வழி–என்பது பொருள். இப்ப்ரபத்திக்கே மோக்ஷம் தரும் அதிகாரமில்லை. இது வழியாம். வேலையை மக்களுக்கு அரசாங்கமே வழங்குகிறது. அவ்வேலை எனக்கு தேவை என வேண்டுகோள் விடுத்தால் தானே நமக்கு வேலை தேவை என அறிந்து அதனை அது வழங்கும். அதேபோல் தான் ப்ரபத்தியும். மோக்ஷமளிப்பவன் நாராயணனே. ஆகவேதான் நாராயணனை ஸித்தோபாயம் என்கிறோம். இப்ப்ரபத்தி ஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாயத்தவர்களால் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

ப்ரதாந ப்ரதிதந்த்ரம்

ப்ரதாந ப்ரதிதந்த்ரம் என்றாலென்ன! என்பது பற்றி ஸ்வாமிதேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் விளக்கியுள்ள வாக்யமாவது ப்ரதிதந்த்ரமாவது மற்றுள்ள ஸித்தாந்திகள் ஒருவரும் இசையாதே தன்னுடைய ஸித்தாந்தத்துக்கே அஸாதாரணமான அர்த்தம். இங்கு வேதாந்திகளான நம்முடைய தர்சநத்துக்கே அஸாதாரணமுமாய் வேதாந்திகளான நம்முடைய தர்சநத்துக்கே அஸாதாரணமுமாய் ப்ரதாநமுமான அர்த்தம் எதின்னில், சேதநாசேதநங்களுக்கும் ஈச்வரனுக்கும் உண்டான சரீராத்மபாவஸம் பந்தாதிகள் என்பதாம். இவ்வாக்யத்தின் பொருளைத் தெளிவதற்கு வேண்டியவற்றை விளக்குகிறோம்.

வேதவாக்யங்களில் பரஸ்பரம் விரோதம்

பலபல வேதவாக்யங்களுள் முரண்பாடுகள் தோன்றுகின்றன. நேஹ நாநாஸ்திகிஞ்சந ஸர்வம்கலு இதம் ப்ரஹ்ம, தத்த்வமஸி என்பன ச்ருதிவாக்யங்கள். இவ்வுலகில் நீ காணும் பலவகையான வஸ்துக்களும் உண்மையானவையல்ல, யாவும் ப்ரஹ்மமே, ப்ரஹ்மமும் நீயும் ஒன்றே என்பவை இவற்றின் பொருள். இப்படிச் சொல்லும் முகத்தால் ப்ரஹ்மத்துக்கும் உலகுக்கும் வேறுபாடில்லை என அபேதத்தைக் கூறுகின்றன. இவை போன்றவை அபேதச்ருதிகள் எனப்படும்.

க்ஷரம் ப்ரதாநம், அம்ருதாக்ஷரம் ஹரஃ க்ஷராத்மாநௌ ஈசதே தேவஃ ஏகஃ என்பன போன்றச் ச்ருதிகள் சேதநன் அசேதநம் ஈச்வரன் என்ற தத்வங்களைத் தனித்தனியாகச் சொல்லி ஒவ்வொன்றுக்கும் பேதத்தைக் காட்டுகின்றன. இவை போன்றவை பேதச்ருதிகளாம்.

இதே போல் ''யஃ ஸர்வஜ்ஞஃ ஸர்வவித், யஸ்ய ஜ்ஞ நமயம் தப:'' போன்ற ச்ருதிகள் பகவானுக்கு குணங்கள் உண்டு என்கின்றன. இவை ஸகுணச்ருதிகள் எனப்படும். ''நிஷ்கலம் நிஷ்க்ரியம் சாந்தம்'' என்பன போன்ற ச்ருதிகள் பகவானுக்குக் கைகால் போன்ற உறுப்புகளில்லை, குணங்களுமில்லை என்கின்றன. இவை நிர்குணச்ருதிகள் எனப்படும்.

இப்படி விரோதமான கருத்துகளைச் சொன்னால் எதை மேற்கொள்வது? எதை விடுவது? வேதம் முழுவதும் நமக்குப் ப்ரமாணமாகையால் இவ்விரோதத்தைப் போக்கி உண்மையை விளக்க வேண்டுமன்றோ? அப்படிச் செய்யாது சங்கரர் அபேதச்ருதியை மட்டும் ப்ரமாணமாக ஏற்று ப்ரஹ்மம் ஒன்று தான் ஸத்யமானது மற்றவை யாவும் பொய் என சொல்லி பேதச்ருதி கௌணமானது உண்மையல்லாதது எனச்சொல்லிவிட்டார். மத்வரோவெனில் பேதத்தை விளக்கும் ச்ருதிகளை மட்டும் ஏற்று அபேதத்தைச் சொல்லும் ச்ருதிகளைக் கைவிட்டார். அப்படி விட்டதற்கு காரணம் எதுவும் கூறவில்லை. இவ்விரோதத்தைப் போக்கி உண்மையைக் காட்டும் ச்ருதியாகிய கடகச்ருதியை இருவரும் க்கவிட்டனர்.

நம்முன்னோர்களின் நிர்வாஹமேன்மை

ச்ருதியில் சொல்லப்பட்டுள்ளவை யாவும் உண்மையானவையே. ஓர் எழுத்தும் அதில் முக்கியமற்றது இல்லை. மனிதன், விலங்கு, பக்ஷி என்றிப்படிப் பலவகையான உயிரினங்களும், உயிரற்றனவான மலை மண் போன்றவைகளும் உண்மையானவையே. இவற்றுள் பேதமும், அபேதமும், ஒருமையும், பண்மையும் குணமுள்ளமையும், குணமின்மையும் பொருந்துவனவே என்பது நமது முன்னோர் நிர்வாஹம். இதற்கு வழிவகுப்பதுவே கடகச்ருதி.

ஒருமையும், பன்மையும் பொருந்தும் விதம்

இவன் ஒருவன், இது ஒரு வீடு, இது ஒரு மரம் எனச்சொல்கிறோம். முதலில் தேவதத்தன் ஒருவன் என்ற வழக்கை கவனிப்போம். தேவதத்தனிடம் கைகள், கால்கள், விரல்கள், கண், காது, நாக்கு, மூக்கு என்றிப்படி எத்தனை எத்தனை புற உறுப்புகள்! சிறுகுடல், பெருகுடல், இதயம் என்றிப்படி எத்தனை அக உறுப்புகள்! இவற்றை இல்லையாக்க முடியுமோ? ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பெயர்கள் உள்ளனவே! தேவதத்தன் ஒருவன் என்ற வழக்கு முக்கியமானதன்று கௌணமானது எனச்சொல்வதில்லையே! ஆகவே இதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டுமன்றோ! அது யாதெனில்? அவை யாவும் அவன் அங்கங்கள்–உறுப்புகள். அவன் அங்கி–உறுப்புகளுக்கு உரிமை உள்ளவன்–என்பதைத்தானே சொல்கிறோம். அங்க அங்கிபாவம் என்பது இவ்விரண்டுக்குமுள்ள ஸம்பந்தம்–தொடர்பு–என்பதாயிற்று. இதே போல்தான் ஒரு வீடு ஒரு மரம் என்பன போன்றவையும், இப்படி ஒன்றில் பலவஸ்துக்கள் இருந்தும் அவற்றை ஒன்றாகக்கொண்டு ஒன்று என்ற பேச்சு நிகழ்கிறது.

இதே போல் தேவதத்தன் ஒல்லியானவன், யஜ்ஞதத்தன் குண்டானவன் என்கிறோம். ஒல்லியாக இருப்பதும் குண்டாக இருப்பதும் சரீரத்தைச் சார்ந்தவை, ஆத்மாவினுடையதன்று. ஆகவே தேவதத்த யக்ஞதத்த சப்தங்கள் ஈண்டு சரீரத்தைச் சொல்லுகின்றன என்பது தேரிற்று. இதேபோல் தேவதத்தன் அறிவாளி, யக்ஞதத்தன் கவி என்கிறோம். இப்பேச்சுக்களிலுள்ள அறிவுடைமையும், செய்யுள்புனையும் திரனுடைமையும் ஆத்மாவை சார்ந்தனவே. சரீரத்தைச் சொல்வதான தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்கள் ஈண்டு அவரவர் ஆத்மாக்களை உணர்த்தின. ஆத்மாவும் சரீரமும் ஒன்றன்றே. இருந்தும் சரீரத்தைச் சொல்லும் சப்தம் ஆத்மாவரை உணர்த்தும் என்பது தேரிற்று. இதை நினைவில் கொள்க.

ஈண்டுமப்படியே

ப்ரஹ்மம் ஒன்று தான் உண்டு என்ற நேஹநாநா என்ற ச்ருதியும் சேதனங்களுடன் அசேதநங்களுடனும் சேர்ந்த ப்ரஹம்மம் ஒன்றே. சேதநாசேதநங்கள் ப்ரஹ்மத்தின் சரீரங்கள் என்பதை அது விளக்குகின்றது எனக் கொண்டால் எக்குற்றமும் தோன்றாது. பேதம் அபேதம் இரண்டும் ஸித்திக்கும். இதனை விளக்குகிறோம்.

கடகச்ருதி

''ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா: அந்தர: ய ஆத்மநிதிஷ்டந் ஆத்மந: அந்தர: யச்சகிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதேச்ரூயதேபிவா அந்த: பஹிஸ்சதத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:'' என்பன போன்ற பலபல ச்ருதிகள் பரமாத்மா ஒவ்வொரு பொருள்களுள்ளும் புகுந்துள்ளான். அவனுக்கு ''அந்தர்யாமி'' எனப்பெயர். அப்பொருள்கள்யாவும் அவனுக்கு சரீரங்கள் என்கின்றன. இவையேகடகச்ருதிகளாம். உலகில் கண்களால் காணும் பொருள்களுள்ளும் காதுகளால் கேட்கப்படும் பொருள்களுள்ளும் அந்தர்யாமியாய் பரமாத்மா புகுந்திருப்பதோடு வெளியிலும் பரந்துள்ளான். அவன் நாராயணன் எனப்படுவான் என்கிறது ''யச்சகிஞ்சித் என்ற ச்ருதி. சுபாலோபநிஷத்தில் இவை போன்ற கடகச்ருதிகள் பல பல உள. த்வைத அத்வைத மதத்தைச் சார்ந்த இருவரும் இவையாவும் முக்கியமானவையல்ல என்று ஒதுக்கிவிட்டனர்.

நமது ஆசார்யர்கள் பல்வகைகளான கடகச்ருதிகளை அடிப்டையாகக் கொண்டு பேதச்ருதிகளையும் அபேதச்ருதிகளையும் பொருந்த விடுகின்றனர். சேதநன், அசேதநம், ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களின் ஸ்வரூப பேதம் உண்மையாகையால் ''க்ஷாம் ப்ரதாநம்'' என்பன போன்ற ச்ருதிகள் பேதத்தைத் தெரிவிப்பது உண்மையே. கடகச்ருதியின் படி சேதநத்துடனும் அசேதநத்துடனும் உள்ளும் புறமும் பரந்துள்ள ப்ரஹ்மம் ஒன்றேயாகிறபடியால் ''ஸர்வம் கலு'' என்பன போன்ற அபேதச்ருதிகளும் பொருந்துவனவே. தேவதத்தன் போன்ற, சரீரத்தைச் சொல்லும் சொற்கள் அவன் ஆத்மாவையும் சொல்லும் எனக் கீழே விளக்கியுள்ளதுபோல் ஆத்மாவினுள் அந்தராத்மாவாகப் புகுந்துள்ள நாராணனையும் சொல்லுமாகையால் சேதநனான

ஆத்மாவுடனும் அசேதனமான சரீரத்துடனும் சேர்ந்த பரமாத்மா ஒன்றாவதால் அபேத வாதமும் பொருந்துவதே.

இதுபோல் அபஹத பாப்மா, விஜர:, விம்ருத்யு:, விசோக:, அவிஜிகித்ஸ:, அபிபாஸ:, ஸத்யகாம:, ஸத்யஸங்கல்ப:, என்பது ஒரு ச்ருதி. இந்த ஒரே ச்ருதியில் அபஹதபாப்மா'' என்பது முதல் அபிபாஸ:'' என்னும் ஈறாகப் பரமாத்மா எத்தகைய பாபத்துக்கும் இருப்பிடம் ஆகான்; மூப்பு, இறப்பு, துக்கம், பசி, தாகம் போன்ற கெட்ட குணமற்றவன் எனச்சொல்லி உடனே அதே ச்ருதி ''ஸத்ய காம: ஸத்ய ஸங்கல்ப:'' என்ற இரண்டு பதங்களால் ஸத்யகாமத்வம் ஸத்யஸங்கல்பத்வம் போன்ற குணங்கள் உடையவன் என்கிறது. இந்த ச்ருதியை அடிப்படையாகக்கொண்டு, குணமில்லை என்ற ச்ருதிகள் கெட்ட குணங்கள் இல்லை என்பதையும் குணமுண்டு என்ற ச்ருதிகள் கல்யாண குணங்கள் உள்ளமையையும் சொல்லுகின்றன என நிர்குணஸ குணச்ருதிகளை மிக எளிதாகப் பொருந்தவிடுகின்றனர் நமது ஆசார்யர்கள். இப்படி ச்ருதிகளே தெளிவாக விளக்கியிருந்தும் இச்சரீர ஆத்மபாவத்தைத் தெரிந்து கொள்ளாததாலன்றோ பிறமதத்தவர் அனைத்து ச்ருதிகளின் ஒப்புமையை விளக்க மாட்டாமல் மனம் போன போக்கில் எழுதிவைத்தனர். நம் ஆசார்யர்களின் மேன்மைதான் என்னே!!!

சேதநாசேதநங்களுள் பகவான் புகுந்து அவற்றைத் தமக்கு உடலாகக் கொண்டுள்ளான் என்ற சரீர ஆத்மபாவமே ப்ரதாநமான ப்ரதிதந்த்ரம் எனப்படுகிறது. சரீரத்தைச் சொல்லும் சொற்களெல்லாம் ஆத்மாவையும் சேர்த்துச் சொல்லும் என்பதும், ஸர்வேச்வரனுக்கு அடிமை செய்வதே புருஷார்த்தம் என்பதும் பெருமாள் பிராட்டி இருவருமே நம்மால் அடையத்தக்கவர்கள் என்பதும் ப்ரதாநப்ரதிதந்த்ரங்களாக இருந்தபோதும் சரீர ஆத்ம பாவத்தை முக்யமான ப்ரதாநப்ரதிதந்த்ரமாகச் சொல்லுவானேன்? எனின் எல்லாச்ருதிக்கும் ப்ராமாண்யத்தை ஸ்தாபிப்பதற்கு இதுவே முக்கியமாக இருப்பதால் தான் அப்படிச் சொல்கிறோம். இதை உள்ளபடி அறியாததாலன்றோ பிறமதத்தினர் பல ச்ருதிகளைப் பயனற்றதாக்கினர்.

பஞ்சகாலம்

ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் ஒரு பகலை ஐந்தாகப் பிரித்தனர். அபிகமநம் உபாதாநம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் எனப்பெயருமிட்டனர் அவைகட்கு. பின் காலை ஐந்து மணிக்குமுன் எழுந்து பகவானையும் ஆசார்யனையும் வணங்கி நீராடி ஸந்த்யாவந்தநம் செய்து நூற்றெட்டு முறை காயத்ரி ஜபம் செய்து முடிக்க வேண்டும் சூர்யன் உதிப்பதற்கு முன். உதித்த பிறகு காயத்ரீ உபஸ்தாநம் செய்து அஷ்டாக்ஷரம் போன்ற மந்த்ர ஜபம் செய்து ஆதாரசக்தி முதலான தர்ப்பணம் செய்து ஔபாஸநத்தையும் முடிக்க வேண்டும். இத்துடன் காலைக் கடன் முடிந்ததாம்.

பின் அகத்திலுள்ள பகவானின் ஸந்நிதிக்குப் போய் ஸேவித்து மாநஸிக ஆராதநமோ, லகுவான ஆராதநமோ செய்து அன்றைய நாள் முழுவதையும் நேர்மையான முறையில் நடத்திக் கொடுக்கும்படி பகவானை ப்ரார்த்திக்க வேண்டும், இதுவே **அபிகமனமாம்.**

பின் அன்றைய பகவதாராதநத்திற்கு வேண்டிய துளஸீ புஷ்பம் முதலியவற்றைச் சேகரிப்பதும், அன்றைய ஆஹாரத்துக்கு வேண்டிய அரிசி காய்கறி முதலியவற்றை சேகரிப்பதும் **உபாதாநம்** ஆம். மற்றைய எல்லாவற்றையும் விட்டொழித்து இஃது ஒன்றையே இரவும் பகலும் செய்கின்றோமிப்போது.

அடுத்தது **இஜ்யை**. சுமார் பத்து மணிக்கு மேல் திரும்பவும் ஸ்நாநம் செய்வர். இது மாத்யாஹ்நிக ஸ்நாநம் எனப்படும். பின் மாத்யாஹ்நிகம் செய்து எம்பெருமானுக்கு ஆராதநம் செய்வர். இவ்வாராதனமே இஜ்யாராதனம் எனப்படுகிறது. பின் வைச்வதேவம் என வழங்கப்படும் பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்து ஆஹாரம் கொள்வர். பகவானுக்கு நிவேதநம் செய்தவற்றையே சாப்பிடலாம். நிவேதநம் செய்யாது எதுவும் சாப்பிடக்கூடாது.

அடுத்தது **ஸ்வாத்யாயம்**. வேத, வேதாங்க, வேதாந்தங்களைப் பிறர்க்கு போதிப்பது, மந்த்ரஜபம் செய்வது, மந்த்ரங்களின் அர்த்தங்களை நினைப்பது, ஸ்ரீமத்ராமாயணம் போன்ற இதிஹாஸங்களைப் பாராயணம் பண்ணுவது போன்ற நற்செயல்களில் காலத்தைக் கழிப்பது ஸ்வாத்யாயமாம்.

யோகம்:- ஸாயம் ஸந்த்யாவந்தநம், ஔபாஸநம், பகவானுக்கு நிவேதநம், வைச்வதேவங்களைச் செய்து சாப்பிட்டபின் பகவானை த்யாநம் செய்து கொண்டும் துதித்துக்கொண்டும் அவனது திருவடிகளின் கீழ் படுப்பதாக த்யாநம் செய்வதே யோகமாம். இப்படித் தப்பாது செய்பவர் பஞ்சகால பராயணர் என வழங்கப்படுவர்.

க்ரந்த சதுஷ்டயமும் காலக்ஷேபமும்

க்ரந்தம் என்றால் நூல். ஸ்ரீபாஷ்யகாரர் அருளிய ப்ரஹ்மஸூத்ர வ்யாக்யானமான ஸ்ரீபாஷ்யத்தையும், அவர் கீதைக்கு அருளிய வ்யாக்யாநமான கீதாபாஷ்யத்தையும், திருவாய்மொழிக்கு பிள்ளான் அருளிய வ்யாக்யாநமான திருவாறாயிரப்படி என்ற பகவத்விஷயத்தையும் ஸ்வாமிதேசிகன் அருளிய ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தையும் க்ரந்த சதுஷ்டயம் என்பர். இவற்றையும் ஆசார்ய பரம்பரையையும் வணங்கி பயபக்தியுடன் கற்பதே காலக்ஷேபமாம்.

குருபரம்பரை

குரு: என்ற சொல்லிலுள்ள 'கு' என்ற எழுத்து இருளைச் சொல்கிறது. 'ரு:' என்ற எழுத்து அவ்விருளைப் போக்குவதைச் சொல்கிறது. அஜ்ஞாநமாகிய இருளை குரு போக்குவதாலேயே அவருக்குக் குரு என்ற பெயர் உண்டாயிற்று. வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் விதித்துள்ள கர்மாக்களைத் தான் தப்பாது செய்வதோடு தமது சீடர்களையும் அப்படியே செய்விப்பதால் ஆசார்யன் என வழங்கப்படுகிறார்.

எவரொருவர் பகவானிடம் செய்ய வேண்டிய பக்தியைப் போன்ற பக்தியை ஆசார்யனிடம் செய்கிறாரோ அவருக்கு ஆசார்யரால் போதிக்கப்பட்ட கருத்துகள்

நன்கு தெளிவாக விளங்குவதோடு அவர் போதிக்காத கருத்துக்களும் புலப்படும் என்கிறது 'யஸ்ய தேவே பராபக்தி: யதா தேவ ததா குரௌ! தஸ்யைதே கதிதாஹி அர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:' என்ற ச்லோகம். த்ரோணர் ஏகலைவனுக்கு ஒரு எழுத்தும் உபதேசிக்காதிருக்கச் செய்தேயும் கையிலங்கு கனிபோல் தநுர்வித்யையைக் கண்ட பெருமை உலகமறிந்ததே. ஆகவே தான் ஆசார்யனினும் சிறந்த வேறு தெய்வமொன்று நானறியேன் என 'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே' என்றார் ஸ்வாமி தேசிகன். ஸ்ரீமந் நாராயணனும் தான் ஆசார்யனாக ஆகவேண்டும் என விரும்பியே பதரிகாச்ரமத்தில் நரநாராயணர்களுக்குத் திருவஷ்டாக்ஷரத்தை உபதேசித்தார். வில்லையும் வாளையுமே காணிக்கையாகக் கொண்ட கலியனுக்கும் உபதேசித்தார். பிராட்டிக்கு சரணாகதி மந்த்ரத்தை உபதேசித்தார். பிறநாடுகளிலும் புகழ்பெற்றதும் ஒப்புயர்வற்ற வேதாந்தகருத்துக்களை வெளியிடுவதால் கீதோபநிஷத் என உபநிஷத்தாகவே போற்றப்படும் கீதையை தேர்தட்டில்-கிடைத்த ஸமயத்தை விட்டுவிடக்கூடாது என்பதால்-அர்சுனனுக்கு உபதேசித்தார். நாராயணனாக இருக்கும் நிலையினும் ஆசார்யனாக இருக்கும் நிலையிலேயே அவர் பூர்ணத்வத்தைப் பெற்றார். எனவேதான் ஆசார்யனை பகவானுகவே எண்ணினர் பெரியோர்.

பலகற்றவர்க்கும் ஆசார்யபதவி கிடைப்பதில்லையே. அரிய அப்பதவி பெற்றவர் பகவானின் அம்சம் உடையவர் என்பதில் ஸந்தேஹம் ஏன்? இத்தகைய ஆசார்யர்களை நேரிடையான தமது ஆசார்யனிடமிருந்து அவர் ஆசார்யர் அவர் ஆசார்யர் என ஒவ்வொருவரையும் பெயர் சொல்லிப் பகவானீராகவுள்ள ஆசார்ய பரம்பரையை ஸேவிக்கவேண்டும் என ஸ ச ஆசார்யவம்ச: ஜ்ஞேய: என்ற ச்ருதியே விதிக்கின்றது. பகவானுக்கும் ஆசார்யனுக்கும் பலபடிகளில் ஒப்புமை உண்டு என்பதை ஸ்வாமிதேசிகன் ந்யாஸவிம்சதியில் ''அஜ்ஞாநாத்வாந்தரோதாத்'' என்ற ச்லோகத்தில் விளக்கியுள்ளார். அவரவர் ஆசார்யகளிடமிருந்து பகவான்வரை அநுஸந்தாநம் செய்வதுபோல் பகவான் முதல் தமது ஆசார்யன் வரை அநுஸந்தாநம் செய்வதும் உண்டு. இம்முறையை அடிப்படையாகக் கொண்டதே 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்ற தனியன். பகவான் முதல் ஸ்ரீபாஷ்யகாரர் வரையுள்ள ஆசார்யபரம்பரை அனைவருக்கும் பொதுவாகையால் அதை விளக்குகிறேன். ஸ்ரீமந் நாராயணன் முதல் ஆசார்யன். இவர் ஸ்ரீமதஷ்டாக்ஷரத்தையும் த்வயத்தையும், ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்தையும் உபதேசித்ததால் முதல் ஆசார்யரானார். எனவே தான் ''கமபிஆத்யம் குரும் வந்தே'' என இவருக்கு ஸ்வாமி தேசிகன் தனியனிட்டார். இரண்டாம் ஆசார்யை பிராட்டி ''மத்பத த்வந்த்வம் யே ப்ரபத்யந்தே பராயணம் । உத்தரிஷ்யாமி அஹம் தேவி ஸம்ஸாராத் ஸ்வயமேவதாந்'' என்று பகவான் பிராட்டிக்கு மந்த்ரரத்நமான த்வயத்தை உபதேசிக்க அதை ஸேநாபதியாழ்வானுக்கு லக்ஷ்மி உபதேசித்தாள். ஆகவே எம்பெருமானுக்கு அடுத்த ஆசார்யையாக பிராட்டியானாள். முன்றாமவர் ஸேநை முதன்மையார். நம்மாழ்வாருக்கு இவர் யோக தசையில் வேதாந்த அர்த்தங்கள் முதலியவற்றை உபதேசித்தார். எனவே மூன்றாமாசார்யர். நான்காமவர் நம்மாழ்வார். நம்மாழ்வாருக்கும் நாதமுனிகளுக்கும் இடையே பல நூற்றாண்டு கழிந்த போதும் நாதமுனிகளுக்கு இவரே யோக தசையில் மந்த்ர அர்த்தங்களை உபதேசித்தார். ஆகவே

ஆசார்யர் ஆகிறார். மேலும் கலியுக ஆரம்பத்தில் இவர் தான் ஸ்ரீமத் விசிஷ்டாத்வைத மதத்தை ப்ரசாரம் செய்தார். ஆகவே தான் 'ப்ரபந்நஜநஸந்தாந கூடஸ்தர்' என்ற விருதைப் பெற்றார். ஐந்தாம் ஆசார்யர் ஸ்ரீமந் நாதமுனிகள். இவருக்கு ரங்கநாதன் என்பது திருநாமம். இவர் சீடர் உய்யக் கொண்டார். புண்டரீகாக்ஷர் என்பது இவர் பெயர். அடுத்தவர் மணக்கால் நம்பிகள். இவர் ராமமிச்ரர் எனப்படுபவர். அடுத்த ஆசார்யர் ஆளவந்தார். யாமுநமுநி எனப்படுபவரிவர். இவர் சீடர் பெரிய நம்பிகள் .மஹாபூர்ணர் என்பது இவர் பெயர். ஸ்ரீ பாஷ்யகாரருக்கு மதுராந்தகத்தில் ஸமாச்ரயணம் செய்தும் மந்த்ரோபதேசம் செய்தும் ஆசார்யர் ஆனார். இவர் சிஷ்யர் பகவத்ராமாநுஜர் என்னும் ஸ்ரீபாஷ்யகாரர். இவர் வரை ஓராண் வழியாக வந்த குரு பரம்பரை, இவருக்குப்பின் பலகிளைகளாய்ப் பிரிந்தது. ஆகவே அவரவர் முன்னோர்களிடம் அவரவர் ஆசார்யபரம்பரையை அறிந்துகொள்ள வேண்டும். இத்தகையசிறப்பு வாய்ந்த ஆசார்யனை அடிபணிந்து அவர்தம் உபதேசம் பெற்று மனம், வாய், உடல் என்ற முக்கரணங்களிலும் ஒரே நிலையில் நின்று நற்கதி பெற்று உய்வது ஒவ்வொருவர் கடமையாம்.

முடிவுரை

பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீமதாண்டவன் ஷஷ்டி அப்தபூர்த்தி மலரில் அடியேன் கட்டுரைக்கும் இடம் கொடுத்த ஸ்ரீமதாண்டவன் ஸந்நிதியிலும் ஸ்ரீகார்யம் ஸ்வாமி ஸந்நிதியிலும் அடியேன் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

ஸ்ரீவிசிஷ்டாத்வைத தர்சனம்

ஸ்ரீமதுபயவே. வித்வான் பையம்பாடி ஸ்ரீதேவநாதாசார்யர் ஸ்வாமி

உலகத்தில் அனேக மதங்கள் தோன்றியிருக்கின்றன. அவை வைதிக மதமென்றும் அவைதிக மதமென்றும் பொதுவாக இரண்டு விதமாகும். வேதத்தை பிரமாணமாக ஏற்கும் மதம் வைதிக மதமாகும். வேதத்தை பிரமாணமாக ஒப்புக் கொள்ளாமல் ஸ்வதந்திரமாக தோன்றிய மதம் அவைதிக மதமாகும். அவை திக மதங்களைவிட வைதிகமதங்களில் விசிஷ்டாத்வைத தர்சனம் மிகச்சிறந்து திகழ்கின்றது. திருவாய் மொழியின் ஆரம்பத்தில் நம்மாழ்வார் ''உளன்சுடர் மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே'' என்கிற பாசுரத்தினால் ''தாம் போதிக்கும் பரமபுருஷன் வேதங்களிலும் வேதாந்தங்ககளிலும் விளங்குகின்றவன்'' என்றருளிச் செய்ததால் இக்கலியுகத்தில் நம்மாழ்வார் காலத்திலிருந்தே பரவியுள்ள விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயீம் பரம வைதிகமென்பதில் ஒருவித ஆக்ஷேபணையுமில்லை.

ஸம்ஸ்க்ருத திராவிட வேதங்களாகிற உபயவேதாந்தங்களும் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதிகளும் நம் விசிஷ்டாத்வைத தர்சனத்திற்கு ப்ரமாணமாகும். ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம். மோக்ஷார்த்தமாக அவன் திருவடிகளிலே அநுஷ்டிக்கும் பக்திப்ரபத்திகளே ஹிதம். நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்தமயமான நித்யகைங்கர்யமே பரமபுருஷார்த்தம். இப்படி இத்தர்சனத்தின் ப்ரமேயங்கள் சிறந்தவைகளாக விளங்குகின்றன.

பரமவைதிகர்கள் என்ற ஏற்றம் விசிஷ்டாத்வைதிகளுக்கே உரியது. ப்ரத்யக்ஷாநுமான ப்ரமாணங்களால் அறிந்து கொள்ள முடியாத அர்த்த விசேஷங்களை அறிவிக்கும் வாங்மயமே வேதமெனப்படும். வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளாத சார்வாக ஜைந பௌத்தாதிகள் பாஹ்யர்கள் எனப்படுவர். வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்தும் பரப்ரஹ்மம் குணசூன்யம் அசரீரம் விபூதிரஹிதம் என்றிப்படி மனம் போனபடி பேசுபவர்கள் குத்ருஷ்டிகள் எனப்படுவர்.

வேதம் கர்மகாண்டம் ப்ரஹ்மகாண்டம் என்று இருவகைப்படும். பூர்வபாகத்தை கர்மகாண்டமென்றும், உத்தர பாகத்தை ப்ரஹ்மகாண்டமென்றும் சொல்கிறார்கள்.

உபநிஷத்துக்களே ப்ரஹ்ம காண்டமாகும் பரம புருஷனுக்கு ஆராதன ரூபங்களானயாகாதிகர்ம விசேஷங்களை விஸ்தாரமாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்டமென்றும், அந்த கர்மங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பரமபுருஷனுடைய ஸ்வரூப ரூபகுண விபூத்யாதிகளை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்ம காண்டமென்றும் சொல்லிற்றாயிற்று. **वेदैश्च सर्वैरहमेव वेद्यः** என்கிற கீதையின்படி கர்ம காண்டமும் பகவானை ப்ரதிபாதிக்க வல்லதேயாயினும் அந்த ப்ரதிபாதனம் வ்யவஹிதமாயிருக்கும். உபநிஷத்தின் ப்ரதிபாதனமோ அவ்யவஹிதமாயிருக்கும்.

கர்ம காண்டத்தில் வரும் ஸந்தேஹங்களைப் பரிஹரிப்பதற்காக ஜைமினி என்ற மஹர்ஷி பன்னிரண்டு அத்யாயங்கள் கொண்ட பூர்வ மீமாம்ஸா சாஸ்த்திரத்தை இயற்றினார். ப்ரஹ்மகாண்டத்தில் உண்டாகும் ஸந்தேஹங்களை பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷி நான்கு அத்யாயங்கள் கொண்ட சாரீரக மீமம்ஸா சாஸ்த்ரத்தை இயற்றினர். இதற்கு சாஸ்த்ரமென்றும் பெயர் உண்டு. ஒவ்வொரு அத்யாயத்திலும் நான்கு பாதங்கள் உள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது உத்ரமீமாம்ஸாசாஸ்த்ரம். இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து நிர்ணயம் செய்யும் பகுதிக்கு அதிகரணமென்று பெயர். அத்தகைய அதிகரணங்கள் இந்த சாஸ்த்ரத்தில் நூற்றைம்பத்தாறு இருக்கின்றன. சில அதிகரணங்களில் ஒரு ஸூத்ரமிருக்கும். அனேக அதிகரணங்களில் அனேக ஸூத்ரங்கள் இருக்கின்றன. மொத்த ஸூத்ரஸங்க்யை ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக நான்கு அத்யாயங்களையும் பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்களையும் கொண்டது சாரீரக சாஸ்தரம் என்றதாயிற்று.

தத்வஹிதபுருஷார்த்தங்களை நாம் அறிவதற்கு உபநிஷத்துக்கள் முக்ய ஸாதனமாகும். அந்த உபநிஷத்துக்களின் அர்த்தங்களை ஸந்தேஹ விபர்யயங்களில்லாமல் நிஷ்கர்ஷித்து விளக்கக்கூடியது ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரமேயாகும். ஆகையால் வேதாந்திகளுக்கு இதுவே ப்ரதானமாகும்.

இச்சாஸ்த்ரத்தின் அர்த்தத்தை நன்றாக அறிந்தவர்களே ப்ரஹ்மஞானிகளாவர். மஹர்ஷிகள் அருளிய ஸூத்ரங்களின் அர்த்தங்களை நம்போன்றவர் சிறிதும் அறிய சக்தியற்றவர்களாதலால் அற்பமதிகளான நம்மிடத்தில் பரம க்ருபைகொண்ட முன்னோர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை தெளிவுபடுத்த பாஷ்யங்கள் செய்தருளினார்கள். அத்வைதம் த்வைதம் விசிஷ்டாத்வைதம் என்ற மூன்று மதங்களும் உலகப்ரஸித்தங்களாகும். அத்வைத மதத்திற்காக சங்கரபகவத்பாதாளும் த்வைத மதத்திற்காக ஆனந்ததீர்த்தரும் பாஷ்யமியற்றினார்கள். நம் விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத்ராமாநுஜா சார்யர் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்தார்.

உபநிஷத்துக்களின் உண்மையான அர்த்தங்களை ஸூத்ரகாரரின் உள்ளத்திற்குத் தகுந்தபடி பாரபக்ஷமில்லாமல் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது ஸ்ரீபாஷ்யமே. இது

பஹுவித்வஜ்ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டட விஷயமாகும். மேலும் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தின் ஆரம்பத்தில் **भगवद्बोधायन विस्तीर्णां ब्रह्मसूत्रवृत्तिं पूर्वाचार्या स्संचिक्षिपुः। तन्मजानुसारेण सूत्राक्षराणि व्याख्यास्यन्ते** என்று அருளிச்செய்திருப்பதால் ஸ்ரீபாஷ்யத்தின் ப்ராமாணிகத்வம் நன்கு விளங்குகிறது. ஆர்ஷவ்யாக்யா நுஸாரியாயும் அதிப்ராசீனமாயுமுள்ளது விசிஷ்டாத்வைதமதமே என்றும் அதை ஸ்தாபிக்கக் கூடிய பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமே என்றும் ப்ராமாணிகர்களின் கொள்கை.

ஸித்தாந்தமென்பதற்கு ப்ராமாணிகமாக அங்கீகரிக்கப்பட்ட அர்த்தம் எனறு பொருள். த்வைதம் என்பது பேதம். இரண்டாயிருக்கும் தன்மை எனப்படும். அத்துடன் **नञ्** சேர்த்தால் **अद्वैतम्** என்றாகிறது. அபேதமென்று பொருள். **विशिष्टस्य अद्वैतम् - विशिष्टाद्वैतम्.** ஸமஸ்த் சிதசித் வஸ்துக்களோடு கூடின ப்ரஹ்மம் ஒன்று என்று ஒப்புக்கொள்ளப்படுவதால் இந்த தர்சனம் விசிஷ்டாத்வைத மெனப்படுகிறது. சேதநாசேதநங்களாகிற இரண்டு தத்வங்கள் உண்மையாகக் கிடையாது என்றும் ப்ரஹ்மம் ஒன்றே உள்ளது என்றும் சொல்கின்ற இதரருடைய மதத்தை நிஷேதித்து மூன்று தத்வங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்கையே இந்த மதத்தின் ஸாரமாகும்.

வேதவாக்யங்களை உற்றுநோக்கினால் அவற்றில் இரண்டுவிதமான வித்யாஸம் காணப்படும். பேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். 2. அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள்.

क्षरंप्रधानं अमृताक्षरं हरः।

क्षरात्मानावीशते देवएकः

இத்யாதி சுருதிவாக்கியங்கள் சித் அசித் ஈச்வர ரூப தத்வத்ரயத்தின் உண்மையை விளக்கிக் கொண்டு பேதத்தைக் காட்டுகின்றன.

नेह नानास्ति किंचन

सर्वं खल्विदं ब्रह्म

तत्तवमसि

இத்யாதிகளான சுருதிவாக்யங்கள் பலவகையான வஸ்துக்களில்லாமையை தெரிவித்துக்கொண்டு அபேதத்தைக் காட்டுகின்றன.

ஆகையால் சுருதிகளில் சில இடத்தில் பேத ப்ரதிபாதனமும் சிலவிடத்தில் அபேதப்ரதிபாதனமும் இருப்பதாக தோன்றுவதால் பரஸ்பரவிரோதம் ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறது. விருத்தார்த்த ப்ரதிபாதன ரூபதோஷம் சுருதிகளில் இருக்கக்கூடாது. விரோதத்தை ப்பரிஹரித்து ஸந்வவயம் செய்ய வேண்டிய பொறுப்பு விமர்சன

நிபுணர்களான வைதிகோத்தமர்களுக்குள்ளது. ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம் என்று சொல்கின்ற அத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் சுருதிவாக்யங்களை மாத்திரம் முக்யமாக எடுத்துக்கொண்டு பேதத்தைக் காட்டும் சுருதிவாக்யங்களை அலக்ஷ்யம் செய்து விட்டார்கள். த்வைதிகளோ பேதத்தைக் காட்டும் சுருதிவாக்யங்களை மட்டும் முக்யமாக எடுத்துக் கொண்டு அபேதத்தைக் காட்டும் சுருதி வாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள்.

यस्यात्मा शरीरम्, यस्य पृथिवी यरीरम्, य आत्मनि तिष्ठन् இத்யாதி சுருதிவாக்யங்கள் பரமாத்மா ப்ருத்வி முதல் ஆத்மபர்யந்தமான ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியாயிருக்கிறான் என்பதை சொல்கினறன. இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளும் சுத்தமாக விட்டுவிட்டார்கள். ஸுபாலோபநிஷத் அந்தர்யாமி ப்ராஹ்மணம் முதலியவற்றுக்கு த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் ஆதரவு கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆகையால் த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக சுருதிவாக்யங்களை கௌணாதங்களாக கொள்ளுதல் அநாதரித்தல் போன்ற பலமான பலதோஷங்களுள்ளன. இம்மாதியான தோஷம் சிறிதுமில்லாமல் காணப்படும் மதம் நம் விசிஷ்டாத்வைத தர்சனமேயாகும்.

கீழே எடுத்துக்காட்டின மூன்று விதமான வேதவாக்யங்களையும் ஸமமாக ஆதரிக்கின்றவர்கள் விசிஷ்டாத்வைதிகளேயாவர். இம்மதத்தில் ஒரு சுருதி வாக்யத்திலும் கௌணார்த்த கல்பனை கிடையாது. எங்ஙனே என்னில் கடைசியாக எடுத்துக்காட்டப்பட்ட **यस्यात्मा शरीरम्** இத்யாதி சுருதிவாக்யங்கள் கடகசுருதிகள் எனப்படும். பேதத்தையும் அபேதத்தையும் விரோதலேசமேயில்லாமல் பொருந்தச் செய்யும் சக்தி வாய்ந்தவை அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்கள். ஆகையால் இவற்றுக்கு கடகசுருதிகளென்னும் பெயர் மிக பொருத்தமானதாகும்.

नेह नानास्ति किंचन இத்யாதிகளான அத்வைத சுருதிகள் சொன்ன அபேதத்தையும் **क्षरं प्रधानममृताक्षरं हरः** இத்யாதிகளான த்வைத சுருதிகள் சொன்ன பேதத்தையும் ஸமந்வயப்படுத்தும் வழி எங்ஙனே என்னில் சிதசிதீச்வரர்களான மூன்று தத்வப்பொருள்களில் ஸ்வரூபபேதம் ஸத்யம். ஆகையால் **क्षरं प्रधान** மித்யாதிபேத சுருதியானது பேதத்தைச் சொல்லியிருப்பது பொருத்தமேயாகும் ப்ரஹ்மம் சேதநாசேதநவிசிஷ்டமாய்க் கொண்டு ஒன்றேயாகிறபடியால் **सर्वं खल्विदं ब्रह्म** இத்யாதிகளான அபேதசுருதிகளும் பொருந்தத்தட்டில்லை. **यस्यात्मा शरीर** மித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண சுருதிகள் ஸர்வேச்வரனை ஸர்வாத்ர்யாமி என்று தெரிவிக்கும் முறையால் பேதத்தையும் அபேதத்தையும் ஸமந்வயப்படுத்தி விடுகின்றன என்பது நம் விசிஷ்டாத்வைதர்சநாசார்யர்களின் ஸித்தாந்தம்.

ब्रह्म एकमेव என்ற சுருதியும் விசிஷ்டத்தைச் சொல்வதில் ஒருவித குறையுமில்லை. இதனால் பேதத்திற்கும் அபேதத்திற்கும் ஒருவித அபாயமுமில்லை என்றதாயிற்று.

சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநாவஸ்துக்களின் இருக்கை ப்ராமாணிகமாகையால் அபலபிக்க முடியாது. இதுபோல விசிஷ்டைக்யமும் அநுபவ ஸிகைமாகையால் அபலமிக்க முடியாததே. ஆகவே உண்மையில் வெவ்வேறுபட்ட வஸ்துக்களும் சரீர சரீரிபாவ நிபந்தனமாகவே ஒன்றாக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையால் அத்தகைய சரீரசரீரிபாவத்தை போதிக்கின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணாதி ரூபங்களான சுருதி வாக்யங்களுக்கு நம்மதத்தில் அதிககௌரமுள்ளது. அத்வைதிகள் பேதச்ருதிகளை உபேக்ஷிப்பதுபோலவும் த்வைதிகள் அபேத சுருதிகளை உபேக்ஷிப்பதுபோலவும் விசிஷ்டாத்வைதிகள் ஒருவிதமான சுருதியிலும் அநாதரம் காட்டவில்லை. ஆகையால் ஸகல சுருதி ஸாமரஸ்யம் நம்மதத்திற்கே உள்ளது. பிறமதத்தினருக்கு இல்லை என்று திடமாகச் சொல்லலாம்

வேறுமதத்தினர்கள் ஒப்புக்கொள்ளாத அநேக அர்த்தங்களை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். நித்யஸூரிகளின் ஸத்பாவம். பரமபுருஷனுடையகல்யான குணாச்ரயத்வம் திவ்யமங்களவிக்ரஹவிசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றை எல்லாம் விட்டுவிட்டு சரீரசரீரி பாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைதமென்று சொல்வதற்குக் காரணமென்னவெனில் நம் ஸித்தாந்தத்தில் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது. அநேகார்த்த விசேஷங்களுள் जगच्छरीरकत्व மென்பதே மிகப்ரதானமானது. ஆகையாலே தான் சரீரசரீரி பாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைதமென்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இந்த சரீராத்ம பாவத்தை தெரிந்து கொள்ளாததினாலேயே இதரமதஸ்தர்கள் ஸகல சுருதிஸாமரஸ்யத்தை நிர்வஹித்துக்காட்டமுடியாமல் ச்ரமப்படுகிறார்கள். குத்ருஷ்டிகளுடைய குத்ஸித சோத்யங்களை அநாயஸமாக பரிஹரிக்க உபயோகப்படுவது இந்த சரீராத்மபாவமேயாகும்.

இங்கு ஸ்ரீதேசிகனின் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் ப்ரதான ப்ரதிதந்த்ராதி காராந்திமசுலோகரத்னம் குறிப்பிடத்தக்கது. அதாவது

यद्यतं यतिसार्व भौमकथितं विद्यदविद्यातम :
प्रत्यूषं प्रतितन्त्रमनितमयुगे कश्चित् दिपश्चित्त मः
तत्रैकत्र झटित्युपैति विलयं तत्तन्मतस्थापना
हेवाक प्रथमान हैतुक कथा कल्लोल कोलाहलः என்பதாகும்.

மற்ற ஸித்தாந்திகள் ஒருவரும் அங்கீகரிக்காத தன் ஸித்தாந்தத்துக்கே அஸாதாரணமான அர்த்தம் ப்ரதிதந்த்ரம் வேதாந்திகளான நம்முடைய தர்சனத்திற்கே அஸாதாரணமுமாய் ப்ரதானமுமான அர்த்தம் சேதநாசேதநங்களுக்கும் ஈச்வரனுக்கு முண்டான சரீராத்மபாவ ஸம்பந்தாதிகள் இந்த ப்ரதான ப்ரதிதந்த்ரார்த்தத்தை நன்றாக தெரிவித்து கொண்ட ஒரு வ்யக்தி நிற்குமிடத்தில் அந்ய மதத்தினர்கள் எத்தனை பேர்கள்

கூடி எவ்வளவு வாத கோலாஹலங்களைச் செய்தாலும் அவர்களுக்கு தோல்வி ஏற்படுமே தவிர வெற்றி ஏற்படாது என்பது இந்த சுலோகத்தின் திரண்ட பொருள்.

இதே மாதிரி ப்ரஹ்மம் நிர்குணம் என்று அத்வைதிகள் கூறுகின்றனர். பரமபுருஷனுக்கு ஹேய குணமில்லாமையை தெரிவிப்பதற்காக குணமென்று சொல்லியிருக்கிறது. அநந்தகல்யாண குணங்களை பரமபுருஷனுக்குச் சொல்கின்ற அநேக சுருதிகளுக்கு விரோதம் இல்லாமல் நிர்வஹிக்க வேண்டும். ஆகவே நிர்குணசுருதிக்கு ஹேய குணரஹிதத்வத்தைச் சொல்வதில் நோக்கு என்று கூறவேண்டும். ப்ரக்ருதி முதலியவற்றுக்கு ஜகத்காரணத்வத்தை பரிஹரிக்கின்ற சாரீரக மீமாம்ஸா சாஸ்த்ரமானது அனேகமாக ஒவ்வொரு அதிகரணத்திலும் பரமபுருஷனிடத்திலிருக்கின்ற திருக்கல்யாண குணங்களை எடுத்துக் காட்டிக் கொண்டே இத்தகைய சுபகுணமில்லாததற்கு காரணத்வமே அஸம்பாவிதமாகுமென்று உணர்த்தி முடிவடைகிறது.

ஆகவே பேதாபேத சுருதிகளுக்கும் நிர்குணஸகுண சுருதிகளுக்கும் ஒருவித விரோதமுமில்லாமல் அத்யந்த ஸாமங்ஜஸ்யம் விசிஷ்டாத்வைததர்சனத்திலேயே உள்ளது என்று ஸூத்ருடமாகக் கூற இயலும்.

ஸ்ரீ :



ஸ்ரீமத் தேரெழுந்தூராண்டவன்
ஸ்ரீவேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

வேதச்சிறப்பு

ஸ்ரீமதுபயவே. வித்வான் நாவல்பாக்கம்
யஜ்ஞவராஹதாதாசாரியர் ஸ்வாமி

कटाक्षाः श्रीनिवासस्य छया पूर्णातिशितळाः ।
अपवर्गं च भक्तेभ्य आयुः कीर्तिं प्रजां ददुः ॥

ஸ்ரீய: பதியான ஸ்ரீமந்நாராயணன் இந்த உலகத்தையும் மனிதர்களையும் படைத்து அவர்கள் சுகமாக வாழவேண்டியதற்கு ஏற்ற வழியைக்காட்டும் வேத சாஸ்திரத்தை உபதேசித்து அருளினார்.

இந்த வேதநூல் நமக்குக்காட்டும் வழி தர்மவழி எனப்படுகிறது. உலகமும் மனிதனும் தோன்றியது முதல் இந்த வேத நூல் ப்ரசாரத்தில் இருந்து வருகின்றதாகையால் ஸநாதன தர்ம வழி எனப்படுகிறது.

நம் வேதவழியில் யுக்திக்குப் புறம்பான விஷயம் எதுவும் இல்லை. எங்கும் நிறைந்த பகவான் ஒருவன் இருக்கிறான் என்பது யுக்திக்குப் புறம்பானதன்று.

வேதம் காட்டிய வழியைப் பின்பற்றிச் சென்றால் நாம் சுகமாக வாழலாம் என்பதும் யுக்திக்கு ஒவ்வாத விஷயமன்று.

அறிவில் சிறந்த நம் முன்னோர்கள் வேத நூலைப் போற்றி மிகுந்த ஊக்கத்துடனும் ஆதரத்துடன் வெகுகாலமாய் செயல் படுத்தி வந்தனர். வேத நூல் நம் நாட்டின் மேன்மைக்கும் நாகரீகத்திற்கும் ஆணிவேராக அமைந்துள்ளது.

நம் வேதம் பிறமதங்களால் அழிக்க முடியாமலும் அசைக்க முடியாமலும் இன்றளவும் இருந்து வருகிறது. உலகத்திலுள்ள எல்லா நூல்களுக்கும் முற்பட்டதாய் பகவானைப் போல் நித்யமாயுள்ளது. இந்த வேத நூல் எவராலும்

இயற்றப்பட்டதன்று. இந்த வேத நூலை கற்காமல் சிலர் தமக்குத் தோன்றியபடி பேசுகின்றனர். வேத வழி புறக்கணிக்கப்பட்டால் என்ன தீங்குகள் மனிதர்களுக்கு உண்டாகுமென்பதை வேதங்கள் விரிவாகக் கூறுகின்றன. பிழைப்பதற்காக பொருள் தேடுவதும் இன்பம் பெறுவதும் மனித வாழ்க்கையின் இயற்கையாயுள்ள லக்ஷ்யங்கள். இவை இரண்டும் முறையே அர்த்தம் காமம் எனப்படுகின்றன. இவற்றைப் பெறுவதற்கு இது வழி இது வழியன்று என்று வேதம் கூறுகிறது. இவற்றில் வழி தரமம் என்றும் அல்லாதது அதர்மம் என்றும் சொல்லப்படுகின்றன. இவற்றில் தர்மம் ஒங்கினால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காத செல்வம் நிறைந்திருக்கும். தீங்கு ஓங்கினால் நேர் விபரீதமான பலன்கள் உண்டாகும். ஒருவர் வேத தர்மத்தைச் செய்தால் அது அவருக்கு மட்டுமல்லாது நாட்டுக்கும் நலம் தரும். அதர்மம் ஒருவன் செய்தால் அதனால் நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் அதர்மத்தின் பலனை அநுபவிக்க நேரிடுகிறது. ஆகையால் நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் அதர்மத்தை தவிர்பதற்க்கும் வேத தர்மத்தை மிகுந்த பற்றுடன் முறைப்படி தவறுமல் செய்வதர்க்கும் தேவையான அறிவை பூரணமாக பெறும்படி செய்வது நம் கடமை.

எல்லா மனிதருக்கும் பொதுவான தர்மம் ஸாமான்ய தர்மம் என்றும் அந்தந்த வர்ணத்திற்க்கும் ஆச்ரமத்திற்க்கும் உரிய தர்மம் விசேஷ தர்மம் என்றும் இருவகையாக பிரிக்கப்படுகின்றன. இதில் ஸத்யம், அஹிம்சை, திருடாமை முதலியவகைள் ஸாமான்ய தர்மம். வேதம் ஓதுவது யாகம் செய்வது முதலியவைகள் விசேஷ தர்மங்கள்.

இவற்றில் யக்ஞும் யாகம் கர்ம எனப்படுகிறது. அது நித்யம், நைமித்திகம், காம்யம், என்றிப்படி பலவகைப்பட்டது. வேதத்தில் மிகவும் விரிவாக உள்ளதான முதல் பாகம் அக்நிஹோத்ரம் முதல் விச்வக்ஞஜாமயனம் முடிவாக கொண்ட கர்மாக்களையே விரிவாகக் கூறுகின்றன.

நித்யதைமித்திக கர்மங்களை எல்லோரும் செய்தே ஆகவேண்டும் தவறினால் பாபம் வரும். வேதத்தில் சொல்லப்பட்ட நித்ய நைமித்திக கர்மாக்கள் உலக வாழ்வுக்கு மிகவும் முக்கியமானவை. இவைகளின் பெருமைகளையும் முக்யத்துவத்தையும் அளவிட்டுச் சொல்ல முடியாது. இவைகளை செய்யாவிட்டால் மழை முதலானவை இல்லாமல் மக்கள் வறுமையால் கஷ்டப்படுவார்கள். ப்ரம்ஹஞானிகளும் மனத்துய்மை பெறுவதற்காக இந்த கர்மாக்களைச்செய்ய வேண்டும் என்று ஆசாரியர்கள் கூறுவார்கள். வேத கர்மாக்களை ஸ்ரீவைஷ்ணவனாக இருப்பவன் விடவே கூடாது என்பது ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்களின் கொள்கை. ஆகையால்தான் ஸ்ரீவைஷ்ணவத்தில் ஆசாரியர்கள் ஆழ்வார்கள் எல்லோரும் வேதம், வேதகர்மாக்களை பகவதாராதன ரூபமென தங்கள் நூல்களில் எடுத்து விசேஷமாகக் காட்டியுள்ளார்கள்.

ப்ரத்யக்ஷம் ஊகம் முதலான ப்ரமாணங்களால் அறியமுடியாத எம்பெருமானை அடைய வழிகளை தெரிவிப்பதால் இந்நூலுக்கு வேதம் மறை என்று பெயர் ஏற்பட்டது.

பிறக்கும் பிராணிகள் பாலில்லாமல் ஒரு நிமிடம் கூட பிழைத்திருக்க மாட்டா என்பதை அறிந்து ஒவ்வொரு ப்ராணிகளையும் படைக்கும் போதே அவைகளுடன் பாலையும் அடைத்துக் கொடுக்கிறான் எம்பெருமான். ஆத்மாக்களை தோன்றச் செய்கிற ஸர்வேச்வரன் அறிவு என்ற பாலை ஊட்டுவதற்காக அற்புதமான வேதங்களான பசுக்களை என்றும் இருக்கும்படி செய்திருக்கிறான்.

सर्वेवेदाः यत्रलब्ध प्रतिष्टाः योगक्षेमौ साधु यत्राथतेते ।
यच्छुसूषा श्रीशसन्तोषहेतुः गावोगावोनूनमाद्यन्त हीनाः ।।

ஊட்டினால் பசு பால் கொடுக்கும் அதுபோலவே மக்கள் வேதங்களை ஓதினால் தான் அறிவு பெறலாம். பசு தன் கன்றுக்காக இறங்கி விடும் பாலில் மிகுதியாக இருப்பதைப் பாத்திரங்களில் கொண்டு ஊட்டாத பிள்ளைகளுக்கு அளித்துப் போஷனம் செய்வது போல் சிலர் ஓதி வெளி வந்த வேதங்கள் ஓதாத மக்களுக்கும் அவர்கள் மூலம் பயனளிக்கின்றன. அப்போதைக்கப்போது சுரந்த பால் தான் ஆரோக்கியமளிக்கும். சிலராவது வேதம் எப்போதும் ஓதிவராவிட்டால் பால் பெற இயலாது. ஊருக்கு ஒரு மஹான் இருந்தாலும் ஊரில் எல்லோரும் நற்பயன் பெறுவர். எல்லா மக்களுக்கும் மேலே உள்ள தேவர்களுக்கும் ஆயிரம் தாய் தந்தைகளுக்கும் மேலாகப்பரித்து வரும் வேதங்களை ப்ரசாரம் செய்வதற்காகவே ஸ்ரீரங்கநாத திவ்ய மணி பாதுகா தேவி கருணை கூர்ந்து பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமதாண்டவனை அவதரிப்பித்தான். எந்த லோகத்திலும் தெய்வசக்தி வாய்ந்தவரே மிகச்சிறப்பாக விளங்குகிறான். அந்த தெய்வசக்தி வேதப்படநத்தாலும் வேதமந்திரங்களைச் சொல்லி யாக யக்ஞம் செய்வதாலும் உண்டாகிறது. ஆகையால் தான் முன்பு தேவர்களும் வேதமந்திரங்களை ஓதி யாக யக்ஞங்களை செய்து தெய்வ சக்தியை பெற்றதாக வேதம் கூறுகிறது.

மந்த்ர சக்தி

தேவாசுரர்கள் வெகு நாட்களாக சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள். யாரும் ஜெயிக்கவில்லை யாரும் தோற்கவுமில்லை. இந்த நிலைக்கான காரணத்தைக் கண்டு பிடிக்க வேணும் வெற்றியின் வழியை அறிய வேணும் என்று ஆசை கொண்டனர் தேவர்கள். ப்ரஜாபதியை அணுகி வெற்றி தோல்வியில்லாத நிலைக்குக் காரணம் என்ன வென்றும் கேட்டனர். அதற்கு ப்ரஜாபதி இது மிகவும் ரஹஸ்யமானது என்றும் இதற்குக் காரணம் த்வஷ்டா ஒருவரே அறிவார் என்றும்

அவர் நடு சமுத்ரத்தில் கப்பல் நகரத்தில் வசிக்கிறார் அங்கு சென்று அவரைக் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார். உடனே இந்திரன் பட்சி வேடத்தில் கப்பல் நகரத்திற்கு சென்று சப்தம் செய்தான். த்வஷ்டாவின் மனைவி வெளியில் வந்து சப்தம் செய்பவன் இந்திரன் தான் என்பதைத் தெரிந்துக் கொண்டு எதற்காக வந்தாய் என்று கேட்டாள். இந்திரன் தான் வந்ததற்கு காரணத்தைத் தெரிவித்தான். த்வஷ்டாவின் மனைவி த்வஷ்டாவிடம் ரஹஸ்யத்தைத் தெரிந்துக் கொண்டு இந்திரனிடம் பின் வருமாறு ரஹஸ்யத்தை கூறினாள். ப்ரஹஸ்பதி தெய்வத் தன்மை உள்ளவர். அவ்விதமே சுக்ரனும் தெய்வத்தன்மை வாய்ந்தவர். இவர்கள் இருவருமே இரண்டு பக்கத்திற்கும் பின் பலமாக நிற்பதால் ஒருவரை ஒருவர் ஜெயிக்க முடியவில்லை. தேவர்களுக்கு ஜெயிக்கவேணும் என்ற எண்ணம் இருந்தால் அவர்கள் அஸுரர்கள் பக்கத்தில் உள்ள சுக்ரனை தங்கள் பக்கத்திற்கு அழைத்துக் கொள்ள வேணும். அவ்விதம் செய்தால் தேவர்கள் வெற்றியை அடையலாம் என்று. இதை அறிந்த இந்தரன் சுக்ரஸாமாவை கானம் செய்து துதித்தான். சுக்ரனும் சுக்ரஸாம கானத்தால் உற்சாகம் கொண்டு அசுரர்களை விட்டு விட்டு தேவர்களின் பக்கம் வந்துவிட்டார். முடிவாக தேவர்கள் வெற்றியை அடைந்தனர். அசுரர்கள் தைவசக்தி இல்லாததால் தோல்வி யுற்றனர். இக்கதை யிலிருந்து தெய்வ பலம் உள்ளவர்களே வெற்றியை அடைவார்கள் என்பது தேவரஹஸ்யம். தைவபலம் மந்த்ராதீனமாக உள்ளதை மனதில் கொள்ளவேணும்.

பாபத்ததை போக்குவது வேதம்.

உலகில் பாபமில்லாதவர்கள் இரண்டு பேர் தான். அவர்கள் பிறருடைய பாபங்களையும் போக்கும் சக்தி வாய்ந்தவர்கள். இருவர்களில் முதல்வர் பகவான் நாராயணன் ''अपहतपाप्मादि योदेव एकः नारायणः என்கிறது உபநிஷத். இரண்டாவதான வேதம் பகவானைக் காட்டி கொடுப்பது போல் மக்களின் பாபத்தை போக்கி பகவத் கைங்கர்யத்திற்குத் தகுதி உள்ளவனாகச் செய்கின்றது. **अपहतपाप्मास्वाध्यायः** என்றது வேதம். வேதத்தின் பெருமையை வேதமே சொல்லுகிறது. ஆரண்யகத்தில் மக்களின் பாபங்களை வைதிகமான அக்னி போக்குகிறான். மக்களிடம் இருந்த பாபம் அக்னிக்கு வந்துவிட்டது. வஸ்த்திரத்திலுள்ள அழுக்குகளை ஜலத்தினால் போக்குகிறோம் வஸ்த்திரத்தில் உள்ள அழுக்கு ஜலத்தில் வருவது போல் மக்களிடம் உள்ள பாபம் அக்னிக்கு வந்துவிட்டது. அக்னிபகவான் தன்னிடம் ஓட்டிக் கொண்ட பாபத்தைத் தன்னிடத்தில் செய்யப்படும் ஆஹுதியில் போகும்படி செய்தான். ஆஹுதி யக்ஞத்தின் இடத்தில் போகும்படி செய்தான். யக்ஞம் யக்ஞத்தில் கொடுக்கப்படும் தக்ஷிணையில் போகும்படி செய்தது. அந்தனர்கள் தங்களிடம் வந்த பாபத்தை காயத்ரீ முதலான சந்தஸ்களிடம் வைத்து விட்டார்கள். சந்தஸ் வேதத்தினிடத்தில் அந்த பாபத்தை வைத்தது. வேதம் அந்த பாபத்தை பொசுக்கி தம்மிடம் வராதபடி செய்துவிட்டது. அக்னியில் விழுந்து பஞ்சுஎவ்வாறு பொசுக்கப் படுகிறதோ அவ்வாறே பாபம் வேதத்தில் ஒட்டாதபடி

செய்துவிட்டது. ஆகையால் தான் வேதம் பாபமற்றது என்று சொல்லப் படுகிறது. மேலும் மக்கள் தங்களுக்கு ஏற்படும் பாபத்தை போக்க வேதபாராயணம் செய்கிறார்கள். வேதத்தினிடத்தில் தெய்வத்தின் சக்தி இருப்பதால் அதனிடத்தில் எந்த பாபமும் நெருங்குவதில்லை. அப்படிப்பட்ட சக்தி வாய்ந்தது வேதம்.

வேதச்சிறப்பு ராமாயணத்தில்

''விப்ராணும் ஜ்ஞாநதோ ஜ்யை ஷ்ட்யம்'' என்கிறார்கள் சாஸ்த்ரகாரர்கள். அந்த ஜ்ஞாநம் என்பது வேத வேதார்த்தங்களைப் பற்றிய அறிவே. நமது குலக்ரமாகத மானதும் கடலென்னலாம்படி யானதும் எல்லா நன்மைக்கும் ஆணிவேறாய் விளங்குவதுமான வேதவித்யை இருக்கும்போது வேறு வித்தைகளில் புகுந்து பொழுது போக்கு மவர்களை வேதம் துர்ப்ராமணன் என்று திட்டுகிறது. இத்த கைய வேதத்தை ஓதுவது மிக கடினமானது. வேதாத்யயனம் செய்த உத்தமர்களுக்கு உபய விபூதியையும் கொடுத்தாலும் போதாது **याहिनः सततं बुद्धिः वेदमन्त्रानु सारणी** என்று ஸ்ரீ மத் ராமாயணத்தில் தங்களுடைய வேதாத்யயன பரிச்ரமத்தை மஹர்ஷிகளே வெளியிடுகிறார்கள். அத்யயனம் செய்த வேதத்தை மறவாமல் பாதுகாப்பது மிகமிக கஷ்டம். பிடும் ஹயக்ளும் ஒன்றே வேதத்தை மறவாதபடி காக்கும் வழி.

अलसाः स्वादुकामाश्च महतांचपिसमताः ।
निसस्वाध्याय शीलत्वात् नान्यत् किंचनकुर्वते ।।

இது வேதாத்யயனம் செய்து வரும் பிள்ளைகளை ''படம் பிடித்து காட்டும் ஸ்ரீ மத்ராமயண வசனம். இந்த பிள்ளைகள் மிகச்சோம்பர்கள். நாக்கு ருசிக்க நன்கு சாப்பிட விரும்புவார்கள் என்கிறது இவர்களை. அப்படியானால் இவர்கள் அயோக்யர்களான பிள்ளைகள் போலும் என்று தானே நமக்கு உடனே நினைக்கத் தோன்றுகிறது. அப்படி இல்லையாம். மஹான்களே புகழக்கூடிய பிள்ளைகள் இவர்கள் என்கிறது. அடுத்தபடி. சோம்பயையும் சாப்பாட்டுப் பிரியர்களையும் பெரியோர்கள் புகழ்வார்கள் இதை மேல் வசனம் விளக்குகிறது. எப்பொழுதும் இந்த குழந்தைகள் வேதத்தையே உருசொல்லிக் கொண்டு வருவதால் வேறு வேலைகளைச் செய்ய சோம்புருவார்கள். வயிற்றுக்கு நிறைய வேண்டி இருக்கு. (ஸதா உச்சரிப்பதால்) இவர்களுக்கு வேதாத்யயனம் செய்யும் பிள்ளைகளின் வயிற்றில் எப்போதும் தவளை கத்தும்படி ஈரம் இருக்க வேணுமென்று பாட்டிமார்களின் பேச்சு. ஸதா உச்சரிப்பதில் எவ்வளவு ச்ரமம் இருக்கிறது என்பதை நன்றாய் கவனித்து பார்க்கவேணும். ஸ்ரீ கௌஸல்யாதேவியின் சொந்த செலவில் அவளுடைய அரண்மனையில் பெரியதொரு மாணவகுழந்தைகளின் கூட்டம் வேதாத்யயனம் செய்து வந்ததாம். பெரும் பண்டிதரான தைத்திரீயசாகசாரியார் ஒருவர் அந்த மாணவர்களை மேல்பார்த்து வந்தார்.

கௌசல்யாதேவி அவரிடமும் அவருக்கு கௌஸல்யாதேவியிடமும் முறையே மிகுந்த பக்தியும் மதிப்பும் இருந்து வந்ததாம். இப்படி எல்லாம் ஸமயம் நேர்ந்தபொழுது வால்மீகி பகவான் நமக்கு தெரிவிக்கிறார். நாமும் அம்மாதிரி செய்யவேணுமென்ற நோக்கத்தோடு மேலும் ராக்ஷஸ பசங்களே எங்கும் நிறைந்த லங்கா பட்டிணத்திலும் விடியற் காலைகளில் வேதகோஷம் கேட்கிறதாம். திருவடியின் (அநுமார்) காதில் ராக்ஷஸர்களிலும் அத்யயனம் அத்யாபனத் தொழில் செய்து வருபவர்கள் பல உண்டு. இத்தகைய நமது குல தனத்தை அதற்கேற்ற ஆசார வேஷம் இவைகளை நாம் கொஞ்ச கொஞ்சமாக இழந்து வருகிறோம். பிற மாகாணத்தில் வேதம் வடமொழி இவைகள் உயிருடன் காண்கிறது. ஓரளவுக்கு பிற மாகாணத்தில் தேச பாஷையுடன் தொடர்பு இருப்பதால் வடமொழி கொஞ்சம் ஜீவித்து இருப்பது போல் காண்கிறது. நம் மாகாணத்தில் வடமொழி தூக்கி எறியப்பட்டுள்ளது. வேதம் வடமொழியில் இருப்பதால் அதன் கதி என்னவாகும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன் வாழ்ந்து வந்த உதயநாசார்யர் என்பவர் அக்காலத்திலேயே வேதப்ரசாரம் குறைந்து விட்டது என்று குமுறுகிறார். முன்பு ஸஹஸ்ரசாகைகளுடன் வேதம் அதிகரிக்கப்பட்டது. பிறகு ஷங்கடங்களுடன் ஏதோ ஒரு வேதம் ஓதுவது வழக்கத்தில் இருந்து வருகிறதாம். இப்போது அவர் இங்கு வந்து பார்த்தால் என்ன சொல்லுவாரோ? யாமறிவோம்.

மேலும் குஸலவாளுக்கு ராமயண உபதேசத்திற்குத் தகுதியை கூறுமிடத்தில்

कुशीलवौतु धर्मज्ञौ वेदेषु परिनिष्ठितौ । वेदोप बृंहणाथ

என்று தர்மம் வேதம் இவைகளை அறிந்தவர்கள் வேத கருத்தை நன்கறிந்துக் கொள்வதற்காக ராமாயணத்தை அதிகரித்ததாகச் சொல்லப்படுகிறது. ராமலக்ஷ்மணாதிகளை மக்களுக்கு காட்டுமிடத்திலும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

तस्यांपुर्यां अयोध्यायां वेदवित् सर्वसंग्रहः ।

इक्ष्वाकूणां अश्यः यज्वा धर्मर+तोवशी ।।

அந்த அயோத்யா பட்டிணத்திலே தெரிந்தவரும் யாகம் செய்தவரும் தர்மமறிந்தவரும் என்று தசரத மகாராஜாவுக்கு முதல் யோக்யதை வேதம் அறிந்தவர் யாகம் செய்தவர் தர்மிஷ்டர் என்று முதலில் கூறி இருப்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேணும். ராமலக்ஷ்மணாதிகளை முதன் முதலில் கூறுமிடத்தில்

सर्वेवेदविदः शूराः वैदिकाध्ययनेरताः ।

தசரதமகாராஜாவின் புத்ரர்கள் எல்லோரும் வேதம் அறிந்தவர்கள் வேதஸம்மந்தமான படிப்பில் மிக ஆசை கொண்டவர்கள் என்று கூறி இருப்பது கவனிக்கத்தக்க விஷயம். ஸீதா பிராட்டியின் திருமுகத்திலிருந்து முதன் முதலில் தோன்றும் பாசுரம்.

राज्यंद्विजातिभिः जुष्टं राजसूयाभिषेचनम् ।
कर्तुमर्हतिते राजावासवस्येव लोककृत् ।।
दीक्षितं व्रतसंपन्नं वराजिन धरं शुचिम् ।
कुरङ्ग शृङ्ग पाणिं च पश्यन्तीत्वां भजाम्यहम् ।।

என்று க்ஷத்ரியவர்களிலே தலை சிறந்தவராக விளங்கும் ஜநகமஹாராஜனின் புத்திரியாக அவதரித்தவள். வீரசெயலால் பத்துதிக்கிலும் தேர் ஓடும்படியான வீரசக்ரவர்த்தியின் நாட்டு பெண்ணாக வாழ்க்கைப்பட்டவள் புருஷர்களுக்கே மோகத்தை கொடுக்கும் அழகு வாய்ந்தவனும் யுவாவாயுமுள்ள சக்ரவர்த்தி குமாரரான ராமபிராநுக்கு மனைவியாக இருக்கும் பிராட்டி ஸகலைச்வர்யம் படைத்தவள். ஓர் காட்டிலே வாழும் ஆசாராநுஷ்டானம்முள்ள அந்தண குடும்ப பெண் விரும்புவது போல் தன் விருப்பத்தை ஸ்ரீராமனிடம் ராஜஸூய யாகத்தில் தீக்ஷாநியமம் கொண்டு அச்சமயத்தில் மான்கொம்பு மைத்ராவருண தண்டம் தலைப்பாகை மையிடுதல் நவநீதம் பூசுதல் முதலான தீக்ஷாவேஷத்தோடு உம்மை பார்க்க ஆசைப்படுகிறேன் என்று சொல்லும் வாக்யத்தை நம்நாட்டு பெண்கள் பார்க்கவேண்டும். இம்மாதிரியான வேதவைதிகமானவைகளை காட்டும் இடங்கள் ராமாயணத்தில் வாசாமகோசரம்.

வேதவைதிக மஹான்களின் ஆச்ரமத்தை தான் பார்த்த போது இருந்த நிலையை விளக்குகிறார் ஆரண்யகாண்டத்தின் துவக்கத்தில்.ஏ

अग्निरारणैः सुग्भाण्डैः कुजिनैः कुशैः समिद्भिः तोयकलशैः
बलिहोमार्चनैः दानौः चीरकृष्णाजिनाम्बरैः।
ब्रह्मविद्भिः महाभागैः ब्रह्मणैरुपशोभितं ।
तत् ब्रह्म यवन प्रख्यं ब्रह्मघोषनिनादितम् ।

என்று வேதவைதிகர்களின் ஆச்ரமம் எவ்வாறு காக்ஷியளிக்கறது என்பதை நாம் உணர வேண்டும்.

ஆழ்வார்களும் வேதமும்:-

ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களில் வேதம் தனி இடத்தைப் பெற்றுவிட்டது. வேதம் போனவழியை பின்பற்றி ஆழ்வார்களின் அனுபவம் இருந்து வருகிறது. ஆழ்வார் அனுபவிக்கும் எம்பெருமான் வேதப்ரதிபாத்யன் வேதமே எம் பெருமானின் அவதார விசேஷம் ஏன்று ஆங்காங்கு அருளிச்செய்திருக்கிறார்கள். பெரியாழ்வார் - நான் மறையாய் வேள்வியாய் (1–4–8), மழிசை பிரான் வேதநான்குமாகி-சீர்கெழுநாள் மறையானவனே. முன்னுருவில் வேதநான்காய்-மன்னு மறையும் நான்குமானவனை - இவ்வாறு அருளியுள்ளார்கள். பகவான் எவ்வளவு அவதாரம் எடுத்தாலும் அவைகளில் குறைகளை கொஞ்சம் காண்கிறோம். எல்லா காலத்திலும் எல்லோருக்கும் எல்லாவிதமான துன்பங்களை போக்கி உலகை ரக்ஷிக்க ஓர் அவதாரம் செய்யத் திருவுள்ளம் கொண்டு பகவான் நாராயணன் வேதவடிவான அவதாரத்தைச் செய்தருளினான்.

வேத வேள்வியும் எம்பெருமானே:-

பகவானின் ஸ்வரூப ரூபாதிகளை வேதங்கள் தெரிவிப்பதுபோல் பகவானை ஆராதிக்கும் வழிகளையும் வேதங்கள் தெரிவிக்கின்றன. வேத வேள்விகள் உத்தமமான பகவதா ராதனங்கள். இவை அக்னிஹோத்ரம் முதல் விச்வ ஸ்ருஜா மயனம் வரையில் உள்ள வேதகர்மாக்களாய் இருந்துவருகின்றன. இவைகள் கார்ஹபத்யம். தக்ஷினாக்னி, ஆஹவநீயம் என்ற மூன்று அக்னிகளைக்கொண்டே செய்யப்படுகின்றன. ஆழ்வார்கள் மூத்தீ என்று குறிப்பிடுகின்றனர். விஷ்ணுவே யக்ஞ ரூபத்தில் நிற்கிறான் यज्ञोवैविष्णुः विष्णुर्वैयज्ञः

என்று கூறுகிறது. திருமேனியை வர்ணிக்கும் ஸமயத்தில் புராணங்கள் பலவித யாகங்கள் - ஹவிர்தானம் - க்ருஹங்கள் (ஸோமரஸம் வைகும்மரப்பாத்திரங்கள்) யக்ஞ பாத்திரங்கள் (ஹோமம் செய்யும் ஸ்ருக்குஸ்ருவாதிகள்) இவையாவும் பகவானின் திருமேனி என்று பேசுகின்றன. வேள்வியும்.....ஆதியுமானான் வேள்வியும்...தானாய் (5-7-1 பெரு)

எம்பெருமான் வேதியன்

வேதங்களை ஓதி ஓதுவித்து வேத்தை பாதுகப்பதற்காகவும் வேத வேள்விகளைச் செய்து அதைப் பாதுகாப்பதற்காவும் பகவானே வேதியனுய் அவதாரம் செய்கிறான் என்கிறார்கள். ஆழ்வார்கள், திருமங்கைமன்னன், வேங்கட வேதியான (1-4-10) புலம்புரிபுநூலவனை பொழில் வேங்கட வேதியனை(9-9-9)

வேதத்தைக்கொண்டு பகவதநுபவம்

திருநாமம் சிறிய திருப்பாவாடை - வேதம் பெரிய திருப்பாவாடை ''கண்ணு நான்முகனே படைத்தானே'' என்கிற பாசுரத்தில் ''ஓவாதே நமோ நாராயணு''என்று எண்ணு நாளும் ரிக் யஜுர் சாம வேத நாண்மலர் கொண்டு உன் பாதம் நண்ணு நாளும் என்று தனித்தனியாக பிரித்து பேசுகிறார். இந்த பாசுரத்தில் கண்ணா நான்முகனை படைத்தவனே கரியாய் அடியேனுக்கு உண்ணா நாளில் பசியொன்று என்பதும் இல்லை மாறாதே நமோ நாராயணா என்று எண்ணா நாளுமே ரிக்யஜுஸ்ஸாம வேத நாண்மலர் கொண்டு உன்னை எண்ணு நாளும் கூடுமாகில் அது தான் எனக்கு உபவாஸ தினம் என்று பெரியாழ்வார் அருளிச் செய்கிறார்.

வேதமில்லால் திருநாமம் கற்பது காயை கடிப்பது போல்

நாராயணுதி நாமங்களும் நான்கு வேதங்களும் பகவதனுபவத்திற்குப் பொதுவாக அமைந்துள்ளன. அவைகளில் வேதம் அனுபவ காலத்திலேயே நேராக பகவத அனுபவத்தை உண்டு பண்ணி அனுபவ ரஸம் உடனே ஏற்படச் செய்யும். வேதம் முதிர்ந்து பழுத்து ரஸம் நிறைந்த பழத்தை போன்றது. திருநாமங்கள் அவ்வளவு பூர்ணமான ரஸத்தை உடனே கொடுக்க முடியாததால் அது பசுங்காயைப் போன்றது. இதரப்ர மாணங்களின் அபேஷை இல்லாமல் தாமதமின்றி பகவதனுபவத்திற்கு ஸுலபமானது வேதமந்தரம். இதனால் திருநாமங்களை காட்டிலும் வேத மந்த்ரத்திற்குள்ள ஏற்றம் சொல்லப்பட்டது. இவ்வாதத்தை ஸ்ரீ நம்மாழ்வார் திருவிருதத்தில் ''இருக்கார் மொழியால்'' என்கிற பாசுரத்தில் அருளிச்செய்துள்ளார்.

பண்டை நான் மறையும் வேள்வியும் கேள்விப்பதங்களும் பதங்களின் பொருளுமாகி நிற்கும் எம்பெருமானை நேருக்கு நேராக சந்தோகன் பொழியின் தைத்திரீயன் சாம வேதி என்று வேதாத்யயனம் செய்த அந்தனோத்தமர்களை அழைப்பதுபோல் ஆழ்வார் அழைத்து அநுபவிக்கிறார் என்றால் வேதத்தினுடையவும் அதை அத்யயனம் செய்பவர்களுடைய பெருமை எத்தகையது என்பதை நாம் பார்க்கவேணும்.

இப்படி ஆழ்வார்கள் தங்களுக்கு வேதங்களிலும் வைதிக கர்மாக்களிலும் வேத வைதிக தர்மரக்ஷகர்களான ப்ராம்மணர்களிடத்திலும் அளவுகடந்த மறியாதையோடு பேசுகிறார்கள்.

அந்தந்த திவ்தேசங்களிலுள்ள எம்பெருமான்களை மங்களாசாஸநம் செய்யும் காலங்களில் ஆங்காங்கு வேதாத்யயனம் வைதிகமான ஜ்யோதிஷ்டோமாதி யாகங்கள் நடை பெற்று வருவதையும் திவ்யதேசத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவயவ ஸமிருத்தியையும் குறிப்பிடுகிறார்கள்.

திருமங்கையாழ்வார் அனன்ய ப்ரயோஜனரான மறையாளர்கள் ஸோமயாகம் செய்ய அதனால் வயல்களில் செந்நில் விளையநின்றது. ''தூய நான் மறையாளர் சோமுச்செய்ய செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும் (2-10-1)

ஸப்தஸ்வரங்களாலும் ஆறு அங்கங்களாலும் பஞ்சமஹாயஜ்ஞங்களாலும் த்ரேதாக்னிகளாலும் எம்பெருமானை வந்தனை செய்து இப்பொழுதும் நான் மறைகள் சிந்தனை செய்து ஆச்ரயிக்கிற செல்வம் நிறைந்து இருக்கிறது. ''வந்தனை செய்து இசையேழ் ஆறங்கம் ஐந்து வளர் வேள்வி நான் மறைகள் மூன்று தீயும் சிந்தனை செய்து இப்பொழுது மொன்றும் செல்வ (2-10-2) திருச்சித்ரகூடத்தில் மங்கை மன்னன் - வாயால் ஓதப்படும் வேதம் குறைவின்றி இருப்பதால் இயற்கையான ஸம்பத்தை உடைய மறையாளர்கள் நாள்தோறும் முறைப்படி செய்கிற அக்னி ஓங்க ஓங்க அத்தாலே அவ்வூருக்கு புகழ் ஓங்குகிறது'' வாயோது வேதம் மலிகின்ற தொல் சீர்மறையாளர் நாளும் முறையால் வளர்த்த தீ யோங்க வோங்கப்புகழோங்குதில்லை (3-2-2)

இளமங்கையர்கள் அருமறை பேசவும் அதை கேட்டு வீட்டில் வளர்க்கும் கிளி அந்தணர் சிந்தை புக நான்மறை பாடுகிறது. ''அவ்வாய் இளமங்கையர் பேசவும் தான் அருமறையந்தணர் சிந்தை புக செல்வக்கிளி நான் மறை பாடுவதில்லை 3-3-6 எள்றும் மூவாயிரம் நான் மறையாளர் எம்பெருமானை நாள்தோறும் முறையால் வணங்குகிறார்கள். மூவாயிரம் நான் மறையாளர் நாளும் முறையால் வணங்க (3-2-8) என்கிறார்.

திருமங்கை மன்னன் நாயகி தசையில் எம்பெருமானை அநுபவிக்கும் போது வேதத்தை ஓதிக்கொண்டே இருக்கும் அந்தணனாக அநுபவிக்கிறார்.

பொன்னிவர் மேனி மரகதத்தின் பொங்கிளஞ் சோதியகலத்து
ஆரம்மின் இவர்வாயில் நல்வேதமோதும் வேதியர்வாகவர் தோழீ
என்னையும் நோக்கி என்னல்குலம் நோக்கி ஏந்தினங்கொங்கையும்
நோக்குகின்றார்
அன்னையென்னோக்கு மென்றஞ்சுகின்றேன் அச்சோ ஒரு வாழகிய வா
(9-2-1)

இங்கு திருநாகை எம்பெருமான் வாயில் நல்வேதமோதும் வேதியராக ஸேவை ஸாதிக்கிறார். இப்படி நாயகி அநுபவத்திலிருந்து நாயகிக்கு வேதங்களிடமும் வேதோச்சாரணம் செய்யும் அந்தணர்களிடமும் உள்ள ஈடுபாடு நன்கு வெளியாகிறது.

திருமங்கை மன்னன் திருவெழுகூற்று இருக்கையில் எம்பெருமான் அந்தணர்களுடைய வேதகானத்ததைக் கேட்டு கண்வளர்ந்து அருளுகிறான் என்று

அருளுகிறார். நிரவதிக ஸம்பத்தையும் பரம போக்யதையுமுடைய திருக்குடந்தையில் ப்ராமணர்கள் மந்திரமொழியுடன் வணங்க திருவனந்தாழ்வான் படுக்கையில் ஜகத்ரக்ஷணத்தில் ஈடுபட்டுக் கொண்டு எம்பெருமான் கண்வளர்ந்து அருளுகிறான் என்று ஸாதிக்கிறார். வேதகோக்ஷம் எம்பெருமானுக்கு பரபோக்யமாக ஆவது போல் யாகங்களில் ஓதப்படும் ஸ்தோத்ர (ஸாமம்) சஸ்த்ரா (ரிக்கு)திகளுடைய கோக்ஷமும் பகவானுக்கு மிகவும் இனிமையானது. இதனால் எங்கு வேதகோஷ்டி ஸ்தோத்ர சஸ்த்ராதி கோஷம் நடைபெறுகிறதோ அங்கு பகவான் ஸந்நிதராவார். இந்த அபிப்ராயத்தை நம்மாழ்வார்தான் நாயகியாக இருந்து தூது விடும் காலத்தில் அருளிச்செய்கிறார். நாயகனாக உள்ள பகவான் வேதகோஷங்களையும் யாகத்திர் நடைபெறும் ஸ்தோத்ரசாஸ்த்ரங்களை கேட்டு எம்பெருமான் அங்கேயே தங்கிவிட்டான் என்று அருளுகிறார். வேதவேள்வி யொலி முழங்கும் திருவண்வண்டூர் (6.1.2)

இப்படி ஆழ்வார்கள் தங்கள் அருளிச் செயல்களில் வேத வைதிகங்களின் பெருமைகளை அருளிச் செய்திருப்பது போல் நம் ஆச்சாரிய ஸார்வபௌமனான ஸ்வாமி தேசிகனும் தன்னுடைய சதாதி க்ரந்தங்களில் அருளிச் செய்துள்ளார். அவைகளில் பாதுகாஸஹஸ்ர ஸ்தோத்திரத்தில் அருளிச் செய்திருப்பதை இரண்டொரு இடங்களில் காட்டுகிறேன்.

ப்ரபாவ பத்ததி–யில்–3ச்லோகம் –வேதோபப்ருஹ்மணகுதூஹலிநா நிபத்தம் –வேதங்களின் பொருளை எல்லோரும் அறியும் படி விளக்கிக்காட்டுவதே அவாவுள்ள வால்மீகி வ்யாஸர் இவர்களால் என்று விஷேஷணம் கொடுக்கப்பட்டிருப்பதை பராமர்சிக்கவேணும்.

நாத பத்ததி–ச்லோகம் –3

विहितेष्वभि वादनेषुवेदैः ..... प्रतयभि बादनं विधत्ते ॥

பகவான் எங்கு எழுந்தருளினாலும் வேதங்கள் பின்தொடரும் அந்த முறையில் இங்கும் ஸ்ரீரங்கநாதன் புறப்பாடு கண்டருளும்போது பின்னே போக வந்த வேதங்கள் அதற்கு முன் பாதுகையை ப்ரணாமம் பண்ணி அபிவாதனம் பண்ணுகின்றன. அவற்றிற்கு பாதுகை தனது இனிய ஒலியால் ப்ரத்யபிவாதனம் பண்ணுகின்றது போலும் என்கிறார்.

வேதபாராயணம் பண்ணும் ச்ரோத்திரியர் கண்முன்னே வந்து ஸேவித்து விட்டுப் போய் பாராயண கைங்கர்யத்தை தொடங்குவது இங்கு ஸ்வாமியின் கருத்திலுள்ளது விளங்குகிறது.

நாதபத்ததி- 7ச்லோ-

मधुवैरि पदांबुजं भजन्ती ..... अरिषृशन्ति मन्त्रम् ।

முக்தி பெறாமல் துன்பபடும் மக்களை அருள்செய்து முக்திபெறச் செய்கின்றது பாதுகை. இதை நினைத்து ஒன்று கூறுகிறார். மருந்து சாப்பிட்டும் தீராத வியாதி முதலியவற்றால் துன்பப்படும் மக்களுக்கு மந்த்ரவாதிகள் தமது உபாஸ்ய தேவதையை த்யானித்து மந்த்ரம் ஜபித்து சாந்தி செய்வார்கள். அப்படியே ஜநங்களுடைய தீராத வ்யாதி பீடைகள் நீங்குவதற்காக பாதுகை எம்பெருமானின் திருவடியைத்யானித்து ஜபிக்கும் மந்த்ரம் போன்றது அதன் ஒலி என்கிறார்.

रङ्गाधीशे सहकमलया सादरंयायजूकैः ..... प्रक्षालापदिशतिभवती.....

ச்ரோத்ரியர்கள் வேதோகத்தமான யாகங்களை செய்கின்றனர். அஹில் ஸித்தமாய் இருக்கும் ஹவிஸ்ஸை பெற்றுக்கொள்ளும்படி வேதமந்த்ரங்களை சொல்லி பகவானை அழைப்பார்கள். அந்த அழைப்புக்கு பதில் வார்த்தை கொடுப்பது போல் பாதுகையின் ஒலி என்கிறார்.

நாதபத்ததிச்லோகம்-

अनुकृत सवनीय स्तोत्र शस्त्रांनिनादैः

..... यज्ञवाटं द्विजानाम् ॥

ஸோமயாகத்தின் ஒருபாகம் காலையிலும் மற்றொரு பாகம் மத்தியானத்திலும் மற்றுமொன்று ஸாயங்காலமும் செய்யப்படும். இவற்றுக்கு முறையே ப்ராத:ஸவனம்- மாத்யந்நிஸைவனம்த்ரிதீயஸவனம் என்று பெயர். ஒவ்வொரு ஸவநத்திலும் ஸாம கானத்தோடு வேதமந்த்ரங்களை ஓதி தேவர்களின் சிறப்புகளை கூறுவதற்காக ஸ்தோதத்ரமும், கானம் மல்லாத சாடுஸ்வரத்துடன் ஒதப்படும் இருக்கும் மந்த்ரங்களை கொண்டு செய்கிற சாஸ்த்ரமும் உண்டு. இப்படிப்பட்ட ஸ்தோத்ர சாஸ்த்ரங்கள் போன்றவை பாதுகையின் ஒலி வேதம் போன்றது பாதுகை என்கிறார் ஸ்வாமி. இவ்வாறு நம் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் வேத வைதிக வேதியர்களின் பெருமைகளைப் பற்றி ஆங்காங்கு விரிவாக அருளியுள்ளார்கள் அவற்றில் விரிவுக்கு அஞ்சி சிலவற்றை மட்டும் இங்கே காட்டியுள்ளேன். இவற்றில் உள்ள குற்றம் குறைகளை கூமிக்கும்படி விண்ணப்பிக்கிறேன்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பகவத் குணாநுபவம்

(ஸ்ரீமதுபயவே வித்வான் கருநிலம் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி)

இந்த யுகத்தில் இந்நிலவுலகில் நமக்குப் ப்ரதமாசார்யன் ஸ்வாமி நம்மாழ்வார் ஆவர். இவருடைய திருவாய் மொழியும், திருவாறாயிரப்படி முதலான வ்யாக்யாநங்களும் சேர்ந்து பகவத் விஷயம் என்னும் பேர்பெற்று ப்ரகாசிப்பவை ஆகும், நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே.

திருவாய்மொழி தொடங்கியருளும் போதே ஸ்வாமி நம்மாழ்வார், ''உயர்வற உயர்நலமுடையவன் யவனவன்'' என்று அருளிச் செய்திருக்கிறார். தாம் பகவானிடத்தில் இழிந்த துறை கல்யாண குணங்கள் என்று பேசுகிறார். மேலே, '' வல்வினையேனை ஈர்கின்ற குணமுடையாய்'' என்றும் ஈடுபடுகிறார்.

ஸ்ரீமத்ராமாயணத்தில், ''குணை: தாஸ்யம் உபாகத:'' என்று இளையபெருமாள், ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனிடம், தம்பி என்னும் கிரமத்தில் அல்லாது, கல்யாணகுணங்களாலேயே, கைங்கர்யத்தில் ரஸாநுபவம் பண்ணினதாக, ஸ்ரீ வால்மீகி பகவானும் அருளிச் செய்தார்.

பகவானுக்குக் கல்யாணகுணங்கள் எண்ணில் அடங்கா. ''அஸங்க்யேய கல்யாண குணைளக மஹார்ணவா'' என்றிறே ஸ்வாமி எம்பெருமானார் ஶரணாகதிகத்யத்திலே பெரிய பெருமாளை அழைத்தார். அவைகளுக்குள்ளே ''ஸௌஶீல்யம்'' என்னும் மஹாகுணத்தை இப்போது சிறிது அநுபவிப்போம்.

குணம் என்னும் சொல் ப்ரதானமாக, ஸௌசீல்யத்தையேகாட்டும். ''வஶீவதாந்ய: குணவாந் என்னும் பெரிய முதலியாருடைய (ஆளவந்தார்) ஸ்தோத்ரரத்ந பாஷ்யத்தில், நம் ஸ்வாமி தூப்புல் மாபூருடன் நிகமாந்தமஹாதேசிகன் அருளிச் செய்வதாவது-''நமக்கு மிகவும் அநுகூலமாக அநுஸந்திகப்படுமது; ஸௌசீல்யம் மற்ற குணங்களைக்காடிலும் (நமக்கு) மிகவும் அநுகூலம். ஸௌசீல்யமாவது, மிகப்பெரியவன், தாழ்ந்த (பக்தர்களிடத்திலும்) மற்றவர்களிடத்திலும் புரை(வித்யாஸம்) அறக்கலந்து பழகுதல்; இந்தக்குணம், குஹன்-சபரீ, கோபாலர்கள் முதலியவர்களிடம் ப்ரஸித்தம். (குண்யதே இதி குண:....அநுகூல தமத்வேந சீலநீய:- குணாந்தரேப்ய: ஸமதிகம்- இத்யாதி ஸ்தோத்ரபாஷ்ய ஸ்ரீ ஸூக்திகள்).

ஸ்ரீ தேசிகன் காட்டியருளின இடங்களுள் முதலில் குஹப்பெருமாளிடம் ப்ரகாசித்த ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகனுடைய ''ஸௌசீல்யம்'' என்னும் குணத்தைச் சிறிது அநுபவிப்போம்.

ஸ்ரீ ராமாவதார காலத்துக்குக் கொஞ்சம் முன்பாகவே ஜநங்களின் மனோபாவம் எவ்வாறு இருந்தது என ஸ்ரீரங்க மாஹாத்ம்யம் என்னும் புஸ்தகம் நமக்குத் தெரிவிக்கிறது. அதாவது-அத்யயநம் செய்து, க்ரந்தங்களை வாசித்து, லோக க்ஷேமார்த்தமாக தாங்கள் நடந்தும், பிறருக்கு உபதேசித்தும் போக வேண்டியவர்கள் சிலர். இவர்கள் தைவவசமாகக் கிடைக்கும் ஸத் த்ரவ்யத்தினால் த்ருப்தி அடையவேண்டியவர்கள். இவர்கள் இந்தவழியை பின்பற்றவில்லை. எப்படியும் செல்வம் வந்தால் தான் சுகமாக வாழலாம் என்று எண்ணிவிட்டனர். அடுத்து, அரசாள்பவர்களும் தர்மம் என்பதையே மறந்து ஆட்சிபீடம் ஒன்றே இன்பவாழ்வுக்குத் தேவையானது என்று உலகைக் கலக்கத் தொடங்கிவிட்டனர். வாணிபம் செய்ய இட்டுப்பிறந்தவர்கள் பணப்பேராசையினால் அக்ரமவியாபாரங்களைச் செய்யத் தொடங்கிவிட்டனர். மற்ற மூவருக்கும் பணிவிடை செய்தலே நமக்கு நன்மைதரும் என்றிருந்தவர்கள், மறுத்தவிட்டனர். இவ்வாறு, ஒருவர் சொல்வதை இன்னொருவர் கேட்பது என்பதே மறைந்திட்ட காலமாம் அது.

அந்த சிரமமான காலத்தில் ஸ்ரிய: பதியான எம்பெருமான் தசரதசச்ரவர்த்தியின் திருமகனாக ராமனாக அவதரித்தான். பெரியோர் சொல்வதைத் தட்டாமல் செய்து காட்டும் இந்தச்சாமான்ய தர்மத்தை நிலைநாட்டவே ஸ்ரீ ராமாவதாரம் ஏற்பட்டது என்று ஸ்ரீ ரங்கமாஹாத்ம்யம் பேசும்.

''குலக்குமரா காடுறையப்போ'' என்பது தகப்பனாரின் வார்த்தையாகத் தேறுகிறது. பித்ருவசநபரி பாலனத்துக்காகவே, கிடைத்த யௌவராஜ்யத்தைத் த்ருணமாக எண்ணி, சக்ரவர்த்தித்திருமகன் காடேற எழுந்தருளினான். ஸ்ரீராமனையும் அவனுடன் வந்த பிராட்டி சீதையையும், திரு தம்பிலக்ஷ்மணனையும், தேரில் ஏற்றிக் கொண்டு வந்து, ஸ்ரீ ஸுமந்த்ரர் என்னும் ஸாரதி கங்கை கரையில் சேர்த்தார்.

அங்கே குஹன் என்பவன் இருந்தான். அவன் காடுவாழ் சாதியினன். ஜ்ஞாநத்துக்கும்) அறிவுக்கும் அவனுக்கும் தொடர்பே கிடையா தென்கிறார், ஸர்வேஸ்வரன் பக்கலில் ஸகலார்த்தக்ரஹணம் பண்ணின திருமங்கை ஆழ்வார், தம் பெரிய திருமொழியில், ஏழை ஏதலன் என்னும் பாசுரத்தில் 'ஏழை'என்னும் சொல்லால், தன்னைச் சேர்ந்தவர்களிடமே சத்ருபாவம் கொண்டவனாம் இதை ஏதலன் என்றார் ஆழ்வார். திருத்தவும் முடியாத ''கீழ்மகன்'' என்றும் ஆழ்வார் பாசுரம் கூறுகிறதே! இவ்வளவு தாழ்ந்தவன் குஹன்.

அவன் நம் சக்ரவர்த்தித் திருமகனைச் சேவிக்க, சுற்றத் தொடும் வந்தான். தன்னிடமிருந்த உபஹாரத்துடனும் வந்தான். அவனுடைய நல்லெண்ணம் ஒன்றையே பற்றாசாகக் கொண்டான் பரமபுருஷன். தான் மிகவும் பெரியவனாக இருக்கச் செய்தேயும், குஹனுடைய தண்ணிமை ஒன்றையும் பாராமல், குஹனை, ''புஜாப்யாம் ஸாது வ்ருத்தாப்யாம் பீடயந் வாக்யமப்ரவீத்'' என்கிற ஸ்ரீ வால்மீகிபகவானுடைய படியே ஸ்ரீ ராமன் கட்டியணைத்துக் கொண்டு அவனிடம் வார்த்தை சொன்னான்.

என்ன சொன்னான்? ''பத்ப்யாம் அபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்ஸநேந ச அர்ச்சிதாஸ்சைவ ஹ்ருஷ்டாஸ்ச'' என்று சொன்னான். குஹப்பெருமாளே! எனக்காக

உன் இருப்பிடத்திலிருந்து நடந்துவந்துயே! சந்தோஷப்படுகிறேன் என்று சொன்னான். நாங்கள் மூவரும், நாளை விடியற்காலம் தான் கங்கையைக் கடந்து செல்லப் போகிறோம். அதுவரை உன் இருப்பிடத்தில் நீங்கள் எல்லாரும் தங்கி இருந்து, விடிவோரையில் ஓடத்துடன் வந்தால் போதும் என்று மேலும் ஸ்ரீ ராமன் குஹனிடம் கூறினான் என்கிறார் கல்வியிற்சிறந்த கம்பன். ''யாம் இங்குறைந்து எறிநீர்க்கங்கை ஏறுதும் நாளை, யாணர்ப் பொங்குநின் சுற்றத்தோடும் போய் உவந்து இனிது உன் ஊரில் தங்கி, நீ நாவா யோடும் சாருதி விடிய என்றான் என்பது கம்பராமாயணப்பாசுரம்.

இத்தனை ஸுஸீலனை பிரிவனோ குஹன்; விழி புனல் பொழி கண்ணனான்; ''இன்னலின் இருக்கைநோக்கித் தீர்கிலேன் ஆனது ஜய! செயகுவென் அடிமை'' என்றான். இங்கேயே, உன்திருவடிவாரத்திலேயே இருப்பேன் என்னைச் சேர்ந்தவர்களோடு, உன் அநுபவத்துக்குப் போக்குவீடாக கைங்கர்யம் செய்துகொண்டே வாழ்வேன் என்றான் குஹன். அப்போது, ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன், ''யாதினும் இனிய நண்ப, ஒரு நால்வர் உளரானேம்'' என்று அருளிச்செய்தான். நீதான் எனக்கு ப்ரியதமமானவன்; உன்னையும் சேர்ந்து நாம் நால்வரும் ஸஹோதரர்கள்'' என்றான். அறப் பெரியனான ஸ்ரீ ராமன், மந்தனான குஹனோடு, வித்யாஸம் (புரை) இன்றிக் கலந்து பழகின குணமிறே ஸௌசீல்யமாகிறது.

ஸ்ரீ குஹப் பெருமாள் விபவாவ தாரத்தில் ப்ரார்த்தித்ததை, நம் ஸ்வாமி தேசிகன், அர்ச்சையில் -காஞ்சி பேரருளாளனிடத்தில் ப்ரார்த்தித்தார் போலும். 'த்வம் சேத் ப்ரஸீதஸி தவாஸ்மி ஸமீபதஸ்சேத், த்வய்யஸ்தி பக்திரநகா கரிசைலநாத ஸம்ஸ்ருஜ்யதே (சேர்த்திநேருமானால்) யதிச தாஸஜந: த்வதீய: ஸம்ஸார ஏஷபகவன் அபவர்க ஏவ'' என்பது அவருடைய ப்ரார்த்தனை. ஸ்ரீ குஹப்பெருமாள் பெற்றது, இவ்வுலகிலேயே பரமபதாநுபவமிறே!

நம் தூப்புல் பிள்ளை, சரணாகதிகத்யவ்யாக்யானத்தில் காட்டின இரண்டாவது இடம் சபரீ: ஸ்ரீ ராமன் க்ஷத்ரியச்ரேஷ்டன் வஸிஷ்டசிஷ்யன்; விஸ்வாமித்ரரிடம் அஸ்த்ரவித்யை பயின்றவன். சபரீ என்பவள் வேடர்குலத்தில் பிறந்த ஒரு வயதானவள். இவள், மதங்காஸ்ரமத்தில், மதங்க ஸிஷ்யர்களான மஹர்ஷிகளின் ஆச்ரமங்களில், சாணம் தெளித்து, திருவலரிட்டு, மரவுரிதிருத்திக் கொடுத்து வேலை செய்தவள். அவளைத் தேடிக் கொண்டு ஸ்ரீ ராமன் சென்றான் என்பதனைக் கூறவந்த கம்பநாட்டாழ்வார் கூறும் அழகு காண்மின்! ''சபரியைத் தலைப்பட்டு.....முன் இவற்கு இது என்று எண்ணலாவதோர் மூலமில்லான்'' என்றார். மூலமான பெருமாள் சென்றார் என்றது, தனக்கு ஒரு மூலமில்லா மூலமான ராமன் சென்றான் என்றார். ஆக மிகவும் பெரியவன் ராமன் என்று தேறிற்று. சபரியோ வீட்டு வேலை செய்யும் வேடக்கிழவி. ஆக, சபரீ மிகவும் தாழ்ந்தவள் என்று ஆகிறது.

ஆனால், சக்ரவர்த்தித் திருமகன் அக்கிழவியைத் தானே தேடிப் போய், அவளைக் குசலம் விசாரித்து, அவள் கொடுத்த பழங்களை விரும்பி அமுது செய்தருளி, அவள்கூறிய மதங்கசிஷ்யர்களின் பெருமைகளை எல்லாம் மோக்ஷோபாயம் கேட்பதுபோல்

கேட்டருளினானே. ''வீட்டினுக்கு அமைவதான மெய்ந்நெறி.....அன்னவன் கழறிற்றெல்லாம் கேட்டனன் என்பமன்னோ'' என்றிறே சரித்ரம். ''ஸாதரம் ஶபரீதத்த பலமூலாபிலாஷிணோ ஸௌலப்ய பரிபூர்னாய ஸத்வோத்ரிக்தாய மங்களம்'' என்று அன்றுமுதல் இன்றளவும் ஸ்ரீ மதுராந்தகத்தில் ஏரிகாத்தராமனை, இங்கேயே வாழ்ந்திருந்த பல மஹநீயர்கள் கொண்டாடிக்கொண்டு வந்திருக்கிறார்களே.

ஸௌஶீல்யம் என்னும் கல்யாணகுணமிறே எம்பெருமானிடம் ப்ரகாசித்தது. மற்ற முனிவர்களிடம் அந்த மஹாகுணம் பகல் விளகுப்பட்டிருந்தது. சபரியிடம் வந்தவாறே, இரட்டறையில் விளக்குப் போலே ப்ரகாசித்தன.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், தன்மேன்மை பாராதே, சபரியின் மற்ற தண்மையையும் கணிசியாதே, ஶபரியிடம் இருந்த ''ஆசார்யபக்தி'' ஒன்றையுமே பார்த்து ஸுஶீலனானான். ''அவந்த்யமஹிம முநிஜநபஜநமுஷித ஶபரீ மோக்ஷ ஸாக்ஷிதபூத'' என்னும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் மஹாவீரவைபவகத்யத்தின் ஒவ்வொரு பதத்தின் அர்த்தத்தின் ஆழத்தில் ஆழங்கால்படும் பெரியோர் பக்கல்பொருள் கேட்டாலல்லவோகாதின் தினவு அடங்கும் 'ஶ்ருதிகுஹர கண்டூ ஹரசிர: கிடைக்க வேணும்!

முன் சொன்ன ஸாதரம் இத்யாதியான ஶ்லோகத்தில் ஸௌலப்யம் என்னும் குணம் ப்ரகாசிக்கிறது என்றல்லவோ தெரிகிறது? ஸௌஶீல்யம் ப்ரகாசிக்கும்படி என் என்றால்? அழகான ப்ரஶ்நத்திற்கு அழகான ஸமாதானமாவது. ஸௌஶீல்யம் இருக்குமிடத்தில், ஶதே பஞ்சாசத்ந்யாயப்படியே, ஸௌலப்யமும் இருக்கும், வாத்ஸல்யமும் இருக்கும்; ஸ்வாமித்வமும் ஆக்ஷிப்தமாகிவிடும். 100 இருக்குமிடத்தில், அதில் 50 அடங்கிஇருக்குமே; இதுதான் முன் சொன்ன ந்யாயம்.

ஸ்ரீ ஸ்வாமி நம்மாழ்வாராகிற நம் ப்ரதமாசார்யன் த்வயமந்த்ரார்த்த விவரணமான, ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறை மார்பா'' என்னும் திருவாய்மொழி (6-10-10) பாசுரத்தால், பெரிய பிராட்டியார் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஶரணம்புகுந்தார். அப்பாசுரத்திலே, நிகரில்புகழாய் என்று வாத்ஸல்யத்தையும், உலகம் மூன்றுடையாய் என்று ஸ்வாமித்வத்தையும், என்னையாள்வானே என்று வாத்ஸல்யத்தையும் (நான்கு கல்யாண குணங்களையும்) முன்னிட்டு, ஶரணாகதி செய்தார். ஸௌஶீல்யம் ஒன்றை அநுபவிக்கும் போது இந்நான்கும் அநுபவிக்கத்தக்கதாயிருக்கும்.

ஆகவே வேதாந்தங்களிலும் இதிஹாஸபுராணாதிகளிலும் காட்டியபடி திருமாலின் மேன்மையைக்கண்டு அஞ்சாமல் அவனது எளிமையை குஹன் சபரீ பிரஹ்லாதன் விபீஷணன் த்ரௌபதீ. கஜேந்திரன் காகாஸுரன் இவர்களுக்கு அருளியதைக்கண்டு அவரவர்களின் வர்ணத்துக்கும் ஆச்ரமத்திற்கும் தக்க நல்லொழுக்கத்துடன் எம்பெருமானை பொய்கை யாழ்வாரின் ஸ்ரீ ஸூக்திப்படி நல்லிதழ் தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால் நாமத்தால் எத்திதுன்பம் நீங்கி நோயில்லாமல் பல ஆண்டு நீங்காத செல்வம் நிரம்பப்பெற்று இன்பமுற்று வாழ்வோமாக

ஸ்ரீ :



ஸ்ரீமத் ஆக்கூரான்டவன்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

ஸ்ரீ:

எண்குணத்தோன் தாளை வணங்குக

ஸ்ரீமதுபயவே. வித்வான் சொக்கனூர் நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி

विद्वद्धुरोऽयमिति शिल्पिवरोऽयमेवेत्यानन्दगानपटुरेष कविस्सुवृत्तः।
पाके च भीम नळ इत्यथ वैद्यदाता दैवज्ञ इत्यमुमहो स्तुवते गुरूद्धम् ।।

உல்லேகம் என்னும் அலங்காரம் (அணி)

ஒரு பொருளையோ மனிதனையோ பலர் பல விதமாகக்கண்ணோட்டத்துடன் வெவ்வேறுகப் பேசுவதும் புகழ்வதும் உல்லேகம் என்ற அணியாகும். ஓர் அரசனைப் புலவன் ஒருவன் புகழ்ந்து பாடுகிறான். அந்த மன்னனைப் பெண்மணிகள் காமவேள் என்பர், எதிரிகளோ அவனைக் காலவேள் என்கின்றனர். யாசகர்கள் கொடையில் சிறந்த கற்பகதருவென்று போற்றுவர். இவ்வாறு புகழ்ந்து உல்லேகமாகும்..

ஒரே பொருளைப்பலர் பலவிதமாகக் கூறுவதுமுண்டு. ஒரு பச்சோந்தியைப் பிடித்து ஒருவன் பைக்குள் வைத்துக்கொண்டான் அவன் பிடிக்கும்போது பச்சை நிறமாயிருந்தது. மற்றெரு நண்பன் எதிரிவே வந்தான். அவனிடம் பச்சோந்தியின் நிறம் பற்றிக் கேட்டான். அவன் அதன் நிறம் சிவப்பு என்று கூறினான். இருவரும் வாதம் செய்து தலா ரூபாய் பத்து பந்தயம் வைத்தனர். மூன்றும் மனிதனிடம் இருவரும் தொகையை ஒப்படைத்தனர் அவனை அந்த இரண்டு நிறங்களும் தவறு. மஞ்சள் நிறமே உண்மையென்றும் அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் பந்தயத்தொகையைத் தானே எடுத்துக் கொள்வேன் என்றும் கூறினான். இறுதியில் பையிலிருந்து பச்சோந்தியை வெளியேயெடுத்தான் அது வேறொரு நிறத்தைக் காட்டியது. மூவரும் எமாற்றத்துடன் வியப்பில் ஆழ்ந்தனர் என்ற விடத்தில் இதே உல்லேகத்தைக் காணலாம்.

இனி நாம் ப்ரக்ருத விஷயத்திற்கு வருவோம். ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்ரீரங்கராமானுஜ மஹா தேசிகன், பலராலும் பலவிதமாகப் போற்றப்படும் எண்குணத்தான் என்பதை முதலில் காணும் ச்லோகம் உல்லேகாலங்கார முறையிலே விளக்குவதைக் காணலாம். உபநிஷத்தில் இதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். தைத்திரீயோப நிஷத்திலே பத்தாம் அனுவாகத்திலே அறுவது மந்திரம்.

हँसश्शुचिषद्वसुरन्तरिक्षसद्धोता वेदिषददिति र्दुरोणसत्
नृषद्वरसदृतसद्व्योमसदब्जा गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत्।।

பொருள்:- இந்த மந்தரம் - பரமாத்மா எல்லா சேதனம் அசேதனம் இவற்றினுள் அந்தர்யாமியாய் ஆத்மாவாய் விளங்குகின்றனென்கிறது

ப்ருஹத்ருதம் = ஸத்யஸ்வரூபனான பரமாத்மாவே,
சுசிஷத் ஹம்ஸ்த: = கோடையில் பிரகாசிக்கும் ஸூர்யனுவான்
அந்தரிக்ஷயத் வஸு = ஆகாசத்தில் பரவி நிற்கும் வாயுவாவான்
வேதிஷத் ஹோதா = யாகவேதியில் அமர்ந்துள்ள ருத்விக் அல்லது அக்னியாவான்
துரோணஸத் அதிதி: = வீட்டிற்கு எழுந்தருளும் அதிதியும் அவனே.
நிருஷத் - வரஸத் = மனிதர்களுக்குள்ளும் தேவர்களுக்குள்ளும் அந்தர்யாமியாவான்.
ருதஸத் வ்யோமஸத் = கர்மபலனை ஸ்வர்க்காதியும் பரமபதமும் அவனே
அப்ஜா:= நீரில் தோன்றுபவவையும், கோஜா: புமியில் உண்டாகின்றவையும்.
அத்ரிஜா:= மலைகளில் தேன்றுபவையும் எல்லாம் அவனே

இவ்வாறு ஒரே பரமாத்மாவை உலகிலுள்ள எல்லாப் பொருட்களாகவும் வேதம் பேசுகிறது. இது ஒருவகையில் உல்லேகம் போன்றதே. இவ்வாறே முதலில் உள்ள ச்லோகம் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவனையும் எட்டு வகையான குணங்களையுடையவராக எட்டுவகை மக்களால் போற்றப்படுவதைக் காட்டுகிறது.

இனி ச்லோகத்தின் பொருளைப் பார்ப்போம்:-

1. **வித்வத்வரோ யமிதி**= பெரியவித்வான்கள் - ஆண்டவனைத் தலை சிறந்த வித்வான் என்று போற்றுகின்றனர். எல்லாஸதஸ்ஸுகளிலும், எந்த விஷயம் பற்றியும் விவாதம் தோன்றும் போதெல்லாம் பற்பல ஆதாரங்களையும் உடனுக்குடன் காட்டி நகைச்சுவை கலந்த பாணியில் தன் கருத்தை நிலைநாட்டும் திறனை யாவரும் போற்றுவர்.

2. **அயமேவ சில்பிவர:** இதி= சிற்ப சாஸ்திர வல்லுநர்கள் இவ்வாண்டவனுக்குள்ள சில்ப சாஸ்திர நுணுக்கம் பற்றிய ஜ்ஞானத்தைக்கண்டு இவரே சிறந்த சிறபி என்று போற்றுவர்இ

3. **ஆநந்த கானபடுரேஷ** = இன்பமாய்ப்பாடி கேட்போரை இன்பவெள்ளத்திலே ஆழச் செய்யும் திறனுவள்ளவர் இவர் என்று சங்கீத ரஸிகர்களும் பாடகர்களும் வாயாரப் புகழ்கிறார்கள். இவ்வாண்டவன் எந்த உபந்யாஸம் தொடங்கும்போதும், நல்லதோர் ஸ்தோத்ர ச்லோகத்தை இனிய சாரீரம் கொண்டு ராக ஆலாபனைகளுடன் பாடுவதைக் கேட்டு யாவரும் மயங்கியமர்ந்து கடைசிவரை பேச்சைச கேட்டே செல்வர். பசுக்களும், சிசுக்களும், பாம்பினமும் பாட்டின் இனிமையில் மயங்கும் என்பர். பசுர்வேத்தி சிசுர்வேத்தி வேத்தி கானரஸமும் பணீ அவ்விதமே காணத்தால் யாவரையும் வசப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்.

4. **ஏஷ கவி: ஸ்வ்ருத்த:** = ஆண்டவன் சிறந்தவ்ருத்த ஜ்ஞானமுள்ள ஓர் கவிவ்ருத்த லக்ஷணம் (யாப்பிலக்கணம்) அறியாமலே ஜன்மாந்திர ஸம்ஸ்காரத்தால் சிறந்த கவிதைகளைப் பலரும் இயற்றுவதுண்டு. வ்ருத்தலக்ஷணம் அறிந்தவர் பலர் கவிதை இயற்றும் திறனைப் பெறுதவுருமுண்டு. ஸ்வாமி இரண்டும் சேர்ந்த பெருமையுள்ளவர். மற்றும், வ்ருத்தம் என்றால் நடத்தை என்றும் பொருள்படும். கவிகளில் பலரும் நடத்தையில் கெட்டவர்களா யிருந்தமையை ச் சரித்திரம் காட்டும். அப்படியின்றி நன்னடத்தை கொண்ட கவிஞர் இவர் என்றும் பொருள்.

5. **பாகே சபீமநள இதி**= களவும் கற்று மற என்பதோர் பழமொழி. எப்படி எப்படியெல்லாம் கள்வன் களவாடுகிறான் என்றறியக் களவையும் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். ஆனால் தாம் களவு செய்வதற்காக வென்று இதுதற்காப்புக்களைப் போன்றது. பின்னர்தம் நடத்தையில் களவு இடம் பெறுமல் மறந்துவிட வேண்டுமென்பது பொருள். எந்தவித்தையையும் மனிதனைப் பூர்ணமாக்கவல்லது. சமையல் கலை மனிதர்கள் கட்டாயம் அறிய வேண்டியதொன்று. அதிலும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆசார வ்யவஹாரங்களுடன் வாழவேண்டியவருக்கு சொந்தமாகத்தளிகை செய்யத் தெரியவேண்டும். எவ்வளவு உயர்ந்த பதவியலிருந்தாலும் சிலர் சுயமாகத் தளிகை செய்து சாப்பிடுவதைப் பெருமையாகவும் வழக்கமாகவும் கொண்டுள்ளனர் பலரும் சோம்பேறிகளாய் வாழ்நாள் முழுவதும் பிறருழைப்பிலேயே எப்படியோ ஆஹாரங்களைப்பெற்று வாழ்கின்றனர்.

நம் ஸ்வாமி பாகவித்யையில் சிறந்த தளிகைக் கைங்கர்யபரர்களும் ஸ்வாமியின் திறனைக்கண்டு பயங்கரமாய் நளன் போல் தளிகையில் நிபுணர் என்றும் பீமன் போலும், நளன் போலும் திறன் படைத்தவர் என்றும் போற்றுவர். இத்துறையில் கைதேர்ந்தவர்தான் பிறரது தளிகையில் குற்றம் குறை கூறத்தகுதியுள்ளவராவர்.

6,7 **அத வைத்ய தாதா** = ஆயிரம் வேரைக்கண்டவன் அரைவைத்தியன் என்பது பழமொழி நம் ஸ்வாமியோ நடைமுறையில் அலோபதி ஆயிர்வேதம, சித்தம, யுனானி முதலிய எல்லா வைத்தியங்களின் நுட்பங்களையும் நன்கு அறிந்தவர். பல பச்சிலை மூலிகைகளையும் பற்பல மருந்துகளையும் அறிந்து நோயாளிகளுக்கு தக்க ஔஷதிகளையும் மருந்துகளையும் தாமே தந்து இரக்கத்துடன் பாதுகாப்பவர். சிறப்பாக தாதா = சிற்நத கொடையாளி என்பது மிகமுக்கியமானது. எவ்வளவு செல்வந்தனாக இருப்பினும், ஆசாரானுஷ்டானங்கள், ஜ்ஞானம் பக்தி வைராக்யம் உள்ளவனையினும் போதாது. நல் மனத்தோடு ஈவு இரக்கம் பச்சாத்தாபம் இவற்றுடன் ஆத்மகுணங்கள் இருக்க வேண்டும். நிறைய சம்பாதிப்பதெல்லாம் தக்கார்க்கு பாத்திரமறிந்து தானமளிப்தற்காகவே இம்முறையில் ஸ்வாமியிடம் உபநயனம் விவாஹம், வைத்தியம், ஆலய ஜீர்ணோத்தாரணம் போன்ற கார்யங்களுக்கு தினசரி வரும் யாசகர்கட்டு வலக்கையால் கொடுப்பது இடக்கையும் அறியாவண்ணம் கொடுக்கும் கொடைவள்ளல் என்ற தன்மையைக் காணலாம்.

8. **தைவஜ்ஞ இத்யபி ப்ருதிக் விபுதா: ஸ்துவந்தி** ஸ்வாமி சோதிடத்திலும் மஹா நிபுணர். ஒருவரின் நிகழ்கால, வருங்கால நிலைகளையும், பாக்யவிசேஷங்களையும் உள்ளவாறு உணர்ந்த வித்தகர் என்று சோதிடம் வல்ல அறிஞர் புகழ்வர்.

இவ்வாறு எட்டுவிதமான குணங்களும் ஒருசேர அமைவது எங்கும் காணபதற்கு அரியது.

இங்ஙனம் நம் ஆண்டவன், பலதுறைகளிலும் வல்லவராய் நல்லவராய் அஞ்சா நெஞ்சத்தினராய். எதையும் எதிர்கொள்ளும் ஆற்றலுடன் மிக்க பொறுமை புலனடக்கம் இவற்றுடன் ஆத்ம குணங்கள் நிறைந்து திகழும் நிலையில் அறுபதாம் திருநக்ஷத்திரத்தை நாம் கொண்டாடுவதைப் போன்றே நூறுவது திருநக்ஷத்திரத்தையும் நாம கூடியிருந்து மகிழ நம்பெருமான் அருள்புரிவனுக.

நடைவேகம். வாயுதேவனே உபாஸித்ததுக் கர்மாவைச் செய்பவன். வாயுதேவனின் அருளால் சிறந்த பாக்யத்தையும் ஐச்வர்யத்தையும் பெறுவான். ஏனெனில் வாயு மிக்கவேகம் வாய்ந்த தேவதை என்று வேதம் புகழ்கிறது. அதேபோல் நம் ஸ்வாமி ஸஞ்சார காலத்தில் நடக்கும் வேகத்தைப் பின் தொடர்ந்து இளைஞர்களும் பின் தொடர அஞ்சுவார்கள். ஒவ்வோர் நாளும் காலை மாலை வேளைகளில் சுமார் 45 கிலோ மீட்டர்தூரம் நடந்தே வேகமாக ஸஞ்சாரம் செய்து பழக்கம். அந்தக்காலத்தில் காந்தியடிகளின் நடையையும் மிக்க வேகம் உள்ளது என்று கூறுவது வழக்கம். இவ்வாறே ஸ்வாமியின் நடைமுறுக்கும் இதேவண்ணம் நீடிக்க வேண்டும்.

குற்றம் கடிதல் = எந்தவொரு மனிதனிடமும் குற்றம் குறைகளைக் கண்டால் ஓரிரு தடைவைகள் பெருந்தன்மையுடன் விட்டும் லேசாகத்திருத்துவதும் வழக்கம். தொடர்ந்து, அக்கிரமமாய் தவறு இழைக்கும் கைங்கர்யபரர்கட்கும் மாணவர்களாகட்டும் கைங்கர்யபரர்களாகட்டும் அவர்களை ஆண்டவன் த(கண்டிக்கும் முறையே அலாதி. அதன்பின்னர் அவர்கள் அந்தப் பிழையை எப்போதும் செய்யவே மாட்டார் அதில் திருந்தாதவர் அச்ரமசம்பந்தத்தையே துறந்து வெகு தொலைவிற்குச் சென்றிடுவர்.

ப்சவசன சாதுர்யம் = எந்தச் செய்தியையும் பிறருக்கு எடுத்துரைக்கும் முறையும் காலக்ஷேபங்கள்சாதிக்கும் தோரணியும் மிகவும் விலக்ஷணமானது முன்னோரின் நூல்களுடன் ஒப்பிட்டுக் காட்டியும் நவீன உபமானங்களுடன் விளக்கும் வகை எவருள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் எளிதில் பதிய வைக்கக் கூடியது. வேதம் கூறியவாறு (ஆசிஷ்டோ த்ரடிஷ்டோ பலிஷ்ட தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூரணு ஸ்யாத் ஸஏகோ மானுஷ ஆநந்த: யுவாவாயிருந்தே நன்கு திறம்பட ப்பலயுவாக்களும் கல்வி கற்ப்பிப்பவனுய் எதையும் கற்பிக்கும் ஆசையுள்ளவனுய் எதையும் விரைவில் யெலாற்றுபவனுய் நன்கு ஆகாரம் உட்கொள்ளுபவனுய் மன வலிமையும் உடல் வலிமையும் சேர்ந்திருப்பானுயின் இதுதான் மனிதன்பெறக்கூடிய உயர்ந்த ஆனந்தம் என்ற பண்புகள் அனைத்தும் ஒரு சேர அமைய பெற்றவர் ஸ்வாமி. இவ்வாறு சர்வ வித குணங்களும் சாதுர்யமும் சேரந்த ஆண்டவனே ஸர்வ தந்திர ஸ்வதந்திரர் என்றும் கவிதார்கிக சிம்மம் என்றும் போற்றுவது பொருத்தமானதே.

विबुधो गायकश्शिल्पी सुकविः पाकविद्भिषक् । वाग्मी वदान्यो दैवज्ञःरंगरामानुजो यतीट् ।।

என்று சுருக்கமாக எண்குணங்களையும் அனுஸந்திபோமாகவும்.

விபுதோ காயக: சில்பீ ஸுகவி: பாக வித் பிஷக்
வாக்மீ வதான்யோ தைவக்ஞோ ரங்கராமானுஜோ யதீட்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அடியவர்க்கு மெய்யனின் அளவிலாப் பெருமை

(ஸ்ரீமதுபயவே வித்வான்
E.D. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, அயிந்தை)

ஊரும் பெருமாளும்

நடுநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய திருவயிந்திரபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தெய்வனாயகனுக்கு அடியவர்க்கு மெய்யன் என்று திருநாமம் சூட்டி மகிழ்விக்கிறார் கலியனெம்பிரான். ''அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வனாயகன்'' என்பது பெரிய திருமொழி 3ம்பத்து, 10ம் திருமொழி, 3ம் பாட்டின் அடி.

பெயரின் பெருமை:

தெய்வங்களுக்கு நாயகனாக இருப்பதுமன்றி அவன் தன் அடியவர்களுக்கு மெய்யனாக (ஸத்யனாக) இருக்கிறான் அதனாலே அவன் தெய்வங்களுக்கெல்லாம் நாயகனாகிறான்; அதனாலே அவன் பெருமை அளவு கடந்தாகிறது.

தேவர்கள் யார்?

இந்த கேள்விக்கு ஸ்ரீ ஸ்வாமி தேசிகனே விளக்கம் அளிக்கிறார். ஏ !தேவனாதனே, உன்னிடத்தில் பக்தி மிகுந்த ஞானிகளை இந்த லோகத்தில் பிறந்திருந்தால் கூட அவர்கள் தேவர்களாகிறார்கள் என்று 'த்வத் பக்தி பூஷிததியாம் இஹ தேவபாவம்'' இதுவும் அவன் பெருமையேயன்றோ?

இறங்கினான் பரவாஸுதேவன்

ஆதியில் தீயவசுரர்களினால் ஏற்பட்ட துன்பங்களை விலக்கவும், நல்லோரை வாழ்விக்கவும் ஸ்ரீ பூமிப் பிராட்டி பிரார்த்தனையின் பேரில் அப்பரம புருஷன் பரமபதத்திலிருந்து இந்நிலவுலகத்துக்கு எழுந்தருளினார்.

எங்கும் நிறைந்திருப்பவன் ஓரிடத்தில் ஒரு காலத்தில் எழுந்தருளுவதாவது ஏன்? என்னில், அப்பரம்பொருள் தன்னை எல்லோரும் கண்டு வணங்கித் தொழுது உய்யுமாறு சேவைதரவெண்ணி, அதற்கு ஓரிடத்தைத்தம் திருவுள்ளத்தில் தேர்ந்து அவ்விடத்தில் சேவை சாதிப்பதேயாகும்.

அமர்ந்தான் திருவயிந்திரபுரத்தில்

அப்படியவன் மனமுவந்து இத்தரணியில் நித்யவாஸம் செய்ய ஸங்கல்ப்பித்தான் திருவயிந்திரபுரத்தில். அமலன் அமர்ந்தவூர் அறிவு நிறைந்ததாயிற்று.

தனக்குக் குடையும், ஆசனமும், பாதுகையும், திவ்வியத்தெப்பமும், மணிமயமான ஒளி விளக்கும், தன்திருமேனிக்குகந்த பட்டும் சார்ந்து கொள்ளும் அணியும் ஆக இப்படி ஒப்பற்ற பல கைங்கர்யங்களையும் எப்போதும் புரியும் ஆதிசேஷனை ஓர் நகரம் நிறுவுமாறு பணித்தார். அந்த ஆதிசேஷன் யார்? அளவிறந்த ஞானமும் பலமும் அமைந்த ஸங்கர்ஷணனேயல்லவா? அதனால் அவர் நிர்மாணித்த திருவயிந்தை மாநகரிலுள்ளவர்கள் பொழுது போக்காகப் பேசும் பேச்சுக்களும் மூன்று வேதங்களின் சாரமாகும் என்கிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன். ''மொழிவார் மொழிவன மும்மறையாகும் அயிந்தை'' என்று இதுவும் அவன் மகிமையே யல்லவா?

மலையும் நகரமும்

அந்நகரம் மலைச்சாரலிலுள்ளது. பிரமன்தவம் செய்து ஸ்ரீ தேவனாதனைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு வழிபட்டபடியால் பிரும்மாசலம் என்றும் , பல வித மூலிகைகள் நிறைந்திருப்பதால் ஔஷதா சலமென்றும் அம்மலை பெயர் பெறும். ஸ்ரீ மத் ராமாயணத்தில் இந்திரஜித்தின் கொடிய அஸ்திரங்களால் அடிபட்டு மூர்ச்சித்து வீழ்ந்த லக்ஷ்மணன், மற்றும் வானரங்களைத் தெளிவித்து எழுப்ப அனுமான் ஸஞ்ஜீவி பருவதம் கொண்டு சென்றபோது அம்மலையிலிருந்து ஓர் பாகம் சரிந்து இந்த பிரும்மாசலத்தில் வீழ்ந்ததாம். இது புராணம் கூறுவது. அதனால் இங்கே மலையடிவாரத்தில் கோயிலுக்கருகில் எழுந்தருளியுள்ள அனுமாருக்கு ''ஸஞ்ஜீவிராயர்'' என்றும் பெயருண்டு. இஃதேயன்றி ''மருந்தும் பொருளும் அமுதமும் தானே திருந்திய செங்கண்மால்'' என்றும் ''மருந்தே எங்கள் போக மகிழ்ச்சிக்கென்று பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான்'' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி ''பவௌஷத'' மாகிய தேவனாதன் அம்மலைச்சாரலில் எழுந்தருளியிருப்பதாலும் அம்மலைக்கு ஔஷதாசலம் என்ற பெயர் பொருந்துகிறது. ''நாத த்வயாநதஜனஸ்ய பவௌஷதேந ப்ரக்யாத மௌஷதகிரிம் ப்ரணமந்தி தேவா:'' என்று கூறி மகிழ்கிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன். இதுவும் ஸ்ரீ தேவனாதனின் பெருமை.

தீர்த்தங்களின் மகிமை

அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வனாயகன் கருடனை நியமித்தார் தீர்த்தம் கொண்டு வரும்படி. அவரும் பகவானுக்கு உகந்ததீர்த்தம் கொண்டு வரத்தக்க தீர்த்தத்தை நாடிச் சென்றார். 7 யோசனை மேற்கில் ஓர் முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார் ஓர்வனத்தில். அவர்தம் தவவலிமையால் பெற்ற விரஜாதீர்த்தத்தைத் தம் அருகில் ஓர் கடத்தில் வைத்துக் கொண்டு ஆழ்ந்த தியானத்தில் இருந்ததைப் பார்த்த கருடன் அந்தக் கடத்தைக் கவிழ்த்து ஓர் ஆறாகப் பெருகி வருமாறு செய்தார். அதுவே கருடநதி ''கங்காதிகாம் விதததீ கருட ஸ்ரவந்தீ'' என்று போற்றப்படுகிறது ஸ்ரீ ஸ்வாமி தேசிகனால். ஸ்ரீ தேவனாதன் கருடன் வரத்தாமதமானதைக் கண்டு ஆதிசேஷனை நியமித்தார். தீர்த்தம் கொண்டு வரும்படி. அவரும் தன் வாயின் உதவியால் பூமியைப் பிளந்து பாதாள கங்கையிலிருந்து தீர்த்தம் கொணர்ந்தார். அந்தத் தீர்த்தத்தை ஸ்ரீ தேவனாதன் உகந்து ஏற்றுப்பல பிணிகளைத் தீர்க்கும் மருந்தாகவும் இருக்குமாறு அனுக்கிரகம் செய்தார். இப்போதும் அந்த திவ்யக் கிணற்றுத் தீர்த்தத்தினால் வியாதியே நீங்கப் பெறுபவர் ஏராளம் ஏராளம். இதுவும் அவ்வச்சுதன் பெருமையன்றோ?

அச்சுதன் மூன்று ஸந்த்யைகளிலும் அந்தணர்கள் செய்து வரும் ஸந்த்யா வந்தனங்களிலும், மற்றும் எந்த நல்ல காரியங்கள் செய்ய வேண்டுமானாலும் அதன் தொடக்கத்தில் செய்ய வேண்டிய முதல் திருநாமம் அச்சுதன் என்று, அத்திருநாமத்துக்கு உரியவனும் ஸ்ரீ தேவனாதனேயன்றோ? அத்திருநாமத்தையும் அத்திருநாமத்தைப் பெற்ற ஸ்ரீ மத் அடியவர்க்கு மெய்யனையும் ஒப்புயர்வற்ற முறையில் போற்றி அச்சுதசதகம் பாடிய ஆசார்யவள்ளல் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனேயறிவார் அவன் பெருமையை.

நாயிகா பாவம்

''சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரிய நற்காமமும் என்றிவை நான்கென்பர். நான்கினும் கண்ணனுக்கே யாமது காமம்'' என்று ஸ்ரீ அமுதனார் அருளிச் செய்த தற்கேற்ப ஸ்ரீ தேவநாதனிடத்தில் கொண்ட அளவற்ற பக்தியினால் வ்யாமோஹமடைந்த ஸ்வாமி தேசிகன் அந்தவ்யாமோக பக்திப் பெருவெள்ளத் தினுக்குப் போக்கு வீடாக அருளிச் செய்த அச்சுதசதகத்தின் பெருமைக்கு ஈடுண்டோ?

அப்ராக்ருதமான ப்ராக்ருதம்

மேலும் தன்னுடைய அப்ராக்ருதமான பெருமைகளை ஸ்த்ரீகள் பேசும் பிராக்ருத மொழியில் பாடும்படியருளிய ஸ்ரீ மத் அடியவர்க்கு மெய்யன் பெருமை பாட்டிலடங்குமோ? **ஆழ்வாரையும், கலியனையும் அனுக்கிரஹித்தமை போல் ஸ்ரீ தேசிகனையும்:** நாயிகாபாவமடைந்த ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுடன் ஸ்ரீ தேவனாதன் விளையாடி மகிழ்ந்தமையருளிச் செய்த பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல், பாக்களையருளிய ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அப்பாக்களை ஸ்ரீ தேவனாதனிடமே கொடுத்து

விட்டார் போலும். ஸ்ரீ மத் அடியவர்க்கு மெய்யனாகிய தாஸஸத்யன் அப்பாக்களைத் தனக்கேயாக வைத்து கொண்டு விட்டார் என்பர் பெரியோர். நம்மாழ்வாருக்குத் திருத் தொலைவில்லி மங்கலத்தெம் பெருமாளிடம் ஆறாத காதலுண்டு. திருவாய் மொழி 6 ம் பத்து 5 ம் திருவாய்மொழியை (''துவளில் மாமணிமாடம்) நோக்கினால் தெரியும். அதில் 10 ம் பாட்டில் ''முன்னிவந்தவள் நின்றிருந்துறையும் தொலைவில்லி மங்கலம்'' என்று பாடுகிறார். அதாவது ஆழ்வாரை அனுக்கிரஹிப்பதற்கென்றே ஆழ்வார் அவதரிக்கும் முன்பாகவே அவன் தொலைவில் மங்கலத்துக்கெழுந்தருளினான் என்று, அதே போல் கலியலெம்பிரானுக்குத் திருவாலி எம்பெருமானிடம் பக்தி பெருங்காதலுண்டு. பெரிய திருமொழி 3ம் பத்து 5,6, 7 திருமொழிகளை நோக்குக. மேற்கூறிய 5ம் தசகத்தில் ''வந்துளதடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததற்பின் வணங்கும் என்சிந்தனுக்கினியாய்'' என்று பாடுகிறார். ''எனக்கும் முன்னே இங்கு இத்தலத்தில் வந்து உன்னிடமே பற்றுற்ற அடியேன் மனத்தில் புகுந்தாய்-பிறகே நான் வணங்கலுற்றேன்'' என்று உரைக்கும் நயம் அனுபவிக்கத்தக்கது. ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீ அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வனாயகனைப் பார்த்து அயிந்தமா நகரிலமர்ந்தனை எமக்காய் என்று போற்றுகிறார்.

ஹயக்ரீவன்

ஸ்ரீ தேசிகனை அனுக்ரஹிப்பதற்காகவே ஸ்ரீ ஹயக்ரீவனாக ஸேவை சாதித்தான். ஸ்ரீ மதச்சுதன் ஸ்ரீ ஹயகரீவாவதாரம் உலகத்திற்குத் தெரியும் படியும், அனைவரும் அவரை வணங்கி வழிப்பட்டு உய்யவும் இவ்வுலகத்திலே முதன்முதலில் திருவஹீந்திரபுரத்தில் ஔஷதா சலத்தில் கோயில் நிர்மாணித்துக் கொண்டான் ஹயக்ரீவனாகிய அச்சுதன். அவற்கருளும் பெருமையும் அளவிடலாகுமா?

ஸ்ரீ தேசிகனை நியமித்தருளல்

ஸ்ரீ தேசிகனைக் கடாக்ஷித்து ஸகல வேதாந்தங்களையும் பரிமுகமாய்த் தந்தருளி, காஞ்சிக்கு எழுந்தருளும் அவ்வாசாரியனை மறித்து அழைத்து வந்து (ஆக்ருஷ்டவானிதி பவானனுகம்பமான: ஸுத்ரானுபத்த சகுனி க்ரமத: ஸ்வயம் மாம். (என்ற தேவனாயக பஞ்சாசத் வாக்கியம் (சுலோகம் 8) என்று பேசவைத்த பெருமையை என்னென்பது! அத்துடன் வேதவேதாந்தங்கள் எல்லாம் என்னையே தான் பேசுகின்ற உண்மையை நீ தெளிவாகப் பேசு என்று ஆஞ்ஞாபித்த மஹோபகாரம் எத்துணைப் பெருமையுடைத்து? ''முந்தை மறை மொய்ய வழிமொழி நீ என்று முகுந்தனருள் தந்த பயன் பெற்றேன் நானே'' என்று (நவமணிமாலை 10ம் பாட்டு) கூறி மகிழ்கிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்.

பரமதநிரஸனம்

ஸ்ரீ ஸ்வாமி தேசிகனைக் கொண்டு பாமதங்களில் உள்ள தோஷங்களை எடுத்துக் காட்டி நம் உத்தமமான ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் பெருமையை உரைக்கக் காலமெல்லாம் போதுமோ?

ஆசார்யனை உயர்த்திருயருளல்

தேவனைப் போல் ஆசார்யனையும் கொண்டாட வேண்டுமென்று சுருதி வாக்கியத்திற்கேற்பத் தம் கோயிலில் தமக்கெதிரே ஆசார்ய ஸார்வ பௌமனைப் பிரதிஷ்டைசெய்யச் செய்துத் தமக்கு நடப்பதைப் போல் ஸகல வைபவங்களும் அவருக்கும் நடத்தி மகிழும் பெருமை ஸ்ரீமத் அடியவர்குளுக்கு மெய்யனுக் கேயல்லவா? ''தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்கு தம்மையேயொக்க அருள் செய்வர்'' என்று கலியனும், ''நின்தனக்கு நிகர் நின்னடியடைவர்'' என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும் அருளியதற்கேற்பத் தம்மோடு சரிநிகர் சமானமாக ஆசார்யனை உயர்த்தியருளும் பெருமை ஸ்ரீமத் அடியவர்க்கு மெய்யனுக்கே உரியதன்றோ?

கலியனுக்கருள் புரிதல்

தம் க்ஷேத்திரவாஸிகளுக்குத் தம் பெருமையைக் கலியனைக் கொண்டு வெளியிட்டு அத்விதீயமும், அனிதர ஸாதாரணமுமான அடியவர்க்கு மெய்யன்'' என்ற திருநாமத்தை உலகறியச் செய்த மகிமைதான் கூறும் தரமொன்றோ? ''தேவானாம் தானவானாம் ச ஸாமான்ய மதிதெய்வதம்'' என்று விளங்கும் ஸ்ரீ ஸூக்தி வசனத்திற்கேற்ப தேவர்தானவர் சென்று சென்றிறைஞ்சுதண் திருவயிந்திரபுரத்து'' என்று பாட வைத்தது மன்றி பரஸ்பரம் விரோதிகளான தேவர்களும் தானவர்களும் தம்மை வணங்கிப் பயன்பெறுமாறு விளங்கும் மகிமைதான் என்னே.

அகடித கடனா ஸாமர்த்தியம்

சேராதனவைகளைத் தமக்கெதிரே சேர்த்து வைக்கும் மகிமையை ஸ்வாமி தேசிகன் விரோதி பரிஹாரத்தில் ''அரவும் கருடனும் அன்புடனேந்தும் அடியிரண்டும் தரவெந் தமக்கருளால்'' என்று கூறியருள்வதை நினைந்து நினைந்த அனுபவிக்கத் தகும்.

திருவாழியாழ்வானுக்கு அருள் செய்த மின்னுமா ஆழியம்கையவன்

தேவாசுரயுத்தத்தில் தன்னை துணைவேண்டிய தேவர்களை காக்குமாறு பிரதான ஆயுதமாகிய சக்கரத்தாழ்வானையனுப்பியருளினான் ஸ்ரீ தேவனாதன். அசுரர்களோ முப் புரமெரித்த சிவனைத் துணையாகவும் தலைவனாகவும் பெற்றுக்கர்வ மேறியுள்ளார்கள். ஆயுத ராஜாவாகிய திருவாழியாழ்வான் அசுரர்களைச் சின்னாபின்னமாக்கித் துறத்தினான். மிகவும் கோபங் கொண்ட அஹிர்ப்புத்நியனாகிய உமாபதி தன் கொடுஞ்சூலத்தை திருவாழியாழ்வான் மேல் ஏவினான். ஸுதர்சனழ்வானே அச்சூலத்தைச்சிரித்துக் கொண்டே விளையாட்டாகப் பிடித்துக் கொண்டார். சூலம் இழந்த சங்கரன் மந்திர ராஜபத ஸ்தோத்திரத்தினால் புகழப்பட்ட ஸ்ரீ ஸுதர்சனாழ்வானை வாயாரப் புகழ்ந்து வழிபடலானார். பகவான் நாராயணனாகிய அச்சுதன் இச்சூலத்தைத் திரும்ப சங்கரனிடமே கொடுக்கும் படியருளினார். அத்திருவாழியாழ்வானையே தான்

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் பணிந்து பரமதபங்கம் பாடியது. அத்திருவாழியாழ்வானை கையிலேந்தி மின்னுமாழியங்கையவன் செய்யவள் உரை தருதிருமார்வனாக விளங்கும் ஸ்ரீ மத் அடியவர்க்கு மெய்யன் லீலா வினோதத்தையும் பெருமையையும் என்னென்பது!

உமைக்கருள் செய்தது

திருமாலே தனக்கு அம்பாக (பாணமாக) வந்ததை எண்ணி அகங்காரம் அடைந்த சிவபெருமான் திரிபுர சம்ஹாரத்தில் அவ்வம்பின் அளவறிந்த வேகத்தினால் இழுக்கப்பட்டுக்கடலில் போய் விழுந்ததும் பிறகு பார்வதியின் வேண்டுகோளுக்கிரங்கி ஸ்ரீ தேவனாதன் ''சங்கரம் தேஹி சாகர'' என்று ஸமுத்ர ராஜனை கேட்டு சங்கரனைக் கரையேற்றியமை ப்ரும்மாண்டம், ஸ்காந்தம் ஆகிய புராணங்களில் காணப்படும் வைபவங்களாகும்.

விச்வரூபம்

தம்மிடம் உண்மையான பக்தியுடைய தேவர்களுக்கு வெற்றியளித்தமையும், அதற்பிறகு தேவரும் ஏனையவரும் வேண்டத் தன் திருமேனியில் பிரும்மா, சிவன், இந்திரன் முதலியவர்களையும் அனைத்துலகையும் காட்டித்தானே விராட் புருஷன் என்று அறியச் செய்த பெருமை தான் என்னே. பெரிய திருமொழி 3ம் பத்து 1ம் திருமொழி 1ம் பாட்டில் இதை விளக்குகிறார் கலியன்.

கீதாசார்யன்

அன்றியும் தானே தான் கீதாசாரியனாகிய ஸ்ரீ க்ருஷ்ணன் என்றும் ஸ்ரீ தேசிகனைக் கொண்டு வெளிப்படுத்தினான் ஸ்ரீ தேவனாதன் ''தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வநாயனாகிய''(நவமணிமாலை 8) என்பதை நோக்குக. அடியவர்க்கு மெய்யனாகிய எளிமை தோற்றப் பார்த்தனுக்குத் தேர் ஓட்டினான். அப்போது கீதாசார்யனாக ஆனதினால் அவர்தேசு உயர்ந்தது என்கிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்.

தேசு உயர்ந்தவர்

அவனுடைய தேஜஸிற்கு இணையேது என்று கூறுகிறார் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ''தே சொத்தாரில்லையெனும் தெய்வனாயக '' என்ற பாடலில்.

மார்க்கண்டேயருக்கும் பிருகுவுக்கும் அருளல்

தம் வம்சத்தார் அழிவதைப் பார்த்துத் தன் சிரஞ்ஜீவித்வமாகிய வரத்தை எண்ணி வருந்திய மார்க்கண்டேயனுடைய தவத்தை உகந்து அவருக்கு ஒரு புத்திரியைக்

கொடுத்து அவனையும் தானே மணந்தருளி அம்மார்க்கண்டேயருக்கும் தம் அருகில் இடந்தந்து வாழச் செய்த பெருமை ஸ்ரீ தேவனாதனுடையது. மற்றும் ஐயோ பரமபுருஷனை மார்பில் உதைத்து விட்டேனே, ஐயோ என்ன பாவம் செய்தேன் ,ஸ்ரீ ய:பதியையும் பத்னியைப் பிரிவாய் என்று சபித்துவிட்டேனே என்று மனம் மிகக்கலங்கிய பிருகுமுனிவரைத்தவம் செய்யத்தூண்டி அவருக்குத் தம் தேவியாம் மஹாலக்ஷ்மியையே குழந்தையாகப் பிறக்கும்படி அருளி அவளுக்குப் பார்கவி என்று பெயரிட்டு அவளையும் திருமணம் புரிந்து கொண்டு அந்த பிருகுவையும் வாழ்வித்த பெருமை சாதாரணமானதா?

இவை போன்ற எத்தனை எத்தனையோ பெருமைகளையுடைய ஸ்ரீ தேவனாதனுடைய பெருமையாம் அமுதக்கடலில் ஒரு சிறு துளியேயாகும் இந்தக் கட்டுரை.

ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ மத் ஆண்டவன் ஸந்நதி ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஷஷ்டியப்த பூர்த்திக்காக வெளியிடப்படும் ஓர் மலரில் ஸ்ரீ தேவனாதன் பெருமையை விளக்கும் ஓர் வியாஸம் எழுதும்படி மரியாதைக்குரிய அன்பர்களிடமிருந்து ஆஜ்ஞை பிறந்தது. ''அறியாக் காலத்துள்ளே அடிமைகள் அன்பு செய்வித்து'' என்ற திருவாய்மொழிப் பாசுரத்திற்கிணங்க ஸ்ரீ மதாண்டவனைக் குழந்தைப் பருவத்திலேயே கடாக்ஷித்தருளிய தெய்வ நாயகனைப் பற்றி சிறிய ஞானத்தனாகிய அடியேன் பேசத்தான் முடியுமோ. பெரியோருடைய ஆஜ்ஞையை சிரஸா ஏற்று ஏதோ முடிந்தவரை அடியேன் பணியைச் செய்தேன். பெரியோர்கள் குற்றம் நீக்கிக் குணம் கண்டு அருளுவார்களாக.

''மஞ்சுலாவுசோலைசூழயிந்தை மன்னு மன்னுசீர்
வரையெடுத்து நிரையளித்த மாசில் வாசுதேவனே
செஞ்சொலன்பர்சிந்தை கொண்டு தீதிலாததூதனுய்த்
தேருமூர்ந்து தேசுயர்ந்த செல்வ தெய்வனுயக
வெஞ்சொளாளர் கால தூதர்வீசுபாசம் வந்தென்மேல்
விழுந்தழுந்தியானயர்ந்து வீழ்வதற்குமுன்ன நீ
அஞ்சலஞ்சலஞ்சலென் றளிக்கவேண்டுமச்சுதா
அடியவர்க்குமருளியக்குமடியவர்க்குமெய்யனே.''

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அவதாரங்களுள் சிறந்த அவதாரம்?

(ஸ்ரீமதுபயவே வித்வான் உஷ:பாக்கம் ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி)

இந்த இருள்தரும் மாஞாலத்தில் மக்களை நல்வழியில் நடத்துவதற்காக பகவான் பல அவதாரங்களை எடுத்துள்ளார். அவையாவன :

ஹம்ஸ, ஹயக்ரீவ, மத்ஸ்ய, கூர்ம, வராஹாதி பத்து அவதாரங்களும் சேர்ந்து, அநேக அவதாரங்கள் எடுத்தார். அதில் சில அவதாரங்கள் காரணத்தினால் உண்டானவை. குதிரை வடிவத்தில் வந்த அசுர்னை ஸம்ஹாரம் செய்து மக்களை காப்பதற்காக எடுத்த அவதாரம் ஹயக்ரீவாவதாரம். வேதங்களையெல்லாம் திருடிச்சென்று கடலுக்குள் மறைத்து வைத்த அரக்கனை அழித்து வேதங்களை காக்கும் பொருட்டு, தண்ணீருக்குள் மாத்திரம் செல்லக்கூடிய மத்ஸ்யாவதாரம் எடுத்தார். அவ்வாறே அவ்வரக்கனை வதம் செய்து, வேதங்களை ப்ரம்மனிடம் மீண்டும் ஒப்படைத்தார்.

தேவாசுர யுத்தத்தில் தேவர்களின் வெற்றிக்காக பாற்கடலில் அமுதம் கடைந்த பொழுது, மத்தாக அமைந்த மந்தரமலையை தாங்குவதற்காக, ஆதி கூர்மாவதாரம் எடுத்தார். இந்த அவதாரம் நீரிலும் நிலத்திலும் இருக்கக்கூடியதாக அமைந்தது.

ஹிரண்யாக்ஷன் என்ற அசுரன், பூமியைப் பாயாய்ச் சுருட்டி கடலுக்குள் ஒளித்தான். அவனை அழித்து, பூமியை வெளிக் கொணர்ந்து நிலைநாட்டுவதற்காக எடுத்த விசேஷமான அவதாரம் வராஹாவதாரம். இது நிலத்தில் மட்டும் வசிக்கக் கூடியதான அவதாரம்.

தன்னுடைய பக்தனது வார்த்தைகளை காப்பதற்காக அடுத்த மற்றொரு அவதாரம் ஸ்ரீ நரஸிம்ஹாவதாரம். அதாவது ஹிரண்யாக்ஷனின் சகோதரனான ஹிரண்யகசிபு பல விசித்ரமான வரங்களை ப்ரம்மனிடமிருந்து பெற்றுக் கொண்டு தன் மைந்தனான ப்ரஹ்லாதனையும் ஏனையோரையும், தானே முதற்கடவுள் என ஒப்புக் கொள்ளும்படியும், வேறு ஒரு கடவுள் கிடையாதென்றும், ஹிரண்யாய நம: என்றே கூறவேண்டுமென்றும் வற்புறுத்தி வந்தான். விஷ்ணு பக்தனான ப்ரஹ்லாதனோ அதற்கு மாறாக நாராயணனே பரம்பொருள் என்றும், தான் நாராயணனை மட்டுமே முதற்கடவுளாக அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், எப்போதும் நாரயணாய நம: என்றுமே சொல்லி வந்தான். இவ்வாறாக, தந்தையான தனக்கே உபதேசிப்பதைக் கண்டு சினம் கொண்ட ஹிரண்யகசிபு பலவாறாக அவனை துன்புறுத்தியும், கொல்லவும் பல திட்டங்கள் வகுத்தான். ஒரு சமயம், பெருஞ்சினம் கொண்டு, ''உன் தலைவனான நாராயணன் எங்கடா உள்ளான்'', என கேட்க ''தூணிலும் இருப்பான், துரும்பிலுமிருப்பான்'', என அவன் பதிலளிக்க இத்தூணில் இருப்பானோ? என ஆவேசத்துடன் தன் கதையால் தூணினை பலமாக அடித்தான்.

அளந்திட்டதூணை அவன்தட்ட ஆங்கே
வளர்ந்திட்ட வாளுகிர்ச்சங்க உருவாய்
உளந்தொட்டிரணிய னொண்மார்வகலம்,
பிளந்திட்ட கைகளால் சப்பாணி
பேய் முலையுண்டானே சப்பாணி ;

என்கிற பெரியாழ்வார் கூற்றின்படி, நரஸிம்ஹாவதாரம் எடுத்து அவனை வதம் செய்து பக்தனைக் காத்தார்.

நூறு அச்வமேத யாகங்கள் செய்து, இந்திர பதவியை அடைய விரும்பிய மகாபலியை தன் பக்தனாயிருந்த போதிலும் இந்திரபதவியை ஆக்ரமிக்க எண்ணிய அவனை அடக்குவதற்காக:

அன்றியும் பேர்வாமனனாகிய காலத்து
மூவடிமண்தாராயென்று வேண்டிச் சலத்தினால்
நீரேற்றுலகெல்லாம் நின்றளந்தான் மாபலியை

என்ற திருமங்கை மன்னன் கூற்றின்படி சிறு வடிவினனாய்த் தோன்றி த்ரிவிக்ரமனாய் (நெடியோனாய்) வளர்ந்து அவனை அடக்கியாண்டு இந்திரனை ரக்ஷித்தார்.

பரசு ராமாவதாரத்தில், கார்த்தவீர்யார்ஜுனனால் கொல்லப்பட்ட தன் தந்தையான ப்ருகு முனிவனின் மரணத்தால் கொதித்தெழுந்தவராக இருபத்தோறு தலைமுறைகளுக்கு க்ஷத்ரிய அரசர்களைக் கொன்று அவர்களது இரத்தத்தால் தன் தந்தைக்குத் தர்ப்பணம் செய்தார்.

அவ்வாறே, பல வரங்களைப் பெற்றும். விசேஷமாக மனிதரல்லாத வேறொருவனாலும் கொல்லப்படாமை'', என்ற வரத்தைப் பெற்று, இந்திர லோகத்தை ஆக்ரமித்துக் கொண்டு, தேவர்களைப் பலவாறாகத் துன்புறுத்திக் கொண்டுமிருந்த இராவணன் எனும் அரக்கர் தலைவனை இராமாவாதாரமெடுத்து சம்ஹாரம் செய்தார். ராமோ விக்ரஹவான் தர்ம: என்ற கூற்றின்படி த்ரேதாயுகத்தில் தர்மத்தின் சிகரமாகத் திகழ்ந்தார்.

த்வாபரயுகத்தில் சிசுபாலன், கம்சன், பகாசுரன் முதலிய கொடிய அரக்கர்களை சம்ஹாரம் செய்தற் பொருட்டும், தர்மத்தை நிலைநிறுத்தவும் கிருஷ்ணவதாரம் புரிந்தார். மஹாபாரதப் போரில் தர்மத்தை பின்பற்றுபவர்களான பாண்டவர்களணிக்குச் சகாயம் செய்து, தர்மத்தை நிலைநிறுத்தினார். இந்துக்களின் அரியநூலான ''பகவத்கீதையின்'', ஆசிரியராக அர்ஜுனனுக்கு உபதேசம் செய்து தனது விச்வரூபதரிசனத்தையும் கொடுத்தார்.

பத்தாவதான கல்கி அவதாரம் வரப்போகிற அவதாரமானபடியால் விவரிக்கப்படவில்லை.

அவதாரங்களுக்குள் சிறந்தது எது என்ற கேள்வி எழும்போது, மத்ஸ்ய ரூபியானவன் வாக்யத்தைப் பார்த்தால் ஒருக்காலுங்கரையேற்ற மற்றவன் வார்த்தையாகையாலே ஜலா(டா) ஸய சம்பந்தம் தோற்றும்படியாயிருக்கும். கூர்மரூபியானவன் வார்த்தையைப் பார்த்தால் கம்பீரர் கலங்கவும் ஸ்திரர் ப்ரமிக்கவும். கீழ்மை விடாமலிருக்குமவன் சொல்லும் வார்த்தையாகையாலே மேல்கொள்ளும் வார்த்தையாயிராது. ஸ்ரீநரஸிம்ஹன் வாக்யம் கழுத்துக்கு மேலொருபடியும், கழுத்துக்கு கீழொருபடியும் ஆகையால் ப்ரதோஷோதிதமாயிருக்கும். ஸ்ரீவாமனன் வாக்யம் அடியிற்சொன்னபடியன்றிக்கே விஷமபதமாயிருக்கும். இவ்வளவுமன்றிக்கே கவியாயிருப்பானொருத்தனளவிலே கண்ணழிவையுடைத்தாயிருக்கும். பரசுராமன் வாக்யம் பரசுதாரணம் பண்ணி ஸர்வாவஸ்தைகளிலும் க்ஷமை விட்டவன் வார்த்தையாகையாலே ப்ரத்யயம் பிறக்கும்படியாய் இராது. ஸ்ரீ சக்ரவர்த்தித்திருமகன் வாக்யம் கபிகளோடே கலந்து புண்யஜன பாதாவர்த்தனமாயிருக்கும். புண்ய ஜநபாதா வர்த்தனம் பலபத்ரன் வாக்யம் ஸரஸ் ஸ்ரோதஸ் ஸாலே தாழப்போவாரையும் உத்பத பீரவ்ருத்த னாக்கினவன் வார்த்தையாகயாலே மதவிகாரம் தோற்றியிருக்கும்.

அவ்வளவன்றிக்கே சுத்தவர்ண ராயிருக்குச் செய்தேயும் கலப்பையுடையவன் வார்த்தையாகையாலே விச்வ ஸிக்கவொண்ணாத படியாயிருக்கும்.

ஸ்ரீக்குஷ்ணன் வாக்யம். பிறந்தது முதல் வெண்ணெய், தயிர், பால் ஆகிய பொருட்களை திருடியபோது கை வந்தகளவிலே காணலாம் படியாயிருக்கும்.
கல்கி அவதாரம் வரப்போகும் அவதாரமாகையால், வந்த வாக்யமாகாது, அனுமானித்தே வரக்கூடும்.

இப்படியாக, அந்யதாசங்கை செய்யமுடியாமல் ''ஏனத்தினுருவாகி நிலமங்கையெழில் கொண்ட ஞானத்தின் ஒளியுரு'' னென்றும், ''ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரா'', வென்றும் சொல்லுகிறபடியே ஸம்யக்ஞாநோபகாரகனாகையாலே, ''பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியானீழியானருளே, நன்று நானுய்ய'' 'ஞானவான்கள் விச்வஸித்துக் கொள்ளும்படியான 'க்ருபாதிசயத்தையுடைய வனாகையாலும், ஆதிமுன்னேனமாகிய அரனாய மூர்த்தியது நம்மையாளுமாசே'', என்றும் சொல்லுகிறபடியே ரக்ஷகத்வபூர்த்தியையுடையவனாகையாலும் ''இருங்கற்பகஞ் சேர்வானத்தவர்கு மல்லாதவர்க்கும் மற்றெல்லாமெவர்க்கும் ஏனத்துருவாயிடந்த ஞானப்பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்ல'', தென்று ஆழ்வாரும் ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் ஸர்வருக்கும் இவனையொழிய ரக்ஷகாந்தரமில்லையென்று அறுதியிட்டு சரமப்ரபந்தமான திருவாய் மொழியின் முடிவிலும் ''நீலவரையிரண்டு பிறைகல்வி நிமிர்ந்த தொப்ப கோலவராகமொன்றாய் நிலங்கோட்டிடைக் கொண்டவெந்தாய் நீலக்கடல் கிடந்தாயுன்னைப் பெற்றினிப்

போக்குவனோ'' என்றும் அவதாரங்களெல்லாம் கிடக்கச் செய்தே இந்த அவதாரத்தைத்தாம் பண்ணி அந்தமில்பேரின்பம் பெற்றபடியையருளிச் செய்கையாலும் அவனுடைய ரக்ஷகவமுத்தாரமான ரக்ஷகத்வமாகையாலும் இப்படியிவன் பண்ணுகிற ரக்ஷணம். வாத்ஸல்ய மூலமென்று தோற்றும்படி ''ஏனமாய் நிலங்கீண்ட வென்னப்பனே'', என்றும் ''அப்பனூன்றி யிடந்தேயிற்றில் கொண்டனா'', லென்றும் வாத்ஸல்யாவிநா பூதமான பித்ருத்வம் இவனுக்குண்டென்று சொல்லுகையாலும் ஸகலலோகபிதாவான இவன் செய்த வராஹாவதாரமே எல்லா அவதாரங்களுள் சிறந்தது.

இப்படி இந்த வராஹாவதாரத்தின் மூலம், வராஹாவதாரமெடுத்த நாராயணனே ஹிரண்யாக்ஷனை வதம் செய்து பூமியை உத்தரணம் பண்ணினார். ஸ்ரீபூமி பிராட்டி பகவானான வராஹமூர்த்தியைப் பார்த்து தன் ப்ரஜைகளுக்கு எது ஹிதம் என்றும் ப்ரச்னம் பண்ணவளவில் பகவான் என்னை பஜனம் பண்ணுவது ஒன்றே ஹிதமானது என்றருளினார். இப்படிச் சொன்ன வார்த்தை, ஸர்வேச்வரன் நாச்சியாரைப் பார்த்து பாம்பணையார்க்குத்தன் பாம்பு போல், ''நாவும் இரண்டு உளவாய்த்து'' இதுவும் உபாலம்ப விஷயமாகுமோ என்று பிராட்டி அதிசங்கை பண்ண. இவ்வார்த்தையும் செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்மைப் பெருவார்த்தை விஷ்ணு சித்தர் கேட்டிருப்பாரென்று அறிந்திருக்கச் செய்தேயும் விச்லேஷக்லேசம் பொறுக்க மாட்டாதபடியான த்வராதிசயத்தாலே பாம்பணையார்க்கும் தம் பாம்புபோல் நாவுமிரண்டுளவாய்த்து என்று அனந்தபுஜஸம்ஸர்கதோஷத்தாலே பொய்யாகிறதோ வென்ற அதிசங்கை பண்ணாதே என்று பகவான் பதிலளித்தார்.

பார்வண்ணமடமங்கை (பக்தர்) பித்தரென்கிற படியே நாச்சியார் பக்கலுண்டான பாவபந்தத்தாலே ப்ரளயார்ணவமக்நை இவளையதில் நின்று மேலெடுத்து இவளுடைய க்லேசத்தைத் தவிர்த்து வைத்தவளவிலும் ஸம்ஸாரார்ணவமக்நரான தன் ப்ரஜைகளுடைய துக்க நிவ்ருத்திக்கு ஸஹோசாய ங்காணாமையாலே விஷ்ணுவாயிருக்கிற விவளைக் கண்டருளின பகவானிவள் தேறும்படியாகச் சொன்ன வார்த்தையாகையாலே அதிசங்கை பண்ண் வேண்டுவதில்லை. ஆகையால் அவஸ்த்தாந்தரங்களில் போலின்றிக்கே ஸ்ரீ வராஹாவஸ்தையில் அர்த்தத்தை நாச்சியாரும் தன்னுடைய ப்ரபந்தமான நாச்சியார் திருமொழியில் அருளிச் செய்த

பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்கு பண்டொருநாள்
மாகடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்.
தேசுடையதேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே,

என்ற இப்பாசுரப்படியும் இந்த வராஹாவதாரமே எல்லா அவதாரங்களிலும் உத்க்ருஷ்டமானது.

இப்படி பகவானருளிச் செய்த பல உபாயங்களைக் காட்டிலும் கானரூபமான உபாயமே மிகச் சிறந்ததென்று தன்னுடைய ப்ரபந்தமான திருப்பாவையில் ''பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடிபாடி'', என்றும் ''ஓங்கியுலகளந்த வுத்தமன் பேர் பாடி'', என்றும், ''நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும் நீ'', என்றும், ''பாவாயெழுந்திராய்

பாடிப்பறை கொண்டு'', என்றும், ''நின்முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட'', வென்றும், மனத்துக்கினியானைப் பாடவும் நீ'', என்றும் கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமை பாடி'', என்று திருப்பாவை முப்பது பாசுரங்கள், நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களும், ஆக மொத்தம் 173 பாசுரங்கள் அருளிச் செய்து பாடவல்ல நாச்சியார் எனப் பெயர் பெற்றார்.

மேற்படி வராஹாவதாரத்தின் தனிச்சிறப்பு. மக்களுக்கு நல்லறிவை புகட்டக்கூடிய ஞானமூர்த்தி இவரே என்பதால் இந்த அவதாரத்தை உபாசிப்பவர்களுக்கு நல்ல அறிவு உண்டாகும். மேலும் இந்த வராஹ புராணத்தில் சொல்லியபடி

மஹாவராஹ: ஸ்புடதம லோசந:
புருஷ: புஷ்கரேக்ஷண:
என்று புராணங்கள் சிறப்பிக்கின்றது.
நமஸ் தஸ்மை வராஹாய் லீலயோத்தரதே மஹீம்
குரமத்யகதோ யஸ்ய மேரு: கண கணாயதே
என்றும் புராணங்கள் புகழ்கின்றன. மேலும்
ப்ரளயோதந்வதுத்தீர்ணாம் ப்ரபத்யேஹம் வஸுந்தராம்
மஹாவராஹ தம்ஷ்ட்ராக்ரமல்லீகோச மதுவ்ரதாம்
என்றும் புகழ்கிறது.
இந்த வராஹாவதாரமெடுத்த பகவான் தன் அவதாரத்தின் முடிவில் வராஹசரமச்லோகத்தில்

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஸரீரே ஸதியோ நர:
தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வரூபம் ச மாமஜம்
ததஸ்தம் ம்ரியமாணம்து காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

இதுபோலவே, கிருஷ்ணாவதாரத்திலும் ப்ரஸித்தமான சரமச்லோகம்தான்

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஸரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

என்பது.

இது போலவே இராமாவதாரத்தில்

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம

என்பது சரமச்லோகம்.

இப்படி வராஹாவதார சரமச்லோகத்தின்படி பகவான் உலகத்திலுள்ள எல்லா மக்களையும் தன்னுடைய அருளால் எல்லா ஜன்மாந்திர பாபங்களெல்லாம் போக்கி, கடைசி காலத்தில் தன் நினைவை உண்டாக்கி மோக்ஷத்தையும் கொடுக்கிறார். ஆகையால் தான் ஏனைய அவதாரங்களைக் காட்டிலும் வராஹாவதாரம் சிறந்ததென்பது திண்ணம்.

ஸ்ரீ:





ஸ்ரீமத் தென்பிரை ஆண்டவன்

ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

தயாசதகம்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் பாதூர் ரங்கராஜாசாரியர் ஸ்வாமி)

அவதாரிகை:

'அர்ச்சாவதாரத்துக்குப் பொற்கால் பொலியவிட்டவிடம்' – என்று நம் பூர்வர்கள் புகழ்ந்த புண்ணியபூமி திருமலையாகும். 'அமலனாதிபிரான்' திவ்யப்ரபந்தத்தின் வ்யாக்யான வரிகள் நம் நெஞ்சை கொள்ளைகொள்கின்றன! ஆம்! திருமலையில் தங்கியன்றோ எம்பெருமான் 'கோவிலுக்கு' (ஸ்ரீரங்கத்திற்கு) வந்தான்! 'பரமபதத்தில் நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக்காணும் கோவிலுக்கு வந்தது' என்று பட்டர் அருளிச் செய்வாராம். திருமலை எம்பெருமானை ஏத்தி வழிபட விண்ணோரும் மண்ணோரும் எப்போதும் விரைகிறார்கள். இதையே ஆழ்வார் 'கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு' என்று அருளிச்செய்கிறார்.

नावेव यान्तमुभये हवन्ते (நாவேவ யாந்தமுபயே ஹவந்தே) என்று வேதமும் கூறுகிறது. நதியிலே படகில் போகிறவனை இருபக்க கரையிலும் உள்ளவர்கள் அழைப்பது போல எம்பெருமானை உபயவிபூதியில் உள்ளவர்களும் அழைக்கிறார்கள் என்று அதற்கு பொருள். திருமலை ஒருமையானை தொழ விரும்பி பின்னிட்ட சடையானும் (ருத்ரனும்) பிரமனும், இந்திரனும் மற்றும் தேவர்களும் போட்டிபோட்டுக்கொண்டு இருப்பதை குலசேகராழ்வார் அழகாக அநுபவிக்கிறார். நம் போன்ற சேதனற்கு திருமலை ஸ்ரீநிவாஸனை சேவிக்க வேண்டும் என்கிற பாரிப்பு எவ்வளவு இருக்கிறதோ அதை விட ஈடுபாடு தேவர்களுக்கும் இருக்கிறதாம். ஸ்வாமி தேசிகன் 'விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு' என்று அதிகார ஸங்க்ரஹத்திலே அருளியது இங்கு அவசியம் குறிப்பிடத்தகுந்தது.

चक्षुर्देवानां उत मर्त्यानां (சக்ஷுர்தேவானா முத மர்த்யானாம்) என்றவாறு லீலாவிபூதியிலுள்ள முமுக்ஷுக்களோடு பரமபதத்திலுள்ள நித்யமுக்தரோடு வாசியற திருமலைக்கு வந்து ஸ்ரீநிவாஸனுக்கு 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்' என்று விரும்பி நிற்கிற சூழ்நிலை திருமலைக்கு உண்டு. அவர்கள்தாம் 'நல்கியாளென்னைக் கொண்டருளே' என்று ப்ரார்த்தனை புரியும் நிலை இப்பவித்ர பூமியில் நித்ய வாஸம் செய்யும் ஸ்ரீநிவாஸனைத்தான்!

மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களுள் தொண்டரடிப் பொடியாழ்வார் தவிர அனைவரும் ஸ்ரீநிவாஸனை தமது செஞ்சொற்களால் பாடி வழிபட்டிருக்கிறார்கள். ஆசார்ய கோஷ்டியுள் நாயகராக விளங்கும் பகவத் பாஷ்யகாரரும் தமது ஸ்ரீபாஷ்யத்தை ஸ்ரீநிவாஸனுக்கே அர்ப்பணம் செய்கிறார். வால்மீகி ராமாயணத்திற்கு வ்யாக்யாநம் செய்த ஸ்ரீகோவிந்தராஜரும் திருமலையில் தாம் வாழ்ந்து வ்யாக்யாநம் செய்ததாக கோவிந்த ராஜீய வ்யாக்யானத்தின் ஆரம்பத்தில் கூறிக்கொள்கிறார்.

திருமலை க்ஷேத்திர மஹிமை : இந்த புண்ணிய க்ஷேத்திரத்தின் மஹிமை வராஹபுராணம், பாத்மபுராணம், கருடபுராணம், ப்ரம்ஹாண்ட புராணம், மார்க்கண்டேய புராணம், ஸ்கந்த புராணம், வாமன புராணம், ப்ரம்ஹவைவர்த்த புராணம், பவிஷ்யோத்தர புராணம், ஹரிவம்சம், வெங்கடேச்வர ரஹஸ்ய புராணம் இவைகளுள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த புண்ணிய ஸ்தலத்தின் மஹிமையை கணிசித்தே எம்பெருமான் இங்கு நித்ய வாஸம் செய்வதாக புராணம் பகர்கிறது.

मायावी परमानन्दं त्यक्त्वा वैकुण्ठमुत्तमम्
स्वामि पुष्करिणीतीरे रमया सह मोदते ॥
மாயாவீ பரமானந்தம் த்யக்த்வா வைகுண்ட முத்தமம்।
ஸ்வாமி புஷ்கரிணீதீரே ரமயா ஸஹ மோததே ॥

அத்யாஸ்சர்யமான திவ்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமான் மிகவும் ஆனந்தத்தை நல்கும் உத்தமமான ஸ்ரீவைகுண்டத்தை விட்டு ஸ்வாமி புஷ்கரிணியின் கரையில் மஹாலக்ஷ்மியுடன் சந்தோஷத்துடன் விளங்குவதாக புராணம் கூறுகிறது.

திருமலையிலுள்ள ஏழுமலைகள்: வேங்கடாத்ரி, சேஷாத்ரி, வேதாத்ரி, கருடாத்ரி, வ்ருஷபாத்ரி, அஞ்ஜனாத்ரி, ஆனந்தாத்ரி என்று திருமலையில் ஏழுமலைகள் உள்ளன.

திருமலையின் புண்யதீர்த்தங்கள் : இத்திருமலையில் ஆகாசகங்கை, பாபவிநாசனம் போன்ற முக்யமான புண்ய தீர்த்தங்கள் பதினான்கு உள்ளதாக விளக்குகின்றன.

திருமலையில் எல்லோரும் சமமே ஸ்வாமி தேசிகன் தமது ஹம்ஸ ஸந்தேசம் என்கிற தூதுவிடும் காவியத்தில் திருமலையில் எல்லாரும் சமம் என்பதை இருபத்திரண்டாம் ச்லோகத்தில் அழகாக வர்ணிக்கிறார்.

तत्रारूढैः महति मनुजैः स्वर्गिभिश्चावतीर्णैः
सत्वोन्मेषात् व्यपगत मिथस्तारतम्यादि भेदैः।
साधारण्यात् फलपरिणतेः सङ्गशो वर्ण्यमानां
शक्त्या कामं मधुविजयिनः त्वं च कुर्याः सपर्याम् ॥

தத்ராரூடைர் மஹதி மநுஜை: ஸ்வர்கிபிஸ்சாவதீர்ணை:
ஸத்வோன்மேஷாத் வ்யபகத மிதஸ்தார தம்யாதி பேதை: ।
ஸாதாரண்யாத் ப்ல பரிணதே: ஸங்கசோ பத்யமானாம்
சக்த்யா காமம் மது விஜயிநஸ்த்வம் ச குர்யா: ஸபர்யாம் ॥

நண்பரே ! அந்த திருமலை மிகவும் பெருமை பெற்றது. பூமியிலுள்ள மனிதர்கள் அந்த மலைமீதேறி வருகிறார்கள். மேலே சுவர்க்கத்தினின்று தேவர்கள் கீழிறங்கி திருமலைக்கு வருகிறார்கள். திருமலைக்கு வந்த அனைவர்க்கும் ஸத்வ குணம் தலையெடுக்கிறது. உயர்ந்தவர்–தாழ்ந்தவர் என்கிற வேற்றுமை உணர்வு அழிகிறது. தேவர்களும் மனிதர்களும் கூட்டம் கூட்டமாக நின்று திருமலையப்பனை வணங்குகின்றனர். அங்கே போனதும் உனக்கும் ஸத்வகுணம் தலையெடுக்கும். நீயும் வேங்கடவனை வழிபடலாம். உன் சக்திக்கு ஏற்ப கைங்கர்யம் செய்தால் போதும். உன் விருப்பப்படி மதுசூதனனான ஸ்ரீநிவாஸனை வழிபடுவாயாக! என்றவாறு அந்த சுலோகம் அழகுற வர்ணிக்கப்பட்டுள்ளது.

திருமலையின் உயர்வு : சேதனர்கள் தம்மை அணுகினால் அதைக் கண்டு அந்த பரமபுருஷன் மனம் மகிழ்கிறான். அவ்வாறு தம்மை அணுகினால் ஆச்ரயிக்கும் சேதனனை 'உதாரன்' என்றும் 'ஞானி' என்றும் கொண்டாடுபவன் அன்றோ அவன்! அத்தகைய சேதனர்களை காக்க வேண்டி அந்த எம்பெருமான் இருபத்தெட்டாவது கலியுகத்தில் (அஷ்டாவிம்சேகலெளயுகே) ஸ்ரீநிவாஸனாக அவதரித்த இடமே திருமலை. 'வேங்கடம் அடைந்த மால் பாதமே அடைந்து நாளும் உய்மினோ' (திருச்சந்தவிருத்தம் 81) என்று அருளிச் செய்கிறார் திருமழிசையாழ்வார். இவ்விடத்து வ்யாக்யாந வரிகளை இங்கு அவசியம் கவனிக்க வேண்டும். 'ஆச்ரிதர்க்கு திருவேங்கடமுடையான் ஆச்ரயணீய ஸ்தலம். திருவேங்கடமுடையானுக்கு ஆச்ரயணீய ஸ்தலம் திருமலை'. இதினின்று திருமலையின் உயர்வு எத்தகையது என்பதை நம்மால் அறியமுடிகிறது. ஸ்வாமி நம்மாழ்வாரும் 'திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே' என்று அருளிச் செய்து திருமலையின் உயர்வை அழகுற விளக்குகிறார். ஸ்வாமி தேசிகனும் (ப்ரபத்யே தம்கிரிம்) என்று தமது தயாசதகத்தின் ஆரம்ப ச்லோகத்தில் திருமலையின் உயர்வை கணிசித்து 'மலையே திருவுடம்பு' என்கிற ஆழ்வார்களின் வார்த்தையினை உள்ளத்தில் நிலைநிறுத்தி அத்தகைய மலையை சரணமடைகிறார். விரிவுக்கு அஞ்சி அவதாரிகையை இத்துடன் நிறுத்துவோம்.

தயாசதகம் : ஸ்வாமி தேசிகன் ஸ்ரீரங்கநாதன் விஷயமாக 'பாதுகாஸஹஸ்ரம்' இயற்றினார். திருவஹிந்திரபுரம் தேவநாதன் விஷயமாக 'அச்யுத சதகம்' அருளிச் செய்தார். திருமலை ஸ்ரீநிவாஸன் அதிலும் ஸ்ரீநிவாஸனின் எண்ணற்ற கல்யாண குணங்களுள் தயை (கருணை)யை முன்நிறுத்தி திருமகள்–மண்மகள்–ஆய்மகள் போல 'தயாதேவி' என்று மனதில் எண்ணி நூற்றெட்டு சுலோகங்கள் கொண்ட 'தயாசதகம்' என்கிற ஸ்தோத்திர நூலை இயற்றினார்.

இதிலுள்ள விருத்தங்கள்:

அநுஷ்டுப் – ஆர்யா – ஔபச்சந்திகம் – மாலிநீ, மந்தாக்ராந்தா – நர்தடகம் – சிகரிணீ – ஹரிணீ – ப்ருதிவீ – உத்தர்ஷணீ என்று பத்துவித விருத்தங்களில் அமைக்கப்பெற்ற ஒப்பற்ற ஸ்தோத்திர நூலே தயாசதகமாகும்.

பத்து பதிகங்கள் ! பத்து அர்த்தங்கள் !!

'பரமபுருஷனான அந்த எம்பெருமானே மோக்ஷமளிப்பவன்' ஏன்பது முதல் பதிகம் கூறும் பொருளாகும். அந்த எம்பெருமான் எல்லாவற்றையும் அறிந்தவன். எல்லாவற்றையும் செய்யும் திறனுடையவன் – என்பதை இரண்டாம் பதிகம் கூறுகிறது. அவ்வெம்பெருமானை ஆச்ரயிக்கும் அடியவர்களுக்கு விரோதிகளை அவன் ஒழித்துவிடுவான் என்பதை மூன்றாம் பதிகம் கூறுகிறது. எல்லாவற்றிற்கும் அந்த ஸர்வேச்வரனே உபாயமாக இருக்கிறான் என்பதை நான்காம் பதிகம் வலியுறுத்துகிறது.

அடையப்படும் பலனாயிருப்பவன் அவனே என்பதை ஐந்தாம் பதிகம் கூறுகிறது. ப்ரபத்தி மார்க்கத்தால் அடையத்தகுந்தவன் அந்த பரமபுருஷன் என்பதை ஆறும் பதிகம் விளக்குகிறது. மிகவும் தாழ்ந்தவர்களுடனும் ஒன்றாக கலந்து பரிமாற்றம் கொள்ளும் இயல்புடையவன் அந்த பரமபுருஷன் என்பதை ஏழாம் பதிகம் எடுத்தியம்புகிறது. மிகவும் மேலானவனாக ஸ்ரீநிவாஸன் திகழ்வதாக எட்டாம் பதிகம் கூறுகிறது. தசாவதாரங்களைச் செய்தவன் அந்த புருஷோத்தமனே என்பதை ஒன்பதாம் பதிகம் கூறுகிறது. சரணாகதியை அநுஷ்டித்தவர்க்கு இங்கேயே மோக்ஷரூபமான ஆனந்தத்தத்தை அருள்பவன் ஸ்ரீநிவாஸன் என்பதை பத்தாம் பதிகம் விளக்குகிறது.

தயாசதகத்தில் திருவாய்மொழி :

ஸ்வாமி தேசிகன் திருவாய் மொழியின் ஒவ்வொரு பத்தின் ஸாரார்த்தத்தை தாத்பர்ய ரத்னாவளியிலும் ஸாரத்திலும் அருளிச் செய்துள்ளார். அதில் ஸ்வாமி தேசிகன் விளக்கிய உயர்ந்த அர்த்தங்களை தயாசதகத்தில் பதினான்கு ஸ்லோகங்களில் கோடிட்டு காட்டி அருள்வதாக நம் பூர்வர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். இதனால் தயாசதகத்தில் திருவாய்மொழியின் சாயல் அங்கங்கு தென்படுவதாக கொள்ளலாம்.

முதல் சுலோகம் ! மலைக்கு வந்தனம் !

தயாசதகத்தின் முதல் சுலோகத்தில் ஸ்வாமி தேசிகன் திருமலையை சரணடைகிறார்.

प्रपद्ये तं गिरिं प्रायः श्रीनिवासानुकंपया ।
इक्षुसारस्रवन्त्येव यन्मूर्त्या शर्करायितम् ॥
ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநு கம்பயா!
இக்ஷ்வார ஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா சர்க்கராயிதம்!!)

திருமலைவாஸனான ஸ்ரீநிவாஸனுடைய தயையே (கருணையே) கருப்பஞ்சாறாக பெருகி நதியாக ஓடி சர்க்கரைக் கட்டியாய் கனமாக உறைந்திருப்பது போலுள்ள திருவேங்கடமலையை நான் சரணமடைகிறேன் என்று இந்த சுலோகத்தின் பொருள். இச்சுலோகத்தில் 'தயை' என்கிற குணத்தை 'அநுகம்பை' என்கிற சொல்லால் அழைக்கிறார் ஸ்வாமி. ஒருப்ராணி துக்கத்தினால் நடுங்குதல் அதைக்கண்டு தானும் நடுங்கும் நிலையே அநுகம்பையாகும். ஸம்ஸ்க்ருத மொழியில் 'சர்க்கரா' என்கிற சொல் சர்க்கரையையும், காலை துன்புறுத்தும் பொடிக்கற்களையும் குறிப்பிடும். வ்யாகரண சாஸ்திரத்தில் கௌமுதீகார் பட்டோஜி தீக்ஷிதர் ஸமாசாச்ரய விதி ப்ரகரணத்தில் இதை விளக்குகிறார்.

இரண்டாம் சுலோகம் ! ஆசார்யர்களை துதித்தல் :

विगाहे तीर्थबहुलां शीतलां गुरुसन्ततिम् ।
श्रीनिवासदयाम्भोधिपरीवाहपरंपराम् ॥
(விகாஹே தீர்த்த பஹுளாம் சீதளாம் குருசந்ததிம் ।
ஸ்ரீநிவாஸ தயாம் போதி பரீவாஹ பரம்பராம் ॥)

திருவேங்கடமுடையானுடைய தயை என்கிற ஒரு பெரிய ஏரியினின்று ஓடிவரும் வெள்ளங்களான குளிர்ந்த குருபரம்பரையில் அதிலுள்ள அநேக படித்துறைகளில் (ஸ்நான கட்டங்களில்) இறங்கி மூழ்குகின்றேன்.

साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम् ।
मग्नानुद्धरते लोकान् कारुण्यात् शास्त्रपाणिना ॥
(ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்ய மயீம் தநும் !
மக்னானுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா ॥)

என்கிற சுலோகத்தின்படி ஸர்வேசுவரனே ஆசார்யர்களாக அவதரிப்பதாகவன்றோ கூறுகிறோம். அந்தகைய பெருமை வாய்ந்த ஆசார்யர்களை ஸ்வாமி தேசிகன் துதி செய்கிறார்.

ஆழ்வார்களுக்கு வணக்கம்

தயாசதகத்தின் மூன்றாம் சுலோகத்தால் 'தெளியாத மறைநிலங்களை தெளிவித்த' ஆழ்வார்களை துதி செய்கிறார். இவ்வாழ்வார்களை அவதாரம் எடுக்க வைத்து இவர்களைக் கொண்டு வேதங்களை தமிழ்மொழியில் பாடவைத்தது ஸ்ரீநிவாஸனுடைய கருணையன்றோ! என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

மஹர்ஷிகளைத் துதித்தல்

அடுத்த சுலோகத்தால் பராசரர்முதலான மஹர்ஷிகளைத் துதி செய்கிறார். பகீரதன் என்கிற அரசன் கடுந்தவம் புரிந்து புனிதமான கங்கையை கொண்டு வந்தது போன்று

திருவேங்கடமுடையானுடைய 'கருணை' என்கிற குளிர்ந்த சுத்தமான கங்கா ப்ரவாஹத்தைக் கொணர்ந்து நம்போன்றவர்கள் அதில் ஸ்நாநம் செய்யுமாறு செயல்புரிந்த பராசரமஹர்ஷி போன்றவர்களை துதி செய்கிறார் ஸ்வாமி தேசிகன். பராசரர் போன்ற மஹர்ஷிகள் ஆழ்வார்களுக்கு முன்பு அவதரித்தவர்கள். அவர்களை துதி செய்துவிட்டு பிறகன்றோ ஆழ்வார்களை துதிசெய்ய வேண்டும்! முறை மாறி துதி செய்ய காரணம் என்ன வென்றால் இந்நூல் தயாஸ்தோத்ரம். ஆழ்வார்கள் ஸ்ரீநிவாஸனுடைய தயையையே மோக்ஷோபாயமாகக் கைக் கொண்ட சரணாகதி நிஷ்டர்கள். திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்கள் சரணாகதியை விளக்க வந்தவை என்று நம் பூர்வர்கள் சொன்ன காரணத்தாலும், எம்பெருமானுடைய தயாகுணத்தையே ஆழ்வார்கள் பாசுரமிட்டு பாடிய படியாலும் மஹர்ஷிகளுக்கு முன்பாகவே ஆழ்வார்களை துதி செய்தார் ஸ்வாமி தேசிகன்.

தயாகுணத்தின் சேர்க்கையால் மற்ற குணங்கள் நிறம் பெறுதல்:

वृषगिरिगृहमेधिगुणाः बोधबलैश्वर्यवीर्यशक्तिमुखाः।
दोषा भवेयुरेते यदि नाम दये त्वया विनाभूताः।।
வ்ருஷகிரி க்ருஹ மேதிகுண ா : போத பலை ச்வர்ய வீர்ய சக்திமுகா: ।
தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா விநா பூதா: ।।)

தயாதேவியே! திருவேங்கடமலையில் குடித்தனம் நடத்தும் ஸ்ரீநிவாஸனுடைய க்ஞானம் பலம் வீர்யம் ஐஸ்வர்யம் சக்தி முதலிய குணங்கள் உன்னுடன் சேர்ந்திராமல் விலகியிருந்தால் மக்களுக்கு கேடு விளைவிக்கும் தோஷங்களாகவே ஆகிவிடும் என்பது மேற்சொன்ன சுலோகத்தின் பொருள். ப்ரப்ஞசம் முழுவதும் ஸ்ரீநிவாஸனுக்கு குடும்பம். ஆனால் ஸ்வாமி இங்கு திருவேங்கட மலைக்கு குடும்பியாக வர்ணிக்கும் பாங்கு ரசிக்கத் தகுந்தது. திருமலைத்தாழவரைகளில் வசிக்க ப்பாரித்தல்

अशिथिलकरणेऽस्मिन् अक्षतश्वासवृत्तौ वपुषि गमनयोग्ये वासमासादयेयम्।
वृषगिरिकटकेषु व्यञ्जयत्सु प्रतीतैः मधुमथनदये त्वां वारिधाराविशेषैः।।

(அசிதில கரணே ஸ்மிந்நக்ஷத ச்வாஸ வ்ருத்தௌ
வபுஷிகமன யோக்யே வாஸமாஸாத யே யம் ।
வ்ருஷகிரி கடகேஷு வ்யஞ்ஜயத்ஸு ப்ரதீதை:
மதுமதந தயே த்வாம் வாரி தாரா விசேஷை: ।।)

மதுசூதனனுடைய தயையே! இச்சரீரம் தளராத இந்திரியங்களை உடையதாகவும் மூச்சுக்காற்றும் தடைபடாமல் இருக்கும்போது நினைத்த இடம் போகும் சக்தி இருக்கும் போதே பிரசித்தி பெற்ற விலக்ஷணங்களான அருவிகளால் உன்னை (தயாதேவியே உன்னை) அடையாளம் காட்டும் திருமலைத் தாழ்வரைகளில் வாஸம் புரியக்கடவேன் எனபது சுலோகத்தின் பொருள்.

திருவாய்மொழியில் ஸ்வாமி நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை எம்பெருமானை வழிபடுங்கால்

'கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலராகில் சார்வது சதிரே! என்று கூறி இளமைக்காலத்திலேயே திருமாலிருஞ்சோலை மலைக்குச் செல்லவேண்டும் என்று கூறிய மாதிரி ஸ்வாமி தேசிகன் குறிப்பிடுவது இங்கு நோக்குதற்குரியது.

தயாதேவியால் குற்றவாளிகளும் காபாற்றப்படுதல்

फलवितरणदक्षं पक्षपातानभिज्ञं प्रगुणमनुविधेयं प्राप्य पद्मासहायम् ।
महति गुणसमाजे मानपूर्वं दये त्वं प्रतिवदसि यथार्हं पाप्मनां मामकानाम् ।
பலவிதரண தக்ஷம் பக்ஷபாதாநபிக்ஞம்
ப்ரகுண மநுவிதேயம் ப்ராப்ய பத்மா ஸஹாயம் ।
மஹதி குண ஸமாஜே மாந பூர்வம் தயே த்வம்
ப்ரதிவதஸி யதார்ஹம் பாப்மநாம் மாமகாநாம் ॥


தயாதேவியே! செய்த வினைக்குத் தக்கபடி பலனைக்கொடுப்பதில் கைதேர்ந்தவனும் ஒரு பக்கம் சார்ந்து இருத்தலை (பக்ஷபாதம்) அறியாதவனும் உயர்ந்த கல்யாண குணங்களை உடையவனுமான ஸ்ரீநிவாஸன் என்கிற நியாயாதிபதியை அணுகி அநேக குணங்கள் இருக்கும் பெரிய சபையில் எனது பாபங்களுக்கு சரியான ப்ரமாணங்களை தக்கபடி எதிர்வாதம் புரிந்து விளங்குகிறாய் என்பது இதன்பொருள்.

கருணை புரியும் மற்றொரு காரியம்

निषादानां नेता कपिकुलपतिः कापि शबरी
कुचेलः कुब्जा सा व्रजयुवतयो माल्यकृदिति ।
अमीषां निम्नत्वं वृषगिरिपतेरुन्नतिमपि
प्रभूतैः स्रोतोभिः प्रसभमनुकंपे समयसि ॥ (65ம் சுலோகம்)
நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ
குசேல: குப்ஜா ஸா வ்ரஜ யுவதயோ மால்யக்ருதிதி ।
அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரி பதேருந் நதி மபி
ப்ரபூதை: ஸ்ரோதோபி: ப்ரஸப மநுகம்பே ஸமயஸி ॥

தயாதேவியே! நீ உனது கருணையாகிய வெள்ளத்தால் மலைமீதுள்ள ஸ்ரீநிவாஸனை பிடித்திழுத்து மிகவும் தாழ்ந்தவர்களுடன் அவன் கலந்து பழகுமாறு செய்தாய்! வேடுவர்தலைவனான குஹனுடன் புருஷோத்தமனான ஸ்ரீநிவாஸன் ராமாவதார காலத்தில் நட்பு கொள்ளுமாறு செய்தாய்! வானரஜாதியைச் சார்ந்த சுக்ரீவனுடன் (அக்னி சாட்சியாக) நட்பு கொள்ளச் செய்தாய்! வேடர் குலத்தில் பிறந்த சபரீ என்கிற முதியவள் கொடுத்த விருந்தோம்பலை ஏற்குமாறு செய்தாய்! உடுப்பதற்கு நல்ல உடையில்லாமல் கந்தை வஸ்திரமணிந்த காரணத்தால் குசேலர் என்று புகழ் பெற்ற பிராமணருடன் க்ருஷ்ணாவதார காலத்தில் கிருஷ்ணனை நட்புபூண வைத்தாய்! அறுவருக்கத்தக்க முக அழகு கொண்ட ஒரு கூனியை மிகவும் அழகான இளங்குமரியாக மாற்றி அருளினாய்! இடக்கை வலக்கை அறியாத இடையர் குலத்து மங்கையர் மனம் மகிழும்படி அவர்களுடன் க்ருஷ்ணன் கூடிக் கலக்குமாறு செய்தாய்! மாலைகள் கட்டி ஜீவனம் நடத்திய மாலாகாரருடைய வீடுதேடி (சந்து பொந்துகளில் நுழைந்து) அவர்தம் வீட்டை அடைந்து அவனுக்கு திவ்யாநுக்ரஹம் புரிந்தாய்! தயாதேவியே! இவ்வாறு நீ உனது கருணையினால் ஸர்வேசுவரனான ஸ்ரீநிவாஸனை வலியப்பிடித்திழுத்து உயர்ந்த அவனை தாழ்ந்தவர்களோடு கலக்கச் செய்து ஸமமாக ஆக்கினாயன்றோ என்று ஸ்வாமி தேசிகன் வியந்து பேசும் அழகே அழகு!

ஸ்ரீநிவாஸனாய் அவதாரம் செய்துள்ள எம்பெருமான் வழிபடத்தகுந்தவனாய் பக்தர்களால் அநுபவிக்க மிகவும் இனியவனாய் அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தை உடையவனாய், அனைவர்க்கும் போக்யனாய் இருப்பவனாய் புருஷார்த்தையும் அதன் உபாயத்தையும் நல்குகிறவனாய், ப்ரபத்திக்கு எளியனாய் அநிஷ்டங்களைப் போக்கும் தன்மையை உடையவனாய் பக்தர்களின் அபிப்ராயப்படி நடப்பவனாய் இயற்கையான நட்புடையவனாய் சேதநர்கள் அர்ச்சிராதியான நல்வழிகளில் செல்ல துணைபுரிபவனாக விளங்குபவன். மேற்கூறிய தன்மைகளை ஸ்வாமி தேசிகன் தயாசதகத்தில் அழகுற அருளிச் செய்துள்ளார். விரிவுக்கு அஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். 'ச்ருதி-ஸ்ம்ருதி சரணரான பூர்வாசார்யர்கள் கண்டக சோதனம் பண்ணி நடந்த வழியிலே நடக்கையாலே நமகு வருவதொரு தப்பில்லை' என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார நிகமநாதிகாரத்தில் ஸாதித்தபடி பூர்வர்கள் வ்யாக்யானம் செய்த வழியில் அடியேன் சில விஷயங்களை விண்ணப்பம் செய்ய நேர்ந்தது.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஏகாந்தோபதேச:

(ஸ்ரீமதுபயவே. வித்வான் பழவேரி. சடகோபாசாரியர் ஸ்வாமி)

ஆசார்யன் ஶிஷ்யனுக்குத் தனிமையில் செய்யும் உபதேசம். ''இத்யேகாந்தோபதேஶ: ப்ரதமம் இஹ குரோ: ஏகசித்தேந தார்ய:'' என்று ந்யாஸவிம்சதியில் ஸ்வாமி தேசிகன் ஸாதிக்கிறார். மோக்ஷத்தை விரும்பி ஆசார்யனை வந்தடையும் ஶிஷ்யனுக்குச் செய்யும் உபதேசமுறை. பெரிய பிராட்டிக்குக் கணவனான ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே சேதனாசேதனங்களை எல்லாம் தான் இட்டவழக்காம்படி தனக்கு முற்றிலும் வசப்பட்டனவாக்கிக் கொண்டு நடத்துகிறான் என்று தத்துவத்தை உணர்ந்து கொள். சேதனா சேதனங்களுக்கு ஸ்வரூபங்கள் உண்டு. அவை தொடர்ந்து நிற்கின்றன. அவைகளுக்குச் சில செயல்களும் உண்டு. அவற்றால் வரும் பயன்களும் உண்டு. எல்லாம் பகவததீனம். எம்பெருமானையே அடையவேண்டிய பலமாகவும் அறிந்துகொள். வேறு எவனையும் அடையவேண்டிய பலனாகக் கருதாதே. அந்தப் பலனை அடைய எம்பெருமானையே உபாயமாக (மார்கமாக) தெரிந்து கொண்டு, அவனையே ஶரணமடைவாயாக. வேறு யாரையும் உபாயமாக நினைத்துச் சரணமடையாதே. ஜீவர்களுக்கு ஸம்ஸாரமாகிய பயமும், மோக்ஷப்ராப்தியாகிற பயமின்மையும் எம்பெருமானால் மட்டுமே வருவன என்று நன்கு தெரிந்து கொள். அவன் கட்டளையாகிய ஶாஸ்த்ரத்தை மீறி நடக்காதே. ஶாஸ்த்ரங்களில் விதித்த கர்மங்களை அநுஷ்டிக்கத் தவறாதே. ஆசார்யர்கள் உபதேசித்த திருமந்திரம், த்வயம், சரமச்லோகம் என்ற மூன்று மந்திரங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் தினந்தோறும் அநுஸந்திக்கவேண்டும். இவ்வாறு ஆசார்யன் செய்த உறுதியான உபதேசத்தை சிஷ்யன் தன் ஒன்றிய மனத்தில் கொண்டு எப்பொழுதும் அநுஸந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில், ப்ரதான ப்ரதிதந்த்ராதிகாரத்தில் ஈஶோபநிதவ்யங்களுடைய (ஸ்ரீமந்நாராயணனுக்கும் நமக்கும் உள்ள) ஶரீராத்மபாவத்தைத் தெளிவாக உபதேசித்தார். பிறகு **ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யகாத்மந:! ப்ராப்த்யுபாயம் பலம் சைவ ததாப்ராப்திவிரோதி ச| வதந்தி ஸகலா: வேதா: ஸேதிஹாஸ புராணகா:** என்னும் ச்லோகத்தில் ப்ராப்யனாயும் ப்ராபகனாயும் உள்ள பரமபுருஷனையும்,

ப்ராப்தாவாயும் போஷனுமான ஜீவனையும், ஜீவஸ்வரூபத்துக்கு அநுகுணமான ஸரணாகதியை உபாயமாகயும், ப்ராப்திக்கு விரோதிகளான அஹங்கார மமகாரங்களை நிரூபித்து, திவ்யதம்பதிகளிடத்தில் கைங்கர்யமே பலனாகவும் அர்த்தபஞ்சகத்தை ஸாதித்தார்.

ஒரு பொருளை லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்து கொள்ளவேணும். ஒரு வஸ்துவுக்கு ஒரு விஷயம் சொன்னால், அந்த லக்ஷணமானது, மற்ற வஸ்துக்களைக் காட்டிலும் இந்த வஸ்து வேறுபட்டது என்பதை நன்கு காட்டிக் கொடுக்கும். விபோஷணங்களைக் கொண்டு நாம் வேறுபாட்டை அறியவேணும். தத்வத்ரயத்தை லக்ஷணங்களைக் கொண்டு அறியவேண்டும்.

பரஸ்மை ஏவ பாஸமாநத்வம் அசேதனத்துக்கு லக்ஷணம் (ஸ்வஸ்மை ஏவ பாஸமாநத்வம் ஜீவலக்ஷணம்) இதைத் தெரிந்து கொண்டால், சரீரம் இந்த்ரியம் மநஸ் ப்ராணன் இவை முதலானவைகள் ப்ரக்ருதியின் பரிணாமங்கள். ப்ரக்ருதியைத் தான் அசேதனம் என்றும் ப்ரதாநம் என்றும் சொல்லுவர். இதைத் தெரிந்து கொண்டால், ஸ்தூலோஹம்' என்கிற ப்ரமம் ஒழிந்து விடும். ஸ்தெளல்யம் என்பது (பருத்திருக்கை) சரீரத்துக்கு உண்டே அல்லது, நான் என்னும் படியான ஜீவனுக்கு இல்லை. சரீர – இந்த்ரிய – ப்ராண மநஸ் இவைகளைக் காட்டிலும் வேறுபட்டவன் நான் என்னும் ஜீவாத்மா. இதுவே அஹம்பதார்த்தம். அணுத்வே ஸதி சேதநத்வம் ஜீவலக்ஷணம். விபுத்வே ஸதி சேதநத்வம் ஈஸ்வர லக்ஷணம்.

இவ்வாறு ஜீவர்களையும் ஈஸ்வரனையும் பிரித்துக் காட்டினால், ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்று என்கிற எண்ணம் போய்விடும். ஜீவன் வேறு, ஈஸ்வரன் வேறு, ஜீவன் போஷன் பரதந்த்ரன், ஈஸ்வரன் சேஷி ஸ்வதந்த்ரன் என்று நன்கு தெரியும். ஸதாசார்ய மூலமாக அர்த்தபஞ்சகத்தையும், ''போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா'' என்கிற ஸ்ருதியின்படியே தத்வத்ரயத்தின் ஸ்வரூபத்தை அறிந்தால், தேஹமே ஆத்மா என்கிற ப்ரமமும்; ஜீவன் ஸ்வதந்த்ரன் என்கிற ஸ்வதந்த்ராத்ம ப்ரமமும் கழியும், ஜீவனுக்குள்ள போக்ருத்வமும் ஈஸ்வரனுடைய இச்சாதீ நம: போக்த்ருத்வ அஸமாநாதிகரண போக்யத்வம் அசித்துக்கு லக்ஷணம் என்னும், போக்யத்வஸமாநாதிகரண போக்த்ருத்வம், ஜீவனுக்கு லக்ஷணம் என்றும், நிருபாதிக நியந்த்ருத்வம் ஈஸ்வரலக்ஷணம் என்றும் வேதாந்தங்களால் நிர்ணீதமான அர்த்தங்களை (தத்வத்ரயத்தை), முமுக்ஷுக்களான நமக்கு நல்லறிவுடைய ஆசார்யர்கள் உபதேசித்துப் போருவர்.

இவ்விஷயத்தை ஸ்ரீஸ்வாமிதேசிகன் **''போக்யம் முகுந்த குணபேதம் அசேதநேஷு, போக்த்ருத்வம் ஆத்மநி நிவேச்ய நிஜேச்சயைவ| பாஞ்சாவிகா சுகவிபீஷண போகதாயீ ஸம்ராட் இவாத்மஸமயாஸஹ மோத ஸே த்வம்''**

என்று ஸாதித்தார். இதன் பொருளாவது மோக்ஷாந்தமான ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும் பிரானே! அசேதநங்களிலே போக்யதை என்னும் குணத்தை, ஜீவர்களிடத்தில் போக்த்ருத்வம் என்னும் குணத்தையும் தன் ஸங்கல்பத்தாலே பகவான் ஏற்படுத்துகிறான். எப்படியானால், பொம்மைக்குப் பூக்ஷணாதிகளைக் கொண்டு போக்யதையையும், கிளிக்குப் பால் முதலியவற்றைக் கொண்டு போக்த்ருத்வத்தையும் கொடுத்து, அரசனும் அரசியும் போலப் பிராட்டியுடன் பகவான் சந்தோஷிக்கிறான்.

இங்கே, பலத்திற்குப் ப்ரதாநமான ஆஸ்ரயம் திவ்யதம்பதிகளாகிறார்கள்; அப்ரதாநபலிகிளியாகிறது. இந்த ஸ்லோகத்தில் ''ஆத்ம ஸமயா'' என்று குறிப்பிட்டிருக்கிறார். பிராட்டிக்கு, உபாயத்வம், ப்ராப்யத்வம், ஜகந்நிர்வாஹம் முதலிய எல்லாம் ஸமாநம் என்றும் ஸ்ரீஸூக்தியின் ஸ்வாரஸ்வமாகும்.

பரிபூர்ண ஜ்ஞாநஸம்பந்நராகிய நம்மாசார்யர்கள், தம்மை வந்தடைந்தவனாயும் மோக்ஷத்தில் ருசியுள்ளவனாயும் ஸ்வல்பம் தெரிந்தவனாயும் உள்ள ஒவ்வொரு ஸிஷ்யனும் அறியும்படி உபதேசிப்பார்கள். எங்கனே என்னில்?

அசேதனமான தேஹ-இந்த்ரிய-மந: ப்ராணன்களைக் காட்டிலும் வேறுபட்டவன் ஜீவன், கர்மாதீனமாக அறிவின் சுருக்கத்தையும் மலர்ச்சியையும் உடையவன், நித்யன், அணுபரிமாணன், போஷன் என்று ஜீவனை இதரவிலக்ஷணனாக உபதேசித்து, பரமாத்மா என்பவன் நித்யன் எங்கும் உளன் (விபு) ஸர்வத்துக்கும் நியந்தா எப்பொழுதும் மலர்ந்த ஜ்ஞாநமுள்ளவன், ஒரேஸமயத்தில் எல்லாப் பொருள்களையும் அவைகளின் தர்மத்துடன் அறிபவன், (ஆகாசம் எங்கும் உளது, ஆனால் அதற்கு நியந்த்ருத்வம் கிடையாது; அரசன் எல்லாரையும் நியமிப்பவன், ஆனால் விபுவல்லன் - ந்ருபநபோவ்யாவ்ருத்தன் என்பது ப்ருதப்ரகாசிகை).

ஸர்வபோஷீ (எல்லாப் பொருள்களையும் தன்னுடையவையாகக் கொண்டு அவைகளின் விநியோகம் பெறுபவன். ''நாதத்வதிஷ்ட விநியோகவிபோஷ சித்தம் சேஷத்வ ஸாரம்'' என்பது ஸ்ரீதேசிக திவ்ய ஸூக்தி.

முன் சொன்ன விஷயங்களை உபதேசித்து ''ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் உபயம் ச ஸதா ஸ்மர'' என்று நம்மிடத்திலுள்ள ஸ்வாமித்வத்தையும் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிரு என்னும் விஷயமும் மேற்கூறின ஸூக்தியின் மேலுள்ள பாகம். அதாவது ''தாஸ்யம் பஜந்தி விபணி வ்யவஹாரயோக்யம்'' என்பது அது.

இனி, தத்வஹிதபுருஷார்த்தங்களைச் சுருங்க, அனைவரும் அறியும்படி,

''ப்ரத்யக்வஸ்து விலக்ஷணம் ப்ரக்ருதி: த்ராதா பதி: தத்பர:
ஸ்வஸ்மிந் ஆத்மபரார்ப்பணம் ஹிததமம் தச்சேஷவ்ருத்தி: பலம்|
இத்தம் தத்வஹிதே புமர்த்த: இதி ந: த்ரேதா விபக்தம் தநம்
தாயத்வேந தயாதநா: ஸ்வயம் அது: தத்தாத்மநாம் தேசிகா:''

என்று ஆசார்ய பரம்பரையாக வந்த விஷயத்தை நமக்கு ஸ்வாமி தேசிகன் இந்த ஸ்லோகரத்நத்தில் உபதேசிக்கிறார். இங்கே, தத்வஹித புருஷார்த்தங்கள் மூன்றின் அறிவும் தாயதநம் என்றார் தேசிகன். பரம்பரை சொத்து என்பது ஒருவனுக்கு வகுத்ததாகும். வந்தேறியன்று. ஸ்வரூபாநுகுணம் ப்ரஸ்நத்தில், மநு: புத்ரேப்யோ தாயம் வ்யபஜத் என்று சொல்லப்படுகிறது.

ஆக இவ்வளவால் தேறிய பொருளாவது 1. ஸ்ரீமன் நாராயணனே தத்வம் 2. அவர்கள் திருவடிகளில் பண்ணும் ஸரணாகதியே ஹிதம் 3. அந்த சேஷி தம்பதிகளுக்குச் செய்யும் கைங்கர்யமே புருஷார்த்தம் என்று தேறிற்று.

இவ்விஷயத்தை நம்முன்னோர்கள் அழகாகவும் நெஞ்சில் பதியுமாறும் கூறுவதாவது 1. திவ்ய தம்பதிகளே தத்வம்; 2. ஸரண்யதம்பதிகளே ஹிதம்; 3. போஷிதம்பதிகளே புருஷார்த்தம். சரணாகதியே ஹிதம் என்று முன்பு சொன்னது வ்யாஜம் – அப்ரதாநகாரணம் என்னும் ஹிதம் ஸரண்ய தம்பதிகளே ஹிதம் என்றால், ப்ரதானமான ஹிதம் என்றபடி. இரண்டும் ஒன்றே.

சில இடங்களில் ஸ்வாமிதேசிகன், திவ்யதம்பதி என்றும், சில இடங்களில் ஸரண்யதம்பதி என்றும், சில இடங்களில், சேஷிதம்பதி என்றும் அருளிச்செய்வர். திவ்ய சப்தம் வரும் இடங்களில் தத்வபரமாகவும், ஸரண்ய சப்தம் வரும் இடங்களில், ஸரணாகதியைச் செய்ய பரஸ்வீகர்த்தாவான எம்பெருமானின் உபாயத்வத்தையும் சேஷிசப்தம் வரும் இடங்களில் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும் ஔசித்யாத் கொள்ளும்போது பதப்ரயோக ஸ்வரஸ்யத்தை அனுபவிக்கலாம்.

ரஹஸ்யத்ரய ப்ரதிபாதகங்களான தத்வஹித புருஷார்த்தங்கள் ஆசார்ய பரம்பரையால் உபதேசிக்கப்பட்டன. நம்மாழ்வார், நாதமுனிகள் போன்றவரால் அநுஷ்டிக்கவும் பெற்றன. க்ரமமாக அவை ஸ்ரீபாஷ்யகாரிடம் தங்கின. அவரிடம் மாதுகர கைங்கர்யம் பண்ணினவர் கிடாம்பி ஆச்சானாகும். (மாதுகரம் என்னும் பதம், மதுகரமாகிற வண்டின் தேனைச் சேர்க்கும் வ்ருத்தியைச் சொல்லி,

ஸந்யாஸியான்வர்கள் பிக்ஷையைப் பெறுதலைச் சொல்லும். பின்பு, திருக்கோட்டியூர் நம்பிகள், பிக்ஷைக்கு எழுந்தருளாமலிருக்கச் செய்து, கிடாம்பி ஆச்சானையே பிக்ஷைஸாதிக்குமாறு, ஒரு காரணத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்தருளினார்)

ந்யாயஶாஸ்த்ரத்துக்கு உதயனாசார்யர் எப்படி அறிவால் ஶ்ரேஷ்டரோ, அப்படி கிடாம்பி ஆச்சான் என்கிற ஆத்ரேய ப்ரணதார்த்திஹரர், வேதாந்த சாஸ்த்ரத்துக்கும் உதயனர்போன்றவர் என்று ஸ்வாமி தேசிகன் ''வேதாந்தோதயந ஸம்ப்ரதாய ஸ்஥ாம்'' என்று ஸாதிக்கிறார். இக்கிடாம்பி ஆச்சான் ஶ்ரீபாஷ்யகாரரிடம் மடைப்பள்ளியில் ஏகாந்தத்தில் கேட்டவிஷயங்களை, தம் திருக்குமாரருக்கு மடைப்பள்ளியிலேயே உபதேசித்தமையால், ஆச்சானுடைய ஸம்ப்ரதாயம் மடைப்பள்ளி வந்தமண்ம் என்று சொல்லப்படுகிறது. ''மடைப்பள்ளி வந்தமணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே'' என்னும் தேசிகப்ரபந்தமும்; ''மாந்யம் யதீச்வர மஹாநஸ ஸம்ப்ரதாயம்'' என்று ஶரணாகதி தீபிகையும் இவ்வர்த்தத்தைக் காட்டுகின்றன.

இப்படி பரம்பரையாகக் கிடாம்பி அப்புள்ளாருக்கு ப்ராப்தமாகி, அவர் கிளியைப் பழக்குவிக்குமாபோலே மதுரமான ரஹஸ்யார்த்தங்களை தயையே ப்ரதாநமாகக் கொண்டு, தப்பில்லாதபடி ஶ்ரீஸ்வாமி தேசிகன் மூலமாகச் சொல்லுவித்த உத்க்ருஷ்டமான வார்த்தைகள் இவை. ஹயக்ரீவன் ஆசார்யர்களின் நாக்கின் நுனியைத் தனக்கு ஆஸநமாக் கொண்டு அமர்ந்து அவர்களைப் பேசுவிக்கிறான். ஆகையால் இவை ப்ரமாணதமங்கள்.

ஆசார்யர்களை அநுப்ரவேசித்துப் பிழையறப் பேசுவிப்பதில் ப்ரமாணமுண்டோ என்னில்? உண்டு த்வாபரயுகக் கடைசியில், பொய்கை முநி, பூதத்தார், பேயாழ்வார் என்கிற முதலாழ்வார்களை அநுப்ரவேஶித்துத் திருக்கோவலூரில், ஒரு வீட்டு இடைகழியில், பாசுரங்களைப் பேசுவித்தான்.

''பாட்டுக்குரிய பழையவர் மூவரைப் பண்டொருகால்,
மாட்டுக்கருள் தருமாயன் மவிந்து வருத்துதலால்,
நாட்டுக்கிருள் செக நான்மறை அந்தி நடை விளங்க
வீட்டுக்கிடைகழிக்கே வெளிகாட்டும் இம்மெய்விளக்கே''

என்பது ஶ்ரீதேசிகனின் பாசுரம். இங்கே கதையாவது.

முதலாழ்வார்கள் மூவரும், பெண்ணையாற்றங்கரையில் ம்ருகண்டு முனிவரின்க்ருஹத்தின் இடைகழியில் ஒவ்வொருவராக வந்தார்கள். மழையால் பீடிக்கப்பட்டு தூங்க வந்தார்கள். ஒருவர் படுக்க இடமும், இருவர் உட்கார இடமும், மூவர் நிற்க இடமும் தான் இருந்தது. இரவில் இருட்டில் மூன்று ஆழ்வார்களும் நின்று கொண்டிருக்கையில், வேறு நாலாமவருடைய நெருக்கம் நேர்ந்தது.

யார் அவர் என்று காண்பதற்கு முதல் இருவரும் இருவிளக்குக்களை ஏற்றினர். மூன்றாவது ஆழ்வாரான பேயார். திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்,'' என்று எம்பெருமானைக் கண்டார். மற்ற இருவரும் கண்டார்கள். பொய்கையார், ''வையம்தகளியா'' என்றும், பூதத்தார் ''அன்பே தகளியா'' என்றும் இருவிளக்குக்களை ஏற்றினார்கள். இம்மூவரிடமும் அநுப்ரவேசித்து, ஸத்யார்த்த ப்ரகாசமான முதல் மூன்று திருவந்தாதிகளாகிற ப்ரபந்தங்களைப் பேசுவித்தான் என்பது கதை.

இந்த மூன்று ப்ரபந்தங்களும், ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரத்தில் சொன்ன தத்வத்தையும் உபாயத்தையும் அதாவது ஸரணாகதியையும், புருஷார்த்தமாகிற பகவத் கைங்கர்யத்தையும் தெளிவாகக் கூறுகின்றன.

ஆனால் ஸ்வாமி தேசிகன் திருவேங்கடமுடையானே என்பதும் நம் ஸம்ப்ரதாயமாகும். ஆக, எம்பெருமானே ஏகாந்த – உபதேசத்தை குருமூலமாக அருளிச்செய்திருக்கிறான் என்பது ஸாரமாகும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

''யக்ஷ ப்ரச்நம்''

(ஸ்ரீமதுபயவே. வித்வான் திருக்குடந்தை ஸ்ரீநிவாஸாச்சார்யர் ஸ்வாமி, மதுராந்தகம்)

'नारायणं नमस्कृत्य नरं चैव नरोत्तमम् ।
देवीं सरस्वतीं व्यासं ततो जयमुदीरयेत् ।।

इतिहास पुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ।

என்கிறபடியே, வேதங்களின் அர்த்தங்களை, இதிஹாஸ புராணங்களைக் கொண்டே அறிய வேண்டும். இவற்றின் பொருளை அறியாமல் வேதத்திற்கு அர்த்தம் சொல்ல முடியாது. இதிஹாஸ புராணங்களுக்குள் இதிஹாஸம் ச்ரேஷ்டமானது. ஸ்ரீமத் ராமாயணமும், ஸ்ரீமஹாபாரதமும் இதிஹாஸம். ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலியன புராணங்கள். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு விதமான புருஷார்த்தங்களையும், கர்மம், ஜ்ஞாநம், பக்தி, ப்ரபத்தி என்ற நான்கு வித உபாயங்களையும் பரக்கப் பேசுவதனால் இதிஹாஸங்களில் பாரதம் உயர்ந்தது.

லக்ஷம் க்ரந்தங்களை உடையது இந்த மஹாபாரதம். இந்தக் க்ரந்தத்தை இயற்றியவர் பாராசர மஹரிஷியின் புதல்வரான வ்யாஸ பகவான். அவர் இதில் நாம் அறிய வேண்டிய தர்மங்களையும், அவ்றிறன் பலன்களையும், நாம் விடவேண்டிய அதர்மங்களையும், அதர்மங்களினால் உண்டாகும் துன்பங்களையும், தார்மிகர்களிடம் உண்டாகும் பகவதனுக்ரஹத்தையும், இகலோக வாழ்வுக்கு அவச்யா பேக்ஷிதமான, மற்றும் பல விஷயங்களையும், கதைகள் மூலம் விளக்கியுள்ளார்.

உலகமெங்கும் போற்றப் பெறும் பகவத் கீதையும் ஸஹஸ்ர நாமமும் மஹாபாரதத்தில் உள்ளவையே. ஆகவே ''மஹாபாரதத்தில் இல்லாதது வேறு எந்தக் க்ரந்தத்திலும் இல்லை''

धर्मे चार्थे च कामे च मोक्षे च भरतर्षभ ।
यदि हास्ति तदन्यत्र यन्नेहास्ति न कुत्रचित् ।।

ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் 'तदिदमवगतं पञ्चमादेव वेदात्' என்று அருளிச் செய்தார். சில சாஸ்த்ரார்த்தங்களை காட்டி, அவைகளுக்குப் ப்ரமாணம் எது என்று கேள்வி வர, நான்கு வேதங்களோடு ஸமமாக எண்ணும் பஞ்சம வேதமாகிற மஹாபாரதம் ப்ரமாணம் என்று அருளிச் செய்தார். மஹாபாரதம் ஓர் கரும்புக்கழி. அதில் மேலும் கீழும் சீவிவிட, ரஸகனமான இடம் யக்ஷப்ரச்நம் ஆகும்.

பஞ்ச பாண்டவர்கள் த்ரௌபதியுடன் வனவாஸம் செய்யும் படியாக ஏற்பட்டது. பரம தார்மிகர்கள் அவர்கள். கண்ணனையே கதியாகக் கொண்டவர்கள். சூதாட்டம் ஆடும் போதும் தர்மபுத்ரர் ந்யாயமாகவே ஆடினார். அப்படியிருந்தும் அவர் தோற்றுப்போக வனவாஸம் 12 வர்ஷம் பண்ணும் படியாய் ஏற்பட்டு விட்டதே! அதற்கு காலமே காரணம் என்று பாகவதம் கூறுகிறது.

''यत्र धर्मसुतो राजा ..... । यदि सीतापि दःखार्ता, कालो हि दुरति क्रमः '' ஸுந்தர காண்டத்தில் திருவடியின் வாக்கையும் நோக்குக.

பாண்டவர்கள் ஐவரும் ஏறத்தாழ வனவாஸம் முடியும் காலத்தில், காட்டில் வெயிலால் களைத்து, மிகுந்த தாபத்தை அடைந்தனர். தீர்த்த தாகத்தால் பீடிக்கப்பட்டனர். யுதிஷ்டிரர் நகுலனைப் பார்த்து அருகில் நீர்நிலை ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்துவர அனுப்பினார். நகுலனும் சென்றான்.

அருகில் ஓர் நீர்நிலையைக் கண்டான். தாகத்தினால் மிகவும் பீடிக்கப் பட்டிருந்த நகுலன், முதலில் தான் நீர் அருந்தி விட்டு பிறகு அவர்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்று எண்ணி குளத்தில் இறங்கினான். உடனே அங்கே ஓர் குரல் கேட்டது. நகுல, எனது கேள்விகளுக்கு பதில் சொல்லிய பின் இக்குளத்து நீரை நீ அருந்து, எடுத்துச் செல் என்று அக்குரல் கூறியது.

தாகம் மிகுந்த நகுலன் அதைப் பொருட்படுத்தாமல் இறங்கி ஜலமருந்த, மயக்கமடைந்து, கீழே விழுந்தான். நகுலனை வெகுநேரம் காணாதபடியால் ஸஹாதேவன் அவனைத் தேடிவந்தான். அவனுக்கும் அதே நிலை ஏற்பட்டது. அடுத்தடுத்து அர்சுனன், பீமஸேனன் இருவரும் ஒருவர் பின் ஒருவராக வந்து யக்ஷனது குரலுக்குப் பதில் கூறாமல், தீர்த்தத்தை அருந்தி மயங்கி விழுந்தனர்.

நான்கு தம்பிகளையும் நெடுநேரமாய்க் காணாத அரசர் யுதிஷ்டிரர் மிகவும் மனம் வருந்தி, அவர்களைத் தேடி, தானே நேரில் குளக்கரைக்கு வந்தார் மயங்கிக்

கிடந்த நான்கு தம்பிகளையும் பார்த்தார். மனம் வருந்தினார். மிகவும் குழப்பமடைந்து, நீரில் இறங்கினார். உடனே, மீண்டும் அதே குரல் எழுந்தது. எனது கேள்விக்குப் பதிலளித்துவிட்டு நீர் அருந்த வேண்டும் என்றும், இல்லாவிடில் உனக்கும் இதே நிலை ஏற்படும் என்றும் அக்குரல் கூறியது.

தனக்கு ஏற்பட்ட மிகுந்த தாகம், தம்பிமார்களின் நிலை இவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டு யக்ஷனது கேள்விகளுக்கு பதில் கூறத் தொடங்கினார். தர்மமாயும், உயர்ந்தனவாயும் உள்ள ஸமாதானத்தை, ஸாமான்ய ஜனங்களும் புரிந்து கொண்டு வாழும்படியாகக் கேட்ட கேள்விகளே யக்ஷப்ரச்நமாகும். தர்மபுத்திரரின் ஆச்சர்யமான பதில்கள் இவைகளில் அடங்கும்.

இது மஹாபாரதத்தில் வனபர்வத்தில் உட்பிரிவான ஆரணேய பர்வம் முந்நூற்றுப் பதினான்காவது அத்யாயத்தில் உள்ளது.

கேள்வியும் பதிலும், ஜீவாத்மாக்களின் க்ஷேமத்திற்கு வழிகளைக் காட்டுகின்றன என்பது இருக்கட்டும். ஒவ்வொருவரும் இவ்வுலக வாழ்க்கையில் அமைதியுடனும், ஆநந்தத்துடனும் வாழ வழி காட்டுகின்ற இடங்களே, மிகவும் முக்கியமானதாகும். பொதுவாக இந்த அம்சங்களை சரிவரப் புரிந்து கொண்ட பின்பன்றோ, ஸூக்ஷ்மமாக விஷயங்களில் ஆசையும் அறிவும் பிறக்கும்.

இப்போது ஒரு சில முக்கியமான கேள்விகளையும் பதில்களையும் மாத்ரம் விஸ்தாரமாக அறிந்து கொள்வோம்.

கேள்வி : यक्षःउवाच - **को मोदते ?**

யக்ஷன் கேட்கிறான் : எவன் ஸந்தோஷத்தை அடைகிறான்?

பதில் : युधिष्ठिर उवाच

पञ्चमेऽहनि षष्ठे वा शाकं पचति स्वे गृ।

अनृणी चाप्रवासी च स वारिचर मोदते ।।

யுதிஷ்டிரர் பதில் கூறுகிறார் - கடனில்லாதவனாகவும், தேசாந்தரப் பிரயாணம் இல்லாதவனாகவும், எட்டாகப் பகுத்த பகலில் ஐந்தாவது காலத்திலோ ஆறாவது காலத்திலோ கீரையையாவது தன் வீட்டில் சமைத்துப் புஜிப்பவனே, ஸந்தோஷத்தைப் பெறுகிறான்.

கேள்வி பதில் இரண்டிற்கும் அர்த்தம் சுலபம் போல் தோன்றும். நீர் தெளிந்துள்ள போது, ஆடித்தில் உள்ள பூமி மேலே இருப்பது போல் தோன்றுமல்லவா? அது போல் இங்கும் தோன்றலாம். ஆனால் கருத்தின் ஆழம் அதிகம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

''கடன் இல்லாமை ஸந்தோஷத்திற்கு காரணம். வெளியூர் செல்லாமல் இருத்தல் மற்றொரு காரணம். எளிதான உணவாயினும் காலம் தாண்டி உண்பதால், அப்போது சாப்பிடுபவர்களுக்கு துன்பம் ஏற்படுவது உலகியல். ஆனாலும், தனக்கென்று ஒரு வீடு இருந்து அங்கேயே ஆகாரம் செய்து கொள்வது துன்பத்தை நீக்கி, இன்பத்தையே தரும் என்று மூன்று விஷயங்கள் பதிலில் உள்ளன. இது பொதுவாக எல்லோரும் அறிந்து, அதன் படி நடந்து இந்நிலவுலகில் இன்பம் பெற முடியும் என்பது எவ்வளவு அற்புதமான விஷயம்!

கடல் போல் எல்லையற்ற நல்ல நூல்கள் உள்ளன. அவைகளைக் கடைந்தெடுத்து, வெண்ணெய் போல் திரட்டி, எல்லோருக்கும் எளிதாகக் கொடுக்கிறது. மஹாபாரதம். ஆகவேதான் यदि हास्ति तदन्यत्र, यन्ने हास्ति न कुत्रचित्

கேள்வி 'यक्ष उवाच - **कः पन्थाः** '- எது வழி ?

பதில் - युधिष्ठिर उवाच -

तर्कोऽप्रतिष्ठः श्रुतयो विभिन्नाः नैको मुनिः यस्य मतं प्रमाणम्

धर्मस्य तत्वं निहितं गुहायां महाजनो येनगजः स पन्थाः ''

வேதங்கள், ஸ்ம்ருதிகள் இவற்றைக் கொண்டு அர்த்த நிர்ணயம் செய்வது எளிதன்று. அவை பரஸ்பரம் முரண்படுகின்றன போல் தோன்றுகின்றன. ரிஷியின் அபிப்ராயப்படி நடக்கலாமா என்று பார்த்தால், அவர்கள் பலராய், பலவகை கருத்துள்ளவர்களாக இருக்கின்றனர். தர்மத்தின் உண்மையோ மறைவான இடத்தில் பாதுகாக்கப் பெற்றிருக்கிறது. ஆகையால் நம் முன்னோர்களான பெரியோர் சென்ற வழியே நாம் பின்பற்ற வேண்டிய வழி.

விசேஷ தினங்களை ஜனங்கள் அநுஷ்டிக்க நேரிடுகிறது. கார்த்திகை தீபம் ஏற்றுபவது என்பது குலப்பெண்கள் எல்லாரும் தங்களது குடுபத்தின் மங்களத்திற்காக ஆசையுடன் செய்வதாகும்

பல ஸ்தீரிகள், படித்த நம்மிடம் வந்து, என்று கார்த்திகை தீபம் எனக் கேட்பார்கள். நாமும் பஞ்சாங்கம் பார்த்து தான் சொல்ல முடியும். பஞ்சாங்கத்தில் 2, 3, தினங்கள் திருக்கார்த்திகை என்று போட்டிருக்கும். நாம் ஏதாவது ஒரு நாளை இவர்களிடம் சொன்னால், அவர்கள் திரும்பக் கேட்பார்கள் ஸ்வாமிந், வேறொருவர் வேறு விதமாகச் சொன்னாரே என்று கேட்பார்கள். கேட்பவரின் விவரம் அறிந்து, அவர்களது குடும்ப விவரமறிந்து நாம் எவ்வளவு ஸமாதானம் சொன்னாலும் மேலும் மேலும் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். கேட்பது பிசகல்ல. ஆனால் அவர்கள் மனதில், சாஸ்திரங்களில் அவநம்பிக்கை

ஏற்படாமல் இருக்க வேணுமே! நம்பி நம்மிடம் வந்தவர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துவதா நம் வேலை?

நாமும் வழிதெரியாமல் ச்ரமப்படுவோம். அம்மாதிரி தர்மஸங்கடமான காலங்களில் இந்த தர்மபுத்ரரது பதில் தான் நம்மைக்காக்கும். महाजनो येन गतः स पन्थाः இந்த பதிலை, பெரியோர்கள் மூலம் தெரிந்து கொண்டபின் தான், பலருக்கு மனச்சாந்தி ஏற்பட்டது.

நம் பெரியோர்கள் போன வழி நலம் பயக்கும் என்று நாமும், நம்மிடம் நம்பி வந்து கேட்பவரிடம் சொன்னால் அன்றைய கார்த்திகை தீபம் நல்ல மனஸ்ஸுடன் ஏற்றப்பட்டு நிறைந்த மனஸ்ஸும் ஏற்பட்டுவிடுகிறது.

'यक्ष उवाच -

राजन् कुलेन वृत्तेन स्वाध्यायेन श्रुतेन च ।

ब्राह्मण्यं केन भवति प्रब्रूहचेतत्सुनिश्चितम् ॥'

கேள்வி : குலம், ஒழுக்கம், வேதாத்தியயனம், சாஸ்த்ரஞானம், இவற்றில் எதனால் ப்ராம்மண்யம் உண்டாகிறது?

'युधिष्ठिर उवाच'

'श्रुणु यक्ष कुलं तात, न स्वाध्यायो न च श्रुतम् ।
कारणं हि द्विजत्वे च वृत्तमेवा न संशयः ॥
वृत्तं यत्नेन संरक्ष्यं ब्राह्मणे न विशेषतः ।
अक्षीणवृत्तो न, क्षीणे वृत्ततस्तु हतो हतः ॥
पठकाः पाठकाश्चैव ये चान्ये शास्त्रचिन्तकाः ।
सर्वे व्यवसिनो मूर्खा यः क्रियावान् सः पण्डितः ॥
चतुर्वेदोऽपि दुर्वृत्तः स शूद्रातिरिच्यते ।
योऽग्निहोत्र परो दान्तः स ब्राह्मण इति स्मृतः ॥ '

பதில் : ப்ரம்ஹண்யத்திற்குக் காரணம் - குலம், வேதாத்தியயனம், சாஸ்த்ர ஞானம் இவற்றில் ஒன்றுமன்று. ஒழுக்கமே காரணம். இதில் ஸம்சயமில்லை. ப்ராம்ஹணன் ஒழுக்கத்தை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் குன்றாத ப்ராஹ்மணன் குறைவடயான். ஒழுக்க மற்றவன் கெட்டுப் போனவனே. படிக்கிறவர்கள், படிப்பிக்கிறவர்கள், மற்றும் சாஸ்த்ர சிந்தை

செய்பவர்கள் இவர்கள் அனைவரும் அதுவே பரமப்ரயோஜனம் என்று அதையே பற்றி நிற்பார்களேயானால் அவர்கள் மூடர்களே. கற்றபடி நடப்பவனே பண்டிதன். நான்கு வேதங்களை நன்கு அத்யயனம் செய்திருந்தாலும், கெட்ட நடையுள்ளவன் அனைவரைக் காட்டிலும் தாழ்ந்தவனே. அக்நி-ஹோத்ரத்தில் பற்றுள்ளவனாகவும், இந்திரியங்களை அடக்கியவனாகவும் இருப்பவன் ப்ராமஹணன்.

''மறப்பினும் ஒத்துக் கொளவாகும் பார்ப்பான்
பொழுக்கம் குன்றக்கெடும் ''

என்று திருக்குறளும் கேள்வி பதிலுக்கு ஒப்ப கூறுவதை நோக்கும் கால் குறிப்பிட்ட சிலருக்குமாத்ரம் ஒழுக்கம் முக்யம் என்பது மட்டுமின்றி யாராயிருப்பினும் ஒழுக்கமுடையவரையே போற்றுதல் வேண்டும் என்று ஏற்படுகிறது.

யக்ஷப்ரச்நம் வனபர்வத்தின் கடைசியில் உள்ளது. இதற்கு முன், அதே வன பர்வத்தின் ஓர் உட்பிரிவான ஆஜகர பர்வத்தில் பீமனை விழுங்கப்போன மலைப் பாம்பிற்கும் (நஹுஷனுக்கும்) தர்மபுத்ரருக்கும் இடையில் நடைபெற்ற ஸூக்ஷ்மமான தர்ம விசாரங்களையும், ஸமயம் நேரிடும்போது பெரியோர் பக்கலில் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

அங்கே தர்மபுத்ரன் சாரீரமான பிரிவுகளைக் காட்டிலும், மானஸமானவையும் குணப்ரயுக்தமான பிரிவுகள் தான் உயர்ந்தன எனத் தெளிவாக விளக்கியுள்ளார்.

'सत्यं दानं क्षमा शीलं आनृशंस्य तपो घृणा ।
दृउयन्ते यत्र नागेन्द्र स ब्राह्मणः दति स्मृतः ।।
तस्मात् शीलं प्रधानेष्टं विदुर्ये तत्व दर्शिनः '

यक्ष उवाच : **'अक्षयो नरकः केन प्राप्यते ?'**

கேள்வி : எந்த மனிதன் அழிவில்லாத நரகத்தை அடைகிறான்?

युधिष्ठिर उवाच

ब्राह्मणं स्वयमाहूय याचमानमकिंचनम् ।
पश्चात् नास्तीति यो ब्रूयात्सोक्षयं नरकं व्रजेत् ।।
धेहेषु धर्मशास्त्रेषु मिथ्या थो वै द्विजातिषु ।
देवेषु पितृधर्मेषु सोऽक्षयं नरकं व्रजेत् ।।

विद्यमाने धने लोभात् दान भोगविषर्जितः ।
पश्चात् नास्तीति यो ब्रूयात् सोक्षयं नरकं व्रजेत् ।

பதில் : பொருள் சிறிதுமில்லாத யாசகப் பிராம்மணனுக்கு தானே கொடுப்பதாகக் கூறிவிட்டுப் பிறகு இல்லை என்று சொல்பவன் அழியாத நரகத்தை அடைவான். வேதம், தர்ம சாஸ்த்ரம், ப்ராம்ஹணர், தேவர், பித்ரு கார்யம் இந்த விஷயங்களில், பொய்யைக் கூறுபவன், அழிவில்லாத நரகத்தை அடைவான். செல்வம் இருக்கும் போதே, பேராசையால், பிறருக்கும் கொடாமல், யாசிக்கிறவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி விட்டு, பிறகு இல்லை என்று கூறுபவன் அழவில்லாத நரகத்தை அடைவான். சிலருக்கு பூர்வ புண்ய பலத்தால், மஹாலக்ஷ்மீ செல்வத்தை கொடுத்திருப்பாள். அந்த செல்வத்தை, அவர் ஸத்பாத்ரங்களில் விநியோகித்து, தாமும் அனுபவிப்பாவான், என்று தான் கொடுத்த தெய்வத்தின் உத்தேசம். ஸத்பாத்ரம் யாசிக்கும் போது இல்லை என்று சொல்லுபவன் மேலானவனாகி விடுவான், வரச்சொல்லி பின்பு இல்லை என்று சொல்பவனைக் காட்டிலும், இல்லையென்பவன் ஹீனன்; ஆசை வார்த்தைகள் சொல்லி, பலகால் அலைந்து திரியப் பண்ணி இல்லை என்பவன் அவனில் ஹீனன் என்று தமிழில் ஓர் செய்யுள் கூறுகிறது.

ஆக, இந்த கேள்வி பதில் மூலம் நாம் அறிய வேண்டியது நம் சக்திக்கு தகுந்தபடி, கேட்கிற ஸத்பாத்ரத்திற்கு கொடுத்து நாம் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது.

மற்ற கேள்விகள், பதில்கள் :

1) எவன் ஆதித்யனை உதிக்கச் செய்கிறான்? **ப்ரம்ஹ.**

2) அவனது இரு பக்கங்களிலும் ஸஞ்சரிப்பவர் யார்? **தேவர்கள்.**

3) எவன் அவனை அஸ்தமனத்தை அடையச் செய்கிறான்? **தர்மம்**

4) எதில் அவன் நிலைபெற்றிருக்கிறான்? **ஸத்யத்தில்.**

5) எதனால் மனிதன் ச்ரோத்ரியனாகிறான்? **வேதம் ஓதுவதால்.**

6) எதனால் மனிதன் துணையுள்ளவனாகிறான்? **தைர்யத்தினால்.**

7) எதனால் மஹத்தை (ப்ரம்ஹத்தை) அடைகிறான்? **தவத்தினால்.**

8) எதனால் மனிதன் புத்திமானாகிறான்? **பெரியோர்களை ஆச்ரயிப்பதால்.**

9) ப்ராம்ஹணர்களுக்குத் தேவதன்மை எது? **வேதாத்தியயனம்.**

10) ஸாதுக்களுக்கு இருப்பது போல் அவர்களுக்கு தர்மம் எது? **தவம்.**

11) அவர்களுக்கு மநுஷ்யத் தன்மை எது? **மரணம்.**

12) அஸத்துக்களுக்குப் போல் அவர்களுக்கு அதர்மம் எது? **பரநிந்தை.**

13) க்ஷத்ரியர்களுக்குத் தேவதன்மை எது? **பாணங்கள் அஸ்த்ரங்கள்.**

14) ஸத்துக்களுக்குப் போல் இவர்களுக்கு தர்மம் எது? **யஜ்ஞம்**

15) இவர்களுக்கு மனுஷ்யத் தன்மை எது? **பயம்.**

16) அஸத்துக்களுக்குப் போல் இவர்களுக்கு அதர்மம் எது? **துன்பமுற்றவர்களைக் கைவிடுதல்.**

17) யஜ்ஞத்துக்கு உரிய முக்கிய ஸாமம் எது? **உயிர்**

18) யஜ்ஞத்துக்கு உரிய முக்கிய யஜுஸ் எது? **மனம்.**

19) இவர்களது யஜ்ஞத்தை எது வரிக்கிறது? **ரிக்.**

20) யஜ்ஞம் எதை மீராமல் இருக்கிறது? **ரிக்கை.**

21) பயிரிடுபவர்களுக்கு எது சிறந்தது? **மழை.**

22) விதைப்பவர்களுக்கு எது சிறந்தது? **விதை.**

23) பிரதிஷ்டையை (மேம்பாட்டை) விரும்புகிறவர்களுக்கு எது சிறந்தது? **பசுக்கள்.**

24) பெறுகிறவர்களுக்கு எது சிறந்தது? **புத்திரன்.**

25) எவன் மூச்சு விட்டுக் கொண்டிருந்தும் உயிரில்லாதவன்? **தேவதைகள், அதிதிகள், வேலைக்காரன், பித்ருக்கள், தான். இந்த ஐவருக்கும் எவன் ஹவிஸ் முதலியவற்றைக் கொடுக்கவில்லையோ.**

26) பூமியைக் காட்டிலும் எது கடினமானது? **தாய்.**

27) ஆகாயத்தை விட உயர்ந்தது எது? **தந்தை.**

28) காற்றைக் காட்டிலும் வேகமுள்ளது எது? **மனம்.**

29) புல்லைக் காட்டிலும் கனமானது (அல்பமானது) எது? **கவலை.**

30) தூங்கும்போது கண்களை மூடாமல் இருப்பது எது? **மீன்.**

31) எது பிறந்தும் அசைவற்றிருக்கிறது? **முட்டை.**

32) எதற்கு ஹ்ருதம் இல்லை? **கல்.**

33) எது வேகத்தால் வ்ருத்தி அடைகிறது? **நதி.**

34) தேசாந்திரம் போகிறவனுக்கு யார் தோழன்? **வித்யை.**

35) வீட்டில் இருப்பவனுக்கு யார் தோழன்? **மனைவி தோழி.**

36) நோயாளிக்கு யார் நண்பன்? **வைத்தியன்.**

37) சாகப்போகிறவனுக்கு யார் நண்பன்? **தானம்.**

38) எல்லா ப்ராணிகளுக்கும் யார் அதிதி? **அக்நி.**

39) எந்த தர்மம் சாச்வதமானது? **ஸநாதன தர்மம்.**

40) அமிர்தம் எது? **பசுவின் பால்.**

41) இந்த உலகமனைத்தும் எப்படி உள்ளது? **வாயுவாக.**

42) எவன் ஒருவனாக ஸஞ்சரிக்கிறான்? **சூர்யன்.**

43) பிறந்தவர்களில் எவன் மறுபடியும் பிறக்கிறான்? **சந்திரன்.**

44) பனிக்கு மருந்து எது? **அக்னி.**

45) எது பெரிய பாத்திரம்? **பூமி.**

46) தர்மம் எதில் நிலை பெற்றுள்ளது? **ஸாமர்த்தியத்தில்.**

47) புகழ் எதில் நிலை பெற்றுள்ளது? **தானத்தில்.**

48) ஸவர்க்கம் எதில் நிலைபெற்றுள்ளது? **ஸத்யத்தில்.**

49) சுகம் எதில் நிலைபெற்றுள்ளது? **நல்லொழுக்கத்தில்.**

50) மனிதனுக்கு ஆத்மா எது? **புத்ரன்.**

51) தெய்வம் ஏற்படுத்திய துணை எது? **மனைவி.**

52) மனிதனது பிழைப்புக்கு ஸாதனம் எது? **மேகம்.**

53) மனிதனுக்கு முக்ய கதி எது? **தானம்.**

54) செல்வத்தை கொடுப்பவற்றுள் எது உத்தமம்? **ஸாமர்த்தியம்.**

55) பொருள்களுள் எது உத்தமம்? **சாஸத்ரஜ்ஞானம்.**

56) லாபங்களுக்குள் எது உத்தமம்? **ஆரோக்யம்.**

57) சுகங்களுள் எது உத்தமம்? **திருப்தி.**

58) எது உலகில் சிறந்த தர்மம்? **அஹிம்ஸை.**

59) எந்த தர்மம் எப்போதும் பலனுள்ளது? **மூன்று அக்நிகளால் செய்யப்படும் தர்மம்.**

60) எதை அடக்கினால் மனிதர்களுக்கு துயரம் ஏற்படாது? **மனஸ்.**

61) எவர்களுடன் ஏற்படும் நட்புக் குறையாது? **ஸாதுக்கள்.**

62) எதை விட்டால் மனிதன் மற்றவர்க்குப் பிரியனாகிறான்? **கர்வத்தை.**

63) எதை விட்டால் துயரத்தைப் பெறமாட்டான்? **கோபத்தை.**

64) எதை விட்டால் பொருளுள்ளவனாவான்? **காமத்தை.**

65) எதை விட்டால் ஸுகியாவான்? **லோபத்தை (ஆசையை)**

66) பிராம்ஹணர்களுக்குக் கொடுப்பது எதற்காக? **தர்மத்திற்காக.**

67) நடனுக்கும் நர்த்தகனுக்கும் கொடுப்பதனால் என்ன பலன்? **புகழ்.**

68) வேலைக் காரர்களுக்கு எதற்காக கொடுப்பது? **அவர்களை வசப்படுத்த.**

69) அரசர்களுக்குக் கொடுப்பது எதற்காக? **பயமற்று வாழ.**

70) உலகம் எதனால் மூடப்படுள்ளது? **அஜ்ஞானத்தால்.**

71) எதனால் உலகம் பிரகாசிப்பதில்லை? **தமோகுணத்தால்.**

72) என்ன காரணத்தால் மனிதன் மித்ரர்களை விடுகிறான்? **லோபத்தால்.**

73) எதனால் மனிதன் ஸ்வர்கத்தைப் பெறுவதில்லை? **பற்றுதலால்.**

74) மனிதன் எவ்வாறானால் மாண்டவனாவான்? **தரித்திரனானால்.**

75) எந்த மாதிரி ராஜ்யம் உயிரற்றது? **அரசனில்லாத.**

76) ச்ராத்தத்துக் அழிவு எதனால்? **வேதமோதிய ப்ராம்ஹணர்களை வைத்துச் செய்யாததால்.**

77) யஜ்ஞம் எதனால் பயனற்றதாகும்? **சரியான முறையில் தஷிணை அளிக்கா விட்டால்.**

78) எது திக்கு? **(உபதேசிப்பவர்கள்) ஸாதுக்கள்.**

79) எது ஜலம் ? **ஆகாசம்**

80) எது அன்னம்? **பசு.**

81) எது விஷம்? **ப்ராம்ஹணனுடைய பொருள்.**

82) ச்ராத்தத்துக்கு உரியகாலம் எது? **ப்ராம்ஹணனே.**

83) தவத்திற்கு லக்ஷணம் என்ன? **தர்மத்தில் நிலைபெற்றிருத்தலே.**

84) தமம் என்பது எது? **மனதை அடக்குதல்.**

85) பொறுமைக்கு விளக்கம் என்ன? **சுக துக்கங்களை சகிப்பதுதான்.**

86) வெட்கம் என்பது எது? **செய்யக் கூடாததை விடுவதற்குக் காரணம்**

87) எது ஞானம்? **உண்மைப் பொருளை உள்ளபடி அறிதல்.**

88) சமம் என்பது எது? **மனதில் மிக்க சாந்தி.**

89) எது சிறந்த கருணை? **எல்லோருக்கும் சுகத்தை விரும்புவது சிறந்த கருணை.**

90) எது நேர்மை? **எங்கும் ஸமமான எண்ணம்.**

91) மனிதர் வெல்ல முடியாத பகைவன் யார்? **கோபன்.**

92) எது முடிவில்லாத வியாதி? **பேராசை.**

93) ஸாது எப்படி இருப்பான்? **எல்லாப் பிராணிகளுக்கும் ஹிதமாக இருப்பவன்.**

94) அஸாது யார்? **தயை அற்றவன் அஸாது.**

95) எது மோஹம்? **தர்மத்தை அறியாமை.**

96) எது மானம்? **நான் என்னும் அகங்காரம்.**

97) எது ஆலஸ்யம்? **தர்மத்தை செய்யாமை.**

98) எது சோகம்? **அஜ்ஞானம்.**

99) ரிஷிகள் எதை உறுதியான நிலை என்கின்றனர்? **ஸ்வதர்மத்தில் நிலைத்திருப்பதை.**

100) எது தைர்யம் ? **இந்திரியங்களை அடக்குதல்.**

101) எது சிறந்த ஸ்நாநம்? **மனதில் உள்ள அழுக்கை போக்குதல்.**

102) உலகில் எது தானம்? **பிராணிகளை ரக்ஷிப்பது.**

103) எந்த மனிதன் பண்டிதன்? **தர்மங்களை அறிந்தவன்.**

104) எவன் நாஸ்திகன்? **பரலோகமில்லை என்பவன்.**

105) எவன் மூர்க்கன்? **நாஸ்திகனே மூர்க்கன்.**

106) எது காமம்? **பிறப்பு இறப்புக்குக் காரணம் காமம்.**

107) எது மத்ஸரம்? **மனக் கொதிப்பு.**

108) எது அகங்காரம்? **பெரியதான அஜ்ஞானம்.**

109) டம்பம் என்பது எது? **தான் செய்யும் தர்மத்தை நாடறியச் செய்வது.**

110) எது சிறந்த தெய்வம்? **(அதிருஷ்டம்) தானபலன்.**

111) எது பிசுன ஸ்வபாவம் (புறங்கூறுதல்)? **அயலாரை தூஷிப்பது.**

112) பரஸ்பர விரோதமுள்ள தர்ம, அர்த்த, காமங்களின் சேர்க்கை ஓரிடத்தில் எப்படி? **தர்மமும் மனைவியும் பரஸ்பரம் வசப்பட்டு நடக்கும்போது, தர்ம அர்த்த காமங்கள் மூன்றுக்கும் சேர்க்கை ஏற்படும்.**

113) இன்சொல் சொல்பவன் எதை அடைகிறான்? **எல்லோருக்கும் அன்பனாகிறான்.**

114) ஆலோசித்துக் காரியத்தைச் செய்பவன் எதைப் பெறுகிறான்? **ஜயத்தை.**

115) பலரை நண்பர்களாக்கிக் கொள்பவன் அடையும் பயன் யாது? **ஸௌக்யம்.**

116) தர்மத்தில் பற்றுதல் உள்ளவன் அடையும் பயன் யாது? **நல்ல கதி.**

117) எது ஆச்சரியம்? **நாள் தோறும் பிராணிகள் யமலோகம் சென்று கொண்டே இருக்கின்றன. இதைக் கண்டும் சிலர் தாங்கள் இங்கே சாச்வதமாக இருக்கப் போவதாகக் கருதி மோக்ஷத்தைப் பெறுவதற்கு முயலாமலே இருக்கின்றனரே. அதுதான் ஆச்சர்யம்.**

118) எது தினமும் நடக்கிற நிகழ்ச்சி? **பூமி சமையல் செய்யக் கூடிய பெரிய பாத்திரம், ஆகாயம் அதற்குத் தகுந்த மூடி. காலம் ஸ்தாவர ஜங்கமங்களாகிற எல்லா வஸ்துக்களையும் அதில் போட்டு இரவு பகலாகிற விறகை வைத்து, சூர்யனாகிற அக்நியை மூட்டி, மாதங்களும் ருதுக்களுமாகிற கரண்டிகளால் நன்றாகக் கிளறிப் பக்குவம் செய்கிறது என்பது தினமும் நடக்கிற நிகழ்ச்சி.**

119) எவன் புருஷன்? **ஒருவன் செய்த நல்வினையால் வரும் புகழ் பூமியிலும், ஸ்வர்க்கத்திலும் பரவியிருக்கும் வரை அவன் புருஷன். விருப்பு வெறுப்பு, சுகம், துக்கம் இவை சமமாக உள்ளவனும் புருஷன்.**

120) எவன் எல்லாப் பொருள்களுமுள்ளவன்? **எல்லா பொருட்களில் ஸமபுத்தியை உள்ளவனும், ஆசையற்றவனும், சாந்தமான மனமுள்ளவனும், மிக்க தெளிவுள்ளவனும், எப்பொழுதும் ப்ரம்ஹத்தை த்யானிப்பவனுமான மனிதனே எல்லா பொருளும் உள்ளவன்.**

மொத்தம் 124 கேள்விகள். 4 கேள்வி, பதில்கள் ஒரளவு விளக்கப்பட்டன. மற்ற 120 கேள்விகள் பதில்கள் ஸாமாநியமாக எழுதப்பட்டுள்ளன.

யக்ஷப்ரச்நம். நஹுஷப்ரச்நம் என்பவை எல்லாம் ஸாரமான கேள்விகளும் பதில்களும் ஆகும்.

ஆத்மா பரமாத்ம விஷயங்களோடு, உலகில் பொதுவாக அறிய வேண்டிய நல்வாழ்க்கைக்கான நூல்களை எல்லாம் வேதம் வழி காட்டிற்று. வேதத்திற்கு உபப்ரம்ஹமான 5வது வேதமாயும் நின்ற மஹாபாரதம் வேதத்தின் வழியால் நின்கின்றது .என்று பாரதத்திற்கே உள்ளதனிப் பெருமை.

ஸ்ரீமத் ராமாயணமும் வேதஸாரமே. அங்கே இம்மாதிரி கேள்வி பதில் அபூர்வம்.

ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவனிடம் எல்லா சாஸ்த்ரார்த்தங்களும் குடி கொண்டிருக்கின்றன. இவரிடம் உள்ளவை தான் வெளியில் இருக்கின்றன. இவரிடம் இல்லாதவை வெளியில் இல்லை. பாரதத்தின் பெருமை இவ்வாண்டவனிடம் பொருந்தியுள்ளது. அப்பேர்ப்பட்ட பெரியாச்ரமத்தில் ஸ்ரீகார்யம் முதலான கைங்கர்யங்களை செவ்வனே செய்வது என்பது எல்லாராலும் அஸாத்யம். ஸ்ரீமதாண்டவனிடம் பக்தியும், திறமையும் ஸ்ரீ உ.வே. மாதவார்ச்சார் ஸ்வாமியிடம் இருப்பதைக் காண்கிறோம். பல ஸதஸ்களை நடத்தினவைபவத்திற்கு மேலாக, ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடைபெறுகிறது. ஸ்ரீகார்யம் முதலான கைங்கர்யபரர்களுடன் கூடிய ஸ்ரீமதாண்டவன் திருவடிகளில் அநந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பித்து ஸ்ரீமதாண்டவன் அனுக்ரஹத்தை ப்ரார்த்திக்கிறேன்.

'जयति यतिराजसूक्तिः जयति मुकुन्दस्य पादुकायुगली ।
तदुभयधनास्त्रिवे दी मवन्ध्ययन्तो जयन्ति भुवि सन्तः ॥'

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் வைபவம்

ஸ்ரீமதுபயவே. வித்வான் ஸ்ரீரங்கம் திருமலாச்சாரியர் ஸ்வாமி

பூர்வாத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு:
அநுப்ரவிச்ய குருதே யத்ஸமீஹித மச்யுத:

என்கிறபடி இக்கலியுலகத்திலேயும், ஸர்வஜக்தனாயும் ஸத்ய ஸங்கல்பனுயும் இருக்கிற ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன் சில மஹான்களிடங்களில் அனுப்ரவேசித்து தன்னுடைய ஸங்கல்பப்படி லோகத்தின் யோகக்ஷேமார்த்தமாக, இங்குள்ள ஜநங்களுக்கு யதார்த்தமான தத்வங்களுடையும், ஹிதங்களுடையும், புருஷார்த்தங்களுடையவும் ஞானத்தை யுண்டுபண்ணி அனுக்ரஹிக்கிறனென்பது கண்கூடானது. இதுவே மஹான்களுடைய அபிப்ராயமாகும்.

அதே போல் இப்போதும் ப்ரக்ருதமான-ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஐந்து விசேஷணங்களுடன் கூடியவரும், அநிதர சாதாரணமான ஸ்ரீ முஷ்ணம், ஆண்டவனென்று வ்யவஹாரத்தையுடைய வரும், ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனென்று, போற்றப்படு பவருமான இந்த மஹாதேசிகன் (பெரியா ச்ரமம் முனித்ரய பரம்பரையில் அவதரித்தவர்) ஆகிறார் என்பதும் ப்ரஸித்தம்.

ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவன் ஸ்வாமிகள் முன்பு பூர்வாச்ரமத்திலும், சாக்கியங்கற்றோம், சமணங்கற்றோம். சங்கரஞலாக்கியவாகமம் ஆருய்ந்தோம், பாக்கியத்தால் செங்கட் கருமுகிலைச்சேர்ந்தோம், நமக்கினி என்ன குறை என்று திருமங்கை மன்னன் வாக்கியப்படி- பலமதங்களை வடநூல்களிலும் தமிழ் மொழிகளிலும் உள்ளவைகளை நன்கு கற்றறிந்தவர், என்பதும் மிக மிகப் போற்றக்கூடிய விஷயம். அதற்கு தகுந்தாற்ப் போல் பால்யத்திலேயே ஸம்ஸ்க்ருத சிரோமணியையும் தமிழ் வித்துவானையும் மதராஸ் ஸர்வகலாசாலை வழியாகக் கற்றுணர்ந்து விசேஷமாக ஒவ்வொன்றிலும் சிறந்த அறிவையும் பெற்று நன்கு ஒன்றோடொன்று கலவாமல் சிறந்த முறையில் பேசக்கூடிய ஆற்றலையும் பெற்றுள்ளார்கள். இத்துடனில்லாது தென்தேசமொழிகளில், தெலுங்கு-கன்னடம் இவைகளின் பழக்கமும் பேச்சாற்றலும் நன்கு உணர்ந்தும் உள்ளார்கள்.

இவ்விதம் ஆங்கிலத்திலும் பேச்சாற்றலும் நன்கு அமையப் பெற்றவர் ஆவர். இம்மஹானுக்கு

மஹதா புண்யபண்யேந க்ரீதேயம் காயநௌஸ்த்வயா
ப்ராப்தும் துக்கோததே: பாரம் த்வர யாவந் நபித்யதே

என்றபடி மிகுந்த புண்ணியத்தின் செலவால் இந்த மானுட சரீரம் கிடைக்கப் பெற்றார். இதைக் கொண்டு (இந்த மானுடப் பிறவியைக் கொண்டு) இந்த துக்கமயமான சம்சாரக் கடலைத் தாண்ட வேணுமென்ற ஆசையுமுண்டாயிற்று. அதன்பின்பு 'தத்வாபி துர்லபம் மந்யே வைகுண்ட்டப்ரியதர்ஶநம்' என்றபடி - ஸ்ரீவைஷ்ணவப்ரியர்களுடைய தர்சனம் துர்லபமாயிருப்பினும் ஸர்வேச்வரனுடைய நல்ல எண்ணத்தாலும், தற்செயலாக இவர்களுக்கு (ஆண்டவனுக்கு) ஏற்ப்பட்ட புண்ய விசேஷத்தாலும் என்றும் அழியாத புகழும் ஒளியால் சூரியன் போல் ப்ரகாசிப்பவரும், ஆசேதுஹிமாசலம். துரீயாச்ரமத்தை வழுவாது தனது திருவடிகளை அங்கங்கு பதிய வைத்து புண்ணிய பூமியாகச் செய்தவரும், பரமோதாரருமான திருக்குடந்தை ஆண்டவனுடைய அனுக்கிரஹமும் கிட்டியது. அவருடைய அனுக்ரஹத்தை பூர்ணமாகப் பெற்று துறவறமும் பூண்டு இது போது முனித்ரிய சம்ப்ரதாயத்தின் முறைப்படி ஸமாச்ரயணம், சரணாகதி இது முதலியதைச் செய்து கொண்டு தன்னையாச்ரயித்த சிஷ்யர்களை ஸதுபதேசங்களாலும் சீர்திருத்திக் கொண்டு ஸத்பாத்ரராகச் செய்து கொண்டிருப்பதும் ப்ரஸித்தம்.

இந்த ஆண்டவனும் இந்த பெரிய ஆச்ரமத்துக்கு ஆண்டவனாக எழுந்தருளி 5-6- வருஷத்துக்கு மேல் இருக்கலாம். ஆக இந்த மஹானும் தற்சமயம் தனது அறுபதாவது ஸம்வத்ஸரத்தைக் கடந்து 61வது வருஷத்துக்குள் பிரவேசிக்கப் போகிறார்.

இது போது நாம் எல்லோரும் ஒரு விசேஷம் அறிய வேண்டியது அவச்யமாகிறது. அதாவது பொதுவாக நமது வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில், ஆராதநா நாம்ஸர்வேஷாம் விஷ்ணோராராதனம் பரம், தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதனம். பரம் என்றபடி தேவதைகளுடைய ஆராதனங்களுக்குள் விஷ்ணுவின் ஆராதனமே உயர்ந்தது. தேவதைகளுக்குள், விஷ்ணுவே உயர்ந்தவர். அக்னியே கடைசியிலுள்ளவர், மற்ற எல்லா தேவர்களும் இவர்களுடைய இடையில் உள்ளவர்கள். என்றல்லவோ வேதமே கூறிற்று. அந்த விஷ்ணுவின் ஆராதனத்தைக் காட்டிலும் அவருடைய அடியார்களின் ஆராதனமே மிகச் சிறந்தது. இது ஏனெனில் கண்ணன் தானே கீதையில் கூறும்பொழுது எல்லா உலகமும் எனது சரீரம். ஆக நானே அவற்றிற்க்கு ஆத்மா என்றார். இத்துடன் நில்லாது பக்தர்களை பேசும் போது அவர்கள் நான்கு விதம். அவர்களுள் ஜ்ஞாநியான பக்தனே மிகமிக உயர்ந்தவர். அவர்தான் எனக்கும் ஆத்மா என்றார், க்ஞாநீத்வாத்மைவமே பதம்) என்று, அவனுக்கு இந்த பக்தன் (ஸ்ரீவைஷ்ணவன்) ஆத்மாவாகிறான் என்றால், அத்தகைய

வருள் ஒரு க்ஞாநியாக அமைந்த நம் ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவனும ஆகிறபடியால் இவர்களைப் போற்றியுகப்பது. நம் ஸ்வரூப ப்ராப்தமானதென்று சொல்லவும் வேண்டுமா?

மேலும், அதோடுநின்று விடாது தொடர்ச்சியாக துரீயாச்ரமத்தை ஏற்று ஆசார்ய ச்ரேஷ்டர்களுடைய கோஷ்டியில், தற்சமயம் பொருத்தமாகப் பெரிய ஆச்ரமம் என்று வ்யவஹரிக்கப்படுகிற ஒரு பெரியஆஸ்தானத்துக்கு ஆசாரியராகவும் எழுந்தருளியுள்ளார்கள். ப்ரயத்கேஷ குரவ ஸ்துத்யா: என்றபடியும், "நேசனைக் காணாவிடத்து நெஞ்சாரவே துதிவித்தல் ஆசானை எவ்விடத்துமப்படியே, என்றபடி எங்கிலும் எப்பொழுதும் ஆசார்யன் போற்றபட வேண்டிய வழுகையாலும் போற்றப்படுபவருக்குள், மிகமிகப் போற்றக்கூடியதென்பதும் நிச்சயமாயிற்று.

ஆகையால் இது ஆசார்யனுக்கு உகப்போ, இல்லையோ, நமக்கு அந்த சிந்தையே வேண்டாம், நம் ஸ்வரூப ப்ராப்தம் அவச்யம் செய்ய வேண்டியது சித்தமாயிற்று. தடை எதுவுமே கிடையாது. சிஷ்யர்களுக்கு மட்டுமே இது என்று நாம் பின் தங்கவே வேண்டாம். ஸர்வேச்வரன் இதை எப்பொழுதும் எங்கும் உகப்பானென்பதும் கிடைத்தது. ஆதலால் அதற்காகவே நாம் இங்கு குழுமியுள்ளோம், இவ்விஷயங்களை மனதில் கொண்டே தான், ப்ரத்யக்ஷ தெய்வமான மஹான்களைவிட்டு பரோக்ஷமான தேவதைகளைக் கொண்டவிடுவது. கையில் உள்ள குட்டத்தில் இருக்கிற ஜலத்தைவிட்டு மேகத்திலுள்ள ஜலத்தை விரும்புவது போல் மிகவும் பரிஹாஸத்துக்கு இடமாகுமென்று பேசுகிறார்கள்.

ப்ரத்யக்ஷம்ஸ்வகுரும் த்யக்த்வா பரோக்ஷம் தேவமிச்சதி
கடஸ்த்தமுதகம் த்யாத்வா கநஸ்த்தம் அபி வாஞ்ச்சதி

என்பர். வஸ்துஸ்திதியில் ப்ரக்ருதம் ஆண்டவன் பூர்வாச்ரமத்தில் நம் போன்றவர்களுடைய ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸங்கங்களில் வித்வத் ஸபை முதலிய இடங்களில் பழக்கம் வ்யவஹாரங்கள் குறைந்ததாகக் காணப்பட்டாலும் மற்ற மதங்களையும், அத்துறைகளிலுள்ள பரிபாஷைகள் ஆசாரம் முதலியவைகளையும் நன்கு அறிந்து கொண்டும் அதிலுள்ள குணதோஷங்களை நன்கு சீர்தூக்கிப் பார்த்தும் அவைகளை இரண்டு பாஷைகளின் ஞானத்தால் நன்கு அம்மதஸ்தர்களுக்கும் விவரித்து நல்ல ஞானத்தையும் அவர்களுக்கு அதில் உண்டுபண்ணி இருக்கிறார் என்றும் நாம் நன்கு அறிந்ததே. அப்படிப்பட்ட இந்த ஆண்டவன் சுவாமிகளுடைய பழக்கம் அடியேனுக்கு 4-5, வருஷங்களாகவே ஏற்பட்டதுதான். முதலில் அந்த சமயம் இந்த சுவாமிகள் அடியேனிடத்தில் காட்டிய ஒரு தயாவிசேஷமும் அனுக்ரஹமுமுள்ள பாஷணங்களை இப்போதும் நினைக்கும் போதும் அடியேனை புளங்காங்கிதனாகச் செய்கிறது. ஸத்ஸங்கித: கதய கிந்தகரோதி பும்ஸாம் என்ற கணக்கில் இன்றுவரை பலச்ரேயஸஸை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறது.

ஆகவே அத்தகைய பெரியாரின் பெருமைகளையும் அறிவு ஆற்றலையும் பாஷணங்களின் சிறப்பையும் கூறி யானும் க்ருதார்த்தனாகக் கருதி இந்த வாக்கைங்கர்யத்தில் ஈடுபட்டு தந்யனாகிறேன். அதற்கு இந்த சமயம் ஏற்றதான சமயம் போல் வேறு சமயம் கிடைக்காது.

முதன்முதலில், இந்த உத்ஸவத்தில், இம்மலரில் இடங்கொடுத்து எழுதும்படி சொல்லிய, ஸ்ரீ கார்யம் ஸ்ரீ மாதவாச்சார்யர் ஸ்வாமிக்கு என்னுடைய கிருதக்ஞதையைத் தெரிவித்துக் கொண்டு இதில் ஈடுபடுகிறேன்.

அநாரம்போ மநுஷ்யாணாம் ப்ரதமம் புத்திலக்ஷணம்
ஆரப்தஸ்யாந்தகரணம் த்விதீயம் புத்திலக்ஷணம்

என்றபடி ஆரம்பித்த காரியத்தை அறைகுறையாக விடாது நல்ல முறையில் முடித்துத் தலைக் கட்டுவது என்ற சிறந்த குணத்தை அடியேன் இந்த மஹானிடத்திலேயே நன்கு தெரிந்து கொண்டேன். அதாவது ஸம்ஸ்க்ருத ச்லோகங்களை வாக்யங்களை, அதே போல் தமிழ் பாசுரங்களோ உரை நடைகளையோ நன்கு அறிந்து ஆராய்ந்து. அதனதன் முடிவான அர்த்தங்களை எவ்வித விரோதமின்றி மிகுந்த சுவையுடன் வெளிப்படுத்தும் தன்மை குடிகொண்டுள்ளது என்பது உண்மையாகும். தமிழில் வித்துவானும், ஸம்ஸ்க்ருதத்தில் சிரோமணியும் தேர்ச்சி பெற்று விளங்கினாலும் அந்தந்த பாஷைகளைக் கையாளும் பொழுது அந்தந்த பாஷைகளின் சொற்களே கலப்பின்றி உபயோகிப்பதை மிக ஆச்சர்யத்துடன் நான் கண்டு மகிழ்ந்ததுண்டு. இந்த சக்தி இவரிடம் காணக்கிடைக்கும். ஸமீபத்தில் இங்கு நடந்த கம்பன் விழாவில் இப்பெரியார் ஆற்றிய விரிவுரையில் ஸம்ஸ்க்ருதச் சொற்களேயல்லாது முக்கால்மணி நேரமும் நடத்தியவுரையைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். அதேபோல் ஸம்ஸ்க்ருத ஸபைகளில் வேறுபாஷை கலப்பின்றி பேசும்திறமை பல இடங்களில் பார்த்துள்ளேன். ஆனால் விஷயம் வரும் போது ஸம்ஸ்க்ருதத்தைச் சார்ந்ததாக அவ்விஷயமிருந்தால் அதைக்கூட விளக்கும் போது சுத்தத்தமிழிலேயே விளக்கங்காணலாம். உதாரணமாக (எடுத்துக் காட்டியது கம்பராமாயணம் முதல்பாட்டில் தாமுளவாக்கலும் என்ற அடியில், உள என்ற சொல்லுக்குக் கருத்தென்ன? என்று ஆராயும் பொழுது தாமாக்கலும் என்பதே போதுமென்று சிந்தித்துக் கொண்டு ''உள'' என்ற சொல்லுக்குப் பொருள். வைணவ வேதாந்தத்தின் ஸாரப்படி மிக நன்றாக அமைந்ததென்று சுட்டிக் காட்டியது இன்னமும் என்னுடைய மனதில் பதிந்தும் காதிலும் ஒலித்துக் கொண்டும் இருக்கிறது. அதாவது உலகுக்குக் காரணம் முன்பு இல்லாதது இதுபோதே உண்டாகிறது என்பர் சிலர், முன்பு என்றால் ப்ரளயகாலம். அது சமயம் குடம் வஸ்த்ரம் இவைகள் இல்லை. இதுபோதே உண்டாயிற்றென்பர். இந்த வார்த்தை இராமானுஜரும் அதற்கு முன்னோர்களும் ஒப்புக் கொள்ளுவதில்லை, ஆனால் முன்பு இருப்பதே தான் இப்பொழுது தென்றுகிறதென்பது அவரது கொள்கை. இது எவ்வாறு ஒவ்வும் முன்பு இருந்தால்

அது உண்டாக வேண்டியதன்றே எனில் அதற்கு சமாதானம். முன்பு இருந்த நிலை குடத்துக்கு மண்ணாக இருந்தது. இதுபோது அது குடமாயிற்று என்று தான் பொருள். ஆதலால் ஸத்கார்ய வாதம். நிலை மாறுவதால் உண்டாகிறதென்கிறோம், இந்த நோக்கத்தில் தாமுன என்று உள என்பதன் பொருள் என்று ஆக அவர் ''உள'' என்ற சொல்லை உபயோகித்தார் என்றார். மேலும் சடகோபன் முதல் பாசுரத்தில் உயர்வற என்பதிலும் எவனவனென்று தனித்தனியாகக் காட்டிய விஷயத்தை இவர் முத்தொழிலையுஞ் சேர்த்துக் கூறி எவரவரென்று, ஒரே இடத்தில் சேர்த்துச் சொல்லும் அழகும் முத்தொழிலும் ஒரே பரம் பொருளுடையது என்று காட்டவே இவ்விதம் கூறப்பட்டதென்று எடுத்துக் காட்டவே என்பர்.

இதே போல் வடமொழியிலும் ஸம்ஸ்க்ருத சொற்களை அமைப்பதிலும் மிக அர்த்தம் கம்பீரமுள்ள சொற்களாக அமைவதுடன் மிகுந்த ச்லேஷையாக இருப்பதையும் பார்த்தால் பட்டபாணனுடைய சைலி போலும் -தண்டியின் வாக்கியம் போலும் மிகவிசித்ரமாய் அமைந்திருப்பதையுங்கண்டு கட்டிலடங்காத களிப்பையுடையவராகிறோம், உதாரணமாக யதார்த்தக்யாதிபூஷணம் என்ற நூலுக்கு முன்னுரையை நம் ஆண்டவன் அருளியிருப்பதை உற்று நோக்கினால் காணலாம். காணக்காண புதிதாகிய பொருள்களும் சொற்றொடர்களின் உள்ளே அடங்கியிருப்பதை நன்கு காணலாம்.

மதுமதந்கருணை என்று ஆரம்பித்து 7-8- விசேஷணங்களுடன் கூறிய சொற்றொடரின் அழகு ஸம்ஸ்க்ருத வல்லுனர்களே அனுபவிக்கக்கூடியதேயன்றி வாய்விட்டு கூறமுடியாது.

இதேபோல் தற்சமயம் பெரிய திருமொழியில் நாகைப்பாசுரங்களின் விளக்கங்கண்டு மெய்சிலிர்த்து கண்ணீர்மல்கி அனுபவிக்கக்கூடியதாயும் முன் பேராசிரியர் பெரியவாச்சான்பிள்ளை போன்றோர்களின் மணிப்ரவாள நடை போலன்றி தமிழன் ஒருவனாலேயே அறிய முடியாதநிலை நீங்கும் சாதாரண புலவனுங்கூட கண்டனுபவிக்கக் கூடியதாயமைந்தது மிகவும் போற்றத்தக்கது.

அப்படிப்பட்ட நம் ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவனவர்கட்கு அறுபதாம் ஆண்டைக் கொண்டாடக் கூடிய பாக்கியத்தை ஏற்படுத்திய பெரியபிராட்டியாருடன் கூடிய அரங்கநகரப்பன். இந்த பரம்பரை முன்பிருந்த பெரியோர்களுக்கும் நமது க்ருதக்ஞதையை பலப்ரணாமங்களாலே ஸமர்ப்பித்துஸகலவித புருஷார்த் தங்களையும் இப்பெரியாருடைய அருளால் மேன்மேலுமடைந்து சுபிக்ஷமாக நாமும் நம் ஸமுதாயமும் நாடும் வாழ வேண்டுமென்று ப்ரார்த்தித்து முடித்துக் கொள்கிறேன்.

சுபம்

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிமாந்த மஹா தேசிகாய நம:

ஆத்மகுணங்கள்

ஸ்ரீமதுபயவே. வித்வான் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீநிவாஸாச்சார்யர் ஸ்வாமி

ப்ராம்மணனுக்கு கர்பபாதனம் முதலான நாற்பது ஸம்ஸ்காரங்கள் ஆவச்யகம் என்று சொல்லப்பட்டுள்ளது. இவைகளில் கர்ப்பாதானம் முதலியன ப்ராம்ம ஸம்ஸ்காரங்கள் என்றும் பாகயக்ஞம் முதலியவை தைவங்கள் என்றும் இவைகளின் அநுஷ்டானங்களினால் ப்ரம்ம ப்ராப்திக்குத் தகுந்ததான சரீர சுத்தி ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

இந்த நாற்பது ஸம்ஸ்காரங்களைவிட ஆந்தரங்களான ஆத்மகுணங்கள் மிக அவச்யங்கள் என்று ''கௌதமர் ''

'' யஸ்மை து தே சத்வாரிம்சத் ஸம்ஸ்கார: நசாஷ்டாவா த்ம குண:
ந ஸ ப்ரம்ஹண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி.''
''யஸ்யது கலு சத்வாரிம்ஸத் ஸம்ஸ்காராணும் ஏகதேசேபி
அஷ்டாவாத்மகுணா:
அத ஸப்ரம்ஹண: ஸாலோக்யம் ஸா யுஜ்யம் ச கச்சதி இதி.''

என்னும் இரண்டு ஸூத்ரங்களால் கர்ப்பாதானம் முதலான நாற்பது ஸம்ஸ்காரங்கள் பூர்ணமாகயிருந்தாலும் எட்டு ஆத்ம குணங்கள் இல்லாவிட்டால் ப்ரம்ம ப்ராப்தி கிடைக்காது என்றும் எவனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களில் ஏகதேசஸம் பந்தமிருந்தாலும் எட்டு ஆத்ம குணங்கள் இருக்கின்றதோ அவன் ப்ரம்ம ஸாயுஜ்யத்தையும், ஸாலோக்யத்தையும் அடைவான் என்று அருளிச் செய்திருக்கிறார்.

எட்டு ஆத்ம குண்ங்கள் ஆவன – அதாஷ்டாவாத்ம குணா:

''தயா ஸர்வ பூதேஷு , க்ஷாந்தி: , அநஸூயா மெ ளசம்
அநாயாஸ : மங்களம் அகார்பண்யம் அஸ்ப்ருஹா ''- இதி

1) ஸர்வ பூதங்களிடத்திலும் தயை. 2) க்ஷமை. 3) அஸூயை இல்லாமை. 4) அசியாக இருக்கும் தன்மை. 5) ஆயாஸ மின்மை. 6) மங்களம். 7) பேராசை. 8) பிறர் ஸொத்தில் ஆசையற்றிருப்பது ஆகிய இந்த எட்டு குணங்கள். மேற்கூறிய எட்டு குணங்கள் லக்ஷணங்களை (ஸ்வரூபங்களை) ப்ரஹஸ்பதி என்பவர் தம்முடைய ஸ்ம்ருதியில் விசிதமாக நிரூபணம் செய்துள்ளார்.

தயை:

''பரேவா பந்துவர் கே வா மித்ரே த்வேஷ்டரி வா ஸதா!
ஆபதோ ரக்ஷணம் யஸ்து ஸா தயா பரிகீர்த்திதா''

சத்ருவிடத்திலும் த்வேஷிப்பவர்களிடத்திலும் கோபித்துக் கொள்ளாமல் தன் ப்ரயோஜனத்தையும் எதிர்ப்பார்க்காமல் அயலாருடைய துக்கத்தைப் போக்குவதில் உள்ள இச்சைக்கு (விருப்பத்திற்கு) தயை என்று பெயர். இந்த தயையை

''யா துக்கா பசிகீர்ஷா பரஹிதமநஸ: ஸைவ தஸ்யாநு கம்பா,''

என்று ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸாதித்திருக்கிறார்.

அதாவது இதரனுடைய துக்கத்தைப் பார்த்து தானும் துயறப்படுவது என்பது தயை என்று ஒரு பக்ஷம். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகருடைய பக்ஷம் பாஷ்ய ஸம்மதம். இதர காவ்ய கர்த்தாக்களும் தங்கள் காவ்யம் அதின் வ்யாக்யானங்களிலும் இதையே அனுஸரித்துள்ளனர். ஒருவன் துயரம் அடைந்திருந்தால் அத்துயரைத் தீர்க்க வல்ல ஒருவன் அவனைத்தேற்றி அவன் துயரத்தைப் போக்கினால் தான் அவனை தயாளு என்றும் அவ்விதமில்லாமல் துக்கப்படுபவனுடன் வாசியற தானும் துக்கித்தானாகில் துயரடைந்தவன் கதி என்ன ஆகும்? துக்கத்தைப் போக்கடிக்க முடியாமல் தானும் துக்கமடைந்தானாகில் முதலில் துயருற்றவன் இன்னும் அதிக துக்கத்தை அடையக்கூடும். எம்பெருமானுக்கு தயை என்ற குணம் உண்டு என்பது சாஸ்த்ர ஸித்தம். அவன் துயருற்றவனை பார்த்து தானும் துயருற்றானாகில் அவன் ஸ்வரூபத்தில் ஹேயப்ரத்யநீகத்வம் குலைந்து துக்கா ச்ரயத்வரூப தோஷம் ஸம்பவிக்கும். ஆகவே **''பரதுக்க நிராசிகீர்ஷா தயா''** என்றே அர்த்தம் கொள்ள வேணும். ஆத்மகுணங்களில் தயை என்பது ப்ரதானமாகையால் முதலில் சொல்லப்பட்டது.

ஸ்ரீ வைஷ்ணவ லஷணம் எது? என்று ஒருவர் மஹானுடைய காலக்ஷேப கோஷ்டியில் ப்ரச்னம் பண்ண, அவரவர்களுக்கே தெரியும் என்றும் பிறர் துக்கப்படுவதைப் பார்த்து ஐய்யோ என்று நினைத்து அந்த துக்கத்தைப் போக்குவனாகில் வைஷ்ணவத்வம் உண்டு என்றும் அவனைப் பார்த்து இன்னும் துக்கப்படவேண்டும் என்றிருந்தானால் அவனுக்கு பகவத் ஸம்பந்தம் இல்லை என்று சொல்லத்தகும் என்று. உத்தரம் அருளிச் செய்தாராம்.

''ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:'' என்று தயை தான் உயர்ந்த தர்மம் என்று பிராட்டியின் வார்த்தை. இந்த தயை இல்லாமல் மற்ற - ஞானம் பிறரின் தோஷத்தை அறிவதற்கும் சக்தி, அறிந்த தோஷத்திற்கு ஏற்ப சிக்ஷிக்க உபயோகப்படுவது ஒழிய வேறில்லை. தயை என்பது தோஷத்தை நீக்கி குணத்தை க்ரஹித்து ரக்ஷிக்கத் தகுந்ததாக இருப்பதால் முதல் குணமாக கருதப்பட்டது.

''ஸர்வ பூத தயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:''

என்று அஹஸ்ஸின் இரண்டாவது காலமான உபாதான ப்ரகரணத்தில் தயை க்ஷமை இவை இரண்டையும் ஆந்தரமான பூஜோபகரணமாக எடுக்கப்பட்டது.

''பாஹ்யே சைவாப்யந்தரே சைவ துக்கே உத்பாதிதே பர:
நப்ரகுப்யதி நோ ஹந்தி ஸா க்ஷமா பரிகீர்த்திதா''

இதரர்கள், வெளிப்படையாகவும், ஆந்தரமானதுமானதுக்கங்களை உண்டு பண்ணும் போதும் அவர்களிடத்தில், விகாரத்தைக் காட்டாமல் கோபத்தைத் தடுத்துக் கொண்டிருப்பது பொருமை எனப்படும். இவ்விதப் பொருமையே கவசமாக இருக்கும். ''க்ஷமாஸாராஹி ஸாதவ:'' என்றபடி மஹான்களுக்கு இது ஓர் அலங்காரமாக அமையும். இந்த பொருமையினால் பல மஹான்கள் (தர்மபுத்ரர் போன்ற) ப்ரஸித்தி பெற்றனர். அபகாரம் செய்தவர்கள் இடத்தில் மட்டும் ஸாது இருப்பது க்ஷமை ஆகாது. அவர் செய்த அபகாரத்திற்கு பதில் செய்ய ஸாமர்த்யம் இருந்த போதிலும் பொருமையுடன் இருப்பதே க்ஷமையாகும். அம்பரீஷ மஹாராஜா இந்த க்ஷமா குணத்தை துர்வாஸர் வாயிலாக உலகத்தாருக்கு வெளியிட்டார்.

''அஹோ அனந்த தாஸாநாம் மாஹாத்ம்யம் த்ருஷ்ட்மத்யமே
க்ருதாக ஸோபி யத் ராஜந் மங்களாநி ஸமீ ஹஸே''

ஆச்சர்யம் ! பகவத் பக்தர்களின் மஹிமையை இப்போதே கண்டேன். அபராதம் செய்த என் விஷயத்தில் மங்களங்களை விரும்புகிறீர் என்று அம்பரீஷ

ராஜாவைப் பார்த்து துர்வாஸ முனிவர் க்ஷமாகுணத்தின் பெருமையைத் தெரிவித்தார்.

''அபக்ஷ்ய பரிஹாரஸ்ச ஸம்ஸர்தஸ் சாப்யநிந்திதை:
ஸ்வதர்மே ச வ்யவஸ்தானம் மௌளசமேதத்ப்ரகிர்த்திதம்''

சாப்பிடக்கூடாததை விலக்குதல், ஸாதுக்களுடன் சேர்ந்திருத்தல், தனக்கு விஹிதமான தர்மானுஷ்டானம் செய்தல். ஆக இம்மூன்றும் சுத்தி ''(மௌளசம்)'' எனப்படும். ஆஹாரநியமத்தில் சொன்னதைச் சாப்பிட்டு மற்றதை விலக்குவது, அபக்ஷ்யபரிஹாரம்

''ஆஹார சுத்தௌ ஸத்வ சுத்தி: ஸத்வ சுத்தௌ த்ருவா ஸம்ருதி:
ஸ்ம்ருதி லம்பே ஸர்வ க்ரந்திநாம் விப்ரமோக்ஷ:''

என்று ஆஹார சுத்தி அவச்யம் என்று ஏற்படுகிறது! ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்துள்ளார். வ்ருத்திக்ரந்தத்தில்

'ஜாத்யா ச்ரய நிமித்த துஷ்டாத் அந்நாத் காய சுத்தி:விவேக:''

என்று ஜாதி தோஷமுள்ள ''உள்ளிப்பூண்டு'' முதலியவையும், பதிதர் முதலானவர்களிடம் உள்ள அந்நாதிகளையும் ஈ, புழு முதலியவைகளால் ஸம்பந்தப்பட்ட சோறு முதலியவைகளையும் விலக்க வேண்டும். இவை விவேகசப்தத்தினால் சொல்லப்படுகிறது.

''அந்ந தோஷாச்ச ம்ருத்யுர் விப்ராந் ஜிகாம்ஸதி''

அன்னத்தின் தோஷத்தினால் ப்ராம்மணர்களை ம்ருத்யுக் கொல்ல முயற்சிக்கிறான் என்று மனுசொல்கிறார். ஆகையினால் ஆஹார நியமம் அவச்யம் என்று ஏற்படுகிறது. ''ஸத்ஸங்கமும் மௌளசத்தில் சேர்ந்ததே. மஹான்களின் சேர்க்கையை நற்கதி மார்கமாக சொல்லப்படுகிறது. மோக்ஷத்திற்கு, பரம்பரயாக ஸாதுக்களின் சேர்க்கை காரணமாகிறது என்றும் துஷ்ட ஸஹவாஸம் நரகத்திற்கு காரணமாகும் என்றும்

''மஹத்ஸேவாம் த்வார மாஹு:: விமுத்தே: தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கி ஸங்கம்''

என்று சுகப்ரம்ம ருஷியின் வாக்யம். ஸ்வதர்மானுஷ்டானம் அதாவது அவரவர்களின் வர்ணாச்ரமங்களுக்குச் சொல்லப்பட்ட தர்மங்களை அனுஷ்டித்தல் அதன்படி தனக்குறிய தர்மங்களை அனுஷ்டித்து வந்தால் அவன் ஸித்தியை அடைவான். பகவானை அடைவதற்கு இதைவிட வேறு மார்கமில்லை. இவ்விஷயத்தை

''ஸ்வகர்மணு தமப்யர்ச்ய ஸித்தம் விந்ததி மாநவ:
ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:''

என்று கீதாசார்யன் தாமே அருளிச் செய்துள்ளார்.

''வர்ணாச்ரமாசாரவதா புருஷேண பர: புமாந்
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ் தத்தோஷ காரக:''

என்று விஷ்ணுபுராணத்தில் பராசரமஹர்ஷியால் அருளிச் செய்யப்பட்டுள்ளது வர்ணத்திற்கும், ஆச்ரமத்திற்கும் தகுந்த கர்மாக்களை அனுஷ்டிப்பவனிடம் பகவான் ஸந்தோஷிக்கிறான். இதை விட பகவானுக்கு ஸந்தோஷத்தை உண்டு பண்ணக்கூடிய வேறு மார்கம் இல்லை என்று ஏற்படுகிறது.

''யதாரம்பே பவேத பீடா நித்யமத்யந்த மாத்மநே:
த்த வர்ஜயேத் தர்மமபி ஸோ sநாயாஸ: ப்ரகீர்த்தித:''

ஒரு கார்யம் தர்மமாக இருந்தாலும் எப்பொழுதும் சரீரத்திற்கும் மனதிற்கும் ச்ரமத்தைக் கொடுக்குமோ அக்கார்யத்தில் ப்ரவ்ருதிக்காமலிருப்பது

''ப்ரஶஸ்தாசரணம் நித்யம் அப்ரஶஸ்தவிவர்ஜிதம்
ஏதத்தி மங்களம் ப்ரோக்தம் ரிஷிபிஸ் தத்வ தர்சிபி:''

நல்ல கார்யத்தைச் செய்தாலும், கெட்டகார்யத்தைச் செய்யாது இருந்தாலும் மங்களம் எனப்படுகிறது. எந்த கார்யத்தைச் செய்தால் மஹான்கள் ச்லாகிப்பார்களோ அது தர்மம் என்றும், எக்கார்யத்தைச் செய்தால் ஸாதுக்கள் நிந்திப்பார்களோ அது அதர்மம்

''யதார்த்த:, க்ரியமாணம் ப்ரஶம்ஸந்தி ஸ தர்ம: யத் தர்ஹந்தே ஸோsதர்ம: ''

என்று ஆபஸ்தம்பர் ஸாதித்துள்ளார்.

''விஹிதஸ்யாநநுஷ்டாத் நிந்திதஸ்ய நிஷேவணாத் நர: பதநம் ருச்சதி''

என்றதால், சாஸ்த்ர விஹிதத்தை செய்யாமையாலும், சாஸ்த்ர நிஷேதமானவற்றைச் செய்வதாலும் மனிதன் அதோகதியை அடைகிறான் என்று மனுப்ரஜாபதி விளக்கியுள்ளார்.

''ஸ்தோகாதபி ஹி தாதவ்யம் முநிதேநாந்தராத்மநா
அஹந்யஹநி யத் கிஞ்சித் அகார்பண்யம் ஹி தத் ஸ்ம்ருதம்''

ப்ரதிதினமும் சிறிதாகிலும் த்ரவ்யம் தானம் செய்யவேண்டும். அதையும் மீறி ப்ரீதியுடன் பகவதர்ப்பணமாக கொடுப்பது அகார்ப்பண்யம் இதை வேறு இடத்தில்

''தாநம் ப்ரியவாக் ஸஹிதம், க்ஞாநமகர்வம், க்ஷமாந்விதம் பௌளர்யம்
த்யாகஸமேதம் த்ரவ்யம் துர்லபமேதத் சதுர்ப்ரத்ரம்''

இனிமையான வார்த்தையுடன் கூடிய தானம், கர்வமில்லாத அறிவு, பொருமையுடன் கூடிய பராக்ரமம், த்யாகத்துடன் கூடிய த்ரவ்யம் இவை நான்கும் சதுர்பத்ரம் கூறியிருக்கிறது. மேற்சொன்னவையாவும் கர்ணனிடத்தில் இருந்ததாக தெறிகிறது.

''யாசிதோ மோத மாதத்தே வாஞ்சிதாததிகப்ரக:
அநுவ்ரஜ்ய ப்ரியம் ப்ருதே தஸ்மாத் கர்ணஸ்தவாதிக:''

என்ற சுலோகத்தின் மூலமாக.

ஆசையற்றிருக்க:

''யதோத்பந்நைஸ்து ஸந்தோஷ: கர்தவ்ய: ஸ்வார்ஜிதைர் தநை:
பராரத்தம் நாபிலாஷேத ஸாஸ்ப்ருஹா பரிகீர்த்திதா''

ஸ்வார்ஜிதமாகவும் ந்யாயார்ஜிதமாகவும் தனக்கு கிடைத்த த்ரவ்யத்தினால்


ஸந்தோஷமும் பிறர் த்ரவ்யத்தை விரும்பாமையாகிறதும் இவ்விரண்டும் அஸ்ப்ருஹை எனப்படும்.

"யோ தர்மம் அர்த்த காமம்வா லபதே மோக்ஷமே வ வா
நத்விஷ்யாத் தம் ஸதாப்ராக்ஞ: ஸோ ऽ நஸூயா ஸ்ம்ருதா புதை:"

மற்றவர்களுக்கு ஏற்படும் ச்ரேயஸ்ஸில் த்வேஷமில்லாமலிருப்பது (பொறாமை இல்லாமல் இருப்பது) அநஸூயா. இந்த உயர்ந்த குணத்தை நாம் எல்லோரும் பின்பற்றி நடக்க வேண்டும்.

அஸூயை இருந்தால் பல அனர்த்தங்கள் உண்டாகக்கூடும். முக்யமாக ராமானுஜமதத்தைச் சேர்ந்த நாம் எல்லோரும் மேலே கூறிய எட்டு ஆத்ம குணங்களையும் அனுஷ்டானபர்யந்தமாக்கியும், அதிலும் முக்யமாக அஸூயை இல்லாமையை அநஸூயை என்ற குணத்தை கடைபிடித்து நாம் எல்லோரும் ராமானுஜ ஸித்தாந்தத்தை வளர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் காலத்திலேயே ஒருவருக்கொருவர் பொறாமை யுள்ளவர்களாய் இருந்தார்கள் என்று ஸ்வாமியின் பரஸ்பர ஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய என்ற ஸ்ரீஸூக்தியினால் அறியமுடிகிறது. அதன் பிறகு வெகுகாலம் கழித்து அனேக மஹான்கள் ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகன் ப்ரஸித்த வைபவராய் ஆத்மகுணபரிபூர்ணராய் ஆசார்யோத்தமராய் எழுந்தருளியிருந்தார் என்றும் அந்த ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீமுஷ்ணம் புராணம் (நாடுநாட்டு) நாராயணாச்சார் ஸ்வாமி ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரித்து சாந்தராய் எழுந்தருளியிருந்து க்ருபயா நிஸ்பருஹோ வதேத் என்ற ரீதியில் ஸ்ரீமுஷ்ண சூராத்யாயியாயும் மஹாபண்டிதராயும் ஸ்வர்ணம் ஸ்வாமி என்ற மஹானுக்கு ஸகல சாஸ்த்ரங்களையும் உபதேசித்தருளினார் என்று ஆப்ததமர்களான பெரியோர்கள் மூலம் கேள்விப்பட்டிருப்பதையும் இன்னும் பல மஹான்களை (பரிபூர்ணாத்மகுணாவான்களை) நேரிலும் ஸேவித்து இருப்பதால் இவையனைத்தையும் தெரிந்து நாம் எல்லோரும் ஹிதைஷிகளாக இருந்து ராமானுஜ ஸித்தாந்தத்தை வளர்த்து பயன் அடைய வேண்டும் என்று ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தை ப்ரார்த்திக்கிறேன்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஞானப் பிரான்

(ஸ்ரீமதுபயவே வித்வான் உத்தமூர் (பையம்பாடி) வேங்கடவரதாசார்யர் ஸ்வாமி)

அபிநவதேசிகனின் ஆசார்யரும் அபிநவபாஷ்யகாரரென்று ஸுப்ரஸித்தருமான ஸ்ரீப.ர.ம.பரி கோழியாலம் ஸ்ரீமத்ரங்கராமாநுஜ மஹாதேசிகன் ஸஞ்சாரக்ரமத்தில் ஸ்ரீமுஷ்ண க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஜ்ஞாநப்பிரானாகிய ஸ்ரீபூவராஹனின் திருமேனி ஸௌந்தர்யத்திலே ஈடுபட்டு மங்களாசாஸநம்செய்து இரண்டு ச்லோகங்கள் அருளிச் செய்தாயிற்று.

ஸாசீக்ருத வராஹாஸ்யம் ஸ்ரீமுஷ்ண நிலயம் மஹ: நயஸ்யத் கடிதடே ஹஸ்ததத்வயம் சக்ராப்ஜஸம் யுதம் ஸமேதம் ஸ்ரீதரித்ரீப்யாம் பூவராஹம் ஸுஸுந்தரம் உத்ஸவேதஷ உத்ஸுகம் யஜ்ஞவராஹம் ச நமாம் யஹம்॥

இந்தஇரண்டு ச்லோகங்களின் கருத்தாவது பக்கவாட்டில் உள்ள வராஹத்திரு முகமண்டவமுள்ள வரும் சக்ரம் தாமரைகளைத் திருக்கைகளை இடுப்பில் வைத்துள்ள வரும் ஸ்ரீமுஷ்ண க்ஷேத்ரத்தில் ஸ்தாவரப்ரதிஷ்டையாக நின்றவரும் கண்டார் கண்களை கவரும் திருமேனி அழகுள்ளவரும் மூலவர் ஸ்ரீவராஹப் பெருமானையும் ஸ்ரீபூதேவிகளுடன் சேர்ந்த லாவண்ய ஸௌந்தர்யக கடலான உத்ஸவ பெருமானையும் வணங்கி வழிபடுகிறேன் என்பதாம். ஸ்ரீபூவராஹவனால் அருளிச் செய்யப்பட்டது இரண்டு சரமச் லோகங்களானபடியாலே அவ்வண்ணமே இரண்டு ச்லோகங்களை அருளினார் போலும். இந்தவேதவராஹகல்பத்திலே வராஹனுடைய பெருமை சொல்லுக்கும் எழுத்துக்கும் அடங்காது. இந்த பத்து அவதாரங்களில் இவ்வவதாரமே உபதேசத்திலும் ஆச்ரித ரக்ஷணத்திலும் முதலானபடியாலே எல்லாவிதத்திலும் மிகவும் சிறந்ததாம். சைதந்யஸ்தந்யதாயி நீம். மத்த: ஸ்ம்ருதி: ஜ்ஞாநம். யம் ஹி ரக்ஷிதும் இச்சந்தி புத்யாஸம்யோஜயந்தி தம் என்றபடியே நல்லறிவைத்தந்து ரக்ஷிக்க திவ்யதம்பதிகளானபடியாலே இவர்களின் பெருமை பேசநில மன்று. ஸவ்யம் வ்யக்த க்ஷேத்ரங்களைக் கணக்கிடும் போது ஸ்ரீமுஷ்ணம் வேங்கடாத்ரிம் சஎன்று அருளியபடியால் இரண்டு க்ஷேத்ரங்களிலும் ஸ்ரீவராஹப் பெருமானுக்கே மிக்க ப்ராதாந்யம் உள்ளது என்பது தெள்ளென விளங்குகிறது. ஸ்ரீவராஹனிடம் அளவிலா அன்பு கொண்ட ஸ்ரீதேசிகன் தாம் அருளிய ரஹஸ்யத்ரய ஸாரக்ரந்தத்தில் தஸ்ய யஜ்ஞரா ஹஸ்யவிஷ்ணோ ரமித தேஜஸ: ப்ரணாமம் யேபிகுர்வந்தி தேஷா மபி ந மோ நம: என்கிற ஸ்ரீ பாரதவசநத்தை உதாஹரணமாக அருளினார். மஹாப்ரபாவமுடையரான யஜ்ஞவராஹனையும் அவரை அடிபணியும் அடியார்களையும் அடிபணிகிறேன் என்று இதன் கருத்து.

ஸ்ரீதேசிகன் தாம் அருளிய தசாவதாரஸ்தோத்ரத்திலும் ஸங்கர்ப்ப ஸூர்யோதய நாடகத்திலும் ரஹஸ்யசிகாமணி ரஹஸ்யத்திலும் தயாசதகத்திலும் வராஹப்பிரானின் பெருமையை தனித்து ஆசர்யமாக அருதியிட்டார். தேசிகன் தாம் அருளிய தயாசதகத்தில் அநிஷ்ட நிவ்ருத்தியையும் அச்யுதசதகத்தில் இஷ்ட ப்ராப்தியையும் விரிவாக உரைத்து உபநிஷத்துக்களில் ஓதப் பெற்ற மோக்ஷஸ்வரூபத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டினார். ஒரொன்றுதானே அமையாதோ என்றபடி தயாசதகம் அமைந்தது. ஸுஸ்பஷ்டம். தயாசதகத்தையும் பாது காஸஹஸ்ரத்தையும் நீவீ என்று தாமே அருளியது சாலச்சிறந்த தாமென்று பெரியோர்கள் புகழ்வர். பூவராஹனின் பெருமையை தயாசதகத்தில் ''யுகாந்த ஸமயோசிதம் என்கிற 93வது ச்லோகத்திலே பரக்கப் பேசினார் - ப்ரளய காலத்து சூரியன் யோகநித்ரை செய்யும் எம்பெருமான் திருவேங்கமுடையான் லீலாக்ரமத்தாலே விழித்துக் கொள்ளும் போது நான்கு ஸமுத்ரங்களின் அபிவ்ருத்தியினால் பூமிக்கு ஏற்பட்ட க்லேசத்தைக் கணிசித்து வராஹாவதாரம் செய்து தன் கோரைப்பல்லால் பாதாளத்திலுள்ள பூமியை உத்தரணம் செய்தது தயைமாற் ப்ரகர்ஷத்தாலாம்.

இங்கு யோக நித்ரையாவது நித்ராமுத்ராபிராமம் என்கிறபடி அசைவற்றல் கண்டு முதல் முதாலவதுள்ள நிலை. யோகமே நித்ரை யோக: உபாய: கர்மயோகம் ஜ்நாநயோகம் பக்தியோகம் என்கிறவிடங்களில் போல் யோக சப்தத்திற்கு உபாயம் என்று பொருள். ப்ரஜைகளை உத்தரணம் செய்ய உபாயசிந்தை செய்வதாம். பூம்யுத்தரணம் செய்ய வராஹாவதாரம் செய்தது. அந்த ப்ரளய காலத்தில் அவன் வராஹத்திருமேனி மிகப் பெரியது என்பதை தேசிகனே ஸங்கல்பஸூர்யோதய நாடகத்தில் க்வாஸபிகல்பாந்த வேசந்தே குரதக்நே ஸமுத்ருதாம் வஹதே மேதிநீமீ முஸ்தாம் மஹதே போத்ரிணே நம: என்று. அதாவது அப்பேற்பட்ட ப்ரயைக்கடல் தனது குளம்பு நீரே கொண்ட குட்டையாக அதனின்று பூமியைக் கோரை கிழங்கைப் போல் உத்தரணம் செய்தார் என்பதாம் புராணங்களிலும் 'மேரு: கணகணாயதே, அதாவது வராஹப் பெருமானின் திருவடிகளில் சாத்தப் பெற்ற நூபுரத்தில் உள் மேருபர்வதம் ஒலிக்க உள்ளே இடப்பட்ட சிறு கல் போல் ஆயிற்று எனப்பட்டது. திருமேனி மிகப்பெரியது அளவற்றது என்றதாம். வெகுகாலமாக இந்த பூமியை உத்தரணம் செய்தார் என்பதையும் ப்ரவர்த்தமாநாத் ப்ரளயாம்பு ராசே: ஆவிர்பவன் ஆதிவராஹ ஏஷ: தம்ஷ்ட்ராநுஷக்தாம் தரணீம் ததாந: ஜம்பாலவ ரேகாமில கேவி லக்நாம்।।

வராஹப்பிரான் பூமியை உத்தரணம் செய்த போது தன் கோரப்பல்லில் ஒட்டியிருக்கும் சேற்றின் சிறு துளிபோல் ரேகைபோல் பூமிஅமைந்தது என்று அநாயாஸமாகச் செய்தார் என்பதாம். ஜகத்ஸ்ருஷ்டி செய்பவர் வராஹப் பிரான் என்றும் ஸ தி போதப்யத ஸதபஸ்தப்த்வா, பஹுஸ்யாம், ப்ரஜாயேய என்று ஸங்கல்பித்து ஸங்கல்பமே துணையாக ஸ்ருஷ்ட்யாதிகள் செய்பவர் அப்படியே ரக்ஷிப்பவரென்றும் சொல்லப் பெற்றது. காலையில் தூங்கிவிழித்தவுடன்

த்யாநஸ்தோத்திரம் செய்த பிறகு தனது கால் அடிவைப்புப் பொருத்தருளவேண்டுமென்று பூமிதேவியை ப்ரார்த்தித்து க்ஷிதிதரனான வராஹனை நமஸ்கரித்து உபதேசித்துப் பெற்ற மந்த்ரத்தை அநுஸந்தாநம் செய்து இடது காலை முதலில் வைக்க வேண்டுமென்பது சிஷ்டாசாரம்.

கோபாயேத் அநிசம் ஜகந்தி என்று தேசிகன் த்ருஷ்டாத்ஸீதா என்கிற ந்யாயத்தை அநுஸரித்து வராஹப்பெருமானே எல்லா உலகங்களையும் ரக்ஷிக்க வல்லரென்று அருளினார். ப்ரபந்நஸந்தாந கூடஸ்த்தரான நம்மாழ்வாரும் தாம் அருளின முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்திலே பொய் நின்ற ஞாலம் முதலிய வேண்டாம் என்று முதல் பாசுரத்தால் அருளி 99 பாசுரத்தில் ''ஞாநப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே என்று அருளினார். இவ்வாழ்வார் க்ருஷ்ணனிடமே அதிக பக்தி உள்ளவர். இப்படி இருந்து கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ என்பது ஸ்ரீராமனிடம் பக்தியுள்ளதை அருளினாப் போல் ஞாநப் பிரானையல்லால் இல்லை. நல்லது என்றருளி மத்க்ருதே ஸர்வலோகா நாம் லகூபாயம் வதஸ்வ என்று பூமிப் பிராட்டி கேட்க இரண்டு ச்லோகங்கள் அருளி சரணாகதி ரூபபரமஹிதத்தை உபதேசித்து ஞாநம் அளித்த வராஹப் பெருமானிடமும் உள்ள பக்தியைதெரிவித்தார். இப்பூமியில் உள்ளவர்களும் தேவர்களும் நித்யஸூரிகளும் இவ்வராஹப் பெருமானையே வணங்கி வழிபடுகிறர்கள் என்பதை ஸ்பஷ்டமாக அருளினார். திருவேங்கடமுடையானோ தேவருக்கு முதலில் அந்நபாயஸாதிநி வேதநமும் என்னை ஸேவிக்க வருபவர்கள் தேவரீரை முதலில் ஸேவித்தபிறகே என்னை ஸேவிக்கட்டும் என்றும் அருளி அதையே மூல்யமாகக் கொடுத்து தமக்குத் திருமலையில் வாஸஸ்தா னத்தைப் பெற்றார் என்று புராணவசநத்தை ஆராய்ந்தால் பூவராஹ பெருமை நினைக்க நிலமன்று. திருமகளைப் போல் மண் மகளும் ஏவம்பூத பூமிநீளா ஸ மேத என்கிற ஸ்ரீ பாஷ்யகாரர்வசனத்தால் மிகச்சிறந்தவள் என்பது ஸ்பஷ்டம். உபயவேதாந்தமும் பூவராஹனின் பெருமையைப் போற்றுவது ஸுப்ரஸித்தம்.

ஷஷ்ட்யப்தபூர்த்திகண்டருளும் ஸ்ரீ.... பரமபரி ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமத்ரங்கராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீ முஷ்ண க்ஷேத்திரத்தில் அவதரித்தாலும் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீவரா ஹார்யமஹாதேசிகன் என்று திருநாமத்துடன் விளங்கிய தாலும் ஸ்ரீபூவராஹனைப் போலும்திருவாதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்தபடியால் ஸ்ரீபாஷ்யகாரரைப் போலும் ஸ்ரீகோழியாலம் ஸ்வாமியைப் போலும் அநேக ஜீவாத்மாக்களை உத்தரித்துக் கொண்டு அரோக த்ருடமான திருமேனியுடன் ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களை ப்ரவசநம் செய்து கொண்டு அத்யாத்மக்ரந்த நிர்மாணம் செய்து கொண்டு ஷஷ்ட்யப்த பூர்த்தி ஸப்ததயப்த பூர்த்தி சதாபிஷேகங்களைப் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி இருக்க வேண்டுமென்று திருவேங்கடமுடையான் திருவடிகளை ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அஞ்சலி வைபவம்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் வடுவூர் வீரராகவாசாரியர் ஸ்வாமி)

ஆசார்ய ஸார்வபௌமனும் ஸ்ரீமதாண்டவனது ஷஷ்ட்யப்தபூர்த்தி மலருக்கு ஓர் பணி இச்சிறியவனுக்கு அவ்வாசார்ய வள்ளலுடையவும், குருபரம்பரை யினுடையவுமான அருளால் கிடைக்கப் பெற்றேன்.

சிறு பிராயம் முதலே நம் பெரியோர், நாம் பெரியோரைப்பார்க்கும் போதும், உலகிற்கே பெரியோனும் பெருமாளை பார்க்கும் போதும் (ஸேவிக்கும் போதும்) கைகூப்ப பழக்கியுள்ளனர். அந்த கைகூப்பும் பழந்தொழிலுக்குத் தான் எத்தனை பெருமை? கண்ணன் கழல் தொழக்கூப்பிய கையின் பெருமையினை வாசித்தும், கேட்டும், பார்த்தால் எண்ணம் வியத்திட யமுனைதுறைவரியம்புதலால் உளமிதோ வியக்கிறது. உரைத்திட விழைகிறது. சற்றே ஆழ்ந்திடுவோம் அவ்விலக்கியச் சுவையினில்.

இதிகாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்

என்பர் பெரியோர். அவற்றிலும் பரக்கப்பேசப்பட்டுள்ளது இவ்வஞ்ஜலி வைபவம்.

கூப்பிய கைகள்

ஸ்ரீமத் ராமாயணத்தில் உணர்த்தப்பட்ட ஓர் அர்த்த விசேஷம். ஓர் மாரிக்காலம். ஸ்ரீசக்ரவர்த்தி திருமகன் மால்யவானில் வஸிக்கிறார். ஸுக்ரீவமஹாராஜா கிஷ்கிந்தா பட்டிணத்தில் ஸுகமாக இருக்கிறார். மழைக்காலம் முடிந்து ஶரத்காலம் ஆரம்பம் ஆகிறது. அரசர்கள் தம் சேனையைத் திரட்டி மாற்றரசரை நோக்கி புறப்படும் காலம். ஸுக்ரீவமஹாராஜா சக்ரவர்த்தித் திருமகனைக் காண இன்னும் வரவில்லை. பெருமாளின் மனதில் வருத்தம். ஸீதையைப் பிரிந்த வாழ்வின் தாபத்தால் கோபமாகி, கடுமை கூடுகிறது. இளைய பெருமாளை நோக்கி, ஸுக்ரீவனிடம் சென்று ஸீதையைத் தேடும் விஷயத்தை ஞாபகப்படுத்து என்று கூறியவர்

ந ச ஸங்குசித: பந்தா: யேந வாலீ ஹதோ கத:

வாலி சென்ற வழி மூடப்படவில்லை எனக்கோபக் கனலைக் கக்குகிறார்.

தூண்டப்பட்ட இளைய பெருமாளும் கோபம் கொள்கிறார். கிஷ்கிந்தை சென்று மஹாராஜரின் இருப்பிடத்தை அடைகிறார். தன் வரவை அங்கதன் மூலம் தெரிவிக்கிறார். நிலைமையின் தீவிரம் மந்திரிகள் மஹாராஜரிடம் தெரிவிக்கின்றனர். மஹாராஜரோ வாயுபுத்திரனால் உரைக்கப்பட்டு முன்னமே நான் வான்வீரர்களனைவரும் அணியாகத் திரள ஆணை அனுப்பியுள்ளேன். இதையறியாமல் ஏன் என்மேல் கோபம்? எனக் கலங்குகிறார். அதே சமயம் பயமில்லை என்கிறார். அருகிருந்த அஞ்ஜனைமைந்தனோ, ''மஹாராஜரே! ஸுரத்காலம் தொடங்கியபின்னும் ஆணை கொடுத்தும், ராமனைச் சந்திக்காமலிருந்தால் தீவிர முயற்சியில்லாமை இவையே பெருமானின் கோபத்திற்குக் காரணங்கள். தவறுடைய உமக்கு ஓரஞ்சலி செய்து அபராதத்தைப் பொறுத்தருளும்படி ப்ரார்த்தனை செய்வதே வழி''என உரைக்கிறார்.

க்ருதாபராதஸ்ய ஹிதே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம்
அந்தரேணாஞ்ஜலிம் ப்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதாத்

அவ்வாறே இளையபெருமாளிடம் கைகூப்பி அபசாரக்ஷமர்பணம் ப்ரார்த்தித்துப் பயன் பெற்றார் மஹரராஜர்.

ஸ்ரீபாகவதத்திலிருந்து ஓர் அனுபவம்:

எம்பெருமான் அரியுருவாகி இரணியனை வதம் செய்தார். அதன்பின்னும் சீற்றம் அடங்கவில்லை அருகிலே செல்ல தேவர்கள் மட்டுமல்ல மஹாலக்ஷ்மியும் தயங்கினாள். ஸ்ரீப்ரஹலாதாழ்வானைப் பணித்தார் நான்முகன். உடனே ஸ்ரீ ப்ரஹலாதாழ்வரனும், அருகில் சென்று நமஸ்கரித்து அஞ்ஜலி ஹஸ்தராய் நின்றார்.

உயேத்ய புவி காயேந நநாம விக்ருதாஞ்சலி:
என்கிறார் ஸ்ரீமஹாகப்ரஹ்மம் அதன்பின் எம்பெருமான் சீற்றம் தணிந்து தேவர்களின் ஸ்தோத்ரங்களை ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீ பகவத்கீதை காட்டும் சித்திரம்:

ப்ருப்பருத்த விபூதியில் அனைத்தும் தானே என்றான் கீதாசார்யன். பாரெல்லாம் படரும் அவ்வதிசயரூபமாம் விச்வரூபம் பார்க்க ஆசைப்பட்டான் பார்த்தன்.

''உன் பார்வையால் எனைக் காண இயலாது. தெய்வீகமான பார்வை கொடுக்கிறேன்''. எனக்கூறி அநுக்ரஹித்தான் பரம்பொருள். விசுவரூபம் காட்டினான். எங்கும் வியாபித்த அந்த ரூபத்தைப்பார்த்து அதிசயித்தான் பார்த்தன். மயிர்க்கூச்சமெடுத்தது. பூமியில் விழுந்து நமஸ்கரித்தான். கூப்பிய கைகளுடன் ஸ்ரீபார்த்தசாரதியை ஸ்தோத்ரம் செய்தான்.

திதஸ்ஸ விஸ்மயாவிஷடடோ ஹ்ருஷ்ட ரோமா தநஞ்ஜய:
பரணம்ய சிரஸா தேவம் க்ருதாஞ்ஜலிரபாஷத:

தேவாதி தேவன் நீ. த்ருதராஷ்ட்ர புத்திரர்களை வதம் பண்ண வேணும் என்பதற்காக எனக்கு வீரமளிக்க நீ காட்டிய இந்த ரூபத்தைக் கண்டு பயமேற்படுகிறது. நீ யார்? என உரை எனக் கூறுவான் பார்த்தன்.

பின்னும் கைகூப்பிப் ப்ரார்த்திப்பான். ''நீ ஸௌமுகமான க்ருஷ்ணனாக பழைய பார்த்தஸாரதியாக ஸேவை தருவாயாக ''என்று.

ஏதச்ச்ருத்வா வசநம் கேசவஸ்ய
க்ருதாஞ்சலி: வேபமாந: கிரீடீ

உலகின் பாரம் குறைக்க அவதரித்தவனே நான். என்னால் ஸங்கல்பிக்கப்பட்ட கௌரவஸேனையின் வதத்திற்கு வெறும் பகடைக்காயாக நீ ஆகுக''என்று கூறிய எம்பெருமானிடம் க்ருதாஞ்சலி: கிரீடீ அஞ்ஜலிஹஸ்தனாக (கூப்பிய கைகளுடன்) நமஸ்கரித்து நின்றான். அர்ஜுனன் என்கிறார் கீதையில்.

ஈண்டு உற்று நோக்குக எம் பெருமான் விச்வரூபம் காட்டியவுடன் விக்கித்துக் கைக்கூப்பினான் அர்ஜுனன். பயந்தவுடன் பழைய பார்த்தஸாரதியாகும் படி ப்ரார்த்தனையையும் கூப்பிய கைகளுடன் செய்கிறான்.

பூர்வர்கள் காட்டும் அஞ்ஜலி வைபவம்:

இதுவரை பேசியபடி புராண, இதிஹாஸங்களில் கோடி காட்டப்பட்ட ''அஞ்ஜலிவைபவ'த்தில் ஆழங்கால்பட்டு உரைக்கிறார் ஸ்வாமி ஆளவந்தார்.

த்வதங்க்ரிமுத்திச்ய .....ஸக்ருத்க்ருதோஞ்சலி:

''எம்பெருமான்! உன் திருவடிகளையே உபாயமாகவும்ப்ராப்யமாகவும் எண்ணி ஏதோ ஒரு சமயம், யாரேனுமொருவன், ஏதோ ஓர் விதத்தில், ஒரு முறை அஞ்ஜலி செய்தால் அப்போதே அவனுக்குக் குறைகள் யாவும் நீங்குகின்றன. நன்மைகள் பெருகுகின்றன. குறைவதேயில்லை''என்பது இதன் பொழிப்புரை.

இங்கு ஓர் ஸந்தேஹம்:

பக்தியோகத்திலோ ப்ரபத்தியோகத்திலோ தான் நான் அடையத்தகுந்தவன். மற்றவிதத்திலல்ல என்ற எம்பெருமானின் கூற்றுக்கு

மாற்றுகத் தோன்றுகிறதே.அஞ்ஜலி செய்வதே மோக்ஷஸாதனம் ஆகுமா?

ஆளவந்தாரது ஸ்லோகத்திற்கு ஸமாதானம் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ள அஞ்ஜலிவைபவம் எனும் ரஹஸ்யத்தில் 1)'ப்ரஸாதனமான அஞ்ஜலிக்கு ப்ரபத்தி கர்பத்வம் சொன்னால்''என்று தொடங்கியும்.

2)அங்ஙனன்றிக்கே மாலா கரணுதிகளான வல்லாத பகவத் கர்மங்கள் போலே இவ்வஞ்ஜலியும் ஒரு ஸத்கர்மவிஸேஷமாய் நின்றுல்''என்று தொடங்கியும் இரண்டு விதமாக ஸ்தோத்ர ரத்ன ஸ்லோகத்தை நிர்வாகம் செய்தருளுகிறார்.

முதல் பக்ஷம்:

எம்மானே நீயே தஞ்சம்''என்று கூறி அவன் திருவடிகளைக்குறித்து அஞ்ஜலி செய்தால் அது ப்ரபத்திகர்பமான (ப்ரபத்தியைஉள்ளீடாகக்கொண்ட) அஞ்ஜலி. பரந்யாஸ வ்யஞ்ஜகமுத்ரை. இந்த ஆத்மரக்ஷணபாரத்தை ஸமர்ப்பிக்கும் முத்ரை.

ப்ரார்த்தநா பூர்வக பரந்யாஸம் பண்ணின அகிஞ்சனனுடைய ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபார நிவ்ருத்தி ரூபபலவிஸேஷ வ்யஞ்ஜக முத்ரை அஞ்ஜலி. பரந்யாஸம் செய்யும் போது ஸமர்ப்பிக்கப்படும் அஞ்ஜலி.ஆதலின் இவ்வஞ்ஜலிக்குப் பயனாக வல்வினை மாய்ந்து பேரின்பம் பெருகும்.என்று சொல்வது ஸாஸ்த்ர ஸம்மதம் ஸ்க்ருத்க்ருதோ அஞ்ஜலி என்று கூறுவதால் பரந்யாஸவ்யஞ்ஜக முத்ரை யெனக்கொள்ளலாம்.

இரண்டாம் பக்ஷம்:

அவ்வாறின்றி ஓர் ஸத்கர்ம விஸேஷமான அஞ்ஜலி எம்பெருமானை ஆச்ரயிக்கத் தடையாயிருக்கும் (பாபங்களை)கர்மாக்களைப் போக்கி ஆசார்யஸம்பந்தம்க்ஞானப்ராப்தி பக்தியோ ப்ரபத்தியோ செய்யும் படி அநுகூலித்தல் என்று பரம்பரையாய் மோக்ஷஸாதனமாகிறது.

இவ்வர்த்தத்தைத் தெள்ளெனக் காட்டும் ரஹஸ்யக்ரந்தப் பகுதி வருமாறு:

''இட்டபடை கல்படையாய் பாபக்ஷயம் ஸத்வோந்மேஷம் ஸத்யக்ஞானம் பக்திப்ரபத்திகளென்று, இப்பரம்பரையாலே மோக்ஷஸாதநத்வ முண்டாகையாலே கீழ்ச் சொன்ன ஸர்வாநிஷ்டநிவ்ருத்திக்கும், ஸர்வாபீஷ்டஸித்திக்கும் விரோதமில்லை. (அஞ்ஜலிவைபவம்)

ஹஸ்தீஸ்துக்க விஷதிக்த பலா நுபந்திநி
ஆப்ரஹ்மகீடம் அபராஹத ஸம்ப்ரயோகே!
துஷ்கர்மஸஞ்சய வஸாத் துரதி க்ரமே ந:
ப்ரத்யஸ்த்ர மஞ்ஜலிரஸௌ தவ நிக்ரஹாஸ்த்ரே''
(வரதராஜ பஞ்சாஸத்)

மேற்கண்ட ஸ்வாமியின் ஸூக்தி நாம் செய்யும் அஞ்ஜலி எம்பெருமானே ப்ரீதி செய்வித்து நமக்கு நன்மை பயக்கும் எனக் காட்டுகின்றது.

நம் ஸம்ப்ரதாய ரீதியாக ப்ரதான விஷயங்களை ப்ரதான ஸதகம் எனும் ரஹஸ்யத்தில் ஸ்வாமிதேசிகன் அருளிச்செய்துள்ளார் அதில் எண்பத்தைந்தாவது விஷயமாக ''ந கூஷமாமி என்கிறவனை கடுக ப்ரஸாதிப்பிக்குமவற்றில் அந்தரேண அஞ்சலிம் பத்வா, அஞ்சலி: பரமா முத்ரா இத்யாதிகளிற்படியே அநுதாப க்ருதக்ஞத்வாதியுக்தமான அஞ்சலிபந்தம் ப்ரதானம் என்று கூறினர்.

எம்பெருமானை ஸுலபமாக வஸப்படுத்தும் ஓர் செயல் கைகள் கூப்புதல்.

கைகள் கூப்ப (பி)ச் சொல்லும் ஆழ்வார்:

புருஷோத்தமனாம் எம்பெருமானிடம் தன் காதலை வெளிப்படுத்த பக்ஷிகளை யாசிக்கும் (தூதுவிடும்) ஆழ்வார் வைகல் பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்கள்! செய்கொள் செந்நெலுயர் திருவண்வண்டூருறையும் கைகொள் சக்கரத்தென் கனிவாய்ப் பெருமானைக் கண்டு கைகள் கூப்பிச்சொல்லீர்! வினையாட்டியேன் காதன்மையே. எம்பெருமானிடம் கைகள் கூப்பிவிண்ணப்பம் செய்யுங்கள் என் ஆசையை என்கிறார்.

இதோ திருவாய்மொழியில், ''பாதம் கை தொழுது பணியீர்'', புணர்த்த கையினராய் என்று பலவிதமாயும் அஞ்ஜலி செய்துரைக்க வேண்டுகிறார். ஆசார்யர்கள் மூலமாக எம்பெருமானை ஆச்ரயிக்கிறார் என ஸ்வாபதேசம் உரைப்பர். கைகள் கூப்பியுரைத்தல் அவன் அவசியம் இரங்குபவன் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

இவ்வாறு எம்பெருமானுக்கு நம்மேல் வெறுப்பு வாராமலும், வந்த வெறுப்பைப்போக்கியும், அவனது ப்ரீதியை உண்டாக்குவதான அஞ்ஜலி எம்பெருமான் திறத்தில் செய்து. எல்லோரும் இன்புறுக.





கலாசாலை வெள்ளி விழாவில்
நான்கு யதிச்ரேஷ்டர்கள்



ஸ்ரீ பரசாலமடம் ஸ்ரீ ஹயக்ரீவன்
ஆச்ரமம் விஜயம்



திருச்சானூரில் முதல் மரியாதை



திருச்சானூரில் ஸ்ரீ மதாண்டவன்



திருமலையில் முதல் மரியாதை



திருப்பதியில் முதல் மரியாதை



திருப்பதி விஜயம்




திருமலை ஆச்சரமம் திறப்பு விழாவில்



ஸ்ரீரங்கநாத பாதுகா வித்யாலயாவில் தமிழக கவர்னர்



சென்னை வரவேற்பில் தமிழக அமைச்சர் ஸ்ரீ கு.ப. கிருஷ்ணன்



பாண்டிச்சேரி வரவேற்பில் முதல்வர் ஸ்ரீ வைத்திலிங்கம்



சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ M. ஸ்ரீநிவாசன் ஸேவித்தல்



பிரபல இசைப்பாடகி ஸ்ரீமதி M.S. சுப்புலக்ஷ்மி சதாசிவம் சேவித்தல்



கலாசாலை வெள்ளி விழாவில் Dr. பல்ராம் ஜாக்கர், K.V. தங்கபாலு,
இந்தியன் வங்கித் தலைவர் M. கோபாலகிருஷ்ணன்



முக்கூர் ஸ்ரீ மதமகிய சிங்கர், புஷண்டரீகபுரம் ஆண்டவன் ஆச்சரமம்
ஸ்ரீகோபாலதேசிக மஹாதேசிகனுடன்



ஸ்ரீ பரகாலஸ்வாமியுடனும், ஸ்ரீரங்கப்ரியா மஹாதேசிகனுடனும்

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

தேசிகரும் ஸங்கீதமும்

(ஸ்ரீமான் கொடியாலம் K.N. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி)

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர என்ற விருது பெற்ற நமது ஆசார்ய ஸார்வபௌமருக்கு இந்த பிருதைத் தக்க வைத்துக் கொள்ள சில போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. ஒரு கிணறு கட்டவேண்டியிருந்தது. ஒரு பாம்பாட்டி எடுத்து விட்ட கொடிய பாம்பு ஒன்றை அடக்க வேண்டியிருந்தது. ஸ்தபதி ஒருவரின் நிர்ப்பந்தப்படி உலோகத்தில் தம்முடைய அர்ச்சாமூர்த்தியாகப் பின்னர் அமையப் போகும் விக்ரஹத்தைக் தாமே செய்து வைக்க வேண்டியதாயிற்று. ஹம்ஸ ஸந்தேஶ காவ்யத்தில் விந்திய பர்வதத்தில் தொடங்கி லங்கை செல்லும் ககன மார்கத்தைக் கோடிட்டுக் காட்டிய வள்ளல், பூகோள நிர்ணயம் என்றொரு க்ரந்தத்தையும் ஶில்ப ஶாஸ்த்ர க்ரந்தம் ஒன்றும் இயற்ற வேண்டியதாயிற்று.

தமது ஆற்றலை இவ்வாறெல்லாம் நிரூபித்துக் காண்பித்த ஆசார்ய வள்ளலுக்கு ஸங்கீத ஶாஸ்த்ரத்திலும் தேர்ச்சி இருந்ததற்கு ஆதாரம் உள்ளதா என்று கேட்டார் இந்நாள் அறிஞர் ஒருவர். ஆதிஶங்கரர் புனையாதனவும் அவர் கருத்துக்களுக்கு ஒவ்வாதனவும், காவ்ய ஶைலியிலிருந்தே அவருடைய காலத்திற்குப் பிற்பட்டவை என்று எளிதில் காண்பிக்கக்கூடிய பல ஸ்தோத்திரங்கள் மற்றும் க்ரந்தங்கள் வைராக்கிய நிதியாம் பகவத் பாதர் க்ருதிகளின் வரிசையிலே சேர்ப்பித்துள்ளது போலவும். ஜ்யோதிஷம், சிகித்ஸகம் முதலான பல ஶாஸ்த்ரங்களில் பிற்காலத்தில் இயற்றப்பட்ட க்ரந்தங்களைக் கவிஸார்வ பௌமராம் காளிதாஸருடைய க்ருதிகள் ஜாபிதாவில் ஏறிடுவது போலும், பல நவீனப் பாடல்களைப் பாகவதோத்தமரான த்யாக ராஜஸ்வாமிகளுடைய க்ருதிகளின் வரிசையிலே சேர்த்து விட்டது போலவும் ஸங்கீத நூலொன்றைச் செய்து யாரும் இதுவரை நிகமாந்த மஹாதேஶிகன் க்ரந்த ஸரணியில் சேர்த்துவிடவில்லை. ஏன், மஹாலக்ஷ்மியை நித்ய த்வந்த்வத்திலிருந்து பிரித்தெடுத்து. ஶ்ரீமத்தை விலக்கி நாராயணனுடைய ஸேவக கோஷ்டியிலே சேர்த்து ஒரு ஸம்ஸ்க்ருத நூலை எழுதி, இடையிடையே நிகமாந்த குருவின் மணிப்ரவாள ரஹஸ்யக்ரந்தங்களிலிருந்து எடுத்த வாக்யப் பகுதிகளை ஸந்தர்ப்ப பாதகங்களுடன் சேர்த்து ஶ்ரீதேசிகாதுக்ருஹீத தத்வார்த்தரத்நாவளி: ஸடீகா என்று நாமமிட்டும் ஒரு புத்தகம் ஸமீபத்தில் வெளியிடப்படவில்லையோ? த்ரமிடோபநிஷத் ஸாரம். தாத்பர்ய ரத்னாவளி என்ற அற்புத ரசனைகள் செய்து நிகமாந்த வாசிரியர்கள் என்ற அற்புத ரசனைகள் செய்த நிகமாந்த வாசிரியர்க்குத் திவ்யப்ரபந்தங்களில் பரிசயம் போதாதென்றும், அவற்றைக் கோயிலாத்தான் என்பவரிடமும், பின்னர்த் தமது

தொண்ணூற்றெட்டாம் பிராயத்திற்கு மேல் ஆழ்வார் திருநகரிலே 'ஒரு பெரியவரடியிலே கேட்டறிந்ததாகவும் பலஅபத்தங்களுடன் தேஸிக வைபவமொன்று எழுதி அதைத் விதீய ப்ரம்மதந்திர ஸ்வாமிகள் அருளிச் செய்ததாக அச்சிட்டு, 'வேளச்சேரி பெருமாள் ஸந்நதி வீதியில் நிறுவப்பட்ட' சென்னை அஸ்மத் தேஸிக ஸம்ப்ரதாய நிர்வாஹ ஸபையால் பிரசுரிக்கப்பட்டதாகவும், இந்த வ்யாஸ கர்த்தாவைப் போன்ற 'துடுக்குகள்' தேடிக் கண்டு பிடிக்கத் துணியாமலிருக்கும் பொருட்டு, அப்புத்தகத்தில் 'வில்லிவாக்கத்துக்கு மேற்படி ஸபை இடம்மாறும்' என்றெல்லாம் பிதற்றி அச்சகப் பெயர் குறிக்கப்படாமல் ஒரு புத்தகம் ப்ரசுரிக்கப்பட்டிருந்தாலும், அதனுடைய வாக்ய சைலீ, நிந்தாக்ரமம், அச்செழுத்துக்களின் பரிணாமம், புத்தகத்தின் ப்ரத்யேகமான உருவம் இவற்றிலிருந்து தேஸிகத்வேஷம் நிறைந்த இன்னாரால் இன்னாருடைய சொந்த அச்சகத்திலிருந்து வெளியிடப்பட்டது என்பதும், இவ்விரு புத்தகங்களும் பல நூலகங்களுக்கு வலுவில் அணுப்பப்பட்டு கௌரவமான புத்தகங்களின் மத்தியிலே புகுத்தப்பட்டுள்ளன என்பதும் தெள்ளென விளங்கும். ஆனால், ஆதரித்தோ, எதிர்த்தோ வாதம் செய்தறியா தேஸிக பக்தர்கள் யாரும் நிகமாந்த வாசிரியர் பெயர் கொண்ட இசை நூல் யாதும் செய்து அவரது நூல்களின் ஜாபிதாவில் புகுத்தி வைக்கத்திட்டமிடவில்லை என்பது ச்லாகநீயம்.

ஆனால், நிகமாந்த மஹாதேஸிகனுக்கு ஸங்கீத ஸாஸ்த்ரத்தில் தெளிவான நைபுண்யம் உண்டு என்பதைக காண்பிக்கும் சில ஆதாரங்களைப் பெரியோர் முன்பு ஸமர்ப்பிக்கும் பொறுப்பு அடியேனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸங்கீத வாக்கேயக் காரர்கள் போல், ராக தாளங்களின் பெயர்களுடன் இசைக்கத்தக்க 'உருப்படி' களை நமது ஆசார்யர் புனைந்துள்ளாரா என்று கேட்பவர்கள் முதலில், தேசிகன் ஜீவிய காலத்தில் இம்மாதிரி 'உருப்படி'கள் (க்ருதிகள்) இருந்து வரவில்லையென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இக்காலத்தில் வழங்கி வருவது போன்ற, பல்லவி, அனுபல்லவி, சரணம் இம்மூன்றுப் பகுதிகள் கொண்ட கீர்த்தனங்கள், முதன் முதலில் பதினைந்தாம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையா என்று ஆந்த்ர வாக்கேயக்காரரால் தொடங்கப்பட்டது என்பது வரலாறு. ராகங்கள் என்ற அமைப்பு ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டிற்குள் தோன்றியிருந்தாலும் பதினைந்தாம் நூற்றாண்டுவரை அடிக்கடி உருமாறி 22 ச்ருதிகளிலும் புழங்கி கொண்டு வந்து அதற்குப் பின்னரே இப்போதுள்ள அமைப்பில், பன்னிரண்டு ஸ்வரங்களுக்குள் ஒடுங்கத் தொடங்கின. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன் வழக்கிலிருந்த உருப்படிகள் ப்ரபந்தங்கள் என்ற பொதுப் பெயரும் நடைக்கும் ரஸத்துக்கும் ஏற்ப உட்பிரிவுகளுடனும் - சுலோகங்கள், கண்ணிகள் போன்ற அமைப்பில் உருப்பெற்று ஒவ்வொரு பதம் அல்லது சொற்றொடரின் இறுதியில் மட்டும் ஆலாபனங்கள் பதாந்தே ஆலாப: செய்யப்பட்டு பாடப்பட்டு வந்தன. பின்னர், ஒவ்வொரு பகுதியின் ஈற்றிலும் திரும்பப்பாடக் கூடிய (பல்லவி

போன்ற) த்ருவபதங்களுடன் கூடிய ப்ரபந்தங்கள் தோன்றி வட இந்தியாவில் த்ருவபதம் (த்ருபத்) என்றும் தென்னிந்தியாவில் கீதம் அல்லது பாடல் என்றும் பெயர் பெற்றது.

இவை சொற்கள் நிறைந்தும் ஈற்றிலேயும், தீர்க்காக்ஷரங்கள் வருமிடத்தில் மட்டும் அளவுக்குத் தக்க ஆலாபனம் செய்யக் கூடியவையாக இருந்தன. இவற்றிற்கு உதாரணங்கள் - ஜயதேவஸ்வாமிகள் இயற்றிய கீதகோவிந்த அஷ்டபதிகளும், நாராணயதீர்த்தரின் தரங்களும், சொற்களைக் குறைத்து சொற்களின் இடையிடையே ராக விளக்கமான ரஸம் மிளிரும் ஆகாராதிகள் நிரப்பப் பெற்றுள்ள கீர்த்தனங்களை முதலில் கண்டவர் ஸ்ரீத்யாக ராஜஸ்வாமிகளே (1767-1847) எனலாம்.

ஆகவே வேதாந்தாசார்யரின் இசைக்கத்தக்க க்ரந்தங்களில் கர்நாடக ஸங்கீதத்திலும் வழங்கி வருபவை போன்ற க்ருதிகளைத் தேடி அவை கிடைக்காததால் அவருக்கு இசைத் தேர்ச்சி இருந்திருக்க முடியாதெனக் கூறமுடியாது. அக்காலத்தில் ராஜஸமஸ்தானங்களிலும் நாட்டியத்திலிருந்து வேறுபட்ட, தற்கால ஸங்கீதக் கச்சேரிகள் போன்று கச்சேரிகள் நடந்திருக்க முடியாது. அவை பெரும்பாலும் காவ்யப்பகுதிகளை இசையமைத்து வழங்குவது போலும். ஸபையில் புதிய ப்ரபந்தங்கள் இசையுடன் புனைந்து காட்டுவது போன்றும் தான் அமைந்திருக்கக்கூடும் என்பது பல வ்ருத் தாந்தங்களிலிருந்து தெரியவருகிறது. அக்காலத்திய ப்ரபந்தங்கள் அனேகமாகச் சந்தங்களிலே அமைக்கப்பட்டிருந்தன வென்பதும் ஸ்வராதிகளும் மற்ற தாளங்களும் ந்ருத்தங்களுக்கே பெரும்பாலும் கையாளப்பட்டன வென்பதும் இசைத்துறை ஆராய்ச்சியாளர்களின் முடிவு. இவற்றை மனதிற் கொண்டு பார்க்கும் போது நிகமாந்தவாசிரியரின் பல ஸ்துதிகளும் காவ்யப்பகுதிகளும் இசைக்கக் கூடியனவாக தோன்றியிருக்கக் கூடும் என்பது முடிவாகிறது.

உதாரணமாக ஸுதர்ஸனாஷ்டகம் அமைந்துள்ள சந்தம் 3+2+2+3+3 என்ற தாள அமைப்பில் அடங்குவதைக் காணலாம். இது பனிரெண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மிகக் பெரும் இந்திய இசை நூலான 'ஸங்கீத ரத்னாகரத்தில்' எடுத்துக் காட்டப்பட்ட 120 தாளங்களில் ஒன்றான 13 அக்ஷரங்கள் கொண்ட 'ஜனக' தாளத்திற்குச் சற்றே மாறுபட்டதாகக் காண்கிறோம். இக்காலத்திலும் ஸங்கீர்ண ஜாதி த்ரிபுட தாளம் ஒன்றைத் தவிர வேறு 13 அக்ஷரங்கள் கொண்டதாளம் புத்தகங்களிலும் இல்லையென்பதும். இத்தாளத்தில் 'பல்லவி' பாடினாலன்றி க்ருதிகள் ஏதும் இல்லை என்பதும் யாவரும் அறிந்ததே. ஜனகதாளத்தின் அமைப்பு லகு(1), லகு (1), லகு (1), குரு (2), குரு (2), லகு (1), குரு (2), குரு (2), ஆகப் பதிமூன்று அக்ஷரங்கள். இதன் சுருங்கிய வடிவு ஒரு மிஸ்ரசாபு (7) இரண்டு த்ரிஸ்ர நடை அனுத்ருதம் (3+3) சேர்ந்தது ப்ரதி படஸ்ரேணி பீஷண முதலானவ ஒவ்வோர் அடியும்,

ஸ ஸரி ஸநி ஸா ரிகம கரீ
ப்ரதி ப ட ஸ்ரே ணிபீ ஷ்ணை என்பது போல் அமைந்துள்ளது.

அபீதி ஸ்தவம் 29 ஸ்லோகங்கள் கொண்டது. 'ப்ருத்வி' என்ற வ்ருத்தத்தில் அமைந்தது. இத்துதியின் ஒவ்வொர் பத்யத்தையும் ஒவ்வோர் ராகத்திலிசைத்து, ரூபகதாளத்துடன் பாடும் போது வெகு நேர்த்தியாக உள்ளது. நான்காவது பாகத்தின் முதற் பகுதி (ரமா ஸகமதீமஹே) யின் ஈற்றில் மாது விராமம் (ஸாஹித்யத்தை நிறுத்தி ஆலாபம்) செய்து ராகத்தின் நேர்த்தியைக்காணும் போது இசைப்பதற்காகவே இத்துதி இயற்றப்பட்டுள்ளது என்று சொல்வதில் எள்ளளவும் ஸந்தேகப்பட இடமில்லை. ஒவ்வொரு பத்யத்திலும் இவ்வாறே கடைசிப் பாதத்தில் விராமஸ்தானம் அர்த்தமுள்ள பகுதியாக அமைந்திருப்பது ப்ரயாசையயினறியே பதச்சேதங்கள் தோஷமின்றி அமைவதைப் பார்க்கமுடிகிறது. கச்சேரி மேடைகளில், நாம கூஸுமா முல (நாமகுஸுமமுல) என்றும் பூதமாஸ்ரயாமி என்றும் மஹநீயர்களான, த்யாகப்ரம்மம், தீக்ஷிகர் இவர்கள் க்ருதிகள் உயிரில்லாமல் பாடப்படும்போது, இவற்றிற்கு இடம் கொடாமல் படைக்கப்பட்ட பத்யங்களைக் கொண்டதுதி உத்க்ருஷ்டமான தோழர் ஸாஹித்யமன்றோ?

ஆசார்ய வள்ளல் அனுக்ரஹித்த 'ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்' அல்லது 'மெய்விரத மான்மியம் என்ற நூல் ஜய தேவரியற்றிய கீத கோவிந்தம் போன்றதொரு சிறந்த இசைநாடக மாகும். தமிழில் இயற்றப்பட்டுள்ள இப்பிரபந்தத்திற்சேர்ந்த வ்ருத்தங்களைப் பார்க்கும் போது பிற்காலத்தில் மராத்தி மொழியிலும், தெலுங்கிலும், கத்யம், ஸீஸபத்யம், கந்த பத்யம், தரு, கீர்த்தனம் இவற்றுடன் மிளிரும் 'நெளகாசரிதம்', ப்ரஹ்லாத பக்தவிஜயம் (இரண்டு த்யாகராஜ ஸ்வாமிகளால் இயற்றப்பெற்றன) பல்லகீ ஸேவாப்ரபந்தம் (ஷாஹாஜி மன்னரால் இயற்றப்பெற்றது) இவற்றின் வரிசையில் 'மெய்விரத மான்மியம்' சேர்க்கத்தக்கது என்பதில் என்ன தடை?

ஸ்லோக வ்ருத்தங்களுக்கான நியதிகளில் சிறிது விடுபட்டு சிந்தை கவர் ப்ராக்ருதத்தில் அமைந்த அச்யுதஸ்தகம் அக்காலத்தில் ஸத்ரீகளும பாணர்களும் ப்ராக்ருதத்திலேயே பாடி வந்ததை ஸரித்தன்றோ கவனம செய்யப்பட்டது.

இன்னும் அனேக உதாரணங்கள் அளிக்க இயலும். அடுத்து ஸங்கீத ஸாஸ்த்ர தத்துவங்களையும் இசைப்பற்றிய இயல்பான கருத்துக்களையும் வேதாந்த வாசிரியர்க்ரந்தங்களில் காண்போம்.

பரத முனிவர் இயற்றிய நாட்ய ஸாஸ்த்ரம் என்னும் நூலே இந்திய ஸங்கீத முறையின் முதல் நூலாம். ஆகவே ஸங்கீத ஸாஸ்த்ரத்துக்கே பரத ஸாஸ்த்ரமென்ற பெயரும் உண்டு. பாவம், ராகம், தாளம் இவற்றுடன் கூடியதே ஸங்கீதம் என்பதை அச்சொற்களின் முதலெழுத்துக்கான ப-ர-த என்ற அக்ஷரங்களை ஒன்று சேரத்தே தமது பெயராக்கிக் கொண்டார் பரதமுனிவர் என்பர் ஆசார்யர்.

ஸங்கர்ப ஸூர்யோதய நாடகத்தில்

உபவேதம் உதாரதீ: ஸ்வநாம்நா
பரதஸ் ஸுசித பாவராகதாளம்
யதுதாஹ்ருதமஸ்ய விச்வகுப்த்யை
ததுபக்ஞைரபஹ்நிஷிக்ருதா வயம் ஸம: என்று.

கவி ஸார்வபௌமர், மாளவிகாக்னிமித்ரத்தில்

நாட்யம் பிந்நருசேரேகஸ்ய பஹுதா பிந்நம் ஸ்மாராதனம்

வேறுபட்ட பல்வகை ருசியுடையவர்களாயினும் நல்ல மனதுடையவர்களை நற்காரியங்களில் ஈடுபடச் செய்யும் ஒரே மார்க்கம் நாட்யமே (ஸங்கீதமே) என்பார். இக்கருத்தே ததக்ஞைரபஹ்நிஷ்க்ருதாவயம் என்று ஆசார்ய வள்ளல் சொல்லக் காரணம்.

'சந்தமிகு தமிழ் மறை' எனப் போற்றப்படும் திவ்யப்ரபந்தத்துக்குச் சந்தமே இசைக்கும்போது தாளமாகுமன்றோ? இப்படிச் சந்தங்களை எடுத்துக் கூறிப் பிரபந்தங்களை இசைப்படுத்திக் கொடுத்த ஸ்ரீ மந்நாதமுனிகளைத் தமிழ் மறைக்குத் தாளம் வழங்கித்தந்த வள்ளல் என்று அதிகார ஸங்க்ரஹத்தில் ஸார்வ பௌமர் குறிப்பிடுகிறார்.

ஸங்கீதம் 'மார்கீ', 'தேஸி' என்று இருவகைப்படும். மார்கீ என்பது வைதிக முறைப்படி இசைக்கப்படும் ஸங்கீதம். தேஸி என்பது. அப்படியல்லாமல் 'பாஷை வழக்குகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் ஸங்கீதம். இரண்டும் பகவானுக்கு அபிமதமானாலும் 'பண்' ப்ரதானமான ஸங்கீதம் மனதுக்கு நிம்மதி கொடுத்து இறைவனிடம் ஈடுபடுத்துமேயன்றி அதற்கு மேலான மார்கி ஸங்கீதத்தால் (ஸாமகானம் பாடி) பரம்பொருளை அடைவோம் என்ற கருத்தை ஸூக்ஷ்மமாகக் காண்பிக்கும் வகையில் பரமபத ஸோபானம் என்னும் நூலிலிசைப் பார், கவிதார்கிக சிம்மம்.

'பண்ணுலகிற் படியாத விசையாற்பாடும்
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே' என்று

ஏதத்ஸாம காயந்நாஸ்தே என்ற உபநிஷத்வசனமிங்கு நோக்கத் தக்கது.

கீதங்களிலே சொற்களின் (பகுதிகளின்) ஈற்றிலே ஆலாபம் செய்வது பதாந்தே ஆலாப: அக்காலத்திய வழக்கமாயிருந்தது. இதைக் கருத்திற் கொண்டே நம் ஆசார்யரும்,

ராகாவதீநாம் ரஹஸாம் யதேகம்
கீதாத்மநாம் தஸ்ய நிதாநமாஸீத்

என்று சொன்னார்.

கண்ணன் குழலிசையை விமர்ஶிக்கும் நிலையில் யோதவாப்யுதயம் - 8ம் ஸர்கம் - 47 வது ஶ்லோகம்) கீதாத்மநாம் நிதானம் ராகாவதீ என்ற சொற்கள் குறிப்பிடத் தக்கன.

மனம், வாக்கு, காயம் என்ற த்ரிகரணங்களையும் எளிதில் ஒன்று சேர்த்து வைக்கக் கூடியது ஸங்கீதமே என்ற கருத்து அடுத்து வந்த 48வது ஶ்லோகத்திற்கூறுவார்.

அயத்ந நிஷ்பந்ந மநஸ்ஸமாதீந் ஆப்ரம்ஹகாந் ஆதநுதேத்ரஜந்துந்

கீதம், வாத்யம், ந்ருத்யம் மூன்றும் சேர்ந்ததல்லவா ஸங்கீதம் கீதவாதித்ர ந்ருத்தாநாம் த்ரயம் ஸங்கீத முச்யதே இதைவிளக்கும் மநோஹரமானதொரு காட்சியை இதே ஸர்கத்தில் தீட்டியுள்ளார் கவி தார்க்கிக ஸிம்ஹம்.

ததுத்தமாங்கம் பரிகல்ப்ய ரங்கம் தரங்கநிஷ்பந்த ம்ருதங்கநாதம்
ப்ரஶஸ்யமாநஸ் த்ரிதஶைரகார்ஷீத் அவ்யாஹதாம் ஆரபடீம் அனந்த:

இருளிரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றியுடைய காளியன் தலையே ந்ருத்தரங்கமாயிற்று. காளியன் கோபத்துடன் நெளிவதாலுண்டான, சுழலிட்டெழும் சீரான ஒலி மிகுந்த ஓசையே ம்ருதங் நாதம் போல் தாளமாயிற்று. நர்த்தகனோ கண்ணன் அழகான, ஒளி வண்மை பெற்ற ரங்கம் வாத்யம், ந்ருக்தம் இவையுமாயிற்று. நாட்யகீதம் பாடவேண்டாமோ? இந்நடனத்தைக் கண்டு, மகிழ்ந்து போற்றும் வானவர் புகழ் மாலைகளோ நட்டுவ கீதமாயிற்று. இவ்வகையில் அமைந்த கண்ணனுடைய நடனத்தை ஆரபடீ நடனமென்பார் ஆசார்யர்.

காவ்யங்களின் நடை ரீதி எனப் பெயர் பெறும். வாமனபாணர் இயற்றிய காவ்யாலங்கார ஸூத்ரப்படி இவை வைதர்பீ, கௌடீயா, பாஞ்சாலீ என்று மூவகைப்படும். இதே போல் நடனம், நாடகம் இவற்றில் பாவங்களைக் காண்பிப்பதற்கு 'முத்திரை' கள் மட்டுமின்றி நடை விசேஷங்கள் உண்டு. இவற்றிற்கு 'வ்ருத்தி'கள் எனப்பெயர். ளெஶிகீ, பாரதீ, ஸாத்வதீ, ஆரபடீ என்று வ்ருத்திகள் நால்வகைப்படும். இவற்றில் கண்ணன் காளியன் தலை மீது ஆடிய நடனம் 'ஆரபடீ' என்னும் வ்ருத்தி வகுப்பசைச் சேர்ந்தது. ஆரபடீ என்ற வ்ருத்தியைக் கீழ்க்கண்ட ஶ்லோகப்பகுதிகளால் விளக்குவார் மேவாரை ஆண்ட கும்பகர்ணமஹாராஜா தமது (16 ஆயிரம் க்ரந்தங்களாலான) ஸங்கீதராஜ மென்னும் நூலில்

வ்ருத்தாரபடீ கௌடீ ரீதிருத்கலிகா பிதா 4-3-58
பவேத் ஆரபடீரீதிர்லாடீ ரௌத்ரீரஸ: ஸ்ம்ருத:
யஜுர்வேத ஸமுத்பூதா க்ஷத்ரியா வர்ணதோருணீ 4-3-98

விஷத்தைக் கக்கும் கொடிய நாகத்தின் உறுதிப்பட்ட தலைமீது அலைகளின் பேரோசையாம் தாளத்திற் கிணங்க காளியனை அடக்கும் ஆத்திரத்துடனும்

நடனம் செய்யும் கண்ணனது கண்கள் அருணநிறமாக வன்றோ இருக்கக்கூடும். இத்தகைய நடனத்தை ஆரபடீ என்று விவரித்தல், தமக்கு முன்னோடிகளான பரத நாட்டிய ஶாஸ்த்ரம். ஸங்கீர ரத்னாகரம் போன்ற ஸங்கீதநூல்களின் நுணுக்கங்களை அறிந்தவர்க்கன்றோ ஸாத்யமாகும்!

இதுவரை காளிய மர்த்தன வ்ருத்தாந் தத்தை உபஜாதி வ்ருத்தங்களில் விமர்ஶித்துக் கொண்ட கவிஸிம்ஹம் அதைக் கைவிட்டு அவனுடைய ஆரபடீ நடனத்தை ஒரு நூதனமான விருத்தத்தில் வர்ணிப்பார்

லோலாபதச் சரணலீலாஹதி க்ஷரித ஹாலாஹலே நிஜபணே
ந்ருத்யந்தமப்ரதிக க்ருத்யந்தமப்ரதிமமத்யந்த சாருவபுஷம்
தேவாதிவிஸ்ஸமய ஸேவாதரத்வரித ஹேவாக முகரை:
த்ருஷ்டாவதாநமத துஷ்டாவ மௌளிமஹிரிஷ்டாவரோத ஸஹத:
(யாதவாப்யுதயம் 4-124).

நடன் அந்தமில்லா அழகுடையோன் மன்மதனையும் பிறப்பித்த வனல்லவா? நட்டுவம் பாடுபவரோ கின்னரர் முதலிய இமையவர். கம்பமுற்று எழும் நதியின் ஓசை. உயர்வெழுந்து பின்படியும் அலையைத் தொடர்ந்து. ஒன்றிரண்டு சிறிய அலைகள் அதிக ஆரவாரமில்லாமல் தோன்றி படிந்து வரும் பெரிய அலையில் ஐக்கியமாகி விடுவதையும் கடற்கரையில் நாம் பார்க்கிறோம். அதேபோன்றவொரு சந்தம். பெரிய அலையின் உச்சமான ஒலியும், தொடர்ந்து சிறிய அலைகளின் மந்த்ர ஒலியும் ஒன்றையொன்று பின்னிடுவது போன்ற நாதம் ஸ்லோகத்திலும் லோலா - பதச்சரித ('ஸதா, ஸரிகஸரி' என்ற ஸ்வரக்கோர்வை போன்ற மிஸ்ரசாபு தாளத்திலடங்கின அமைப்பு கவனத்துக்குரியது. பொருளன்றிக்கே, சொற்களும் கண்ணனென்னும் மாயவன் புரிந்த அற்பத ந்ருத்தத்தைக் கண்முன்னே நிறுத்துவது போன்ற நடை, கவிச் சொல்லில் இசையின்பத்தையல்லவா காட்டுகிறது.

பாதுகா ஸஹஸ்ர காவ்யத்தில் சில ஸ்லோகங்களுக்கு ஒருமுறை வ்ருத்தம் மாறி அமைந்துள்ளது கோஷ்டிகளில் ஸேவிக்கும் போதும் பாராயணமாக அனுஸந்திக்கும் போதும் மநோஹரமாயிருப்தைக் காண்கிறோம். தமது கவித்துவத்தை ப்பாதுகைகளுக்கு ஸமர்ப்பணம் செய்யும் முறையில் தீட்டியுள்ள வ்ருத்தமொன்றில் 'பலவித ரத்னங்களால் இழைக்கப்பட்ட பாதுகைகளே, உங்களை பலவித வ்ருத்தங்களாலான வேங்கடேச்வர ஸரஸ்வதீ வேங்கடேஶருடைய சொல் வண்ணம்) உங்களை ஒரு நர்த்தகீ போல் மகிழ்விக்கட்டும்' என்று பொருள் கிடைக்கிறது. *(ப்ரஸ்தாவ பத்ததி, 17)*

வ்ருத்திபிர் பஹுவிதாபிராச்ரிதா வேங்கடேஶ்வர கவேஸ் ஸரஸ்வதீ
அத்ய ரங்கபதி ரத்னபாதுகே நர்த்தகீவ பவதீம் நஷேவதாம்

வ்ருத்தங்களாகிய வாக்கிற்கு அதிதேவதையான ஸரஸ்வதீ தேவி தன்னை ஒரு நர்த்தகியாக மாற்றிக் கொண்டு அதற்கிணங்க கைஸிகி, பாரதீ, ஆரபடீ என்ற க்ருத்திய வகைகளான வ்ருத்திகளால் உன்னை இன்று மகிழ்விக்கட்டும் என்பது உட்கருத்து.

பின்னுமொரு நாட்டியம் நந்த க்ருஹத்திலே காண்பிக்கப்படுகிறது. 'கோபாலவிம்ஸதி' யில் நான்காவது ஸ்லோகத்தில்

தத்நா நிமந்த முகரேண நிபத்ததாளம்
நாதஸ்ய நந்தபவநே நவநீத நாட்யம்

தாய் மோர் சிலுப்பும்போது சீராக எழுந்த மத்தின் ஓசையே வெண்ணைக்காகக் கண்ணன் செய்த நாட்டியத்திற்கு (இன்றியமையாத) தாளம் ஆயிற்று. தயிர் கடையும் போது ஏற்படும் மத்தின் ஓசை ஒரே சீராயிருப்பது தெரிந்ததே; அதனாலன்றோ அது தாளம் போலாகியது! ஸங்கீதத்துக்கு இப்படிச் சீரான தாளத்தின் அவசியத்தை உணர்த்திய ஸர்வதந்த்ர ஸ்வதந்தரர். தாளம் அமையாத கீத விசேஷத்தையும் 'ஸுபாஷித நீவியில் காட்டுவார்.

நாதமங்கணதாளாநாம் நாகரீநடநோசிதம்
க்ருஷிகுஷ்மேகுஷ்ம க்ராமேஷ்ம ந மூர்ச்சயதி கீதிவித்
(பரீக்ஷிதபத்ததி, 142 வது ஸ்லோகம்)

நாகரீகமான (ஸங்கீத ஸாஸ்த்ரத்தில் முன்னேற்ற மடைந்த இடங்களில், நடனத்திற்குப் பாட வேண்டிய அக்ஷரப்ரதானமான தாளங்களில் அமைந்த நாதத்துடன் கூடிய மூர்ச்சனைகளை (ராகங்களைக் காண்கிறோம் ஸ்வரக் கோர்வைகளை) ஸங்கீதம் நன்கு அறிந்தவன் உழவு செய்து பிழைக்கும் க்ராம ஜனங்களிடை பாடுவதில்லை என்று பொருள்.

உழவு செய்து வாழ்பவர்களிடையே ஷட்ஜக்ராமம், மத்யமம் க்ராமம் காந்தார க்ரமம் என்ற ஸ்ருதிப்ரதானமானதும் ராகங்கள் ஏற்பட ஆதிகாரணங்களான க்ராமங்களிலினின்று எழும் மூர்ச்சனைகளை ப்ரஸ்தாபிப்பதில்லை என்பது இசையறிந்தவர்கள் கொள்ளும் பொருள். க்ராம மூர்ச்சனைகள். ஸ்ருதி விசேஷத்தாலும் தாளாக்ஷரபந்தனத்தாலுமே அறியத் தக்கவைகள்.

'ஸுமனஸாம் ஸமாராதனம் என்று ஸர்வ மோஹனம் ஸங்கீதம்' என்பதையும் உதாஹரிப்பது போல் ஸ்வாமி தேசிகன் வேண்டுவார் கோபால விம்சதியில்

அதராஹிதசாருவம்சநாளா: மகுடாலம்பி மயூர பிஞ்ச்சமாலா:
ஹரிநீலசிலாவிபங்கநீலா: ப்ரதிபாஸ்ஸந்து மமாந்திம ப்ரயாணே

ஏன், ஸங்கீதமன்றோ, அந்திமகாலத்தில் வேறுவகையான சிந்தைகள் மனதிற் தோன்றுவதைத்தடுத்து நாதத்தால் மனதை ஈர்த்து இறைவனின் நினைவில் நிறுத்தக் கூடியது.

யாதவாப்யுதயத்தில் நமது ஆசார்யன் கூறிய பின்னும் சில கருத்துக்களைப் பரிசீலிப்போம்.

த்ரிஸ்த்தாந யுக்தஸ்வரபூஷிதம் தத்
த்ரிதா ஸ்திதம் க்ராமவிசேஷ யோகாத்
அரஞ்சயத் ஸப்த ஜகந்த்யத்நாத்
கீதம் ஹரே ராஹ்ருதே சிந்தரௌகம்
(எட்டாவது ஸர்கம் 54 வது ஸ்லோகம்)

மூன்று க்ராமங்களில் விளைந்து மூன்று ஸ்தானங்களில் வ்யாபித்து ஸ்வரங்களின் சேர்க்கையால் மிளிர்ந்த அழகான கீதத்தை இசைப்பபதன் மூலம் கின்னரர் குழாங்களுள்ளிட்ட ஏழு உலகங்களையும் சுலபமாகக் கண்ணன் ரஞ்ஜிப்பித்தான் என்பது பொருள். இசைமரபு அறிந்தவர்களின் விளக்கம் இதற்குத் தேவைதான்.

அக்காலத்தில் ஸ்தானங்கள் என்று குறிப்பிடப்பட்டவைதான் இக்காலத்தில் 'ஸ்தாயிகள் என்று சொல்லப்படுகின்றன; அவை மந்த்ரம், மத்யம் தாரம் என்றவாறு மூன்றாகும். 'தக்குஸ்தாயீ, மத்யஸ்தாயீ ஹெச்சு ஸ்தாயீ' என்பன முறையே கர்நாடக ஸங்கீத ஶாஸ்த்ரத்தில் இவற்றிற்குப் பெயர்.

யத்ரோபந்நோ த்வநிர் மந்த்ர: மத்யஸ்தாரோபி வா பவேத்
தச்சேதநாசேதநயோ: ஸ்தாநமித்யபிதீயதே
உர: கண்ட: சிரஸ்சேதி ப்ரஸித்தம் சேதநே த்ரயம்
என்பது 'ஸங்கீத ஸுதாந்தி' யின் வாக்கு

க்ராமங்கள் ஷட்ஜக்ராமம் மத்யமக்ராமம், காந்தாரக்ராமம் என்று மூன்று வகையாக ஸங்கீத நூல்களில் சொல்லப்பட்டன என்பதை மேலே குறிப்பிட்டோம். இவற்றில் காந்தாரக்ராமம் புவியில் மறைந்து விட்டது என்றும் கந்தர்வலோகத்தில் தான் வழங்கியுள்ளது என்பதையும், முதல் நூற்றாண்டைச் சேர்ந்த பரத முனிவர் பணித்தவாறு.

கீயதே தத்ர காந்தாரக்ராமோ பூமௌ ந கேநசித்
ஸ புந கேவலம் க்ராமோ கந்தர்வைர் திவி கீயதே

அப்படியிருக்க நம்வேதாந்த வாசிரியர் எவ்வாறு ப்ருந்தாவனத்தில் கண்ணன் மூன்று க்ராமங்களிலும் வேணு நாதம் செய்ததாகச் சொல்வார். எனின்

கண்ணன் ஏழுலகங்களையும் மோஹிச்கச் செய்ய வேண்டுமானால் காந்தார க்ராமத்தில் திளைத்த கந்தர்வர்களையுமல்லவா ஈர்க்க வேண்டும்? மேலும் காந்தார க்ராம வ்வரப்ரஸ்தாரங்களில் ஸங்கீதத்திற்கே மூல காரணமான பரம்பொருளின் பூர்ணாவதாரமான கண்ணனுக்குத் தெரியாததும் உண்டா?

குற்றமற்ற 'மார்க' ஸங்கீதத்தில் பகவத் சரிதத்தை நர்த்தனத்துடன் நிரூபித்து கொண்டு நடம் செய்யும் அணங்கு எங்காவது ஓரிடத்தில் சிறிய பிழை செய்து விட்டால் கூடியிருக்கும் ரஸிகர்கள் அப்பிழையைப் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதை இக்காவியத்தின் புகுமுகத்திலேயே சொல்கிறார் கவிதார்க்கிகா க்ரேஸரர்.

ப்ரவ்ருத்தாம் அநகே மார்கே ப்ரமாத்யந்தீமபி க்வசித்
ந வாசம் அவமந்யந்தே நர்த்தகீமிவ பாவுகா:

எனப்பதற்குக் குறைவற்ற மார்க்கம் என்று மட்டுமல்ல பொருள். 'மார்கஸங்கீதத்தில்' என்றும் பொருள் கொள்ளத்தக்கது. நர்த்தகி என்ற சொல்லுக்கு தமது ஸங்கீத ரத்னாகரத்தில் ஸார்ங்க தேவர் விளக்கம் கொடுக்கிறார்.


நர்த்தக: ஸுரபி: ப்ரோக்தோ மார்கந்ருத்தே க்ருதச்ரம:

ரஸமான காவ்யத்தினும் இசை, அதிலும் யாழிசை இனிது. கடவுளுக்கு உகப்பு மிக்கது மாம் என்பதை தயாசதகத்தின் இறுதியில் கூறித் தமது ஸ்துதியை வீணை விசேஷம் போல் என்றுக் கொள்ளவேண்டுமென்று வேங்கடத்தவனை ப்ரார்த்திக்கிறார் நிகமாந்தவாசிரியர்.

வைஹாரிகேண விதிநா ஸமயே க்ருஹீதம்
வீணாவிசேஷமிவ வேங்கடசைலநாத:

ஸங்கீத ஸாஸ்த்ரத்தில் ப்ரவேஸமுள்ளவர்களுக்கு நிகமாந்தவாசிரியர் க்ரந்தங்களிலிருந்தும் ரசனைகளிலிருந்தும் இன்றும் பல மேற்கொள்களால் அவரது இசையறிவை எடுத்துக் காட்ட வியலும். முடிவாக, அப்பய்ய தீக்ஷிதர் கூறியது போல்

இத்தம் விசிந்த்யாஸ் ஸர்வத்ர பாவாஸ்ஸந்தி பதே பதே
கவிதார்கிக ஸிம்ஹஸ்ய காவ்யேஷு லலிதேஷ்வபி



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

மதுரகவி காட்டிய தொல்வழி

(ஸ்ரீமதுபயவே வித்வான் உஷ:பாக்கம்

விஜயராகவாசாரியர் ஸ்வாமி)

ஸ்ரீஸ்வாமி தேசிகன் அனுக்ரஹித்துள்ள முப்பத்திரண்டு ரஹஸ்யக்ரந்தங்களில் ஒன்றான ஸ்ரீ குரு பரம்பராசாரம் என்னும் ரஹஸ்யத்தில் அருளிச்செய்துள்ள தமிழ்ப பாசுரங்களில் முதல் பாசுரத்தால் மதுரகவிகள் தவிர ஏனைய ஆழ்வார்கள் அனைவரையும் மங்களாசாசனம் செய்து இவர்களின் திவ்ய ஸூக்திகளினால் அறிவதற்கு துஷ்கர மாயுள்ள வேதங்களின் உண்மைப் பொருளை அறிகின்றோம் என அனுஸந்தித்தார். மூன்றாவதான 'என்னுயிர் தந்து' என்னும் பாசுரத்தில் ஆசார்யர்களை மங்களாசாசனம் செய்து, அவர்கள் மூலமாய் எம்பெருமான் திருவடிகளை அடைகின்றோமென ஸாதித்து அருளினார். இடையில் மதுரகவியாழ்வார் விஷயமாக

இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும் பேற்றில்
இகழாத பல்லுறவிலிராகம் மாற்றில்
துன்பற்றில் வினைவிலக்கில் தகவோக்கத்தில்
தத்துவத்தை யுணர்த்துதலில் தன்மையார்க்கில்
அன்பர்க்கே யவதரிக்குமாயன் நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே

என்று தனியாக ஒரு பாசுரம் அருளிச் செய்துள்ளார். இதற்குக் காரணம் என்ன என ஆராய்ந்தால் மதுரகவிகளின் ஆசார்ய நிஷ்டையே எனக் கூறலாம். यथादेवे तथागुरौ, முதலிய ப்ரமாணங்கள் படி நம்மாழ்வார் பகவானிடம் அனுபவித்த கல்யாண குணங்களை மதுரகவிகள் நம்மாழ்வார் அனுபவித்ததை எண்ணியே आचार्यः साक्षिः अप्रत्यूकरणधिया देववत्स्यादुपास्यः என்று न्यासविंशति யில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளினார். சற்றே விரிவாகப் பார்ப்போம்.

நம்மாழ்வார் காட்டியருளியே எம்பெருமானுக்கும் ஜீவனுக்கும் உள்ள பத்து ஸம்பந்தங்களே. மதுரகவிகள் தனக்கும் ஆழ்வார்க்கும் உள்ள ஸம்பந்தங்களாக, தன்னுடைய 'கண்ணினுண் சிறுத்தாம்பு' என்னும் ப்ரபந்தத்தில் அருளிச்

செய்திருக்கிறார். அவற்றைப் பத்து வார்த்தைகளில் ஸ்வாமி தேசிகன் இங்கு ஸங்க்ரஹிக்கிறார். அது எங்ஙனே என்னில்

1. **இன்பத்தில்** – ஆநந்த ரூபமான அனுபவத்தில் – 'பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம் என்றும் 'ஆராவமுதே என்றும் ஆழ்வார் பகவானை அனுபவிக்க மதுரகவிகள் 'தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் எந்நாவுக்கே என்று ஆழ்வாரை அனுபவிக்கிறார்.

2. **இறைஞ்சுதலில்** – திருவடிகளை ஆச்ரயிப்பதில் புகலொன்றிலாவடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என ஆழ்வார் திருவேங்கமுடையானை இறைஞ்ச மதுரகவிகள் ஆழ்வாரை 'மேவினேன் அவன் பொன்னடிமெய்ம்மையே' என இறைஞ்சுகிறார்.

3. **இசையும் பேற்றில்** – இஷ்டமான புருஷார்த்தமாக அறிகை – ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் என ஆழ்வார் எம்பெருமானை புருஷார்த்தமாக எண்ண, மதுரகவிகள் குருகூர் நகர் நம்பிக்காளுரியனாய் என் ஆழ்வாரை பரம புருஷார்த்தமாக அனுபவிக்கிறார்.

4. **இகழாத பல்லுறவில்** – அழிவில்லாத பலவிதமாக பந்தங்களில் மேலாத் தாய் தந்தையும் அவரே இனியாவாரே என ஆழ்வார் பகவானை பந்துவாக எண்ண, மதுரகவிகள் 'அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான் என ஆழ்வாரை தாயாகவும் தந்தையாகவும் அனுபவிக்கிறார்.

5. **இராகம் மாற்றில்** அர்த்தாதிகளில் அசையை மாற்றுதலால் முன்னமாயங்களெல்லாம் முழுவேறறிந்து என ஆழ்வார் எம்பெருமானை ஆசையறுக்கும் பாசமாக அருளிச்செய்ய மதுரகவிகள் நம்பினேன் மடவாரையும் முன்னெலாம் - செம்பொன் மாடத்திருக்குருகூர் நம்பிக்கன்பனாய் அடியேன் சதிர்த்தேனின்றே என ஆழ்வாரை ஆசையறுக்கும் பாசமாக அனுபவிக்கிறார்.

இவ்விதம் ஜீவனுக்கு எம்பெருமான் விஷயத்திலுள்ள ஐந்து அம்சங்களாக ஆழ்வார் அனுபவித்ததை, தனக்கு ஆழ்வார் விஷயத்தில் உள்ளனவாக மதுரகவிகள் அனுபவிக்கிறார்.

ஜீவன் விஷயத்தில் எம்பெருமானின் செயல்களாக ஆழ்வார் கூறும் ஐந்தையும், தன் விஷயத்தில் ஆழ்வாரின் செயல்களாக மதுரகவிகள் அனுஸந்திக்கிறார். அவையாவன.

6. **தன்பற்றில்** தானாகவே ஜீவனை அன்புடன் பற்றுவது 'என்னைத் தன்னாக்கி என்றால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசனை என ஆழ்வார் பகவானை

அனுபவிக்க. ''நின்று தண்புகழ் ஏத்த அருளினான் என்று மதுரகவிகள் ஆழ்வாரை அனுபவித்தார்.

7. **வினைவிலக்கில்** – ஆழ்வார் எம்பெருமானை வினைதீர்க்கும் மருந்தாக அனுஸந்திக்க மதுரகவிகளும் 'பண்டை வல்வினை பாற்றியருளினான் என்று ஆழ்வாரை அனுஸந்திக்கிறார்.

8. **தகவோக்கத்தில்** – கருணையின் வெள்ளத்தில் – அழியானருள் தருவானமைகின்றான் என ஆழ்வார் பகவானை கருணை வெள்ளமாக அனுபவிக்க மதுரகவிகளும் 'அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே' என ஆழ்வாரைக்ருபையின் பராகாஷ்டமாக அனுபவிக்கிறார்.

9. **தத்துவத்தை உணர்த்துதலில்** ஞானத்தை உண்டாக்குவதில் 'மயர்வற மதி நல மருளினான் என ஆழ்வார் பகவானிடம் ஞானோத்பத்தியைக்கூற மதுரகவிகளும் 'வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி என் நெஞ்சுள் இருத்தினான் என ஆழ்வாரை அனுஸந்தித்தார்.

10. **தன்மையாக்கில்** – தனக்குச் சாமானமாக்குகையில் – தண்மை பெறுத்தித் தன் தாளிணைகீழ் கொள்ளும் அப்பன் என ஆழ்வார் எம்பெருமானை மங்களாசாசனம் செய்ய. மதுரகவிகள் நம்மாழ்வாரை செயல் நன்றாகத் திருத்திப்பணி கொள்வான்' என மங்களாசாசனம் செய்கிறார்.

மேலும் மதுரகவிகளின் காலம் துவாபரயுகத்தின் கடைசீ வருஷங்கள். அப்போது

परित्राणाय साधूनां विनाशां च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगेयुगे ॥

என்று தன் அவதார ரஹஸ்யத்தை அருளிச் செய்த ஆச்ரிதர்க்கு எளியனான கோபாலன் இந்த லீலாவிபூதியில் எழுந்தருளியிருக்க அவன்தான் விட்டு, அநத் ஆயனும், ஸம்பந்தமும் நிலைத்து நிற்பதற்கு வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் தான் பணிந்து, பாகவதனான் பரதனின் தான் பணிந்து अनघ ஞன சத்ருக்ஞழ்வானைப் போல, ஆழ்வாரின் தாள் பணிந்ததால் துன்பங்கள் ஒழியப் பெற்றவர் மதுரகவிகள்.

सगुरू मेवाभिगच्छन् श्रोत्रियं ब्रह्मनिष्ठम् என்று ச்ருதியும்

तदिद्धि प्रणिवानेन परिप्रइनेन सेवया। என்று ஸ்ம்ருதியும்

காட்டிக் கொடுத்த மதுரகவிகள் அனுஷ்டித்துக் காட்டிய ஆசார்ய நிஷ்டையெனும் அனாதியான மார்கமே மோகாவழி புகுந்தோர்க்கு நல்வழி என்று ஸ்வாமி தேசிகன் நிகமித்தருளினார்.

सिद्धिर्भवति वा नेति संशयोऽच्युत सेविनाम् ।
न संशयोऽत्र तद्भक्त परिचर्या रतात्मनाम् ॥

சாண்டில்ய ஸ்ம்ருதியின் கூற்றுப்படி ஆசார்ய நிஷ்டையே மோக்ஷத்திற்கு உபாயமென என ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம் பற்றியதாலேயே

आचार्यादिहं देवतां समाधिकां न मन्याम हे

என்றும் ஸாதித்தருளினார். எனவே மதுரகவிகள் காட்டும் தொல்வழி நடந்து உய்வுறுவோமாக.

வர்த்தமான ஸ்ரீமதாண்டவன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தில் இந்த வ்யாஸம் சமர்பிக்கப்படுகிறது. ஆண்டவன் மேலும் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து லோகத்தை உஜ்ஜீவிக்கவேணும் என அரங்கநகரப்பனைப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ குருவாயூரப்பன்

ஸ்ரீமான் கிருஷ்ணன், கணேஷ் டிராவல்ஸ், சென்னை

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் குருவாயூரப்பன். பரசுராம க்ஷேத்ரமாம் கேரள தேசத்தில் திருச்சூர் என்னும் ஊருக்கு அருகில் உள்ளது குருவாயூர். விக்ரஹம் ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனுடைய விக்ரஹம். இருப்பினும் குருபகவானும் வாயுவும் சேர்ந்து திருப்ரதிஷ்டை செய்ததால் இவ்வூருக்கு ''குருவாயூர்'' என்றும் அர்ச்சாமூர்த்திக்கு ''குருவாயூரப்பன்'' என்றும் பெயர் ஏற்பட்டது.

பூர்வ யுகத்தில் ப்ரச்னி, சுதபஸ் என்னும் தம்பதிகள் புத்ரபாக்யத்திற்காக ஸ்ரீமந் நாராயணனை குறித்து தவம் செய்ய, பகவானும் ப்ரத்யக்ஷமாகி தங்களுக்கு என்ன வரம் வேண்டும் எனறு கேட்க அவர்கள் பகவானை ''தாங்களே எங்களுக்கு புத்ரனாக அவதரிக்க வேண்டும்'' என்று மூன்ற முறை ப்ரார்த்தித்தனர். உடனே ஸ்ரீமந் நாராயணன் அவர்களுக்கு தன்னுடைய (மஹாவிஷ்ணு) விக்ரஹத்தை அளித்து அதற்கு திருவாராதனம் செய்யச் சொல்லி அனுக்ரஹித்தார். மேலும் தாங்கள் மூன்று முறை ப்ரார்த்தித்ததால் நான் உங்களுக்காக மூன்று பிறவி எடுப்பேன் என்றும் அனுக்ரஹித்தார்.

அதன்படி முதற்பிறவியில் பகவான் அளித்த மஹாவிஷ்ணுவின் விக்ரஹத்தை ஆராதித்ததின் பயனாக 'ப்ரச்னி சுதபஸ் தம்பதிகளுக்கு 'ப்ரச்னி கர்பன்'' என்ற பெயரில் ஸ்வாமி அவதரித்தார். இரண்டாவது பிறவியில் அந்த தம்பதிகள் அதிதி, காச்யபராக வர, அவர்களுக்கு ''மாணிக்குறளனே தாலேலோ'' என்ற பெரியாழ்வார் வாக்குப்படி ''வாமனனாக'' அவதரித்தார். மூன்றுவது பிறவியில் அந்த தம்பதிகள் தேவகி, வசுதேவராக பிறவி எடுக்க அவர்களுக்கு ''ஸ்ரீ கிருஷ்ணன்'' பரமாத்மாவாக அவதரித்தார். இதில் அந்த மூன்று பிறவியிலும் அவர்கள் தொடர்ந்து அந்த மஹாவிஷ்ணு விக்ரஹத்தை ஆராதித்தனர்.

கிருஷ்ணவதார காரியம் முடிந்து ஸ்ரீ கிருஷ்ணன் தன்னடி சோதிக்கு எழுந்தருளும் போது அவருக்கு இந்த மஹாவிஷ்ணு விக்ரஹம் பிரளயத்தில் மறையாமல் கலியுகம் முடியும் வரை கலிகால க்ஷேமத்திற்காக பூலோகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என்று தோன்றியது. ஆகவே பகவான் கண்ணன் உத்தவரை அழைத்து இந்த விக்ரஹத்தை பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தார். பிரளயம் ஏற்பட்டு எங்கு பார்த்தாலும் ஜலம் சூழ்ந்தது. அப்போது உத்தவர் பிரளய ஜலத்தில் இந்த விக்ரஹம் மூழ்காமல் இருக்க தன் சிரஸ்ஸின் மேல் வைத்துக் கொண்டு செல்லும் போது எதிரே குருபகவானும், வாயுவும் தோன்றி உத்தவரிட மிருந்து அந்த விக்ரஹத்தை வாங்கிக் கொண்டு பிரதிஷ்டை செய்யும் இடத்தை தேடி

கடைசியில் பரசுராம க்ஷேத்தரத்திலேயே நாராயண விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்ய தேர்ந்தெடுத்தனர். தேவசில்பி விச்வகர்மா அழகான ஆலயத்தை நிர்மாணிக்க சுபதினத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள், யோகிகள், முனிவர்கள் நாராயணன் நாமத்தை ஜபிக்க திருப்ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. விக்ரஹம் ஸ்ரீ நாராயண ரூபமானது. ஆனால் குருவும், வாயுவும் சேர்ந்து பிரதிஷ்டை செய்ததால் அவ்வூருக்கு குருவாயூர் என்றும் கேரளத்தில் தெய்வத்தை 'அப்பன்' என்று செல்லமாக அழைக்கும் வழக்கத்தாலும் பகவானுக்கு குருவாயூரப்பன் என்று பெயர் ஏற்பட்டது.

காலை 3 மணிக்கு சரியாக (நடை திறக்கப்பட்டு) கோயில் திறக்கப்பட்டு விசேஷமான வாகைசார்த்து, நிர்மால்ய தரிசனம் நடை பெறுவதை தரிசனம் செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்தது. பகவானுக்கு தைலாபிஷேகத்தை நடத்தி சிகப்பு கௌபீனத்தை கட்டி வாழைப்பழத்தை உரித்து சக்ராயுத பாணியான கண்ணன் கையில் வைத்து செய்யும் அலங்காரத்தில் அங்கு கண்ணனே அந்த கோலத்தில் தரிசனம் செய்யும் அழகை காண கோடிகண்கள் இருந்தாலும் போதாது. தினமும் மும்முறை சீவேலி பிரதக்ஷிணம் என்று சொல்லப்படும் ஸேவை உத்ஸவ மூர்த்தியை நன்கு அலங்கரிக்கப்பட்ட யானையில் எழுந்தருளச்செய்து நாம அங்கீர்த்தனத்துடன் கோயிலை வலம் வரச்செய்வதும் விசேஷமானதும் இரவில் லக்ஷம் தீபங்களை ஏற்றி ஸஹஸ்ர சீர்ஷா புருஷ' என்று போற்றப்படும் எம்பொருமானுக்கு லக்ஷதீப ஸேவை நடை பெறுகிறது. துலாபாரம் எனப்படும் எடைக்கு எடை நீர், இளநீர், சர்க்கரை, வாழைப்பழம் என பலவகை பொருள்களை அவரவர் சக்தி ப்ரார்த்தனைக்கு ஏற்ப குருவாயூரப்பனுக்கு செலுத்துகிறார்கள்.

இதுபற்றி அழகான ஒரு சம்பவமும் இங்கு நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பல வருடங்களுக்கு முன்னால் ஒருவர் தன் வீட்டில் தென்னங்கன்றுகளை நட்டு முதலில் காய்க்கும் கன்றுகளை துலாபாரமாக குருவாயூரப்பனுக்கே அளிப்பதாக வேண்டிக் கொண்டார். முதலில் காய்கள் காய்த்தவுடன் அந்த காலத்தில் போக்குவரத்து வசதி இல்லாததால் மாட்டு வண்டியில் ஒரு மூட்டையாக அத்தேங்காய்களை கட்டி ஏற்றிக் கொண்டு குருவாயூருக்கு நடு நிசியில் புறப்பட்டு காலை 'நிர்மால்ய தரிசனத்திற்குள் குருவாயூர் அடைய சென்று கொண்டிருந்தார். அப்போது பாதி வழியில் திருடர்கள் சூழ்ந்து கொண்டு மூட்டையை பிரிக்க கூறினர். அவரோ உள்ளிருக்கும் வஸ்து தன்னுடையதல்ல என்றும் அது குருவாயூரப்பனுக்கு சேர வேண்டிய ப்ரார்த்தனை தேங்காய் என்றும் சொன்னார். உடனே திருடர்கள் ஏளனமாக குருவாயூரப்பன் தேங்காய் என்றால் என்ன? கொம்பா முளைத்திருக்கும் என்று சொல்லிக் கொண்டே கத்தியால் கோணிப்பையை வெட்டி தேங்காயை கொட்டினர். என்ன ஆச்சரியம்! ஒவ்வொரு தேங்காய்க்கும் இரண்டு கொம்பு முளைத்து கொண்டே விழுந்தது. இந்த சரித்திரம் சத்தியம் என்பதற்கு எடுத்துக் காட்டாக இன்றும் கொம்புமுளைத்த தேங்காயை குருவாயூர் கோயிலில் கட்டி தொங்க வைத்துள்ளார்கள். கலியில்கண்கண்ட அர்ச்சா ரூபியான குருவாயூரப்பன் தரிசனமும் அனுக்ரஹமும் அனைவருக்கும் கிடைக்க ப்ராத்திப்போம்.



சென்னை விஜயம் குங்குமம் வரதாச்சாரியார் பூர்ணகும்பம் ஸமர்ப்பித்தல்



டி. வி. எஸ். தொழிலதிபர் ஸ்ரீ T.S. சந்தானம் ஸேவித்தல்



நெய்வேலி விஜயம் வரவேற்பு




நெய்வேலி விஜயம்



ஸ்ரீ சுத்தயாகத்தில் காஞ்சி சங்கராச்சார்யாருடன்



திருமலையில் இந்திய ஜனாதிபதி சேவித்தல்




சென்னை ஆச்சரமம் விஜயம்



மைசூர் ஆண்டவன் இயல் கோஷ்டியில்



முன்னாள் இந்திய ஜனாதிபதி ஸ்ரீ R. வெங்கட்ராமன் ஸேவித்தல்



இந்திய ஜனாதிபதி Dr. சங்கர் தயாள் சர்மா ஸேவித்தல்



பாண்டிச்சேரி கவர்னர் Dr. ஹர்சொரூப்சிங் ஸேவித்தல்



பாண்டிச்சேரி முதல்வர் ஸ்ரீ வைத்திலிங்கம் ஸேவித்தல்



கோவா கவர்னர் ஸ்ரீ G. ராமானுஜம் ஸேவித்தல்



கோவா கவர்னர் ஆச்ரமம் விஜயம்



தமிழக கவர்னர் Dr. M. சென்னாரெட்டிக்கு பூர்ணகும்பம்



தமிழக கவர்னர் Dr. M. சென்னாரெட்டி ஸேவித்தல்

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

உபநயனம்

ஸ்ரீமதுபயவே. வித்வான் கனபாடி தேசிகாச்சாரியார் ஸ்வாமி

பிராம்மணனுக்கு இது ஒரு முக்ய ஸம்ஸ்கார கார்யம். குழந்தையின் ஏழாவது வயது முதல் உபநயன காலம் சொல்லப்படுகிறது. ஏதாவது காரணங்களால் ஒத்திப் போகும்படி நேர்ந்தாலும் 16 வயதிற்குள் உபநயனத்தை முடித்துக் கொள்வது தான் நல்லது என்பதையும் அதற்கு மேற்கொண்டு செய்யப்படுகிற உபநயனம் அவனுக்கு ப்ராமமண்யத்தை ஸம்பாதித்துக் கொடுத்தாலும், அவன் வேதாத்யயனத்திற்கோ பிறருடைய காரியங்களில் ருத்விக்காக இருப்பதற்கோ தகுதியற்றவனாக ஆகிவிடுகிறான் என்பதாக ஆபஸ்தம்பர் आ षोडशाद्ब्राह्मणस्यानात्यय: என்று கூறியுள்ளார். உலகில் இது விஷயமாக ஒரு ப்ரமம் உலவிவருகிறது. ஒற்றைப்படை வயதில் தான் உபநயனம் செய்ய வேண்டும் இரட்டைபடை வயதில் செய்யகூடாது என்பதாக - அது தவறு सप्तमे ब्रह्मवर्चस कामस्य, कष्ठम आयुष्कामस्य , एकादश इन्द्रियकामस्य, द्वादशेपशुकामस्य – என்பதாக ஆபஸ்தம்பர் கூறுகிறார். மேலும் இவ்விஷயத்தில் போதாயனர் त्रयोदशे मेधाकामं, चतुर्दशे पुष्टिकामं, पञ्चदशे भ्रातृकामं, षोडशे सर्वकाममिति । இதிலிருந்து நாம் கவனித்துக் கொள்ள வேண்டியது, ஏழாவது வயது முதல் பதினாறு வயது வரை ஒற்றைப்படை, இரட்டைப்படை என்கிற வித்யாஸமில்லாமல் எல்லா வயதிலும் உபநயனம் போதிக்கப் பட்டிருப்பதால் ப்ரமஜ்ஞானத்தை போக்கிக்கொள்ள வேண்டும்.

நமக்காக ஏற்பட்டிருக்கும் கர்ப்பாதாநாதி நாற்பது ஸம்ஸ்காரங்களில் சிலவற்றை 'ஸ்மார்த்த கர்ம'' என்றும் சிலவற்றை 'ச்ரௌத கர்ம'' என்றும் பிரித்துச் சொல்லுகிறோம். அதாவது கர்ப்பாதானம், பும்ஸுவனம் – ஸீமந்தம், ஜாத கர்ம, நாமகரணம், அந்த ப்ராசனம், சௌளம்– உபநயனம், ப்ராஜாபத்ய– ஸௌம்ய, ஆக்நேய–வைச்வதேவ வ்ரத, உபக்ரம்–உத்ஸர்ஜனம், கோதானம், ஸமாவர்த்தனம் விவாஹம் என்பதாக 19 - ஸப்தபாகயஜ்ஞும், ஸப்த ஹவிர்யஜ்ஞும், ஸப்த ஸோமஸம்ஸ்தை என்பதாக நாற்பது. இவைகளில் முதலில் சொல்லப்படுகிற 26 ஸமார்த்தங்கள் என்றும் பிற்பாடு சொல்லப்படுகிற 14 ச்ரௌதங்கள் என்றும் பிரிக்கப்படுகின்றன. இதில் ஸ்மார்த்தத்தில் அடங்கியுள்ள உபநயனத்தை ஆபஸ்தம்பர் ச்ரௌத கார்யமாகவும் போதித்துள்ளார் 'उपनयनं विद्यार्थस्य श्रुतिस्संस्कार:' என்பதாக – அதற்கு அடையாளமாக இன்றும் உபநயனஹோமம் முடிவடையும் காலத்தில் அந்தந்த கர்மாக்களின் முடிவு ஸமயம் செய்யப்படும் ஸ்மார்த்த - ப்ராயச்சித்த ஹோமங்களுக்கு முன்பாக யஜுர்ப்ரேஷ (प्रेष) ப்ராயச்சித்தம்கரிஷ்யே

என்று ஸங்கல்ப்பித்துக் கொண்டு ओं भुवः स्वाहा என்கிற श्रौत प्रायश्चित्त ஹோமத்தைச் செய்து பிறகு தான் स्मार्त प्रायश्चित्त ஹோமத்தைச் செய்து வருகிறோம். இப்பேர்ப்பட்ட உபயவிதப் பெருமையைக் கொண்டது உபநயனம்.

பொதுவாக உபநயன ப்ரயோகத்தில் அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் – அப்யுதயம் என்று சொல்லப்படுகிற நாந்தீச்ராத்தம். யஞ்ஞோபவீத தாரணம், குமாரபோஜனம் திக்வபநம் – (வபநம்) ஆஜ்ய பாகாந்த ஹோமம், ஆசார்யன் நியமிக்கும் ஸமிதாதானம், அச்மாரோஹணம், அஹதவஸ்த்ர பரிதானம், மௌஞ்ஜீ தாரணம், அஜித தாரணம், அச்மாவிலிருந்து அவஸ்தாபனம் – அஞ்ஜல்யவக்ஷாரணம் - ஹஸ்தக்ரஹணம், தேவதா பரீதானம், உபநயனம், தக்ஷிணகர்ணஜபம் – ப்ரச்னோத்தரம், ப்ரதான ஹோமம் – ஜயாதி உத்தரதந்த்ரம், ப்ரம்மோபதேசம் – ஓஷ்ட உபஸ்பர்சனம், கர்ண ஸ்பர்சனம் – தண்டதாரணம். 'ஸ்ம்ருதம்சமே'' இத்யாதிவாசனம் – குருவிற்கு வரதானம், உத்தாபனம் - ஆதித்ய உபஸ்தானம், ப்ரம்மோத்வாஸனம். அக்னி உபஸ்தானம், ஸமிதாதானம் – நியமனம், பிக்ஷாசரணம், மாத்யாஹ்நிகம் – ஸாயம் ஸந்த்யா – ஸமிதாதானம் மேற்கொண்டு ப்ரதினமும் ஸந்த்யோபாஸனம் ஸமிதாதானம், நான்காவது தினத்தில் ஸமிதாதானம் ஆனதும் அன்யத் வஸ்த்ர பரிதானம் (परिधानं). पलाश कर्म (தண்டுநீர்) என்பதாக ஆபஸ்தம்ப ஸூத்ரத்தின் கார்யக்ரமங்கள்.

இவைகளில் அனேகமாக முக்யமான சில கார்யங்கள் எல்லா ஸூத்ரங்களுக்கும் பொதுவானவை. உதாரணமாக அங்குரார்பணம், ராக்ஷாபந்தனம், அப்யுதயம் – வபநம், உபவீத தாரணம் – நூதநவஸ்திர தாரணம் – மௌஞ்ஜீ – அஜிததாரணம், அஞ்ஜல்ய வக்ஷாரணம், ப்ரதானஹோமம், ப்ரம்மோபதேசம், ஸமிதாதானம், ஆதித்யோபஸ்தானம், பிக்ஷாசரணம் இவைகள் சிற்சில கார்யக்ரமங்களில் முன்பின் வரலாம் – உதாரணமாக உபவீத தாரணத்திற்குப்பின் குமாரபோஜனம் - ஸாம வேதிகளுக்கு குமாரபோஜனத்திற்குப் பின்புதான் உபவீததாரணம் – அவ்விதம் ஸாமவேதிகளுக்கு உபவீததாரணம் - அஜிந தாரணம் இவ்விரண்டும் அமந்த்ரகங்கள். மௌஞ்ஜீதாரணமும் பிற்பாடு - யஜூர் வேதிகளுக்கோ எல்லாமே ஸமந்த்ரகங்கள்.

प्रत्याशिषञ्चैनं वाचयति என்பதாக ஸூத்ரம். ஆத்மாவிற்கு ஆசீ: பரமாக எந்த மந்த்ரம் வருகிறதோ அந்த மந்த்ரத்தை ஆசாரியன் உச்சரித்து அந்த கார்யத்தைச் செய்வித்துப் பிறகு அந்த மந்திரத்தை குமாரனுக்கும் சொல்லிவைக்க வேணும் என்பதாக ஸூத்ரம். अध्वनामध्वपते श्रेष्ठस्याध्वन : पारमशीय என்கிறவிடத்தில் ஷி ஸூத்ரம் உபதேசிக்கப்பட்டிருக்கிற போதிலும் இந்த ஸூத்ரத்தில் உள்ள 'च' சப்தமானது இந்த ப்ரகரணத்திற்கு முன்பும் பின்பும் உபதேசிக்கப்பட்டிருக்கும் ஆத்ம காமியான மந்த்ரங்களுக்கும் பொருந்தும் என்பதாக வ்யாக்யானம். இதையனுஸரித்துத்தான் உபவீத தாரணத்தின் போது மந்த்ரோச்சாரணத்துடன் குமாரனுக்கு உபவீததாரணம் செய்வித்தவுடன் ஆசார்யன் அந்த மந்திரத்தை அவனுக்கும் சொல்லி வைக்கிறான்.

அந்த மந்திரத்தில் ''ஆயுஷ்யம்'' बलं तेज : இத்யாதி பத ப்ரயோகங்கள் உள்ளன. அவைகள் ஆத்மகா (ग)மிகள். இவ்விதம் மௌனஜீதாரணம் அஜிநதாரணம், முதலியவைகளிலும் காணலாம்.

பிராம்மணனுக்கு உபநயன காலத்தை ஆபஸ்தம்பர் वसन्ते ब्राह्मण मुपनयति என்பதாகச் சொல்லுவதால் வஸந்த ருதுவான சித்திரை வைகாசி மாதங்கள் மட்டும் கூறப்பட்டிருப்பினும் ஜ்யோதிச்சாஸ்த்ரங்களில் உத்தராயணம் பூராவும் உபநயன காலமாக சொல்லப்பட்டிருப்பதும் அவ்விதம் ஆபஸ்தம்பரும் க்ருஹ்ய ஸூத்ர ஆரம்பத்தில் अथ कर्माण्याचारा यानि गृह्यन्ते । उदगयन पूर्वेक्षाह : पुण्याहेषु कार्याणि । ஆசாரப்ராப்தமான गृह्य கர்மாக்களுக்கு உத்தராயணம், சுக்லபக்ஷம், பகல், புண்யாஹம் என்று சொல்லப்படுகிற பகலில் ஐந்து பாகம். அதாவது பகல் காலத்தை ஒன்பது பாகம் பண்ணி, அதில் ஒற்றைப்படையாக வரும் ஐந்து பாகங்கள் புண்யாஹம் என்றும் இரட்டைப்படையாக வரும் 4 பாகங்கள் அச்லீலங்கள் என்றும் வேதம் கூறுகிறது. पञ्चपुण्यानि नक्षत्राणि । चत्वार्य श्लीलानि என்பதாக. ஆக வஸந்தகாலம் அத்யந்தம் ப்ரசஸ்தம் என்பதாகக் கொண்டு ஜ்யோதிச் சாஸ்த்திர ரீதியாக உத்தராயணம் பூராவும் உபநயன காலம். அதே ஜ்யோதிச்சாஸ்திரத்தில் ஜ்யேஷ்டனுக்கு ஜ்யேஷ்டமாதம் நிஷேதிக்கப்பட்டிருப்பதையும் கருத்தில் கொள்ளவேணும். ஜ்யேஷ்டமாதம் என்பது வைகாசி அமாவாஸ்யைக்குப் பிறகு வருகிற மாதம் ஜ்யேஷ்ட மாதம் எனப்படும். ஜ்யேஷ்டனின் உபநயனத்தில் அந்த மாதத்தைத் தவிர்க்க வேண்டும். அதையனுஸரித்து அடுத்ததான ஆஷாடமும் தக்ஷிணாயநமான படியால் ஜ்யேஷ்டன் உபநயனத்தில் வைகாசி அமாவாஸ்யைக்குள் முஹூர்த்தம் அமையும்படி பார்த்துக் கொள்ளுதல் நலம். அவ்விதம் அந்தந்த சாகாதீசர்கள் பலக்குறைவு உள்ளவர்களாகவிருக்கும் போதும் உபநயனத்தைத் தவிர்ப்பது நலம்.

ऋग्यजुस्सामाथर्वेशा तीवशुक्र कुजेन्दुजा : ।
शाखाधीशे शक्ति युक्ते तछाखाध्ययनं शुभम् ।।

ரிக்வேதத்திற்கு குருவும், யஜுர்வேதத்திற்கு சுக்ரனும், ஸாமவேதத்திற்கு செவ்வாயும் அதர்வ வேதத்திற்கு புதனும் அதிபர்கள். அவரவர்களின் சாகாதீசர்கள் மௌட்யத்தை (அஸ்தமனத்தை) அடையுங்கால் உபநயனத்தையும் உபாகர்மாவையும் தவிர்த்தல் நலம்.

பொதுவாக எல்லா ஸூத்ரகாரர்களுக்கும் அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம் நாந்தீச்ராத்தம் என்கிற அப்யுதம் யஞ்ஜோபவீத தாரணம், குமாரபோஜனம், வபநம், நூதனவஸ்திரதாரணம், உபநயனம். (இதன் பொருள் பிற்பாடு விரிவாக்கப்படும்). ப்ரதானஹோமம், ப்ரம்மோபதேசம், மௌஞ்ஜீ – அஜிந, தண்டதாரணம், ஆதித்யோப ஸ்தானம், ஸமிதாதானம் இவைகள் உபநயத்தில் பொதுவானவை. கார்யக்ரமங்களும் அது அதற்கான மந்த்ரங்களும் மாறுபடலாம். உபநயனத்தில்

ஒவ்வொரு ப்ரகரணத்திலும் பல மந்திரங்கள் உபதேசிக்கப்படுகின்றன. சிற்சில காரியங்களில் ஓரிரு மந்திரங்களும் உபதேசிக்கப்படுகின்றன. எல்லா சாகிகளுடைய ப்ரயோகத்தில் உள்ள எல்லா மந்த்ரங்களின் பொருளையும் விரிவாகச் சொல்வது யுக்தமே – ஆகிலும் முக்யமாக ஆபஸ்தம்ப ஸூத்ரப்படி உபதேசிக்கப்பட்டுள்ள மந்திரங்களின் சிற்சில மந்திரங்களுக்கு அந்தந்த ப்ரகரணங்களை எடுத்துக்கூறி யதாபுத்தி யதாசக்தி விளக்கம் கூற முற்படுகிறேன். ஆங்காங்கு ஸூத்ராந்தரங்களின் ப்ரயோகமும் மந்திரங்களும் நிரூபிக்கப்படலாம்.

ஆபஸ்தம்பம் தவிற இதர எல்லா ஸூத்ரகாரர்களுக்கும் ஆரம்பத்தில் நாந்தீச்ராத்தம் – ஆபஸ்தம்ப ஸூத்ரகாரர்களுக்கு மட்டும் அந்தந்த கர்மாவின் முடிவில் தான் நாந்தீ – शुचीन्मन्त्र वतस्सर्वकृत्येषु भोजयेत् என்று விதிவாக்யம். सर्व कृत्येषु निर्वर्तितेषु सत्सु என்று வ்யாக்யானம். எல்லா காரியங்களும் முடிவு பெற்றவுடன் நாந்தியை அனுஷ்டிக்க வேண்டும். உதாரணமாக விவாஹத்திற்கான நாந்தியை ஐந்தாவது தினத்தின் விடியற்காலையில் சேஷஹோமம் முடிந்ததும் ஸந்த்யோபஸ்தானம் – ஔபாஸனம் இவைகளைச் செய்து விவாஹத்திற்கான நாந்தியைச் செய்ய வேண்டும். இவ்விதம் பொது விதியிருக்க ஆபஸ்தம்பிகளுக்கும், அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் – ஸீமந்தம் இவைகளின் அனுஷ்டானத்தில் மட்டும் ஆதியில் நாந்தீ – மற்ற ஸமஸ்த கர்மாக்களிலும் அந்தத்தில் தான் நாந்தீ – அந்தந்த காலங்களில் (அதாவது குழந்தை பிறந்தவுடனே (அல்லது புண்யாஹ தினத்தன்றோ) ஜாதகர்ம – 11 வது தினத்தில் நாமகரணம், 6வது மாதத்தில் அன்ன ப்ராசனம், 3 வது வயதில் சௌளம் - ஏழு எட்டு வயதில் உபநயனம் என்று இப்படியாக) தனித்தினயாக செய்யப்படும்போது கீழே குறிப்பிட்ட நான்கு கர்மாக்களில் மட்டும் பிரதான ஸங்கல்ப்பத்திற்கு முன்பாகவே நாந்தியின் அனுஷ்டானம்.

एकदाक्रियमाणाना मनेकशुभ कर्मणाम्
वृध्दचङ्कुर न्नतिसरान् सकृदेव समाचरेत्

ஒரே ஸமயத்தில் செய்யப்படுகிற அனேக சுபகர்மாக்களின் விஷயத்தில் நாந்தீ ச்ராத்தம், அங்குரார்ப்பணம், பிரதிஸரம் என்கிற ரக்ஷாபந்தனம் இவைகளை எல்லாவற்றிற்கும் பொதுவாக ஒன்றினை மட்டும் அனுஷ்டித்தல் போதும். அதை எப்பொழுது அனுஷ்டிப்பது என்றால் முதல் முதலில் எந்த கர்மாவை அனுஷ்டிக்கிறானோ அந்த கர்மாவிற்கான நாந்தியின் அனுஷ்டானம் எப்பொழுது உபதேசிக்கப்பட்டுள்ளதோ அந்த ஸமயத்தில், நடந்ததிற்கும், நடக்கப் போவதிற்குமான நாந்தியை அனுஷ்டிக்க வேண்டும். உதாரணத்திற்கு உபநயன தினத்தன்றே ஜாதகர்ம முதலியவைகளையும் அனுஷ்டிக்கும் பக்ஷத்தில் ஜாதகர்ம முடிந்ததும் நடந்ததான ஜாதகர்மாவிற்கும் நடக்கப்போகிறதான நாமகரணம் முதலானவைகளுக்குமாக ஒரே நாந்தியை அனுஷ்டிக்க வேணும்.

அவ்விதம் ஒருவனுக்கு ஜாதகர்ம-நாமகரணம் இவைகள் காலத்தில் செய்யப்பட்டிருந்து அன்னப்ராசன சௌளங்கள் காலத்தில் செய்யப்படாமல் உபநயன காலத்தில் செய்தால் அன்னப்ராசன சௌள-உபநயனங்களுக்கான ரக்ஷாபந்தனத்தை முதலில் செய்து அவ்விதம் அப்யுதயத்தையும் செய்து பிறகு தான் அன்னப்ராசனத்திற்கான ஸங்கல்பம்- இப்படியாக பூர்வாங்களைச் செய்து इमं कुमार मुतनेष्ये என்பதாக ஸங்கல்பம் செய்யவேண்டும். இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு ஸூக்ஷ்மத்தையும் விளக்க வேண்டியுள்ளது.

ஸம்ஸ்க்ருதத்தில் 'வினைச்சொல்' என்கிற க்ரியாபதம் மூன்றுவகை கொண்டது. பரஸ்மைபதிகம், ஆத்மநே பதிகம், உபயபதிகம் என்று. உதாரணமாக भवति (பவதி) என்கிற க்ரியாபதம் பரஸ்மை பதத்தில் மட்டும் ப்ரயோகிக்கப்படும்- அவ்விதம் लभते (லபதே) என்பது ஆத்மநே பதத்தில் மட்டும் தான் ப்ரயோகிக்கப்படும். அவ்விதம் करोति, कुरुते என்று உபய பதத்திலும் ப்ரயோகிக்கப்படுகிறது.

இப்படியாகயிருப்பினும் ஸங்கல்ப்ப காலத்தில் எந்தவிடத்தில் பரஸ்மை பதத்தை ப்ரயோகிக்க வேணும். எந்த விடத்தில் ஆத்மநே பதத்தை ப்ரயோகிக்க வேணும் என்பதையும் வ்யவஸ்தை செய்துள்ளனர். உதாரணமாக इमं कुमारं जात कर्मणा संस्करिष्ये என்றும் சொல்லலாம். संस्करिष्यामि என்றும் சொல்லலாம். இந்த தாது உபயபதிகமானதால் இருவகையிலும் சொல்லலாம் என்பதில் தட்டில்லை யாகிலும், செய்யப்படுகிற கர்மாவின் பலமானது ஸங்கல்ப்பம் செய்கிறவனை அடையுங்கால் ஆத்மநேபத ப்ரயோகமும் கர்மாவின் பலமானது மற்றவனை அடையுங்கால் பரஸ்மைபத்திலும் ப்ரயோகிக்க வேணும். ஜாத கர்மாவின் பலம் அந்தக் குழந்தையை அடைவதால் संस्करिष्यामि என்று சொல்வது தான் உசிதம். அவ்விதம் விவாஹ ஸங்கல்ப்பத்தில் பலன் இவனை அடைவதால் उद्वाह कर्म करिष्ये என்று ஆத்மநே பதத்தில் ப்ரயோகம். இது பொது விதி. இதை நிஷேதிக்கும் விசேஷ விதி ஒன்று உண்டு. விதி வாக்யத்தில் க்ரியாபதமானது பரஸ்மை பதத்தில் ப்ரயோகிக்கபட்டிருந்தால் அந்த கர்மாவின் பலன் தன்னை அடைவதாக விருப்பினும் பரஸ்மை பதத்தில் தான் ஸங்கல்பித்துக்கொள்ள வேணும்.

உதாரணமாக ஸமிதாதானத்தின் பலன் ஸமிதாதானம் செய்கிற ப்ரம்மசாரியைத்தான் சேருகிறது. அப்படியாகில் ப்ராதஸ்ஸமித ஆதாஸ்யே என்று சொல்ல வேண்டியிருக்க பரித்வேதி பர்ம்ருஜ்ய, தஸ்மிந்துத்தரைர் மந்த்ரைஸ் ஸமித ஆதத்யாத் என்று விதி வாக்யத்தில் आदध्यात् என்று பரஸ்மை பதத்தில் சோதனை (चोदना) இருப்பதால் ஆதாஸ்யாமி (आदास्यामि) என்றே சொல்வது தான் உசிதம். அவ்விதம் உபநயனத்தின் பலன் வடுவைச் சேர்வதானாலும் गर्भाष्टमेषु ब्राह्मणमुतनयीत (கர்ப்பாஷ்டமேஷு ப்ராம்மணமுபநயீத) என்கிற चोदना வாக்யத்தில் उपनयीत என்கிற ஆத்மநே பத ப்ரயோகத்தினால் इमं कुमार मुपनेष्ये என்று ஆத்மனே பதப்ரயோகம் செய்வதுதான் உசிதம்.

இப்படி ஸங்கல்ப்பம் ஆனதும் **யஜ்ஞோபவீத தாரணம்** – உபவீதத்தை தரிக்கச் செய்ததும் அந்த மந்த்ரத்தை அந்த வடுவிற்கு சொல்லிவைக்க வேண்டும்– यज्ञोपवीतं परमं என்கிற வாக்யத்தில் प्रतिमुञ्च என்கிற பதமும், ஆயுஷ்யம், பலமஸ்து என்கிற பதங்களும் தன்னை அடைவதாக விருப்பத்தால் तन्मन्त्रं वाचयित्वा என்கிற ரீதியில் சொல்லிவைத்து ஆசமனம் செய்விக்க வேணும்.

அடுத்தது குமாரபோஜனம்.

உபவீத தாரணம் ஆகிவிட்ட படியால் பரிஷேசன, ஆபோசன, ப்ராணாஹுதி, உத்தராபோசன ஸஹிதமான போஜனம் – இங்கு ஒரு சிறிய விசாரம். இந்த குமார போஜனமானது மாத்யாஹ்நிக அநந்தரபாவியான நித்யபோஜனத்தை பாதிக்குமா? ஏனென்றால் ஒரு வேளையில் ஒரு தடவை தானே சாப்பிடலாம் என்று.

இந்த குமாரபோஜனம் நித்ய போஜனத்தை பாதிக்காது. இந்த போஜனமானது உபநயனத்திற்கு அங்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. कुमारं भोजयित्वा ऽनुवाकस्य प्रतमेन यजुषा என்று (குமாரம் போஜயித்வா ऽநு வாகஸ்ய ப்ரதமேந யஜுஷா) ஸூத்ரம் இருப்தால் இது வைதம் – அவ்விதம் முடிவில் ஸம்சாஸநாநந்தரம் பிக்ஷாசரணம் சொல்லப்பட்டிருப்பதால் அந்த பிக்ஷையை மாத்யாஹ்நிகாநந்தரம் அவச்யம் உபயோகித்ததாக வேண்டிய ஆவச்யகதை ஏற்படுவதாலும் குமாரபோஜனத்தை அங்கமாகக் கொண்டு நித்ய போஜனத்தையும் ஏற்றுக் கொள்வது தான் உசிதம்.

திக்வபநம்.

இதில் முதல் மந்திரத்தினால் (उष्ण) வெந்நீரை சீத ஜலத்தில் சேர்க்க வேணும். அடுத்ததான आपउन्दन्तु என்பதனால் க்ஷௌரம் செய்யப்படும் இடத்தில் க்ஷி ஜலத்தை நினைக்கவேண்டும். உபநயனப்ரகரணங்களில் எங்கு பார்த்தாலும் அரோதத்ருடகாத்ரத்துடன் நீண்ட ஆயுளைவேண்டுவதைத்தான் எங்கும் காணலாம். இந்த மந்த்ரத்தையே பார்ப்போம் – (இந்த) ஜலங்கள் மாணவகனின் தலையை நினைக்கட்டும் – ஜீவிப்பதற்காக. எத்தனை காலம் ஜீவிப்பதற்காக என்கிற கேள்வியை வேத புருஷனே கேட்டுக் கொண்டு दीर्घायुत्वाय நீண்ட நாள் வாழ்வதற்காக மற்றும் वर्चसे, பளிச்–பளிச் என்று ஜ்வலிப்பதற்காகவும் ज्योक्च सूर्यन्दृशे நீண்ட காலம் ஸூர்யனைக் காண்பதற்காகவும் ஹே ஜலங்களே இந்த குமாரனின் தலையை நனனயுங்களேன். அடுத்ததாக திக்வபநம். அதற்கு நான்கு மந்திரங்கள். ஆபூர்வமான மந்திரர்கள். எல்லாமந்திரங்களிலும் இந்த குமாரனின் நீண்ட ஆயுள் வேண்டப்படுகின்றது. கடைசி பர்யந்தம் உயர்ந்த பார்வை இவனுக்கு இருக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கப்படுகிறது. நல்ல மனது இவனுக்கு இருக்க வேண்டும் என்றும் பிரார்த்திக்கப்படுகிறது. அதாவது எந்த நேரத்திலும் புத்தி

பேதலிக்காமல் (பயித்யம் பிடிக்காமல்) நல்வாழக்கையுடன் வாழவேண்டும் என்றெல்லாம் வேண்டப்படுகிறது.

இங்கு ஒரு சிறிய விஷயத்தை ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. நான்கு திக்குகளிலும் ஒவ்வொரு மந்திரத்தைக் கொண்டு தர்ப்பங்களையும் கேசத்தையும் சேதநம் செய்து தெற்கு திக்கில் நிற்கும் பத்னீ அல்லது பிரம்மசாரி இவர்கள் கையில் இருக்கும் யவதான்யத்துடன் கூடிய வண்டிமாட்டுச் சாணத்தில் அந்த நறுக்கப்பட்ட கேசங்களைப் போடச் சொல்லியுள்ளது. ஒவ்வொரு திக்கு தோறும் சேதனம் ஆனவுடன் (रौद्र राक्षस नैर् ऋत छेदन भेदन इत्यादि வசனப்படி) अप उपस्पर्शनं प्राप्तमाக சாகாந்தரங்களில் ஒவ்வொரு சேதனத்திற்கும் अप उपस्पर्शनं प्राप्तमान போதிலும், ஆபஸ்தம்பத்தில் मन्त्राणामन्ते सकृत्कार्यं 'மந்த்ராணாமந்தே ஸக்ருத் கார்யம்' என்கிறபடி நான்காவது சேதனம் ஆன பிறகு தான் अप उपस्पर्शनं அவச்யம் செய்ய வேண்டும்.

இதற்கு அடுத்ததாக यत्क्षुरेण (யத்க்ஷுரேண) என்று ஒரு அபூர்வமான மந்த்ரம். இங்கு वपन्त मुत्तरया ऽनु मन्त्रयते (வபந்த முத்தரயா ऽநுமந்த்ரயதே) என்று ஸூத்ரம். அதன் பிரகாரம் இந்த மந்திரத்தை யஜமானன் (பிதா) சொல்லக்கூடாது என்றாகிறது. वपन्तं (வபந்தம்) वप्तारं என்பதனால் க்ஷௌரம் செய்கிறவனை அனுமந்த்ரணம் செய்ய வேண்டும் என்பதாகிறது. அனுமந்த்ரணம் செய்ய வேண்டும் என்றால் दक्षिणतो माता ब्रह्मचारीवा (தக்ஷிணதோ மாதா ப்ரம்மசாரீவா) என்கிற ஸூத்ரப்படி அந்த இருவரில் ஒருவர் அனுமந்த்ரணம் செய்ய வேண்டும் என்பதாகிறது. பிரம்மசாரி விஷயத்தில் அது யுக்தம் ஸ்த்ரீவிடியத்தில் அயுக்தமாயிற்றே என்று சங்கை ஏற்படலாமாயினும் ஸூத்காரர் माता (மாதா) என்று வ்யக்தமாக முதலில் சொல்லியிருப்பதால் ப்ரகிருத மந்திரத்தை அந்த மாதா உச்சரிக்க ஆக்ஷேபணை இராது.

ச்ரௌத ப்ரகரணத்தில் இஷ்டியில் மேகலையை தரித்துக்கொள்ள आशासना (ஆசாஸாநா) என்கிற மந்த்ரம் சொல்லப்படுகிறது. அந்த மந்த்ர லிங்கத்திலும் आशासना என்று வ்யக்தமாக ஸ்த்ரீ லிங்கமே சொல்லப் பட்டிருப்பதாலும் யாஜ்ஞிகர்கள் அந்த ப்ரகரணத்தில் யஜமான பத்தினியையே அந்த மந்திரத்தை உச்சரிக்கும்படி சொல்லிவைக்கின்றனர். இப்படியாக சேதிக்க (छेदि) ப்பட்ட அந்த கேசங்களை அத்தி மரத்தின் அடியிலோ தர்ப்ப ஸ்தம்பத்திலோ उप्त्वाय केशान् (உப்த்வாய கேசாந்) என்கிற மந்திரத்தினால் வைக்க வேண்டும் என்றும் ஸூத்ரம்.

இப்படியாக திக்வபநம் ஆனதும் சுத்தமான தர்ம சாஸ்திரீதியாக வபநத்திற்கு ஏற்பட்டதான க்ஷௌரத்தையும் செய்வித்து அவகாஹ (अवगाह) ஸ்னான புநஸ்னானாதிகளை யதோக்தம் செய்து கௌபீநம் தரித்து தௌத (धौत) வஸ்திரம் தரித்து (கௌபீந தாரணமும் அவச்யம்). புண்ட்ரதாரணம் செய்து மங்களவாத்ய கோஷத்துடன் க்ருஹம் வரவேண்டும்.

இவ்விஷயத்திலும் ஒரு ஸம்சயம். கீழே குறிக்கப்பட்டுள்ளபடி அந்தந்த காலத்தில் அந்தந்த கர்மாவைச் செய்து வரும்போது உபநயன கர்மாவில் குமார போஜனத்திற்குப் பிறகு தான் திக்வபநம் – க்ஷௌரம். ஸ்னானம் முதலியன. அப்படியல்லாமல் உபநயன ஸமயத்திலேயே சௌளத்தையும் (சௌளகர்மாவையும்) செய்யவேண்டி வந்தால் உபநயனத்தை முக்யமாகக் கொண்டு அதற்கு முன்னால் செய்ய வேண்டிய ஜாதகர்மா முதலானவைகளை அதற்கு பூர்வ காலத்தில் செய்து வருகிறோம். அப்படியாகில் இங்கு உபநயனம் முக்யமானபடியால் உபநயனம் ப்ரதானம். மற்றவைகள் அப்ரதானங்கள் என்பதாகக் கொண்டு சௌள ஸம்காரத்தில் இதே திக்வபனாதிகள் வந்தாலும் மந்த்ரவத்தாக மட்டும் செய்து பிற்பாடு உபநயன காலத்தில் வரும் திக்வபனத்திற்கு பிறகு சுத்த க்ஷௌரத்தை ஸ்மார்த்தர்கள் அனுஷ்டித்து வருகின்றனர். இவ்விஷயத்தில் வைதிக ஸார்வபௌமர் தன்னுடைய கண்ட பூஷணத்தில் (काण्डभूषण) இதை விசாரித்து

चौळोप नीतेतु सह क्रियेते यदा क्षौरयुक प्रसक्तौ ।
चौळे प्रधानं क्षुरकर्मकार्यमुपायनाङ्गन्तु विभावनीयम् ।

(சௌளோபநீதேது ஸஹக்ரியேதே யாதாயதா க்ஷௌரயுக ப்ரஸக்தௌ
சௌளே ப்ரதாநம் க்ஷுரகர்ம கார்யம் உபாயநாங்கம் து விபாவ நீயம்)

என்கிற வசனப்படி க்ஷௌரத்தை சௌளகர்மாவின் முடிவில் க்ஷௌரத்தைச் செய்து கீழே குறிப்பிட்டுள்ளபடி ஸ்னான கௌபீநதாரண வஸ்திர தாரண புண்டர தாரணங்களைச் செய்து கொண்டு மங்கள வாத்யத்துடன் கிருஹத்தை அடைந்து உபநயன ஸங்கல்ப்பம் முதல் யதாக்ரமம் செய்ய வேணும்.

கேசங்கள் சேதிக்கப்பட்டிருப்பினும் திக்வபனத்தை தர்ப்பங்களைக் கொண்டு மட்டும் செய்து மறுபடி ஸ்னானாதிகளை யதாக்ரமம் அனுஷ்டிக்க வேணும். ஆயினும் மறுபடி ஸ்னானம் செய்ய இடம் கொடுக்காவிடில் திக்வபந மந்த்ரோச்சாரணத்தையாவது விடாமல் அவச்யம் செய்ய வேணும். ஆசார்யன் அக்நிப்ரதிஷ்டாதி ஆஜ்ய பாகாந்தம் செய்து आयुर्दाव (ஆயுர்த்தாதேவ) என்கிற மந்த்ரத்தைச் சொல்லி ஒரு பலாச ஸமித்ததை குமாரன் கையில் கொடுத்து आदेहि (ஆதேஹி) என்று அவனை நியமித்து அக்னியில் சேர்க்கச் சொல்ல வேண்டும். இந்த மந்திரத்தினாலும் நீண்ட ஆயுள்தான் பிரார்த்திக்கப்படுகிறது. ஹே அக்னியே ஆயுஸ்ஸை அளிப்பவன் நீ – நாங்கள் சொல்லும் ஸ்தோத்திரத்தை ஏற்றுக் கொள்பவன்–ஜ்வலிப்பவன்–ஆஜ்யபாகாதி கார்யங்கள் ரூபமாக நெய்யை பிருஷ்ட பகாத்தில் கொள்பவன் – எங்களால் (என்னால்) அளிக்கப்படும் உயர்ந்த அழகான நெய்யைப் பருகுகிறவன் – இப்பேர்ப்பட்ட பெருமை வாய்ந்த நீ இப்போது செய்யப்படும் ஸமிதாதானத்தினால் இந்தக் குமாரனை காலத்தில் கிழத்தன்மையை

அடைவிக்க வேண்டும். அதாவது நீண்ட காலம் வாழும்படி செய்ய வேண்டும். எது மாதிரி என்றால் ஒரு தகப்பன் தன் பிள்ளையின் க்ஷேமத்தையே விரும்புவானா அவ்விதம் அக்னி பகவான் இந்தக் குழந்தையின் க்ஷேமத்திற்கு மங்களசாஸனம் செய்து வயோதிக கால பர்யந்தம் வாழவைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

அடுத்தது அச்மாரோஹனம்

ஸூத்ரம்

उत्तरेणाग्निं दक्षिणेन पदा ऽश्मान मास्थापयति आतिष्टेति ।

(உத்தரேணாக்னிம் தக்ஷிணேந பதாச்மாநமாஸ்தாபயதி ஆதிஷ்டேதி)

ஸூத்ரார்த்தமாவது அக்னிக்கு வடக்காக வலது காலினால் பாராங்கல்லை ஏற்றுவிக்க வேண்டும். மந்த்ரார்த்தமாவது ஏ குமாரனே! இந்தக் கல்லை ஏறுவாயாக. இந்தக் கல்லை ஏறு. இந்தக்கல் எவ்வளவு உறுதி படைத்ததோ அவ்வித உறுதி உனக்கும் இருக்கட்டும். எதிரிகளை எதிர்ப்பாயாக. அவ்விதம் அவர்களை திரஸ்கரிப்பாயாக.

இங்கும் ஒரு விசாரம். अश्मानमास्थापयति (அச்மாநமாஸ்தாபயதி) आस्थापनं नाम ஏற்றுவித்தல் என்ற பொருள். இங்கு ஏற்றுவித்தல் என்பதற்கு ईषत्स्पशनं (ஈஷத்ஸ்பர்ஸனம்) என்பதாகப் பொருள். அவ்விதமாக வைகானஸர் சொல்லியுள்ளார். ஆதலால் வலது காலினால் தொடச்செய்வது மட்டும் செய்தால் போதும் என்று வைதிக ஸார்வபௌமரின் அபிப்பிராயம். ஆபஸ்தம்பத்தைப் பொருத்தவரை இது யுக்தமாகப் படவில்லை. காரணத்தைப் பார்ப்போம். அச்மாஸ்தாபனம் ஆனதும் தீக்ஷா வஸ்திரத்தை 2 மந்திரங்களால் அபிமந்த்ரணம் செய்து அடுத்த 3 மந்திரங்கள் அபிமந்தரணம் செய்து அடுத்த 3 மந்திரங்களால் வஸ்திரத்தை உடுத்திவிட்டு அடுத்த ஒரு மந்திரத்தினால் உடுத்திக் கொண்ட குமாரனை அபிமந்த்ரணம் செய்து அடுத்த இரு மந்திரங்களால் மௌஞ்ஜீ தாரணம் அடுத்த ஒரு மந்திரத்தினால் அஜித தாரணம் अजिनमुत्तरमुत्तरया। (அஜிநமுத்தர முத்தரயா).

उत्तरेणाग्निं दर्भान्संस्तीर्य तेष्वेन मुत्तरया ऽवस्थाप्य

(உத்தரேநாக்நிம் தர்ப்பாந் ஸம்ஸ்தீர்ய தேஷ்வேந முத்தரயா ऽவஸ்தாப்ய)

இங்குள்ள अवस्थाप्य (அவஸ்தாப்ய) என்கிற பதப்ரயோகத்தைப் பார்க்குங்கால் अश्मानमास्थापयति, आतिष्ठति (அச்மாந மாஸ்தாபயதி ஆதிஷ்டேதி) என்று ஏற்றி வைக்கப்பட்ட குமாரனை उत्तरयाऽवस्थाप्य (உத்தரயாऽவஸ்தாப்ய) என்கிற போதுதான் கீழே இறக்கிவிடவேண்டும் என்றும் அது பர்யந்தம் சொல்லப்பட்ட காரியங்களை அற்தக் கல்லின் மேலேயே தான் செய்ய வேண்டும் என்றும் தெளிவாகிறது.

வஸ்த்ர தாரணம்

रेवतीस्त्वा (ரேவதீஸ்த்வா) என்று ஆரம்பித்து இரண்டு மந்திரங்களால் அந்த தீக்ஷாவஸ்திரத்தை அபிமந்த்ரணம் செய்ய வேண்டும்.

வேதத்தில் பல இடங்களில் सर्वं देवत्यं वै वासः (ஸர்வ தேவத்யம் வை வாஸ:) என்றுள்ளது. வஸ்திரமானது எல்லா தேவதைகளின் ஸம்பந்தம் பெற்றது என்கிறது. அது எப்படி என்பதை இந்த இரண்டு மந்திரங்களும் நிரூபிக்கின்றன.

வஸ்திரம் தயாரிக்கப்படுகிற போது பலகாரியங்கள் சேர்கின்றன. வஸ்திரம் நூலினால் தயாரிக்கப்படுகிறது. அந்த நூல் பஞ்சு (பருத்தி) என்பதிலிருந்து உருவாகிறது. அந்த பஞ்சு கொட்டையுடன் இணைந்துள்ளது. ஆக கொட்டையுடன் சேர்ந்த பருத்தியைக் கொட்டை நீக்கி பிரித்தால் தான் நூல் தயாரிக்க முடியும். தயாரிக்கப்பட்ட நூலை நீட்டத்திலும் அகலத்திலுமாக பாவவேண்டும். கரையை அடிக்கவேண்டும். இப்படியாக வஸ்திரம் உலகத்தில் தயாரிக்கப்படுகிறது. மந்திர பலத்தினால் பிரகிருதத்தில் உள்ள தீக்ஷாவஸ்திரத்தை பசுக்களின் அபிமானி தேவதைகளான ரேவதீ என்பவைகள் பஞ்சைக் கொட்டையிலிருந்து பிரித்தல் காரியத்தை செய்தனர். அவ்விதம் கிருத்திகா தேவதைகள் பஞ்சிலிருந்து நூலை நூற்றனர். धियः (தியः) என்று சொல்லப்படுகிற புத்தி அபிமான தேவதைகள் நூலை தரியில் இணைத்தனர். ग्राः (க்நா:) என்று சொல்லப்படுகிற சந்தஸ் தேவதைகள். छन्दा ँसि वेम्नाः (சந்தாம்ஸிவைக்நா:) என்று மற்றொரு இடத்தில் விரிவாக்கத்தை வேதம் செய்கிறது. இடையிடையில் நூலை கர்த்தனம் செய்ய வேண்டியதைச் செய்கின்றனர். இப்படியாக மற்றும் ஆயிரக்கணக்கான தேவதைகள் கரையைக் கட்டி துணி தயாரித்து அளித்துள்ளனர். ஸவித்ரு தேவனுடைய பரிதாந காலத்தில் இந்த தேவதைகளின் பெருமை வெளிப்பட்டது.

அடுத்த மூன்று மந்த்ரங்களாலும் வடுவிற்கு இந்த வஸ்திரத்தை உடுத்தவேண்டும். கீழே சொன்னதையே மேலும் விரிவாகச் சொல்லி இந்த தேவதைகளின் அனுக்ரஹத்தினால் தீர்க்காயுஷ்மானாகவிருக்க இவ்வளவு மஹிமை பெற்ற வஸ்த்ரத்தை உடுத்திக் கொள். ஒரு ஸமயம் பிருஹஸ்பதியே ஸோமராஜனின் பொருட்டு சுற்றிவிட்டார். இவ்வஸ்த்ரத்தை உடுத்திக் கொள்வதனால் கிழத்தன்மை கால பர்யந்தம் நூறுவருட காலம் நிடூழி வாழவேண்டும். மேலும் பந்து ஜனங்களுடை ய ஆபத்ரக்ஷகனாகவும்

ஆகிறாய். இதன் விரிவாக்கமும் அடுத்த மந்த்ரமே–

மௌஞ்ஜிதாரணம்

அடுத்த இரு மந்த்ரங்களாலும் மௌஞ்ஜியை சுற்றிவிட வேண்டும். அந்த மந்திரங்களை வடுவிற்கும் சொல்லி வைக்கவேண்டும்.

मौञ्ज्यजिनावस्थापन प्रोक्षणो त्थापनानितु ।
समन्त्र मेतान्याचार्य : पूर्वं कृत्वाऽथवाचयेत्

(மௌஞ்ஜ்யஜீநா வஸ்தாபந ப்ரோக்ஷ ணோத்தாபநாநிது
ஸமந்த்ரமேதா ந்யாசார்ய: பூர்வம் க்ருத்வா உதவாசயேத்)

மௌஞ்ஜீ - அஜிதம் - கல்லிலிருந்து இறக்குதல், அடுத்த ப்ரோக்ஷணம்- பிரம்மோபதேசம் ஆன பிறகு உதாயுஷா என்கிற மந்த்ரத்தினால் குமாரனை எழுப்பி விடல் இவ்வைந்துகளையும் மந்த்ரத்துடன் ஆசார்யன் (பிதா) செய்து பிறகு அவ்வப்போது குமாரனையும் சொல்லும் படி செய்ய வேண்டும்.

அடுத்தபடி அஜிநதாரணம்

அடுத்தது கல்லிலிருந்து இறக்குதல்.

அக்னிக்கு வடபுறத்தில் வடக்கு நுனியாக தர்ப்பங்களைச் சேர்த்து आगन्त्रा (அகந்த்ரா) என்கிற மந்திரத்தினால் மேற்கு முகமாக இறக்க வேண்டும். குமாரனின் அஞ்ஜலிக்கு மேல் இவன் (ஆசார்யன்) அஞ்ஜலிக்கு மேல் இவன் (ஆசார்யன்) அஞ்ஜலியில் மற்றொருவனுக்கு விடப்படும் ஜலம் குமாரனின் அஞ்ஜலியில் விழுந்ததும் ''समुद्रादूर्मि : '' (ஸமுத்ராதூர்மி:) என்கிற மந்த்ரத்தினால் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

அடுத்தது ஹஸ்த க்ரஹணம்

10 மந்த்ரங்கள். மந்த்ரங்கள் முடிந்ததும் ஹஸ்தக்ரஹணம்.

அடுத்தது தேவதாபரீதானம்.

உலகில் ஒருவன் தன்னுடைய குமாரன் தன் பராமரிப்பில் இருக்கிற போதிலும் மேற்கொண்டும் சில முக்யஸ்தர்களின் பராமரிப்பு குமாரனுக்குக்

கிடைத்தால் மிகவும் மேன்மையாக விளங்குவான் என்று நினைத்து உயர்ந்த பதவியிலுள்ளவர்களின் தயவையும் நாடிச்சென்று தன் வேண்டுகோளை எப்படி நிறைவேற்றிக் கொள்கிறானோ அப்படி பிரக்ருத உபநயநத்தில் ஆசார்ய ஸ்தானத்தில் இருக்கும் தகப்பன் தன்னுடைய குமாரனின் நல்வாழ்விற்காக 11 தேவதைகளின் அனுக்ரஹத்தைப் பிரார்த்திக்கிறான்.

ஹே குழந்தையே ஹே குமாரனே அக்னி தேவதையின் பொருட்டு உன்னை (உன்னுடைய) ரக்ஷணத்திற்காக ஸமர்ப்பிக்கிறேன்.

1 அக்னி, 2. ஸொமன், 3. ஸவிதா,

4. ஸரஸ்வதி, 5. ம்ருத்யு, 6. யமன்,

7. கதன், 8. அந்தகன், 9. அப்புகள் (ஜலங்கள்)

10. ஓஷதிகள், 11. அக்னியுடன் சேர்ந்த பூமி,

இப்படியாக இந்த தேவதைகளிடம் பொருப்பை ஒப்படைத்து விட்டு இவன் (ஆசார்யன்) பொருப்பிலிருந்து நழுவி விடுகிறானோ என்றால் அப்படியில்லை.

ஸவித்ரு தேவதையின் அனுமதியைப் பெற்று உன்னை என் ஸமீபத்தில் அழைத்துக் கொள்கிறேன். அதாவது காயத்ரீ முதலான எல்லா மந்த்ரங்களையும் அவ்வப்போது உபதேசம் செய்து உன்னுடைய உயர்விற்குப் பாடுபடுவேன். அதற்காகவே என் ஸமீபத்திலேயே உன்னை அழைத்துக் கொள்கிறேன். **உபநயன கர்மாவில் இந்த இடம்தான் உபநயனம் என்கிற சொல்விற்கு இடமாக விளங்குகிறது.**

देवस्यत्वा सवितेः प्रसवे उपनये .....शर्मन्

(தேவஸ்ய த்வாஸவிது: ப்ரஸவே உபநயே சர்மன்)

என்பதாகச் சொல்லி வாரி அணைத்துக் கொண்டு அக்னியின் வடபுரத்திலிருந்து அக்னியின் மேற்குப்புரத்தில் தன் இருப்பிடத்தை அடைவிக்க வேண்டும். அதாவது தன் ஸ்தானத்திற்கு தென்னண்டையில் உட்கார்த்தி வைக்கவேண்டும்.

அடுத்த மந்த்ரமான

सुप्रजा : प्रजया भूयास्सुवीरो वीरै स्सुवर्चा वर्चसा सुपोष : पोषै :

(ஸுப்ரஜா: ப்ரஜயா பூயாஸ்ஸுவீரோ வீரை: ஸுவர்ச்சா வர்ச்சஸா ஸுபோடி: போஷை:)

இந்த மந்திரத்தை குமாரனின் வலது காதில் ஜபம் செய்ய வேண்டும். இந்த மந்திரத்தின் பொருளாவது. ஹே குமார: காலக்ரமத்தில் விவாஹம் ஆனதும் பிள்ளைகளினால் நல்லபிள்ளையைப் பெற்றவனாகவும், பேரன்களினால் நல்ல பேரன்களை அடைந்தவனுகவும், 'வர்ச்சஸ்' என்று சொல்லப்படுகிற சரீரதேஜாஸ்ஸினால் வர்ச்சஸ்வியாகவும், தனதான்ய ஸம்ருத்திகளால் ஸம்ருத்தனாகவும் ஆகுவாயாக. அடுத்த மந்த்ரமாவது

ब्रह्मचर्य मागा मुप मानयस्व देवेन सवित्रा प्रसूतः ।

ப்ரம்சர்ய மாகா முபமாநயஸவ தேவேந ஸவித்ரா ப்ரஸுத:)

இந்த மந்திரத்தை குமாரன் சொல்ல வேண்டும். உபநயன மந்திரத்தில் சொல்லப்ப்பட்ட பிரகாரம் நானும் பிரம்மசர்யத்தை அடையப்போகிறேன். அதற்கு அனுகுணமாகத் தாங்களும் ஸவித்ருதேவனின் அனுமதி பெற்று என்னை அடைவிக்க வேண்டும்– இந்த மந்திரத்திதனால் ஒரு தனிப் பெருமை வெளிப்படுத்தப்படுகிறது. ஸம்ஸ்க்ருதமானது லோகபாஷையிலும் வயவஹரிக்கப்படுகிறது. வேதத்திலும் வயவஹரிக்கப்படுகிறது. லௌகித பாஷையை அபேக்ஷித்து வேதமானது ஸ்வரவிசேஷங்களால் அர்த்தமாறுபாட்டையும் கொடுக்கிறது.

முதலில் இந்த மந்திரத்திற்கு பாஷ்யரீதியாக பதப்ரயோகத்தைப் பார்ப்போம். ब्रह्मचर्य - आ - अगाम्, उप - मा - नयस्व ப்ரஹ்மசர்யம் – ஆ – அகாம் – உப – மா – நயஸ்வ) என்று. இங்கு மா என்கிற பதம் வருகிறது. இதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. (1)मा (மா) என்னை (2)मा (மா) வேண்டாம் என்பதாக லௌகிக பாஷையில் உச்சாரணத்தில் மாற்றம் வரப்ரஸக்தியில்லை. ஆனால் வேதத்திலோ விலக்ஷணமாக ''என்னை'' என்று பொருள் ஏற்படும் போது. அநுதாத்மாகவும், ''வேண்டாம்'' என்ற பொருள் வரும்போது உதாத்தமாகவும் சொல்லப்பட வேண்டும் என்று நியதி. பிரகிருதத்தில் மா (மா) என்கிற பதம் உதாத்தமாக ச்ரவிக்கிறது. அப்படியாகில் வேண்டாம் என்கிற நிஷேதார்த்தம் அல்லவா கிடைக்கும். அது ப்ரகிருதத்தில் விரோதார்ததமாகிறதே. நமக்கு ''என்னை'' என்று வேண்டும்.

இப்படி ஆராயுங்கால் இங்கு मा (மா) என்கிறது இரண்டு பதங்கள் मा-आ (மா–ஆ) என்று அப்போது மா என்கிறது அநுதாத்தபதம். அநுதாத்தமாகில் அஸ்மதர்த்தம் கிடைக்கும் आ என்கிறது உதாத்தம் – उदात्त मु दात्तवति (உதாத்த முதாத்வதி) என்கிற ப்ராதிசாக்ய ஸூத்ரத்தினால் मा (மா) என்கிற அநுதாத்தமானது आ என்கிற உதாத்தத்துடன் ஸந்தி பெறும் போது இரண்டும் சேர்ந்து ஒரே உதாத்தமாகிறது. நிஷேதார்த்தம் தவிர்க்கப்பட்டு அஸ்மதர்த்தமும் ஸித்திக்கிறது. இதை ஸ்தாபிக்கும் விதமாக பிரயோக காலத்தில उपमा आनयस्व (உபமா–ஆநயஸ்வ) என்று பதச்சேதம் செய்வித்தல் மேற்படி விஷயம் ஸுபஷ்டிகமாகும் – அதற்காக ''उप - मानयस्व '' (உப மாநயஸ்வ) என்று பதச்சேதம் செய்வதும் தப்பு அல்ல.

அடுத்தத்தாக ஆசார்யன் கேள்வி கேட்பதும், குமாரன் பதில் சொல்லுவதுமாக ஐந்து மந்திரங்கள்.

अध्वना मध्वपते श्रेष्टस्याध्वन : पारमशीय

(அத்வநா மத்வபதே ச்ரேஷ்டஸ்யாத்வந: பாரமசீய)

இந்த மந்திரத்தைச் சொல்லும்படி குமாரனுக்கு சொல்லி வைக்கவேண்டும். பிரதான ஹோமம் 11 மந்த்ரங்கள் கொண்டவை இந்த 11 ஆஹுதிகளையும் குமாரன் தான் செய்யவேண்டும். அப்படிச் செய்யும் படிக்கு அவன் வந்து கையைப்பிடித்து தகப்பன் செய்விக்க வேண்டும். அவ்விதம் 2வது 4வது அஹுதிகளின் மந்த்ரத்தை ஆசார்யன் சொல்லி வடுவை ஹோமம் செய்யும்படி செய்ய வேண்டும். இவைகளில் ஓரிரு மந்த்ரங்களின் அர்த்தத்தை விவரிப்போம். 3வது மந்த்ரம் शतमिन्नु (சதமிந்து) மனிதனுக்கு நூறு வயது என்பது புருஷாயுஸ்ஸு வேதத்திலும் சதாயு புருஷ: என்று சொல்லப்படுகிறது. ஒழுங்கான முறையில் கர்மாக்களை அனுஷ்டித்து வந்தால் அந்த நூறு வயதே ஸ்வல்ப்பம் தான். அதாவது மேலும் பல ஆண்டுகள் வாழலாம். அவனுக்கு அந்த நூறு வயதில் தான் கிழத்தனம் தெரிய வருகிறது. எந்த இந்த கிழப்பருவத்தில் தன்னுடைய பிள்ளைகளும் தகப்பனார்களாக ஆகிறார்களோ இப்படியாக ஸந்ததி அபிவிருத்தியாகிற ஸமயத்தில் இடையில் ஹே தேவர்களே ஹிம்ஸித்து எங்களின் ஆயுஸ்ஸை அபஹரித்துவிட வேண்டாம் - ''பச்யதி புத்ரம் - பச்யதி பௌத்ரம் '' இத்யாதி வசனங்களின் படி குடும்பத்தில் எல்லோரும் த்ருட காத்ரர்களாகவிருந்து வருவோம்.

ஐந்து–ஆறாவது மந்திரங்களின் அர்த்தத்தைப் பார்ப்போம் मेधां मह्यं - अप्सरासु च (மே தாம் மஹ்யம் அப்ஸராஸு ச). உபநயனம் ஆனதும் அத்யயனத்தில் இறங்க அதை இவ்விருமந்த்ரங்களினாலும் தேவதைகளை வேண்டுகிறான். மேதா என்பதற்கு ஸாமான்யமாக அறிவு (புத்தி) என்பது அர்த்தமாயினும் வேதம் மற்றும் ஒரு இடத்தில் விரிவாக விளக்குகிறது.

मेधा मनीषे माऽऽविशताँ समीची भूतस्य भव्यस्यावरुध्दयै :

(மேதாமநீஷே மாவிசதாம் ஸமீசீ பூதஸ்ய பவ்யஸ் யாவருத்யை)

க்ரஹிக்கப்பட்ட வித்யைக்கு தாரணா (धारणा) சக்தி அவச்யமல்லவா! அதைக் குறிப்பதுதான் ''மேதா'' பதம். ''அங்கிரஸ்'' என்கிற தேவதைகள் எனக்கு மேதையை அளிக்கட்டும்–ஸப்தரிஷிகள் அளிக்கட்டும். ப்ரஜாபதி தேவதை அளிக்கட்டும். அக்னி அளிக்கட்டும். அப்ஸரஸ்ஸுகளிடமும் கந்தர்வர்களிடமும் தைவிகமான எந்த மேதை உண்டோ அப்பேர்ப்பட்ட மேதை என்னை ப்ரவேசிக்கட்டும்.

இப்படியாக 11 ஆஹுதிகள் முடிந்ததும் ஆசார்யன் (பிதா) ஜயாதி ஹோமம் செய்து சம்யைகளை அப்புறப்படுத்தி வ்யைச்சித்த ஹோமம் செய்வதற்கு முன் ச்ரௌத ப்ராயச்சித்தமாக ओं भुवः स्वाहा। (ஔ புவஸ்ஸ்வாஹா) என்கிற ஹோமத்தைச் செய்து ஸமார்த்த ப்ராயச்சித்த ஹோமத்தையும் செய்து பரிஷேசனம் ப்ரணீதா விமோசனம் செய்து ப்ரம்மோபதேசத்திற்கு அனுஜ்ஞா பூர்வமாக ஸங்கல்ப்பம் செய்து கொள்ளவேணும்.

सू अपरेणग्नि मुद गग्रं कूर्चं नि धाय तस्मिन्नुत्तरेण यजुषोपनेतोपविशति ।

सू– அபரேணாக்நி முத கக்ரம் கூர்ச்சம் நிதாய தஸமிந்நுத்த ரேண யஸுஷோபநே தோ பவிசதி

அக்னிக்கு மேலண்டைபுரத்தில் குமாரனும் ஸமர்ப்பிக்கப்பட்ட கூர்ச்சத்தை வடக்கு நுனியாகப்போட்டுக் கொண்டு அதில் **राष्ट्र भृदस्याचार्यासन्दी मात्वद्योषम्** (ராஷ்ட்ர ப்ருதஸ்யாசார்யா ஸந்தீ மாத்வத்யோஷம்) என்கிற மந்திரத்தினால் ஆசார்யன் (உபநயனம் – செய்விக்கிறவன்) உட்கார வேண்டும். மந்த்ரார்த்தமாவது ஹே கூர்ச்சமே நீ உலகத்தையே தாங்குகிறாய். அதாவது காயத்ரீ மஹாந்த்ரத்தை உபதேசிக்கிறவன் உலகத்திற்கு ஸமம் என்பதாகப் பொருள். ஆசார்யனான எனக்கு ஆஸனமாக அமைகிறாய். உன்னிடமிருந்து ஒரு போதும் நான் பிரியமாட்டேன்.

पुरस्तात्प्रत्य ङ्ङासीनः कुमारो दक्षिणेन पाणिना
दक्षिण पाद मन्वारभ्याह सावित्रींभो अनुब्रूहीति ।
तस्मा अन्वाह तथ्सवितुरिति, पच्छो ऽर्धशः

ततस्सर्वां, व्याहृती र्विहृताः, पादादिष्वन्तेषुवा,
तथाऽर्धर्चयो रुत्तमायां कृथ्स्नायां ॥

**(पुरस्तात् प्रत्यङ्ङासीनः कुमारो दक्षिणेन पाणिना
दक्षिणं पाद मन्वारब्धयाहृ सावित्रीम् ब्रूहि, अनुब्रूहीति,
तस्मा अन्वाय तत्सवितुरिति पच्छोर्ददतः
ततस्सर्वाम्, व्याहृतीर् विहृताः पादादिषु अन्तेषुवा,
ततारत्तर्च्चयो, उत्तमायाम् कृत्स्नायाम्.)**

முக்யமான ஸூத்ரமானதால் ஸூத்ரார்த்தத்தை முதலில் விவரித்து மந்த்ரார்த்தத்தையும் அதனடியாக மந்த்ரத்தின் மஹிமையையும், ஓரளவு விளக்குவோம். ஆசார்யன் பக்கம் விசேஷ மந்த்ரங்களையோ மந்த்ரார்த்தங்களையோ க்ரஹிக்கும் போது நின்று கொண்டு தானேயிருக்க வேண்டும் என்பது ப்ராப்தமாக புரஸ்தாத் ப்ரத்யங்ஙாஸீந: என்பதாக ஸூத்ரம் – இதிலிலும் ஒரு ஸூக்ஷ்மம் உள்ளது. இதே ஆபஸ்தம்பர் தர்மஸூத்ரத்தில் **एकाध्यायी दक्षिणं बाहुमुप सीदेत्** *(ஏகாத்யாயீ தக்ஷிணம் பாஹூ முபஸீதேத்)* என்பதாகக் கூறுகிறார். ஒரு குருவினிடத்தில் ஒரே சிஷ்யனாகவிருந்து வேதத்தை அத்யயனம் செய்யும் போது ஆசார்யனுடைய வலதுகைப்புரத்தில் சிஷ்யன் இருந்து மிக ஸமீபத்தில் அதாவது கையினால் எட்டக்கூடிய தூரத்தில் (மிகவும் கிட்டத்தில் இல்லாமலும், மிகவும் துரத்தில் இல்லாமலுமாக) உட்கார்ந்துக் கொண்டு க்ரஹிக்க போறும் என்பதாகவுள்ளது. அதே ஸ்தானம் இங்கேயும் வரத்தெரிய ''புரஸ்தாத் ப்ரத்யங்ஙாஸீந:'' எதிரில் மேற்கு முகமாக உட்கார்ந்து கொண்டு என்று கிடைக்கிறது. அதன் பிரகாரம் உடகார்ந்து கொண்டு குமாரன் தன்னுடைய வலது கையினால் ஆசார்யனின் வலது பாதத்தைத் தொட்டுக் கொண்டு ஆசார்யனைப் பார்த்து ஸாவித்ரியை அடியேனுக்கு உபதேசிக்க போறும் என்பதாக. இதே விஷயத்தை மனுவும்

व्यत्यस्त पाणिना र्कायमुप सङ्ग्रहणं गुरो :
सव्येन सव्य : स्प्रष्टव्यो दक्षिणेन च दक्षिणत : ॥

**व्यत्यस्त पाणिना कार्य मुपसङ्ग्रहणम् गुरोः
सव्येन सव्यः स्प्रष्टव्यो दक्षिणेन च दक्षिणतः**

என்பதாகச் சொல்லுகிறார். இதையனுஸரித்து ஆபஸ்தம்பரும்

उभाभ्यामेवोभावभि पीडयत उपसङ्गाह्या वित्येके

(உபாப்யாமேவோ பாவபி பீடயத உபஸங்க்ராஹ்யா வித்யேகே)

இரு கைகளாலும் இரு பாதங்களை (வலது கையினால் வலது பாதத்தையும் இடது கையினால் இடது பாதத்தையும் பிடிக்க வேணும் என்கிற பக்ஷாந்தரத்தையும் தர்ம ஸூத்ரத்தில் சொல்லுகிறார். இப்பழக்கத்தை தற்சமயம் பலரும் ஆதரிக்கின்றனர். ரிஷி – சந்தஸ்–தேவதை பூர்வகமாக காயத்ரியை உபதேசிக்க வேண்டும் என்று க்ருஹ்யரத்நத்தில் சொல்லப்பட்டுள்ள பிரகாரம் – ப்ரணவத்தின் ரிஷி – சந்தஸ் தேவதை வ்யாஹ்ருதிகளின் ரிஷி சந்தஸ் தேவதை – காயத்ரியின் ரிஷி – சந்தஸ் தேவதை இவைகளை குமாரனின் வலது காதில் உபதேசிக்க வேண்டும். பிறகு

ओं भूः तत्सवितुर्वरेण्यं - ओं भुव : भर्गो देवस्य धीमहि - ओं सुव : धियो यानः प्रचोदयात्, ओं भूः - तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि, ओं भुवः धियो योनः प्रचोदयात् - ओँ सुवः - तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्य धीमहि धियोयोनः प्रचोदयात्

– என்பதாக

(ஓம் பூ: தத்ஸவிதுர்வரேண்யம் ஓம் புவ: பர்க்கோதே வஸ்ய தீமஹி ஓம் ஸுவ: தியோ யோந: ப்ரசோதயாத் – ஓம் பூ: – தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி – ஓம் புவ: தியோ யோந: ப்ரசோதயாத் – ஓம் ஸுவ: –தத்ஸவிதுர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோந: ப்சோதயாத்)

இப்படியாக உபதேசம் ஆனவுடன் இந்த மந்திரத்தை அவனுக்கும் சொல்லி வைக்க வேண்டும். प्रत्यगाशिषञ्चैनं वाचयति (ப்ரத்யகாசிஷம்சைநம் வாசயதி) என்கிற ஸூத்திரத்தில் ''ச'' சப்த ப்ரயோக ஸாமர்த்யத்தினால் கிடைக்கிறது.

அடியேனுக்கு காயத்ரியின் மஹிமையைப் பற்றியும் எழுத வேண்டும் என்று நியமனம். ப்ரகிருதத்தில் காயத்ரீ மந்த்ரத்தின் உபதேசத்தை அனுஸரித்து தனியாகக் கட்டுரை என்றில்லாமல் ப்ரகரணானு ஸாரமாக யதாமதி எழுதுகிறேன்.

காய்த்ரீ மந்த்ரமானது மூன்று அவயங்களைக் கொண்டது. ப்ரணவம் வ்யாஹ்ருதிகள் - தத்ஸவிது: என்கிற மந்த்ரம் - இவைகள் எல்லாமே வேதங்களின் ஸாராம்சம் என்பதாக மனு கூறுகிறது.

अकारश्चाप्युकारश्च मकारश्च प्रजापति : ।
वेद त्रया न्निरबृहत् भूर्भुवस्सुवरिति च ।

(அகாரஞ்சாப்யுகாரஞ்ச மகாரஜ்ச ப்ரஜாபதி :
வேத த்ரயாந்நிரப்ருஹத் பூர்புவஸ்ஸுவரிதி ச

तदित्यृचश्च सावित्र्यो : परमेष्ठी प्रजापति : ।
त्रिभय एवतु वेदेभ्य : पादं पाद मदूदुहत् ॥

(ததித்ய்ருசஞ்ச ஸாவித்ர்யா: பரமேஷ்டீ ப்ரஜாபதி
த்ரிப்ய ஏவது வேதேப்ய: பாதம் பாத மதூது ஹத்)

एत दक्षर मेताञ्च जपे द्व्याहृति पूर्विकाम् ।
सन्ध्ययोर्वेदविद्विप्रो वेद पुण्येन युज्यते ॥

(ஏத தக்ஷர மேதாஞ்ச ஜபேத்வ்யாஹ்ருதி பூர்விகாம்)
ஸந்த்யயோர் வேதவித் விப்ரோ வேத புண்யேந யுஜ்யதே)

காயத்ரியின் முதல் பாகமான ப்ரணவமும் மூன்று எழுத்துக்கள் கொண்டது. முதல் எழுத்து அகாரமென்ன, இரண்டாவது உகாரமென்ன, மூன்றாவதான மகாராமென்ன இந்த மூன்று எழுத்துக்களையுமே பகவான் மூன்று வேதங்களிலிருந்தும் (தனித்தனியாக இருக்கிறதை) இழுத்து ஒன்றாக இணைத்து ப்ரணவமாக ஆக்கினார்.

அவ்விதமே இரண்டாவது பாகமான வ்யாஹ்ருதித்ரயத்தையும் மூன்று வேதங்களிலிருந்தே ஒன்று சேர்ந்தார். அடுத்ததான காயத்ரீ மந்திரத்தின் முதல் பாதமான ''தத்ஸவிதுர் வரேண்யம்'' என்கிற பாகத்தை ரிக்வேதத்திலிருந்தும் ''பர்க்கோ தேவஸ்ய தீமஹி' என்கிற பாகத்தை யஜுர் வேதத்திலிருந்தும் 'தியோயோந: ப்ரசோதயாத்'' என்கிற மூன்றாவது பாகத்தை ஸாம வேதத்திலிருந்தும் ஆக ஒன்று சேர்த்து ஒரே மந்த்ரமாக உலகத்திற்கு அருளினார். அதிகம் செல்லலுவானேன், மூன்று வேதங்களையும் ஜபமாகவோ பாராணமாகவோ செய்தால் என்ன பலன் உண்டோ அதே பலன் மூன்று வேத ஸாரமான காயத்ரியை ஜபம் செய்தால் கிடைத்து விடுகிறது என்று மனு கூறுகிறார்.

இது விஷயமாக யமன் சொல்லுகிறார்.

गायत्रीं चैव वेदांश्च तुलया तोलयत्प्रभु :
एकतश्चतुरो वेदान् साङ्गांश्च स पदक्रमान् ।
एकतश्चैव गायत्रीं तुल्य रूपातु सा स्मृता ॥

(காயத்ரீஞ்சைவ வேதாம்ச்ச துலயா தோலயத் ப்ரபு:
ஏகதச்சதுரோ வேதாந் ஸாங்காமச்ச ஸ பதக்ரமாந்
ஏகதச்சைவ காயத்ரீம் துல்யரூபாது ஸா ஸ்ம்ருதா

பகவான் தராசின் ஒரு தட்டில் நான்கு வேதங்களையும் வைத்து ஒரு தட்டில் இந்த காயத்ரீயையும் வைத்து எடைபோட்ட போது முள்முளை அசையாமல் ஸரியாக நிற்கிறதைப் பார்த்து நான்கு வேதங்களுக்கும் காயத்ரீ ஸமம் என்பதை உலகத்திற்கு நிரூபித்தாக யமன் சொல்லுகிறார். शङ्ख: (சங்க:) கூறுகிறார்.

नाघमर्षणात्पर मन्तर्जले नव्याहृतिभ्य : परं हुतं ,
न सावित्र्या : परं जप्य मिती ।

(நாகமர்ஷணாத் பர மந்தரஜலே நவ்யாஹ்ருதி திவ்ய: பரம் ஹுதம்
ந ஸாவித்ரயா : பரம் ஜப்யமிதி)

ஸ்னான காலத்தில் ஜலத்திற்குள் சொல்ல வேண்டியதில் ''அகமர்க்ஷணம்'' என்கிற மந்திரத்தை காட்டிலும் உயர்ந்த மந்திரம் கிடையாது. அவ்விதம் ஹோமம் செய்யும் போது வ்யாஹ்ருதி ஹோமத்தைக் காட்டிலும் மேற்பட்டது கிடையாது. ஜபத்தில் காயத்ரீ ஜபத்திற்கு ஈடு கிடையாது என்பதாக. அவரே மற்றும் ஒரு இடத்தில் கூறுகிறார்

गायत्र्या न परं जप्यं गायत्र्या न परं तप : ।
गायत्र्या न परं ध्येयं गायत्र्या न परं हुतं ॥

(காயத்ர்யா ந பரம் ஜப்யம் காய்த்ர்யா ந பரம் தப:
காயத்ர்யா ந பரம் த்யேயம் காயத்ர்யா ந பரம் ஹுதம்)

காயத்ரீக்கு ஈடான ஜபம் கிடையாது. தபஸ் கிடையாது, த்யானிக்கத்தக்க மந்த்ரம் கிடையாது. தபஸ் கிடையாது. ஹோமம் கிடையாது. அவ்வளவு ஏற்றம் கொண்டது என்பதில் தாத்பர்யம்.

व्यास :

दशकृत्वः प्रजप्तासा त्र्यहा द्यत्कृतं लघु ।
तत्पापं प्रणुदत्याशु नात्र कार्या विचारणा ॥
शतं जप्तातु सा देवी पापौघ शमना स्मृता ।
सहस्र जप्तातु सादेवी उपपातक नाशिनी ।
कोटी जपेन गायत्र्या यदिच्छति तदाप्नुयात् ।
यक्ष विद्याधरत्वं वा गन्धर्वत्व मथापिवा ।
देवत्व मथवा राज्यं भूलोकंवाऽप्यकण्टकम् ॥

வியாஸர் கூறுகிறார்.

(தசக்ருத்வ: ப்ரஜப்தாஸா த்ர்யஹாத்யத் க்ருதம் லகு
தத்பாபம் ப்ரணுதத்யாசு நாத்ர கார்யா விசாரணா
சதம் ஜப்தாது ஸாதேவி பாபௌக சமநா ஸ்ம்ருதா
ஸஹஸ்ர ஜப்தாது ஸாதேவீ உபபாதக நாசிநீ
கோடீ ஜபேந காயத்ர்யா யதிச்சதி ததாப்நுயாத்
யக்ஷவித்யாதரத்வம் வா கந்தர்வத்வமதாபிவா
தேவத்வ மதவா ராஜ்யம் பூலோகம் வாப்ய கண்டகம்)

காய்த்ரியை பத்து தடவை ஜபித்தாலே மூன்று தினங்களில் ஸாமான்யமாக செய்யப்பட்ட பாபம் போகிறது. நூறு தடவை ஜபித்தாலோ பாபக்கூட்டமே அழிந்து விடுகிறது. ஆயிரம் ஆவிருத்தி ஜபத்தாலோ உபபாதகம் என்று சொல்லப்படுகிற கோவதம், காலத்தில் உபநயனத்தைத் தவிர்த்தல் சம்பளம் பெற்று அத்யயனம் செய்தல், சம்பளம் கொடுத்து வேதம் கற்றுக் கொள்ளுதல், அக்னிஹோத்ரம் – ஔபாஸனம் இவைகளை அனுஷ்டிக்காமை அயாஜ்யயாஜனம் (அதாவது செய்விக்கத் தகாதவர்களுக்கு பௌரோஹித்யம் செய்வித்தல்) செய்நன்றி மறத்தல் ஸாஹஸ்ராங்குத்தி காயத்ரீ ஜபத்தினால் நசித்து விடுகின்றன. அவ்விதம் கோடி ஆவ்ருத்தி காயத்ரீ ஜபம் செய்தால் எதை விரும்புகிறானோ அதை அடைகிறான். விசேஷமாக குபேரனின் ஸேவகனாகயிருத்தல், வித்யாதரன் கந்தர்வன் தேவன் இவர்களாகவிருத்தல் ராஜ்யத்தை அடைதல், இடையூறு அற்ற பூலோக ஸாம்ராஜ்யத்தைக் கூட அடையலாம். அவ்வளவு பெருமை வாய்ந்தது என்கிறார் ஶங்கர் என்பவர்

संवर्तः

ऐहिकामुष्मिक पापं सर्वं निरवशेषतः ।
पञ्चरात्रेण गायत्री जप्यमाना व्यपोहति ॥
गायत्र्यास्तु परं नास्ति शोधनं पाप कर्मणाम् ।
गायत्री मात्र सारोपि वरो विप्रस्सु यन्त्रियत :
नायन्त्रित श्चतुवेदी सर्वाशी सर्व विक्रयी ।
ब्रह्मचारीमिताहार स्सर्व भूतानुकंपन : ।
गायत्र्या लक्ष जापेन सर्व पापैः प्रमुच्यते :
अयाज्ययाजनं कृत्वा भुक्त्वा चान्नं विगर्हितं ।
गायत्र्यष्ट सहस्रन्तु जपं कृत्वा विशुद्धति ।

(ஸம்வர்த்தர்) கூறுகிறார்.

ஐஹிகாமுஷ்மிகம் பாபம் ஸர்வம் நிரவ சேஷத :
பஞ்சராத்ரேண காயத்ரீ ஜப்ய மாநா வ்யபோஹதி
காயத்ரியாஸ்து பரம் நாஸ்தி சோதனம் பாப கர்மணாம்
காயத்ரீ மாத்ர ஸாரோபி வரோவிப்ரஸ் ஸுயந்த்ரி :
நாயந்த்ரிதச் சதுர்வேதீ ஸர்வாசீ ஸர்வ விக்ரயீ
ப்ரம்ஸசாரீ மிதாஹாரஸ் ஸர்வ பூதாநு கம்பந :
காயத்ர்யா லக்ஷ ஜாபேந ஸர்வ பாபைப்ரமுச் யாதே
அயாஜ்ய யாஜநம் க்ருத்வா புக்த்வா சாந்நம் விகர்ஹிதம்
காயத்ர்யஷ்ட ஸஹஸ்ம்து ஜபம் க்ருத்வா விசுத்யதி

காயத்ரியின் பெருமையை ஸம்வர்த்தர் வேறு முகமாகக் கூறுகிறார்.

ஐந்து தினங்கள் காயத்ரியை ஜபம் பண்ணினால் நடப்பில் சம்பாதித்த பாபம் - ஏற்படப் போகும் பாபம் எல்லாமே மிகுதியில்லாமல் போய் விடுகிறது. நம்முடைய பாபங்களின் சோதன விஷயத்தில் காயத்ரியைக் காட்டிலும் மேற்பட்டது கிடையாது.

காயத்ரியின் பெருமை, மந்திரத்தின் அர்த்தம் - இவைகளை நல்ல முறையில் அறிந்து ஜபம் செய்வானேயாகில் நல்லடக்கமுள்ள உயர்ந்தவனாகிறான்.

நல்லடக்கமில்லாத நான்கு வேதங்களை அறிந்தவனும், கண்ட விஷயத்தில் ஸர்வத்தையும் சாப்பிடுகிறவனும் பாகுபாடு அன்றி எல்லா வஸ்துக்களை விற்பவனும் தன்னுடைய பாபத்தை போக்கிக் கொள்வதற்கு பிரம்மசர்யத்துடன் இரு வேளை மட்டும் ஆஹாரம் உட்கொண்டு எல்லா ப்ராணியிடத்தும் இரக்கம் கொண்டவனாக லக்ஷ ஆவிருத்தி காயத்ரி ஜபம் செய்து தன்னுடைய ஸமஸ்த பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். அவ்விதம் செய்விக்கத்தாகத ஒருவனுக்கு பௌரோஹித்யம் செய்துவைப்பதும் நிந்திக்கத்தக்க அன்னத்தைச் சாப்பிடுவதும் உபபாதகத்தில் சேர்ந்தவை. இதற்கு பரிஹாரமாக 1008 ஆவிருத்தி காயத்ரி ஜபம் செய்தால் பாபத்திலிலிருந்து விடுபட்டு பரிசுத்தனாகி விடுகிறான் என்பது ஸம்வர்த்திரின் வாக்யம். இப்பேர்ப்பட்ட பரம பாவன மந்த்ரத்திற்கு ரிஷி விச்சாமித்ரர் – நாம் அன்றாடம் காயத்ரீ ஜபம் செய்யும் போது ஸாவித்ர்யா: விச்வாமித்ரரிஷி: தேவிகாயத்ரீசந்த: ஸவிதாதேவதா என்று சொல்லி வருகிறோம் அல்லவா! அவரின் வாக்கு என்ன என்று பார்ப்போம்.

प्रणवे नित्य युक्तस्य व्याहृतीषु च सप्तसु ।
त्रिपदायां च गायत्र्यां न भयं विद्यतेकचित् ।
गायत्र्याश्च समो नास्ति मन्त्रो वेद चतेष्टये ।
सर्व बेदाश्च यज्ञाश्च दानानि च तपांसि च ।
समानि कलयाप्राहु र्मुनयो न तदित्यृ च : ।
परिहापयापि वेदां स्त्रीन् कर्माणि विविधानिच ।
सावित्री मात्र माश्रित्य द्विजो भवति निर्भय : ।

ப்ரணவே நித்ய யுக்தஸ்ய வ்யாஹ்ருதீஷு ஸஸப்தஸு!
த்ரிபதாயாம்ச காயத்ரியாம் நபயம் வித்யதேக்வசித்
காயத்ரியாச்ச ஸமோநாஸ்தத மந்த்ரோவேத சதுஷ்டயே!
ஸர்வவேதாதச்ச யஞ்ஞாச்ச தாநாநிசதபாம்ஸிச)
ஸமாநிகலயா ப்ராஹுர் முநயோந தத்தித்ருச:!
பரிஹாப்யாவி வேதாம் ஸ்த்ரீந் கர்மாணி விவிதாஞ்ச!
ஸாவித்ரீ மாத்ரமாச்ரித்ய தம்விஜோ பவதி நிர்பய:॥

ஸப்தவ்யாஹ்ருதிகளுடன் கூடிய ப்ரணவ ஸஹித காயத்ரியின் உச்சாரணம் இருக்குங்கால் ஒரு பொழுதும் அவனுக்கு பயம் வராது. கீழே சொன்ன ரிஷிகளைக்

காட்டிலும் இவர் ஒரு படி மேலே போய்விட்டார் – நான்கு வேதங்களிலும் காயத்ரிக்கு ஸமமான மந்த்ரம் கிடையாது. எல்லா வேதங்கள் – இவைகள் எல்லாம் காயத்ரிக்கு ஒரு படி கீழ்தான் – அதாவது மூன்று வேதங்களை சொல்லிக் கொள்ள முடியாமல் விட்டு விட்டாலும் அவ்விதம் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள வெவ்வேறு கர்மாக்களை அனுஷ்டிக்க முடியாமல் போனாலும் காயத்ரியைக் கொஞ்சம் கூட குறைவு இல்லாமல் ஜபித்து வருவானேயாகில் அந்த ப்ராம்மணன் நிர்பயமாக லோகத்தில் வாழ்கிறான்–என்பதாக இவ்விதமாக மேலும் பல முனிவர்கள் காயத்ரியின் ப்ரபாவத்தைப் பற்றி பாக்கப் பேசியுள்ளார்கள்.

இந்த காயத்ரியை நாம் ஸந்த்யாவந்தனத்தில் உபயோகப்படுத்தும் போது

सहस्र परमां देवीं शत मध्यां दशावराम्

(ஸஹஸ்ரபரமாம் தே வீம் சத மத்யாம் தசவராம்)

என்பதாக உயர்ந்த பக்ஷமாக ஆயிரம் ஆவ்ருத்தியும் மத்யம பக்ஷமாக நூறு ஆவிருத்தியும் அதம (குறைந்த) பக்ஷமாக பத்து ஆவ்ருத்தியும் ஜபிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இதே விஷயத்தை பரத்வாஜர் கூறும் பொழுது சற்று மாற்றிச் சொல்லுகிறார்.

अष्टोत्तर सहस्रं वा शत मष्टोत्तरन्तु वा ।
जप्त्वाऽष्टाविंशति र्वापि बीज शक्ति क्रमाज्जपेत् ।

''அஷ்டோத்தர ஸஹஸ்ரம் சதம்டோத்தரம்துவா!
ஜப்த்வாஷ்டாவிம் சதிர் வாபி பீஜ சக்திக்ரமாஜ் ஜபேத்!!)

ஆயிரத்தெட்டு–நூற்றெட்டு–இருபத்தெட்டு என்பதாக இவருடைய க்ரமம். இதிலிருந்து முக்யமாக நாம் அறிய வேண்டியது உயர்ந்த பக்ஷமாக அவச்யம் 1008 என்றும் மத்யம பக்ஷமாக 108 என்றும் அதமபக்ஷத்தில் தான் 28 அல்லது 10 என்றும் கொள்ள வேண்டும். ஆக ஆசௌச ஸமயத்தில் மட்டுமே பத்து ஆவிருத்தி என்பதைக் கொள்ள வேண்டும். ஸாதாரணமாக அவகாசம் மிகக்குறைவாகவிருந்தால் ஒழிய 28ஐ கொள்ளக்கூடாது –மத்யமக்ஷத்தையாவது பின்பற்ற தோது பண்ணிக் கொள்ள வேண்டும். பூர்ண அவகாசம் கிடைக்கும் தினங்களிலாவது ஸஹஸ்ராவிருத்தித செய்வதையும் கடமையாகக் கொள்ளுதல் ச்ரேயஸ்கரம்.

தர்மசாஸ்திரங்களில் இந்த காயத்ரியை மூன்று விதமாக மஹரிஷிகள் கூறுகின்றனர். ஏகப்ரணவ ஸஹித காயத்ரி என்றும் ப்ரணவ ஸமபிடித காயத்ரீ என்றும், ஷடோக்கார காயத்ரீ என்பதுமாக –அதற்கான வசனங்களைப் பார்ப்போம்.

स्मृति रत्नावल्यां

संपुटैक षडोङ्कारा गायत्री त्रिविधा मता ।
तत्राद्यप्रणवा ग्राह्या गृहस्थै र्जप कर्मणि ।
गृहस्थ वत्तु जप्तव्या सदैव ब्रह्मचारिभि : ।
संपुटाच षडोंकारा भवेता मूर्ध्व रेतसाम् ।

ஸ்ம்ருதி ரத்நாவளியில்
(ஸம்புடைகஷடோங்காரா காயத்ரி த்ரிவிதாமதா।
தத்ராத்ய ப்ரணவா க்ராஹ்யா க்ருஹஸ்தைர் ஜபகர்மணி)
கிருஹஸ்தவத்து ஜப்தவ்யா ஸதைப ப்ரம்மசாரிபி:।
ஸம்புடாச ஷடோங்காரா பவேதா மூர்த்வதேதஸாம்॥)

முதலில் ப்ரணவம் –பிறகு வ்யாற்குதி த்ரயம் –பிறகு தத்ஸவிது: என்கிற மந்த்ரம் –இது ஏகப்ரணவ காயத்ரி. இது க்ருஹஸ்தன் –ப்ரம்மசாரி. இவர்களுக்கு. ஆதியில் ப்ரணவத்தை அமைத்துமேலே சொன்ன ப்ரகாரம் காயத்ரீ முடிந்தவுடன் ப்ரணவத்தையும் உச்சர்ப்பது ஸம்புட காயத்ரி என்பதாகும்.

முதலில் ப்ரணவம் – முதல்வ்யாஹ்ருதியான பூ:
மறுபடி ப்ரணயம் இரண்டாவது வ்யாஹ்ருதியான புவ:
மறுபடி ப்ரணவம் மூன்றாவது வ்யாஹ்ருதியான ஸுவ:
மறுபடி ப்ரணவம். மறுபடி ப்ரணவத்தைச் சொல்லி தத்ஸாது என்கிற மந்த்ரத்தை ப்ரசோதயாத் என்கிற பரியந்தம் சொல்லி கடைசியிலும் ப்ரணவத்தைச் சொல்லுகிறது ஷடோங்கார காயத்ரியாகும். இந்த இரண்டு பக்ஷங்களும் வாநப்ரஸ்த யதிகள் விஷயம் உன்று ஸ்ம்ருதிரத்னாவளியில் சொல்லப்படுகிறது. விருத்தயமர் என்பவரும் இதை ஆமோதிக்கிறார்.

वृध्द यमस्मृतौ तृतीयाध्याये
एकोकारा संपुटाच षडोंकारेति सात्रिधा ।
आद्यन्तोकार संयुक्ता गायत्री संपुटा स्मृता ।
सहोंकारा व्याहृत्य : पुनरोंकार संयुता :
मनो रादावथान्तेच षडोङ्करेय मुच्यते ।

आदा वोङ्कार संयुक्ता गायत्र्यकाह्युदाहृता।

आद्योङ्कारा गृहस्थस्य वर्णिनश्च तथैव च।

वान प्रस्त यतिनां तु षडोङ्कारा प्रशस्यते।

(ஏகோங்காரா ஸம்புடாச ஷடோங்காரேதி ஸாத்ரிதா!
ஆத்யந்தோங்கார ஸம்பாக்தா காயத்ரீ ஸம்பாடாஸ்ம்ருதா!
ஸஹோங்காரா வ்யாஹ்ருதய: புநரோங்காரஸம்ருதா!
மநோ ராதாவதாந்தேச ஷடோங்காரேய முச்யதே!
ஆமதவோங்காரஸம்யுக்தா காயத்ர்யே காஹ்யுதாஹ்ருதா!
ஆத்யோங்காரா க்ருஹஸ்தஸ்ய வர்ணிநச்ச ததைவ ச!
வாந ப்ரஸ்த யதீநாம் து ஷடோங்காரா ப்ரசஸ்யதே!!)

இதே விஷயத்தை காச்யபர் சொல்லும் பொழுது சற்று மாறுபடுத்துகிறார்.

काश्यप स्मृतौ

एक प्रणव संयुक्तां गायत्रीं प्रजये द्वही।

ब्रह्मचारी च सन्ध्यासु नियतो नियतेन्द्रिय :।

वनी संपुट गायत्रीं यतिष्षट् प्रणवान्विताम्।

(ஏகப்ரணவ ஸம்யுக்தாம் காயத்ரீம் ப்ரஜபேத் க்ருஹீ)
ப்ரஹ்ம சாரீச ஸந்தாஸ்ு நியதோ நியதே ந்த்ரிய:!
வநீஸம்பாட காயத்ரீம் யதிஷ்ஷட் ப்ரணவாந் விதாம்!!)

இதில் ஏகப்ரணவ காயத்ரீ க்ருஹஸ்த ப்ரம்மசாரி விஷயாகவும் ஸம்புட காயத்ரீ வாநப்ரஸ்த விஷயமாகவும் ஷடோங்கார காயத்ரீ ஸந்யாஸீ விஷய மாகவும் சொல்லப்பட்டுள்ளது.

இந்த காயத்ரீ ஒரு விலக்ஷணமானது. விலக்ஷணம் உலகத்தில் கோடிக்கண்காகன மந்த்ரங்கள் ப்ரசாரத்தில் உள்ளன. அந்தந்த மந்த்ரங்களுக்கு ஒவ்வொரு தேவதை ஒன்று உண்டு. உதாரணமாக அஷ்டிபிரஹரம் என்றால் அந்த மந்திரத்திற்கு நாராயணன் தேவதை – ஸுதர்சனமந்த்ரம் என்றால் ஸுதர்சனன் தேவதை, லஷ்மீ மந்த்ரம் என்றால் ச்ரீ' என்கிற மஹாலக்ஷ்மீ தேவதை. ம்ருத்யுஞ்ஜய மந்த்ரம் என்றால் ம்ருத்யுஞ்ஜயன் தேவதை. இப்படியாகவிருக்க, ப்ரகிருதமான காயத்ரீ மந்த்ரத்திற்கு யார் தேவதை? என்றால் ''காயத்ரீ'' தேவதை மட்டும்தான்

ஸ்புரிக்கும். ஆனால் காயத்ரீயும் தேவதை அந்தர்யாமியும் ஸூர்யமண்டல மத்யவர்த்தியாயுமுள்ள ஸ்ரீமந்நாராயணனும் தேவதை –இதை மேலேயும் விவரிப்போம். இந்த மந்திரத்திற்கு அபிமானி தேவதை காயத்ரீ –ப்ரதிபாத்ய தேவதை ஸ்ரீமந்நாராயணன். காயத்ரீயின் த்யான ச்லோகமாவது.

मुक्ता विद्रुम हेम नील धवळ च्छायै मुखैस्त्र्यक्षणै :
युक्तामिन्दु कला निबद्ध मकुटां तत्वार्थ वर्णात्मिकाम् ।
गायत्रीं वरदाभयाङ्कुश कशाशुभ्रं कपालं गुणं
शङ्खं चक्र मथार विन्द युगलं हस्तै र्वहन्तीं भजे ।

(முக்தாவித்ரும ஹேமநீல தவனச்சாயைர்முகைஸ்த்ர்யக்ஷணை:
யுக்தாமிந்து கலாநிபத்த மகுடாம் தத்வார்த்தவர்ணாத் மிகாம்
காயத்ரீம் வரதாயாங்கச கசா: சுப்ரம் கபாவம் குணம்
சங்கம் சக்ரமதாரவிந்தயுளம் ஹஸ்தைர் வஹந்தீம் பஜே)

மந்த்ரம் எப்படி விலக்ஷணமோ அவ்விதம் மந்த்ர ப்ரதிபாத்யதேவதையும் விலக்ஷணமானவன். முத்து, பவழம், தங்கம், இந்த்ரநீலம், வைரம், புஷ்பராகம் இவைகளின் ப்ரமையைக் கொண்டதுகளையும் மூன்று கண்களை உடையதாயும் இருக்கிற முகங்களோடு கூடினவன் காயத்ரீ. தலையில் மகுடம் தரித்துள்ளான். அதில் சந்திரகலை பதிக்கப்பட்டுள்ளது. 24 எழுத்து வடிவமுள்ளவள் பத்து கை கொண்டவள். ஒவ்வொரு கையும் எப்படி அமைந்துள்ளது எது–எதை தரித்துள்ளான என்பதை விளங்குகிறது 3வது 4வது பாதங்கள் வரத முத்ரை, அபய முத்ரை, அங்குசம் என்கிற ஆயுதம், சாட்டை, வெறுப்பான கபாலம், கயறு, சங்கம் –சக்ரம், இரண்டு தாமரைகள் இவைகளை தன் பத்து கைகளாலும் வரிக்கிறவன் இப்பேர்ப்பட்ட காயத்ரீ தேவியை ஸேவிக்கிறேன். அடைகிறேன் என்பதாக.

இதே காயத்ரீ வேளைக்குத் தக்கவாறு பெயரினாலும் உருவத்தினாலும் வேறுபடுகிறன் என்கிறார் யோக யாஜ்ஞவல்க்யர்

प्रातः कालेतु गायत्री सायङ्काले सरस्वती ।
मध्यन्दिने तु सावित्री उपास्या नाम भेदत : ।
गायत्री तु भवेद्रक्ता सावित्री शुद्ध विग्रहा ।
सरस्वती कृष्ण रूपा उपास्या रूप भेदत : ।

गायत्री ब्रह्म रूपातु सावित्री रुद्ररूपिणी ।

सरस्वती विष्णुरूपा उपास्या रूपभेदतः।

उदये ब्रह्मरूपन्तु मध्याह्ने तु महेश्वरम् ।

सायाह्ने विष्णुरूपन्तु त्रिरूपं चैवमुच्यते ।

न भिन्नां प्रतिपाद्येत गायत्रीं ब्रह्मणा सह ।

साहमस्मीत्युपासीत विधिना येन केनचित् ।

ப்ராத: காலேது காயத்ரீ ஸாபங்கா லே ஸரஸ்வதீ।
மத்யந்தி நேது ஸாவித்ரீ உபாஸ்யா நாம பேதத:।
காயத்ரீது பவேத்ரக்தா ஸாவித்ரீ சுத்தவிகரஹாத)
ஸரஸ்வதீ ப்ரம்ம ரூபா உபாஸ்யா ரூபவேதத:।
காயத்ரீ ப்ரம்ம ரூபாது ஸாவித்ரீ ருத்ர ரூபிணி।
ஸரஸ்வதீ விஷ்ணுரூபா உபாஸ்யா ரூபவேதத:।
உதயே ப்ரம்மரூபம் து மத்யாஹ்நே து மஹேச்சரம்।
ஸாயஹ்நே விஷ்ணு ரூபம்து த்ரிரூவம் சைவமுச்யதே।
நபிந்நாம் ப்ரதிபாத்யேத காயத்ரீம் ப்ரஹ்மணா யஹ।
ஸாஹ மஸ்மீத்யுபாஸீத விதிநா யேந நேநசித்)

இவ்வளவு விஷயத்தையும் ஒன்று சேர்த்து ஒவ்வொரு வேளையிலும் மேல் வரும் பிரகாரம் த்யானம் செய்யும் படிக்கும் சொல்லப்பட்டுள்ளது.

प्रातर्ध्यायामि सावित्रीं रविमण्डलमध्यगाम् ।

ऋग्वेदमुच्चारयन्तीं रक्तवर्णां कुमारिकाम् ।

अक्षमालाकरां ब्रह्मदैवत्यां हंसवाहनाम् ।

ப்ரதர்த்யா யாமி காயத்ரீர் ரவிமண்டல மத்யகாம்।
ரிக்வேத முச்சாரயந்தீம் ரக்த வர்ணாம் குமாரிகாம்।
அக்ஷமாலாகராம் ப்ரம்மதை வத்யாம் ஹம்ஸவாஹநாம்।।

मध्यन्दिने तु सावित्रीं रविमण्डलमध्यगाम् ।

यजुर्वेदं व्याहरन्तीं श्वेतां शूलकरां शिवाम् ।

युवतिं रुद्रदेवत्यां ध्यायामि वृषवाहनाम्

(மத்யந்திநேது ஸாவித்ரீம் ரவிமண்டல மத்யகாம்)
யஜுர் வேதம் வ்யாஹரந்தீம் ச்வேதாம் ஆல்கராம்சிவாம்।
யுவதிம்ருத்ரதேவத்யாம் த்யாயாமி வ்ருஷவாஹநாம்)

सायं सरस्वतीं श्यामां रविमण्डलमध्यगाम् ।
सामवेदं व्याहरन्तीं चकायुधधरां शुभाम् ।
ध्यायामि विष्णुदैवत्यां वृद्धां गरुडवाहनाम्

(ஸாயம் ஸரஸ்வதீம் ச்யாமாம் ரவிமண்டல மத்யகாம்।
ஸாமவேதம் வ்யாஹரந்தீம் சக்ராயுத தராம்சுபாம்।
த்யாயாமி விஷ்ணு தைவத்யாம் வ்ருத்தாம் கருட வாஸநாம்)

இந்த காயத்ரீமுதலான மந்த்ரங்களின் ஜபமானது இடத்திற்குத்தக்கவாறு தாரதம்யத்தை யோக யாஜ்ந வால்க்யர் கூறுகிறார்.

गृहेत्वेकगुणं प्रोक्तं नद्यादौ द्विगुणं भवेत् ।
गवचां गोष्ठे दशगुणं अग्न्यगारे शताधिकम् ।
सिद्धिक्षेत्रेषु तीर्थेषु देवतायाश्च सन्निधौ ।
सहस्रशतकोटिस्स्यात् अनन्तं विष्णुसन्निधौ

க்ருஹேத்வேக குணம் ப்ரோக்தம் நத்யாதௌ த்விகுணம் பவேத்।
கவாம் கோஷ்டே தசகுணம் அக்ந்யாகாரே சதாதிகம்।
ஸித்தி க்ஷேத்ரேஷு தீர்த்தே ஷு தேவதாயாச்ச ஸந்நிதௌ।
ஸஹஸ்ரசத கோடி ஸ்ஸ்யாத நந்தம் விஷ்ணுஸந்நிதௌ।)

ஸாதாரணமாக ஒரு ஜபத்தை கிருஹத்தில் செய்தால் என்ன பலனோ அதுவே நதி தடாகம் முதலானவிடத்தில் செய்யப்பட்டால் இரு மடங்கு ஆகிறது. மாட்டுக் கொட்டலில் பத்து மடங்கு -அக்னிசாலையில் நூறு மடங்கு ஸித்தி க்ஷேத்ரங்களிலும் புண்ய தீர்த்தங்களிலும் தேவதை ஆலயங்களிலும் கோடிக்கணக்காகிறது. அதுவே விஷ்ணு ஸந்நிதியில் செய்யப்பட்டால் மேலே சொல்லப்பட்ட கோடிக்கும் அதிகமான பலன் சொல்லப்படுகிறது. கீழே காயத்ரீ உபயதேவதாத்மகா என்று ஞாபகப்படுதினரை தற்போது பார்ப்போம். நாம் அன்றாட ஜபம் பண்ணும் போது

सावित्र्या ऋषि : विश्वामित्र : देवीगायत्री छन्द : सविता देवता என்கிறோம்

(ஸாவித்ர்யா: ரிஷி: விச்வாமித்ர: தேவீ காயத்ரீ சந்த: ஸவிதா தேவதா)

இதனால், ஸவிதா தேவதை என்று தெரிகிறது. ஸவிதா என்பது யார்? நம்முன்னேயே இருந்து நம்மை ஆட்டி வைக்கிறவன் அந்தர்யாமியான நாராயணன் தான் என்றாகிறது. (ஸவிதா) ப்ரேரக: என்கிறார்கள். இதையனுஸரித்துதான் த்யானச்லோகமும் அமைந்துள்ளது.

योदेवस्सविताऽस्माकं धियो धर्मादि गोचराः ।
प्रेरयेत्तस्य यद्भर्ग स्तद्वरेण्य मुपास्महे ।

(யோதேவஸ் ஸவிதாஸமாகம் தியோ தர்மாதிகோசரா:
ப்ரேரயேத்தஸ்ய யத்பர்க்கஸ் தத்வரேண்யமுபாஸ்மஹே)

மந்த்ராத்தமாவது எந்த ஸவிதா தேவன் அந்தர்யாமியான ஸ்ரீமந்நாராயணன் தர்மம் முதலானதை லக்ஷ்யமாகக் கொண்ட எங்களுடைய புத்திகளை அட்டி வைக்கிறானோ அந்த தேவனுடைய எந்த தேஜஸ் உண்டோ எல்லோராலும் விரும்பத்தகுந்த அந்த தேஜஸ்ஸை உபாஸனம் செய்கிறோம். இந்த ஸவிதா தேவன் யார்? வேதத்ரயரூபி ஸூர்யமண்டல மத்யவர்த்தீ

सैषात्रैय्येव विद्या तपति य एषोऽन्तरादित्ये हिरण्मय : पु रुष :

ஸைஷா த்ரையேவ வித்யா தபதி ய ஏஷோந்த ராதித்யே ஹிரண்மய: புருஷ:

இது விஷயமாக விச்வாமித்ரர் கூறுகிறார்

आदित्य मण्डलासीनं रुक्माभं पुरुषं परम् ।
ध्यायन्जपे त्तदित्येतां निष्कामो मुच्यते चिरात् ।
सुप्रभं सत्य मानन्दं हृदये मण्डलेऽपिच ।
ध्यायन्जपे त्तदित्येतां निष्कामो मुच्यते चिरात् ।
सयश्चायं पुरुषे । यश्चासावादित्ये । सएक : ।

(ஆதித்ய மண்டலாஸீநம்ருக்மாபம் புருஷம்பரம்।
த்யாயந் ஜபேத்ததித்யேதாம் நிஷ்காமோ முச்யதே சிராத்।
ஸுப்ரம் ஸத்யமாநந்தம் ஹ்ருதயே மண்டலே பிச।
த்யாயந்ஜவேத் தித்யேதாம் நிஷ்காமோ முச்யதே சிராத்।
ஸயச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே –ஸரக: இதித்யானார்த்த:)

அந்தத்யேய புருஷன் யார் என்பதையும் சாந்தோக்யம் விவரிக்கிறது.

यएषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते
हिरण्य श्मश्रुर्हिरण्य केश आप्रणखा त्सर्वएव
सुवर्ण :, तस्य यथा कप्यासं पुण्डरीकमेव मक्षिणी।

(ய ஏ ஷோந்த ராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே
ஹிரண்யச் மச்ருர் ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:
தஸ்யயதா கப்யாஸம் புண்டரீகமேவ மக்ஷிணீ)

இவ்விதமாக ஸூர்ய மண்டப மத்ய வர்த்தியான புண்டரீகாக்ஷனுடைய எல்லாவுலகங்களையும் தரிக்கிற விஷ்ணு ஸமஜ்ஜகமான எந்த தேஜஸ் உண்டோ அந்த தேஜஸ்ஸை த்யானிப்போம் என்று. இதையனுஸரித்துத்தான் நாம் அன்றாட த்ரிஸந்த்யைகளிலும்

ध्येयस्सदा सवितृमण्डल मध्य वर्ती
नारायणस्सरसिजासन सन्निविष्ट :।
केयूरवान्मकरकुण्डल वान्किरीटी
हारी हिरण्मयवपु धृत शङ्ख चक्र :

த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டல மத்ய வர்த்தீ
நாராயணஸ் ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட
கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ
ஹாரீ ரண்மய வபு: த்ருத சங்கசக்ரக்

என்கிற த்யானச்லோகத்தை அனுஸந்திக்கிறோம்.

மேலும் இந்த மந்த்ரம் ஸ்த்ரீபும்ரூப உபய தேவதாகம் என்பதற்கு மற்றுமொரு சான்றும் உள்ளது.

स्त्री पुंसात्मक गायत्रीं वस्त्रेणा छाद्य वै जपेत्

ஸ்த்ரீபும் ஸாத்மக காயத்ரீம் வஸ்த்ரேணாச்சாத்ய வைஜபேத்

இந்த மந்திரம் ஸ்த்ரீபும் ஸாத்மக தேவதாத்மகமாக விருப்பத்தால் வஸ்திரத்தினால் கையை மூடிக்கொண்டுத் தான் ஜபம் செய்யவேண்டும். இப்படியாக காயத்ரீ மந்திரத்தினால் ஆதித்யமண்டல மத்யவர்த்தியான பரமபுருஷனேத்யேயன் என்பதை ஸநத்குமாரஸ்ம்ருதியும் கூறுகிறது.

आदित्य मण्डलेध्याये त्परमात्मान मव्ययम् ।
विष्णुं चतुर्भुजं रत्न पङ्कजासन मध्यगम् ।
किरीट हार केयूर कटकादि विभूषितम् ।
श्रीवत्स वन माला श्री तुलसी कौस्तुभोज्वलम् ।
हरिं पीतांबर धरं शङ्ख चक्र गदा धरम् ।
प्रसन्न वदनं रत्न कुण्डलैर्मण्डिता ननम् ।
सर्वरत्न समायुक्तं सर्वाभरण भूषितम् ।
एवंध्यात्वा जपेन्नित्यं मन्त्र मष्टोत्तरशतम् ।

(ஆதித்ய மண்டலே த்யாயேத் பரமாத்மாந மவ்யயம்)
விஷ்ணும் சதுர்புஜம் ரத்ந பங்கஜாஸந மத்யகம்
கிரீடஹாரகேயூர கடகாதி விபூஷிதம்)
ஸ்ரீவத்ஸ வநமாலா ச்ரீ துளஸீ கௌஸ்துபோஜ்வலம்।
ஹரிம் பீதாம்பரதரம் சங்க சக்ரகதாதரம்
ப்ரஸந்தவதநம் ரத்ந குண்டலைர் மண்டிதாநநம்
ஸர்வ ரத்ந ஸமாயுக்தம் ஸர்வாபரண பூஷிதம்
ஏவம் த்யாத்வா ஜபேந் நித்யம் மந்த்ரமஷ்டோத்தர சதம்)

இந்த மந்திரத்தை எப்படி ஜபிக்க வேண்டும் எனப்தை வ்யாஸர் கூறுகிறார்.

त्रिसन्ध्यं तु जपेद्देवीं विच्छिद्यैवपद त्रयीम् ।
अविच्छिन्नां जपेद्यस्तु रौरवं नरकं व्रजेत् ।।

த்ரிஸந்த்யம் து ஜபேத்தேவீம் விச்சித்யைவ பதத்ரயீம்
அவிச்சிந் நாம் ஜபேத்யஸ்து ரௌரவம் நரகம் வ்ரஜேத்

மூன்று வேளைகளிலும் செய்யப்படுகிற காயத்ரியை பாதம் – பாதமாக பிரித்துத்தான் ஜபிக்க வேண்டும் – அப்படிப் பிரிக்காமல் ஜபம் செய்கிறவன் ரௌரவம் என்கிற கொடிய நரகத்தை அடைய வேண்டிவரும் என்று எச்சரிக்கப்படுகிறான்.

विष्णु स्मृतौ

अछिन्न पादा गायत्री ब्रह्महत्यां प्रयछति ।
छिन्न पादातु गायत्री ब्रह्महत्यां व्यपोहति ।।
तस्मात्पादत्रयं छित्वा जप यज्ञं समाचरेत् ।।

(அச்சிந்ந பாதா காயத்ரீ ப்ரஹ்மஹத்யாம் ப்ரயச்சதி
சிந்ந பாதாது காயத்ரீ ப்ரஹ்மஹத்யாம் வ்யபோஹதி
தஸ்மாத் பாதத்ரயம் சித்வா ஜபயஜ்ஜம் ஸமாசரேத்)

பாதம் பாதமாக பிரிக்காமல் ஜபிக்கப்படும் காயத்ரீ ப்ரஹ்மஹத்தி என்கிற பாபத்தையளிக்கிறது. அதுவே பாதம் பாதமாக மூன்றாக பிரித்து ஜபம் செய்தால் ப்ரஹ்மஹத்தி தோஷத்தையும் போக்க வல்லது. ஆதலால் மூன்று பாதமாகப் பிரித்து ஜபம் ஹோமம் இவைகளை அனுஷ்டிக்கவேண்டும். வேதத்தில் காயத்ரியைப் புகழும் போது **अष्टाक्षरा गायत्री चतुर्विंशत्यक्षरा गायत्री** (அஷ்டாக்ஷரா காயத்ரீ, சதுர்விம்சத்யக்ஷரா காயத்ரி) என்பதாக் காண்கிறோம். இங்கு அஷ்டாக்ஷரா காயத்ரீ என்பது பாதம் ஒன்று 8 எழுத்து கொண்டது என்றும் சதுர்விம்சத்யக்ஷரா காயத்ரீ என்பது முழுமையான காயத்ரீ 24 எழுத்துக்களைக் கொண்டவை என்றும் ஏற்படுகிறது. தத்ஸவிதுர்வரேண்யம் என்கிற முதல் பாதத்தில் 7 எழுத்துதான் உள்ளது. அப்படியாகக் கணக்கிட்டால் மந்த்ரம் முழுவதும் 23 எழுத்துக்கள்

கொண்டதாகும். 24 எழுத்து வராவிட்டால் மந்த்ரம் பூர்த்தியாகாதே என்று மஹர்ஷிகள் ஆலோசித்துப்பார்க்குமளவில் वृद्ध हारीत என்பவர் தன்னுடைய ஸ்ம்ருதியில் வ்யவஸ்தை செய்கிறார்.

वरेण्यं विरळं जायं जप काले द्विजोत्तमैः ।
वरेण्यं संहिता काले वरेणियं जपे स्मृतम् ।।
वरेण्य मिति यो ब्रूया ज्जप काले द्विजो यदि ।
सच पाप्मा महा घोरे नरक पच्यते ऽ ग्निना ।।
स्त्री पासात्मक गायत्ररं वस्त्रेणा च्छाद्यवै जपेत् ।
उदयेप्राङ्मुख स्तिष्ठन् सङ्ख्यायैव जपेद्बुधः ।।

வரேண்யம் விரளம் ஜப்யம் ஜபகாலே த்விஜோத்தனம்:
வரேண்யம் ஸம்ஹிதாகாலே வரேணியம் ஜபேஸ்ம்ருதம்
வரேண்யமிதி யோப் ரூயாத் ஜபகாலே த்விஜோயதி
ஸசபாப்மா மஹாகோரே நரகே பச்யதே க்நிநா
ஸ்த்ரீபும்ஸாத்மக காயத்ரீம் வஸ்த்ரேணாச்சாத்ய வை ஜபேத்
உதயே ப்ராங்முகஸ்திஷ்டந் ஸங்க்யாயைவ ஜபேத்புத:

ஜபம் செய்யும் ஸமயம் தவிர இதர ஸமயங்களில் இந்த காயத்ரியை உபயோகிக்கும் போது வரேண்யம்'' என்றே சொல்லவேண்டும். காயத்ரீஜபம் செய்யும் போது மட்டும் ''வரேணியம்'' என்றே சொல்ல வேண்டும். (அப்படியாகில் 24 எழுத்தும் வந்துவிடும்) இப்படிச் செய்யாதவன் நரகத்தில் நெருப்பினால் சுடப்படுகிறான்.

இந்த காயத்ரியை எந்த முறையில் ஜபிப்பது சிறந்தது என்பதை மாதவீயம் சொல்லுகிறது.

वाचिकाख्य उपांशुश्च मानसश्च त्रयः स्मृताः ।
त्रयाणां जप यज्ञानां श्रेयान्स्या दुत्तरोत्तरैः ।।
यदुच्च नीच स्वरितैः स्पष्ट स्पष्ट पदाक्षरैः ।
मन्त्र मुच्चारये द्वाचा जप यज्ञस्स वाचिकः ।

शनै रुदीरयेन्मन्त्र मीषदोष्टौ प्रचालयेत् ।
किञ्चि छब्दं स्वयं विद्यादुपांशुस्सजपस्स्मृतः ।
धिया यदक्षर श्रेण्या वर्णाद्वर्णं पदात्पदम् ।
मन्त्रार्थ चिन्तरनं भूयः कथ्यते मानसो जपः ।
मत्तमं मानसं जपय मुपांशु र्मध्यमः स्मृतः ।
अधमं वाचिकं प्राहुस्सर्वमन्त्रेषु वै द्विजाः ।
वाचिकस्य। क्र मेकंस्या दुपांशुश्शत मुच्यते ।
सहस्रं मानसं प्राक्तं मन्वत्रि भृगुनारदैः ।

(வாசிகாக்ய உபாம்சுச்ச மாநஸச்ச த்ரயஸ்ம்ருதா:
த்ரயாணம் ஜபயஜ்ஞாநாம் ச்ரேயாந்ஸ்யா துத்தரோத்தர:
யதுச்ச நீச ஸ்வரிதை ஸ்ஸ்பஷ்ட ஸ்பஷ்ட பதாக்ஷரை:
மந்த்ர முச்சாரயேத்வாசா ஜபயஜ்ஞஸ்ஸ வாசிக:
சநை ருதீரயேந் மந்த்ர மீஷ தோஷ் டௌள ப்ரசாலயேத்
கிஞ்சிச் சப்தம் ஸ்வயம் வித்யா து பாம்சு ஸ்ஸ ஜபஸ்ம்ருத:
தியாயதக்ஷர ச்ரேண்யா வர்ணாத் வர்ணம் பதாத் பதம்
மந்த்ரார்த்த சிந்தனம் பூய: கத்யதே மாநஸொ ஜப:
உத்தமம் மாநஸம் ஜப்யமுபாம்சுர் மத்யமஸ்ஸ்ம்ருத:
அதமம் வாசிகம் ப்ராஹு ஸ்ஸர்வமந்த்ரேஷு வைத்விஜா:
வாசிக ஸ்யைக மேகம்ஸ்யா துபாம்கச்சத முச்யதே
ஸஹஸ்ரம் மாநஸம் ப்ரோக்தம் மந்வத்ரி ப்ருகுநாரதை:)

ஜபத்தை வாசிகம், உபாம்சு, மாநஸம் என்பதாக மூன்று விதமாகப் பிரிக்கிறார்கள். ஸ்பஷ்டமாக வாயைவிட்டு இறைந்த குரலில் சொல்வது வாசிகம் சப்தமில்லாமல் உதடுகளை அசைத்து மனதிற்குள் ஜபிப்பது உபாம்சு.

கீழே சொன்னபடி உரக்கச் சொல்லாமலும் உதட்டைக்கூட அசைக்காமலும் அதே ஸமயம் மந்த்ர அர்த்தத்தை நினைத்துக் கொண்டு மனதிற்குள் ஜபம் பண்ணுவது மாநஸம் எனப்படும்.

இவைகளுள் மாநஸம் உத்தமம் என்றும் உபாம்சு மத்யம் என்றும் வாசிகம் அதமம் என்றும் சொல்லப்படுகிறது. ரொம்பவும் இறைந்து கத்தினால் 1 பங்கு என்றும் வாசிகத்திற்கு பத்து பங்கு பலன் என்றும் உபாம்சுவிற்கு 100 மடங்கு பலன் என்றும் மாநஸீக ரூபத்திற்கு ஆயிரம் மடங்கு பலன் என்றும் கூறப்படுகிறது.

காலத்ரயத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய நியமத்தை சௌநகர், வ்யாஸர் முதலானவர்கள் கூறுகிறார்கள்.

शौनकः

कृत्वोत्तानौ करौ प्रातस्सायञ्चाधो मुखौ तथा ।
मध्ये स्तब्ध कराभयां तु जप एवमुदाहृतः ॥

க்ருத்வோத்தானௌ கரௌ ப்ராத ஸ்ஸாயந்சாதோ முகௌததா
மத்யே ஸ்தப்த கராப்யாம் து ஜப ஏவமுதாஹ்ருத:

காலை வேளையில் இருகைகளும் நிமிர்ந்தபடிக்கும் மாலையில் கீழ்நோக்கிய படிக்கும் மாத்யாஹ்நிகத்தில் நடுத்தரமாகவும் இருக்கும்படிக்கு ஜபம் செய்ய வேண்டும்.

व्यासः

प्रातरुत्तान पाणिभ्यां स्तब्धाभ्यां दिन मध्यमे ।
अधो भुखाभ्यां पाणिभ्यां सायं संलक्षितो जपेत् ।
प्रातर्नासा समौ कुर्या न्मध्याह्ने तूरसा समौ ।
सायङ्काले नाभि समौ करौ कुर्या दतन्द्रितः ।
अपवित्रकरो ऽ शुद्धः प्रलपन्न जपेत्कचित् ।
अप्रावृतकरो वाऽपि शिरसि प्रावृतो ऽपिवा ।

வ்யாஸ:

ப்ராதருத்தாந பாணிப்யாம் ஸ்தப்தாப்யாம் தி நமத்யமே
அதோ முகாப்யாம் பாணிப்யாம் ஸாயம் ஸம்லஷிதோ ஜபேத்

ப்ராதர் நாஸா ஸமெள குர்யாந்மத்யாஹ்நே தூரஸா ஸமெள
ஸாயங்காலே நாபி ஸமெள கரௌ குர்யாததந்ரித:
அபவித்ர கரோ ऽ சுத்த: ப்ரலபந்த ஜபேத் க்வசித்
அப்ராவ்ருத கரோவாபி சிரஸிப்ராவ்ருதோ பிவா

சௌநகரின் அபிப்பிராயத்துடன் அதிகப்படியாக வ்யாஸர் கூறுகிறார். காலை வேளையில் இரு கைகளை முக்கிற்கு ஸமாகவும் மாத்யாஹ்நிகத்தில் மார்பிற்கு ஸமமாகவும் மாலையில் தொப்புளுக்கு ஸமமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம் கூட சோம்பல் கூடாது.

கையில் பவித்ரம் அவச்யம் தரித்திருக்க வேண்டும் –அசுத்தனாகவில்லாமல் ஸ்னானாதிகளால் சுத்தஞ்க விருக்கவேணும் – பேசக்கூடாது. கைகளை மூடாமல் ஜபம் செய்யக்கூடாது. தலை துணியினால் சுற்றப்பட்டதாகவும் இருக்கக்கூடாது.

शौनकः

मन स्सन्तोषां शौचं मौपं मर्नत्रार्थचिन्तनम् ।
अव्यग्रत्व मनिर्वेदा जप सम्पत्ति हेतवः ।।

(மநஸ்ஸந்தோஷணம் சொசம் மௌநம் மந்த்ரார்த்த சிந்தனம் ।
அவ்யக் ரத்வமநிர்வேதோ ஜப ஸம்பத்திஹே தவ:।।)

மநஸ்ஸந்துஷ்டி – ஆசாரம், மௌநம், மந்த்ரார்த்தை நினைத்தல், வேறு கார்யங்களில் மனதை செலுத்தாதல், உத்ஸாஹம் இவைகள் ஜபத்தை அனுஷ்டிப்பதற்கு முக்யமானவைகள்.

व्यासः

नप्रक्रामन्तचहसन् न पार्श्व मव लोकयन् ।
नापाश्रितो न जल्पंश्च न प्रावृत शिरास्तथा ।
न पदापद माक्रम्य न चैवहि तथा करौ ।
नचासमाहित मनाः न च संश्रावयन् जपेत् ।।

வ்யாஸ:

நப்ரக்ராமந்நச ஹஸந் ந பார்ச்வ மவ லோகயந்
நாபாச்ரிதோந ஜல்ப்பம்ச்ச நப்ராவ்ருத சிராஸ்ததா
நபதாபதமாக்ரம்ய நசைவஹி ததா கரௌ
நசாஸமாஹித மநா: ந ச ஸம்ச்ராவயந் ஜபேத்

மேலும் ஜபகால நியமங்கள் சொல்லப்படுகின்றன. அடி எடுத்து வைத்தல் – சிரித்தல் – பக்கம் பார்த்தல், மரம், சுவர் இவைகளை ஆச்ரயித்து இருத்தல் (சாய்ந்து கொள்ளுவது) பேசுதல், துணியைக் கொண்டு தலையைச் சுற்றிக் கொள்ளுதல் ஒரு காலுடன் மற்றொரு காலை இணைத்துக் கொள்ளுதல், அவ்விதம் கையை வைத்துக் கொள்ளுதல், ஜபத்தில் ஈடுபாடு கொள்ளாத மனதை உடைத்தாயிருத்தல், பிறர் கேட்கும் படிக்கும் பேசுதல் இவைகளைத் தவிர்க்க வேண்டும். அதே ஸமயம் ஒரு ஸமயத்தில் முக்யமான பெரியோர்கள் வந்தால் எப்படியிருக்க வேண்டும் என்று போதாயநர் கூறுகிறார்.

विरमे द्ब्राह्मणे प्राप्ते कामन्तेन च संवदेत् ।
शूद्रं दृष्ट्वातु सम्प्राप्ते नाधीयीत कथञ्चन ।

(விரமேத் ப்ராம்மணே ப்ராப்தே காமம் தேநச ஸம்வதேத்
ஆத்ரம் த்ருஷ்ட்வாது ஸம்ப்ராப்தே நாதீயித கதஞ்சன)

ஜப மத்தியில் ப்ராம்மணன் வந்துவிட்டால் ஜபத்தை நிறுத்திக் கொண்டு அவருடன் விஷயத்தைப் பேசி விட்டு ஜபத்தை தொடரவேண்டும். சூத்ரனைப் பார்த்தால் ஜபத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்விதம் வேதத்தைச் சொல்லுவதிலிருந்து ஓய்வு பெறவேண்டும்.

இதே விஷயத்தை மற்றுமொரு இடத்தில் சொல்லுகிறார்.

जप मध्ये गुरुर्वापि वष्णवो य स्सभागतः ।
सम्भाषणादि पूजां तु तस्य कृत्वा ऽ नु मान्य च ।
अनुज्ञाप्य ततः कृत्वा जपशेषं समाहितः ।
सर्वस्य प्रभवो यस्माद्विष्णु पादाश्या नराः ।
तन्मूलतः क्रियास्सर्वास्सफलास्तु भवन्ति हि ।

(ஜபமத்யே குருர்வாபி வைஷ்ணவோய ஸ்ஸமாகத:
ஸம்பாஷணாதி பூஜாம்து தஸ்ய கிருத்வா நு மாந்யச
அநுஜ்ஞாப்ய தத: க்ருத்வா ஜப சேஷம் ஸமாஹித:
ஸர்வஸ்ய ப்ரபவோ யஸ்மாத் விஷ்ணு பாதாச்ரயா நரா:
தந்மூலத: க்ரியாஸ் ஸர்வாஸ் ஸபலாஸ்து பவந்திஹி)

ஜபமத்தியில் வேத ஆசார்யனா வைஷ்ணவனோ வந்துவிட்டால் அவருடன் பேசி க்ஷேம வார்த்தைகளை பேசி கௌரவப்படுத்தி வழியனுப்பினப் பிறகு ஈடுபாட்டுடன் ஜபத்தை முடித்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மூலகாரணம் பகவான் விஷ்ணு அவன் திருவடிகளை ஆச்ரயித்திருக்கும் பாகவதர்களை உபசரித்து கௌரவிப்பது ஸமஸ்தமான காரியங்களும் ஸபலமாக ஆக ஹேதுவாகிறது.

ஜப காலகத்தில் தவிர்க்க வேண்டியவைகள்

निष्ठीवं जृम्भणं क्रोधो निद्रालस्य क्षुधा मदः ।
पतितश्वान्त्यजा लोका दशैते जप वैरिणः ।।

(நிஷ்டீவம் ஜ்ரும்பணம் க்ரோதோ நித்ராலஸ்ய க்ஷுதா மத:
பதிதச்வாந்த்யஜா லோகா தசைதே ஜப வைரிண:)

காரி உமிழ்தல், கனைத்தல், கோபம், தூக்கம், சோம்பல், பசி, மதம், பதிதன் –நாய், சூத்ரன் இந்தப் பத்தும் ஜபத்திற்கு வைரிகள்.

आचमि त्सम्भवे चैषां स्मरे द्विष्णुं सुरार्चितम् ।
ज्योतींषिचप्रपश्येद्वा कुर्या द्वा प्राणसंयमम् ।
ज्वलनं गाश्च विप्राश्च यतीन्पाप विशुद्धये ।

ஆசமேத் ஸம்பவேசைஷாம் ஸ்மரேத்விஷ்ணும் ஸுரார்ச்சிதம்
ஜ்யோதீம் ஷி ப்ரபச்யேத்வா குர்யாத்வா ப்ராணஸம்யமம்
ஜ்வலநம் காச்ச விப்ராம்ச்ச யதீந் பாப விசுத்தயோ

கீழே கண்டவர்களைப் பார்க்க நேர்ந்தால் பகவான் விஷ்ணுவை ஸ்மரித்துவிட்டு சந்திர ஸூர்யன் முதலான ஜ்யோதிஸ்ஸைப் பார்த்தல்,

ப்ரணாயமம் செய்தல் இவைகள் நல்லது. அக்னி, பசுக்கள், பிராமணர், யதிகள் இவர்களை பார்ப்பது பாபங்களிலிருந்து விடுபடுவதற்காக.

सन्ध्ययो रुभयो र्जप्य भोजने दन्तधावने ।
षिदृकार्ये च दै वेच तथा मूत्र पुरीषयो : ।।
गुरुणां सन्निधौ दाने यागेचैव विशेषतः ।
एतेषु मौन मातिष्ठन् स्वर्गं प्राप्नोतिमानवः ।।

ஸந்த்யயோ ருபயோர் ஜப்யே போஜநே தந்த தாவநே
பித்ருகார்யே ச தை வேச ததாமூத்ர புரீஷயோ:
குரூணாம் ஸந்திதௌள தாநே யாகே சைவ விசேஷத:
ஏதேஷுமௌந மாதிஷ்டந் ஸ்வர்க்கம் ப்ராப்நோதி மாநவ:

இரு ஸந்த்யை – போஜனம் – பல்துலக்கல், பித்ருகார்யம், தேவகார்யம், மூத்ர உத்ஸர்க்கம் – அடுத்த கார்யம், ஆசார்யனின் முந்நிலை, தாநம், யாகம் இவைகளில் மௌநம் அனுஷ்டித்தல் அவச்யம். யாகாதிகளில் மௌநத்திற்கு விரோதமாக பேசும்படி நேர்ந்தால் इदंविष्णुः (இதம் விஷ்ணு:) என்கிறதையோ तद्विष्णोः (தத் விஷ்ணோ:) என்கிறதையோ (இது வைஷ்ணவ காயத்திரி) ஜபிக்க வேண்டும்.

இந்த காயத்ரியை ஜபம்செய்யும் பொழுது ஐந்து இடத்தில் நிறுத்தி – நிறுத்திச் சொல்ல வேண்டும் என்பதாக போதாயநர் சொல்லுகிறார்.

प्रणवो व्याहृतयः सावित्रीचेत्येते पञ्च
ब्रह्म यज्ञाः अहरह ब्राह्मणं किल्बिषात् पावयन्ते ।।

ப்ராணவோ வ்யாஹ்ருதய: ஸாவித்ரீ சேத்யேதே பந்ச
ப்ரம்ஹ யஜ்ஜா அஹரஹர் ப்ராஹ்மணம் கில்பிஷாத் பாவயந்தே)

முதலில் ப்ரணவம், மூச்சுவிட்டுவிட்டு பிறகு வ்யாஹ்ருதி – முச்சுவிடல் – பர்க்கோதேவஸ்ஸதீ மஹி. மூச்சுவிடல் என்பது ஆங்காங்கு நிறுத்தி – நிறுத்திச் சொல்வதற்காக குறிக்கப்பட்டுள்ளது.

இப்பேர்ப்பட்ட காயத்ரியின் ப்ரபாவத்தைப் பற்றி வேதமே ஒரு கதையை நமக்குச் சொல்லுகிறது. ஸ்வாத்யாய ப்ராம்மணத்தில்.

முன்னொறு ஸமயத்தில் ரக்ஷஸ்ஸுகள் கடுமையான தபஸ்யை அனுஷ்டித்தனர். கடுமையான (உக்ரமான) தபஸ்ஸின் காரணமாக ப்ரஜாபதி ப்ரத்யக்ஷமாகி என்ன வரம் வேண்டும் என்று கேழ்க்க எங்கள் பலத்தினாலேயே பலசாலியான ஸூர்யனை எதிர்க்க வேண்டும் என்று வரத்தைக் கேழ்க்க ப்ராஜாபதியும் ''அப்படியேயாகட்டும்'' என்று வரத்தையளித்து விடுகிறார். அந்த வரபலத்தினால் ரக்ஷஸ்ஸுகள் உதிக்கிற ஸூர்யனையும் அவ்விதம் அஸ்தமிக்கிற சூர்யனையும் எதிர்க்க ஆரம்பித்தனர்.

நிரந்தர ஸஞ்சாரம் கொண்ட ஸூர்யனுக்கு இதனால் ஸஞ்சாரத்திற்கு இடையூறு ஏற்படவே அவ்விடையூறைக் களைந்து ஸூர்யனை ரக்ஷிப்பதற்காக ஒரு உபாயத்தை பிரம்மணர்கள் அடைகிறார்கள். அவ்வுபாயமானது காலையிலும் மாலையிலும் ஸந்த்யாவந்தனத்தில் அர்க்யம் கொடுக்கிறார்கள் அல்லவவா! காயத்ரீ மந்த்ரப்ரபாவத்தினால் அந்த அர்க்யஜபமானது வஜ்ராயுதமாக பரிணமித்து ஸூர்யனை எதிர்க்கிற ராக்ஷஸர்களை மந்தேஹாருணம் என்கிற தீவில் தள்ளி விடுகிறது. அடுத்த ஸந்த்யா காலம் வரையிலும் ஸூர்யன் நிம்மதியாக ஸஞ்சரிக்கிறான். ஸந்த்யாகாலத்தில் ராக்ஷஸர்களும் உத்தரித்துக் கொண்டு ஸூர்யனை எதிர்க்கின்றனர். இப்படியாக இந்த காயத்ரீ மந்த்ர ப்ரபாவத்தினால் ஸாதரண ஜபமே வஜ்ராயுதமாக ஆகிவிடுகிறது என்றால் காயத்ரியின் பிரபாவம் அளவிடமுடியாதல்லவா?

இந்த இதிஹாஸத்தில் யாவரும் தபஸ் செய்து அதன் பலனை அடைய முடியும் – தேவதைகளும் தபஸ்ஸிற்கு கட்டுப்பட்டு வேண்டப்படுகிற வரத்தையளித்துவிடுகின்றனர். ஸூர்யனை எதிர்க்கும் சக்தியைக் கூட பெற்று விடுகின்றனர். காயத்ரீயின் பிரபாவத்தினால் பலிஷ்டர்களான ராக்ஷஸ்ஸுகளையும் வெகுதூரம் தள்ளிவிட முடிகிறது. அப்படியிருந்தும் எல்லாரிடத்திலும் அன்பு செலுத்த வேண்டியிருக்க இந்த ராக்ஷஸ்ஸுகளை தீபத்தில் தள்ளி விடுவதால் அதனால் சில பாபம் ஏற்படத்தான் செய்கிறது. அதைப் போக்கிக் கொள்ள असावादित्यो ब्रह्म (அஸாவாதித்யோ ப்ரஹ்ம) என்று ப்ரதக்ஷணம் செய்வதினால் அந்தப் பாவத்தை இவன் போக்கி கொள்கிறான்.

மற்றும் ஒரு ப்ரபாவம் கொண்டது காயத்ரீ

த்வாதசியன்று பாரணை முக்யம் – அன்று சாதாரணமாக உதயாதி 6 நாழிகைக்குள்ளான பாரணை செய்யலாம். அதுவே அல்ப்பத்வாதசியகா ஸம்பவித்தால் ஆசமனம் செய்துவிட்டு உள்ளங்கையில் கொஞ்சம் ஜலத்தைச் சேர்த்து கொண்டு பத்து தடவை காயத்ரியினால் அபிமந்த்ரணம் செய்து கொண்டு பிறகு अश्चिता नशिता என்கிற ச்லோகத்தைச் சொல்லி ஜல பாரிணையை முடித்துக் கொண்டு பிறகு ஸாவகாசமாக பாரணையைக் கொள்ளலாம்.

இன்னும் காயத்ரியின் பிரபாவம் பல விடங்களில் பரக்கப் பேசப்படுகிறது. விஸ்தார பயத்தினால் இவ்வளவோடு முடித்துக் கொண்டு உபநயன விஷயத்தின் சேஷத்தைப் பார்ப்போம்.

कुमार उत्तरेण णजुषो त्तरमोष्ठमुपस्पृशते ।।

(குமார உத்தரேணயஜுஷா உத்தரமோஷ்ட முபஸ்ப்ருசதே)

குமாரன் அடுத்த மந்த்ரமான अवृधं (அவருதம்) என்கிற மந்திரத்தினால் மேல் உதட்டைத் தொட வேண்டும். இங்கு ஒரு தர்மசாஸ்திரத்தைக் கூற வேண்டியுள்ளது.

श्यावान्त पर्यन्ता वोष्ठा वुपस्पृश्याचामेत्

ச்யாவாந்த பர்யந்தா வோஷ்டா வுபஸ்ப்ருச்யா – சாமேத்)

உதட்டைத் தொடும்படி நேர்ந்தால் ஆசமனம் செய்யவேண்டும். எது பர்யந்தம் உதட்டின் எல்லையென்றால் 'ச்யாவம்'' என்று சொல்லப்படுகிற மயிர் அற்றபாகம் வரையிலான உதட்டை தொடும்படி நேர்ந்தால் ஆசமனம். ஆசமனம் செய்வதற்குக் குமாரனை வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று ஆசமனம் செய்விக்க ப்ராப்தமாக, பிற்பாடு उदायुषेत्युत्थाप्य என்கிற ஸூத்ரசைலியியைக் கொண்டு அந்த மந்திர கார்யம் வரும் வரையில் எழுந்திருக்கக் கூடாது என்று ஏற்படுகிற படியால் குமாரனை எழுந்திருக்க வைக்காமல் வடக்குமுகமாக மட்டும் திரும்பி ஆசமனத்தைச் செய்வித்து மறுபடியும் முன்புபோல் ஆசார்யனுக்கு எதிராக மேற்கு முகமாகவே இருந்து மேலேவரும் காரியங்களையும் செய்து வரவேண்டும்.

कर्णा वुत्तरेणः *(கர்ணாவுத்தரேண)*

ब्रह्मण आणीस्थः *(ப்ரஹ்மண ஆணீஸ்த:)*

என்கிற மந்திரத்தினால் இரண்டு காதுகளையும் தொடவேண்டும். இந்த மந்திரத்தின் அர்த்தமாவது ஹே காதுகளே. என்னால் க்ரஹிக்கப்பட்ட ஸாவித்ரீரூபமான வேதத்திற்கு முளைக்குச்சிபோல் ஆகிறீர்கள். நுகத்தடியில் போடப்பட்டிருக்கும் முளைக்குச்சிகள் எப்படி மாடுகளை அதைத்தாண்டிப் போகவிடாமல் கட்டுப்படுத்துகின்றனவோ அவ்விதம் இந்தக் காதால் கேட்டு அந்தக் காதால் விட்டு விடுகிற மாதிரி ஆகிவிடாமல் என்றும் என் உள்ளத்தில் ஸாவித்ரீ நிலைத்திருந்து அனுக்ரஹிக்கவேணும் என்பதாக பிரார்த்தனை–

उत्तरेण दण्डमादत्ते (உத்தரேண தண்டமாதத்தே) அடுத்த மந்த்ரமான सुश्रवस्सुश्रवसं (ஸுச்ரவ ஸ்ஸுச்ரவஸம்) என்கிற மந்திரத்தினால் பலாச தண்டத்தை எடுக்க வேண்டும். பிராம்மணன் பலாசதண்டத்தையும் கிளையில் உண்டான ஆலமரத்தின் தண்டத்தை க்ஷத்திரியனும், இலந்தை அத்தி இவைகளில் ஒன்றின் தண்டத்தை வைச்யனும் எடுத்துக் கொள்ளவேண்டும். மந்த்ரமாவது. सुश्रवस्सुश्रवसं माकुरु (ஸுச்ரவ ஸ்ஸுச்ரவஸம் மாகுரு) ஹே பலாசதண்டமே! நீ தான் நல்ல காதை கொண்டவன் – அப்பேர்ப்பட்ட பெருமை பலாசத்திற்கு எப்படிக் கிடைத்தது என்பதை வேதமே வேறோரு இடத்தில் சொல்லுகிறது.

देवा वै ब्रह्मन्नवदन्त - तत्पर्ण उपाशृणोत्, सुश्रवावै नाम....

(தேவாவை ப்ரம்ஹந்நவதந்த – தர்பர்ணஉபா ச்ருணோத் – ஸுச்ரவா வை நாம)

ஒரு காலத்தில தேவர்கள் பலாசமரத்தடியில் பிரம்ம விவாதம் பண்ணிக் கொண்டிருந்ததாகவும் இடையில் மறதி ஏற்பட்டு, விட்ட இடம் தெரியாமல் தவிக்கையில் விபாதத்தைக் கேட்டுக் கொண்டிருந்த பலாசவிருக்ஷம் விட்ட இடத்தை ஞாபகப்படுத்தியவாறே அதற்கு 'ஸுச்ரவா:' என்கிற பெயர் அளிக்கப்பட்டதாகவும் இதிஹாஸம்.

सूत्रं

स्मृत श्चम इत्येत द्वसचयित्वा

(ஸ்ம்ருதஞ்சம இத்யேத த்வாசயித்வா)

स्मृतश्चमे ऽ स्मृतश्चमे ஸ்ம்ருதஞ்சமே அஸ்ம்ருதம் சமே – இது முதலான மந்த்ரங்களை குமாரனுக்குச் சொல்லிவைக்க வேண்டும் – இது 9 மந்த்ரங்கள் கொண்டவை. அதில் முதல் எட்டு மந்திரங்கள் பரஸ்பரம் மாறுபட்ட அர்த்தம் கொண்டவை. பிரம்மசாரியான எனக்கு அவைகள் யாவுமே விரதங்கள்.

1. ஸ்ம்ருதம் – அஸ்ம்ருதம்
2. நிந்தா – அநிந்தா
3. ச்ரத்தா – அச்ரத்தா
4. விந்தா – அநிந்தா
5. ச்ருதம் அச்ருதல்
6. வ்ரதம் – அவ்ரதம்

7. தப: - அதப:

8. வ்ரதம் - அவ்ரதம் என்பதாக.

ஸ்ம்ருதம் என்றால் நினைத்தல் எண்ணப்படுதல். அஸ்ம்ருதம் என்றால் மறதி – இது பரஸ்பரம் விபரீதமாகத் தோன்றினாலும் இந்த இரண்டுமே எனக்கு (ஸமமான) விரதம் என்கிறான் குமாரன். வேதாத்யயன விஷயத்தில் (படிப்பு விஷயத்தில்) ஸமரணம் அவச்யம். அவ்விதம் அஸத்விஷய ச்ரவணத்தில் மறதியும் அவச்யம்.

அவ்விதம் – நிந்தா – நிந்திக்கத்தக்க விஷயத்தில் வெறுப்பு – வேதாதி விஷயத்தில் வெறுப்பு இன்மை. ச்ரத்தா – தர்மங்களில் ச்ரத்தை – அதர்மங்களில் அச்ரத்தை பிரம்மவித்யாதிகளிடம் ப்ரவிருத்தி – வேதபாஹ்யங்களில் அப்ரவிருத்தி – வேதம் – அதன் அங்கம் மற்றும் பகவத்குணங்களை கேட்ப்பது – அதற்கு எதிரான பாஷண்டாதிகளின் க்ரந்தங்களில் ஈடுபடாமை. உண்மை – அவ்விதம் உயிருக்கு ஆபத்து நேரிடும்போது அவச்யமாகிறது. பொய் பேசுதல், தப:, பிக்ஷாசரணாதிகள் - அதற்கு எதிரிடையானது அதப: - அவைகளை அனுஷ்டிக்காது இருத்தல். வ்ரதம் அநத்யயனாதிகளில் வேதம் படிக்காமை, ஏதோ பயத்தினால் அதை மீறுதல் இவ்விதம் வேத விஷயத்தில் என்னென்ன விரதம் சொல்லப்பட்டுள்ளதோ, மேலும் இந்திரனோடும் ப்ரஜாபதியினோடும், தேவனோடும், தவ ஜனனுடனும், மனிதனோடும், மனுஷ்ய ராஜனுடனும், பித்ருக்களுடனும், பித்ரு ராஜனான யமனுடனும், கந்தர்வ அப்ஸரஸ்ஸுகளுடன் கூடியவனுமான அக்னிக்கு என்னென்ன விரதம் உண்டோ அவ்வளவும் எனக்கும் பலிதமாக வேண்டும்.

அக்நியின் விரதமாவது ரக்ஷித்தல் இந்திரனின் விரதமாவது தலைவனாயிருத்தல், ப்ரஜாபதி விரதமாவது ஸ்ருஷ்டித்தல், தேவனின் விரதமாகவது கொடுத்தல், தேராஜனின் விரதமாவது தேவர்களுக்கு பிரியமாயிருத்தல்; மனுஷ்ய விரதமாவது இன்சொல் கூறுதல், மனுஷ்யராஜ விரதமாவது ஜனங்களின் ஸம்ரக்ஷணம், பித்ருக்களின் விரதமாவது ஸந்ததியை உண்டு பண்ணுதல், யமனுடைய விரதமாவது எல்லாரையும் ஸமமாக பாபித்து குற்றத்திற்குத்தக்கவாறு சிக்ஷித்தல் கந்தர்வர்களின் விரதமாவது தேவர்களது ஸ்துதி செய்தல், அப்ஸரஸ்ஸுகளின் விரதமாவது சுச்ருஷையில் ஸாமர்த்யம் இவைகள் எல்லாம் எனக்கு ஸித்திக்கவேணும் என்று அபிப்பிராயம்.

(सू) बुखे वरन्दत्वा उदानुषेत्युत्थाप्य उत्तरै रादित्य मुप तिष्टते ॥

குரவேவரம் தத்வா உதாயுஷேத்யுத்தாப்ய – உத்தரை ராதித்ய முபதிஷ்டதே!

இப்பேர்ப்பட்ட பெருமை வாய்ந்த காயத்ரி மந்த்ரத்தை உபதேசம் செய்த குருவிற்கு வரம் (தக்ஷிணை) கொடுக்க வேண்டும் – கொடுத்ததை ஆசார்யன் பெற்று

उदायुषः (உதாயுஷா) என்கிற மந்த்ரத்தினால் ப்ரம்மோபதேச காலத்திலிருந்து உட்கார்ந்திருக்கும் குமாரனை எழுப்பி நிற்க வைக்க வேண்டும். அந்த மந்த்ரம் ஆத்மகாமியானதால் எழுந்ததும் அவனுக்குச் சொல்லி வைக்கவேண்டும்.

இங்கு ஒரு சாஸ்திர விசாரம். வரம் என்றால் என்ன? அதை வாங்கிக் கொள்ள ஆசார்யனுக்கு ஏதாவது நியமங்கள் உண்டா என்பதை விசாரிக்கிறார்கள் வ்யாக்யாதாக்கள். வேதங்களில் யாகங்களுக்கு தக்ஷிணை என்பது அவச்யம் கொடுத்தேயாக வேண்டும். கவி காளிதாஸனும் अध्वरस्येवदक्षिणा (அத்வரஸ்யேவ தக்ஷிணா) என்கிறார். உபநயனம் என்பதும் ஒரு ச்ரௌத கர்மா'' என்பதை முதலிலேயே உபபத்தியுடன் ப்ரதர்சனம் செய்துள்ளேன். ஆதலால் தக்ஷிணை கொடுப்பதும் அவச்யம் ஆகிறது. இங்கு தக்ஷிணை ''வரம்'' என்று மட்டும் தெரிகிறது. வரம் என்றால் என்ன? गौर्वै वरः (கௌர்வை வர:) என்பதாக ஆபஸ்தம்பர் கூறுகிறார். ஆக கோவை தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும் என்பதாகிறது. உபநயனம் ச்ரௌத கர்மாவாகவும் ஆகிறது என்பதால் ச்ரௌதகாரியங்களில் சொல்லப்படும் ப்ரதிக்ரஹ (प्रतिग्रह) காரியங்களும் தானாகவே ப்ராப்தமாகின்றன. அந்த காரியங்கள் என்ன. என்ன? என்பதையும் வேதமே விவரிக்கிறது.

दक्षिणां प्रति ग्रहीष्य न्सप्तदउ कृतवो पान्यात् - आत्मान मेव समिन्धे

(தக்ஷிணாம் ப்ரதிக்ரஹீஷ்யந் ஸப்ததச க்ருத்வோ பாந்யாத், ஆத்மாந மேவ ஸமிந்தே)

யாகங்களில் தக்ஷிணையைப் பெற்றுக் கொள்ளும் முன் 17 தடவை மூச்சை விட்டு மூச்சை இழுக்கவேணும்.

அவ்விதம் देवस्यत्वा सवितुः प्रसवे + वरुणोनयतु देविदक्षिणे (தேவ ஸ்யத்வா ஸவிது: ப்ரஸவே + வருணோநயது தேவி தக்ஷிணே – என்பது வரையில் சொல்லி रुद्रायगां - तेनामृतत्वमश्यां - उत्तानस्वाङ्गिरसः प्रतिगृह्णातु (ருத்ராயகாம் – தேநாம் ருதத்வமச்யாம் உத்தாந ஸ்த்வாங்கிரஸ: ப்ரதிக்ருஹ்ணாது) என்பது வரையில் சொல்லி குரு தக்ஷிணையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ப்ரயோக புஸ்தகங்களில் இப்படி சொல்லப்படவில்லையே, விசேஷித்து ப்ரயோக ரத்ன கண்ட பூஷணத்திலும் சொல்லப்படவில்லையே என்று கேள்க்கலாம். அவர்களே ப்ராயச்சித்த ஹோம ப்ரகரணத்தில் யஜுர்ப்ரேஷ (प्रेष) ப்ராயச்சித்தமாக भुवस्वाहा என்கிற ஹோமத்தைப் பண்ணி பிறகு ஸ்மார்த்த ப்ராயசித்த ஹோமங்களைச் செய்யவேண்டும் என்று எழுதியிருப்பதாலேயே உபநயனம் (விசஷித்து) ச்ரௌத குலம் ஸ்காரமாகவும் ஒத்துக்கொள்ளப்பட்டிருப்பதால் மேலே சொன்ன ப்ரகாரம் ப்ரதிக்ரஹ மந்த்ரம் சொல்லி ப்ரதிக்ரஹம் பண்ணுவது தான் சாஸ்த்ரீயமான வழி.

பிறகு तच्चक्षुर्देवहितं (தச்சக்ஷுர்தேவஹிதம்) என்பதான மந்த்ரங்களால் ஸூர்யனை உபஸ்தானம் செய்ய வேண்டும். அடுத்த மந்த்ரம் यस्मिन्भूतञ्च (யஸ்மிந் பூதஞ்ச) என்பது

सूत्रं -

यङ्कामयेत नायं मच्छिद्येतेति तमुत्तरया दक्षिणे हस्ते गृह्णीयात्

ஸூத்ரம்:

யங்காமயேத நாயம் மச்சித்யே தேதி தமுத்தரயா தக்ஷிணே ஹஸ்தே க்ருஹ்ணீயாத்)

இந்த ஸூத்ரத்தின் அர்த்தமாவது எந்த வொரு சிஷ்யன் வித்யைகளையும் தன்னிடமே தங்கியிருந்து க்ரஹிக்க வேண்டும். என்னை விட்டுப் பிரியக் கூடாது என்பதாக ஒரு ஆசார்யன் நினைக்கிறானே அவன் விஷயத்தில் இந்த மந்திரத்தை ஆசார்யன் உபயோகிக்க வேண்டும் என்பதால் இது காம்ய விதி என்பதாகிறது.

அப்படி விரும்பும் விஷயத்தில் மட்டுமே இந்த மந்த்ரத்தை உபயோகிக்கலாம் - இதரர்கள் விஷயத்தில் உபயோகிக்க வேண்டியதில்லை என்பதும் ஸித்தமாகிறது.

பிரம்ம தக்ஷிணை ஸமர்ப்பித்து அக்னி உபஸ்தானம் செய்ய வேண்டும்.

இப்போர்ப்பட்ட உபநயன அக்னியை மூன்று தினங்கள் அணையாமல் காப்பாற்ற வேண்டும். அவ்விதம் குமாரனும் காரம், உப்பு, (புளி) இவைகளையும் தவிர்த்து பிறை அன்னத்தை புஸிக்க வேண்டும்.

அடுத்தது ஸமிதாதானம்:

परित्वेति पतिमृज्य तस्मिन्तुत्तरै र्मन्त्रैस्समिध आदध्यात्

(பரித்வேதி பரிம்ருஷ்ய தஸ்மிந்நுத்தரைர் மந்த்ரைஸ்ஸமித ஆதத்யாத்.)

परित्वाग्ने பரித்வாக்நே - என்கிற மந்திரத்திஞல் பரிமார்ஜனம் செய்ய வேண்டும். பிறகு பரிசேஷனம் செய்து अग्नये समिधं (அக்நயே ஸமிதம்) என்கிற 12

மந்த்ரங்களால் ஸமித்துகளை அக்னியில் சேர்க்க வேண்டும். உத்தர பரிசேஷனம் செய்து यत्ते अग्ने (யத்தே அக்நே) என்று ஆரம்பிக்கிற 6 மந்த்ரங்களால் உபஸ்தானம் செய்ய வேண்டும்.

இவைகளில் ஸமிதாதானத்தில் முதல் மந்த்ரமான अग्नये समिधं 'அக்நயே ஸமிதம்' என்கிற மந்த்ரத்தின் அர்த்தமாவது அக்னியின் பொருட்டு ஸமித்தை ஸமர்பிக்கிறேன். அந்த அக்னி மிகவும் பெரியவர். ஜாதவேதஸ் என்பவர் அதாவது உலகில் தோன்றிய எல்லாவற்றையுமே அறிந்தவர். ஹே அக்னியே நீ எப்படி என்னால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸமித்தினால் நன்கு ஜ்வலிக்கிறாயோ இவ்விதம் அடியேனை (என்னை ஆயுஸ் - வர்ச்சஸ், கொடுத்தல், அறிவு, பிற்காலத்தில் ப்ரக்ஞை (ஸந்ததி) பசுக்கள் பிரம்ம வர்ச்சால் அந்நாத்யம் இவைகளால் நன்கு வளர்க்க வேண்டும். அதற்கு அனுக்ரஹம் செய்ய வேண்டும்.

सूत्रं - उत्तरया संशास्ति - (உத்தரயா ஸம்சாஸ்தி) அடுத்த மந்திரத்தினால் அவனுக்குக் கட்டளையிருக்கின்றான்.

ब्रह्मचार्यसि - अपोशान, कर्म कुरु, मासुषुप्थाः। भिक्षा चर्यञ्चर - आचार्याधीनो भव

(ப்ரம்மசார்யஸி - அபோசந - கர்மகுரு - மாஸுப்த:। பிக்ஷாசர்யஞ்சர - ஆசார்யாதீநோபவ -)

குமாரனைப் பார்த்து ஆசார்யன் கட்டளையிடுகிறான். ஹே குமார நீ ப்ரம்மசாரியாய் இருக்கிறாய். அதாவது இது முதற் கொண்டு வேதம் - வேத ஸம்பந்தம் கொண்டவைகள் தவிர மற்றவைகளில் ப்ரவர்த்திக்கக் கூடாது. அபோசாந ஜலத்தை சாப்பிட வேண்டும். அதாவது எனது அனுமதியில்லாமல் ஜலத்தை மட்டுமே சாப்பிடலாம். பிறை முதலானதுகளை என் அனுமதியன்றி சாப்பிடக்கூடாது. கர்மகுரு - ஸந்த்யாவந்தன - ஸமிதாதான - ப்ரம்மயஜ்ஞ, பிக்ஷாசாணம் இவைகளைச் செய். தூங்காதே. அதாவது சாகாந்தரங்களில் **मादिवा स्वाप्सीः** (மாதிவா ஸ்வாப்ஸீ:) பகலில் தூங்காதே என்பதாக பகல் தூக்கத்தைத் தவிர்த்தல் இவ்விடத்தில் ஆபஸ்தம்பரின் அறிவுரை தர்ம ஸூத்ரத்தில் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது.

(सू) अथयः पूर्वोत्थायी जघन्य संवेशी तमाहु र्न स्वपितीति

(அதய: பூர்வோத்தாயீ ஜகன்ய ஸம்பேசீ - தமாஹுர் ந ஸ்வபிதீதி.)

எந்த ஒரு சிஷ்யன் ஆசார்யன் எழுந்திருப்பதற்கு முன் எழுந்திருந்து அவ்விதம் ஆசார்யன் தூங்கின பிறகு தூங்குகிறானே அந்த சிஷ்யனே தூங்காத வனாகவே கருதுகிறார்.

பிக்ஷாசர்யம் சர- இன்று முதல் அடுத்த ஆச்ரமத்தை அவலம்பிக்கும் வரை பிக்ஷா சரணம் செய்தே சாப்பிட வேண்டும். காமசார பக்ஷணம் (இஷ்டப்படி கண்டவிடத்தில் சாப்பிடுவதைத் தவிர்த்தல் அவச்யம்) கூடாது. ஆசார்யாதீனோ பவ- வேதம் ஓதுவிக்கும் ஆசார்யனுக்கே அதீனமாகவிருத்தல் வேண்டும் - என்பதாக.

பௌகிதமாக மஹதாசீர்வாதம் பெற்றுக் கொண்டு அக்னிஸம்ரக்ஷணம் மாத்யாஹ்நிகம்- ஸாயம் ஸந்த்யா- ஸாயம் ஸமிதாதானம், அக்னி ஸம்ரக்ஷணம் ப்ராதஸ்ஸந்த்யா - ஸமிதாதானம் இப்படியாக மூன்று ராத்ரி சென்றதும் நான்காவது தினத்தில் ப்ராதஸ்ஸந்த்யை ஸமிதாதானம் ஆனதும் அந்யத் பரிதாபனம் என்கிறதைச் செய்ய வேண்டும். (இந்த கார்யக்ரமத்தில் யஜுர் வேதிகளைப் பொருத்தவரை ஆபஸ்தம்பம் - போதாயனம் எல்லாருக்கும் இந்த 3 தினங்கள் அக்னிஸம்ரக்ஷணம் உண்டு. ஆனால் ஸாமவேதிகளுக்கு அன்றைய தினம் ஆதித்யோபஸ்தானத்துடன் அந்த அக்னி கார்யம் முடிவடைந்துவிடுகிறது. ஆயினும் மாத்யாஹ்நிகம் முதல்கொண்டு ஒவ்வொரு காலமும் ஸந்த்யை ஸமிதாதானம் பௌகிகாக்னியில் உண்டு.

அவ்விதம் ரிக்வேதிகளுக்கு அன்றிரவு ஸமிதாதானம் ஆனதும் ப்ரம்மௌதனம் என்கிற காரியம் மட்டும் சொல்லப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு ''தார்யாக்னி'' காரியம் கிடையாது.

(सू) वासश्चतुर्थीमुत्तरयाऽऽदत्ते ऽन्यत्परिधाप्य

(வாஸச்சதுர்த்தி முத்தரயாதத்தேந்யத்பரிதாப்ய)

நான்காவது தினத்தில் வேறொரு வேஷ்ட்டியைக் கட்டி விட்டு தீக்ஷாவஸ்திரமாக உடுத்தி விடப்பட்ட வஸ்த்ரத்தை

यस्य ते प्रथम वास्यं (யஸ்யதே ப்ரதமவாஸ்யம்) என்கிற மந்திரத்தினால் சிஷ்யனிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். மந்திரத்தின் அர்த்தமாவது ஹே குழந்தாய் உன்னுடைய மந்த்ரவத்தாக முதன் முதலாகக் கட்டிவிடப்பட்ட எந்த வஸ்த்ரத்தைப் ஏற்றுக்கொள்கிறோமோ, அந்த உன்னை விச்வே தேவர்கள் ரக்ஷிக்கட்டும்- அவ்விதம் உனக்கு ஸஹோதரர்களும் வளர்ச்சியடைந்தவர்களாக ஏற்படட்டும்.

இவ்விதமாக இந்த உபநயன விஷயமான கட்டுரை முடிவு பெறுகிறது.

ஸ்ரீ மதாண்டவன் ஷஷ்டியப்தபூர்த்தி மலரில் அடியேனையும் ஒரு பொருளாகக் கொண்டு இந்தக் கட்டுரையை எழுத நியமித்ததற்கு அடியேனுடைய கிருதார்த்ததையை விஜ்ஞாபித்துக் கொள்கிறேன். கட்டுரை சற்று விரிவடைந்த போதிலும் வாசகர்கள் சற்ற பொருமையுடன் கடாக்ஷித்து ஆங்காங்கு உள்ள ஸாரங்களை மனதில் கொண்டு தங்கள் - தங்கள் கிருஹங்களில் நடைபெறும் வைபவங்களில் இதையும் பிரகாசிப்பித்து அந்த வடுக்களுக்கும் ஹிதமான விஷயத்தை எடுத்துரைத்து அவர்களின் வருங்கால க்ஷேமத்திற்கு வித்திடுமாறுக் கேட்டுக் கொள்கிறேன்.





60-வது திருநக்ஷத்திர மஹோத்சவத்தில் பாராயண ஸ்வாமிகளுடன்



60-வது திருநக்ஷத்திரத்தில் வேத பாராயண, திவ்யப்ரபந்த வித்வான்களுடன்



காங்கிரஸ் பெருந்தலைவர் திரு. G.K. மூப்பனார் ஸ்ரீமதாண்டவனை ஸேவித்தல்



திருக்குடந்தை ஆண்டவரிடம் ஸந்யாசம் பெற்ற
தீரீதண்டீ ஸ்ரீரங்க ராமானுஜ ஸ்வாமியுடன்



சென்னை ஆச்ரமம் வரவேற்பு



சென்னை ஆச்ரமம் வரவேற்பு



ஸ்ரீ மதாண்டவன் பெங்களூர் விஜயம்



ஸ்ரீ மதாண்டவன் சென்னை ஆச்ரமத்திலிருந்து புறப்படுதல்

Sri:

SUPREME BEING AND THE INDIVIDUAL SELF

Sriman Justice M. Srinivasan, Madras

(K. Balasubramania Aiyar Endowment Lecture on 18.3.95)

Revered President, respected elders and friends,

For the last two weeks I have been studying the records of an old litigation, which is not likely to end in the near future. It is peculiar and strange litigation. Number of documents have been exhibited and several counsel have argued on both sides. The parties are world famous. It is a suit for declaration that the defendant is the servant of the plaintiff under a contract of service and for an injunction restraining the defendant from acting contrary to the same. The defence raised by the defendant is that there is no plaintiff, as the plaintiff is not a legal or juridical person and that there is no contract of service. The first issue in the suit is, whether the plaintiff exists. The second issue is, whether there is a relationship of master and servant between the plaintiff and the defendant. The third issue is, whether the plaintiff is entitled to any relief. The matter has come to me at an interlocutory stage. The question whether an interim order can be granted has to be decided on a prima facie view of the materials. The names of the parties are "Paramatma" and "Jeevatma". The former is the plaintiff and the latter is the defendant.

This idea is not mine. I have drawn inspiration from a Sloka of a Vaishanavite Saint by name Parasara Bhattar. He imagines a conversation between the Lord and the individual - soul.

The Lord tells the Jeevatma: "You are Mine."
Jeevatma replies: "I am mine.'
P: "How is it?'
J: "How is that?'

P: "This is evident from Vedas.'
J: "This is by long enjoyment and possession.'
P: "There has been interruption.'
J: "Where is the interruption?'
P: "It is known from Bhagawad Gita.'
J: " Who is the witness?'
P: " Arjuna.'
J; "He is your man - interested witness.'

The entire sloka reads thus, though it was not recited as such:

त्वं मे ऽ हं मे कुतस्तत् तदपि कुतः इदं वेदमूलप्रमाणात्
एतच्च अनादिसिद्धात् अनुभवविभवात् तर्हि सक्रोश एव ।
काक्रोशः तत्र गीतादिषु मम विदितः कोऽत्र साक्षी सुधीस्स्यात्
हन्ता त्वत्पक्षपाती स इति नृकलहे मृग्यमध्यस्थवत्वं ॥

Bhattar imaged this at the time of Thirumanjanam of the Lord at Srirangam. The Lord was clad in wet yellow clothes. Sri Bhattar thought that the Lord was about to take special oath by putting out camphor to establish His case.

I now proceed to refer to the materials on record in this case. The first contention of the plaintiff is that almost all religions except Buddhism and Jainism are theistic, recognising the existence of Plaintff. Similarly, philosphers have also, without referring to religion, given reasons for proving the existence of the Plaintiff.

Descartes, a 17th Century French Philosopher gave different reasons. The first argument was based on the position of subjectivisim. The axiom was **cogito ergo sum**:: Every time I think I exist as a concious being, a thinking substance. There can be no doubt whatever that I exist and I think. I have ideas which are of three kinds, (1) Innate, (2) Factitious and (3) Adventitious. The first come from the nature of human reason itself and

naturally to all human beings, the second come from human imaginative infinitiveness and the third are caused by things outside me in the world. In so far as ideas are concerned, they are ideas of some objects. They represent or refer to objects. The objective reality of ideas consists in their referring to objects. The idea of God refers to God, just like the idea of a tree refers to a tree. Thus, the first proof of God is, we have a clear and distinct idea of God. But, all the ideas are the effects of causes. Then, there must be some cause of our idea of God. There are three aspects which are self-evident with regard to causes. (1) There must be as much reality in the cause as in its effect. The effect cannot derive its reality from anything else except from its cause.

(2) Some thing cannot proceed from nothing.

(3) What is more perfect cannot proceed from less perfect. Therefore, nothing could have my idea of God as a perfect substance that is not as perfect as the idea. Although I could be the cause of my ideas of physical objects or animals or men - since there is nothing so great or perfect in those ideas that I could cause them - I could not, however, cause the idea of God because I am only a finite imperfect being, whereas the idea of God is of a perfect and infinite being. So, something else greater than me must have caused the idea of God. Something which is at least as great and perfect as the effect, my idea of God. Therefore, the cause of my idea of God, since it must be as great as the effect, can only be a perfect being, namely God himself. Therefore, God exists as the only possible cause of my idea of Him.

The second argument of Mr. Descartes was as follows:- What is the cause of myself? Not me. If it is my parents, who was their cause? Thus, an infinite series of causes can be traced backwards and ultimately it will be found that there was one first cause,which could be nothing but God. This argument is similar to the cosmological argument of the Medieval Catholic theologians St. Anselm and St. Thomas.

The third argument, of Mr. Descartes is an antological one, which was developed in the 11th Century by St. Anselm. The idea of God is a clear and

distinct idea. Clear and distinct ideas are always true. All the properties which I clearly and distinctly conceive God to have, purely belong to Him just as the properties of a triangle that I clearly and distinctly perceive, for example the sum of its internal angles is 180 degree. So, the clear and distinct idea of a perfect being includes the perfection of existence. Hence the nature of God must have the perfection of existence.

No doubt, Mr. Descartes was criticised severely by later philosophers like Hume, Hegel, Marx and Sartre. W.I. Marshall justified the conclusions of Descartes by inductive arguments. According to him, while it is possible to reject easily the deductive arguments, the existence of God can be proved by inductive evidence. An inductive argument consists of hypothesis and its agreement in a number of instances with experience. The hypothesis itself must be informative and make certain facts of experience more easily understood. Developing that argument, he says that the order, beauty and purpose of the Universe provides inductive evidence for the creation of world by God. It may be contended that while Order is evidence of God's existence, disorder and suffering in the worl provide evidence to the contrary. But, suffering and discover are not strictly inconsistent with the creation of the world by all-perfect being. There are two options, one is, the world, with its order and its sufferings is just a brute fact and the other is, it was created by God. The first option does not given any explanation of the world, while the second provides some explanation of the ordered world and the existence of suffering is not a decisive objection.

Some Scientists will claim that behind the order of Universe, there is nothing but the disorder of its basic particles. According to statistical thermodynamics certain basic laws of science can be explained by the random movements of the molecules of gas. Molecules are small and their number is so large that one can make predictions about their average behaviour, even though each molecule moves at random. By statistical average, their randomness is ironed out and the behaviour of any normal bit of matter is orderly. It is argued that at the level of Science, the universe, as it exists at present, can be explained purely on the basis of the average movement of particles. In support of this argument, the story of the monkey and the type-

writer, is set out. It is claimed that a monkey, if given an unlimited time, unlimited paper and a typewriter, which would last indefinitely, could eventually type out one of Shakespeare's sonnets. The chances of random typings to produce sonnets are extremely small but in unlimited time it could happen.

According to the Scientists, the universe would have come about in some such manner. But, there is fallacy in the argument. Unless there was intelligible language and a script therefor, there would not be a sonnet. The monkey did not produce the language; nor did it intend to do so, Hence, the contention of the scientists cannot be accepted. Instead of saying that the universe came on its own, it is better to say that it was created by the Plaintiff. This explanation is more acceptable.

Each argument may not by itself be strong. But all of them must be taken together and the cumulative effect must be considered.

Nammazhwaar has advanced a wonderful logic in his Thiruvoimozhi:-

உளனெனி லுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவன் அருவமிவ்வருவுகள்

(If you say He exists, He does; His forms are these forms. If you say that He does not, His formlessness is of these non-forms)

Thiru Kurukai Piran Pillan in his commentary known as "Arayirappadi' elucidates it thus:-

'In this world, words of existence (अस्तित्वशब्द) and non existence (नास्तित्वशब्द) as well as self-evident ideas of existence and non existence are made known by being discernible (in some way). Therefore to say, God exists is to say He is substance qualified by existence; if not, He is the subject qualified by non-existence. Thus, when we say there are negative terms about the existence of God, we can only say they indicate His existence. Even if there are no terms of negation, we can say they are subjects qualified by non-being. These words for being and non-being are the forms of the Lord, according to the authorities of being and non-being, if you say He is, He exists; if you say He is not, He still exists."

There is also another way of looking at it. A negative propostion negates only the condition and not the subject itself. For example, if one says there is no book, it would only mean that at that time and at that place, there is no book. It does not mean that there is no book for ever.

Hence, the first issue is answered in favour of the plaintff.

Similar idea is expressed by Nammazhwaar in Thiruvoimozhi, which is Ex. "B':-

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவதும் ஆயவை யவைதொறும்
உடல் மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்

"Thidavisumberivali Neernilamivaimisai,
Padar porul muzhuvadhum ayavi avai thorum
Udal misai uyirenakkaranthengum paranthulan.'

"Rooted universally in all mankind and all pervading' (In whichever thing the five elements - space (आकाश) fire, air, water and earth are present, the Lord will be in that thing like life in a body.)

The last few words "*உடல்மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்* are very important. That brings out Vaishnavite philosophy of Sri Ramanuja which is based on शरीर शरीरि भाव I will say something more about it later.

Ex. "C' is Nachiyar Thirumozhi by Sri Andal:-

பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே யாள்கின்றவெம்பெருமான்.

(He rules over the entire earth surrounded by ocean and heaven without losing any portion.)

Ex."D' is "Purusha Sooktha' which describes Him as follows:-
"Sabhumin Viswatho Vruthva Atbyathishtath Dashangulam'

`सभूमिं विश्वतो वृत्वा
अत्यतिष्ठद्दशाङ्गुलम्

(He pervades over the entire Universe and also extends beyond it by ten inches)

'Ex "E' is 'Narayana Sooktham'. There it is said:

नारायणं महाज्ञेयं विश्वात्मानं परायणं । .....
अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः ॥

(Both inside and outside the universe, He has manifested. He transcends the world and is also Immanent.)

Ex. "F' is Bhagavad Gita. It says:-

उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः
यो लोकत्रयमाविशय बिभर्त्यव्यय ईश्वरः

Uthamah Purushastivanyah Paramathmeth Udhahruthaha
Yo Lokathrayamavisya Bibarthyavyaya Iswaraha.

The Greatest person is somebody else; He is described as the Supreme Being. He enters all the three worlds and supports them as immutable and He is the God.

Ex. "G' is Vedas. As regards the expression "All knowing' it is said:-
यो वेत्ति युगपत्सर्वं प्रत्यक्षेण सदस्वतः
Yo Veththi Yugapathasarvam Prathyakshena Sada Swathah

One who knows all (things) simultaneously and directly always by Himself.

A Similar passages is found in Ex."H', the Old Testamant. David's Psalm 139 reads:

"Thou knowest when I sit down and when I rise up:
thou discernest my thoughts from afar.
Even before a word is my tongue,
lo O LORD, thou knowest it altogether.
Such knowledge is too wonderful for me;
it is high, I cannot attain it."

According to Sri Ramanuja, God is the material cause (Upadana Karanam) and also the efficient cause (Nimitha Karanam).

Ex. "I' Thaittiriya Upanishad says that it is from the lord the universe is born, stays and goes back to Him.

यतो वा इमामि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत् प्रयन्त्यभिसंविशन्ति तद् विजिज्ञासस्व तद् ब्रह्म।

The plaintiff is the absolute controller. The elements are afraid of Him. The wind blows being afraid of Him. Tearing Him the wind blows: Tearing Him the sum rises.

भीषाऽस्मात् वातः पवते भीषोदेति सूर्य :

Thus, there is no doubt whatever that the Plaintiff is the Supreme Lord, but for Whose will nothing can be done in this world.

Now I pass on to the Second Part. i.e., the Attributes of the defendant. No doubt, the defendant is also eternal; he is the of size of an atom; his essential nature is knowledge, bliss and purity. The birth of a being in this world hap-

pens whenever a soul enters a body. Whenever it leaves the body, it is called "death' Ex. "F' Bhagavad Gita describes nature of the defendant in full in Chapter II. It is sufficent to refer to the one sloka therein:-

वासांसि जीर्णानि यथा विहाय नवानि गृह्णाति नरोऽपराणि ।
तथा शरीराणि विहाय जीर्णान्यन्यानि संयाति नवानि देही ॥

(As a man discards worn-out clothes and puts on others that are now, similarly the self discarding worn-out bodies, gets into others that are new.)

The actions of the defendant are controlled by the plaintiff in order that the plaintiff is not accused of enimity or partiality (वैषंयं नैर्घृण्यं பாராமைக்காக). The Plaintiff decides about each sould according to its past activities, i.e., the doctrine of "Karma'. The defendant can never be separated from the plaintiff, as the Lord always resides in the soul. There are three kinds of souls:-

(1) Baddhas - bound to "Samsara' (life) in this world. Defendant belongs to this category.

(2) Mukthas - who have already achieved liberation;

(3) Nithyas - who never get entangled in Samsara.

We are not concerned with categories (2) and (3) in this case.

The defendant's activities are governed by a vicious chain of :Avidhya' (ignorance), "Karma' (past deeds), "Vašana' (impressions left on the mind by past actions) and "ruchi' (taste). He is bound to perform uninterrupted service to the Plaintiff. He has no independent power.

Now I pass on to the third aspect, i.e., relationship between the two. Some matters have already been taken note of while considering the attributes of the Plaintiff and the defendant.

Bhagwan Sri Ramana said that the fates of our souls are all ordained by God and everything is pre-determined. The body of a being is designed for doing the various things marked out for execution in the life. The whole programme is chalked out by the Supreme Being and not an atom moves except by His Will.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது
The Sanskrit saying is,
तेन विना तृणमपि न चलति

Without Him, even a blade of grass does not move. Sri Vedantha Desika expresses the same idea in the following words:-

"If you are acting, there is no need for my efforts. If you are not acting, there is no use for my efforts.'

त्वयि प्रवृत्ते मम किं प्रयासै :
त्वय्यप्रवृत्ते मम किं प्रयासै :

In Ex."B', Thiruvoimozhi, already referred to, the शरीर शरीरि भाव which is the key-stone of Sri Ramanuja's philosophy, known as "Visihtadavaita Siddanta' has been brought out. I have already referred to the fact that the actions of the individual soul are controlled by the Lord. The question that has been discussed to by leanred people is "Paradenna Kartrtvam' is opposed to "Swadheena Kartrtvam'. The question as to the extent to which the individual's actions have to depend on the Lord is a vexed one; it could never be answered satisfactorily. Different views have been expressed thereon. One saint compared the individual to a horse attached to a cart. Though the movement of the horse is controlled by the cart-man, it has to walk or run by itself. To that extent, the individual has freedom of action.

Another Saint gave an illustration as follows:- A rich man entrusts a particular amount, say a sum of Rupees one lakh, to a relative of his and tells him

to arrange for a function in his house. He tells him to make all the necessary arrangements and that the expenditure should not exceed the amount given by him. Thus, the person entrusted with the work has the freedom and discretion to decide about the arrangements. But, he cannot exceed the maximum limit prescribed. The action of individual soul is compared to that of such a person.

The very first verse in the Holy Quran (Ex.A) describes man as an agent of the Lord. Islam divides actions into five kinds:-

(1) Farz - Commanded, i.e., it must be performed.
(2) Maslum - Mandub and Mustahab - recommended acts;
(3) Faiz or Mubah - Permissible acts - religion will be indifferent.
(4) Makruh - Acts reprobated as unworthy;
(5) Haram - Forbidden acts.

Similary, the Upanishads (Ex"I') say, in some places एष आदेशः (This is the Command) and in some other places, एष उदेशः (This is the advice).

In Ex. "F' Bhagavad Gita, there is an important Sloka:-

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधनोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

"The scriptures are the authorities in all matters. The individual shall learn and act in accordance with the same.'

To that extent there is a freedom given to the individual that he shall act according to the scriptures.

There is yet another important Sloka in Bhagavad Gita, which is very often quoted by all:-

कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।
मा कर्मफलेहतुर्भूः मा ते सङ्गोऽस्त्वकर्मणि

'To work alone is your right and never to the fruits (thereof). Do not become (i.e., do not regard yourself as) the cause of work and (its) fruit. nor have attachment to inaction.'

The true meaning of this sloka is brought out in a story heard by me. A man performs penance and the Lord apppeared before him and asks him what he wanted. He prays that he should get one lakh of rupees in lottery prize. The Lord grants and disappears. When the lottery results are announced, he does not get the prize. Disappointed, he performs penance and again the Lord appears. He questions the Lords why he has not got the prize. The Lord tells him, "you have not purchased the lottery ticket for one rupee; that is, you have not done your karma. How can you expect me give the fruits? This story brings out clearly what the individual should do. He must do whatever he is bound to do and the result is with the Lord.

Considering the above factors, the second issue is answered in favour of the Plaintiff.

The third issue is, whether any relief can be granted to the Plantiff. It is contended by the defendant that on account of various differences in the schools of religions, no prima facie case has been made out and no interim relief can be granted.

Reliance is placed on the difference between the three schools in Hindu philosophy - "Dvaitam", "Advaitam", and Visishtadvaitam". At this juncture, I would like to point out the difference between the three schools, which has been expressed in very simple terms by my uncle late R. Gopalasamy Iyengar:-

(1) 'Dvaitam" - Dualism- अहं (I) That contemplates that "self" is one entity while the "Supreme Being" is another entity.

(2) "Advaitam"-Monism सोऽहं It is, both the Supreme being and the individual souls are the same. There is only one entity.

(3) Visishtadvaitam- Qualified Monism- दासोऽहं (I am His servant).

Though there is some difference among religions, there is no conflict among the religions regards the existence of the Lord and His supremacy. Hence, the defendant cannot take advantage of the minor differences.

Ex. "A" the Holy Quran says that man must fear the day when he shall be brought back to God. Then shall every soul be paid what it earned and none shall be dealt with unjustly.

Similarly, in Ex."B" the Bible, Psalm 128 reads,
"Blessed are they that fear the Lord and walk in His ways"

Thus, the defedant has to be afraid of the Plaintiff, not that the Plaintiff is a bad character or a fearsome creature. It is only to point out that the defendant must always act accordance with the rules and if he violates the same, he will meet the punishment. In Ex. "F" Bhagavad Gita it is said that the defendant is its own friend and its own enemy:

आत्मैव ह्यात्मनो बन्धुरात्मैव रिपुरात्मन :

He shall uplift by means of the mind and should not cause the self to sink down.

उद्धेरदात्मनाऽऽत्मानं नात्मानमवसादयेत्

Thus, it is the duty of the defendant to uplift himself. The balance of convenience is only in favour of the Plaintiff. If the interim injunction is not granted as prayed for by the Plaintiff, the defendant will suffer irreparable harm and prejudice, as the defendant will have to meet a severe punishment later for violating the rules. Consequently, this is a fit case in which the interim order prayed for by the Plaintiff should be granted.

I have taken care not to enter into any controversial aspects. My talk is mainly based on Visishtadvaita philosophy of Sri Ramanuja.

Sri:

The Significance of Archa

Late Sri K.R. Applachari, M.A.

In the present context of growing materialistic outlook and increasing secularism and in view of the aversion in some quarters for pictures of deities, it may be worthwhile to learn the views of a master-mind on the significance of archa or idol. Two epithets applied to the great acharya are; "avatararahasyajnah', and "archaa soundaryasakthadheeh' i.e., "one who understands the rationale of incarnation' and " one who is enraptured by the ravishing beauty of the idol.'

A few remarks about the equipment of the acharya may not be out of place. It is said, Great teachers, like good poets, are born, not made; when however, both heredity and environment, nature and nurture are highly favourable the result must be extra-ordinary as was the case with Sri Vedanta Desika. Both on the paternal and maternal sides he had a spiritual heritage of a high order. He had a remarkable native intelligence, a retentive memory and gift of poesy. He was born in Kanchi one of the salvation-granting cities. His teacher, guru, was no less than the celebrated Atreya Ramanuja, familiarly known as Appullar. Appullar earned the title "Vadihamsaambhuvaaha', master of dialectics. Besides being his uncle actuated by love for him, he had the knack of lucid presentation of abstruse ideas. It was a great pleasure and privilege to teach the precocious nephew who was an ekasandhigraahi not needing a second repetition to grasp a passage "punaruchharana apeksharahitah'. Atreya Ramanuja was an ubhayasimhasanadhipathi, the Bhashya throne and Prabandha throne. In young Venkatanatha, the stream of vedic lore of the Rishis and the lore of Azhwars mingled entitling him to speak with authority on ubhyaya vedanta. He was a savyasachi, using Sanskrit or Tamil or a combination of both, with great skill. His knowledge was encyclopaedic. In him there was a rare combination of incompatibles.

A reciter of vedas has generally no knowledge of the sastras: one who has both these is not endowed with poesy;if all these three are there,

atmagunas like purity, sincerity, simpli city, sympathy, devotion and humility will be lacking. But our Vedanta Desika was a unique exception. No wonder he became acharya par excellence venerated by all alike. He restated, systematized and defended against all possible attacks the Visishtadwaitic system of Ramanuja which he inherited, learnt and taught, a system which had suffered neglect after Ramanuja and which met with some adverse criticism. His logic was incisive and subtle. His poetry enlivened his philosophy and his philosophy sanctified his poetry. Surrender or prapatti according to him is the royal road to moksha and is open to all alike without distincition. He regarded himself as a soldier devoted to the cause of truth. He was a prolific writer. No wonder he has earned for himself a high place in the galaxy of religious and phiolosphical thinkers. Most Vaishnavite temples of importance are sanctified by his image and no auspicious function in a vadagalai household passes without his sambhavana as acharya. His views on the significance of avatara and archa are entitled to respect.

For a proper understanding of Avataras, a brief reference to the Five Manifestations of God described in Pancharatra, is necessary and they are; Para, Vyuha, Vibhava, Haarda and Archa. Para is in the Transcendental state, Vyuha is in Ksheerabdhi, Vibhava on earth as Rama, Krishna etc., Haarda is in the lotus of the heart of the individual as his self or Antaryami and Archa is in consecrated idols in temples and households. The Taittiriya Narayanavalli Rik briefly mentions them; "Ambhasya paare bhuvanasya madhye Nakasya Prishte mahato-maheeyan sukrena jyothegmshi samanupravishtah prajapathischarathi garbhe antah.'

Now, we may turn to the Bhagavad Gita where Lord Krishna reveals to His chosen disciple Arjuna, His Avatara Rahasya. he explains why He incarnates and when he does so. (Vide B. Gita chap. IV stanzas 4-11). Sri Vedanta Desika in Tatparyachandrika, his admirable commentary on Sri Ramajuna's Gita Bhashya, throws a flood of light on the subject by pointing out that "avatara' should be so interpreted as to include archa, the Fifth Manifestation mentioned above. Desika is really 'Avatara rahasyajnah' by virtue of his vast learning and excellent training.

"Yadha yadhahi dharmasya glanirbhavathi Bharatha
Abhyutthaanamadharmasya thadhatmanam Srjamyaham"

Whenever dharma wanes and adharma waxes, O Bharatha,I manifest (incarnate)Myself of My own Free will.

"Paritranaya Saadhoonam Vinaasaayacha dushkritam
Dharmasamsthapanarthaya sambhavami yuge yuge'

For the preservation of the virtuous, for the frustration of the evil doers, and for the sake of firmly establishing dharma, manifest Myself, from time to time.

Here the preservation of the virtuous is from their destruction by the sorrows arising from their not seeing me. This is the main object of the Lord's incarnation; otherwise their very existence will be at stake. The virtuous consider that a moment of separation from Me is as long as ages, intolerable, The frustration of the evil doers means the setting at nought their evil designs by separating them, if necessary, from their bodes, in the way in which father takes from the hand of his child mis-using a knife and hurting himself. This is only incidental to the protection of the good and can be done merely by My will. Firm establishment of dharma is by showing Me who am the ultimate goal of all worship. Broadly speaking, protecting the good and punishing the wicked may be achieved by preaching and practising by a person like Vyasa. Vedanta Desika shows that the real purpose is to exhibit a worshippable, and Adorable Form, which will kindle Bhakti. Even a sworn foe for three generations like Sisupala flung many abuses at the Lord, after seeing the Lord's Form was actuated by love for Him and he obtained Moksha. The convincing of half-convinced persons cannot be fully strenghthened except by presenting an attractive, fascinating Form. Workship takes the form of discharging faithfully the duties enjoined by Me through the Sastras.

'Yay yathamaam prapadyanthe thaamsthathaiva bhajaaamyaham
Mama Varthmanaanuvarthanthe manushyah Paartha, sarvasah

I manifest Myself to persons exactly in the same way in which they want to resort to me. They remain, O, son of Pritha, enjoying My way (Nature) in all respects. (Any form, activity and charecteristics). The way referred to is the

way desired by them in the shapes of different types, images of different kinds or festivals, decorations, processions, service suited to different tastes. According to our Acharya, along with the greatness of the incarnation, the greatness of the archavatara is also mentioned. God's purpose is to wean the souls from wandering, to create a taste for worship, to present an amiable form, a subhasrayam. Accessibility as saviour to all kinds of souls, high and low, enjoyability of the Lord as in the Highest Heaven are present in the archa as in the vibhava form of Krishna, Rama etc. There is this extra advantage in the archa because it is not restricted by time, place or circumstance. Shubha means what raises, elevates, sublimates, purifies the soul. Asaraya means that which is easily accessible, available for experience. Out of boundless compassion for His creatures the Lord reveals Himself in resplendent beauty. This is true of vibhava and archa avataras. In the Ramayana, Valmiki reminds us of 'Roopoudharya gunaih Pumsaam drishta chittapahaarinah'. Kavivhakravarthi tells us that those who saw the shoulder of Sri Rama saw only His shoulder, similarly with those who saw other aspects of His body. Their eyes were riveted in, absorbed by the Beauty therer and would not move on.

The Azwars who dived deep into divinity were similarly enslaved, nay, more enslaved by the Beauty of the archa in the shrines they visited. Vedanta Desika who spent much time in pilgrimages all over the land, was entralled by the Beauty of the images he worshipped and has immortalised the deities he had worshipped in Kanchi, Srirangam, Tirupathi, Tiruvahindrapuram, Tirukovalur etc. All this influenced him in his interpretation of the significance of avatars. He is 'archaasoundarya Sakthadheeh.'

Before dwelling on the acharya's own expreiences in this direction described exquisitely by him in many of his works, let us deal with the experiences of the Azhwars. To them, the archa reveals the intense longing of God for communion with the soul as His very life and soul. It is equally true they were fascinated irresistibly by the archa and were deeply immersed in God Love. The greatness of the archa is largely their thme. A few stanzas may be cited here.

Nammazhwar in Tiruvoimozhi: III-6-9

Thanja maahiya thanthai
thaayodu thaanumaayavaistyeallanaal
yenjalilamaravarkulamudhal Moovar.
Thammulumaadhiyai
Anjineerulahathulleer yevanivan
enru koozhane min
Nenjinaal ninaippaan yevanavana-
ahum neelkadal vannane.

He says: when the Lord appeard on earch as was easily accessible, we didn't live here: His stay in Vaikunta is unthinkable to us. How can we resort to Him? You ask, how can we desire and resort to Him who is worshipped by Brahma, Rudra and Indra who He created and who is the Head of the hosts of immortals and who is a protector, father, mother and everything else. His real Form is the one He has in Vaikuntam. 'You need not have any doubt at all. Whatever form you imagine for Him, that very Form will be quite acceptable to Him, He is easily accessible and that Form will be His Divine Form, "Apraakrita divya Samsthana.' Further, the Azhwars believe that in such an idol the Feet are the most important' Again the statement "Mey vilam seydhu kai thozhak kadunkol' is suggestive. Whenever the Azhwars behold the Beautiful vision in the sanctum sanctorum, their hearts melt. Prapatti to archa is their means to moksha. Visiting sacred shrines, the Azhwars sang the glory of the Lord. Their darsana of God is perceptual, they seek through their inner eye.

Poigai Azhwar's First Thiruvandhaadhi stanza 44 runs as follows:

Thamarugandha thevvuruvam avuuruvam thaane
Thamarugandha thepper martrapper thamarughandhu
Yevvannam sindhiththimaiyaa thiruppare
Avvannam Aazhiyaanam.

The Lord manifests Himself in that very form which is devotee desires. he accepts the very name that pleases His devotee and such name is as good as Narayana and he designs to adopt the deeds, qualities etc. which His devotee imagines to experience.

Thiruppanazhwar's words are well-known;
"My eyes that have feasted on my Lord and enjoyed the nectareous sight, will not hereafter look at anything else.'

"Yennamudhanaikkanda Kangall martronarai kanaave'
Thondaradippodi Alzhwar, says similary:
Ichhuvai thavira yaam poy indiralogammaalum
Acchuvai perinum Venden, Arangamanaharulane

I don't want to go away from here even to reign in Indraloka having tasted the beauty here.

To the Azhwars the archa is not a stone, wood, marble, or "Sleeping Beauty but a Speaking Beauty' Why? even some Acharyas have had that privilege; tradition says so. Vedanta Desika echoes these very sentiments in many of his hymns as he shares them with the Azhwars. In Varadaraja Panchasat, looking at the image of Varadaraja, he is enraptured by the resplendent Beauty and he coins a splendid phrase "asprishta chinthapadhamaabhiroopyam' The beauty of form that is beyond thought and expression, such splendour is seen by him with his carnal eyes intermittently. Having had such good fortune of enjoyment of bliss, he says he has no desire to live in Vaikunta an oft-quoted statement. Similarly, he signs of the Gambheeram, Poornam and madhuram in his Devanayaka Panchaasat. The aim of the archa is to sublimate the earthly, transient passions and ambitions of the worshipper. A true devotee alone can enjoy the beauty of the Form of the Formless. In Paduka Sahasram he says "O, Padhuka, I wish to be in your presence for many many years' God is Sarvabhootha Suhrt, Paramodaara, Gambheera. He is the friend of all and his mercy is unfathomable. He is archakaparaadheena, dependent on his devotees.

In Nyasa Dasaka sloka 4, we find him uttering:

I surrender myself unto you; Please make me attain your feet at the end of this life,

Nyasa Tilaka 6th sloka runs as follows:

Brindhaaniyah svavasayan vraja sundhareenam

Brindavananthara bhuvanam sulabhobhabhoova

Sreemaanaseshajana sangrahanaayasethe

Range bhujanga sayne samaha bhujangah

During Krishnaavatara, all the cowherdesses of the region who were privileged to enjoy His company were taken possession of by Him. He was within the easy reach of all. Brooding over the question."How are those not priviliged to be born they enjoy Him?' you have taken the archa form of Ranganatha at Srirangam along witth Mahalakshmi and with Adi Sesha as your couch in order to take possession of all creatures at ail times and grant them a blessed life. It is needless to quote any more. As Rabindranath Tagore says in his Tray Birds, "The Perfect decks itself in Beauty for the love of the imperfect'. Yes, The Infinite reduces itself to the finite and appears before him as a being with Form, ever accessible and ever elevating.'

The unbeliever with no eyes to see, exclaims, "I searched with my telescope but could not find God, while spiritually-minded Prahlada with seeking eyes, when challenged to show where God is, cooly retorted "Before you asks me to show you where God is show me a place where He is out.'

The purpose of archa, its Beauty, is to win over the souls of mortals, subject to earthly passions and temptations; is to redeem the erring souls "Samaarachittha vaseekaranaya bhagavathas Soundarya.'

It is on this account that every prapanna is expected by our Acharyas to cultivate a desire to go on pilgrimages to the temples and worship the Archamurties eulogised by the Azwars and fulfil it as a prelude to their experience in the eternal abode viz vaikunta commonly known as Heaven.

Maha Guravehnamah.

ஸ்ரீ:

தமிழ நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம்

(ப்ரஹ்மஸ்ரீ புதுச்சேரி கோபாலய்யர்)

சங்க காலத்தை அடுத்த காலத்தில் தமிழகத்தில் மாயோனை வழிபடுவதன் சிறப்பை விளக்கி அருளாளர்கள் அருளிய தமிழ்ப் பாடல்களின் தொகுப்பு நாலாயிரதிவ்யப்ரபந்தம் என்ற பெயரால் வழங்குகிறது. இப்பாடல்களை அருளிச்செய்தவர் பன்னிருவர். இவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் தோகை இருபத்துநான்கு. இப்பிரபந்தங்களுக்குப் பாயிரம் போல வைணவச்சான்றோர் அருளிச்செய்த பாடல்கள் தனியன்கள் என்ற பெயரால் தமிழில் யாக்கப்பட்டு, பயில வழங்குபவை முப்பதும் பயில வழங்காதவை ஆறும் உள்ளன.

இவற்றுள் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பிரபந்தங்களுக்கு எம்பெருமானார், கூரத்தாழ்வான், எம்பார், பிள்ளைத்திருநறையூர் அரையர் என்பவர் அருளிச்செய்த தனியன்கள் உள்ளன. அவற்றுள் மொழியைக்கடக்கும் பெரும் புகழார் ஆகிய கூரத்தாழ்வான் அருளிச் செய்த தனியன் பின்வருமாறு.

நெஞ்சுக்கு இருள்கடி தீபம்;அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல அமுதம்; தமிழ் நன்னூல் துறைகள்
அஞ்சுக்கு இலக்கியம்; ஆரணசாரம்; பரசமயப்
பஞ்சுக்கு அனலின் பொறி, பரகாலன் பனுவல்களே.

என்பது.

இவ்வாழ்வாரொருவருடைய பாசுரங்களே தமிழ் நன்னூல்துறைகள் அஞ்சுக்கு இலக்கியம் என்று போற்றப்படுகின்றன. ஆழ்வார்காலத்தில் தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்பினதாகவே இருக்கவும், தனியன் பாடிய கூரத்தாழ்வான் காலத்தில் அவற்றோடு யாப்பு, அணி என்ற பகுப்புக்களும் சேரத் தமிழிலக்கணம் ஐந்துபகுப்பினதாயிற்று. ஆழ்வார் பாசுரங்கள் தமிழ் நன்னூல் துறைகள் ஐந்தனுக்கும் இலக்கியம் ஆமாறு இக்கட்டுரையில் விளக்கப்பெறுகிறது.

எழுத்துப்பற்றிய செய்தியில் அறுவகைச் செய்யுள் விகாரங்கள், மூவகைக் குறைகள், எழுத்துப்போலியாக வந்த சொற்கள் முதலியன குறிப்பிடப்படும்.

சொல் பற்றிய செய்தியில் ஆழ்வார் பாசுரங்களில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொற்களின் நிலை, தொடரமைப்பு நிலை என்பன குறிக்கப்பெறும்.

பொருள் பற்றிய செய்தியில் மக்களிடையே நிகழும் காதல் இறைவனிடத்துக் காதலாக அமையும் நிலையில் உள்ள தலைவிகூற்று, செவிலிகூற்று என்பனவும், புறப்பொருள் பற்றிய பொங்கத்தம் பொங்கம், குழமணிதூரம் போல்வனவும் இடம்பெறும்.

யாப்புப் பற்றிய செய்தியில் இவ்வாழ்வாருடைய பாசுரங்களில் அமைந்த யாப்புப் பற்றிய செய்திகள் விளக்கப்பெறும்.

தமிழில் தனித்து அணியிலக்கண நூல்கள் தோன்றுவதன்முன் அருளப்பெற்ற இவ்வாழ்வாருடைய பாடல்களில் உவமம், உருவகம், பின்வருநிலை, தற்குறிப்பு, நிரல்நிறை, புணர்நிலை முதலிய அணிகள் அமைந்துள்ளமை சுட்டப்பெறும்.

சுருங்கக் கூறின், இவ்வாழ்வாரின் இறைத்தொண்டு தமிழ்த்தொண்டு ஆமாறு இக்கட்டுரையில் இடம்பெறுகிறது.

தமிழநன்னூலட துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே. - தொ. சொ. 397
அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கம் வழி வலித்தலும் மெலிக்கும் வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கம் வழி தொகுத்தலும்
நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும் வழி குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர். - தொ. சொ. 403
குறைச் சொற் கிளவி குறைக்கும் வா அறிதல் - தொ. சொ.453
குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல - தொ. சொ. 454

என்பது மரபு ஆதலின், தமிழோடு இசைப்பாடிச் சமயத் தொண்டு செய்த இவ்வாழ்வாருடைய பாடல்களில் அறுவகைக்குறுக்கங்களும் மூவகைக் குறைகளும் அனைந்துள்ளவற்றை நோக்குவோம்.

1. வலித்தல்

வன்பு என்பது வற்பு என எதுகை நோக்கி வலித்து
வற்புடைய வரை நெடுந்தோள் மன்னர் மாள - 2058
என வந்துள்ளது. மருள்கள் என்பது மருட்கள் என்றாகி, மருட்கள் வண்டுகள் பாடும் வேங்கடம் என வந்துள்ளது. - 1054

2. மெலித்தல்

மக்களுக்குச் செவிக்கு இனிமை தரும் மெல்லோசையையே மிகவும் விரும்பும் இவ்வாழ்வார் பல இடங்களில் மெலித்தல் விகாரத்தைக் கையாண்டுள்ளார்.

மாத்தேர் என்பது மாந்தேர் என்றாகி கடம் சூழ்கரியும் பரிமாவும் ஒலிமாந்தேரும் காலாளும் எனவும் - 989

வலக்கை என்பது வலங்கை என்றாகி, வலங்கைவாய்ச் சரங்கள் ஆண்டு எனவும் - 1152

பருக்கை யானை பருங்கை யானை என்றாகி
பருங்கை யானையின் கொம்பினைப் பறித்து எனவும் - 1261

இடக்கை இடங்கை என்றாகி வலங்கை ஆழி இடங்கைச் சங்கம் உடையான் ஊர் எனவும் - 1988

பலாக்கனிகள் பலங்கனிகள் எனறாகி சுனைகொண்ட பலங்கனிகள் தேன்பாய எனவும் - 1530

முழக்கு ஆர் கடல்-முழங்கு ஆர்கடல் என்றாகி முழங்கார் கடலுள் எனவும் - 1828

பக்கத்தாய் என்பது பங்கத்தாய் என்றாகி குல அரையன் மடப்பாவை இடப்பால் கொண்டான் பங்கத்தாய் - 2060

எனவும் காணப்படுகின்றன.

3.விரித்தல்

நீண்டதை என்பது நீண்டஅத்தை என்றாகி, கணங்கள் ஏத்தும் நீண்டவத்தைக் கருமுகிலே என்றும் - 1089

துணைவனைடும் என்பது துணைவன் னைடும் என்றாகி இன்துணைவன் னைடம் போய் என்றும் - 1213

முண்டம் நிறைத்துச் சாபம் நீக்கும் என்பன முண்டமது நிறைத்துச் சாபமது நீக்கும் என்றும் - 1230

இரண்டில் என்பது இரண்டத்தில் என்றாகி, தாரான் தரும் என்னும் இரண்டத்தில் ஒன்றதனை என்றும் - 2673

கொங்கு ஆர் என்பது கொங்கத்தார் என்றாகி கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல்மார்பன் என்றும் விரிக்கப்பட்டிருத்தலைக் காணலாம் - 2603

4. தொகுத்தல்

வியந்துதுதி என்பது வியந்துதி என்றாகி,
சாரணர் சித்தர் வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி என்றும் – 1070

கொண்டதற்கு என்பது கொண்டற்கு என்றாகி,
கோள்முதலை வாளையிற்றுக் கொண்டற்கு எள்கி என்றும் – 1140

முளிந்து தீந்த என்பது முளிந்தீந்த எனவும் விளிந்து
தீய்ந்த என்பது விளிந்தீந்த எனவும் ஆகி,
முளிந்தீந்த வெங்கடத்து முரிப் பெருங்களிற்றால்
விளந்தீந்த மாமரம்போல் வீழ்ந்தாரை நினையாதே – 1475

என்றும் தொகுக்கும்வழித் தொகுத்தலைக் காணலாம்.

5. நீட்டல்

காண்டவனம் காண்டாவனம் என்றாகி,
காண்டாவனம் என்பதோர் காடு அமரர்க்கு அரையனது என்றும் – 1079
வராகம் வாராகம் என்றாகி,
வாராகமதாகி இம்மண்ணை இடந்தாய் என்றும் – 1315
கிடத்தி என்பது கிடாத்தி என்றாகி,
தன்னுடைய தாள்மேல் கிடாத்தி என்றும் -2674 (102)
இன்துழாய் ஈன்துழாய் என்றாகி,
இன்னுயிர்த் தோழியால் எம்பெருமான் ஈன்துழாய் என்றும் – 2674 (62)
பன்னகராயன் பன்னாகராயன் என்றாகி,
பன்னாக ராயன் மடப்பாவை -2674 (57)
என்றும் வழங்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம்.

6. குறுக்கல்

ஏழ் என்பது எழு என்றாகி,
பார்எழு கடல்எழு மலைஎழுமாய் என்றும் – 1452
தீ என்பது தி என்றாகி,
எரிதியொ டெனஇன இயல்வினர் செலவினர் – 1714
என்றும் அமைந்திருத்தலைக் காண்கிறோம்.

இனி முதற்குறை முதலிய மூன்றும் பகாப்பதங்களிலும் பெரும்பாலும் பெயரிலும் வரும்.

7. முதற்குறை

மாதுளம் என்பது துளம் என்றாகி
துளம் படு முறுவல் தோழியர்க்கு அருளாள் எனவும் – 1109
அம்புதம் என்பது புதம் என்றாகி,
வெண்திரை புரவி என்னப் புதம்செய்து வந்து எனவும் – 1774
பொங்கு தண் அருவி புதம் செய்யப் பொன்களே சிதறும் – 1838
எனவும் முதற்குறைச் சொற்கள் காணப்படுகின்றன.

8. இடைக்குறை

என்ன என்ற உவமஉருபு என என இடைக்குறைந்து
பெடை அன்னம் என நடந்து -1212
எவரும் இடைக்குறையாகக் கொள்ளலாம்.

9. கடைக்குறை

இவ்வாழ்வார்பாடலில் கடைக்குறைச் சொற்கள் பல காணப்படுகின்றன.
சிள்வீடு என்பது சில்லு என்றும் ஒலி என்பது ஒல் என்றுமாகி,
சில்லு சில்லென்று ஓர் அறாத சிங்கவேள் குன்றமே எனவும் –1016
கராம் என்பது கரா என்றாகி,
கான்அமர்வேழம் கைஎடுத்து அலறக் கரா அதன் காலினைக் கதுவ –1076
கஞ்சன் என்பது கஞ்சு என்றாகி,
கஞ்சைக் கடந்தவனூர் கடல்மல்லைத் தரசயனம் எனவும் –1104
ஓவியம் என்பது ஓவி என்றாகி,
ஓவிநல்லார் எழுதிய தாமரை அன்ன கண்ணும் எனவும் –1124
மாணி என்பது மாண் என்றாகி,
மாவலிதன் பெருவேள்வியில் மாணுருவாய் –1134
மாண்உருவாய் மூவடி மாவலியை வேண்டி –1623
இருபிறப்பு ஒருமாண் ஆகி எனவும் 2672–(8)
குழாம் குழா என்றாகி,
குழாவரி வண்டு எனவும் –1141
ஏனம் என்பது ஏன் என்றாகி,
ஏனாகி உலகு இடந்து அன்று ... தானாய பெருமானை எனவும் –1400
சோமயாகம் என்பது சோமு என்றாகி,
தூய்நான்மறையாளர் சோமுச் செய்ய எனவும் –1138
ஈனம் என்பது ஈன் என்றாகி,
ஈசன்ஈன் அமரசாபம் நீக்காய் என்ன எனவும் –1431
கடைக்குறை பலவாக வந்திருத்தலைக் காண்கிறோம்.

10. எழுத்துப்போலியாக அமைந்த சில சொற்களையும் இவர் பாடல்களில் காண்கிறோம். இவை பெரும்பாலும் பேச்சுவழக்கில் அமைந்த சொற்களை அடிப்படையாகக் கொண்டவை.

மதில்–மதிள் – வம்புஉலாம் சோலை மாமதிள் தஞ்சை –953
முழுகி–முழுசி – முழுசி வண்டாடிய தண்துழாயின் மொய்மலர்க் கண்ணியும்
இழுகிய–இழுசிய – மேனிஅம் சாந்து இழுசிய கோலம் இருந்தவாறும் –1124
ஞாழல்–நாழல் – நிலவுமலர்ப்புன்னை நாழல் நீழல் தண்தாமரை –1194

இகலி–இசலி – இலைக்கொடி ஒண்குலைக்கமுகோடு இசலிவளம் சொரிய – 1230
வரன்ற–வரண்ட – பொன்னி முற்றும் புகுந்து பொன் வரண்ட – 1288
கோபம்–கோவம் – கோவமும் அருளும் அல்லாக் குணங்களும் ஆய எந்தை – 1296
இறப்பு–இறக்கை – உறக்கமொடு இறக்கையவை ஆயபெருமான் – 1438
வேள்வி–வேள்வு – வேள்வும் விழவும் வீதியில் என்றும் அறாத ஊர் – 1485
களபம்–களகம் – திண்களக மதள்புடைசூழ் திருநறையூர் – 1537
தணப்பின்–தணரில் – தணரில் ஆவி தளரும் என அன்பு தந்தான் ஊர் – 1772
உரிது–உதிஞ்சு – திங்கள் அகடு உரிஞ்சும் மணிமாடம் – 1578

மரகதம்–மரதகம் – நீல மரதகத்தை மழைமுகிலே போல்வான்தன்னை – 1147
மாறில் சோதி மரதகப்பாசடை – 1374
மைம்மான மரதகத்தை மறைஉரைத்த திருமாலை – 1398
மைம்மான் மணியை அணிகொள் மரதகத்தை – 1728
வரையின் மாமணியும் மரதகத்திரளும் – 1755
ஆயிற்று–ஆய்த்து–ஆசை வழுவாது ஏத்தும் எமக்கு இங்கு இழுக்கு ஆய்த்து – 1331
இவையாவும் எழுத்துப் பற்றிய செய்திகளாய்க் கொள்ளத்தக்கன.

சங்க இலக்கியத்தில் பயிலாத பல இயற்சொற்களும் சில திரிசொற்களும் இவ்வாழ்வார் பாடல்களில் பயின்றுள்ளன. பொதுமக்களிடையே சமய உணர்வைத் தமிழ் உணர்வோடு பரப்பிய இவருடைய பாடல்களில் திரிசொற்கள் மிகுதியாகப் பயில வாய்ப்பு இல்லை.

ஒரு சில நோக்குவோம்.

அச்சோ– அச்சோ ஒருவர் அழகியவா – 1758 – வியப்பு இடைச்சொல்.
ஆடு– ஆடு ஏறு வயல் ஆலை – 1241 – அடப்படும் சாறு தரும் கரும்பு.
இளம்படி– இளம்படி இவளுக்கு என் நினைந்திருந்தாய் – 1109 – இளைய பெண்.
இளமை– இளம்படி நற்கமுகு – 1234
ஈசி– ஈசி போமின் இங்கு இரேன்மின் – 975 – சீசீ என்ற இகழ்ச்சிக் குறிப்பு.
ஈளை– எய்ந்த சொல்லோடு ஈளை ஏங்கி இருமி – 973 – கோழை.
உரு– கானிடை உருவைத் சுடுசரம் துரந்து – 979 – மான்.
உழறி– ஊதை திரிதந்து உழறி உண்ண – 1789 – துகைத்து.
எக்கே– எக்கே இது என் இது – 1929 – இது என்ன தீவினை!
எத்தால்– எம்பிரானை எத்தால் மறக்கேனே – 1570 – யாதனால்.
ஏமம்– ஏமத்து இது என் இது – 1925 – இராக்கால யாமம்.
ஐக்கள்– சீத்திரளை ஒப்ப ஐக்கள் போத உந்த – 976 – கோழை.
ஒக்கலித்திட்டு– ஒக்கலித்திட்டு ஆடல் நன்மா உடைத்து – நடை பழகி.
ஒளி–துன்று ஒளித் துகில் படலம் – 1531 ஒழுங்குபட்டிருத்தல்.
கோதா– புலவிக் குலவானவர் தம் கோதா – 1466 – விரும்பத்தகுந்தவன்.

கோயின்மை– கோயின்மை செய்தது தக்கதே – 1665 – அராசகம்.
வல்லேற்றின் மணியும் கோயின்மை செய்யுமே – 1964 – தொந்தரவு.
சூர்மை– சூர்மையிலாய பேய்முலை சுவைத்து – 1821 – கொடுமை.
சேவகம் – சீற்றம் தீர வேண்டில் சேவகம் பேசாதே – 1874
அச்சம் தினைத்தனை இல்லை இப்பிள்ளை – சேவகமும் – 1919 – வீரம்.
தமர்காள்– எம்பெருமான் தமர்காள் – 1872 – தமர் விளிஏற்றது.
தழுத்து– உள்ளெலாம் உருகிக் குரல் தழுத்து ஒழிந்தேன் – 952
தழுதழுத்து– பிரிந்தது.
தாடாளன்– மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன் – 1178 – பெருமை உடையவன்.

அழுது ஏங்கும் தாடாளன் – 1613
திண்ணனவு– முக்கரிந்து மன்னய திண்ணனவு – 2674 (146) மன உறுதி.
திரைந்தான்– இவன் பொல்லான் திரைந்தான் – 1484 – மேல்தோல் சுருங்கினவன்.
துவரி– துவரிக்கனிவாய் – 1726 – இலவம்பூ.
துளை–துளை ஆர் கருமெனகுழல் ஆய்ச்சியர் துகில் வாரியும் –1225–நீரில் நெடுநேரம் குளித்தல்.
துளர்– முயல் துளர் மிளைமுயல் – 1710 – களைக்கொட்டு.
தெற்றல்– நடை கற்றதெற்றல் – 1990 – தெளிவுடையவன்.
தெற்றனவு– முற்றத்தான் துற்றிய தெற்றனவு – 2674 – (141) வெட்கக்கேடு.
தொளி– மண்டபம் ஒண்தொளி அனைத்தும் வாரம் ஓத – 1142 – வீதி.
தோக்கை– வேற்கண்ணார் தோக்கை பற்றி – 1280 – முன்தானை.
நமர்– பேசும் அளவன்று இது; வம்மின் நமர்! – 1086 – நமர் விளி ஏற்றது.
நீர்கள்– என்கண் நீர்கள் சோர்த்தருமால் – 1558 – நீரின் பன்மை ஆட்சி.
நுன்னை– நுன்னைக் காண்பதோர் ஆசையினால் – 1035 – நின்னை.
நுனக்கு– 'பிறர் இல்லை நுனக்கு' என்னும் எல்லையினான் – 1083 . உனக்கு.
பிராக்கள்– எம்பிராக்கள்! அரவிந்த வாயவனே – 1889. பிரானின் மரியாதைப் பன்மை.
புலவி– புலவி, குலவானவர்தம் கோதா – 1466 – பூமி.
பொருங்கயற்கண் நீர்அரும்பப்புலவிதந்து – 2075 – வருத்தம்.
போகாமை வல்லேனாய்ப் புலவி எய்தி – 2079 – வருத்தம்.
பொள்ளை– பொள்ளைத் கரத்த போதகத்தின் துன்பம் – 1349 – ஓட்டை.
மிதி– ஒண்மிதியில் புனல் ஒருவி ஒருகால் நிற்ப – 2556 – அடிவைத்தல்.
மோழை– மோழைஎழுந்து ஆழிமிகும் ஊழிவெள்ளம் – 1286 – சினைஆறு – ஊறுதல்.
வாரம்– மண்டபம் ஒண்தொளி அனைத்தும் வாரம் ஓத – 1142 – வாரம் ஓதுகை என்ற அத்தியயனம்.

இச்சொற்களில் அச்சோ, இளம்படி, ஈசி, எக்கே, எத்தால், ஐக்கள், தழுத்து, திரைந்தான், துளை, தொளி, தோக்கை, நீர்கள், நுன்னை, நுனக்கு, பொள்ளை, மிதி, மோழை, வாரம், என்பன தமிழக நன்மக்கள் பேசிய பேச்சு மொழியில் பயின்ற

இயற்சொற்கள் ஆகலாம். எஞ்சிய திரி சொற்கள்.

அங்கனே ஒக்க-அங்ஙனே ஒக்க அரி உரு ஆனான் - 1412 - அவ்வாறாக.

அஞ்சலோதி - அஞ்சலோதியை கொண்டு நடமின் -1816 - ஐவகைப்பட்ட கருங்கூந்தலாள்.

அண்ணா-அண்ணா வந்தடைந்தேன், அண்ணா அடியேன் இடரைக்களையாயே 1033, 1038, 1308. - அண்ணல் என்பதன் விளி.

அரங்கவாளன்- தாராளன், தண் அரங்கவாளன் - 1506.

அறிந்தும் ஆகிலும் - அமுதில் பிறந்த அவளும் நின் ஆகத்து இருப்பது அறிந்தும் ஆகிலும் -1108. அறிந்தபோதிலும்.

ஆதன்மையால் - வினைகள் நாசமது செய்திடும் ஆதன்மையால் - 1086 - ஆகையால்.

நின்திறத்தேன் ஆதன்மையால் பிறப்பேனாக எண்ணேன் - 1468 - ஆகையால்.

ஆக்கை - புண் ஆர் ஆக்கை தன்னுள் புலம்பி - 1033 - யாக்கை.

ஆது - ஆது தாரன் எனினும், ஆதுகொலோ என்று சொன்ன - 1776, 94 - யாது.

ஆப்புண்டு - அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தானே - 1898-1907 - யாப்புண்டு.

ஆர்- ஆரானும் காண்மின்கள் - 1651 யார்.

ஆளி- செங்கண் ஆளி இரட்டிறைஞ்சும் -1008- யாளி.

ஆனை - பைங்கண் ஆனைகொம்புகொண்டு - 1008 - யானை.

ஈசன்- ஆடு தாமரையோனும் ஈசனும் அமரர் கோனும் - 1056

ஈசன் தன்படையோடும் கிளையோடும் ஓட - 1262

இந்துவார் சடை ஈசனைப் பயந்த நான்முகனை - 1431

இருக்கு இலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு - 1505

ஒண்மழுப்பற்றும் ஈசற்கு இசை தந்து - 1841 - சிவபெருமான்.

உடல் எடுத்த- இரணியனை ... அணி உகிரால் உடல் எடுத்த பெருமான் - 1673 - உடலைப் பிளந்த.

உடையவாளன்- ஆயிரம் பேர் உடைய வாளன் - 1506

ஓட்டந்து- தீம்பால் ஓட்டந்து பாய்ந்திடுகின்ற - 1879 - ஓடி.

செய்தனகள்- திருவாளன் என்மகளைச் செய்தனகள் - 1388 - செய்தவை.

செருநுதல்- செருநுதலூடு போகி - 1987 - போரின் முன்னிடம்.

சொல்லுண்டான்- அதனால் மன்னவனால் சொல்லுண்டான் - 1998 - ஏசப்பட்டான்.

நானுடை- நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன் - 1006 - என்னுடை.

நுழைதந்து- மாம்பொழில் நுழைதந்து தென்றல் கமழ்தர - 1368 - நுழைந்து.

பிளவுஎடுத்த- இரணியனை ஊண் ஆர் அகலம் பிளவு எடுத்த ஒருவன் - 994 - பிளந்த.

பெறப்பெற்ற- நந்தன் பெறப்பெற்ற நம்பீ - 1878 - பெற்ற.

வாணன்- வாணன் வேள்வியதனுள்புக்கு மண் இரந்த - 1284

வாணனார் வேள்வியில் மண் இரந்த - 1810

வெந்திறல் வாணன் வேள்வி இடம் எய்தி - 1986 - மாவலி.
அடிக்கே - சிறந்தேன் அடிக்கே - 1459 - கே - ஏழன் உருபு.
கரைக்கே - முநநீர்க் கரைக்கே மணி உந்து புல்லாணியே - 1771.
சரிதைக்கே - மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன் - 1779

யகரம் யகர ஆகாரம் தொடங்கும் சொற்களை அகரம் ஆகார முதற் சொற்களாக அமைப்பதும், அங்ஙனே ஒக்க, அறிந்தும் ஆகிலும், ஆதன்மையால், பெறப்பெற்ற எனபனவும் இவர்கால வழக்காகிய இயற்சொற்களாம். அரங்கவாளன், உடையவாளன் உடல்எடுத்த, சொல்லுண்டான், நுழைதந்து, பிளவுஎடுத்த போல்வன இவர் படைத்துக் கொண்ட சொற்கள். ஈசன் சிபெருமானணையும் குறிப்பதும் வாணன் மாவலியையும் குறிப்பதும் இவர்கால வழக்காறு. கே–ஏழன் உருவாக வருதல் இவர் காலச் செய்யுளாறு. அண்ணல் என்பது அண்ணா என ஈறு கெட்டு வருவதும் என்னுடைய என்பது நானுடை என்று வருவதும், செய்தனகள் என விகுதி மேல விகுதி பெறுவதும் இவர்காலத்தை ஒட்டிய செய்யுளாறு.

திசைச்சொல்:

பெற்றம்– பெற்றம் ஆளியைப் பேரில் மணாளனை – 1857 – தென்பாண்டிநாடு.
கொக்கு– கொக்கின் பழம் வீழ் கூடலூரே – 1363 – துளுநாடு.
அந்தோ– அந்தோ! வந்த என்மகளைச் செய்தனகள். – 1369 சிங்களம்.
அந்தோ! என் ஆருயிரே! வந்தாயைப் போகல்ஓட்டேன் – 1563 – சிங்களம்.

வடசொல்

இவ்வாழ்வார் ஒரோவழி சமற்சிருதச் சொற்களைத் தமிழமரபிற்கு ஏற்ப அமைக்கப்பட்ட வடசொற்களாகக் கையாண்டுள்ளார்.

ஆகாசம்– பார்நீர் எரிகாற்றினோடு ஆகாசமும்	– 1024
இராவணாந்தகன்– இராவணாந்தகனை எமபெருமானை	– 1074
சடாபாரம்– தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து	– 2674 (67)
சூதகம்– செண்பகம் மாதவி சூதகம் வாழைகள் சூழ்	-1258
சூர்ப்பணகா– சூர்ப்பணகா சோர்வுஎய்தி	– 2674 (145)
தாசரதி– தார்மன்னு தாசரதியாய தடமார்பன்	–1684
நாபி வலயம்– தன் நாபிவலயத்து... மன்னிய தாமரை	–2674 (9)
நானாவகை– நானாவகை நல்லவர் மன்னிய நாங்கூர்	– 1311
நானாவிதம்– நானாவித நரகம்புகும் பாவம் செய்தேன்	– 1029
நிசாசரி– நிசாசரி தான்வந்தாளை	–2673(39)
மர்க்கடம்– வாதமாமகன் மர்க்கடம் விலங்கு	– 1419
வஞ்சனம்– வஞ்சனப்பேய் முலையூடு உயிர் உண்டான்	– 1602

ஆத்தன்– ஆத்தன் நம்பி, செங்கண்நம்பி – 1063 – ஆப்தன்.
அவத்தம் – பூண்டு அவத்தம்... தொண்டுபட்டு – 1089 – அபத்தம்.
நிச்சம்– நிச்சம் நினைவார்க்கு அருள்செய்யும் – 1085 – நித்யம்.

திருத்தி–இறந்தோர்க்குத் திருத்தி செய்து 1182–திருப்தி.
திலகம்–தென்திசைத் திலதம் அனையவர் நாங்கை–1275–திலகம்.
உபநியம்–ஒது வாய்மையும் உவனியப் பிறப்பும்–1424–உபநயனம்.
இராக்கதி–இராக்கதி முக்கு அரிந்திட்டவன்–1906–ராகூஸி

இவற்றுள் முதலில் கூறப்பட்டவை பேச்சுவழக்கில் அக்காலத்தில் பயின்ற சமற்கிருதச் சொற்கள். இறுதி ஏழும் தமிழமரபிற்கு ஏற்பத் திரித்துக் கொள்ளப்பட்டவை.

இவ்வாழ்வார் வினைமுற்றினை அடுத்து அதே வினையெச்சத்தை இணைத்து அந்தாதிபோலப் பாடத் தொடங்குகிறார்.

வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால் பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மோடு அவர்தரும் கல்வியே கருதி
ஓடினேன்ஓடி உய்வதோர் பொருளால் உணர்வுஎனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் ஓடி உய்வதோர் பொருளால் உணர்வுஎனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம் –948

ஒரே சொல்லை ஒருபாடலில் பலமுறை கையாளுவதன்கண் இவர் சுவை காண்கிறார்.

ஒலி–அண்டமுறு முழவொலியும் வண்டினங்கள் ஒலியும்
அருமறையின் ஒலியும் மடவார் சிலம்பின் ஒலியும் –1242
உண்டு–வஞ்சனையால் வந்தவள்தன் உயிர் உண்டு வாய்ந்த
தயிர் உண்டு வெண்ணெய் அமுது உண்டு, வலிமிக்க
கஞ்சனது உயிருண்டு இவ்வுலகு உண்ட காளை –1246
தேர்–தேரினை ஊர்ந்து தேரினைத்துரத்த செங்கண்மால்
பார்–பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து –1342
ஆளி–அரங்கம் ஆளி, என ஆளி, விண் ஆளி –1571
ஆனாய்–பொன் ஆனாய்; பொழில் ஏழும் காவல் பூண்ட
புகழ் ஆனாய்; அகழ்வாய தொண்டனேன் நான்
என் ஆனாய் என ஆனாய் என்னின்ன அல்லால்
என் அறிவன் ஏழையேன்? உலகம் ஏத்தும்
தென் ஆனாய், வட ஆனாய், குடபால் ஆனாய்
குணபாலமத யானாய், இமையோர்க்கு என்றும்
முன்னானாய், பின்னானால் வணங்கும் சோதி
திருமுழிக்களத்து ஆனாய், முதல் ஆனாயே –2061.
பார்–பாராளன், பாரிடத்து பாரை உண்டு
பார் உமிழந்து பார் அளந்து பாரை ஆண்ட பேராளன் –2071
நம்பி–சோத்த நம்பி ... ஆத்தன் நம்பி செங்கண் நம்பி
தேவர்க்கெல்லாம் மூத்த நம்பி முக்கண்நம்பி முனிவர்

தொழுது ஏத்தும் நம்பி.

பல செயப்படுபொருள்களுக்கு இவர் ஒரே வினைகொடுத்துப் பாடும் இடங்களும் உண்டு.

சுழல– மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும் மற்றவர்தம் காதலிமார் குழையும், தந்தை கால்தளையும் உடன் சுழல வந்துதோன்றி – 1278

உடைய – ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும் ஒண்கரியும் உருள்சகடும் உடையச்செற்ற – 1626

தலைமைப் பெருட்கு உரிய வினையையே தலைமையில் பொருட்கும் வழங்குவர். ஓதமும் நானும் உறங்காது இருந்தேனே – 1786

தலைமைப்பொருளாம் எழுவாய் மறைந்திருக்க அதற்கும் சேர்த்து முடிபுச்சொல் வழங்குவர்.

போயின பூங்கொடியாள் புனல் ஆலி புகுவார் கொல்லோ – 1212

பன்மைவினை கொள்ளவேண்டிய மரியாதைச் சொற்கு அன்பு பற்றி ஒருமைவினை கொடுப்பதும் உண்டு.

சரம் துரந்த எம் அடிகளும் வாரானால் – 1694

எம்பிராக்கள்! அரவிந்த வாயவனே! – 1889

முதல் வேற்றுமையிலும் வினிவேற்றுமையிலும் வரும் பெயர்களைப் பலவாக அடுக்கி ஒரே முக்குஞ் சொல்லால் முடித்தல் இவர் பாடலில் காணப்படுகிறது.

மெய்ய மலையாளன், லானவர்தம் தலையாளன், பாமரம் ஏபுளய்தவென்றிச் சிலையாளன், என்மகளைச் செய்தன. – 1389

பிறவாத பேராளன், பெண்ணாளன், மண்ணாளன், விண்ணோர் தங்கள் அறவாளன், என்மகளைச் செய்தன. – 1395

சிலையாளா! மர்ம எறிந்த திறலாளா! திருமெய்ய
மலையாளா! நீ அளவனை ஆளமாட்டோமே – 1206

கருமா முகில் உருவா! கனல் உருவா! புனல் உருவா!
பெருமால்வரை உருவா! பிற உருவா! நினதுருவா...
அருமாகடல் அமுதே! உனது அடியே சரன் ஆமே – 1636

இரண்டாம் வேற்றுமை ஏற்ற பெயர்களைப் பலவாக அடுக்கி ஒரே வினை முடிவு தருதலை இவர் பாடல்களில் நூற்றுக்கணக்கில் காணலாம்.

காற்றினை, புனலை, தீயை, கடிமதிள் இலங்கை செற்ற
ஏற்றினை, இமயம் மேய எழில் மணித்திரளை, இன்ப
ஆற்றினை, அமுதம் தன்னை, அவுணன் ஆர் உயிரை உண்ட
சுற்றினை, குணம்கொண்டு உள்ளம்! கூறு நீ கூறுமாறே – 2033

இது காறும் சொற்களையும் சொறொடர்களையும் பற்றி நோக்கினோம். இனிப்பொருள் பற்றிக் காண்போம்.

பொருள்

புறப்பொருள் :

பரமபதம், வியூகம், விபவம் முதலியவற்றில் மற்ற ஆழ்வார்கள் நுகர்ந்த இன்பங்களை எல்லாம் இவ்வாழ்வார் எம்பெருமான் உகந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரமூர்த்திகளிடமே நுகர்ந்தவர். 108 திருப்பதிகளில் 86 திருப்பதிகள் இவ்வாழ்வாரால் பாடப்பட்டுள்ளன. அர்ச்சாவதாரமூர்த்தியோடு தொடர்பு படுத்தியும் தனித்தும் சிறப்பாக ஓதப்படும் தசாவதாரங்களும் அன்னம் குதிரைமுகவன் போன்ற அவதாரங்களும் இவ்வாழ்வாரால் ஆங்காங்கு உரைக்கப்பட்டுள்ளன. எல்லா அவதாரங்களும் பெரிய திருமொழியின் 96, 104 ஆம் திருமொழிகளில் விரித்து உரைக்கப்பட்டுள்ளன. இவையாவும் பரவலும் புகழ்ச்சியும் கருதும் பாடான் பகுதியாகப் புறப்பொருட் செய்தியாக அமையும். தோற்றவர்கள் தங்கள் தோல்வியை ஏற்றுக்கொண்டு தங்களைக் காக்க வேண்டும் என்று மாற்றார் முன்னிலையில் ஆடும் கூத்து பொங்கத்தம் பொங்கம் எனப்படும். மாற்றார் வெற்றியும் தங்கள் தோல்வியும் தோன்ற ஆடும் கூத்து குழமணிதூரம் எனப்படும். இத்தகைய புறப்பொருள்கள் பற்றிய இரு பதிகங்கள் பெரிய திருமொழியில் 92, 93 ஆம் திருமொழிகளாக உள. இவை தும்பை, வாகைகளை அடுத்த பாடாணாக அமையும்.

அகப்பொருள் :

எம்பெருமானுக்கே தொண்டு செய்தல், எம்பெருமானையே புகலாக அடைதல், எம்பெருமான வழங்கும் இன்பத்தையே நுகரமுயலுதல், அவன் புணர்வு நனிவேட்டல், அவன்பிரிவு நனி இரங்கல் ஆகிய நிலைமைகளை நோக்கத் திருவடி விரும்பும் அடியவரும், திருத்தோள் விரும்பும் துணைவியரும் எம்பெருமானுக்கு ஒரேநிலையினர் ஆதலின் இவ்வாழ்வார் பரகாலநாயகியாகத் தம் மனம் அமையத் தம்மைத் தலைவி நிலையில் வைத்துத் தலைவி கூறுவனவாகவும், தலைவி பேசுதற்கு இயலாத நிலையி அவளுடைய தாய் பேசுவதாகவும் 24 பதிகங்கள் பாடியுள்ளார்.

தாய்ப்பாசுரங்கள் – 17, 27, 45, 71, 72, 89, 99 ஆம் திருமொழிகள் நெடுந்தாண்டகம் 11–20 என்பன.

தலைவிப்பாசுரங்கள் – 18, 26, 73, 74, 75, 82, 83, 84, 85, 95, 98, 100, 101, 102, 103 ஆம் திருமொழிகள், இருமடல்கள், நெடுந்தாண்டகம் 21–28 என்பன.

தலைவியின் உடன்போக்குத் குறித்துத் தாய் வருந்தும் 'கள்வன் கொல்' என்ற

திருமொழி, தலைவி தும்பியை நோக்கிக்கூறும் 'விண்ணவர் தங்கள் பெருமாள்' என்ற திருமொழி, தோழியர் இருவர் எம்பெருமானுடைய எளிமைமையும் மேன்மையையும் கூறும் 'மானமரும்' என்ற திருமொழி, ஆய்ச்சி கண்ணனோடு ஊடும் 'காதில் கூடிப்பிட்டு' என்ற திருமொழி போல்வன தனிச்சிறப்புடையன. இப்பாசுரங்கள் யாவும் தலைவன் இயற்பெயர் கூறப்படுதலின் அகப்புறப்பாடல்களாய், 'காமப்பகுதி கடவுளும் வரையார் ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் தொ.பொ. 83 என்ற விதியினுள் அடங்கும். இவ்வாழ்வாருடைய இவ்வகப் பொருள் புறப்பொருள் துறைகள், பிற்காலத்தில் பாடல்கள் இயற்றுவாருக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளமை தேற்றம்.

இனி யாப்புப் பற்றி நோக்குவோம் :

இவ்வாழ்வார் அமைத்த எழுகூற்றிருக்கை, இப்பொழுது நிலைமண்டில ஆசிரியப்பாப் போலப் பதிப்பிக்கப்பட்டிருப்பினும், இடையிடையே முச்சீரடி விரவிய ஆசிரியப் பாவாகவே கொள்ளத்தக்கது. பிறகாலத்தார் இதனை இணைக்குறள் ஆசிரியப்பா என அழைக்கின்றனர்.

இவ்வாழ்வார் காலத்து இலக்கணம் தொல்காப்பியமே. அதன்கண் பா இனங்கள் கூறப்படவில்லை. ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களுடைய பாடல்களை நோக்கிய பிற்காலத்து அவிநயம், காக்கைபாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்காலக்காரிகை முதலிய பல யாப்பு நூல்கள் தோன்றின. தொல்காப்பிய முறைப்படி கொச்சக ஒரு போகு என்ற பெருந்தலைப்பில் அமைந்த இவர் பாடல்கள் பிற்கால யாப்பிலக்கணம் கூறுகின்றன – 6, 7, 8 சீர் ஆசிரிய விருத்தம், கலிநிலைத்துறை, தரவு கொச்சகம், கலிவிருத்தம் என்ற பெயர்களில் பெரும்பான்மையாகவும், வஞ்சி விருத்தம், வெண்செந்துறை, ஆசிரியத்துறை என்பனவற்றில் சிறுபான்மையாகவும் அமைந்துள்ளன. தமிழுக்கே சிறப்பாக உள்ளது எதுகை. சிறிய திருமடல், பெரிய திருமடல் என்ற இரு பிரபந்தங்களும் தலைவன் பெயரில் பிரபந்தம் முழுதும் ஒரே திருமடல் என்ற இரு பிரபந்தங்களும் தலைவன் பெயரில் பிரபந்தம் முழுதும் ஒரே எதுகையாக அமைந்த கலிவெண்பாவாகும்.

'தாயே தந்தை என்றும்' என்ற 9 ஆம் திருமொழி ஐஞ்சீரடி நான்குடைப் பாடலாய்ப் பிற்கால மரபினை ஒட்டி கலிநிலைத்துறை என்று வழங்கப்பட்ட போதிலும் அவ்வகைப் பாடலை

தாயே தந்தை என்றும் - தார - மேகிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தென் - நுன்னைக் - காண்பதோர் ஆசையினால்
வேயேய் பூம்பொழில்சூழ் - விரை - யார்திரு வேங்கடவா!
நாயேன் வந்தடைந்தேன் - நல்கி - ஆளெனைக் கொண்டருளே.

என் விட்டிசைக்கும் மூன்றாம் சீரைத் தனியே பிரித்துக் காட்டிப் பதிப்பித்தல்

சிறக்கும்.

'திருத்தாய் செம்போத்தே' என்றும் 100 ஆம் பதிகமும் இசைப்பாடலே.

திருத்தாய் செம்போத் தேஎ
திரு மாமகள் தன்கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவ னைவரத்
திருத்தாய் செம்போத் தேஎ.

இது மூன்றாமடி நாற்சீர் பெற்ற முச்சீரடிப் பாடல்.

வண்டுறும் நறுமலர் இரண்டை கொண்டு
பண்டைநம் வினைகெட என்றடிமேல்
தொண்டரும் அமரரும் பணியநின்று அங்கு
அண்டமொடு அகலிடம் அளந்தவனே.
ஆண்டாய்உனைக் காண்பதோர் அருள்எனக்கு அருளுதியேல்
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே -

என்று தொடங்கும் 1ஆம் திருமொழி பாடல்தோறும் முதலில் முச்சீரடி நான்கு கொண்டு பாடல் இறுதியில் ஒவ்வொரு பாடலும் நாற்சீரடி இரண்டாக அமைந்த அதே சொற்றொடர்களைக் கொண்டுமுடிவதால், இப்பதிகம் ஈரடிமேல்வைப்பு எனப்படும். இத்தகைய பாடல்கள் சைவத் திருமுறையிலும் உள. முதல் மூன்று சீர் கனிச்சீரும் நான்காம் சீர் மாச்சீரும் கொண்டு நாற்சீரடி நான்கால் ஒரே எதுகையில் அமையும் இனிய ஓசை உடைய பாடல்களையும் இவர் பாடியுள்ளார். பிற்காலத்தில் அவை கலிவிருத்தம் எனப்பட்டன. வானர்மதி பொதியுஞ்சடை மழுவாளியொடு ஒருபால் தானாகிய தலைவன்னவன் அமரர்க்கதி பதியாம் தேனார்பொழில் தழுவும்சிறு புலியூர்சல சயனத்து ஆனயனது அடிஅல்லதொன்று அறியேன் அடியேனே. - 1632

முதலியன காண்க. 'நாதனுறை கின்றநகூர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே - 1438 என்ற திருமொழி இனிது.

ஈரைசச்சீர் தொடர்ந்து இரண்டும் மூவசைச்சீர் ஒன்றும் அரையடியாக இவ்வாறு அடிதோறும் அறுசீர் கொண்டு ஓரெதுகையாக அமையும் நாற்சீரடிப்பாடல்கள் பிற்காலத்தில் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் எனப்பட்டன. இத்தகைய பாடல்கள் சிலப்பதிகாரக் கானல்வரியில் 'திங்கள் மாலை வெண்குடையான் சென்னிச் செங்கோ லதுஓச்சி' முதலிய மூன்று பாடல்களும் 'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அதுபோர்த்து' முதலிய 3 பாடல்களும் ஆகும்.

இத்தகைய பாடல்களை இவ்வாழ்வார் பலவாகப் பாடியுள்ளார். பதிப்புக்களில் சில விரித்தல் விகாரங்கள் சுட்டப்படவில்லை.

அலையும் கரியும் பரிமாவும் திரியும் கானம் கடந்து போய் - 988 - விட்டிசைக்க
ஊரான் குடந்தை உத்தமன் ஒருகால் இருகால் சிலைவளைய - 991
நிலவும் சுடரும் இருளும்மாய் நின்றான் வென்றி விறல் ஆழி - 990 -

பஞ்சி அன்ன மெல்லடியாள் பார்த்தன் பள்ளி பாடுவாளே - 1319
பாலின் நல்ல மென்மொழியாள் பார்த்தன் பள்ளி பாடுவாளே - 1323
பாட கம்சேர் மெல்லடியாள் பார்த்தன் பள்ளி பாடுவாளே - 1324
பண்ணி னன்ன மென்மொழியாள் பார்த்தன் பள்ளி பாடுவாளே - 1326
நறையூர் நின்ற நம்பீயே - 1508
கல்லார் திரள்தோள் கஞ்சன்னை, சோமுச்செய்யும் தொழிலின்னொர் - 1512
ஆடும் பிறையும் அரவமும் - 1516. பன்னி உலகில் பாடுவ்வார் - 1517 எனப்பதிப்பித்தல் சிறந்தது.

எண் சீர்விருத்த அரையடிகளில் நான்காம் சீர் விரித்தல் விகாரம் பெற வேண்டியனவும் உள.

சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும் பின்னை
போரானைக் கொம்பொசித்த போரேற் றின்னை
புணர்மருதம் இறநடந்த பொற்குன் றின்னை - 1088
பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர் தியையை - 1094
தளிர்புரையும் திருவடிகள் தலைமே லவ்வே - 2053
வாழுதியேல் வாழலாம் மடநெஞ் சம்மே -2055
இரு நிலத்தோர் பழிப்படைத்தேன் ஏபா வம்மே - 2063

குற் றெழுத்தே பயின்று வரும் அராகமாக உருட்டு வண்ணத்தில் 87 ஆம் திருமொழி உள்ளது.

ஏதலர் நகையசெய இளையவர் அளைவெணெய்
போதுசெய் தமரிய புனிதர்நல் விரைமலர்
கோதிய மதுகரம் குலவிய மலர்மகள்
காதல்செய் கணபுரம் அடிகள்தம் இடமே - 1711 முதலியன காண்க.

இவ்வாறு இவர் பாடல்கள் பிற்காலத்தாருக்குச் செய்யுளமைப்பைப் பின்பற்றி வழி காட்டுவன ஆகும்.

ஒவ்வொரு விருதத்தின் பலவகைகளும் பிற்காலத்துப் பின்பற்றப்பட்டன.

அணி:

இனி, அணிப்பற்றி நோக்குவோம். தொல்காப்பியத்தில் உவமவியலில் ஓரணியாகக் கொள்ளப்படாமல் பொருள் புலப்பாட்டிற்கு உரிய கருவிகளுள் ஒன்றாகவே கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாழ்வார் காலத்தில் வடமொழியில் உள்ள பாமஹ சூத்திரம், வாமன சூத்திரம் என்பன தவிர காவியாதர்சம், தமிழ் அணிநூல், தண்டியலங்காரம் முதலியன தோன்றவில்லை. ஆகவே, பிற்பட்ட தண்டியலங்காரம் முதலிய நூல்களைக் கொண்டு இவர் அழகு பட அருளியுள்ள செய்யுள்களில் இன்ன இன்ன அணிகள் காணப்படுகின்றன என முடிவு செய்கிறோம். அணிகளும் தலையாயது உவம அணி. அதனோடு ஒருசார்த் தொடர்புடையது உருவகஅணி. உவம அணியிலுள்ள உவமத்தையும் பொருளையும் வெவ்வேறாகக் கொள்ளாமல் ஒன்றாகக் கொள்வதே உருவகம். ஒரு

சில நோக்குவோம்.

உவமஅணி- உருவகஅணி

ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய் ஒழிந்தன கழிந்த அந்நாள்கள் - 950

நீலமாலை நஞ்சுடைய இருள் தழைப்பத் தரளம் அங்கே தண்மதியின் நிலாக்காட்டப்

பவளந்தன்னால் செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார் காழி - 1181.

அரக்கன் முடிகள் பத்தும் புற்றுமறித்தன போலப் புவிமேல் சிந்த - 1184

அவ்வாய வாள்நெடுங்கண் குவளைகாட்ட, அரவிந்தம் முகம் காட்ட அருகே ஆம்பல் செவ்வாயின் திரள்காட்டும் வயல்சூழ் காழி

பட்டரவேர் அகலல்குல் பவளச்செவ்வாய்

பணைநெடுந்தோள் பிணைநெடுங்கண் பால்ஆம் இன்சொல் மட்டவிழும் குழலி - 1185

நீலத்தடவரை மாமணி நிகழக் கிடந்தது போல் அரவணை வேலைத்தலைக் கிடந்தாய் - 1189

கொண்டு அரவத்திரைஉலவு குரைக்கடல் மேல் குலவரைபோல்

பண்டு அரவின் அணைகிடந்த பண்பாளா - 1204

மான் போலும் மென்நோக்கின் செய்ய வாயார்

மரகதம் போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு

தேன் போலும் மென்மழலை பயிற்றும் நாங்கூர் - 1283

காற்றிடை பூளை சுரந்தென அரக்கர்தம் சேனை அரந்தை உற - 1343

முளந்தீந்த வெங்கடத்து முரிப்பெருங்குளிற்றால்

விளிந்தீந்த மாமரம் போல் வீழ்ந்தாரை நினையாதே - 1475

பனிசேர் முல்லை பல்அரும்ப, பானல் ஒரு பால் கண்கட்ட

நனிசேர் கமலம் முகம் காட்டும் நறையூர் - 1509

புள் ஆர்புறவில் பூங்காவி புலன்கொள்மாதர் கண்காட்ட

நள்ஆர் கமலம் முகம் காட்டும் - 1510

கறவாமடநாகு தன்கன்று உள்ளினாற்போல்

மறவாது அடியேன் உன்னையே அழைக்கின்றேன் - 1548

தாய் நினைந்த கன்றே ஒக்க என்னையும் தன்னையே நினைக்கச் செய்த ஆயன் - 1569

நெல்லில் குவளை கண்காட்ட நீரில் குமுதம் வாய் காட்ட அல்லி கமலம் முகம் காட்டும் கழனி அழுந்தூர் - 1597

நிறம் நீரார் மழைமுகிலே நீள்வரையே ஒக்குமால் - 1653

மைவளர்க்கும் மணிஉருவம் மரகதமோ மழைமுகிலோ - 1655

கொங்குமலி கருங்குவளை கண்ணாகத் தெண்கயங்கள்

செங்கமல முகம்மலர்த்தும் திருக்கண்ணபுரம் - 1675

பிள்ளை தன்கையில் கிண்ணமே ஒக்க என்மகளை நினைக்கின்றாய்

மூன்றில் எழுந்த முருங்கையின் தேனா என்மகளை நினைக்கின்றாய்

அங்கையில் வாட்டாம் என என்மகளை நினைக்கின்றாய்
உங்கள் தொண்டர்கைத் தண்டாக என்மகளை நினைக்கின்றாய் பெருவழி நாவற்கனியிலும் எளியள் என் என்மகளை நினைக்கின்றாய்
எருக்கிலைக்கா எறி மழு ஓச்சல்போல இவளை வருத்துகிறாய்
கோழி வெண்முட்டையை உடைக்கக் குறுத்தடி கொள்வது போல இவளை வருத்துகிறாய்
கவுள் கொண்ட நீராம் என இவளைக் கருதுகிறாய்
ஆரழல் ஓம்பும் அந்தணன் தோட்டமாக இவளைக் கருதுகிறாய் - 1932-40
ஆற்றங்கரை வாழ் மரம்போல அஞ்சுகிறேன்
காற்றத்திடைப்பட்ட கலவர் மனம்போல் அஞ்சுகிறேன்
பாம்போடு ஒரு கூரையில் பயின்றாற்போல அஞ்சுகிறேன்
இருபாடு எரி கொள்ளியின் உள்எறும்பேபோல அஞ்சுகிறேன்
வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போல அஞ்சுகிறேன்
இடையன் எறிந்த மரம்போலக் குற்றுயிராயுள்ளேன் - 2022-27
இரும்பு அனன்று உண்டநீர் போல் உய்ந்து போனேன் - 2036
ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பி போவதே - 2673-(8)
காரார் கடல் போலும் காமத்ர் - 2673 (64)

மன்னன் திருமார்பும் வாயும் அடியிணையும்
பன்னுகரதலமும் கண்களும் பங்கயத்தின்
பொன் இயல் காடு ஒருமணிவரைமேல் பூத்தது போல்
மன்னும் மரகதக் குன்று. 2674 - (74, 75).
அன்னமாய் மானாய் அணிமயிலாய் ஆங்கு இடையே
மின்னாய் இளவேய் இரண்டாய் இணைச்செப்பாய்
முன்னாய் தொண்டையாய்க் கெண்டைக்குலம் இரண்டாய்
இன்னிள வஞ்சிக்கொடி ஒன்று நின்றது தான் - 2674 - (78, 79)
கல் நவிலும் காட்டகத்து ஓர் வல்லிக் கடிமலரின்
நல் நறு வாசம் மற்று ஆரானும் எய்தாமே
மன்னும் வறுநிலத்து வாளாங்கு உகுத்தது போல்
என்னடைய பெண்மையும் என் நலனும் என் முலையும் - (88 - 90)
முன் இருந்து முக்கின்று.
கண்ணும் வாயும் கைத்தலமும் அடியிணையும் கமலவண்ணம் - 2069
பல பொருளுவமை யணியையும் பல இடத்துக் காண்கிறோம்.
பொங்கு கருங்கடல் பூவை காயா போது அவிழ்நீலம் புனைந்தமேகம் அங்ஙனம் போன்று இவர் - 1123
பருவக்கருமுகில் ஒத்து முத்துடை மாகடல் ஒத்து
அருவித்திரள் திகழ்கின்ற ஆயிரம் பொன்மலை ஒத்து
உருவக் கருங்குழல் ஆய்ச்சி - 1172
கொம்பும் அரவும் வல்லியும் வென்ற நுண்ணேரிடை
வம்புஉண் குழலார் - 1481

விலங்கும் கயலும் வேலும் ஒண்காவியும் வென்றகண்

சலம் கொண்ட சொல்லார் - 1482
மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்
கொய்ஆர் குவளையும் காயாவும் போன்று இருண்ட மெய்யானை - 2016

உவமானப்பொருள் பின்வருநிலை அணி:-

கைவண்ணம் தாமரை; வாய்கமலம் போலும்;
கண்இணையும் அரவிந்தம்; அடியும் அஃதே. - 2072

மயக்க அணி:-

தாது மல்கிய பிண்டி விண்டு அலர்கின்ற தழல்புரை எழில் நோக்கிப்
பேதை வண்டுகள் எரியென வெருவரு பிரிதி - 966
கரிய மா முகில் படலங்கள் கிடந்தவை முழுங்கிடக் களிறுஎன்று
பெரிய மாசுணம் வரைஎனப் பெயர்தரு பிரிதி - 967
அருகு கைதை மலரக் கெண்டை
குருகுஎன்று அஞ்சும் கூடலூரே - 1366

தற்குறிப்பேற்ற அணி:-

அவ்வாய இளமங்கையர் பேசவும் தான்
அருமாமறை அந்தணர் சிந்தைபுக
செவ்வாய்க் கிளி நான்மறைபாடும் தில்லை - 1163
துங்கமுக மாளிகைமேல் ஆயம் கூறும்
துடியிடையார் முகக்கமலச் சோதி தன்னால்
திங்கள் முகம் பனிபடைக்கும் அழகார் காழி -1183
களியா வண்டு கள்ளுண்ணக் காமா தென்றல் அலர்தூற்ற
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும் நறையூர் நின்ற நம்பீயே - 1511
மைவைத்து இலங்கு கண்ணார் தங்கள் மொழி ஒப்பான்
கொவ்வைக் கனிவாய்க் கிள்ளை பேசும் குறுங்குடியே - 1802
சொல்லின் திருவே அனையார் கனிவாய் எயிறு ஒப்பான்
கொல்லை முல்லை மெல் அரும்பு ஈனும் குறுங்குடியே - 1804

நிரல்நிறை அணி:-

முழுநீலமும் மலர்ஆம்பலும் அரவிந்தமும் விரவிக்

கழுநீரொடு மடவாரவர் கண்வாய்முகம் மலரும் - 1633

கழுநீரொடு முழுநீலம் - கண், ஆம்பல் - வாய். அரவிந்தம் - முகம் என நிரலே கொள்க.

நன்றாய புனல் நறையூர் திருஆலி குடந்தை தடம் திகழ் கோவல்நகர்
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு இடம் - 1078
நறையூரில் நின்றான், திரு ஆலியில் இருந்தான், குடந்தையில் கிடந்தான், கோவல் நகரில் நடந்தான் என நிரல் நிறையாகக் கொள்க.

எண் அலங்காரம்:-

வந்தனை செய்து இசை ஏழ் ஆறங்கம் ஐந்து வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும் சிந்தனை செய்து - 1139

அருமறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும் அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும் - மலி காழி - 1178

நால்வகை வேதம் ஐவேள்வி ஆறங்கம் வல்லார் - 1436

திரு எழுகூற்றிருக்கை எண்அலங்காரத்திற்காகவே அமைந்தது.

சொல் பின்வரு நிலை அணி:-

ஊன் வாட உண்ணாது... தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா.

கான் ஆட மஞ்ஞைக்கணமாட மாடே கயலாடு கானீர்ப்பழனம் புடைபோய்த் தேனாடமாடக் கொடியாடு தில்லை - 1158

அண்டமுறு முழவொலியும் ... ஒலி திகழும் நாங்கூர் - 1242

வஞ்சனையால் வந்தவள் தன் உயிருண்டு ... உலகுண்ட காளை - 1246

முன்னை வண்ணம் பாலின் வண்ணம் முழுதும் நிலைநின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம் வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் புரையும் திருமேனி
இன்னவண்ணம் என்று காட்டீர் இந்தளூரீரே - 1355

பொய் வண்ணம் மனத்தகற்றி... மெய்வண்ணம் நினைந்தவர்க்கு
அவ்வண்ண வண்ணனை - 1406

புணர்நிலை அணி:-

விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னை - 1068

மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும்
மற்றவர் தம் காதலிமார் குழையும் தந்தை
கால்தளையும் உடன் கழல வந்து தோன்றி - 1278 முதலியன.

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும் ஒண்கரியும் உருள்சகடும் உடையச் செற்ற நெடியோன் - 1626

விரோதஅணி - முரண்தொடை:-

கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று
காயெல்லாம் மரகதமாய் பவளம் காட்ட - 1144.
கருங்கமுகின் செங்காய் வீழ - 1185
இளங்குமுகின் முதுபாளை -1278
பாவமும் அறமும் வீடும் இன்பமும் துன்பந்தானும்
கோவமும் அருளும் அல்லாக் குணங்குளும் ஆய எந்தை -1296
மிகப் பெரியவன் நுண்நேர்மையயை -1386
(தீதறு நிலத்தொடு எரிகாலிஞெடு நீர்கெழுவிசும்புமவையாய
உறக்கமொடு இறக்கையவை ஆய பெருமான் -1438)
பகலும் இரகூம் தானேயாயப் பாரும் விண்ணும் தானேயாய்
நிகரில் சுடராய அருளாகி நின்றூர் -1592
செம்பவளம் மரதகம் நன்முத்தம் காட்டத் திகழ்பூதம் -1625
காஸலயும் மாலை ஒத்துண்டு கங்குல் நாழிகை ஊழியில் நீண்டுலாவும் -1790
எல்லியும் நன்பகலும் இருந்தே ஏசிலும் ஏசுக -1793
செங்கண் நேடிய கரிய மேனி -1794
மண்ணூடும் விண்ணூடும் வானவரும் தானவரும் மற்றும் எல்லாம் -2004
வகை முதல் அடுக்கு-சீரார் திருவேங்கடமே ... வடமதுரை - 2673 (69 -74)
இவைபோலப் பல அணிகள் காணப்படுகின்றன.

திருமங்கை மன்னன் அருளிய பிரபந்தங்கள் ஆறு. அவை பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம்,திரு எழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் என்பன. மடல்களில் உள்ள கண்ணிகளைத் தனித்தனிச் செய்யுளாக எண்ணில் இவர் அருளிய பாடல்கள் 1361. மடல்கஸளத் தனித்தனி ஒவ்வொரு பாடலாக எண்ணின் 1137.

அவை எழுத்து சொல் பொருள் யாப்பு அண என்ற ஐவகைப் பின்னர் விரிந்த தமிழ் இவக்கணத்தைப் பினபற்றிச் செய்யுள் வரைபவர்களுக்கு வழிகாட்டியாகும் இலக்கியமாக அமைந்தமையின் கூரத்தாழவான் தம்முடைய தனியனில் பரகாலன் பனுவல்கள் 'தமிழ நன்னூல் துறைகள் அஞ்சுக்கு இலக்கியம்' என்ற பொருள் பொதிந்த சொற்றொடரால் இவர் அருளிச் செய்த பிரபந்தங்களைப் பாராட்டுவாராயினூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

ரிபூஷணபி வத்ஸல:

ஸ்ரீமான் கல்யாணபுரம் R. ஆராவமுதாசாரியர் ஸ்வாமி

அகிலஹேய ப்ரத்யநீக கல்யாண குணநிதியான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மண்ணுலகில் எடுத்த அவதாரங்களில் இராமாவதாரத்துக்கு மிகுந்த ஏற்றமுண்டு. அதற்கு காரணம் அவனது கல்யாணகுணங்களே.

வான்மீகி முனிவர் நாரத முனிவரை நோக்கி கேட்ட திருக்குணங்களில், முதன்மையாகக் கேட்டது ''கோன்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் க:'' என்பதாகும். பிற்பட்டுக் கூறப்படும் குணங்கள் பிறப்பாக ஒவ்வொரு குணத்தையும் எடுத்து கூறுவதாக அமைந்துள்ளது.

உதாரணம்: - வீர்யவாந் க: வித்வான் க: இத்யாதி ஆஞல் முதலில் ''குணவாந்'' என்று பொதுப்படையாக கூறியதன் தாத்பர்யம் அவனது சௌசீல்ய குணத்தை குறிப்பதாகும். அதாவது தனது மேன்மையைப் பாராமல் தன்னைவிடத் தாழ்ந்தவர்களோடு ஒன்றரக் கலந்து பழகும் சீலகுணம். இந்த குணத்தை நினைத்தே, ஸ்வாமி தேசிகன் தயாசதகத்தில்

''நிஷாதாஞும் நேதா கபிகுலபதி: காபி ஸுபரி
குசேல: குப்ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி
அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதே ருந்நதிமபி
ப்ரபூதை: ஸ்ரோதோபி: ப்ரஸபமநுகம்பே ஸமயஸி'' என்று அருளுகிறார்

திருமங்கை மன்னனும் ''ஏழை ஏதலன் கீழ்மகன் என்ஞது'' என்ற பாசுரத்தில் சக்ரவர்த்தித்திருமகன் குஹஞெடு தோழமை கொண்டதை விவரிக்கிறார்.

அயோத்யா காண்டத்தில் ராமகுஹ ஸமாகமத்தை
தத்ர ராஜா குஹோ நாம ராமஸ்யாத்மஸம: ஸகா
நிஷாத ஜாத்யோ பலவாந் ஸ்தபதிஸ் சேதி விச்ருத:
என்று வான்மீகி முனிவர் வர்ணிக்கறார்.

''தோழமை என்றவன் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ'' என்று குஹன் பெருமைப்படுவதை கம்பனும் விவரிக்கறார். ஸ்வாமிதேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில் சக்ரவர்த்தித் திருமகனை ''குஹஸகன்'' என்றே குறிப்பிடுகிறார்.

ப்ராப்தேதிவம் தசரதே பரதே விலக்ஷே
பர்யாகுலேஷு ப்ருஶமுத்தர கோஸலேஷு
த்வம்சேது பேக்ஷதவதி க இவா பவிஷ்யத்
கோபாயிதும் குஹஸகஸ்ய விபோ பதம் தத்

அப்படி குஹன், அதன் பின் சபரி மற்றும் வானர வீரனை ஸுக்ரீவன் முதலானோர் தன்னைவிட தாழ்ந்தவராயிருந்த போதிலும் பகவான் அவர்களுடன் பழகிய அந்த சீலகுணத்தை பூர்வரசார்யர்கள் கொண்டாடுகின்றனர்.

அதனல் தான் ஸ்ரீ பாராசரபட்டர், இராமாவதாரத்தைக் கூறும் வேளையில் அஸ்ய அவதாரஸ்யதத்வம் ஸௌசீல்யம் என்று கொண்டாடுகிறார்.

அப்படிப்பட்ட உயர்ந்த கல்யாணகுணங்களைக் கொண்ட அவதாரம் இராமவதாரம். இளையபெருமாள் பம்பா தீரத்தில் தன்னை அறிமுகம் செய்து கொள்கையில் குணை: தாஸ்யமுபாகத: என்பது குறிப்பிடதக்கது.

சக்ரவர்த்தி தசரதர் தனது திருக்குமாரனை இராமனுக்கு முடிசூட்டவேண்டும் என்று விரும்பி மக்களின் ஆலோசனையைக் கேட்டபோது அவர்கள் ஒருமனதாக ஆதரித்துப் பேசுவதை வான்மீகி முனிவர் வர்ணிக்கிறார்.

'' பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்திதே''

என்கிறார்கள். இராமபிரானிடம் அமைந்த அந்த கல்யாண குணங்களைப் பற்றிப் பேசுகையில் ''ரிபூணமபி வத்ஸல: '' என்று கூறுகிறார் கவிஸார்வபௌமர். இதன் பெருளாவது: விரோதிகளுக்கும் கண்மணிபோன்றவன். ஆங்கிலத்தில் கூறினல் DARLING OF THE ENEMIES எனலாம். இந்த குணவிசேஷத்தை இராமாயணத்தில் பல இடங்களில் காணலாம். அவற்றுள் சிலவற்றை சுருக்கமாக இங்கு ஆராய்வோம்.

சக்ரவர்த்தித் திருமகன், இளையபெருமாள், பிராட்டி பின் தொடர தண்டகாரண்யத்துள் பிரவேசிக்கையில் விராதன் என்ற அரக்கன் எதிர்படுகிறான். முதலில் விராட்டியை தூக்கிக் கொண்டு ஓடுகிறான். பிறகு பிராட்டியை விட்டு, இராம, லக்ஷ்மணர்களை தோளில் தூக்கிக் கொண்டு ஓடுகிறான். ஸீதாபிராட்டி பயந்து அலறுகிறாள். சக்ரவர்த்தித்திருமகனும் இளையபொருமாள் விராதனது இரு கரங்களையும் வெட்டி வீழ்த்துகிறார்கள். அப்போது அவன் இராமபிரானை துதிக்கிறான்.

வான்மீகி:

கௌஸல்யா ஸுப்ரஜா தாத ராமஸ்த்வம் விதிதோ மயா
வைதேஹீ ச மஹாபாகா லக்ஷ்மணஸ்ச மஹாயஶா :
புவனம் ஸ்வம் கமிஷ்யாமி ஸ்வஸ்திவோ ஸ்து பரந்தப
இதோ வஸதி தர்மாத்மா ஶரபங்க: ப்ரதாபவாந்

கம்பன்:

வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனவுன்
பாதங்கள் இவையென்னில் படிவங்கள் எப்படியோ
ஓதங்கள் கடலன்றி யொன்றிலேடொன்றுவ்வாப்
பூதங்கள் தொறுமுறைந்தால் அவையுன்னைப் பொறுக்குமோ?

தாய் தன்னையறியாத கன்றில்லை தன் கன்றை
ஆயுமறியும் உலகின் தாயாகினைய
நீயறிதி யெப்பொருளுமவையுன்னை நிலையிறயா
மாயையிதுவென் கொலோ? வாராதே வரவல்லாய்

குறிப்பு: இங்கு கம்பனின் பாடல் நம்மாழ்வார் திவ்யஸூக்தியை அனுஸந்தருப்பது காணலாம்.

'' வந்தாய் போலே வாராதாய்
வாராதாய் போல் வருவானே ''

அடுத்து சூர்பணகை, இளையபெருமாளால் மூக்கு காதுகள் அறுபட்டு, கரன் இருக்குமிடம் சென்று இராமனின் வடிவழகை வர்ணிப்பது வியக்கத்தக்கது.

வான்மீகி:

தருணௌ ரூப ஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ
புண்டரீக விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜினாம் பரௌ
பல மூலாஶநௌ தாந்தௌ தாபஸௌ தர்ம சாரிணௌ
புத்ரௌ தசரதஸ்யாஸ்தாம் ப்ராதரௌ ராமலக்ஷ்மணௌ
கந்தர்வ ராஜப்ரதிமௌ பார்த்திவ வ்யஞ்ஜனை விதௌ
தேவௌ வா மானுஷௌ வா தௌ தர்கியது முத்ஸஹே

கம்பன்:

இருவர் மானிடர் தாபதரேந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன்மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவில்நேரும் நிருதரைத் தேடுவார்.

அகம்பனன், சூர்பணகை இவர்கள் துர்போதனையால் பிராட்டியைக் கவருவதற்கு இராவணன் மாரீசனின் உதவியை நாடியபொழுது, மாரீசன் இராமன் பெருமையைப் பேசும் அழகு நினைத்து நினைத்து சுவைக்கத்தக்கது.

வான்மீகி :

ராமோ விக்ரஹவான் தர்ம: ஸாது: ஸத்ய பராக்ரம:
ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய தேவாநும் மகவானிவ
கதம் த்வம் தஸ்ய வைதேஹீம் ரக்ஷிதாம் ஸ்வேன தேஜஸா
இச்சஸி ப்ரஸபம் ஹர்தும் பிரபாமிவ விவஸ்வத:

கம்பன்:

யாதுமறியாயுரை கொளாய் இகல் இராமன்
கோதைபுனையாமுன் உயிர் கொள்ளைப்படுமன்றே
பேதை மதியாலிதொர் பெண்ணுருவமென்றுய்
சீதையுருவோ நிருதர் தீவினையதன்றே.

இப்படி ராமனது பெருமையை மாரீசன் கூறுகிறான் என்றால் வாலியின் மனைவி தாரை இராமபிரானின் பரதத்வத்தை பரக்கப்பேசுவது வியக்கத்தக்கது. ஸுக்ரீவன் வாலியுடன் சண்டையிட்டு பயந்து ஓடியவன் மீண்டும் வாலியை சண்டைக்கு அழைக்கிறான். சக்ரவர்த்தித்திருமகன் ஸுக்ரீவனுக்கு உறுதுணையாக இருப்பதுதான் இதற்கு காரணம் என்பதை வாலியிடம் தாரை உணர்த்துகிறாள். அப்போது அவள் கூறும் வார்த்தை மிகவும் அழகானது.

வான்மீகி:

அயோத்யாதிபதே: புத்ரௌ ஸுரௌ ஸமரதுர்ஜயௌ
இக்ஷ்வாகூணாம் குலே ஜாதௌ ப்ரதிதௌ ராமலக்ஷ்மணௌ
ஸுக்ரீவப்ரியகரமார்த்தம் ப்ராப்தௌ தத்ரதுராஸதௌ
தவப்ராதுர்ஹி விக்யாத: ஸஹரயோ ரணகர்கஸு:

ராம: பரபலாமர்தீ யுகாந்தாக்நிரிவோத்தித:
நிவாஸவிருக்ஷ: ஸாதூனும் ஆபந்நாநாம் பராகதி:
ஆர்தானும் ஸம்ஸ்ரயஸ்சைவ யஸ ஸ்ச்சைகவாஜநம்
ஞான விஞானஸம்பன்னே நிதேஷு நிரத: பிது:

பிறகு வாலி ராமபாணத்திலுல் வீழ்த்தப்பட்டபோது சக்ரவர்த்தித் திருமகனை தாரை ஸ்தோத்திரம் செய்கிறார்.

த்வமப்ரமெயஸ்ச துராஸதஸ்ச ஜிதேந்த்ரியஸ்சேரத்தம தார்மிகஸ்ச
அக்ஷய்ய கீர்த்திஸ்ச விசக்ஷணஸ்ச க்ஷிதிக்ஷமாவான் க்ஷதஜோபமாக்ஷ:

தாரை பரதத்வ நிர்தாரணம் செய்வதாக அமைந்த இந்த ஸ்லோகத்துக்கு ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் அருளும் விசேஷார்த்தங்கள் தெவிட்டாத் தெள்ளமுது. ராமபாணத்தால் பீடிக்கப்பட்டு சக்தியிழந்த நிலையில் வாலி, இராமபிரானைப் பார்த்து,

வான்மீகி:

யத்வமாத்த நரச்ரேஷ்ட ததேவம் நாத்ரஸம்சய:
ப்ரதிவக்தும் ப்ரக்குஷ்டேஹி நாபக்ருஷ்டஸ்து சகநுயாம்
யதயுக்தம் மயாபூர்வம் ப்ரமாதாதுக்தமப்ரியம்
தத்ராபிகலு மேதோஷம் கர்தும் நார்ஹஸிராகவே
த்வம்ஹி த்ருஷ்டார்த்த தத்வஞ: ப்ரஜாநாம் ச ஹிதே ரத:
கார்யகாரண ஸித்தெள தே ப்ரஸந்நா புத்திரவ்யயா

இராமபிரானை ''ஓவியத்தெழுத வொண்ணா உருவத்தாய்'' என வாலி அழைப்பதாக கம்பன் வர்ணிக்கிறார்.

தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும் தகவும் சால்பும்
நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாய் என நிறை எம்பால் நவை அற உணரலாமே
தீயரை பொறுத்தி என்றான் – சிறியன சிந்தியாதான்

ஏவு கூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய், அறிவுதந்து அருளினாய்
மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாபம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ.

இங்கு நம்மாழ்வார் திவ்யஸூக்திகள் நினைக்கத்தக்கது திருவாய்மொழி (7–8–1)

தாயாய் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்
நீயாய் நீ நின்ற வாறிவையென்ன நியாயங்களே
நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்
பல்வகையும் பரந்த பெருமான் என்னையாள்வானை
செல்வம் மல்குகுடி திருவிண்ணகர் கண்டேனே கவந்தனோ,

ராமனை வாயாரத்துதிக்கிறான்.

ஆதிப்பிரமனுநீ ஆதிப்பரமனு நீ
ஓதியுறு பொருளுக்கப்பாலுண் டாயின நீ
சோதிச்சுடர் பிழம்பு தீயென்று சொல்லுகின்ற
வேதமுரை செய்தால் வெள்காரோ வேறுள்ளார் ?

ராமனது படையின் பலத்தை அறிந்துவர சுகன், சாரணன் இருவரை ராவணன் அனுப்புகிறான். வாரை வீரர்கள் போல் வேடத்தை மாற்றி வந்த அவ்விருவரையும் விபீஷணன் ராமபிரான் முன்னே நிறுத்த கருணைகாகுத்தனை ராமன் அவர்கள் இருவருக்கும் வடைவலத்தை காட்டி திரும்பிச் செல்கையில் ராவணனுக்கு செய்தி சொல்லி அனுப்புகிறான். அவ்விருவரும் ராவணனிடம் சென்று ராமனின் பெருமை பேசுகின்றனர்.

ராமோ தாசரதி: ஸ்ரீமாந் லக்ஷ்மணஸ்ச விபீஷண:
ஸுக்ரீவஸ்ச மஹாதேஜா மஹேந்த்ர ஸம விக்ரம:
ஏதே ஸக்தா : புரீம் லங்காம் ஸப்ராகாராம் ஸதோரணும்
உத்பாட்ய ஸம்கரமயிதும் ஸர்வேதிஷ்டந்து வாநரா:
யாத்ருஸம் தஸ்ய ராமஸ்ய ரூபம் ப்ரஹரணுனிச
வதிஷ்யதி புரீம் லங்காம் ஏகஸ்திஷ்டந்து தே த்ரய:

தனக்கு அடைக்கலம் தருவதற்கு இராமபிரான் திருவுளம் கொண்டான் என்ற விபரத்தை சுக்ரீவன் வாயிலாக அறிந்த விபீஷணன் கூறுகிறான்.

பஞ்சென‌ச் சிவக்கு மென்கால் தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கிளைய என்னை வருகவென்றருள் செய்தானோ
தஞ்சென‌க் கருதினானோ தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சென‌த்தகை யனன்றோ நாயகன் அருளின் நாயேன்''

ராமராவண ப்ரதம யுத்தம். ராவணனது மகுடம், தேர், குதிரை, சாரதி, கொடி

கையில் இருந்த வில், அனைத்தையும் உடைத்தெறிந்த சக்ரவர்த்தித் திருமகன், நிராயுதபாணியான இராவணனைக் கொல்ல விரும்பவில்லை. மாறாக அவனை திரும்பப் போய்விட்டு மறுநாள் வரும்படி கூறுகிறான்.

ஆளையா உனக்கமைந்தன மாருத மறைந்த
பூளையாயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு
நானை வரவென நல்கினன் நாகிளங்கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

அப்படி இராமபிரானால் திரும்பியனுப்பப்பட்ட ராவணன் ஊர் திரும்புகையில் இருந்த நிலையை கம்பன் சித்திரமாகத் தீட்டுகிறான்.

வாரணம் பொருதமார்பும் வரையினையெடுத்த தோளும்
நாரத முனிவற்கேற்ப நயம்படவுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையே மீண்டு போனான்

இங்கு 'வெறுங்கை' என்னுமிடத்து Empty என்று பொருள் கொள்ளாமல் எதிரே நிற்பவன் பரம்பொருள் என்று உணர்ந்து அவனுக்கு இரு கைகளையும் சேர்த்து ஒரு அஞ்சலி செய்யாமற் போனானே இந்த இராவணனின் கை வெறுங்கையாயிற்றே என்று பொருள் கொண்டால் சிறப்பாக இருக்கும். ''கல்லாத வரலங்கை கட்டவிழ்த்த காகுத்தன'' என்பது திருமழிசைப்பிரான் திவ்யஸூக்தி. தனது பாட்டனான மால்யவானிடம்

யஸ்ய விக்ரமமாஸாத்ய ராக்ஷஸா: நிதனம் கதா:
தம் மந்யே ராகவம் வீரம் நாராயண மனாமயம்

என்று ராவணனே கூறுவது மிகவும் சிறப்பு. 'அக்ஷம் வேத்மி மஹாத்மானம்' என தபஸ்வியான விச்வாமித்ரர் ராமகுணத்தைக் கூறுவதைக் காட்டிலும் அவனது எதிரிகள் அவனது பெருமையைப் பேசுவதுதான் ஸ்ரீராமபிரானின் கல்யாணகுணமாகும். அதையே வான்மீகி ''ரிபூணமபி வத்ஸல:'' எனக் கொண்டாடுகிறார். பாரதியும் ''பகைவனுக்கருன்வாய் நந்நெஞ்சே'' என்கிறார். அப்படி பகைவருக்கும் அருளும் பண்பாளனாக வாழ்ந்து காட்டி விரோதிகளும் போற்றும் குணநலன்களுடன் மனித சமூகத்துக்கு உதாரணமாக இருந்த உத்தம புருஷனான சக்ரவர்த்தித் திருமகன் அவதரித்த திருநக்ஷத்ரமான புனர்வஸூவுக்கு முந்தின நக்ஷத்திரமான திருவாதிரைக்குப் பெருமை பகவத் ராமானுஜர் அவதரித்ததாலே என்றால் மிகையாகாது. அப்படி உயர்ந்த வைகாசி ஆதிரையில் அவதரித்து ஷஷ்ட்யப்த பூர்த்தி வைபவம் காணும் ஸ்ரீமதாண்டவன் ரெங்கராமானுஜ மஹாதேசிகன் திருவடித்தாமரைகளை வணங்கி, வழிபட்டு, போற்றிப்புகழ்ந்து நலம் பெறுவோமாக.

॥ ஸர்வே ஜனாஸ்ஸுகினோ பவந்து ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஹநுமத் ப்ரபாவம்

(ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் பார்த்தஸாரதி ஐய்யங்கார்)

''மநோஜவன் மருத துல்ய வேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்
வாதாத்மஜம் வானரயூத முக்யம்
ஸ்ரீராம தூதம் ஸிரஸா நமாமி''

என்னும் இந்த ச்லோகம் ஸ்ரீமத் ராமாயணபாராயண தொடக்கத்தில் அனுஸந்திக்கப்படுகிறது. இந்த ச்லோகத்தில் ஹநுமத் ப்ரபாவம் பேசப்படுகிறது. இதைச் சற்று விரிவாக கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அஞ்சிலே ஒன்று பெற்றான் என்ற வாக்கின்படி ஐம்பெரும் பூதங்களில் ஒன்றான வாயுவின் புத்ரன் அநுமான். அந்த அநுமான் தன் தந்தையை போலவே வேகமாக செல்லக்கூடியவன். உலகில் சீரிய வேகத்தை குறிப்பிடும் போது ''மனோ வேகம்'' ''வாயு வேகம்'' என்பார்கள்.

இத்தகைய வேகத்தினால் தான் அபார பாராவாரமான கடக்க முடியாத ஸமுத்ரத்தைக் கடந்து இலங்கையை அடைந்தனன். மேலும் இத்தகைய வேகத்தினால்தான் இமய மலையிலிருந்து ஸஞ்சீவினி பர்வதத்தை எடுத்து வந்து யுத்தத்தில் அடிபட்டு மயங்கி விழுந்த அனைவரையும் உயிர்பித்தவன்.

''அஸாத்ய ஸாதக ஸ்வாமிந் என்று அநுமனை புகழ்கிறது. ஒரு ச்லோகம். செய்தற்கரிய செயல்களை செய்பவன் என்பது இதன் பொருள். பல தடங்கல்களுக்கு இடையில் ஸமுத்ரத்தைக் கடந்து, இலங்கையின் காவல் தெய்வத்தை ஜெயித்து, ஸீதை இருக்கும் இடத்தை தேடிப்பிடித்து, அவளைத் தேற்றி, இராவணனை நேரில் கண்டு மீண்டும் இராமன் இடம் வந்தடைந்தவன் அனுமன். செயற்கரிய செயல்களை செய்வது என்பது இந்த்ரியங்களை ஜெயித்தவனால் தான் முடியும்.

ஆமை எப்படி தன் அங்கங்களை ஓட்டிற்குள் ஒடுக்கி தன்னை எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்கிறதோ அவ்வாறே தன் இந்த்ரியங்களை தன்னுள் அடக்கி உலகத்தின் துக்கங்களிலிருந்து எவன் தன்னை காத்துக் கொள்கிறானோ அவனே ''ஜிதேந்த்ரியன்.'' அவனாலே செய்தற்கரிய காரியங்கள் செய்ய முடியும். ஹநுமன் செய்தற்கரிய செயல்களை செய்ததால் ஜிதேந்த்ரியன் என அழைக்கப்பட்டான்.

மேலும் இராவணனின் அந்தப்புரத்தில் பல அழகு வாய்ந்த மங்கையர்களை கண்டும் ஹநுமன் மனம் கலங்காததை வால்மீகி அநுமன் வாயிலாகவே அறிவிக்கிறார்.

நதுமே மன்ஸா கிஞ்சித் வைக்ருத்யமுபபத்யதே!
மனோஹ்ரி ஹேது: ஸர்வேஷாம் இந்த்ரியாணாம் ப்ரவர்த்தனே!!

கம்பனும் **அஞ்செனும் புலன்கள் ஒத்தார் அனுமந் நல்லறிவை ஒத்தான்** என்கிறார். மேலும் இந்த்ரியங்களை அடக்கினவனின் புத்தியே சிறந்து விளங்குகிறது.

''வஸேஹ்ரி யஸ் யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா'' என்றல்லவா கீதாசார்யன் வாக்கு.

இதையே 'புத்திமதாம் துரிஷ்டம்' என்னும் பதம் கூறுகிறது. இவனுடைய புத்தி கூர்மையை ஸ்ரீஇராமபிரானே தன் வார்த்தைகளால் கீழ்கண்டவாறு புகழ்கிறார்.

''நாந்ருக்வேதவிநீதஸ்ய நாயஜுர்வேத தாரிண:।
நாஸாம வேத விதுஷ: ஸக்யமேவம் ப்ரபாஷிதும்॥
நூநம் வ்யாகரணம் க்ருத்ஸ்னம் அனேன பஹுதா ஸ்ருதம்।
பஹு வ்யாஹரதானேன நகிஞ்சிதபஸப்திதம் ॥ என்று.

மூன்று வேதங்களையும் அறியாத ஒருவனால் இவ்வாறாக பேசமுடியாது. மேலும் ஹனுமானால் வ்யாகரண ஸாஸ்த்ரம் நன்கு அறியப்பட்டுள்ளது. ஹநுமன் வாக்கிலிருந்து ஒரு அபஸப்தம் கூட வரவில்லை என்பதே இதற்கு சான்று.

உத்தர காண்டத்தில் அகஸ்த்யராலும் அனுமனைப் பற்றி கூறுங்கால் **''நவ வ்யாகரண பண்டித:''** என்று புகழப்பட்டுள்ளது. மேலும் இராமனிடத்தில் ஸுக்ரீவனால் ஹனுமனைப் பற்றி கீழ்க்கண்டவாறு புகழ்ந்து பேசப்படுகிறது.

த்ருஷ்டா தேவீ ந ஸந்தேஹோ ந சான்யேன ஹநூமதா ।
ஹநுமதி ஹி ஸித்திஸ்ச மதிஸ்ச மதிஸத்தம ॥
வ்யவ ஸாயஸ்ச வீர்யம் ச ஸுர்ய தேஜ இவத்ருவம் ॥

அனுமனின் புத்தி கூர்மையும், முயற்சியையும், வீரத்தையும் கார்யத்தை ஸாதிக்கும் தன்மையையும் குறிப்பிடுகிறது இச்லோகம்.

ஸீதையை கண்டதை இராமனிட்த்தில் அனுமன் கண்டணன் கற்பினுக் கனியை கண்களால் என அறிவித்தபோது இராமனால் அனுமன் கீழ்கண்டவாறு புகழ்ந்து பேசப்படுகிறான்.

க்ருதம் ஹநுமதா கார்யம் ஸுமஹத் புவி துர்லபம்।
மநஸாபி யதன்யேன ந சக்யம் தரணீதலே ॥

மற்றவர்களால் மனதாலும் நினைக்க முடியாததான தேவர்களாலும் புக முடியாததான இலங்கையில் புகுந்து பிராட்டியை தரிசித்து வந்தவன். இவனுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் என யோசித்து இராமபிரான் அனுமனை இறுக தழுவுகிறான். இவ்வாறு சுந்தர திருமேனியோடு ஸம்சர்கம் பெற்றனன் அனுமான். இதையே கவிச்சக்ரவர்த்தி கம்பனும்

''இச்சொல்லின் செல்வன் வில்லார் தோள் இளயவீர விரிஞ்சனோ விடைவ லானோ'' என்கிறார்.

ஸ்வாமி தேசிகனும்

ப்ரபஞ்ஜந தநய பாவுக பாஷித ரஞ்ஜித ஹ்ருதய'' என்கிறார் மஹாவீர வைபவத்தில். பாவுகன் என்றால் ரஸிகன். பிராட்டியாலும் போற்றப் பட்டவர். அனுமன் பட்டாபிஷேக ஸமயத்தில் ஸீதாபிராட்டி ஒரு உயர்ந்த முத்துமாலையை கையில் எடுத்து இராமனை நோக்க இராமன் கீழ்கண்டவாறு கூறுகிறார்

'ப்ரதேஹி ஸ்ரீபகே ஹாரம் யஸ்யதுஷ்டாஸி பாமினி
பௌருஷம் விக்ரமோ புத்தி: யஸ்மிந்நேதாநி ஸர்வச:

என்று யாரிடத்தில் பௌருஷம் வீரம், புத்தி இவைகள் அனைத்தும் ஒருங்கே அடையப் பெற்றுள்ளதோ, அவனுக்கு இம்மாலையை கொடுப்பாயாக என்று கூறுகிறான்.

ஸமுத்ரத்தை தாண்டியதால் பௌருஷமும், இலங்கையை எரித்ததால் விக்ரமமும், அசோகவனத்தில் புகுந்து **''ராகவோர்ஹதி வைதேஹீம் தம் சேயமஸிதேக்ஷணா'** என்று பலவித காரணங்களால் இராமபிரானும், வைதேஹியும் ஒருவர்க் கொருவர் தகுந்தவர்களே என எண்ணி இவளே வைதேஹி என்று நிச்சயித்ததினால் புத்தி கூர்மையும் ஆலோசித்து மாலையை அனுமனுக்கு அளித்தனள். இதனால் ஸீதா பிராட்டியின் விசேஷ கடாக்ஷம் பெற்றவர் என்பது தெரியவருகிறது.

இவ்வாறு பலவிதமாக அனுமனின் ப்ரபாவத்தை கூறிக்கொண்டே போகலாம். அவன் பெருமைகளை யாரோ முழுமையாக சொல்ல வல்லர்! அப்படிப்பட்ட அஸாத்ய ஸாதகரான அஞ்சனா புத்ரன் மூலம் நம் கார்யம் அனைத்தையும் ஸாதித்து கொள்வோமாக.

ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகனும் சொல்லின் செல்வரே. இவரின் சொல்திறமையைக் கண்டு உலகமே வியக்கிறது. அவருடைய ஷஷ்டியப்த பூர்த்தி மகோத்ஸவத்தில் இவ்வியாஸத்தை ஆண்டவன் திருவடி தாமரைகளில் சமர்ப்பிக்கிறேன்.

वायु: श्रीमान् सुचरितसुतं राघव: प्राज्ञदूतं
सीता दासं कपिकुलपति: मन्त्रिणां सत्तमञ्च ।
नेतारं सा कपिवरचमू: लक्ष्मणो भव्यमित्रं
त्रातारं त्वां वयमिह समे प्राप्य मोदं प्रपन्ना: ॥

ஸ்ரீமானான வாயு நன்னடத்தையுடைய மகனே, ராமன், புத்திசாலியான தூதனே, ஸீதை தாஸனே, சுக்ரீவன் நல்ல மந்த்ரியை, வானர சேனை நல்ல தலைவனே, ரக்ஷகனாக நாங்கள் ஹனுமானே உம்மை அடைந்து மகிழ்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

கண்ணனுக்கே ஆமது காமம்

(ஸ்ரீமதுபவே.வித்வான் நாட்டேரி விஜயராகவாசாரியார் ஸ்வாமி)

இப்பதங்கள் இராமாநுஜ நூற்றந்தாதியில் 40வது பாசுரத்தில் திருவரங்கத்த முதலரால் அனுசந்திக்கப்பட்டுள்ளது. ஸகல சாஸ்திரங்களாலும் ப்ரதிபாதிக்கப் பட்டுள்ள புருஷார்த்தங்கள் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்ற நான்காகும். உலகத்தில் காமம் என்று சொல்லப்பட்ட ஆசையில்லாதார் எவருமில்லை. ஆசையை நமது முன்னோர்கள் இரண்டு வகைகளாக வகுத்தார்கள். விரும்பி பெற வேண்டிய ஆசை ஒன்று, முற்றிலும் விலக்கவேண்டிய ஆசை மற்றொன்று. பகவத் விஷய காமம் விரும்பி பெறவேண்டியது. சாஸ்திர விஹிதமுமாகும். இந்திரயங்களுடையவும் விஷயாந்தரங்களையும் பற்றின காமம் சிற்றின்பமாதலால் அது புருஷார்த்தமன்று. விஷய சுகங்களுக்கு ஏற்படும் ஆசையை ஒழிக்கவேண்டும். பேரின்பமாகிய பகவத்காமமே (அன்பு, பாசம், பந்தம், உறவு, மனதில் நினைவு இவையே) இங்கு கூறப்பட்டுள்ளது அதுவே புருஷார்த்தம். இந்த அர்த்த விசேஷத்தையே காமமே ப்ரதானசேஷியான புருஷார்த்தமென்று, உலகத்தா ரெல்லார்க்கும் எம்பெருமானிடம் ஆசை வைக்க வேண்டுமென்று எடுத்து உபதேசித்தருளினார் எம்பெருமானார் என்றாகிறது.

இந்த பாசுரத்தில் நம்மாழ்வாரும் வகுத்த விஷயத்தில் ஆசையானது பகவானையே கால் கட்ட கிடைக்குமென்று ''நோற்றநோம்பு, ஆராவமுதே, மானேய்நோக்கு, பிறந்தவாறு, உலகமுண்ட பெருவாயன்'' என்ற தசகங்களில் அனுசந்தித்தார். அவனிடமே அபிமதவிஷயத்தில் ஆசைக்கு தூது விடுகையும், முடிவாக மடலெடுக்க துணிகையும் ''அஞ்சிறைய மடநாராய், மாசறுசோதி, வைகல்பூங்கழிவாய், பொன்னுலகாளீரோ'' இத்யாதிகளில் செய்தார்.

இதர விஷயங்களை பற்றின ஆசை போவென்றால் போவதில்லை. பகவத் விஷயகாமம் வாவென்றால் வருவதில்லை என்னே! உலக இயற்கை. எம்பெருமானிடம் ஆசை வந்துவிட்டால் பிறகு விஷய சுகங்களிலாசை தானாக நழுவிவிடும். விஷய சுகங்களிலாசை ஒழிந்தால் தான் எம்பெருமானிடம் ஆசை உண்டாகும். இவ்வர்த்தம் பல ஸ்ரீ ஸூக்திகளில் பொலிந்து கிடக்கிறது. கல்யாணம் ஆனால் தான் பித்தம் தெளியும், பித்தம் தெளிந்தால் தான் கல்யாணமாகும் என்பது போல் அன்யோன்யாச்ரயம்.

இந்த தோஷம் நிவ்ருத்தமானது எம்பெருமான் கண்ணனாய் அவதரித்த போது என்கிறார். ஸம்ஸாரிகள் எந்த ஆசையை விஷம விஷயங்களில் வைத்திருக்கின்றனரோ அதே ஆசை ''கண்ணன் விஷயமாக எனக்கு ஏற்பட வேண்டும்'' என்று மனோபாவம் ஏற்பட்டது. ஸ்ரீராம, கிருஷ்ணாதி அவதாரங்கள் பூர்ணமானவையென பேசுவதுண்டு. அதில் ஸ்ரீராமாவதாரம் - காக்கை, கழுகு, வேடன், குரங்கு போன்ற தாழ்ந்த ஜாதிகளை தூங்கி வாழ்ந்ததுபோல ஸ்ரீ கிருஷ்ணாவதாரமும் இடையர், மாலைகாரர், கூனி போன்றவரை உயர்த்த வந்ததென்றே நினைக்கிறோம். ஆனால் ஆராய்ச்சி செய்தால் ஆய்ச்சியர்கள் பத்து லக்ஷம்குடி, ருக்மிணி முதலிய நாய்ச்சிமார்கள் எண்மர், நரகாசுரன் சிறையில்கப்பட்ட பதினாறாயிரம் பெண்கள், யக்ஞபத்னிகள், கூனி, த்ரௌபதி போன்ற பெண்மணிகள் கண்ணனையே குழந்தையாகவும், காதலனாகவும், தெய்வமாகவும் பாவித்து (ஆசைபட்டு) பரம புருஷார்த்தம் பெற்றார்களென்பதே ஸ்ரீமத் பாகவதம் பத்ததாவது ஸ்கநத்தின் ஸாரமென விளங்குகின்றது. யஜ்ஞ பத்னிகள் புருஷர்கள் தடுத்தும் பொங்கி வரும் ஆறுகள கடல் சேர்வது போல் கருணைக்கடலான கண்ணனிடம் வந்தார்கள். ஜாம்பவதி, ஸத்யபாமை, காளிந்தி முதலான நாய்ச்சிமார்களும் கண்ணன் மார்வு தழுவுவதிலாசை கொண்டார்கள்.

நரகன் சிறையென்னும் நரகத்திலிருந்த ராஜ கன்னிகளும் கண்ணனையே கணவனாக வரித்தார்கள். கூனியும் (முன் அவதாரத்தில் முரண்பட்ட கூனி போலன்றி) கண்ணன் சரணங்களை சரணாக வரித்து அவனையே தழுவினாள். தவிர

''மாதர்குயர்ந்த அசோதை மகன் தன்னைக் காப்பிட் மாற்றம்'',
''வார்மலி கொங்கை யசோதை மஞ்சன மாட்டியவாற்றை'',
''மண்பகர் கொண்டானை யாய்ச்சி மகிழ்ந்துரை செய்த இம்மாலை'',
''என்னுமெனக்கினியானை என் மணிவண்ணனைக் கன்றின் பின் போக்கினேனென்று அசோதை கழறிய''

என்று பெரியாழ்வார் பல பதிகங்களில் அசோதை பாவனையில் கண்ணனை அநுபவித்தார் . இவர் திருமகளாரான ஆண்டாளும் திருப்பாவையில் கண்ணனையே விரும்பி முன் திருவாய்ப்பாடியில் இடைப்பெண்கள் போல் நோன்பு நோற்றாள். **''மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்''** என்றும், மேகங்களை மேகவண்ணனான கண்ணனிடம் தூதனுப்பியும் அணியரங்கன் அணையப்பெற்றாள் என்று ப்ரஸித்தம். கண்ணனென்னும் கருந்தெய்வத்தின் கர்ட்சிய ஒரு தசகத்தில் களிப்புடனும், துன்பமும் இன்பமும் சேரவும் பேசியுள்ளாள். கேசவநம்பியை கால் பிடிப்பாளென்றும் பேற்றுக்கு பாரித்து கண்ணனையே விரும்பினாள். ருக்மணி பிராட்டியும் **''யதயப்ம்புஜாக்ஷ நலபேய தவ ப்ரஸாதம் ஜஹ்யாம ஸ்ஹ்வ்ரத க்ருஸ்ஹ்ந் ஸதஜந்மபிஸ்யாம்''** கமலக்கண்ணா உன் அருள் கிடைக்காவிடில் உயிரை சரமமின்றி விடுவேன். அனேக ஜன்மங்களானாலும் உன்னையே அடைவேனென்றாள். ''காமாத் கோப்ய:'' என்று ப்ரஸித்தம். காமத்தின் வழிநின்ற கோபிகளும் பெற்றகிய

மோக்ஷத்தை பெற்றார்கள். இவற்றால் கண்ணன் விஷயமான காமம் பரிசுத்தமாகியது விரும்பி பெறவேண்டியதும் உண்மையான புருஷார்த்தமுமானது.

பெரிய திருவடியின் அம்சமான பெரியாழ்வாரும் தமது ப்ரபந்தம் ஆரம்பம் முதல்- திரு அவதாரச்சிறப்பு, திருப்பாதாதி கேசவர்ணனை, தாலாட்டு, அம்புலிகாட்டல், சப்பாணிபருவம், தளர்நடை, காதுகுத்தல், நீராட்டம், பூச்சூட்டல், காப்பிடல், பாலக்ரீடை போன்று அனேகமாக கண்ணன் விஷயமாகவே அருளிச்செய்துள்ளார்.

மற்றுமுள்ள ஆழ்வார்களும் கண்ணனைக் காமுற்ற கன்னிகைகள் தசையை யடைந்து காதலித்கின்றனர், தூது விடுகின்றனர், அயர்ப்பதும் தளர்வதும், தாய்மார் தோழிமார் சொற்களாகவும் பேசுகின்றனர். பலவிடங்களிலும் கண்ணன் விஷயமாகவே பாடியுள்ளனர். அவனுடைய லீலைகள், சேஷ்டிதங்கள், மாயைகள் போன்ற விருத்தந்தங்களே எங்கும் ஸ்பஷ்டமாக நிறைந்துள்ளன, உற்று பார்க்கில் கண்ணன் திறத்து ஈடுபட்டு விளங்குவதை ஆழ்வார்கள் பாசுரங்களில் எங்கும் நன்கு காணலாம்.

மயர்வற மதிநலம் அருளப்பெற்றவரும், ஆழ்வார்களுள் சிறந்த நம்மாழ்வாரை எடுத்துக்கொண்டால், ''காரியம் நல்லனகளவை காணில் என்கண்ணனுக்கென்று ஈரியாயிருப்பாள்'' (திருவா 6-7-9) கார்ய பூதங்களான பதார்த்தங்களில் நல்லவைகளான புஷ்பம், சந்தனம், பழம் முதலியவைகளைக் கண்டால் (என் கண்ணனுக்கென்று), எனக்கு பவ்யனான கிருஷ்ணனுக்கென்று அநுஸந்தித்து (ஈரியாயிருப்பாள்) நீராயிருப்பாள். மேலொன்றும் சொல்லமாட்டாமல் நனைந்த ஹ்ருதயத்துடனிருப்பாள். பதார்த்தங்களைப் பார்த்தால் கண்ணனுக்கென்பதும் கண்ணன் குணங்களை நினைத்து உருகுவதும் சொல்லப்படுகிறது.

(திருவா 7-5-7) ''கண்டும் தெளிந்தும் கற்றார் கண்ணற்காளன்றி யாவரோ?'' புராணங்களாலே தெரிந்தும் (கண்டும்) ப்ரத்யக்ஷத்தால் பார்த்தாப் போல் பார்த்தும் (தெளிந்தும்) ஸந்தேகம் தீரும்படி மனனம் பண்ணி பார்த்தும் (கற்றார்) சாஸ்திரங்களை அப்யஸித்தவர்கள் (கண்ணற்காளன்றி யாவரோ) க்ருஷ்ணனுக்கு அல்லது வேறொருவருக்கு ஆளாவரோ.

(திருவா 5-2-7) ''மார்க்கண்டேயனும் கியே கறுத்த மனமொன்றும் வேண்டா கண்ணன் அல்லால் தெய்வமில்லை'' இங்கு ஸ்பஷ்டமாக கண்ணனே ஸர்வேஸ்வரன், இதிலொன்றும் ஸம்சயிக்க வேண்டா, ஆதலால் அவனையே ஆச்ரயியுங்கோள், இப்பொருளில் மார்க்கண்டேயனும் ஸாக்ஷியென்று தெளிவித்திறார். இவ்வர்த்தம் நான் சொன்னதேயோ! இதுக்கு மார்க்கண்டேய பகவானும் ஸாக்ஷியன்றோ (கறுத்த மனமொன்றும் வேண்டா) ஸம்சய மலினமான மனசு ஈஷத்தும் வேண்டா என்றபடி. மார்க்கண்டேயன் ஆயுரார்த்தமாக நெடுநாள் ருத்ரனை யாஸ்ரயிக்க, அவனைப் பார்த்து ''நெடுநாள் நீ நம்மை ஆஸ்ரயித்தாய், இவ்வாஸ்ரயணம் பாழேபோக

வொண்ணாது ஆனால் உன்னோடு என்னோடு வாசியில்லை உனக்கொரு புகல் காட்டித்தர போரு'' என்று ஸர்வேஸ்வரன் பக்கலிலே கொண்டு சென்று அவன் அபேக்ஷித்ததைத் தலைக்கட்டிக் கொடுத்தான் என்றது ஈடு.

ஸ்ரீ தேசிகன் இப்பாட்டில் ஸர்வேஸ்வரத்வம் சொல்லுகிறதென தத்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்னாவளியில் குறிப்பிட்டுள்ளார். ''ஸர்வே தேவா தேவகீ புத்ரஏவ என்று பாரதத்தில் பீஷ்மரும் சொன்னார்.

''அமரர் தலைமகனை கண்ணனை'' (திருவா 2-7-13) நித்ய ஸூரிகளுக்கு அனுபாவ்யனாயிருக்கிறவன், நமக்கும் அவ்வழகைக் காட்டும் கண்ணனாய் தன் ஆஸ்ரித ஸம்பந்தி ஸம்பந்திகளையும் ரக்ஷிக்கிறான் என்கிற குணம் பேசப்படுகிறது. வானவர் நாட்டிலுள்ளாரைப் போல் இங்குள்ளாரும் போக்தாக்கள் என்றபடி மற்றும் தென் குருகூர் சடகோபன் பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்துள் ஸ்ரீ வைஷ்ணவ சின்னமான கேசவாதி த்வாதச திருநாமங்களை வைத்துப்பாடிய பன்னிரு நாமப்பாட்டுக்கள் குறிக்கப்படுமவையென்றது விசேஷம்.

''கரிய மேனியன் செய்ய தாமரைக்கண்ணன் கண்ணன் விண்ணோரிறை'' (திருவா 3-6-5) இந்தீவரதளஸ்யாமனாய் பத்மபத்ரேக்ஷணனாய் சேஷசேஷாஸந வைநதேய ப்ரப்ருத்யஸங்க்யே நித்யஸித்த பரமஸூரிபிஸ்ஸேவ்யமானனாய் இருக்கிற கண்ணன் என்கிறார் திருக்குருகைப்பிரான் பிள்ளான். நீல தேஹனான செய்ய தாமரைக் கண்ணனானவன் நித்ய ஸூரிநாயகன் என்றது. வடிவழகெல்லாம் பாதியும், கண்ணழகு பாதியும், நித்யமாய் நிரவதிக தேஜோரூபமான விக்ரஹத்தையும்அதிலும் ஆக்ரஷகமான கண்ணழகையும் உடைய(கண்ணன் கண்ணன்)வாத்ஸல்ய ப்ரகாஸகமான திருக்கண்களையுடையவன், ஆஸ்ரிதருக்கு கையாளாய் ரக்ஷகனானாயும் உள்ளவன்.

''கேசவனடியினை மிசைக்குருகூர் சடகோபன் சொன்ன தூயவாயிரத்து இப்பத்தால் ''(திருவா 6-4-11) கேசி என்ற அசுரனைக் கொன்ற கிருஷ்ணனுடைய திருவடிகள் விஷயமாக திருக்குருகூர் நம்மாழ்வார் சொன்ன(தூய ஆயிரத்திப்பத்தால்) இப்பத்தையுடைத்தாகையாலே தூய்மையுடைத்தான ஆயிரமென்னுதல் அன்றிக்கே ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு கிருஷ்ணாவதார வ்ருத்தாந்தங்களையே சொல்லுகையாலே பரிசுத்தமான இப்பத்தென்னுதல். கண்ணன் சரித்திரமே தூய்மை உண்டாக்குமென்பது.

''கற்கும் கல்வியெல்லாம் கருங்கடல் வண்ணன் கண்ணபிரானென்றே'' (திருவா 6-5-4) நம்மாழ்வார் அப்யசிக்கிற வார்த்தைகளெல்லாம் மற்றும் அப்யசிக்கிறுப்போலே அஸக்ருத்தாகச் சொல்லும் சொல்லெல்லாம் நீல ஸமுத்ர வர்ணனை கிருஷ்ணனுய் அவதரித்து வடிவழகைக் காட்டி எனக்கு உபகரித்தவன் என்றே உள்ளே மிகவும் ஆனந்தித்து சிதிலை ஆகுவர். வடிவழகுக்கும் ஆச்ரித பாரதந்த்ர்யத்துக்கும் வாசகமான திருநாமம் கண்ணபிரானென்றே சொல்லா

நின்ருள் என்று தோழிமார்கள் தாய்மாரோடு சொல்லும் சொல்லாக அருளிச் செய்கிருர்.

''உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'' (திருவா. 6-7-1) பசித்த போது தேக தாரணார்த்தமாக உண்ணப்படும் சோறு, தாக காலத்தில் தாக சாந்திக்காக பருகும் தீர்த்தம், போகார்த்தமாகத் தின்னப்படும் வெற்றிலையும், இப்படி தாரக போஷக போக்யங்களெல்லாம் ஆழ்வாருக்கு எம்பெருமான் கண்ணன். அன்னபாநாதிகள் இவருக்கு தாரக போஷக போக்யங்களில்லை. ''வாஸுதேவ: ஸர்வம்'' என்கிறபடியே கண்ணன் எல்லாமாயிரா நின்ருன் என்றபடி. சோறு, நீர், வெற்றிலை என்ருதே உண்ணும் பருகும், தின்னும் என்கிற விசேஷணங்கள் எதற்கென்ருல் அபிமத சமயத்தில் ஒரோர் அவஸ்தை அப்படியேயாயிற்று இவருக்கு எப்பொழுதும் பகவத் விஷயமென்கைக்காக. தவிரவும் அல்லாதவை உண்ணமாளும், தெகுட்டும், பருக தின்ன செலவழியும். வயிறு நிரம்பிவிட்டால் மேலே பிடிக்காது. ''கண்ணபிரான் என்ன முதம்'' மாருதே புஜிக்கும் சோறு. ''கணிநாணிலோவரத்தொழில் சாரங்கன் தொல்சீரை நல் நெஞ்சே ஓவாத ஊணுக உண்''(பெரிய திருவந்தாதி-78) ''அப்பொழுதைக்கப்பொழுது என்ருராவமுதம்''(திருவா2-5-4) ''கொள்ளமாளா இன்பவெள்ளம்''(திரவா4-7-2) என்பதன்ரோ இவர்படி.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரபத்தியோக்யாதிகாரத்தில் ''அந்தணரந்தியரெல்லையில் நின்ற அனேத்துலகும் நொந்தவரே முதலாக நுடங்கியனன்னியராய் வந்தடையும்வகை வண்தக வேந்தி வருந்திய நம் அந்த மிலாதியை அன்பரறிந்தறிவித்தனரே'' என்ருர். பிராமணர் முதல் பஞ்சமர் ஈருக உள்ள உலகில் ஸம்ஸாரத்தில் நொந்தவராய் வந்தவரை காக்க வரை தாங்கிய துவரை மன்னன் த்வரைப்படுகிருன் என்ற சிஷ்யனிடத்தில் க்ருபாளுக்களான ஆசார்யர்கள் அறிந்து உபதேசித்தார்கள்.(வந்தடையும் வகை வண்தக வேந்தி வருந்திய) என்ற இடத்தில் பகவத் கீதையில் சரமச்லோகத்தாலே தன்னை ஒருவனையே சரணாக அடையும்படி பரமக்ருபையாலே சேத நோஜ் ஜீவநவ்யாபார ரூபமான க்ருஷியிலே ப்ரயாசப்பட்ட கண்ண குறிக்கிறது என்பர் ப்ரபத்திக்க ஜாத்யாதி நியமமில்லை. ஸர்வாதிகாரத்வம் ஸித்தம். சரண்யனான ச்ரிய:பதியிடம் (கண்ணனிடம்) சரணமடைந்தவருக்கும் அவரை சேர்ந்தவருக்கும் ஸத்கதியுண்டென்பதை காணலாம். புருடன்மணிவரமாக.....என்கிற பாட்டில் (கருடனுருவாம் மறையின் பொருளாம் கண்ணன்) வேதத்தில் ஓதப் பெற்ற கருடனுக்கு சரீரமாயிருக்கிற வேதங்களுக்கு ப்ரதாந ப்ரதிபாத்யமான க்ருஷ்ணனனவன் (கரிகிரி மேல் நின்று அனைத்தையும் காக்கிருனே) அத்திகிரி பர்வதத்தின் மேல் நின்று எல்லாவுலகையும் காக்கின்ருன் என்கிருர். இதில் (புருடன் மணிவரமாக) ஜீவாத்மாக்கள் கௌஸ்துப ரத்னமாகவும் (பொன்ரு மூலப்பிரகிருதி மறுவாக) அழியாத மூலப்ரக்ருதி ஸ்ரீவத்ஸமாகவும் (மான்தண்டாக) மஹத்தத்வம் கௌமோதகீ என்னும் கதையாகவும் (தெருள்மருள்வாள் உறையாக, ஜ்ஞாநமானது நந்தகமென்னும் கத்தியாகவும், அஜ்ஞானமானது அதினுடைய உறையாகவும் (ஆங்காரங்கள் சார்ங்கம் சங்காக) ஸாத்விக, தாமஸ அஹங்காரங்கள்

சார்ங்கமென்கிற வில்லாகவும், பாஞ்சஜந்யமாகவும் (மனம் திகிரியாக) மனசு சுக்ரமாகவும் (இருடீகங்களீரைந்தும் சரங்களாக) ஹ்ருஷீகங்களென்று சொல்லப்பட்ட பத்து இந்திரயங்களும் அம்புகளாகவும் (இருபூத மாலை வனமாலையாக) பஞ்ச தந்மாத்ரைகளுடையவும் பஞ்சபூதங்களுடையவும் பங்க்திகள் ஸுஷ்மஸ்தல இருபூதங்கள் வைஜயந்தி மாலையாகவும், அந்த அந்த தத்வாபிமாநி தேவதா ரூப அஸ்த்ர பூஷணங்களால் அரங்கிருதமான கண்ணனே கருகிமேல் நிற்கும் தேவாதிராஜனென்றிருக்கை என்றபடி. கிருஷ்ணவதாரத்தில் கருட வாகனமுகவேயிருந்த விசேஷத்தையும் வரதராஜனுக் கருட உத்ஸவம் சிறப்பானதென்பதையும் வேதத்தால் அறியப்படுமவன் கண்ணனே என்பதையும் காட்டகிறது.

மேலே குறிப்பிட்டவைகளாலே கண்ணனையொழி எம்பெருமானுடைய மற்ற அவதாரங்களெல்லாம் உலகப்பற்று விடாத ஸாதாரண ஸம்ஸாரிகளுக்கு பகவத் காமத்தை விளைவிக்கவில்லை. ராமாவதாரங்கூட ராஜகுலத்தில் பிறப்பாலும் தர்மமூர்த்தியாய்புறம் போகமாட்டாத அழகு, நெறிதவறுத நேர்மையாலும் ஸர்வருக்கும் பிரிய ஹித்தங்களிரண்டாலும், ரூபத்தை மறைக்கும் குணத்தின் பெருமையாலும், சில மஹரிஷிகளுக்கும், தர்மாத்மாக்களுக்கும் பயன்பட்டதேயன்றி இந்திரிய கிங்கரர்களை பகவத் கிங்கரர்களாக மாற்ற வல்லமை பெறவில்லை. பெருமாளை புகழ வந்த ஸாமான்ய நகரவாசிகளும் 'பஹவோ நிருப கல்யாண குணா:' என்று அவன் குணத்தில் ஈடுபடும்படியான அளவில் ரூபம் மறைந்திருந்தது. ''ரூப ஸம்ஹனனம் லக்ஷ்மிம்'' என்றும் 'கந்தர்ப்ப இவ மூர்த்திமான்' என்றும் ரூபத்தை புகழ ஏதோ சில ஜிதேந்திரியர்களுக்குத் தான் ஸாத்தியமாயிற்று. ரூபத்தை மட்டும் உபாஸித்தால் சூர்ப்பணகை பட்டபாடு பட வேண்டி வரும். கிருஷ்ணாவதாரமோ ''அத்புதம் பாலகம்'' என்று பிறந்ததோடு ''ஏஹிஏஹிபுல்லாம் புஜபத்ரநேத்ர'' என்று யுத்த களத்தில் வர்ணனையோடு வாசியற எப்பொழுதும் வடிவழகையே வற்புறுத்துவதாய் ஞானம், கல்வி, சீலம் முதலிய பெருமையிலாத சிறுமனிசரையும் வசீகரித்து அவர்களுடைய காமத்துக்கு இலக்காகியது.

''அழகு கண்டு என் மகளயர்க்கின்றதே'' யென்றும் ''ஆயன் வேயினுக்கழிகின்றதுள்ளம்'' என்றும், ''உலகளந்தான் வாயமுதம்'' என்றும் ''பங்கயம் நல்ல கருப்பூரமும் நாறிவர'' என்றும் ''உன்தன் மார்வு தழுவுதற்காசை'' என்றும் முறையே கண், காது, நாக்கு, மூக்கு, உடல் என்ற ஐம்பொறிகளுக்கும் இன்பத்தை யூட்டி ஆசையை வளர்த்தது கண்ணனே. நம் ஐயறிவும் கொண்டு நம்மையாளும் நாதன் நந்தகோபன்குமரன். கண்டவர்கள்காதலிக்கும் தெய்வம் கண்ணன் கிருஷ்ணனை அடைந்து ஆனந்தம் அனுபவிக்கலாம்.

ஆகவே, கண்ணனுக்கே ஆமது காமம்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

திருவரங்கமும், ஸ்ரீ ராமானுஜரும்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் கூத்தப்பாக்கம் ரங்கஸ்வாமியாசாரியர் ஸ்வாமி)

ஸ்ரீ வைஷ்ணவ திருப்பதிகளுக்குள் ஸ்ரீ ரங்கம் என்று புகழ் பெற்ற திருவரங்கம் முதன்மையானது. ஆழ்வார்களால் பாடப்பெற்ற 108 திவ்ய தேசங்களுள் ''கோயில்'' ''திருமலை'' ''பெருமாள் கோயில்'' என்று முக்கியமாக கூறப்படும் மூன்றுக்குள்ளும் 'கோயில்' என்று கூறப்படும் ஸ்ரீரங்கமே முக்கியமாக கூறப்படுகிறது. ஸ்ரீ ரங்கத்தை கோயில் என்றே கூறுவது வழக்கத்திலுள்ளது. திருவரங்கத்தை பெரியாழ்வார் கோயில் கோயில் என்று கூறும் பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி 9 ஆம் திருமொழி ''மரவடியை'' என்று துடங்கும் பதிகத்தில் உலகாண்ட திருமால் கோயில், ''துவரையென்னும் நாயகராகி வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில்'' ''சேமமுடை நாரதனார் சென்று சென்று துதித்திறைஞ்சக்கிடந்தான் கோயில்'', உத்திரை தன் சிறுவனை உய்யக்கொண்ட உயிராளன் உறையும் கோயில், ''தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய் குறளாய் மூவுருவிலி ராமனாய் கண்ணனாய் கற்கியாய் முடிப்பான் கோயில்'' என்றும் இவ்வாறு பல இடங்களில் காணலாம்.

இவரைப்போலவே தூப்புல் குலமணியாம் ஸ்ரீ தேசிகனும் ''ஆராத அருளமுதம் பொதிந்த கோயில் என்று துடங்கி திருவரங்கமெனத்திகழும் கோயில் தானே'' என்று பாசுரத்தை முடிக்கிறார். ஆகையால் கோயில் என்றால் திருவரங்கம் இத்திருவரங்கத்தை ''குலசேகராழ்வார் '' திருவாளன் இன்தாகத் திருக்கண் வளரும் திருவரங்கம் என்றார். தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம், குயில் கூவும் சோலை சூழ் திருவரங்கம், வரம்புற்ற கதிர்செந்நெல் தாள் சாய்த்துத் தலை வணங்கும் தண்ணரங்கம், பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழிலரங்கம்.

''வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழிலரங்கம்,'' அணிபொழிலரங்கம், அணிநீர்தென்னரங்கம், இப்படி பலபடியாக திருவரங்கத்தின் சீர்மையை ஆழ்வார்கள் போற்றியுள்ளனர் . காவேரீ ஹ்ருதயாபிராமபுளிதே புண்யே ஜகந்மங்களே ஸ்ரீரங்கே என்றார் ஒரு மஹான்.

இத்திருவரங்கம் காவேரியின் நடுவே மனதைக் கவரும் மணல் திட்டில் அமைந்துள்ளது. புண்ணியமானது உலகங்களுக்கெல்லாம் மங்களகரமானது என்றார். இப்படிப்பட்ட திருவரங்கத்திறைவனை ஸ்ரீரங்கமங்களநிதி என்று போற்றுகிறார். இத்திருவரங்கத்தை தொண்டரடிப்பொடியாழ்வார்'' வண்டினங்கள் ரீங்காரம் செய்யும் சோலை என்றும் மயில் கூட்டமாய் நடம் புரியும் சோலை என்றும் மேகங்கள் வந்தமரும்

சோலை என்றும் குயில்கள் இனிதாக பாடும் சோலை என்றும் இப்படியழகிய சோலை அண்டர்கோன் அமரும் சோலை என்றார். இச்சோலையில் அண்டர்கோன் தென்னாடும் வடநாடும் தொழும்படியாக இனிதாகத் திருக்கண்வளர்கின்றார். இக்ஷ்வாகுகுலமாகிய திருவரங்கனை சக்ரவர்த்தித் திருமகன் விபீஷணனுக்கு கொடுத்தருளிய போது, விபீஷணனுடன் இலங்கைக்கு எழுந்தருளியிருந்தால் நம்போன்ற பிற்காலத்தியவர்கள் எங்ஙனம் ஸேவிக்க இயலும். ஆகையால் கங்கையிற் புனிதமாய காவிரியின் நடுவே சேஷபீடத்தில் அமர்ந்து நமக்கு காட்சியளிக்கிறார்.

மற்ற எம்பெருமான்களுக்கில்லாத அபிநவ தசாவதாரம் என்று போற்றப்படும் ஆழ்வார்கள் பதின்மரால் பாடப்பெற்றவர் என்ற சிறப்பு, பக்திசிகாமணியாம் கீர்த்தனாசார்யர் ''ஸ்ரீ த்யாஹப்ரும்ஹம்'' என்ற தியாகராஜராலும் பாடப்பெற்றவர். திருவரங்கன் ஒருவனுக்கேயுள்ள தனிச்சிறப்பு. இப்படி சிறப்பு பெற்ற திருவரங்கனுக்கு தினந்தோறும் நடைபெற வேண்டிய பூஜை முறைகளை முறைப்படுத்தி செய்வித்து என்றும் மாறாமல் நடைபெற்றுவர ஏற்பாட்டினை செய்தவர், நம் அண்ணல் ராமானுஜர் ஆவார்.

இராமானுஜருக்கு ''பகவத்ராமானுஜர்'' என்று திருநாமம் வழங்கப்படுகிறது ஆசார்யருள் இவர் ஒருவருக்கே ''பகவத்'' என்ற அடைமொழி (விசேஷணம்) கிடைத்துள்ளது. இவர் விசிஷ்டாத்வைதமதத்தை ஸ்தாபித்தவர். இவருக்கு முன்பு விசிஷ்டாத்வைதம் இருந்த போதிலும், இவர் அத்வைத, த்வைத மதத்தில் வரும் ஆக்ஷேபங்களை யெல்லாம் களைந்து மதத்தை ஸ்தாபித்ததால் இவர் மதப்ரவர்த்தகராக கூறப்படுகிறார்.

உபநிடதங்கள்: இவை ஜீவாத்மா, பரமாத்மாவைப்பற்றி கூறுபவை. இவைகளில் சில ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுதான் வெவ்வேறு அல்ல, ஜீவாத்மாவுக்கோ, பரமாத்மாவுக்கோ ஒரு குணமும் கிடையாது என்று போதிக்கின்றன, வேறு சில ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்று அறிவிக்கின்றன, இப்படி முரண்பட்ட கருத்துக்களைக் கூறுவதால் வேதத்திற்கே குறைபாடு உள்ளதாக சிலர் மயங்கக்கூடும். இந்த நிலையை மாற்றி இருவிதமான வேதவாக்யங்களுக்கும் சரியான பொருளைக் கூறி முரண்பாட்டினை ஒழுங்கு படுத்தி பொருள் கூறியுள்ளார் இராமானுஜர்.

ஜீவாத்மா வேறு, பரமாத்மா வேறுதான், நாம் காணும் நமது உடலையும் (ஆத்மாவையும்) எடுத்துக்கொள்வோம். நாம் வேறு, நமது உடல் வேறு என்பதை அறிவோம், எப்படியானால் நமது ஆத்மா நமது சரீரத்திலுள்ளதோ, அதே போல பரமாத்மாவுக்கு உடல் போன்றது ஜீவாத்மா, எப்படி உடலும் ஆத்மாவுமாக சேர்ந்து ஒன்றாக உள்ளதோ, அதுபோல ஜீவாத்மாவும் பரமாத்மாவும் உடலும் உயிரும் போல் ஒன்று என்று கூறுவது தான் விசிஷ்டாத்வைதமதம். இதைத்தான் சரீராத்மபாவம் என்றும் சரீரசரீரிபாவம் என்று கூறுகிறார்கள். அதுபோல் ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு குணங்கள் யாதும் கிடையாது என்றதற்கும் ஹேய (கெட்ட) குணங்கள் யாதும் கிடையாது என்றும், குணம் உள்ள என்ற வாக்யங்களுக்கு நல்ல கல்யாணகுணங்கள் மட்டுமே உள்ளன

என்பதாகவும் பொருள்கூறி இராமானுஜர் வேதவாக்யங்களின் முரண்பாட்டினையும் இல்லாமை செய்துள்ளார்.

ராமானுஜர் மதத்திற்கு விசிஷ்டாத்வைதமதம் என்று பெயர். இந்த மதம் ராமானுஜரால் ஸ்தாபிக்கப்பட்டதால் ராமானுஜமதம் என்று கூறப்படுகிறது இந்த மதம் இதமகிலதம: கர்சனம் தர்சனம் ந: கவிமணி தூப்புல் ஸ்ரீ தேசிகனும் அகில ச்ருதிஹிதம் ராமாநுஜீயம் மதம் என்று ஸ்ரீ வேங்கடாத்வரியும் போற்றுவர்.

கீழில் கூறிய சிறப்புகள் பல பெற்ற ஸ்ரீரங்கமும் தர்சனத்தை நிறுவிய ராமாநுஜரும் சேர்ந்து ஸ்ரீரங்கராமாநுஜர் ஆயிற்று. ஸ்ரீரங்கத்தின் சிறப்பும் இராமாநுஜரின் சிறப்பும் பெற்று யுவ வருடத்தில் வைகாசி திருவாதிரையில் அண்ணல் ஸ்ரீரங்கராமாநுஜர் அவதரித்து இன்று போல் என்றும் நித்யயுவாவாக பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறுயிரம் அடியார்க்கமுதமாம் ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும்படி ஸ்ரீரங்கதிவ்யதம்பதிகள் அருளவேண்டுமென்று அவரது பாதுகைகளிடம் வணங்கி வழிபட்டு ப்ரார்த்திப்போமாக.

श्रीवत्सेन प्रथितविभवं श्रीपदन्यासधन्यं

मध्यं बाह्वो र्मणिवररुचा रञ्जितं रङ्गधाम्नः ।

सान्द्रच्छायं तरुणतुलसीचित्रया वैजयन्त्या

सन्तापं मे शमयति धियः चन्द्रिकोदारहारम् ।।

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அடியேன் கண்ட ஆண்டவன் பரம்பரை

ஸ்ரீமதுபயவே. வித்வான் வழுத்தூர் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் ஸ்வாமி

ப்ரக்ருதம் ஸ்ரீ மதாண்டவன் ரங்கராமாநுஜ மஹாதேசிகன் ஷஷ்டி அப்த பூர்த்தி மஹோத்ஸவத்தில் ஒரு மலர் வெளியிடப் போவதாகவும் அதன் நிமித்தம் மேலேகண்ட தலைப்பில் ஒருவ்யாஸம் எழுதி அனுப்பும்படி அடியேனை நியமித்து ஸ்ரீகார்யம் வித்வான் ஸ்ரீஉபயவே. மாதவாசார் ஸ்வாமி ஸ்ரீமுகம் அனுப்பினார். இதைப் பெரும்பாக்யமாகக் கருதி இந்த வ்யாஸத்தை ஸ்ரீமதாண்டவன் திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன். ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகன் முதல் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் வரை அடியேனுடைய பித்ரு பிதாமஹர்களின் அனுபவங்களையும் அவர்கள் கர்ண பரம்பரையாக கேழ்விப்பட்டு என்னிடம் சொன்ன பல உயர்ந்த விஷயங்களையும் அடியேன் காலத்தில் ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் முதல் ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் வரை அடியேனுக்கு ஏற்பட்ட ஸ்வாரஸ்யமான பல அனுபவங்களையும் இதன் மூலம் விக்ஞாபித்துக் கொள்கிறேன்.

திருக்குடந்தை தேசிகன்

ஞாநவைராக்ய சேவதி திருக்குடந்தை தேசிகன் அவதரித்த புண்யபூமி தஞ்சாவூர் ஜில்லா திருவையாறு ஸமீபமுள்ள ராயம்பேட்டை என்ற ஸ்ரீக்ராமம். ஸ்வாமி தன் ஜீவதசையில் பெரும் பகுதியை திருக்குடந்தையிலேயே எழுந்தருளி இருந்து கழித்தாயிற்று. ஸப்த முக்தி க்ஷேத்திரங்களில் உயர்ந்தது காசி க்ஷேத்ரம். அதைக்காட்டிலும் உயர்ந்தது திருக்குடந்தை என்பது காரணம் திருக்குடந்தை தேசிகனின் திருவுள்ளம்.

நிர்மிதம் தபஸா தேவ்யா சுத்தாந்த ஹ்ருதயா தயா
கங்காதிதீர்த்தாநி ஸங்க்ருஹ்ய ச ரமா புரா
நிர்மமே ஸர்வ ரக்ஷார்த்தம் பாவநம் தத் ஸரோவரம்
வர்ஷே வர்ஷே ஸமாயாந்தி ப்ரும்மாத்யாஸ் ஸர்வதேவதா:
ஸ்நாத்வா முநிவராஸ்ஸர்வே யாந்திஸ்தானம் ஸ்வகம் ஸ்வகம்
திநமேகந்து யஸ்நாநம் குர்யாத் தத்ரஸுதாகர
ப்ராப் நோதி விஷ்ணு லோகம்ஸ ஸர்வபாபாத் விமுச்யதே

என்று சேஷதர்மம் கும்பகோணத்தைப் பற்றி பேசுகிறது. அதாவது கோமளவல்லித் தாயார் ஸந்நிதியின் பின்புறமுள்ள பொற்றாமரை என்ற புஷ்கரிணீ மஹாலக்ஷ்மீ தன் தபோபலத்தால் கங்கை முதலிய புண்யநதிகளின் தீர்த்தங்களைக் கொண்டு நிர்மாணம் செய்தார். அந்த புஷ்கரிணீயில் ப்ரதிவருஷமும் மார்க்கண்டேயர் முதலிய ரிஷிச்ரேஷ்டர்களும் ப்ரும்மாதி தேவதைகளும் வந்து ஸ்நானம் செய்து விட்டு தங்கள் தங்கள் இடங்களுக்கு செல்கிறார்கள்.

மேற்படி புஷ்கரிணீயில் ஒருநாள் ஸ்நானம் செய்தாலே ஸர்வபாபங்களிலிருந்தும் விடுபட்டு முடிவில் வைகுண்டத்தை அடைகிறார் என்பது பொருள். ப்ரபந்ந ஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வாரின் ஸாமவேதஸாரமான திருவாய்மொழியை லோகத்துக்கு அனுக்ரஹித்த புண்யபூமி. ஸ்ரீரங்கமாஹாத்மியத்தில் ஸ்ரீரங்கநாதன் கோமளவல்லித் தாயாருக்கு ஸேவை ஸாதிக்க திருவுள்ளம் கொண்டு இங்கு சயந திருக்கோலத்தில் எழுந்தருளி உள்ளதாக சொல்லப்படடுள்ளது. பகுத்தறிவற்ற ப்ராணிகளுக்கும் பகவத்கைங்கர்யம் செய்யவண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கும் புண்யபூமி. இதை ஆழ்வார்

''சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை''

என்று சாதிக்கிறார். அதாவது அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்கள் ஸ்ரீசாரங்கபாணி கோயிலைச் சுற்றியுள்ள வயல்களில் காற்றில் ஆடுகின்றன. அதைப்பார்க்கும் போது சாமரம் வீசுவது போல் காணப்படுகிறது. இன்னும் இரண்டொரு நாட்களில் அறுவடை செய்துவிடப் போகும் நிலையில் தன்னுயிர் போவதற்குள் எம்பெருமானுக்கு வ்யஜந கைங்கர்யம் செய்துவிட்டு உயிர் விடலாமே என்று நினைப்பது போல் இ நெற்கதிர்கள் காற்றில் அசைவதைப் பார்த்தால் தோன்றுகிறது என்கிறார் ஆழ்வார்.

''பரந்த காவிரிக் குடந்தை''
''ஆழ்புனல் குடந்தைதையே தொழுது''
''சேர்ந்த திருமால் கடல் குடந்தை ''
''திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை''
''மணிவண்ணன் தண் குடந்தை''
'' குடந்தை என் கோவலன்''

என்று ஆழ்வார்கள் பலபடி மங்களாசாஸனமிட்டுள்ளனர்.

இந்த ஆசார்யனுடைய ஜன்ம பூமி ராயம்பேடடையாக இருந்த போதிலும் வழுத்தூர் ஆண்டவன் தேரழுந்தூர் ஆண்டவன் ஆக்கூர் ஆண்டவன் தென்பிறை ஆண்டவன் இப்படி மற்ற ஆண்டவன் ப்ரப்ருதிகளை வ்யவஹரிக்கும் நிலையில் திருக்குடந்தை தேசிகன் என்று அழைக்கப்படுவதன் அர்த்தம் மேலே காணும் காரணம் தான். இந்த ஆசார்யவள்ளல் செய்துள்ள க்ரந்தங்களில் சிறந்தது ஆந்ஹிகம். நித்ய

கர்மானுஷ்டானம் பற்றி அனுக்ரஹித்திருப்பது ஸர்வோத்க்ருஷ்டம். இது திருக்குடந்தை தேசிகன் ஆந்ஹிகம் என்று ஸுப்ரஸித்தமாக பேசப்படுகிறது.

அடுத்தபடி வழுத்தூர் ஆண்டவன்:-

பூர்வாச்ரமம் முதலே வைராக்ய நிதியாக எழுந்தருளியிருந்தபடி. அர்ச்சையில் தன்னிகரற்ற ஈடுபாடு. இன்று அடியேன் வாசம் செய்யும் வீடு அந்த ஆண்டவன் எழுந்தருளியிருந்த திருமாளிகை. மிகச்சிறிய க்ருஹத்தின்முன் மல்லிகை முதலிய செடிகள் அடர்த்தியாக இருக்கும். More or less லதா குல்மம் என்று சொல்லலாம். பூர்வாச்ரமத்திலேயே க்ரந்த காலக்ஷேபாதிகள் செய்து வந்தபடி. தன் க்ருஹத்தின் முன்னுள்ள புஷ்பச்செடியிலுள்ள புஷ்பங்களைப்பரித்து இங்கு கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஜகத்ரக்ஷகப்பெருமானுக்கு (வையங்காத்த பெருமாள் என்று திருமங்கை மன்னனால் மங்களாசாஸனம் இடப்பட்ட எம்பெருமான்) மாலையாகத் தொடுத்து ஸமர்ப்பிப்பது வழக்கம்.

அக்காலத்தில் இந்த ஸ்வாமியை தொண்டரடிப்பொடி ஆழ்வார் என்று சொல்லுவார்கள். ஒருநாள் புஷ்பம் பறித்துக்கொண்டு இருக்கும் ஸமயம் அடர்த்தியான புஷ்பச்செடிகள் உள்ளிருந்து ஒரு ஸர்ப்பம் உஸ் என்று சப்தமிட்டபடி ஆடியது. இதைக்கடாக்ஷித்த ஸ்வாமி சற்றுகூட சலனமில்லாமல் கருடமந்த்ரத்தை பல ஆவ்ருத்தி உச்சாரணம் செய்து கருட தண்டகம் கருட பஞ்சாசத் இரண்டையும் ஸேவித்துவிட்டு கடைசியாக

''அபஸர்ப்ப ஸர்ப்ப பத்ரந்தே தூரம்கச்ச மஹாவிஷ.
ஜநமேஜயஸ்ய யஜ்ஞாந்தே ஆஸ்தீக வசநம் ஸ்மர''

என்ற ச்லோகத்தையும் சொல்லியாயிற்றாம். படம் எடுத்த பாம்பு தூரம் கச்ச என்று எட்டிப்போ என்று சொன்ன பிறகும் ஸ்வாமியின் ஸமீபம் வந்து சுருட்டிக்கொண்டு படுத்து விட்டது. அதை ஸ்வாமி தன் கைகளால் வருடிக்கொடுத்தாயிற்று. உடனிருந்த சிஷ்யர்கள் ஸ்வாமியின் இந்த அதிமானுஷ ஸாஹஸத்தைப் பார்த்து வியந்ததுடன் நடுங்கினர். இவர்களை ஸ்ரீமதாண்டவன் ஸமாதானப்படுத்தி திருவாய்மொழியில் ஆழ்வாரின் அநிதர ஸாதாரண மங்களாசாஸனத்தை

கோமளவான் கன்றைப்புல்கி கோவிந்தன் மேய்த்தனவென்றும்
போமிள நாகத்தின் பின்போய் அவன் கிடக்கை ஈதென்னும்

என்கிற இடத்தை வாய்வெருவி மேற்கோள் காட்டி ஆதிசேஷன் பின் தோன்றல் என்றும் ஸாதித்தாயிற்று. மஹாபாகவத வம்சப்ரஸூதி என்றும் ஸாதித்தாயிற்று. அப்படியும் உடனிருந்த சிஷ்யர்களுக்கு பயம் தெளியாமல் பதறினர். இதைக்கண்ட ஸ்ரீமதாண்டவன் கீழ்காணும் வ்ருத்தாந்தத்தை ஸாதித்தபடி. அதாவது ஒரு ஆசார்யன் திருமலையாத்ரையாக எழுந்தருளினார். போகும் வழியில் அவரை ஸர்ப்பம் தீண்டிவிட்டது. ஆசார்யனுக்கு ஏற்பட்ட ஆபத்தைக்கண்ட உடன் சென்ற சிஷ்யர்கள்

பரிவுடன் சிகித்ஸைக்கு ஏற்பாடு செய்தனர். இதைக்கண்ட ஆசார்யன் தனக்கு சிகித்ஸை தேவையில்லே என்றும்

''கடித்த பாம்பு பலவானாகில் விரஜையில்
தீர்த்தமாடி வைகுண்டநாதனை ஸேவிப்போம்
கடிபட்ட பாம்பு பலவானாகில் திருக்கோனேரியிலே
தீர்த்தமாடி திருவேங்கடமுடையானை ஸேவிப்போம் ''

என்று சொன்னாராம். அதாவது கடிப்பட்ட, தான் மரணமாஞல் விரஜாநதியில் ஸ்நானம் செய்து வைகுண்டத்திலுள்ள பரமபதநாதனை ஸேவிக்கிறேன் அப்படி இல்லாமல் உயிர் பிழைத்தால் ''திருக்கோன் ஏரி'' என்ற திருமலையிலுள்ள ஸ்வாமி புஷ்கரிணியில் ஸ்நானம் செய்து திருப்பதி எம்பெருமானே ஸேவிக்கிறேன் என்று சொன்னாராம். இதைக்கேட்ட சிஷ்யர்கள் ஆச்சர்யப்பட்டனர். ஸ்ரீமதாண்டவன் ப்ரதி தினமும் இங்கு கோவில் கொண்டுள்ள ஸ்ரீஜகத் ரக்ஷகப் பெருமாளிடம் அர்த்த ஜாமம் ஆகி திரை சேர்த்ததும் நேருக்கு நேர் வார்த்தை சொல்லுவது வழக்கம். இந்த ஆண்டவனை திருக்கச்சி நம்பிகளின் அவதாரம் என்று சொல்லுவது வழக்கம்.

பெரியாண்டவன் :

இந்த ஸ்வாமியை வத்தல்ஸ்வாமி என்றும் ''சுஷ்க ஆம்ரபத்ராசி'' என்றும் சொல்லுவதுண்டு. காய்ந்த மாவிலைகளையே ஆஹாரமாகக் கொண்டு பகவத்பரமான சிந்தனையுடன் கிரந்த சதுஷ்டய காலக்ஷேபங்களை சிஷ்யர்களுக்கு அனுக்ரஹித்துக் கொண்டு பல காலம் எழுந்தருளி இருந்தபடி. காலக்ஷேப கோஷ்டியில் நிச்சப்தம் நிலவும். யாருமே கைகால்களை அசைக்கக்கூட மாட்டார்கள். ஒரு நாள் ஒரு சிஷ்யன் காலக்ஷேப கோஷ்டியில் கால்களை மாற்றிக் கொண்டு உட்கார்ந்தார். இதைப்பார்த்த ஸ்வாமி என்னப்பா என்று கேட்டாயிற்று.

காலில் எரும்பு கடித்தது என்று சிஷ்யன் சொன்னாராம். உடனே ஸ்ரீமதாண்டவன் தன் திருவடிகள் இரண்டை யும் தரையில் தட்டியாயிற்று. இரு திருவடிகளையும் மொலேரென்று மொய்த்துக் கொண்டிருந்த எரும்புகள் பொல பொலவென்று உதிர்ந்தன. ஸ்வாமியின் இருதிருவடிகளிலிருந்தும் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

சின்னாண்டவன் :

ஞாநம் அனுஷ்டானம் வைராக்யம் இவற்றுடன் பகவத் ஸாக்ஷாத்காரம் செய்யக்கூடிய அளவு இடைவிடாத சிந்தானுவர்த்தனம் செய்து வந்தாயிற்று. பல ப்ராசீன க்ரந்தங்களைக் கடாக்ஷித்து அவற்றிலுள்ள ஸ்தலஸ்ப்ருக்கான பல விஷயங்களை ஆராய்ந்து பல க்ரந்தங்களை லோகத்துக்கு அனுக்ரஹித்தாயிற்று. த்ரிதண்டம் தரிப்பதன் நோக்கம் வாக்தண்டம் காய தண்டம் மநோதண்டம் இவைகளைக் கடைப்பிடிப்பதுதான் என்று ஸாதித்தாகும். அதாவது

கடுஞ்சொற்களைப் பேசாதிருப்பது மனஸை லௌகிகவிஷயங்களில் ப்ரவ்ருத்திக்காமல் கட்டுப்படுத்துவது சரீரத்தில் ஏற்படும் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் அடக்குவது இவைதான் த்ரிதண்டம் என்ற சொல்லின் அர்த்தம் என்று ஸாதிப்பது வழக்கம்.

காடந்தேத்தி ஆண்டவன்

என்ற ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகன் நம்மாண்டவன் அந்த மஹான் என்று தான் ஸாதிப்பது வழக்கம். "மஹத்வஸ்ய ஸௌப்பயம் ஆகல்ப்யம் ஆஹு:" என்ற வேங்கடாத்வரியின் திருவாக்குப்படி பரம ஸௌலப்ய மூர்த்தியாக எழுந்தருளி இருந்தபடி.

நம்மாண்டவன்

என்ற தேரழுந்தூர் ஆண்டவன் பல விஷயங்களை நம் போன்ற ஸம்ஸாரிகளுக்கு புரியும்படி எளிமையாக நடைமுறைக்கு ஒவ்வ உபதேசிப்பது வழக்கம். ஒவ்வொருவரும் தன் மனஸைப் பார்த்து ஹே: மநமே நீ கெடுதலையே தேடிக்கொள்கிறாயே? இதற்கு எப்பொழுதுதான் முடிவு ஏற்படும்? உன் ஆத்மாவுக்கு நல்லது செய்து கொள்வதற்காக உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் குறைந்து கொண்டே வருகிறதே? இதை நீ உணர்ந்தாயா? உன் மனஸை அநாதையாக விட்டுவிட்டு நீ பிறர் மனஸை நம்பிப் பிழைக்கிறாயே? வெளிஉலகில் ஏதேதோ உன் மனஸை துன்பத்துக்கு ஆளாக்குவதை நினைத்து அதற்கு பரிஹாரமாக ஜோஸ்யனிடம் ஓடுவதையும் சாந்தி ஹோமங்களையும் செய்வதை விட்டுவிட்டு மனஸை நல்ல காரியங்களில் ஈடுபடுத்தி உனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தையும் அமைதிக்குறைவையும் மறக்க முயலவும். எதைச் செய்தாலும் தர்மத்துக்கு புறம்பில்லாமல் தர்மத்துக்குள் அடங்கி நடக்க கட்டுப்படுத்திக் கொண்டால் அமைதி உண்டாகும். மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பிறருடைய உள்ளத்தையும் செயலையும் பற்றிக் கவலைப்படாமல் உன் ஹ்ருதயத்தைப் பரமசுத்தமாக எம்பெருமான் குடி இருக்கும் வீடாக வைத்துக்கொள். தன்னைப்பற்றி உணர்ந்து கொள்ளாமல் பிறரைப்பற்றி கவலைப்படுபவனுக்கு அமைதியும் ஸுகமும் ஏது?

அக்ரமமான செய்கை எல்லாமே ஆத்ம ஹாநியை உண்டாக்கும். அதிலும் கோபத்தினால் செய்யும் அக்ரமத்தைக் காட்டிலும் காமத்தினால் செய்யும் பாபத்துக்கு அளவே இல்லை. கோபத்தினால் ஒன்றை செய்து விட்டால் அந்த க்ஷணத்திலேயே கோபம் முடிந்து விடும். கோபவசப்பட்டவன் அந்தக் கோபத்தினாலேயே துன்பத்தை அனுபவிக்கிறான். ஆனால் காமத்துக்கோ ஆசைக்கோ ஆளானவன் தான் துன்பத்தை அனுபவிக்காமல் பாபகாரியத்தில் ஈடுபடுகிறான். ஆதலால் காமம் ஆசை இவை இரண்டும் மனிதனுக்கு நிரந்தர விரோதி.

இதைத்தான் கீதையில் ஸ்ரீக்ருஷ்ணன்

காமாத்க்ரோதோபி ஜாயதே
க்ரோதாத் பவதி ஸம்மோஹ:
ஸம்மோஹாத் ஸ்ம்ருதி பரம்ச:
ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்திநாச:
புத்தி நாசாத் விநச்யதி

என்று ஸாதித்துள்ளார். காமத்தினால் க்ரோதம் ஏற்படும் க்ரோதத்தினால் முட்டாள் தனமான மோஹம் ஏற்படும். அந்த மோஹத்தினால் ஸ்ம்ருதிப்ரம்சம் அதாவது செய்யக்கூடியது எது? செய்யக் கூடாதது எது என்ற விவேகத்தை இழக்கிறான். அதனால் புத்தி நாசம் ஏற்பட்டு அதன் விளைவு அடியோடு அழிந்து போவது. நாம் பிறப்பதற்கு முன்னால் நிகழ்ந்த காலத்தின் அளவை நாம் அறிவோமா? அது எல்லையற்றது. நாம் இறந்தபின் நிகழப்போகும் காலமும் எல்லையற்றது. இந்த இடைவெளிக்குள் நாம் வாழ்ந்த காலம் மிகமிகக் குறைந்த அல்பகாலம். இந்த அல்பகாலத்தில் வாழ நம்மை மனுஷ்யனாக ஸ்ருஷ்டி செய்து கரசரணாத்யயவங்களையும் பகுத்தறிவையும் தந்து அருளிய அந்த பரந்தாமனுக்கு நாம் செய்த ப்ரதீகாரம் என்ன? சற்று சிந்தித்தால் நம்முடைய குற்றம் எத்தகையது? எவ்வளவு பெரியது. நாம்பேசும் பேச்சு, நாம் செய்யும் காரியங்கள் இவற்றில் நூற்றுக்கு தொண்ணூறு பங்கு யாருக்குமே பிரயோஜனப் படாதவை. ஏன் நமக்கே பயன்படாதவை. இவற்றை நாம் தவிர்த்தால் நமக்கு யாரிடமும் விரோதமே வராது. விரோதம் ஏற்படவில்லையானால் மனக்கசப்பு வராது. மனக்கசப்பு உண்டாக வில்லையானால் கவலையே கிடையாது. ஆதலால் எதைப் பற்றியும் கவலைப்படாமல் நம் வாழ்நாள் வீணாகாமல் நல்லவழியில் பயன்படும்.

நம் சரீரத்துக்குள் ஸஞ்சரிக்கும் பிராணன் வெளியேறிவிட்டால் இந்த உயிரற்ற சரீரம் பிரேதமாகிவிடும். இப்பொழுது யோசித்துப்பார் இந்த பிரேதத்தை நம் உயிர் தாங்கி நிற்கிறது. இந்த பிராணன் நின்று விட்டால் இந்த சரீரத்தை கொளுத்தி விடுவார்கள். இப்படி அழியக்கூடிய சரீரத்துக்கு என்ன நேர்ந்தால் என்ன? என்று நாம் இருக்க வேண்டும். நம் சரீரத்துக்குள் ஓடும் உயிர் வெளியேறி விட்டால் சரீரம் பிரேதமாகிவிடும். அதேபோல நம் உயிருக்கும் உயிரான எம்பெருமான் நம்முடைய துஷ்க்ருத்யங்களால் நம் ஆத்மாவை விட்டு வெளியேறி விட்டால் நம் உயிர் பிணமாகி விடும். ஆதலால் நமக்கு (சரீரத்துக்கு) ஏற்படும் பலவித வியாதியால் நம் உயிர்துடிக்கும். அது துடிப்பதைப் பொறுக்காமல் நாம் சிகித்ஸகனைக் (வைத்யனை) கூப்பிடுகிறோம். அது போலவே நம்முடைய பாபச் செயல்களினால் நம் உயிருக்கும் உயிராக இருந்து நம்மை இயக்கும் ஸர்வேச்வரன் துடிக்கிறான். அப்படித் துடிக்கும் ஸர்வேச்வரனுக்கு நாம் என்ன வைத்யம் செய்யமுடியும். அவனையே ''பேஷஜம்'' ''பிஷக்'' என்று பீஷ்மபிதாமஹர் சொல்லி உள்ளார். அதாவது அவனே மருந்து அவனே வைத்யன். வீட்டை சுத்தமாக வைத்துக் கொண்டால் தான் நம்மால் அந்த வீட்டில் குடி இருக்க முடியும். அதே போல் ஸர்வேச்வரன் குடி இருக்கும் நம்

ஆத்மாவை சுத்தமாக வைத்துக் கொண்டால் தான் அவனால் குடி இருக்க முடியும். எப்படி உயிரற்ற உடல் பிரேதமாகி விடுகிறதோ அதேபோல் உயிருக்கும் உயிராகிய ஸர்வேச்வரன் இல்லாத உயிர் பிரேதமாகி விடுகிறது.

ஆக்கூர் ஆண்டவன்

அடியேனுக்கு பஞ்சஸம்ஸ்காரம் ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவனிடம் தான். ஸமாச்ரயணம் செய்யும் முன்னர் ஸமாச்ரயணம் ஏன்செய்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிபத்து நிமிஷம் நன்றாக புரியும்படி ஒரு சிறிய உபந்யாஸம் செய்தாயிற்று. அடியேனுக்கு ஒன்பது வயஸில் ஸமாச்ரயணம். ஸ்வாமி ஸாதித்த விஷயம் பசுமரத்து ஆணிபோல் பதிந்து விட்டது. வைகுண்டம் என்று ஒரு லோகம். அந்த லோகத்தில் ஸதா ஸந்தோஷமும் பகவத் கைங்கர்யமும் அனுபவிக்கும் இடம். அங்கு சென்றடைந்த அனைவருக்கும் பெருமாள் மாதிரி நான்கு கைகள் சங்கு சக்கரங்கள் எல்லாம் உண்டு. அவர்களை நித்ய ஸூரிகள் என்று சொல்வது வழக்கம். ஆனால் இந்நில உலகில் ஸமாச்ரயணம் செய்து கொண்டால் நித்யஸூரிக்கு ஸமம். இம்மாதிரி ஆசார்யனிடம் மந்த்ரோபதேசம் செய்து கொண்டு ஸமாச்ரயணம் செய்து கொண்டு இருப்பதே பரமபாக்யம் நமக்கு, என்று ஸாதித்தாயிற்று. ஸ்ரீமந்நம் மாண்டவனும் ஸ்ரீ ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவனும் ஸ்ரீ இங்கு வழத்தூரில் அடியேனுடைய குடிசையில் பலகாலம் நீண்டநாட்கள் தங்கி பாதுகா ஆராதனம் செய்துள்ளனர். ஆக்கூர் ஆண்டவனுக்கு திருமார்பில் பெரும் கட்டி புறப்பட்டு மிகவும் அவஸ்தை பட்டாயிற்று. இரவில் கொசுத் தொல்லை தாங்கவில்லை. கொசுவலை கட்டி அதற்குள் சயனிக்கும்படி என்பிதா பிரார்த்தனை செய்தார். ஸந்யாஸி ஸுகம் கொண்டாடலாமா ரங்கநாதம்? என்று கேட்டாயிற்று. அடியேனுடைய பிதாவை ஒருமையில் கூப்பிடாமல் ரங்கநாதம் என்று கூப்பிடுவது வழக்கம். கொசு பிடுங்குகிறது. தூக்கத்தில் கொசுக்கடி தாங்காமல் கையால் தட்டி விட்டால் கொசுவுக்கு ப்ராணாபாயம் ஏற்பட்டுவிட்டால் ஸந்யாஸ தர்மத்துக்கு பங்கம் வந்து விடுமே என்ற பயத்தால்தான் கொசுவலைக்குள் சயனிக்கும்படி பிரார்த்திக்கிறேன் என்று அடியேன் பிதா சொன்னதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டு நீர் அதிமேதாவி என்று அடியேன் பிதாவை ச்லாகித்தாச்சு.

ஒரு ஸமயம் அடியேன் 20 வயஸில் ஸ்ரீமதாண்டவனை தண்டன் ஸமர்ப்பிக்கப்போய் இருந்தேன். யாரோ ஒருவர் தன் குடும்பக் கஷ்டங்களைச் சொல்லி தனக்குள்ள கவலையையும் சொன்னார். இதைச் செவியுற்ற ஸ்ரீமதாண்டவன் பாறையின்மேல் கடல் அலைகள் மோதினாலும் பாறை அசையாது. அதைப்போல் உன் மனஸும் கவலை என்ற அலை மோதினாலும் பாறை மாதிரி சலிக்கவே கூடாது. நம் சாரீரகமான வியாதியை வைத்யன் சிகித்ஸை செய்து போக்குகிறான். ஆதி என்ற மனோவியாதியை தெய்வம்தான் போக்கும். ஏன்? நமக்கு வ்யாதி ஏற்பட்டால் வைத்யனிடம் போகிறோம். நம் வியாதியைக் குணப்படுத்தி நம்மைக் காப்பாற்றுவதாகச் சொன்ன எத்தனையோ வைத்யர்கள் இறந்து விட்டனர். மற்றவர்களின் ஆயுஷ்காலத்தை ஜாதகரீதியாக நிர்ணயிக்கும் ஜோஸ்யர்கள் பலர் இறந்துவிட்டனர். பலருக்கு மரணபயமில்லாமல் இருக்க ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்வித்த ப்ருஹஸ்பதிகள் பலர் இறந்துவிட்டனர்.

தங்களுக்கு மரணமே நிகழாது என்ற எண்ணத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் மேல் அதிகாரம் செலுத்தி வந்தனரே அந்த அரசர்கள் அவர்களும் இறந்து விட்டனர். இதை ஆழ்வார்

ஒரு நாயகமாயோட உலகுடனாண்டனர்
கரிநாய் கவர்ந்தகாலர் சிதகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதான் கொள்வர்
திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்துய்மினே

என்றார். இதுதவிர

அடிசேர் முடியினராகி அரசர்கள் தாம் தொழ
இடிசேர் முரசங்கள் முற்றத்தியம்ப விருந்த
பிடிசேர் துகளாய் போவர்களாதலில் நொக்கென
கடிசேர் துழாய்முடிக் கண்ணன் கழல்கள் நினைமினே

இதன் பொருள் பல சிற்றறரசர்கள் தன் காலில் வந்து விழவும் பேரீபடஹ வாத்யங்கள் முழங்க ஆடம்பரமாக பவனிவரவும் இருந்த சக்ரவர்த்திகள் பலர் ஒரு பிடி மண்ணாகப் போகின்றனர். ஆதலால் ஸ்ரீகண்ணன் திருவடிகளை நினைத்துக் கொண்டு வாழ வேண்டும் என்று ஸாதித்தபடி.

தெம்பிரை ஆண்டவன்

''வந்தே சாந்தி விரக்தி பூர்ணம் அநகம் ஸ்ரீரங்கநாதம் குரும்'' என்ற பதங்கள் அந்வர்த்தமாக ஸ்வாமிக்கே தான் பொருந்தும். சாந்தி விரக்தி இவ்விரண்டுக்கும் இருப்பிடம். பூர்வாசரமத்திலேயே வெள்ளை ஸந்யாஸி என்று அனைவராலும் கொண்டாடப்பட்ட மஹான். ஸுமார் 40 வருஷம் முன் அடியேனுடைய ச்வசுர க்ருஹத்துக்கு தில்லை ஸ்தானத்துக்குப் போயிருந்தேன். வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டபடி நின்றவன் திடீரென்று வலிப்பு வந்து இழுத்தபடி கீழே விழுந்து துடிக்கிறான். காலை மணி 10.30 நல்ல வெய்யில். விழுந்த இடம் ஸெமெண்டு தரை. சூடு தாங்கவில்லை. அவனை என் இருகைகளாலும் இழுத்து நிழலாக இருக்கும் வாசல் படியில் போட்டேன். கொஞ்சம் ஜலத்தை முகத்தில் தெளித்தேன். சற்றுநேரம் கழித்து எழுந்தான். ஏதோ சில்லரை கொடுத்தேன். பெற்றுக் கொண்டு போய்விட்டான். இதைக் கண்ணுற்ற ஒரு ப்ராசீன வித்வான் பரம ஆசார சீலர் என்னைப் பார்த்து யாரோ ஒரு விஜாதீயமான வ்யக்தியை ஸ்பர்சித்து தூக்கினீரே இந்தச் செய்கை நம் ஆசாரத்துக்கு தகுதியற்றது என்று கர்ஹித்தார். இதைக் கேட்ட அடியேன் எம்பெருமான் தயாநிதி. அவன் திருவுள்ளம் உகக்கும் தயை என்றால் ''பரஹிம்ஸா அஸஹிஷ்ணுதா'' தயா என்று பொருள். அதாவது பிறருடைய துன்பத்தைக் கண்டு பொறுக்கமாட்டாத தன்மைதான் தயை என்பது என்றும், இதனாலேயே ஸ்வாமி தேசிகன் ''தயாதந'' என்று

எம்பெருமானை ஸம்போதனம் செய்கிறார் என்று சொன்னேன். அந்த ஸ்வாமி அடியேன் சொன்னதைக் கேட்டு திருப்தி அடையாமல் நீர் வைதிகமான ஆசாரத்தை விட்டது ஸரியில்லை என்று சொன்னார். இதுப்பற்றி ஆண்டவனிடம் விக்ஞாபித்து கேழ்க்கும் நிமித்தம் ஆச்ரமத்துக்குப் போனேன். ஸ்ரீமதாண்டவனிடம் விஜ்ஞாபனம் செய்தேன். ஆச்சர்யமாக என்னுடைய ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்தாயிற்று. ஸ்ரீமதாண்டவன் ஸாதித்ததை அப்படியே எழுதுகிறேன்.

அப்பா ! ''ஆசார: ப்ரபவோ தர்ம: தர்மஸ்ய ப்ரபுரச்யுத:।। என்று சொல்லப் பட்டுள்ளது. ஆசாரம் என்றால் நன்நடத்தை. சுத்தமாக வைதிகமாக இருப்பது. இதை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் இந்த ஆசாரத்திலும் உயர்ந்தது தர்மம். இந்த தர்மத்துக்கு ப்ரபு எம்பெருமான். நாம் செய்யும் காரியம் தர்மமார்க்கத்தில் அவன் திருவுள்ளம் உகக்கும்படி இருக்க வேண்டும். ''ஸத்யம் வத'' ''தர்மம் சர'' என்று வேதம் நம்மை கட்டளை இடுகிறது. உண்மையைப் பேசு தர்மத்தை நடத்து என்று சொல்லுகிறது. சில இடங்களில் உண்மை தர்மத்துக்கு விரோதமாகி விடும். ஒரு ஊரில் கொள்ளைக்காரன் வருவது தெரிந்து அந்த ஜனங்கள் ஊரைவிட்டு வெளியேறி உடமைகளுடன் ஒரு மலைக்குஹைக்குள் ஒளிந்து கொண்டனர். கொள்ளைக்காரன் ஊருக்குள் ஒருவரையும் காணாமல் ஜனங்கள் போன காலடியைப் பார்த்து மலைக்குஹைவாசல் வரை வந்து விட்டான். அங்கு ஒரு ரிஷி உட்கார்ந்திருந்தார். அவர் உண்மை தவிற பொய்யே பேசமாட்டார். இப்ப இங்கு உண்மையைச் சொல்லி இத்தனை ஜனங்களையும் கொள்ளைக்காரனிடம் காட்டிக் கொடுப்பதா? பொய் சொல்லி காப்பாற்றுவதா? உண்மை சொன்னால் பலருக்கு உயிருக்கு ஆபத்து. பொய் சொன்னால் பலரைக் காப்பாற்றலாம். காப்பாற்றுவது தர்மம். ஆதலால் தர்மத்தை நடத்த வேண்டும். ஆதலால் ஆசாரத்துக்கு தர்மம் மேம்பட்டது. இந்த தர்மத்தை த்ரிகரணத்தாலும் செய்யலாம். வாக்கினாலும் தர்மம் செய்யலாம். இதை பிராட்டி சிறிய திருவடியிடம் ''வாசா தர்மம் அவாப்நுஹி'' என்றாள். ஸீதை உயிரோடு இருப்பதாக ஸ்ரீராமனிடம் சொல்லு. இது வாக்கினால் செய்யும் தர்மம். இந்த தர்மம் பிறரால் அறிய முடியாதது. இதை ஸ்ரீராமன் ஸுக்ஷ்ம: பரம துர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம என்று வாலிவதத்தின் போது சொல்லுகிறான். மஹான்களுடைய தர்மம் பரம ஸுக்ஷ்மமானது. அது பிறரால் அறியற்ப்பாலது அன்று. ஒரு ஸமயம் ஒரு குதிரை வண்டிக்காரன் குதிரையை கன்னா பின்னா என்று அடித்து விட்டான். இதைக் கடாக்ஷித்த நம்மாண்டவன் அந்த வண்டிக்காரன் வண்டியை அவிழ்த்து குதிரையை எங்கு கட்டுகிறான் என்று பார்த்து கொண்டு அங்குபோய் அந்தக்குதிரை கழுத்தைக் கட்டிகொண்டு ஹோவென்று அழுதாச்சு. ஆதலால் நீ ஆசாரத்தை விட்டு அந்தப் பிச்சைக் காரனை தூக்கியதில் குற்றமில்லை என்று தீர்ப்பு வழங்கியாச்சு.

திருக்குடந்தை ஆண்டவன்

வடநாட்டு யாத்திரையின் போது மத்யபிரதேச காட்டில் ஒரு ஏகாந்தமான இடத்தில் இருநூறு வருஷங்களாக வாழ்ந்து வரும் ஒரு மஹரிஷியைப் பார்க்கப் போனார். அப்பொழுது அந்த வ்ருத்தர் ஸுமார் 10 அடி உயரத்துக்கு மேல் ஒரு பரண் அமைத்து

அந்த பரணில் எழுந்தருளி இருந்தாராம் தீர்க்கமான ஜடைகள் தொங்க ஊர்த்வ புண்ட்ரதாரியாக எழுந்தருளி இருந்தாராம். ஸ்ரீமதாண்டவன் விநீதியுடன் ப்ரணமம் செய்தாயிற்று. நீண்ட நேரம் குசலப்ரசனம் செய்து விட்டு ஒரு கலம் படிக்கக்கூடிய அளவுக்கு ஒரு மூட்டை நல்லமுந்திரி; பருப்பு, ஒரு மூட்டை நிறைய நல்ல புதிய பத்தாறுகளுடன் கீழே போட்டு விட்டு இந்த பத்தாறுகளை சிஷ்யர்களிடம் கொடுக்கும்படி நியமித்து கற்கண்டு திராக்ஷை இவைகள் ஏராளமாக கொடுத்து பாதுகாராதனனத்துக்கு உபயோகிக்கும்படி நியமித்தாராம். அந்த வ்ருத்தருக்கு சிஷ்யர்களோ சிப்பந்திகளோ கிடையாதாம். அப்படி இருக்க இவ்வளவு ஸாமான்கள் எப்படி கிடைக்கிறது என்று ஆசார்யப்பட்டதாக ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தாயிற்று. அடியேனுடைய க்ருஹத்தில் 10 தினம் எழுந்தருளி இருந்து விட்டு ராயம்பேட்டைக்கு எழுந்தருளியாச்சு. ஸ்வாமியுடன் நடக்கவே முடியவில்லை. நான் மெதுவாக நடந்தால் நீ வேகமாக என்னைப்பின் தொடர வேண்டும். நான் வேகமாக நடந்தால் நீ ஓடிவர வேண்டும் என்று ஸாதித்தபடி. அதேமாதிரி என்னால் ஸ்ரீமதாண்டவனுடன் நடக்க முடியவில்லை. ஆண்டவனிடம் அடியேன் கேட்டேன் ஆஸேது ஹிமாசலம் நடந்தே எழுந்தருளியாகிறதே இது எப்படி ஸாத்யம் என்றேன். உடனே ஸ்ரீமதாண்டவன் பரமஸுகுமாரமான திருவடியுடனிருந்த சக்ரவர்த்தி திருமகன் அயோத்தியில் புறப்பட்டு இலங்கைவரை நடந்தாரே அது எப்படி முடியும்? அதுதவிர சித்ரகூடம் வரை திருவடி நோகாமல் நடக்க அவன் சாத்திக்கொண்டிருந்த பாதுகைகளையும் பரதன் வாங்கிவந்து விட்டான். அதன் பின் தண்டகா வனப்ரவேசம். அங்கென்ன? தார்ரோடா போட்டிருந்தார் தசரதன்? ஸுகத்துக்கே பிறந்தவன் கஷ்டப்பட்டான். நாம் எல்லாம் கஷ்டத்துக்காகவே பிறந்தோம். ஆனால் நாமெல்லாம் சுகத்தையே எதிர்பார்க்கிறோம். அதெல்லாம் போகட்டும் ஸீதாதேவி என்னபோட்டுண்டு நடந்தா? High Hills போட்டுண்டிருந்தாளா? அவள் மஹாலக்ஷ்மி இல்லையா? இதை எல்லாம் நெனைச்சா நாம் செய்யரதெல்லாம் ஒண்ணுமே இல்லை. இதைத்தான் ஆழ்வார்

நாட்டில் பிறந்தவர் நாணர்க்கு ஆளன்றி ஆவரோ
நாட்டில் பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய்
நாட்டையும் நலியும் அரக்கர் அசுரரை நாடித் தடிந்திட்டு
நாட்டை அளித்து உய்யச் செய்து நடந்தமை கேட்டுமே

என்று ஸாதித்துள்ளார். நாட்டில் பிறந்தார். மனிசர்க்காய் படாதனபட்டார். அரக்கர் அசுரரை நாடித்தடிந்திட்டார். அயோத்திலேயிருந்து லங்கைக்குப் போனார். எப்படிப் போனார்? அயோத்திலேருந்து சிருங்கிபேரபுரம் வரை ரதத்திலே போனார். அப்ப தாயார் கூட இருந்தா. அப்புரம் பரத்வாஜர் ஆச்ரமம் அதுக்கப்புரம் சித்ரகூடபர்வதம் அதெல்லாம் கிட்டகிட்ட இருந்தது. அதுக்கு மேலே பஞ்ஜவடி கொஞ்ச தூரம்தான் இருந்தது. அந்த கொஞ்ச தூரத்தை தாயாரோட நடந்தார். அப்பரம் தான் தாயாரைப் பிரிஞ்சு தண்டகாரண்யம் பூராவும் நடந்தேபோய் கிஷ்கிந்தைக்கு போய் அங்கிருந்து ஸேதுக்கரைக்குப் போய் அணைகட்டி லங்கைக்குப் போய் ராவண ஸம்ஹாரம் செய்தார். அப்பப்பா எத்தனை ஆயிரக்கணக்கான மைல்கள் நடக்க வேண்டியதாய் போயிடுத்து. தாயார் இருந்தா ரதம் கிடைக்கிறது. கண்டசா கார் கிடைக்கிறது. லக்ஷ்மீ

கடாக்ஷம் இருந்தால் எல்லாம் நன்னா நடக்கும். ஸுந்தரகாண்டம் தான் உனக்கு முகஸ்தமாச்சே? அதுலே என்ன சொல்லிருக்கு ஹநுமான் ஸீதையைப் போய் பார்த்தார். உடனே தேஜஸ்வீயானுர். **ஸீதாமாச்ரித்ய தேஜஸ்வீ ஹநுமான் வில்வாபஹ** என்ற ச்லோகம் எப்படி இருக்கு? ஆச்சர்யமில்லையா? தாயாரில்லேண்னா, நடக்கணும். மறுபடியும் ராவண ஸம்ஹாரம் ஆனதும் புஷ்பகவிமானத்திலே பிரயாணம். அப்பொழுது தாயாரோட சேர்ந்தாச்சு– அதனால் நடக்கத் தேவையில்லை. நாம் நம்வழியை சிரமமில்லாமல் நடக்க ராமாயணம் பேசிண்டே இவ்வளவு தூரம் நடந்துட்டோம். ஆனால் ராமன் எப்படி நடந்தாரோ? அவர் எந்த ராமாயணம் பேசிண்டு போயிருப்பாரோ? தெரியல்லே.

மைஸூர் ஆண்டவன்

ஸுமார் 30 வருஷம் முன் மைஸூரில் மஹாஜன் ஹைஸ்கூலில் ஸம்ஸ்க்ருத அத்யாபகராக ஸ்வாமி உத்யோகம் பார்த்து வந்த ஸமயம் வால்மீகி ரோடு ஒண்டிக்கப்பல் என்ற இடத்தில் ஸ்வாமி திருமாளிகையில் போய் தண்டன் ஸமர்பித்தேன். அடியேன் ஒரு கல்யானத்துக்குப் போயிருந்தேன். நீஹீந ஆசாரமாக இருக்குமிடத்தில் சாப்பிடுவதில்லை. முக்கியமாக கல்யாண வீடுகளில் க்ஷீரம் கூடப்பருகுவதில்லை. விடியற்காலையில் ஸ்வாமி திருமாளிகைக்குப் போனேன். அடியேன் அங்கு போவதற்கு முன்னாலேயே ஸ்வாமி நீராட்டம் கண்டருளி அநுஷ்டானத்துக்கு தயாராகிக் கொண்டிருந்தார். அடியேன் போய் தண்டன் ஸமர்பித்தேன்–அபிவாதனம் செய்யமுடியாமல் குளிர் நடுங்குகிறது.

''அச்ராந்த தந்தவீணா வ்யாபாரேண வேபமான அதரபுடதயா
சீதிகா பிசாசிகா நிர்ஹரணாய நிபுண மந்த்ர ஜபமிவ''

என்ற சம்பூராமாயண கத்யத்தைச் சொன்னேன். இதைச் செவியுற்ற ஸ்வாமி மறுபடியும் சொல்லுமாறு நியமனம் செய்தார். நியமனப்படி சொன்னேன். அதாவது ஹேமந்தருதுவில் தங்குவதற்கு வீடில்லாத ஏழைகள் கீழ்பல் வரிசையும் மேல் பல் வரிசையும் இடைவிடாது தந்தி அடிப்பது போல் பட படவென்று அடித்துக் கொண்டது. இதைப் பார்த்தால் குளிர் என்ற பிசாசை ஓட்டுவதற்காக மந்திர ஜபம் செய்வது போல் ஏழைகள் குளிர் நடுக்க வீதியில் உட்கார்ந்திருந்தனர் என்று அர்த்தம். இதைக்கேட்ட ஸ்வாமி அடியேனை வெகுவாக ச்லாகித்தாயிற்று. ஸ்வாமி உத்யோகத்தில் இருந்த போதிலும் ஒரு நாள் கூட சட்டை அணிந்ததே கிடையாது. ஸ்வாமி வேலை பார்த்து வந்த பாடசாலைக்கு வருஷத்துக்கு ஒரு முறை மைஸூர் ஸமஸ்தான அதிபதி மன்னர் விஜயம் செய்வது வழக்கம். அன்று யாராக இருந்தாலும் சட்டை அணிந்து கொண்டு தான் பாட சாலைக்கு வரவேண்டும். ஆனால் ஸ்வாமி தன்னை சட்டை அணியச்சொன்னால் உத்யோகத்தை ராஜினாமா செய்து விடுவதாக ஸாதித்தாராம். இதை அறிந்த அரசர் சட்டை அணிய வேண்டாம் என்று சொல்லி அனுப்பினாராம். ஸுதர்மா என்ற ஸம்ஸ்க்ருத தினசரி பேபர் இன்னும் மைசூரிலிருந்து வெளிவருகிறது. அந்த பேப்பரில் ஸம்ஸ்கிருத பாஷையில் பல

விஷயங்கள் எழுதி வெளியிட்டுள்ளார். கவன சக்தி அபாரம். மஹா சாந்தர் தாந்தர். அடியேனிடம் அந்யாத்ருசமான வாத்ஸல்யமும் க்ருபையும் உள்ளவர். ஸ்ரீகார்யமாக இருந்த ஸமயம் அடியேன் ஹ்ருதய நோயால் பீடிக்கப்பட்டு தஞ்சாவூரில் ஒரு Private Nursing Home ல் படுத்த படுக்கையாக இருந்த ஸமயம் அங்கு எழுந்தருளி அடியேனை அனுக்ரஹித்தார்.

ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன்

ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன் ஸ்வாமியிடம் பேசிக் கொண்டிருந்தால் ராத்ரிரேவ வ்யரம்ஸீமத்' என்ற உத்தர ராமசரித்ரவாக்யம் அந்வர்த்தமாகும். பகவத் பரமாக பேசினாலும் சரி குறிப்பிட்ட வேதாந்த விஷயம் பேசினாலும் சரி ஆகம சாஸ்திரங்களைப் பற்றி பேசினாலும் சரி சில்ப சாஸ்திரம் பற்றி பேசினாலும் சரி, யோக சாஸ்திரம் பற்றி பேசினாலும் சரி வேதங்கள் பற்றிப் பேசினாலும் சரி தத்கால விஜ்ஞாநம் பற்றிப் பேசினாலும் சரி வியாகர்ணசாஸ்திரம் அலங்கார சாஸ்திரம் ஸங்கீதம், கட்டிடக்கலை அரசியல் இப்படி எதைப்பற்றி பேசினாலும் அவற்றை ஸ்தலஸ்ப்ருக்காக அறிந்து கசடற நம் போன்றவர்களுக்கு நன்றாகப் புரியும்படி எடுத்துச் சொலலும் திறமையும் அழுகும் தங்குதடையற்ற கம்பீரமான பேச்சும் வாசோ விதேயம். சென்னை நகர அஹோபிலமடம் ஓரியண்டல் ஹைஸ்கூலில் சுமார் 2 வருஷம் முன் ஜனாதிபதி விருது பெற்ற ஸ்ரீஉபயவே. ஸேவாஸ்வாமி இன்னும் பல வித்வான்களை பஹுமானிக்க ஏற்பாடு செய்திருந்த கூட்டத்துகு ஸ்ரீமதாண்டவன் அத்யக்ஷம் வஹித்தாயிற்று. அன்றைய தினம் Electron Nutron பற்றி தன் பேச்சு நடுவில் குறிப்பிட்டு வேதத்தில் இவற்றைப்பற்றி எங்கு சொல்லப் பட்டுள்ளது என்று authentic quotation கொடுத்து உபந்யாஸம் செய்தாயிற்று. அங்கு வந்திருந்த M.Sc., மாணவர்கள் ஸ்வாமி ஸாதித்தவற்றை தங்கள் டைரியில் எழுதிக் கொண்டனர்.

கீர்வாண பாஷையில் அநிரஸாதாரண பாண்டித்யம். த்ரமிட பாஷையில் கம்பனோ புகழேந்தியோ ஒட்டக்கூத்தனோ நம் ஸ்வாமியிடம் ஸந்தேஹம் நிவிருத்திக்கு வரவேண்டும். திருக்குறள் வ்யாக்யானம் செய்தால் ஹயக்ரீவாசாரியார் என்றே சொல்லலாம்.

ஞாநம் தோற்றம் சாரீரம் தேஜஸ் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற மஹான். இவ்வளவு யோக்யதையுடன் இருந்தும் சிஷ்யர்கள் இருக்குமிடத்துக்கு எழுந்தருளி அனுக்ரஹிக்க நடந்து எழுந்தருள திருமேனியில் பாடவக் குறைவு ஏற்பட்டுள்ளது. டாக்டர்கள் நடக்கவே கூடாது என்று சொல்லிவிட்டனர். ஸஞ்சாரமே இல்லாமல் இருந்தால் சிஷ்யர்கள் ஏமாந்து போகிறார்கள். யானத்தில் எழுந்தருளி சிஷ்யர்களை அனுக்ரஹிக்கலாம். சுமார் ஒருவருஷம் முன்னால் அடியேனுடைய ஸ்வப்நத்தில் ஸுமார் ஐயாயிரம் சிஷ்யர்கள் புடைசூழ்ந்து நிற்க மூன்று யதீச்வரர்கள் காஷ்டத்தினால் செய்யப்பட்ட விமானம் போன்ற யானத்தில் எழுந்தருளும்படி

நியமிக்க வழுத்தூர் ஸ்ரீமதண்டவன் அவதரித்த இந்த புண்ய பூமியிலுள்ள பெருமாள் ஸந்நிதி வாசலில் இருந்து புறப்பட்டதாக ஸேவித்தேன்.

இதை பூர்வாசாரியர்கள் திருவுள்ளம் உகந்து அநுஜ்ஞை செய்ததாக அடியேன் நினைத்து இதைப் பற்றி ஒரு விஜ்ஞாபன பத்ரிகையும் ஸ்ரீகார்யம் ஸ்வாமிக்கு எழுதினேன். ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளம் என்னவோ அடியேன் ஒரு ஸாதாரண மனிதன். அடியேனுடைய யோசனை ஏறுது என்று தெரியும். இருந்தாலும் நான் கண்ட கனவை எழுதினேன். நம் ஸம்ப்ரதாயத்துக்கு வைகல்யம் ஏற்படாமல் தடுக்க திருமேனி அபாடவத்துடன் நடந்து எழுந்தருள முடியாத நிலையில் யானத்தில் எழுந்தருளலாம். ''சரீரம் ஆத்யம் கலு தர்மஸாதனம்'' என்ற நிலையில் எப்படியாவது மநஸை த்ருடம் செய்து கொண்டு சிஷ்ய கோடிகளை அனுக்ரஹிக்க வேண்டியது ஸ்ரீமதாண்டவன் கடமை.

கதி ஹேதுரபூத்க்வசித் ஸ்திஹேதுர் மணி பாதுகா கவிசித்.
நஹி வஸ்துஷு சக்தி நிஸ்சயோ நியதி: கேவலம் இச்வரேச்சயா.

என்ற பாதுகா ஸஹஸ்ர ச்லோகத்தை மங்களாசாஸனம் இட்டு ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயம் வாழி பாதுகைகள் வாழி என்று மங்களாசாஸனமிட்டு நந்தாம சரத: சதம் என்று ஸ்ரீமதாண்டவன் சதாபிஷேக தர்சனேன் முகனுக இதை ஸமர்பணம் செய்கிறேன்.

अज्ञानध्वान्तरोधात् अघपरिहरणात् आत्मसाम्यावहत्वात्
जन्मप्रध्वंसिजन्मप्रदगरिमतया दिव्यदृष्टिप्रदानात् ।
निष्प्रत्यूहानृशंस्यात् नियतरसतया नित्यशेषित्वयोगात्
आचार्यस्सद्भिरप्त्युपकरणधिया देववत्स्यादुपास्यः ।।

அஞ்ஞானமெனும் இருளைப் போக்குவதாலும், தீவினைகளை தொலைப்பதாலும், தனக்கு சமமான நிலையை அளிப்பதாலும், பிறவியறுக்கும் பிறவியை அளிக்கும் பெருமையாலும், திவ்யமான பார்வையை அளிக்கும் பெருமையாலும், தக்குதடையில்லாத தயையினாலும், நியதரஸமாயிருப்பதாலும், நித்யஸேஷித்வ முடையதாலும், ஆசாரியன் மைம்மாறு அறியாத நல்லவர்களாலே எம்பெருமானைப்போல் உபாஸிக்கதக்கவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீஆராவமுதன் ஒரு தெவிட்டாத அமுதம்

ஸ்ரீமான் R. கண்ணன் ஸ்வாமி, சென்னை

ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிக்கு ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் திருக்குடந்தையாண்டவனே உண்ணும் சோறு, பருகு நீர், மற்றெல்லாம். திருக்குடந்தையாண்டவன் திருவடியிலேயே ஸர்வார்த்தா க்ரஹணம் பண்ணி யருளியவர் ப்ரக்ருதம் ஆண்டவன். அப்படிப்பட்ட திருக்குடந்தை ஆண்டவன் உகந்தருளிய அர்ச்சாவதாரம் ஸ்ரீஆராவமுதாழ்வான். அப்படி ஸ்வாமி உகந்தருளிய ஸ்ரீஆராவமுதன் விஷயமாக, அடியேனுடைய சிறுபுத்திக்கு எட்டிய அளவு எழுதப்பட்டிருக்கிறது. குற்றங்குறைகள் இருப்பின் க்ஷமித்தருளும்படி ப்ரார்த்திக்கிறேன்.

திவ்யதம்பதிகளான ஸ்ரீமந்நாராயணனும், பெரியபிராட்டியாரும், இந்த இருள்தருமா ஞாலத்தில் ஸம்ஸாரிகளை உய்விக்க ஆங்காங்கே அர்ச்சாவதாரமாக கோயில் கொண்டு விளங்கி வருகிறார்கள். இந்த சரண்ய தம்பதிகளினால் மயற்வற மதிநலம் அருளப்பட்ட திவ்யசூரிகள், ஆழ்வார்களாக அவதரித்தனர். ஆழ்வார்களால் பாடப்பெற்ற வைஷ்ணவ ஸ்தலங்கள் திவ்யதேசங்களாயின. பாடப் பெற்ற பாசுரங்களோ திவ்யப்ரபந்தமாயிற்று. ஆழ்வார் பதின்மர் அல்லது பன்னிருவர் (ஸ்ரீஆண்டாள் மற்றும் ஸ்ரீமதுரகவிகள் இவர்களையும் சேர்த்து) என்றும், இவர்களால் இயற்றப்பட்ட திவ்யப்ரபந்தம் நாலாயிரம் பாசுரங்கள் என்றும், மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்யதேசங்கள் நூற்றிஎட்டு என்றும் முன்னோர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். திவ்யப்ரபந்தத்தை தமிழ் வேதம் என்றும், தமிழ் மறை என்றும், த்ராவிடவேதம் என்றும், அருளிச்செயல்கள் என்றும் பெரியோர்கள் போற்றி புகழ்ந்து வந்துள்ளனர்.

ஆழ்வார்கள் காலத்திற்கு பிறகு, திவ்யதேசங்களில் ஓதப்பட்டு வந்த திவ்யபரபந்தங்கள், ஒரு கால விசேஷத்தால், கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து விட்டன. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு ஆதாரமாக விளங்கும் இந்த தமிழ் மறைகளாகிற ஆழ்வார்கள் அருளிச்செயலை (திவ்யப்ரபந்தங்களை) மீட்ட பெருமை திருக்குடந்தை ஆராவமுதனையே சாரும்.

ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களில் ச்ரேஷ்டரான ஸ்ரீமந்நாத முனிகள், திருக்குடந்தையில் ஆராவமுதனை மங்களா சாஸனம் செய்யச் சென்றபோது, நம்மாழ்வாரால் அருளப்பட்ட, இவ்வூர் பதிகமான ''ஆராவமுதே அடியேனுடலம்''

என்ற பாசுரங்களை அடியவர்கள் சேவிக்கக்கேட்டு அகமகிழ்ந்து போனார். இப்பதிகம் ''குருகூர் சடகோபன் குழலில் மலியச் சொன்ன ஓர் ஆயிரத்துளிப்பத்தும்'' என முடியவே, இது போன்ற ஆயிரம் பாசுரங்கள் இருக்கின்றன என்று தெளிந்து சந்தோஷப்பட்டு, திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக்குச் சென்று, அங்கு விசாரித்து ''கண்ணிணுஞ் சிறுத்தாம்பு'' என்னும் மதுரகவியாழ்வார் பாசுரங்களை பன்னீராயிரம் தடவை பாராயணம் செய்து, நம்மாழ்வாரை யோகதசையில் சேவித்து, ஆழ்வார்கள் க்ருபையால் நாலாயிரம் திவ்யப்ரபந்தங்களையும் பெற்றார் என்பது திவ்யசூரிசரிதம். ஆகவே, ஸ்ரீமந்நாதமுனிகள் வாயிலாக இணையற்ற தமிழ்மறையை உலகிற்கு மீட்டுத்தந்த மஹோபகாரன் ஆராவமுதனே. த்ராவிடவேத தர்சகாய நம: என்று நாமாவளியில் பெயர் பெற்றவனன்றோ குடந்தைத் திருமால். திருக்குடந்தைக்கும் ''திவ்யப்ரபந்தம் விளைந்த திருப்பதி'' என்னும் புகழ் வந்தடைந்தது.

திருக்குடந்தையை மங்களாசாஸனம் செய்த ஆழ்வார்கள் எழுவர். பூதத்தாழ்வார் பேயாழ்வார் திமழிசையாழ்வார் நம்மாழ்வார், பெரியாழ்வார். ஸ்ரீஆண்டாள், திருமங்கையாழ்வார் – ஆகியோர்.

1. நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழியில் ஐந்தாம் பத்து, எட்டாம் திருவாய்மொழி ''பாசுரங்களும் ஆராவமுதனுக்கு மிக்க ஏற்றம் தருவது ''ஆராவமுதே'' என்று ஆரம்பிக்கிறார் ஆழ்வார். இந்தத் திருநாமம் தேனிலும் இனியதன்றோ! தெவிட்டாத அமுதமன்றோ! ஆம், அவன் அபர்யாப்தாம்ருதன். திருக்குடந்தை எம்பெருமானுக்கே உரிய அஸாதாரணமான திருநாமமிதே, இந்த ''ஆராவமுதம்'' தனது ஸௌந்தர்யாதி குணங்களைக் காட்டி அடிமை கொள்ளவல்லவன். 'த்வம் மே'' (நீ என்னைச் சேர்ந்தவன்) என்றவளவில் ''அஹம்மே'' (நான் என்னைச் சேர்ந்தவன்) என்று திமிரப்பண்ணுபவனையும் ''ஆராவமுதே'' என்னுமளவில் ''அடியேன்'' (தாஸன்) என்னப்பண்ணும் மாதுர்யம் குடமூக்கில் ப்ரவஹிக்கிறது என்பது உரையாசிரியர் வாக்கு. அசேதனமான சரீரம் கூட அவன்பால் கொண்ட பக்தியினால் நீராய் அலைந்து கரைகின்றது என்கிறார் ஆழ்வார். ''உன்னைத்தவிர வேறு உபாயங்களால் கிடைப்பதொன்றையும் வேண்டேன். உன் திருவடிகளும் உன்னால் கிடைத்தால் அபேக்ஷிப்பேன் – மற்றொருவரிடமும் மற்ற உபாயங்களினாலும் ஒன்றையும் நான் விரும்பமாட்டேன். உன் திருவடிகளைச் சேருவதற்கு என்ன உபாயம் வேண்டுமோ, அதை நீ செய்தருள வேண்டும். பிராட்டியோடு கூடிய உன் சேர்த்தியை விட்டு பிரிந்திருப்பதை பொருத்திருக்க மாட்டேன். என் ஸம்ஸார பந்தத்தை நீயே போக்கி அருள வேண்டும். என் துக்கங்களை போக்கினாலும், போக்காவிட்டாலும், நீயே ரக்ஷகன். உன் நடையழகை நான் காணும்படி வரவேணும். உனக்கு அடிமையான பிறகும் நான் எவ்வளவு காலம் இந்த இருள்தருமா ஞாலத்தில் கடந்து உழல்வேன்'' என்று பலபடியாக ஆழ்வார் அலற்றுகிறார். இந்த பதிகத்தில் ஆராவமுதனே ப்ராப்யன் என்றும், அவனை அடைய அவனே உபாயம் என்றும் தத்வநிர்ணயம் செய்கிறார் ஆழ்வார். இந்த திவ்யதேசத்து எம்பெருமானை ஆழ்வார், ''ஆராவமுதே, நெடுமாலே எம்மானே, யாழினிசையே,

அறிவின் பயனே, அரியேறே, பொற்சுடரே, பவளக்குன்றே'' போன்ற சொற்களால் அவனை விளித்து பாசுரம் பாடுகிறார். அமுதிலும் இனிய சொற்களன்றோ. இப்பதிகம் இன்றளவும் ''கோயில் திருவாய்மொழியில்'' அனுஸந்திக்கப்பட்டு வருகிறது.

நம்மாழ்வாரின் நெஞ்சில் கடைசீவரையில் குடிகொண்டிருந்த எம்பெருமான் ஆராவமுதனே, பரமபதத்திற்கு ஆதிவாஹிகர்களால் சத்காரம் செய்து அழைத்து செல்லப்பட்ட போதும் இவ்வெம்பெருமானையே ''குடந்தை என் கோவலன்'' என்று நினைவு கூறுகிறார்.

2. நம்மாழ்வார் திருவாய்மொழியினால் பேறு பெற்ற எம்பெருமான் ஆராவமுதன் மேல் மிக்க வ்யாமோஹம் கொண்ட ஆழ்வார்கள் திருமழிசையாழ்வாரும், திருமங்கை யாழ்வாரும். ஆராவமுதனும் உத்தானசாயியாக திருக்கோலம் கொண்டதும், ஆழ்வான் என்று (ஆராவமுதாழ்வான்) பிருதம் பெற்றதும் திருமழிசையாழ்வாரினாலே. ''நடந்த கால்கள் நொந்தவோ..... கிடந்தவாறு எழுந்திருந்து பேசு'' என்று ஆழ்வார் ப்ரார்த்திக்க, பக்தபராதீனனான எம்பெருமானும் எழுந்திருக்க ஆழ்வாரும் ஆச்சரிய சகிதராய், ''வாழிகேசனே'' (அப்படியே உத்தான சயனத்தில் ஸேவை ஸாதிக்க வேணும்) என்று மங்களாசாஸனம் செய்தார். இன்றும் உத்தான சாயியாக எம்பெருமான் காட்சி தருகிறார். பக்தனான திருமழிசை யாழ்வாருக்கு ''பிரான்'' என்னும் பட்டத்தை அளித்து, தான் ''ஆராவமுதாழ்வான்'' என்னும் பிருதத்தையும் பெற்றான் எம்பெருமான். இவ்வாழ்வாருக்கு ஆராவமுதனிடம் அளவற்ற ப்ரேமை. இப்பெருமானை தன்னுடைய இருப்ரபந்தங்களான திருச்சந்தவிருத்தம்,'' மற்றும் ''நான்முகன் திருவந்தாதியிலும் மங்களர்சாஸனம் செய்துள்ளார். பள்ளிகொண்டுள்ள அர்ச்சாவதார மூர்த்திகளை மங்களாசாஸனம் செய்ய முற்பட்ட ஆழ்வார், நான்முகன் திருவந்தாதியில் ''நாகத்தனை குடந்தை, வேஃகா, திருவெவ்வுள் நாகத்தனையரங்கம் பேரன்பில் நாகத்தனைப் பாற்கடல்கிடக்குமாதி நெடுமால் அணைப்பார்கருத்தனாவான்'' என்னும் போது முதலில் எடுத்தது திருக்குடந்தையன்றோ.

இவ்வாழ்வார் நெடுங்காலம் திருக்குடந்தையிலேயே எழுந்தருளியிருந்து ஆராவமுதனையும் கோமளவல்லித் தாயாரையும் மங்களாசாஸனம் செய்து கொண்டு வாழந்திருந்து பிறகு இந்த திவ்யதேசத்திலேயே பரமபதம் அடைந்தார் என்பது சரித்திரம். இவ்வாழ்வாருக்கு இந்த திவ்யதேசத்திலே ஒரு தனிக்கோயில் உண்டு – இன்றளவும் ஆழ்வாருக்கு திருவாராதனம் நடந்து வருகிறது.

3. ஆழ்வார்களில் கடைக்குட்டியென்றும் நம்கலியன் என்றும் ஆசார்யர்களால் போற்றப்படும் திருமங்கை யாழ்வார், போர உகந்து, போற்றிப்பாடி, அனுபவித்து, ஆனந்தம் அடைந்தது ஆராவமுதனிடமே என்றால் மிகையாகாது. தன்னுடைய ஆறு பிரபந்தங்களாகிற பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல் மற்றும் பெரிய திருமடல் ஆகிய

எல்லாவற்றிலும் மங்களாசாஸனம் செய்தது ஆராவமுதாழ்வான் ஒருவனையே. அதிலும், திவெழுகூற்றிருக்கை என்னும் பிரபந்தம் ஆராவமுதனுக்கே அஸாதாரணமானது. இந்த பிரபந்தத்தில் இவ்வெம்பெருமான் ஒருவனையே போற்றி புகழ்ந்துள்ளார் ஆழ்வார்.

திருமங்கையாழ்வார், திருமணங்கொல்லையிலே ஸர்வேச்வரன் பக்கலிலே, திருவஷ்டாக்ஷரம் உபதேசிக்கப் பெற்றதும் முதன்முதலில் மங்களாசாஸனம் செய்தது ஆராவமுதனையே. பெரிய திருமொழி தொடக்கத்தில் இரண்டாம் பாட்டிலேயே ''சூழ்புனற குடந்தையே தொழுது என் நாவினாலுள்ள நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்'' என்று அருளிச் செய்கிறார். தான் கண்டு கொண்ட அஷ்டாக்ஷரத்தை, அப்பதிகத்திலேயே பிறருக்கு உபதேசிக்கிறார். ''சூழ்புனற குடந்தையே தொழுமின் நற்பொருள் காண்மின் பாடிநீருய்மின் நாராயணா வென்னும் நாமம்''.

இவ்வாழ்வார், திருக்குடந்தையைச் சுற்றியிருக்கும் பல திவ்யதேசங்களுக்கு ஒரு பதிகமோ அதற்கு மேற்பட்ட பதிகங்களோ பாடியுள்ளார் – திருப்புள்ளம் பூதங்குடி (1 பதிகம்) திருக்கூடலூர் (1), திருவெள்ளியங்குடி (1), திருநந்திபுரவிண்ணகரம் (1), திருவிண்ணகரம் (3), திருச்சேறை (1), திருநரையூர் (10), திருஅழுந்தூர் (4). ஆனால் திருக்குடந்தை எம்பெருமானை பதிகமாகப்பாடாமல் பல பதிகங்களில் தனித்தனி பாசுரங்களால் அனுபவித்து பாடியுள்ளார். வெவ்வேறு திவ்யதேச எம்பெருமானுடன் சேர்த்து பாடியிருப்பது ஆராவமுதனுக்கு ஏற்றமன்றோ!

(1) திருச்சாளகிராமத்து பெருமானை அனுபவிக்கும் போது, ஆழ்வாருக்கு திருக்குடந்தை ஆராவமுதன் நினைவு. ''ஊரான் குடந்தை யுத்தமன்'' என்று ஆரம்பித்து ''சாளக்கிராம மடைநெஞ்சே'' என்கிறார் (பெரிய திருமொழி 1–5–4)

(2) திருவிண்ணகரப்பனை சேவிக்கும்போதும் ஆராவமுதன் அனுபவம் ''விண்ணகரம் மருவிநாளும் நின்றாளை தன்குடந்தமாலை நெடியானையடி நான் நினைந்தேட்டேனே) (திருநெடுந்தாண்டகம்–29)

(3) திருநறையூரிலும் 'ஆரவமுதனே' அனுபவம் ''குடந்தைக் கிடந்தானை நங்கோனை நாடி நறையூரில் கண்டேனே (பெரியதிருமொழி 6–8–9)

2. ''கிடந்த நம்பி குடந்தை மேவி கேழலாய் உலகை இடந்த நம்பி'' என்ற நறையூர் (6–10) பதிகத்தில்) குடந்தை ஆராவமுதனையே அனுபவிக்கிறார்.

3. திருநாரையூர் 10 பதிகங்களை முடிக்கும் வகையில் 10வது பதிகத்திலும் திருக்குடந்தை அனுபவம். ''குடந்தைத்தலைக் கோவினைக் குடமாடிய கூத்தனை எந்தைய எந்தை தந்தை தம்மானை எம்பிரானை எத்தால் மறக்கேனே?

4. திருநீர்மலை பாசுரம் (2–4–1) அங்கும் திருக்குடந்தை ''நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை தடம் திகழ்கோவல் நகர் நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு இடம் மாமலையாவது நீர்மலையே.

5. திருவழுந்தூர் (7–6–9)

போரானைக் குடந்தைப் பெருமானை இலங்கு ஒளிசேர்
வாரார் வனமூலையாள் மலர்மங்கை நாயகனை
ஆராவின்னமுதைத் தென்ன முந்தையில் மன்னி நின்ற
காரார்முகிலைக் கண்டுக் கொண்டு களித்தேனே.

குடந்தை எம்பெருமானாகிற ஆரா இன்னமுதத்தை (அபர்யாப்தாம்ருதத்தை) திருவழுந்தூரில் கண்டு களித்தாக, பாவசப்படுகிறார் ஆழ்வார்.

6. திருச்சேறை – (10–1–6)

திருச்சேறை எம்பெருமானாகிற சாராநாதப் பெருமாளைச் சேவிக்கச் சென்று, அவரையே தாம் திருக்குடந்தையில் கண்டதாக பாடுகிறார் ஆழ்வார்.

வானை ஆரமுதம் தந்த வள்ளலை
தேனை நீவயல் சேறையில் கண்டுபோய்
ஆனை வாட்டியருளும் அமரர்தம்
கோனை யாம் குடந்தைச் சென்று காண்டுமே.

7. திருக்கண்ணபுரம் (8–9–5)

சௌரிராஜனை மங்களாசாஸனம் செய்யும் ஆழ்வார், எம்பெருமானை மறவாமை பெற்றது திருக்குடந்தை கிடந்து உகந்த மைந்தனை என்று அருளிச் செய்கிறார்.

வந்தாய் என் மனத்தே வந்து நீ புகுந்தபின்னை
எந்தாய்! போறியாய் இதுவே அமையாதோ?
கொந்தாய்! போயறியாய் சூழ் குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா! உன்னை என்றும் மறவாமை பெற்றேனே.

8. திருநாகை இந்த திவ்யதேசத்து எம்பெருமான் ஸௌந்தரராஜப் பெருமாளை சேவித்து, அவரது வடிவழகுக்கு தோற்று, தன்னை நாயகியாக பாவித்து தனது அனுபவத்தைக் கூறவந்த ஆழ்வார் ''இவர் திருக்குடந்தை எம்பெருமானோ'' என்று கேட்கிறார்.

தோடவிழ் நீலமணங் கொடுக்கும் சூழ்புனல் சூழ்குடந்தைக் கிடந்த,
சேடர்கொல் என்று தரிக்கமாட்டேன் செஞ்சுடராழியும் சங்குமேந்தி,
பாடகமெல்லடியார் வணங்கப்பன் மணிமுத்தொடிலங்கு சோதி,
ஆடகம் பூண்டோரு நான்கு தோளுமச்சோவொருவர் அழகியவா

இப்படி பலவாறு வெவ்வெறு திவ்யதேசங்களை அனுபவிக்கும் போது ஆராவமுதன் அனுபவம் ஆழ்வாருக்குத் தொடருகிறது.

திருக்குறுந்தாண்டகத்தில் ஆராவமுதனை ஏற்றிப்பபாடுவது ஒரு சொல் ஓவியமாகும்.

மூவரில் முதல்வனுயவொருவனை உலகங்கொண்ட
கோவினைக் குடந்தை மேய குருமணித்திரளை, இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப் பைம்பொன்னை, அமரர்சென்னிப்
பூவினை, புகழும் தொண்டரென் சொல்லிப் புகழ்வர்தாமே. *(6வது பாசுரம்)*

திருக்குடந்தையானை மஹாபாபியான தான் நினையாது முன்னிலும் பெரிய பாபியாக ஆகிவிட்டதாக அலற்றுகிறார் ஆழ்வார் திருக்குறுந்தாண்டகம் 14வது பாசுரத்தாலே.

திருநெடுந்தாண்டகத்திலே, ஆழ்வார், தாயார் பாசுரமாக 17வது மற்றும் 19 பாசுரத்தில் திருக்குடந்தை எம்பெருமானை, திருக்குடந்தையையும் பாடி தன் ஆற்றுமையைக் காட்டுகிறார்.

பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், மற்றும் திருநெடுந்தாண்டகம் கொண்ட இரண்டாவது ஆயிரத்தில் கடைசியாக திருநெடுந்தாண்டகத்தை 'தன் குடந்தை கிடந்த மாலை நெடியானை யடி நான் நினைந்திட்டேனை'' என்று தலைக்கட்டுகிறார்.

திருவெழுக்கூற்றிருக்கை திருக்குடந்தை ஆராவமுதன் ஒருவரையே சேரும்,- இதில் ''செல்வம் மல்கு திருக்குடந்தை'' என்று திவ்யதேசத்துக்கு ஏற்றம் கூறுகிறார். மடல்களிலும் ஆராவமுதன் அனுபவம். சிறிய திருமடலில் ''காரார் குடந்தை''(எப்பொழுதும் மேகங்கள் நிறைந்திருப்பதால் குளிர்ந்திருக்கும் திருக்குடந்தை) என்றும் பெரிய திருமடலில் ''பொன் மணிகொழிக்கும் பூங்குடந்தை போர் விடையை''(ரத்னங்கள் காவிரியாற்றின் கரையில் குவிகிறது. அதனால் அழகு பெறுகிறது குடந்தை. மற்றும் அங்குள்ள எம்பெருமான் போர் புரியும் ரிஷபம் போல் விளங்குகிறான்) என்றும் திவ்யதேசத்தையும், திவ்யதேச பெருமானையும் போற்றிப் புகழ்கிறார்.

4) இனி பெரியாழ்வாரின் ஆராவமுதனின் அனுபவம் பற்றி சிறிது காண்போம்.

பெரியாழ்வாருக்கு ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு. தன்னை யசோதைப் பிராட்டியாக பாவித்து, கண்ணனின் குழந்தைப் பிராயத்தின் லீலா ரஸத்தை பருகி, தன் அனுபவ பரிவாஹமாக பாசுரங்கள் பாடுகிறார். பாசுரங்கள் முழுவதும் ரஸகனம். கண்ணனைத் தாலாட்டுதல், அவனுடைய சப்பாணிப் பருவம், செங்கீரைப் பருவம், அவன் அம்மம் உண்ணுதல், நீராட்டல், பூச்சூடுதல், தளர்நடை, குழல்வாரிப் பின்னுதல், அவனுக்குக் காப்பிடுதல், அவனுடைய ஆச்சரிய சேஷ்டிதங்கள், அவனை மாடு மேய்க்க அனுப்புதல், அவன் திரும்பிவரும் அழகு அவன் குழல் ஊதிய ஆச்சரியானுபவம், முதலியவைகளை பதிகங்களாக அனுபவிக்கிறார். அப்படி அனுபவிக்கும் போது ஆராவமுதனையும் மங்களாசாஸனம் செய்கிறார்.

''குடந்தைக் கிடந்தானே தாலேலோ'' (பெரியா. தி 1.4.7)
''கொட்டாய் சப்பாணி குடந்தைக் கிடந்தானே சப்பாணி'' (1.7.4)
''சார்ங்கவில் கையனே (சாரங்கபாணி உத்ஸவமூர்த்தி) சப்பாணி (1.7.8)
''கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும்...
அரக்கு வழித்ததோர் கோல் கொண்டுவா (2.6.6)
''குடந்தை கிடந்தாற்கு ஓர் கோல் கொண்டுவா (2.6.6)
''குடந்தை கிடந்த வெம்கோவே ! குருக்கத்திப் பூச்சூட்ட வாராய் (2-7-7)
''ஆராவமுதனைப் பாடிப்பற அயோத்தியர் கோமனை பாடிப்பற (3.9.10)

கண்ணன் வேறல்ல ஆராவமுதன் வேறல்ல கண்ணனாக விபவாவதாரம் செய்த எம்பெருமானே அர்ச்சையில் ஆராவமுதானாக ஸேவை ஸாதிக்கிறான் என்று ஆழ்வார் அகமகிழ்கிறார்.

5. பெரியாழ்வாரின் குமாரத்தியாகிற ஸ்ரீ ஆண்டாளும் திருக்குடந்தை எம்பெருமானாகிற ஆராவமுதனிடம் ஆராத அன்பு கொண்டாள். அவன் திருமேனி சம்பந்தப்பட்ட குளிர்ச்சியான திருத்துழாயைக் கொணர்ந்து தனது மிருதுவான திருக்குழல் கற்றையில் சூட்டித் தன் விரஹகதாபத்தை போக்குமாறு உடன் நின்றோரை வேண்டுகிறாள். கண்ணன் மீது ஆவத காதல் கொண்ட நாச்சியார் அவன் பிரிவை சஹிக்க முடியவில் ... நாச்சியார் திருமொழி 12 பதிகத்தில் தன்னை அவனிடம் கொண்டு சேர்த்து விடும்படி தாய்மார்களையும் தோழிகளையும் வேண்டினாள். அவர்களும் அழைத்துப் போகாமல் நிற்க, விரகதாபம் மிகுந்து, அவன் சம்பந்தப்பட்ட பொருள்களையாவது தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்படி 13வது பதிகத்தில் வேண்டுகிறாள். இல்லாவிட்டால் தான் உயிர்தரிப்பது அரிது என்று அலற்றுகிறாள். முதல் பாசுரத்தில் விபவமாகிய கிருஷ்ணவதாரத்தை அனுபவித்து, இரண்டாம் பாசுரத்தில் ஆராவமுதனின் திருத்துழாயையாவது சேர்ப்பியுங்கோள் என்று வேண்டுகிறாள்.

பாலாலிலை மேல் துயில்கொண்ட பரமன் வலைப்பட்டிருந்தேனை,
வேலால் துன்னம் பெய்தாற் போல் வேண்டிற்றெல்லாம் பேசாதே,
கோலால் நிரைமேய்த்தாயனாய்க் குடந்தைக்கிடந்த குடமாடி,
நீலார் தண்ணந்துழாய் கொண்டென் நெறிமென் குழல் மேல் சூட்டீரே

(நாச்சியார் திருமொழி 13–2)

நாச்சியார் இந்த பாசுரத்தில் ''கண்ணன் ஸர்வலோக ரக்ஷகன். ப்ரளயகாலத்தில் மூவேழ் உலகத்தையும் தன் வயிற்றில் வைத்து, சிறிய ஆலிலையில் கண்துயின்று, காத்தளித்தவன். அவனே பின் ஆயர் குலத்தில் இடையனாக வளர்ந்து, கோலை எடுத்து பசுக்கூட்டங்களை மேய்த்தவன். அவனே இன்று திருக்குடந்தையில் வந்து ஆராவமுதனாக சயனித்துக் கொண்டிருக்கிறான். ஸர்வஸ்மாத் பரனான எம்பெருமான் இன்று பரம சுலபனாக அர்ச்சாமூர்த்தியாகக் காட்சியளிக்கிறான். அவனுடைய சம்பந்தப்பட்டத் திருத்துழாயே எல்லா விதமான துக்கங்களையும் போக்கவல்லது'' என்று ஸாதித்தருளுகிறார்.

6. இனி முதல் ஆழ்வார்களில் நடுவரான ஸ்ரீபூதத்தாழ்வாரின் திருக்குடந்தை அனுபவத்தைக்காண்போம். இவ்வாழ்வார் திருக்குடந்தையைதன்னுடைய இரண்டாம் திருவந்தாதியிலே இரு பாசுரங்களில் மங்களாசாஸனம் செய்துள்ளார்.

பகவானுக்கு உறைவிடம் என்று ஸாதிக்க வந்த ஆழ்வார், க்ஷேத்ரங்களில் தலை சிறந்ததான திருவரங்கம், தஞ்சை திருத்தண்கால், திருமலை, திருப்பாற்கடல், திருக்கடன் மல்லை மற்றும் திருக்கோவிலூர் ஆகிய திவ்யதேசங்களில் உறைவதுடன், உயர்ந்த மதில் சூழ்ந்து விளங்கும் திருக்குடந்தையிலும் உறைகின்றான் என்று தலைக்கட்டுகிறார்.

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளுந் தண்பொருப்பு வேலை – தமருள்ளும்
மாமல்லை கோவில்; மதிள் – குடந்தை யென்பரோ
ஏவல்ல வெந்தைக்கிடம் *(இரண்டாம் திருவந்தாதி – 70)*

இவ்வாழ்வார் மேலும், முதல் ஆழ்வார்கள் சார்பில் பேசுவது போல் ''எங்கள் பெருமான்'' ஆராவமுதனே இமையோர் தலைவன் என்று கூறுகிறார்.

எங்கள் பெருமானிமையோர் தலைமகன் நீ
செங்கண் நெடுமால் திருமார்பா – பொங்கு
படமூக்கினாயிரவாய்ப் பாம்பணை மேல் சேர்ந்தாய்
குடமூக்கில் கோயிலாக் கொண்டு *(இரண்டாம் திருவந்தாதி – 97)*

ஆயிரம் தலை படைத்த ஆதிசேஷன் மேல் ஆராவமுதன் கிடக்கும் அழகை ஆழ்வார் நம் கண் முன் கொண்டு நிறுத்தினார்.

7. முதல் ஆழ்வாரில் கடையரான ஸ்ரீ பேயாழ்வாரும் திருக்குடந்தையை இரண்டு பாசுரங்களால் மங்களாசாசனம் செய்கிறார். திருப்பாற்கடல், திருக்குடந்தை திருமலை தன்னுடைய உள்ளம், பரமபதம், வேதம், ஆதிசேஷன் இவற்றில் எல்லாம் பகவான் நித்யவானம் செய்கிறான் என்கிறார்.

சேர்ந்த திருமால் கடல் குடந்தை வேங்கடம்
நேர்ந்தவென் சிந்தை நிறை விசும்பும் – வாய்ந்த
மறை பாடகமனந்தன் வண்டுழாய்க் கண்ணி
இறைபாடி யாயவிவை. *(மூன்றாம் திருவந்தாதி – 30)*

மேலும் பரம சுலபனான எம்பெருமான் ஸௌசீல்யம் முதலிய குணங்கள் தோன்ற குடிகொண்டுள்ள திவ்ய தேசங்களைக் குறிப்பிடும் போதும், பூமியில் அழகோடு விளங்கும் திருக்குடந்தையையும் குறிப்பிடுகிறார்.

விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாட வேளுக்கை – மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென் கோட்டி
தன் குடந்தை நீரேற்றான் வாழ்வு.

இப்படி பல வகையாலும், ஆழ்வார்கள் எழுவரால் அனுபவித்து மங்களாசாஸனம் செய்யப்பட்ட எம்பெருமான் ஆராவமுதனே. பெருமாளுக்கு ஏற்றமே, அவனது அடியார்களின் போற்றி உகப்பதும், புந்தியில் கொள்வதாலுமே ஏற்படுவது.

ஆழ்வார்களால் மட்டுமன்றி ஆசார்ய ச்ரேஷ்டர்களாலும் மங்களாசாஸனம் செய்யப்பட்டவன் ஆராவமுதன். திருக்குடந்தை தேசிகன் என்று புகழ் பெற்ற ஸ்ரீகோபாலார்ய மஹாதேசிகன் ஆராவமுதனின் வடிவழகில் ஈடுபட்டு, பாதாதி கேசமாய் அனுபவித்து ''அபர்யாப்தாம்ருத த்யாந ஸோபாநம்'' என்ற ஸ்தோத்ரத்தை அருளிச் செய்துள்ளார். இது ஸ்வாமி தேசிகன் திருவரங்கன் மீது பாடிய ''பகவத் த்யான ஸோபானத்தின்'' ரீதியில் அமைந்துள்ளது ரஸிக்கத்தக்கது. அரசாணிப்பாலை ஸ்ரீவேங்கடாத்வரி என்னும் மஹாகவியும் தனது விச்வகுணாதர்சம் என்ற நூலில் எம்பெருமானின் மூல விக்ரஹ ஸேவையையும், சார்ங்கபாணியாக காட்சி தரும் உத்ஸவரையும் போற்றிப் பாடியுள்ளது ரஸகனமானது.

கம்பநாட்டாழ்வாரும், ''மலர்ந்த தண்பூங்குடந்தை'' என்று போற்றிப் பாடியுள்ளார். பிள்ளைப் பெருமாளையங்காரும், நூற்றெட்டு திருப்பதி யந்தாதியில்

''உலகத்தை படைத்து, காத்து, அழிக்கும் ஸர்வ சக்தி படைத்தவன் மற்றும் வாமனாவதாரம் செய்த எம்பெருமான் அவனே திருக்குடந்தையில் சயனத் திருக்கோலத்தில் காட்சி தருகிறான்'' என்று போற்றுகிறார்.

ஸ்வாமி தேசிகனும் திரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் ''திருவாய்மொழி ஐந்தாம் பத்து, எட்டாம் திருமொழிக்கு'' ஆராவமுதன் விஷயமாக ஒரு ச்லோகம் ஸாதித்தருளியிருக்கிறார். எம்பெருமான் தன்னிடம் பக்தி செலுத்துபவர்களை பத்து காரணங்களால் நிரந்தரமாக அடிமை கொள்கிறான் என்று ஸாதிக்கிறார் ஸ்வாமி. அவை 1. எம்பெருமான் ஆராத (தெவிட்டாத) அமுதம், 2. ஸ்வதந்த்ரமாக அவதரிக்கிறான், 3. தன்னிடத்திலேயே மனத்தை வைக்கும்படி செய்கிறான், 4. அளவற்ற புகழை உடையவன், 5. செந்தாமரைக்கண்ணன், 6. நித்யசூரிகளுக்கும் ஸ்வாமி, 7. எல்லாருக்கும் மேற்பட்டவன், 8. தன்னைத் தவிர வேறு உபாயமும், 9. பலனும் இல்லாதவன், 10. பரம ஸுலபன். இப்பேற்பட்ட எம்பெருமான் திருக்குடந்தையில் எழுந்தருளி யிருக்கிறான் என்று வெகு அற்புதமாக ஸாதித்துள்ளார் ஸ்வாமி.

ஸ்வாமி தேசிகனுக்கு திருவேங்கடமலையில் ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீநிவாஸன் சார்ங்கபாணியாக காட்சியளிக்கிறான். ஸ்ரீசார்ங்கபாணி, ஸ்ரீ ஆராவமுதனின் உத்ஸவமூர்த்தி.

சமித விமத பக்ஷா சார்ங்க தந்வானு கம்பா (தயாசதகம் – 106)

இதேப்போல் கச்சிதன்னில் கண்கொடுக்கும் பெருமாளான பேரருளாளனும் ''சார்ங்க தன்வாவாக'' ஸேவை ஸாதிக்கிறான்.

தாவன் ந சேத் த்வமுபகச்சஸி சார்ங்கதந்வா
சக்யம் த்வயா பி நஹி வாரயிதும் கரீச (வரதராஜ பஞ்சாசத் – 38)

இப்படி ஆழ்வார்களாலும், ஆசார்யர்களாலும் பாடப்பட்ட எம்பெருமானாகிற ஸ்ரீஆராவமுதனையும், ஸ்ரீகோமளவல்லித்தாயாரையும் கண்டு அனுபவிப்பதே நாம் கண்களை பெற்றபயன். கும்பகோணம் என்று தற்போது பெயர் பெற்ற திருக்குடந்தையைப் பற்றி சில த்யான ஸ்லோகங்களைக் காண்போம்.

1. **யோ நர: கும்பகோணே பிஸ்மிந்க்ஷணார்ந்த மதிதிஷ்ட்டதி**
கரஸ்த்தம் தத்ர கைவல்யம் கிமுதான்யா விபூதய:

திருக்குடந்தையில் க்ஷணகாலம் இருக்கும் மனிதனுக்கு கைவல்யம் கையகத்தே. பிறகு வேறு ஐஸ்வர்யங்களுக்கு கேட்பானேன்.

2. **த்ரிம்சத்கோடி வஸுருத்ர திவாகராதி**
தேவாதி தேவகண ஸந்தத ஸேவ்யமானம்
அம்போஜ ஸம்பவ சதுர்முக கீயமானம்
வந்தே சயானமிஹ போகிநி சார்ங்கபாணீம்

இந்த்ரன், ருத்ரன், சூரியன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களாலும் நிரந்தரம் ஸேவிக்க படுபவனும் பகவானின் நாபீகமலத்தில் உண்டான சதுர்முக ப்ரம்மாவினால் ஸ்தோத்திரம் செய்யப்படுபவனும், திருக்குடந்தையில் பள்ளி கொண்ட சார்ங்கபாணியை நமஸ்கரிக்கிறேன்.

3. **உத்தான சாயிந முதார கிரீட சூட**
முத்புல்ல பத்ம நயநம் ஸ்யுபதாந பாஹும்
அஜாநு பாஹுமமலம் பணிராஜ தல்பே
சார்ங்கேச மச்யுதமஹம் ப்ரணதோஸ்மி நித்யம்

உத்தான சயனத்தில் இருப்பவனும், மகுடம் தரித்தவனும், மலர்ந்த தாமரைக் கண்களை உடையவனும் தலையணையாக வைக்கப்பட்ட திருக்கரங்களை உடையவனும் நீண்ட புஜங்களை உடையவனும் குற்றமற்றவனும், ஆதிசேஷனாகிற படுக்கையில் பள்ளி கொண்ட பெருமானுமாகிற சார்ங்கராஜனை அனுதினமும் ஸேவிக்கிறேன்.

4. **ஏவம் சார்ங்கதரம் பூஷ்ணும்**
யே ப்ரபந்நா: புராதநம்
ந தேஷாம் யம ஸாலோக்யம்
ந ச தே நர கௌஸல:

இப்படி சார்ங்கராஜனை அடைக்கலம் கொண்டவனுக்கு யம பயமோ, நரக பயமோ கிடையாது. **ஆகவே ஸ்ரீஆராவமுதன் ஒரு தெவிட்டாத அமுதமன்றோ!**

அலையற்ற வாரமுதக்கடல் அக்கடலுண்டமுகில்
விலையற்றநன்மணிவெற்பு வெயில்நிலவோங்குபகல்
துலையுற்றனவென்பர் தூமறைகூடுந்துழாய்முடியாற்கு
இலையொத்தன அவன்பாதம் பணிந்தவர்க்கெண்ணுதற்கே

(அமிருதரஞ்சனி)

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ பாகவத ஸாரம்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் வாஸுதேவாசாரியர் ஸ்வாமி, உத்திரமேரூர்)

ஸ்ரீ பாகவதக் கதையைக் காதால் கேட்டவாறே, ஸ்ரிய: பதியான ஸர்வேஸ்வரன், கேட்பவர்களின் நெஞ்சிலே வந்து சேர்ந்துவிடுகிறான் என்று சொல்லுகிறது ஸ்ரீபாகவதத் தனியன்களில் ஒன்று. ''ஸத்யோ ஹ்ருதி அவருத்யதே அத்ர க்ருதிபி: ஸுஸ்ரூஷுபி: தத்க்ஷணாத்'' என்று அத்தனியனில் வரும் வாக்யம். புராணங்களுள், ஒருவகையாலே, மேலானது ஸ்ரீ பாகவதம். நிறையச்சொல்லுவானேன்? வேதோபநிஷத்துகளின் ஸாரமாகும் ஸ்ரீமத் பாகவதம் என்று சுருக்கமாகக் கூறுவதே போரும்.

ஸ்ரீசுகப்ரஹ்மம் என்பவர் பகவதநுபவமே வடிவெடுத்தவர். புளகாஞ்சித காத்ரராய், கண்ணும் கண்ணீருமாக, தழதழத்த குரலுடன் ஸ்ரீபாகவதக் கதைகளை, அர்ஜுநனின் பேரனான பரீக்ஷித் மஹாராஜனுக்குக் கூறினார். கேட்ட அரசனும், பசிதாஹங்களை மறந்து, அம்ருதம் பருகுமவன் போலக் கேட்டான். பிபந்தம் த்வந்முகாம்போஜ ச்யுதம் ஹரிகதாம்ருதம் என்னும் ஸ்ரீசுகரின் வாக்கும், புனலுமுண்ணலன் என்கிற செவ்வைச் சூடுவாரின் வாக்கும் பகவத் கதை சொல்பவருடையவும் பகவத் கதை கேட்பவருடையவும் லக்ஷணம் கூறப் பிறந்தவை போலும்.

தேரழுந்தூர் ஆண்டவன், ஸ்ரீ இஞ்சி மேட்டு அழகியசிங்கர், ஸ்ரீகோஷ்டீபுரம் ஸௌம்யநாராயணஸார்ய ஸ்வாமி போல்வார் பகவத் கதைகளைச் சொல்லும்போதும், பெருமாளைச் சேவிக்கும்போதும், பார்க்கும் பாக்யம் பெற்றவர்கள், இவர் ஸ்ரீசுகப்ரஹ்மமோ - ஸ்வாமி நம்மாழ்வாரோ என்று எண்ணுவர்.

ஸ்ரீசுகபாகவதத்தை - 12 ஸ்கந்தங்களையும் செவ்வைச்சூடுவார் என்பவர், தமிழ்பாசுரங்களாக பாடி உபகரித்திருக்கிறார். (T.T.D தேவஸ்தானத்தாரைக் கொண்டு, தமிழ்த்தாத்தா என்னப்பெற்ற மகாமஹோபாத்யாய - டாக்டர் உ.வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் அழகான வால்யூம்களாக அச்சிட்டுத்தந்திருக்கிறார். பாசுரங்களின் கீழே, அரும்பத உரையும் கடைசியில் அபிதான விளக்குமும் கொடுத்திருக்கிறார்). செவ்வைச் சூடுவார், சுகபாகவதத்தின் ஸ்லோகங்களை எல்லாம், ரஸம் ஒன்றும் குறையாமே, 12 ஸ்கந்தங்களில்) தமிழ்ப்பாசுரங்களாகச் செய்திருக்கிறார். அந்நூல் மொழி பெயர்ப்பாகத் தெரியாத் ஸ்வதந்தரமான வழி நூலாகவே தோற்றும்.

ஸ்ரீசுகர், வேதங்களாகிற கல்பகதருவினின்று களிதம் பலம் ஸ்ரீபாகவதம் என்றார். இலைமேல் இலையாகக் கீழே உதிர்ந்தது என்பது கருத்து. ''சுழித்து நல்லதொழுகி அம்சுகமும் சேர்ந்து பழுத்து உதிர்ந்தது என்றார் .சுடாதபழம் போலும் ஸ்ரீபாகவதம், இருவர் கருத்திலும்.

ஆக, இவ்வளவால், ஸ்ரீபாகவதம் என்பது புராணங்களில் வைத்துக் கொண்டு , ஸாரமான அமுதம் எனத் தேறுகிறது. ஸ்ரீபாகவதக் கதைகள் பலவற்றுள், இப்போது, கண்ணனின் கதையேயான 10வது ஸ்கந்தத்தின் ஸாரத்தை மாத்ரம் அநுபவிப்போமாக.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில், ஸ்ரீசேனபதியாழ்வானுக்குப் பின், ப்ரதமாச்சார்யனும் ப்ரபந்நஜநஸந்தாந கூடஸ்தருமான ஸ்வாமி நம்மாழ்வார் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திலே ஊன்றியிருப்பர். ''ஸ்ரீ க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம்'' என்று பட்டரால் கொண்டாடப் பெற்றவரிறே அவர். பெரியாழ்வாரும் கண்ணனிடம் ஆராத அன்பு பெற்றவர். ''பிள்ளைத்தமிழ்'' என்று தமிழ் வல்லவர் போற்றும் பிரபந்தம் அருளிச் செய்தாரிறே பெரியாழ்வார். பதின்மர் தம் செல்லத் திருமகளாரான ஸ்ரீ ஆண்டாளும் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஆராத காதலுடையவள். ''க்ருஷ்ணாந்வயேந தததீம் யமுநாநுபாவம்'' என்று நம் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் புகழ்ந்திருக்கிறாறிறே ஸ்ரீ ஆண்டாளின் ஸ்ரீ ஸூக்திகளை, ''பராஶரபாராஶர்யாதிகளும், நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், ஆண்டாளும் க்ருஷ்ணாவதாரத்திலே ஊன்றி இருப்பார்கள்'' என்று வ்யாக்யாந சக்ரவர்த்தியான ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை, திருநெடுந்தாண்டக அவதாரிகையிலே அருளிச் செய்திருக்கிறார்.

இப்படி பூர்வார்கள் எல்லாரும் கண்ணனிடம் ஈடுபடக் காரணங்களுள், ப்ரதாநமானது கண்ணனின் வடிவழகு - கண்ணனின் திவ்ய மங்களவிக்ரஹத்தின் ஸௌந்தர்யம், நித்ய ஸூரிகளும், தெவிட்டாமே, ஆசைப்பட்டு அநுபவிக்கும் கண்ணனின் வடிவழகே ஸ்ரீபாகவத ஸாரம் ஆகும். அறிவு குறைந்தவர்களோடு ஜ்ஞாநாதிகர்களோடு வாசியற எல்லாருக்கும் க்ஷேமத்தையும் ஆநந்தத்தையும் கொடுக்கவல்லதிறே கண்ணனின் ஸௌந்தர்யம்.

நம் ஸ்வாமி தேசிகன், ஸ்வாமி நம்மாழ்வார் முதலான ஆழ்வார்கள் போலே கண்ணனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஆகையாலாயே, 'யாதவாப்யுதயம்' என்னும் க்ஷேமம் தரவல்ல மஹாகாவ்யத்தை, தாம் கவிஸிஹ்மம் என்பதற்குச்சேர கண்ணன் விஷயமாகவே, 24 ஸர்கங்களில் 2640 ஸ்லோகங்களில், செய்தருளினார்.

எம்பெருமானின் திருமேனி அழகை அநுபவித்தவர்களுள் சிலரையும், க்ஷேமம் பெற்றவர்களுள் ஓரிருவரையும் அநுபவிப்போம் இப்போது.

ஸ்ரீக்ருஷ்ணன் ஸ்ரீஜயந்தியன்று அவதரித்தான் வடமதுரையில், கம்ஸனின் காராக்ருஹத்தில் (ஜெயிலில்) அடைபட்டிருந்த தேவகீ - வஸுதேவர்களுக்குப் புத்ரனாக அவதரித்தான், தான் இங்கு ஸர்வேச்வரன் என்று தெரியும்படி அவதரித்தான். இங்கு ஸ்ரீசுகப்ரஹ்மம் சொல்லுவதை அநுபவியுங்கள்.

''தமத்புதம் பாலகம் அம்புஜேக்ஷணம்
சதுர்புஜம் சங்க கதாத்யுதாயுதம்
ஸ்ரீவத்ஸலக்ஷ்மம் களசோபி கௌஸ்துபம்
பீதாம்பரம் ஸாந்த்ரபயோத ஸௌபகம்.
மஹார்ஹவைடூர்ய கிரீடகுண்டல
த்விஷா பரிஷ்வக்த ஸஹஸ்ரகுந்தளம்!
உத்தாம காஞ்ச்யங்கத கங்கணாதிபி:
விரோசமானம் வசுதேவ ஐக்ஷத''

கங்கணங்களுக்கு அழகு செய்யும் நான்கு திருக்கைகள்; சங்கம், சக்ரம், கதை என்னும் திவ்யாயுதங்களின் சேர்த்தி; திருமருமார்பில் ஸ்ரீவத்ஸமருவும், கௌஸ்துபமும்; திருவரையில் பீதாம்பரம்; இடுப்பில் ஜ்வலிக்கின்றது காஞ்சீ என்கிற ஒட்டியாணம்; நீருண்டமேகம் போன்ற நிறம்; வைடூர்யங்கள் கிரீடத்தில்; இருகாதுகளிலும் கடுக்கன்கள்; ஆராவமுதமான திருமுகம்-கண்டுகண்டு இன்பமுற்றனர். பெற்றவர் இருவரும் என்கிறார் ஸ்ரீ ஸுகர். ஸ்ரீபாகவதத்தில் த்ருவன் ஸ்ரிய:பதியைக் கண்டமை இங்கே அநுஸந்திப்போம். அங்கே செவ்வைச் சூடுவாரின் பாசுரம் இதோ-

மண்டலம் நிறைந்த திங்கள் வதனமும் கமலக்கண்ணும்,
குண்டலம் சுடரும் காதும் குறுநகைப்பவள வாயும்,
தண்துழாய் அலங்கல் மார்பும் தடக்கை ஓர் நான்குமாகக்,
கண்டனன் மறையும் காளுக் கரியன் உருவம் அம்மா''

- என்பது அப்பாசுரம். ஸ்ரீ ராமாவதாரத்தைப் பூர்ணவதாரம் என்ற நம் பூர்வர்கள், க்ருஷ்ணவதாரத்தைப் பரிபூர்ணவதாரம் என்றனர். பரிபூர்த்தி என்பது பலவகைகளால்; அவைகளுள் ப்ரதானமானது வடிவழகிலும் சேதனரை உஜ்ஜீவிக்கச் செய்தல் என்பது.

மரங்களும், மாடுகளும், கன்றுகளும், யமுநாஜலமும், கோபிகைகளும், உத்தவரும், அக்ரூரரும், விதுரரும், பழம்விற்பவளும், ததிபாண்டனும், கூனியும், குசேலரும், மாலாகாரரும், பறவைகளும், முனிவர்களும், கண்ணனது வடிவழகில் துவக்குண்டமை ஸ்ரீபாகவதத்தில் தசமஸ்கந்தத்திலும், மற்ற ஸ்கந்தங்களிலும், ப்ரஸித்தம்.

''சங்கிலேடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும்'', கோலநீள் கொடி மூக்கும் தாமரைக் கண்ணும் கனிவாயும், நீலமேனியும் நான்கு தோளும்'' என்று பராங்குசநாயகி, திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகில் ஈடுபட்டமை, ''எங்கனேயோ'' என்னும் திருவாய்மொழியில் ஸ்பஷ்டம். ''வக்த்ரேண ஆவிஸ்மிதேந ஸ்புரத் அபய கதாசங்க சக்ரை: புஜாக்ரை:'' என்று ஸ்ரீபராசரபட்டர், ''கண்ணனை அரங்கமாலை'' என்று திருமாலையில் சொன்ன கண்ணணிடம் ஈடுபட்டார். ''கண்ணன் கரிகரிமேல் நின்றனைத்தும் காக்கின்றானே'' என்பது நம் தூப்புல் பிள்ளையின் வ்யாமோஹம்.

திருக்குடந்தை ஆண்டவன், பெரிய திருமொழியின் அர்த்தங்களை நிர்வஹிக்கும் போது, ஒருருவில், சாதித்தருளினபடி கேண்மின். 'திருமங்கை ஆழ்வார்

எம்பெருமானுடைய வடிவழகிலே தோற்றவர். அவனுடைய ஆத்ம குணங்களில் அதிகம் கண்சென்றதில்லை அவருக்கு; விக்ரஹ-திரு-மேனி குணங்களாகிற ஸௌந்தர்யம், ஸௌகுமார்யம் இவைகளிலேயே ஆராத காதல் கொண்டவர். பதரிகாஸ்ரமம் தொடங்கித்திருக்கண்ணமங்கை அளவான திவ்யதேங்களிலே எம்பெருமானைக் கண்டுகளித்தவர் அவர். திருக்கண்ணபுரத்திலே சௌரிராஜப் பெருமாளின் வடிவழகைக் கண்டார். அவ்வழகின் பரிபூர்த்தியினை அநுபவிக்க இழிந்த அவ்வாழ்வார், ''பண்டிவரை கண்டறி தெவ்வூரில் யாமென்றே பயில்கின்றாளால், கண்டவர் தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ'' என்று இப்பெருமானை இதுவரை நான் கண்டதில்லை என்று பரகாலநாயகீ கூறினதற்கு, வடிவழகு படுத்தும் பாடு அது என்று சாதித்தார் ஸ்ரீமத் ஆண்டவன். ஆகையாலேயே, திருமங்கை ஆழ்வாரை, பகவத்விஷயத்தில் தேஹாத்மவாதியாக ரஹஸ்யத்ரயஸாரத்தில் நிரூபணம்பண்ணி ஸ்ரீதேசிக திவ்யஸூக்தியின் ரஸம் ஸதாநுபாவ்யம்.

ராமாயணத்தில், ''வாத்ஸல்யம்'' என்னும் கல்யாணகுணம் ஸாரமாவதுபோலவும், மஹாபாரதத்தில் 'ஆஸ்ரிதவ்யாமோஹம்' என்னும் மஹாகுணம் ஸாரமாவதுபோலவும், ஸ்ரீபாகவதத்தில், விக்ரஹசௌந்தர்யம் என்கிற வடிவழகுடைமை என்னும் திவ்யகுணம் ஸாரமாகும் என்ப நம்பூர்வர்கள்.

கண்ணனின் திருமேனி ஒளி தம்மேலே பட்டவாறே, வெயிலால் வெம்பிய மரங்களும் பச்சென்று ஆகிவிட்டன என்னும் வரலாறு ஸ்ரீபாகவதத்தில் ''அவிரொளி தவழும் தோறும் பசுங்குழை குழைத்த போலும்' பான்மையில் சிறந்த மாதோ'' என்று பேசப்பட்டது.

இன்னுமொரு சரிதம் திருவாய்ப்பாடியில் கண்ணன் வளர்ந்துவந்த காலம். யாரும் வீட்டில் இல்லை. கண்ணன் தனிகிடந்தான். வீட்டின் பின்புறமாக, 'பிரம்பம்பழமோ பிரம்பம்பழம்' என்று ஒரு கிழவியின் குரல் காதில் விழுந்தது அவனுக்கு. அவனுக்கோ காட்டுப்பழத்தில் அளவு மீறின ஆசை. அவளோ அரிசிக்குத்தான் பழம்கொடுப்பள். தன்கைகளிரண்டாலும் சிறு பிள்ளை கண்ணன் பானையிலிருந்து அரிசியை எடுத்தான். நடந்தான் கொல்லைப்புறம். பழத்திலேயே நினைவெல்லாம். விரல்களின் இடுக்கின்வழியாக அரிசி சிந்திக்கொண்டே போவதை அவன் அறியவில்லை. பழம்விற்பவளிடம் தன்கைகளிரண்டையும் நீட்டினான். இதோ அரிசி; பழம் தா என்றான். அந்தக்கிழவி அரிசியைக் காணவில்லை. சங்கசக்ர ரேகைகள் உள்ள கண்ணனின் கைகளின் அழகைக் கண்டாள்; பழங்களுடன் தன்னையே அர்ப்பணித்தாள். வடிவழகு ப்ரபத்தியைப்பண்ணச் செய்துவிட்டது போலும்!

''ஆரண்யகாநாம் ப்ரபவ: பலாநாம் அரண்யஜாதாநி பலாநி அபீப்ஸந்।
விஸ்ரம்ஸஸி தாந்யாஞ்ஜலிநா கரேண வ்யாதாத்மஜாம் விஸ்வபதி: ஸிஷேவே॥
தாம்ரோதரம் தஸ்யகராரவிந்தம் விலோகயந்த்யா:
பலவிக்ரயிண்யா: விக்ரேதும் ஆத்மாநம் அபூத் விமர்ஶ:॥

(ஆத்மாவை விக்ரயணம் பண்ண எண்ணினாள்) தஞ்சப் பரகதியைத் தந்தருளும் நம் தூப்புல் மாபூருடன் ஸ்ரீபாகவதக் கதையின் ரஹஸ்யங்களை யாதவாய்யுதயமாகிற லலிதமான காவ்யத்திலே காட்டியருளும் அழகே அழகு!

இங்கே ஆகரம் (இருக்கும் இடம்) தெரியாத ஒரு அத்புதமான ஸ்லோகத்தை, ஸ்ரீமத் ஆண்டவனின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மலரைப் பெறவும், வாசித்து ரஸிக்கவும் பாக்யம் பெற்ற நல்லோருக்கு உபஹரிக்கிறேன். அநுபவியுங்கள்-

''மௌளௌள கேகிசிகண்டிநீ - திரு முடியிலே கருங்கள்தோகை மயில்பீலி.
மதுரிமாதாரா (அ)தரே வம்ஸி நீ -தேன்சிந்தும் திருவதரத்திலே புல்லாங்குழல்
பீநாம்ஸே வநமாலிநீ - சுந்தரத்திருத்தோளில் வநமாலை
ஹ்ருதில்ஸத் காருண்ய கல் லோலிநீ-அவன் தன் நெஞ்சில் அலையெறியும் கருணை
ஸ்ரோண்யாம் பீததுகூலிநீ–திருவரையில் கட்டிநன்குருத்த பீதாம்பரம்.
சரணயோ: வ்யத்யஸ்தவிந்யாஸிநீ – திருவடிகளை மாற்றி அமைத்துக் கொண்டு நின்றருளும் கம்பீரமான நிலை.
லீலா காசந மோஹிநீ விஜயதே ப்ருந்தாவநவாஸிநீ– ப்ருந்தாவனத்தில் லீலாரஸமனுபவிக்கும்–ரஸம் தரும்–ஒப்பற்ற ஜகத்மோஹநக் கண்ணனின் வடிவழகு.

''நின்வடிவழகு மறவாதார் பிறவாதாரே'', 'ப்ரத்யங்கபூர்ண ஸுஷமா ஸுபகம் வபுஸ்தே '' என்று திருவயிந்திரபுரத்திலும், அஸ்ப்ருஷ்ட சிந்தாபதம் ஆபரூப்யம் என்று காஞ்சியிலும் எம்பெருமானின் வடிவழகிலே ஆழங்கால் படுகையே யாத்ரையாகக் கொண்டிருந்த நம் ஆசார்ய ஸார்வ பௌமனை நினைப்போமாக.

ஆக கண்ணனின் வடிவழகுடைமை என்பது ஸ்ரீபாகவதத்தின் ஸாரம் எனத் தேறுகிறது. ஸர்வ ஸாஸ்த்ரங்களிலும் நல்ல ப்ரவேஸமுடையராய், ஆண்டவன் ஆஸ்ரமபரிபாலநைகதக்ஷியுடன் துஸ்ஸகமான ஸர்வஸங்க பரித்யாகம் பண்ணியுடன் ஸ்ரீமதாண்டவனை எழுந்தருளி இருக்கும் ஆசார்ய ஸார்வபௌமனுடனும், ஆஸ்ரமகைங்கர்யை ப்ரயோஜநரான ஸ்ரீகார்யம் முதலான கைங்கர்யபரர்களுடனும், அடியோமோடும் பிரிவின்றி பல்லாண்டு பல்லாண்டு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

மாதவத்தில்-மாதவன்

ஸ்ரீமதுபயவே. வித்வான் கமலாபுரம்
(வை)ஸந்தான கோபாலாச்சார்யர் ஸ்வாமி

''யுவ மாதவத்தில் யுவா மாதவன் (மஹா தபஸ்வீ) ஸ்ரீகீதாசார்யன் ''யதா யதாஹி தர்மஸ்ய ஆத்மாநம் ஸ்ருஜாமி என்றருளினன். எவ்வெப்போது தர்மம் வாடி அதர்மம் தலைதூக்குகிறதோ அவ்வப்போது ஆத்மாநம் ஸ்ருஜாமி தான் அவதரிப்பதாக பேசுகிறான் என்றல்லாமல், ஆத்ம சப்தம் ஜனாநீத்வாத்மைவமே மதம், என்று ஆத்ம சப்தத்தால் ஞானிகளை விளிப்பதால் இனி தான் அவதரிக்காமல் ஞானிகளை ஆசார்யர்களை அவதரிக்கச் செய்கிறேன் என்று ஆசார்யவதார பரமாக பெரியோர்கள் கூறுவதால் இது ஆசார்யாவதார விஷயம் பகவான் அவதரித்து யாரும் திருந்தவில்லை '' அவ ஜாநந்திமாம் மூடா:'' என்றபடியால் ஸர்வேச்வரன் பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஒர் தசாவதாரத்தைப் பண்ணி'' என்றபடியும் ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரவிஷயம். இப்பேர்ப்பட்ட ஆசார்யர்களின் சித்திரை மாத ஆதிரையில் ஸ்ரீ எம்பெருமானரும் அடுத்த வைகாசியில் ப்ரக்ருதம் ஸ்ரீ ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனையும் எம்பெருமானருக்கு அடுத்தபடியாக எம்பெருமான் அவதரிக்கச் செய்துள்ளான்.

இந்த சித்திரை வைகாசி மாதங்களுக்கு வேதத்தில் மதுமாதவ மாஸங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. மது மாஸமான சைத்ரம் சித்திரையில், ஸ்ரீராமனும் ஸ்ரீராமனுஜனை இளைய பெருமாளும் ராமானுஜனை இளையாழ்வாரும் அவதரித்தனர். மாதவ மாஸமான வைசாகத்தில் வைகாசியில், ஸ்ரீந்ருஸிம்ஹனும் மாதவத்தோனக பெரும் தபஸ்வியான ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனும் அவதரித்தார்கள். (சில சமயம் சைத்ரம் சித்திரை வைகாசி விசாகம் கலந்தே வரும் -பாவ (பவ) வருஷம் 4★5 நாள் வித்யாசத்தில் கலந்தே வந்தது. ஆகையால் தான் பவ வருஷ வைகாசி திருவாதிரையிலிருந்தே ஸ்ரீமதாண்டவனின் ஷஷ்டி யப்த பூர்த்தி விழா கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது. இப்படி ஆசார்யார்களுடைய அவதாரத்தாலேயே ஆதிரை திருவாதிரையாக ஆச்சுது.

ஓணம் திருவோணம் ஆனது மாதிரி. அபிஜித் நக்ஷத்ரத்துடன் சேர்ந்து 28 நக்ஷத்ரங்களில் திருக்கலந்த நக்ஷத்ரம் இவை இரண்டே தான். ஆத்மைச்வர்யமான பகவத் கைங்கர்யரூபமான ஐச்வர்யத்தை அளிக்கவல்லவை. ஓணத்தில்

பகவானின் அநேக அவதாரமும் ஸ்வாமி தேசிகன் பிள்ளை லோகாசார்யார் முதலான ஆசார்யாளின் அவதாரமும் ஏற்பட்டது. ஆதிரையானது சிவன் நக்ஷத்ரமாஞலும் ''ஆர்த்ரயா ருத்ர: ப்ரதமாநமேதி'' என்று வேதம் கூறிஞலும் வேதத்தில் ஒவ்வொரு அக்ஷரமும் ''தாவந்தி ஹரி நாமானி'' என்று கொண்டாடப்பட்டதாலும் ஸஹஸ்ரநாமத்தில் ருத்ரேத பஹுஸிரா: என்ற இடத்தில் சங்கரர் பராசரபட்டர் இருவரும் ருத்ர சப்தத்தை விஷ்ணு பரமாகவே வ்யாக்யானம் செய்திருப்பதால் இது பகவந்நக்ஷத்ரமே அல்லது சிவ பரமாத்மாவை வைத்து ருத்ரசப்தத்தைப் பேசிஞலும் ''வஷ்ணவாராம் யதா சம்பு:'' என்றபடி பாகவதோத்தமஞன சிவனை தேவதையாக கொண்டதாக சொன்ஞலும் பரவாயில்லை. ஸ்ரீ உடையவர் ஸ்வீகரித்த நக்ஷத்ரம் ''ராமாநுஜௌ யாமுனதீர்த்த ஸேவா பராவுதீதௌ நரகம் நிரோத்தும் !தயோ: புராண: ப்ரணிநாய கீதாம் தஸ்யா நவீநஸ்து ததான டீகாம்'' என்று வேங்கடாத்வரி கூறியபடி யமுஞதீர்த்தத்தை அவகாஹித்து ஜலக்ரீடாதிகள் செய்த கண்ணனும் பலராமனுக்கு தம்பியாகையால் ராமானுஜன், யாமுஞசார்யாரான ஆள்வந்தார் திருவடிகளை ஆச்ரயித்த எம்பெருமாஞரும் ஒரு ராமானுஜர், இரண்டு ராமானஜுர்களும் நரகத்தை நிரசனம் செய்ய அவதரித்தவர்கள். நரகாசுரனை நிரசித்த புராண ராமானுஜன் கண்ணன், நமக்கும் நரகத்தை நிரஸிக்க கீதையை அருளிச் செய்தான். நவீந ராமானுஜன் அதற்கு டீகையை பாஷ்யத்தை அருளிச் செய்தார். அதற்கு தாத்பர்ய சந்திரிகை அருளிய ஸ்வாமி தேசிகனும் ஓர் ராமானுஜனே.

வெங்கடாசல மாகாத்ம்யத்தில் 'க்ருஷ்ணன்'' என்ற பிராம்ஹ ணோத்தமனே வேதாந்த தேசிகனாக அவதரித்ததாக சொல்லப்பட்டுள்ளது. இதஞல் தயாசதகத்தில் தேசிகனும் ''வேதாந்த தேசிக பதே விநிவேக்ய பாலம்'' என்றும் கூறுகிறபடியாலும் ''க்ருஷ்ணக்யவிப்ர வேதாந்த தேஸிகத்வப்ரதாய என்று திருவேங்கடமுடையானும் ஒரு நாமாவளியை ஸ்வீகரிப்பதாலும் மாகாத்ம்யத்தில் அஸௌ ஜந்மாந்தரே சாஜந்த்ரய்யந்தார்த்த ப்ரவர்த்தக:'' என்று இருப்பதாலும் தேசிகனும் க்ருஷ்ணனெனபடியால் ராமானுஜனே. ராமானுஜ பாஷ்யத்துக்கு தாத்பர்யசந்திரிகை அருளியபடி ''யதீந்த்ராம் சோதவேத்யோ'' என்றபடியும் இராமானுஜனே அந்த ராமானுஜனுக்கு ஆசார்யனும் ஆத்ரேய ராமானுஜனே - இப்படி லக்ஷ்மணன் ராமானுஜன், கண்ணன் 2வது ராமானுஜன் 3வது ராமானுஜன் உடையவர் 4வது கிடாம்பி ஆத்ரேய ராமானுஜன் 5வது ராமானுஜன் ஸ்வாமி தேசிகன் -6வது ராமானுஜனை, ஸ்வாமி தேசிகனைகவும் திருவரங்கத்தில் ஷஷ்டியப்த பூர்த்தி விழா அனுபவிக்கிறபடியால் ஸ்ரீரங்கராமானுஜ மகாதேசிகனை திரு (ஸ்ரீ) முஷ்ணத்தில் மாதவமாசத்தில், மாதவத்தோனை திருவாதிரையில் அவதரித்தபடி.

பூர்வாச்ரமத்தில் ஸ்ரீமுஷ்ணம் பூவராஹப் பெருமானுடைய திருநாமத் தையேதரித்து அவதரித்தபடியும் ஸ்ரீமுஷ்ணத்தை வேங்கடாத்வரி ''ஸ்ரீமுஷ்ணம் யந்முஷ்ணதம் ஹஸ்ஸஹஸ்ரம்'' என்று ஸ்ரீமுஷ்ணக்ஷேத்ரம் அநேககோடி

பாபங்களை எல்லாம் ஒழித்து விடுவதால் பாபங்களை திருடுகின்றது. ஏனென்றால் பூவராஹன் தான் கண்ணனாக அவதரித்தபடி. வேதம் ''உத்ருதாஸி வராஹேண க்ருஷ்ணேர சதாஹ்னா'' அநேக ஆயிரம் திருக்கைகள் கொண்ட ''கிருஷ்ணன்'' என்ற வராஹனால் பூமி உத்தரிக்கப்பட்டவள் என்றபடி. இங்கு க்ருஷ்ணன் என்பது கறுப்பு என்ற அர்த்தமில்லை அவன் ச்வேதவராஹன் வெளுத்தவன். க்ருஷ்ணன் என்பது கண்ணனே. ஏனென்றால், ''பாசி துர்ந்து கிடந்த பார்மகட்கு பண்டொறுநாள் என்ற பாசுரப்படியும் வேதம் ''ஆபோ வா இதமக்ரே ஸலீலமாஸீத் தேந ப்ரஜாபதிரச்ராம்யத் '' என்று ஆரம்பித்து '' ஸ வராஹோ பூத்வா உதந்யமஜ்ஜத் ஸ ப்ருதிவீமத்யார்ச்சத். மற்றும் தத் பூம்யை பூமித்வம்'' என்று பல வாக்யங்களால் ப்ரளயத்தில் அமிழ்ந்த போன பூமியை உத்தரிக்க பூவராஹக் கதையை பரக்கப் பேசியுள்ளது.

அந்த பூவராஹன் தான் ஸகல பாபங்களையும் அபஹரித்து தன்னிடம் சேருவதற்கு ஸூகர(வராஹம்) அவதாரத்தில் ஸுகரமான உபாயமான (வராஹ) சரமச்லோகத்தை முதலில் உபதேசித்து ''ஞானப்பிரான்'' என்ற திருநாமத்தைப் பூண்டபடி ''எயிற்றிடை மண்கொண்ட எந்தை இராப்பகல் எம்மை ஓதுவித்து'' என்றபடி சரணாகதி சாஸ்த்ரத்திற்கு முதல் ப்ரவர்த்தகன் ஆனபடி, ஆண்டாள் மானமில்லப் பன்றியாம் என்றபடி ''மஹாவராஹ: அளவுகடந்தவன் என்றபடியும், ஆனால் எல்லோரும் ''பன்றி, வராஹம் என்பதை சேற்றில் அசுத்தத்தில் புரளும் இந்தயன்றி என்று சிலர் ப்ரமித்து பேசுகிறார்கள். அவன் மஹாவராஹம் த்ரிககுத் என்று முதுகில் மூன்று திமில்கள்(மேடுகளை) கொண்டவன், ''ஏகச்ருங்க: என்று தலை மீது ஒரு கொம்பு கொண்டவன்'' என்ற வர்ணிக்கிறபடியால்-இந்த அசுத்த பன்றியல்ல. ''காண்டாமிருகம்'' என்று சொல்லப்படும் ம்ருகமே மஹாவராஹம், அதற்குத் தான் கொம்பு உண்டு -பார்க்குகளில் பார்க்கலாம். சுத்தமான தண்ணீரிலேயே கிடக்கும் அதற்குத்தான் 3 திமில் உண்டு. பூமியில் கிடக்காது. அதற்குத் தான் கோணாரவை குர்க்குரை என்று குர்குரத்வனி ஜாஸ்தி உண்டு. இப்படி ஸூகர அவதாரத்தில் ஸுகர உபாயமான சரமச்லோகத்தை உபதேசித்து பிறகு நரசிம்ஹாவதாரத்திலும் ஒரு சரமச்லோகம் ''ஸத்யம் ப்ரவீமி மனுஜா:, '' என்று ஆரம்பித்து ''பாஷாணகாஷ்ட்டஸத்ருபாய ததாமி முக்திம்'' என்றும் பிறகு ராமனாக ''பித்ரபாவேந'' என்ற சரமசுலோகமும் உபதேசித்து கண்ணனாக ஸர்வதர்மான் என்ற சரம ச்லோகத்தையும் உபதேசித்து வராஹனில் ஆரம்பித்து கண்ணனில் தலைக்கட்டுகிறார். இதனால் தான் ஸ்வாமி தேசிகனும் தசாவதார ஸ்தோத்ரத்தில் வராஹனை ''கோபாயேத் அநிசம் .... ''என்ற சுலோகத்தில் குறிப்பிட்டு பாபக் கூட்டத்திலிருந்து ரக்ஷிக்க வேண்டும் என்றும் அல்லது ''கோபாயேத் கோபவத் ஆசரேத்'' இந்த வராஹனே கோபாலனாக ஆசரித்தால் தேவலை என்றபடி ''கோபாய கோபாயதே '' கோபாலனாக ஆசரித்து ரக்ஷிக்கிறான் என்று சுலோகத்தில் பேசினார்.

இப்படி சரணாகதி என்ற ஸுலப உபாயத்தை கண்ணன் வரை கடைபிடித்து உபதேசித்தும் சிலரே திருந்தினார்கள். இதனால் முதலில் உபதேசித்த பூவராஹனுடைய குறை தீரும்படி அநேக ஆயிரம் ஜீவர்களை சரணாகதியால் உஜ்ஜீவிக்கச் செய்யவே அதே ஸ்ரீமுஷ்ணத்தில் பாபங்களை திருடும் க்ஷேத்ரத்தில் அதே பூவராஹனின் திருநாமத்தை பூண்டு அவதரித்த ஸ்வாமி இதை அநேக கோடி ப்ரஜைகளை உஜ்ஜீவிக்கச் செய்ய ''நாதனே.... பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்யம் செய்தனவே'' எனது பெரியாழ்வார் பாடிய படியும்

ஸந்த: ஸ்ரீரங்கப்ருத்வீபம சரணத்ராண பேஷகரா:
ஜயந்தி புவனத்ராண பதபங்கஜரேணவ:

ரங்கனுதனுடைய பாதுகைகளை சிரஸ்ஸில் சூடிய பெரியோர்களுடைய திருவடி தூளிகள் ஜகத்தை ரக்ஷிக்கக்கூடிய வல்லமை கொண்டபடி ஜயிக்கிறார்கள் என்று பாதுகைகளை எப்போதும் சேவிக்கும் பாதசாரிகளாகவே ஸஞ்சரிக்கும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம பரம்பரையில் உபநிஷத்பாஷ்யகாரருடைய திருநாமத்தையும் சேர்த்து வஹிக்கும்படி ஸ்ரீராமானுஜ மகாதேசிகனாக மாறி அவதாரித்தபடி சித்திரை திருவாதிரையில் அவதரித்த அந்த ராமானுஜனே தனக்கு அடுத்தபடி ஸம்ப்ரதாயத்தை வளர்க்க அடுத்த வைகாசி திருவாதிரையிலேயே இம்மஹானை அவதரிக்கச் செய்தப்படி. அதிலும் யுவ வருஷத்தில் அவதரித்து யுவாவாக விளங்குகிறபடி மாதவமாசமல்லவா. மாதவன் நித்யயுவா அல்லவா! ''வேதம்'' யுவாஸுவாஸா: என்றும் பரப்ரஹ்மத்தை யுவா குமார: என்று நித்யயுவாவாக வர்ணித்தபடி ஆழ்வாரும் ''கடுவினை களையலாகும் காமனை பயந்த காளை'' என்று அனந்தபத்ம நாபனை பாடினார்.

''மன்மதனைப் பெற்ற இளைஞன்'' புத்ரனான மன்மதனுக்கு கிழத்தனம் வந்துவிட்டது தகப்பனான பத்மனாபன் இளைஞனாகவே இருக்கிறார் என்றபடி ''பகவானுக்கு நித்யம் யுவத்வேமே'' இவனை அனுபவிப்போரும் அப்படியே தசரதன் ''அஹம் புநர் தேவ குமாரரூபம் பவாமி த்ருஷ்ட்வாச புநர் யுவேவ'' அலங்கரித்து நடந்து வரும் அழகனாய் 25 வயதே நிறைந்து யுவாவான ராமனை அனுபவித்து 60 ஆயிரம் வயதான நான் யுவா (இளைஞனாக) மாதிரி ஆகிறேன் என்றும் வஸுதேவனும் கம்ஸனுடைய மல்லரங்கத்தில் நிற்கும் இளங்குமாரனான சின்னி க்ருஷ்ணனை அனுபவித்து ''யுவே வஸுதேவோ பூத் விஹாயாப்யாகதாம் ஜுஷாம்'' என்று (வி – புராண) வசுதேவன் க்ருஷ்ணனை பார்த்து கிழத்தனத்தை விட்டு யுவா மாதிரி ஆனான் என்றும், பீஷ்ம பிதாமஹனும் அந்திமதசையில் வி–ஸஹஸ்ரநாம உபதேச சமயத்தில் யுவேவாஸ்மி ஸம்வ்ருத்த: த்வதநுத்யாநப்ரும்ஹித: என்று கண்ணனை நோக்கி உன் த்யானத்தால் யுவாமாதிரி ஆகிறேன் என்று ''இவ'' என்ற சப்தம் நோக்கத்தக்கது ''ஏவ'' என்று இல்லாமல் நம் ஸம்பிரதாயப்படி ''நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம் உபைதி'' என்று பகவத்தர்மத்தை அடைகிறான் குணத்தில் ஸாம்யம். இதே மாதிரி நம்

ஸ்ரீமாதாண்டவனும் ''பாண்டித்யம் நிர்வித்ய பால்யயேந திஷ்ட்டாஸேத்'' என்றபடி நித்யம் யவத்வ தர்மத்திலேயே த்ருடமாக இருந்து ''யுவாஸ்யாத் ஸாது யுவாத்யாயக:'' என்று உபதேசிக்கும் ஆசார்யன் வித்யைக்கு கிழத்தனம் வராமல் இதில் மங்காமல் இருந்து சரீரத்திலும் யுவா மாதிரித்ருடனாக இருந்து உபதேசிக்க வேணும் என்றபடி ஆசார்யன் அரோக திடகாத்ரனாக இருக்க வேணும் ''ஆசார்யன் சிச்சன் ஆருயிரைப் பேணுமவன் தேசாரும் சிச்சன் அவசீர் வடிவை'' என்று மணவாள மாமுனிகள் கூறியபடி நித்யம் அரோகதிடகாத்ரராய் இருக்கும்படி யுவாமாதிரியே இருக்கும்படிக்கே யுவ வருஷ மாதவ மாசத்தில் அவதரித்த மாதவனாகவே (மஹாதபஸ்வீ) நாமும் உபாசித்து பல்லாண்டு பாடவேணும்.

மற்றும் பாண்டித்யம் பகுமுகமான கௌதமனின் வைசேஷிக ந்யாய சாஸ்த்ரத்தில் மிகமிக ஆழ்ந்த பாண்டித்யத்துடன் பரமகவி பரமரசிகர் மற்றும் ஸம்ஸ்க்ருதத்துடன் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி – ஆங்கிலம் இப்படிப் பல பாஷைகளில் எழுதப்படிக்க பேசவும் உத்தம ஞானம், இது தவிர ஆயுர்வேதம் ஜோதிஷம் மூலிகை மருந்து உத்தம சங்கீதம் சங்கீதத்தில் பலக்ருதிகளும் செய்து அழகாக மதுரமாய் பாடும் யோக்யதையும் உண்டு ''ஞானப்பிரானல்லவா''!

ஹைதராபாத் நகர சம்பந்தமான ஒரு நகரத்தில் ஸம்ஸ்க்ருத பண்டிதராய் தார்க்கி ஸ்தானத்தை அலங்கரித்து (பூர்வாச்ரமத்தில்) தெலுங்கு பாஷையில் பாட ப்ரவசனம் செய்து வந்தபடி. ஆகையால் எல்லா ராஷ்ட்ரங்களிலும் சந்தித்து அந்தந்த தேச பாஷையில் உபதேசித்து உபந்யசித்து எல்லோரையும் ஆகர்ஷிக்கும் சக்தி வாய்ந்தபடியால் சீக்கிரம் ஹைதாரபாத்திலும் எழுந்தருளி ஹைதராபாத்திற்கு இந்த யுவருஷத்தில் திருப்பாவை ப்ரவசனம் செய்யும்படியும் இருக்கும் என்று ஸ்ரீமாதவாசார்யர் (ஸ்ரீகார்யம்) ஸ்வாமி சாதித்தார். இந்த பாக்யம் பாக்ய நகரவாசிகளுக்கு கிட்ட வேணும்.

மற்றும் சித்திரை திருவாதிரையில் அவதரித்த உடையவர் ''ஸ்ரீரங்கம் கிரிசைலம் ..... ரமதே ராமாநுஜோயம் முநி:'' எனது ஆஸேது ஹிமாசலம் பாதஸஞ்சாரத்தால் புனிதமாக்கிய படி இந்த மாதவமாத ஆதிரையில் அவதரித்த ஸ்ரீமதாண்டவனும் தன் திருவடிதூணியில் புனிதமாக்கும்படி ஸஞ்சரிக்க வேணும். பாஷ்யகாரர் பிக்ஷாப்ரயண ஸமயத்தில் ''பிக்ஷாபாத்ர விசுத்யர்த்தம் அவமுச்யாப்யுபாந ஹௌ'' திருவடி நிலைகளை விடுவித்துக் கொண்டு திருவடிகளை மாத்ரம் பதியவைத்து நடக்கும் போது ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடி (உள்ளங் கால்களில்) உள்ள பத்ம-மகராசி அநேக உத்தமலக்ஷண ரேகைகள் பூமியில் பதியும்போது பூமி இப்பேர்ப்பட்ட ரேகை முத்ரணம் செய்யப்பட்டு அழகாக ப்ரகாசிக்கிறாள் – (ஸ்த்ரீகளுக்கு அலங்காரமாக பத்ம மகராதி ரேகைகள் இடுவது வழக்கம்) இப்படி எம்பெருமானாருடைய திருவடிரேகைகள் பதிவதால் இது ஒரு முத்ராதாரணம் (ஸமாச்ரயணம்) இதனால்

துஷ்டஜனங்களையும் வகிப்பதால் பூமிக்கு ஏற்பட்ட பாபங்கள் போய் புண்யவதீ ஆகிறாள். இப்படி இப்பேர்ப்பட்ட புண்யபூமியினுடைய பாஷ்ய காரருடைய ரேகைகள் கொண்ட திருவடிதூளிகள் பரமாகாசம் வரைவியாபித்து நித்ய சூரிகளும் சிரஸ்ஸில் தங்களுக்கு ரக்ஷகமாக தரித்துக் கொள்ளும்படியான தூளிகளை பரப்பிய ஸ்வயம் திருவடிகள் பிக்ஷா ஸஞ்சாரகாலத்தில் ஏற்படுத்துகின்றன. ''ஆழ்வாரும் நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுமாகிய பாததூளி படுதலால் இவ்வுலகம் பாக்யம் செய்தனவே '' என்றபடி ''ஜயந்தி புவநத்ராண பதமிங்கஜரேணவ: என்ற படியும் ஹரிபக்தி ஸுதோய க்ரந்ததில் ப்ரஹ்லாத சரித்ர வர்ணனையில் ப்ரஹ்லாதனை மலையிலிருந்து கீழே தள்ளியதும் பூமிதேவி தாங்கி எடுத்துக் காப்பாற்றும் தருணத்தில் பூதேவி வாக்யம்ய ''ப்ரஹ்லாத புஷ்யஸி'' என்று ஆரம்ப சில சுலோகங்களில் முக்யமாக '' ப்ரக்ஷாள்ய மாநாபி நதிஸஹஸ்ரை: ததா ந துஷ்யாமி '' என் மேல் அநேக ஆயிரம் நதிகள் ஓடி அவைகளினால் நான் நனைக்கப்பட்டும் எனக்கு சந்தோஷமில்லை சுத்தி ஏற்படவில்லை. ''ப்ரக்ஷாள்யாமாநாபி நதீஸஹஸ்ரை: ததா ந துஷ்யாமி பவித்ரதோயை:. உன்போன்ற பாகவதோத்தமார்களின் திருவடிதூளிகளால் பரிசுத்தியடைகிறேன் இரண்டு மூன்று அடிவைப்புகளாலேயே ஸகலத்தையும் பரிசுத்தமாக்குகிறார்கள் என்றபடியும் அதே இடத்தில் மற்றும் பூமி கூறுகிறாள்

''ஸக்தி: புரா யக்ஞவராஹ ஸங்காத் திவ்யாஸ்தி ஸாது சிராபிபூதா

த்வத் ஸ்பர்ஸ ஸநாத் அத்ய புநர்நவா பூத் பர்தும் ஸமர்த்தாஸ்மி அதலோக கோடிம்''

ஏற்கனவே வராஹபகவானாலே உத்தரிக்கப்பட்டு யஞ்ஞவராஹ ஸங்கத்தால் லோகங்களை தாங்கும் சக்தி கொண்டேன் அது ரொம்பநாள் முன் ஏற்பட்டது சிதிலமாகியது மறுபடி ஜீர்ணோத்தாரண ஸம்ப்ரோக்ஷணம் போல் மறு சக்தி துஷ்டர்களை வகிப்பதால் க்ஷீணமடைய ப்ரஹ்லாத பாகவதோத்தமான உன்னுடைய பாதஸ் பர்சத்தால் மறுபடி மறு சக்தி புதிதாக்கப் பட்டதால் புதிதாகவும் புனிதமாக்கவும் பட்டதால் இனி அநேக கோடி லோகங்களையும் சுமப்பதற்கு பரிப்பதற்கு 'ஸமர்த்ததா' ஸமர்த்தையாக ஆகிறேன் என்று பூதேவி கூறியபடி. அதே பூவராஹக்ஷேத்ரமான ஸ்ரீமுஷ்ணத்தில் என்று கீழே கூறியபடி அவதரித்து பூர்வாசரமத்தில் அதே திருநாமம் பூண்டு இப்போது நம் பாஷ்யகாரர் உபநிஷத்பா ஷ்யகாரர் இவர்களுடைய திருநாமமாக ஸ்ரீ ரங்கராமானுஜமஹா தேசிகனுடைய திருவடிதூளிகளால் பாரததேசம் பூரா பரிசுத்தமாக்கப்பட வேண்டும். ஆனால் திருவடிகளில் பாதுகைகளுடன் ஸஞ்சாரமானாலும் பதங்களுக்கும் பாதுகைகளுக்கும் அபேதம் என்பது ஸ்வாமி தேசிகனின் ஸித்தாந்தம் ''பாதுகாஸஹஸ்ரத்தில் ''பரதாச்வஸநேஷு பாதசப்தம் ராமபாதாதபிந்ந பூநா'' என்ற சுலோகத்தில் வால்மீகியே பரதனை சமாதானம் செய்யுமிடத்தில் பாதம் –பாதுகை அபேதம் என்று கூறுகிறார்.

''சத்ரம் தாரயத க்ஷிப்ரம் ஆர்யபாதெண இமெள'' பாதுகைகளை சிரஸ்ஸில் தரித்த பரதன் பாதங்களுக்கு குடைபிடியுங்கள் என்று '' ஸ காமமநாப்யைவ ராமபாதாவுபஸ்ப்ருசந்'' பரதன் ராமனை திரும்ப அழைத்து வரும் கோரிக்கை நிறைவேறாமல் ராம பாதங்களை எடுத்து வந்து பாதங்களுக்கு பட்டாபிஷேகம் செய்ததாக கூறுகிறார் பாதுகா பட்டாபிஷேகத்தை பாதாபிஷேகம் என்கிறார். நாமும் பாதுகாதீர்த்தத்தை ஸ்ரீபாததீர்த்தம் என்றும் இதரர்களும் ஆசார்ய பாதுகையை பூஜை செய்து பாதபூஜை என்கிறார்கள் மற்றும் தேசிகனும் அஹல்யா உத்தாராதிப் பாத தூளியினால் உத்தரிக்கப்பட்டவளை பாதுகா தூளினால் உத்தரிக்கப்பட்டதாக கூறுகிறார்.

'' பாந்து வ: பத்மநாபஸ்ய பாதுகா கேளிபாம்ஸவ:
அஹல்யா தேஹநிர்மாண பர்யாய பரமாணவ:

பத்மநாபனின் பாதுகைகளின் தூளிகள் அஹல்யா தேஹ புநர் நிர்மாணத்தில் பரமாணுக்களாக மாறின என்கிறார். ஏனென்றால் கௌதம பத்னியானதால் கௌதமன். வைசேஷி கந்யாய சாஸ்த்ரகர்த்தா கௌதமன் பரமாணுவாதீ ஜகத்காரணத்துக்கு நிர்மாணத்துக்கு ப்ரக்ருதியை ஒத்துக் கொள்ளாமல் பரமாணுக்கள் தான் ஜகத்ஸ்ருஷ்டிக்குக் காரணம் என்பது அவர் கொள்கை, ஆகையால் தான் முதல் அஹல்யை பிரம்ஹனால் ப்ரக்ருதி தத்வத்தைக் கொண்டு ஸ்ருஷ்டிக்கப் பட்டவள் ஆகையால் அவன் ப்ரக்ருதியை ஒத்துக் கொள்ளாதவனாகையால் அந்த ப்ராக்ருத அஹல்யையை த்யஜித்துவிட்டான் – பரமாணுவாதியான கௌதமன் இப்போது ராம பாதுகைகளின் (பாதங்களுடைய) பரமாணுக்களால் புனர் நிர்மித அஹல்யையை ஸ்வீகரித்தான்.

நம் ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனும் பரமாணு வாதியான கௌதமனின் தர்க்க ந்யாய) சாஸ்த்ரத்தை ப்ரதானமாக அதில் மிக மிக 'குருக்விஷ்டோ முராரி: கவி:' என்றபடி குருகுலத்தில் விசேஷமாக அப்யசித்து ஆழ்ந்த ஞானம் கொண்டபடி. மற்றம் கீழே எழுதியபடி மற்ற சாஸ்த்ரங்கள் அநேக பாஷா ஞானம் கொண்டபடி இந்த யுவ வருஷ மாதவமாதத்தில் மாதவத்தவராக (மஹாதபஸ்வி) திருவாதிரையில் மறுபடி பூவராஹனான ஞானப்பிரானும் ஸ்ரீபாஷ்யகாரரும் உபநிஷத் பாஷ்ய காரரும் சேர்ந்து ஸமஷ்டியாக ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனாக அவதரித்தபடியால் தன்திருவடி தூளிகளால் பரமாணுக்களால் ஆஸேதுஹிமாசலம் ''ஸ்ரீ திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன் மாதிரி ஸஞ்சரித்து எல்லோரையும் பரிசுத்தமாக்கி உபதேசத்தாலும் அஞ்ஞானத்தைப் போக்கி பல்லாண்டு பல்லாண்டு என்று பக்தர்கள் எல்லோரும் பாடிக்களித்து இத்திருவாதியின் பலனை வேதோக்தமாக அனுஷ்டிப்போம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஆறு வார்த்தைகள்:-

(ஸ்ரீமதுபயவே வித்வான் புதுக்கோட்டை சேஷாத்ரியாசாரியர் ஸ்வாமி)

ஜகத்விக்யாதவைபவராக எழுந்தருளியிருக்கும் பரஹம்ஸை த்யாதி-இதாநீம் ஸ்ரீ மத் ஆண்டவன் ஸ்ரீ ரங்க ராமாநுஜய திவரமஹா தேசிகனுடைய 61வது திருநக்ஷத்ரமஹோத்ஸவ கைங்கரியத்தில் வாசிகமாக சிலவார்த்தைகள் விண்ணப்பிக்கும்படி அடியேனுக்கு அவகாசம் தந்தருளிய பெரியோர்களுக்கு முதற்கண் உளம் நிறைந்த நன்றியுடன் குற்றங்களைந்து குணங்கொண்டு உகக்கும்படி விண்ணப்பமுடன் வணக்கங்களை ஸமர்பிக்கிறேன்.

பாபங்கள் நிறைந்த இக்கலியுகத்தில், எங்கும் பலவிதமான துர்மதங்கள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கும்போது ''ஸ்ரீமந் நாராயணனே பரப்ரஹ்மம் என்றும் பரதத்வம்'' என்று தீர்மானித்து உலகிலும் நிலைநாட்ட முடியும்?

பெரியாழ்வார் பாண்டியனது அவையில் பகவானே பரதத்வம் என்பதை ப்ரமாண-யுக்தி ஸாமர்த்யங்களால் ஸ்தாபித்தார் என்று ஐதிஹ்யம். அப்படியே மஹான்களால் தான் அதுமுடிந்தகார்யம்.

ஸ்வாமிதேசிகன் பரதத்வவிஷயத்தில் அஜ்ஞானிகளுடைய வாதங்களை காண்பித்து அவற்றில் அனாதரணம் பண்ணியிருப்தை கீழ்வரும் பத்யத்தாலே ரஹஸ்யத்ரயஸாரத்தில் பரதேவதா பரமார்த்ய அதிகாரத்தில் ஸாதிக்கிறார்.

ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிதஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம்
அந்யத்ரைஸ்வர்யமித்யாத்யநிபுண பணிதீ: ஆத்ரியந்தே ந ஸந்த:

1)சிலர் ஜீவாத்மா பரமாத்மா எல்லாம் ஒன்றுதான், வெவ்வேறல்ல என்கிறார்கள். ஜீவாத்மாவின் தோஷங்கள் பரமாத்மாவுக்கும் ஸம்பந்திக்கும். ஆகவே அனைத்தும் மாயை என்றார்கள்.

(2) ஏகம் ஸத் விப்ரா பஹு¯தா வதந்தி என்பது போன்ற வசனங்களைக் கொண்டு இந்திரன் அக்நிஸோமன் வாயு ருத்ரன் முதலான தேவதைகள் எல்லாம் ஒன்றே என்று சொல்வார்கள். பீஷாத்மாத் வாத: பவதே என்கிறபடி தேவதைகளையும் நடத்தும் வேறொரு பரம்பொருளைச் சொல்லும் வாக்யங்கள் இவர்கள் கண்களுக்கு வெகு தூரத்திற் சென்றன போலும்.

(3) வேறு சிலர் படைப்பு காத்தல் அழித்தல் என்று மூன்று தொழில் செய்யும் ப்ருஹ்ம விஷ்ணு ருத்ரர்கள் என்று ஸமமான மும்மூர்த்திகள் பரமாத்மாக்கள் என்பார்கள்.

(4) வேறு சிலர் ஸ ப்ரமஹா ஸ சிவ: ஸ ஹரி: ஸேந்த்ர: என்று சிலபாட பேதங்களையிட்டு மூவரும் ஒரு தத்வம் தான். மூவருள்ளும் வேறுபாடு இல்லை என்பர்.

(5) இம்மூவருக்கும் மேலான பராசக்திதான் பரமாத்மா என்று சிலர் வாதிப்பார்கள். இந்த வார்த்தைகள் எல்லாம் ஸத்புருஷர்கள் செவியில் புகாது.

உபநிஷத்துக்களின் தாத்பர்யத்தாலும் அதையனுஸரித்து மனு வ்யாஸர் முதலிய மஹர்ஷிகளின் வாக்குகளாலும் ஸ்ரீமாந் நாராயண: ஸ்ரீமன் நாராயணன் ஒருவனே பரதெய்வம் என்று நாம் தெளிவோம்.

த்ரையந்தை ரேக கண்டடை: ததநுகுண மநுவ்யாஸ முக்யோகதிபிஸ்ச
ஸ்ரீமாந் நாராயணோ ந: பதிரகிலதநு: முக்திதோ முக்தபோக்ய:
இது முன் ஸ்லோகத்தின் பின்பகுதி.

த்ரய்யந்தை ரேக கண்ட்டை:வேதாந்தங்கள் யாவும் ஒரே குரலில் நாராயணனே பதிம் விச்பஸ்யாத் மேஸ்ஹவரம் என்று ஒத்தாரை மிக்காரை இலையாய ஸர்வேச்வரன் என்று உத்கோஷிக்கின்றன வேதாந்தோப்ரும்ஹணமாகிய பாரத ராமாயணாதிகளும் மனு முதலியவர்களுடைய ஸ்ம்ருதிகளும் நாராயணனையே பரம் பொருள் என்று விளக்குகின்றன. அனைத்தும் அவன் சரீரம், அவனே அனைத்துக்கும் ஆன்மா என்று அந்தர்யாமி ப்ராஹ்மணம்ஸ்பாலோப நிஷத் இவை சொல்கின்றன.

பும்ஸ்த்வே தத்வேநத்ருஷ்டே புநரபி நகலு ப்ராணிதா ஸ்தாணுதாதீ என்கிறபடி பரமபுருஷன் திருமாலே என்று அறிந்த வாக்கு தேவதாந்தரங்களில் பரத்வ புத்தி நிற்காது ஆனால் கலியுகத்தில் இந்த தத்வார்த்தத்தை நிலைநாட்டுவது ஸ்ரீபாஷ்யகாரரால் தான் முடிந்தது. நண்ணறு ஞானம் தலைக் கொண்டு நாரணற்காயினர் உலகோர்கள் எல்லாம் ஸ்ரீ பாஷ்யகாரருக்காக தேவப் பெருமாள் ஸாக்ஷாத்தாக அர்சாஸமாதியை மீறி தன் திருவாய் மலர்ந்தருளி தன்னுடைய ஸர்வேச்வரத்வத்தை ஆறு வார்த்தைகளாலே அருளிச் செய்தான்.

அஹமேவ பரம் தத்வம், பேத ஏவ ச தர்ஸநம் உபாயஸ்து ப்ரபத்தி:
ஸ்யாத், அந்திம ஸ்ம்ருதிவர்ஜநம், த்வதாச்ரிதாநாம் முக்தி: ஸ்யாத்

மஹாபூர்ணாங்க்ரி ஸம்ச்ரய:

என்று ஸங்க்ரஹித்தார்கள் பரதத்வம் யார்? வேந்தார்த்தம் ஜீவபரர்களுக்கு பேதமா? அபேதமா ப்ரபத்தி உபாயமாகுமா? அன்றா? ப்ரயத்நத்தாலே அந்தி ஸம்ருதிஸம்பாதித்தால்தான் மோக்ஷமா? எந்த ஆசார்யனை உலகில் உள்ளவர்கள் இனி ஆச்ரயிக்க வேண்டும்? என்று ஆறுவிதமான எம்பெருமானாரின் சங்கைகளுக்கு ஆறு வார்த்தைகள் ஸமாதானமாயின.

தேவப்பெருமாள் பெருந்தேவியாரோடு திருப்ரதக்ஷிணத்தில் திருஉலாக் கண்டருளும் போது திருவாலவட்டம் வீசும் அந்தரங்க கைங்கர்யஸக்தரான காஞ்சிபூர்ணருக்கு இவ்வார்த்தைகள் ஆறையும் அருளினான் என்பது ஸம்ப்ரதாய ஐதிஹ்யம்.

நம்மாழ்வார் ''நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு உன் கோயில் சீய்த்துப் பலபடி கால் குடிகுடி வழி வந்தாட் செய்யும் தொண்டரோர்க்குச் சோதிவாய் திறந்தருளி-உன் தாமரைக் கண்ணால் நோக்காய்'' என்று ப்ரார்த்தித்தபடி திருக்கச்சிநம்பிக்கு அருள் செய்தார் அருளாளன்.

முதல் வார்த்தை அஹமேவ பரம் தத்வம் சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான் என்றபடி ஸ்ரீமந் நாராயணனாகிய யாமே பரதத்வம். ப்ரஹ்மருத்ர பராசக்தி முதலிய எல்லாம் எமக்குக் கீழ்ப்பட்டவர்கள்- அவரதத்வங்களே என்பது.

அஹம் ஹி ஸர்வ யக்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச
மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்சய

என்று அர்ஜுனனுக்கு கீதையில் பகவான் வெளியிட்டாற்போல் உள்ளது.

2வது வார்த்தை பேத ஏவ சதர்ஹநம் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் ஸ்ரூப நிஷ்கர்ஷம் பண்ணும்போது இரண்டும் வெவ்வேறு தத்வமே. விசிஷ்ட வேஷத்தாலே வ்யவஹரிக்கும் போது ஜீவாத்மாவே பரமாத்மா. ஸர்வம் கல்விதம் ப்ரம்ஹ ஆகையால் ஸ்வரூபத்தால் இருவரும் ஒன்றே என்றும் அத்வைதம் ஸாஸ்த்ரத்தின் உண்மைப் பொருளல்ல. ஆகையால் ''உயிர்மெய் விட்டு ஆதிப்பரனோடு ஒன்றாம்'' என்னும் அல்லல்களை எம்பெருமானால் வாதில் வென்றார் என்று அமுதனார் அருளிச் செய்தார்.

மூன்றாவது உபாயஸ்து ப்ரபத்தி: ஸ்யாத் என்பது.

பக்த்யாதௌ சக்த்யபாவ: ப்ரமிதிரஹிததா ஸாஸ்த்ரத: பர்யுதாஸ:
காலக்ஷேபாக்ஷமத்வம் த்விநி நியதிவஸாத் சதுர்ப்பி:

என்கிறபடி இக்கலியின் கொடுமைக்கு ஏற்ப கர்ம-ஞான-பக்தி யோகங்களில் அதிகாரமில்லாத சேதனர்களுக்கு மோக்ஷோபாயம் ஶரணாகதி யொன்றுதான்.

நான்காவது அந்திம ஸ்ம்ருதி வர்ஜநம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் என்று எம்பெருமான் அருளாலே தானாக அந்திம தசையில் ப்ரபன்னனுக்கு தானே வருவதால் தான் அந்திம ஸ்ருதி பகவத் விஷயமாக வரவேண்டுமே என்று சிந்திக்க வேண்டாம்.

ஸ்வாமி தேசிகன்

அதராஹித சாருவம்ஶநாளா: மகுடாலம்பி மயூரபிஞ்ச்சமாலா:
ஹரிநீலஶிலாவிங்கநீலா: ப்ரதிபாஸ்ஸந்து மமாந்திம ப்ரயாணே

என்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறார். அதாவது அந்திம தசையில் உன் அருளால் என் நினைவில் கீழ் உதட்டில் வைத்த புல்லாங்குழலும் கொண்டையில் செருகிய மயில் பீலியும் வக்ஷஸ்தலத்தில் நெட்டி மாலைகளும் இந்திர நீலம் போல் கருமையும் உடைய உன் திருமேனியின் சௌந்தர்யமே நிற்க வேண்டும் என்று பொருள்.

ஐந்தாவது வார்த்தை:

த்வதாச்ரயாணாம் முக்தி: ஸ்யாத் ஶ்ரீ பாஷ்யகாரர் இங்கு த்வத் என்பதற்கு பொருள். திருக்கச்சினம்பி அல்ல ஶ்ரீ பாஷ்யகாரருக்கு சேவை கிடைக்காமையாலே கண்ணால் ஸேவிக்கும் பாக்யசாலியான காஞ்சி பூர்ணர் முலமாக ஶ்ரீ பாஷ்யகாரர் அன்றோ தன் சங்கைகளை விண்ணப்பிக்க நேர்ந்தது. ஆக ஶ்ரீ பாஷ்யகாரர் திருவடியை ஆஶ்ரயித்தவர்களுக்குத் தான் இந்த யுகத்தில் முக்தி இனிமேல் என்றபடி.

ஆசார்யர்களுக்கும் எம்பெருமானார் ஸம்பந்தமேயன்றோ தாரமாயிற்று.

பத்யுஸ்ஸம்யமிநாம் ப்ரணம்ய சரணௌ தத்பாத கோடீரயோ:
ஸம்பந்தேந ஸமித்யமாந விபவாந் தந்யாம் ஸ்ததாந்யாநகூரூந்
என்று ஸ்வாமி தேசிகன் அருளினபடி.

ஆறாவதுவார்த்தை:-

எம்பெருமானார் தான் ஆச்ரயிப்பது எந்த ஆசார்யரை? என்பதற்கு மஹாபூர்ணஸமாச்ரய: என்று ஸமாதானம் ஆகிறது.

ஆளவந்தாராலே ''ஆம் முதல்வன் இவன்'' என்று கடாக்ஷிக்கப்பட்டவராகையாலே ஆளவந்தாருக்கு பிறகு அவர் திருவடியை ஆச்ரயித்த பெரிய நம்பிகளே ராமானுசனுக்கு தகுந்த ஆசார்யன் என்பது எம்பெருமான் திருவுள்ளம். வால்மீகி பாவானுக்கு நாரத பகவான் ஆசார்யனாக வாய்த்தது போல்.

ஸ்ரீ தேசிகனும் **தயா நிக்நம் யதீந்த்ரஸ்ய தேசிகம் பூர்ணம் ஆஸ்ரயே. யேந விச்வஸ்ருஜோ விஷ்ணோரபூர்யத மனோரத:** என்று ஸாதித்தார்.

ஸீலாத் ஜ்ஞாபூயதே என்று பட்டர் சொன்னபடி ஸௌசீல்யத்தாலும் பாரதந்த்ர்யத்தாலும் அர்ச்சாரூபத்தில் ஜட வஸ்து போல் ஸ்பந்தனமும் இல்லாமல் இருக்கும் நியமத்தை அதிக்ரமித்து விச்வஸ்ருஜோ விஷ்ணோ: மனோரத: என்றபடி தான் படைத்த இவ்வுலகுய்ய எம்பெருமானார் வழியாக ஸத்ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்ட மனோரதித்து இவ்வாறுவார்த்தைகளை திருக்கச்சிநம்பிக்கு அருளிச் செய்தான்.

அஸ்திகஸ்சித் வாக்விசேஷ: என்ற கேள்விக்கு காளிதாஸன் அஸ்த்யுத்தரஸ்யாம் என்று குமார ஸம்பவத்தாலும்; கஸ்சித் காந்தாவிரஹ என்று மேகதூதத்தாலும் வாகர்த்தாவிவ என்று ரகுவம்சத்திலும் விசே ஷ என்கிற மூன்று எழுத்துக்களுக்கு மூன்று நாடகங்களாலும் பதில் சொல்லி தேவ பாஷைக்கு உபகாரம் பண்ணினானோ அவ்விதமே அஹமேவ பரம் தத்வம் என்பதற்கு எம்பெருமானார் வேதார்த்த சங்க்ரஹத்தாலும் பேத ஏவ ச தர்சனம் என்பதற்கு தீப-ஸார-பாஷ்யங்களாலும்; உபாயஸ்து ப்ரபத்தி: ஸ்யாத் என்பதற்கு கத்யத்ரயத்தாலும்; த்வதாச்ரி தானாம் முக்தி: ஸ்யாத் என்பதற்கு ப்ரபன்னரான பரமைகாந்திகளுக்கு உத்தரக்ருத்யமான நித்யக்ரந்தத்தை உபதேசித்து ''ம சுச:'' என்றார் போல் நைர்பர்யத்தை உண்டு பண்ணுவதாலும்-இவ்விதமாக நவ க்ரந்தங்களால் மஹாபூர்ண ஸமாச்ரய: என்பது உபலக்ஷணமாய் பஞ்சாசார்ய பதங்களையும் ஆச்ரயித்து பகவத் விஷயம், ரஹஸ்யங்கள், நல்வார்த்தைகள் பலவற்றாலும் லோகஸமுத்தரணத்தை செய்து எம்பெருமானுடைய மனோரதத்தை பூர்த்தி செய்து வைத்தபடி.

ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்தித்தல் அருளிச் செயலை ஓதுதல், உகந்தருளின திவ்ய தேசங்களுக்கு அமுதுபடி சாத்துபடி துழாய் மலர் தீபம் இடுதல் போன்ற கைங்கர்யம் பண்ணுதல், திவ்யதேசங்களில் எழுந்தருளியிருக்கும் தொண்டர்க்கு பணிவிடை செய்தல் பாகவத ததீயாராதனம் பகவதாராதனம் செய்தல் முதலிய ஸ்ரீ பாஷ்யகாரர் சரமதசையில் அனுக்ரஹித்த கார்யங்களை அனுஷ்டித்துக் கொண்டு ப்ரக்ருதம் ஸ்ரீ மத் ஆண்டவன் இன்னுமொரு நூற்றாண்டு இருக்க வேணுமென்று ஸ்ரீரங்க திவ்ய தம்பதிகளை உளமார ப்ராத்திப்போமாக.

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ த்வயோபநிஷத்

(ஸ்ரீ மதுபயவே. வித்வான் - (Late)

A. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், புதுக்கோட்டை)

ஒண்டொடியாள் திருமகளும் தானுமாக பொங்கோ தம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராதே ஆள்கின்ற ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம்; நாகணைமிசை நம்பிரான் சரணமே சரண் என்று நம்பி அவனடிக்கீழ் அடைக்கலம் புகுவதே பரமஹிதம் (உபாயம்). ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமையை திருமால் திருவடிகளில் செய்துகொண்டு அந்தமில் பேரின்பத்தை அடியார்கள் குழாங்களோடு அனுபவிப்பதே பரமபுருஷார்த்தம்; இவையே ஸகல ச்ருதிஸ்மிருதிகளின் ஸாரபூதமான அர்த்தம்; இவையே நம் ஸித்தாந்தத்தின் முக்கியமான கொள்கைகள் என்று ஆழ்வார்களும் ஆசாரியர்களும் அறுதியிட்டார்கள். இவை உபநிஷத்துக்களிலும் ததுபப்ருஹ்மணங்களிலும் அங்கங்கு பரந்து கிடப்பதால், ஒருவன் தெரிந்து கொள்வதே அரிது; தெரிந்து கொண்டாலும் அவற்றை சிக்கென அநுஸந்திப்பது அரிது. பரந்த நிலத்தில் விளைந்த தானியத்தை தன் உபயோகத்தின் பொருட்டு தன் வீட்டுக் களஞ்சியத்தில் சேமித்துவைத்துக் கொண்டு வேண்டும் போது எடுத்து ஆளுவாரைப் போலே அந்த பரமனின் பெருமையையும் தான் அநுஷ்டித்த உபாயத்தின் சீர்மையையும், தான் பெறப்புகுகிற புருஷார்த்தத்தின் மேன்மையும் நாளும் எண்ணி உகக்கும் பொருட்டும், ஸுலபமாக அநுஸந்தித்து உஜ்ஜிவிப்பதற்காகவும் இவ்வர்த்தங்களை யெல்லாம் பொதிந்து கொண்டிருக்கிறதும் ஸர்வஸங்கிரஹமும் ஸாரதமமுமான ''ரஹஸ்யத்ரயம்'' என்கிற மூன்று மந்திரங்களை உபதேசித்து வைத்தார்கள்.

அவையாவன: மூலமந்த்ரம், த்வயம், சரமச்லோகம். இவற்றுள் மூலமந்திரம் அல்லது திருமந்திரம் என்னும் திருவஷ்டாக்ஷரம் ஜீவாத்ம ஸ்வரூபத்தையும் பரமாத்ம ஸ்வரூபத்தையும் தெளிவாகக் காட்டும். இப்படி ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை அறிந்தவனுக்கு பரதத்வமான சரண்யன் கோலத்திருமாமகளோடு பிரிவிலாதிருப்பதையும், பரமஹிதமான சரணாகதியையும், பரமபுருஷார்த்தமான தத்கைங்கர்யத்தையும் விசதமாக்கிக் கொண்டு சரணாகதியை அநுஷ்டிக்கும் ப்ரகாரத்தை ப்ரதானமாக ப்ரகாசிப்பிக்கும் த்வயம். திருமந்திரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த உபாயத்தை அதிகாரம், அதன் வேறொன்றின் உதவியை எதிர்பார்க்காத தன்மை, விரோதி நிவ்ருத்தி முதலானவற்றோடே கூட விதி முகத்தாலே வெளியிடும் சரமச்லோகம்.

இவற்றுள் சரமச்லோகம் கண்ணனருளின கீதையில் கடைசி அத்யாயத்தின் இறுதியிலுள்ளது. திருவஷ்டாக்ஷரம் ஆதர்வணம் கடம் (आथर्वणकठादि) முலான உபநிஷத்துகளிலும் மற்றும் மந்வாதி தர்ம சாஸ்த்ரங்களிலும், நாராயணாத்மக-ஹைரண்யகர்ப்ப - நாரதீய - போதாயநாதி கல்பங்களிலும் ஸுப்ரஸித்த வைபவமாயிருக்கும். த்வயம் கடவல்லியில் (कठवल्ली) ஓதப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. த்வயத்தைப் பற்றிக் கூற வந்த ஸ்ரீதேசிகன் (कठश्रुत्यादि) கடச்ருத்யாதிகளில் திருவஷ்டாக்ஷரத்தைச் சொல்லுகிற ப்ரகரணத்திலே த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களைப் பிரிய ஓதிச்சேர ஒருக்கால் உச்சரிக்க விதித்தது'', என்று ஸாரஸாரத்திலும், ''த்வயமும் கடச்ருத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தன்னை ஒருக்கால் உச்சரித்தவனை ஸர்வப்ரகாரத்தாலும் க்ருதக்ருத்யனாக்கவல்ல வைபவத்தை உடைத்தாயிருக்கும்''. இது கடவல்லியிலே பிரிய ஓதிச் சேர்த்து அநுஸந்திக்க விதிக்கையாலும் பகவச்சாஸத்ரத்திலே ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதாதிகளே வர்ணோத்தா ராதிகளும் பண்ணி ப்ரதிபாதிக்கையாலும் ஸ்ருதிமூலமான தாந்த்ரிக மந்த்ரம்'' என்று ரஹஸ்யத்ரயத்திலும் ஸாதித்தருளினார். ஆதலால் இந்த மந்திரத்திற்கு மூலம் (कठश्रुति) என்று தெரிகிறது.

'இந்த இடத்திற்கு வ்யாக்யானம் செய்யவந்த ஸாராஸ்வாதிநியில் பின்வருமாறு இருக்கிறது: ''கடவல்லியில் அஷ்டாக்ஷர ப்ரகரணத்திலேயே த்வயத்தினுடைய பூர்வகண்டத்தை ஓதி 'पूर्णात्' இத்யாதியை ஓதி, அநந்தரம் உத்தரகண்டத்தை ஓதி, பரமபுருஷார்த்தேச்சையையுடையவன் இரண்டு கண்டத்தையும் சேர்த்து ஒருக்கால் உச்சரிக்கக் கடவன் என்று விதிக்கப்படுகையால் என்றபடி'' ''**सकृदुचारः संसारतारको भवति**

ஸாரப்ரகாசிகையிலோ என்றால் '**अथातः श्रीमद्द्वयोत्पत्तिः। वाक्यो दवितीयः। पट् पदानि। अर्थाः दश। पञ्चविंशत्क्षराणि। ..... द्वयक्षरः षष्ठः**' என்று காண்கிறது. மேலும்

अकारेणोच्यते विष्णुः सर्वलोकेश्वरो हरिः।
उद्भूता विष्णना लक्ष्मीरुकारेणोच्यते तथा।
मकारस्तु तयोर्दास इति प्रणवलक्षणम्॥''

(ஸர்வ லோகேச்வரனான பகவான் அகாரத்தினால் சொல்லப்படுகிறான். அப்படியே (ஸர்வலோகேச்வரியாய்) விஷ்ணு வக்ஷஸ்தலத்தில் உறையும் லக்ஷ்மி உகாரத்தினால் சொல்லப்படுகிறாள்; மகாரத்தினால் சொல்லப்படுகிற ஜீவன் அவ்விருவருக்கும் போஷ்யபூதன். இதுதான் ப்ரணவத்தின் லக்ஷணம் (அர்த்தம்) என்று கடவல்லியில் ஓதப்படுவதாக பூர்வாசார்யர்களால் பிரமாணமாக கையாளப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்போது ப்ரசாரத்தில் இருந்து வருகிற கடோப நிஷத்தில் அஷ்டாக்ஷரமாவது, த்வயமாவது, இந்த ப்ரணவார்த்தத்தைச் சொல்லும் ஸ்லோகமாவது இல்லை. ஸாராஸ்வாதிநீ ஸாரப்காசிகையிலுள்ள வாக்யங்களும் காணப்படவில்லை. ஸர்வக்ஞரும் ஸத்யவாதியுமான தேசிகன் போன்றவர்கள் சொன்னது பொய்யாக இருக்கமுடியாது. கடோபநிஷத்தின் ஒரு பாகமோ அல்லது 'கடவல்லி' என்று பெயர் பெற்ற ஒரு தனி உபநிஷத்தோ ப்ரசாரத்தில் இருந்து இப்போது நமக்குக் கிடைக்காமலிருக்க வேண்டும். அவ்விதம் இருப்பதும் ஸம்பாவிதமே. ப்ரசாரத்தில் இருப்பதும் உபநிஷத் பாஷ்யகாரருக்கு மூலமான முண்டகோப நிஷத்திற்கும் நம் ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ருத ப்ரகாசிகாசார்யரும் கையாண்ட முண்டகத்திற்கும் பாட பேதங்கள் இருக்கின்றன. சில மந்திரங்களே இதில் இல்லை. அந்தப் பூர்ணமான முண்டகோபநிஷத் வேறு இடங்களில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. அவகாசம் ஏற்பட்டால் அதைப்பற்றி மற்றொரு ஸமயம் நிரூபிப்போம். அவ்விதமே கடவல்லியில் பாட பேதம் இருக்க வேண்டும் என்று ஊஹிக்க வேண்டியிருக்கிறது.

இப்போது 'த்வயோபநிஷத்' என்று ஒரு சிறிய உபநிஷத் அச்சிலிருக்கிறது. அதில் ஸாரப்காசிகையில் கூறியிருக்கிறபடி த்வய மந்திரத்தின் பதங்களும், ஒவ்வொரு பதத்தின் அக்ஷரங்களும் கணக்கிடப்பட்டிருக்கின்றனவே யொழிய ஸ்ரீதேசிகன் ஸாதித்தபடி த்வய மந்த்ரம் ஓதப் படவில்லை.

''த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்களைப் பிரிய ஓதிச் சேர ஒருக்கால் உச்சரிக்க விதித்தது'' என்றும், ''பிரிய ஓதிச் சேர்ந்து அநுஸந்திக்க விதிக்கையாலும்'' என்றும் இருப்பதற்கு இணங்க இதற்கு மூலமாக இருக்கக் கூடிய ஒரு த்வயோபநிஷத் அரியக்குடியில் ஒரு ப்ராசீன ஓலையேட்டில் இருந்து தனக்குக் கிடைத்ததாக கோஷ்டீபுரம் ஸ்ரீ. ஸ்ரீராமதேசிகாச்சார்ய ஸ்வாமி அடியேனுக்கு அநுக்ரஹித்தார். இதில் மந்திரத்தின் பூர்வோத்தர கண்டங்கள் பிரிய ஓதப்பட்டிருக்கின்றன; இரண்டும் சேர்த்து 'த்வயம்' என்று இருக்கிறது. அது பரமஸுகத்தைக் கொடுக்கும் என்றும் கூறியிருக்கிறது. ஆதலால் இதுவே ஸ்வாமி தேசிகன் ப்ராமணமாகக் கொண்டதாயிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஆனாலும் ''தன்னை ஒருக்கால் உச்சரித்தவனை ஸர்வப்ரகாரத்தாலும் க்ருத க்ருத்யனாக்கவல்ல வைபவத்தை உடைத்தாயிருக்கும்'' என்று ஸார நிஷ்கர்ஷாதிகாரத்தில் சொன்னதற்கு மூலமான ''सकृदुचारः संसारतारको भवति'' என்ற வாக்யம் இதில் இல்லை; மற்றதிலேயே இருக்கிறது. இதில் குறைவற்ற ஆநந்தம் ஒரு தரம் உச்சரிப்பதால் ஏற்படுகிறது என்று மட்டுமே ஓதப்படடிருக்கிறது. இரண்டிலும் ப்ரணவார்த்தத்தைச் சொல்லும் ச்லோகம் இல்லை. இருந்தாலும் அறிவாளிகளான தீபிகாவாசகர்கள் தாங்களே விமர்சனம் செய்து அறிந்துகொள்ளும் பொருட்டு அச்சிலிருப்பதை முதலிலும் அரியக்குடியில் அகப்பட்டதை இரண்டாவதாகவும் ஸமர்ப்பிக்கிறேன்.

सहनाववतु .....शान्तिः शान्तिः शान्तिः।

हरिः ॐ। अथातः श्रीमद्वयोत्पत्तिः। वाक्यो द्वितीयः। षट् पदानि। अर्था दश। पञ्चविंशत्य क्षराणि। पञ्चदशाक्षरं पूर्वम्। दशाक्षरं परम्। नवाक्षरं प्रथमपदे। द्वितीय तृतीय चतुर्थे त्र्यक्षराणि। पञ्चाक्षरं पञ्चमे। द्व्यक्षरः षष्ठः॥ एकाक्षरं प्रथमपदे। एकाक्षरो द्वितीये। चतुरक्षरः तृतीये। चतुर्थ पञ्चम षष्ठ सप्तम एते त्र्यक्षराणि। अष्टमपदस्तृतीयः। द्व्यक्षरो नवमे। दशमे द्व्यक्षराणि। एतन्मन्त्रस्य प्रतिपत्तिः॥

पूर्वौ नारायणप्रोक्तः अनादिसिद्धो मन्त्ररत्नः आचार्यमूलः
आचार्यो वेदसंपन्नो विष्णुभक्तो विमत्सरः।
मन्त्रज्ञो मन्त्रभक्तश्च सदा मन्त्राश्रयः शुचिः॥
गुरुभक्तिसमायुक्तः पुराणज्ञो विशेषतः।
एवं लक्षणसंपन्नो गुरुरित्यभिधीयते॥
गुशब्दस्त्वन्धकारः स्यात् रुशब्दस्तन्निरोधकः।
अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते॥
गुरुरेव परं ब्रह्म गुरुरेव परा गतिः।
गुरुरेव परा विद्या गुरुरेव परं धनम्॥
गुरुरेव परः कामो गुरुरेव परायणम्।
यस्मात् सदुपदेष्टासौ तस्मात् गुरुतरो गुरुः॥

सकृदुच्चारितः संसार मोचनं भवति। सप्तजन्मकृतं पापं तत्क्षणादेव नश्यति। सर्वपुरुषार्थ सिद्धिर्भवति। य एवं वेद। इत्युपनिषत्। ओं शान्तिः शान्तिः शान्तिः। हरिः ओं।

(ஓதப்பட்ட மந்த்ரம் (குரு சிஷ்யர்களான) எங்கள் இருவரையும் தோஷமில்லாமல் செய்யட்டும்; எங்கள் இருவரையும் ரஷிக்கட்டும்; நாங்கள் ஓதினது தேஜஸ் ஸுள்ளதாய் இருக்கட்டும்; நாங்கள் பரஸ்பரம் த்வேஷமற்றவர்களாய் இருப்போமாக; மற்ற தோஷங்களுக்கும் சாந்தி உண்டாகட்டும்; சாந்தி உண்டாகட்டும்; சாந்தி உண்டாகட்டும்)

பிறகு ஆகையால் த்வயத்தில் உத்பத்தி (சொல்லப்படுகிறது) (த்வயமந்த்ரத்திற்கு) இரண்டு வாக்யங்கள், ஆறு பதங்கள்; பத்து அர்த்தங்கள்;

இருபத்தைந்து அக்ஷரங்கள் ; முற்பாகம் பதினைந்து அக்ஷரம் ; பின் பாகம் பத்து அக்ஷரம். முதல் பதத்தில் ஒன்பது எழுத்துக்கள் ; இரண்டாவது, நன்காவதுகளில் மூன்று எழுத்துக்கள்; ஐந்தாவதில் ஐந்து எழுத்துக்கள்; ஆறாவது இரண்டெழுத்துக் கொண்டது. (முதல் ஸமஸ்தபதத்தில்) முதல் பதத்தில் ஒரு எழுத்து; இரண்டாவதில் ஒரு அக்ஷரம் ; மூன்றாவதில் நான்கு; நாலாவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவதுகளில் (ஒவ்வொன்றிலும்) மூன்று அக்ஷரங்கள்; எட்டாவதில் மூன்று; ஒன்பதில் இரண்டு; பத்தாவதில் இரண்டு எழுத்துக்கள். இது மந்த்ரத்தை அறியும் முறை.

இது முதலில் நாராயணனால் உபதேசிக்கப்பட்டு அநாதிகாலமாய் ஏற்பட்டு இருப்பதான மந்த்ரரத்னம்; ஆசார்ய மூலமாய் (அறிய வேண்டியது)

ஆசார்யனும் வேத (ஞானம்) நிறைந்தவனும், விஷ்ணு பக்தனாயும், (ஒருவரிடத்திலும்) பொறாமையற்றவனாயும், மந்த்ரத்தை அறிந்தவனாயும் அதில் பக்தியுடையவனாயும், எப்போதும் மந்த்ரத்தையே அண்டினவனாயும் (ஆதாரமாக உடையவனாயும்) சுத்தனாயும் இருக்கவேண்டும்.

(தனக்கு மந்த்ரத்தை உபதேசித்த) குருவிடத்தில் பக்தி உடையவனாயும், விசேஷித்து பழைய ஸம்ப்ரதாயங்களை அறிந்தவனாயும், இம்மாதிரி லக்ஷணமுள்ளவன் குரு என்று சொல்லப்படுகிறான்.

'கு' என்றால் இருட்டு (அதாவது அஜ்ஞானம்) ; 'ரு' என்றால் அதை நீக்குபவன்; அஜ்ஞானத்தைப் போக்குவதால் அவன் குரு என்னப்படுகிறான்.

குருவே பரப்ரஹ்மம் ; குருவே சிறந்த உபாயம் ; குருவே மேன்மையான வித்யை (ஞானம்); குருவே சீரிய தனம்.

குருவே ச்ரேஷ்டமான இன்பம் ; குருவே மேலான அடையவேண்டிய இடம்; நன்மையை உபதேசிப்பதாலேயே அவன் குரு எனப்படுகிறான்.

(இப்படி பெருமை பொருந்திய குருமுகமாகப் பெற்ற மந்த்ரத்தை) ஒரு தடவை உச்சரித்தால் ஸம்ஸாரத்திலிருந்து வீடு பெருகிறான்.

ஏழு ஜந்மங்களில் செய்த பாபம் அந்தக்ஷணமே நாசமடைகிறது; ஸகலவித புருஷார்த்தங்களும் ஸித்திக்கின்றன. இதை அறிந்தோனுக்கும் (இப்பலமே) என்று உபநிஷத் கூறப்பட்டது.

சாந்தி : சாந்தி : சாந்தி :

''हरिः ओं ।। सवा एष महानज आत्मा अन्नादो विन्दते वसु ।
यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै ।।
तं ह देवमात्मबुद्धिप्रसादं मुमुक्षुर्वै शरणमहं प्रपद्ये ।।
इति हो वाच । ऋग्वेदं प्रपद्ये ।यजुर्वेदं प्रपद्ये । सामवेदं प्रपद्ये । इतिहास पुराणानि प्रपद्ये ।
सत्यं प्रपद्ये । श्रद्धां प्रपद्ये । परमात्मने प्रपद्ये । भागवताय प्रपद्ये । वासुदेवाय प्रपद्ये । ओं प्रपद्ये ।
नमः प्रपद्ये । श्रीं प्रपद्ये । श्रियं प्रपद्ये ।

यद्वेदा दिव्यगायत्री जयति तदेषाभ्युक्ता । तदेव भूतं तदुपासितव्यम् ।तत्पूर्णसौन्दर्यं लक्ष्म्याः ।। तदेवममृतं सदानन्दम् । सत्यं तत् द्वयम् । सर्वं तत्सकृदुच्चारणो भवति । श्रीमन्नारायणचरणौ शरणं प्रपद्ये । इदंपूर्णमदः पूर्णं पूर्णात् पूर्णमुच्यते । पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ।। सर्वं पूर्णमिति । सहोवाच । श्रीमते नारायणाय नमः ।।

खं ब्रह्म । खं वायुः । खं पुराणम् । खं इतिहासः । खं ग्रायणीपुत्रः । वेदोये ब्रह्मणो विदुः । वेदेनानेन वेदितव्यमिति । य एवं वेद । एत्युपनिषत् ।। हरिः ओं ।''

இவனே பிறப்பிலியாய் ஸகல வஸ்து போக்தாவாய் ஸகலத்தையும் தனக்கு போக்யமாக அடையும் பரமாத்மா.

யாவனொருவன் முதலில் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து, அவனுக்கு வேதங்களையும் உபதேசிக்கிறானோ, ஆத்மாக்களின் புத்திக்குத் தெளிவை உண்டு பண்ணும் அந்த தேவனை முமுக்ஷுவான நான் சரணம் அடைகிறேன் என்று சொன்னான் (வேத புருஷன்). ரிக்வேதத்தை சரணமடைகிறேன்; யஜுர் வேதத்தை சரணமடைகிறேன்; ஸாமவேதத்தை சரணமடைகிறேன்; இதிஹாஸ புராணங்களை சரணமடைகிறேன்; (இவைகளுக்கு ப்ரதிபாத்யனான பரமாத்மாவை எனக்குக் காட்டும்.) ஸத்யத்தை சரணமடைகிறேன்; ச்ரத்தையை சரண மடைகிறேன்; பரமாத்மாவின் பொருட்டு சரணமடைகிறேன்; பாகவதனின் பொருட்டு சரணமடைகிறேன்; வாஸுதேவனின் பொருட்டு சரணமடைகிறேன்; ஓங்காரத்தை சரணமடைகிறறேன்; நமஸ்ஸை சரணமடைகிறேன்; ஸ்ரீ மந்த்ர பீஜத்தை சரணமடைகிறேன்; ஸ்ரீயை சரணமடைகிறேன். (எல்லோரும் எனக்கு அருள் புரிவாராக).

வேதத்தில் தைவ வன்மையுள்ள காயத்ரீ சிறப்புற்று விளங்குகிறது. அது கூறப்படுகிறது. எல்லோரும் உபாஸிக்கப்படவேண்டியது அதுவே. அதுவே லக்ஷ்மியின் பரிபூர்ணமான ஸௌந்தர்யம் ; அதுவே அம்ருதம், ஸத், ஆகந்தம், (இவற்றைக் கொடுப்பது). உண்மையாக அதுதான் த்வயம் (என்பது). (கீழ்ச் சொன்ன அம்ருதம் ஆநந்தம்) எல்லாம் ஒரு முறை (இதை) உச்சரிப்பதாலேயே உண்டாகிறது. ஸ்ரீமத் நாராயணனுடைய திருவடிகளை சரணமடைகிறேன். இந்த பரப்ரஹ்மமே பூர்ணம்; இதிலிருந்து பூர்ணமான ஜகத் உண்டாகிறது; நிறைந்த பொருளிலிருந்தே நிறைந்தது வந்ததாகக் கூறப்படுகிறது. நிறைந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து நிறைந்தது வந்ததாகக் கூறப்படுகிறது. நிறைந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து நிறைந்த உலகம் வந்தும் நிறைந்த ப்ரஹ்மம் நிறையுள்ளதாகவே இருக்கிறது. அந்த வேத புருஷன் கூறினான் - ஸ்ரீமானான நாராயணனுக்கதே, எனக்கு இல்லை.

ஆகாசம் ப்ரஹ்மம் (ஸர்வவ்யாபி); ஆகாசம் போன்ற ப்ரஹ்மமே ஜகத்ப்ராணனான வாயுவாகவும் இருப்பவன் அளவற்ற பெருமையையுடைய பரப்ரஹ்மத்தைச் சொல்லுவதால் புராணம் ஆகாசம் (அளவற்றது); இதிஹாஸமும் க்ராயணீ புத்ரனும் அதுவே. ப்ரஹ்மத்தின் மஹிமையை வேதமே அறியும்; வேதத்தைக் கொண்டே அறியவேண்டும். இதை அறிந்தவனுக்கும் அதே என்று உபநிஷத் கூறப்பட்டது.

द्वयमर्थानुसन्धानेन सह सदैवं वक्ता .....अत्रैव श्रीरङ्गे सुखमास्व

न द्वयवचनतः क्षेमकरणम्

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிமாந்த மஹாதேசிகாய நம :

வேதத்தில்
உலக இயற்கையும், சமூக நீதியும்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் கூத்தப்பாக்கம் கண்ணமாச்சார்யர் ஸ்வாமி)

வேதங்கள் கடவுளைப் போல் சாசுவதமானது. அதற்கு தொடக்கம் என்பது இல்லை. எவ்வாறு பகவானுக்கு பிறப்பு கிடையாதோ அவ்வாறே இதுவும் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதல்ல. மேலும் பகவான் ஒவ்வொரு முறையும், படைப்பு துவங்கும் பொழுது பிரமனை படைத்து அவன் கையில் வேதத்தையும் கொடுத்து உலகை படைக்கும்படி ஆணையிடுகிறான் என்றும், பிரமனும் முன் படைப்பில் உலகம் எவ்வாறு படைக்கப்பெற்றது என்பதை இவ்வேதத்தின் மூலமாக அறிந்து அதே முறையில் படைப்புத் தொழில் செய்கிறான் என்றும், இவ்வேதமே கூறுகிறது.

यो ब्रह्माणं विदधाति पूरं यां वै वेदांश्च प्रहिणोतितस्मै ।
धाता यथा पूर्वमकल्नयत् ।

''யோ ப்ரம்ஹாணம் வததாதி பூர்வம் யோவை வேதாம்ஸ் ச ப்ரஹிணோதி தஸ்மை:''

''தாதா யதா பூர்வமகல்பயத்''

இவ்வாறான வேதத்தின் பிறவாமையை வெளிநாட்டவர்கள் (சரித்திர வல்லுநர்கள்) ஏற்றுக் கொள்வதில்லை. வேதங்கள் கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவும், எங்கிருந்தோ வெளியிலிருந்து பாரதம் வந்து சேர்ந்த ஆரியர்கள் இதை எழுதினார்கள் என்றும் கூறுகிறார்கள். இதைப் பற்றிய சர்ச்சை இங்கு நமக்கு தேவை இல்லை. பொதுவாக வேதங்களில் பல வகையான கருத்து முத்துக்கள் ஆங்காங்கே சிதறி கிடக்கின்றன. அவற்றில் நாம் தந்துள்ளத் தலைப்புக்கு ஏற்றவாறு அமைந்துள்ள கருத்துக்கள் காண்போம்.

உலக இயற்கை

1. 'अपोऽश्नाति तन्नेवाशितं नेवानशितम् '
(அபோ ச்நாதி தந்நே வாசிதம் நேவா நசிதம்)

பசியால் களைத்தவன் தண்ணீர் அருந்தினால் களைப்பு சற்று குறைந்து தெம்பு கொண்டவன் போல் உணர்கிறான். ஆனால் வயிறு நிரம்பாமையால் இந்நிலை சற்று நேரமே நீடிக்கிறது. எனவே தான் தண்ணீர் அருந்துவது சாப்பிட்டது போலும், சாப்பிடாதது போலும் கருதப்படுகிறது.

2. 'वायुप्रच्युता दिवो वृष्टिरीर्ते '
(வாயு ப்ரச்யுதா திபௌ வ்ருஷ்டிரீர்த்தே)

மேகங்கள் காற்றினால் நகர்த்தப்பட்டு (தான்) மழையைப் பெய்கின்றன.

3. 'गर्दभः पशूनां भारमारितमः '
(கர்தப : பசூநாம் பாரபாரிதம:)

கழுதை தான் பிராணிகளில் அதிக சுமை சுமக்கவல்லது.

4. 'द्विः संवत्सरस्य सस्यं पच्यते '
(த்வி : ஸம்வத்ஸரஸ்ய ஸஸ்யம் பச்யதே)

வருடத்துக்கு இருமுறை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

5. 'कृष्ट ह्येषधयः प्रतितिष्ठन्ति।'
(க்ருஷ்டேஹி ஓஷதய: ப்ரதிதிஷ்டந்தி)

நன்றாக உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தில் தான் பயிர் வகைகள் நன்றாக பயிராகின்றன.

6. 'न खलु वै पशव आयवसे रमन्ते '
(நகலுவை பசவ ஆயவஸே ரமந்தே)

பிராணிகள் புல் முதலிய பசுமை நிறையாத இடங்களில் வாழ விரும்புவதில்லை.

7. 'नाना मनसः खलु वै पशवः .... तेऽप एवाभिसमनसः '

(நாநா மநஸ: கலுவை பகவ: ..... தே ப ஏவபி ஸமநஸ:)

பொதுவாக (மனிதர் உட்பட) உயிரினங்களின் உணவு வகையில் விருப்பங்கள் வேறுபடுகின்றன. ஆனால் நீர் குடிப்பதில் வேறுபாடு இவைகளில் கிடையாது.

8. 'अश्वः त्रिभिः दिषस्तिष्ठति चतुरः प्रतिदध त्पालयते '

(அச்வ : த்ரிபி : திஷந்திஷ்டதி சதுர: ப்ரதிததத் பலாயதே)

உயர்ந்த ஜாதிக் குதிரை (ஒரு காலை சற்று தூக்கி வைத்து கொண்டு) மூன்று கால்களால் தான் நிற்கும். அதுவே ஓடும்போது நாலு கால்களையும் பொருத்தி ஓடும்.

9. 'अकृष्टपश्या ओषदयः पच्यन्ते '

(அக்ருஷ்ட பச்யா ஓஷதய : பச்யந்தே)

பச்சிலைகள் மூலிகைகள் போன்றவை தானாகவே முளைத்து பயிராகின்றன.

10. 'सर्वा वा इयं वयोभ्यो नक्तं दृशे दीप्यते।
तस्मादिमां वयां सि नक्तं नाध्यासते।'

(ஸர்வா வா இயம் வயோப்யோ நக்தும் த்ருசே தீப்யதே
தஸ்மாதிமாம் வயாம் ஸி நக்சம் நாத்யாஸதே)

இந்த பூமி முழுவதும் பறவைகளின் கண்களுக்கு இரவில் எரிவது போல் காண்கிறது. எனவே பறவைகள் இரவில் பூமியில் அமர்வதில்லை.

11. 'रसमह वसन्ताय प्रायच्छत्, यवं ग्रीष्माय, ओषधीर्वषाभ्य, व्रीहीन्छरदे,
माषतिलौ हेमन्त शिशिराभ्याम्।'

(ரஸமத வஸந்சாய ப்ராயச் சத் யவம் க்ரீஷ்மாய ஓஷதீர்வர்ஷாப்ய;
மாஷதிலௌ ஹேமந்த சிசிராப்யாம்)

இயற்கை மா, பலா போன்ற ரசமுள்ள பொருட்களை வசந்த ருதுவிலும், யவம் (ஆங்கிலத்தில் பார்லி என்றும், வடநாட்டில் ஜவ் என்றும் சொல்வார்கள்). க்ரீஷ்ம ருதுவிலும், புல், பூண்டு போன்றவை. வர்ஷ ருதுவிலும், நெல் வகை சரத் ருதுவிலும், உளுந்து, பயறு, எள் ஹேமந்த சிசிர ருதுக்களிலும் பயிராகுகிறது.

12. 'त्रयः पशूनां हस्तदानाः पुरुषो हस्ती मर्कटः '

(த்ரய: பசூநாம் ஹஸ்தாநா: புருஷோ ஹஸ்தீ மர்க்கட:)

பிராணிகளில் மனிதன், யானை, குரங்கு இவை தான் கைகளால் எடுத்து உண்பவை. (ஒரு சமயம் இது பற்றி பேசிக் கொண்டிருந்த பொழுது அணில் ஏன் சேர்க்கப் படவில்லை என்று என் நன்பர் ஒரு வினவினார்.) வேதம் பொய் சொல்லாது என்று நான் சொன்னேன். பிறகு சிறிது நாட்கள் அணிலை கூர்ந்து கவனித்தபொழுது அது இயற்கையாக வாயால் தான் உண்கிறது, கொட்டைகளை நீக்கவோ, உமி முதலியன நீக்கவோ தேவைப்படும் பொழுது முன்னங்கால்களை கைபோல் வைத்துக் கொண்டு உபயோகித்துக் கொள்கிறது.

13. 'ललाटे केशानसन्ति। '

(ரராடே கேசா நஸந்தி)

நெற்றியில் ரோமங்கள் இருப்பதில்லை.

14. 'अग्निंवावादित्यः सायंप्रविशति। तस्मादग्निः दूरान्नक्तं ददृशे।
उद्यन्तं वावादित्यं अग्निरनुसमारोहति। तस्माद्धूम एवाग्नेर्दिवा ददृशे '

(அக்நிம் வாவாதிஷ்ய: ஸாயம் ப்ரவிசதி தஸ்மாதக்நி: தூராநக்தும் தத்ருசே உத்யந்தம் வா வாதித்யம் அக்நிரநுஸ மாரோவாதி தஸ்மாத் தூம ஏவாக்நே: திவாத த்ருசே)

எனவேதான் இரவில் நெருப்பின் ஒளி வெகு தொலைவில் தெரிகிறது. அதே போல் பகலில் அக்னி சூரியனோடு ஒன்றி விடுகின்றான் எனவே பகலில் நெருப்பின் புகை தான் தொலைவில் தெரிகிறது.

15 'श्रीर्हि मनुष्यस्य सुवर्गो लोकः।'

(ச்ரீர்ஹி மநுஷ்யஸ்ய சுவர்க்கோலோக:)

செல்வம் தான் மனிதனுக்கு சுவர்க்கம் (செல்வம் இருந்தால், எல்லாவிதமான வசதிகளையும் அதைக் கொண்டு பெற்று விட முடியும் என்பதால்.)

16 'द्विरह्नो मनुष्येभ्य उपह्रियते। प्रातश्च सायञ्च।'

(த்விரந்ஹோ மநுஷ்யேப்ய: உபஹ்ரியதே ப்ராதச்ச ஸாயம்ச)

மனிதனுக்கு இருவேளைகள் தான் (பகலில் ஒரு முறையும், இரவில் ஒரு முறையும் ஆக) உணவு அளிக்கப்படுகிறது.

17. 'एतावन्ते वै पदावो द्विपादश्च चतुष्पादश्च।'

(ஏதாவந்தோவை பசவோ த்விபாதச்ச சதுஷ்பாதச்ச)

உலகில் இரண்டு கால் உள்ளது, நான்கு கால் உள்ளது என்று பிராணிகளை பிரிக்கிறோம்.

சமூக நீதி

1. 'योगे नयासा प्रजानां मनः क्षेमेन्यासाम् '

(யோகே ந்யாஸாம் ப்ரஜாநாம் மந; க்ஷேமேந்யாஸரம்)

(வடமொழியில் ''யோகம்'' என்னும் சொல் உள்ள செல்வத்தை மேன்மேலும் வளர்க்க தேவையான முறையை குறிக்கும் சொல் என்றும், ''க்ஷேமம்'' என்பது உள்ள செல்வத்தை அழியாமல் காப்பது என்றும் சொல்லுவர்) உலகில் சிலரின் விருப்பம் யோகத்திலும், மற்றும் சிலரின் விருப்பம் க்ஷேமத்திலும் நோக்கு கொண்டதாக இருக்கும்.

2. 'स्थेयानस्थेयसो नोपहरते।'

(ஸ்தேயாந் அஸ்தேயஸோ நோபஹரதே)

வசதி உள்ளவர்கள் வசதி அற்றவர்களை காணிக்கை சமர்ப்பித்து சந்திப்பதில்லை.

3. 'अमृतं वा आपः तस्मादद्भिरवतांतमभिषिञ्चन्ति'

(அம்ருதம் வா ஆப: தஸ்மாதத்பிரவதாந் தம பிஷிஞ்சந்தி)

நீர் அம்ருதம் போன்றது. அதனால் தான் களைத்து வீழ்ந்தவன் மீது குளிர்ந்த நீர் தெளிக்கின்றார்கள்.

4. 'एतत्खलु वाव तप इत्याहुः यः स्वं ददाति।'

(ஏதத்கலு வா வதப இத்யாஹு: ய: ஸ்வம்ததாதி)

ஒருவன் தான் ஈட்டியப் பொருளை பிறருக்கு தானம் செய்வது புலனடக்கி தவம் செய்வதற்கு ஒப்பாகும்.

5. 'पत्नी हि पारीणह्यसयेशे।'

(பத்நீ ஹி பார்ணஹ்யஸ்யேசே)

மனைவி தான் வீட்டில் இருக்கும் எல்லா வகை சொத்துக்களுக்கும் உரிமையாளி.

6. 'स्वपन्तं पफाधा न जहति।'

(ஸ்வபந்தம் ப்ராணா ந ஜஹதி)

தூங்கும் போது உயிர் பிரிவதில்லை.

7. 'यावद्भि वैं राजानुचरै रागच्छति। सर्वेभ्यो वै तेभ्य आतिथ्यंक्रिदते।'

(யாவத்பிர் வை ராஜா நுசரை ராசச்சதீ , ஸர்வேப்யோ வைதேப்ய ஆதித்யம்க்ரிததே)

அரசன் (அல்லது பெரிய அதிகாரி) எவ்வளவு பரிவாரங்களுடன் வருகிறானோ அவ்வளவு பேருக்கும் தக்கவாறு அரசனுக்கு விருந்து அளிக்கும் போது விருந்து அளிக்கப்படுகிறது.

8. 'नमस्कृतयहि वसीयांसं उपचरन्ति।'

(நமஸ்க்ருத்ய ஹி வஸீயாம்ஸம் உபசரந்தி)

வசதி உள்ளவனை வேண்டி வணங்கி உபசரிக்கின்றார்கள்.

9. 'अपि वध्यं प्रपन्नं न प्रति प्रयच्छन्ति।'

(அபிவத்யம் ப்ரபந்நம் ந ப்ரதி ப்ரயச்சந்தி)

கொல்ல தகுந்தவனாய் இருந்தாலும் தஞ்சம் என்று வந்தவனை மறுதலிக்க மாட்டார்கள்.

10. 'यदा वै वसीयान् भवति। व्योमागन्निति वै तमाहुः।'

(யதா வை வஸீயாந்பவதி। வ்யோமா கந்நிதி வை தமாஸு:।)

எப்பொழுது ஒருவன் நல்ல வசதி படைத்து விடுகிறானோ அப்போது அவனை ''அவன் ஆகாயத்தில் இருக்கிறானப்பா'' என்கிறார்கள்.

11. 'शुश्रुषुः पत्राणां हृयतमः।'

(சுச்ரூஷு: புத்ராணாம் ஹ்ருத்ய தம:)

பணிவிடை சரிவர செய்யும் மகனே மற்ற மகன்களைக் காட்டிலும் தாய், தந்தையருக்கு மனத்துக்கு மிக உகந்தவன் ஆகிறான்.

12. 'कामेन हि ददाति। कामेन प्रति गृह्णाति।'

(காமேந ஹி ததாதி। காமேந ப்ரதி க்குஹ்ணாதி)

மனதில் ஒரு அபிலாஷையை வைத்துதான் கொடுப்பவன் கொடுக்கிறான் வாங்கிக் கொள்பவனும் ஒரு அபிலாஷையை கொண்டுதான் பெற்றுக் கொள்கிறான்.

13. 'समुद्र इवति कामः ने वहि कामस्यान्तो ऽ स्ति। न समुद्रस्य।'

(ஸமுத்ர இவஹி காமः நே வஹி காமஸ்யாந்தோஸ்தி। நஸமுத்ரஸ்ய)

ஆசை என்பது கடல் போன்றது. ஆசைக்கும் அளவு இல்லை. கரை இல்லை.

14. 'आप्यामित्रौ संगत्य। नामना चैध्वयेते। मित्रमेव भवतः।'

(அப்யாமித்ரௌ ஸங்கத்யா நாம்நா சேத்வயே தெ। மித்ரமேவ பவத:)

விரோதிகளாயினும் இருவரும் சந்தித்து பெயர் சொல்லி அழைப்பாரேல் அவர்கள் நண்பரே.

15. 'पुत्रसे हृदयम्। तस्मादस्माल्लोकादमुंलोकं नाभिकामयन्ते।'

(புத்ரோ ஹ்ருதயம் । தஸ்மாதஸ்மால் லோகாதமும் லோகம் நாபிகாமயந்தே)

மகன் என்பது உள்ளத்திற்கு ஒப்பானவன். அதனால் தான் இவ்வுலகிலிருந்து (மக்களைவிட்டு) மேலுலகம் செல்ல யாரும் விரும்புவதில்லை.

16. 'एकं वा एतत् देवानामहः यतसंचत्सरः।'

(ஏகம் வா ஏதத் தேவாநாம் அஹ: தயத் ஸம்வத்ஸர)

நமக்கு ஒரு ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். இவ்வாறு இன்னும் பல எழுதிக் கொண்டே போகலாம்.* இடமில்லாமை காரணமாகவும், எனக்கு இதர வேதங்கள் தெரியாது என்பதாலும் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இது போன்ற இன்னும் பல தலைப்புகளில் வாழ்க்கைக்கும், நமது ஆத்மா மேன்மைப் பெறவும், பற்பல சீரிய கருத்துக்களை இன்னும் பல ஆழந்த அறிவுள்ள பெரியோர்களை அடிபணிந்து கேட்டு அறிந்து பயன் பெறுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்

ஸ்ரீ :

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

ரிக்வேத ஸாரம்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் ராயம்பேட்டை ரங்கராஜாசாரியார் ஸ்வாமி)

साक्षान्मूलप्रमाणाय विष्णोरमिततेजसे ।
आद्याय सर्ववेदानां ऋग्वेदाय नमो नमः ।।
ऋग्वेदं पद्मपत्राक्षं गायत्रं सोमदैवतम् ।
अत्रिगोत्रमहं वन्दे ऋग्रूप परमेश्वरम् ।।

வேதங்கள் எல்லாம் அனாதியானது. அதில் எல்லா வேதத்திற்கும் ஆதியானது ரிக்வேதம் என்பது தற்காலம் ரிஸர்ச் மூலம் தெரிய வருகிறது.

ரிக்வேதத்யானச்லோகத்திலேயே எல்லாவற்றிற்கும் மூலமானதும் ஸாக்ஷாத் பகவானுடைய தேஜஸ் மயமானதும் எல்லா வேதங்களுக்கும் முதன்மையானதுமான ரிக்வேதத்திற்கு நமஸ்காரம் என்கிறது.

ரிக்வேதமானது தாமரை இலை போன்றதும் காயத்ரீ சந்தோரூபமும் ஸோம தேவதாகமாகவும் அத்ரி கோத்ரத்திலிருந்து உதித்ததுமான ரிக்வேதஸ்வரூபமான உத்கிருஷ்ட பகவானை நான் நமஸ்கரிக்கிறேன்.

இந்த வேதத்தில் மிகவும் முக்கியமான தேவதைகளாக இந்திரனையும், அக்னியையும், சூரியனையும் தான் அதிகமாக ஸ்தோத்திரம் செய்கிறது.

இதில் பலவிதமான மந்த்ர பாகங்கள் உள்ளன. ரிக்வேதம் 10 மண்டலங்களை கொண்டது. 8 அஷ்டகம், 64 அத்யாயங்கள், 1028 சூக்தங்கள், 10552 மந்திரங்கள், 85 அனுவாகங்களை கொண்டது.

இதில் ஒவ்வொரு மந்திரத்திலும் ஒவ்வொரு பலன் சொல்லப்பட்டுள்ளது.

இதற்கு அங்கமாக 10 கிரந்தங்கள் பகவான் சௌநக மஹரிஷியால் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ரிக்விதானம் என்று ஒரு பாகம். அதில் மந்திரங்களுக்கு விநியோகத்தை நன்கு சொல்லப்பட்டுள்ளது. அதில் மிகவும் முக்கியமான சில மந்திரங்களை பற்றி இங்கே குறிப்பிடுகிறோம். மன்யு ஸூக்தம் என்பது 14 மந்திரங்களை கொண்டது. இதில் நமக்கு எப்போர்ப்பட்ட

சத்ருக்களையும் அவர்களால் ஏற்படக்கூடிய பாதைகளும் நீங்கி நமக்கு அனுகூலம் ஏற்படும். பவமானம் என்கிற பாகம் 610 மந்திரங்களை கொண்டது. இந்த மந்திரத்தை ஜபம் செய்வதாலோ, ஹோமம் செய்வதாலோ, அல்லது ச்ரவணம் செய்வதாலோ ஒரு மனுஷ்யனுக்கு அவன் ஜனன காலம் முதல் (அதாவது கர்பவாசம் முதற் கொண்டு) ஆயுள் பர்யந்தங்கள் செய்யக்கூடிய பாபங்கள் விலகி ரிஷி, பித்ரு ஸரஸ்வதி முதலியவர்களுக்கு த்ருப்தி உண்டு பண்ணி ஏழு ஜன்மங்களுக்கு நல்ல குலத்தில் ஜனனமும் கர்ப ஸ்ரீமானுகவும் வேதம் அத்யயனம் செய்யக் கூடியவனுகவும் இருப்பான் என்கிறது. யஜுர் வேதங்களுக்கு ப்ராயச்சித்தமாக கூஸ்மாண்டஹோமம் விதித்துள்ளது. அது செய்தால் சுத்தி ஏற்படுகிறது என்று உள்ளது. ஆனால் எல்லா வேதகாரர்களுக்கும் இந்த பவமான ஜபத்திலேயே சுத்தி ஏற்படுகிறது என்று காத்யாயன மஹரிஷி ஸர்வானுக்ரமணி பாஷ்யத்திலேயே சொல்லியிருக்கிறார். மேலும் ம்ருதஸஞ்ஜீவினி, ஜகபத்யம், நஷ்டதின ப்ராப்த்தி முதலியவிதமான பல மந்திரங்கள் உள்ளன. மேலும் தற்சமயம் பல பேருக்கு கான்ஸர் என்கிற நோய் உள்ளது. எவ்வளவு மருந்து சாப்பிட்டாலும் அதை பூர்ணமாக குணப்படுத்த முடியவில்லை என்று கர்ணபரம்பரையாக கேள்விப்படுகிறோம். அதற்கு ரிக்வேத (கில பாகம்) த்தில் ஒரு மந்திரம் உள்ளது. அந்த மந்திரமானது ப்ரத்யங்கிரஸ் என்கிற சூக்தத்தில் உள்ளது. அதை பதினாயிரம் தடவை ஜபம் செய்து ஹோமம் செய்தால் அந்த நோய் இருந்த இடமே தெரியாமல் போய் விடும். காயத்ரீ மந்திர த்ரஷ்டவான ஸ்ரீ விஸ்வாமித்திரர் மண்டலத்தில் வேதகுருவுக்கு வந்தனம் சொல்லியுள்ளது. ஆசார்ய ப்ரதிபத்தி எவ்வளவு முக்கியம் என்பதைதான் அது விசதமாக எடுத்து சொல்லியிருக்கிறது. தற்சமயம் கண்டுபிடிக்கபடுகிறது. விஞ்ஞான ரீதியானவைகளுக்கு ஆதாரம் ரிக்வேதத்தில் உள்ளது. ஆகாய விமானம் பற்றி உள்ளது.

இராமாயணம் 24 ஆயிரம் ச்லோகங்கள் கொண்டது. அதை ரிக்வேதம் பத்தாவது மண்டலத்தில் இரண்டு வாக்யங்களினால் சொல்லியுள்ளது. இதே போல் பாகவதம், பாரதம் இவைகளுக்கு மூலம் ரிக் வேதத்தில் உள்ளது. திரிவேணி (அதாவது கங்கா, யமுனை, ஸரஸ்வதிசங்கமம்) ஸ்நானத்தை பற்றி விசேஷித்து சொல்லியிருக்கிறது. ஆதி மனிதன் பற்றியும் அவர்கள் வாழ்க்கை பற்றியும் கூட உள்ளது. இதில் சொல்லப்படாத எதுவும் இன்று கண்டுபிடிக்கப்படவில்லை என சொல்லலாம். அவ்வளவு விஷயங்கள் உள்ளது. தவிர யாகாதி கர்மாக்களில் தேவதைகளை ஆஹ்வானம் செய்ய ருக்வேதம் தான் தேவைப்படுகிறது. ருக்வேதத்தில் ஹோதா என்பவர் கூப்பிடுகிறார். அதன் பிறகு தான் உத்காதா என்பவர் தேவதைகளுக்கு காயத்ரீதியாதி ஸாமாக்களினால் த்ருப்தியை உண்டு பண்ணுகிறார்கள். அத்வர்யு ஹவிர்பாகத்தை கொடுக்கிறார் என்கிறது. இதிலேயிருந்தும் ஆதிவேதமான ரிக்தேம் எல்லாவற்றிற்கும் முன்பானது. இதில் சொல்லப்படாத விஷயமே இல்லை எனலாம் என்று தெரிகிறது.

ரிக்வேதத்தில் ஸம்ஹிதை, பதம், கிரமம், என்பது முதற்கொண்டு ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜ: தண்ட: ரத: கன: என்பதாக எட்டு விக்ருதிகள் உள்ளன.

ஸம்ஹிதை, பதம், கிரமம், மூன்றும் ப்ரக்ருதிகளாகவும் ஜடா முதல் விக்ருதிகளாகவும் சொல்லப்படுகிறது.

இந்த விக்ருதிகள் ஹயக்ரீவாதி மஹரிஷிகளால் சொல்லப்பட்டு இருக்கிறது. இதை தவிர ரிக்வேத வர்ணக்ரமம் என்பதும் உள்ளது.

இவைகள் தற்காலம் ப்ரசாரத்தில் மிகவும் சிலரால் அத்யயனம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களும் மிகவும் துல்யமாக இருக்கிறார்கள். அதையும் தவிர ரிக்வேதிகள் ப்ராம்மண சமூகத்திலேயே மிகவும் குறைவு. அதிலும் அத்யாயனம் செய்தவர்கள் குறைவு. மஹாராஷ்ட்ரப்ரதேசத்தில் ரிக்வேதிகள் உள்ளனர். அவர்களில் ஸாங்கமாக விக்ருதிகளுடன் அத்யயனம் செய்தவர்கள் எண்ணிக்கை மிகவும் துர்லபம். ஆகையால் இதில் சொல்லப்பட்ட விஷயங்களை ப்ரகாசிக்க செய்ய நம் சமூகத்தினர் மிகவும் ஈடுபட்டு பழமையான வேதத்தை நன்கு அத்யயனம் செய்ய தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். ரிக்வேதம் மொத்தம் 21 சாகைகளை கொண்டது. அதில் தற்காலம் உள்ளது சாகலம், பாஷ்கலம் என்ற 2 சாகைகள். அதிலும் மிகவும் ப்ரசித்தமாக ப்ரசாரத்தில் இருப்பது ஶாகலஶாகை என்பதுதான். பாஷ்கல சாகா வடதேசத்தில் இருப்பதாக தெரிகிறது. ஶ்ரீஸூக்தம் ரிக்வேத கிலத்தில் உள்ளது. இதில் 16 மந்திரங்கள் உள்ளன. அதை அதில் உள்ள படி சொல்லாமல் மாற்றிச் சொல்லி வருகிறார்கள். அது ரிக்வேத மந்திரமானதால் இதன் மூலம் திருத்தி அதற்கு மேற்கொண்டு சொல்லும் ச்ரியே ஜாதம் என்கிற மந்திரமானது 9வது மண்டலத்தில் உள்ளது. சொல்ல முடியுமாக செய்ய வேண்டும். அந்த மந்திரத்தை கீழே கொடுக்கிறோம்.

श्रिये जातः श्रियआनिरियाय श्रियं वयो जरितृभ्यो दधाति।
श्रियं वसाना अमृतत्वमायन् भवन्ति सत्या समिथा मितद्रौ॥

என்பதுதான். இதை ஶ்ரீஸூக்த முடிவில் திருத்திசொல்ல வேணும்.

ரிக்வேதம் பூராவும் சந்தோபத்தமானது. இதில் காயத்ரீ சந்தஸித்திலிருந்து அரம்பித்து அதித்ருதி என்கிற வரையில் 14 சந்தஸ் உள்ளது. மேலும். த்விபதா காயத்ரீ, த்விபதா விராட், த்விபதாஷ்டுத்ருப் த்விபதா ஜகதீ ஏகபதா விராட் ஏகபதாதித்ருஷ்டுப் என்பதாக 6 சந்தஸ் உள்ளது. மொத்தம் 20 சந்தஸ் உள்ளது. இவைகளுக்கு அக்ஷரகணக்கு உள்ளது. காயத்ரீ சந்தஸ் 24–ல் ஆரம்பித்து அதி த்ருதி 76 அக்ஷரங்கள் வரையில் உள்ளது. பலவிஷயங்கள் எழுத உள்ளது. காலவிராமத்தால் இத்துடன் முடித்துக் கொண்டு சமயம் வரும் பொழுது பல விஷயங்களை எழுத வேண்டும்.

शतधारं उत्समक्षीयमाणं विपश्चितं पितरं वक्त्वानाम्।
मेळिं मदन्तं पित्रोरुपस्थे तं रोदसी पिपृतं सत्यवाचम्॥

காயத்ரீ மஹிமா

காயத்ரீ என்பது மிகவும் உத்க்ருஷ்டமான ஒரு மந்திரம் ''ந காயத்ர்யா : பரோ'' மந்த்ரம் என்று காயத்ரீயை காட்டிலும் உயர்ந்ததான வேறு ஒரு மந்த்ரம் கிடையாது என்கிறது. பாக்கி எந்த மந்திரத்தையும் ஜபம் செய்து சித்தி செய்வதற்கு முன்பாக காயத்ரீயை ஜபம் செய்து (அதாவது லக்ஷம் தடவை) பிறகு எந்த மந்திரம் ஜபம் செய்தாலும் சித்தி ஏற்படும். காயத்ரீ மந்திரத்தின் த்ரஷ்டா விஸ்வாமித்ர மஹரிஷி. அவர் க்ஷத்ரியராக இருந்து காயத்ரீ ஜப சித்தியால் ப்ரும்மரிஷி ஆனவர். அதனால் தான் காயத்ரீயின் த்ரஷ்டாவாக அவர் இருக்கிறார். காயத்ரீ மந்திரமானது மூன்று வேதங்களிலிருந்தும் மூன்று பாதம் என்று சொல்லி மூன்று சேர்ந்து காயத்ரீ மந்திரம் என்பதால் எவன் ஒருவன் மூன்றும் வேளைகளிலும் காயத்ரீ ஜபம் செய்கிறானே அதனாலேயே அவன் மூன்று வேதங்களையும் அத்யயனம் செய்வதவனாக ஆகிறான். காயத்ரீ மந்திரத்தை ப்ரணவம் வ்யாஹ்ருதி இல்லாமல் சொல்லக் கூடாது ''ஸப்ரணவாம் ஸவ்யாஹ்ருதிகாம் காயத்ரீம் ஜபேத்'' என்று தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. ப்ரணவம் என்பது ஓம்காரம். வ்யாஹ்ருதி என்பது என்பது. பூ: புவ: ஸுவ: என்பது ருக் வேதத்திலிருந்து ஒரு பாதமும் எடுத்து புவ: என்பது யஜுர் வேதத்திலிருந்து ஒரு பாதமும் ஸுவ: என்பது ஸாமவேதத்திலும் ஒரு பாதமும் எடுத்து என்பதாக ஆனது என்று மனு ஸ்ம்ருதியில் சொல்லியிருக்கிறது. காயத்ரீ மந்திரமானது ஸ்தரீ, புருஷ ரூபமானது என்றும் அதை எண்ணமலும் மறைத்துக் கொள்ளாமலும் ஜபம் செய்யக் கூடாது. ஒரு இடத்தில் காயத்ரீத்யான ச்லோகத்தில் ஸ்த்ரீ ரூபமாக சொல்லபட்டுள்ளது. மற்று ஒருஇடத்தில் சொல்லும் பொழுது புருஷ ரூபமாக சொல்கிறது. ஓங்காரத்திலேயே அகாரம் ரிக்வேதமாகவும், உகாரம் யஜுர் வேதமாகவும், மகாரம் ஸாம வேதமாகவும் ஆக மூன்று வேதத்திலிருந்து ப்ரணவம் உண்டாகிறது என்பதாக மனு சொல்கிறார். முக்தாவித்ரும....

என்கிற த்யான ச்லோகத்தில் காயத்ரீ தேவியானவள் மிகவும் வெளுப்பு, நீலம், சிவப்பு, முதலிய ஐந்து விதமான முகங்களுடனும் தத்வமாகிற (தத்வம் என்பது பரமாத்மஸ்வருபம்) அக்ஷரங்களை உடையவளும் வரதஹஸ்தம் என்றால் அண்டினவர்களுக்கு அவர்கள் இஷ்டத்தை கொடுக்க கூடிய கையை உடையவள். அண்டினவர்கள் பயத்தை போக்க கூடியதும் குசத்தை உடையதும், கசை என்ற சாட்டை உடையதும், வெளுப்பான கபாலத்தை உடையதும், கதாயுதத்தையும், சங்கம், சக்ரம் முதலியவைகளை உடைய கைகளை உடையவளுமான காயத்ரீயை நமஸ்கரிக்கிறேன் என்றது த்யான ஸ்லோகம்.

மற்றொரு த்யான ஸ்லோகமானது யாதேவ: என்பது. அதில் எந்த ஸவிதாவாகிற தேவனானவன் நமக்கு நல்ல புத்தி தர்மம், ஜ்ஞானம் முதலியவைகளில் ப்ரவேசிக்க செய்கிறானே அந்த ஸவித்ரு மண்டல மத்யத்தில்

இருக்கிற (நாராயணனே) தேஜோரூபமான பகவானே உபாசிக்கிறேன் என்கிறது. இதனுலேயே காயத்ரீயான ஸ்த்ரீ புருஷ ரூபமாக உள்ளது என்பது தெளிவாகிறபடியால் காயத்ரீ ஜபத்தை துணியால் கையை மூடிக்கொண்டும் எண்ணிக் கொண்டும் செய்ய வேண்டும்.

மேலும் காயத்ரீ ஜபத்திலுல் என்னென்ன ஏற்படுகிறது என்று த்யான ச்லோகம் சொன்ன அகஸ்த்ய மஹரிஷி வ்யாக்யானத்தில் பலன்களையும் சொல்கிறார்.

பர்க:பி என்கிற ஒரு பதத்திற்கு உலகத்தைப் ரகாசத் படுத்துவதால், இருளை போக்கப் படிப்பதினுலும், அக்ஞானமாகிற தமஸை போக்குவதாலும் காலத்தினுலும் எல்லா விதமான கர்ம பலன்களுக்கு காரணமாகுவதாலும் சரீரத்திற்கு புஷ்டியை தருவதாலும் ஜீவராசிகளை காப்பாற்றுவதாலும் .அந்த சூர்ய மண்டல மத்திய வர்த்தியான நாராயணனே அனுசந்திப்போம் என்று பொருள்.

இதே அர்த்தத்தை யஜுர் வேதத்தில் உள்ள அருண ப்ரச்னத்தில் ஆதித்யோ வா ஏஷ:பி என்கிற மந்திரமானது சொல்கிறது.

மார்க்கண்டேய மஹரிஷி காயத்ரீ மந்த்ரம் எப்படி செய்ய வேண்டுமென்று உபதேசிக்கிறார்.

தர்பாஸனத்தில் உட்கார்ந்து கொண்டு பவித்ரபாணியாக சூர்ய மண்டல மத்யத்தில் உள்ள மஹாஜ்யோதி ரூபமான பகவானே (காயத்ரீயை) உபாசிக்க வேண்டும்.

எப்போதும் அந்தர்யாமியாக இருக்க கூடியவரும் எல்லா விதமான சத்கர்மாக்களை செய்ய தூண்டுகிறவருமான பரமாத்மாவான பகவானே உபாசிக்கிறேன்.

பாரத்வாஜமஹரிஷி- இதே விஷயத்தை சொல்லி ஒவ்வொரு வேளைக்களிலும் காயத்ரீ மந்திரத்தை எத்தனை ஆவர்த்தி ஜபம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்.

ப்ராதக்காலத்தில் நின்று கொண்டு காயத்ரீயை 1008 தடவையும், மாத்யான்ன, காலத்திலும் நின்றுகொண்டும் சாயம் காலத்தில் உட்கார்ந்து கொண்டும் ஜபம் செய்யவேண்டும்.

காயத்ரீ ஜபத்தை 1008 தடவை,அல்லது 108 தடவை அல்லது 28தடவை 10 தடவையாவது ஜபம் செய்ய வேண்டுமென்கிறார்.

யோகயாக்ஞவல்க்யமஹரிஷி. ஒவ்வொரு வேளையிலும் காயத்ரி எப்படி ரூபமான த்யானம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்.

காலை வேளையில் சூர்ய மண்டல மத்யவர்த்தியாயும் ருக்வேதம் சொல்ல கூடியவளுகவும் சிவப்பு வர்ணமுடைதாயும் அக்ஷம், கமண்டலு முதலியவைகளை கையில் உடையதாயும் ப்ரும்ம ரூபமாக ஹம்ஸவாஹனத்தையும் உடையுதுமாகிற தேவதையை உபாசிக்கிறேன். காயத்ரீ என்ற பெயர்.

மாத்யாந்நிக காலத்தில் ஸாவித்ரீ என்ற பெயர் உடையதாயும், யஜுர் வேதம் அத்யயனம் செய்வதாயும் வெளுப்புவர்ண முடையதாயும் சூலம் முதலிய ஆயுதங்களை உடையதாயும் தருணமாயும் ருத்ரரூபமாகவும் வ்ருஷபவாஹன முடையதாயும் இருக்கிற தேவதையை உபாசிக்கிறேன்.

ஸாயம் காலத்தில் ஸரஸ்வதீ என்ற பெயருடையதாயும்(கருப்பு) நீலமேகம் போன்ற வர்ணமுடையதாயும் ஸாமவேதம் சொல்லக்கூடியதாயும் சக்ரம், சங்கம் முதலிய ஆயுதங்களை தரிக்க கூடியதாயும் விஷ்ணுரூபமானதும் வயோதிகமாயும் இருக்கிற தேவதையை உபாசிக்கிறேன் என்று சொல்கிறார். இப்படியாக காயத்ரியைப் பற்றி பலவிதமாக மஹரிஷிகள் ப்ரசஸ்தமாக சொல்லியிருக்கிறார்கள். வேதமும் சொல்லியிருக்கிறது. ஸஹ வை தேவாநாம் என்கிற ஒரு அனுவாகம் காயத்ரீயின் மஹிமை மிகவும் விஸ்தாரமாக சொல்கிறது. அது விபரம் அதாவது ஒரு சமயம் தேவதைகளுக்கும் அஸுரர்களுக்கும் யாகத்தில் ஹவிர்பாக விஷயத்தில் தகராறு ஏற்பட்டு அஸுரர்கள் மிகவும் கடுமையான தபஸ் செய்து ப்ரும்மாவை சாக்ஷாத் கரித்து வரம் கேட்டார்கள். சூரியனுடன் சண்டை போடவேண்டுமென்று ப்ரும்மாவும் அதன் படி வரம் கொடுத்தார். அதன்பிறகு மந்தேஹாள் அருணாள் என்கிற அஸுரர்கள் சூரியனுடன் சண்டைக்கு செல்கிறார்கள். அந்த சமயம் உதிக்கிற சூரியனுடன் சண்டையிடுவதால் ஏற்படும் அவஸ்தைகளை போக்குவதற்காக ப்ரும்ம க்ஷத்திரியவைஸ்யர்கள் சந்த்யா காலத்தில் காயத்ரீயை ஜலத்தில் அபிமந்திரித்து அந்த ஜலத்தை தூக்கி விடுகிறார்கள். அந்த ஜலமானது (காயத்ரி மந்திரம் சொன்ன ஜலம்) வஜ்ராயுதமாக மாறிஅந்த அஸுரர்களை த்வீபாந்தரத்தில் கொண்டு போகிறது. அதன் பிறகு ஸூர்யன் தன் ஜ்யோதிஸ்களால் உலகத்தை சந்தோஷப்படுத்துகிறான். அந்த சூர்ய மத்யவர்த்தியான ப்ரும்ம ரூபமான) பரமாத்ம ரூபமானவனை உபாசிக்கிறேன் என்கிறது. அதே போல் த்வாதசி முதலிய வ்ரத தினங்களில் சமயத்தில் பாரணை செய்ய முடியாவிட்டால் காயத்ரீயை 10தடவை ஜபித்து தீர்த்தத்தை சாப்பிட்டால் வ்ரத பலன் கிடைக்கிறது.என்று தைவல மஹரிஷி சொல்கிறார். ஜப காலத்தில் மௌனமாக அந்தர்யாமியான பகவானை த்யானம் செய்து கொண்டு ஜபம் செய்ய வேண்டும். இன்றும் காயத்ரீயைப் பற்றிய விஷயங்கள் நிறைய உள்ளன. யதா மதி இங்கு விக்ஞாபித்து இருக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீ மதே நிகமாந்த மஹா தேசிகாய நம :

உய்யுமாறு...

(ஸ்ரீ மதுபயவே. வித்வான் வில்லூர் v.s. கருணாகராசாரியர் ஸ்வாமி)

எம்பெருமானுக்கு அனந்தன் என்ற ஒரு திருநாமம். ஆழ்வார் அண்ணலை அச்சுதனை அனந்தனை அனந்தன் தன் மேல் நண்ணி நன்குறைகின்றானை என்று இத்திருநாமத்தை குறிப்பிட்டு மகிழும் பாங்கே தனி. இந்த அனந்தம் என்னும் திருநாமம் காரணப் பெயர். அதாவது வரையற்றவன் என்ற அடிப்படையில் வந்த திருநாமம் ஒரு குறிப்பிட்ட பொருளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் இருப்பது என்கிற வஸ்துபரிச்சேதம் தேச பரிச்சேதம் கால பரிச்சேதம் ஆகிய மூன்று பரிச்சேதங்கட்கு அப்பாற்பட்டவன் என்று பொருள்.

எம்பெருமானுடைய இத்தன்மையை அனந்தத்வம் என்பர். எம்பெருமானை ஸத்யத்வம் ஞானத்வம் அனந்தத்வம் ஆகிய பண்புகளையிட்டு வேதம் நமக்குப்புரிய வைக்கின்றது. இதனை ஸ்வரூப நிரூபக தர்மங்கள் என்பர் சாஸ்திரம் வல்லுநர். திருமங்கையாழ்வார் தமிழில் நந்தா விளக்கே அளத்தற்கரியாய் என்றும் தொடரில் இதனை குறிப்பிட்டருள்வதாக ஆழ்வான் ரஸித்தருள்வராம். தைத்திரீய உபநிஷத்தில் உள்ள ஆனந்தவல்லி என்னும் பகுதி தான் ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்மா, யோ வேதா நிஹிதம் குஹாயாம், ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ப்ரம்ஹணா ஸஹ ஷபஸ்சிதா என்று இதைக் காட்டியருளியது. அங்கு அனந்தம் என்கிற தொடர் அளத்தர்க்கரியவன்- மூவகை பரிச்சேதங்களும் அற்றவன் என்று பொருள் பட இருந்தாலும் எம்பெருமானுக்கே உரிய இடுகுறிப் பெயராகவும் அனந்தன் என்கிற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதாக நம் முன்னோர்கள் கருதியுள்ளனர்.

அனந்தன் என்கிற எம்பெருமானுக்கே உரிய இடுகுறிப் பெயரை இங்கு வேதம் பயன்படுத்தி பரப்ரம்ஹம் அந்த அனந்தனே என்று அறுதியிட்டதாகவும் அனந்தம் என்கிற இடுகுறிப் பெயரில் (ரூடியில்) பொருள் கொள்வதே மிகப் பொருத்தமானது என்றும் ஸ்ரீ அம்மாள் பரதத்வ நிர்ணயத்தில் காட்டியுள்ளார். (இடுகுறிப் பெயராயினும் இதுவும் ஒரு காரணத்தை யிட்டு வந்ததால் இதனை யோகரூடம் என்று கொள்ளவேண்டும்.)

அனந்தன் என்றால் எல்லையற்ற பண்புகட்கு இருப்பிடம் ஆனவன் என்றும் பொருள். எல்லையற்ற கல்யாணகுணங்கள் எம்பெருமானுக்கே உரியவை அல்லவா? இத்தகைய அனந்தனுக்கு உள்ள கல்யாண குணங்கள்

அனந்தங்களாயினும் அவைகளில் தலையாய ஆறு குணங்கள் ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் என்பவை ஆகும்.

தவானந்த குணஸ்யாமி ஷடேவ ப்ரதமே குணா:।

யைஸ்த்வையைவ ஜகத்குக்ஷௌ அன்யேப்யந்தர்நிபே விதா:॥

என்ற ப்ரமாணத்தின்படி இந்த ஆறுகுணங்களுக்குள் எம்பெருமானுடைய அனந்தமான கல்யாண குணங்கள் எல்லாம் அடங்கி இருக்கின்றன; அவனுடைய வயிற்றிலே அனைத்துலகமும் ஒடுங்கி இருப்பது போல.

இவற்றில் ஞானமாவது அனைத்தையும் உணரும் தன்மை. எந்த விதமான நிலையிலும் குன்றாததாய், எந்தத் துணையும் இன்றி அனைத்தையும் உணரும் தன்மை. ஸ்வாமி நாதமுனிகள் யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரதயக்ஷேண ஸதா ஸ்வத:॥ என்று ந்யாயதத்வத்தில் இதனைக் குறிப்பிட்டருளினார்.

பலம் என்பது களைப்பே இன்றி அனைத்தையும் தாங்கும் வலிமையை குறிக்கும். ஐச்வர்யம் என்பதுஅனைவரையும் மற்றும் அனைதையும் தானிட்ட வழக்காய் ஆளும் தன்மை. வீர்யம் என்பது எல்லாபொருட்கும் உபாதான காரணமாக இருந்தும், எல்லாவற்றையும் ஆண்டு கொண்டிருந்தும் தன்னில் யாதொரு மாற்றமும் இல்லாத தன்மை.

சக்தி என்பது மற்றவர்களால் ஆகாததால் ''ஆகாதவை'' என்று ஏற்கப்பட்டவைகளைக் கூட ஆகக்கூடியவைகளாக ஆக்கும் தன்மை.

தேஜஸ் என்பது தனக்கடங்காத ஸ்வதந்த்ரனான) மற்றொரு கூட்டாளியை எதிர்பார்க்காது செயலாற்றும் தன்மை.

இந்த ஆறு குணங்களை ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் என்ற வரிசையில் தான் குறிப்பிட வேண்டும். பாஞ்சராத்ரத்தில்

பலம் வீர்யம் ததா தேஜ: இத்யேதத் து குணத்ரயம்।

ச்ரமாத்யவத்ய பாவாக்யம் ஞானாதேருபஸர்ஜனம்॥

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞான-பல-ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜ: என்று அனந்தனின் குணங்களை சுருக்கியருளுகின்றார். இதற்கு ரக்ஷயான வ்யாக்யானத்தில் ஸ்வாமி தேசிகன் இந்த வரிசைக்கு பின்னணியை காட்டுகிறார்.

உலகில் அறிவுடையவன் என்று கூறப்படுவனுக்குக் கூட உறக்கம் மயக்கம் போன்ற நிலையில் தன்னுடைமையைப் பற்றிய அறிவுயில்லாத நிலைகள் இருக்கக் காண்கிறோம். அப்படி ஞானம் இருப்பினும் அந்நிலைகளில் அவன்

உடைமைகளை தாங்கும் பலம் அவனுக்குக் கிடையாது. அவன் உணர்ந்து தாங்கும் பொருட்களைக் கூட, அனைத்து சமயங்களிலும் விருப்பப்படி ஆளும் ஐச்வர்யம் கிடையாது. அப்படி ஆளும் வல்லமையிருப்பினும் அவைகளைத் தாங்கியதாலும் ஆண்டதாலும் அலுப்புடன் சலிப்பும் களைப்பும் வராதிருக்கும் வீர்யம் இருப்பதில்லை. அப்படி அலுப்பு சலிப்பு களைப்பு மற்றும் இவை வாராதிருப்பினும் அப்பொருள்களுடைய இருப்பு பாதுகாப்பு இவைகள் அனைத்தும் இவனிட்ட வழக்காய் இருக்கும் சக்தியிருப்பதில்லை. அப்படி சில சமயங்களில் இவைகளை இவன் செய்தாலும் மற்றோர் துணையை எதிர்பார்க்காமலேயே செய்வதாகிய தேஜஸ் இருப்பதில்லை. எம்பெருமானுக்கு இத்தகைய வரையறைகள் இல்லை எனவே இவ்வரிசையில் இந்த ஆறு குணங்களை ஆன்றோர் கூறுகின்றனர் .

வேதத்திலும் ஸ்வாபாவிகீ ஞான பலக்ரியா ச என்று ஓதுமிடத்து க்ரியா என்பது ஐச்வர்யத்தைக் குறிக்கும் சொல். இத்தொடருக்கு வ்யாக்யானமிடுகையில் ஜிக்ஞாஸாதிகரணத்தில் ச்ருத ப்ராசிகையில் க்ரியா- நியமனம் என்று பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. ச்ருத ப்ரகாசிகையின் வ்யாக்யானமான பாவ ப்ரகாசிக்கையில் ஸ்ரீ ரங்க ராமானுஜ ஸ்வாமியாம் உபநிஷத் பாஷ்யகாரர் க்ரியா என்பதற்கு அசைவு போன்ற செயலை அர்த்தமாக கொள்வது பொருந்தாது ஏனெனில் எம்பெருமான் விபு எங்கும் பரந்தவன் அவனுக்கு அசைவு என்பது பொருந்தாது, ஆகையால் இந்த ஸ்வரூப குண ப்ரகரணத்தில்) இடத்தில் க்ரியா என்பது நியமனத்தைக் கூறுவதாக புரிந்து கொள்ள வேண்டும் என்று இதன் பாவத்தினை காட்டி அருளியுள்ளார். ஆக இப்ப்ரகரணத்தில் க்ரியா என்பது நியமனம் என்பதாயிற்று. ஆக ஞான- பல- ஐச்வர்யம் என்ற வரிசையையே வேதமும் காட்டுகிறது.

அவ்வாறாக ஆராவமுதப் பெருமானாம் அனந்தனுடைய ஆறு குணங்களை அனுபவித்தோம் ''தத்குணான் உத்க்ருணாதி,'' என்று இக்குணானுபவத்திற்கே வ்யாஸபகவான் பல ப்ரஹ்ம ஸூத்ரங்களை இட்டருளினார். எனவே தான் அதன் வ்யாக்யானமான ஸ்ரீ பாஷ்யத்தினை அனந்தனின் (ஆதிசேஷனின்) அவதாரமான எம்பெருமானார் ' பிபந்த்வன் ஹம்' என்று ஸ்ரீ பாஷ்யத்தை இடையறாது அனுபவிக்க வேண்டும் என்று காட்டினார். குணானுகதனே ஹரே:ய என்றது பாகவதம்.

இவ்வெம்பெருமானிடம் ஈடுபட்ட அடியார்கட்கும் இவனைப் போலவே பல கல்யாண குணங்கள். அவைகளும் அனந்தமாயினும் அடிப்படையாகச் சில அமைவதுண்டு. இப்பொழுது ஷஷ்டயப்தபூர்த்தி காணும் ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் பக்கலில் உள்ள அணந்த கல்யாண குணங்களில் அடியேன் அனுபவித்த ஆறு அடிப்படை குணங்களை குறிப்பிட்டு மகிழ்கிறேன்.

முதல் குணம் ஞானம் ஸ்ரீ மத் ஆண்டவனுடைய தர்க்க சாஸ்த்ர ஞானம், வேதாந்த ஞானம், ஸங்கீத ஞானம், வைத்ய சாஸ்த்ர ஞானம்-தமிழ் தெலுங்கு போன்ற

பன்மொழி புலமை இவைகளை நாடறியும் . ஆனாலும் ஸ்ரீமதாண்டவனுடைய வ்யுத்பத்தி மிகவும் ஆழமானது விசாலமானது என்பதை அடியேன் உணர உதவிய நிகழ்ச்சி ஒன்று உண்டு. ஆண்டவன் நங்நல்லூர் ஹயக்ரீவனை மங்கலாசாஸனம் செய்ய எழுந்தருளியபோது ஸ்வாகத பத்யங்களை எழுதி ஸமர்பிக்கும் பாக்யம் அடியேனுக்கு கிட்டியது. அடியேன் நங்கநல்லூரில் முகத்தில் கேஸரியான பகவானும், கவிதார்கிக கேஸரியான ஆசார்யனும் ஆக இரு கேஸரிகள் விளங்கி இருப்பதைக் காட்டி (கேஸரி என்றால் குதிரை என்றும் சிங்கம் என்றும் பொருள்) ஒரு சுலோகம் அமைத்திருந்தேன். அதன் பிறகு ஸ்ரீமதாண்டவன் சில இல்லங்களில் வேணுகோபாலனுடன் டோலைக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஒரு இல்லத்தில் எம்பெருமானுக்கு கேஸரீ நிவேதமாய் விநியோகமாயிற்று. வித்வான் வடுவூர் நடாதூர் வீரராகவாசார்ய ஸ்வாமி அடியேனைப் பார்த்து ஸ்வாமி, இதோ மூன்றாவது கேஸரீ என்று கூறினார். கேஸரிக்கள் பல இருக்கட்டும். ஆனால் வேஸரீக்கள் இல்லாது இருந்தால் சரி என்று ஆண்டவன் அருளியாயிற்று. அடியேனுக்கு நல்ல ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தி இருப்பதாக அடியேனுக்கு ஓர் ப்ரமம் உண்டு. ச்ருங்கேரி சாரதாபீடம் அபிநவவித்யாதீர்த்த பாரதி ஸ்வாமிகள் உங்கள் திருத்தகப்பனார் உங்களுக்கு அபாரமான வ்யுத்பத்தியை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள் என்று பாராட்டியதுண்டு; மற்றும் அபிநவதேசிக உத்தமூர் ஸ்வாமியும்,.பண்டிதராஜ D.T. ஸ்வாமியும், வ்யுத்புத்தி நன்றாக இருக்கிறது என்று அபிநந்தனம் செய்தது உண்டு.

45- ஆம் பட்டம் ஸ்ரீமதழகியசிங்கர் 1976ல் அஹோபிலத்தில் நடந்த மாலோல வித்வத்ஸதஸ்ஸில் (அப்பொழுது அழகியசிங்கர் பூர்வாச்ரமம்) அடியேன், பேச்சு வார்த்தையில் ஒரு பெரிய வித்வானிடம் முந்திரி பருப்புக்கு ஸமஸ்க்ருதப் பெயர் அடியேனுக்குத் தெரியவில்லை.இங்கு அருளிஞல் தேவலை என விண்ணப்பம் செய்து கொண்டிருந்த போது, தலையிட்டு உனக்கு தெரியவில்லை என்றுல் வேறு யாருக்கும் தெரியாது ஸமஸ்க்ருத வார்த்தையே இல்லை என்று முடிவு செய்து விடலாம் என்று சொல்லியருளியதுண்டு. பழைய தலை முறையில் வித்வான்களுக்கு அமரகோசம் மனப்பாடம் ஆக இருந்தது. அடியேனுக்கும் திருத்தகப்பனார் அமரகோசம் ஸந்தை சொல்லிக் கொடுத்தாயிற்று. ஆஞல் அடியேன் தான் மனப்பாடம் செய்து கொள்ளவில்லை. ஆஞலும் திருத்தகப்பனார் பரமக்ருபையாக வ்யுத்புத்தி வளர்வதற்காக பஞ்ச மஹாகாவ்யங்களிலும் பல ஸர்கங்கள் பாடமெடுத்து இரண்டு சம்பு ஐந்து நாடகங்கள் எனப் பாடம் ஸாதித்து வ்யுத்பத்தியை விபுலமாக்கி வைத்திருந்ததால் இந்த பாராட்டெல்லாம் கிடைத்திருந்தது.இவ்வளவு இருந்தும் அடியேனுக்கு வேஸரம் என்ற சொல்லுக்கு அர்த்தம் புரியவில்லை.'நவம் பரிபவம் க்ருதம்' என்ற நிலை. வடுவூர் நடாதூர் வீரராகவார்சார்யருக்கும் அந்தச் சொல் புதியதாகப்பட்டது.'ஸ்தப்தோஸி' என்ற நிலை நீங்கி அபிமானபங்கமாய் ஆண்டவனிடமே விண்ணப்பித்த பொழுது வேஸரீ- பெண் கோவேறிக் கழுதை என்று அருளியபடி. பிறகு அடியேன் வேஸர:- ஸங்ராக்ய: என்று மல்லிநாத ஸூக்தி மாகம் 12-ஆம் ஸர்க்கம் 19-ஆம் சுலோகத்தின் வ்யாக்யானத்தில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தேன்.அந்த சுலோகம்

தூர்ணம் ப்ரணேத்ரா க்ருதநாதமுச்சகை:

ப்ரணோதிதம் வேஸர யுக்மமத்வநி

ஆத்மீய நேமி க்ஷத ஸாந்த்ர மேதிநீ

ரஜஸ் சயாக்ராந்திபயாதி வாத்ரவத்॥

என்பதாகும். இப்படி பல அறிய பதங்களை நிகண்டு ப்ரமாணபூர்வமாக எடுத்துச் சொல்லக்கூடிய வித்வான்கட்கு இப்பொழுது துர்பிக்ஷமே. இது ஆண்டவனுடைய அபாரவ்யுத்பத்திக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஸ்ரீமதாண்டவனுக்கு இந்த ஞானத்துடன் ஆர்ஜவமும் இணைந்திருப்பது மிக அழகானது ஆகும். ஸ்ரீமதாண்டவன் சென்னை மயிலையில் எழுந்தருளி இருந்த பொழுது, மார்கழி மீ உத்தராடத்தை ஒட்டி, அதாவது அடியேனுடைய பிதாமஹனும் ப்ராசார்யருமான ஸ்வாமியின் திருநக்ஷத்ரத்தை ஒட்டி அந்த ஸ்வாமி திருவாய்மொழிக்கு ஸம்ஸ்க்ருத சுலோக வடிவில் அருளிச் செய்திருந்த மொழிபெயர்ப்பில் ஒவ்வொரு வித்வானுக்கு ஒரு திருவாய்மொழி என்ற அளவில் தேசிக பவனத்தில் நடக்கும் வித்வத் ஸதஸ்ஸை தலைமையேற்றி நடத்தித் தரவேண்டும்; மற்றும் கிளரொளி என்றும் பதிகத்தின் மொழிபெயர்ப்பை ஆண்டவனே உபந்யஸித்தருளவேண்டும் என்றும் திருத்தகப்பனார் ப்ரார்த்தனையை விண்ணப்பிக்கச் சென்றேன். பரமக்ருபையோடு ப்ரார்த்தனையை ஏற்றுக்கொண்ட ஸ்ரீமதாண்டவன் கிளரொளிலி கடைசி பாசுரத்தில் உள்ள பொருள் என்று இவ்வுலகம் என்றும் தொடரில் யதார்த்தக்யாதி வாதம் பற்றி ஸூசனை உண்டே. அது பற்றி பிதாமஹ ஸ்வாமி சுலோகம் எப்படி அமைந்துள்ளது என்று பார்க்க வேண்டும் என்று ஸாதித்தாயிற்று.

அடியேன் அதுவரை எந்த வ்யாக்யானங்களிலும் இவ்விடத்தில் யதார்த்தக்யாதி பற்றி ஆழ்வார் குறிப்பிட்டருளியதாக இருப்பதாக கண்டதில்லை. இருந்தாலும் ஸ்ரீமதாண்டவன் ஸாதித்து விட்டபடியால், அதுபற்றி மீண்டும் வ்யாக்யானங்களில் ஸேவித்துப் பார்க்க வேண்டும் என்று வந்துவிட்டேன். அடியேனிடம் இருந்த அனைத்து வ்யாக்யானங்களையும் மீண்டும் அலசிப் பார்த்தேன். ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த க்யாதி ஸங்க்ரஹ சுலோகத்தில் ச்ருதி விதபி மதா என்று யதார்த்தக்யாதிக்கு சுருதி மறையின் அடிப்படை உண்டாகையால் அதற்கு ஒரு ஏற்றம் ஸூசிப்பிக்கப்பட்டுள்ளது. அதிகரணஸாராவளீயில்

அக்யாதிஸ் த்வந்யதா தீ:, ஸாததிஷ்ட்டாநபுத்தி:

பாஹ்யார்த்தாகார யோக:, ஸதஸதிராதீ: சூன்யதீ: ஆத்மதிஸ்ச

ப்ராந்தெள ஸர்வத்ர தத்தத் பரமதகதகை: ஆத்ருதா: பஷபேதா:

ப்ராயோ புத்திர் யதார்த்தா ச்ருதிவிதபிமதா க்வாபி பேதாக்ரஹாதி॥

என்று ஒன்பது விதமான க்யாதிகளை நிரூபித்தருளும் சுலோகத்தில் நம்

ஸம்ப்ரதாயத்தில் பெரும்பாலான ப்ராந்தி ஸ்தலங்களில் யதார்த்த க்யாதி தான்; அதற்கு ப்ரமாணமாக வேதம் உண்டு என்பதெல்லாம் கூறப்பட்டுள்ளன.தமிழ் வேதத்திலும் ப்ரமாணம் இருப்பின்சுவை அதிகமாயிற்றே. ஆனால் பூர்வர்கள் யாரும் இதுபற்றி ப்ரஸ்தாவிக்க வில்லையே என்றெல்லாம் குழம்பிக் கிடந்தேன். இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. ஸ்ரீமதாண்டவன் என்னை ஆச்ரமத்திற்கு வரும்படி நியமித்தாயிற்று என்று செய்திவந்தது. உடனே சென்றேன். அடியேனை பார்த்தவுடன் ஸ்ரீமதாண்டவன் முதலில் சொல்லியருளிய வார்த்தை எங்கோ ஞாபகத்தில் யதார்த்தக்யாதி பற்றி பொருளென்று என்னும் பாசுரத்தில் குறிப்பிடுவதாக வ்யாக்யானங்களில் இருப்பதாக சொன்னேன். ஆனால் அங்கு இல்லை. இதை உனக்குத் தெரிவிக்கவே வரவழைத்தேன் என்று அருளியாயிற்று. சில பெரிய வித்வான்கள் பல புஸ்தகங்களில் ஸேவித்துப் பார்த்தால் அப்படி இருக்காது. விளக்கம் கேட்டால் '' கோபேன பூரஸேத் என்று செயல் படுவார்கள்.அடியேனுக்கு ப்ரம்ஹவிதபசார தூரகனுக இரு- த்ரஸ்ய ப்ரம்ஹவிதாகஸ: என்ற வார்த்தைகளை நினைவுக்கூர்ந்து சரி என்று போய் விட வேண்டிய நிலை

தான். எனவே, ஸ்ரீமதாண்டவன் குரு-வாகத் தானே அழைத்து, ஆருக்ஷ-வான இவனைக் குழப்பக்கூடாது என்று செயல்பட்ட, அறிவு நேர்மையை நினைத்து நினைத்துப் பரவசப்படுபவன் அடியேன்.

இது மட்டுமா? காலம் தவறுமை என்பதும் ஆண்டவனுக்கே உரிய மற்றோர் பண்பு. தேசிகபவனத்தில் ஸதஸ் ஆரம்பிக்கும் நேரம் மாலை 2.00மணி என்று சொல்லிவிட்டேன். வயோவ்ருத்தரான திருத்தகப்பரையும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு தாம்பரத்தில் இருந்து அங்கு அடியேன் வருவதற்கு முன்னமேயே ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியாகி விட்டது. அடியோங்கள் ஸ்வாகதம் சொல்வதற்கு முன் ஆண்டவன் அடியோங்கட்கு ஸ்வாகதம் சாதிக்கும் படி ஆகிவிட்டதே என்று திருத்தகப்பனார் வருந்திய பொழுது அதனால் என்ன? பரஸ்பரம் பாவயந்த: அல்லவா? என்று அருளியாயிற்று. நான் ஸந்யாஸி எனக்கு இதைவிட வேறு என்ன வேலை? ஸங்கடா ஹரி ஆஹிதாகனீனும் ப்ரத்யவாயை: க்ருஹஸ்ததா என்று அங்கு உள்ள அனுஷ்டான பாரம் அடியேனுக்குத் தெரியாததா! என்று திருத்தகப்பனாரை ஸமாதானப் படுத்தியாயிற்று.

அன்று ஸபையில் ஆத்யக்ஷ்யம் வஹித்து ஆண்டவன் ஸபையை நடத்திப் போந்த அழகே தனி. பொதுவாகச் சில பண்டிதம் மன்யர்கள் கவிஹ்ருதயத்தைப் புரிந்து கொள்ள முயலாமலேயே பாடபேத ப்ரதசர்னம் பண்ணத் தொடங்குவார்கள். ஸபையை ஏற்பாடு பண்ணிய அடியோங்கள் ஸதனுகத ஸ-தனுபவாதம் கூடாதே என்று அவர்கள் சொல்வதை ஜீரணிக்க முடியாமலும், கண்டிக்க முடியாமலும் தவிப்போம்.ஆனால் ஸ்ரீமதாண்டவன் ப்ரயோகத்தைச் சரியாக்குவதே பண்டித க்ருத்யம்; தோஷம் சொல்வதல்ல என்று மிக அழகாக நிர்வாஹம் காட்டி வந்தாயிற்று. உதாஹரணமாக இரண்டாம் பத்து ஏழாம் திருவாய்மொழியின் 12-ஆம்

பாசுரத்தின் மொழி பெயர்ப்பைப் பற்றிக் குறிப்பிடலாம். அப்பாசுரம்:-

'' தாமோதரனைத் தனி முதல்வனை ஞாலமுண்டவனை

ஆமோ தரமறிய ஒருவர்க்கென்று தொழுமவர்கள்

தாமோதரனுருவாகிய சிவர்க்கும் திசை முகர்க்கும்

ஆமோ தரமறிய எம்மானை என் ஆழி வண்ணனையே என்பதாகும்.

இதற்கு மொழி பெயர்ப்பான சுலோகம்:-

தம் தாமோதரம் ஏக காரணமிதம் ஸம்புக்தவந்தம் ஜகதகக்கக

கஸ்யாத்ராஸ்தி ஸமர்த்ததேதி விதிதும் தம் ஸந்நுதாநாமபி

கிம் தாமோதரதேஹதாம் கதவதாம் சக்யம் சவாநாம் ததா

திக் வக்த்ராணாமபி வேதிதும் மம விபும் வார்த்தி ஸ்வபாவம் மமா

(இத்திருவாய் மொழிக்கு ஸம்ஸ்க்ருத சுலோக ரூபமான வடிவில் கல்கி என்னும் மஹான் எழுதி அச்சிட்ட புத்தகமும் உண்டு. அப்புத்தகத்தில் இப்பாசுரத்துக்கு உரிய சுலோகம்:-

ஸ்ரீ தாமோதரமாதிமூலம் அகிலாந் லோகாந் ஸ்வயஞ் சோதரே

பிப்ராணம் கதமப்ரமேய விபவம் ஜ்ஞாதும் வயம் சக்நும:

இத்யேவம் ஹி சதுச்வரேச்வர முகா: தேவாஸ்ச தாமோதர-

ஸ்யாம்சா: ஸ்தோது மநர்ஹதாம் ஜகுரஹோ நாதம் ந மே தே விது:

என்று உள்ளது. இரண்டு மொழிபெயர்ப்புக்கும் உள்ள வாசியை வித்வான்கள் ஆராய்ந்து ரஸிக்கலாம்.)

ஸபையில் ஒரு பெரிய வித்வான் பாசுரத்தில் சிவற்கும் திசைமுகற்கும் என்று உள்ளது. ஆனால் அது ஏகவசனம் அல்லவா? மொழி பெயர்ப்பில் 'சிவானாம்' திக்வக்த்ராணாம் என்று பஹுவசனம் ஆகக் காணப்படுகிறதே என்று ஆட்சேபம் தெரிவித்தார்.

ஸாக்ஷாத் ஸ்வாமியின் இருபத்திநாலாயிரப்படியில் சிவர்க்கும் -ருத்ரர்களுக்கும், ப்ரத்யண்டம் சிவபேதேந சிவ பஹுத்வாத் பஹுவசனம் திசை முகர்க்கும்-சதுர்முகர்களுக்கும் பஹுவசனம் பூர்வவத்'' என்று உள்ளது. அதன் அடிப்படையில் இங்கு பஹுவசனமாக மொழிபெயர்ப்பு என்று அடியேன் ஸமாதானம் சொல்லத் தொடங்கினேன்.

அந்த ஸ்வாமி ஸாக்ஷாத் ஸ்வாமியின் வ்யாக்யானத்தை அவலம்பிக்காத ஸம்ப்ராதாயத்தினர் என்பதை அடியேன் மறந்திட்டேன். இங்கு திருவாறா

யிரப்படியில் 'பரமபுருஷ சேஷதைகரஸஸ்வபாவரான சிவர்க்கும் திசைமுகர்க்கும்' என்று தான் உள்ளது. ஒன்பதினாயிரப்படியில் எம்பெருமானுக்கு சரீரவத் அந்தரங்கரான ருத்ரனுக்கும் ப்ரஹ்மாவுக்கும் என்று உள்ளது. பெரியவாச்சான் பிள்ளையின் இருபத்து நாலாயிரப்படியில் அவனுக்கு சரீரவத் அந்தரங்கரான ருத்ரனுக்கும் ப்ரம்ஹாவுக்கும் என்ற வ்யாக்யானம் உரைகாரரும் ருத்ரனுக்கும் ப்ரம்ஹாவுக்கும் என்றே பன்னீராயிரத்தில் பணித்தார். ஈடு முப்பத்தாராயிரப்படியில் ஸர்வேச்வரனுக்கு சரீரவத் விதேயரான சிவர்க்கும் திசைமுகர்க்கும் என்றே உள்ளது. மேற்கூறிய ஐந்து வ்யாக்யானங்களில் திருவாறுயிரப்படி, ஈடு ஆகிய இரண்டு உரைகள் தவிர மற்றைய மூன்று வ்யாக்யானங்களில் தெளிவாக ஏகவசனம் காட்டப்பட்டுள்ளது. இதை வைத்துக் கொண்டு அந்த ஸ்வாமி பஹுவசனம் ஆக மொழிபெயர்த்ததை ஆட்சேபித்தார் போலும். தஸ்யாபி பக்ஷாநதர்கதத்வாத் என்று ஸாக்ஷாத் ஸ்வாமி மீது ஆட்சேபமாகி விட்டது!

ஸ்ரீமதாண்டவன் ஈட்டின் அடையவந்தான் அரும்பத உரையில் உள்ள சிவர்க்கும் திசைமுகர்க்கும் இதி பஹுவசன ப்ரத்யயோ ரேப: என்பதை நினைவூட்டும் வகையில் அந்த ஸம்ப்ரதாயத்திலும் பஹுவசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று கூறி அருளினார். இங்கு சிவற்கு என்றுல் ஏகவசனம் சிவர்க்கு என்றுல் பஹுவசனம் என்பது தமிழ் இலக்கண நெறி. திருநெடுந்தாண்டகத்தில் இந்திரற்கும் பிரமற்கும் என்கிற பாசுரத்தில் ஏகவசனமா? பஹுவசனமா? என்று ஸ்ரீகாஞ்சி அண்ணங்கராசார்யஸ்வாமி தாம் இட்ட உரையில் விசாரம் செய்துள்ளார். அபிநவ தேசிக உத்தமூர் ஸ்வாமி இந்திரர்க்கும், பிரமர்க்கும் என்று எழுதினால் பஹுவசனமும், இந்திரற்கும் பிரமற்கும் என்று எழுதினால் ஏகவசனமும் ஆக அர்த்தம் கொள்ள வேண்டும் என்று காட்டியுள்ளார். இவ்வளவும் ஸ்ரீமதாண்டவன் திருவாக்கில் சுருக்கமாக ஸூத்திரம் போல் வந்ததைப் பின்னிட்டு அடியேன் உணர்ந்தேன். ஆனால் ஸபையில் ஆண்டவன் ஸமுதாயே ஏகவசனமாகக் கொண்டால் ஸமர்த்திக்கலாம் என்றுஇலக்கண நெறியில் தலை சுற்றுமல் ஓர் எளிய வழியையும் காட்டியருளியாயிற்று. இதல்லவோ பாவுகரான பண்டிதர் செய்ய வேண்டிய கார்யம்! பஹுவசனம் கூறுவது சைவ மரபிலும் இருப்பதால், இங்கு பஹுவசனமே பொருந்தும் என்றும் ஸ்ரீமதாண்டவன் அருளியாயிற்று. இப்படி ஞானம், நேர்மை, காலம் தவறுமை, அழகாகத் தலைமை தாங்கும் தன்மை என்ற குணங்கள் இருந்தாலும் பரிவு என்பது பண்டிதர்கள் பக்கலில் காண அரிய ஒன்று. தேரழுந்தூர் ஆண்டவன் நூற்றாண்டு ஸதஸ்ஸில் பங்கேற்கச் சென்னையிலிருந்து காஞ்சிக்கு அடியேன் மோட்டர் பைக்கை ஓட்டிக் கொண்டு சென்றேன். பஸ்ஸில் சென்றுல் ஸ்நானம் செய்து விட்டு ஸபைக்குப் போக வேண்டும். விவிக்தமாக மோட்டர் பைக்கில் சென்றுல் அந்த ச்ரமம் இல்லை என்று அடியேன் செய்த ஏற்பாடு இது. ஆனாலும் வழியில் சிறிய விபத்து ஏற்பட்டு, இடது மணிக்கட்டில் சிராய்ப்பு ஆகிக் குருதி வடிந்து கொண்டிருந்தது. அத்துடனேயே ஸதஸ்ஸில் ஸப்த விதானுபபத்தி பற்றி வாக்யார்த்த விண்ணப்பம் செய்யத் தொடங்கினேன். ஸ்ரீமதாண்டவன் ரத்தக் காயத்தைப் பார்த்துப்பதறி உடனேயே

பாண்ட்-எய்டு வாங்கிவர நியமித்து, அதைப் போட்டுக் கொள்ள நியமித்தாயிற்று. பல மாதங்கட்குப் பிறகு சென்னை எழுந்தருளிய போது கூட இடது மணிக்கட்டைக் காண்பிக்கச் சொல்லி காயம் சிறிது தான். ஆனாலும் தழும்பு பெரிதாக உள்ளதே? என்று பரிவுடன் விசாரித்தாயிற்று. பாடசாலைக்கு வரும் மாணாக்கர்கள் அவ்வளவு துடியாக இருப்பதில்லை என்று யாரோ குறைப்பட்டுக் கொண்டதை நினைவில் கொண்டு போலும், தேரழுந்தூர் ஆண்டவன் சதமான மஹோத்ஸவ உபந்யாஸத்தில் பொதுவாகத் தாய் தந்தையர்கள் சரி இல்லாத ஏழைக் குடும்பத்திலிருந்து அவ்வளவு துடிப்பற்றவர்கள் தான் நம் பாடசாலைகட்குப் படிக்க வருவார்கள். எனவே அவர்களை நாம் மிகவும் பரிவுடன் அணுக வேண்டும் என்றருளியாயிற்று. மத்யே மாதா ஜட இவ ஸ்நேஹ வத்ஸலா மாத்ருஸ்நேஹத்வம் என்ற மஹாகுணம் அல்லவா இது!

இவ்வளவிருந்தும் ராஸிக்யம் என்பது பலருக்கும் இருக்காது. நம் ஆண்டவனுக்கு ராஸிக்யம் நிஸர்க்க ஸித்தம் எனலாம். முக்கூர் ஸ்ரீமதழகியசிங்கர் பற்றிக் குறிப்பிட்டு அந்த அழகிய சிங்கருடைய வார்த்தைகள் கோபத்துடன் வருவது போல இருந்தாலும் அதன் பின்னணியில் உள்ள அன்பும் அருளும் கிடைக்க அரிதானது. அந்த அழகிய சிங்கர் சீற்றத்துடன் சொல்லும் வார்த்தைகள் எனக்கும் கிடைக்காதா! என்று எண்ணுவதுண்டு. நீ பாக்யசாலி. உன்னைப் பற்றி அழகியசிங்கர் வில்லூர் ஸ்வாமி இப்படிப் பிள்ளை பெற்றிருக்கிறார் என்று நம் ஸபையில் ஒரு முறை உன் வாக்யார்த்தத்தைக் கேட்டு ப்ரேமபூர்வமாகப் பாராட்டியதை எனக்கே மறக்க முடியவில்லை. நீ மறக்க மாட்டாய் என்று நம்புகிறேன் என்று அருளியாயிற்று.

அது மட்டுமா? அடியேனுடைய திருத்தகப்பனார் சதாபிஷேகத்தினை ஒட்டி, அவருடைய க்ருதியான மந்தஸ்மித ராமாயணத்தில் ஒரு ஸ்லோகானுபவ பூர்வமாக அனுக்ரஹ ஸ்ரீமுகம் ப்ரார்த்தித்தேன். ஸ்லோகத்தையும் அடியேனே குறிப்பிட்டு விட்டேன். ஸாதாரணமாக ஸ்ரீமதாண்டவனைப் போன்று ஸ்தானத்தை அலங்கரிக்கும் மஹான்கள் ஸ்ரீமுகத்தினை மிகப் பொதுவான முறையில் அருள்வது தான் வழக்கம். அந்த வழக்கத்தை மீறி ஒரு ஸ்லோக வ்யாக்யான பூர்வமாக ஸ்ரீமுகம் கொடுக்க வேண்டும் என்று அடியேன் ஆசைப்பட்டது, அடியேன் திருத்தகப்பனாரின் கவிதைக்கு உள்ள தனிச்சிறப்பை உலகறிய ஓர் வ்யாவ்ருத்தி வேண்டும் என்கிற ஆசார்ய பக்தியினால் தான். பரம ரஸிக சிகாமணியான ஸ்ரீமதாண்டவன் அவிஸ்த்ருதா: ஸ்நேஹமபீரா: என்ற முறையில் விலக்ஷணமான நடையில், அந்த ஸ்லோகத்திற்கு வ்யாக்யானம் செய்து தம் திருக்கைளாலேயே எழுதி ஸ்ரீ கார்யம் ஸ்வாமியின் முகப்புக் கடிதத்துடன் அடியேனுக்கு அனுப்பிவைத்தருளியாயிற்று. பலர் முன்பருளிய பாம்பணையப்பன் என்று ஆழ்வான் உகந்தது போலவும், யாம் பெறு ஸம்மானம் என்று பட்டர் ஏற்றுக் கொண்டது போலவும் அந்த ஸ்ரீமுகத்தைத் தலையால் வணங்கிப் போற்றி அடியேன் பரவசத்துடன் பாதுகாத்து வருகிறேன். மாபெரும் பாதுகாஸாம்ராஜ்ய சக்ரவர்த்தி ஸ்தானத்திலிருந்து ஆண்டுவரும் ஸ்ரீமதாண்டவனுடைய நேர்மையைப் பற்றி என் நெஞ்சில் உள்ள வற்றையெல்லாம் எழுத முழு வானமும் காகிதமாக வேண்டும்.

இவ்வாறுக எம்பெருமானுடைய அனந்த கல்யாண குணங்களில் ஆறும், அவருடைய விபூதியான ஆறு பத்தாண்டு நிறைவு காணும் ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுடைய அனந்த கல்யாண குணங்களில் ஆறும் - என்று அனுபவிப்பதே தமக்கும் உய்யும் வழி என்று கருதி பாடவல்ல நாச்சியார் உய்யும் ஆறு எண்ணி உகந்து என்பதில் விதித்தாளோ என்று கூட அடியேன் எண்ணுகிறேன். எனவே தான் இக்கட்டுரை உய்யும் ஆறு என்ற தலைப்புடன் திகழ்கின்றது. இங்குச் சிலர் இவை ஆறும் உய்விக்கும் ஆறு அல்லவா? உய்யுமாறு என்று கூறலாமா? என்று இலக்கணம் கேட்கலாம்; அம்மி மிதிக்கக் கலுக்கண்டேன் என்னுமிடத்தில் போல உய்விக்கும் ஆறு என்பது உய்யுமாறு ஆயிற்று என்றும் உணர்க.

இனி ஸ்வததே மமாத்ய ஸுபதா ஸரஸவதீ யதிராஜகீர்த்திகதகை: விசோதிதா

என்ற முறையில் இந்த ஷஷ்டிபூர்த்தி ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீமதாண்டவன் பரமாக மூன்று சுலோகங்களும் ஒரு வெண்பாவும்

முதல் சுலோகம் - ஸ்ரீமதாண்டவன் அவதார வைபவம்

பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸமர்ப்பண பத்ததியில் 7-ஆவது சுலோகத்தில் ஸ்வாமி தேசிகன், பாதுகை கோஸல தேச ஸிம்ஹாசனத்தை எத்தகைய நெருக்கடியில் வந்து ஏற்று ராஜ்யபரிபாலனம் செய்தான் என்பதை வர்ணிக்கிறார்.

ராமபிரான் வனம் சென்றுவிட்டான்; தசரதர் வானுலகம் போய் விட்டார்; பரதனே ராஜ்யாபவாதம் என்று நடுங்குகிறான்; ஸீதையோ ராமனே விட்டு வரமாட்டாள் - இந்நிலையில் பாதுகா தேவி ராஜ்ய பாரம் ஏற்கவில்லை என்றால் ராமராஜ்ய மக்களுக்கு ஆறுதல் கிடைத்திருக்குமா?

ராமே வநம் வ்ரஜதி பங்க்திரதே ப்ரஸுப்தே

ராஜ்யாபவாத சகிதே பரதே ததா3ம்

ஆச்வாஸயேத் க இவ கோஸவாஸிநஸ்தாந்

ஸீதவேசேத் த்வமபி ஸாஹஸ வ்ருத்திராஸீ:

என்பது அந்த சுலோகம்.

இப்படி நெறுக்கடியில் ராமராஜ்ய ரக்ஷணம் செய்யப் பாதுகை தோன்றினாள். ஆனால் அவளுடைய ராஜ்யத்துக்கே நெருக்கடி வந்தது. எப்படி? திருக்குடந்தை ஆண்டவன் திருநாட்டுக் கெழுந்தருள, அவரை அடியொற்றியே மைசூர் ஆண்டவனும் திருநாட்டுக் கெழுந்தருள இங்கு பாதுகா ராஜ்யத்தில் தத்தளிப்பு.

அப்பொழுது ஆறுதல் தந்து பாதுகா ராஜ்யப் பாதுகாப்புக்கு எழுந்தருளினார் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்.

ஸ்ரீமத்வேதவதம்ஸ லக்ஷ்மணமுநெள த்யக்த்வா புவம் தாத்ருசே

யாதே தாமபரம் ததீய சரணேள ஸ்ப்ரஷ்டும் வ ஸத்யஸ் ஸ்வயம்

யாதே ஸ்ரீநிதி யேகிநீஹ விபுலாம் ரங்கேச பாதாவநீ

ராஜயம் பாதுமவாதரத் முநிரஸௌ ஸ்ரீரங்கராமாநுஜ:

(இரண்டாம் பாதத்தில் என்பது என்றும் அர்த்தத்தில் உள்ள ஒரெழுத்துச் சொல். என்ற இடத்தில் போல்) இரண்டாம் சுலோகம்- ஞானபிரானின் மறுவடிவம் வாழ்க!

முன்பு ப்ரளயக் கடலில் மூழ்கித் தத்தளித்து பரந்த பூமியை, அத்துயரத்திலிருந்து மீட்ட ஞானப்பிரான் ஸ்ரீமுஷ்ணத்தில் கோயில் கொண்டிருப்பது ப்ரஸித்தம்.

(ஞானப்பிரான் என்பது ஸ்ரீவராஹநயினாருக்கு நம்மாழ்வார் தம்முடைய முதல் ப்ரபந்தத்தின் நிறைவுப் பகுதியில் ஈனச் சொல்லாயினும் என்னும் பாசுரத்தில் இட்ட குளிய திருநாமம்) நம் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனும் ஸ்ரீமுஷ்ணத்தில் உரைபவராய், வராஹ நாமத்தினை (முன்பு பூர்வாச்ரமத்தில்) பூண்டவராய் துயரக்கடலில் தத்தளித்த பரந்து விரிந்த பாதுகா ராஜ்ய லக்ஷ்மி (என்கிற பூமி) தன்னைக் காப்பவராய், உலகில் ஞானத்தைப் பரப்பும் ஞானப்பிரானாய்ப் பொலிகிறார். தற்பொழுது நதாப்தி பூர்த்தயுத்ஸவம் காண்கிறார்.

(நதாப்தி பூர்த்தி என்னும் தொடரில் கடபயாதி முறையில் நத என்னும் சொல் 60-ஐக் குறிக்கும்.) என்று நதர்க்கு (வணங்கியவர்க்கு) வைபவம் அருளும் ஸ்வாமி நத வைபவம் வந்தச் சிறப்புக் காணீர்.)

ப்ராலேயார்ணவ மஜ்ஜிதாமிவ ஹரி: ப்ருத்வீமிமாம் துக்கதாம்

பாதூமாமபவத் வராஹவபுஷா ப்ரோத்தர்துமேஷ ஸ்புடம்

ஸ்ரீமுஷ்ணே க்ருதஸந்நிதிர் ஜகதிதம் ஜ்ஞாநோகாரைரவன்

ஸந்தந்வன் நதவைபவம், ஸ பஜதே ஸ்ரீமந்நதாப்த்யுத்ஸவம்

மூன்றும்- மது ஆதிரையும் மாதவ ஆதிரையும்

எம்பெருமானார் மதுவுடன் கூடிய திருவாதிரையில் அவதரித்தருளினார். மது என்று சித்திரை மாதத்திற்கு வேதபுருஷன் வைத்த பெயர் மதுஸ்ச மாதவஸ்ச வாஸந்திகாவ்ருதூ

என்ற தைத்தீரிய ஸம்ஹிதையில் ஒதுகிறோம். ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் மாதவ (வைகாசி) ஆதிரையில் அவதரித்தருளியபடி.

அந்த யதிராஜர் இரண்டு ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் கண்டருளியதாக வரலாறு. இந்த யதிராஜரும் மாதவ ஸஹிதராய் (ஸ்ரீகார்யம் ஸ்வாமி மாதவசார்யர் ஆயிற்றே அவருடன் கூட; இது உபலக்ஷணம். மாதவாசார்யர் மற்றும் அடியோமோடும் பிரிவின்றி என்ற பொருள்) இரண்டு ஷஷ்ட்யப்த பூர்த்தி காண்பவராய்ப் பொலிக பொலிக பொலிக! அவ்வெம்பெருமானார் ஸ்ரீரங்கம் கரிசைலம் என்று யாத்ரை செய்து தன் பாததுளியினால்

பிபரர் சக்ரே கலத்கில்பிஷா யத்விந்யாஸமிஷேண பத்ர மகரீ முத்ராம் ஸமுத்ராம் பரா என்றபடி பூமியைத் தன் பாததுளியினால் தூய்மை செய்தது போல, தன் பாதயாத்ரையால் தூய்மைப் படுத்திக் கொண்டு மாதவஸஹிதராய்ப் பொலிய வேண்டும்.

பூயோஸௌ புவநே நதாப்தஸஹத: தந்வந்நதேஷ¯த்ஸவம்

பூயாத் ஸ்ரீயதிராடிவாத்ர மதுஜாமார்த்ராம் ஸ்வதாராம் ததத்

ஆர்த்ராம் மாதவவைபவேந ஸஹிதாம் தாராம் ததத் ஸ்வாங்க்ரிஜை:

ஸ்ரீரங்காதிக திவ்யதேச தரணீ: ஸம்பாவயந் ரேணுபி:

நான்காவது:!

தமிழில் வாழ்த்துப்பா .

ஏனத் துருவாய் இருநிலம் ஏந்திய


ஞானப் பிரான்தவத்துத் தோன்றிய-ஞான

அரங்கமே! ரங்கரா மானுசரே!மேலும்

அரங்கத்து வாழறுபத் தாண்டு.

ஸ்ரீரங்கராமாநுஜயேகிவர்ய ஷஷ்ட்யப்தபூர்த்யுத்ஸவரம்யகாலே

வில்லூர் கவீசாத்மஜவாங்மயோஸௌ ஸ்ரீவைஷ்ணவாநாம் முதமாதநோது.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

குரும் ப்ரகாசயேத் தீமான்

ஸ்ரீமான் ஜஸ்டிஸ் மா. ஸ்ரீநிவாஸன், சென்னை

முன்னுரை

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் இந்த மண்ணுலகிலே தோன்றியிராவிட்டால் இந்த உலகம் பக்தியை அறியாததாகவும் சாஸ்த்ரமறியாததாயும், வேதம் கூறிய நடத்தையற்ற தாயும் ஆகியிருக்கும் என்று வேங்கடாத்வரி கவி விச்வகுணாதர்ச சம்புவில் கூறியிருக்கிறார்.

आम्नाय मौलि गुरुणा करुणारेण नावातरिष्यत यदीह भवाब्धिलावा ।
अज्ञातभक्ति जगदश्रुत सच्चरित्रं भज्ञातशास्त्रम भविष्यदवैदिकं च ॥

ஸ்வாமி தேசிகனின் ப்ரபாவத்தைப் பற்றி எழுதவோ பேசவோ மனிதனால் ஆகாது. ஸ்வாமியின் திவ்ய ஸூக்திகளில் தலைசிறந்த ஒன்று ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரம். அந்தக் க்ரந்தத்தில் இல்லாதது வேறு எதிலும் இல்லை என்று சொல்லலாம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலே சிஷ்யக்ருத்யாதிகாரத்திலே ஒரு சிஷ்யன் தன் குருவை ப்ரகாசிப்பிப்பது அவசியமான கடமை என்றும் அதைச் செய்யாவிட்டால் அவனுக்கு என்ன கெடுதல் ஸம்பவிக்கும் என்றும் விரிவாக விளக்கியிருக்கிறார். அந்த அதிகாரத்திலே சொல்லப்பட்டிருக்கும் ப்ரமாணங்களிலே ஒன்று தான்

गुरुं प्रकाशयेत् धीमान् मन्त्रं यत्नेन गोपनेत् ।
अप्रकाश प्रकाशाभ्यां क्षीयेते संपदायुषी ॥

குருவைப் ப்ரகாசிப்பித்தும் மந்த்ரத்தை முயன்று காக்கவும் வேண்டும். அப்படிச் செய்யாதவர்களின் செல்வமும் ஆயுளும் குலைந்துவிடும் என்று ஸாதாரணமாகத் தோன்றும் பொருள். ஆனால் ஸ்வாமிதேசிகன் கடைசி பாதத்திற்கு ज्ञानवैशद्यपूर्वकमान भगवदनुभव ஸம்பத்தும் ஆத்மாவுக்கு सत्ता अनुवृत्ति - हेतु वान शेषत्व - अनुसन्धान - पूर्वक - स्वनिष्ठै யும் குலையும்படியாம் என்று பொருள் கூறியிருக்கிறார்.

गुरूं

அதிலிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால் குரு என்ற சொல் சிஷ்யர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்கு இருக்கும் தேஹாத்மப்ரமங்களைப் போக்கி அவர்களுக்கு தத்வக்ஞானத்தை உண்டாக்கி அவர்கள் இவ்வுலகிலே இருக்கும்வரை **शास्त्रानुसारं** நடந்து கொண்டு பிறகு எம்பெருமான் பக்கலிலே சென்றடைவதற்கு யார் வழி காட்டுகிறாரோ அப்படிப்பட்ட ஆசார்யனைக் குறிக்கிறது என்று गुरु என்ற பதத்திற்கே இருளைப் போக்குபவர் என்று பொருள் அல்லவா.

गुशब्दस्त्वन्धकाराख्यो रुशब्दस्तन्निरोधक:
अनधकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥

என்கிறது ஜயாக்யாஸம்ஹிதை. மேலும் ஆசார்யனை மனிதனாகவும் விஷ்ணுவின்விக்ரஹத்தை உலோகமாகவும் பார்ப்பவர்கள் நரகத்தில் விழுவார்கள் என்றும் கூறுகிறது.

यो विष्णो: पफतिमाकारे लोह भावं करोति च।
यो गुरौ मानुषं भावं उभौ नरकपाति नौ

ஸ்வாமி தேசிகன் ஆசார்யனை சிஷ்யன் பகவானைப் போல உபாசிக்க வேண்டும் என்பதற்கு பல காரணங்களைக் கூறுகிறார். பகவானைப் போலவே ஆசார்யனும் (1) சிஷ்யர்களின் அஞ்ஞானத்தைப் போக்குகிறார், (2) சிஷ்யர்களைத் திருத்தி பாபங்களைப் போக்குகிறார், (3) சிஷ்யர்களை தனக்கு ஒப்பானவர்களாக ஆக்குகிறார், (4) சிஷ்யர்களுக்கு உயர்ந்த ஞானப்பிறவியை அளிக்கிறார், (5) சிஷ்யர்கள் கெட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அருள் செய்து நற்போதனையால் நற்கதியை ஏற்படுத்துகிறார், (6) தன்னுடைய கருணையை தன்னை வந்தடைந்த சிஷ்யர்களிடம் அளவு கடந்து பெருக விடுகிறார். (7) எப்பொழுதும் சிஷ்யர்களுக்கு இனியவராக இருக்கிறார், (8) எப்பொழுதும் சிஷ்யர்களுடன் ஒழிக்கவொண்ணாத உறவு பூண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஆசாரியன் எம்பெருமானைக் காட்டிலும் அதிகமாகவே சேதனர்களுக்கு உதவுகிறார். எந்தவித ப்ரதிப்ரயோஜனமும் எதிர்ப்பார்க்காமல் தம் கன்றுக் கிரங்கிச் சுரக்கும் சுரப்பிகள் போலே ஆசார்யர் செயல் படுகிறார். ஆகவே தான் ஸ்வாமி தேசிகன் மதுரகவி காட்டிய தொல் வழியே அதாவது அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் கண்ணனைப் புறக்கணித்துவிட்டு அருமறைகள் தமிழ் செய்த

மாறன் திருவடிகளைப் பற்றிக் காட்டிய வழியே தெளிந்த அறிவுள்ளவர்க்கு சிறந்த வழியாகும் என்று அருளிச் செய்தார்.

ஸங்கல்ப சூர்யோதயத்தில் வெகு அழகாக ஆசார்யப்ரபாவம் சொல்லப் பட்டிருக்கிறது. ஆசார்யனுடைய ஒரு கண் பார்வையினால் அடையக்கூடியதை சிஷ்யன் தன் இரண்டு கண்களாலோ, (முக்கண்ணனின்) மூன்று கண்களாலோ, ப்ரம்மாவின்) எட்டு கண்களாலோ, (இந்திரனின்) ஆயிரம் கண்களாலோ அடைய முடியாது என்று.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் गुरुलेक येटुवंटि என்று தொடங்கும் கீர்த்தனையில் ஆசார்ய மஹிமையை இவ்விதம் பாடுகிறார்:-

ஒரு மனிதனுக்கு எவ்வளவு தான் திறமையும் தகுதியும் இருந்தாலும் ஒரு நல்ல ஆசார்யன் இல்லாமல் அவன் மனதில் இருக்கும் வியாதியென்னும் காட்டை அழித்து ஞானத்தை அடைய முடியாது. அவனுடைய ஆரோக்யம், மகன், பொருள், மனைவி, தாயாதிகள், பந்துக்கள் எல்லோரும் அவனுக்கு வேதனையை உண்டாக்கிவிட்டு மறைந்து விடுவர். ஆசார்யர் ஒருவர்தான் கருணையோடு அவனுடைய மனதில் தத்வ போதனை என்னும் மருந்தைக் கொண்டு பற்றுக்களை அறுத்து ஒளி உண்டாக்கிக் காப்பாற்றுவார் என்று. ஆசார்ய ப்ரபாவத்தை முடிவில்லாமல் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். நம்முடைய புத்தியின் எல்லை முடிந்து விடுவதாலேயே நிறுத்த வேண்டியிருக்கும், அந்த ப்ரபாவத்திற்கு எல்லையே கிடையாது.

धीमान्

இப்பொழுது धीमान् என்ற பதப்ரயோகத்தை கவனிக்கலாம். धी யை உடையவன் धीमान्. धीगुण ங்கள் என்று சொல்லப்படுவன.

शुश्रूषा श्रावणं चैव ग्रहणं धारणं तथा।
ऊहापीहार्थविज्ञानं तत्वज्ञानां च हीगुणाः

ஆசார்யனுக்கு பணிவிடைசெய்து, அவர் அருள்மொழிகளைக் கேட்டு, புரிந்து கொண்டு மனதில் இருத்திக் கொண்டு மேலும் ஊகித்துப் பொருள் அறிந்து உண்மையை அறிவது தான் धीमान् உடைய லக்ஷணம். ஸர்வேசுவரனே ஆசார்யனாக இருந்து அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்த போதிலும், தத்வதர்சிகளிடம் சென்று प्रणिपातेन परिप्रश्नेन सेवया तद्विद्धि என்றல்லவா கூறினார். ஆகவே உண்மைப் பொருளை ஆசார்யனிடம் கற்றுக்கொண்டவன்

प्रकाशयेत्

அப்படிப்பட்ட சிஷ்யன் எந்தவிதமான ப்ரதிபலனும் எதிர்பாராமல் தனக்கு तत्वज्ञान த்தை ஏற்படுத்திய ஆசார்யனுக்கு செய்யக் கூடிய கைம்மாறு என்ன? அதை மாயனாகிய எம்பெருமானே அறிய மாட்டான். இதைத்தான் செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது என்கிறது வள்ளுவம். அவன் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றே ஒன்றுதான். அது தான் प्रकाशयेत् என்ற பதத்தினால் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ப்ரகாசிப்பதற்கு முன்னுதாரணமாக ஸ்வாமி தேசிகன் ஸஞ்சயனுடைய व्यासप्रसादात् श्रुतवानेतत् गुह्यमहं परम् வாக்யத்தை எடுத்துக் காட்டுகிறார்.

ஸ்ரீ பாஷ்யகாரரும் ஸ்ரீ வேதாந்த தேசிகனும் சேர்ந்து ஒரே மனித உருவில் அவதரித்த ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் (திருக்குடந்தை ஆண்டவன்) மற்றொரு உதாஹரணத்தைக் காட்டினார். ஸ்ரீமத் ராமாயணத்தில் பரதன் ஸ்ரீ ராம பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு திரும்பி அயோதிக்குச் செல்லும் வழியில் பரத்வாஜ முனிவரைப் பார்த்துப் பேசும் பொழுது வசிஷ்டர் உபதேசித்தபடி பாதுகைகளைப் பெற்றுக் கொண்டதாகக் கூறுகிறார். அதை நமது ஆசார்யன் பரதன் धीमान् ஆனபடியால் தன்னுடைய குருவான வசிஷ்டரைப் ப்ரகாசிப்பித்தான் என்று கூறியருளினார்.

முடிவுரை

சுமார் 200 வருடங்களாக ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தைக் கட்டிக்காத்துத் தழைத் தோங்கச்செய்து வருகிறது ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம். இந்த ஆச்ரமம் ஆசார்ய பரம்பரையில் ஆசார்யர்களாக எழுந்தருளியிருந்த ஆசார்ய சிரேஷ்டர்கள் ஞானனுஷ்டான வைராக்ய பூர்ணர்களாக விளங்கி வந்தார்கள். எவ்வளவு பெரிய மனிதர்களானாலும் அவர்களுக்காக ஆச்ரம நியதியையோ வழக்கத்தையோ கைவிட்டதில்லை. புதுக்கோட்டை மஹாராஜாவை ஸ்ரீமத் பெரியாண்டவன் ஸந்திக்க மறுத்ததாகக் கேள்வி. பூர்வாசார்யர்களுடைய பாதுகாராதனம் ப்ரதிதினம் நடைபெறுகிறது. பல சிஷ்யர்களும் தங்கள் க்ருஹங்களில் ஆசார்ய பாதுகைகளை எழுந்தருளப்பண்ணி நித்யாராதனம் செய்து வருகிறார்கள். இது வேறு எந்த ஸம்ப்ரதாயத்திலும் காணக்கிடைக்காத விஷயம். ஆசார்ய பாதுகைகளுக்கு க்ருஹங்களில் நித்யாராதனம் செய்வதும் ஆசார்ய ப்ரகாசனம் தானே! ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவன் ஸ்வாமியின் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை நல்ல முறையில் நடத்தி ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமியையும் பூர்வாசார் யார்களையும் போற்றியுகந்து, புந்தியிற்கொண்டு பொங்கு புகழ் சாற்றி வளர்ப்போமாக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

பரத சரணாகதி

(ஸ்ரீமதுபயவே. வித்வான் தையார் லஷ்மீ நரசிம்மாசாரியார் ஸ்வாமி, மதுராந்தகம்)

ஸ்ரீமத் ராமாயணத்திற்கு 'ஸரணாகதி காவ்யம்' என்றும் 'தீர்க்க சரணாகதி' என்றும் பெயர்கள் பிரசித்தமானவை. மேலும் சரண கதி ரக்ஷணதர்மத்தைத் தானே முன்னின்று நிலை நாட்டுவதற்காக 'படாதன பட்டு மனிசர்க்கா' என்னும்படி இருள்தரு இம்மாஞாலத்தில் நம்முடன் கலந்து பரிமாறி பல கஷ்டங்களை அநுபவித்து, 'ஆத்மானம் மானுஷம் மந்தே' என்று மார்தட்டிக் கொண்டு மனித வாழ்க்கையின் முன் உதாரணமாக நடந்து காட்டினான் 'विधि शिवसनकाद्यैः ध्यातु मत्यन्त दूरं' (விதி சிவ ஸநகாத்யை: த்யாது மத்யந்த தூரம்) என்றிருக்கும் பரமாத்மா.

அறிவரிய எம்பெருமானை அனைவருக்கும் காட்டிக் கொடுப்பவராய், சரணாகத ஸார்த்தவாஹருமான ஆசார்யனை. அரியணையில் ஏற்றுவித்த பெருமை பரதாழ்வானுக்கே சேரும். உலகிற்கு ஆசார்யனின் பெருமையையும், அவருடைய ஸ்ரீபாத தீர்த்தத்தின் மஹிமையையும் எடுத்துக் காட்டியவன் பரதன். 'गुरुं प्रकाशयेद्धीमान्' (குரும் ப்ரகாசயேத் தீமான்) என்ற சிஷ்யக்ருத்யத்தையும் உலகத்தோர்க்கு அறிவுறுத்தியவன் பரதன். ஆகவேதான் ஆசார்யஸ்தானத்திலுள்ள பாதுகையைப் பாடப்புகுந்த ஸ்வாமி தேசிகன் முதலில் பரதனை வணங்கினார். 'भरताय परं नमोऽस्तु तस्मै प्रथमोदाहरणाय भक्तिभाजाम्' (பரதாய பரம் நமோஸ்து தஸ்மை ப்ரதமோதாரணாய பக்தி பாஜாம்) என்று. ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகனும் 'नसर्वे भ्रातरस्तात भवन्ति भरतोपमाः' (நஸர்வே ப்ராதரஸ்தாத பவந்தி பரதோபமா:) என்று ஒப்பிலானாகக் கூறினார்.

எந்த ஒரு சக்தியாலும் கட்டமுடியாத கண்ணனே பக்தி, ப்ரபத்தி என்கிற குறுங் கயிற்றால் தான் கட்ட முடியும். எனவேதான் 'தஸ்ய ச வசீகரணம் தச் சரணாகதி ரேவ' என்று ஸாதித்தார். இவ்விரு உபாயங்களிலே ஆகிஞ்சன்யமே கை முதலாகக் கொண்ட நமக்கு ப்ரபத்தி சாஸ்த்ரமே பரமபதத்தைத் தரவல்லது. இப்ப்பத்தி உபாயமானது. ''ஸர்வாதிகாரமாய் ஸர்வ-அநிஷ்ட-நிவர்த்தன க்ஷமையாய், ஸர்வேஷ்ட ஸாதனமாகவற்றாய் ஸுகரமாய், ஸக்ருத் கர்தவ்யமாய், ஆசுகாரியாய், ப்ரபந்த அநர்ஹமாய், ப்ரம்மாஸ்த்ர பந்தம் போலே ஸ்வபலத்தில் உபாயாந்தர ப்ரயோக அஸஹமாயிருக்கும்'' என ஸ்வாமி தேசிகன் விவரித்துக் காட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட ப்ரபத்திக்கு 'ஆனுகூல்ய ஸங்கல்பம், ப்ராதி

கூல்ய வர்ஜனம், கார்ப்பண்யம், மஹாவிச்வாசம், கோப்த்ருத்வ வரணம் என்கிற ஐந்து அங்கங்கள் உண்டு. அங்க-அங்கி ஸமுச்சயத்தாலே 'ஷட்விதா' சரணாகதி: என்றும் சொல்லப்படுகிறது. ''இவ்வித்யானுஷ்டான காலத்தில் உபயுக்தங்களாகையால் இவை இவ்வாத்ம நிக்ஷேபத்துக்கு அவிநாபூத ஸ்வபாவங்கள்'' என ஸ்வாமி அறுதியிட்டார்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் திரிஜடை, விபீஷண சரணாகதி முழுமையுள்ளதாக பெரியோர்களால் காண்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்ரீமத்ராமாயணத்தில் பெயருக்கேற்ப ஒவ்வொரு காண்டத்திலும் சரணாகதி மஹிமை பேசப்படுவதாக பெரியோர் பணிப்பர்.

முதலில் பாலகாண்டத்தில் தேவர்கள் சரணாகதி. இங்கு பகவானிடத்தில் சரணாகதி செய்ய தேச கால நியமங்கள் தேவையில்லை என்பது காட்டப்படுகிறது. பிறகு த்ரிசங்கு சரணாகதி அயோத்யா காண்டத்தில் ''ஸப்ராது: சரணௌ காடம் நிபீட்ய ரகு நந்தன:'' என்று லக்ஷ்மண சரணாகதி. இப்போது நமக்கு விஷயமாயமைந்த ''பரத சரணாகதி'' இப்படி வேதத்தில் கூறப்பட்ட சரணாகதியை விஸ்தாரமாகக் கூற வந்தது ஸ்ரீமத் ராமாயணம்.

தன் தாயான கைகேயியின் மூலம் தந்தைக்கு மரணமும், தமையனுக்கு வனவாசமும் ஏற்பட்டதை அறிந்து பரதன் மிகவும் வேதனைப்படுகிறான். துயரத்தின் மிகுதியால் தாயென்றும் பாராது கைகேயியைத் தீஞ்சொற்களால் சுடுகிறான். இதைக் கம்பன்-

நோயீர் அல்லீர் நும் கணவன் தன் உயிர் உண்பீர்;
பேயீரே! நீர் இன்னம் இருக்கப் பெருவீரே?
மாயீர்! மாயா வன்பழி தந்தீர்! முலை தந்தீர்!
தாயீரே! நீர இன்னும் எனக்கு என் தருவீரே?

என்று பரதன் தாயைக் கேட்பதாகக் கூறுகிறார். பிறகு தன் தந்தையை நினைத்து வருந்தி,

நிவர்த்தயிஷ்யாமி வநாத் ப்ராதரம் ஸ்வஜனப்ரியம்
நிவர்த்தயித்வா ராமம் ச தஸ்யாஹம் தீப்த தேஜஸ:
தாஸபூதோ பவிஷ்யாமி ஸுஸ்திதே நாந்த ராத்மகா

என்று தன் உறுதியை வெளிப்படுத்துகிறான். குலகுருவான வசிஷ்டரின் வார்த்தையையும் மீறி

'அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொன்னெறி முறைமையின் சூட்டக் காண்டிரால்;

அன்றெனில் அவனொடும் அரிய கானிடை

நின்றினிது இருந்தவம் நெறியின் ஆற்றுவென்

ஒன்று இனி உரைப்பின் என் உயிரை நீக்குவென்'' என்றனன்.

தான் ஒருவனாக சென்று யாசித்தாலே ராமன் வருவான். ஆயினும் சேனையுடனும், தன் பரிவாரங்களுடனும், பந்துக்களுடனும் சென்றால் ராமன் நிச்சயம் வருவான் என எண்ணியும், தன் கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் சித்திரக் கூடத்திலேயே பட்டாபிஷேகம் செய்ய அனைத்து சம்பாரங்களுடனும் இராமன் இருக்கும் இடம் நோக்கிக் கிளம்பினான். இராமன் எங்கிருக்கிறானோ அங்கு செல்கிறேன். அவன் இருப்பிடம் தான் எனக்கு அயோத்தி. அயோத்தியானாலும் அவன் இல்லாத இடம் அயோத்தி அன்று.

தத்ரயாஸ்யாமி யத்ராஸௌ வர்ததே லக்ஷ்மண ப்ரிய:

நாயோத்யா தம் விநாயோத்யா ஸாயோத்யாய த்ர ராகவ:

என்று தன்னைக் கேட்டவர்களுக்கு பதில் கூறிச் சென்றான். அவனுடைய தியாகச் சிந்தனையையும் தமையனிடத்தில் உள்ள பக்தியையும் கண்டு அனைவரும் மெய் சிலிர்த்தனர்.

தன் சேனையுடன் பரதன் கங்கையை அடைந்தான். சேனையுடன் பரதனைக் கண்ட குஹன் மிகுந்த சீற்றம் கொண்டு அந்தப் பரதனால் தனக்கோ அல்லது இராமனுக்கோ ஆபத்து ஏற்படப் போகிறது என அஞ்சி இவ்விதம் கூறுகிறான்:-

ஸம்பந்நாம் சிரியமந்விச்சந் தஸ்ய ராக்ஞ: ஸுதுர்லபாம்

பரத: கைகேயீபுத்ர: ஹந்தும் ஸமதிகச்சதி. என்று

உடனே 'கிட்டியது அமர்' என அவர்களுடன் சண்டையிடத் தயாரானான். பிறகு பரதனை நன்கு கவனித்தான். இவனிடம் சந்தேகம் கொள்வது கூடாது. ஏனெனில் பரதன் வல்கலை தரிந்துள்ளான் இவனது முகம் ஒளி இழந்து காணப்படுகிறது. ராமனிடம் பரிவால் வந்துள்ளான். மேலும் இவர் நாயகனான ராமனைப் போலவே இருக்கிறான். ராமன் இருக்கும் திசை நோக்கித் தொழுகின்றான். முக்கியமாக ''எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு'' என எண்ணினான்.

பிறகு பரதனின் தியாக உணர்வை அறிந்த குஹன் 'ஆயிரம் ராமர் நின்கேழ் ஆவரோ! தெரியின் அம்மா' என அவனைப் புகழ ஆரம்பித்தான். அவனுக்கு வயிற்றுக்கு வன்யமான உபஹாரமும் செவிக்கு லக்ஷ்மண வ்ருத்தாந்தமுமாகிற உணவை அளித்தான் ''அஸ்தி சேத்துல்யபாபீஸ்யாத்; நாஸ்திசேத் த்விகுணம் பவேத்'' என்ற முறைப்படி ''தோஷேஷ்வபாஹ்ய மனுஜம்'' என்றிருக்கிற பரதனை குற்றமுள்ளவனாக எண்ணிய பாபத்தைப் போக்க 'பாகவத கதாகீர்த்தனம்' செய்தானிறே குஹன். ராமனும் சீதையும் குஹனுடைய

பிரார்த்தனையின் பேரில் அவன் இருப்பிடத்தில் ஓரிரவு தங்கினர். அப்போது அவர்கள் சயனித்திருந்த மலர்படுக்கையை பரதனுக்குக் காட்ட அதை அவன் சேவித்து மிகவும் கலங்கினான்.

பிறகு குஹன் மூலமாக கங்கையைக் கடந்து பரத்வாஜாஸ்ரமம் சென்றான். அங்கு பரத்வாஜரால் மிக உயர்ந்த நிலையில் உபசரிக்கப்பட்டான். அவரிடம் அனுமதி பெற்று சித்ரகூடம் அடைந்து சேனையை தூரத்தில் விட்டு தான் ராமனைத் தேடலானான்.

இதுசமயம் ராமன் சீதையுடன் சித்ர கூடத்தின் இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருக்கிறான். அது சமயம் பரதனின் சேனை மூலமாக உண்டான சப்தத்தைக் கேட்டும், தூள்களைக் கண்டும் பயந்து ஓடும் மிருகங்களைப் பார்த்தும் ராமன், லக்ஷ்மணனைப் பார்த்து இது என்ன? என்று வினவ, லக்ஷ்மணன் அங்குள்ள ஸால மரத்தின் மேலேறி நான்கு பக்கமும் பார்த்தான். வடதிசையில் பரதனின் சேனையைக் கண்ட லக்ஷ்மணன் 'பரதன் நம் இடம் அறிந்து நம்மோடு போர் செய்து நம்மைக் கொன்று தன் தாய் மூலம் கிடைத்த ராஜ்யத்தைத் தக்க வைத்துக் கொள்ள சேனையுடன் வந்து கொண்டிருக்கிறான். உத்தரவு கொடுங்கள்! பரதனைப் பந்து வர்க்கங்களுடன் அழித்து விடுகிறேன் எனக் கூறி பரதன் மேல் அம்பு எய்யத்தயாரானான். இதைக் கம்பன்

''ஒரு மகள் காதலின் உலகை நோய் செய்த

பெருமகன் ஏவலின் பரதன் தான் பெறும்

இரு நிலம் ஆள்கை விட்டு இன்று என் ஏவலால்

அரு நரகு ஆள்வது காண்டி-ஆழியாய்!'' என்று கூறுகிறார்.

இராமன் பரதனிடம் அர்த்தமற்ற கோபம் கொண்ட லக்ஷ்மணனைப் பார்த்து, ''கிமத்ர தனுஷா கார்யமஸினா வா சர்மணா । மஹேஷ்வாஸே மஹாப்ராஜ்ஞே பரதே ஸ்வயமாகதே '' என்கிறார்.

பரதனைப் பற்றி நன்கு அறிந்தவர் சக்ரவர்த்தித் திருமகன். எனவே அவனை பெரிய வில்லாளி. சிறந்த அறிவாளி எனக் கூறுகிறார்

ப்ரணவோ தனு : சரோஹ்யாத்மா ப்ரம்ம தல்லக்ஷ்ய முச்யதே।

அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தந்மயோ பவேத்॥

என்கிறது வேதம். அகார, உகார, மகார மாகிற மூன்று எழுத்துடன் கூடிய ப்ரணவம் (ஓங்காரம்) வில். ஆத்மா என்பது பாணம் (அம்பு). அதற்குக்குறி ப்ரம்மம். நாம் அவதானத்தோடு ஆத்மாவாகிற பாணத்தால் ப்ரணவமாகிற வில்லைக் கொண்டு பிரம்மமாகிற குறியை நோக்கி விடவேண்டும். அப்போது பலன் நிச்சயம் கிடைக்கும் என வேதம் கூறுகிறது. இப்படிப்பட்ட உயர்ந்த வில்லை உடையவன் பரதன். அதனாலேயே அவன் சிறந்த அறிவாளி எனப்

பரதனைப் பற்றி பெருமையாகப் பேசுகிறார் ராமன். அவன் மஹாவிச்வாஸத்துடன் சரணாகதி செய்ய வந்துள்ளான். ராஜ்யத்தை நம்மிடமே கொடுக்க வந்துள்ளான். மேலும் லக்ஷ்மணா! ராஜ்யத்தை லக்ஷ்மணனிடம் கொடு என்று நான் சொன்னால் பரதன் யோசிக்காமல் உடனே உன்னிடம் கொடுத்து விடுவான் பார்! என்றார். அதைக் கேட்டு லக்ஷ்மணன் வெட்கித்தலை குனிந்தான். இவ்விடத்தில் சக்ரவர்த்தித் திருமகன் பின் நடக்கப் போவதை முன்னமேயே அறிவித்து விட்டார். உண்மையிலேயே லக்ஷ்மணன்தான் அந்த ராஜ்யத்தை 'பாதுகா' ரூபத்தில் 14 வருடகாலம் ஆளப் போகிறான் 'निवास शय्यासन पादुका' என்றபடி.

பரதன் ராமனைக் காண அலைந்து திரிந்தான். கடைசியில் ஒரு சால மரத்தில் ஏறிப் பார்த்தான். ராமனது ஆச்ரமத்தினின்று மேல் கிளம்பிய அக்னி ஜ்வாலையைக் கொண்டு இராமன் அங்கு இருக்க வேண்டும் என்றெண்ணி மகிழ்ச்சி அடைந்தான். அவ்விதமே பர்ண சாலையின் அருகில் சென்று சடை, வல்கலம் முதுலியவகைளைத் தரித்து அமர்ந்திருக்கும் ராமனைக் கண்டு பரதனும், சத்ருக்னனும் அவன் திருவடிகயில் அழுது கொண்டே வணங்கினர். பரதனின் நிலையை லக்ஷ்மணனிடம் ராமன் விவரிக்கிறான். இதைக் கம்பன்

''தொழுதுயர் கையினன்; துவண்டமேனியன்;

அழுதழிகண்ணினன் ; அவலம் ஈது என

எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை

முழுதுணர்சிந்தையன் முடிய நோக்கினான். என்றார்.

இங்கு பாஸனென்னும் கவி, ராமன் பரதன் தன்னைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று கூறுவதாகக் கூறுகிறார்.

ஸ்மிரேணாபி காலேன யச: கிஞ்சிந்மயார்ஜிதம்।

அசிரேணைவ காலேன பரதேனாத்ய ஸஞ்சிதம்॥

'தந்தையிடம் உள்ள பக்தியை நிலைநாட்ட நான் வெகுகாலம் சிரமப்பட வேண்டியுள்ளது. ஆனால் பரதன் என்னிடம் உள்ள பக்தியை குறுகிய காலத்திலேயே நிலைநாட்டி விட்டான்' என்று கூறுகிறார். ராமன் பரதனை கைகளால் எடுத்து மடியில் அமரவைத்து, ஆலிங்கனம் செய்து, உச்சி முகந்து சொல்லத் தொடங்கினார். உலகிற்கு ராஜநீதியை உணர்த்த எண்ணி, 'கச்சித் ஸர்க்கம்' என்ற ஸர்க்கத்தின் மூலம் நூற்றுக்கணக்கான கேள்விகளை ராமன் பரதனிடம் கேட்கிறார்.

பிறகு பரதன் தன் தந்தையின் மரணத்தை ராமனுக்குச் சொல்லித் தான் வந்த விபரத்தைக் கூறி ராமனிடத்தில் பரதன் சரணாகதி செய்கிறான்.

ஏபிஸ்ச சிசவ: ஸார்த்தம் சிரஸா யாசிதோ மயா।

ப்ராது: சிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்த்து மர்ஹஸி

குதிரை யானை முதலியவைகள் உன் பிரிவால் கண்ணீல் நீரைப் பெருக்குகின்றன. கண்ணும் கண்ணீருமாக மந்திரிகள் அனைவரும் வந்துள்ளனர். நானும் திருவடியில் தலை வணங்கி கேட்கிறேன். ஸஹோதரன் தனக்கு உடல் 'ப்ராதாஸ்வ மூர்த்திராத்மந:' என்று வேதம் கூறுகிறது. உடலைக் காப்பது உன் கடமையல்லவா! என் ஒருவன் கண்ணில் நீர்வரப் பொறுக்க மாட்டாதவர் இத்தனை பேர் கண்ணில் நீர்வரக் காத்திருக்கலாமா! ப்ராதாவாயிருந்தால் பாகச் சண்டை ஏற்படக்கூடும் என்றல்லவோ உன்னிடத்தில் நான் மந்திர சம்பந்தம் பெற்று சிஷ்யனானேன். சிஷ்யனின் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்வது ஆசார்யன் கடமையல்லவா! சிஷ்யனாயிருந்தால் ஆசார்யன் ஆணையை மீறலாமா! எனவே ராஜ்யத்தை நீயே ஆள்வாயாக என்று நீ சொல்லக் கூடும். அதற்காகத் தான் உனக்கு நான் அடிமையானேன் தாஸனுக்கு என்றும் ராஜ்யத்தில் உரிமை கிடையாது. ஸ்வாமியான நீர் தான் ஆளத்தகுந்தவர். மேலும் தந்தைக்கு என்னைக் காட்டிலும் நீரே மிகவும் ப்ரீதி பாத்ரமானவர். என்னை விட்டுப் பிரிந்து நமது தந்தை 1 வருட காலம் எவ்வித நோயுமின்றி வாழ்ந்தார். ஆனால் உன்னைப் பிரிந்த உடனேயே உயிரிநித்தார். இதையே ''பவாம்ஸ்சைவ பிது: ப்ரிய:'' என்றார் வால்மீகி. எனவே தந்தைக்கு வாஸோதகம் முதலியவைகளைச் செய்து விட்டு அயோத்தியை அடைந்து அபிஷேகம் செய்து கொண்டு அனைவரையும் வாழ்விப் பாயாக என்று வேண்டினான். ராமன் லக்ஷ்மனனையும் சீதையையும் சமாதானப்படுத்தி விட்டு கங்கையை அடைந்து தர்ப்பணாதிகளைச் செய்து விட்டு, பிறகு அனைவரும் பர்ணசாலைக்கு வந்து சேர்ந்தனர்.

ராமனைப் பார்த்து பரதன் பேச ஆரம்பித்தான்

'ஸாந்த்விதா மாமிகா மாதா தத்தம் ராஜ்யமிதம் மம

தத்ததாமி ததைவாஹம் புங்க்ஷ்வ ராஜ்யமகண்டகம்

எனது தாய் சமாதானம் அடைந்தாள். கௌசல்யை முதலானவர்களும் உனக்கே அபிஷேகம் செய்ய விரும்புகின்றனர். எனக்கோ ராஜ்யத்தை ஆள சக்தியுமில்லை. அதில் நியாயமுமில்லை. எனவே எனக்குத் தந்தையாலும் உன்னாலும் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தை உனக்கே கொடுத்து விடுகிறேன். எவ்வித தடங்கலுமின்றி ராஜ்யத்தை ஆள்வாயாக! என்றான். அதற்கு ராமன் 'அரசுக்காக நான் எப்படி பாபம் செய்ய முடியும்? உனக்கும் எனக்கும் பூஜிக்கத்தகுந்தவர் நம் தந்தை. அவர் சொற்படிதான் நாம் நடக்க வேண்டும். தந்தையை ஸத்யஸந்தன் ஆக்குவதற்காக நான் வனவாஸம் ஏற்றுக் கொண்டது போல் நீயும் அவருடைய சொற்படி ராஜ்யத்தை ஏற்றுக்கொள். எல்லாம் பகவானுடைய ஸங்கல்பத்தால் நடக்கிறது. நாம் நினைப்பது நடப்பதில்லை. தந்தை ஸ்வர்க்கத்திற்குச் சென்று விட்டாலும் நமக்கு நாட்டையும் காட்டையும்

பிரித்துக் கொடுத்திருக்கிறார். அது தவிர நீ எதைச் செய்தாலும் அது பித்ரு வாக்ய பரிபாலனமாகாது. எனவே நீயே தான் இந்த ராஜ்யத்தை ஆள வேண்டும் என்று கூறுகிறார்.

இம்மாதிரியான ராமபரத ஸம்வாதம் ஸ்ரீமத்ராமாயணத்தில் உயர்ந்த இடமாகும். ராமன் 18 ச்லோகங்களால் பரதனுக்கு உபதேசம் செய்கிறார். இதை 'ராமகீதை' என்பர் பெரியோர். கீதையின் கடைசியில் 'மாசுச:' என்று கிருஷ்ணன் கூறுவது போல் இங்கே 'ஸத்யஸ்தம் பரத சராம மாவிஷீத'' என்கிறார் ராமர். பிறகு வசிஷ்டர் முதலானவர்கள் பலவிதமாக உபதேசித்தும் ராமன் மறுத்து விடுகிறார். உடனே பரதன் சுமந்தரரை அழைத்து தர்ப்பங்களை பரப்பச் சொல்லி ப்ராயோபவேசம் செய்ய முற்படுகிறான். அதை ராமன் தடுத்து நிறுத்துகிறான்.

'' எந்தை ஏவ ஆண்டு ஏழொடு ஏழெனா

வந்த காலம் நான் வனத்துள் வைக நீ

தந்த பாரகம் தன்னை மெய்மையால்

அந்த நாள் எலாம் ஆள் என ஆணையால்''

என்ற கம்பனின் கூற்றுப்படி பரதனை 14 வருடகாலம் ராஜ்யத்தை ஆள நியமிக்கிறார் சக்ரவர்த்தி திருமகன்.

விம்மின் பரதனும் வேறு செய்வது ஒன்று

இன்மையின் அரிதென எண்ணி ஏங்குவான்.

செம்மையின் திருவடித்தலம் தந்து ஈகு என

எம்மையும் தருவன இரண்டும் நல்கினான்''

இமே ஹிஸர்வலோகஸ்ய யோகக்ஷேமம் விதாஸ்யத: என்றபடி பாதுகைகளைப் பெற்று தன்யனானான் பரதன். இவ்விடத்தில் சிலர் பரத சரணாகதி பலிக்கவில்லை என்பர். சரணாகதி அபேக்ஷித்த காலத்திலேயே பலனைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. சோகமுள்ளவனே சரணாகதி பண்ணுவதற்கு அதிகாரி. சோகம் சிறிது குறைந்தாலும் பலன் தாமதிக்கும். பரத சரணாகதியில் பரதனுக்கு சோகம் சிறிது குறைந்து விட்டது. அதனால் மஹாவிச்சாஸத்தில் குறை ஏற்பட்டது. அதுவே சரணாகதிக்கு முக்கிய அங்கமாகையால் அவனுடைய சரணாகதி விலம்பித்து பலன் கொடுத்தது என்பர். பரதன் ராமனைக் காட்டிலிருந்து எப்படியாவது அழைத்து வந்து முடி சூட்ட வேண்டும் என எண்ணினான் அதே சமயம் அவன் மனதில் இப்படியொரு எண்ணமும் ஏற்பட்டது. ஒரு வேளை ராமன் வர மறுத்தால் நானும் அவனைப்போல் காட்டில் தவவேடம் பூண்டு 14 வருடகாலம் அவனுடனே வசிப்பது என தீர்மானித்தான்.

யதித்வார்யம் ந சக்ஷ்யாமி விநிவர்த்தயிதும் வநாத்

வநே தத்ரைவ வத்ஸ்யாமி யதார்யோ லக்ஷ்மணஸ்ததா

இதன் மூலம் ராமனிடத்தில் தான் மேற்கொள்ளும் சரணாகதிக்கு பலன் உடனே கிட்டாமலும் போகலாம் என்கிற எண்ணம் பதரனுக்கு இருந்தது என்பதை அறியலாம். இதனால் மஹாவிச்வாஸத்தின் குறைவு தெரியவருகிறது. அதற்கு காரணம் முன்பு அபிஷேக காலத்தில் தேவர்கள் தங்கள் சரணாகதி பலிப்பதற்காக கூனியிடம் ப்ரவேசித்து கைகேயியின் மூலம் தடங்கல் உண்டு பண்ணியது போல், இப்போதும் அதே தேவர்கள் பரதனிடம் ஆர்த்தியையும் அதனடியாக வரும் மஹாவிச்வாஸத்தையும் குறைத்து விட்டார்கள். மேலும் சரணாகதி நாள் தாழ்ந்து பலன்கொடுக்க பாகவத அபசாரமும் ஒரு காரணமாகும். வசிஷ்டர் முதலானவர்கள் பரதனை பட்டாபிஷேகம் செய்து கொள்ள நிர்பந்தித்த போது சபையிலேயே 'ஸபாமத்யே ஜகர்ஹே ச புரோஹிதம்' என்றபடி குலகுருவான வசிஷ்டரை நிந்தித்தான். இதனால் பாகவத அபசாரம் ஏற்பட்டு விட்டது. அதனால் பலனும் விலம்பித்தது என்பர்.

ஆனால் ஸ்வாமி தேசிகன் பரத சரணாகதி பலித்தது என்றே நிர்வாஹம் செய்கிறார். எப்படியெனில் தான் கேட்டதை விட அதிக பலன் கிடைத்து விட்டால் அது எண்ணம் நிறைவேறியதையே காட்டும். பரதன் ராமனை ராஜ்யம் ஆள்வதற்கு அழைத்தான். ராமனோ தன்னை விட அதிக மதிப்புள்ள பாதுகையை பரதனுக்கு கொடுத்தனுப்பினான். இதை ஸ்வாமி பாதுகா ஸஹஸ்ரத்தில் வெகு அழகாக விவரித்துக் காட்டுகிறார்.

''பாதாவநி ப்ரபவதோ ஜகதாம் த்ரயாணாம்

ராமாதபி த்வமதிகா நியதம் ப்ரபாவாத்।

நோசேத் கதம் நு பரதஸ்ய தமேவ லிப்ஸோ:

ப்ரத்யாயனம் பரிபணம் பவதீ பவித்ரீ''

சரணாகத ஸார்த்த வாஹரன ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலஸ்க்ருத பூஷிதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்தபூர்த்தி மலரில் சரணாகதி விஷயமாகவே அடியேன் எழுத அமைந்தது அந்த திவ்யதம்பதியின் பரமானுக்ரஹமே என எண்ணி பூரிக்கிறேன். இந்த மஹோத்ஸவ வைபவத்தில் ஸ்ரீமதாண்டவன் திவ்ய திருவடிகளில் சமர்ப்பிக்கப்படும் மலரின் ஒரு இதழ் அடியேன் கைக்கு கிட்டியது ஆசார்ய அனுக்ரஹமே என எண்ணி க்ருதார்த்தனாகிறேன். ஸ்ரீரங்கதிவ்யமணி பாதுகா ஸேவகரான ஸ்ரீமதாண்டவனின் அனுக்ரஹத்தால் சிஷ்யவர்கங்கள் சீருடனும் சிறப்புடனும் வாழ வேண்டுமென அந்த ஆதி குருவான அரங்கனை இறைஞ்சி நிற்கிறேன்.

ஸ்ரீ ரஸ்து

- சுபம் -

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

புருஷன்

ஸ்ரீமதுபயவே. வித்வான் காணியம்பாக்கம் தேவநாதாசாரியர் ஸ்வாமி

உலகில் புருஷன் என்னும் சொல் பொதுவாக மனிதனையும், பெண்களிடம் குறிப்பிடும் போது அவர்களுடைய கணவனையும் குறிக்கும். வேதங்களில், ஸ்ம்ருதிகளில் மற்றும் ஆசாரிய ஸ்ரீஸூக்திகளில் இதே சொல் உலகின் முழுமுதற்கடவுளான ஸ்ரீமந்நாராயணனை குறிப்பிடுமாம். புருஷஸூக்தம் புருஷனை விளக்கும் போது அவனே எல்லாவற்றுக்கும் காரணமாக குறிப்பிடுகிறது. புருஷஸூக்தத்தில் அவ்வாறாக குறிப்பிடப்படுகிற புருஷன் நாராயணனே என்று ஸ்ரீபாஷ்யத்தில் எப்பெருமானார் அருளிச் செய்துள்ளார். மேலும் க: புண்டரீக நயந: புருஷோத்தம: க: என்று ஆளவந்தாரும், அதற்கு உரையாசிரியரான ஸ்வாமி தேசிகனும் மிகவும் தெளிவாக காரணங்களையிட்டு புருஷோத்தமன் நாரணனே, அவனே புருஷ ஸூக்தத்தில் சொல்லப்படுபவன் என்று அறுதியிட்டார்கள். இவ்வாறாக ஆசாரியர்கள் ஸ்தாபித்த விஷயத்தை நாமும் கொஞ்சம் அனுபவிக்க விரும்புகின்றோம்.

இந்த சிறிய கட்டுரையில் புருஷஸூக்தம் நாராயணனையே புருஷனாக குறிப்பிடுகிறது என்கிற கருத்துக்கு இசைவாக காரணங்களை விளக்குகிறோம்.

புருஷஸூக்தத்தில் '' அத்ப்ய: ஸம்பூத: '' என்கிற அனுவாகத்தில் புருஷனை பூமிபிராட்டி மற்றும் பெரியபிராட்டி இவர்களுடைய கணவனாக வர்ணிக்கும் வேதம் புருஷன் நாராயணன் தான் என்பதை அறுதியிடுகிறது. லக்ஷ்மீபதி நாராயணன் தானன்றோ! ஆகையால் புருஷன் நாராயணன் என்பதில் சிறிதும் ஐயப்படத் தேவையில்லை. இங்கு ஸ்ரீஸூத்ராழ்ஆயணத்தில் உள்ள ஸ்லோகம் மனதில் கொள்ளத்தக்கது.

ராமஸ்ய தக்ஷிணே பார்ச்வே பத்மா ஸ்ரீ: ஸமவஸ்திதா
ஸவ்யேது ஸ்ரீர விசாலாக்ஷீ வ்யவஸாய: ததா க்ரத:

இங்கு சிலர் கேள்வி கேட்கக்கூடும். மேலே குறிப்பிட்ட வேதவாக்யம் புருஷ ஸூக்தத்தில் சேர்ந்தது அல்ல. புருஷஸூக்தம் ஒரு அனுவாகந்தான். ஆதலால் மேலே குறிப்பிடப்பட்ட லக்ஷ்மீபதித்வம் புருஷன் நாராயணன் தான் என்பதற்கு ப்ரமாணமாகாது. மேலும் லக்ஷ்மீபதித்வம் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதற்காக புருஷன் நாராயணன் எனில் ''ஸஹஸ்ராக்ஷ:'' என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் இந்திரன் தான் புருஷன் என்று கொள்ளாமே என்றும் கேள்வி எழும்.

இதற்கு பதில் : புருஷஸூக்தம், நாராயணாநுவாகம் இவை இணைந்து ஒரு விஷயத்தை விளக்குகின்றன என்பது பலவாறாக விளக்கப்பட்டுள்ளதால் உத்தர நாராயண அனுவாகத்தில் குறிப்பிடப்படும் நாராயணனே புருஷன் என்பது தெளிவு.

புருஷன் நாராயணனே என்று புராணகள் விளக்குவதை கூறுகிறோம். நாரஸிம்ஹ புராணத்தில் '' ஸ ஏவ வாஸுதேவோயம் ஸாக்ஷாத் புருஷ உச்யதே'' என்றும் மற்ற ஸ்ம்ருதிகளில்

'' பகவாநிதி சப்தோயம் ததா புருஷ இத்யபி
நிருமாதீச வர்த்தேதே வாஸுதேவ ஸதாதநே''

என்றும் நாராயணனே புருஷனாக குறிப்பிடப்படுகிறான். இவ்விதமான ஸ்ம்ருதிகள் நூற்றுக்கணக்கில் ஆசாரியர்களால் கையாளப்பட்டுள்ளன.

நாராயணனே புருஷோத்தமன் என்கிற விஷயத்தை '' ஸ ஏஷ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே'' என்னும் உபநிஷத் வாக்யத்தை விவரிக்கும் போது தெளிவாக எம்பெருமானார் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளினார். அங்கு புருஷ ஸப்தத்திற்கு நாராயணன் தான் பொருள் என்பதை ''புண்டரீகம் ஏவம் அக்ஷிணீ'' என்ற வாக்யத்தைக் கொண்டு நிரூபித்தார்.

'' பூர்வமேவாஹமிஹாஸதிதி தத் புருஷஸ் ய புருஷத்வம் '' என்று தைத்திரீயாரண்யகம் குறிப்பிடுகிறது. இங்கு புருஷஸூக்தத்தில் சொல்லப்படுபவனே நினைவுபடுத்தப்படுகின்றான்.

இங்கு ஓர் கேள்வி எழுகிறது. ப்ரக்ருதிம் புருஷ ஏசைவ வித்யநாதி உபாவபி'' என்கிற கீதை வாக்கியத்தில் புருஷன் என்று ஜீவனை குறிப்பிடுவதால் புருஷஸூக்தத்திலும் புருஷன் என்று ஜீவனையே கொள்ளலாம். மேலும் ஸஹஸ்ரசீர்ஷா என்று புருஷனுக்கு அவயவ ங்கள் சொல்லப்படுகின்றன. பரமாத்மா ''பச்யத்யசக்ஷு: ஸ ச்ருணோத்தி அகர்ண:''என்கிற ஸ்ருதியின்படி அவயவமற்றவனாயிற்றே. ஆகையால் ஜீவனையே புருஷன் என்று ஏன் கொள்ளக்கூடாது என்று.

இதற்கு விடை இங்கு புருஷன் '' புருஷ ஏவேதம் ஸர்வம்'' என்று குறிபிடப்படுகிறான். இதன் பொருளாவது எல்லா பொருட்களையும் தன்னுடைய சரீரமாக கொண்டபடியால் அவற்றுடன் ''ஐக்யம்'' ஒற்றுமையை கொண்டவன் என்பதாகும். இப்படிப்பட்ட தன்மை ஜீவனுக்கு அறவே வாராது. மேலும் காலவிசேஷத்தில் அவனுக்கு தன்னுடைய விருப்பப்படி அவயங்களை பெறுவதில் விரோதமில்லையாதலால் ''ஸஹஸ்ர சீர்ஷா'' என்று பரமாத்மாவை குறிப்பிடுவதில் தவறில்லை.

காவ்யகளிலும் புருஷன் என்று ஸ்ரீமந் நாராயணனே குறிப்பிட்படுகிறான் குமாரஸம்பவத்தில்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

கண்ணனும் கலியனும்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் ஸ்ரீ வில்லிபுத்தூர் ராமஸ்வாமி ஐய்யங்கார்)

---

1) இருவரும் சரமாவதாரபூதர்.

ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரங்கள் எண்ணிறந்தவைகள். வேதம் ''பஹுதா விஜாயதே'' என்றும், வேத்யனை கீதாசாரியன் ''பஹுனி'' என்றும், ஆழ்வார் ''சன்மம் பலபல'' என்றும் எம் பெருமானுடைய அவதாரங்கள் பேசப்பட்டுள்ளன. அவற்றில் பத்து அவதாரங்களை எடுத்து '' மீனேடு ஆமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்த்தானாய் ★ பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் ஆனான்'' என்று கலியனும் இச்சா மீந விஹார கச்சப மஹா போத்ரிந் யத்ருச்சாஹரே ரக்ஷா வாமந ரோஷ ராம கருணாகுலஸ்த்தஹேலா ஹலிந் க்ரீடா வல்லவ கல்கவாஹந தசா கல்கிந்...'' என்று கலியனுரை குடிகொண்ட கருத்தடை யோகனை ஸ்வாமி தேசிகனும் அருளிச் செய்துள்ளார்கள். இவற்றில் கல்கியவதாரம் பவிஷ்யத் அவதாரம். இனி வரப்போகிற அவதாரம். ஆக அந்த அவதாரத்தைவிட்டு பார்த்தால் பகவானது விபவாவதாரங்களில் க்ருஷ்ணவதாரமே முடிவானது. இதுகாறும் முடிந்துள்ள அவதாரம் க்ருஷ்ணவதாரமே.

கலியன் என்கிற திருமங்கையாழ்வாரும் ஆழ்வார்களுக்குள் கடைப்பட்டவர். ஸ்வாமி தேசிகன் ப்ரபந்த ஸாரத்தில் *(17)*

வையகம் எண் பொய்கை பூதம் பேயாழ்வார்
மழிசையர் கோன் மகிழ்மாறன் மதரகவிகள்
பொய்யில் புகழ்க் கோழியர் கோன் விட்டு சித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடி பாணழ்வார்
ஐயன் அருட்கலியன்.....

என்று அருளிச் செய்துள்ளார். ஆக ஆழ்வார்கள் குழுவில் கடைக்குட்டி யாயிருப்பவர். இதனால் கண்ணனும் கலியனும் சரமாவதார பூதர் என்பதனால் ஸாம்யம் பெற்றனர்.

2) இருவருடைய அவதாரமும் ஸூசிக்கப்பட்டது

கண்ணனுடைய திருத்தாயார் தேவகி. அவள் கம்ஸன் தேவகிக்கும் வசுதேவருக்கும் திருமணம் முடித்தான். அவர்களை ரதத்தில் வீற்றிருக்கச் செய்து அதனை தானே ஓட்டிச்

கொண்டு போகையில் ஆகாச வாணியொன்று செவிப்பட்டது!'' இத்தேவகியின் எட்டாவது குழந்தையிலுல் உனக்கு மரணம். இதனை இந்த மடந்தை தன் மக்களில் எட்டாம் மைந்தன் நின் ஆருயிர் வவ்வுவன் என்று ஐயங்கார் பாகவதம் கூறகிறது. நம்மாழ்வார் சாது சனத்தை நலியும் கஞ்சனை சாதிப்பதற்(கு) ஆதியஞ் சோதியுருவை அங்கு வைத்து இங்கு பிறந்த என்கிறார். இதலுல் கண்ணனுடைய திருவவதாரம் முன்னமே ஸூசிக்கப்பட்டது.

நம்மாழ்வார் திருவாய்மொழியில் கலியன் அவதரிக்கப் போகிறார் என்பதை **''கலியுங் கெடுங் கண்டு கொண்மின் ''** *(5.2.1)* என்று ஸூசிப்பித்துள்ளார். இவர் தாம் மயர்வற மதி நலம் பெற்றவராகையாலே கலியுங்கெடும் என்று திருமங்கையாழ்வார், உடையவர் போல் வார் அவதரித்துக் கலியுகஸ்வாபவமும் கழியுமென்று மேல் வரும் அம்சத்தை தரிசித்து அருளிச்செய்தாப் போலே '' என்று பூர்வர்கள் அருளிச் செய்துள்ளனர். இதலுல் கலியன் அவதாரமும் முன்பே தெரிவிக்கப்பட்டது.

3) இருவரம் வதம் செய்தவர்கள்

கண்ணன் கம்சவதம் செய்ததை பருங்கை யானையின் கொம்பினைப் பறித்து அதன் பாகனைச் சாடிப்புக்கு ஒருங்கே மல்லரைக் கொன்று, பின் கஞ்சனை உதைத்தவன். என்றும் விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்சென்றவன் என்றும் இச் செயலை கலியன் பாடியுள்ளார். கலியனை கலித்வம்ஸம் '' செய்தவர் என்றும் ''கலிகன்றி'' (கலிபுருஷனை கெடுத்தவர்) என்றும் கூறுவர் கண்ணன் கம்சவதம் . கலியன் கலிபுருஷ வதம்.

4)இருவரும் நீல நிறத்து அழகர்

கண்ணன் நீலநிறத்தழகார்ந்தவன் பெரியாழ்வார் *(1.3.12)*

மைத்தடங்கண்ணி யசோதை வளர்க்கின்ற

செய்த்தலை நீலநிறத்துச் சிறுப் பிள்ளை

என்கிற பாசுரப்படி கண்ணன் நீலநிற முடையவன். கலியனுக்கு நீலன் என்றே திருநாமம் சூட்டினர்கள் என்பதை

காமம் ஆதிகள் கைவலம் என்னும் பேய்
வாமம் ஆதிகள் மாயவும் மன்னிய
தூமனத்தர்க்குச் சொற்றெரி நீலனாம்
நாமம் இட்டனர் நான் மறையாளரே

என்கிற வடிவழகிய நம்பிதாசர் வாக்கும், இராமானுஜ நூற்றாந்தாதியில் ''தண்டழிழ் செய்த நீலன் தனக்கு என்று அருளிச் செய்திருப்பதும் இங்கு நினைக்கத்தகும்.

5)இருவரும் சூர்யன்

பராசரமஹரிஷி விஷ்ணுபுராணத்தில் கண்ணனே சூர்யனாக தெரிவிக்கிறார்.

ததோகில ஜகத்பத்ம போதாயா அச்சுதபானுநா

தேவகீ பூர்வ ஸந்த்யாயாம் ஆவிர்ப்பூதம் மஹாத்மநா

என்று தேவகியாகிற பூர்வஸந்தியையிலே க்ருஷ்ண சூரியன் ஆவிர்பவித்தன் என்றூர் ரிஷி.

திருக்கோட்டியூர் நம்பி திருமங்கையாழ்வாரை '' லோக திவாகரம்'' (உலகுக் கெல்லாம் சூர்யன் போன்றவர்) என்கிறார். கண்ணனும் கலியனும் சூர்யனே.

6) இருவரும் சாஸ்த்ர ப்ரதானம் பண்ணியவர்கள்

கண்ணன் தேர்த்தட்டு வார்த்தையாக கீதாசாஸ்த்ரத்தை வெளியிட்டான்.

ஸர்வோப நிஷதோ காவ: தோக்தா கோபால நந்தந: !

பார்த்தோ வத்ஸ: ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்

என்று கூறுகிறுன் ரிஷி. எல்லா உபநிஷத்துக்களுமே பசுக்களாகும்; அவற்றைக் கறப்பவனாய்ப் பிள்ளையான கண்ணன். அர்ஜுனன் கன்றுயிருப்பவன். ஞானியே அப்பாலைப் பருகுபவன். மிகச் சிறந்த கீதையாகிற அமுதமே பாலாகும் என்பது ரிஷியின் கருத்து.

நம்மாழ்வார் (திருவாய்மொழி 4.8.6)

அறிவினுற் குறைவில்லா அகல் ஞாலத்தவர் அறிய
நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்தொரு மூர்த்தி''

என்று கண்ணனே புகழ்ந்து பேசுகிறார். அறிவில்லையே என்று குறைவுபட அறியாத இவ்வுலகத்தவர் அறியும் படியாக அவரவர் பக்குவத்திற்கு ஏற்றபடி பற்பல மோக்ஷோபாயங்களை ஸர்வஜ்ஞனை கண்ணன் அருளிச்செய்த திவ்யக்ரந்தம் கீதாசாஸ்த்ரம் ''மாயன் அன்று ஐவர் தெய்வத்தேரினிற் செப்பிய கீதை'' என்று

அமுதனுரும்,'' வன் பற்றறுக்கு மருந்தென்று மாயவன் தானுரைத்த இன்பக் கடலமுதாமென நின்ற கீதை என்றும், தீதற்ற நற்குணப் பாற்கடல் தாமரைச் செம்மலர் மேல் மாதுற்ற,மார்வன் மருவஇன் கீதை'' என்றும் ''தீவ கைமாற்றி அன்று ஓர் தேரில் ஆரணம் பாடிய நம் தேவகி சீர் மகனூர்'' என்றும் சிலே விசயன் என்றும் தேரனைய சிறு வேதத்தே என்றும்,''கண்ணனுரை'' ''ஒரு பாகனுரை'' நெடுமால் தன் கீதை ''என்றும் ஸ்வாமி தேசிகனும் புகழ்ந்து பேசியுள்ளார்கள்.

திருமழிசையாழ்வார்

சேயன் அணியன் சிறியன் மிகப் பெரியவன்
ஆயன் துவரைக் கோனுய் நின்ற - மாயன் அன்று
ஓதிய வாக்கத்தனேக் கல்லார் உலகத்தில்
ஏதிலராய் மெய் ஞானமில்

(நான் முகன் திருவந்தாதி-71)

(கண்ணன் அருளிச் செய்த கீதை கற்காதவர்கள் என்கிறார். இதனால் கண்ணன் கீதா சாஸ்த்ரம் வெளியிட்டான் என அறியலாம்)

கலியன் அருளி ஆறுப்ரபந்தங்களும் ''நெஞ்சுக்கிருள் கடிதீபம் அடங்கா நெடும் பிறவி நஞ்சுக்கு நல்லவமுதம் - தமிழ் நன்னூல் துறைகள் அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் பரசமயப் பஞ்சுக்கனலின்பொறி பரகாலன் பனுவல்களே என்கிறார் கூரத்தாழ்வான். கலியன் கவிகள் அகவிருளே போக்கவல்ல திருவிளக்கு. ஞானவிளக்கு. ஒன்னுக்கும் அடங்காத நீண்ட ஸம்ஸார விஷத்தை மாற்றுவதற்கான அமிருதம். வேதத்தினுடைய ஸாரம்; புறமதக்கோட்பாடுகளான பஞ்சுச்சுருணைக்கு நெருப்பு பொறி.

கண்ணன் தந்த சாஸ்த்ரத்தை கீதோபநிஷத் என்பர். கலியன் கவிகளை ''பொங்குபுகழ் மங்கையர் கோனீந்த மறையாயிரம்'' என்பர் எம்பார்.

(7) இருவரும் 'கள்வர்' என்று அழைக்கப்படுவர்

நம்மாழ்வார் (திருவாய்மொழி 1 -5- 1)

வளவேழுலகின் முதலாய வானோரிறையை, அருவினையேன்
களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா! என்பன் - பின்னையும்
தளவேழ் முறுவர் பின்னைக் காய் வல்லானாயர் தலைவனாய்
இளவே றேழும் தழுவிய எந்தாய்! என்பன் நினைந்து நைந்தே

என்பர். ''வெண்ணை களவு செய்தான், பெண்களை களவு செய்தான்'' என்பது ஸ்ரீக்ருஷ்ண சரித்திரங்களில் காணலாம்.

கலியன்

கள்வனேனான் படிறு செய்திருப்பேன் கண்டவாதிரிதந்தேனேலும்'' என்றும்

சூதினைப் பெருக்கி களவினைத் துணிந்து என்றும் தாமே அருளியிருக்கிறார் மேலும் திருவரங்கம் பெரிய கோயில் திருப்பணிக்காக களவு செய்தது இவருடைய சரித்திரங்களில் தெரியவரும். ஆகவே இருவருக்கும் கள்வத்தினாலும் ஸாம்யம்.

(8) இருவருக்கும் தோழன்மார்கள் உண்டு:-

கண்ணனுக்கு ஆயிரம் தோழன்மார்கள் உண்டு ''தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர் நடையிட்டு வருவான்'' என்பர் பெரியாழ்வார். கொத்தளமாக்கிப் பரக்கழித்துக் குறும்பு செய்வானோர் மகனாக தான் செய்யும் தீமைகளுக்குத் துணைவராக பல சதுரர்களைக் கொண்டான் கண்ணன்.

கலியனும் நீர் மேல் நடப்பான், நிழலில் ஒதுங்குவான்; தாளுதுவான், தோலாவழக்கன், சாயை பிடிப்பான் முதலான சதுரர்களைத் தமது செய்கைகளுக்கு துணைவராகக் கொண்டிருந்தான்.

(9) இருவரும் பகைவர்களை அழித்தார்கள்:-

ஆண்டாள் திருப்பாவையில் கண்ணனுக்கு ''**மாற்றாரை மாற்றழிக்கவல்லான்**'' என்று திருநாமம் சாற்றியுள்ளாள். கண்ணன் ''**தேனுகன் பிலம்பன் காளியனென்னும் தீப்பப்பூடுகளடங்கவுழக்கி** என்றும் ''**மலைபுரை தோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர்குலைய, நூற்றுவரும் பட்டழிய**'' என்றும் சொல்கிறபடியே பகைவர்களையெல்லாம் வேரோடு களைந்தொழிப்பதில் பேர் பெற்றவன்.

கலியனும்

''**அருள் மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்**''

(அநுகூலர்க்கு அருள்பொழியும் மேகம் போன்றவர், சத்ருக்கள் தலையிடாதபடி அமுங்கச் செய்யுமவர்; விரோதிகளுக்கு சிங்கம் போன்றவர்) என்றும்

''**மருவலர் தம் உடல் துணிய வாள்வீசும் பரகாலன்**''

(சத்ருக்கள் சரீரங்கள் சிந்நம் பிந்நமாம்படி கட்கத்தை வீசுகிற சத்ரும்ருதயு) என்றும்

''ஒன்னலர் தங்களை வெல்லும் ஆடல்மாவலவன் கலிகன்ற

(பகைவர்களை வெல்லுகின்ற ஆட்டத்திற்கு குதிரையை ஏறிச் செலுத்துவதற்கு வல்லவரான ஆழ்வார்) என்றும் தாமேயருளிச் செய்தபடியே புறமதத்தவர்களாகிய பகைவர்களைக் களைந்தொழித்து இதனாலேயே பரகாலன் என்று பேர் பெற்றவர் கலியன்.

(10)இருவரும் உத்தாரகர்கள்:-

கண்ணன் ''உய்ய இவ்வாயர் குலத்தினில் தோன்றிய ஒண்சுடராயர் கொழுந்தே'' என்றும் ''ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தம் கோ'' என்றும் சொல்கிறபடியே திருவாய்ப்படியில் திருவவதரித்து கோகுலத்தை உத்தரிப்பித்தார்.

கலியனும் ஞானமும் நன்னடத்தையும் ஒன்றுமில்லாமல் இருக்கிற நம்முடைய குலத்திலே அவதரித்து நம்மை உத்தரிப்பித்தார்.

ஆக கண்ணனும் கலியனும் உத்தாரகர்கள்.

மற்றும் பல.

ஒண்டொடியாள் திருமகளுந்தானுமாகி
ஒருநினவாலின்றவுயிரெல்லாமுய்ய
வண்டுவரைநகர்வாழ வசுதேவற்காய்ப்
மன்னவர்க்குத்தேர்ப்பாகனுகி நின்ற
தண்டுளவமலர்மார்பன் தானேசொன்ன
தனித்தருமந்தானெமக்காய்த் தன்னையென்றுங்
கண்டுகளித்தடிசூடவிலக்காய்நின்ற
கண்புதையல்வினையாட்டைக்கழிக்கின்றனே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

சரணாகதியின் சிறப்பு

(ஸ்ரீமதுபயவே. வித்வான்
கொத்திமங்கலம் கோபால சக்ரவர்த்தியாசாரியர் ஸ்வாமி)

இவ்வனியில் வாழும் மாந்தர் விரும்பி அடையவேண்டிய புருஷார்த்தங்கள் – உறுதிப்பொருள்கள் தர்ம, அர்த்த, காம, மோக்ஷம்- அறம், பொருள், இன்பம் வீடு என்று நான்கு என்பர் பெரியோர்.

அறியாமையிருளில் ஆழ்ந்து அல்லலுறும் உயிரினங்களுக்கு நம்பிக்கை யொளியாய்- கலங்கரை விளக்கமாய் நிற்பது வேதம். எனவே தான் இதனை ''சுடர்மிகு சுருதி'' என்றருளினர் ஆழ்வார். ''ப்ரமாணம் வேதா:, வேதோதர்ம மூலம்'', ''வேதாத் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி'' என்றும் சிறப்பித்தனர். இவ்வேதம் என்றைக்கும் அழியாது நிலைத்து நிற்பதாகும். இறைவனைப் போல் இயற்கையிலேயே குற்றமொன்றுமில்லாததாகையால் ''அபஹத பாப்மா ஸ்வாத்யாய:'' என்று இதனை சிறப்பித்தது வேதமே.

இவ்வேதம் பூர்வ காண்டம் அல்லது கர்ம காண்டம், உத்திர காண்டம் அல்லது ப்ரஹ்ம காண்டம் அல்லது உபநிஷத் என்றும் இருபகுப்புடையது. கர்ம காண்டத்தில் கூறப்பட்ட யாகாதிகளைச் செய்வதன் மூலம் செல்வம், ஸ்வர்கம், புகழ் போன்றவற்றையடையலாம். ஆனால் இப்பயன்கள் நிலைத்திருப்பவையல்ல. நமது நல்வினைகள் குறைந்தால் இவையும் குறையும். மீண்டும் வாழ்க்கைச் சகதியில் உழலவேண்டிய நிலையே. எனவே அழியாப்பேரின்பம் பெற வழிகள் உளவா? அவை யாவை? என்ற வினாக்கள் பீறிட்டு எழும் போது பகவானையடைந்தால் அழியாப்பேரின்பம் பெறலாம் என்று உபநிஷதங்கள் உபதேசித்தன. அவனை எளிதில் அடைய முடியாது. அவனே எவனை விரும்பி ஏற்கிறானோ அவனாலேயே பகவானையடைய முடியும் என்றும் கூறி, அவன் நம்மை விரும்பி ஏற்பதற்கான வழி அவனை த்யானம் செய்தலே-பக்திசெய்தலே என்றும் அறிவுறுத்தின.

''நாய மாத்மா ..... யமேவைஷ வ்ருணுதே தேநலப்ய:''
''ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய: ''

பகவான் கண்ணன் ''மோக்ஷம் பெறுவதற்கான சிறந்த வழி பக்தியோகமே'' என்றருளினர். பக்தியோகத்தைத் திடீரென்று தொடங்கவியலாது. கர்ம, ஜ்ஞான

யோகங்களைச் செய்தபின்பே தொடங்கவியலும் என்றும் விளக்கினர்.

கர்ம யோகம்:

ஜீவ, பரமாத்மாக்களின் உண்மை ஸ்வரூபங்களை சாஸ்த்ரங்கள் வாயிலாக நன்குணர்ந்து கர்மாக்களைச் செய்வதிலும் அவற்றால் வரும் பயன்களிலும் தனக்கு எவ்வித தொடர்புமில்லையென்ற ஸாத்விகத்யாகத்துடன் நித்ய நைமித்தக கர்மாக்களை விடாமல் செய்யவேண்டும். அவை தேவதாராதனம் தானம், யாகம் போன்றவையாம்.

ஜ்ஞாநயோகம் :

தொடர்ந்து பற்றின்றி பகவானது த்ருப்திக்காகக் கர்மாக்களைச் செய்வதால் மனத்தூய்மை ஏற்படுகிறது. சேதன அசேதனங்களின் இயல்பு - நீடித்து நிற்றல், செயல் ஆகியவை இறைவனது ஸங்கல்பத்திற்குட்பட்டவை. இது விதேயத்வம் எனப்படும்.

சேதந அசேதனங்களின் இயல்பு - நீடித்து நிற்றல், செயல் ஆகியவை இறைவனது ஸங்கல்பத்திற்குட்பட்டவை. இது விதேயத்வம் எனப்படும்.

சேதந அசேதநங்கள் தமக்கின்றின்றி பகவானது பயனையே தமது பயனாக் கொண்டவை. இது சேஷத்வம் எனப்படும். மேற்கூறிய ஆதேயத்வ விதேயத்வ, சேஷத்வப் பண்புகள் சேதநா சேதநர்களுக்கப் பொருந்தியிருப்பதால் இவை பகவானுக்கு சரீரம், எம்பெருமான் சரீரி என்றுணர்ந்து இவ்வியல்புகளையே எண்ணுதல் ஜ்ஞாநயோகமாகும்.

பக்தியோகம் :

கர்ம யோகத்தால் மனத்தூய்மையடைந்து ஜ்ஞாநயோகத்தால் ஜீவ பரமாத்மாக்களின் உண்மை ஸ்வரூபங்களைத் தெளிந்ததால் உயர்ந்த புருஷார்த்தமான பகவானையடைய வேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பட்டு பக்தியோகத்தில் ஈடுபடுகிறான். பக்தியென்பது இடைவிடாத பகவத் த்யானம் ஆகும். உயரத்திலிருந்து விழும் எண்ணெய் இடையீரின்றி தாரையாக விழுவதைப் போல் இடையீடில்லாத நினைவே த்யானமாகும். ''தாரையறா நினைவொழுக்கம்'' என்றார் ஸ்வாமி தேசிகன்.

ப்ரபத்தி:

பகவானது ஸஹஸ்ரநாமத்தை எளிய முறையில் கூறிப் பயன்பெறும் வழியை வினவிய பார்வதிக்குச் சிவபெருமான் (''ஸ்ரீராம ராம ராமேதி'') ஸ்ரீராம ராம ராம என்று கூறுவதன் மூலம் எளிய வழியில் பெரும் பயனைப்பெறலாம் என்று விடையிறுத்தார். அங்ஙனமே புராணங்களில் ஏற்றமிகுந்ததான 'ஸ்ரீவராஹ புராணத்தில் பிராட்டி மிகவும் வருந்தி நீண்ட நாட்கள் செய்யக்கூடிய பக்தி யோகத்தால்

''தமப்யகச்சத் ப்ரமோ விதாதா , ஸ்ரீவத்ஸ லக்ஷ்மா புருஷஸ் ச ஸாக்ஷாத்''

ரகுவம்ஸத்தில் பதின்முன்றாம் ஸர்க்கத்தில்

நாபிப்ரஸூடாம்புருஹாஸநேந ஸம்ஸ்தூயமாந: ப்ரதமேந தாதரா
அமும் யுகாந்தோசித யோகநித்ர: ஸம்ஹ்ருத்ய லோகாந் புருஷோதிசேதே''

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.

புருஷ ஸூக்தத்தில் ஜகத்காரணமாக சொல்லப்படுகிற புருஷனே ப்ருஹதாரண்ய கோபநிஷத்தில் ஆதிகாரணமாதலால் புருஷன் என்று குறிப்பிடப்படுகிறான்.

''ஸ ய: பூர்வோ ஸ்மாத் ஸர்வஸ்மாத் ஸர்பாந் ப்ராப்ய ஔஷன் தஸ்மாத் புருஷ:'' என்ற வாக்கியம் ஆதிகாரணமானபடியாலே புருஷன் என்று பரமாத்மாவை குறிப்பிடுகிறது.

இந்த புருஷன் நாராயணன் என்று எவ்வாறு கிடைக்கிறது என்பதை விளக்குகின்றோம். மீமாம்ஸையில் இரண்டு நியாயங்கள் உள்ளன. ஒன்று **''சாகபசு ந்யாயம்''** மற்றொரு **''ஸர்வசாகா ப்ரத்யய ந்யாயம்''** என்பதாகும். **''சாகபசு ந்யாயம்''** என்பது யாகத்தில் நான்கு காலுடைய பிராணியான பசு த்ரவ்யம் என்று ஸாமான்யமாக **''பசுநா யஜேத''** என்கிற வாக்கியத்தால் அறியப்பட்டாலும் அந்த பசு வெள்ளாடு தான் என்கிற நிர்ணயம் **''சாகஸ்ய வபாயா மேதஸ:''** என்கிற வாக்யத்தால் ஏற்படுதலை குறிக்கும். சாகம் என்றால் வெள்ளாடு. அவ்வாறே இங்கும் ஸத், ஆத்மா, ப்ரம்ஹம் என்று ஆங்காங்கு ஸாமான்ய ஸப்தங்களால் தெரிவிக்கப்பட்ட பரமாத்மா ஸாக்ஷாத் ஸ்ரிய: பதியான நாராயணனே என்று புருஷ ஸூக்தத்தினால் அறிகிறோம். ஸர்வ: ஸாகாப்ரத்யய நியாயம் இங்கு எவ்வாறு உபயோகப்படுகின்றது எனில் அதை விளக்குவோம். வேதங்கள் ஒவ்வொரிடத்தில் ஒவ்வொரு வேததையை பரதேவதையாக குறிப்பிடுகின்றன. ஆனால் ''ஸர்வஸாகா ப்ரத்யய ந்யாய''த்தால் மஹோபநிஷத், நாராயணோபநிஹத், புருஷஸூக்தம், நாராயணாநுவாகம், மற்றும் நூற்றுக்கணக்கான வேத வாக்யங்களை கொண்டு நாராயணனே பரதேவதை என்று அறியமுடியும்.

சிலர் நான்முகனை பரதேவதையாகவும் புருஷன் என்று கூறலாம். ஆனால் நான்முகனே ஸ்ரீராமாயணத்தில் சக்கரவர்த்தி திருமகனான இராமபிரானை புருஷனாகவும் புருஷோத்த மனாகவும் துதிக்கிறான்.

வோகாநாம் த்வம் பரோ தர்ம: விஷ்வக்ஸேந: சதுர்புஜ:
ஸார்ங்க தந்வா ஹ்ருஷீகேஸ: புருஷ: புருஷோத்தம:

என்கிற ஸ்லோகம் இங்கு நோக்கத்தக்கது.

சிலர் சிவனைபரதேவதையாக கூறுவர். ஆனால் தேவதாந்தர பரமான ஸ்காந்த புராணம் ஸ்பஷ்டமாக புருஷன் என்றும் சொல் நாராயணனையே குறிப்பிடும் என்றும் உரைக்கிறது. அங்கு காணப்படும் ஸ்லோகம் இது.

யதா புருஷ ஸப்தோயம் வாஸுதேவேவ திஷ்டதே
ததா ஸங்கர ஸப்தோயம் அஹாதேவே வநயவஸ்தித:

புருஷன் என்று ஹரியே குறிப்பிடுடப்படுவனென்று ஆசாரியர்கள் ப்ரமாணங்களை தெளிவாகவும் அதிகமான எண்ணிக்கையிலும் காண்பித்திருக்கிறார்கள்.

ஸ்வாமி தேசிகன் புருஷஸூக்தத்தில் விஷயமானவன் ஸ்ரீமந்நாரயணனே என்று ப்ரமாணங்களை கொண்டு ஸ்ரீ ஸ்தோத்ர ரத்ன பாஷ்யத்தில் ஸாதித்தருளினார். புருஷஸூக்தம் விஷ்ணுவை குறிக்கிறது என்பதற்காக ஸ்ம்ருதி வாக்கியங்களையும் உதாஹரித்து அருளினார்.

''புருஷஸ்ய ஹரேஸூக்தம் ஸவர்க்யம் தந்யம் யஸஸ்கரம்'' என்ற ஸ்ம்ருதியும்,

''இதம் புருஷஸூக்தம் ஹி ஸர்வேதேஷு பட்யதே ருதம் ஸத்யஞ்ச விக்யாதம் ரிஷிஸிம்ஹை நந சிந்திதம்'' என்ற மஹாபாரத வாக்கியமும், புருஷஸூக்தம் விஷ்ணுவையே சொல்லுகின்றது என்பதற்கான ப்ரமாணங்கள் ஸ்வாமியால் காண்பிக்கப்பட்டவை.

மேலும் கல்பஸூத்ரகாரருடைய வசனங்களை ப்ரமாணமாக காண்பித்தும் புருஷோத்தமபரமாக ஸ்வாமி ஸாதித்தருளினார்.

''ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: இதி உபஹிதாம் புருஷேண நாராயணேந யஜமானம் உபதிஷ்ட்டதே, ஸஹஸ்ரஸீர்ஷா புருஷ இதி புருஷேண நாராயணேந பராஞ்சோ அநுபம் ஸந்தி''

என்கிற கல்பஸூத்ர வசனம் அங்கு உதாஹரிக்கப்பட்டது.

புருஷஸூக்தம் விஷ்ணு தேவதையை குறித்து செய்யப்படும் ஸூக்திகளில் மந்த்ரமாக விதிக்கப்படுகிறது. இது அதர்வவேதத்தினுடைய ஸாந்தி ப்ரகணத்தில் ஸ்பஷ்டமாக தெரிவிக்கப்படுகிறது. ஆகையால் பல ப்ரமாணங்களால் புருஷஸூக்தம் ஜகத்காரணமான ஸ்ரீமந்நாராயணனையே புருஷனாக தெரிவிக்கிறது என்பது தெள்ளத்தெளிவாகிறது.

இவ்வாறாக ஆசாரியர்கள் ஸாதித்த க்ரந்தங்களிலிருந்து புருஷஸூக்தம் வியம்பும் இறையவன் நாரர்யணனே என்று அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரை விளக்கினேன். ஸ்ரீமத் ஆண்டவன் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் ரங்கராமாநுஜ மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவ சமயத்தில் ஸ்வாமியுடைய திருவடிகளில் அநந்த ப்ரணாமங்களுடன் இந்த கட்டுரையை ஸமர்ப்பிக்கிறேன்.

பெறப்படும் மோக்ஷத்தை எளிதில் அடையும் உபாயத்தை வினவ, பகவான் 'ப்ரபத்தி'' எனும் எளிய வழியை அருளினார்.

மத்க்ருதே ஸர்வபூதாநாம் லக்ஷபாயம் வத ப்ரபோ'' பகவானது விடை வராஹ சரமச்லோகம் என்ற புகழ் பெற்றதாகும். ''உடலும் மனமும் நல்ல நிலையில் இருக்கும் போது நீ என்னை நினைப்பாயாக-சரண் அடைவாயாக. அவ்வாறாயின் நீ மரணமடையுங்கால் நினைவின்றி மரக்கட்டை போலவும் பாறாங்கல் போலவும் இருக்கும் போது உன்னை நானே நினைத்து உயர்கதியை யடைவிப்பேன்'' என்னும் பொருளுடயது வராஹ சரமச்லோகமாகும். இவ்வருளுரையையறிந்தே பெரியாழ்வார்.

''எய்ப்பென்னை வந்து நலியும் போதங் கேதும்
நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்'' என்றருளினார்.

மற்றொரு பெரியார்

'க்ருஷ்ண த்வதீய பத பங்கஜ பஞ்ஜராந்தம்
அத்யைவமே விசது மாநஸ ராஜஹம்ஸ:
ப்ராண ப்ரயாண ஸமயே கபவாத பித்தை:
கண்டாவரோதன விதௌ ஸ்மரணம் குதஸ்தே'' என்றார்.

இராமாவதாரத்தில்

''ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வ பூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம''

ஒருமுறை என்னைச் சரணடைந்தால் அவன் எத்தகைய இழிசெயலைச் செய்தவனாயினும் அவனைக் காப்பதையே நான் நோன்பாகக் கொண்டேன் என்றார். இதையொட்டியே ராமாவதாரத்தைச் சுட்டும்போது ஸ்வாமி தேசிகன்

''ஸர்வாவஸ்த ஸக்ருத் ப்ரபந்ந ஜநதாஸம்ரக்ஷணைக வ்ரதீ'' என்றருளிருச் செய்தார்.

க்ருஷ்ணவதாரத்தில்

'' ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ'' என்று முழங்கினார்.

ஸ்ரீபாஷ்யகாரரும் சரணாகதியும்

ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீரங்கத்தில் எம்பெருமானுடன் ஸம்பாஷித்ததாகவும் அப்போது

பகவான் 'சரணாகதி செய்தவனை ஒருபோதும் கைவிடேன். ஐயம் வேண்டாம். இதுவரை யான் பொய் சொன்னதில்லை. இனியும் ஒருக்காலும் கூறேன். ராமன் ஒருமுறை கூறியதை மாற்றிப் பேசுபவனல்லன். **'ஸக்ருதேவ ப்ரபந்நாய' 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய'** என்று கூறியவன் யாயேனயல்லனோ. எனவே என்னையடைவதில் சிறிதும் ஐயமின்றி இனிதிருப்பாயாக என்று அருளியதாகவும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிய கத்யத்திலிருந்து தெரிகிறது.

'மாதேபூத் அத்ரஸம்சய:'
'அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந'
'ராமோத்வி: நாபிபாஷதே'
'ஸக்ருதேவ ப்ரபந்நாய' ஸர்வதர்மான் பரித்யஜ்ய இதி மயைவஹ்யுக்தம்'
அத: த்வம் தவ தத்வத: மத் ஜ்ஞாந தர்சன ப்ராப்திஷு நிஸ்ஸம்சய: ஸுகமாஸ்வ'

இதைச் சுட்டியே ஆசார்யஸார்வபௌமனான தேசிகன்

'உக்த்யா தனஞ்ஜய விபீஷண லக்ஷ்யயாதே
ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநே: பவதாவிதீர்ணம்' என்றருளினார்.

சரணாகதி சாஸ்த்ரமெனப்படும் ராமாயணத்திலும் மஹாபாரதத்திலும் சரணாகதி பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. வேதக் கருத்துக்களை விளக்குவதில் பெருமகிழ்வு கொண்ட வால்மீகியாலும் வ்யாஸராலும் இயற்றப்பட்ட ராமாயண பாரதங்கள் நமக்கிருகண்களாம். ராமாயண பாரதங்களில் கூறப்பட்ட கருத்துக்களைக் காண்போர் ஸாதாரண அறிவு பெற்றவராயினும் இவை வேதத்தில் கூறப்பட்டவையே என்று ஊகிப்பர் என்றார் ஸ்வாமி தேசிகன்.

''வே தோப ப்ரும்ஹண குதூஹலிநா நிபத்தம்
விச்வம் பரா ச்ருதிபவேந மஹர்ஷிணா யத்
வ்யாஸேந யச்ச மதுஸூதந பாதரக்ஷே
த்வே சக்ஷுஷீ த்வதனுபாவ மவேக்ஷிதும் ந: என்றும்

''அல்ப ச்ருதைரபி ஜநை ரனுமீயஸே'' என்றும் அருளினார். உண்மையில் கடச்ருதி ச்வேதாச்வேதரம், தைத்திரீயம் ஆகியவற்றில் சரணாகதி கூறப்பட்டள்ளது.

பக்தி யோகத்துக்குரியோர்

பக்தி யோக ஸ்வருபாதிகளை சாஸ்திரங்களால் நன்கு உணர்ந்தவனாயும் அதன்படி நடக்க ஆற்றலுள்ளவனாகவும் வேதமோத தகுதி பெற்ற முதல் மூன்று வர்ண பிறப்பாளனாகவும் மோக்ஷம் பெறுவதில் ஏற்படும் கால தாமதத்தை பொறுப்பவனாகவும் இருக்க வேணடும்.

ப்ரபத்திக்குரியோர்

மேற்கூறிய நான்கு தகுதிகளுள் ஒன்று இல்லாவிடிலும் அகிஞ்சனான அவன் ப்ரபத்திக்குரியோனே **பக்த்யாதௌ சக்த்யபாவ: ப்ரமிதிரஹிததா சாஸ்த்ரத: பர்யுதாஸ:** என்று அருளினார் ஸ்வாமி தேசிகன்.

பரன்யாஸமே முக்யம்

மோக்ஷம் பெறுவதற்கான உபாயமான பக்தி யோகம் நமக்கு சுமையாகத் தெரிகிறது. அதை பகவானிடம் ஒப்படைப்பதே பரஸமர்ப்பணம். நீயே பக்தியோக ஸ்தானத்தில் நின்று என்னை மோக்ஷமடைவிப்பாயாக என்று வேண்டுதலே பரஸமர்ப்பணமாகும். **உத்பாஹ்ய பாவ மபஹராய** என்ற தேசிக ஸ்ரீஸூக்தியை நோக்குக.

ப்ரபத்தியன் பிரிவுகள்

ஸ்வநிஷ்டை, உக்தி நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை , பாகவத நிஷ்டை என்று நால் வகைப்படும் ப்ரபத்தி.

அளவுடையார் அடைந்தார்க்கும் அதனுரையே கொண்டவர்க்கும்
வளவுரை தந்தவனருளே மன்னிய மாதவத்தோற்கும்
களவொழிவார் எமரென்னவிசைந்தவற்க்கும் காவலராம்.

என்பது தேசிகன் அருளியது.

ஸ்வநிஷ்டை

ப்ரபத்தியான அங்கியையும் அதன் அங்கங்களையும் தெளிவாக அறிந்து தாமே பகவானை முறைப்படி சரணடைதல்.

உக்தி நிஷ்டை

அங்கங்களில் முழு அறிவு இல்லாதவர் மஹா விச்வாஸத்துடன் என்பெருமானை யன்றி வேறு பற்றற்றவராய் முழு ப்ரபத்தியை வெளியிடுவதும் ஆசார்யனால் உபதேசிக்கப் படுவதுமான வாக்யங்களை அவர் சொல்லச் சொல்ல உச்சரித்து பரஸமர்ப்பணம் செய்தலாம். தாதிகள் சொல்லிக் கொடுக்கும் பாசுரத்தைச் சொல்லி பேரரசனை சரண்புகும் அறிவற்ற சிற்றரசர் குமாரர் போல என்று ஸ்வாமி தேசிகன் தரும் உதாரணத்தை நோக்குக.

ஆசார்ய நிஷ்டை

ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்த ஆசார்யன் பெருமாளிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தல்.

பாகவத நிஷ்டை

பூர்ணாதிகாரியான ஒரு பாகவதர் எம்பெருமானிடம் செய்யும் சரணாகதியில் அடங்கியிருத்தல்.

தற்காலத்தில் ஸ்வநிஷ்டை அனுஷ்ட்டிப்பவர் எவருமிலர். பாகவத நிஷ்டையும் அருகியுள்ளது. பெரும்பாலும் தமது பரம்பரை ஆசார்யர் மூலமாகவே சரணாகதி அனுஷ்ட்டிக்கின்றனர். எனவே தற்போது உக்தி நிஷ்டரும் ஆசார்ய நிஷ்டருமே உள்ளனர். பெரும்பாலோர் ஆசார்ய நிஷ்டையில் அடங்கியிருப்பவரே.

இத்தகைய ப்ரபத்தியும் ஆர்த்த ப்ரபத்தி த்ருப்த ப்ரபத்தி என இருவகைப்படும்.

ஆர்த்த ப்ரபத்தி

மோக்ஷம் பெற கால தாமதத்தை பொறாமல் உடனே மோக்ஷம் விரும்புவோர் செய்வது ஆர்த்த ப்ரபத்தி.

த்ருப்த ப்ரபத்தி

இந்த சரீரம் அழியும் போது மோக்ஷம் பெற விரும்பி செய்யப்படும் சரணாகதி த்ருப்த ப்ரபத்தி எனப்படும்.

ஆசார்ய நிஷ்டையும் முன்னோர்களும்

ஒரு மலையில் நின்றும் ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹசாரத்தில் ஜந்துக்களை போல் பாஷ்யகாரர் ஸம்ஸார லங்கனம் பண்ண அவரோடுண்டான குடல் துவக்காலே நாம் உத்தீர்ணராவுதோம் என்பது முதலியாண்டான் பாசுரமாகும் என்றறருளிய தேசிகன் முதலியாண்டான் ஆசார்ய நிஷ்டையில் அடங்கினதை வெளிப்படுத்தினர்.

தவ பரோக்ஷம் அகாரிஷி தார்மிகை: என்று ஆசார்ய நிஷ்டையில் தாம் அடங்கியிருந்ததை பட்டர் வெளிப்படுத்தினார். ஸ்வாமி தேசிகன் ந்யஸ்தஸ்ய பூர்வ நிபுணை: த்வயி என்பதால் ஆசார்ய நிஷ்டையில் அடங்கியிருந்ததை வெளிப் படுத்தினார். மேலும் அந்தோநந்த க்ரஹணவசக: என்ற ச்லோகத்தில் குருடன்

கண்ணுள்ளவன் உதவியால் நடத்தலைப் போல (அறிவற்றவன் அறிவாளியின் உதவியால் நடத்தல்) முடவன் (ஆற்றலற்றவன்) படகோட்டி (ஆற்றலுடையோன்) யின் உதவியால் செலுத்தப்படுவதை போல அரசு பணியாளர் குழந்தைகள் (அறிவு ஆற்றல் இரண்டுமில்லாத) அரசனை அறியாவிடினும் அரசனளிக்கும் இன்பங்களை நுகர்தலை போல எத்தகைய ஆற்றலுமற்ற யான் ஆற்றலும் கருணையும் கொண்ட ஆசார்யர்களே உன்னை அடைவிப்பதில் வல்லவர்கள் என்றும்

மந்யே பலம் ப்ரபல துஷ்க்ருத சாலினோ மே
த்வன் மூல தேசிக கடாக்ஷ நிபாத மாத்யம்

என்றும் ஆசார்ய நிஷ்டனுக்கு கைமுதிக ந்யாயத்தாலே பல ஸித்தியில் ஸந்தேஹமில்லை என்றும் **த்வய்யாசார்யைர் விநிஹிதபரா: ...ஸுரயோ மே ஸ்வதந்தாம்** என்றும் அருளியதால் ஆசார்ய நிஷ்டையின் ஏற்றத்தை உணரலாம்.

ப்ரபத்தியின் அங்கங்கள்

உகக்குமவைகந்து உகவாவனைத்துமொழிந்துறவுகுண
மிகத்துணிவு பெறவுணர்ந்து வியன் காவலென வரித்து
சகத்திலொரு புகலில்லாத் தவமறியேன்

1. பகவான் திருவுள்ளமுகக்கும் செயல்களைச் செய்வதில் உறுதி
2. அவன் உகக்காதவற்றை செய்யாது நீங்கல்
3. பகவான் உறுதியாக மோக்ஷமளிப்பான் என்ற மஹாவிச்வாஸம்
4. ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூபங்களையும் பகவானது திருக்கலகல்யான குணங்களையு முணர்ந்து அவனையே ரக்ஷகனாக வரித்தல்.
5. வேறு புகலிடம் இல்லையென்ற எண்ணத்துடன் மோக்ஷோபாயம் வேறறியேன் என்ற எண்ணம் என்ற ஐந்து அங்கங்களுடன் கூடிய ப்ரபத்தியை அனுஷ்டிக்க வேண்டும். இவற்றை ஸ்வாமி தேசிகன்

''ந்யஸ்யாம்யகிஞ்சன:''
''அத்யாந்தா கிஞ்சனோஹம்''
''த்வத் ப்ராதி கூல்ய விமுகா:''
போன்றவற்றிலும் விசதமாக அருளியுள்ளார்.

உலகியல் உதாரணம்

''ஸானுக்ரோ சே ஸமர்த்தே ப்ரபதனம் ருஷிபி:
ஸ்மர்யதேபி பீஷ்டஸித்யை லோகேப்யேதத் ப்ஸித்தம்''
இரக்கம் ஆற்றல் இவையுள்ளவனிடம் விரும்பியதைப் பெற சரணடைதல் உலகிலும் வழக்கிலுள்ளது என்றருளினார் ஸ்வாமி தேசிகன்.

எனவே இரக்கமில்லாத பரசுராமனிடம் தசரதன் செய்த சரணாகதியும் ஆற்றல் மிகுந்த ராமன் ஆற்றலற்ற ஸமுத்ரராஜனிடம் செய்த சரணாகதியும் பலிக்கவில்லை.

ஸுக்ரீவன், காகம், விபீஷணன், த்ரௌபதி கஜேந்த்ரன் ஸுமுகன், த்ரிசங்கு, சுனச்சேபன் போன்றோர் விரும்பியதைப் பெற எம்பெருமானிடமும் விச்வாமித்ரரிடமும் சரணடைந்து விரும்பியதைப் பெற்றதை ஸ்வாமி எடுத்துக் காட்டியுள்ளார்.

ஸ்ரீபாஷ்யகாரர்

''அநாகத அநந்தகால ஸமீக்ஷயாப்யத்ருஷ்ட ஸந்தாரோ பாய:''
''தத் ப்ராப்தயேச தத்பாதாம்புஜத்வயப்ரபத்தே: அன்யத் நமே கல்ப கோடி ஸஹஸ்ரேணாபி ஸாதனம் மஸ்தி''

என்று சரணாகதியொன்றே மோக்ஷம் பெறச் சிறந்த வழி யென்றருளினார்.

''காகம் இராக்கதன் மன்னர் காதலி கத்திரபந்து
நாகம் அரன் அயன் முதலா நாக நகரார் தமக்கும்
போகம் உயர் வீடு பெறப் பொன்னருள் செய்தமை கண்டு''

என்று சரணாகதியால் பயனடைந்தவரைச் சுட்டி ப்ரபத்தி செய்யாதவனுக்குப் பகவான் மோக்ஷம் அருள்வதில்லை

'ப்ரபந்நாதந்யேஷாம் ந திசதி முகுந்தோ நிஜபதம்''

என்று ஸ்ரீ பாஷ்யகாரர் திருவுள்ளத்தைப் பின்பற்றி உலகினர்க்குப் பறைசாற்றினார் ஸ்வாமி தேசிகன்.

'ந்யாஸ: ப்ரோக்த: அதிரிக்தம் தப: என்று ஸ்வாமி ஸ்ரீஸுத்தியை நோக்குக.

பக்தி ப்ரபத்தி அதிகாரிகள் பற்றிய ஐயம்

பக்தி ப்ரபத்திகளில் யார் எதை வேண்டுமானாலும் செய்யலாமா? அனைவரும் எளிய ப்ரபத்தியையே செய்து விட்டால் பக்திக்குரியவர் யார் என்ற ஐயத்திற்கு விடையாக ஸ்வாமி தேசிகன் அருளியதைக் காண்போம்.

பிறவித்துன்பத்தில் உழலும் இவ்வுலகினர் இத்துன்பம் பற்றியும் மோக்ஷ இன்பம் பற்றியும் ஓரளவு அறிவு பெற்றிருப்பினும் என்னையடைய முயற்சிப்பதில்லை. ஆயிரக்கணக்கானோரில் எவனோ ஒருவன் ஸித்தியுடைய முயற்சிக்கிறான். அவ்வாறு முயற்சிப் போரில் எவனோ ஒருவனே ஸித்தியடைகிறான். பிறவிப் பயன்களால்

உயர் பொருளில்லை என்ற உண்மையுணர்வதில்லை. இழந்த செல்வத்தைப் பெற விரும்புபவன், வறுமை நீங்கச் செல்வம் விழைபவன், ஜ்வாத்மஸ்வரூபத்தையறிய விழைபவன், என்னையே உபாயமாகவும் பலமாகவும் அறிந்தவன் என்ற நால் வகையினர் என்னிடம் பக்தி செய்கின்றனர். அவரவர் வினைகளுக்கேற்ப செயல்படுவதால் மோக்ஷோபாயத்தில் அனைவரும் இழிவதில்லை என்று அருளினார் பகவான்.

''மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு'' என்று தொடங்கி **''ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீஜ்ஞானீ''** என்பது வரை. ஸ்வாமி தேசிகனும்

''மோக்ஷோபாயார்ஹதைவம் பவதி பவப்ருதாம் கஸ்யசித் க்வாபி காலே தத்வத் பக்தி ப்ரபத்யோரதிக்ருதி நியம:'' என்றருளினார்.

ஆசார்யனிடமிருந்து தத்வஜ்ஞானம் பெற்றவர் தான் ஏதோ ஒரு கால விசேஷத்தில் இதில் ஈடுபடுகிறார்கள். அவரவரது நல் வினைகள் பக்குவமடையும் போது தான் ஆசார்யனது உபதேசம் மோக்ஷோபாயத்தில் ஈடுபாடு அதிலும் அவரவர் வினையடிப்படையாக பக்தியிலோ ப்ரபத்தியிலோ ஈடுபாடு என்பதெல்லாம் ஏற்படும் என்று ஸமாதானம் அருளினார்.

ப்ரபந்நனும் கர்மானுஷ்டானங்களும்

ப்ரபந்நன், ப்ரபத்திக்கு அங்கங்களாகாவிடினும் நித்ய நைமித்திக கர்மானுஷ்டானங்களை ஸாத்விக த்யாகத்துடன் (பற்றின்றி) எம்பெருமான் திருவுள்ள முகக்கக் கட்டாயம் விடாமல் செய்ய வேண்டும். 'ந்யாஸாசேதேஷு தர்மத்ய ஜ நவசதத:'' என்ற ஸ்ரீஸூக்தியை நோக்குக.

பக்தி ப்ரபத்திகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகள்

பக்தி	ப்ரபத்தி
1. முதல் மூன்று வருணத்தினரேயுரியர் 2. சாஸ்த்ர ஜ்ஞானம், அனுஷ்டானம், மோக்ஷம் பெற ஆகும் தாமதத்தைப் பொறுத்துக் கொள்வது ஆகிய தகுதியுடையர் 3. வர்ணாச்ரம தர்மங்களைத் தவறாது அனுஷ்டித்தல் என்ற அங்கமுடையது.	1. அந்தணர் தொடங்கி அந்தியர் ஈறாகயாராயினும் உரியர் 2. பக்தியிலிழிய தகுதியின்மை வேறு பயனையோ வேறு தெய்வத்தையே நாடாமை 3. இதற்குரிய முற்கூறப்பட்ட ஐந்த அங்கங்களைப் ப்ரபத்தி காலத்தில் மட்டும் பெற்றிருந்தால் போதும்.

4. மோக்ஷம் பெற ப்ராணன் பிரியுங்கால் பகவானை நினைத்தல் அவசியம் அந்திமஸ்ம்ருதி	4. தேவையில்லை
5. ப்ராரப்த கர்மாக்களைப் போக்காது	5. போக்கும். ''ஆர்த்தேஷ்வாசுபலா'' என்ற ஸ்ரீதேசிகஸ்லோக்தியை நோக்குக
6. ப்ராரப் தகர்மாக்களின் முடிவில் தான் மோக்ஷம் அதாவது இப்பிறவியிலே. பல பிறவி எடுத்தபின்போ கூட கிடைக்கலாம்.	6. விரும்பிய போதோ இச்சரீரம் கழியும் போதோ உறுதியாகக்கிட்டும்.
7. ''ஆவ்ருத்திரஸக்ருத் உடதேசாத்'' ''ஆப்ரயாணாத் தத்ராபி--'' என்பனவற்றால் உயிருள்ள வரைத் தொடர்ந்து செய்யவேண்டும்.	7. ஒரே முறைச்செய்தால் போதும் விரைவில் செய்யப்கூடியது.

பக்தியோக நிஷ்டனும் ப்ரபத்தியும்

பக்தியோகநிஷ்டனும் தன்பக்திக்கு இடையூறாக இருப்பனவற்றைப் போக்க ப்ரபத்தி செய்கிறான். இது நேரிடையாக மோக்ஷம் தராமல் தடையற்ற பக்தியில் ஈடுபடுத்த மோக்ஷமளிக்கும்.

பொதுவானவை

ப்ரபத்தி ப்ராரப்த-பயன்தரத் தொடங்கிய பாபங்கள் தவிர ஏனைய முன் செய்த பாவங்களை உடனே அழித்துவிடும். ப்ரபத்திக்குப்பின் அறியாமையால் நிகழ்ந்த பாபங்களையும் அழிக்கும். ப்ரபத்திக்குப்பின் அறிந்து செய்யும் பாபங்கள் பெரும்பாலும் ஏற்படா. ஒருகால் அப்படி நேர்ந்தாலும் ப்ராயச்சித்தங்களால் அவைகழியும். ப்ராயச்சித்தங்கள் செய்யாத முரட்டுத்தனமுள்ளவரது பாபங்களையும் சிறுதண்டனைகளால் போக்கி இப்பிறவி கழியும் போதே பகவான் உறுதியாக மோக்ஷமளிப்பான்.

'ப்ராரப் தேதர பூர்வபாபமகிலம்'' என்ற ஸ்ரீஸ்லோக்தியை நோக்குக.

மறந்தும் புறந்தொழா–திருமாலையன்றி வேறு தெய்வத்தைப் பற்றா பாகவதர் மூவகையினர். பிறதெய்வத்தைத் தொழாதவர் என்ற நிலைமட்டுமுள்ளவர்கள் ஏகாந்திகள். திருமாலிடமும் மோக்ஷத்தையும் ஸம்ஸாரதுக்கம் நீங்க வேண்டாமல் பகவத் கைங்கர்யத்தையே உயர் பயனாகக் கருதி வேண்டுபவர் பதின்மாற்றுப் பொன் போன்று மிக உயர்ந்தவர்கள் என்ற ஸ்வாமி ஸ்ரீஸூக்தியை நினைவிற் கொள்க.

ப்ரபந்நன் மறக்க வேண்டியவற்றுள் தலையாயது உலகில் சிற்றின்ப நுகர்ச்சி நினைக்க வேண்டியவற்றுள் தலையாயது ஆசார்யனது அனுக்ரஹம்
சொல்லாதொழிய வேண்டியவற்றுள் தலையாயது தற்பெருமை
சொல்ல வேண்டியவற்றுள் தலையாயது 'த்வயம்''
முக்கரணங்களாலும் செய்யக்கூடாதனவற்றுள் தலை சிறந்தது பாகவதபசாரம்.
முக்கரணங்களாலும் செய்யவேண்டியவற்றுள் சிறந்தவை ஆசார்ய பாகவதகைங்கர்யங்கள் என்று சுருக்கியருளினார் ஸ்வாமிதேசிகன்.

எனவே ஸ்ரீவைஷ்ணவராய நாம் ஸ்வாமி தேசிகனது திருவுள்ளமறிந்து நாமுய்யும் வண்ணம் அருளிய சரணாகதி தத்வத்தைப் பெரியோர் வாயிலாக நன்குணர்ந்து அம்முறையைப் பின்பற்றி அழிவிலா ஆனந்தம் அடைய முயற்சிப்போமாக.

முடிவுரை

தற்போது ஸ்ரீரங்கம் ஆச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் என்று பிரஸித்தமான ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனது பல்வேறு துறைகளிலுமுள்ள கூர்மையான நுண்ணறிவை பால்யப்பருவம் தொடங்கி நன்குணர்ந்தவன் அடியேன். இதுமிகையான கூற்றன்று. ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்ய பூர்த்தி சிறப்பாகவும் நிர்விக்னமாகவம் நடைபெறவேண்டும் மேலும் சதாபிஷேகம், சதமான உத்ஸவங்களைக் கண்டருள வேண்டும்.

ஆஸேது ஹிமாசாலம் ஸஞ்சாரம் செய்து **''அகிலதம: கர்சனம் தர்சனம் ந:''** என்று ஸ்வாமி தேசிகன் முழங்கிய நம் தர்சன ப்ரசாரத்தைச் செய்து மக்கள் நன்னெறி நடந்துய்யுமாறு அனுக்ரஹிக்க வேண்டும் என்று ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகைகளை அநவரதமும் இறைஞ்சுகிறேன்.

சீலமில்லாச் சிறியேனான அடியேனையும் இம்மலரில் எழுதநியமித்த ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம ஸ்ரீகார்யமும் உபயவேதாந்த வித்வானும் கேட்டார்ப் பிணிக்குந்தகையவான சொல்லாற்றல் மிக்க ஆடூர் ஆஸ்ரி மாதவாசாரிய ஸ்வாமிக்கு அனந்தப்ரணாமங்களுடன் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

பெரியோர் பிழை பொறுப்பாராக.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அன்னையாய் ஆனவன்

(ஸ்ரீமதுபயவே வித்வான்
நாவல்பாக்கம் வாஸுதேவாசாரியர் ஸ்வாமி, திருவனந்தபுரம்)

தாய், தந்தை, மனைவி, மக்கள், அம்மான் முதலிய பலவிதமான பந்துக்கள் நம் அனைவர்க்கும் ப்ராப்தமாகின்றனர். இவ்வுறவுகள் அனைத்தும் நம் கர்மவசத்தால் ஏற்பட்டவை. நல்வினைப் பயனாய் நல்லவர் உறவும், தீவினைப்பயனாய் தீயோருறவும் கூடுமென்பது நியதி. நல்ல மகனை ஈன்றெடுத்த பெற்றோரை ''என்னோற்றார் கொல் வேனைப் பெற்ற வயிறுடையார்'' எனப் பொற்றுவர். பண்பற்ற மகனைப் பெற்றவரோ ''யாம் செய்த வினைப்பயன்'' எனத் தாமே தூற்றுவர். ப்ரபந்நரான அடியார்கள் கூட, தம் தீயவினைப் பயனாய் - பண்பற்ற மனைவி, மக்களைப் பெறுவர்'' எனச் சாஸ்திரம் பகரும். இப்பிறவியில் நண்பரானார். மறுபிறவியில் வேண்டாதவராகிறார். இப்பிறவியிலேயே, ஒருகால் சேர்ந்து உறவாடும் உறவினரே, பிறிதொருகால் முறிவோடு விட்டுச் செல்வதைக் காண்கிறோம். இவையனைத்தும் வினைப்பயனே.

வினைப்பயனல்லாமல், நிருபாதிகனாய், எல்லோர்க்கும் எப்போதும் உற்ற பந்து ஸ்ரீமந்நாராயணனாவான். ஸுபாலோபநிஷத் எம்பெருமானை ஸகலவிதபந்துவாகக் கூறும் பிதாத்வம், மாதாத்வம் எனத் தொடங்கி ஆளவந்தாரும் த்வாம் மாதரம் எனத் தொடங்கி ஸ்ரீஸ்வாமி தேசிகனும் எம்பெருமானை ஸகலவிதபந்துவாய் அனுபவித்தார்கள். மற்றும் பல ஆசாரியர்களும் அவ்வாறே கூறியனுபவித்தனர்.

உறவுகளில் மிக முக்கியமானதும் பெருமை வாய்ந்ததும் தாய்-சேய் உறவே. 'ஜனனீ ஜந்ம பூமிஸ்ச ஸ்வர்காதபி கரீயஸீ' என்பது ஓர் பழமொழி. 'பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்று இதன் பொருளைக் கூறும் தமிழ்மொழி. தந்தை தனயன் முதலிய உறவினரில்லாவிடிலும் ஓரளவு சமாதானமடையலாம். தாயின் இடத்தை எவராலும் இட்டுநிரப்ப முடியாது. தாயன்பே சாலச் சிறந்தது என்றிவ்வாறு பல உலகவழக்குகள் உள்ளன.

இப்பெருமையுடைய 'தாய்-உறவு' எம்பெருமானுக்கே நிருபாதிகமாய் சிறந்து விளங்குகிறது என விளக்குவோமினி. பத்து திங்கள் சுமந்து நம்மைப் பெற்றவள் தாய். எம்பெருமானும் நம்மைப் படைத்தவன்தானே. அசேதனத்தோடு ஒன்றி, பிரிந்துப்பார்க்க முடியாத நிலையிலிருந்த நம்மிடம் மிகக்கருணை கொண்டு, நம் துயர்தீர்க்கும் எண்ணத்தில் இச்சரீரத்தைக் கொடுக்கிறான். தாயின் ஸ்தானத்திலிருந்து, கருணையுடன், சரீரமளிப்பவனாயின் எம்பெருமான் தாய்க்குச் சமமே.

பிறகும் நம்மைக்காப்பார் தாயன்றி வேறார்? காக்கும் கடவுள் கண்ணனதனால் தாய்தானே. தம்திருவடி நிழலைத்தந்து எமைக் காக்கிறான். எனவேதான் ஸ்வாமி தேசிகன், ''தாயும் நீயே சாயை தந்துகத்தலின்'' என அருளினார். தாய் மகனைக் காப்பதைத் தன்பேறாக எண்ணியிருக்கிறார். கைம்மாறேதும் எதிர்பார்ப்பதில்லை.

எம்பெருமானும் சாயை தந்து உகப்பவன் தன்னுகப்பாய் எண்ணுபவன் வாமனனாய் மூவடிமண் கேட்டு, திரிவிக்ரமனாய் உலகளந்தபோது, தன் திருவடிநிழலை அனைவர்க்கும் அளித்து தானும் மிக உகந்தான். ''உறங்குகிற ப்ரஜையை அணைத்துக் கொண்டு கிடக்கும் மாதாவைப் போலே, இவற்றோட்டை ஸ்பர்சத்துக்குத் தனுகக்கி ருனிறே'' என்று ''ஓங்கி உலகளந்த'' பாசுரத்தின் வியாகயான ஸ்ரீஸூக்தி, தாயை உதாஹரணமாகக் காட்டும்.

குழந்தைக்குத் தாய் பாலூட்டுகிறாள். தான் பெற்ற பேற்றை எண்ணிப் பெருமையில் பூரிக்கிறாள். குழந்தையோ அழுகிறது. தாயை உதைக்கிறது. அடித்தும் கடித்தும் துன்புறுத்துகிறது. தாய் இவற்றையும் பொருட்படுத்தாது, குழந்தையை வளர்ப்பதிலேயே கவனமுறுகிறாள். பின் நாளிலும், மகன் தவறு செய்து துன்புறுத்தினாலும், தன் தகவால் மன்னிப்பவள் தாயே. நம்பெருமானும் அப்படியே. தன் பிள்ளைகளான அடியவர் அபராதம் செய்யினும், அதைப் பொறுப்பார். அடியவர் அறியாமல் செய்யும் அபராதங்களைக் கருதுவதில்லை. மாறாக நாம் செய்யும் உபசாரங்களை எண்ணி உவக்கிறான்.

நஸ்மரத்யபகாராணாம் சதமப்யாத்மவத்தயா।

கதஞ்சிதுபகாரேணக்ருதேநைகேன துஷ்யதி என்றது காண்க.

''அடியவர் பிழைகள் நின் கருத்தடையா'' என்றார் ஸ்வாமி தேசிகனும் ''ஜாதாபராதம்'' எனும் சுலோகத்தில், ஸ்வாமி கோதாப்பிராட்டியிடம் அனுபவித்தது, எம்பெருமானான தாயிடத்திலும் இவ்வாறு நன்கு பொருந்தும்.

தாயன்பு அதுமட்டுமல்ல-சேயின் நலத்துக்காகத் தானும் துன்புறவும் தயங்கமாட்டாள் மாதா. தனது குழந்தை நோய்வாய்ப்பட்டால் தாய் 'கஷாயம்' அருந்துவாள். கஷாயம் அருந்திக் கஷ்டப்படுவது தாய். பலனோ குழந்தைக்கு - நோய் தீரும். எம்பெருமானுமப்படியே நம்மை உய்விக்கத் தான் எப்பாடு படவும் தயாராகிறான். ''நாட்டில் பிறந்து படாதனப்பட்டு மனிசர்க்காய்'' என்றார் இராமவதாரத்தைக் கூறும் ஆழ்வார். அவன் அவதாரமே நம்மைக் காக்க வல்லவா? பட்டரும்

பூயோ சூயஸ் த்வயி ஹிதபரேபி எனத் தொடங்கி இதை அருளினார். ''பெருமானே! தேவரீருக்கு வர்ணா ச்ரமதர்மம் அனுஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை. கட்டாயமில்லை. ஆயினும் மனிசர்க்காய், அவரை உய்விக்க அவதாரங்களில், தர்மமனுஷ்டித்துக் காட்டினீர். இது தாயின் கஷாய பானத்தை குறிக்கிறது. தாயைப்போல் எங்கள் நலனுக்கு தேவரீர் கஷ்டப்படுகிறீர்'' என்றார்.

இனி , தாய் தனயனை மிரட்டுவதில்லையா? அடிப்பதில்லையா? அதுவுமுண்டு. ஆனால் குழந்தையின் நலம்பயக்க அடிக்கிறாள். துன்புறுத்தவல்ல, துயர் துடைக்க

மகனை வருத்தவல்ல, வாழ்விக்க அதன்பயனை அவன் பிறகு உணர்கிறான். எம்பெருமானும் அடியாருக்கு சிறு தண்டனைகள் கொடுப்பதுண்டு.

தன் தவறுணர்ந்து, அவன் திருத்தி தன்னடி சேர இவ்விதம் உதவுகிறான். இவ்வாறு துன்புறுத்தினாலும் அவனுக்கு கருணைக்குக் குறைவில்லை என ஸுத்ரபாஷ்யாதிகளில் ஸ்பஷ்டம் ''கர்மாதீயனமாகச் செய்கையாலும் மண்தின்ற ப்ரஜையை நாக்கிலே குறியிட்டு அஞ்சப்பண்ணும் மாதாவைப்போல் ஹிதபரனாகச்செய்கையாலும் '' என்று பிள்ளை லோகாசாரியார் இங்கும் தாயை த்ருஷ்டாந்தமாக்கினார். தாயைப் போல் தண்டித்து அருளுகிறான். ஜநிதஸுகதிம் தண்டநகதிம்''என்றார் ஸ்வாமி தேசிகன்.

மேலும் தாய் குழந்தையை அடித்தாலும், அது அவளை வெறுப்தில்லை. தாயின் காலிலேயே தவம் கிடக்கிறது. கட்டிக்கொள்கிறது. அதேபோல் ''பெருமானே! எவ்வளவு கஷ்டம் கொடுத்தாலும் உன் பாதமன்றி வேறு துணை எனக்கில்லை, அதையே பற்றிக் கொண்டு அழுவேன் என்றார் குலசேகராழ்வார். இது அவர்தம் பாசுரம்.

''தருதுயரம் தடாயேல் நின் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில் சூழ் வித்துவக் கோட்டம்மானே !
அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் , மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும் குழவி அதுபோன்று இருந்தேனே!''

ருஷா நிரஸ்தோபி சிசு: ஸ்தநந்தய: ந ஜாது மாது: சரணௌ ஜிஹாஸதி என்று இதையே ஆளவந்தாரும் அருளினார்.

இவ்வாறு, பலப்ரகாரத்திலும் தாய்க்குச் சமமானவன மட்டுமல்ல மேம்பட்டவனும் கூட எம்பெருமான். எம்பெருமானைக் கூறும் சாஸ்த்ரம் (வேதம்) ஆயிரம் பெற்றோர்களை விட கருணைமிக்கவை'' 'மாதா பித்ரு ஸஹஸ்ரேப்யோபி வத்ஸலதரம் சாஸ்த்ரம்' என்றருளினார் எம்பெருமானார். நாரணன் நாமம் ''பெற்றதாயினும் ஆயின செய்யும்''என்பது கலியனுரை. தாய் இம்மைக்கு மட்டுமே நலம் நல்குவாள் நாரணனோ, தன்னடி ஈந்து என்றென்றும் நலம் பயப்பான்'' என்று பொருள்.

எம்பெருமானைப் போலவே பாகவதர்களும் ஆசாரியர்களும் ஸகலவித பந்துவாகின்றனர். பத்திரிகைகளில் இன்றும் அஸ்மத்ஸகல விதபந்துவாய் எனக் கூறி பாகவதர்களை ப்ரார்த்திக்கும் வழக்கம் உள்ளது. 'மாதா பிதா' என்று நம்மாழ்வாரை தாயாகக் கூறினார் ஆளவந்தார். ''அன்னையாய் அத்தனாய்'' என்றார் ஆசார்யபரரான மதுரகவிகளும் நம்மாழ்வாரை. ஸ்ரீவாத்ஸ்ய வரதாசாரியார் ''எம்பெருமானுக்கே அம்மாள் ஆன ஆசார்யஸ்ரேஷ்டர் இவரே ஸ்வாமி தேசிகனுக்கு ப்ராக்யருமாவர்.

இவ்வாறு தாயைப் போன்ற ஆசார்யர்களது க்ருபையே நம்மைக் காக்கிறது. மாதாபித்ருக்களுடைய ஷஷ்ட்யப்தபூர்த்தி முதலியவற்றை கொண்டாடுவதைப்போல் ஆசார்யனது திருநாக்ஷத்ர மஹோத்ஸவங்களை நன்கு நடத்தி உவக்கிறேம். அவ்விதமே ப்ராப்தமான ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனது ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தில் வ்யாஸலேகன கைங்கர்யத்தால் தன்யனர்கிறேன். ஸ்ரீமதாண்டவனது திருவடிகளில் ப்ரணாமபூர்வகம் இதை ஸமர்பிக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

பரதத்வம்

(ஸ்ரீமதுபயவே வித்வான் புத்தூர் கி.கிருஷ்ணஸ்வாமி ஐய்யங்கார் ஸ்வாமி)

வேத சாஸ்திரங்களில் ஜகத்காரணப் பொருளாக எந்த தேவன் சொல்லப்படுகிறானோ அவனையே 'பரதத்வம்' என்று குறிப்பிடுவது பொருந்தும். ''அக்நி: அவமோ தேவதாநாம் விஷ்ணு: பரம:'' (யஜுஸ் ஸம்ஹிதை 5-5) (தேவதைகளுக்குள் அக்னி மிகத் தாழ்ந்தவன். விஷ்ணு மிக உயர்ந்தவன்) என்றும், ''நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோஜ் யோதி: ஆத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சித் ஜகத்-யஸ்மிந் த்ருஶ்யதே ஶ்ரூயதேரபிவா। அந்தர் பஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:। (தைத்திரீய நாராயணவல்லீ।) (நாராயணனே பரப்ரஹ்மம் நாராயணனே பரதத்வம். நாராயணனே பரஞ்சோதி. நாராயணனே பரமாத்மா. இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான அனைத்தின் உள்ளும் புறமும் நாராயணனே வியாபித்து விளங்குகிறான்.) ''ஏகோ ஹ வை நாராயண அஸீத்ந ப்ரஹ்மா நேஶாந:'' (மஹோபநிஷத்) (நாராயணன் ஒருவனே ப்ரளய காலத்தில் இருந்தான். பிரமனும் இல்லை சிவனும் இல்லை) முதலான வேத வேதாந்த வாக்யங்கள் விஷ்ணுவான நாராயணனே பரதத்வம் என்றும், மற்ற தெய்வங்கள் பரதத்வமல்ல என்றும், மிகத் தெளிவாக நிர்ணயித்தன.

இதிஹாஸ ஶ்ரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத்தில் ஆதிகவியான வால்மீகி ''அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா: ஸர்ஷிகணாஸ் ததா'' (ரிஷி கணங்களோடு கூடிய தேவர்கள் விஷ்ணுவையே சிவனைக் காட்டிலும் பெரிய தெய்வம் என்று நிர்ணயித்தார்கள்).

''தமஸ: பரமோ தாதா சங்க சக்ர கதாதர:'' (சங்கம் சக்ரம் கதைகளை தரித்தவனாய், தமஸ்ஸுக்கு அப்பாற்பட்டவரும் ஸர்வாதாரனாய் இருக்கும் நாராயணனே ராமன்) முதலான நூற்றுக்கணக்கான இடங்களில் நாராயண பரத்வம் செய்தருளினார். மஹாபாரதத்தில் வேதவ்யாஸர் ஆயிரக்கணக்கான இடங்களில் விஷ்ணு பரத்வ நிர்ணயம் செய்தார். ஸ்ம்ருதிகளில் தலைமை பெற்ற மநு ஸ்ம்ருதியிலும் தொடக்கத்திலேயே, 'நாராயணனே ஜகத்காரணனான பரம் பொருள் என்று காட்டப்பட்டது. விஷ்ணு புராணம் முதலான ஸாத்விக புராணங்களிலும் இது மிகவும் தெளிவாக்கப்பட்டது.

நாராயணன் தவிர்ந்த மற்ற தேவதைகளுக்குப் 'பரத்வம்' கூறும் தாமஸ புராணங்களை வேதவிருத்தமாகையாலே பண்டைக்காலச் சான்றோர்கள் ஆதரிப்பதில்லை. திருமாலைத் தாழ்த்தியும் சிவனை உயர்த்தியும் கூறும் 'அடிமுடி தேடிய கதை' முதலான தாமஸ புராணக்கதைகள் ப்ராசீனர்களான பாஸன், காளிதாஸன்

முதலான ஸம்ஸ்க்ருத கவிஞர்களாலும் எடுக்கப்படவில்லை. சிவ பக்தனான காளிதாசனும் தன் குமாரசம்பவத்தில் இந்த சிவலிங்க புராணாதிக் கதைகளையும் கந்த புராணக் கட்டுக்கதைகளையும் எடுக்கவில்லை.

தமிழ்நாட்டில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட பரிபாடல் முதலான சங்க நூல்களில் திருமாலுக்கே பரம்பொருள் என்னும் பெருமை கூறப்பட்டுள்ளது. பரிபாடல்களை ஆராய்ந்தால், எல்லாப் பொருள்களையும் நல்லோர்களுக்குப் புலப்படுத்துகையாலே 'புலம்' என்றும், மற்றவர்களுக்கு மறைக்கையாலே மறை என்றும், ஆசார்யரின் வாய் மூலமாகவும், சீடனின் செவி மூலமாகவுமே பரவுகையால் முறையே 'வாய்மொழி' என்றும் 'கேள்வி என்றும்', ஏட்டில் எழுதப்படாமையால் 'எழுதாக்கிளவி' என்றும் புகழப்படும் வேதங்களில் திருமால் ஒருவனே அனைத்துலகையும் படைத்து அளித்து அழித்து ஆட்சிபுரியும் பரம்பொருள் என்று ஓதப்படுவதாக முழங்கியிருப்பதையும் காணலாம். திருமாலைப் பற்றிய பின்வரும் பரிபாடல் வரி இங்கு சான்றாகக் கொள்ளத்தக்கன.

முதற் பரிபாடல்

''நின் வல வயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்,
நாவல் அந்தணர் அரு மறைப் பொருளே,''
''நலம் முழுது அளைஇய புகர் அறு காட்சிப்
புலமும் பூவனும் நாற்றமும் நீ,''
''வாய்மொழிப் புலவ''.

இரண்டாம் பரிபாடல்

''வடு இல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடு இல் கேள்வியுள் நடு ஆகுதலும்.'' ''கேழல் திகழ் வரக் கோலமொடு.... முதுமைக்கு ஊழி யாவரும் உணரா ஆழி முதல்வ!... உள்ளுநர் உரைப்போர் உரையொடு சிறந்தன்று,'' ''நின்னது திகழ் ஒளி சிறப்பு இருள் திருமணி, கண்ணே புகழ் சால்தாமரை அலர் இணைப் பிணையில் வாய்மை வயங்கியவைகல்; சிறந்த நோன்மை நாடின், இருநிலம் யாவர்க்கும்; சாயல் நினது வான் நிறை-என்னும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே; அவ்வும் பிறவும் ஒத்தனை உவ்வும் எவ்வயினோயும் நீயே,'' ''கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும் - நின் உருபு''.

மூன்றாம் பரிபாடல்

''மாஅயோயே மாஅயோயே மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி மணிதிகழ் உருபின் மாஅயோயே! ..... மூ ஏழ் உலகமும் உலகினுள் மன்பதும் மாயோய்! நின் வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதரவலந்து! வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும் நீ என மொழிமால் அந்தணர் அருமறை!

பதினாயிரம் கை முதுமொழி முதல்வ ''முன்னை மரபில் முதுமொழி முதல்வ!'' ''காலமுதல்வனை ஏல இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்'' ''வேதத்து மறைநீ'' ''தொல் இயல் புலவ''.

நாலு பதின்மூன்று பதினைந்தாம் பரிபாடல்கள்

''அவை நின் ஓர் அன் ஓர் அந்தணர் அருமறை'' (4) ''பாப்புப் பகையைக் கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை ஏவல் இன் முதுமொழி கூறும்; சேவல் ஓங்கு உயர் கொடிச் செல்வ நற்புகழவை'' (13) ''நலம் புரீஇ அம்சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின் (15).

சங்க கால நூல்களான எட்டுத்தொகையில் ஒன்றான பரிபாடலில் இப்போது கிடைக்கும் ஏழு பாடல்கள் திருமாலைப் பற்றியவை; எட்டு பாடல்கள் முருகனைப் பற்றியவை. பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படை முழுவதும் முருகனைப் பற்றியது. இவை தவிர எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்களிலும், தொல்காப்பியமாகிற இலக்கண நூலிலும் பல இடங்களில் திருமால், பலராமன், சிவன், முருகன், காடுகாள் அல்லது காடுகிழாள் எனப்படும் காளி, இந்திரன், வருணன் முதலான தெய்வங்களைப் பற்றிய பல குறிப்புகளும் வந்துள்ளன.

இவையனைத்தையும் நடுநிலை நின்று ஆராய்ந்தால்- (1) உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் உலக முதற் காரணனாயிருக்கை (2) எங்கும் நிறைந்த ஸர்வ வியாபகனாயிருக்கை (3) எல்லாம் அறிந்த ஸர்வஜ்ஞனாயிருக்கை (4) எல்லாம் வல்ல ஸர்வ சக்தனாயிருக்கை. (5) மறுபிறப்பு அறுத்து வீட்டுலகை அளிப்பவனாயிருக்கை (6) குணங்கள் அனைத்துக்கும் கொள்கலனாகவும் தாழ்வுகள் அற்றவனாகவும் இருக்கை (7) எவராலும் அளவிட்டு அறியமுடியாத அரும்பொருளாயிருக்கை (8) தேவர்கள் அனைவருக்கும் ஆதிதேவனான தேவாதிதேவனாய் இருக்கை. (9) உயிர்களுக்கெல்லாம் இயற்கை உறவினனாயிருக்கை (10) மறைகளில் இப்பெருமைகள் அனைத்தும் உடைய முழுமுதல்வனாய் முழங்கப்படுகை என்னும் பரம்பொருளுக்குரிய தன்மைகளெல்லாம் திருமால் ஒருவனுக்கே சங்ககாலச் சான்றோர்களால் கூறப்படுவதையும், மற்ற தெய்வங்களுக்கு இந்தப் பெருமைகள் குறிக்கப்படாததையும் காண்கிறோம். நேர்மாறாக அத் தெய்வங்களுக்கு அவரவர்களுக்குரிய பெருமைகளோடு சில தாழ்வுகளும் கூறப்பட்டிருப்பதை காண்கிறோம். திருமாலே பரம்பொருள் எனக்காட்டும் அவனுடைய அவதாரச் செயல்கள் பலபலவும் சங்கநூல்களில் காணக்கிடக்கின்றன. ஆனால் பிற்கால நூல்களில் திருமாலுக்குத் தாழ்வைக் காட்டுவதற்காகக் கூறப்படும் அடிமுடிதேடிய கதை முதலானவை காணப்படவில்லை. கந்தபுராணத்தில் முருகனைப் பிரமன், திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகளைக் காட்டிலும் பெரியவன் என்று காட்டுவதற்காகக் கூறப்படும் செய்திகளில் ஒன்று கூட முருகனைப் பற்றிய சங்ககாலப் பாடல்களில் காணப்படவில்லை.

ஆதிசங்கரர் பெயரில் பிற்காலத்தில் புனையப்பெற்ற துதிநூல்களை ஒதுக்கிவிட்டு அவரது பாஷ்யங்களை மட்டும் பார்த்தால், அவர் நாராயணனுக்கு ஸகுண ப்ரஹ்மம் என்னும் பெருமையைக் கூறியிருக்கிறார் என்பது புலப்படும். இவ்விடத்தில் கீதா பாஷ்ய

சரமஶ்லோக தாத்பர்ய சந்திரிகையின் இறுதியில் அருளிச்செய்யப்பட்டிருக்கும் பின்வரும் ஶ்ரீஸூக்திகள் அனுஸந்திக்கத்தக்கவை.

''பிஶாச ரந்தி தேவகுப்த ஶங்கர யாதவப்ரகாஶ பாஸ்கர நாராயணார்ய யஜ்ஞ ஸ்வாமி ப்ரப்ருதிபி: ஸ்வம் ஸ்வம் மதமாஸ்திதை: பரஶ்மதை: பாஷ்யக்ருஶபி: அஸ்மத் ஸித்தாந்த தீர்த்த- கரைஶ்ச பகவத் யாமுநாசார்ய பாஷ்யகாராதிபி: அவிகீத பரிக்ருஹீதேரயமத்ர ஸாரார்த்த: - பகவாநேவ பரம் தத்வம் அநந்ய ஶரணை: யதாதிகாரம் ததேகாஶ்ரயணம் பரம தர்ம: இதி।'' (பிசாச ரந்தி தேவகுப்த, சங்கர யாதவப்ரகாஶ பாஸ்கர நாராயணார்ய யஜ்ஞஸ்வாமிகள் முதலான பற்பல மதத்தைக் கைகொண்டிருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட கீதா பாஷ்யகாரர்களாலும் நம்முடைய ஸித்தாந்தாசார்யர்களான பகவத் யாமுநாசார்யர், பாஷ்யகாரர் முதலானாராலும் கருத்து வேற்றுமையில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸாரார்த்தம் இதுவே:-பகவானே பரதத்வம் வேறு கதியற்றவர்களால் அவரவர் அதிகாரத்திற்குத் தக்கபடி அவனை ஆஶ்ரயிப்பதே பரம தர்மம்- என்பது.

இவையனைத்தையும் திருவுள்ளத்திற் கொண்ட ஆளவந்தார் 'ஸ்வாபாவிக - அநவதிகாதிஶய ஈஶித்ருத்வம் நாராயண: த்வயித ந ம்ருஷதி வைதிக: (நாராயணனே இயல்வானதாய், எல்லையற்ற மேன்மை உடையதான ஈஶ்வரத்தன்மையை உன்னிடத்தில் ஏற்றுக் கொள்ளாத வைதிகன் ஒருவன் உளனோ?) என்று ஸ்தோத்ர ரத்னத்தில் அறைகூவினார்.

இப்படி ஸகல ஶாஸ்த்ரங்களிலும், பண்டைச்சான்றோர்களின் நூல்கள் அனைத்திலும் குன்றிலிட்ட விளக்காகவும், வெள்ளிடை மலையாகவும், கையிலங்கு கனியாகவும் விளங்கும் பகவத்பரத்வத்தை ஸம்ப்ரதாய விபாகமற ஶ்ரீவைஷ்ணவர்களில் பலர் அறிந்து கொள்ளாமலும், அறிந்தாலும் 'மறந்தும் புறந்தொழாமையைக் கடைப்பிடிக்காதவர்களாகவும் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

ஷஷ்டியப்த பூர்த்தி காணும் ஶ்ரீ மத் பரமஹம்ஸேத்யாதி பிருதாலங்க்ருதராய் எழுந்தருளியுள்ள ஶ்ரீ முஷ்ணம் ஶ்ரீ மதாண்டவன் ஸ்வாமியின் பெருமுயற்சியால் இந்நிலை மாறவேண்டும் என்றும், ஶ்ரீமதாண்டவன் ஸ்வாமி சதாபிஷேகம், சதாப்தி முதலான வைபவங்கள் கண்டருள வேண்டும் என்றும் ஶ்ரீரங்கம் திவ்யதம்பதிகளை பிரார்த்திக்கிறேன்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அருள்

(ஸ்ரீமதுபயவே. வித்வான் நாவல்பாக்கம் வரதாசாரியர் ஸ்வாமி)

''ஸ்ரீ நாத யோகி வர யாமுன வேதசீர்ஷ ஸூர்யண்ண யார்ய முக தேசிக ஸார்வபௌமை:

நித்யம் ஸமர்சித பதாம் புருஹத்வயஸ்ரீ லக்ஷ்மீஹயாஸ்ய மம தேஹி கராவலம்பம்''

இந்திராஞ்சித வாமாங்கம் சந்திராயுத ஸுந்தரம்।
வாஜி வக்த்ரம ஹம் தேவம் வந்தே வாகர்த்தஸித்தயே।

திருமகளார் தனிக் கேள்வனின் திருவருள் பெற்றவர் எத்திறத்திலும் இங்கும் அங்கும் எங்கும் இன்பமுற்று மகிழ்வர் என்பது ஆன்றோர்களின் ஸித்தாந்தம்.

அத்தகைய அருள் ஒருவனுக்கு கிடைக்க வேண்டுமானால் எம்பெருமானால் அவ்யாஜ காருண்யத்தாலே அன்பினால் அந்த மனிதன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ''ய மேவைஷ வ்ருணு தே தேந லப்ய:, என்று உபநிஷதம் உத்கோஷிக்கிறது.

திருவள்ளுவப் பெருந்தகை ''அருள் என்னும் அன்பின் குழவி'' என்று இறைவனின் அன்பால் ஈன்றெடுக்கப்பட்ட குழந்தை அருள். என அருளை அழகாய் அறிமுகப்படுத்தினார்.

அருளுக்கு நிகண்டு கூறும் செந்தமிழ் வித்தகர்கள் ''அருள் என்ப ஆசான் அந்தகவி அலர் மகள்'' என்று கூறுவர். அதாவது அருள் என்பது தயை என்னும் குணத்தையும், ஆசாரியனையும் திருமா மகளையும் குறிக்கும்.

எம்பெருமான் பரந்த இந்நிலவுலகில் செய்யும் அன்பிற்கும் அருளுக்கும் ஈடாக பக்தியையும் புண்யத்தையும் ப்ரும்மா முதல் எவரும் செய்ய முடியாது.

அசேதன துல்யமாய் கிடந்த இந்த ஜீவராசிகளை கண்டு மனம் நெகிழ்ந்து நாராயணன் நான்முகனைப் படைத்து அவனைக் கொண்டு சேதனா சேதனரூபமான உலகை சிருஷ்டி செய்தும் வேத சாஸ்திர புராணதர்மாதி இன்னொளி விளக்கையும் வ்யாஸபராசர வான்மீகி முதலிய ஸத்ஸங்கத்தையும் கொடுத்தும் தர்மங்கள்,

தர்மங்களை நம்பி இருக்கும் ஸாதுக்களையும், ஞானிகளையும் காக்க பிறப்பிலியான தானே அருளால் உந்தப்பட்டு மீனோடாமை கேழல் கோளரியாய் வானார் குறளாய் மழுப்பட முனியாய் பின்னும் இராமரிருவராய் பாரில் துன்னிய பாரந்தீர் துவரை மன்னனுமாய் கலிதவிர்க்கும் கற்கியாய் என்றபடி எண்ணற்ற அவதாரங்கள் செய்தும் பின்னானார் வணங்கும் சோதியாய் அர்சகபராதீனனாய் தேவரிஷிமனுஷ்யர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு மயர்வற மதி நலமருளப் பெற்ற ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டு ஒவ்வொரு திவ்ய தேசங்களிலும் ஒவ்வொரு கேஷத்ரங்களிலும் அர்ச்சையாய் விக்ரஹ வடிவத்துடன் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பதும் அவனது பேரருளாலே உந்தப்பட்டு அருள் வடிவமாய் விளங்குகிறான் என்று ஸ்வாமி தேசிகன் தயாசதகத்தில் ''அவதரண விதேஷை ராத்மலீலாப தேசை: அவமதிமனுகம்பே மந்தசித்தேஷு விந்தன் வ்ருஷப சிகரி நாத: த்வந்நிதேநேநூனம் பஜதிசரணபாஜாம் பாவிநோஜன்ம பேதமான்'' என்று அருளிச் செய்தார்.

அர்ச்சையாய் விளங்கும் எம்பெருமானை ஆழ்வார்களும் தேசிகனை போன்ற ஆசாரிய ரத்னமும் நமக்கு அறிமுகப்படுத்தும் அழகை அடியிற் கண்டபடி அனுபவிப்போம். (1)நம்மாழ்வார் திருமாலிருஞ்சோலை பெருமானை அருளுடையவன் என்னும் அருளாழி அம்மான் என்று அத்திகிரி திருமாலையும், அலர்மேல் மங்கையுறைமார்பனை அருள் கொடுப்பவன் என்றும் நறையூர் நின்ற நம்பியை அருட்சுடர் என்று மங்கை மன்னனும், ''ஆரண தேசிகன்'' அரங்கநகரப்பனை அருளமுதம் என்றும் அருள் தரவெண்ணி அயிந்தை வந்தான் என்று அடியவர்க்கு மெய்யனையும் அறிமுகப்படுத்தி ஆநந்தமடையச் செய்கிறார்கள்.

இன்னும் பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் எம்பெருமானை அருள்வடிவமாய் அனுபவித்திருப்பதை விரிவிற்கு அஞ்சிநிறுத்தினேன். இவ்வுலகில் தேவதைகளோ வேறு எவரேனும் நம்மிடம் அனுகூலர்களாக இருப்பார்களேயாகில் அதுவும் எம்பெருமானின் இன்னருளே.

''புக்கடிமையினால் தன்னைக் கொண்ட மார்கண்டேயனவனை நக்கபிரானும் உய்யக்கொண்டது நாராயணனருளே'' என்று மாலுகந்தவாசிரியரான நம்மாழ்வாரின் அருள்வாக்கு. ஸர்வலோகங்களின் ஸ்ருஷ்டி ஸ்திதிலயங்களுக்கும் எம்பெருமானின் அருளேதான் காரணம். பவமாகிய மாபெருங்கடலிலே துக்கச் சுழலிலே அகப்பட்டு வினையாகிய பாசத்தால் கட்டுண்டு தவிக்கும் லோகத்தை தானே பேரருளாலே பற்பல அவதாரங்கள் செய்தும் அருள் மிகுத்ததொரு வடிவாய் விளங்கும் ஆசார்யர்களை காட்டி விடுவித்தும் உய்விப்பதும் எம்பெருமானே. தருமவரும் பயனாய திருமகளார் தனிக்கேள்வன். பெருமையுடைப்பிரானார் இருமைவினை கடிவாறே என்று குருகூர் நம்பியன் குழலின் மலியச்சொல்.

அருள்வடிவமான ஆசிரியப் பெருமானை காட்டிக் கொடுப்பதும் சேர்த்து வைப்பதும் அச்யுதனே. அடியவர்க்கு மெய்யனை நம்மாரண தேசிகன் அடைந்து அருள்பாடிட்டு அருளிய ''திசை நிறைந்த கடலெரித்த சிலை வளைத்தகையினான், அருள் கொடுத்து வினை தவிர்க்கும். அடியவர்க்கு மெய்யனே'' என்ற என்றும் தெவிட்டாத தேனினும் இனியச் சொல் நம் போல்வாருக்கு அருமருந்தாக உள்ளது. இங்கு அருள் என்பது ஆசாரியனைச் சொல்லும். ஆசாரியனின் அருள் நோக்கு நமக்கு கிடைத்தால் மற்றொரு அருளான அலர் மங்கையின் திவ்ய அருள் நோக்கும் நமக்கு கிடைக்கும். இங்கும் அருள் என்பது பெரிய பிராட்டியைச் சொல்லும். ஸ்வாமி தேசிகன் மும்மணிக் கோவையில் ஹேமாப்ஜ நாயகியை ''அருளெனும் சீரோர் அரிவை'' என்று அழைக்கிறார்.

வேதங்களிலும் பகவத்கீதையிலும் பரமாத்மாவை அடைய கர்மயோக, ஞான யோக, பக்தியோக, ப்ரபத்தியோக, முதலிய நன்னெறிவழிகள் சொல்லப்பட்டன இவைகளுள் சரணநெறி என்றும் ப்ரபத்தி என்றும் ந்யாஸம் என்றும் தூநெறி என்றும் போற்றப்படும் சரணாகதியே மிகத்தலைசிறந்தது- தஸ்மான் ந்யாஸ மேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:, என்று ச்ருதியும் பரக்க பணித்தது. மற்ற நெறிகள் போலல்லாது அருள் வடிவமான ஆசாரியனை பற்றிக் கொண்டு அருளாழியம்மான் அலர் மேல் மங்கை மணாளனின் மலரடிக்கீழ் செய்யப்படும் இன்நெறியை கவியரசரான கம்பன் அருள்நெறி என்றான். விபீஷணன் ஸக்ருதேவாதிகளை நிவேதயதமாம்கூஷிப்ரம்விபீஷணம் உபஸ்திதம் என்று ப்ரார்த்தித்த வண்ணம் செய்த சரணாகதியை அருள் நெறி என்றான்.

ஆசாரியன் அருள் இல்லையேல் ச்ரிய: பதியின் அருளில்லை. எல்லாவற்றிற்கும் எம்பெருமானின் பேரருள் மிகமிக தேவை ஆகவே ஸ்வாமி தேசிகன் நின்னருளாங்கதியின்றி மற்றொன்றில்லேன் என்றார்.

குலசேகரப் பெருமாள் ஸர்வேச்வரனிடத்தில் கரைந்து பாடலில் வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால் மீளாத்துயர் தரினும்வித்துவக் கோட்டம்மா? ஆலாய் உன்னருளே பார்ப்பன் அடியேனே எனமனமுருகி பாடுகிறார்.

உலகின் நன்மையின் பொருட்டு நடைபெரும் அருள் வடிவமான ஆசாரியரத்னத்தின் அறுபது ஆண்டு விழாவில் அடியேனும் முடிந்துவரை கைங்கர்யத்தில் ஈடுபட்டு மனோ வாக்காயங்களை தூய்மை படுத்தி ஆசாரிய ஸார்பௌமனின் அடிமலர்களில் அனந்த ப்ரணாம பூர்வகம் இம்மலரை ஸமர்பித்து க்ருதார்த்தனானேன்.

வந்தே துரங்காஸய விஹார வேதி ஸ்வாந்தம் ப்ரசாந்தம் ப்ரவரம் ஸதாம்தம்
துங்கே ஸதா சார்ய பதேவிபாந்தம் ஸ்ரீ ரங்க ராமானுஜ யோகிவர்யம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அறுபது காணும் மாமுனிவர்

(ஸ்ரீமதுபயவே வித்வான் அன்னதூர் ராகவாசாரியர் ஸ்வாமி)

பண்டை நான்மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்,
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
பெருகிய புணலொடு நிலனும்
கொண்டல் மா ருதமும் குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்,
அண்டமும் தானுய்நின்ற வெம்பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே.
(திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி 5.7.1).

முன்னுரை: அறுபதைக் காணும் நம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் சிறப்பும் மேன்மை சொல்லிலும் எழுத்திலும் அடங்கா. ஏற்கனவே நற்பண்புகள், நற்குணங்கள், நற்செயல்களில் நிறைந்த பெரியதொரு குடும்பத்தில் பிறந்து முன்னோர்கள் கடைப்பிடித்த நற்காரியங்களில் ஊற்றமுடையவராய் வளர்ந்து விளங்கியவராவார். மேலும் நற்கல்விகள் பல இவரை அடைந்து பெருமை பெற்றன. லௌகிக, வைதிகத்தில் சிறந்து விளங்கியவராவார். தமிழ் பண்டிட் பட்டமும், சிரோன்மணி பட்டமும் பெற்று, மற்றும் இந்தி, ஆங்கிலம் போன்ற இதர மொழிகளிலும் சிறந்த அனுபவம் பெற்றவர் இந்தஸ்வாமி.

இவைகள் எல்லாம் இருந்ததாலேயே ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் தனக்குப் பிறகு இவரை தன் ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுத்ததும் ஓர் காரணமாகும். ஸுப் பிரசித்தராயும் மிகவும் பண்டிதராகவும், தமிழ் ஞானம், அதிலும் ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்தியில் அபாரமான ஈடுபாடும் கொண்டு தனக்கே உரித்தான குரலில் கேட்பவர்களை பரவசப்படுத்திய உபந்யாஸ கலையை கொண்ட நம் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் அருள் பெற்ற இவருக்கு ஏதும் குறை இருக்காது அல்லவா?

ப்ரக்ருதம் ஸ்ரீ மத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஸ்வாமிகளும் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனுல் அபிமானிக்கப்பட்டபடியால் (தாய் எட்டடிபாய்ந்தால், குட்டி பதிணெறடி பாயும்) என்ற வசனப்படி தன் ஆசார்யன் பாணியை பின்பற்றி வெகு அற்புதமாகவும், அழகாகவும் பல ஸ்ரீஸூக்திகளின் அநுபவத்துடனும் ஆழ்வார்கள் பாசுர, அநுபவ, அடிப்படையிலும் எல்லோரையும் தன் எழுத்தாலும், பேச்சாலும் தன் வயப்படுத்தி பரவசமடைய செய்து வருவதும் யாவரும் அறிந்ததே.அப்பேற்பட்ட பெருமைவாய்ந்த நம் ஸ்ரீமுஷ்ணம், ஆண்டவன் ஸ்வாமிகள் பல்லாண்டுவாழ்ந்து சதாபிஷேக சதமானம் கண்டு பகவத் பாகவத தொண்டாற்றி தம் ஆச்ரமத்தை பலகாலம் ஆண்டு நற்சிஷ்யர்கள் பலரை அடைந்து பல்லாண்டு வாழ எம்பெருமான் அரங்கனின் பாதுகைகளுக்கு கைகூப்பி அஞ்சலி செலுத்தி ப்ரார்த்திக்கிறேன். அவர்தம் ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவத்தில் கீழ்காணும் ஆசார்ய, சிஷ்ய கேள்வி,பதில் வியாஸத்தை இம்மலரில் எழுதி ஆனந்தமடைகிறேன்.

போய பிழை நின்ற பிழை

சிஷ்யன்: ஒரு மனிதன் மோக்ஷமடைய என்ன வழி? இனிப்பிறவி இல்லாதபடி எவ்விதம் செய்து கொள்வது?

ஆசார்யன்: மனிதன் செய்யும் நற்காரியங்கள் மற்றும் தீயவைகள். இவைகளினால் இவன் பல பிறவிகள் எடுக்க நேரிடுகிறது. இவைகளை முறையே புண்ணியம் பாபம் என்று கூறுவார்கள். இவை இரண்டும் இல்லாமல் ஒழித்தால் தான் இவன் மோக்ஷமடைய முடியும். அதாவது இவனிடம் எந்த புண்ணியமும் பாபமும் இல்லாமல் செய்து கொள்ளவேணும்

சிஷ்யன் : அது எப்படி முடியும்? எப்படியும் இவன் தன் வாழ் நாட்களில் ஏதாவது ஒன்று புண்ணியமோ, பாபமோ செய்து கொண்டு தானே இருப்பான். அப்படி இருக்க இவனால் பாப புண்ணியங்கள் இல்லாமல் செய்து கொள்வது முடியாத காரியமல்லவா.

ஆசார்யன்: ஆம் இது நல்ல கேள்வி தான். இது எப்படி முடியும் என்று கேட்டால் மேலே சொல்வதை கவனமாக கேள். பாப புண்ணியங்கள் இரண்டுமே மோக்ஷ விரோதி என்று பெரியோர்கள் சொன்னார்கள். நாம் செய்யும் அனேக நற்காரியங்களால் அதன் பயனை அநுபவிக்க பற்பல உயர்ந்த நிலையில் நம் பிறப்பு அமைகிறது. பெரிய, பெரிய பதவிகள், பட்டங்கள் இப்படி இவனை பிறக்க செய்து

அந்த புண்ணியங்களை அனுபவிக்கச்செய்கிறது.அப்புண்ணியங்கள் ஆனவுடன்(அனுபவித்து முடிந்ததும்) மறுபடி இந்த ஜீவன் பூமியில் வேறு ஒரு ஜன்மாவை எடுக்கிறான். இப்புண்ணியங்கள் இருக்கும் வரை இவன் பிறந்தே தீருவான். இது போல தான் பல கொடிய காரியங்களால் செய்த பாபங்களை அனுபவிக்க வேண்டி பூமியில் பல உருவமாக புழு, பூச்சி,நத்தை, நாரை,நாய் இப்படியாக பல ஈன் ஜன்மங்கள் எடுத்து பாபங்களை அனுபவிக்கிறான். ஆக இதுவும் இவன் பிறப்புக்கேதுவை புரிகிறது. ஆக இப்பொழுது நன்கு தெரிகிறதல்லவா இவன் பிறப்பின் காரணம்.

சிஷ்யன்: ஆம் ஸ்வாமி. நன்கு புரிகிறது. இதை தடுத்து இவன் பிறவி இல்லாமல் எப்படி செய்து கொள்வது. மேலும் சாஸ்திரங்கள் கூறினபடி இவன் பாபம் செய்யாமல் இருந்தாலும் புண்ணியம் செய்தே ஆக வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவதால் இவன் தன் வாழ்நாட்களில் புண்ணியம் செய்யாமல் எப்படி இருப்பது. இதையும் அந்த சாஸ்த்திரம் தானே கூறுகிறது. இவைகளை கொஞ்சம் விவரமாக கூறுங்கள் ஸ்வாமி.

ஆச்சார்யன்: ஆம் நல்ல கேள்விதான் கேட்டாய் அப்பா. இதோ பதில் கூறுகிறேன் கேள். ஒரு மனிதனுக்கு தான் செய்த புண்ணியபாபங்கள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். இதற்கு எம்பெருமானிடம் சரணாகதி பண்ணினால் அதனால் இவனுடைய பாப புண்ணியங்கள் அழிந்து விடுகிறது. இதைத் தான் சூடிக் கொடுத்த நாச்சியார் தம் திருப்பாவையில் 5வது பாசுரத்தில் நன்கு விளக்கி கூறியிருக்கிறாள்.

பாசுரம் காண்க:

மாயனைமன்னு..... வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும், புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பு என்பது மிகவும் சிந்திக்கதக்கது.பாசுரத்தின் விவரம் கூறுகிறேன் கேட்பாயாக.ஒரு மனிதனுக்கு புண்ணிய பாபங்கள் மூன்ற விதமாக தொடர்ந்து வருகிறது. இவை நிகழ்ந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்பன.எப்படியெனில் தான் சாப்பிடுவதற்காக நூறுமூட்டை அரிசி சேர்த்து வைத்திருக்கிறான். அதை இவன் சாப்பிட்டே (அனுபவித்தே) தீர வேண்டும். இவை இவனுடைய நிகழ்ந்த கால புண்ணிய, பாபங்களாகும். அடுத்து இவன் நிறையவே பயிர் செய்து வைத்திருக்கிறான். இது இவனுடைய எதிர் காலமாகும். பலஜன்மாக்கள் எடுத்து இந்த பயிராகிய பாபபுண்ணியங்களை அறுவடை செய்து சாப்பிட்டே(அனுபவித்தே) தீர வேண்டும். அதற்காக இவன் பல ஜன்மாக்கள் எடுக்க வேண்டும். மேலும் இவன் ஒரு மூட்டை அரிசி எடுத்து தன் வாழ்க்கையில் சாப்பிட்டு வருகிறான். இது இவன் நிகழ் காலம். இவை இந்த ஜன்மாவிற்கு உண்டான பாப புண்ணியங்கள் ஆகும். இவை எல்லோருக்கும் எம்பெருமான் இட்ட கட்டளை ஆகும்.

சிஷ்யன்: ஆம் ஸ்வாமி இவை நன்கு மனதில் புரிகிறது. இவைகளை மனிதன் எப்படி போக்கிக் கொள்வது அதையும் சொல்ல வேணும்.

ஆச்சார்யன்: ஆர்வத்துடன் கேட்கும் உனக்கு எனக்கு தெரிந்தவைகளை கூறுகிறேன். இவனுடைய நிகழ்ந்தகால அரிசி மூட்டைகளும் எதிர்கால பயிர் விளைச்சலும் இவை இரண்டும் இவன்தன் ஆசார்யனை அண்டி சரணாகதிபண்ணினால் அப்பொழுதே இவை இரண்டும் தீயினால் கொளுத்தப்பட்டு சாம்பலாகி விடுகிறது. இவன் தன் பிறவியை நன்கு அறிந்து இம்மனிதப் பிறவியே கடைசி பிறவியாக இருக்கட்டும் என்றும் மறுபிறவி வேண்டாம் என்றும் எண்ணி ஒரு நல் ஆசார்யன் திருவடி அடைந்து தனக்கு மோக்ஷம் வேண்டும் என்று வேண்டினால் உடன் அந்த ஆசார்யன் இவனுக்காக எம் பெருமான் திருவடியில் பிரார்த்தனை பண்ண அந்த நிமிஷத்திலேயே இவனுடைய பாப புண்ணியங்கள் இரண்டும் தீயிலிட்ட பஞ்சுபோல் பொசிந்து சாம்பலாகிவிடும், அநுபவிக்க வேண்டாம். அடுத்து இவனிடம் நிற்பது இந்த ஒரு மூட்டை அரிசி வடிவில் இருக்கும் பாப புண்யங்கள் மட்டுமே. இதை போக்க முடியாது. இதை அநுபவித்தே தீர வேண்டும் என்ற விதி. ஆக இவனிடம் சரணாகதி பண்ணியபிறகு நிகழ்ந்த கால, எதிர் காலமாகிய இரு பாப புண்யங்களும் ஒழிந்து விட்டன. இந்த ஜன்மாவிற்கு நிற்பதை முன் வினை என்றும், ப்ராரப்த்த கர்மா என்று சொல்வார்கள். இதை இவன் வாழ் நாளில் முடித்த பிறகே இவன் பெரிய வீட்டை அடைய முடியும். தானாகவே வைகுந்தம் அடைந்து விடலாம். இப்பொழுது புரிகிறதா?

சிஷ்யன்: ஆம் ஸ்வாமி நன்கு புரிகிறது. இருந்தும் மற்றுமோர் சந்தேகம். இம்மனிதன் தன் நிகழ்காலத்தில் பாபங்கள் பண்ணாமல் இருக்கலாம். இதுவரை பண்ணிய பாபங்கள் சரணாகதியின் மூலம் எரிந்து விட்டது. ஆனாலும் இம்மனிதன் தன் வாழ்நாளில் புண்ணியம் பல செய்ய வேண்டும் என்றும் அதாவது தான, தர்மங்கள், கோயில் கட்டுதல், குளம் வெட்டுதல் முதலிய நற்காரியங்கள் பல செய்ய சொல்லி சாஸ்த்திரம் கூறுகிறதே, இது எப்படி பொருந்தும்? இவன் செய்த புண்ணிய கர்மாவினால் மோக்ஷம் அடைய வழியில்லை யெனில் இவன் ஏன் நற்காரியங்கள் செய்ய வேண்டும் அதனால் இவனுக்கு என்ன லாபம். இதனை விளக்கி கூற வேண்டும் ஸ்வாமி.

ஆச்சார்யன்: நல்லது நீ மிகவும் உன்னிப்பாக என்னிடம் கேட்பது நன்கு புரிகிறது. இதுவும் ஒரு முக்யமான கேள்வி தான் இதோ பதில் கூறுகிறேன் கவனமாய் கேள். கெட்டவைகள் செய்யாமல் இருக்க வேணும். ஆனால் அதே சமயம்

நற்காரியங்கள் பல செய்ய வேண்டும். இது எம்பெருமான் கட்டளை. செய்யும் நற்காரியங்களை நான் செய்தேன், என்னால்தான் என்று எண்ணாமல் எல்லாம் எம்பெருமானின் பரீதிக்காக (திருவுள்ளம் உகப்புக்கா) என்று எண்ணி இதில் எனக்கு ஒன்றும் சம்பந்தம் கிடையாது என்ற எண்ணத்துடனும் செய்ய வேண்டும். மேலும் தான தர்மங்கள் செய்யும் போது பகவானை நினைந்து, க்ருஷ்ணார்பணம் என்றும் அச்சுதப்ரீயதாம் என்றும் மனம் நினைக்க வாயினால் சொல்லி செய்தோமானால் இப்புண்ணியங்கள் யாவும் நம்மிடம் தங்குவதில்லை. எல்லா நற்காரிய பலன்களும் (புண்ணியங்களும்) எம்பெருமான் ஸ்ரீமன் நாராயணனை அடைந்து விடுகிறது. இதைத்தான் நம் பெரியோர்கள் இன்றளவும் சங்கல்பத்தில் ப்ராணாயமத்துடன் செய்வது) ஸ்ரீமன் நாராயணப்ரீத்யர்த்தம் என்றும், ஸ்ரீபகவத் ப்ரீத்யர்த்தம் என்றும், சொல்லியே செய்து வருகிறார்கள் என்பதை நீயும் கேட்டிருப்பாய் அல்லவா? ஆக இதனால் தெரிந்து கொள்வது சரணாகதிக்கு பிறகு நாம் பாபம் செய்யாமல் இருத்தலும் (அப்படி செய்தால் சிறு தண்டனையுடன் கழிகிறது). செய்யும் நற்காரியங்கள் அனைத்தும் பகவான் ப்ரீதிக்காக செய்தோமானால் நம்மிடம் இருக்கும் பாபம் நசித்தும், புண்ணியம் பகவானிடம் சேர்தலாலும் நம்மிடம் ஒன்றும் ஒட்டாமல் போய்விடுகிறது. இதுவே சரணாகதியின் பெருமை. இப்பொழுது நன்றாக புரிந்ததா?

சிஷ்யன்: ஸ்வாமின் இப்பெரியதொரு விஷயத்தை ஒன்றும் தெரியாத அடியேனுக்கு ஒரு சிறுகதை மூலம் நன்கு விளக்கி கூறி, அடியேன் அறியாமையையும், சந்தேகத்தையும் போக்கி அநுக்ரஹம் செய்தது மிகவும் தன்யனானேன். மகிழ்ச்சி அடைகிறேன் ஸ்வாமி நன்றி. நமஸ்காரம். அருள் புரிய வேணும்.

முடிவுரை: இந்த கதையின் மூலம் நாம் தெரிந்து கொண்டது நாம் பற்பல ஜன்மாவில் செய்த பாப புண்ணியங்கள் சரணாகதியின் மூலம் அழிந்து விடுகிறது என்றும், அதன்பிறகு நம் வாழ்நாளில் நாம் அறியாமல் செய்யும் தீய செயல்களை சிறு தண்டனை மூலம் கழித்து விடுவதாலும், நாம் செய்த புண்ணிய கர்மாக்கள் யாவும் எம்பெருமானிடம் அர்பணித்து விட்டபடியாலும் இந்த ஜீவன் இரண்டும் அற்றநிலையில் தன் கடைசி காலம் வரை இப்பூவுலகில் நன்கு வாழ்ந்த பிறகு ஸ்ரீ வைகுண்டம் சென்று எம்பெருமான் திருவடி அடைந்து விடுகிறான். சரணாகதி இல்லையெனில் இவனுக்கு மறுபிறவி உண்டு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

வான்மீகியும் கம்பனும்

(ஸ்ரீமான் கடுக்கலூர் ரகுவீரபட்டாசாரியர் ஸ்வாமி)

'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை' என்பது தமிழ் மறையாம் வள்ளுவம் உணர்த்துவது. இப்பூமியின் செவியாக புற்றைக் கூறுவது மரபு. அப்புற்றிலிருந்து தோன்றிய ஆதிகவி வான்மீகி முனிவர். செவிச் செல்வம் என்பதே வான்மீக இராமாயணம் தான் என்பது அறிஞர் முடிவு. கம்பரைப் பாடாத புலவர்களே இல்லை. பாரதி கூறுகிறார் கல்விச் சிறந்த தமிழ்நாடு உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு என.

வான்மீகி என்ற கவியும் கம்பன் என்ற கவியும் பெயர் அமைப்பிலேயே சிறந்து நிற்கின்றனர். புற்றிலிருந்து தோன்றியதால் வான்மீகி எனவானார். கம்பத்திலிருந்து வெளிப்பட்ட நரசிங்கப்பிரானிடம் ஈடுபாடு கொண்டதால் கம்பன் என தன் பெயரை அமைத்துக் கொண்டார். இராமகாதையில் இரணியன் வதைப்படலம் என தனியாக நூற்றெழுபதுக்குமதிகமான பாடல்களில் அமைத்து தனது நரசிங்க பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

நாரணன் விளையாட்டெல்லாம் நாரத முனிவன்கூற ஆரணக் கவிதை செய்தான் அறிந்த வான்மீகி. அறிந்த என்ற தொடர் சிறப்பானது. 'முனேர்வக்ஷ்யாம்யஹம் புத்வா' என்ற நிலையைத்தாண்டி அறிந்த வான்மீகி என்பது நினைத்து மகிழத்தக்கது. வான்மீகியின் எண்ணங்களை கம்பர் நன்கு அறிந்து கொண்டு அதைத்தேவையான இடத்தில் பிரதிபலித்துக் காட்டுவார்.

'ரமணீயம் பிரஸன்னாம்பு ஸந்மனுஷ்ய மனோயதா' இது ஆதிகவி.
சான்றோர்கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர்கண்டார் இது கவிச் சக்ரவர்த்தி.

நல்லவர்கள் மனதை அறிய உதவுவது கவிதை. உள்ளத்து உள்ளது கவிதையல்லவா. மலடிக்கு பிரஸவ வேதனை தெரியாது. கற்றாரைக் கற்றாரே காமுறுவர். வான்மீகியை முற்றும் கற்று உணர்ந்து நெகிழ்ந்து மகிழ்ந்து வெளியிட்ட உணர்வே கம்பரது இராமாயணம். அயோத்தி நகரின் பெருமையை நன்கு உணர்ந்து முத்தாய்ப்பாக கம்பன் இவ்வாறு கூறுவான். ''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ'' சொல்லுகின்ற முறை கூட வான்மீகியை நினைவுறுத்துகின்றன.

'அவித்வான் ந, அசக்த: ந' என்பது இராமாயணம்.

வான்மீகி உணர்ச்சிவயப்படாமல் உள்ளதை உள்ளபடியே கூறுவார். கம்பரோ உணர்ச்சி வசப்படுபவர். அவரது பாடல்கள் உணர்ச்சிமாளிகையின் உச்சக்கட்டத்தில் ஊஞ்சலாடும். நம்மையும் ஊஞ்சலாட்டும். அயோத்தி நகரின் மாட மாளிகைகள் பற்றி கூறுகிறார் வெண்சங்குகளைச் சுட்டுச் செய்த சுண்ணாம்புச் சாந்தினால் மாளிகைகள் அமைக்கப்பட்டன. அந்த வெண்மை எப்படிப்பட்டது. திங்களையும் கருமை எனத் தோன்றுமாறு செய்யும் அதீதமான வெண்மை நிறமுடைய வீடுகள் என்பதை திங்களும் கரிதென வெண்மை தீற்றிய சங்க வெண்சுதையுடைத் தவள மாளிகை எனக் கூறுவர்.

வான்மீகியின் கதை மாந்தர்களின் குண நலன்களை பெரும்பாலும் கம்பன் மாற்றவில்லை. அகலிகையின் கதையில் ஒரு உதாரணம் காண்போம். தபோபல விசுத்தாங்கி என்ற வால்மீகியின் கருத்தை மாசறு கற்பின் மிக்க அணங்கு என்பர் கம்பர்.

உணர்ந்தனள் உணர்ந்த பின்னும் தக்கதன்று என்ன ஓரான்.....
மதிம் சகார துர்மேதா தேவராஜ குதூகலாத்

மேற்கண்ட வரிகள் வான்மீகியின் வழியிலேயே கம்பன் செல்வதை உள்ளங்கை நெல்லிக் கனியாகக் காட்டுகின்றன. பால காண்டத்தில் காட்டப்படும் இருபெண்கள் தாடகையும் அகலிகையும் ஒருத்தியை அழிக்கிறான். ஒருத்தியை அருள்கிறான். கால்வண்ணம் காக்கிறது. கைவண்ணம் அழிக்கிறது. அதுவும் ஒரு வகையில் அபயம் அளித்தலே அல்லவா அடியார்களைக் காக்க!

அஹம் வேத்மி மஹாத்மானம் ராமம் ஸத்ய பராக்ரம்
வஸிஷ்டோபி மஹாதேஜாயேசேமே தபஸி ஸ்திதா:

என்ற ஆதிகவியின் வாக்கு மிகவும் புகழ் பெற்றது. அஹம் என்பதற்கு உட்கண்ணால் காணுபவர் பல ஆசார்யர்களை அண்டியவர், தருப்பையைப்பற்றிய அருள்பெற்ற தவசி, சடைமுடியுடைய பற்றில்லாதவர், யோகத்தில் வல்லவர், பல இடர்பாடுகளையும் எதிர்த்து வென்றவர் என்றெல்லாம் பல பொருள் கூறிச் செல்வர்கள் அறிஞர்கள். மேலும் வசிஷ்டரைப் போன்ற மஹான்களும் அறிவார்கள் என்கிறார் விசுவாமித்திரர்.

இத்துணை கருத்துக்களையும் கம்பர் தனது ராம காதையில் இவ்வாறு கூறுகிறார். **''என்னனைய முனிவரரும்''** என.

''கௌஸல்யா சுப்ரஜா ராம'' என்பது விசுவாமித்திரரின் மூலமாக இராமனைத் துயிலெழுப்பும் வான்மீகியின் பாடல் என்பது அனைவரும் அறிந்ததே. இதனை மிகவும் ரசித்தவர் கம்பர். கோசலை தன் மணிவயிறு வாய்த்தவன் இராமன். கோசலை என்றாலே

கோசல நாடு மனதில் நிழலாடும். கோசலைபெற்ற பெருமையினை கம்பன் ஆழமாகச் சிந்திக்கிறான். இதன் விளைவு ஓர் அழகான பாடல்.

ஒரு பகல் உலகெலாம் உதரத்துட்பொதிந்து
அருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்
கருமுகில் கொழுந்து எழில் காட்டும் சோதியைத்
திருவுறப் பயந்தனள் திறங்கொள் சோசலை

ஈரேழுபதினாலு உலகங்களையும் தன் வயிற்றுள் கொண்டவனை, இனிதே பெற்றவள் கோசலை. கம்பநாடன் கவியென்றால் கற்றோர்க்கு இதயம் களியாதோ? கோசலையின் பெருமையினை விரிவாக திருவவதாரப் படலத்திலேயே விளக்கிவிடுகிறார் கம்பர். நரசார்த்தூலனின் அன்னையின் பெருமையினை ஆதிகவியும், கவிச்சக்ரவர்த்தியும் போட்டியிட்டுப் பேசுகிறார்கள். எனவேதான் அவள் மன்னுபுகழ் கோசலையாகி விட்டாள்!

இயம் ஸீதா மம சுதா ஸஹதர்மசரீ தவ
ப்ரதீச்ச சைநாம் பத்ரம்தே பாணிம் – க்ருஹ்ணீஷ்வ பாணிநா

என்னுடைய பெண்ணான இந்த சீதையானவள் உமக்கும் அறங்களைக் கூட இருந்து செய்யக் கூடியவள். இவளை ஏற்பீராக, உமக்கு மங்களமுண்டாகட்டும். உம்முடைய கையினால் இவளுடைய கையைப் பிடித்துக் கொள்ளும். இது வான்மீகியின் கூற்று.

கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமகளும் பொருளும் என நீயென்
மாமகள் தன்னொரு மன்னுதியென்னா
தாமரையன்ன தடக்கை யினீந்தான்

இது கவிச்சக்ரவர்த்தியின் பாடல்.

தயரத ராமன் முன்னால், சநகமகாராசன் பரம் பொருளாகிய திருமாலும் பூமகளாகிய திருமகளும் போல என்மகளுடன் நிலைபெற்று வாழ்வாயாக என்று கூறி குளிர்ந்த ஜலத்தை தாரை வார்த்து இராமனது தாமரைக் கையில் கொடுத்தான்.

ஸீதா–படைசாயில் தோன்றியவள். இதே கருத்தை பூமகள் என்று குறிக்கிறார். கம்பர் மம சுதா என்பதை என்மாமகள் என்கிறார். மன்னுதி என்பது பத்ரம் தே என்ற மங்கள வாழ்த்தாக உள்ளது. என்மாமகள் என்ற சொற்றொடரே அறத்தில் ஊற்றம் உடையவனின் மகள் (ஸஹதர்மசரீ) என்று காட்டிவிடுகிறது. தாமரையன்ன தடக்கையில் ஈந்தான் என்பது பாணினா பாணிம் க்ருஹ்ணீஷ்வ என்ற பொருளைக் கொண்டுள்ளது. கம்பன் தெளிவாக கன்னிகாதானத்திற்கு தாரை வார்த்துக் கொடுக்கும் நிகழ்ச்சியை

(பாணிக்ரஹத்தை) விரிவாகக் கூறி விடுகிறான். முதற்றாய் ஆதிகவி. இதத்தாய் கம்பன் இருதாயரைப் பெற்ற நாம் அதிருஷ்டசாலிகள்.

ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜனகாத்மஜாம்
அயோத்யா மட வீம் வித்தி கச்சதாத யதாஸுகம்

இராமனே உனக்கு தயரதன் சீதையே உனக்கு தாய் (என்னைப்போல) காடே அயோத்தி துன்பத்தையே இன்பமென எண்ணிச் செல்வாயாக! (செல்வதையே சுகமாகக் கொள்வாயாக) இதனையே கம்பர் வழிநின்று காண்போம்.

ஆகாததது அன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம்மன்னவன் வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம் பூங்குழல் சீதை என்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்றான்

வான்மீகியின் கருத்தையே மேலும் பொலிவூட்டிக் கூறுகிறான் கம்பன். உனக்கு எதுதான் ஆகாதது? (சென்றால் குடையாவாய் இருந்தால் சிங்காசனம் ஆவாய், நின்றால் மரவடிகள், நீள்கடலில் மணி விளக்கு, பூம்பட்டு, புல்கும் அணை – எல்லாம் இயலும் உனக்கு) அவ்வனம்! இவ்வயோத்தி! அவ் ..... இவ் ..... எத்தனை வேறுபாடுகள் எளிதாக இது. அரிதான அது. இனிமையாக இது கொடுமையான அது. அடுக்கிக் கொண்டே போகலாம்! இராமனுக்கு ஒரு தனிச்சிறப்பு அளிக்கிறான் கம்பன். மாகாதல் இராமன்.

ஜீவாத்மக்களின் மேல்தான் இறைவனுக்கு எவ்வள்வு காதல் கருணா காகுஸ்தன் அல்லவா அவன்? இராமனுக்கு அடைமொழி கொடுத்து அவ்விராமனை விட்டுவிலகவேண்டிய மன்னனை அம்மன்னவன் என வேறுபடுத்திப் பேசுவது உணர்வார்கட்கே இன்பம் பயக்கவல்லது.

சுமித்திரை தன்னையும் வெறுத்துக் கொள்கிறாள் வையம் ஈந்தும் போகா உயிர்த்தாயர் வெறும் தாய் அல்ல –இராம்னில்லாத வையத்தை வெறுக்கிறாள் சுமித்திரையார். வையத்து வாழ்வீர்காள் என கோதையார் பேசுவதும் இக்கோணத்தில் பார்த்தால் அதில் உள்ள இகழ்ச்சி புரியும். இறைமை இல்லாத வாழ்வு இறையுணர்வு இல்லாத வாழ்வு வாழ்வாகுமா?

சீதையைப் பற்றிப் புகழ்கிறார் சுமித்ரை பூங்குழல் கொண்ட சீதாப்பிராட்டியாம். பூவினாலே குழலுக்கும் குழலினாலே பூவுக்கும் எழில் மிகுகிறது. அப்படியே இராமசீதா அன்யோன்யம். கச்சு-செல்வாயாக. சுகமாகச் செல்வாயாக. இது ஆதிகவி. கம்பன் இன்னும் ஒரு படிமேலே செல்கிறான்.

இவ்வயின் நிற்றலும் ஏதம்! இனிஇங்கு தாமதிப்பது தகாது. உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம். மற்றை நம்காமங்கள் மாற்றும் வழியை சுமித்திரையார் எவ்வளவு அழகாக உணரத்துகிறார்.

தருணௌள ரூபஸம் பன்னென ஸுகுமாரௌள மகா பலௌள
புண்டரீக விசாலாகெஷள சீரக்ருஷ்ணார ஜினாம்பரௌள

வாலிபர்களாய் அழகு நிறைந்தவராய் மிருதுவான தன்மையுடையவராய் பெரிய பலத்தையுடையவராய் தாமரைக் கண்ணராய் மரஉரிமற்றும் மான்தோலை உடையவர்களாய் இராமகிருஷ்ணர்கள் விளங்கினார்கள். ஆதிகவியின் அற்புதமான வரிகள் இவை. அவமானப்பட்டவள் அவமானப்படுத்தியவளை உவமானமில்லாத ஒப்புயர்வற்றவனாக காட்டுவது வேறு எங்கும் காண இயலாது. ஆதிகவியின் வார்த்தைகள் அற்புதமானவை. எளியவை; இனியவை; ஈர்ப்பவை; ஒளிர்பவை. மறக்க முடியாத மாண்புடையவை; தொலைவிலிருந்து பார்த்தபோது வாலிபர்களாகத் தோன்றினர். இன்னும் நெருங்கியபோது எழில்மிக்க அழகர். உடை மரவுரி; உரத்தில் மிகச்சிறந்தோர். கண்ணழகர், மான்தோல் ஆடையர்.

கம்பரது பாடல் இதோ இதே காட்சியில் ....

இருவர் மானிடர் தாபதர் ஏந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தருமநீரர், தயரதன் காதலர் ....

என்று ஆதி கவியின் அடியொற்றிய மொழி பெயர்ப்பை படித்து உணரலாம்.

இறுதியாக ஒன்று:

தம் த்ருஷ்ட்வா சத்ருஹத்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்
பபூ வஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே.

எதிரிகளை அழித்தவரும் முனிவர்க்கு இனியவருமான இராமபிரானை பார்த்து சீதாப்பிராட்டி ஸத்தைப் பெற்றாள், மகிழ்ந்தாள், தழுவினாள் நன்கு என்ற வான்மீகியின் கருத்தை கம்பன் கூறுவதைக் கவனிப்போம்.

முனிவர்வந்து முறை முறை மொய்ப்புற
இனிய சிந்தை இராமனும் ஏகினான்
அனிகவெஞ்சமத்து ஆர்உயிர் –போகத்தான்
தனி இருந்த உடல் அன்ன தையல்பால்

உயிர் இல்லாத உடம்புபோல சீதையிருந்தாள் இனிய இராமன் அதோவருகிறான்! எவ்வாறு வருகிறான்?

விண்ணின் நீங்கிய வெய்யவர் மேனியில்
புண்ணின் நீரும் பொடிகளும் போயுக
அண்ணல் வீரனைத்தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவினார்.

(சத்ருஹந்தாரம் – அண்ணல் வீரனை)

ஒருத்தியாக உருகித் தழுவியதாக ஆதிகவி கூறினார். ஆனால் கம்பன் நாடன் தம்பியும் தாரமும் ஐயன் மேனியில் படிந்த குருதியையும் புழுதியையும் தம் கண்ணீரால் கழுவினர் என்றார்.

அன்பிற்கு முண்டோ அடைக்கும் தாழ்? ஆதிகவியின் உணர்வுகளை சில இடத்தில் மிகுவித்தும், சில இடங்களில் குறைத்தும் பேசுகின்றான் கம்பன். என்றாலும் சுவை மிகுந்தே உள்ளது. தமப்பன் பிரமன் தன் தனயன் நாரதனுல் பெற்ற ஞானம் வான்மீகியின் மதுரவாக்கில் வெளிப்பட்டு இனிய காவியமாகியது. வீணையுடைய கலைமகளோ பிரமனின் துணைவி. நாரதனின் தாய். அவளது தூய திருவருளால் கவி செய்தவன் கம்பன் எனவே தந்தைமொழி (பிரமன்) வான்மீகம் தாய்மொழி கம்பம் என்று நயமாகச் சொல்வர் நயனறிபுலவர்.

வான்மீகமும் கம்பமும் வற்றாத ஜீவநதிகள். முன்னது மூலநதி; பின்னது கிளைநதி; இரண்டும் ஜீவநதிகள். ஜீவன்களுக்கு தாரக போஷக போக்யமான நதிகள். குள்ள குளிர குடைந்து நீராடினால் போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும். எங்கும் திருவருள் பெற்று இன்புறுக!

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

தமிழ் வேதம்

(ஸ்ரீமதுபயவே . வித்வான் சக்ரம் ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி)

எல்லா உலகங்களுக்கும் முதல் ஆசார்யனான ஸர்வேச்வரன் ஸ்ரீமந்நாராயணன் அடியிலே ப்ரம்மாவுக்கு வேதங்களைக்கொடுத்தும் மதுகைடபர்களால் வேதங்கள் அபஹரிக்கப்பட்டபோது அவற்றை மீட்டுக்கொடுத்தும் அவனைக் கொண்டே சாஸ்திரங்களை ப்ரவர்த்திப்பித்தும் ஸநத்குமாரர்களைக்கொண்டு உலகத்துக்கு ஹிதத்தைச் சொல்லியும் நாரதர், பராசரர், சுகர், சௌனகர் ஆகிய மஹரிஷிகளைக் கொண்டு வேதாந்த சாஸ்திரம் அழியாதபடி நடத்தியும், வ்யாஸமஹர்ஷியைக் கொண்டு மஹாபாரதம், ப்ரம்மஸூத்ரம் ஆகியவற்றை அருளிச்செய்தும், தானே அன்னம், மீன், ஹயக்ரீவன், நரநாராயணன், கிருஷ்ணன், முதலிய அவதாரங்களைப்பண்ணி, தத்வம், ஹிதம், புருஷார்த்தம் ஆகியவற்றை உலகத்துக்கு உபதேசம் செய்தும் ஸ்ரீ பாஞ்சராத்திர சாஸ்திரத்தைத் தானே வெளியிட்டும், இவ்வளவும் போதாமல், பராங்குசன், பரகாலன் முதலாக ஒரு அபிநவமான தசாவதாரம் பண்ணியும் மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி அனைவருக்கும் பயன்படும்படியான தண்ணீராக உமிழுமாப்போலே நான்கு வேதங்களின் ஸாரமான உட்பொருளை அனைவரும் புரிந்துகொள்ளும்படி தமிழ்மொழியாலே நாலாயிரம் பாட்டுக்களாலே வெளியிட்டு இப்படிப் பல விதங்களாலேயும் உபகாரம் பண்ணினான்.

ராமன், கிருஷ்ணன், நரஸிம்மன் முதலிய பத்து அவதாரங்களைப்போலவே ஆழ்வார்களுடைய அவதாரங்களும் என்று நாம் போற்றிப்புகழ வேண்டும். ''இதுவே அபிநவமான தசாவதாரம் என்கிற சொல்லின் பொருள். அதாவது, எம்பெருமானுடைய ஆயுதங்களான சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம், கத்தி முதலியனவைகளும் எம்பெருமானுடைய பூரணங்களான வனமாலை, ஸ்ரீவத்ஸம் முதலியவைகளுமே ஆழ்வார்களாகவும் ஆசார்யர்களுமாக அவதரித்தன என்பது ஸம்ப்ரதாயத்தின் உட்கருத்து. ராமன், க்ருஷ்ணன், நரஸிம்மன், வராஹம், திருவிக்கிரமன் முதலிய மூர்த்திகளை எல்லா திவ்யதேசங்களிலும் அர்ச்சா விக்ரஹமாக எழுந்தருளப்பண்ணியிருக்கிறார்கள். அவர்களை நாம் வழிபடுகிறோம். தோத்திரம் சொல்லுகிறோம். விழாக்கள் நடத்துகிறோம். அப்படியே அபிநவமான தசாவதாரமான ஆழ்வார்களுக்கும் கோயில்களில் விக்ரஹங்கள் செய்து நாம் வழிபட வேண்டும். ஆராதிக்க வேண்டும். இது யான் சொல்வதல்ல. அனேக புராணங்களிலும் உபநிஷத்துக்களிலும் இந்த விஷயங்களைக் காணலாம்.

ஆழ்வார்களாகிறார்:- ஆசார்யர்கள் ஆகிறார்:-

1. பொய்கையார்
2. பூதத்தார்
3. பேயார்
4. திருமழிசைப்பிரான்
5. நம்மாழ்வார் (மதுரகவிகள்)
6. குலசேகரர்
7. விஷ்ணுசித்தன் (ஆண்டாள்)
8 .தொண்டரப்பொடிகள்
9. திருப்பாணழ்வார்
10.திருமங்கையாழ்வார்

நாதமுனிகள், ஆளவந்தார், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீவேதாந்த தேசிகன் குருபரம்பரையை தினமும் நாம் அனுஸந்திக்க வேண்டும். குருபரம்பரையை ஸ்வாமிதேசிகன் அதிகார ஸங்க்ரஹத்தின் ஒரு பாசுரத்தின் மூலமான இதை சுருக்கமாக வெளியிட்டுள்ளார்.

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு
யானடைவே அவர் குருக்கள் நிரைவணங்கி
பின்னருளால் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்,
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத்திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

தமிழ் வேதத்தின் பெருமை

நாமே சடகோபனாக அவதாரம் செய்து ஸம்ஸ்க்ருத வேதங்களின் தாத்பரியங்களை யெல்லாம் தமிழ் மொழியாலே திருவாய்மொழியாக அருளிச்செய்யப் போகிறோம் என்று எம்பெருமானே அருளிச்செய்துள்ளான்.

திராவிடப்ரம்ஹோபநிஷத், ப்ருஹத் ப்ரம்ஹஸம்ஹிதை, பராசரஸம்ஹிதை, பவிஷ்யத்புராணம் ஆகியவற்றில் ஆழ்வார்களுடைய பெருமையும் அருளிச்செயல்களின் பெருமையும் பரக்கப் கூறப்பட்டுள்ளது.

கலியுகாரம்பத்திலே பிரும்மநந்த்யாதிகளுக்குப்பிறகு நம்மாழ்வார் அத்யாத்ம சாஸ்திரத்துக்கு ப்ரதமாசார்யரானார் என்று ஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாய பரிசுத்தி என்னும் ரஹஸ்ய க்ரந்தத்தில் அருளிச்செய்துள்ளார்.

ஸம்ஸ்க்ருதத்திற்குப் பாணினி என்பவர் இலக்கணம் வகுத்தாற் போலே

தமிழுக்கும் அகத்தியமுனிவர் இலக்கணம் வகுத்துள்ளார். ஆகவே தமிழ் ப்ராக்ருதம் ஆகிய இரண்டு மொழிகளுமே இலக்கணம் அமைந்த இலக்கியங்கள். ஆகவே, ''அபப்ரம்சம்'' என்ற மொழிக்குற்றம் தமிழுக்கும் ப்ராக்ருதத்திற்கும் இல்லை. இவ்விஷயம் சிவபெருமானாலேயே விளக்கப்பட்டுள்ளது.

ஸம்ஸ்க்ருத வேதத்ததைப் போலவே நாலாயிர திவ்யப்ரபந்தமும் அனாதியானது. அபௌருஷேயமானது தபஸ்ஸினாலும் யோகத்தினாலும் ஜப யக்ஞங்களாலும் ஸித்தி பெற்றவர்களான விச்வாமித்திரர், வ்யாஸர், வால்மீகி முதலிய மஹரிஷிகள் காயத்ரி முதலான மந்திரங்களை தவ வலிமையினால் ஸாக்ஷாத்கரித்து உலகத்துக்கு வெளியிட்டார்கள். அதை போலவே நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலிய ஆழ்வார்களும் தமிழ் ப்ரபந்தங்களை ஸாக்ஷாத்காரம் பண்ணி உலகத்திற்கு வெளியிட்டார்கள். மஹரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் வித்யாசம் என்னவென்றால்:– தபோ பலத்தினால் உயர்ந்த ஞானத்தையும் பக்தியையும் பெற்றவர்கள் மஹரிஷிகள். தபம் ஒன்றும் இயற்றாமலேயே பகவானாலேயே பிறவியிலேயே மயர்வறமதி நலம் அருளிச்செய்யப்பட்டவர்கள் ஆழ்வார்கள். ''மயர்வறமதி நலம் அருளினன் யவனவன்'' என்கிற திருவாய்மொழி பாசுரத்தினாலே இதையறியலாம். இவர்களுடைய ஞானத்திற்கும் பக்திக்கும் மறதி, சோர்வு என்பவை எப்பொழுதும் கிடையாது. ''திருமாலால் அருளப்பட்ட சடகோபன்'' -திருமகளால் அருள்மாரி- பூவளரும் திருமகளால் அருள்பெற்று''-ஆகிய பாட்டுக்களிலும் இக்கருத்தைக் காண்பது.

பாதுகாஸஹஸ்ரத்தின் ப்ரஸ்தாவ பத்ததியின் 3ம ச்லோகத்திலும் இன்னும் அனேக இடங்களிலும் ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களைப் பார்த்தார்கள் த்ரஷ்டாக்கள்)என்று. ஸ்வாமி தேசிகன் வெளியிட்டருளினார்.

ஆழ்வார்களின் பகவதனுபவம்

மேற்கூறியபடி எம் பெருமானாலேயே ஸாக்ஷாத்தாக ஒப்புயர்வற்ற அத்யாத்ம ஞானத்தையும் பக்தியையும் அருளப்பெற்ற ஆழ்வார்கள் எம்பெருமானுடைய ஸ்வரூபம் திவ்யமங்களவிக்ரஹம் கல்யாணகுணங்கள், உபயவிபூதிகள், திவ்யதேசங்கள் இவையனைத்தும் அப்ராக்ருதமாகவும் இயற்கையாகவே இருக்கிறபடியை பரிபூர்ணமாக அனுபவித்து அத்தால் உண்டான ஆனந்தம் உள்ளடங்காமல் தங்களுடைய அனுபவம் அனைத்தையும் நாலாயிரம் பாசுரங்களாலே வெளியிட்டு உலகத்தை வாழ்வித்தருளினார்கள். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்கிறபடியை இந்த பரிபூர்ண ப்ரம்மானுபவத்தை ஸ்ரீ வைஷ்ணவ பாகவதர்களும் அனுபவிக்க வேண்டும் என்கிற சீரிய நோக்கமே இதன் காரணம். ''அந்தமிலா வாரணங்கள் நாலாகி நின்ற என்கிற ப்ரபந்தஸாரப்பாசுரத்திலும் இதைக் காணலாம்.

நாயகாநாயகீ பாவம்

தானும் யானு மெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம் - தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதம் ஒத்தே. எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டூழி ஊழிதொறும் - அப்பொழுதைக்கப்பொழுது என்னாராவமுதமே- என்கிற படியே நிரதிசயபோக்கியமான அவனுடைய விக்ரஹத்தை அனுபவித்து அவனுடைய புருஷோத்தமத்துவத்திற்குத் தோற்று ஆழ்வார்கள் நாயகியின் தன்மையை அடைந்து அவனை அனுபவித்தார்கள். அவன் தங்களை விட்டு பிரிந்தபோது பிரிவாற்றுமல் அன்னம், நாரை, அன்றில், கிளி, ஆகிய பறவைகளை பகவானிடம் தூது விட்டார்கள்.

நாயகீ பாவத்தில் பேசிய பாசுரங்கள் கீழ்வருமாறு:

1.அஞ்சிறையமடநாராய்
2.வைகல்பூங்கழிவாய்
3.எங்கானலகங்கழிவாய்
4.கள்வன் கொல் யானறியேன்
5.வெருவாதாள் வாய் வெருவி
6.பொன்னிவர் மேனி மரதகத்தின் ஆகியவை.

நாலாயிரதிவ்யப்ரபந்தத்தில் உள்ளடங்கிய கருத்துகள்.

1. ச்ரியப்பதியான நாராயணனே பர தேவதை.

2. நாராயணனே ஜகத்காரணபூதன். மற்ற எல்லாத்தேவதைகளும்- பிரும்மா, சிவன், இந்திரன், வருணன், யமன், ஸூரியன், சந்திரன்- முதலிய முப்பத்துமுக்கோடி தேவதைகளும் அவனால் படைக்கப்பட்டவர்கள்.

3. அவனே ஆதாரம்- அனைத்துக்கும். அவனே அனைத்துக்கும் கட்டளையிடுபவன். பக்தகோடிகள் செய்யும் தொண்டுகளை (கைங்கர்யங்களை) ஏற்றுக்கொள்பவன் அவனே. தொண்டுகளின் பலன் அவனைச்சார்ந்தது.

4. மேற்கூறிய 3 காரணங்களினால் அவனே அனைத்து ஜீவராசிகளுக்கும் மற்றும் செடி, கொடி, தாவரம் மற்றும் அசையும் அசையாப் பொருள்கள் அனைத்துக்கும் அந்தர்யாமி- உயிராயிருப்பவன். மற்ற அனைத்து உயிர் உள்ள உயிர் அற்ற பொருள்களும் அவனுக்கு சரீரங்கள்.

5. ''ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்'' என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடியாக திவ்வியதேசங்களில் உள்ள எம்பெருமான்களுக்கு கைங்கர்யம் பண்ணுவதே நமது கடமை.

6. கர்மங்களுக்குக் வசப்பட்ட மனிதர்கள் கர்மங்கள் அனைத்தையும் விட்டு ஸ்ரீ வைகுண்டம் என்கிற லோகத்துக்கு செல்வதே உண்மையான மோக்ஷம். அதைக்காட்டிலும் சிறந்த புருஷார்த்தம் ஒன்றும் இல்லை.

7. இந்த மோக்ஷத்தைப் பெற உபாயங்கள் பக்தி - ப்ரபத்தி- என்பவை.

8. இந்த உபாயங்கள் பகவானாலேயே பகவத்கீதை, ராமாயணம் முதலிய சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டுள்ளன.

திராவிட வேத பாராயணம் வைகுண்டத்திலும் உண்டு

பூவளரும் திருமாது புணர்ந்த நம் புண்ணியனூர்
தாவளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெருநான்மறை ஓதிய கீதமெல்லாம்
பாவளரும் தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவமே.

மேற்படி பாசுரம் ஸ்வாமிதேசிகனால் பரமபதஸோபானத்தில் அருளிச் செய்யப்பட்டது. பாசுரத்தின் பொருள் உபாயத்தை அனுஷ்டித்து வைகுண்டம் சென்றவர்கள் அங்கு தமிழ்ப் பல்லாண்டு இசையுடன் பாடுவார்கள் என்பது.

நிகமனம்

லுப்தங்களான திராவிடவேதத்தை நம்மாழ்வார் அனுக்ரஹத்தால் ஸ்ரீமந் நாதமுனிகள் மீண்டும் வெளிப்படுத்தினார். அதோடு மட்டுமல்ல. தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்தவள்ளலும் அவரே. திவ்யப்ரபந்தத்தின் தாத்பர்யங்களை யெல்லாம் சதுச்லோகி, ஸ்தோத்ர ரத்னம் ஆகியவற்றால் ப்ரகாசப்படுத்தியவர் ஆளவந்தார்.

பிள்ளானுக்கு ஸகலசாஸ்திரங்களையும் உபதேசிக்க ஆளவந்தார் நியமனப்படி திருவாய்மொழியின் வ்யாக்யானமாக ஆறாயிரப்படி என்னும் க்ரந்தத்தை பிள்ளானைக்கொண்டு அருளிச்செய்தவர் ஸ்ரீபாஷ்யகாரர்.

அடுத்த படியாகத் திருவேங்கடமுடையானுடைய திருமணியாழ்வாரின் அம்சமாக அவதரித்த ஸ்ரீ மத்வேதாந்த தேசிகன் உடையவர் க்ரந்தங்கள் எல்லாவற்றிற்கும் வ்யாக்யானம் செய்ததன்றி திவ்யப்ரபந்தவ்யாக்யானமாக அனேகக்ரந்தங்கள் உபகரித்தருளினார்.

அவையாவன:

1. த்ரமிடோபநிஷத்ஸாரம்
2. த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்னாவளி
3. நிகமபரிமனம்
4. உபகாரஸங்க்ரஹம்
5. முனிவாஹனபோகம் ஆகியவை. மேலும் திவ்யப்ரபந்தங்கள் பாசுரங்களின் எண்ணிக்கையை ப்ரபந்தஸாரத்தின் மூலமாக அருளிச்செய்தார்.

நமது கடமை

நாம் ஸ்ரீவைஷ்ணவர்களாக பிறந்திருப்பது அனேகபுண்யங்களின் பலம்.

ப்ராம்மண்யம் நிலைத்து நிற்கவேதாத்யயனம் அவச்யம். ஸ்ரீவைஷ்ணவனாகத் திகழ திவ்யப்ரபந்தம் அத்யயனம் செய்யவேண்டும்.

''தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழிதிகழ்'' என்கிற பாசுரத்தின்படி பஞ்ச ஸம்ஸ்காரம் பண்ணிக்கொள்ள வேண்டும். ஆசார்யர்களை அடைந்து வேதாந்த சாஸ்திரம் காலக்ஷேபம் செய்யவேண்டும். மோக்ஷத்திற்காக பரந்யாஸம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

தேஹம்விடும் வரையில் இங்கிருந்த காலம் அர்ச்சாவதாரத்தில் கைங்கர்யம் செய்யவேண்டும். பகவானுக்கு மட்டுமன்றி பாகவதர்களுக்கும் ஆசார்யனுக்கும் கைங்கர்யம் செய்ய வேண்டும். பயிலும் சுடரொளி, நெடுமாற்கடிமையின் கருத்து இது.

உபகாரஸ்ம்ருதி

பெரியாண்டவன் துடக்கமாக இடைவிடாது வந்த ஸம்ப்ரதாயார்த்தங்களைப் பிதாவின் பக்கலிலே சிக்ஷிக்கப் பெற்றேன். உபாயானுஷ்டான தசையில் ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவனால் 'ஸ்யாதஸௌ'' என்று அமலங்களாக விழிக்கப் பெற்றேன். அடியவர்க்கு மெய்யன் திருவடிகளில் ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னிஅடிமை செய்யும்படி நியமிக்கப் பெற்றேன்.

ஞானப் பிரானை யல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே என்று நம்மாழ்வாரால் போற்றப்பெற்ற ஸ்ரீ ஞானப்பிரானாலேயே ஞானப்பால் ஊட்டப்பெற்று அந்த ஞானப்பாலை நல்லோர் அனைவரும் அருந்தும்படி வழங்கி வருபவரான நம் ப்ரக்ருதம் ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவனால் குளிரக்கடாக்ஷிக்கப் பெற்ற பிறகு இதற்கு முன்பு பெற்ற கடாக்ஷங்களெல்லாம் உறுதி பெற்றன. ஸ்வாமி தேசிகனால் அபயப்ரதான ஸாரத்தின் கடைசியில் அருளிச் செய்தபடி 3 ஆசார்யர்களின் அனுக்ரஹமே இந்த வ்யாஸம் எழுதிமுடிக்க எழுதுகோலாக அமைந்தது.



ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

''போற்றி உகப்பதும் புந்தியுட் கொள்வதும்''

ஸ்ரீமதுபயவே. வித்வான்
பாதூர் தூரப்புல் ராமபத்ராசாரியர் ஸ்வாமி

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத்ரஹயத்ரயஸாரம் என்னும் கிரந்தத்தில் இருள் தருமா ஞாலத்தில் ஸம்ஸாரத்தின் அடிச்சூட்டால் திகைத்து உழலும் சேதனர்களை உஜ்ஜீவிக்கச் செய்யத் திருவுள்ளம் கொண்டு முப்பத்திரண்டு அதிகாரங்களில் மணிப்ரவாள ரூபமான உபதேசம் செய்தருளியுள்ளார். அதின் ஸாரத்தைத் தமிழில் ''அதிகாரஸங்க்ரஹம்'' என்கிற ப்ரபந்தத்தில் விரித்துரைத்துள்ளார். குருபரம்பராஸாரம் என்றாரம்பித்து நிகமநாதிகாரம் முடிவாக அப்பிரபந்தத்தில்

'ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்து: சப்ரத்யகாத்மந:!

ப்ராப்த்யுபாயம் பலஞ்சைவ ததாப்ராப்தி விரோதிச!

வதந்தி ஸகலாவேதா: ஸேதிஹாஸ புராணகா:!

என்று வேத வேதாந்தங்களில் பேசப்படும் மிக்க இறை நிலையையும், மெய்யான உயிர் நிலையையும் இறைவனடிசேரச் செய்ய வேண்டிய சரணாகதியாகிற உபாயத்தையும், அதனால் ஏற்படும் பலமாக மோக்ஷமாகிற ஆனந்தானுபவத்தையும், அதற்கு விரோதியாக உள்ள கர்மாவையும், அதைப் போக்கும் சரணாகதியின் வைபவத்தையும் கூறி, ரஹஸ்த்ரயம் எனப்படும் திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகம் என்ற மந்த்ரார்த்தங்களையும் விசதமாக உபதேசித்துப் பரமோபகாரம் செய்தருளியுள்ளார்.

இதில் இம்மாதிரியான மந்த்ர மந்த்ரார்த்தங்களை சேதனர்கள் உஜ்ஜீவிக்க வேணுமென்ற பரமகாருணிகர்களான ஆசார்யர்களும், உபதேசம் பெற்ற சிஷ்யர்களும் இருக்க வேண்டிய முறையையும், ஆசார்யக்ருத்யாதிகாரம் சிஷ்ய க்ருத்யாதிகாரம் என்றும் இரண்டு அதிகாரங்களில் எடுத்துரைத்துள்ளார். ஆசார்யன் நமக்குச் செய்யும் உபகாரத்தையும் சிஷ்யர்கள் ஆசாரியனுக்குச் செய்ய வேண்டிய ப்ரத்யுபகாரத்தையும் விளக்கும் பாசுரம் ஸ்வாமியின் அருள்வாக்காக இப்பாசுரத்தில் உபதேசிக்கப் பட்டுள்ளது. பாசுரம் வருமாறு:-

ஏற்றி மனத்து எழில் ஞானவிளக்கை - இருளனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் கணகில்லான்
போற்றியுகப்பதும் புந்தியுட் கொள்வதும், பொங்கு புகழ்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ, முன்னம் பெற்றதற்கே

அஜ்ஞானமாகிற இருட்டில் மூழ்கி நன்றி து தீதிது என்றறியாமல் திகைக்கும் ஜீவனுக்கு ஜ்ஞானமாகிற பிரகாசமுள்ள விளக்கை ஏற்றி உபதேசாதிகளால், தத்துவ, ஹித, புருஷார்த் தங்களை மனத்தில் பதியவைத்து இருளகற்றி ப்ரஹ்மானுப பரியந்தமான பேரின்பமடையச் செய்த ஆசார்யனுக்கு ப்ரத்யுபகாரமாக சிஷ்யர்கள் என்ன செய்ய முடியும்? ஒன்றும் ஆசார்யன் செய்த உபகாரத்துக்கு இணையாகாது. ஆச்சரிய சேஷ்டிதனான பகவானும் ஆசாரியன் விஷயத்தில் ப்ரத்யுபகாரமாக யாதொன்றையும் அறியமாட்டான். ஆயினும் நாம் செய்யக்கூடியது யாதெனில், குரும் ப்ரகாசயேத் என்றபடி அவருடைய குணதிசயங்களைப் போற்றுவதும் போற்றுவதோடன்றி அதையே பரமலாபாமாக எண்ணி வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க வேண்டும். அவர்களது பொங்குபுகழ் சாற்றி வளர்க்க வேண்டும். இவ்வளவும் சிறிதளவே தவிர ஆசார்யன் செய்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாகாது. இதே விஷயத்தில் ஸம்ஸ்க்ருதச்லோகத்தில்

அசிதில குருபக்தி: தத் ப்ரசம்ஸாதி சீல:

ப்ரசுரபஹுமதிஸ் தத் வஸ்து வாஸ்த்வாதிகேஷு

என்று ஸ்வாமி வெளிப்படுத்தியுள்ளார். எக்காலத்திலும் குறைவில்லாத ஆசார்ய பக்தியுள்ளவனாயும், ஆசார்யனது குணங்களையும் அனுஷ்டானாதிகளையும் சிலாகித்துக் கொண்டாடிக் கொண்டிருப்பவனுயும் ஆசார்யனிடம் பகவானிடத்தில் போலவே பஹுமான முள்ளவனாயும் ஆசார்யனுடைய வஸ்த்துக்களான க்ருஹ ஆராம, புத்ர சிஷ்யாதிகளிடத்திலும் மிகுந்த பக்தியும் அபிமானமும் உள்ளவனாயிருக்க வேண்டுமென்று விளக்கமாக அருளிச் செய்திருக்கிறார்.

லௌகிகத்தில் சிறிய உபகாரம் ஒருவர் செய்தாலும் அதற்கு பதிலாக ஏதாவது உபகாரம் செய்வதைக் காண்கிறோம். அசக்தராயிருந்தால் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறோம். இதனால் அவர்களும் சந்தோஷமடைகிறார்கள். ஆசார்யர்கள் இந்த ப்ரத்யுபகாரத்தை எதிர்பார்ப்பதில்லை. 'க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்'' என்று பரமகருணையுடன் கூடியவர்களாய் தமது குருக்களிடம் தான் கற்ற வித்தைகளை தமது சிஷ்யர்களுக்கு ஸ்வயம் ப்ரயோஜனமாய் உபதேசித்து, திருத்திப்பணி கொண்டு அவர்களுக்கு ஆத்மோஜ்ஜீவனார்த்தமான காரியங்களை பஞ்சஸம்ஸ்காரம், மந்த்ரமந்த்ரார்த்த காலக்ஷேபாதிகளைச் செய்வித்து, பரஸமர்பணத்தையும் செய்து வைத்து பரமோபகாரம் செய்தருளுகிறார். இதரர்கள் செய்யும் உபகாரத்துக்கு காலாந்தரத்திலாவது ப்ரத்யுபகாரம் செய்யமுடியும். ஆசாரியன் செய்த உபகாரத்துக்கு ஈடே கிடையாது. மோக்ஷாந்தமான ஐச்வர்யத்தைக் கொடுப்பது ஆசார்ய கடாக்ஷமே.

இதற்கு ப்ரத்யுபகாரம் செய்ய பகவானாலேயே முடியாது என்று ஸ்வாமி தேசிகனே அருளிச்செய்துள்ளபடியால் நாம் எதைச் செய்தாலும் பதிலாக அது ஆகாது. எனவே தான் ஆசார்யன் நமக்குச் செய்த உபகாரத்தை அனவரதம் மனத்தில் நினைத்து எம்பெருமானை ஸேவிக்கும்போது 'ஆஹ்லாத சீத நேத்ராம்பு: புளகீக்ருத காத்ரவான்' என்கிறபடியே மனம் நெகிழ்ந்து கொண்டிருப்பது போல ஆசார்யனது ஆனுஷ்டானாதிகளையும் உபதேச வைகரியையும், திருக்கல்யான குணங்களையும் தான் எப்போதும் கொண்டாடி அவ்வாசாரியனுடைய வஸ்துக்களிடத்திலும் ஸம்பந்தமுள்ளவர்களிடத்திலும் ப்ரதிபத்தியுடன் இருந்து வருதலே ப்ரதியாகச் செய்யும் உபகாரம் என்று பெரியோர்களிடம் கேட்டறிந்ததை சிற்றறிவிற்கு எட்டியதை விண்ணப்பித்துள்ளேன்.

மந்த்ரமந்த்ரார்த்தங்களை உபதேசித்து நம்மை ரக்ஷிக்கும் ஆசார்யனிடத்தில் பக்தியும் இருக்க வேண்டுமென்பதாக மந்த்ரே தத்தேவதாயம் ததா மந்த்ரப்ரதே குரௌ! த்ரிஷு பக்திஸ்ஸதா கார்யா'' என்னும் வசனம் கூறும், பரமைகாந்தியான வைஷ்ணவன் தினசர்யையைச் செய்யும்போது அபிகமன உபாதான இஜ்யை, ஸ்வாத்யாயம், யோக மென்று ஐந்து காலங்களை விதித்து இவ்வைந்து காலங்களில் எம்பெருமானை பக்தியுடன் ஆராதித்து பஞ்சகாலபராயணனாக இருக்கும்படி சாஸ்த்ரம் விதிக்கிறது. இந்த வசனத்தில் கால நியமமில்லாமல் பக்திஸ் ஸதா கார்யா என்று விதிப்பதால் ஆசாரியனிடம் எப்போதும் பக்தியுடனிருத்தல் விசேஷம் என்று தெரிகிறது. மேலும், தான் பக்தியுடனிருப்பதுடன் யதாசக்தி நிக்ருண்ஹீயாத் தேவதா குரு நிந்தகான் என்பதாக ஆசார்யனையும் தேவதைகளையும் நிந்தனை கூறுபவர்களை தம்சக்திக்கு அனுகுணமாக நிக்ரஹம் செய்யவேண்டும். (அதாவது கண்டித்து அடக்க வேண்டும்) என்றும் கூறப்பட்டுள்ளது. தேவமிவ ஆசார்யம் உபாஸீத என்னும் வசனம் பகவானைப்போலவே ஆசார்யனையும் நாம் பக்தியுடன் உபாஸிக்க வேண்டுமென்று கூறுகிறது.

இது விஷயமாக ஓர் அனுபவத்தைக் கூறுவதுண்டு. வடதேசத்தில் தனிகர்களாக பலர் இருக்கும் ஓரிடத்தில் நல்ல பண்டிதரும், ஆசார அனுஷ்டான சீலருமான ஓர் ஸ்வாமி தென்னாட்டிலிருந்து சென்று அங்குள்ளவர்களுக்கு உபன்யாஸாதிகளைச் சொல்லியும் ஸமாச்ரயணாதிகளைச் செய்வித்தும் அவர்களிடம் நல்ல செல்வாக்குப் பெற்று ஆசார்யகம் பண்ணிவந்தாராம். அந்த சிஷ்யர்கள் அவரை ஸாக்ஷாத் நாராயணன் என்றே கௌரவ புத்தியுடன் ஆச்ரயித்து அவருக்குப் பொன்னும் பொருளும் முதலிய எல்லா வசதிகளையும் கொடுத்து ஆதரித்து வந்தனர். சிலகாலம் சிஷ்யசம்பத்தையும் கௌரவத்தையும் காண ஸஹியாமல் அச்சிஷ்யர்களிடம் சென்று உங்களது ஆசாரியனிடம் பல துர்க்குணங்கள் இருக்கின்றன. அவர் ஓர் ஸத்ரீலோலன் அப்படி இருந்தும் நீங்கள் அவரிடம் இப்படிப்பட்ட பக்தி பூண்டுள்ளீர்களே?' என்றார்களாம். அதற்கு அந்த சிஷ்யர்கள் அவர்களைப் பார்த்துக் கூறினார்களாம் ஸ்வாமிகளே! உங்களுக்கு அனேக நமஸ்காரங்கள். நாங்கள் இதுவரை எங்கள் ஆசார்யனை ஏகபத்னீவ்ரதனான ஸ்ரீராமசந்த்ரனாக நினைத்து வணங்கிவருகிறோம். உங்கள் வார்த்தையைக் கேட்டபிறகு ஸ்ரீக்ருஷ்ணனாகவும் நினைத்து வழிபடுகிறோம்.

உங்களுக்கு கிருதஞ்ஞதையை தெரிவித்துக் கொள்கிறோம். அதற்காக இந்த ஸம்பாவனையைப் பெற்றுக் கொள்ள வேணும் என்று பஹுமானித்து அனுப்பினார்களாம். அசூயாளுக்கள் முகத்தில் அசடு வழிந்ததாம். இதனால் குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய் இருந்து ஆசாரியனைப் போற்றியுகந்து புந்தியுட் கொண்டு பொங்குபுகழ் சாற்றி வளர்பபோமாக.

ப்ரக்ருதம் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனின் 60வது திருநக்ஷத்திர மஹோத்ஸவ வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலரில் ஓர் இதழில் இந்த வியாஸம் எழுதப்பட்டுள்ளது.

தஸ்ய யஜ்ஞவராஹஸ்ய விஷ்ணோரமிததேஜஸ:

ப்ரணமம் யேபி குர்வந்தி தேஷாமபி நமோ னம:

என்று கொண்டாடப்படும் ஸ்ரீபூவராஹப் பெருமானின் கைங்கர்ய பரம்பரையில் அவதரித்து வித்யாப்யாஸ காலத்திலேயே ப்ரஸித்தரானவர் ஸ்ரீமதாண்டவன். அக்காலத்திலிருந்தே ஸௌலப்யாதி குணங்களுடன் எல்லோரிடமும் அன்பு காட்டி பல பெரியோர்களிடமும் நற்பெயர் பெற்று துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்ட பிறகு குணா: சோபயந்த்யேநம் என்றபடி ஆச்ரமத்துக்குரித்தான ஜ்ஞான அனுஷ்டான வைராக்யாதிகளுடன், வர்த்ததாம் அபிவர்த்ததாம் என்கிறபடி ஆச்ரம ஸ்ரீயை பலபடிகளாலும் வளர்த்து வரும் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன் இன்னுமொரு நூற்றாண்டிருக்கும் என்று பக்த சிஷ்யர்கள் போற்றியுகந்து புத்தியுட்கொண்டு பொங்கு புகழ் சாற்றி வளர்த்திட ஸ்ரீரங்க திவ்யதம்பதிகளை ப்ரார்த்தித்து அடியேனுக்கு இதற்கு அனுமதி கொடுத்த ஸ்ரீகார்யம் ஸ்ரீ உ.வே. வித்வான் மாதவாசார்ஸ்வாமிக்கு க்ருதஜ்ஞதை செலுத்தி முடித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேசிகாய நம:

"நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே"

ஸ்ரீமதுபயவே. வித்வான் நாட்டேரி ராஜகோபாலாச்சாரியார் ஸ்வாமி

'परिपश्यति देवि रङ्गनाथे रहसि त्वं सविधे निविश्य लक्ष्म्या :।
परिपुष्यसि रत्न धामभिः स्वैः अनसूयेव मनोज्ञग्गरागम् ॥

என்பதாக ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் 513 ஆவது ச்லோகம் "பாதுகாதேவியே உன்பேரில் அநேகவித ரத்னங்கள் இழைத்திருக்கின்றன. பெருமாளும் தாயாரும் ஏகாந்தமாக எழுந்தருளியிருக்கும் காலத்தில் தாயார் பேரில் அந்த ரத்ன காந்திகள் படுகின்றன. அப்போது அது அநஸூயை சீதைக்குச் சந்தனம் பூசினது போலிருக்கிறது." இப்படிதான் எல்லோரும் ஸாமான்யமாக இந்த ச்லோகத்திற்கு அர்த்தம் சொல்லுவார்கள். ஆனால் ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் ஸாதிக்கும் போது "ஆழ்வாருடைய பாசுரங்களைப் பெருமாளும் தாயாரும் திருச்செவி சாத்தும் போது ஒருவருக்கொருவர் மீது அபாரமான ப்ரீதி உண்டாகிறது என்று இந்த ச்லோகத்தில் உட்கருத்து என்று வ்யாக்யானம் பண்ணியருளியபடி பாதுகைகள் தான் ஆழ்வார். பாதுகை ரத்னங்களின் ஒளி ஆழ்வாரிடம் உண்டான பாசுரங்களின் கருத்து என்று கொள்ள வேண்டும் என்பதாக திருஉள்ளம். திவ்யப்ரபந்தச்ரவணத்தினாலே பெருமாளுக்கும் பிராட்டிக்குமிடையே ப்ரீதி அதிகமாகிறது என்று அத்யாச்சர்யமாக ஸ்ரீமத்தேரழுந்தூர் ஆண்டவனால் தான் அநுபவிக்க முடியும். ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளப்படி அருளிச் செயல்கள் அவ்வளவு இன்பப்பாக்களாகும். இந்த "மணம் தரும் இன்னிசை" "ஈரத்தமிழ்" நாலாயிரம் நமக்கு "எங்ஙனே சொல்லினும்" "இங்கும் அங்கும்" "இன்பம் பயக்கும்" என்பதை ஆய்ந்துணர்வோம்.

"வாழும் வகையறிந்தேன் ..... எங்கள் பெருமான் அடி சேரப் பெற்று" என்பதாக எம்பெருமானுடைய திருவடிகளை ஆச்ரயித்து அவைகளைப் பெறுவதே உயர்ந்த வாழ்வாகும் என்றார் ஸ்ரீ பேயாழ்வார். நமக்கு வாழ்வின்

தொடக்கம் தாயின் வயிற்றில்; கருவாகி உருவாகிறோம். 'यो मे गर्भगतस्याऽपि वृत्तिं कल्पितवान् प्रभुः ' என்றபடி

''என்றும் திருவிருந்த மார்பன் சிரீதரனுக்கு ஆளாய்
கருவிருந்த நாள்முதலாக காப்பு''

என்று ஸ்ரீ திருமழிசையாழ்வாரின் அநுஸந்தானப்படி நாம் கருவாக இருந்த நாள் முதல் பகவானுடையவே ரக்ஷ்யவஸ்து ஆகிறோம். அப்படித் தொடங்கிய வாழ்வில், ஸ்ரீ திருமங்கையாழ்வார் அருளியது போல

''மாமறை தான் மன்னும் அறம் பொருள் இன்பம் வீடென்று உலகில்
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே''

என்பதாக நமக்கு வேதோக்தமான ச்ரேயஸ்கரமான தேவைகள் நிவ்ருத்தி தர்மங்களும், தர்மத்திற்கு புறம்பில்லாத அர்த்த காமங்களும், இறுதியில் பகவத் ப்ராப்தியுமாகும். இந்த நான்கும் எளிதில் நம்மைத் தேடிவர நாம் செய்யவேண்டியது என்னவென்றால் பயில இனிய ஆழ்வார்களின் அருளிச் செயல்களை அப்யஸிப்பதே.

நாலாயிரமும் ஏன்? ஒரு திருப்பாவை போதுமே! ''செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்'' அல்லவா? ஸ்ரீகோதாஸ்துதியில் 'साक्षात् क्षमां ' என்றபடி ஸ்ரீ பூமிப்பிராட்டியே ஸ்ரீ ஆண்டாளாக அவதரித்து ப்ரபந்தங்கள் அருளிச் செய்தாள். வேதமனைத்துக்கும் வித்தான அந்த ப்ரபந்தங்களைக் கொண்டாடிய பூஸுக்தம் 'पुण्यं श्लोकं यजमानाय कृण्वती ' என்று ஆழங்கால் பட்டது. ''புண்யமான ப்ரபந்தத்தை யஜமானனுக்காக அருளிச் செய்தான்'' என்று பொருள்.

தைத்திரீயத்தின் முடிவில் 'तस्यैवं विदुषो यज्ञस्याऽत्मा यजमानः ' என்பதாக ந்யாஸவித்யா நிஷ்டனை அதாவது ஸ்ரீய : பதியிடம் ஶரணாகதனை ''யஜமானன்'' என்று வேதம் உரைக்கும். இப்படிப்பட்ட யஜமானனுக்காக, அதாவது ந்யாஸவித்யா நிஷ்டனுக்காக, அவனுடைய ந்யாஸ வித்யா விரோதி பாப வர்க்கங்களையெல்லாம் கழித்துக் கட்ட வல்ல புண்ய ஸுக்திகளான ப்ரபந்தங்களை ஸ்ரீபூமிப்பிராட்டி அருளிச் செய்தாள் என்றல்லவா பூஸுக்கத்தில் வேதம் கொண்டாடுகிறது. அன்றியும் ' यज्ञो यज्ञपतिः यज्वा ' என்றதில் எம்பெருமானே யஜமானன் தான். அந்த எம்பெருமானுக்காக, அவன் உகக்கும் படியான புண்யச்லோகங்களை ஸ்ரீபூமிப்பிராட்டி அருளிச் செய்தான் என்றாகவுமாம். இவ்வருளிச் செயல்களை எம்பெருமான் உகப்பது எவ்வாறு என்றால், சரம ஶ்லோகாதிகாரத்தில் ஸ்ரீமத் ஆசார்யன், ''ஈச்வரன் ' रक्षापेक्षां

प्रतीक्षते ' என்கிற படியே என்றே இவர்கள் நம்மை அபேக்ஷிப்பது என்கிற அபிப்ராயத்தாலே அபிமுகனாய் ..... என்றுநாம் இவர்களை ..... அங்கீகரிப்பது என்கிற அபிப்ராயத்தாலே ஸத்வரனாய் தன் பேறாகப் பலம் கொடுக்கிற நிலை'' என்று அருளிச் செய்தபடி - ஒரு ஶரணாகதனை எதிர்ப்பார்த்து ஏங்கி நிற்கும் யஜமானனான எம்பெருமானுடைய அபிமதம், நாம் ஸ்ரீஆண்டாளின் அருளிச் செயல்களை ஓதி தத்வஞானம் பெற்று புண்யசாலிகளாகி ஶரணாகதர்களாகிறோம் ஆனபடியால் பூர்த்தியாகிறது. ஆகவே தான் பூஸூக்தவாக்யம் 'पुण्यं श्राक् यजमानाय कृध्वती ' என்று ஸ்ரீ ஆண்டாளின் அருளிச் செயல்களைப் புகழ்கிறது.

இப்படி உயர்ந்ததாக வேதமும் கொண்டாடும் படியான திருப்பாவை, நாச்சியார் திருமொழிகளை ஏகதேசத்தில் உள்ளடக்கிய நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் பெருமையை யார் நினைக்க வல்லரே?

இப்படியான அந்தமில் சீர் அருளிச் செயலானது அநுஸந்திப்பார்க்கு அள்ளித்தரும் அனுகூலங்கள் அநேகம் அநேகம். அந்த அந்த பதிகங்களே அப்படிப்பட்ட பலன்களை உத்கோஷிக்கின்றன.

நாம் ஜெய சீலராக இருக்க வேண்டுமா?

அநுஸந்திப்போம். திருவாய் மொழியில் 7-4. 'வென்றிதரும் பத்தும் மேவிக்கற்பார்க்கே' என்றல்லவா பலச்ருதி வாக்யம் அங்கு.

தீய நெறியிலிருந்து மாறி நல்வழிப்படவேண்டுமா?

'தீநெறிக்கண் செல்லார்தாமே' என்று முடியும் பெருமாள் திருமொழி 1-6 ம் பதிகம்

உயர்ந்த கீர்த்தியை அடைய

'இன்னிசைமாலைகள் இப்பத்தும் வல்லார் உலகில்

எண்டிசையும் புகழ்மிக்கு இன்பது எய்துவரே ! '

என்னும் பெரியாழ்வார் திருமொழி 1-6 பதிகம்.

மனக்கவலைகள் நீங்கி மகிழ வேண்டுமா?

''இங்கே காண இப்பிறப்பே மகிழ்வர் எல்லியும் காலையே'' என்னும் திருவாய் மொழி 8-5 ம் தசகம்

வசிக்கும் ஊரில் எல்லா ஸம்ருத்திகளும் ஏற்படவேண்டுமா?

''வைகுந்தமாகும் தம் ஊரெல்லாம்'' என்னும்
திருவாய் மொழி 5-3 பதிகம்

உள்ளத்தில் அசுப எண்ணங்கள் தோன்றாமலிருக்க வேண்டுமா?

''ஒலிபுகழாயிரத்து இப்பத்து உள்ளத்தை மாசறுக்குமே'' என்னும் திருவாய்மொழி 5-2 பதிகம்

வாக்கில் இனிமை சேர?

''குழலை வென்ற குளிர் வாயினராகி சாதுகோட்டியுள் கொள்ளப்படுவாரே'' என்னும் பெரியாழ்வார் திருமொழி 3-6 பதிகம்

கங்கா ஸ்நான பலன் வேண்டுமா?

''கங்கையில் திருமால் கழலிணைக் கீழே குளித்திருந்த கணக்காமே'' என்னும் பெரியாழ்வார் திருமொழி 4-7 பதிகம்

சிறந்த செல்வம் வேண்டுமா?

''உலகில் ஏந்து பெரும் செல்வத்தராய் திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே'' திருவாய்மொழி. 5-6 பதிகம்

அழகிய தோற்றம் பெற

''இன்கொள்பால் வல்லார் மதனர் மின்னிடையவர்க்கே'' திருவாய்மொழி 6-1 பதிகம்

''மழலை தீர வல்லார் காமர்மானேய் நோக்கியர்க்கே'' திருவாய் மொழி 5-8 பதிகம்

ஸத்ஸந்தான ஸம்ருத்திக்கு

''மாயன் மணிவண்ணன் தாள் பணியும் மக்களைப் பெறுவர்களே'' பெரியாழ்வார் திருமொழி 1-8 பதிகம்

"மக்களைப் பெற்று மகிழ்வார் இவ்வையத்தே" பெரியாழ்வார் திருமொழி 2-6 பதிகம்

குடும்பப் பாங்கான சிறந்த வாழ்வடைய

நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே. திருவாய் மொழி 8-10 பதிகம்

சிறந்த தெளிந்த புத்திமானாக

"தெளிவுற்ற சிந்தையர் மாமருமூவுலகத்துள்ளே" திருவாய் மொழி 7-5 பதிகம்

வியாதிகள் அறவே நீங்க ....

"இப்பத்தும் நோயறுக்குமே" திருவாய்மொழி 9-7 பதிகம்

பெரும் தலைவர்களாக...

"தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங்கடல் சூழ் உலகுக்குத் தலைவர் தாமே" பெரியதிருமொழி 3-4 பதிகம்

சக்ரவர்த்திக்கு சமமான போகங்களை அனுபவிக்க

"மண்ணாண்டு மணம் கழல்வர் மல்லிகையே" திருவாய் மொழி 9-8 பதிகம்

இந்த லோகத்தில் அரசனைப் போன்ற வாழ்வும் பரலோகத்தில் பெருவாழ்வும் பெற

"ஓதநீர் வையகமாண்டு வெண்குடைக் கீழ் உம்பருமாகுவர்தாமே" பெரிய திருமொழி 1-6 பதிகம்

உலகத்திற்கு வழிகாட்டியாக வாழும் சிறப்பு பெற

"எண்டிசைக்கும் விளக்காகி நிற்பர்" பெரியாழ்வார் திருமொழி 2-9 பதிகம்

தீவினைகள் போயகல.....

''கற்று வல்லார்மேல் சாரா தீவினை தானே'' பெரிய திருமொழி. 3-3 பதிகம்

நரகத்தை தொலைக்க ....

''நல்தமிழ் பத்தும் வல்லார் நண்ணார் நரகமே''. பெருமாள் திருமொழி 5 பதிகம்

பாகவத சேஷத்வம் சித்திக்க...

''சொல்லினின் தமிழ் மாலை வல்லவர் தொண்டர் தொண்டர் களாவரே'' பெருமாள் திருமொழி - 2 - 6 பதிகம்

பகவானுடைய திருவடிகளின் ஸாக்ஷத்காரம் பெற

''கடல்வண்ணன் கழலினை காண்பர்களே'' பெரியாழ்வார் திருமொ 3-3 பதிகம்

நித்யஸூரிகளும் கொண்டாட

''கற்றுத் திரிவார் உலகத்தில் ஆரார் அவரே அமரர்க்கு என்றும் அமரராவாரே'' பெரிய திருமொழி (4-9) பதிகம்

பகவத் ப்ராப்திக்கு...

''ஏர்கொள் நல்ல வைகுந்தத்துள் இன்பம் நாளும் எய்துவாரே'' பெரிய திருமொழி 4-8 பதிகம்

இப்படியெல்லாம் அருளிச் செயல்களால் நாம் அடையும் பலன்கள் ஏராளம். ஏராளம். அதிகம் சொல்லி என்? ''சூழ்விசும்பு...'' ஒரு பதிகம் போதுமே ''குருகூர்ச்சடகோபன் சொல் சந்தங்களாயிரத்து இவை வல்லார் முனிவரே என்பதாக மகரிஷிகளுக்குச் சமமான மாஹாத்ம்யத்தை தர வல்லதே!

இப்படி ஸகலச்ரேயஸ்ஸுகளும் இஷ்டப்படி அடையப் பெறும் என்றால் பலன்கள் கை கூடாமல் போவதேனோ? என்றால்

''மதுரகவி சொன்ன சொல் நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே என்று ஸ்ரீ மதுரகவிகள் அறுதியிட்ட படி மஹாவிச்வாஸமே பல ஸாதன ஹேதுவாகும்.

அநுஸந்தானத்தில் ஊற்றம் போதாமையாலேயிறே பலத்தில் பூர்த்தி இல்லாமல் போகிறது. ' नाथीपज्ञं प्रवृत्तं ' என்பதாக நாதமுனிகள் நம் தர்சன ப்ரவர்த்தகரான பெருமை ஒரு சிறிய கண்ணிநுண் சிறுத்தாம்பு'' பதிகத்தின் ஆவ்ருத்தியாலேயே யன்றோ?

அநுஸந்தானத்தாலே நம் மனம் நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற இந்த அருளிச் செயல்கள் நித்ய ஸூரிகளுக்கும் ''ஆரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே'' என்ற படியும் பரமபோக்யமாய் ''மொழிபட்டோடும் கவியமுதாம் நுகர்ச்சியுறுமோ முழுதுமே? என்னலாம் படி பகவானாலும் இதன் போக்யதை முழுவதும் அநுபவித்து தீராது.

இப்படியெல்லாம் நமக்கு நான்குவித புருஷார்த்தங்களையும் வாழ்வில் நமக்கு எளிதாக்கும் இந்த நாலாயிர திவ்யப்ரபந்தம் அநுஸந்திக்கும் போதே நமக்கு ஆனந்தத்தையும், தெளியாத மறைகளைத் தெளிவிக்கும் ஞானத்தையும், ச்ரேயஸ்ஸுகளை கொடுப்பதோடு நமக்கு பகவானிடம் பக்தியையும், பகவானுக்கு நம்மிடம் ப்ரீதியையும் உண்டாக்கி நித்யஸூரிகளுக்கும் நம்மிடம் ப்ரீதியை உண்டாக்கி, பெருமாளுக்கும் பிராட்டிக்கும் பரஸ்பரம் ப்ரீதியை விளைவிக்கிறது என்று ஸ்ரீமத் தேரமுந்தூர் ஆண்டவன் ஸாதிக்கிறபடி. ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் 872வது ச்லோகத்தின் வ்யாகியானத்தில் ''ஸ்ரீநம்மாழ்வார்.... விசித்ரமான மனோபாவங்களோடு கலந்த ஆச்சர்யமான பாசுரங்களைச் சொல்லிக் கொண்டு அந்த பெருமாளை அநுபவிக்கும் ரஸத்தைப் பார்த்து பெருமாளுடைய தேவி மார்களும் கூட இது மாதிரியன்றோ அனுபவிக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்படுகிறார்கள் என்று ஸாதிக்கிறபடி . 589 வது ச்லோக வ்யாக்யானத்தில்

''பெருமாளுக்கு ஜனங்களிடத்தில் ஏற்கனவே ஆசையிருக்கிறது. ஆழ்வாருடைய பாசுரங்களால் இன்னமும் ஆசை அதிகமாக உண்டாகிறது'' என்றும் 495 ல் ஆழ்வாருடைய பாசுரங்களினுடைய அர்த்தத்தை நினைத்துக் கொண்டு பெருமாள் பரம ஸந்தோஷத்தை அனுபவிக்கிறார்.'' என்றெல்லாம், அத்யாச்சரியமாக ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் ச்லோகங்களின் கருத்தாக ஸாதிக்கிறபடி.

ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவனின் அனுப்ரவேச அவதாரமான ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திவ்யப்ரபந்தத்தின் ரஸத்தை அனுபவித்து நமக்கு

உபதேசிக்கும் அழகே அழகு. பண்டிதரும் பாமரரும் நான்காம் வருணத்தவர்கள் கூட ஈடுபடும் படியாக உபந்யஸித்தாகும். பெரிய பெருமாளை சேவிக்கும் போது திருவடிகளில் திருவாய்மொழியின் சப்தம் கேட்கிறதே, உங்களுக்கு கேட்கிறதா என்று ஈடுபட்டாகும். ஸ்ரீ மத் தேரழுந்தூர் ஆண்டவனின் திருவுள்ளம் உகக்கும் படிக்கு திருவாய்மொழிக்கு உரையிட்டருளிய மஹான். பாரத தேசம் முழுவதையும் தம் பொன்னடியினாலே புனிததேசமாக்கிய புண்ணிய புருஷர். அம்மஹாசார்யனுடைய நியமத்தினாலே ஆசார்யஸ்தானம் வஹிக்கும் ப்ரக்ருதம் ஸ்ரீ ரங்கராமானுஜ மஹா தேசிகரான ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் தம் ஆசார்யரான திருக்குடந்தை ஆண்டவனின் திருவடியொற்றி ஆசார்யரின் பெரியதிருமொழி வ்யாக்யானத்தை தொடர்ந்து அருளிவரும் பாங்கை நோக்கும் போது நம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தத்தில் ஈடுபாடும் ஸம்ரக்ஷணமும் அவிச்சின்னமாக தொடர்கிறது. இனியும் அவிச்சின்னமாகத் தொடர்ந்து வளரும் என்று இன்புறுகிறோம். ஏனெனில் ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ ஸூக்திபடியே

''துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின் தொகை
நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வு'' தானே,


''நீசனேன் நிறை ஒன்றுமிலேன்''.என்று தம் ஆகிஞ்சன்யத்தை அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டு ''இளங்கிளியே! யான் வளர்த்த நீயலையே?'' என்று ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் தம் ஆசார்ய ஸ்மரணம் அடிக்கடி பண்ணும் போது நம் வாழ்முதலான திவ்யப்ரபந்தமானது ப்ரக்ருதம் ஸ்ரீ மதாண்டவனின் அநவரத ப்ராமர்சத்தில் உள்ளதை உணர்த்தும் திவ்யப்ரபந்தத்தை பலகால் அநுஸந்தித்து புத்தகத்தில் பல இடங்களில் அத்யாச்சர்யமாக புதிய கருத்துக்களை எழுதி வைத்திருக்கிறபடி, இப்படி நம் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வு என்பது அநுஷ்டமான பர்யந்தமாம்.

தந்தையென நின்ற தனித்திருமால் தாளில்

தலைவைத்தோம் சடகோபனருளினாலே

Bhuvaneswari

For Reliable Process Machinery



ECOTHERM - 1000

Multiple Effect Distillation Unit with ECONOMIC THERMOSYPHON SYSTEM for producing Pyrogen-Free Water for Injection

- Multi Stage Distillation for high economy.
- Optimised Cyclone Separation for Pyrogen-Free distillate.
- Thermo-Syphon Sytem-Least susceptible to line steam pressure fluctuations and scale formations.
- Parallel feed water system to eliminate concentration of scale forming impurities.
- Two Stage Cooling to achieve best possible de-gassing.
- All Heat Exchangers are of Shell & Tube type, enabling easy and thorough de-scaling.

BHUVANESWARI

BHUVANESWARI CORPORATION LTD.

84, M.K.N. Road, Madras – 600 032. Gram : TRADEWELL Phone : 2341307.

a unit of **GR** group

For further details please contact our Selling Agents : **Bhuvaneswari & Co.** Old Trunk Road, Madras – 600 043. Phone : 401716/401767. Telex : 041-26159-GR IN, Fax : 91-44-2366964.

There's something very Indian about a bank that puts a smile on every face.

Indian Bank-The People's Bank. Since 1907.

More than the milestones, more than the achievements, there's something every Indian Bank Customer takes pride in – the bank's commitment to the society.

Enter the world of Banking. With Indian Bank. A world that brings quality to life in India's heartland. As well as in industrialized India.

From rural development to international banking, Indian Bank is a social movement across borders. Reaching out, creating goodwill. And opening up a world of personalised banking. Indian Bank. Moulding lives. Shaping futures.



Indian Bank

H.O. 31, Rajaji Road, Madras - 600 001.

A tradition in banking – Distinctly different.